Koviloor Digital Library

வெளியீடு எண்: 987

திருஞானசம்பந்தர் தேவாரம்

முதல் திருமுறை

ACC. NO.
16811

ஞானசம்பந்தம் பதிப்பகம்
தருமை ஆதீனம்
மயிலாடுதுறை 609 001

Koviloor Digital Library

திருமுறைகள் ஓதாய் தினமும் என அறிவித்த முதற்குரவராம்,



தருமை ஆதீன ஸ்தாபகர்
ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

Koviloor Digital Library

உ

குருபாதம்

தருமை ஆதீனம்
25 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி குருபூஜை வெள்ளிவிழா

நினைவு வெளியீடு


சிதம்பரம்
அருள்மிகு நடராஜப் பெருமான்
சந்நிதியில் வைத்துப் பூசித்து,
ஆயிரங்கால் மண்டபம் என வழங்கும் இராஜ சபையில்
உரை அரங்கேற்றம் செய்து,
வெளியிடப் பெற்றது.

KOVILOOR ANDAVAR
A. No. 16811
LIBRARY, KOVILOOR

1997

Koviloor Digital Library

திருமுறைகள் உரையோடு வெளிவருமாறு அருள் சுரந்து,
ஒன்று முதல் ஒன்பதாம் திருமுறைகள் வெளியிட்ட,



தருமை ஆதீனம் 25 வது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

Koviloor Digital Library

4/2

வெளியீடு எண்: 987

உ
திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்த சுவாமிகள்

அருளிச்செய்த

தேவாரத் திருப்பதிகங்கள்

முதல் திருமுறை

பொழிப்புரை, விளக்கக் குறிப்புரைகளுடன்.

இந்நூல்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

திருவருள் ஆணையின் வண்ணம்
ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் அருட்கொடை வெளியீடாக

ஞானசம்பந்தம் பதிப்பகத்தில்
வெளியிடப்பெற்றது.
1997

Koviloor Digital Library

உரிமை பதிவு] 1997 [தருமை ஆதீனம்

பதிப்புரிமை : ஞானசம்பந்தம் பதிப்பகம், தருமை ஆதீனம்,
மயிலாடுதுறை - 609 001. தமிழ்நாடு, இந்தியா.

முதற் பதிப்பு : 1953
இரண்டாம் பதிப்பு : 1997

பதிப்பாசிரியர்:

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்
கயிலை மாமுனிவர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்.

விளக்கக் குறிப்புரை:

தருமை ஆதீனப் புலவர், மகாவித்துவான், பத்மபூஷண்
முனைவர் திரு. ச. தண்டபாணி தேசிகர்,
மயிலாடுதுறை - 609 001.

இப்பதிப்பில் புதிதாகச் சேர்க்கப் பெற்ற
பொழிப்புரை:

தருமை ஆதீனப்புலவர்,
வித்துவான் திரு. வி.சா. குருசாமி தேசிகர், எம்.ஏ.,
பேராசிரியர், அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்,
தருமபுரம், மயிலாடுதுறை - 609 001.

அச்சிடல்-தயாரிப்பு:

மறவன்புலவு க. சச்சிதானந்தன்

காந்தளகம்


(யாழ்ப்பாணம் - சென்னை),
834. அண்ணா சாலை, சென்னை - 600 002.

Koviloor Digital Library

பகுக்

Koviloor Digital Library

மறைமொழி பத்தாம் திருமுறை முதலாக,
பன்னிரு திருமுறை உரை வெளியிட்டு அருளிய,



தருமை ஆதீனம் 26ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

Koviloor Digital Library

உ

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய தேவாரம்
முதல் திருமுறை

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருட்கொடை

தருமை ஆதீன மடாலயம்,
தருமபுரம்.

கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் திருக்கயிலாய பரம்பரையில் ஸ்ரீகமலை ஞானப்பிரகாச தேசிகரிடம் உபதேசம்பெற்ற ஸ்ரீ குருஞான சம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளால் தோற்றுவிக்கப் பெற்றது தருமை ஆதீனம்.

வேளூர், சீகாழி, திருக்கடவூர், திருபுவனம், திருவையாறு முதலிய இருபத்தேழு திருக்கோயில்களைப் பரிபாலிப்பதோடு, கல்வி, சமயம், சமூகம் முதலிய பல்வேறு தொண்டுகளையும் இவ்வாதீனம் இயற்றி வருகிறது. மன்னர்களும், மக்களும் அளித்த நிலபுலன்களின் வருவாயில் பல நல்லறப் பணிகளை இவ்வாதீனம் இயற்றி வருவ தோடு, சைவ சமய உண்மைகளையும் ஒழுக்கங்களையும் மக்களுக்கு அறிவுறுத்தி அவர்களை நன்னெறிப்படுத்தும் நற்பணிகளைச் செய்து வருகிறது. (முறையான திருமுறைப் பயிற்சியும், பண்ணொன்றத் திருமுறைகளைப் பாடும் இசை நலமும், திருமுறைகளில் ஆழ்ந்து தெளிந்த மெய்ஞ்ஞானமும் வாய்க்கப் பெற்றவர்களாய்,)

இவ்வாதீனத்தின் ஞானபீடத்தில்
26 ஆவது குருமகாசந்நிதானமாக விளங்குபவர்கள்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
ஆவார்கள்.

இவர்கள் மடாலய பரிபாலனத்துடன் தம் ஆதி குருநாதர் திருப்பெயரால், *ஞானசம்பந்தம் பதிப்பகம், ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணி மன்றம்* ஆகியவற்றை நிறுவி அருட்பணி புரிந்து வருகிறார்கள். தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருட்கொடையால் இத்திருமுறை வெளியிடப் பெறுகிறது.

குறிப்பு: இத்திருமுறைப் பதிப்பின் விற்பனைத் தொகை மீண்டும் இத்திருமுறையைத் தொடர்ந்து வெளியிடப் பயன்படுத்தப் பெறும்.

Koviloor Digital Library

முதல் திருமுறை

நூல் அளவுகள்

பக்கங்கள்:	1290
படிகள்:	1,000
அளவு:	215மிமீ. X 135 மிமீ. (1/8 டிமை)
அச்சுக்கோப்பு:	கணிப்பொறி- லேசர்ஒளி அச்சுக் கோப்பு
எழுத்தளவு:	10 மற்றும் 12 புள்ளி
அச்சுமுறை:	எதிரம், அச்சுத்தட்டு, மறுதோன்றி
தாள்:	மீவெண் மாப்லித்தோ 70ஜிஎஸ்எம். (18.6கிகி.)
கட்டு:	அட்டை, ரெக்சின்போர்வை, உருள்முதுகு

Koviloor Digital Library

உ

திருச்சிற்றம்பலம்

தருமை ஆதீனத்தை நிறுவியருளிய

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள் வரலாறு

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்தி டாமல்
தாரணிஅன் பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்க ணாளன்
பாரணியும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

- ஸ்ரீ சம்பந்தசரணாலயர்.

ஞானக்குழந்தை:

தமிழகத்தில் - தென்பாண்டி நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் கார்காத்த வேளாளர் மரபில் சுப்பிரமணிய பிள்ளை மீனாட்சியம்மை என்ற நல்லறப் பெரியோர்கட்கு அருந்தவ மகவாகப் பதினாறாம் நூற்றாண்டில் அவதரித்தவர், தருமை ஆதீன முதற் குருமூர்த்திகளாகிய ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள். இவருக்குப் பெற்றோர்கள், திருஞானசம்பந்தரைப்போல் தமது குழந்தையும் சிவஞானம் பெற்றுச் சைவம் வளர்க்கும் ஞானாசிரியனாகத் திகழ வேண்டும் என்று எண்ணி 'ஞானசம்பந்தன்' என்ற நற்பெயரைச் சூட்டி வளர்த்து வருகையில், தமது குலதெய்வமாகிய சொக்கநாதரையும் மீனாட்சியம்மையையும் தரிசிப்பதற்கு ஞானசம்பந்தருடன் மதுரை சென்று பொற்றாமரைத் தடாகத்தில் நீராடி வழிபட்டனர். பெற்றோர்கள் ஊருக்குப் புறப்படுங்கால் ஞானசம்பந்தர் தன்னைத் தொடர்ந்து நின்ற தாயும் தந்தையுமாகிய சொக்கநாதரைப் பிரிய மனமின்றி, உடலுக்குத் தாய் தந்தையர்களாகிய பெற்றோர்களுக்கு விடை கொடுத்தனுப்பிச் சொக்கநாதர் வழிபாட்டிலே ஈடுபாடு கொண்டவரானார்.

கண்ணுக்கினிய பொருள்:

நாள்தோறும் பொற்றாமரைக் கரையில் அடியார்கள் சிவபூசை புரிவதைக் கண்டார் ஞானசம்பந்தர். தாமும் அவ்வாறு சிவபூசை புரிய

Koviloor Digital Library

எண்ணினார். சொக்கநாதரை வேண்டினார். கருத்தறிந்து முடிக்கும் கண்ணுதற் கடவுளும் அன்றிரவு அவர் கனவில் தோன்றி, 'நாம் பொற் றாமரைத் தடாகத்தின் ஈசான்ய பாகத்தில் கங்கைக்குள் இருக்கிறோம். நம்மை எடுத்துப் பூசிப்பாயாக' என அருளினார். அவ்வண்ணமே மறுநாள் காலையில் பெருமானின் கருணையை வியந்து போற்றிப் பொற்றாமரைத் தடாகத்தில் மூழ்கினார். ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் கண்ணுக்கினிய பொருளாகத் தமது கரத்தில் வரப்பெற்றார். 'ஆசாரியன் மூலமாகத் தீக்ஷை பெற்றுத்தானே சிவபூசை புரிதல் வேண்டும்; ஆசாரியன் வேண்டுமே; சிவஞான உபதேசம் பெறவேண்டுமே; எப்படிப் பூசையைப் புரிவேன்! என்ற எண்ணம் தோன்றவே, அது பற்றி இறைவனிடமே முறையிட்டார்.

ஞானாசாரியனை அடைதல்:

வேண்டத்தக்கது அறிந்து வேண்ட முழுதுந் தருவோனாகிய சொக்கநாதப் பெருமான் மறுநாள் கனவில் எழுந்தருளி 'திருக்கயிலாய பரம்பரை - திருநந்தி மரபு மெய்கண்ட சந்தான வழியில் திருவாரூரில் விளங்கும் கமலை ஞானப்பிரகாசர் என்ற ஆசாரியரிடத்தில், வருகிற சோமவாரத்தில் ஞானோபதேசம் பெற்று நம்மைப் பூசிப்பாயாக' என அருளினார். அன்றிரவே கமலை ஞானப்பிரகாசர் கனவிலும் எழுந் தருளி, 'ஞானசம்பந்தன் வருகிற சோமவாரத்தன்று வருவான்; அவனுக்கு ஞானோபதேசம் செய்து சிவபூசையும் எழுந்தருளுவிப் பாயாக' என்று அருளினான். ஞானசம்பந்தர் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு திருவாரூர் சென்று, பூங்கோயிலில் உள்ள சித்தீச்சரம் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் அமர்ந்திருந்த கமலை ஞானப் பிரகாசரைக் கண்டார். காந்தம் கண்ட இரும்புபோல ஆசாரியரால் ஈர்க்கப்பட்டார். சமய விசேட நிர்வாண தீக்ஷைகளால் பாச ஞானம் பசுஞானங்கள் நீங்கிப் பதிஞானம் கைவரப் பெற்றார். சொக்கநாதப் பெருமானை ஆன்மார்த்த பூஜாமூர்த்தியாகப் பூசிக்கப்பெறும் பேற்றையும், ஞான அநுபூதியையும் அடைந்தார்.

கைவிளக்குப் பணிவிடை:

பன்னாளும் ஆசாரியப் பணிவிடை செய்து தங்கி இருக்கும் நாள்களில் ஒருநாள் தியாகராசப் பெருமானின் அர்த்தயாம பூசையைத் தரிசித்து ஆசாரியர் தமது மாளிகைக்கு எழுந்தருளினார். அப்பொழுது கைவிளக்குப் பணியாளன் உறங்கிவிட ஞானசம்பந்தர் தமக்கு ஞான ஒளியேற்றி நல்வழிகாட்டிய ஞானாசாரியருக்கு ஒளிவிளக்கு ஏந்தி முன்சென்றார். திருமாளிகையின் வாயில் முன்னர்ச் சென்றவுடன்,

Koviloor Digital Library

சிவாநுபூதியிலேயே திளைத்திருந்த ஞானப்பிரகாசர், அருள்நிலை கைவரும் பக்குவத்திலிருந்த ஞானசம்பந்தரை 'நிற்க' எனக் கட்டளை யிட்டு உட்சென்றார். ஆசாரியர் பெற்ற சிவாநுபூதியை ஞான சம்பந்தரும் கைவரப் பெற்றவராய் மாளிகை வாயிலில் கைவிளக்கு ஏந்தியவராகவே நின்றார். ஞானசம்பந்தரின் பெருமையை ஞாலம் அறியச்செய்து அதன்மூலம் சைவப் பயிர் தழைக்க இறைவன் திரு வுளம் பற்றினான் போலும். அன்றிரவு பெருமழை பெய்தது. சிவாநு பூதியில் திளைத்திருந்த ஞானசம்பந்தர் மீது ஒருதுளி மழை கூடப்பட வில்லை. விளக்கோ அணையாது சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டு இருந்தது.

குருஞானசம்பந்தராயினார்:

வைகறைப் பொழுதில் ஞானப்பிரகாசரின் பத்தினியார் சாணம் தெளிக்க வருங்கால், ஞானசம்பந்தர் அநுபூதி நிலையில் நிற்பதையும், விளக்குச் சுடர்விட்டுப் பிரகாசிப்பதையும் கண்டு உட் சென்று பதியிடம் வியப்புடன் அதனை வெளியிட்டார்.

ஞானப் பிரகாசர் விரைந்து வந்து பார்த்து, ஞானசம்பந்தரிடம் திருவருள் பெருகுகின்ற நிலையைக் கண்டு மகிழ்ந்து ''ஞானசம்பந்தா! நீ ஆசாரியனாக இருந்து, பக்குவம் உடையவர்களுக்கு ஞானோப தேசம் செய்து ஆசாரியனாக விளங்குவாயாக'' என்று அருளினார். அப்பொழுது ஞானசம்பந்தர்,

''கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை கண்டதுண்டோ
எனக்கும் உடற்கும் எனதிச்சை யோஇணங் கார்புரத்தைச்
சினக்குங் கமலையுள் ஞானப்ர காச சிதம்பரஇன்
றுனக்கிச்சை எப்படி அப்படி யாக உரைத்தருளே''.

என்ற பாடலைப்பாடி ''எங்குச்சென்று எவ்வாறு இருப்பேன்'' என்று விண்ணப்பிக்க, ஞானப்பிரகாசர், ''மாயூரத்தின் ஈசான்ய பாகத்தில் வில்வாரணியமாய் உள்ளதும், திருக்கடவூரில் நிக்கிரகம் பெற்ற எமதருமனுக்கு அநுக்கிரகம் செய்ததும் ஆன தருமபுரத்தில் இருந்து கொண்டு, அன்பு மிக உண்டாய், அதிலே விவேகமுண்டாய், துன்ப வினையைத் துடைப்ப துண்டாய், இன்பம் தரும் பூரணத்துக்கே தாகமுண்டாய் ஓடி வருங்காரணர்க்கு உண்மையை உபதேசித்துக் குருவாக விளங்குவாயாக'' என்று கட்டளையிட்டருளினார். ஞான சம்பந்தர், ''குருஞானசம்பந்தர்'' ஆயினார்.

Koviloor Digital Library

தருமபுரத்தில் ஆதீனம் கண்டார்:

ஆசிரியர் ஆணையை மறுத்தற்கு அஞ்சியவராய்க் கன்றைப் பிரிந்த பசுப்போல வருந்தும் குருஞானசம்பந்தரை நோக்கிக் ''குருவாரந்தோறும் வந்து நம்மைத் தரிசிப்பாய்'' என்று தேறுதல் கூறினார் ஞானப்பிரகாசர்.

குருஞானசம்பந்தர் தம் குரு ஆணையைச் சிரமேற்கொண்டு தமது ஆன்மார்த்த மூர்த்தியுடன் தருமபுரத்திற்கு எழுந்தருளி, தருமபுர ஆதீன மடாலயத்தை நிறுவியருளினார். ஞானாநுபூதியில் திளைத்துப் பல பக்குவ ஆன்மாக்களுக்குச் சிவஞானோபதேசம் செய்து அநுபூதிச் செல்வராய்த் திகழ்ந்தார். அவர் அநுபூதியில் பொங்கித் ததும்பிப் பூரணமாய் எழுந்த சிவஞானப் பேரருவியே *சிவபோக சாரம், சொக்க நாத வெண்பா, முத்தி நிச்சயம், திரிபதார்த்த ரூபாதி தசகாரிய அகவல், சோடசகலாப் பிராசாத ஷட்கம், சொக்கநாதக் கலித்துறை, ஞானப் பிரகாசமாலை, நவமணிமாலை* ஆகிய எட்டு நூல்கள் ஆகும். பாடல்கள் எளிமையும், இனிமையும் பயப்பனவாய், பதி, பசு, பாசம் என்ற முப்பொருளுண்மையைத் தெளிய விளக்குவனவாய் உள்ளன.

ஆனந்த பரவசருக்கு உபதேசம்:

குருஞானசம்பந்தர் தம்மை அடைந்த பக்குவமுடையவர் களுக்கு உபதேசித்து அநுபூதிமானாக விளங்கும்போது, உபதேச பரம்பரையை வளர்த்துவர அதி தீவிர பக்குவ நிலையிலிருந்த ஆனந்த பரவசருக்கு உபதேசித்துத் தாம் ஜீவசமாதி கூடியருளினார்கள். அதிதீவிர நிலையில் இருந்த ஆனந்தபரவசர் தமது குருநாதர் உபதேசித்த ஞானநிலை விரைவில் கூடியவராய், தம் ஞானாசாரியர் ஜீவசமாதி கூடிய ஸ்ரீ ஞானபுரீசுவரர் ஆலய விமான ஸ்தூபியைத் தரிசித்தவாறு நிட்டை நிலை கூடினார்கள்.

மீண்டும் எழுந்தருளினார்:

அதுகண்ட ஏனைய சீடர்கள் குருமரபு விளங்க வேண்டுவதை ஆசாரியர் திருமுன் சென்று விண்ணப்பிக்க, பரமாசாரிய மூர்த்திகள் ஜீவசமாதியினின்றும் எழுந்து வந்து ஸ்ரீ சச்சிதானந்த தேசிகருக்கு உபதேசம் செய்து அநுபூதிநிலை வருவித்து ஞானபீடத்து இருத்தி வைகாசி மாதம் கிருஷ்ணபக்ஷ சப்தமி திதியில் தாம் முன்போல் ஜீவ சமாதியில் எழுந்தருளினார்கள்.

Koviloor Digital Library

தருமை ஆதீனப் பணி:

கி.பி. 16 ஆம் நூற்றாண்டில் ஸ்ரீ குருஞானசம்பந்தரால் தோற்றுவிக்கப் பெற்ற இத்திருத்தருமை ஆதீனம் அதுமுதல் வழி வழியாக விளங்கி, மொழித் தொண்டும், சமயத் தொண்டும், சமூகத் தொண்டும் ஒல்லும் வகையெல்லாம் ஆற்றி வருகிறது. இப்பொழுது ஞானபீடத்தில் இருபத்தாறாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் எழுந்தருளியிருந்து அருளறப் பணிகள் பல இயற்றி அருளாட்சி புரிந்து வருகிறார்கள்.

வாழ்க தருமை ஆதீனம்! வளர்க குருபரம்பரை!

ஆய்வார் பதிபசு பாசத்தின் உண்மையை
ஆய்ந்தறிந்து
காய்வார் பிரபஞ்ச வாழ்க்கையெல் லாங்கல்வி
கேள்வியல்லல்
ஓய்வார் சிவானந்த வாரியுள் ளேயொன்
றிரண்டுமறத்
தோய்வார் கமலையுள் ஞானப்ர காசன்மெய்த்
தொண்டர்களே.

ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவ் பூசைபண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய் - சீ சீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்.

- ஸ்ரீ குருஞான சம்பந்தர்.

Koviloor Digital Library

தருமை ஆதீனம் ஞானசம்பந்தம் பதிப்பகத்தின்

பன்னிரு திருமுறைத் தொகுதி

(16 பகுதிகள்)

		பகுதி
	திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய தேவாரம்:	
1.	முதல் திருமுறை	1
2.	இரண்டாம் திருமுறை	2
3.	மூன்றாம் திருமுறை	3
	திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய தேவாரம்:	
4.	நான்காம் திருமுறை	4
5.	ஐந்தாம் திருமுறை	5
6.	ஆறாம் திருமுறை	6
	சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய தேவாரம்:	
7.	ஏழாம் திருமுறை	7
	மாணிக்கவாசக சுவாமிகள் அருளியவை	
8.	1. எட்டாம் திருமுறை - திருவாசகம்	8
	2. எட்டாம் திருமுறை - திருக்கோவையார்	9
	திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பதின்மர் அருளியவை:	
9.	ஒன்பதாம் திருமுறை - திருவிசைப்பா, திருப்பல்லாண்டு	10
	திருமூல நாயனார் அருளிய திருமந்திரம்	
10.	1. பத்தாம் திருமுறை - 1 - 3 தந்திரங்கள்	11
	2. பத்தாம் திருமுறை - 4 - 6 தந்திரங்கள்	12
	3. பத்தாம் திருமுறை - 7 - 9 தந்திரங்கள்	13
	திருவாலவாயுடையார் முதலிய பன்னிருவர் அருளியவை:	
11.	பதினொன்றாம் திருமுறை	14
	சேக்கிழார் சுவாமிகள் அருளிய திருத்தொண்டர் புராணம்:	
12.	பன்னிரண்டாம் திருமுறை - முதற்காண்டம்	15
	பன்னிரண்டாம் திருமுறை - இரண்டாம் காண்டம்	16

Koviloor Digital Library

முதல் திருமுறை

பொருளடக்கம்

		பக்கம்
1.	ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள் வரலாறு.	13
2.	ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஆசியுரை.	21
3.	பதிப்புரை.	42
4.	முதல் பதிப்பின் மதிப்புரைகள்.	50
5.	முதல் பதிப்பின் முகவுரை.	52
6.	முதல் திருமுறையின் உரைத்திறம்.	58
7.	தல அட்டவணை.	84
8.	தலங்களின் வரலாற்றுக் குறிப்புக்கள்.	94
9.	திருஞானசம்பந்தர் வரலாறு.	215
10.	அற்புதப் பதிகங்களும், பண்களும்.	244
11.	திருப்பதிகங்களின் சிறப்புப் பெயர்கள்.	246
12.	சிறப்புக் குறிப்புடைய திருப்பதிகங்கள்.	248
13.	தேவாரத் திருப்பதிகங்கள்.	253
14.	பாட்டு முதற்குறிப்பு அகராதி.	1253
15.	அருஞ்சொல் அகராதி.	1276
16.	தருமை ஆதீனம் இயற்றிவரும் பணிகள்.	1287

Koviloor Digital Library

உ

குருபாதம்

பன்னிரு திருமுறை ஆசிரியர்கள்

[1]திருஞான சம்பந்தர் [2]வாகீசர் [3]சுந்தரர்
[4]திருவாத வூரர் மற்றைத்
[5]திருமா ளிகைத்தேவர் [6]சேந்தனார் [7]கருவூரர்
தெள்ளு [8]பூந் துருத்தி நம்பி
வருஞான [9]கண்டரா தித்தர் [10]வே ணாட்டடிகள்
வாய்ந்த [11]திரு வாலி யமுதர்
மருவு [12]புரு டோத்தமர் [13]சேதிராயர் [14]மூலர்
மன்னு திரு [15]ஆல வாயார்
ஒரு [16]காரைக் காலம்மை [17]ஐயடிகள் [18]சேரமான்
ஒளிர் [19]கீரர் [20]கல்லாடனார்
ஒண் [21]கபிலர் [22]பரணர்மெய் உண [23]ரிளம்பெருமானொடு
ஓங்கும் [24]அதி ராவடிகளார்
திருமேவு [25]பட்டினத் தடிகளொடு
[26]நம்பியாண்டார் நம்பி [27]சேக்கிழாரும்
சிவநெறித் திருமுறைகள் பன்னிரண் டருள்செய்த
தெய்விகத் தன்மையோரே.

– புலவர். திரு. வை. தருமலிங்கம் பிள்ளை.
தமிழாசிரியர், தருமை ஆதினத் தேவாரப் பாடசாலை,
தருமபுரம்.

Koviloor Digital Library

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26 ஆவது குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் வழங்கியருளிய

ஆசியுரை

தேவாரம்

திருச்சிற்றம்பலம்

''நறவம் நிறைவண் டறைதார்க் கொன்றை நயந்து நயனத்தாற்
சுறவஞ் செறிவண் கொடியோ னுடலம் பொடியா விழிசெய்தான்
புறவம் உறைவண் பதியாம் மதியார் புரமூன் றெரிசெய்த
இறைவன் அறவன் இமையோர் ஏத்த உமையோ டிருந்தானே.''

-திருஞானசம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

சொரூபநிலை:

இறைவன் ஒருவனே. அவன் தன்மையால் இருதிறப்படுவான். இதனைத் திருஞானசம்பந்தர், 'தோடுடைய செவியன்' என்றார். தோட்டையுடைய செவி அம்மைக்குரியது. அம்மையை இடப்பாகத்தே உடையவராதலின் தோடுடைய செவியன் என்று இறைவனை இருதன்மையோடு கூடிய ஒருருவாகவே கூறினார். இறைவன் தோடுடைய செவியனாய்க் காட்சி கொடுத்தபின் பொங்கொளி மால் விடைமீதிவர்ந்து பொற்றோணி புகுந்தருளினார்.

அத் தோணியப்பரை 'நறவம் நிறைவண்டு' என்று தொடங்கும் இரண்டாவதாகப் பாடியருளிய பதிகத்துள் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் 'இமையோர் ஏத்த உமையோடிருந்தானே' என்றமை

Koviloor Digital Library

யாலும் பெருமானை இருதன்மையுடைய ஒருவனாகவே காட்டி யுள்ளமை உணரத்தக்கது.

மேலும் 'ஒருருவாயினை மானாங்காரத்து ஈரியல்பாய்' என்றருளினார். திருப்பரங்குன்றம் 'நீடலர் சோதி' எனத் தொடங்கும் பதிகத்துள் மூன்றாம் பாடலில்,

''ஒருடம்புள்ளே உமையொருபாக முடனாகிப்
பாரிடம்பாட இனிதுறைகோயில் பரங்குன்றே''.

என்பதனாலும், திருவண்ணாமலைப் பதிகத்தில் ,

''உண்ணாமுலை உமையாளொடும் உடனாகியவொருவன்''

என்பதனாலும்,

''ஆணும் பெண்ணுமாய் அடியார்க்கு அருள்நல்கி''

என்னும் நாகைக்காரோணப் பாடலாலும் பொருள் ஒன்று, தன்மை இரண்டு என்பதைத் தெளிவித்தார். சூரியனும் அதன் கிரணமும் போல், சிவமும், சக்தியும் பிரிப்பின்றி ஒரே பொருளாய், இருதன்மை உடையதாம். இதனை மணிவாசகர், 'நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும் அவனியில் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்' என்றார்.

அபிராமிப்பட்டர் 'உமையும் உமையொரு பாகரும் ஆகி ஏக உருவில் வந்து இங்கு எமையும் தமக்கு அன்பு செய்ய வைத்தார்' என்றார்.

இதனை, இறைவனது சொரூபநிலை எனக் கூறுவர் சாத்திர நூலார். சொரூபநிலை என்பது தன்னிலை; அஃதாவது இறைவனது இயற்கை நிலையாம்.

தடத்த நிலை:

இப்பரம்பொருள் தன்னை நோக்க ஒன்றாயும், உலகமுகப் படும் போது, அஃதாவது உயிர்கள் ஈடேற்றம் பெற உலகைத் தொழிற் படுத்தும் போது பலவாயும் பயன்படுகிறது. பரசிவம், பராசக்தி பூரணமாயிருந்தும் செயல்படாமல் ஒன்றாயும் இருதன்மைப்பட்டும் இருக்கிறது.

Koviloor Digital Library

அப்பரசிவம் தயாமூலதன்மம் என்னும் தத்துவத்தின் வழிநின்று பராசக்தியை நோக்க, அப்பராசக்தி தன் நிலையினின்றும் இறங்கி ஆதிசக்தியாய், தன் சக்தியில் பலகோடியில் ஒரு கூறு சக்தியால் அயன், அரி, அரன் என்னும் முதல் மூவரைப் படைத்து, முறையே படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலைச் செய்விக்கின்றது. இதுவே தடத்த நிலையாகும்.

இதுபற்றியே அபிராமிப்பட்டர் அம்மையை '' முதல் மூவருக்கும் அன்னே'' என்று அருளினார்.

திருவிளையாடற் புராண ஆசிரியர் பரஞ்சோதி முனிவரும், ''மெய், போதம், இன்பம் ஆம் வண்ணம் மெய் (உருவம்) கொண்ட வனாகிய பெருமான் தன் வலியாகிய ஆதிசக்தியின் ஆணைதாங்கி மூவண்ணல் தன் சந்நிதி முத்தொழில் செய்ய வாளாமேவு அண்ணல்'' என்றமையாலும் இக்கருத்துப் புலனாகும்.

இதனை ஞானசம்பந்தர் 'ஒருவிண் முதல் பூதலம் படைத் தளித்து அழிப்ப மும்மூர்த்திகளாயினை' என்றார்.

சம்புபட்சமும், அணுபட்சமும்:

சம்பு - இறைவன், இன்பத்தின் ஊற்றுக் கண்ணாயிருப்பவர். இங்குக் குறித்த அயன், அரி, அரன் ஆகிய மூவரும் இறைவனுடைய சக்தியே ஆவர். இது சம்புபட்சம். இறைவனே அயன், அரி, அரன் ஆன நிலை.

இம்மூவரும் தவறு செய்தவர் அல்லர். இவர்கள் படைப்பின் பயனால் உயிர்களிற் சில, புண்ணியச் செயற்பாட்டால் உயர்ந்து, இப் பதவியைப் பெற்றுப் படைத்துக் காத்து அழித்தலைச் செய்தன. இவ்வான்மாக்கள் அணுபட்சத்தினர் எனப்படுவர் அஃதாவது உயிர் வர்க்கத்தினர். ஆணவ மலமறைப்பால் வியாபகம் இன்றி அணுத் தன்மை எய்தியிருப்பதால் உயிர் அணு எனப் பெற்றது.

அயனும் அரியும்:

இம்மூவரில் அயனும் அரியுமே நானேபிரமம் என்று தருக்கிய வர்கள். இறைவன் சோதியாய்த் தோன்றியபோது அடிமுடி தேடி இளைத்தவர்கள்.

Koviloor Digital Library

அதிலும் அரன் அன்று முதல் இன்று வரை தானே பிரமம் என்று தருக்கியவர் அல்லர். அதனாலேயே அரனே சிவம் எனப் போற்றப்படுகிறார். இவ்விரு அரியும் அயனும் கூட ஒருகற்பத்திலே தான் இவ்வாறு தருக்குற்றனர்.

தருக்குற்றார் இறைவனைக் காண இயலாது என்பதைத்தான் திருமுறைகள் திருமாலும் பிரமனும் தேடிக் காணாதவர் என்று பேசு கின்றன.

இறைவனே மூவரும் ஆயினமையைத் திருநாவுக்கரசர்,

'ஒருவனாய் உலகேத்த நின்றநாளோ,
ஒருருவே மூவுருவம் ஆனநாளோ?'

என்ற கேள்வியால் விளக்கிப் போந்தார். இன்னோரன்ன குறிப்புக் களால் இறைவன் ஒருவனே என்பதும், அவன் தானும் தன்சக்தியுமாய் இருதன்மைப்பட்டு இயங்கியும் உலகத்தை இயக்கியும் வருகிறான் என்பதும், அவனே மூவராயும் மூவருக்கும் மேலாக மூவர்கோனாயும் விளங்குகிறான் என்பதும் புலப்படும்.

இவ்வரிய கருத்துக்களை எல்லாம் பன்னிரு திருமுறைகள் பல இடங்களிலும் தெளிவு படுத்துகின்றன.

திருமுறை:

திருமுறை என்ற சொல், திருவை அடையச் செய்யும் நூலுக்குப் பெயராயிற்று. திரு என்பது சிவம். 'சிவமே பெறும் திரு எய்திற்றிலேன்' என்பது மணிவாசகர் திருவாக்கு. அவர் சிவத்தைத் திரு என்றே குறிப்பிடுகிறார்.

'திரு' என்ற சொல்லுக்கு உண்மை, அறிவு, ஆனந்தம் என்ற மூன்று பொருளும் உண்டு. சிவபரம்பொருளைச் சச்சிதானந்த வடிவ மாகக் காட்டுகின்றன ஞானநூல்கள். சத் - உள்ளது, சித் - அறிவு, ஆனந்தம் - இன்பம். இம்மூன்றையும் உடையது எதுவோ அதுவே உண்மைத் திரு எனப்படும். சத் என்பது சிவம், சித் என்பது உமாதேவி, ஆனந்தம் என்பது முருகன். எனவே, உண்மை, அறிவு, இன்பம் இம் மூன்றும் நிறைந்ததே முழுமையான பரம்பொருளாகும்.

இப்பரம்பொருளை அடைய வழி கூறும் நூலே திருமுறை

Koviloor Digital Library

எனப்படும். முறை என்ற சொல், நூல் என்ற பொருளில் கந்த புராணத்துள் வந்துள்ளமையைக் காணலாம்.

''இறைநிலம் எழுதுமுன் இளைய பாலகன்
முறைவரை வேன்என முயல்வது ஒக்குமால்''

என்பது *கந்தபுராண* அவையடக்கப் பாடல் பகுதி.

மேலும் திரு என்ற சொல்லுக்கு, 'கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம்' என்று திருக்கோவையாருக்கு உரை கண்ட பேராசிரியர் குறிப்பிடுவதும் கொள்ளத்தக்கதே. என்னை? குழந்தை, யானை என்பனவற்றை எத்துணைப் பெரியவர்களாயினும் எத்துணைச் சிறியவர்களாயினும் காணுந்தோறும், காணுந்தோறும் விருப்பம் கொள்வர். அது போல் சத்து, சித்து, ஆனந்தமாக இருக்கும் பரம் பொருளையும் துன்புறுவோர் இன்புறுவோர் யாவராயினும் நினையுந்தொறும், காணுந்தொறும், பேசுந்தொறும் விருப்புற்றிருப்பரே அன்றி வெறுப்புற்றிருப்பாரல்லர் என்பதும் அறிந்து இன்புறத்தக்கது.

தேவாரம்:

இனி இத் திருமுறைகளுள் சம்பந்தர், அப்பர், சுந்தரர் பாடல்களைத் தேவாரம் என்று அழைக்கிறோம்.

தேவ - ஆரம் என்று இதனைப் பிரிக்கலாம். தெய்வத்திற்கு மாலை போல்வது என்பது இதன் பொருள். மலரை இணைத்து மாலையாகச் சூட்டுவது போல, சொற்களை இணைத்துச் சொல்மாலையால் புகழே மணமாக இறைவனுக்குச் சூட்டப்படும் மாலை என்றபொருளில் இப்பெயர் அமைந்திருத்தலைக் காணலாம்.

தே - வாரம் எனப் பிரித்தால் தெய்வத்திடம் அன்பை விளைவிப்பது எனப்பொருள்படும். வாரம் - அன்பு. ''வாரமாய் வணங்குவார் வல்வினைகள் மாயுமே'' என்பது ஞானசம்பந்தர் திருவாக்கு.

மேலும், வாரம் - உரிமை. இறைவனுக்கும் உயிர்கட்கும் உள்ள தொடர்பை - உரிமையை உள்ளவாறு தெளிவித்து உயிர்கள் பயன்பெற உதவும் பாடல்கள் கொண்ட நூல் என்ற பொருளும் இதற்கு உண்டு என்பதைக் காணலாம்.

Koviloor Digital Library

தேவாரம் என்ற சொல் வழிபாடு என்ற பொருளிலும் வழங்கி உள்ளது. வாரம் என்பது முதல்நடை, வாரம், கூடை, திரள் என்னும் இசை இயக்கம் நான்கினுள் ஒன்று. மந்தநடை முதல்நடை எனவும், விரைந்தநடை திரள் எனவும், இவ்விரண்டிற்கும் இடைநிகர்த்ததாய்ச் சொல்லொழுக்கும், இசையொழுக்கும் பொருந்திய இசைப்பாடல் வாரம் எனவும், சொற்செறிவும், பொருட்செறிவும் உடைய பாடல் கூடை எனவும் அடியார்க்கு நல்லார் உரை, விளக்கம் தருகிறது. எனவே, வழிபாட்டிற்குரிய இனிய இசைப்பாடல் என்பதே தேவாரம் என்பதன் பொருளாக அறியப்பெறுகிறது.

தேவாரம் என்னும் பெயர்வழக்கு, இரட்டைப் புலவர்கள் பாடியுள்ள ஏகாம்பரநாதர் உலாவில்தான் இலக்கியத்தில் முதன் முதலில் காணப்படுகிறது. ''மூவாத பேரன்பின் மூவர் முதலிகளும், தேவாரம் செய்த திருப்பாட்டும் ...'' என்பது அவ்வுலாத் தொடராகும்.

தெய்வக்குடிச் சோழர்:

திருமுறைகளில் தேவாரம் மட்டும் அடங்கன் முறை என்று வழங்கி வருகிறது. தேவாரம் திருமுறை இரண்டையும் சேர்த்துத் தேவாரத் திருமுறை என்றும் இதனைக் கூறுவர். இவ்வரிய கருவூலத்தை நமக்கெல்லாம் கிடைக்க வழி செய்த பெருமை இறை யருளால் சோழ மன்னர்களுக்கே வாய்த்தது. இதனாலேதான் திரு முறையை வகுத்தளித்த நம்பியாண்டார் நம்பிகள், திருத்தொண்டர் திருஅந்தாதியில், கோச்செங்கட் சோழ நாயனார் வரலாற்றில், ''மை வைத்த கண்டன் நெறியன்றி மற்றோர் நெறி கருதாத், தெய்வக் குடிச் சோழன்'' என்று கூறி அருளினார்.

திருமுறைகண்ட சோழன் யார்?:

சோழர்கள்தான் திருமுறைகளை முதன்முதல் கண்டும் கேட்டும், அவற்றைத் திருக் கோயில்களில் ஓதுவதற்கு நிவந்தம் அளித் தும் போற்றினர் என்பது பல கல்வெட்டுக்களால் அறியப்படுகிறது.

முதலாம் ஆதித்த சோழன் ஆட்சிக் காலம் கி.பி. 873இல் திரு எறும்பியூரிலும், கி.பி. 876இல் பழுவூரிலும் கோயில்களில் திருப் பதிகம் ஓத நிவந்தம் அளித்தமை அவ்வத்தலக் கல்வெட்டுக்களால் அறியப்படுகிறது.

முதல் பராந்தக சோழன் ஆட்சிக்காலம் கி.பி. 910இல்

Koviloor Digital Library

திருவாவடுதுறையிலும், கி.பி. 911இல் அல்லூரிலும், கி.பி. 914இல் திருத்தவத்துறையிலும் (லால்குடி), திருமுறைகளை ஓத நிவந்தம் அளித்தமை அவ்வூர்க் கோயில் கல்வெட்டுக்களில் காணப்படுகிறது.

உத்தம சோழன் ஆட்சியில் கி.பி. 977இல் திருநல்லத்திலும், (கோனேரி இராஜபுரம்) கி.பி. 984இல் அந்துவநல்லூரிலும் திருப் பதிகங்கள் ஓதுவதற்கு நிவந்தங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

பல்லவர் ஆட்சியில் நந்திவர்ம பல்லவனின் 17ஆம் ஆட்சி ஆண்டாகிய கி.பி. 750இல் திருவல்லம் கோயில் கல்வெட்டில் ''திருப்பள்ளித் தாமம் பறிப்பார்க்கும், திருப்பதிகங்கள் ஓதுவார் உள்ளிட்ட பல பணிகள் செய்வார்க்கும் நெல்லுநானூற்றுக்காடியும்'' என்று குறிக்கப்படுகிறது. இதைப் பார்க்கும்போது ஆதித்த சோழனுக்கு முன்பே பல்லவர் ஆட்சியிலேயே திருமுறைகளைக் கோயில்களில் ஓதுவதற்கு நிவந்தங்கள் அளித்த உண்மை புலனாகிறது.

இவையெல்லாம் முதலாம் இராஜராஜன் காலத்திற்கு (கி.பி. 985-1014) முன்பே நிகழ்ந்தவை. எனவே திருமுறை கண்ட சோழன் முதலாம் ஆதித்தனா, முதலாம் இராஜராஜனா என்பதில் கருத்து வேறு பாடுகள் தோன்றியுள்ளன.

கல்வெட்டு ஆய்வாளர் திரு. சதாசிவ பண்டாரத்தார் முதலாம் ஆதித்த சோழன் காலமே நம்பியாண்டார் நம்பிகளின் காலம் என்பர். திருமுறை கண்டதும் அக்காலமே என்பர். திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர் திரு.க. வெள்ளைவாரணனாரும் அக்கருத்தையே வலியுறுத்துகின்றார்.

கல்வெட்டு ஆய்வாளர், குடந்தை திரு.ந.சேதுராமன் முதலியோர் முதலாம் இராஜராஜனே என்பர். உமாபதிசிவம் இயற்றியருளிய திருமுறைகண்ட புராணம் இராஜராஜனையே திருமுறைகண்ட சோழன் என்று குறிப்பிடுகின்றது.

சோழர் மூவரின் திருமுறைப்பணி:

நம்பியாண்டார் நம்பிகள், முதலாம் இராஜராஜன் காலத் திலும், முதலாம் இராஜேந்திரன் காலத்திலும் இருந்தவராகக் கருதப் படுவதால், இராஜராஜன் காலத்தில் முதல் ஏழு திருமுறைகளையும், இராஜேந்திரன் காலத்தில் எட்டு, ஒன்பது, பத்து, பதினொன்றாந்

Koviloor Digital Library

திருமுறைகளையும் தொகுத்தவர் ஆவர். இதனால் இந் நம்பிகள் வேதத்தை நான்காக வகுத்த வேதவியாசருக்கு ஒப்பாகப் போற்றப்படுகிறார். அநபாயன் என்னும் சிறப்புப்பெயர் பெற்ற இரண்டாம் குலோத்துங்கன் சேக்கிழாரைக் கொண்டு பெரியபுராணம் பாடச் செய்தவன்.

''திருத்தொண்டர் புராணம்எழு தியமுறையை மறையோர்
சிவமூல மந்திரத்தால் அருச்சனைசெய் திறைஞ்சி
இருக்குமுதல் மறைநான்கில் இன்றுமுத லாக
இதுவும்ஒரு தமிழ்வேதம் ஐந்தாவ தென்று
கருத்திருத்தி அமுதடைக்காய் நறுந்தூப தீபம்
கவரிகுடை கண்ணாடி ஆலத்தி நீறு
பரித்தளவு செயக்கண்டு வளவர்பிரான் முறையைப்
பசும்பட்டி னாற்சூழ்ந்து பொற்கலத்தில் இருத்தி.''

என்ற உமாபதி சிவம் அருளிய *சேக்கிழார் புராணப்* பாடலால், திருத்தொண்டர் புராணத்தைச் சிவமாகப் பாவித்து, சிவமூல மந்திரத்தால் மறையோர் அர்ச்சித்து, 'தோடு' செய்த திருநெறிய செந்தமிழோடு ஒக்கும் என்றுரை செய்து, செப்பேடு செய்வித்துப் பன்னிரண்டாந் திருமுறையாக ஏற்றுப் போற்றினர்.

எனவே, முதலாம் இராஜராஜன், இராஜேந்திரன், இரண்டாம் குலோத்துங்கன் ஆகிய மூவேந்தர் காலத்திலேயே இப்பன்னிரு திருமுறைகள் தொகுக்கப் பெற்றன என்பதைத் தெளிந்து பணிந்து போற்றுவோமாக.

செப்பேடு:

கி.பி. 1070 முதல் கி.பி. 1120 வரை ஆட்சி புரிந்தவன் முதல் குலோத்துங்கன். இவன் படைத்தலைவர்களுள் ஒருவனான மணவிற் கூத்தன் காளிங்கராயன் என்பான், மூவர் தேவாரத் திருப்பதிகங்களைச் செப்பேடுகளில் எழுதுவித்து, திருக்கோயிலுள் சேமமுற வைத்தான் என்று தில்லைக் கோயில் கல்வெட்டுக் கூறுகிறது. அதுபற்றிய வெண்பா:

''முத்திறத்தா ரீசன் முதற்றிறத்தைப் பாடியவா(று)
ஒத்தமைத்த செப்பேட்டி னுள்எழுதி - இத்தலத்தின்
எல்லைக் கிரிவாய் இசைஎழுதி னான்கூத்தன்

Koviloor Digital Library

தில்லைச்சிற் றம்பலமே சென்று.''

தில்லைச்சிற்றம்பலத்தின் மேல்பால் மூவர் கைஅடையாளம் உள்ள அறையில் இருந்த திருமுறைகள் செல்அரித்திருந்தமையை உணர்ந்தமையால் செல் அரியாவண்ணம் இப்படைத்தலைவன் காளிங்கராயன் செப்பேடு செய்வித்தான்.

திருவாரூரிலும் திருமுறைகள் செப்பேடு செய்திருந் தமையை, அச்செப்பேட்டிலிருந்து படி எடுத்த தருமை ஆதீன ஓலைச் சுவடியால் புலனாகிறது. இப்படி யெல்லாம் திருமுறைகளின் அருமை, பெருமை தெரிந்து போற்றிய முன்னோர்களின் திருவுளக் கருத்தை உணர்வோமாக.

ஓலைச்சுவடிகளில் திருமுறை:

மற்றொரு வகையில் திருமுறைகண்ட சோழன் பற்றிச் சிந்திப் போம். ஞானசம்பந்தர் காலத்தில் அவருடனே இருந்து அவர் பாடல்களையெல்லாம் எழுதி வந்த சம்பந்த சரணாலயரே திருமுறை களை முதன்முதலில் ஓலைச்சுவடிகளில் எழுதியவர்.

அதன்பிறகு ஏறத்தாழ ஞானசம்பந்தர் காலத்தில் இருந்தவ ராகக் கருதப்பெறும் சீகாழி கணநாதநாயனார், திருமுறைகளை எழுதுவோர் வாசிப்போரைத் தயாரித்தார் என்பது அவரைப் பற்றிய செய்தி.

பிற்காலத்தில் திருநெல்வேலிப் பகுதியிலும், வேதாரண்யம் பகுதியிலும் சில தேசிகர் குடும்பத்தினர் ஓலையில் திருமுறைகளை எழுதி, பலருக்கும் வழங்கி அதனால் வரும் ஊதியம் கொண்டு வாழ்க்கை நடத்தினர் என்று மர்ரே கம்பெனி திரு. ராஜம் குறிப்பிட்டு உள்ளதும் சிந்திக்கவேண்டிய செய்தி. இதில் காலக் குறிப்பில்லை.

இதுபற்றிப் பொதுவாகச் சிந்தித்தால் தேவாரத் திருமுறைகள் தேவார மூவர் காலத்திற்குபின் மக்கள் வழக்கில் அருகி இருந்தன என்பதும், திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் அருளால் நம்பி யாண்டார் நம்பிகள் இராஜராஜன் வேண்டுகோட்படி சிதம்பரத்தில் சிற்றம்பலத்தின்மேல்பால் உள்ள மூவர் கைஅடையாளம் உள்ள அறையில் திருமுறைகள் உள்ளன என்பது கண்டு அறிவித்ததுமுதல், இன்றுள்ள மூவர் தேவாரம் நமக்குக் கிடைத்துள்ளது என்று கொள்ள இடம் தருகிறது.

Koviloor Digital Library

இயற்றியவர் உமாபதிசிவம் என்பதை ஒத்துக்கொள்கிறார். உமாபதி சிவம் கி.பி. 13ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் கி.பி. 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர்.

இராஜராஜசோழன் காலத்திற்குப்பிறகு 300 ஆண்டளவில் வாழ்ந்தவர். இவர் இதுபற்றிச் சிந்திக்காமல் இருந்திருப்பாரா என்பதையும் சிந்திக்க வேண்டியுள்ளது. மேலும் அபயகுலசேகரன் என்ற பெயர், சோழர்கள் யாருக்கும் பெயராக இருந்ததில்லை என ஆய்வு செய்துள்ளார். பட்டப்பெயராக நம்பியாண்டார் நம்பிகளே கொடுத்திருக்கலாம் என்று கொள்வதால் தவறேதும் இல்லை எனத் தோன்றுகிறது.

இடங்கழி நாயனாரையும், கோச்செங்கட் சோழ நாயனாரையும் சிற்றம்பலம் பொன்வேய்ந்தவர்கள் என்று நம்பிகள் சொல்கிறார். இதுபோன்ற குறிப்பு இராஜராஜனைப்பற்றி நம்பிகள் ஏதும் குறிப்பிடவில்லையே என்கிறார். இது சிந்தைனைக்குரியதே.

முதலில் தேவாரம் பாடியவர்:

ஞானசம்பந்தர் அருளிய பதிகங்களைத் திருக்கடைக்காப்பு என்றும், நாவுக்கரசர் அருளிய பதிகங்களைத் தேவாரம் என்றும், சுந்தரர் அருளிய பதிகங்களைத் திருப்பாட்டு என்றும் பழமையில் வழங்கிய மரபையும் நாம் தெரிந்துகொள்ளுதல் நலம் பயக்கும்.

ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள் என்று போற்றப் பெறுபவர்கள். ஆனால் இவர்களில் முதன் முதல் தேவாரம் பாடியவர் யார் என்பதையும் தெரிந்து கொள்ளுதல் வரலாற்று அடிப்படையில் நலம் தரும் செயலாம்.

சுருங்கச் சொன்னால் முதலாம் மகேந்திரவர்ம பல்லவன் ஆட்சிக்காலம் கி.பி. 615-630. இந்தக் காலத்தில்தான் அப்பர் பெருமான் சமண சமயத்திலிருந்து சைவம் சார்ந்தார். முதன்முதலில், '' கூற்றாயினவாறு'' என்று தொடங்கும் தேவாரம் பாடியருளினார். மகேந்திரவர்ம பல்லவன் விளைத்த இடர்களையெல்லாம் இறையருளால் வென்றார். மகேந்திரவர்மனும் மனம்திருந்தி சைவசமயம் சார்ந்து திருவதிகையில் குணபரவீச்சுரம் என்னும் சிவன் கோயிலைக் கட்டினான். திருச்சிராப்பள்ளியிலும் மலைமீது குடைவரைக் கோயில் அமைத்தான் அவ்வரசன் சமணசமயத்தைச் சார்ந்திருந்ததும், நாவுக்கரசரால் மனம்திருந்தி சைவன் ஆனதும் அக்குடைவரைக் கோயிலில்

Koviloor Digital Library

உள்ள கல்வெட்டுக்களால் அறியப்படும் செய்தி. மகேந்திரவர்ம பல்லவனின் மகன் முதலாம் நரசிம்மவர்ம பல்லவன் ஆட்சிக்காலம் கி.பி. 630-668. ஞானசம்பந்தர் அவதாரமே கி.பி. 638 என்று நரசிம்மவர்மன் காலமாகக் கணக்கிடுகின்றனர்.

கி.பி. 642இல் நரசிம்மவர்ம பல்லவன் பரஞ்சோதியாரைப் படைத் தலைவராகக் கொண்டு, வாதாபியை வென்று, அவர் சிவன் அடியார் என்பதறிந்து, அவருக்குச் சிறப்புக்கள் செய்து, நிரம்பப் பொருளும் கொடுத்து, சிவதொண்டு செய்துவர விடுத்தான். இப் பரஞ்சோதியாரே சிறுத்தொண்டர் எனப் போற்றப்படுவர். கி.பி. 642 இல் திருச்செங்காட்டங்குடி சேர்ந்து திருவெண்காட்டு நங்கையை மணந்து சீராளதேவரைப்பெற்று மூவாண்டில் பள்ளியில் சேர்த்தார். அப்பொழுது ஞானசம்பந்தர் கி.பி. 645இல் திருச்செங்காட்டங்குடிக்கு எழுந்தருளி இறைவனைத் தரிசித்து, சிறுத்தொண்டரையும், சீராள தேவரையும் ''பைங்கோட்டு மலர்ப்புன்னை'' திருப்பதிகத்துள் குறிப் பிட்டுள்ளார்.

இவ்வரலாற்றினால் மகேந்திரவர்ம பல்லவன் காலத்திலேயே வாழ்ந்து அற்புதங்கள் நிகழ்த்திய அப்பரே முதலில் தேவாரம் பாடியவர் என்பது தெளிவாகும்.

முதல் ஆசாரியர்:

முதலில் தேவாரம் பாடியவர் என்ற சிறப்பு அப்பருக்கு இருந்தபோதிலும், ஆசாரியத்துவம் யாருக்கு முதன்மையாக வழங்கி யுள்ளார் இறைவன் என்பதையும் தெரிந்துகொள்வது தெளிவுதரும் செயலாகும்.

சீகாழியில் பெருமான் ஞானசம்பந்தருக்குத் தோடுடைய செவியனாய் விடையேறிக் காட்சிகொடுத்தான். அக்காட்சியைத் தன்னை ஈன்றெடுத்த தவமுடைய தாதைக்கு அடையாளங்களுடன் சுட்டிக் காட்டினார் ஞானசம்பந்தர். ஆனால் அக்காட்சி சிவபாத இருதயருக்குப் புலப்படவில்லை.

அடுத்து, திருமறைக்காட்டில் கதவு திறக்கவும் அடைக்கவும் பாடிய நிகழ்ச்சியால், நெகிழ்வுற்ற அப்பரைத் திருவாய்மூர் வரச் சொன்னார் இறைவன். அதை ஞானசம்பந்தரும் உணர்ந்து அப்பருடன் பின் தொடர்ந்தார். திருவாய்மூர்ச் செல்வனாரும் ஞானசம்பந்தருக்குத்தான் காட்சி நல்கினார். ஞானசம்பந்தர் காட்டக்

Koviloor Digital Library

கண்டார் அப்பரடிகள். அதன் பிறகுதான் அப்பர், 'பாட அடியார் பரவக்கண்டேன்' என்று பாடுகிறார்.

முத்தமிழ் விரகராம் ஞானசம்பந்தர் மூல இலக்கியங்களாகப் பலவற்றை இயற்றியதோடு அவையெல்லாம் இசை நுணுக்கம் வாய்ந்த பாடல்களாகப் பாடியுள்ள சிறப்பு, அவதாரத்திற்கு 16 காரணங்கள் குறிப்பிடும் சேக்கிழார் வாக்கு, குடை, திருச்சின்னம், சிவிகை, முத்துவிதானம் போன்ற ஆசாரியருக்குரிய அங்கங்கள் எல்லாம் ஞானசம்பந்தருக்கே கொடுத்துள்ளமை முதலியவற்றால் முதன்மை ஆசாரியத்துவம் ஞானசம்பந்தருக்கே வழங்கியுள்ளமை புலனாகிறது. மேலும் இவர் முத்திப்பேறெய்திய ஆச்சாள்புரம் ஆச்சாரியபுரம் என்று வழங்கியமையாலும் இக்கருத்தை நன்கு தெளியலாம்.

பண் அடைவு:

பண்முறைப் பதிப்பு, தலமுறைப் பதிப்பு என்னும் இருவகைப் பதிப்புக்களே நடைமுறையில் வெளிவந்துள்ளன. அடுத்து வரலாற்று முறைப் பதிப்பும் விரைவில் வெளிவர வேண்டியது அவசியமாகும்.

முதல் திருமுறையில் நட்டப்பாடைப் பண்ணில் 22 பதிகங்களும், தக்கராகப் பண்ணில் 24 பதிகங்களும், பழந்தக்கராகப் பண்ணில் 8 பதிகங்களும், தக்கேசிப் பண்ணில் 12 பதிகங்களும், குறிஞ்சிப் பண்ணில் 24 பதிகங்களும், வியாழக் குறிஞ்சிப் பண்ணில் 25 பதிகங்களும், மேகராகக் குறிஞ்சிப் பண்ணில் 8 பதிகங்களும் ஆக 136 பதிகங்களும், 88 தலங்களும் உள்ளன. இவற்றுள் ''மாதர் மடப்பிடியும்'' என்ற பதிகம் யாழ்முரி என்றிருந்த போதிலும், அதுவும் மேகராகக் குறிஞ்சிப் பண்ணேயாகும். யாழை முரிக்கத் துணை நின்றதால் யாழ்முரி என்று பெயர் பெற்றதே அன்றி அது தனிப் பண்ணல்ல என்பதும் அறிக.

அந்தாளிக் குறிஞ்சிப் பண்ணில் ஆச்சாள் புரத்திலே, திருமண நிறைவின் போது, பாடிய, ''கல்லூர்ப் பெருமணம்'' என்று தொடங்கும் பதிகமும், திருக்குருகாவூர் வெள்ளடையில் பாடியருளிய ''சுண்ண வெண் ணீறணி'' என்று தொடங்கும் பதிகமும் ஆக இரண்டு பதிகங்களே உள்ளன. பண் முறைப்படி பார்த்தால், குறிஞ்சி, வியாழக் குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சிக்கு அடுத்ததாக அந்தாளிக் குறிஞ்சிப் பண் இடம் பெற்றிருக்க வேண்டும். ஞானசம்பந்தர் வாழ்வின் நிறைவில் பாடியதால் அப்பண்ணை மட்டும் மூன்றாம் திருமுறையின் நிறைவில் சேர்த்துள்ளனர். பண்முறைப் பதிப்பு என்ற முறையில்

Koviloor Digital Library

அப்பண் முதல் திருமுறையில் இருப்பதே பொருத்தமானதாகும். விவரம் தெரிவதற்கு இங்கு இது குறிக்கப்பட்டுள்ளது.

''துஞ்ச வருவாரும்'' எனத் தொடங்கும் திருவாலங்காட்டுத் திருப்பதிகம், பழம்பஞ்சுரத்தில் சேர்க்கப்பட வேண்டும். இப்பதிகத்தை மூன்றாந் திருமுறையில் பழம்பஞ்சுரப் பதிகங்களோடு சேர்த்து, அத்திருமுறையில் உள்ள அந்தாளிக் குறிஞ்சிப் பண்ணமைப்புடைய இரு பதிகங்களையும் முதல் திருமுறையில் மேகராகக் குறிஞ்சிப் பண்ணிற்கு அடுத்ததாகச் சேர்ப்பதே முறையாகும். இவ்வாறு ஒன்றைக் கழித்து இரண்டு பதிகங்களை முதல் திருமுறையில் சேர்த்தால் முதல் திருமுறைப் பதிகங்கள் 137 ஆகும்.

திருஞானசம்பந்தர் அருளிய முதல் திருமுறையில் 'குருவருள்' என்ற தலைப்பில் சில பாடல்களுக்கு விளக்கம் குறிக்கப்பெற்றது. நிற்க, மேலும் சில திருப்பதிகப் பாடல்களின் அரிய கருத்துக்களை இனிக்காண்போம்.

மூத்த திருப்பதிகம்:

இத்திருமுறையில் எட்டுப் பண்களில் அமைந்த 136 திருப் பதிகங்கள் உள்ளன. அவற்றுள் முதல் திருப்பதிகம் தோடுடைய செவியன் என்பது. ஞானசம்பந்தர் காலத்திற்கு முன்பே பண்ணோடு திருப்பதிகம் பாடி நெறிகாட்டியவர் காரைக்காலம்மையார்.

அவர் பாடிய நட்டபாடைப் பண்ணையே முதலில் ஞான சம்பந்தரும் அருளினார். இது பற்றியே அம்மையார் அருளிய திருப் பதிகம் மூத்த திருப் பதிகம் என்ற பெயரைப் பெறுவதாயிற்று.

திருப்பதிகம்:

பதிகம் என்பதற்குப் பத்துப் பாடல்களைக் கொண்டது என்பது பொருள். பெரும்பாலான பதிகங்கள் பத்துப் பாடல்களைக் கொண்டும், சில குறைந்தும் சில கூடியும் அமைந்துள்ளன.

திருஞான சம்பந்தர் திருப்பதிகம் பத்துப் பாடல்களோடு பதினொன்றாம் பாடலையும் கொண்டுள்ளது. அதில் பாடியவர் பெயரும் பதிகப்பயனும் கூறப்படுகிறது. பதினொன்றாவது பாடல் திருக்கடைக்காப்பு எனப் பெறும். பலசுருதி எனச் சொல்லப்பெறும்

Koviloor Digital Library

திருக்கடைக்காப்பு எனப் பெறும். பலசுருதி எனச் சொல்லப்பெறும் பதிகப் பயன் கூறும் பாடலாக, இத் திருக்கடைக்காப்பு விளங்குகின்றது. இதுபற்றியே அவர் அருளிய தேவாரத்திற்குத் திருக்கடைக்காப்பு எனப் பெயர் வழங்கலாயிற்று.

ஞானசம்பந்தர் பதினாறாயிரம் பதிகங்கள் அருளிச் செய்தார் என நம்பியாண்டார் நம்பிகள் கூறுகின்றார். நாவுக்கரசர் நாற்பத்தொன்பதாயிரம் பதிகங்கள் அருளினார் எனச் சுந்தரரும், நம்பியாண்டார் நம்பிகளும் கூறுகின்றனர். சுந்தரர் முப்பத்தெட்டாயிரம் பதிகங்கள் பாடினார் எனத் திருமுறைகண்ட புராணம் கூறுகிறது.

இத்துணைப் பதிகங்களில் பலவும் கிடைக்கப் பெறாமையால் இவர்கள் பதிகம் எனக் கூறுவது பாடல்களையே குறிப்பதாகலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர். இன்று திருஞானசம்பந்தர் அருளியனவாக 384 பதிகங்களும், திருநாவுக்கரசர் அருளியனவாக 307 பதிகங்களும், சுந்தரர் அருளியனவாக 100 பதிகங்களுமே கிடைத்துள்ளன.

எட்டாம் பாடல்:

இவர் திருப்பதிகங்களில் எட்டாவது பாடல், இராவணன் செய்த பிழையைப் பெருமான் மன்னித்து அவனுக்கு அருள் புரிந்ததைத் தெரிவிக்கின்றது. இதனைச் சேக்கிழார்,

''மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையின்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளும் எனக்காட்ட
எண்ணமிலா வல்லரக்கன் எடுத்துமுறிந் திசைபாட
அண்ணலவற் கருள்புரிந்த ஆக்கப்பா டருள்செய்தார்''

எனக் கூறுவார்.

ஒன்பதாம் பாடல்:

ஒன்பதாவது திருப்பாடல் திருமால் பிரமன் அடிமுடி தேடியறிய இயலாது எய்த்தமையை இயம்புவது. அதற்குச் சேக்கிழார் தரும் விளக்கத்தைப் பின் வரும் பாடலால் அறியலாம்.

''தொழுவார்க்கே அருளுவது சிவபெருமான் எனத்தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மாலயனும்
இழிவாகும் கருவிலங்கும் பறவையுமாய் எய்தாமை

Koviloor Digital Library

விழுவார்கள் அஞ்செழுத்துந் துதித்துய்ந்த படிவிரித்தார்''.

பத்தாம் பாடல்:

பத்தாவது திருப்பாடல், சமணம், புத்தம் ஆகிய புறச் சமய நெறிகளைக் கடிந்துரைப்பது. இதனைக் குறித்துச் சேக்கிழார் அருளும் விளக்கத்தைப் பின்வரும் பாடலால் அறியலாம்.

''வேதகா ரணராய வெண்பிறைசேர் செய்யசடை
நாதன்நெறி அறிந்துய்யார் தம்மிலே நலங்கொள்ளும்
போதம்இலாச் சமண்கையர் புத்தர்வழி பழியாக்கும்
ஏதமே எனமொழிந்தார் எங்கள்பிரான் சம்பந்தர்''.

பதிகரணம்:

திருப்புறவம் எனும் தலத்தில் 'எய்யாவென்றி' என்று தொடங் கும் பதிகத்தின் இறுதிப் பாடலாகிய ''பொன்னியல்மாடப் புரிசை'' என்னும் பாடலில் மூன்றாம் வரியில் ''தன்னியல்பில்லாச் சண்பையர் கோன்'' என்றதனால் ஞானசம்பந்தர் அவனருளே கண்ணாகக் கொண்டு சீவபோதமற்ற நிலையில் பசுகரணம் அற்றுப் பதிகரணத்தோடு பாடியவர் என்பதை அகச்சான்றால் உணரலாம்.

சென்றடையாத திரு :

திருச்சிராப்பள்ளித் தேவாரம் ''நன்றுடையானைத் தீய திலானை'' என்பது. இறைவன் ஒருவனே தீதில்லாத நன்றே உடையவன் என்பதை இது விளக்குகின்றது. உடன்பாட்டு வினையால் நன்றுடையான் என்றவர், எதிர்மறைவினையால் தீயது இல்லான் என்றும் கூறி, இறைவனின் இயல்பை, உடன்பாட்டினாலும், எதிர்மறையாலும் வலியுறுத்தியுள்ளார்.

இப்பாடலில் ''சென்றடையாத திருவுடையான்'' என்கிறார். இதற்கு ஒருபொருள் அவனே அருளினாலன்றி நாமே சென்று அடைய முடியாத திருவை உடையான் என்பது. இக்கருத்தைத்

''தாமே தருமவரைத் தன்வலியி னால்கருதல்
ஆமே? இவன் ஆர் அதற்கு''

என்ற திருவருட்பயன் பாடலால் அறியலாம். நம்பியாண்டார்

Koviloor Digital Library

''என்னைநினைந்து அடிமை கொண்டு என்இடர்கெடுத்துத்,
தன்னைநினையத் தருகின்றான்''

என்ற பாடலும் இக்கருத்தையே வலியுறுத்துகிறது.

''அவன் அருளாலே அவன்தாள் வணங்கி'' என்ற ஆளுடைய அடிகள் வாக்கும் இக்கருத்துப் பற்றியதே.

இந்தக் கருத்தை வலியுறுத்துவார்போல் அப்பரும் எறும்பியூர்த் திருத்தாண்டகத்துள் 'பன்னியசெந்தமிழறியேன்' என்ற பாடலில்,

''அன்னையையும் அத்தனையும் போல அன்பாய்
அடைந்தேனைத் தொடர்ந்தென்னை யாளாக் கொண்ட
தென்எறும்பி யூர்மலைமேல் மாணிக் கத்தைச்
செழுஞ்சுடரைச் சென்றடையப் பெற்றேன் நானே''

என்றருளியுள்ளமை கண்டு மகிழத்தக்கது.

இதற்கு இரண்டாவது பொருள், இனிச் சென்று சேரவேண்டிய திருவேண்டப்படாதவன் இறைவன் என்பது. குறைவிலா நிறைவினன் என்பதாலும், நிறை செல்வத்தியாகேசர் என்பதாலும் இதனைநன்கு உணரலாம்.

முதலில் கண்ட பொருளையும், இரண்டாவது கண்ட பொருளை யும் வலியுறுத்துமாப்போலே திருச்சிவபுரம் திருத்தாண்டகத்துள் 'வானவன்காண்' என்ற பாடலில் 'தேனவன்காண் சென்றடையாச் செல்வன்தான்காண்' என அப்பரும் அருள்வதைக் காண்க.

மூவினைகள்:

திருவாரூரில் பாடிய 'பாடலன் நான்மறையன்' என்ற பதிகத் துள் இரண்டாம் பாடலில், ''காலையும் மாலையும் போய்ப் பணிதல் கருமமே'' என்று கடமையை உணர்த்துகின்றார்.

வழிபாட்டாலும், தேவாரத் திருப்பதிகங்களை ஓதுவதாலும் பழவினை (சஞ்சிதம்), வரு வினை - மேல் எதிர்காலத்து வருவினை, (ஆகாமியம்), இப்பிறப்பில் நாம் அநுபவிக்க இருக்கும் வினை, (பிராரத்தவினை) ஆகிய இவையெல்லாம் தீரும் என்பது ஆளுடைய பிள்ளையாரின் அறிவுரை.

Koviloor Digital Library

''வல்லதோர் இச்சையினால் வழிபாடிவை பத்தும் வாய்க்கச் சொல்லுதல் கேட்டல் வல்லார் துன்பம் துடைப்பாரே''. இதுபொதுவாக வினையினால் வரும் துன்பம் நீங்கும் என்கிறது.

'தோடுடைய செவியன்' கடைசிப் பாடலில், தொல்வினை - பழவினை தீர்தல் எளிதாம் என்றறிவித்துள்ளமை காண்க. திருநள்ளாற்றுப் போகமார்த்த பூண்முலையாள் என்னும் பதிகக் கடைசிப் பாடலில் ''உண்பு நீங்கி வானவரோடு உலகில் உறைவாரே'' உண்பு - பிராரத்தவினை. இதில் பிராரத்த வினை நீங்கும் என்கிறார்.

''கண்ணார் கோயில் கைதொழு வார்கட் கிடர்பாவம்
நண்ணா வாகும் நல்வினை யாய நணுகும்மே''

என்பதனால் ஆகாமியமாகிய எதிர்வினை நணுகாது என்கிறார் ஞானசம்பந்தர். இவ்வாறு பலபாடல்களால் சஞ்சித, ஆகாமிய, பிராரத்த வினைகள் நீங்கும் என்பதை இம்முதல் திருமுறையிலேயும் குறிப்பிட்டுள்ளமையை, ஓதி உணர்ந்து கொள்க. மூவினையும் முற்றிலும் நீங்காது. நீங்கினால் பிறவி இல்லையாகி விடும். எனவே இலேசாகத் தாக்கும் என்பதையே நீங்கும் என்பதற்குப் பொருளாகக் கொள்க.

முப்பொருளியல்பு:

திருமுதுகுன்றப் பதிகமாகிய 'மத்தாவரை நிறுவி' என்ற பதிகத்துள் 'விளையாததொர் பரிசில் வரு பசு' என்ற பாடலால் ஒருகாலத்தே தோன்றி விளையாதனவாயுள்ளவற்றை அறிவிக்கிறார். ஒன்று பசு - உயிர். இரண்டு பாசம் - ஆணவம். மூன்று வேதனை - நல்வினை, தீவினை யாகிய இருவினை. நான்கு ஒண்தளை - மாயை. ஐந்துபாசமாகிய ஆணவம்; ஆறு இவை உயிரைப் பற்றாமல் தவிருமாறு அருள்கின்ற தலைவனாகிய சிவன். இவன் முதுகுன்றத்தில் எழுந்தருளியுள்ள பழமலைநாதன் என்றருள்கின்றார். அப்பாடல் வருமாறு:

''விளையாததொர் பரிசில்வரு பசு,பாச,வே தனை,ஒண்
தளை,யாயின தவிரஅருள் தலைவன்,னது சார்பாம்
களை யார்தரு கதிராயிரம் உடைய அவனோடும்
முளைமாமதி தவழும்உயர் முதுகுன்றடை வோமே.''

திருக்கழுமலத் திருப்பதிகமாகிய ''சேவுயரும்'' என்னும்

Koviloor Digital Library

பதிகத்துள் 'புவிமுதல் ஐம்பூதமாய்' என்னும் பாடலில் சைவ சித்தாந்தத்துள் காணும் 24 தத்துவங்களையும் மிக எளிமையாகக் குறிப்பிட்டுள்ளமை கண்டு மகிழலாம்.

ஆன்ம தத்துவம்:

மண், நீர், தீ, வெளி, காற்று ஆகிய ஐம்பூதங்களும், அவற்றின் நுட்பமாயுள்ள சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐந்து புலன்களும், (தன்மாத்திரை) இவை தோன்றுதற்கு வாயிலாக உள்ள ஞானேந்திரியங்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற அறிவுப் பொறிகள் ஐந்தும்; வாக்கு, பாதம், கை, எருவாய், கருவாய் என்னும் தொழிற்பொறிகள் ஐந்தும்; அந்தக் கரணங்கள் எனப்படும் மனம், புத்தி, சித்தம் அகங்காரங்களாகிய உட் கருவிகள் நான்கும் ஆக இருபத்துநான்கும் ஆன்மாவிற்கு (உயிர்க்கு) உடலாக அமைந்து அறிவு, இச்சை செயலுடன் உயிர் தொழிற்படத் துணை செய்வனவாம். இக்கருத்தமைந்துள்ள பாடல் பகுதி காண்க.

''புவிமுதல்ஐம் பூதமாய்ப், புலன் ஐந்தாய்,
நிலன் ஐந்தாய்க், கரணம் நான்காய்
அவையவைசேர் பயன்உருவாய் அல்லஉரு
வாய்நின்றான் அமருங்கோயில்''

நிலன் ஐந்தாய் என்பது அறிவுப்பொறி ஐந்திற்கும் தொழிற் பொறி ஐந்திற்கும் இடமாய் நிற்பதால் நிலன் ஐந்தாய் என்றாரேனும் பத்தாகக் கொள்க.

பச்சைப் பதிகம்:

''போகம் ஆர்த்த பூண்முலையாள்'' என்னும் திருநள்ளாற்றுத் திருப்பதிகம் சிவநெறிக்கு உயிர்ப்பளித்த சிறப்புடையது. சைவரும், சமணரும் அவரவர் தெய்வம் பற்றிய உண்மையை எழுதி அனலில் இடச்செய்தபோது ஞானசம்பந்தர் தாம் முன்பே பாடிய ஓலைச் சுவடி யில் கயிறுசாத்திப் பார்த்தார்; '' போகமார்த்த'' எனும் இப்பதிகம் கிடைத்தது. இதனைத் தீயில் இட்டு மேலும்''தளிரிள வளரொளி'' என்னும் பதிகம் பாடினார் ஞானசம்பந்தர். 'போகமார்த்த' எனும் ஏடு எரியாமல் பச்சென்றிருந்தது. அதனால் இப்பதிகத்தை இன்றும் பச்சைப் பதிகம் என்றே குறிப்பிடுகின்றனர். இதில் என்ன உண்மை சொன்னார் ஞானசம்பந்தர் என்று காண்போம்.

Koviloor Digital Library

சிவபெருமான் போகவடிவம், வேகவடிவம், யோகவடிவம் என்னும் மூவகை வடிவம் கொள்வதை இப்பதிகத்துள் உணர்த்து கின்றார். போகியாயிருந்து உயிர்கட்குப் போகத்தைத் தருகின்றார். வேகியாய் இருந்து அவரவர் செய்த வினைகளை வீட்டி அருள் கின்றார். யோகியாயிருந்து முத்தியை அருள்கிறார். இப்பதிகத்துள் இம்முத்திறக் குறிப்பும் அமைந்துள்ளமையைக் காணலாம். உயிர்கள் அநுபவிக்க இருக்கும் போகத்தைப் பாலாக அம்மை தமது மார்பகத்தில் உள்ள முலைத்தடத்தால் உலகஉயிர்கட்கு வழங்குகிறார் என்னும் குறிப்பு மருத்துவ இயலாரும் வியந்துபோற்றும் சிறப்புடைய தாகும். தாய்ப்பால் இல்லையேல் ஜீவராசிகளுக்கு வாழ்வே இல்லை. அனைத்துச் சீவர்களும் நோய்க்கே இருப்பிடமாவர் என்பது புலன் ஆதல் அறிக. தாய்ப்பாலில்தான் நோய்த் தடுப்பாற்றல் மிகுதியாக வுள்ளது. குழந்தைகட்கு ஓராண்டுக் காலம் தாய்ப்பால் வழங்கினால் சொட்டுமருந்து எதுவும் தேவையில்லை.

தன்னைப்போல் ஆக்குபவன்:

'பந்தத்தால்' எனத்தொடங்கும் திருக்கழுமலத் திருப்பதிகத் துள், ஏழாம் பாடலில் மூன்றாம் வரியில் 'திகழ்ந்தமெய்ப்பரம்பொருள், சேர்வார்தாமே தானாகச்செய்யுமவன் உறையுமிடம்' என்று அருளி யுள்ளமை சிந்திக்கத்தக்கது. இறைவனைச் சார்கின்ற உயிர்கட்கு இப் பிறவிக்கு வேண்டிய சுகபோகங்களைக் கொடுப்பதுடன் படிப்படியாக உயர்த்தி அவ்வுயிர்களைத் தானாகவே செய்யும் பெருங்கருணை யாளன் என்பதை இப்பாடலில் உணர்த்துகின்றார்.

இதேகருத்தை அப்பர் பெருமானும், திருப்புள்ளிருக்கு வேளூர்த் திருத்தாண்டகமாகிய 'இருளாய உள்ளத்தின்' என்ற பாடலில் 'தெருளாத சிந்தைதனைத் தெருட்டித், தன்போல் சிவலோக நெறி அறியச் சிந்தை தந்த அருளானை' என்று அருள்கின்றார். எனவே மும்மலக் கட்டுண்டுள்ள உயிர்களை இறைவன் தன்னைப்போல் ஆக்குதற்கு இவ்வுலகத்தைப் படைத்துக் காத்து அழித்து அருள்புரிகின் றான் என்பது நன்கு விளங்குகின்றதன்றோ!

உள்ளமே கோயில்:

'அகனமர்ந்த அன்பினராய்' எனத்தொடங்கும் திருவீழி மிழலை மேகராகக் குறிஞ்சிப்பண்ணிலுள்ள பாடலில், இறைவன் எத்தகைய உள்ளத்தில் எழுந்தருளியிருப்பான் என்பதைத் தெளிவு

Koviloor Digital Library

உள்ளமே கோயில்:

'அகனமர்ந்த அன்பினராய்' எனத்தொடங்கும் திருவீழிமிழலை மேகராகக் குறிஞ்சிப்பண்ணிலுள்ள பாடலில், இறைவன் எத்தகைய உள்ளத்தில் எழுந்தருளியிருப்பான் என்பதைத் தெளிவு படுத்தியுள்ளார். அகத்தில் - உள்ளத்தில் அன்பும் அறுபகை களைதலும், ஐம்புலன் அடக்கலும் உளதாயவழியே உண்மைஞானம் கைவரப் பெறுவர். அத்தகையோர் உள்ளத்தாமரையிலேயே இறைவன் குடியிருப்பான் என்கிறது இப்பாடல். அது வருமாறு:

''அகனமர்ந்த அன்பினராய் அறுபகை செற்று
ஐம்புலனும் அடக்கிஞானம்
புகலுடையோர் தம்உள்ளப் புண்டரிகத் துள்ளிருக்கும்
புராணர் கோயில்.''

இப்பாடலில் இறைவனைப் புராணர் என்று குறிப்பிட்டு உள்ளமை அறிந்து மகிழத்தக்கது. புரா - நவம் என்ற இருசொல்லே புராணம் என்றாயிற்று. புராதனம் என்பதன் முதல்பகுதி பழமை குறிப்பது. நவம் என்பது புதுமை குறிப்பது. எனவே புராணம் என்பது பழமைக்குப் பழமையாய் புதுமைக்குப் புதுமையாய் இருப்பவன் பரம் பொருள் என்பதை உணர்த்துவது. இவ்வாறு பல அரிய கருத்துக்களை உள்ளடக்கிய முதல் திருமுறை,

''இன்னெடு நன்னுலகெய் துவரெய்திய போகமும்
முறுவர்கள் இடர்பிணி துயரணைவ் விலரே''

என நிறைவு பெறுகிறது.

முதல் திருமுறையின் முடிவுப் பதிகம் '' மாதர் மடப்பிடியும் '' என்னும் திருத்தருமபுரப் பதிகம். இது முதல் திருமுறையின் பலன் சொல்வது போல் முடிந்திருப்பது திருவருட் பொருத்தமாகும். இறைவனின் பிணை, துணை, கழல்களை விரும்பிப் போற்றுபவர், நெடுநன்னுலகெய்துவர் என்றதனால் வீடுபேறு அடைவர் என்கிறார். இது இன்ப ஆக்கம். இடர், பிணி, துயர் அணைவிலர் என்றதனால் துன்ப நீக்கம் குறித்தாராயிற்று.

திருவடியைக் குறிக்கும்போது, பிணை-துணை -கழல்கள் என எழுவாயை மூன்றாகக் குறித்ததற்கேற்பப் பயனிலையையும்

Koviloor Digital Library

இடர்-பிணி-துயர் என மூன்றாகக் குறித்துள்ளமை காண்க.

இடர்-விபத்தினால் வரும் துன்பம்; பிணி-உடலில் நோயால் வரும் துன்பம்; துயர்-மனத்தைப் பற்றிய துன்பம். இம்மூன்றும் அகலும் என்கிறார்.

நிறைவுரை:

இன்னோரன்ன அரிய பல கருத்துக்களேடு ஞானக் கருவூலமாக விளங்கும் திருஞானசம்பந்தர் அருளிய இம்முதல் திருமுறை ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியின் அருளாட்சிக் காலத்தில் 1953 ஆம் ஆண்டு தருமை ஆதீனப் புலவர் மகாவித்துவான், பத்ம பூஷண், முனைவர். திரு. ச. தண்டபாணி தேசிகரைக் கொண்டு எழுதிய விளக்கக் குறிப்புரையுடன் ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூசை விழா மலராக வெளிவந்தது.

இதுபோது பன்னிரு திருமுறைகளையும் ஒளியச்சில் ஒருசேர அச்சிட்டு வெளியிடும் முறையில் தருமை ஆதீனப் புலவர், திருநெறிச் செம்மல் திரு. வி.சா. குருசாமி தேசிகரைக் கொண்டு எழுதிய பொழிப்புரை, செந்தமிழ்க்கலாநிதி, பண்டித வித்துவான் திரு. தி.வே. கோபாலய்யரைக் கொண்டு எழுதிய உரைத்திறம் ஆகியவற்றுடன், பன்னிரு திருமுறைகளை உரையுடன் வெளியிட வித்திட்ட ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியின் குருபூசை வெள்ளிவிழா நினைவாக வெளி யிடப் பெறுகிறது.

அன்பர்கள் ஓதி உணர்ந்தும், பிறர்க்குரைத்தும் இம்மை மறுமை அம்மை என்னும் மும்மை நலங்களும் பெற்று இனிது வாழச் செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வாழ்க சிவநெறி! வளர்க திருமுறை! வாழ்க உலகெலாம்!

• • • • • • • • • •

Koviloor Digital Library

உ
குருபாதம்

பதிப்புரை

திருப்பனந்தாள்
ஸ்ரீ காசிமடத்து அதிபர், கயிலை மாமுனிவர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள்.

திருச்சிற்றம்பலம்

''அண்ணல் ஆலவாய், நண்ணி னான்றனை
எண்ணி யேதொழத், திண்ணம் இன்பமே.''

- ஞானசம்பந்தர்.

தமிழ் மக்களின் தவப்பயனாகத் தோன்றிய அருளாளர்கள் இருபத்தெழுவர் நமக்கு அளித்துள்ள ஞானக்கருவூலங்கள் பன்னிரு திருமுறைகள். இவை உலக வாழ்க்கையில் மக்கட்கு வேண்டும் நலங் களை அருளுவதோடு முடிவில் இறைவன் திருவடிப் பேற்றையும் நல்குவனவாகும். பன்னிரு திருமுறைகளைப் பக்தியோடு பாராயணம் செய்து நலம் பெறுமாறு நமது தருமை ஆதீன ஆதிபரமாசாரியர் ஸ்ரீகுருஞானசம்பந்தர் நமக்கு அறிவுறுத்துகின்றார். அப்பாடல்,

''ஆசையறாய் பாசம்விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீநினையாய் - சீ சீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக்கென்ன வாய்.''

என்பதாகும். பன்னிரு திருமுறைகளில் ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் அருளிய முதல் 7 திருமுறைகள் தேவாரம் எனப்படும். தேவாரம் என்பதற்குத் தெய்வத்தைப் போற்றும் இசைப்பாடல்கள் என்பது பொருள் ஆகும்.

ஞானசம்பந்தரும் அப்பரும்:

ஞானசம்பந்தரும் அப்பரும் சமகாலத்தவர்கள். இவ்விருவர் காலமும் கி.பி. 7ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகும். அந்நாளில் தமிழகத்தில் சமண, புத்த சமயங்கள் மேலோங்கிச் சைவம் நிலை

Koviloor Digital Library

குலைந்திருந்தது. தமிழ் நாட்டின் வடபகுதியில் மகேந்திரவர்ம பல்லவனும், தென்பகுதியில் நின்றசீர்நெடுமாற பாண்டியனும் சமண சமயம் சார்ந்து இருந்ததால் மக்களும் வேற்றுச்சமய நெறிகளை விரும்பத் தொடங்கியிருந்தனர். இறைவன் திருவருளால் இவ்விரு பெருமக்களும் தோன்றிச் சைவ சமயத்தைத் தமிழகத்தில் நிலைபெறச் செய்தனர்.

ஞானசம்பந்தர்:

ஞானசம்பந்தர் திருவவதாரத்தால் தமிழ் மொழி தழைத்தது. தமிழ்ச்சமய நெறியே உலகில் உயர்ந்தது என்பதை மக்கள் அறிந்து போற்றத் தொடங்கினர் எனக்கூறுகிறார் சேக்கிழார்.

அடங்கல் முறை:

மூவர் அருளிய தேவாரத் திருப்பதிகங்களைப் பண்முறை, தலமுறை, வரலாற்று முறை என மூவகையாக அடைவு செய்வர். இவை அடங்கல் முறை எனப்படும். அடங்கல் - தொகுப்பு. இவற்றுள் பண்முறையே நம்பியாண்டார் நம்பிகளால் தொகுக்கப்பெற்றது. இதுவே திருமுறை வரிசையில் ஒன்று இரண்டு முதலியனவாக எண்ணி யுரைக்கும் நிலையில் உள்ளது. நம்பிகள் ஞானசம்பந்தர் அருளிய தேவாரத் திருப்பதிகங்களை முதல் மூன்று திருமுறைகளாக அமைத்துத் தந்துள்ளார்.

முதல் திருமுறை:

இத்திருமுறையில் நட்டபாடை (22), தக்கராகம் (24), பழந்தக்கராகம் (16), தக்கேசி (12), குறிஞ்சி (29), வியாழக் குறிஞ்சி (25) மேகராகக் குறிஞ்சி (8) ஆகிய ஏழு பண்களில் 136 திருப் பதிகங்கள் அமைந்துள்ளன. இவற்றின் பாடல் எண்ணிக்கை 1469.

திருப்பதிகம்:

பதிகம் என்பதற்குப் பத்துப் பாடல்களைக்கொண்டது என்பது பொருள். பெரும்பாலானவை பத்துப்பாடல்களைக் கொண்டும் சில கூடியும் குறைந்தும் இருப்பினும் அவை பதிகம் எனவே பெயர் பெறும். ஞானசம்பந்தர் பதிகங்கள் பத்துப் பாடல்களுக்கு மேல், பயன்கூறும் திருக்கடைக்காப்புடன் பதினொரு பாடல்களைக் கொண்டதாய் விளங்குவன.

Koviloor Digital Library

இத்திருமுறையில் அற்புதப் பதிகங்களாக விளங்குவன ஏழு. அவை ஞானப்பால் உண்டது, பொற்றாளம் பெற்றது, முயலகன் நோய் தீர்த்தது, பனிநோய் போக்கியது, மதுரை அனல் வாதத்தின்போது எரியில் இட்டது, ஆண்பனையைப் பெண்பனை ஆக்கியது, வாசி தீரக் காசு பெற்றது ஆகிய நிகழ்ச்சிகளை உள்ளடக்கியனவாகும்.

திருமுறைப் பதிப்பு:

'சில நூற்றாண்டுகளுக்கு முன், தஞ்சை மாவட்டம் வேதாரணியத்திலும், திருநெல்வேலியிலும் வாழ்ந்த சிவநேயச் செல்வர்கள் ஆன தேசிகர்கள் பலர், தேவாரப் பதிகங்கள் முழுவதையும் பனை ஒலைச் சுவடிகளில் எழுதி மக்கள் பலருக்கும் கொடுத்து அதனால் பெறும் ஊதியங்கொண்டு வாழ்க்கையை நடத்தி வந்தனர். அவர்கள் வரைந்த ஒலைச் சுவடிகளே தமிழகத்திலும், யாழ்ப்பாணத்திலும் கிட்டும் சுவடிகளாகும். இச்சுவடிகளிடையே பாட பேதம் காண்டற்கு வாய்ப்பின்று' என மர்ரே கம்பெனி திரு. எஸ். ராஜம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

பல நூற்றாண்டுகளாக ஒலைச் சுவடிகளிலிருந்த மூவர் தேவாரத் திருமுறைகளை, முதன் முதலில் காகித நூல்வடிவில் உலகுக்கு அளித்த பெருமை திருமயிலை சுப்பராய ஞானியார் அவர்களையே சாரும். திருஞானசம்பந்தர் அருளிய முதல் மூன்று திருமுறைகளை, திருவாவடுதுறை ஆதீனப் பிரதியை ஆதாரமாகக் கொண்டு, காஞ்சிபுரம் வித்துவான் சபாபதி முதலியார் அவர்களைக் கொண்டு ஆய்வு செய்வித்து, அப்பாவுப்பிள்ளை, நமச்சிவாய முதலியார் ஆகியோரின் பொருள் உதவியுடன், குமாரய்யர் அவர்களின் அச்சுக் கூடத்தில், ருத்ரோத்காரி ஆண்டு ஐப்பசித் திங்கள் (கி.பி. 1864)இல் பதிப்பித்து இவர் தமிழுலகிற்கு வழங்கினார்.

சுந்தரர் அருளிய ஏழாம் திருமுறையினை திருவாவடுதுறை ஆதீனப் பிரதியை அடிப்படையாகக் கொண்டு காஞ்சிபுரம் வித்துவான் சபாபதி முதலியார் அவர்களைக் கொண்டு ஆய்வு செய்வித்து, கலாநிதி அச்சுக் கூடத்திலும், சண்முக விலாச அச்சுக் கூடத்திலுமாக குரோதன ஆண்டு (கி.பி. 1865) பதிப்பித்து உதவினார். திருஞானசம்பந்தர் தேவாரம் அச்சில் வெளிவந்த எட்டுத் திங்களுக்குள் சுந்தரர் தேவாரம் அச்சேறிவிட்டது.

திருநாவுக்கரசர் அருளிச்செய்த நான்கு, ஐந்து, ஆறு ஆகிய மூன்று திருமுறைகளையும் திருவாரூர்ச் செப்பேட்டின்படி பனை

Koviloor Digital Library

ஓலையில் எழுதுவித்துத் தருமை ஆதீனத்தில் இருந்த பிரதியை ஆதார மாகக் கொண்டு, சபாபதி முதலியார் அவர்கள் ஆய்வுடன், ஆதி நாராயணப் பிள்ளை அவர்கள் உதவியால் கலாநிதி அச்சுக்கூடத்தி லும், புஷ்பரத செட்டியாருடைய கலாரத்னாகர அச்சுக் கூடத்திலுமாக அக்ஷய ஆண்டு புரட்டாசித் திங்கள் (கி.பி. 1866) இல் பதிப்பித்து வெளியிட்டார். சுந்தரர் தேவாரம் வெளிவந்த பதினைந்து திங்களுக்குள் திருநாவுக்கரசர் தேவாரம் பதிப்பிக்கப் பெற்றது.

கி.பி. 1864-66 இல் மூவர் தேவாரமும் ஏழு திருமுறைகளாகப் பண்முறையில் மூன்று தனிநூல்களாக சுப்பராய ஞானியாரால், சபாபதி முதலியார் உதவியுடன் முதன் முதலில் அச்சுப் புத்தக வடிவில் தமிழுலகிற்கு வழங்கப் பெற்றன.

பண்முறை தேவாரப் பதிப்புக்களை சைவ நன்மக்கள் விரும்பி வாங்கியதால் பத்து ஆண்டுகளுக்குள் மறுபதிப்பு வெளிவர வேண்டிய தாயிற்று. அதனை அறிந்த சுப்பராய ஞானியார் பெருமகிழ்வு கொண் டார். கி.பி. 1864-66 இல் பதிப்பிக்கப் பெற்ற தேவார நூல்கள் எத்தனை பிரதிகள் அச்சிடப் பெற்றன என்று குறிப்பிடும் வழக்கம் இன்று வரை வெளிவந்துள்ள தேவாரப் பதிப்புக்களில் குறிப்பிடப்படவில்லை.

சைவ நன்மக்கள், மூவர் தேவாரத்திற்கும் தலமுறைப் பதிப்புக் கிட்டின் ஒருசேரப் பாராயணம் செய்யலாம் என்று எண்ணம் கொண்ட னர். அவ்வெண்ணம் ஈடேறும் வகையில் துறைசை ஆதீனம் மேலகரம் சீலத்திரு. சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் திருவுளப்பாங்கின் வண்ணம், பனசைக் காசிவாசி ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளின் ஆதரவோடு, துறைசை ஆதீன அப்பு ஓதுவார் ஓதின பண்ணின்படி மதுரை, துறைசை ஆதீனங்களில் கிடைத்த பிரதிகளை ஒப்பிட்டு மதுரை இராமசாமிப் பிள்ளை என்னும் ஞானசம்பந்தம் பிள்ளை சென்னை புஷ்பரத செட்டியாரின் கலாரத்தின அச்சுக் கூடத்தில் விஷு ஆண்டு (கி.பி. 1881) மார்கழித் திங்களில் தலமுறைத் தேவாரம் முழுவதையும் முதன்முறையாகப் பதிப்பித்து வழங்கினார்.

தலமுறைத் தேவாரத்தில் மக்கள் நாட்டம் கொள்ளவே தருமை ஆதீனம் 18 ஆவது குருமகா சந்நிதானம் தவத்திரு சிவஞான தேசிக மூர்த்திகள் ஆணையின் வண்ணம், திருப்பனந்தாள் காசிவாசி ஸ்ரீமத் சாமிநாத சுவாமிகள் ஆதரவுடன் திருமயிலை செந்தில்வேல் முதலியாரால் சென்னை விக்டோரியா ஜுபிலி அச்சுக்கூடத்தில் கி.பி. 1894 இலும், சென்னைக் கலாரத்நாகர அச்சுக் கூடத்தின் வாயிலாகக் கி.பி. 1905 இலும் அச்சிடப் பெற்றுத் தலமுறைத் தேவார அடங்கன்

Koviloor Digital Library

முறை வெளிவந்தது.

பண்முறைத் தேவாரம் மக்கட்குக் கிட்டாமையின், திரு வேங்கட நாயுடு அவர்களால் பார்வையிடப்பெற்றுச் சண்முக முதலியார் அவர்களால் சென்னை ஆறுமுக விலாச அச்சுக் கூடத்தில் கி.பி. 1898 இல் பண்முறைத் தேவார அடங்கன் முறை மூன்றாம் முறை யாக வெளியிடப் பெற்றது.

பத்தாண்டுகளுக்குள் மீண்டும் பண்முறைத் தேவார அடங்கன் முறை தேவை ஏற்பட, அது, திருமுறை வரலாறு, மூவர் சரித்திரக் குறிப்புரை முதலியவற்றுடன், திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளை அவர்களால் பார்வையிடப்பெற்று, எஸ். பி. ராஜாராம் அவர்களின் ஸன் ஆப் இந்தியா அச்சியந்திரசாலையில் அச்சிட்டு கி.பி. 1906 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் வெளிவந்தது.

இதனை மீண்டும் நமச்சிவாய முதலியார் கி.பி. 1917 ஆம் ஆண்டு நிரஞ்சன விலாச அச்சியந்திர சாலையில் வெளியிட்டார்.

பங்காளம் அப்புப் பிள்ளை அவர்கள் சென்னை நேஷனல் அச்சுக்கூடத்தின் வாயிலாக கி.பி. 1907 ஆம் ஆண்டு தேவாரப் பதிப்பொன்றை வழங்கினார்.

நாகலிங்க முதலியார், சென்னை ஆதிமூலம் செட்டியார் ஆகியோரால் கி.பி. 1908 இல் கலாரத்னாகர அச்சுக் கூடத்தில் சுந்தரர் தேவாரம் செய்யுள் முதற்குறிப்பு அகராதியுடன் வெளியிடப் பெற்றது. தேவாரத்தைப் பொறுத்தவரையில் இப்பதிப்பிலேயே அகராதியுடன் நூல் வெளியிடும் மரபு தொடங்கியது எனலாம்.

யாழ்ப்பாணத்து வண்ணைநகர்ச் சுவாமிநாத பண்டிதர் அவர்கள், பல்லாண்டுகள் திருமுறை ஏட்டுப் பிரதிகளை ஆய்வு செய்து, பாடபேதங்கள், புதிய பல செய்திகள் என்பவற்றுடன் சென்னை வித்தியாநுபாலன அச்சுக்கூட வாயிலாக வெளியிட்ட, தலமுறை மூவர் தேவார அடங்கன் முறைத் தொகுதி, கி.பி. 1911 ஆம் ஆண்டு மக்களுக்குக் கிட்டுவதாயிற்று.

சைவ நன்மக்கள் பொருள் உணர்வோடு தேவாரத்தைப் பயில வேண்டும் என்ற பெருங்கருணையால் காஞ்சிபுரம் மகா வித்துவான் ஸ்ரீமத் இராமானந்த யோகிகள் பண்முறையில் சுந்தரர் தேவாரத்திற்குப் பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விசேடவுரை என்பனவற்றை

Koviloor Digital Library

வழங்கினார். இது கி.பி. 1913 இல் வெளிவந்தது. இவையே தேவாரம் பற்றிய பழைய பதிப்புக்களாம்.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார் அவர்களைக் கொண்டு கி.பி. 1927 பிப்ரவரித் திங்கள் திருஞானசம்பந்தர் தேவாரத்தையும், கி.பி. 1928 பிப்ரவரித் திங்கள் திருநாவுக்கரசர் தேவாரத்தையும், கி.பி. 1929 ஏப்ரலில் சுந்தரர் தேவாரத்தையும் பண்முறையை ஒட்டி தனித்தனி நூல்களாக அச்சிட்டு வழங்கியது.

அடுத்து பண்முறைத்தேவாரப்பதிப்பு சைவசித்தாந்த சமாஜத்தினரால் அரும்பொருள் அகராதியுடன் கி.பி. 1929 - 1931 இல் மூன்று தொகுப்புக்களாக மிகக் குறைந்த விலையில் வெளியிடப் பெற்றன.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின் சார்பில் தேவாரத் திரு முறைகள் பல பதிப்புக்களாக வெளியிடப் பெற்றுள்ளன.

திருவாவடுதுறை ஆதீனம் பண்முறையில் தேவாரத் திருமுறைகளை வெளியிட்டு உள்ளது.

திருமுறை உரைப் பதிப்பு:

இத்தகைய திருமுறைகள் அனைத்தையும் உரையோடு படித்துப் பொருள் உணர்ந்து ஓதினால் அவை நம் நெஞ்சில் நிலைத்து நின்று பயன் விளைக்கும் என்று திருவுளத்தெண்ணிய தருமை ஆதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பன்னிரு திருமுறைகளில் உரை இல்லாதவற்றுக்கும் உரை எழுதச் செய்து ஆதீனப் பதிப்பாக அவற்றை வெளியிடவேண்டும் என்று திருவுளம் பற்றினாாகள்.

தக்க தமிழறிஞர்களைக் கொண்டு உரை எழுதச்செய்து ஆதீன வெளியீடுகளாக அவற்றை 1953 ஆம் ஆண்டு முதல் வெளியிட்டு வந்தார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் அருளாட்சிக் காலத்தில் 9 திருமுறைகள் வரை உரையுடன் வெளியிடப் பெற்றன. சமய உலகம் இவ்வுரைகளைப் போற்றிப் பாராட்டியது.

1971ல் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் பரிபூரணம் அடைந்தபின் அவர்கள் தொடங்கிய திருமுறை வெளியீட்டுப்

Koviloor Digital Library

பணியை தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் அவர்கள் 1974, 1984, 1995ஆம் ஆண்டுகளில் பத்தாம் திருமுறையாகிய திருமூலர் திருமந்திரத்தை உரையோடு மூன்று தொகுதிகளாக வெளியிட்டு அருளினார்கள்.

1995 ஆம் ஆண்டிலேயே பதினொன்றாம் திருமுறையும் வெளியிடப் பெற்றது. பன்னிரண்டாம் திருமுறை வெளியிடப் பெறுவதற்குரிய வகையில் உரை எழுதுவிக்கப் பெற்று வந்தது.

பல திருமுறைகளும் விற்பனையான நிலையில் அவை ஒருசேர அன்பர்கட்குக் கிடைக்க இயலாததால் அன்பர்கள் அவற்றை ஒருசேர அச்சிட்டு வழங்கியருளுமாறு கேட்டுக்கொண்டனர்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பெருங்கருணையோடு பன்னிரு திருமுறைகளையும், பதினாறு தொகுதிகளாக ஒருசேர ஒளியச்சில் பதிப்பித்து, ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் திருவுளத்து எண்ணியவாறு தில்லையில் வெளியிடத் திருவுளம் பற்றினார்கள்.

1,2,11 ஆகிய திருமுறைகளை ஆதீனச் செலவிலேயே வெளியிடலாம் எனவும், ஏனையவற்றை அன்பர்கள் அளிக்கும் நன்கொடைகளைக் கொண்டும் வெளியிடத் திருவுளம் கொண்டார்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் திருவுளத்தெண்ணியபடி பலரும் இத்திருமுறைப் பதிப்புக்களை வெளியிடும் பொறுப்பை ஏற்றனர்.

இத்திருமுறைப் பதிப்புக்களைச் செம்மையான முறையில் அச்சிட்டு வழங்கும் பொறுப்பைச் சென்னை-யாழ்ப்பாணம் காந்தளகம் உரிமையாளர், மறவன்புலவு திரு. க. சச்சிதானந்தன் அவர்கள் ஆர்வத்தோடும் பக்தி உணர்வோடும் ஏற்று நன்முறையில் நிறைவேற்றியுள்ளார்.

பன்னிரு திருமுறைகளில் இம்முதல் திருமுறைக்கு, தருமை ஆதீனப் புலவர் பத்மபூஷண் மகாவித்துவான், முனைவர், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் எழுதிய குறிப்புரை, விசேட உரைகளோடு , ஆதீனப் புலவர், வித்துவான், திரு. வி.சா. குருசாமி தேசிகர் அவர்கள் எழுதிய பொழிப்புரையும் சேர்க்கப் பெற்றுள்ளது.

புதுச்சேரி, பிரெஞ்சு இந்தியக் கலை நிறுவனம், ஆய்வறிஞர்,

Koviloor Digital Library

பேராசிரியர் திரு. தி. வே. கோபாலய்யர் அவர்கள் இம் முதல் திருமுறையின் உரைத்திறம் பற்றி எழுதியுள்ளார்.

சைவ மெய்யன்பர்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் பெருங்கருணையைப் போற்றி இத்தொகுதியைப் பெற்று, ஓதி உணர்ந்து பயன் எய்துவார்களாக.

Koviloor Digital Library

உ

திருச்சிற்றம்பலம்

முதல் பதிப்பின் மதிப்புரை

செந்திலாண்டவன் துணை

திருப்பனந்தாள்,

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்.

திருமுறைகள் தெய்வமணங் கமழ்வன; அவை சிவத்தின் மேல் தெய்வம் வேறிலை என்ற உண்மையை விளக்குவன. பன்னிரண்டு திருமுறைகளுள் முதலேழும் வித்தகப்பாடல் முத்திறத்து அடியார்கள் அருளியவை. எங்கள் தருமை ஆதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக மூர்த்திகள் ''திருமுறைகள் ஓதாய்'' என்று பணித்தருளினார்கள். உலகு எளிதில் ஓதி உணர்ந்து உய்தற் பொருட்டு எங்கள் குருஞானசம்பந்தர் வழிவழி எழுந்தருளியுள்ள ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் இத்திருமுறைகளைக் குறிப்புரையுடன் வெளியிட்டருளத் திருவுளம் பற்றியது ''வேதநெறி தழைத்தோங்கவும்'' ''மிகுசைவத்துறை விளங்கவும்'' செய்யும். இது திண்ணம். மக்கள் இத்தெய்வப் பனுவலைக் கற்று இத்திருமுறைவழி நின்றொழுகி உள நலமும், உடல் நலமும் பெறுவார்களாக!

Koviloor Digital Library

முதல் பதிப்பின் மதிப்புரை

ஸ்ரீ சந்திர மௌளீஸ்வராய நம:

குடந்தை, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள்

திருமுறைகளில் ஓரடியாவது தன் நாவினால் நவிலாத தமிழன் தமிழுலகில் இரான். அவைகளின் பொருளை அறிய வேண்டும் என்னும் அவா ஒவ்வொருவன் உள்ளத்திலும் எழுவது இயற்கை. பக்குவமடைந்த பெரியோர்களோ, திருமுறைகள் எல்லாவற்றிற்கும் பொருள் ஏகமாய்ப் பொதுநடம்புரிகின்ற பெம்மானே எனத் தெளிந்து, எல்லா அவாக்களுமடங்கிய ஆனந்த நிலையில் நிற்பர். சொற்களுடையவும் வரிகளுடையவும் சிறப்புப் பொருள்களை அறிதற்கான அபக்குவிகளின் ஆவலைத் தணிவிக்க இதுகாறும் ஒருங்கே நூல் முகமாய் உதவி கிட்டிலது. நிகண்டுகளையும் ஆராய்ச்சிகளையும் கொண்டு அருள்வாக்குகளுக்குப் பொருளறிய முனையுங்கால், அவற்றின் உண்மைப் பொருள்களினின்று பிறழும் நிலை நேரிடக் கூடும் என்னும் சில பெரியோர்களின் கொள்கை உண்மையேயாயினும் அத்திருமுறைகளை மேனோக்காக நோக்குங்காலும், அவைகளில் பதிந்துகிடக்கின்ற சிறப்புப் பொருளாம் மாணிக்கங்களினின்று வெளிவீசும் ஒளிகளின் கொழுந்தையேனும் மக்கள் கண்குளிரக் காணும்படிச் செய்தாலன்றிச் சமயக் கல்விமுறை குன்றிவரும் இக்காலத்துச் சூழ்நிலையில், நமதிளைஞர்களுக்கு நமது அரியபெரிய அருள்வாக்குகளைச் சுவைக்கும் பேறே எட்டாததாகி விடுமோ என்ற அச்சத்தை அகற்ற, இக்காலை, பதிக வரலாறுகளுடனும், அரும்பதவுரையுடனும், பொதுக்கருத்துரையுடனும், கல்வெட்டுக்களின் விவரங்களடங்கிய தலங்களின் குறிப்புக்களுடனும் திருமுறைப் பதிகங்களின் ஒற்றுமைக்கருத்துக்கொண்ட புராண தலமான்மிய ஆராய்ச்சிக் குறிப்புக்களுடனும், தருமை ஆதீனத்தினின்றும் வெளிவரும் திருமுறைப் பதிப்பை மனமார வாழ்த்துகின்றோம்.

Koviloor Digital Library

உ

குருபாதம்

முதல் பதிப்பின் முகவுரை

கவிக்குத் தகுவன கண்ணுக் கினியன கேட்கில்இன்பஞ்
செவிக்குத் தகுவன சிந்தைக் குரியன பைந்தரள
நவிக்கட் சிறுமியர் முற்றில் முகந்துதஞ் சிற்றில்தொறுங்
குவிக்கத் திரைபரக் குங்கொச்சை நாதன் குரைகழலே.

-நம்பியாண்டார் நம்பி.

உற்ற துணை:

உலகம் இன்பதுன்பங்களுக்கும், ஒளியிருள்களுக்கும், புண்ணியபாவங்களுக்கும், அறிவு அறியாமைகளுக்கும் இருப்பிடம். இத்தகைய கலப்பான வாழ்வில் மக்கள் களிப்படைவதில்லை. தனித்த இன்பத்தை - ஒளியை - புண்ணியத்தை - அறிவை அவாவுகின்றனர். ஆனால் துன்பம் இன்றி இன்பமும், இருளின்றி ஒளியும், பாவமின்றிப் புண்ணியமும், அறியாமையின்றி அறிவும் சிறப்பதில்லை: சிந்தனைக்குப் புலப்படுவதும் இல்லை: அநுபவத்திற்குப் புலனாவதும் இல்லை. ஆதலால் இரண்டுங்கலந்த வாழ்விலேயே உயர்ந்தது சிறக்கின்றது.

ஏன் இரண்டுங்கலந்த வாழ்வு:

இறைவன் பரம கருணாநிதி. மக்களனைவரும் ‘என்றும் இன்பத்து இருக்கவேண்டும்’ என்பதே அவர் திருவுள்ளம். அங்ஙனம் இருந்தும் இன்பமயமாக உலகைப் படைக்காமல் கலந்த வாழ்வினதாய்ப் படைத்ததில் ஆழ்ந்த கருத்து இருத்தல் வேண்டும். அப்பரடிகள் நீற்றறையை நீரோடையாக அநுபவித்தது போல, பொன்னையும் போகத்தையும் பொய்மாயப் பேய்களாகக் கண்டதுபோல, இன்பத்தையும் துன்பத்தையும் சமபுத்திபண்ணுந் தகுதி வரச்செய்யவேண்டும் என்பதே அக்கருத்து. இத்தகுதி எம்மனோர்க்கு எளிதிற் கைவருவதன்று.

Koviloor Digital Library

ஞானிகள் காட்டிய நன்னெறி:

எல்லாரும் இருவினையொப்பு எளிதில் எய்துதற்குத் தோத்திர பாராயணத்தைக் கைக்கொள்ளலாம் என்றனர். தோத்திரங்கள் ஆன்மாக்களாகிய நமக்கு இறைவன் செய்த பரமோபகாரங்களைப் பலகாலும் சொல்லி, கருத்து ஊன்றச் செய்து மனத்தைக் கனியவைக்குங் கருவிகள். மனித மனத்தைத் தெய்வமனமாக்கும் மருந்து; கவலை மனத்தைக் களிப்புமனமாக்கும் குளிகை.

தோத்திரங்களில் சிறந்தன எவை?

ஏதோ ஒவ்வொருகால் ஒன்றிய மனத்தோடு ஒரு மனிதன் புலமை நிலைமையினின்று புகன்றவற்றைக்காட்டிலும், உலகத்தைப் பண்படுத்துவதற்கென்றே திருவருள் வயத்தால் அவதரித்து, சிந்தையைச் சிவமாக்கி, திருவருளோடு வளர்ந்து, சென்ற சென்ற இடமெல்லாம் திருவருளைக்கண்டு, அது உள்நின்று உணர்த்த உரைக்கப் பெற்ற தோத்திரங்களே மிகமிக உயர்ந்தது என்பதில் ஐயமுண்டோ! ஆதலால், ''எனதுரை தனதுரையாக'' வந்த தோத்திரங்களாய்ச் சிறந்தன தேவார திருவாசகமாகிய பன்னிரு திருமுறைகளே. அவற்றுள் தேவாரம் என்ற சிறப்புப் பெயருக்குரியன முதல் ஏழு திருமுறைகள். அவற்றுள் முதல் மூன்று திருமுறைகள் திருஞானசம்பந்தப்பெருமான் அருளிச்செய்தவை.

திருஞானசம்பந்தப்பெருமான் அறிவாற் சிவனேயென்பது திண்ணம். அதிலும் முதிர்ந்து விளைந்த சிவபுண்ணிய மேலீட்டால். இளமையிலேயே சிவஞானம் கைவரப்பெற்ற செம்மல். ஆதலால், ஆண்டில் இளைஞரான இவர் திருவாயிலிருந்து தோன்றி முதிர்ந்து விளைந்த சுவையமுதம் முதன் மூன்று திருமுறைகள். அதிலும் திருவருட்பராசத்தி சிவஞானத்தின்னமுதம் குழைத்தருளி 'உண் அடிசில்' என ஊட்ட, உண்டவாய் புலர்வதற்கு முன்னே சிவஞானத்தோடு ஒட்டி வந்த பெருமையையுடையது 'தோடு' என்ற பாடலை முதற்கண் கொண்டுள்ள முதல் திருமுறை.

பொதுவாகத் திருமுறைப் பாகுபாட்டில் பண்முறையெனவும் தலமுறையெனவும் இருமுறை உண்டு. அவற்றுள் பண்முறையாவது பண் ஒற்றுமைபற்றிப் பாடல்களை வரிசைப்படுத்தியது. தலமுறையாவது கோயில் முதலாகத் தலங்களின் முறைபற்றிக் கோக்கப் பெற்றது.

Koviloor Digital Library

தலமுறை:

நமது நாட்டில் சிவபூஜை செய்பவர்கள் தமது ஆன்மார்த்த மூர்த்தியோடு ஒவ்வொருநாளும் ஒவ்வொரு தலத்து மூர்த்தியையும் க்ஷணிகாதிலிங்கங்களில் ஆவாகனஞ்செய்து உடன்வைத்துப் பூசிப் பதும், அந்தந்தத் தலத்துப் பதிகத்தை அன்று பாராயணஞ் செய்வதும் பழக்கம். அதற்குத் தலமுறை மிக்க வசதியளிப்பதாகும்.

பண்முறை:

பண் என்பது பாடலின் ஒலி. 'பருந்தும் நிழலும் போலப் பாடலும் பண்ணும்' என்பது பண்டையோர் எடுத்துக் காட்டுரை. ஆகவே பண் என்பது பாடல் வகைகளுக்கும் அவற்றின் சீர் அமைப்புக் கும் ஏற்ப அமைவது. ஆதலால் திருப்பாடல்களைச் சீர் முதலிய யாப் பிலக்கண அமைதி கருதி ஒருங்கு தொகுத்த பண்முறை தொன்று தொட்டு வருவதாயிற்று. இந்தப்பண் முறையமைப்பை ஒட்டியே இப் பதிப்பு வெளிவருகிறது.

பதிப்புக்கள்:

திருமுறையை முதன்முதல் பல ஏடுகளைத் தொகுத்தாராய்ந்து வெளிப்படுத்திய பெருமை, திருஞானசம்பந்தம் பிள்ளையென்னும் தீட்சாநாமம் பெற்ற மதுரை இராமசாமிப் பிள்ளையவர்களுடையது. இடையிலே செந்தில்வேல் முதலியார் போன்ற அறிஞர் பலர் இத்துறையில் முயன்று திருத்தமாய்ப் பதிப்பித்தனர். அண்மையில் யாழ்ப்பாணத்து வண்ணார் பண்ணை வித்வசிரோமணி சுவாமிநாத பண்டிதர் அவர்கள் பலநாட்டு ஏடுகளைத் தொகுத்து ஒப்புநோக்கிச் சிறந்த பாடம் காணப் பெரிதும் முயன்று, பாடபேதக் குறிப்புக்கள் பலவற்றுடன் வெளியிட்டார்கள். பின்னர், கயப்பாக்கம் சதாசிவச் செட்டியார் அவர்கள் திருத்தங்களுடன் கழகப்பதிப்பு வெளிவந்தது. இன்னும் பல பதிப்புக்கள் எத்தனை வந்தாலும் இன்னும் சிறந்த பாடம் காண வழியுண்டு என்று எண்ணத் தக்க வகையில் ஏடுகள் கிடைத்து வருகின்றன. அங்ஙனம் கிடைக்க, சில பாடல்களுக்குத் திருத்தமான பாடங்கள் இப்பதிப்பிலும் வாய்ந்தன. இவற்றையெல்லாம் சேர்த்து நல்லதொரு பதிப்பாக - அழகான பதிப்பாக ஆதீனச் சார்பாக வெளியிடவேண்டும் என்பது எங்கள் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானமவர்கள் திருவுள்ளக்குறிப்பு. பதிப்பழகு படிப்பவர்களின் மனத்தை மிகப் பிணிக்குமல்லவா?

Koviloor Digital Library

உரைக்குறிப்பும் வேண்டும்:

பலருக்கும் பயன்படக்கூடிய நிலையில் பொழிப்புரையும், தேவையான சொற்களுக்குக் குறிப்புரையும், செய்யுள் முடிபும், தொனிப்பொருள் நயப்பொருள்களும் எழுதினால் நலம் என ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் ஆணை தந்தார்கள். அதனைக் கேட்டவுடன் அடியேன் திடுக்கிட்டேன். அருளாளப் பெருமக்களால் இயற்றப்பெற்ற திருமுறைகள் எங்கே! அடியேன் எங்கே! பாடலை அருளியவர் நிலையில் நம் சிந்தையும் உயர்ந்தாலல்லவா உண்மை யுரை காண இயலும்; அரசவேடந்தாங்கியவன் அரசபாவனையில் நிலைத்து நின்றால் அல்லவா பிறர்மனங்கவர நடிக்க இயலும்? என்ற எண்ணங்கள் அடியேன் மனத்துப் படிப்படியாக எழுந்தன. அப்போது நாடகம் பார்க்க வந்த பலருடைய பாவனை நடிப்பவனிடம் சென்று தைக்க அவனும் உண்மையரசனாகி உள்ளங்களிக்க நடிக்க வில்லையா? என்ற சிந்தனை பிறந்தது. சிந்தனை ''இரும்பிரத குளிகை யினால்'' என்ற *சித்தியார்* திருவிருத்தத்தை நினைவிற்குக் கொண்டு வந்தது. இருபத்தைந்தாவது குருஞானசம்பந்த சுவாமிகள் ஆணை இப்பணியில் அடியேனை ஆட்கொள்ளுகின்றது; அவர்களுடைய பாவனையால் இதற்கேற்ற அருட்பதிவு எளியேனிடமும் உண்டாகும் என்ற உறுதி பிறந்தது. அதனை நிறைவேற்றிக்கொள்ளக் காழிப் பிள்ளை கழலடியையும் பணிந்தேன். அத்தலத்திலேயே ''தோடுடைய செவியன்'' என்ற முதற்பாடலுக்கு உரை எழுதத் தொடங்கினேன்.

உரையமைதி:

சைவத்திற்குத் தேவாரத் திருமுறைகள்போல வைணவத்திற் குரிய மனம் உருக்கும் நூல்கள் *திவ்யப்பிரபந்தங்கள்*. அவற்றிற்குப் பெரியவாச்சான்பிள்ளை போன்ற வியாக்யானக்காரர்கள் எவ்வளவு முயன்று எத்துணைச் சுவைபட்ட பேருரையைத் தோற்றுவித்திருக் கிறார்கள். எத்தனையோ இடங்களில் திருப்பாடற்போக்கு, அமைதி, சொல்லாட்சி, சொற்றொடர் ஆட்சி, பொருளாட்சி முதலியன அப்படி அப்படி அமைந்திருக்கின்றனவே. அவற்றையும் ஒத்துநோக்கி எழுதி னால் ஏற்புடையதாகுமே என்ற எண்ணம் எழுந்தது. அருளால் அங்ஙனமே இது அமைவதாயிற்று.

பிற சிறப்புக்கள்:

ஒவ்வொரு பதிகத்தின் தொடக்கத்திலும், தெய்வச்சேக்கிழார் பெருமான் தெரிவித்த நெறியில் பதிகம் எழுந்த வரலாற்றுமுறை

Koviloor Digital Library

விளக்கப்பெற்றுள்ளன. செந்தில்நாத அய்யர் அவர்கள் எழுதிய *தேவார வேதசாரத்தைத்* துணையாகக்கொண்டு வேத, உபநிடத, புராணங்களிலிருந்து ஒப்புமைப் பகுதிகள் தேவையான இடங்களில் தரப்பெற்றுள்ளன. *சிவஞானபோத மாபாடியத்திலும், வெள்ளியம்பல வாண மாபாடியத்திலும்* முதற்றிருமுறைப் பாடல் சிலவற்றிற்கு எழுதிய உரைக்குறிப்புக்களை ஒட்டி அங்கங்கே குறிப்புக்கள் தரப்பெற் றுள்ளன. இங்ஙனம் இவ்வுரை இனிது நிறைவேறியது. முதற்றிரு முறைப் பதிப்பு முற்றுப்பெற்றது. ஏகபாதம் எழுகூற்றிருக்கை முத லியவற்றிற்குப் பழைய உரை அப்படியே எடுத்துக்கொள்ளப்பெற்றது.

முற்சேர்க்கை:

இதன் தொடர்புரையாக நூலின் தொடக்கத்தில் தலங்களைப் பற்றிய புராணவரலாறுகளும், மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம், மடம் இவற்றின் பெயர்களும், சிறப்புக்களும், வழிபட்டு நலம்பெற்றோர் வரலாறுகளும் சேர்க்கப்பெற்றுள்ளன. சிறப்பாக, நமது தமிழ் மன்னர்களுடைய தெய்வபக்தி, திருமுறையன்பு, திருமுறை ஆசிரியர் களிடம் இவர்களுக்குள்ள இணையீடற்ற பக்தி, ஆட்சிச் சிறப்பு, வெற்றி, தோல்வி முதலிய வரலாற்றுக் குறிப்புக்கள், தானச்சிறப்பு இவற்றைக்காட்டும் கல்வெட்டுக் குறிப்புக்களும் சேர்க்கப்பெற்றுள் ளன. இவற்றால் நமது சிவாலயங்களின் தொன்மையையும், நமது தமிழ்மக்கள் தெய்வபக்தியைத் துணைக்கொண்டே தமது புகழையும், வாழ்வையும் வளர்த்துவந்தமையையும் அறியலாம்.

இவ்வண்ணம் இவ்வெளியீடு இத்துணைச் சிறப்புக்களுடன் வெளிவர உறுதுணையாயிருந்தவை, நித்யபாராயணஞ்செய்து வரும் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் தந்த சில நயமான குறிப்புக் களும், ஊக்கவுரையுமே என்பது உறுதி. ஆதலால் தெய்வத்தமிழ் நூல் களை ஒவ்வொரு தமிழ்மக்கள் கரத்திலும் விளங்கச்செய்ய வேண்டும் என்ற பெருநோக்குடைய ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு அடியேன் ''ஆளாய் இனியல்லேன் எனலாமே!''

அடியேனுடைய எளிய குறிப்புக்களையும் திருக்கண்ணோக் கிச் சிறப்பித்து நல்லாசி வழங்கியருளிய செந்தமிழ் வளர்க்கும் செம்மல் ஸ்ரீகாசிமடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருவடிகட்கும், குடந்தை ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் திருவடிகட்கும் அடியேன் வணக்கம் உரியதாகுக.

Koviloor Digital Library

இப்பதிப்பு அழகாக வெளிவர ஒப்புநோக்குதல் முதலிய காரியங்களில் முயற்சியுடன் ஒத்துழைத்த புலவர் முத்து. சு. மாணிக்க வாசக முதலியார், வித்துவான் எம். ஆறுமுக தேசிகர், வித்துவான் வி.எஸ். குருசாமி தேசிகர், வித்துவான் எஸ். திருஞானசம்பந்தன் இவர்கட்கும் என் நன்றி உரித்தாகுக.

இவ்வெளியீட்டிற்கு வேண்டிய சீகாழி, திருவையாறு படங் களைத்தந்த ஆனந்தவிகடன் காரியாலயத்திற்கு நன்றி.

கல்வெட்டுக் குறிப்புக்களில் சிலவற்றைத் தொகுக்க வழி காட்டி உதவிசெய்த அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சி விரி வுரையாளர் தி.வி. சதாசிவ பண்டாரத்தார் அவர்கட்கு மிக்க நன்றி யுடையனாவேன்.

இங்ஙனம் எல்லாவகையிலும் இவ்வெளியீடு நன்றாம் வண்ணம் திருவருள்பாலித்த ஸ்ரீ சொக்கலிங்கப்பெருமான் திருவடி களை மனமொழிமெய்களால் என்றும் வணங்குவேன்.

குற்றங்களைந்து குணம்பெய்து அடியேனை ஆசீர்வதிக்கச் செந்தமிழ்ப் பேரறிஞர்களை வேண்டிக்கொள்கிறேன்.

பிறவிஎனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனுந் தோற்றோணி கண்டீர் - நிறையுலகில்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ்.

வித்துவான் ச. தண்டபாணி தேசிகர்

தருமபுரம்
3-4-1953

துணைத்தலைவர்
தருமை ஆதீனப் பல்கலைக்கல்லூரி

Koviloor Digital Library

முதல் திருமுறையின் உரைத்திறம்

செந்தமிழ்க் கலாநிதி
பண்டித வித்துவான் திரு. தி. வே. கோபாலய்யர்
பிரெஞ்சு இந்தியக் கலை நிறுவனம்,
புதுச்சேரி.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள், திருத்தொண்டர் புராணத்திற்குப் பொழிப்புரை சென்ற நூற்றாண்டின் இறுதியில் தவத்திரு ஆறுமுகத்தம்பிரான் அவர்களால் வரையப்பெற்றது. ஏழாம் திருமுறையாகிய சுந்தரர் தேவாரத்திற்கு இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இராமாநந்தயோகி அவர்களால் பதவுரை வரையப் பெற்றது. அடுத்துத் திருவாசகத்துக்குச் சிற்றுரையும் பேருரையுமாகப் பல உரைகள் வரையப்பெற்றன. திருக்கோவையாருக்கு கி.பி. 1 ஆம் நூற்றாண்டில் தோன்றிய பேராசிரியர் உரையோடு வேற்றவர் வரைந்த உரையும் தமிழகத்தில் நிலவுகின்றன. ஆனால் முதல் ஆறு திருமுறை களுக்கும் இதற்குமுன்னர் உரை வரையப்பெற்றதாக அறியக்கூட வில்லை. திருஞானசம்பந்தப் பெருமான் அருளிய ஏகபாதம், எழு கூற்றிருக்கை, மாலைமாற்று, திரு இயமகம் என்பனவற்றிற்குப் பழைய உரை உளது. *துண்டீர மண்டலே காஞ்சி மஹாக்ஷேத்ர ஞானப்ரகாச தேசிக நாமதேஹஸ்யஸ்வதஸ்லிகிதம்* என்று படியெடுத்தவர் பெயருடன் அவ்வுரை புதுவை பிரஞ்சு இந்தியக் கலை நிறுவனத்தில் உள்ளது. அச்சுவடி 250 ஆண்டுகளுக்கு முந்தையது. அப்பழைய உரையை இயற்றிய பெருமகனார் யாவர் என்பது உறுதியாக அறியக் கூடவில்லை.

இந்த நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஏழுதிருமுறைகளாக அமைந்த தேவாரத்திற்குக் குறிப்புரை வரைந்து பதிப்பித்த பெருமை திருத்தருமை ஆதீனத்தையே சாரும். முதல் திருமுறைக்குக் குறிப்புரை வரைந்த பெருமகனார் மகாவித்துவான். ச. தண்டபாணிதேசிகராவார். ஆழ்வார்களின அருளிச்செயல்களுக்கு உரைவரைந்த பெரியவாச் சான் பிள்ளையின் உரை நயத்தில் தோய்ந்து அதனை ஒப்பக் காலத் துக்கு ஏற்றவகையில் தேவாரத்துக்கு நயமாக உரைவரைதல் வேண்டும் என்ற உள்ளத்தோடு அவர் இம்முதல் திருமுறைக்கு உரை கண்டுள் ளார்.

Koviloor Digital Library

இவ்வுரையில் பதிகம் தோன்றிய வரலாறு, பதிகத்தில் சொல்லப்பட்டவற்றைத் தேவைப்பட்ட இடங்களில் சுருக்கிவரைதல், சில பதிகங்களின் ஒவ்வொரு பாடலுக்கும் கருத்தினைச் சுருக்கமாக உரைத்தல், ஒரே தொடருக்கு இரண்டு முதலிய பொருள் கூறல், சொற்றொடர்களுக்கு நயமான உரைகூறல், இயற்கை வருணனையில் சுட்டு என்ற உள்ளுறைப் பொருளை வெளிப்படுத்துதல், அருஞ் சொற்பொருள், சொற்றொடர்ப் பொருள்களை எடுத்துரைத்தல், சித்தாந்தக் கருத்துக்களை ஆண்டாண்டு விளக்கிக்கூறல், தல புராணம் முதலிய புராண வரலாறு சுட்டுதல், இன்றியமையாத இலக்கணக் குறிப்புவரைதல், பண்டை நூல்களை மேற்கோள் காட்டல், ஒரோவழி வடமொழிநூல் மேற்கோள் காட்டல், சொற்களின் முடிபு கூறல் முதலிய பலசெய்திகள் உளங்கொளத்தக்கன. ஒவ்வொன்றனையும் எடுத்துக் காட்டுக்களைக் கொண்டு சுருங்கக்காண்போம்.

1. பதிகம் தோன்றிய வரலாறு:

ஒவ்வொரு பதிகமும் தொடங்கப்படும் முன்பு அப்பதிகம் தோன்றிய வரலாற்றைத் திருத்தொண்டர் புராணத்தை ஒட்டியும், பதிகப் பாடல்களை உட்கொண்டும் குறிப்பிடுகிறார்.

அ) 4 - திருப்புகலியும் திருவீழிமிழலையும்.

இப்பதிகத்தில் திருவீழிமிழலையில் இருந்த ஞானசம்பந்தப் பெருமானுக்கு, சீகாழிப் பெருமான் காட்சி வழங்க, 'எறிமழுவோடு இளமான் கையின்றி' அப்பெருமான் வழங்கிய காட்சியை ஞானசம்பந்தப் பெருமான் அப்பதிகத்தின் ஒன்பதாம் பாடலில் குறிப்பிடும் செய்தியை இவ்வுரையாசிரியர் எடுத்து இயம்புகிறார்.

ஆ) 6 - திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும்.

திருமருகலிலிருந்த ஞானசம்பந்தப் பெருமான் பிறதலங் களையும் சென்று வழிபட வேண்டும் என்ற திருவுள்ளக் குறிப்போடு மருகற்பெருமான் திருவடிகளை வணங்கியபோது அப்பெருமான் திருச்செங்காட்டங்குடி கணபதீச்சரத்திலுள்ள திருஒலக்கத்தைக் காட்டியருள இப்பதிகம் பாடினார் என்று குறிப்பிடுகிறார்.

இ) 13 - திருவியலூர்

திருமங்கலக்குடியை வணங்கிப் போந்த பிள்ளையார் திருவியலூருக்கு எழுந்தருளி வியலூர்ப்பெருமானை வணங்க

Koviloor Digital Library

அப்பெருமான் பிள்ளையாருக்குத் தம் அருளால் திருவேடம் காட்டியருள, அதனைப் பிள்ளையார் இப்பதிகம் ஐந்தாம் பாடலில் 'கண்ணார் தரும் உருவாகிய கடவுள்' என்றும், ஒன்பதாம் பாடலில் 'உருவம் விளம்பட்டு அருள் செய்தான்' எனவும் குறிப்பிட்டருளிய செய்தியை இயம்புகிறார்.

ஈ) 28 - திருச்சோற்றுத்துறை

கண்டியூரை வணங்கிய பிள்ளையார் அங்கிருந்து திருச் சோற்றுத்துறை செல்லும் வழியில் அருளிய இப்பதிகத்தைச் சேக்கிழார் பெருமான் 'ஒப்பில் வண்தமிழ்மாலை' என்று சிறப்பிக்கிறார். இப்பதிகத்தில் 'ஒளி வெண்ணீற்றப்பர் உறையும் செல்வம் உடையார்' என இறைவன் திருநாமமாகிய 'தொலையாச் செல்வர்' என்பது தோற்றுவிக்கப்படுகிறது - என நுட்பமான செய்திகளை ஆய்ந்து கூறுவதனை இத்தலைப்பில் பல இடங்களிலும் காணலாம்.

2. பதிகத்தில் சொல்லப்பட்டவற்றைச் சுருக்கி உரைத்தல்:

அ) 91 - திருவாரூர் - திருஇருக்குக்குறள்

வேதங்களுள் இருக்கு, மந்திரவடிவாக உள்ளது. மந்திரம் சொற்சுருக்கம் உடையது. எண்ணுவார் எண்ணத்தை ஈடேற்றவல்லது. அதுபோல இப்பதிகம் அமைந்துள்ளது.

அநாதியே ஆன்மாவைப் பற்றி நிற்கும் பாசத்தால் இரு வினைக்கு ஈடாகக் கருவயிற் பிண்டமாய் வளர்ந்து பிறந்து, பரிபாக முற்ற வினைகள் துன்ப இன்பங்களை ஊட்டுகின்ற காலத்து வருந்தி மகிழ்ந்து, அலைகின்ற ஒழியாத் துன்பத்தினின்றும் உய்தி வேண்டும் உத்தமர்களை அழைத்து அன்போடு மலர் தூவுங்கள், கைகளால் தொழுங்கள், எடுத்து வாழ்த்துங்கள், உங்களுடைய பற்று அறும், வினைகள் விண்டுபோம், இன்பமுத்தி எய்தலாம் எனப் பயனும் வழியும் வகுப்பன இப்பத்துப் பாடல்கள் என்கிறார்.

ஆ) 108 - திருப்பாதாளீச்சுரம்

இப்பதிகம் முழுதும் செஞ்சடைமேல் பிறை, ஊமத்தம், கொன்றை இவற்றை அணிந்தவனும், கங்கையை அணிந்து உமையை ஒருபாகத்து இருந்தருளச் செய்தவனும் ஆகிய இறைவன் உறை கோயில் பாதாளீச்சுரம் என்கின்றது. பெரும்பான்மையான பாடல்

Koviloor Digital Library

களில் தலத்தின் திருப்பெயருக்கு ஏற்பப் பெருமான் பாம்பு அணிந்தமை போற்றப்படுதல் காண்க என்கிறார்.

3. பதிகப்பாடல் ஒவ்வொன்றன் கருத்தையும் சுருக்கமாக முதலில் தெரிவித்தல்:

அ) 91. திருவாரூர் - திரு இருக்குக்குறள்.

தியாகேசப்பெருமான் எழுந்தருளியுள்ள ஆரூரைப் பத்தியோடு மலர் தூவி வழிபடுங்கள் முத்தியாகும் என்கிறது முதற் பாடல். முத்தியாகற்குப் பிறவி இடையூறாதலின், அப்பிறப்பு, பாவத்தைப் பற்றிவருவதொன்றாதலின், பாவமோ பற்றுள்ளம் காரணமாக எழுவது ஆதலின், காரியமாகிய பிறப்பினை அறுக்க விரும்புவார்க்குத் துறவியாதலே சிறந்த உபாயம் என்கிறது இரண்டாம் பாடல்.

நெஞ்சொடுபடாத செயலும் உண்டன்றே! அங்ஙனமின்றி புத்திபூர்வமாக மலர் தூவலே துன்பம் துடைக்க உபாயம் என்று மூன்றாம் பாடல் மொழிகிறது. துன்பம் துடைத்து உய்தியை விரும்புவீராயின் கைகளால் தொழுங்கள் பிராரத்த வினை நைந்து போம் என்று நான்காம் பாடல் நவில்கிறது.

தொழுவாரிடம் வரக்கடவ வினைகளும் விண்டுபோம் என்று ஐந்தாம் பாடல் அறைகிறது.

கீழைத்திருப்பாட்டு வினை நீக்கம் கூறியது. அவ்வினையோடு ஒருங்கு எண்ணப் பெறுவதாய் அனாதியே பந்தித்துள்ள பாசமும் கெடும்; இறைவன் நேசமாகும் என்று ஆறாம்பாடல் அறிவிக்கிறது.

இருவகை வினையும் தீரவேண்டும் என்றும், தீர்ந்தால் உலகம் முழுதும் உடைமையாம் என்றும் ஏழாம்பாடல் இயம்புகிறது.

செய்யமலர்தூவி வையம் தமதாய காலத்து உண்டாகிய தருக்கையும் களைந்து, திருத்தம் நல்குவர் தியாகேசராதலின், அவர் தலத்தைக் கையினால் தொழ வேண்டும் என்று எட்டாம் பாடல் எடுத்துரைக்கிறது.

அருள் பெற்றுச் சிறிது திருந்திப் பதவியில் நிற்பாரும், பதவிமோகத்தால் மயங்குவார், ஆயினும் அவர்கள் மிகைநோக்

Koviloor Digital Library

காதே, அதுதான் ஆன்ம இயல்பு என்று திருவுள்ளம்கொண்டு அருள்செய்யும் கருணையாளன் எழுந்தருளியுள்ள ஆரூரை நினைக்க வேண்டும் என்றும், நினைத்தால் ஆகாமிய சஞ்சித வினைகள் கழியும் என்றும் ஒன்பதாம் பாடல் உரைக்கிறது.

அதிகார பலத்தால் துள்ளுவாரையும் ஆட்கொள்ளும் இறைவன், ஏனைய விஷத்தன்மை பொருந்திய ஆன்மாக்களையும் அடக்கி ஆளுவன் என்ற கருணையின் மேன்மையைப் பத்தாம்பாடல் பகர்கிறது.

முத்தியாகுமே என முதற்பாட்டில் அருளிய பிள்ளையார் அதற்கு இடையூறான பிறவி வினை பாசம் இவைகளையும், இவை களை நீக்கும் உபாயங்களையும் நீங்கியவர் எய்தும் பயனையும் முறையே கூறினார். இத்தகைய பாடல்கள் பத்தையும் பயில்வாரும் அத்தகைய இன்பத்தை எய்துபவர்; பேரார்; நிலையாவர் எனத் திருக்கடைக்காப்புத் தெரிவிக்கிறது.

கீழ்ப்பாடல்களுள் ஆரூரை மலர்தூவ அடையும் பயனை ஐந்து பாடல்களும் தொழுவார் எய்தும் பயனை இரண்டு பாடல்களும், வாழ்த்துவர் எய்தும் பயனை இரண்டு பாடல்களும், இப்பதிகம் ஓதுதற் பயனை ஒருபாடலும் உணர்த்துகின்றன.

ஆ) 126 - திருத்தாளச்சதி - முதலியனவும் காண்க.

இங்ஙனம் இவ்வுரையாளர் பாடற் கருத்து உரைத்த பாடல்கள் பல உள.

4. சொற்களும் சொற்றொடர்களும் இருபொருள் தருதல்:

1-1. ஏடுடைய மலரான் - இதழ்களை உடைய தாமரை மலரில் உள்ள பிரமன். இதழ்களை உடைய தாமரை மலர்களால்.

1-10. இறைகாணிய - பிரமனும், திருமாலும் தம்முள் யாவர் இறைவர் என்பதனைக் காணும்பொருட்டு. இறைவனைக் காணும் பொருட்டு.

2-6. கழலின் ஓசை, சிலம்பின் ஓசை - ஆண்பகுதியாகிய வலத்தாள் கழலின் ஓசை. பெண் பகுதியாகிய இடத்தாள் சிலம்பின்

Koviloor Digital Library

ஓசை. சிவபெருமான் கழலின் ஓசை. மகா காளியின் சிலம்பின் ஓசை.

2-10. செய்தவத்தர் - தவத்தைச் செய்யும் அடியார்கள். செய்த + அவத்தர் - தவம் என்று வீண் காரியம் விளைக்கும் தேரர்.

26-10. ஆறும் நான்கும் அமர்ந்தார் - வேதாங்கங்கள் ஆறினையும் வேதம் நான்கினையும் விரும்பியவர். ஆறாறாக அடுக்கப்பட்டு வருகின்ற அகம், அகப்புறம், புறம், புறப்புறம் ஆகிய சமயங்களின் பொருளாய் அமர்ந்திருப்பவர்.

26-11. சேடர் - எல்லாம் தத்தம் காரணத்துள் ஒடுங்க அவை தமக்குள் ஒடுங்கத் தாம் ஒன்றினும் ஒடுங்காது, ஒடுங்கியவைகள் மீட்டும் உதிக்க மிச்சமாய் இருப்பவர். பெருமை உடையவர் என்பதும் ஆம்.

36-3. கொக்கின் இறகு - கொக்கிறகம்பூ. கொக்கின் இறகும் ஆம்.

44-4. தூமதி - ஒருகலைப் பிறையாதலின் களங்கம் இல்லாத மதி. இறைவன் அணிந்தமையின் தூமதி எனலுமாம்.

50-4. மெய்யராகிப் பொய்யைநீக்கி - மெய்யராகி எனவே பொய்யை நீக்கி என்பது பெறப்படவும் மீட்டும் கூறியது வற்புறுத்த. தத்துவஞான உணர்ச்சி உடையவராய்ப் பொய்யறிவை விடுத்து என்றுமாம்.

51-1. ஈர் உரிவை - கிழிக்கப் பெற்ற தோல், உதிரப்பசுமை கெடாத ஈரமாகிய தோல் என்பதும் ஆம்.

73-3. எரியிடை மூன்றினர் - நெருப்பில் சத்தமும் ஸ்பரிசமும் உருவமுமாகிய மூன்று தன்மாத்திரைகளாய் இருப்பவர். ஆகவனீயம் முதலிய முத்தீயாய் இருப்பவர் என்றுமாம்.

73-3. மண்ணிடை ஐந்தினர் - மண்ணில் சத்தம், ஸ்பரிசம், உருவம், இரதம், கந்தம் என்ற ஐந்து தன்மாத்திரைகளாய் இருப்பவர். முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்ற ஐந்திணைகளாய் இருப்பவர் எனலுமாம்.

82-5. பெண்ணுக்கு அருள் செய்த பெருமான் - மன்மதனை

Koviloor Digital Library

எரியவிழித்து, பின் இரதிக்கு அருள் செய்த பெருமான். (69-3) உமையம்மைக்கு இடப்பாகத்தை அருளிய பெருமான் எனலுமாம்.

84-5. சேண் நின்றவர் - சேய்மையில் உள்ள அடியார்கள்; தேவரும் ஆம்.

91. திருஇருக்குக்குறள் - வீடு காதலிப்பவரால் விரும்பப் படும் இரண்டு சீர்களால் யாக்கப்பெற்ற இருக்கு மந்திரம் போன்ற பாடல். வேதங்களுள் இருக்கு மந்திர வடிவமாக உள்ளது. அதுபோல இப்பதிகமும் மந்திர வடிவாக உள்ளது எனலுமாம். மந்திரம் சொற்சுருக்கமுடையது. எண்ணுவார் எண்ணத்தை ஈடேற்றவல்லது. அதுபோல இப்பதிகமும் அமைந்திருக்கிறது என்பதும் ஆம்.

73-7. தேவார் சோலை - தேவு + ஆர் + சோலை = தெய்வத்தன்மை பொருந்திய சோலை. தே + வார் + சோலை = தேன் நிறைந்த சோலை.

இவ்வாறு சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் இரு பொருள் செய்யும் திறத்தை இத்திருமுறை உரையில் பல இடங்களிலும் காணலாம்.

5. சுட்டு என்ற உள்ளுறை:

இயற்கை வருணனை முதலிய பகுதிகளில் நேரிடையான பொருளோடு உள்ளுறைப் பொருளும் விளக்குவதனை இவ்வுரை யாசிரியர் பல இடங்களிலும் பின்பற்றியுள்ளார்.

அ) 14 ஆம் பதிகம்:

பாடல் 1; கூனல் பிறை மழைமேகம் கிழித்தோடிச் சேரும் குளிர் சாரல் கொடுங்குன்றம். ஆன்மாக்கள் அநாதியான ஆணவ மல படலத்தைக் கிழித்துச் சென்றெய்தி எம்பெருமான் திருவடி நிழலாகிய தண்ணிய இடத்தைச் சென்று சாரலாம் என்பது உள்ளுறை.

பாடல் 2; மயில்புல்குதண் பெடையோடு உடன் ஆடும் வளர்சாரல் குயிலின் இசைபாடும் குளிர் சோலைக் கொடுங்குன்றம். தன்வசம் அற்றுப் பாடியும் ஆடியும் செல்லும் அன்பர்க்குக் குளிர் நிழல் தருவது கொடுங்குன்றம் என்பது உள்ளுறை.

பாடல் 4; 'கரியோடு அரி இழியும்', அருவிக் கொடுங்குன்றம்.

Koviloor Digital Library

கொடுங்குன்றச் சாரலை அடையின் தம்முள் மாறுபட்ட ஆணவக் களிறும் ஐம்பொறிகளாகிய அரிகளும் தம்வலிமை அற்றுக கருணை அருவியின் வழியே இழுக்கப் பெற்று அமிழ்த்தப் பெறும் என்பது உள்ளுறை.

பாடல் 5; மேகத்து இடிக்குரலை வெருவிக் கூகைக் குலம் ஓடித் திரிசாரல். அஞ்ஞானமாகிய வாழ்க்கையை உடைய ஆன்மாக்கள் கருணை மழைபொழியும் இறைவனது மறக்கருணை காட்டும் மொழியைக்கேட்டு மலையை அணுக முடியாதே அலைவர் என்பது உள்ளுறை.

25-4. மழுவாள் ஏந்தி மாதொர் பாகமாய் மேவிய இறைவன். தொழுவார்க்கு துயரம் இல்லாமை ஏது ஒன்று பகையும் பிணியும் தவிர்த்தல். மற்றொன்று இன்பம் பெருக்கல். இவ்விரண்டை யும் அடியவர் பெற இறைவன் மழுவாள் ஏந்திப் பகையும் பிணியும் தடுத்தும் மாதொர் பாகமாய்த் தான் இருந்து இன்பம் பெருக்கியும் காக்கின்றான் என்பது உள்ளுறை

48-2. ஆறடைந்த திங்கள் சூடி அரவம் அணிந்தது என்னே? பெண் ஒரு பாதியராக இருந்தும், மற்றொரு பெண்ணாகிய கங்கையையும், காமத்தால் சாபமுற்றுக் கலைகுறைந்த மதியையும் போகியாகிய பாம்பையும் அணிதல் தகுமா? என்று உள்ளுறுத்து வினவியது.

66-1. கடல்வாழ் சங்கம் பரதர் மனைக்கேறி முத்தம் ஈனும் சண்பை நகர். பிறவிக்கடலில் ஆழ்வாரும் வினைநீங்கும் காலம் வரின் சண்பை நகர் சார்ந்து பேரின்பம் எய்துவர் என்பது உள்ளுறை.

71-2. காதலியும் தாமும் விடையேறி ... செங்கால் அன்னமும் பெடையும் சேரும் சித்தீச் சரத்தாரே, இறைவன் தன் காதலியும் தானும் விடையேறியிருப்பதால் பொய்கைகளில் அன்னமும் பெடையோடு சேர்ந்து இருக்கின்றன எனப்போகியாய் இருந்து உயிர்க்குப் போகத்தை நல்கும் தன்மையைச் சுட்டியவாறு.

73-4. யான் அறியாமையால் எண்ணாதிருக்கச் செய்தேயும் வலியவந்து இல்லில் புகுந்து கலந்து பிரிந்து மிக்க துன்பத்தைச் செய்தான் என்றது ஆன்மாக்கள் தலைவனை தாமே சென்று அடைதற்கும் கலத்தற்கும் பிரிதற்கும் என்றும் சுதந்திரம் இல்லாதன என்று அறிவித்தவாறு.

Koviloor Digital Library

ஆ) 76. ஆம்பதிகம் - முதற்பாடல்.

மயிலும் மானும் துணையொடும் பெடையொடும் வதிய, நீர்மட்டும் தனித்திருந்து,காதலித்த அடியாளையும் தனித்திருக்கச் செய்து அழகினைக் கவர்வது அழகா என்று உரைக்கின்றாள். இதனால் சிவத்தோடு இடையறாமல் இருத்தலாகிய அத்துவித பாவனையில் பிரிந்து இருக்கின்ற ஆன்மா ஒன்றிய காலத்து உண்டாகிய சிவானந் தாநுபவத்தால் உண்டான ஒளிகுறைய, அதனை எண்ணி, ஆன்ம நாயகியை வந்து ஏற்றுக்கொண்ட தேவரீர் இங்ஙனம் இடையறவுபடச் செய்யலாமா? என்று வருந்திக் கூறுவதாகிய பேரின்பப் பொருள் இதன் உள்ளுறை. இங்ஙனமே ஏனைய திருப்பாடல்களுக்கும் கொள்க.

84-2. அண்ணாமலை நாடன், ஆரூர் உறை அம்மான் ... நாகைக்காரோணத்தானே.திருமாலின் தருக்கு ஒழித்த தலம் மூன்றினையும் சேர்த்துக் கூறியவாறு. திருவாரூரில் வில் நாணைச் செல்லாக அரித்து நிமிர்த்தித் திருமால் சிரத்தை இடறினார். திரு வண்ணாமலையில் தீ மலையாய் நின்று செருக்கு அடக்கினார். நாகையிலும் தியாகேசர் திருவுருவில் இருந்து திருமாலின் தியான வஸ்துவானார் என்பது உட்பொருள்.

97-2. செம்பொன் புன்னை கொடுக்கும் புறவம்

புன்னை மரங்கள் மகரந்தங்களாகிய செம்பொன்னைக் கொடுக்கும் புறவம் - மரங்களும் வள்ளன்மை செய்யும் நகரம் என அவ்வூர் மக்களின் வள்ளன்மையைச் சுட்டியவாறு.

100-4. கோங்கம் மாதவியோடு மல்லிகைக் குளிர் பூஞ்சாரல் வண்டு அறைசோலைப் பரங்குன்றம். மாதொரு பாகனாகிய எம்பெருமான் போகியாதற்கு ஏற்பக் குன்றமும் மல்லிகை முதலிய மணம் தரும்பூக்கள் மலிந்துள்ளமையும், புணர்ச்சி நலம்மிகும் சாரலோடு கூடியமையும் குறிக்கப்பெற்றன.

105-2. வண்டும் சுரும்பும் இசைமுரல ஆலையின் வெண் புகை முகில் தோயும் ஆரூர். ஆரூர்ப் பெருமானுடைய பாதம்பணிவார் மங்கள வாத்தியம் ஒலிக்க இன்ப உலகு அடைவர் இது உறுதி என்பது உள்ளுறை.

Koviloor Digital Library

105-4. அரையில் ஐந்தலை ஆடரவம் அசைத்தான். அடியார்களுடைய ஐம்பொறிகளையும் தத்தம் புலன்களில் செல்ல விடாது தடுத்தாட்கொள்ளும் தன்மையைப்போல ஆடும்தன்மை வாய்ந்த ஐந்தலைப் பாம்பைச் சேட்டியாதே திருவரையில் இறுகக் கட்டினான் என்பது குறிப்பு.

இவ்வாறு பலபாடல்களில் இவ்வுரையாசிரியர் சுட்டு என்ற உள்ளுறைச் செய்தியை வெளிப்படுத்தி இருத்தலைக் காணலாம்.

6. சொற்றொடர்களுக்கு நயமான உரை காண்டல்:

3-3. வெய்யபடை - கொடியவர்களுக்கு வெம்மையாய் அடியவர்களுக்கு விருப்பமாய் இருக்கும் படை.

13-1. அரவும் புனலும் மதியும் தலையும் விரவும் சடை - தம்முள் மாறுபட்ட பல பொருள்களும் பகைநீங்கி வாழ்தற்கு இடமாகிய சடை.

51-2. வெண்மழு - இறைவன் திருக்கரத்தில் உள்ள மழு அலங்காரப் பொருளாதலன்றி, யாரையும் அழித்தல் இல்லையாதலின் குருதிக்கறை படியாத வண்ணம் வெண்மழு எனப்பட்டது.

51-3. தீயவல்லரக்கர் செந்தழலுள் அழுந்த - இறைமைக் குணம் வேண்டுதல் வேண்டாமை இல்லையாய் இருக்கச் சிலரை அழித்துச் சிலரைவாழ்விப்பது பொருந்துமோ என்பார்க்குக் காரணம் அருளுவதுபோலத் தீயராகிய வல்லரக்கர் என்று திரிபுராதிகள் தீமை தோன்றக் கூறினார்.

51-5. மதியம்வைத்து உகந்த - உகந்த - மகிழ்ந்த. பலர் சாபத்தால் இளைத்த ஒருவனுக்கு ஏற்றம் அளித்தோமே என்ற மகிழ்ச்சி.

55-5. மாறு இலாமணியே - சில ரத்னங்களை அணிந்தால் தீமையும் நிகழக்கூடும். எம்பெருமானாகிய மணி எத்தகையோருக்கும் நன்மையே செய்தலின் மாறு இலா மணியே என்றார்.

74-3. பந்தம் உடைய பூதம் - உதரபந்தம் என்ற அணியை அணிந்த பூதம்.

Koviloor Digital Library

75-4. கொடுகொட்டி - ஒரு வகை வாத்தியம். இப்போது கிடுகிட்டி என வழங்குகிறது.

75-5. தக்கைகொள்பொக்கணம் இட்டு - தக்கை என்னும் வாத்தியத்தை வைத்து மறைத்த துணிமூட்டையைப் புறத்தோளில் தொங்கவிட்டு.

75-9. விண்ணவர் கைதொழுது ஏத்த எமை வேறாள விரும்பிய விகிர்தர் - தேவர்கள் தம் போகத்திற்கு இடையீடு வாராமை குறித்து வணங்குவர். ஆதலால் அவர்களுக்கு எளிதில் அருள் வழங்காது எம்மைச் சிறப்பாக வைத்து ஆள்கின்றார்.

75-11. நண்ணிய நூலன் - தான் வருந்திப்பயிலாமல் தாமாகவே அடைந்த வேதத்தை உடைய ஞானசம்பந்தன்.

76-4. தேனுமாய் அமுதமாய்த் தெய்வமும் தானாய் - தேன் இதயத்துக்கு வலி ஊட்டி உடல் வளர்க்கும் இனித்த மருந்தாவது. அமுதம் அழியாமை நல்கும் மருந்து. இவை இரண்டும் எடுத்த பிறவி களுக்கு மட்டுமே இன்பம் அளிப்பன. தெய்வம் எடுத்த எடுக்கப் போகின்ற பிறவிகட்கும் பிறவியற்ற பேரின்பநிலைக்கும் இன்பம் அளிப்பது ஆதலால் தேனுமாய் அமுதமுமாய் என்றருளிய பிள்ளை யார் அடுத்துத் தெய்வமும் தானாய் என்கின்றார்.

77-2. தேனினும் இனியர் பால் அன்ன நீற்றர் தீங்கரும்பு அனையர் தம் திருவடிதொழுவார் ஊன் நயந்து உருக உவகைகள் தருவார் - எம்பெருமான் எக்காலத்தும் அள்ளூறிநின்று இனிக்கும் பொருளாக இருத்தலின் நாப்புலனோடு ஒன்றிய கணத்து இனித்துப் பின் புளிப்பதாய தேனினும் இனியர். பால் உண்டார்க்குப் பித்தநோய் தணிக்கும். நீறுகண்டாருக்கும், பூசினாருக்கும் மலமயக்கம் போக்கலின் இங்ஙனம் கூறினார். கரும்பு பருவத்திற்கும் முயற்சிக்கும் ஏற்ப நுகரும் முறையில் இனிப்பைக் கொடுக்கும். எம்பெருமானும் ஆன்மாக்களின் பக்குவ நிலைக்கு ஏற்ப இனிப்பவன். சடமாகிய மாயா காரியமாகிய உடல் உயிர்பெறும் இவ்வின்பத்தைப் பெற்றிலமே என்று விரும்பி உருக ஆன்மாவிற்குப் பெருமான் மகிழ்ச்சியை விளைவிப்பான்.

77-4. தமிழ்ச்சொலும் வடசொலும் தாள் நிழல் சேர - ஒலி வடிவாயசொற்கள் யாவும் இறைவனிடமிருந்தே தோன்றியன

Koviloor Digital Library

வாதலின் அடையுமிடமும் அவன் அடிகளே ஆயின என்பது.

83-8. கொலைஆர்மழு - இது படைக்கலம் என்ற பொதுமை பற்றி வந்த அடை; இறைவன் மழு யாரையும் கொலை செய்தல் இல்லையாதலின்.

கோலச்சிலை - அழகுக்காகத் தரிக்கப்பட்ட வில்.

105-3. வெள்ளம் ஓர்வார் சடைமேல் கரந்திட்ட - வானுலகன்றித் தரணி தனக்கு இடமாதல் தகாது எனத் தருக்கி வந்த கங்கையை ஒரு சடைக்கும் காணாது என்னும்படி தருக்கடக்கி இருக்கும் இடமும் தெரியாதபடி மறைத்த. கரந்திட்ட என்றது மறைத்தவன் வேண்டும்போது வெளிப்படுத்தும் வன்மையும் உடையவன் என்பது தோன்ற நின்றது.

110-7. முனிவரொடு அமரர்கள் முறை வணங்க - முனிவர்கள் வணக்கம் உலகு உய்ய வந்த நிஷ்காமிய வணக்கம். தேவர்கள் வணக்கம் அசுரர் அழியத் தாம்வாழவேண்டும் என்னும் காமிய வணக்கமாதலின் அவர்கள் முன்னும் தேவர்கள் பின்னும் வணங்க.

113-2. அமரர்க்கும் முனிவர்க்கும் சேயவன் - அமரர்கள் போகிகளாகவும் முனிவர்கள் மனன சீலர்களாகவும் இருத்தலின் அவர்களுக்குச் சேயவன்; அவர்களுக்குச் சேயவன் எனவே, ஞானிகளுக்கு அண்ணியன் என்பதாம்.

123-4. முடிமிசை மனமுடையவர் - கங்கையோ செந்தழல் போன்ற சடையின் தீயை அவிக்க வருவதுபோலப் பெருகிக்கொண்டு இருக்கிறது. அக்கங்கையில் நனைந்த அரவமும் நம்மால் விழுங்கத்தக்கது மதி என்ற நினைவோடு வருகிறது. 'ஆதலால்' இவை தருக்கும் பகையும் மாறித் தத்தம் எல்லையில் ஒடுங்க இறைவன் எப்போதும் தலைமேல் சிந்தையனாக உள்ளான் என்ற நயம் தோன்றக் கூறியது.

இவ்வாறே 124-9,11 முதலியனவும் நயம் சிறந்த உரைப்பகுதிகளைக் கொண்டிருப்பதனைக் காணலாம்.

Koviloor Digital Library

7. விளக்கவுரை:

82-3. மயிலும் மடமானும் மதியும் இளவேயும் வெயிலும் பொலிமாதர்.

இந்நகரத்து மாதர் இனிமை தரும் மென்மையாகிய சாயலால் ஆண் மயிலையும், மருண்ட நோக்கத்தால் மானையும், நுதல் அழகால் பிறைமதியையும், தோள்களால் மூங்கிலையும், கற்பினால் வெயிலையும் போல விளங்குகின்றனர்.

129-7. புவிமுதல் ஐம்பூதமாய்ப் புலன் ஐந்தாய் நிலன் ஐந்தாய்க் கரணம் நான்காய் அவை அவை சேர் பயன் உருவாய், அல்ல உருவாய்.

நிலன் ஐந்து - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன.

கரணம் நான்கு - மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்பன.

அவை சேர்பயன் உருவாய் - பூதம் முதலியவற்றைச் சேர்ந்த பயனே வடிவாய்; என்றது பூதப்பயனாகிய சுவை முதலிய தன்மாத்திரை ஐந்தும், புலன் ஐந்தின் பயனாய பொறி இன்பம் ஐந்தும், கரணம் நான்கின் பயனாய நினைத்தலும் புத்தி பண்ணலும் சிந்தித்தலும் இது செய்வேன் என அகங்கரித்து எழுதலும் ஆகிய நான்கும் கொள்ளப்படும். அல்ல உருவாய் - இவை அல்லாத அருவாகிய ஞானமாய்.

136-1. மாதர்மடப் பிடியும் மட அன்னமும் அன்னதோர் நடை.

உமாதேவியின் பெருமித நடைக்குப் பெண்யானை நடையும் நடையின் மென்மைக்கு அன்ன நடையின் மென்மையும் உவமை ஆயின.

இத்தகைய விளக்கவுரைகள் பல இம்முதல் திருமுறை உரையில் காணலாம்.

Koviloor Digital Library

8. தல புராணம் முதலியன:

5-10. அண்ட மறையவன் - இரணிய கருப்பனாகிய பிரமன். பிரமன் நீரையே முதற்கண் படைத்தான் என்பதும் அதன்கண் பொன் மயமான முட்டையாக உலகை ஆக்கினான் என்பதும் புராண வரலாறு.

11-7. தம் திருவடிகளைப் பணிந்த தாரகாக்ஷன், கமலா க்ஷன், வித்யுன்மாலி என்ற மூவர்கட்கும் சுதர்மன், சுநீதி, சுபுத்தி எனப்பெயர் ஈந்து வாயில் காவலராகும் வரத்தால் மிக அருள் செய்தவன்.

இச்செய்தியை *அதிகைப்புராண வரலாறு, தர்மசங்கிதை வசனம்* என்பனவற்றால் அறியலாம்.

12-5. தன் தவவலிமையால் தேவர்களை வருத்திய அந்த காசுரனைச் சிவபெருமான் பைரவரைக் கொண்டு முத்தலைச்சூலத்தில் குத்திக் கொணர அவன் பெருமானைத் தரிசித்ததும் உண்மை ஞானம் கைவரப்பெற்றான். அவனுக்குக் கணபதியாம் பதவியை அளித்தார் என்புது *கந்தபுராணம்.*

27-5. திருப்புன்கூர்த்தலத்து அம்மை திருநாமம் சொக்க நாயகி; அழகிய நாயகி, ஆதலின் இங்கு உகந்தருளியிருக்கும் பெருமான் அழகர் எனக் குறிப்பிடப்பட்டார். இது தலபுராணச்செய்தி.

31-5. இறையார் வளையாள் - குரங்கு அணில் முட்டத் திருத்தலத்து இறைவியின் திருநாமம் - இது தலபுராணச் செய்தி.

32-5. திருவிடைமருதூரில் சிவபெருமான் தைப்பூசத் திருநாள் அன்று காவிரியில் தீர்த்தம் கொள்வது தலபுராணச் செய்தி.

42-9. கொக்கு வடிவில் வந்த பகாசுரன் என்பவனை வாயைப் பிளந்து கண்ணன் கொன்ற செய்தி *பாகவத புராணத்தில்* குறிப்பிடப் படுவதாகும்.

45-1. கணவனால் கொல்லப்பட்ட நவஞானி என்னும் பார்ப்பனி மறுபிறப்பில் தரிசனச் செட்டி என்ற பெயரோடு பிறந்த தன் கணவனைப் பேய் வடிவினை மறைத்துப் பெண்வடிவில் வந்து பழையனூர் ஆலங்காட்டில் கொன்ற செய்தி அவ்வூர்த்தல புராணம் முதலியவற்றில் உள்ளது.

Koviloor Digital Library

48-6. அருச்சுனன் செய்த தவத்தைக்கெடுத்து அவனைக் கொல்ல வந்த மூகாசுரன் என்னும் பன்றியைக் கொன்று, அருச்சுனனுடைய போர் வன்மையைப் பார்வதிக்குக்காட்டி அவனுக்கு இறைவன் அருள்செய்த செய்தி பாரதத்தில் உள்ளது.

56-1. ஆதி முதல்வர் - ஆதி முதல்வர் என்பது திருமூலநாதர் என்னும் தலத்திறைவர் பெயரைக் குறிக்கிறது - திருப்பாற்றுறைச் செய்தி.

62-9. பாணனிசை பத்திமையால் பாடுதலும் பரிந்தளித்தான் - இது பாணபத்திரன் வரலாறு எனப்படுகிறது - பெரியபுராணம்.

63. சீகாழியின் பன்னிரு பெயர்களும் சீகாழித் தலபுராணச் செய்திகளாக உள்ளன.

83-6. அம்பர்மாகாளத்து இறைவர் நஞ்சை உண்டு களித்தவர் - இவர் பெயர் காளகண்டேசுவரர் என்பது தலபுராணம். இவையன்றி, 101-5,7; 105-9,10; 114-6; 120-3; 21-5 போன்ற இடங்களிலும் புராணச் செய்திகளை உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

9. அருஞ்சொற்பொருள்:

2-2. குழை - பனந்தோட்டால் செய்யப்படும் மகளிர்காதணி. ஆடவர் காதில் செருகிக் கொள்ளும் மணத்தழை.

2-7. வெள்ளம் ஆர்ந்துமதிசூடி - தருக்கினாரை ஒடுக்கித் தாழ்ந்தாரை உயாத்தி.

3-7. வருகாமன் - தேவகாரியத்தை முடிப்பதற்காக இந்திரன் கோபத்துக்கு ஆளாகி இறப்பதனைக் காட்டிலும் சிவபெருமான் மறக்கருணையால் உய்வேன் என்று விரும்பிவந்த காமன்.

3-11. வானத்திலும் உயர்வர் - பெருமானை இசைபாட வல்லார்க்கு, வானத்தின்பம் ஒருபொருளாகத்தோன்றாது ஆதலின் வானத்திலும் உயர்வர் என்றார்.

4-5. வெந்த வெண்ணீறு - இனிவேதற்கு இல்லாத - மாற்றமில்லாது ஒருபடித்தான வெண்ணீறு.

Koviloor Digital Library

4-7. காம்பு - முள் இல்லாத மூங்கில்.

5-11. பாடல் மாலை - ஒவ்வொரு திருப்பாடலுமே தனித்தனிப்பயனுடையதாய், வழிபடும் முறைகளை உடையதாய் இருக்கும் சிறப்புநோக்கி ஒவ்வொரு பாடலுமே ஒரு மாலை போன்றது.

6-2. மூவெரி காவல் ஓம்பும் - அந்தணர்கள் மணக்காலத்து எடுத்த தீயை அவியாதே பாதுகாக்க வேண்டியது மரபு ஆதலின் மூஎரி காவல் ஓம்பும் மறையாளர் என்றார்.

6-6. புனை அழல் - சாதகன்மம் முதலான பதினாறு கிரியைகளாலும் அழகு செய்யப்பட்ட யாகாக்கினி.

6-9. மந்திர வேதங்கள் - மந்திரவடிவான வேதங்கள். அவை இருக்கு வேதத்தில் வழிபாட்டு மந்திரங்களும், யசுர் வேதத்தில் பிரயோகங்களும் சாமவேதத்தில் கானங்களுமாக அமைந்தன.

7-3. யார்க்கும் நண்ணல் அரிய நள்ளாறு - நாடிழந்தும், நகரிழந்தும் மனைவியையிழந்தும் உருமாறியும் வினையை நுகர்ந்து கழித்த நளன் போன்றார் அன்றி வினைச் சேடமுடைய எவரும் நணுக முடியாத நள்ளாறு.

8-7. நீறுடையார் - தாம்தொன்மைக்கெல்லாம் தொன்மை யாய் இருத்தலைத் தோற்றுவிக்கச் சர்வசங்காரகாலத்துத் திருநீற்றினைத் திருமேனியிலணிந்தவர்.

10-4. எதிரும்பலி - பிச்சை ஏற்பார் யாசியாது தெருவில் செல்ல மகளிர் தாமே வந்து இடுதல் மரபாதலின் அதனை விளக்க எதிரும்பலி என்றார்.

10-7. கரிகாலன - எரிபிணத்தை நுகர எரியில் நிற்பதால் கரிந்துபோன கால்களை உடையன.

10-9. தளராமுலை - உண்ணத்தளர்தல் நகிற்கு இயல்பாத லின் உண்ணாமுலை என்பார் தளரா முலை என்றார்.

11-5. ஆயாதன சமயம் பல - இறை உண்மையையும் இறை இலக்கணத்தையும் அளவையானும் அநுபவத்தானும் உள்ளவாறு

Koviloor Digital Library

ஆராயாதனவாகிய சைவம் ஒழிந்த ஏனைய சமயம்.

11-6. எல் ஆம் ஒருதேர் - ஒளிப்பொருள்களாகிய சூரிய சந்திரர்கள் சக்கரங்களாக அமைந்த ஒருதேர்.

18-11. குன்றாத்தமிழ் - எஞ்ஞான்றும் திருவருள் குறையாத தமிழ்.

21-5. மலர்மிசை எழுதருபொருள் - பிரமரந்தரத்தின் கண்ணதாகிய சகஸ்ர தளத்தை உடைய தாமரை மலர்மேல் எழுந்தருளியிருக்கும் பேரொளிப் பிழம்பாகிய பொருள்.

24-3 கானமான் - சாதி அடை. இறைவன் கையில் உள்ளது காட்டு மான் அன்று.

27-8. மலையதனார் - சண்டையிடுதற்குரிய முப்புராதிகள்.

27-9. நாடவல்லமலரான் - பிரமனுக்கு நான்கு முகங்கள் ஆதலின் திரும்பித் திரும்பித் தேடவேண்டிய அவசியமில்லை என்று நகைச்சுவை தோன்றக் கூறியது.

29-2 ஆகம் வீடும் மறையோர் - வினைவயத்தான் வந்த உடலை விடுத்து முத்தி எய்தும் அந்தணர்.

32-7. திமில் - வேங்கை மரம்.

33-2. கிடை ஆர் ஒலி- மாணவர்கள் கூட்டமாயிருந்து ஒலிக்கும் வேத ஒலி. இதனைச் சந்தை கூறுதல் என்ப.

33-9. சுணங்கு - பிரிந்த பெண்களுக்கு உண்டாகும் தேமல்.

36-3. கொக்கின் இறகு - கொக்கிறகம்பூ

45-3. பொழில், சோலை: பொழில் - பொழில் இயற்கையே வளர்ந்த காடு. சோலை - வைத்து வளர்க்கப்பட்ட பூங்கா.

47-6. மூன்று வேள்வியாளர் - தேவயஜ்ஞம், பிதிர்ஜ்யஜ்ஞம், ருஷியஜ்ஞம் என்னும் மூன்று வேள்விகளையும் செய்பவர்கள்.

Koviloor Digital Library

47-7. பொறைபடாத இன்பம் - பொறுக்க முடியாத அளவு கடந்த இன்பம்.

48-1. அருமறை - அரிய அநுபூதி நிலையாகிய இரகசியம்.

48-5. ஐவேள்வி - தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்ற ஐவருக்கும் செய்யப்படும் வேள்வி.

50-7. ஆயம் ஆய - படைக்கப்பெற்ற.

53-5. மொந்தை, தக்கை - மொந்தை - ஒருமுகப்பறைவகை களில் ஒன்று.

தக்கை - இருமுகப்பறை வகைகளில் ஒன்று. (உடுக்கையும் ஆம்)

53-6. சழிந்த - நெருங்கிக் கிடக்கின்ற.

53-9. மூலம் உண்ட நீற்றர் - மூலமலமாகிய ஆணவத்தின் வலிகெடுத்த திருநீற்றினை உடைய அடியவர்கள்.

54-1. பூத்தேர்ந்து - வண்டு, ஈக்கடி, எச்சம், முடக்கு முதலிய குற்றமில்லாத பூக்களை ஆராய்ந்து

54-4. தோட்டீர் - செங்காந்தள் பூவை அணிந்தவரே.

57-9. பரக்கினார் - அலைந்து திரிந்தவர்களாகிய அயனும் மாலும்.

விரக்கினான் - சாமர்த்தியம் உடையவன். விரகினான் எதுகை நோக்கி விரிந்தது.

59-1. ஒடுங்கும் பிணி - தமக்குரிய பருவம் வருந்துணையும் வெளிப்படாதே ஒடுங்கி இருக்கும் நோய்.

59-10. பகடு ஊர்பசி - யானைத்தீப்பசி.

64-4. செடி ஆர்வைகை - புதர்நிறைந்த வைகை.

Koviloor Digital Library

65-5. விழைவு, காதல் - விழைவு - பற்று, காதல் - பற்று முற்றி இன்றியமையாத்தன்மையில் எழுந்த விருப்புள்ளம்.

66-3. தாராபகன்றில் - தாரா - சிறுநாரை, பகன்றில் - அன்றில்.

67-6. ஈளைப்படுகு - உலராத சேற்றோடு கூடிய ஆற்றுப் படுகை.

68-6. மூதார் - முனிவர் - மிக ஆண்டு மூத்த முனிவராகிய சனகாதியர்.

70-7. தலையார்கமலம் - தலைமை பொருந்திய தாமரை.

71-10. கபாலம் அயல் பொழிய - கறவைப் பாத்திரம் நிறைந்து வழிய.

77-7. கூவிள மலர் - வில்வப்பூ. பத்திரமே அன்றிப்பூவும் சூடப்பெறும் என்பது அறிவிக்கப்பட்டது.

83-2. ஆனான் - இடபத்தை உடையவன்.

86-8. தீபமனத்தார் - எழுதிய தீபம் போல நிலைத்த மனத்து அடியார்கள்.

98-1. சென்றடையாத திரு - நல்வினைப் போகம் காரணமாக ஆன்மாக்களுக்கு வருவதுபோல, வந்து அடையாத இயற்கையே ஆன திரு.

103.4. துணையல் - இரண்டு இரண்டாக மலர்களைச் சேர்த்துக்கட்டும் மாலை. கணையல் செய்தல் - அம்பு எய்தல்.

104-10. அந்தர ஞானம் - இடையீடுற்ற ஞானம்.

107-10. கட்டுரை - கட்டிக் (கற்பனை செய்து) சொன்ன பொய்மொழி. இதுபோன்று அருஞ்சொல் விளக்கங்கள் பல இவ்வுரையுள் காணப்படும்.

Koviloor Digital Library

10. ஏகபாதம் எழுகூற்றிருக்கை: பழைய உரை:

இவ்விரு மிறைக்கவிகளுக்கும் தாமே அருஞ்சொற்பொருள் முதலியவற்றை விளக்காமல் அவற்றிற்கு உரிய பழைய உரையையே கற்பார் நலம் கருதிச் சிற்சில செப்பம் செய்து ஓரளவு எளிமை யுடையதாக்கி வரைந்துள்ளார். இதனால் இவ்வுரையாசிரியருடைய பழமையைப் போற்றும் பண்பு புலப்படுகிறது.

11. இன்றியமையாத இலக்கணக் குறிப்புக்கள்:

1-1. விடையேறி, மதிசூடி பொடிபூசி என் உள்ளம் கவர் கள்வன்.

ஏறி, பூசி - என்பன பெயர்ச் சொற்கள், இவற்றை வினை எச்சமாக்கிக் கவர் கள்வன் என்ற வினைத்தொகையின் முதனிலை யோடு முடிப்பாரும் உளர்.

1-6. இனவெள்வளைசோர. வளைசோர்தல் 'உடம்பு நனி சுருங்கல்' என்னும் மெய்ப்பாடு.

2-5. பணிவாரை - அடியாரிடத்தில். இரண்டன் உருபு ஏழன் பொருளில் வந்த வேற்றுமை மயக்கம்.

3-1. ஒத்தன சொல்லி உலகத்தவர் தாம் தொழுது ஏத்த.

மந்திர புட்பம் இடுவதற்காக வலக்கையில் பூவை வைத்து அர்க்கிய ஜலத்தைச் சொரிந்து கையை மூடி அபிமந்திரித்துப் பலர் கூடி வேத மந்திரங்களைச் சொல்லுங்காலத்து அடியவர் தொழுவராதலின், சொல்லி என்ற செய்து என் எச்சத்தைச் சொல்ல எனச் செயவென் எச்சமாகப் பொருள் செய்ய வேண்டும்.

7-7. நீறுப்பூச்சும் - நீற்றுப்பூச்சும் எனற்பாலது ஓசைநோக்கி இரட்டாதாயிற்று.

8-7. வெண்டலை மாலை - உம்மைத் தொகை. வெண்தலை களையும் மாலைகளையும் கலந்து அணிந்த திருமேனியை உடையவர்.

10-2. ஆமாம்பிணை - ஆமாப்பிணை என்பது எதுகை நோக்கி ஆமாம்பிணை ஆயிற்று.

Koviloor Digital Library

10-5. உரவம் - உரகம் என்பதன் திரிபு.

17-5. குன்று என்பது குன்றளூர் என்பதன் மரூஉ. எந்தாய் - எம் தாய் என்பதன் அண்மை விளி; எந்தை என்பதன் விளி. எனவே எந்தாய் என்பது தாயாகவும் தந்தையாகவும் உள்ள இறைவனை விளித்தவாறு.

55-10. கொள்ளேலும் - முன்னிலைப் பன்மை எதிர்மறை ஏவல். இஃது அருவழக்கு.

89-6. அயம்பெய்ய - அயம் - ஐயம் என்பதன் போலி.

103-4. துணையல், பிணையல், இணையல், கணையல் - நான்கினும் அல் சாரியை.

117-3. ஏ விளங்கும் நுதல் - ஏ - அம்பு. அது வில்லைக் குறித்தது ஆகுபெயர்.

இத்தகைய இலக்கணக் குறிப்புக்கள் இன்னும் சில உள.

12. செய்யுள் முடிபு முதலியன:

ஆற்றொழுக்காகப் பொருள் செய்ய இயலாத சில பாடல்களில் உள்ள சொற்றொடர்களைப் பிரித்துத் தனித்தனியே கூட்டிப் பொருள் செய்ய வேண்டிய நிலை உள்ளது. அத்தகைய இடங்களை இவ்வுரையாசிரியர் விளக்கியுள்ளார்.

6-5. பாடலும் முழவும் விழாவும் இடையறாத மருகல் எனவும், மறையோர் பரவ நிலாவியமைந்த எனவும், கொடிதடவும் மருகல் எனவும் இயைத்துப் பொருள் காண்க.

32-5. வண்டு புகுந்து ஈண்டி, செம்மை உடைத்தாய் இருக்க, பூசம்புகுந்து ஆடி அழ்காய ஈசன் உறைகின்ற இடைமருது என வினை முடிபு செய்க.

32-9. மால்நயந்து ஏத்த எனப்பிரிக்க. உறைகின்ற இடை மருது ஈதோ எற்றே எனக் கூட்டுக.

77-1. குன்று இரண்டு அன்னதோள் எனவும், அன்று இரண்டு

Koviloor Digital Library

உருவம் ஆய எனவும், பிரித்துப் பொருள் செய்க.

111-3. இறைஞ்சி என்னும் செய்து என் எச்சத்தைச் செய என் எச்சமாக மாற்றி இறைஞ்சக் கமழும் காலன நகர் என முடிக்க.

பொருள் தெளிவு கருதி இங்ஙனம் சொற்றொடர்கள் முறைப்படுத்தப்பட்ட இடங்கள் பல இவ்வுரையில் சுட்டப்பட்டுள்ளன.

13. பண்டை நூல் மேற்கோள்கள்:

2-9. போகம்வைத்த பொழில் - தனிமகன் வழங்காப்பனி மலர்க்கா (*புறநா.33*)

8-6. நிதானம் - பொன்.

நிதானம் - முற்காரணம் தூய்மை நியமம்

நிதி மறைத்துக்கொள் பொருள் கன்றின் கயிறாம் - நானார்த்த தீபிகை.

9-2. கிடை - வேதம் ஓதும் கூட்டம்.

'ஓதுகிடையின் உடன் போவார்' (பெரிய. சண்டே-17)

19-10. நமையல - வருத்தா.

நமைப்புறு பிறவிநோய் - *சூளாமணி*

நும்மால் நமைப்புண்ணேன் - தேவாரம்.

32-8. ஏ ஆர் சிலை-பெருக்கத்தோடு கூடிய கயிலைமலை.

ஏ பெற்றாகும். தொல். உரி. பெற்று - பெருக்கம்

ஏ கல் அடுக்கம் - (*நற்றிணை 116*)

33-8. விடத்தார் திகழும் மிடறன் - 'கறைமிடறு அணியலும் அணிந்தன்று '- (*புறநா-1*)

Koviloor Digital Library

35-1. விரிகோவணம் - 'அற்றம் மறைப்பது முன்பணியே' - 3-371-1.

'ஐந்தலைய மாசுணம் கொண்டு அரை ஆர்க்கும்மே' - தேவாரம்.

43-1. ஒருமாதைத் தலையிலும் ஒருமாதைப் பாகத்திலும் வைத்தும் கற்குடியார் பிரமசாரியே. 'பவன் பிரமசாரியாகும்'.

52-7. மூன்றும் ஒன்றாகக் கூட்டி ஓர் வெங்கணையால்.

எரி காற்று அரிகோல் - 1-11-6.

65-3. அயம் சேர்புணரி - அயம் - பள்ளம். அயம் இழி அருவி *கலி* - 46.

57-4. தாழ்வுடை மனம் - பணிந்த உள்ளம்

தாழ்வு எனும் தன்மை (*சித்தியார்*)

60-3. கண்பு அகத்தின் - சம்பங்கோரையின் நடுவில்.

'களிறுமாய் செருந்தியொடு கண்பு அமன்று ஊர்தர' (*மதுரைக்*-122.)

இவ்வுரையில் மிகத்தேவைப்பட்ட இடத்தன்றிப் பண்டை நூல் மேற்கோள்கள் இடம் பெற்றில.

14. வடமொழிச் சார்பு:

கர்ணாவதம்சம் (2-1) க்ருஷ்ண மிருகம் (2-1) அரிஷட் வர்க்கம் (21-5) அணோரணியான் மஹதோர் மஹீயான் -(61-6) முதலிய வடசொற்றொடர்கள் உரையில் விரவி வருகின்றன. ரத்நம், ஸ்பரிசம், ரூபம் முதலிய தனிச் சொற்களும் பயில்கின்றன. முதல் திருப்பாடல் உரையிலும், 22-7 உரையிலும் வடநூல் மேற் கோள்கள் காட்டப்புட்டுள்ளன. உரை ஆசிரியர் வடமொழியும் பயின்றவர் ஆதலின் இன்னோரன்ன அவர் உரையுள் இடம் பெற்றுள்ளன.

Koviloor Digital Library

15. சாத்திரக் கருத்துகள்:

1-4. என் உள்ளம் கவர்ந்தார் என்றது, என்னுடைய பரிபாகம் இருந்தபடியை அறிந்து ஒன்று செய்வார் போல வந்து உள்ளமாகிய ஆன்மாவை மலமகற்றித் தமதாக்கினார்.

3-3. முடிமன்னனைக் கண்டு பிடிஅரிசி யாசிப்பாரைப் போலல்லாது வலிதாய நாயகரைத் தியானித்துக் காமியப் பயனைக் கருதாதீர்கள். உய்யுநெறியைக் கேளுங்கள். அப்போது அதற்கு இடையூறாகிய வினைகள் நீங்கும். இன்பம் உண்டாகும் வினை நீங்குதல் ஒன்றுமே இன்பம் என்பது சித்தாந்த முத்தி அன்றாதலின் நலமாமே என்று மேலும் கூறினார்.

6-6. உடன்பிறந்தே கொல்லும் பகையாய், தன்னையும் காட்டாது தலைவனையும் காட்டாது நிற்கின்ற மூலமலப்பகையை வெல்லும் வீரனாதலின் இறைவனை மைந்த! என்றரார்.

11-2. தானாய் - ஒன்றாய், வேறாய் - அவற்றின் வேறாய், உடனானான் - உடனாய் நிற்பவன். இறைவன் கண்ணும் ஒளியும், கதிரும் அருக்கனும், ஒளியும் சூடும்போல உயிர்களோடு கலந்து இருக்கின்ற மூவகை நிலைகளையும் உணர்த்தியவாறு.

17-6. அறிவானும் அறியப்படும் பொருளும் அறிவும் ஆகிய மூன்றும் தனி நிலையற்று ஒன்றாய் இருந்து அறியும் பரம ஞானி களுக்குச் சிவமாகிய தன்னை அறியத்தக்க அறிவை அருளுவான். இறைவன் அறியுமாறு செய்தாலன்றி ஆன்மாக்கள் தாமாக அறிந்து கொள்ளும் ஆற்றல் இல்லன.

17-7. சொற்பொருள் போல இறைவன் அம்மையோடு ஒன்றாய் இருக்கும் தன்மையும் சொல்லும் பொருளும்போல அம்மையை வேறாய் வைத்து விரும்பும் தன்மையும் உடையன்.

18-4. திருவடிகளைத் தொழுதாலல்லது ஆன்மாக்கள் தம் அறிவான் அறியா.

19-1. பரஞானம் அபரஞானம் என்ற இரண்டு முலைகளை உடைய உமாதேவியோடு இணைபவன் சிவன்.

19-3. ஒளிப் பொருளாகிய சூரியனையும் வெறுத்து

Koviloor Digital Library

ஒட்டுகின்ற இருள், ஆணவமலம்.

42-2. அயன் மால் உருத்திரன் என முத்தொழிலைச் செய்யும் மூவரையும் அதிட்டித்து நின்று தொழிற்படுத்தும், தன்னிடத்து ஒடுங்கிய உலகமாதியவற்றைப் புனருற்பவம் செய்யுங்காலைச் சிவன் சக்தி என்னும் இருவருமாகி இவர்களின் வேறாய் நின்று இயக்கும் பரசிவமுமாகி வினை ஒய்ந்து ஆன்மாக்கள் பெத்த நிலையில் நில்லா ஆகலின், தீவினைகள் நீங்கி நிற்கப் பரங்கருணைத் தடங்கடலாகிய பரமன் நல்வினைகளை அவைகள் ஆற்ற அருளுகிறான்.

76-1. ஆன்ம போதம் கழன்று சிவபோதத்தில் நிற்பார் சொல்லுவனயாவும் சிவத்து உரையே ஆதலின் 'எனதுரை தனது ரையாக' என்றார்.

85-9. நாகத்து அணை இருந்தும் அணையிலேயே அருகில் திருமகள் இருந்தும் மாலுக்குப் போகம் கூடவேண்டுமாயின் இறைவன் போகியாய் இருந்தாலல்லது பயனில்லை என்பது கூறப்பெற்றது.

113-5. இறைவன் தேர்ந்த ஞானியரையும் தேடச் செய்து அவர்களுக்குப் பாலின் நெய்போலவும், தேடுவாரைத் தேடச் செய்து விறகின் தீப்போலவும் தோன்றிநிற்பவன்.

131-1. சுவைகளும் இசைகளும் எண்குணங்களும் வேதமும் முதலியன மாயாகாரியங்கள் ஆதலின் அவற்றால் அறியப் பெறாதவன் ஆயினான் இறைவன்.

16. பிறர் கருத்துக் கூறல்:

1-1. கயப்பாக்கம் திரு. சதாசிவ செட்டியார் இம்முதல் திருப்பாடலில், விடையேறி - சிருட்டி. மதி சூடி - திதி; பொடிபூசி - சங்காரம்; கள்வன் - திரோபவம்; அருள்செய்த - அநுக்கிரகம் என்ற ஐந்தொழிலையும் குறிப்பிட்டு விளக்கியுள்ளார் - என்கிறார்.

ஸ்ரீமத் செப்பறைச் சுவாமிகள் தோடுடைய செவியன் முதலான இறைவனுடைய எண்குணங்களாகிய சிறப்பியல்புகள் உணர்த்துவன, பிரமபுரம் விடைஏறி, பொடிபூசி, உள்ளம்கவர் கள்வன் என்பன இறைவனுடைய உருவம், அரு உருவம், அருவம் என்ற முத்திறத் திருமேனிகளையும் உணர்த்துவன என்று குறிப்பிடுகின்றார், - என்கின்றார்.

Koviloor Digital Library

இவ்வாறு பிறர் கருத்துக்களும் ஒரோ வழிக்குறிப்பிடப் படுகின்றன.

இவ்வுரையாளருடைய உரை இயற்றும் ஆற்றலை 'வண்ட ரங்கப் புனற்கமல மது'- என்னும் இத்திருமுறை 60 ஆம் பதிகத்துக்கு இவர் எழுதியுள்ள சுவையான உரைகண்டு உணரலாம்.

இங்ஙனம் நுண்ணுணர்வினால் வரையப்பெற்ற இம்முதல் திருமுறைக் குறிப்புரையைத் தெளிவுகருதி வரையப்பட்டுள்ள பொழிப்புரையோடும் பயின்று எல்லோரும் முழுப்பயன் பெற இறைவன் அருளுவானாக. இவ்வரிய குறிப்புரையைப் புதிதாக வரையப் பெற்ற பொழிப்புரையோடும் வெளியிட்டருளுகின்ற நம் குருமகாசந்நிதானத்திற்கு அடியேங்கள் எவ்வாறும் கைம்மாறு இலேம்.

Koviloor Digital Library

உ

முதல் திருமுறை

தல அட்டவணை

தலமும் பதிகமும் வரலாறும்

தொடர் எண்	தலமும் பதிகத் தொடக்கமும்	பதிக எண்	தல எண்	பக்க எண்
1.	**அச்சிறுபாக்கம்**		71	197
	பொன்றிரண்	77		
2.	**அண்ணாமலை**		11	112
	உண்ணாமுலை	10		
	பூவார் மலர்	69		
3.	**அதிகை வீரட்டானம்**		40	155
	குண்டைக்குறள்	46		
4.	**அம்பர் மாகாளம்**		46	161
	அடையார் புரம்	83		
5.	**அன்பிலாலந்துறை**		29	142
	கணைநீடெரி	33		
6.	**அன்னியூர்**		76	200
	மன்னியூரிறை	96		
7.	**ஆப்பனூர்**		74	199
	முற்றும் சடை	88		
8.	**ஆரூர்**		86	207
	சித்தந்தெளி	91		
	பாடலனான்	105		

Koviloor Digital Library

தொடர் எண்	தலமும் பதிகத்தொடக்கமும்	பதிக எண்	தல எண்	பக்க எண்
9.	**ஆலங்காடு**		39	154
	துஞ்சவரு	45		
10.	**ஆலவாய் (மதுரை)**		8	108
	நீலமாமிடற்	94		
11.	**ஆவூர்ப்பசுபதீச்சரம்**		10	111
	புண்ணியர்	8		
12.	**இடும்பாவனம்**		17	126
	மனமார்தரு	17		
13.	**இடைச்சுரம்**		54	171
	வரிவளர் அவிர்	78		
14.	**இடைமருதூர்**		28	140
	ஓடேகலனுண்	32		
	தோடொர்கா	95		
	மருந்தவன்	110		
	நடைமருதிரி	121		
	விரிதருபுலி	122		
15.	**இராமனதீச்சரம்**		80	202
	சங்கொளிர்	115		
16.	**இலம்பையங்கோட்டூர்**		53	171
	மலையினார்	76		
17.	**ஈங்கோய்மலை**		70	196
	வானத்துயர்	70		
18.	**ஊறல் (தக்கோலம்)**		52	170
	மாறிலவுணர்	106		

Koviloor Digital Library

தொடர் எண்	தலமும் பதிகத் தொடக்கமும்	பதிக எண்	தல எண்	பக்க எண்
19.	எருக்கத்தம்புலியூர்		75	200
	படையார்தரு	89		
20.	ஐயாறு		30	143
	கலையார்மதி	36		
	பணிந்தவ ரரு	120		
	புலனைந்தும்	130		
21.	ஒத்தூர்		45	160
	பூத்தேர்ந் தாயன	54		
22.	கச்சிஏகம்பம் (காஞ்சிபுரம்)		85	206
	வெந்தவெண்	133		
23.	கடைமுடி (கீழூர்)		79	201
	அருத்தனை	111		
24.	கண்ணார்கோயில் (குருமாணக்குடி)		77	200
	தண்ணார்திங்கட்	101		
25.	கயிலாயம்		88	212
	பொடிகொள்	68		
26.	கரவீரம்		67	193
	அரியு நம்	58		
27.	கழுக்குன்றம்		55	172
	தோடுடையான்	103		
28.	கள்ளில்		81	203
	முள்ளின்மேல்	119		
29.	கற்குடி		37	152
	வடந்திகழ்	43		

Koviloor Digital Library

தொடர் எண்	தலமும் பதிகத்தொடக்கமும்	பதிக எண்	தல எண்	பக்க எண்
30.	காட்டுப்பள்ளி (கீழை)		5	104
	செய்யருகே	5		
31.	காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரம்		69	196
	அடையார்தம்	65		
32.	காழி (திருப்பிரமபுரம்)		1	94
	தோடுடைய	1		
	எரியார்மழு	63		
	அரனையுள்	90		
	வேணுபுரம்			
	வண்டார்குழல்	9		
	புகலி			
	விதியாய்விளை	30		
	மைம்மரு	4		
	ஆடலரவசை	104		
	வெங்குரு			
	காலைநன்	75		
	தோணிபுரம்			
	வண்டரங்க	60		
	சிரபுரம்			
	பல்லடைந்த	47		
	வாருறுவன	109		
	புறவம்			
	நறவநிறை	74		
	எய்யாவென்	97		
	சண்பை			
	பங்கமேறு	66		
	சீகாழி			
	பூவார்கொன்றை	24		

Koviloor Digital Library

தொடர் எண்	தலமும் பதிகத் தொடக்கமும்	பதிக எண்	தல எண்	பக்க எண்
	அடலேறமரும்	34		
	நல்லார்தீ	81		
	உரவார்கலை	102		
	கழுமலம்			
	பிறையணிபடர்	19		
	அயிலுறு	79		
	பந்தத்தால்	126		
	சேவுயரும்	129		
33.	**கானூர்**		56	174
	வானார்சோதி	73		
34.	**குடந்தைக்காரோணம் (கும்பகோணம்)**		84	205
	வாரார்கொங்கை	72		
35.	**குரங்கணில்முட்டம்**		27	139
	விழுநீர்	31		
36.	**குற்றாலம்**		87	210
	வம்பார்குன்றம்	99		
37.	**கொடிமாடச்செங்குன்றூர் (திருச்செங்கோடு)**		49	166
	வெந்தவெண்	107		
38.	**கொடுங்குன்றம் (பிரான்மலை)**		14	122
	வானிற்பொலி	14		
39.	**கோயில் (சிதம்பரம்)**		62	179
	கற்றாங்கெரி	80		
40.	**கோலக்கா**		21	130
	மடையில்வாளை	23		

Koviloor Digital Library

தொடர் எண்	தலமும் பதிகத்தொடக்கமும்	பதிக எண்	தல எண்	பக்க எண்
41	**கோளிலி(திருக்குவளை)**		63	187
	நாளாய போகாமே	62		
42.	**சிராப்பள்ளி**		64	188
	நன்றுடையானை	98		
43.	**சிவபுரம்**		19	127
	புவம்வளி	21		
	இன்குரலிசை	112		
	கலைமலியகல்	125		
44.	**செங்காட்டங்குடி**		7	106
	நறைகொண்ட	61		
45.	**செம்பொன்பள்ளி**		22	130
	மருவார்குழலி	25		
46.	**சேய்ஞ்ஞலூர்**		41	157
	நூலடைந்த	48		
47.	**சோபுரம் (தியாகவல்லி)**		43	158
	வெங்கணா	51		
48.	**சோற்றுத்துறை**		25	137
	செப்ப நெஞ்சே	28		
49.	**தருமபுரம்**		83	204
	மாதர்மடப்பிடி	136		
50.	**தூங்கானைமாடம் (பெண்ணாகடம்)**		68	194
	ஒடுங்கும் பிணி	59		

Koviloor Digital Library

தொடர் எண்	தலமும் பதிகத் தொடக்கமும்	பதிக எண்	தல எண்	பக்க எண்
51.	நல்லம்		75	198
	கல்லானிழல்	85		
52.	நல்லூர்		61	178
	கொட்டும்பறை	86		
53.	நள்ளாறு		9	111
	பாடக மெல்லடி (ஆலவாய்)	7		
	போகமார்த்த	49		
54.	நறையூர்ச்சித்தீச்சரம்		26	138
	ஊருலாவு	29		
	பிறைகொள்	71		
55.	நாகைக்காரோணம் (நாகப்பட்டினம்)		60	177
	புனையும்விரி	84		
56.	நின்றியூர்		18	126
	சூலம்படை	18		
57.	நெடுங்களம்		44	159
	மறையுடையாய்	52		
58.	நெய்த்தானம்		15	124
	மையாடிய	15		
59.	பரங்குன்றம்		57	175
	நீடலர்சோதி	100		
60.	பராய்த்துறை		59	176
	நீறுசேர்வதோர்	135		
61.	பருப்பதம் (ஸ்ரீ சைலம்)		48	165
	சுடுமணியுமிழ்	118		

Koviloor Digital Library

தொடர் எண்	தலமும் பதிகத்தொடக்கமும்	பதிக எண்	தல எண்	பக்க எண்
62.	பழனம்		58	175
	வேதமோதி	67		
63.	பறியலூர்		82	204
	கருத்தன் கடவுள்	134		
64.	பனையூர்		31	146
	அரவச்சடை	37		
65.	பாச்சிலாச்சிராமம்		38	153
	துணிவளர்	44		
66.	பாதாளீச்சரம்		78	201
	மின்னியல்	108		
67.	பாம்புரம்		35	150
	சீரணிதிகழ்	41		
68.	பாற்றுறை		65	192
	காரார்கொன்றை	56		
69.	புகலூர்		2	98
	குறிகலந்த	2		
70.	புத்தூர்		23	132
	வெங்கள் விம்மு	26		
71.	புள்ளமங்கை		16	125
	பாலுந்துறு	16		
72.	புன்கூர்		24	136
	முந்திநின்ற	27		

Koviloor Digital Library

தொடர் எண்	தலமும் பதிகத் தொடக்கமும்	பதிக எண்	தல எண்	பக்க எண்
73.	பூவணம்		50	167
	அறையார்	64		
74.	பேணு பெருந்துறை		36	151
	பைம்மா நாகம்	42		
75.	மயிலாடுதுறை		32	146
	கரவின்றி	38		
76.	மருகல் (செங் காட்டங்குடி)		6	105
	அங்கமும்	6		
77.	மறைக்காடு		20	128
	சிலைதனை	22		
78.	மாற்பேறு		51	168
	ஊறியார்	55		
	குருந்தவன்	114		
79.	முதுகுன்றம் (விருத்தாசலம்)		12	118
	மத்தாவரை	12		
	தேவராயும்	53		
	நின்றுமலர்	93		
	மெய்த்தாறு	131		
80.	வடுகூர்		73	199
	சுடுகூரெரி	87		
81.	வலிதாயம் (பாடி)		3	101
	பத்தரோடு	3		
82.	வலிவலம்		42	157

Koviloor Digital Library

தொடர் எண்	தலமும் பதிகத்தொடக்கமும்	பதிக எண்	தல எண்	பக்க எண்
	ஒல்லையாறி	50		
	பூவியல்புரி	123		
83.	வல்லம்		47	163
	எரித்தவன்	113		
84.	வாழ்கொளிபுத்தூர்		34	150
	பொடியுடை	40		
85.	வியலூர்		13	120
	குரவங்கமழ்	13		
86.	வீழிமிழலை		4	102
	சடையார்புனல்	11		
	அரையார்விரி	35		
	இரும்பொன்	82		
	வாசிதீரவே	92		
	அலர்மகள்	124		
	ஏரிசையும்	132		
	மைம்மரு (புகலி)	4		
87.	வேட்களம்		33	149
	அந்தமுமாதி	39		
88.	வேற்காடு		66	193
	ஒள்ளிதுள்	57		
	பொது			
	அவ்வினைக்	116		
	ஆக தலங்கள் 88, பதிகங்கள் 136, பாடல்கள் 1469.			

Koviloor Digital Library

உ

முதல் திருமுறையில் உள்ள
தலங்களின்
வரலாற்றுக் குறிப்புக்கள்

1. சீகாழி

தலம்:

சோழவள நாட்டில் காவிரி வடகரையில் அமைந்துள்ள 14 ஆவது தலம். நாகை மாவட்டத்தில் சீகாழி கோட்டத்தின் தலைநகர். மயிலாடுதுறை - சிதம்பரம் இருப்புப்பாதையில் இரயில் நிலையம், பேருந்து வசதிகள் உள்ள பெரிய ஊர்.


பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், புறவம், சண்பை, காளிபுரம், கொச்சைவயம், கழுமலம், சிரபுரம் என்ற பன்னிரண்டு திருநாமங்களையுடையது. இவற்றின் பெயர்க்காரணங்களைப் பதிகம் அறுபத்து மூன்றில் திருஞானசம்பந்த சுவாமிகளே எடுத்து விளக்கியுள்ளார்கள். அது 'பல்பெயர்ப்பத்து' என அமைக்கப்பெற்றுள்ளது. *திருக்கழுமல மும்மணிக்கோவை*யுள் 'வசை யில் காட்சி' என்னும் செய்யுளில் இப்பன்னிரண்டு பெயர்களும் பன்னிருயுகத்தில் வழங்கினவாகப் பட்டினத்தடிகளால் உணர்த்தப் பெறுகின்றது. இவையன்றி, சங்கநிதிபுரம் முதலாகப் பதினான்கு பெயர்களும் உள்ளனவாகத் தலபுராணம் சொல்லும்.

விசேடங்கள்:

புறவாழிக் கடல் பொங்கி எழுந்த பேரூழிக்காலத்தில் இறைவன் அறுபத்துநான்கு கலைகளையும் ஆடையாக உடுத்துப் பிரணவத் தோணியில் அம்மையப்பனாக எழுந்தருளி வரும்போது ஊழியிலும் அழியாத இத்தலத்தைக்கண்டு இதுவே மூலமென்றெண்ணித் தங்கினர்.

இங்கே ஒரு மலை உண்டு. இது இறைவன் ரோமச முனிவருக்காகத் திருக்கயிலைச் சிகரமொன்றைத் தென்திசையில் தோற்றுவித்து, தானும் அம்மையுமாக இருந்து காட்சி வழங்கும் இடம். இதனை 'இருபது பறவைகள் ஏந்திக்கொண்டிருக்கின்றன'. இங்கே குரு, லிங்க,

Koviloor Digital Library



சீகாழி, அருள்மிகு தோணியப்பர் விமானம்

Koviloor Digital Library



'அலையும் பெருவெள்ளத்து அன்றுமிதந்த தோணிபுரம்'

Koviloor Digital Library

சங்கமமாகிய மூன்று திருமேனியையும் வழிபடலாம். குருமூர்த்தம் தோணியப்பர்; இலிங்க மூர்த்தம் பிரமபுரீசர்; சங்கமமூர்த்தம் சட்டை நாதர். இதுவே திருஞானசம்பந்தப்பெருமான் அவதாரஸ்தலம்.

சுவாமிகளின் பெயர்கள்:

சுவாமி பிரமபுரீசுவரர்; அம்மை திருநிலைநாயகி. சுவாமி அம்மன் கோயில்களுக்கிடையில் ஞானசம்பந்தர் ஆலயம் இருப்பது சோமாஸ்கந்தர் நிலையை நினைவூட்டுவது. திருத்தோணிச் சிகரத் துள்ள இறைவர் பெரியநாயகர்; தோணியப்பர் எனவும் வழங்கப் பெறுவர். இறைவி பெரியநாயகி; திருஞானசம்பந்தப் பெருமானுக்குச் சிவஞானப்பால் அளித்தவர் இவரே.

தீர்த்தங்கள்:

பிரமதீர்த்தம், காளிதீர்த்தம், கழுமலநதி, விநாயகநதி, புறவ நதி முதலிய இருபத்திரண்டு தீர்த்தங்கள் உள்ளன.

வழிபட்டோர்:

முருகன், காளி,பிரமன், இந்திரன் முதலியோர். ஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், பட்டினத்து அடிகள், நம்பியாண்டார் நம்பிகள், சேக்கிழார், அருணகிரிநாதர் முதலியோர் போற்றியுள்ளனர். கணநாதநாயனார் அவதரித்த தலம். திருக்கயிலாய பரம்பரையில் வந்தருளிய அருள்நமச்சிவாயர், கங்கைமெய்கண்டார் சிற்றம்பலநாடிகள் முதலியோர் வாழ்ந்த தலம்.

விழாக்கள்:

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அர்த்தயாமத்தில் ஸ்ரீ சட்டைநாதருக்கு விசேஷ வழிபாடு நடைபெறும். சித்திரைமாதம் இறைவன் இறைவியர்க்குப் பெருவிழா நடைபெறும். அதில் இரண் டாந்திருநாள் திருஞானசம்பந்தருக்கு உமையம்மை அளித்தருளிய திருமுலைப்பால் திருவிழா. இவ்விழாக்களிற் பெரும்பாலன திருஞானசம்பந்தர் ஐதீகத்தை ஒட்டியனவேயாம்.

கல்வெட்டு:

இத்தலத்துக்கு நாற்பத்தேழு கல்வெட்டுகள் உள்ளன. இரண்டாங்குலோத்துங்கன் கல்வெட்டுமுதல் வேங்கட தேவராயர்

Koviloor Digital Library

கல்வெட்டுவரையில் பதின்மூன்றுக்கு மேற்பட்ட அரசர் பெருமக்க ளுடையனவாகக் காணப்படுகின்றன.

இக்கல்வெட்டுக்களால், இத்தலம் இராஜராஜவளநாட்டுத் திருக்கழுமலநாட்டுப் பிரமதேயம் திருக்கழுமலம் என்று பிரிவும் பெயரும் குறிக்கப்பெறுகின்றது. பிரமபுரீசுவரர் திருக்கழுமலமுடை யார், திருக்கழுமலமுடைய நாயனார் என்றும், தோணியப்பரும் அம்மையும் திருத்தோணிபுரமுடையார், பெரிய நாச்சியார் என்றும், சம்பந்தப் பெருமான் ஆளுடையபிள்ளையார் என்றும் குறிக்கப்பெறு கின் றார்கள்.

ஆளுடையபிள்ளையார் கோயிலில் ஆளுடையபிள்ளையார் வடிவத்தை எழுந்தருளச்செய்தவள் மூன்றாங்குலோத்துங்கனுடைய அடுக்களைப் பெண்டுகளிலே மூத்தவள் இராஜவிச்சாதரி என்பாள் என்பது குறிக்கப்பெற்றுள்ளது. இரண்டாம் இராஜராஜனது கல்வெட்டு, கங்கைகொண்டசோழ புரத்தானொருவன் ஆளுடையபிள்ளையார் திருக்கோயில் முதற் பிராகாரம் திருமதில் எடுக்கப் பொன் கொடுத்தான் என்கின்றது. கல்வெட்டொன்றில் திருநட்டப்பெருமான் ஆளுடைய பிள்ளையார் என வருவது சுட்டுவிரல் நீட்டிக் கூத்தாடுகின்ற குழந் தையாகிய ஞானசம்பந்தரைக் குறிப்பதாகலாம். பொத்தப்பிச் சோழன் என்பவன் வீரபாண்டியனை வென்று வெற்றிப்பரிசாக அங்கிருந்து நடராஜப்பெருமானைக் கொண்டுவந்து சீகாழியில் கொடுத்தான் எனத் தெரிகிறது. இங்கு, பொன்கொடுத்தும், நிலம்விட்டும் போற்றிய அரசர் கள் வீரராஜேந்திரன், குலோத்துங்கன் II, இராஜராஜன்II, இராஜாதிராஜன்II, குலோத்துங்கன்III, இராஜராஜன்III, கோப்பெருஞ்சிங்கன்III, வீரவிருப்பணமுடையான், வேங்கட தேவராயர், இராமப்ப நாயக்கன், ஆறனூர் இணைச்சியப்ப அகரவல்ல வன், விட்டலதேவன் முதலியோராவர்.

இத்தலம் தருமை ஆதீனத்தின் அருளாட்சியில உள்ள திருக் கோயில்களில் ஒன்றாகும்.

2. திருப்புகலூர்

தலம்:

சோழவள நாட்டில் காவிரித்தென்கரையில் அமைந்துள்ள 75 ஆவது தலம். நாகை மாவட்டத்தில் நன்னிலம் கோட்டத்தைச் சேர்ந்தது.

Koviloor Digital Library

நன்னிலம், சன்னாநல்லூர், நாகையிலிருந்து பேருந்து வசதிகள் உள்ளன. மயிலாடுதுறை - திருவாரூர் புகைவண்டி இருப்புப் பாதையில் நன்னிலம் இரயில் நிலையத்துக்குக் கிழக்கே 5 கி.மீ. தூரத்தில் உள்ளது.

புன்னாகவனம், சரண்யபுரம், ரத்தனாரண்யம் என்பன புராணங்களில் வழங்கும் மறுபெயர்கள். இத்தலத்தின் திருக்கோயில் நாற்புறமும் அகழிசூழ நடுவில் இருக்கிறது. அக்னி பகவான் பூசித்துப் பேறுபெற்ற தலம். திருநாவுக்கரசர் முத்தி பெற்ற தலம். முருக நாயனாருடைய அவதார ஸ்தலம். சுந்தரமூர்த்தி நாயனாருக்குச் செங்கல்லைப் பொன்னாக்கிய திருத்தலம். மேகங்கள் பூசித்த தலம்.

பெயர்கள்:

இறைவன் பெயர் அக்னிபுரீஸ்வரர்; இறைவி கருந்தாள் குழலியம்மை. இறைவன் திருநாமம் தேவாரங்களில் 'கோணப் பிரானைக் குறுகக் குறுகா கொடுவினையே' 'கருந்தாள் குழலியும் தாமும் கலந்து' என்பன அம்மையப்பர், திருநாமங்களை அறிவிக்கும் அகச்சான்றுகள்.

தீர்த்தம்:

அக்னிதீர்த்தம். இதற்குப் பாணதீர்த்தம் என்றும் ஒரு பெயருண்டு. முடிகொண்டான்ஆறு, கோயிலுக்குத் தென்பக்கத்தில் ஒடுகிறது.

தல விருட்சம்:

புன்னை. 'புன்னைப் பொழிற்புகலூர்', 'புன்நாகம் மணங்கமழும் பூம்புகலூர்' என்ற திருமுறைகள் இதற்கு மேற்கோள்.

விழா:

சித்திரைச் சதயத்தைப் பத்தாம் நாளாகக்கொண்டு விழா நடைபெறுகிறது. பத்துநாளிலும் அப்பர் சுவாமிகள் வரலாற்றை ஒட்டிய ஐதீகமே நினைவூட்டப்பெறுகின்றது. வைகாசி மாதம் பருவ இறுதியாகப் பிரமோற்சவம் நடைபெறுகிறது. சந்திரசேகரர் விசேஷமான மூர்த்தி.

வேளாக்குறிச்சி ஆதீனத்தின் பராமரிப்பில் உள்ளது. வர்த்த

Koviloor Digital Library

மானீச்சரம் இக்கோயிலுக்குள் உள்ளது.

கல்வெட்டு:

அரசாங்கத்தினர் படி எடுத்த கல்வெட்டுக்கள் 67. அவை இராஜராஜன் I (கி.பி.985-1014) காலத்திலிருந்து காணப்படுகின்றன. இரண்டாம் பிராகாரம் இராஜ ராஜன் I இராஜ இராஜேந்திரன் I இவர்கள் காலத்திற்குப் பிந்தியதாகும். இக்கோயில் அர்த்தமண்டபத்தைக் கட்டியவன் இறையூர் உடையான் அரையன் கங்கைகொண்டானான சோழ விச்சாதரப் பல்லவரையன். முதல் பிராகாரத்துத் தென்னந் திருவாயிலுக்கு ராஜராஜன் திருவாசல் என்று பெயர்.

கர்ப்பக் கிருகத்தைச் சுற்றியுள்ள நீராழிப்பத்தி மண்டபத்தைத் திருப்பணி செய்தவன் ஆர்க்காடு கிழான் சேதுராயன் என்பவன். இத் தலத்து 'நரலோக வீரன் திருமண்டபம்' என்ற ஒன்று இருந்ததாக ஒரு கல்வெட்டுக் கூறுகின்றது. சிதம்பரம் கோயில் கல்வெட்டில் நரலோகன் என்று கூறப்பட்டவன் கோப்பெருஞ்சிங்கன். அக்காலத்து நூற்றுக்கால் மண்டபம் அவனால் கட்டப்பெற்றது.

அதுபோல இத்தலத்தும் நூற்றுக் கால் மண்டபத்தை அவன் கட்டியிருக்கக்கூடும். திருமதில் திருப்பணி வேளாக்குறிச்சி மகாதேவ பண்டாரத்தின் சிஷ்யரான அருணாசலத் தம்பிரானால் செய்யப் பெற்றது. மூன்றாங்குலோத்துங்கன் காலத்திலும் இக்கோயில் அகழால் சூழப்பட்டிருந்தமை அறியலாம்.

இவ்வூர், முதல் இராஜராஜன் காலத்தில் க்ஷத்திரியசிகாமணி வளநாடு என்றும், மும்முடிச்சோழ வளநாடு என்றும் முதற்குலோத் துங்கன் காலத்திலும் அதற்குப்பின்பும், குலோத்துங்க சோழவள நாட்டைச் சார்ந்ததெனவும் கூறப்பெறுகிறது. இது பனையூர்நாட்டுப் பிரமதேயமான திருப்புகலூர் என வழங்கப்பெறுகிறது. இறைவன் கோணப்பெருமான் என்று குறிப்பிடப்பெறுகிறார். இங்குள்ள அம்பிகை நம்பிராட்டியார் என வழங்கப்பெறுகிறார்.

இராஜராஜன் காலத்தில் அம்மைக்கு நிவந்தங்கள் அளிக்கப் பெற்றன. திருநாவுக்கரசு நாயனார் குளிச்செழுந்த நாயனார் எனக் குறிக்கப்பெறுகிறார். இவருக்கு இராஜராஜன் காலத்தில் நித்திய பூசைக்கு ஏற்பாடு செய்யப்பெற் றிருக்கிறது. முருகநாயனார் திருமடம் நம்பிநாயனார் திருமடம் என்றும், திருநீலகண்ட யாழ்ப்பாணரைத் தருமபுரத்து நாயனார், யாழ்மூரி நாயனார் என்றும், திருநீலநக்க

Koviloor Digital Library

நாயனாரை நக்கநாயனார் என்றும் கல்வெட்டுகள் காட்டுகின்றன.

3. திருவலிதாயம்

தலம்:

தொண்டைநாட்டில் விளங்கும் தேவாரத் தலங்களில் 21வது தலம். சென்னைப் பெருநகரின் மேல்பால் உள்ளது. சென்னை மையப் பேருந்து நிலையத்திலிருந்து நகரப் பேருந்துகளில் செல்லலாம். இத்தலம் பாடி என இன்று வழங்குகிறது. பாரத்வாஜமகரிஷி, வியாழன், அநுமான் இவர்கள் வழிபட்டு முத்தி பெற்றதாகத் தல புராணம் கூறும். கஜப்பிரஷ்ட விமானம். சுவாமி பெயர் வலிதாய நாதர்; அம்மை பெயர் தாயம்மை; இங்கேயுள்ள கிணற்று நீர் மிக்க சுவையானது.

கல்வெட்டு:

இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டுக்கள் 14 உள்ளன. அவற்றில் சுவாமி பெயர் திருவலிதாயமுடைய நாயனார் என வழங்கப் பெறுகிறது. அம்மை பெயர் திருவீதி நாச்சியார் என்பது [1]. இன்ன அரசர் காலத்தது என்று அறியப் பெறாத கல்வெட்டு ஒன்று, திருவெண்காட்டி லிருந்து அழகிய திருச்சிற்றம்பலமுடைய நாயனாரை எழுந்தருள் வித்துப் பிரதிஷ்டை செய்து, அதனைப் பூசிக்க, அந்தணரையும் அங் கிருந்து குடியேற்றி, அவர்களுக்கும் உணவுக்காக ஜயங்கொண்ட சோழ மண்டலத்து, புலியூர்க்கோட்டமான சங்கமசோழவள நாட்டு அம்பத் தூர் நாட்டு திருவலிதாயத்தில் நிலம் விட்டதாகக் கூறுகிறது [2]. திருஞான சம்பந்த நாழி என்னும் மரக்காலால் நெல் அளந்து கொடுக்கும்படியும் எழுதியுள்ளது. திரிபுவன சக்ரவர்த்தியான இராஜராஜசோழன் தமது ஆட்சி 28ஆம் ஆண்டில் க்ஷேத்ரபாலப் பிள்ளையார் கோயிலையும் கட்டி, நிவேதனத்திற்காக நிலமும் விட்டான்[3]. விஜயகண்ட கோபால தேவர் என்பவர் காஞ்சிபுரத்திலிருந்து நடனமாதரைக் கொண்டுவந்து குடியேற்றினார். சுவாமிக்கும் அம்மை திருவீதி நாச்சியாருக்கும் ஆபரணங்களும், பாத்திரங்களும் வழங்கினார்[4]. இராஜராஜன் காலத் தில் சாளுக்கிய நாரணன் யாதவராயன் என்பவனால் பாடியைச் சேர்ந்த சிந்தாமணிபுரம் என்னும் இடத்தில் இருவீடுகளும் இரு நந்த வனங்களும் வழங்கப் பெற்றன. பரமேஸ்வரமங்கலத்துச் சிலம்பூர்

[1]-217 of 1910, [2]-214 of 1910, [3]-216 of 1910, [4]-217 of 1910,

Koviloor Digital Library

கோட்டத்துச் சிலம்பணிந்தான் மாதவராயனால் விளக்கிற்குப் பொன் வழங்கப்பெற்ற செய்தியும் அறியலாகும். [1] இவையன்றி, விளக்கு, உணவு முதலியவற்றிற்கு நிலமும் காசும் அளித்ததாக ஏனைய கல் வெட்டுக்கள் கூறுகின்றன.

4. திருவீழிமிழலை

தலம்:

சோழவளநாட்டில் காவிரித்தென்கரையில் விளங்கும் 61 ஆவது தேவாரத்தலம். நாகை மாவட்டம் நன்னிலம் வட்டத்தில் உள்ளது. மயிலாடுதுறை - திருவாரூர் இருப்புப்பாதையில் பூந் தோட்டம் இரயில் நிலையத்துக்கு மேற்கே 10 கி.மீ. தொலைவில் உள்ளது. திருவாரூர், மயிலாடுதுறை, கும்பகோணம் ஆகிய ஊர்களில் இருந்து பேருந்துகளில் செல்லலாம்.

இத்தலம் காத்தியாயன மகரிஷியின் யாகத்தில் தோன்றிய உமாதேவியாரைத் திருமணம் செய்துகொண்டு இறைவன் என்றும் மணக்கோலத்தோடும் இருக்கும் தலம். திருமால் சக்கரம் பெறும் பொருட்டு, நாள்தோறும் ஆயிரம் தாமரைப் பூவைக்கொண்டு அர்ச் சிக்க, ஒருநாள் ஒரு மலர் குறைய, அதற்காகத் தமது தாமரைமலர் போன்ற கண்ணைப் பிடுங்கி அர்ச்சித்துச் சக்கரம் பெற்றதலம். திருநாவுக்கரசு சுவாமிகளும் திருஞானசம்பந்த சுவாமிகளும் படிக்காசு பெற்றுப் பஞ்சம் போக்கியதலம். இத்தலத்து வடக்குவீதியில் அப்பர் சம்பந்தர் திருமடங்கள் தனித்தனியே இருக்கின்றன. மூவர் அருளிய தேவாரமும், சேந்தனார் பாடிய திருவிசைப்பாவும், அருணகிரி நாதரின் *திருப்புகழும்* உள்ளன.

விமானம்:

விண்ணிழி விமானம். இது விஷ்ணுவால் தாபிக்கப் பெற்றது. மூலத்தானத்துக்குப் பின் பார்வதி பரமேசுவரரது திரு உருவங்கள் உள்ளன. இங்குக் காழிக்கோலத்தைச் சம்பந்த மூர்த்திக்கு இறைவன் காட்டியருளினார்.

[1]-218 , 219 of 1910.

Koviloor Digital Library

விழா:

சித்திரைத்திங்களில் பெருவிழா நிகழும். மணக்கோலத் திருவிழா இங்கு சிறப்பாக நடைபெறுகிறது. மணவாளப் பெருமான் திருவடியில் திருமால் கண்ணைப் பறித்து அர்ச்சித்தஅடையாளம் இன்றும் இருக்கிறது. சுவாமி நேத்திரார்ப்பணேசர்; வீழியழகர் எனவும் வழங்கப் பெறுவர். அம்மை சுந்தரகுசாம்பிகை.

தீர்த்தம்:

விஷ்ணு தீர்த்தம்.

தலவிருட்சம்:

வீழிச்செடி.

கல்வெட்டு:

இத்தலத்திலுள்ள கல்வெட்டுக்கள் 68. வீழிமிழலை என்றே இத்தலம் வழங்கப்பெறுகின்றது. முதற் குலோத்துங்கன் காலத்து உலகுய்யக்கொண்ட சோழவளநாட்டு வேணாட்டுப்பிரமதேயம் திருவீழிமிழலை என வழங்கியது. சுவாமி பெயர் வீழிநாதர், வீழி மிழலைநாதர் என்பன. கோயில் பிராகாரத்தில் சிலரால் பிரதிட்டை செய்யப்பெற்ற நின்றருளிய நாயனார், நெறிவார்குழலி நாச்சியார், திருவேட்டீஸ்வரமுடைய மகாதேவர், திருவேகம்பமுடையார்[1], பார்வதீஸ்வரமுடையார்[2], திருத்தண்டூன்றிய மகாதேவர்[3] கோயில் களும் பிரதிட்டிக்கப்பெற்ற இடங்களும் குறிக்கப்பெறுகின்றன. அம்மை, காமக்கோட்டம் உடைய நாச்சியார் என்று அழைக்கப் பெறுகிறார். திருஞானசம்பந்தருக்கும், திருநாவுக்கரசருக்கும், மாணிக்கவாசகருக்கும் தனித்தனி ஆலயங்கள் அமைந்திருந்தன. முன்னிருவருடைய மடங்களும் வடக்குவீதியில் இருந்தன என்பதும் அறியக் கிடக்கின்றன[4].

ஆதித்தன் மகனாகிய முதற்பராந்தகன் காலத்திலிருந்து பதி னொரு சோழமன்னர்களின் காலத்துக் கல்வெட்டுக்களும், சடாவர்மன் சுந்தரபாண்டியன், வீரபாண்டியதேவன் கல்வெட்டுக்களும் விஜயநகர

[1]-417 of 1908, [2]-418 of 1908, [3]-436 of 1908, [4]-392 of 1928.

Koviloor Digital Library

பரம்பரையைச்சேர்ந்த விருப்பண்ண உடையார் கல்வெட்டு ஒன்றும், பெயரறியப்பெறாதன பதினான்குமாக அறுபத்தெட்டுக் கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றுள் இராஜேந்திர சோழன் திருவீழிமிழலை வடக்கு வீதியிலுள்ள திருநாவுக்கரசர் திருமடத்திற்கு நிலம்விட்ட செய்தி அறியப்படுகிறது [1]. மூன்றாம் இராஜராஜன் திருவீழிமிழலைக் கோயில் மூன்றாம் பிராகாரத்தில் திருவாதவூரர் மாணிக்கவாசகர் படிமத்தைப் பிரதிஷ்டை செய்தான்[2]. சடாவன்மன் சுந்தரபாண்டிய தேவன் திருக்கை கொட்டித் திருப்பதியம் விண்ணப்பிக்க ஏற்பாடு செய்தான்[3]. முதல் இராஜராஜ சோழன் காலத்தில் ஐப்பசி ஓணத் திருவிழா தரிசனத்திற்காக வரும் அன்பர்களுக்கு அன்னம் வழங்கக் காசு அளிக்கப்பட்ட செய்தியும் இவ்விழா மிகச் சிறப்பாக நடை பெற்றமையும் அறிவிக்கும்[4]. முதற் குலோத்துங்கன் தமது ஆட்சி முப்பத்து நான்காம் ஆண்டில் சண்டேஸ்வரப் பிரதிஷ்டை செய்வித்து நித்திய பூசைக்கு ஏற்பாடு செய்தான்[5]. சிறந்த செய்தியொன்று வாணியின் பாதனான அரிகுல கேசரி விழுப்பரையனால் 'ஸ்ரீ காலகாலன்' என்னும் வாள், வீழிமிழலை நாதர்க்கு வழங்கப்பெற்றது[6].

மாப்பிள்ளைச்சாமி எனப்பெறும் மணவாளத் திருக்கோலப் பெருமான் அழகிய மணவாளப்பெருமான் என்று குறிக்கப் பெறுகின் றார். இந்த மூர்த்தியையும், இராஜேந்திர சோழ அணுக்கப் பல்லவரை யர் புதுக்கிப் பிரதிட்டை செய்ததாகத் தெரிகிறது.[7]

திருவாவடுதுறை ஆதீன அருளாட்சிக்கு உட்பட்டது

5. கீழைத்திருக்காட்டுப்பள்ளி

தலம்:

சோழநாட்டில் காவிரிவடகரையில் விளங்கும் 12 ஆவது தேவாரத்தலம். நாகைமாவட்டம் சீகாழி வட்டத்தில் உள்ளது. பூம்புகாருக்கு வடமேற்கில் திருவெண்காட்டுக்கு மேற்கே 2 கி.மீ தூரத்தில் உள்ளது. திருவெண்காடுவரை பேருந்து வசதிஉள்ளது. விருத்திராசுரனைக் கொன்ற பழி நீங்கத் தேவேந்திரன் பூசித்துத் தேவலோக ஆட்சியை மீண்டும் பெற்றதலம். இதனை 'இமையோர் பெருமான் நுண்ணறிவால் வழிபாடுசெய்யும்' என இத்தலப்பதிகம் நான்காம் பாடல் தெரிவிக்கின்றது. நண்டு பூசித்த விநாயகர் சந்நிதி

[1]-402 of 1908, [2]-409 of 1908, [3]-414 of 1908, [4]-422 of 1908, [5]-427of 1908, [6]-438 of 1908. [7]-444 of 1908.

Koviloor Digital Library

இருக்கிறது. சுவாமி பெயர் ஆரணியசுந்தரர்; இறைவி பெயர் அகிலாண்டநாயகி. தீர்த்தம் காவிரி.

இத்தலத்தைப்பற்றிக் கல்வெட்டு ஒன்றும் இருப்பதாக அறியக் கூடவில்லை.

6. திருமருகல்

தலம்:

சோழநாட்டுக் காவிரித்தெனகரைத்தலங்களில் 80ஆவது தலம் நாகைமாவட்டம் நன்னிலம் வட்டத்தில் உள்ளது. நன்னிலம், நாகை, திருவாரூர், மயிலாடுதுறைகளிலிருந்து பேருந்துகளில் செல்லலாம். மருகல் என்பது ஒருவகை வாழை. இது கல்வாழையெனவும் வழங்கு கின்றது. கருங்கல் தளத்திலேயே வளர்வதால் இப்பெயர்த்தாயிற்று என்கின்றார்கள். அதன் பழத்தை இறைவனுக்கு நிவேதிக்கலாமே யன்றி மக்கள் உண்ணல் ஆகாது; உண்டால் வயிற்றுநோயுண்டாகும் என்பது அவ்வூர்மக்கள் வாய்மொழி. ஆனால் எப்போதும் காய் இருக்குமாம். இந்த வாழை தலவிருட்சமாதலின் இத்தலத்திற்கு இப்பெயர் வந்தது. கோச்செங்கட் சோழநாயனார் எழுப்பிய எழுபது மாடக்கோயில்களில் இதுவும் ஒன்று. யானையேறாப் பெருங்கோயில்.

பாண்டியநாட்டு வணிகனாகிய தாமன் என்பவன் தன் மக்கள் எழுவரில் ஒருத்தியைத் தன்மருமகனுக்குக் கொடுப்பதாக வாக்களித் தான். அவர்களுக்குப் பருவம் வந்தகாலத்து ஒவ்வொருத்தியாகப் பிறருக்கு மணம் செய்துகொடுத்தான். அதனை உணர்ந்த ஏழாமவள் தாய்தந்தையர் அறியாமல் தன் நன்மாமனோடு உடன்போக்கு நிகழ்த்தினாள், திருமருகலையடைந்து ஒரு திருமடத்தில் இராத்தங்கி னாள், அன்றிரவு அந்தச் செட்டி குமரனை வினைவயத்தால் பாம்பு தீண்டியது. அவன் இறந்தான். அவள் இறைவனைநோக்கி முறை யிட்டுப் புலம்பினாள். சுவாமி தரிசனத்திற்காகவந்த திருஞானசம்பந்த சுவாமிகள் திரு உள்ளத்தை இவள் அழுகை ஒலி அருள்சுரக்கச் செய்தது. சுவாமிகள் திருப்பதிகம் பாடி அவனை எழுப்பினார். தம் திருமுன்பே அவர்களுக்குத் திருமணம் முடிப்பித்தார் என்பது இத் தலத்தைப்பற்றிய சிறந்த நிகழ்ச்சி.

இறைவன் மாணிக்கவண்ணர். இறைவி வண்டுவார்குழலி. தலவிருட்சம் வாழை. தீர்த்தம் மாணிக்க தீர்த்தம். இது கோயில்

Koviloor Digital Library

சந்நிதியிலேயே இருக்கிறது. கிழக்குப்பார்த்த சந்நிதி. அம்மன் சந்நிதிக்கு எதிரில் விஷந்தீர்த்த பிள்ளையார்கோயில் இருக்கிறது.

இடம்:

நன்னிலம் இரயில் நிலையத்திலிருந்து கிழக்கே ஏழு கி.மீ. தூரமுள்ள திருப்புகலூரையடைந்து, அங்கிருந்து மட்சாலை வழியாகக் கிழக்கே ஐந்து கி.மீ. சென்றால் இத்தலத்தை அடையலாம்.

கல்வெட்டு:

அறியக்கூடவில்லை.

7. திருச்செங்காட்டங்குடி

தலம்:

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம், நாகைமாவட்டம் நன்னிலம் வட்டத்தில் உள்ளது. திருவாரூரிலிருந்து பேருந்து வசதி உள்ளது. விநாயகப்பெருமான் கஜமுகாசுரனைக் கொன்றகாலத்து அவன் உடலினின்றும் பெருகிய இரத்தவெள்ளத்தால் இவ்விடம் முழுதும் செந்நிறமாயிற்று. ஆதலால் இத்தலம் செங்காடு, செங்காட்டங்குடி எனப் பெயர்பெற்றது. விநாயகப்பெருமான் கயமுகனைக் கொன்ற கறை நீங்கச் சிவலிங்கப்பெருமானைத் தாபித்து வழிபட்டார். அதனால் 'கணபதீச்சரம்' எனத் திருக்கோயில் வழங்கப்பெறுவதாயிற்று. இவ்வரலாற்றைக் *கந்தபுராணத்து*,

ஏடவிழ் அலங்கல் திண்டோள் இபமுகத் தவுணன் மார்பில்
நீடிய குருதிச் செந்நீர் நீத்தமாய் ஒழுகும் வேலைப்
பாடுற வருங்கான் ஒன்றிற் பரத்தலின் அதுவே செய்ய
காடெனப் பெயர்பெற் றின்னுங் காண்டக இருந்த தம்மா!

மீண்டும்செங் காட்டில் ஓர்சார் மேவிமெய்ஞ் ஞானத்தும்பர்
தாண்டவம் புரியுந் தாதை தன்னுருத் தாபித் தேத்திப்
பூண்டபேர் அன்பிற் பூசை புரிந்தனன் புவியு ளோர்க்குக்
காண்டகும் அனைய தானம் கணபதீச் சரம தென்பர்.

என்ற செய்யுட்களான் அறியலாம்.

Koviloor Digital Library

மிகப் பழமையான திருவாத்திவிருக்ஷம் ஒன்று, எழுநதருள் நாயகர் திருமுன்பு இருக்கின்றது. பிராகாரத்தின் கீழ்ப்பக்கத்தில் இத்தலத்து வாழ்ந்த சிறுத்தொண்டர், திருவெண்காட்டு நங்கை, சீராளன், சந்தன நங்கை இவர்கள் திருவுருவங்கள் இருக்கின்றன. சிறுத்தொண்டர், உத்தராபதியினின்றும் வந்த பைரவ வேடம் தாங்கிய பரமனுக்குத் தம்மகன் சீராளனையே கறிசமைத்திட்டு முத்தியடைந்தனர் என்பது வரலாறு. இந்த அடியார் பெருமகனார், திருஞானசம்பந்தப் பெருமானும், அப்ப மூர்த்திகளும் எழுந்தருளியகாலத்து அவர்கள் நட்பைப்பெற்று அவர்கள் பதிகத்துச் சிறப்பிக்கப்பெறும் தகுதியைப்பெற்றவர். சித்திரைப் பூர்ணிமையில் சிறுத்தொண்டர் திருவமுதுபடைத்த திருவிழா நடைபெறும். அமுதுபடையல் என்றே அது வழங்குகிறது.

இறைவன் - கணபதீச்சரத்தார். இறைவி - திருக்குழல் நன்மாது. விருட்சம் - திருவாத்தி. தீர்த்தம் - சூர்யதீர்த்தம். பைரவ கோலத்துடன் உத்திராபதியார் எழுந்தருளியிருக்கிறார்.

கல்வெட்டு:

முதலாம் இராஜராஜன் முதலாக ஏழு சோழ அரசர் காலத்தனவும், பராக்கிரம பாண்டியன் காலத்ததும், வீரவிருப்பண்ண உடையார் முதலிய இரு விஜயநகர அரசர்கள் காலத்தனவும் ஆகிய கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றால் அறியப் பெறும் சில உண்மைகள்: இத்தலம் கயாமாணிக்க வளநாட்டு மருகல்நாட்டுத் திருச்செங்காட்டங்குடி என வழங்கப் பெறுகின்றது. முதல் இராஜராஜன் காலத்திய கல்வெட்டு[1] மும்முடிச்சோழ வளநாட்டு மருகல்நாட்டுத் திருச்செங்காட்டங்குடி எனக் காட்டுகிறது.

இறைவன் கணபதீச்சரமுடைய நாயனார்[2] கணபதீச்சரமுடைய நாயர் எனவும், பைரவமூர்த்தி உத்திராபதி நாயகர் எனவும், சீராளர் சீராள தேவர் எனவும், சிறுத்தொண்டர் ‘சிறுத்தொண்ட நம்பி’ எனவும்,[3] விநாயகப்பெருமான் வாதாபி கணபதி[4] எனவும் குறிக்கப் பெறுகின்றனர்.

சித்திரைமாதத் திருவாதிரையில் சீராளதேவர்க்குத் திருவிழா நடந்ததாக முதல் இராஜராஜன் காலத்துக் கல்வெட்டுக்[5] கூறுகிறது. மூன்றாங் குலோத்துங்கன் காலத்தில் சிறுத்தொண்டர் மடத்திலிருந்து

[1]-57 of 1913, [2]-51 of 1913, [3]-71 of 1913, [4]-72 of 1913, [5]-57 of 1913.

Koviloor Digital Library

சீராளப்பிள்ளையை எழுந்தருள்வித்த செய்தி தெரிகிறது[1] .உத்தராபதி நாயனாருக்குச் சித்திரா பௌர்ணிமையில் விழா நடந்தமையை மூன்றாம் இராஜராஜன் கல்வெட்டுத் தெரிவிக்கிறது. ஒவ்வொரு மாதமும் பரணி விசேடமாகக் கொண்டாடப் பெற்றமை மற்றொரு கல்வெட்டுக் காட்டும்[2]. இந்த விழாவிற்கு விடப்பட்ட நிலம் 'திருவோட்டுக் கட்டளை' என வழங்கப்பெற்றமை அறிந்து இன்புறுக. சித்திரை, ஐப்பசிப் பரணிகள் மிக விசேஷமானவை; ஆதலால் இவ்விழாவைக் கொண்டாட, கி.பி.1245-67-இல் வாழ்ந்த மூன்றாம் இராஜேந்திரன் நிலம்விட்டான்[3]. மூன்றாம் இராஜராஜன் ஆட்சி 24-ஆம் ஆண்டில் அரசகாரியம் பார்ப்பவனான அரசூர் உடையார் திருச்சிற்றம்பலம் உடையானான திருச்சிற்றம்பலம் உடைய பல்லவராயன்; உத்தராபதியார் சித்திரா பௌர்ணிமை விழாவிற்கு எழுந்தருளும்போது திருமுத்துவிதான நெறியில் உணவளிக்க ஏற்பாடு செய்தமை ஒரு கல்வெட்டால் அறியப்படும்[4]. மற்றும் சீராளதேவர் விழாவிற்கு வேளாளன் உலகஞ் சிறியவனான தாப்பிள்ளை மூவேந்த வேளாளனும்[5], விழாவிற்கு வரும் அடியார்களுக்கு அமுதுபடிக்காகத் தாயன் சிற்றம்பல முடையானும்[6] நிவந்தம் அளித்தார்கள். விளக்கிற்கும், நிவேதனத்திற்குமாக மற்றும் பலர் வழங்கியிருக்கின்றனர்.

8. திருவாலவாய் (மதுரை)

தலம்:

பாண்டிநாட்டின் தலைநகர் தமிழகத்தின் அனைத்துப் பெரு நகர்களிருந்தும் இரயில், பேருந்துகளில் செல்லலாம்.

இத்தலத்திற்கு மதுரை, நான்மாடக்கூடல், திருவாலவாய், கடம்பவனம், துவாதசாந்தபுரம், பூலோக கயிலாயம், சிவராஜதானி, கன்னிபுரீசம், ஜீவன்முத்திபுரம், சிவநகரம் எனப் பல பெயர்கள் தலபுராண நூல்களிற் கூறப்பெற்றுள்ளன. இது பாண்டிய நாட்டின் தலைநகரம். கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்த தலைநகர். சொக்கலிங்கப்பெருமான் 64 திருவிளையாடல்களை இயற்றிய தனி நகரம். மூர்த்தி நாயனார் விபூதி உருத்திராக்கம் சடைமுடி என்ற மூன்றனையும் துணைக்கொண்டு மும்மையா லுலகாண்ட தலைநகரம். சைவங்காத்த திருஞானச் செம்மலும், மங்கையர்க்கரசியாரும், குலச்சிறையாரும், நெடுமாறநாயனாரும் எழுந்தருளிய இடம். இந்திரன், வருணன்,

1-66 of 1913 2-71 of 1913, 3-77 of 1913,
4-69 of 1913, 5-56 of 1913, 6-58 of 1913.

Koviloor Digital Library

முருகன், விநாயகர் முதலிய தேவர்கள் வழி பட்டுப் பேரின்பம் எய்திய தலம். மணிவாசகப் பெருந்தகை மந்திரியாக இருந்து, வாசகத்தேனை வடித்தெடுத்த திருப்பதி. தருமை ஆதீன முதற்பெருங் குரவர் குருஞானசம்பந்த சுவாமிகள் சொக்கலிங்கப் பெருமானைப் பெற்ற இடம். இவர் திருவுருவம் சொக்கநாதர் சந்நிதிக் கோபுரவாயில் குடவறையில் உள்ளது. குமரகுருபர சுவாமிகள் *மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்* பாட, அம்மையே இருந்து அதனைக் கேட்கும் ஏற்றம்பெற்ற இடம்.

திருஞான சம்பந்தப்பெருமான் ‘கூடலாலவாய்’ ‘மதுரையால வாயிலாய்’ எனக் குறிப்பதால் கூடல் மதுரை என்பன தலப்பெய ராகவும் ‘ஆலவாய்’ என்பது கோயிற்பெயராகவும் இருக்கலாமோ என ஐயுற இடமுண்டு. இறைவன் சொக்கலிங்க மூர்த்தி. அம்மை மீனாட்சி யம்மை. தலவிநாயகர் சித்திவிநாயகர். தலவிருட்சம் கடம்பமரம். தீர்த்தம் பொற்றாமரை. எழுகடல், வையை முதலியனவும் உள்ளன. விமானம் விண்ணிழி விமானமாகிய இந்திரவிமானம். இதனை இந்திரன் கொண்டுவந்து வைத்துச் சோமசுந்தரக்கடவுளைப் பூசித் தான். இவ்விமானம் எட்டு யானைகளால் தாங்கப்பெறுவது. மன்று - வெள்ளிமன்று; இரசதசபை என வழங்கும். இங்கே இராசசேகர பாண்டியன் வேண்டுகோளுக்காகப் பெருமான் இடது காலையூன்றி வலது காலைத்தூக்கி மாறியாடினார்.

மண்டபம்:

‘மண்டபங்கள் நாயன்’ என்பது. இதனைச் சாலிவாகனசகம் 1448-இல் சென்னப்ப நாயகர் என்பவர்`திருப்பணி செய்வித்தார். இன்னும் சுவாமிகோயிலில் அர்த்த மண்டபம், மகா மண்டபம், மணிமண்டபம், அறுகாற்பீடம் முதலியன இருக்கின்றன. இவற்றைக் கட்டுவித்தவன் குலசேகர பாண்டியன். மீனாட்சியம்மன் சந்நிதியில் அஷ்டசித்தி மண்டபம், மீனாட்சி நாயக்கர் மண்டபம் முதலிய மண்டபங்கள் இருக்கின்றன. இவையன்றிக் கல்யாணமண்டபம், ஆயிரங்கால் மண்டபம், வீரவசும்புரானா மண்டபம், ஆடிவீதி நிருதிவீதி மண்டபம், சம்பந்தர் மண்டபம், அறுபத்துமூவர் மண்டபம் முதலியனவும் விளங்குகின்றன. அவற்றுள் ஆயிரங்கால் மண்டபம் சகம் 1494-இல் அரசாண்ட கிருஷ்ண வீரப்ப நாயக்கரது திருப்பணி என்று சொல்லுகிறார்கள். சொக்கநாதப் பெருமான் கோயிலின் திருவாயில் முத்தளத்தின் திருவாயில் என்று சொக்கநாதர் உலா கூறுகிறது.

Koviloor Digital Library

சொக்கலிங்கப் பெருமானுக்கு அட்டாலைச் சேவகன், அடியார்க்கு நல்லான், அதிரவீசி ஆடுவான், அபிடேகச் சொக்கன், பண்ணிசைச் சொக்கன் முதலான பலபேர்கள் வழங்குகின்றன. அம்மைக்கு அபிஷேகவல்லி, அங்கயற்கண்ணி, தமிழ் அறியும் பெருமாட்டி முதலிய பல நாமங்கள் உள்ளன.

கல்வெட்டு:

மதுரை தொன்றுதொட்டே வரலாறுடைய தலம். கி.மு.302-இல் பாடலிபுரத்தில் அரசாண்ட சந்திரகுப்தன் அவையில் செலுக்கஸின் தூதனாகவந்த மெகஸ்தனிஸ் பாண்டியநாட்டையும் மதுரையையும் குறிப்பிடுகிறார். கி.பி.140-இல் தாலமியும் குறிப்பிடுகிறார். சங்க இலக்கியங்கள் மதுரையின் இயற்கை வளத்தை எடுத்து இயம்புகின்றன. உலகப் பொதுநூலாகிய *திருக்குறள்* அரங்கேறிய இடமும் இதுவே. முதலாம் நெடுஞ்செழியன் முதல் பல பாண்டிய மன்னர்களினுடைய நிகழ்ச்சிகள் குறிக்கப்பெறுகின்றன.

இத்தலத்தைப்பற்றிய கல்வெட்டுக்களாக சுந்தரேஸ்வரஸ்வாமி கோயிலிலும், மதனகோபால சுவாமி கோயிலிலும், கூடலழகர் கோயிலிலுமாக முப்பத்தைந்து கல்வெட்டுக்கள் உள்ளன. 17-இல் தாம்பிர சாஸனங்கள் உள்ளன. அவற்றுள் 36 of 1908 கல்வெட்டு பெருமாள் கோயிலில் உள்ளது. 557 முதல் மூன்று கல்வெட்டுக்கள் கூடலழகர் கோயிலைப்பற்றியன. செப்புப் பட்டயங்களில் 6, அந்தணர் களுக்கும் பூந்தோட்டத்துக்குமாக கிருஷ்ணப்பநாயக்கர் ராணி ரங்கம்மாள் இவர்கள் நிலம் அளித்தமையை அறிவிக்கின்றன. 6 செப்புப் பட்டயங்கள் சேது மன்னர்கள் செய்த அறச்செயல்களை அறிவிப்பன. ஏனையன சுந்தரேஸ்வரர் கோயிலுக்கும் மீனாட்சி யம்மை கோயிலுக்கும் செய்த பல பணிகளை அறிவிக்கின்றன. ஜடாவர்மன் குலசேகர பாண்டியன், மாறவர்மன் சுந்தரபாண்டியன், பராக்கிரம பாண்டியன், வீரபாண்டியன், ஸ்ரீ வல்லபன் முதலிய பாண்டிய மன்னர்கள் திருக்கோயிலுக்கு நிலம் அளித்ததையும் வரி தள்ளுபடி செய்ததையும், வரி வசூலித்துக் கொள்ள உரிமை அளித்ததையும் அறிவிக்கின்றன. 507 of 1907 கல்வெட்டில் ஸ்ரீ வல்லபதேவன் காலத்தில் சோமசுந்தரப் பெருமாளுக்கு இருசந்தியிலும் ஏற்பித்தருள நந்தவனம் அமைத்த செய்தி அறிவிக்கப்படுகின்றது. இவள் ஏழுலகம் முழுதுடையாள் எனவும் வழங்கப்படுகிறாள். கி.பி.1572 முதல் 1595 வரை அரசாண்ட வீரப்ப நாயக்கர் கம்பத்தடி மண்டபத்தைக்கட்டினார் (35 of 1908). ஒரு செப்புப் பட்டயம் ஞானக்கூத்தரான சத்தியஞான

Koviloor Digital Library

தரிசினிமடத்துக்கு நிலம் விட்டதையும், (160) கல்வெட்டு ஆமர்த்த மடம் நந்தி கேஸ்வர சந்தானம் சைவ ஆச்சார்யரான ஞானமூர்த்திக்கு மேலக்குடி நாட்டு வடகரை வாரணவாசி பட்டணத்து அண்ணன் விழுப்பாதராசன் மனம் பிரியான் மடம் என ஒன்றைக் கட்டிப் பத்துமா பூதானம் வழங்கினான் என்ற செய்தியையும் குறிக்கிறது. நரலோக சூரியன் திருமடம் என்றும், அன்னதான மடம் என்றும் சில மடங்களின் பெயர்கள் குறிக்கப்படுகின்றன.

9. திருநள்ளாறு

தலம்:

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம், நாகைமாவட்டத்தில் காரைக்காலை அடுத்துள்ளது. பேரளம், காரைக்கால், கும்பகோணம், மயிலாடுதுறை, நாகை ஆகிய ஊர்களிலிருந்து பேருந்து வசதி உள்ளது. இது அரசிலாற்றுக்கும் வாஞ்சநதிக்கும் நடுவில் இருப்பதால் நள்ளாறு என்று அழைக்கப்படுவதாயிற்று. தர்ப்பாரணியம், நகவிடங்கபுரம், நளேசுரம் என்பன இதன் மறு பெயர்கள். இது சப்த விடங்கத் தலங்களுள் ஒன்று. நளன் வழிபட்ட தலம்.

இறைவன்பெயர் நள்ளாறர்; இறைவிபெயர் போகமார்த்த பூண்முலையம்மை; விநாயகர் கற்பகவிநாயகர், சொர்ணவிநாயகர், தியாகர் நகவிடங்கத் தியாகர்; அம்மன் நீலோற்பலாம்பாள்; நடனம் உன்மத்த நடனம். இத்தலத்தில் சனிபகவான் சந்நிதி மிகச் சிறப்புடையது.

10. திருஆவூர்ப்பசுபதீச்சரம்

தலம்:

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். தஞ்சைமாவட்டம் கும்பகோணத்திற்கு அருகில் உள்ளது. கும்பகோணத்திலிருந்து பேருந்து வசதிஉள்ளது. இப்பெயரமைப்பால் தலத்தின் பெயர் ஆவூர் என்பதும், கோயிலின் பெயர் பசுபதீச்சரம் என்பதும் அறியலாம். இந்திரன், சப்தரிஷிகள், பசுக்கள் பூசித்த தலம். சுவாமிபெயர் பசுபதீசர்.

Koviloor Digital Library

அம்மைபெயர் மங்களநாயகி. தீர்த்தம் பிரமதீர்த்தம்.

கல்வெட்டு:

அரசாங்கத்தாரால் படியெடுக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று கர்ப்பக்கிருகத்துக்கு மேல்தளம் அடிப்பக்கத்தில் இருக்கின்றது. திரிபுவனச் சக்கரவர்த்தியான மூன்றாம் இராஜேந்திர சோழதேவன் மூன்றாம் ஆட்சி ஆண்டில் நித்தவினோத வளநாட்டு ஆவூர்க்கூற்றத்துப் பசுபதீஸ்வரமுடையார் கோயிலுக்கு நிலங்கள் அளித்தமையைத் தெரிவிக்கிறது[1].

11. திருவண்ணாமலை

தலம்:

நடுநாட்டுத் தலம். புகழ்பெற்ற தமிழக நகரங்களில் ஒன்று. விழுப்புரம் - காட்பாடி வழியில் இரயில் நிலயம். அனைத்து நகரங்களிலிருந்தும் பேருந்துகள் உள்ளன. நினைக்க முத்திகிடைக்கும் தலம். இது வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலை கோட்டத்தின் தலை நகரம். சூரியன், பிரதத்தராஜன், அஷ்டவசுக்கள், பிரமதேவன், சந்திரன், திருமால், புளகாதிபன் முதலியோர் பூசித்துப் பேறுபெற்ற தலம். வித்தியாதரர்களாகிய இருவர் ஒரு ரிஷியின் சாபத்தால் பூனையாகவும் குதிரையாகவும் இருந்த நிலை இத்தலத்தை வலம் வந்தமையின் மாறின.


இறைவன்பெயர் அண்ணாமலைநாதர்; அருணாசலேசுவரர் என்றும் கூறுவர். இறைவிபெயர் உண்ணாமுலையம்மை; அபீதகுஜாம்பாள் என்றும் கூறுவர். விநாயகர் பெயர் ஸ்ரீ சம்பந்தவிநாயகர்; முக்குறுணி விநாயகர் என்றுங் கூறுவர். தலவிருட்சம் மகிழமரம்.

தீர்த்தம்:

கோயிலுக்கு உள்ளும் வெளியிலும் மலைப்பகுதியிலுமாக 360 தீர்த்தங்கள் உள்ளன. சிறந்தவை சிவகங்கையும், பிரம தீர்த்தமும், மலைப்பகுதியிலுள்ள அக்னிதீர்த்தமும், இந்திர தீர்த்தமும் ஆகும். இந்திர தீர்த்தத்தில் தெப்ப உற்சவம் நடைபெறும்.


[1]-181 of 1911.

Koviloor Digital Library




திருமருகலில் விடம் தீர்த்தது (தலம் 6)

Koviloor Digital Library



மயிலாடுதுறை: அருள்மிகு மாயூரநாதர் கோயில், முன்கோபுரம் (தலம் 32)



திருநின்றவூர்: அருள்மிகு லக்ஷ்மிபுரீஸ்வரர் கோயில் (தலம் 18)

Koviloor Digital Library

இத்தலத்தில் நடைபெறும் பெரியவிழா கார்த்திகைத் திருவிழாவாகும். இது கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நாளைத் தீர்த்தமாகக் கொண்டு நடைபெறும். சித்திரைமாதத்தில் சித்திரைநட்சத்திரத்தைத் தீர்த்தமாகக் கொண்டு பிரமோற்சவமும், பங்குனி உத்திரத்தில் திருக்கல்யாணமும் ஆறுநாள் விழாவும், மாசிமகத்தில் வல்லாளன் திருவிழாவும், தைமாதம் திருவூடல் விழாவும், ஆனி விழாவும், ஆடியில் அம்பிகைவிழாவும், பவித்ரோற்சவம், நவராத்திரி, கந்தசஷ்டி, திருவெம்பாவை உற்சவம், திருவாதிரை முதலியனவும் சிறப்பாகக்கொண்டாடப் பெறுகின்றன.

அயனும் மாலும் அகந்தைகொண்டு, அடிமுடிதேட அன்னமும் வராகமுமாக மாறித் தேடி அயற்சி அடைந்தாராக, அக்கினி வடிவாய் நின்று அருள்செய்தவர் அண்ணாமலைநாதர். முருகன் தாருகனை வதஞ்செய்து வணங்கிச்சென்ற தலம் பலவற்றுள் இதுவும் ஒன்று. சம்பந்தர், அப்பர், மணிவாசகர் இம் மூவராலும் பாடல் பெற்றது. சுந்தரர் பாடியதாகப் பாடல் இல்லையாயினும் சேக்கிழார் வரலாற்றால் ஊகிக்கவேண்டியுள்ளது. நக்கீரர், பரணர், கபிலர், பட்டினத்தார் ஆகிய இந்நால்வரும் அண்ணாமலையைப் பற்றிப்பாடிய பாக்கள் பதினொராந்திருமுறையில் உள்ளன. வச்சிராங்கதன் என்னும் பாண்டியன் தினமும் வலம்வந்து திருப்பணி பல செய்துள்ளான். வல்லாளமகாராஜன் அண்ணாமலையை ஆண்டுவந்தான். அருணகிரிநாதர் கோபுரத்திலிருந்து இறக்க எண்ணி வீழ்ந்தபோது முருகன் தோன்றி அருள்செய்தான். குகைநமச்சிவாயர், குருநமச்சிவாயர் முதலானவர்கள் சித்தி பல செய்தனர்.

கோயிலின் வடகிழக்குமூலையில் ஆயிரங்கால் மண்டபம் உள்ளது. கிழக்குப்பக்கத்தில் நுழையும்போதுள்ள உட்கோபுரம் வல்லாளமகாராஜன் கோபுரம் என்று வழங்கப்படுகிறது. வல்லாள கோபுரத்தின் வடகிழக்கு மூலையில் சக்திவிலாஸமும் உள்ளது. மேற்கு நோக்கி உட்சென்றால் கிளிக்கோபுரம் காணலாம். தலவிருட்சத்திற்கு மேற்கே கல்யாணமண்டபம் உள்ளது.

கல்வெட்டு:

பதிவுசெய்யப்பெற்ற மொத்தக் கல்வெட்டுக்கள் 119. இவைகளில் பெரும்பாலன சோழர்காலத்தன. திருவிளக்கேற்றல், திருமஞ்சனம், திருநந்தனவனம், திருவமுது, திருவெழுச்சி, அடியார்க்கு அமுதளித்தல் முதலிய பல அறங்களுக்காக நிலம், பொன், கால்நடை முதலியனவற்றை அளித்தமையை அறிவிக்கின்றன. பாண்டியர்,

Koviloor Digital Library

பல்லவர், ஹொய்சளமன்னரான வீரவல்லாளதேவர், விஜயநகரத்து ராயர், தஞ்சாவூர் நாயக்கர் மற்றும் வணிகர், வேளாளர் முதலியவர்கள் கல்வெட்டுக்களும் காணக்கிடக்கின்றன.

முதல் இராஜேந்திரனுடைய காலத்தில் (கி.பி. 1038.) திருவண்ணாமலை, மதுராந்தகவளநாட்டுப் பெண்ணை வடகரைத் திருவண்ணாமலை என்றும், மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி. 1179.) காலத்தில் இராஜராஜ வளநாட்டு வாணகோப்பாடி பெண்ணை வடகரை அண்ணாநாட்டுத்திருவண்ணாமலை என்றும், மேற்படிசோழ னுடைய 27-ஆம் ஆட்சி ஆண்டில் (கி.பி. 1204) வாணகோப்பாடிப் பெண்ணை வடகரை அண்ணா நாட்டுத் திருவண்ணாமலை என்றும், விஜயநகர இராயர்கள் காலத்தில் ஜெயங்கொண்ட சோழமண்டலத்துச் செங்குன்றக் கோட்டத்துப் பெண்ணைவடகரை வாணகோப்பாடி அண்ணாநாட்டுத் தனியூர் திருவண்ணாமலை என்றும் குறிக்கப் பெற்றுள்ளது. இதனால் திருவண்ணாமலையின் உள்ளடங்கிய வள நாட்டுப் பெயர் முதலில் மதுராந்தகவளநாடு என்றிருந்து, பிறகு இராஜ ராஜ வளநாடு என்று மாறி, இறுதியில் ஜெயங்கொண்ட சோழ மண்டலம் ஆயிற்றென்றும், இம்மண்டலத்தின் உட்பிரிவாகிய செங் குன்றக் கோட்டத்தினுள் அண்ணாநாட்டுத் தனியூராகக் குறிக்கப் பட்ட தென்றும் அறியக்கிடக்கும்.

பல்லவர் காலத்திற்கு முந்திய கல்வெட்டொன்றும் இல்லாமை யால், கோயில் செங்கற்சுதை மாடமாக இருந்ததென்றும், மலையின் மேல் அண்ணாமலையார் கோயில்கொண் டிருந்திருக்க வேண்டுமென் றும் யூகிக்க வேண்டியுள்ளது. முதற்பிராகாரத்துச் சுவரில் கங்கை கொண்ட இராஜேந்திரன் கல்வெட்டு (கி.பி.1028) காணப்பெறுவதால், இதற்கு முன்பே கருங்கல் திருப்பணி நடந்திருக்க வேண்டும், முதற் பிராகாரத்து விளங்கும் ஏகாம்பரநாதர் கோயில், சிதம்பரேசர் கோயில் ஆகிய இரண்டின் சுவர்களிலும் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டுச் சாஸனங்கள் காணப்படுகின்றன. கிளிக்கோபுரத்து 33 கல்வெட்டில் பழைமையுடைய வீரராஜேந்திர சோழனது இரண்டாவது ஆட்சி யாண்டின் (கி.பி,1063) முன்பே கருங்கல் திருப்பணியாயிருக்க வேண்டும். திருக்காமக்கோட்டமுடைய உண்ணாமுலைநாச்சியார் கோட்டம் தனியாக கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பெற்றது. கல்வெட்டுகளில் திருக்காமக் கோட்டம் எனக் குறிக்கப்பெறும்.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் எழுந்த கல் வெட்டுக்களில் வீரராகவன் திருமதில், வாணாதிராயன் திருமதில், திருவேகம்பமுடையான் திருமதில் முதலியன குறிக்கப்பட்டுள்ளன.

Koviloor Digital Library

அம்மையப்பன் சந்நிதிக்கு இடையில் மேற்பக்கத்தில் நங்கையாழ் வீசுவரம் என்னுங் கோயில் பல்லவகுடும்பத்தைச் சேர்ந்த ஒரு அரசியால் (கி.பி.1269) எடுப்பிக்கப் பதினாலடிக் கோலால் பதின்மூன்றரைகுழி விற்றுப் பதினாயிரம் பொற்காசு பெற்றுக் கட்டியபகுதி இன்று இல்லை. கிருஷ்ணதேவராயர் (கி.பி.1516) ஆயிரங்கால் மண்டபத்தையும், எதிரிலுள்ள திருக்குளத்தையும், பதினொரு நிலையிலுள்ள கோபுரத்தையும், வேறுபல திருப்பணி களையும் அமைத்தமை அறியப்படுகிறது.

பல்லவமன்னனான கோப்பெருஞ்சிங்கனும், அவன் மகன் வேணாவுடையானும் செய்த திருப்பணிகள் மிகப்பல. பூஜைக்கும் திருப்பணிக்குமாக ''அண்ணா மலைநாதர் தேவதானப்பற்றுக்களும், அண்ணாநாட்டு நாற்பாக் கெல்லைக் குட்பட்ட நன்செய் புன்செய் ஆக உள்ள நிலத்திற்கு ஆயம் பாடி காவலால் வந்த நெல்லும் காசாயமும் மற்றும் எப்பேர்ப்பட்ட பல்லாயங்களும்'' இவன் தானமாக ஈந்தான்.

கல்வெட்டுக்களில் காணப்பெறும் கோயில் அதிகாரிகள் ஸ்ரீருத்திரர், ஸ்ரீமாகேசுரர், ஸ்ரீமாகேசுரக் கண்காணி செய்வார், தானத்தார், தானபதி மாகேசுரர், தேவகன்மிகள், கோயிற்கணக்கர், ஸ்ரீகாரியஞ்செய்வார் எனப் பலராவர். இவரில் ஸ்ரீமாகேசுரர், தர்மசாசனங்கள் ஒழுங்காக நடைபெறக் காரியம் பார்ப்பவராவர்.

அண்ணாமலைநாதருக்கும் உண்ணாமுலை அம்மைக்கும் பிச்சதேவர் முதலிய மூர்த்திகட்கும் திருப்பள்ளி எழுச்சி, சிறுகாலை சந்தி, உச்சிப்போது, இரவை, அர்த்தசாமம் முதலியகாலங்களில் அமுது முதலியவற்றிற்கு நிலம் அளித்தமை அறியலாம்.

சில சாஸனங் களில் பிரமநாயனார் பெரியமடத்து முதலியார், வையந் தொழுவார் பெரியமடத்து முதலியார், ஊருக்குப் பெரிய மடத்து முதலியார், திருவண்ணாமலை உடையார் திருமுற்றத்தே இராஜேந்திரசோழன் சாலை, காங்கேயன்மடம், அம்மைமடம் முதலியன அறியப்படும் செய்திகள்.

நெய், மிளகு, உப்பு, தயிர், அடைக்காய், வெற்றிலை, சீரகம், வாழைப்பழம், வாழையிலை முதலியன நெல்லளந்து பெறப்பட் டவை. மங்கையர்க்கரசி என்னும் நங்கை தன்னாபரணங்களை விற்ற பொருள்கொண்டும், நெல்லைக்கொண்டும் ஏரிபுதுக்கி உதவினாள் என்ற செய்தி கல்வெட்டால் அறியப்படுகிறது.

Koviloor Digital Library

12. திருமுதுகுன்றம்

நடுநாட்டுத் தலங்களில் 9 ஆவது தலம். விருத்தாசலம் என வழங்கப்படுகின்றது. சிதம்பரம், சேலம் முதலிய ஊர்களிலிருந்து பேருந்து வசதிகள் உள்ளன. கடலூர் - சேலம் இருப்புப் பாதையில் இரயில் நிலையம் உள்ளது.

சுவாமிபெயர் முதுகுன்றநாதர்; பழமலைநாதர். அம்மை பெயர் பெரியநாயகி.

தீர்த்தங்கள்:

நித்யானந்தகூபம், அக்கினிதீர்த்தம், சக்கரதீர்த்தம், குபேர தீர்த்தம் என்பன. மணிமுத்தாறு சிறப்புடையது.

தலவிருட்சம்:

வன்னிமரம். கோயிலின் வடக்குக்கோபுரத்திற்கு நேர்வடக்கே யுள்ள மணிமுத்தாற்றுப் பகுதிக்குப் புண்ணியமடு என்று பெயர். இங்கேதான் இறந்தவர்களின் எலும்புகளை இட்டு முழுகுவது வழக்கம். இங்கே ஆழத்துப் பிள்ளையார் என்பது தலவிநாயகர் திருப் பெயர். முதல் பிராகாரத்திற்குக் கைலாசப் பிராகாரம் என்று பெயர். இந்தப் பிராகாரத்தில் வடமேற்குமூலையில் இருபத்தெட்டு ஆகமக் கோயில் உள்ளது. அம்மை திருமுக மண்டலம் கிழக்குநோக்கியது. அம்மையின் திருநாமம் வட மொழியில் விருத்தாம்பிகை. சுவாமி பெயர் விருத்தகிரீசர். கற்பக மரமே வன்னிமரமாக வந்து பழமலை நாதர் திருக்கோயில் திருப்பணியைச் செய்ததாக வரலாறு. உற்சவ மூர்த்திநாமம் பெரியநாயகர். இவர் ஆண்டிற்கு ஒருமுறை மாசிமக விழாவில் ஆறாந் திருநாள் மட்டுமே எழுந்தருளிக் காட்சி வழங்கு வார். பிரமன் படைப்புக்குமுன் சிவபெருமான் தாமே மலைவடிவாகி நிற்கப் பிரமன் அதனையறியாது, பல மலைகளையும் படைத்து, அவற்றை நிலைபெறுத்த இடமின்றி மயங்கச் சிவபெருமான் தோன்றியருளி தானே பழமலையாதலைத் தெளிவித்தார். ஆதலின் முதுகுன்றம் எனவும், பழமலை எனவும் வழங்குவதாயிற்று.

வழிபட்டவர்கள்:

சுக்கிராசாரியார், யாக்ஞவல்க்கிய முனிவர், சிகண்டி, கோசி கன், விதர்க்கணசெட்டி, விபசித்து முனிவர், அகத்தியர், சுவேத

Koviloor Digital Library

மன்னர், நாதசர்மா, அநவர்த்தினி முதலியோர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம்பாடிப் பன்னீராயிரம் பொன் பெற்று அதனை மணிமுத்தாற்றிலிட்டுத் திருவாரூரில் பெற்ற அற்புதம் நிகழ்ந்த இடம். இத்தலத்தில் விழா நிகழ ஏற்பாடுகள் செய்தவர் கச்சிராயமன்னர். துறவுபூண்டு உண்மை ஞானியான கன்னடநாட்டு மன்னர் ஒருவர்க்காக இறைவனே தண்ணீர்ப் பந்தல் வைத்துக்காத்ததாகவும், அம்மை அவருக்குப் பாலளித்துக் குமாரதேவர் எனத் திருநாமம்சூட்டி அழைத்ததாகவும், குமார தேவர்க்காக அம்மை பாலாம்பிகையாகி அமுது படைத்ததாகவும் வரலாறு. கி.பி. 11ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த இலிங்காரெட்டியாரும், அவர் மகன் அண்ணாமலைரெட்டியாரும் திருப்பணி செய்து கி.பி. 1623 இல் கும்பாபிஷேகம் செய்தனர். அண்மையில் 1994 இல் மகா கும்பாபிஷேகம் நிகழ்த்தப் பெற்றுள்ளது.

கல்வெட்டு:

இராஜகேசரிவர்மனான குலோத்துங்கசோழன் காலத்தில் இத்தலம் விருதராஜபயங்கர வளநாட்டு மேற்காநாட்டு இருங்கோளப்பாடியின் ஒருபகுதியான மருவூர்க்கூற்றத்துத் திருமுதுகுன்றம் எனக் குறிக்கப்பெற்றுள்ளது. சுவாமிபெயர் முதுகுன்றுடைய நாயனார் எனவும், திருமுதுகுன்றத்துடையார் எனவும் வழங்கப்பெறுகின்றது. கோப்பெருஞ்சிங்கன் சுவாமிக்கு ஒரு மாங்காய்மாலையும், விளக்குக்குப் பொன்னும், ஆடுகளும், பசுக்களும் அளித்தான்[1]. இராஜராஜன், பரகேசரிவர்மன், குலோத்துங்கன் இவர்களும் பசுக்களையும், பொன்னையும், நிலத்தையும் அளித்தனர்.

இராஜகேசரிவர்மனான குலோத்துங்கனது காலத்து, ஆளப்பிறந்தான் ஏழிசைமோகனான குலோத்துங்கசோழ காடவராதித்தன் இறைவற்கு ஸ்நபனமண்டபம் கட்டினான்.[2] புக்கண உடையார், ரங்கப்ப நாயகர், செவ்வப்பநாயகன் இவர்கள் காலத்திய நிபந்தங்களும் மிகுதியாக உள்ளன. சகம் 1545இல் கச்சிராயன் என்பவன் குகை காவலனுக்கு நான்கு கலம் நெல் கொடுக்க ஏற்பாடு செய்திருந்தான். ரங்கப்பமாவைராயர் என்பவர் அரியலூர் சந்தைப்பேட்டையில் மூட்டை ஒன்றுக்கு அல்லது ஆள்தூக்கக்கூடிய கைமூட்டை இரண்டுக்கு ஒருகாசு விழுக்காடு வரிவாங்கிக்கொள்ள உரிமை வழங்கியிருக்கிறார். கி.பி. 16 ஆம் நூற்றாண்டினனான செவ்வப்பநாயகன் நான்கு இராசகோபுரங்களையும் கட்டியதாகச் சொல்வர். கி.பி. 1602 இல்

[1]-134, 135 of 1902, [2]-137 of 1900

Koviloor Digital Library

முத்துக்கிருஷ்ணப்பராயர் என்பவர் திருமுதுகுன்றமுடையார்க்குப் பஞ்சாவரணப் பிராகாரம் கட்டிவைத்ததாகத் தெரிகின்றது. அப் பிராகாரம், புறமதிலுக்கு வெளியிலிருந்து முகமதியர் கலகத்தில் இடிந்துபோனதாகக் கூறுவர். தென்னாற்காடு மாவட்ட ஆட்சியராக இருந்த ஹைட்துரை கைலாசப்பிராகாரத்திற்குத் தளவரிசை போட்ட தால் இன்றும் அது ஹைட் தளவரிசையென வழங்குகின்றது.

13. வியலூர்

இத்தலம் பண்டாரவாடை திருவியநல்லூர் என்று வழங்கப் பெறுகிறது. வியலூர் என்ற பெயரோடு தஞ்சை மாவட்டத்தில் வேறு இரண்டு ஊர்களும் உள்ளன. சோழநாட்டுக் காவிரிவடகரைத் தலம். தஞ்சை மாவட்டம் கும்பகோணத்திலிருந்து வேப்பத்தூர் வழியாகப் பேருந்து வசதி உள்ளது. சுவாமிபெயர் யோகானந்தீசுவரர். அம்மைபெயர் சாந்தநாயகி. தீர்த்தம் சடாயுதீர்த்தம். இறைவன் புராதனேசுவரர், வில்வாரண்யேசுவரர் எனவும் பெயர் பெறுவர். அம்மை சௌந்தரநாயகி எனவும் வழங்கப்பெறுவர். ஜடாயு வழிபட்டுப் பேரின்பம் எய்திய தலம்.

கல்வெட்டு:

அரசியலார் படியெடுத்த கல்வெட்டுக்கள் மொத்தம் 94 உள்ளன. இத்தலம் கி.பி. 985-1013 இல் அரசாண்ட முதல் இராஜ கேசரிவர்மன் காலத்து அவனிநாராயண சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்ததென்றும், 1011-1043ல் அரசாண்ட இராஜேந்திர சோழதேவன் காலத்து வடகரை இராஜேந்திர சிம்மவளநாட்டு மண்ணி நாட்டுப் பிரம்மதேயமான வேப்பத்தூர் சோழமார்த்தாண்ட சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்தது என்றும் தெரிகிறது. சுவாமிபெயர் சிவயோக நாதர் எனவும் [1], உமாமகேசருக்கு ஆண்டநாயகர் எனவும் [2], கல்வெட்டுகள் பெயர் கூறுகின்றன. இத்தலத்துக் கல்வெட்டுகளால் குறிக்கப்பெறுகின்ற சோழமன்னர்கள் பன்னிருவர். பாண்டியர் ஒருவர். விஜயநகர கிருஷ்ணதேவராயர் ஒருவர். இவர்களில் கி.பி.862 முதல் 894 வரை ஆண்ட பாண்டிய மன்னனாகிய வரகுண பாண்டியனது 38-ஆம் ஆண்டின் நிகழ்ச்சி ஒன்று குறிக்கப்பெறுவதால் இக்கோயில் அதற்குமுன்பே கற்றிருப்பணியாகச் செய்யப்பெற்றமை தெளிவு [3]. பராந்தகன் I கி.பி. 907 முதல் 947 வரை ஆட்சி நடத்தியவன். இவனுடைய ஆட்சி கி.பி. 16 ஆம் ஆண்டில் விளக்கீட்டிற்காக ஆடுகள்

[1]-338 of 1907, [2]-364 of 1907, [3]-17 of 1907.

Koviloor Digital Library

விடப்பெற்றன. பொன்னும் கொடுக்கப்பெற்றன [1], இவன் மதுரை கொண்ட பரகேசரி வர்மன் எனக் குறிக்கப்பெறுகின்றான். .

பராந்தகன் I & II காலங்களில் விளக்குக்காகப் பொன்னும் ஆடு களும், அபிஷேகத் திரவியங்கட்காக நிலமும் அளிக்கப்பெற்றன. செம்பியன் காரைக்காடு உடையானாலும் [2] பராந்தகப் பல்லவராயன் என்பவனாலும் விளக்கிற்காக ஆடுகளும்[3] பணமும் அளிக்கப் பெற்றன. இவன் தருமங்களில் விளக்கிற்காக அளித்தமையே பெரிதும் காணப்படுகின்றன. விசலூர் உடைய நாயனார்க்குத் திருமஞ்சனநீர் காவிரியிலிருந்து கொண்டுவர நிலம் விட்டான். இதில் திருவிசலூர் மகாதேவ பட்டாரகர் என இறைவன் திருநாமம் குறிக்கப்பெறுகின்றது [4]

முதல் இராஜராஜன் கி.பி. 985 முதல் 1013 வரையில் ஆண்டவன். இவன் காலத்தில் கோவில் விள்க்குக்குப் பணம் கொடுக்கப்பட்ட செய்திகள் குறிக்கப்பெறுகின்றன. கிராமங்களின் நிலவிற்பனைகளும் பொறிக்கப்பெற்றுள்ளன. இவனுடைய அரசி ஒருத்தி பொன்னளித்திருக்கின்றாள் [5] திருமஞ்சனத்தில் இடப்பெறு கின்ற ஸ்நான திரவியங்களுக்காகவும், பிராமண போஜனத்திற் காகவும் பொன்னளித்திருக்கிறாள். மிகச் சிறப்பாக இவன் ஆட்சி 29 இல் அரசன் துலாபாரம் புக்குத் தானம் செய்தான் என்றும், அரசி தந்திசத்தி விடங்கியாரான லோகமாதேவியார் ஹேமகர்ப்பதானம் செய்தாள் என்றும் குறிக்கப்பெறுகின்றன. [6] பிச்சுதேவன் என்னும் அரசகாரியம் பார்ப்பான் கருப்பக்கிருகப் பணிக்காக நிலம் விட்டமை தெரிகிறது. இராஜேந்திரன். இவன் கி.பி. 1011 முதல் 1043 வரை ஆண்டவன். இவன் காலத்திய கல்வெட்டுக்கள் பதின்மூன்று உள்ளன. அவற்றால், திருவிசநல்லூர் உடைய மகாதேவர்க்குத் தங்கக் கச்சை அளித்ததும், சிதாரிக்காக நறும்புகையிட நிலம் அளித்ததும், விளக் கிடப் பணமும் நிலமும் ஆடுகளும் அளித்ததும் அறிவிக்கப் பெறுகின்றன [7]. அவனுடைய மனைவியான அரசியொருத்தியால் அபிஷேகத்திற்கு வெள்ளிக் கலசம் ஒன்று அளிக்கப்பெற்றது [8]. இவன் தனது மூன்றாவது ஆண்டில் திருவிசநல்லூர் மாதேவர் கோயிலையும், கோபுரத்தையும் திருப்பணி செய்தான். இவன் மனைவியான நக்கன் செம்பியன் மாதேவியாரால் விளக்குக்கு ஏற்பாடு செய்யப்பெற்றது.

இவனுக்கு உருத்திரன் அருள்மொழியான பிருதி

[1]-23 of 1907 , [2]-9 of 1907, [3]-18 of 190 7, [4]-35 of 1907, [5]-19 of 1907, [6]-42 of 1907, [7]-1, 15, 338, 339 of 1907, [8]-340 of 1907.

Koviloor Digital Library

மகாதேவி என்றொரு மனைவியும் இருந்தனர் [1]. இவனுக்கு அத்தையும், வல்லவராயர்வந்தியத்தேவர் மனைவியுமான குந்தவ்வை தேவியார் பழையாறையில் இருக்கும்போது நிலம் அளித்தார் என்ற செய்தியை அறிவிக்கும் கல்வெட்டு சரித்திர ஆராய்ச்சியாளர்க்குப் பெருவிருந்தாவது [2].

குலோத்துங்கன் III. இவன் கி.பி. 1178 முதல் 1218 வரை ஆண்டவன். இவனுடைய ஆட்சி பதினெட்டாம் யாண்டில் நில விற்பனையைப்பற்றிக் கூறுகிறது. அதில் வேம்பத்தூர் எதிரிலிச் சோழச் சதுர்வேதி மங்கலமான வேம்பத்தூர் என அழைக்கப்பெறுகின்றது. ஏனைய முதல் மூன்று கல்வெட்டுக்கள் அரசாங்க நில அளவைமுறைகளையும் நிலவிற்பனையையும் அறிவிப்பன.

தென்புறப் பிராகாரத்தில் உள்ள கருப்பக்கிருகத்தின் வடக்குச் சுவரில் அந்த மண்டபத்தைக் கட்டியவனான ஆனந்த சிவன் என்பவனுடைய உருவம் இருக்கிறது. அதில் ஒரு பகுதியைச் சுவர் மறைத்து விட்டது.

14. திருக்கொடுங்குன்றம்

பாண்டியநாட்டுத்தலம் இது பிரான்மலை என இக்காலத்து வழங்குகின்றது. மேலும் மதுரை, மேலூர் சிங்கம்புணரியிலிருந்து பேருந்துகளில் செல்லலாம். திருக்கோயில் அடிவாரத்தில் உள்ளது.

மகோதர மகரிஷியும், நாகராஜனும் வழிபட்ட தலம். அருணகிரிநாதர் திருப்புகழ் பெற்ற சுப்பிரமணியத் தலமாகும். மலைமேல் வைரவர் சந்நிதி மிக விசேஷம். சுவாமி சந்நிதியில் திருக்கல்யாணக்கோலம் சிறப்பானது. தேவசபா மண்டபம் என்ற ஒரு மண்டபம் இருக்கின்றது.

இறைவன்பெயர் கொடுங்குன்றீசர். தேவியார் குயிலமுத நாயகி. தேவாரம் .'தனிற் பொலிமொழியாள்' எனக் குறிப்பிடுகின்றது. இத்தலம் குன்றக்குடி திவண்ணாமலை ஆதீன அருளாட்சியிலுள்ளது.

[1]-349 of 1907, [2]-350 of 1907.

Koviloor Digital Library

கல்வெட்டு:

இத்தலத்தைப் பற்றியனவாக இருபத்தொரு கல்வெட்டுக்கள் அரசியலாரால் கி.பி. 1903 ஆம் ஆண்டில் படியெடுக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் எட்டுக் கல்வெட்டுகள் ஆராய்ந்து முடிவுகட்டப்பெற்றன. ஏனையவை அறியப் பெறாதன. நான்கு கல்வெட்டுக்கள் குலசேகர பாண்டியனுடைய ஆட்சி 10, 13 ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்தவை. இவற்றை இங்ஙனம் வரையறுத்து எழுதியவர் ஸெவல் பாதிரியார்.

இத்தலத்தில் சுந்தரபாண்டியன் மண்டபம் (இது கருப்பக் கிருகவாயிலில் உள்ளது) ஆறுகால் மண்டபம் [1], லக்ஷ்மி மண்டபம் [2], முதலிய மண்டபங்களும் , விசுவநாதர் கோயில் [3], சுப்பிரமணிய சுவாமி கோயில் [4] முதலியனவும் கோயிலுக்குள் இருக்கின்றன. பிரான்மலைக் கிராமத்தில் ஸ்ரீ சொக்கநாதர் கோயில் உள்ளது [5]. இறைவன் மங்கைநாதர் [6] எனவும், கொடுங்குன்றமுடைய நாயனார் [7] எனவும், நல்லமங்கைபாகர் எனவும், [8] குன்றாண்ட நாயனார் எனவும், [9] குறிப்பிடப்பெறுகின்றார்.

பாண்டிய மன்னர்களில் சுந்தரபாண்டியன் I, சுந்தரபாண்டியன் II, பராக்ரம பாண்டியன், குலசேகர பாண்டியன், வீரபாண்டியன் இவர்கள் விளக்குக்காகப் பசுக்களும், பொன்னும், சேவார்த்திகட்கு உணவிற்கும், விளக்குத் தண்டு செய்தற்குமாகப் பொன்னும் நிலமும் அளித்த செய்திகளை அறிவிக்கின்றன; பல கல்வெட்டுக்கள். கி.பி. 1251 - 1264க்குள் ஆண்ட கோனேரின்மைகண்டான் காலத்தில் துவராபதி வேளார், பிரபாவபுரந்தரன் ஆகிய இருவரும் நிலம் அளித்தனர். இம்மடி நரசிங்கராயர் காலத்தில் பிரான்மலைச்சீமை என்றும், திருமலை நாட்டுப்பகுதியான பிரான்மலை என்றும் குறிக்கப் பெறுகின்றது. திப்பரசரையன் நன்மைக்காகக் கேரளசிங்க வளநாட்டு இப்புலி நாயகர் நிலம் அளித்தார். இங்கு ஒரு வியாபாரிகள் சங்கம் இருந்ததாகவும் கல்வெட்டுக் கூறுகிறது [8].

1924 ஆம் ஆண்டில் படியெடுக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் 16. அவற்றுள் ஐந்து, பாண்டியர்கள் காலத்தன. ஏனையவை விசயநகர அரசர்கள் காலத்தன. சடாவர்மன் வீரபாண்டியன் ஆட்சி 9ஆம் ஆண்டில், திருஞானம் பெற்ற பிள்ளையார் படிமத்தை எழுந்தருள்

[1]-144 of 1903, [2]-142 of 1903, [3]-146 of 1903,
[4]-152 of 1903, [5]-154 of 1903, [6]-138 of 1903,
[7]-140 of1903, [8]-154 of 1903, [9] -202 of 1924,

Koviloor Digital Library

வித்துக் கேரளசிங்க வளநாட்டுக் குலசேகரன் பட்டினத்து அருவியூரானான கொடுங்குன்றமுடையான் ஒருவன் பூசைக்கு நிபந்தமும் அளித்தான் [1]. குலசேகர பாண்டியன் காலத்தில் கீழ்வேம்புநாட்டு இராசவல்லி புரத்துக் கொன்றைசேர் முடியானும், திருநெல்வேலியுடையானும் விளக்குக்கு ஆடுகள் அளித்தனர் [2]. கண்ணமங்கலமான திருவெங்கா உடைய நல்லூர்; அமோகமங்கலமான முதலி நாயக நல்லூர் உடையான் இருவரும் அர்த்தயாம பூசைக்கு நிலம் அளித்தனர். அந்தப் பூசைக்குத் தாழ்வுசெய்யாதான் சந்தியென்று பெயர் [3]. காரைக்குடியான் ஒருவன் மங்கைநாயகர் வசந்த உற்சவத்திற்காக வாணராய நல்லூரை இறையிலி செய்து அளித்தான் [4]. விஜயநகர அரசர்கள் வேதபாராயணத்திற்காகவும் [5], உற்சவத்திற்காகவும் [6], கானூர் முதலிய இடங்களை அளித்தனர்.

15. திருநெய்த்தானம்

சோழநாட்டுத்தலம். தஞ்சையை அடுத்துள்ள திருவையாற்றிற்கு மேற்கே 1.5. கி.மீ. தூரத்தில் உள்ளது. திருவையாற்று சப்தஸ்தான க்ஷேத்திரங்களில் ஏழாவது தலம். இங்கே கலைமகள் வழிபட்டுப் பேறுபெற்றாள். சுவாமிபெயர் நெய்யாடியப்பர். அம்மைபெயர் பாலாம்பிகை. 'இளமங்கையம்மை' எனத் தேவாரம் குறிப்பிடுகின்றது.

தீர்த்தம் - காவிரி. கிழக்குப்பார்த்த சந்நிதி. இப்போது தில்லைஸ்தானம் என வழங்குகின்றது. வடமொழியில் கிருதஸ்தானமாயிற்று. இறைவற்குப் பசுநெய் அபிஷேகிப்பது வழக்கம்.

கல்வெட்டு:

இத்தலத்தில் அரசியலார் படிஎடுத்தவண்ணம் 51 கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றுள் இத்தலம் இராஜாதிராஜன் காலத்தில் இராஜராஜ வளநாட்டுப் பைங்காநாட்டுத் திருநெய்த்தானம் எனக் குறிக்கப்பெறுகின்றது. இத்தலத்து பராந்தகன் I முதலாக ஐந்து சோழ அரசர்களின் தானங்களைக் குறிக்கும் நிகழ்ச்சிகளும், நந்திவர்மன் தான நிகழ்ச்சிகளும் குறிக்கப்பெறுகின்றன. செம்பியன் ஈக்காட்டு வேளானான பரிசைகிழான் மறவன்நக்கன் என்பவன் 13 கழஞ்சு

[1]-208 of 1934, [2]-194 of 1924, [3]-202 of 1924,
[4]-203 of 1924, [5]-207 of 1924, [6]-196 of 1924.

Koviloor Digital Library

பொன்னைக் கோயில் விளக்கிற்காகக் கொடுத்தான்[1]. கூத்தன் அருள்மொழியான வானவன் பேரரையன் நிலத்தை 25 கழஞ்சு பொன்னுக்கு நங்கை வரகுணபெருமானார் வாங்கி விளக்கிற்காக வைத்தாள்[2]. சாமர கேசரி தெரிஞ்ச கைக்கோளர், விக்ரமசிங்க தெரிஞ்ச கைக்கோளர், இருவராலும் பைங்காநாட்டுக் கீழப்பிலாறு கிராமத்தில் நிலம் அளிக்கப் பெற்றது. முற்கூறிய சாமரகேசரி தெரிஞ்ச கைக்கோளருள் ஒருவனான மல்லன் ஆரியனால் நிவந்தம் விடப் பெற்றது. கோயில் காரியத் தலைவனான காமக்கோடநல்லூர் ஆய னால் இரு பொன்பட்டங்கள் கடவுளுக்குக் கொடுக்கப்பெற்றன[3]. சோழப் பெருமானடிகளுடைய காமக் கிழத்தியான நங்கை கூத்தப் பெருமானார் 30 கழஞ்சு பொன்னை விளக்குக்காக வைத்தார். அதனைத் திருநெய்த்தானச் சபையார் சுவாமிக்கு ஸ்நபன மண்டபங் கட்டப் பயன்படுத்தி விட்டனர். அதற்குப் பதிலாகக் கோயில் நிலங்கள் சிலவற்றை ஏற்பாடு செய்தனர். வளவர்கோன் பேரரையன் என்பவனும், செம்பியன் தமிழவேளான் விக்கணன் மனைவி கடம்பமா தேவியும், தென்னவன் பிரதிமாராசனான கட்டி ஒற்றியூரான் பராந்தகனும், இளங்கோவேண்மான் மனைவியான வரகுணப் பெருமானாரும் விளக்கிற்காகப் பொன்னும், நிலமும் அளித்தனர். முண்டகங்குடி உடையானான கண்ணங்குடி நாராயணன் நைவேத்யத் திற்கு நெல்லளித்தான். இது அளித்தகாலம் பராந்தகன் I காலம். மேளக்காரன், தேவதாசி, வாணிகன் இவர்கள் தருமமும் விளங்கின என்பதை மூன்று கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன[4]. கோப்பர கேசரியான பராந்தகன் I க்கு மாமியார் முள்ளூர் நங்கையென்று தெரிகிறது.[5]

16. திருப்புள்ளமங்கை

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். பசுபதிகோயில் இரயில் நிலையத்திலிருந்து வடக்கே 3. கி.மீ. தஞ்சையை அடுத்துள்ள ஐயம்பேட்டையிலிருந்து கண்டியூர் செல்லும் பேருந்துச் சாலையில் உள்ளது. ஊர்ப்பெயர் - புள்ளமங்கை. கோயிற்பெயர் ஆலந்துறை. தேவர்கள் அமுதங் கடைந்தபோது உண்டான விடத்தை அமுதுசெய்த இடம் ஆதலின் ஆலந்துறை எனத் திருக்கோயில் வழங்கப்பெறு கின்றது. தலம் திருப்புள்ளமங்கை. இன்று பசுபதிகோயில் எனவும் வேளாளப் பசுபதிகோயில் என அடைமொழி சேர்த்தும் வழங்குகிறது.

[1]-276 of 1911, [2]-277 of 1911, [3]-283 of 1911,
[4]-22, 33, 36 of 1895, [5]-45 of 1895.

Koviloor Digital Library

பிரமன் பூசித்ததலம். புள்ளமங்கை என்பதற்கேற்பக் கோபுரத்தில் கழுகுகள் எப்பொழுதும் வசித்துவருகின்றன. 'பொந்தின் இடை தேனூறிய' என்னும் அருளாளர் வாக்கிற்கியையப் பொந்துகளில் எல்லாம் தேனடைகள் காணப்படும். திருச்சக்கரப்பள்ளியின் சப்த ஸ்தானத் தலங்களில் இதுவும் ஒன்று.

இறைவன் ஆலந்துறைநாதர், இறைவி அல்லியங்கோதை. பசுபதிநாதர் எனவும் வழங்கும். தீர்த்தம் காவிரி.

கல்வெட்டு:

அரசியலாரால் கி.பி. 1921 இல் படியெடுக்கப்பட்ட 546 முதல் 559 வரையுள்ள பதின்மூன்று கல்வெட்டுக்கள் உள்ளன.

17. திருஇடும்பாவனம்

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். நாகைமாவட்டம் திருத்துறைப்பூண்டியிலிருந்தும் முத்துப்பேட்டையிலிருந்தும் பேருந்துகளில் செல்லலாம். இடும்பன் பூசித்துப் பேறுபெற்ற தலமாதலின் இப்பெயர் பெற்றது. இடும்பனது தலைநகரமாகிய குன்றளூரும் அருகாமையில் இருப்பது அறியத்தக்கது. இங்கு வெண்மைநிறமுடைய 'வெள்ளை விநாயகர்' விசேஷமானது. இறைவரது மணவாளக் கோலம் மூலத்தானத்தின் பின்புறம் அமைந்துள்ளது. அகத்தியர்க்குக் காட்சிகொடுத்த தலம்.

சுவாமி பெயர் சற்குணநாதர்; அம்மைபெயர் மங்களநாயகி. தீர்த்தம் சமூகபுஷ்கரணி.

இத்தலத்தைப் பற்றியதாகக் கல்வெட்டொன்றும் அறியக் கூடவில்லை.

18. திருநின்றியூர்

சோழநாட்டு காவிரி வடகரைத்தலம். நாகைமாவட்டம் மயிலாடு துறை, வைத்தீஸ்வரன்கோயில் பேருந்துவழியில் உள்ளது.

திருமகள் வழிபட்டு நிலைபேறு எய்திய தலம். சோழன் ஒருவன் திருவிளக்கிட்டுத் தினந்தோறும் வழிபட்டுவந்தான். அவன்

Koviloor Digital Library

கொண்டுவந்த திரி ஒருநாள் நின்றுவிடவே, சிவலிங்கத்தினின்றும் ஒரு சோதி தோன்றி, அவன் வழிபாட்டிற்கு இடையூறுண்டாகாமல் உதவி யது. அதனால் திரிநின்றவூர் ஆயிற்று. அது இப்போது திரு நின்றவூர் என வழங்குகின்றது என்பது செவிவழிச்செய்தி.

பரசுராமன் நின்றி யூரை இறைவற்கும், பக்கத்திலுள்ள 360 வேலி நிலத்தை வேதியர்கட்கும் அளித்து வழிபட்டான் என்பது புராண வரலாறு. இதனையே சுந்தரர் தேவாரம் தக்கேசி மூன்றாம்பாடல் குறிப்பிடுகிறது. அடுத்த பாடலில், பசு பால்சொரிந்து அபிஷேகித்து வந்ததாகவும் ஒரு வரலாறு குறிக்கப் பெற்றுள்ளது.

சுவாமிபெயர் லக்ஷ்மிபுரீசுவரர்; மகாலட்சுமிநாதர். அம்மை பெயர் உலகநாயகி. தீர்த்தம் நீலதீர்த்தம். (இது *அபிதான சிந்தாமணி* கூற்று) மகாலக்ஷ்மி தீர்த்தம் எனவும் வழங்கும்.

கல்வெட்டு:

இத்தலத்தைப்பற்றிய கல்வெட்டு ஒன்றே உள்ளது. 1921ம் ஆண்டில் படியெடுக்கப்பெற்றுள்ளது. திரிபுவன சக்ரவர்த்தி இராஜ ராஜதேவர்க்கு ஆண்டு 15வது கும்பரவி அட்டமி ஞாயிறு மூல நக்ஷத்திரம் என்று தொடங்குகிறது [1]. தருமை ஆதீனக் கோயில்களில் ஒன்று.

19. திருச்சிவபுரம்

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். தஞ்சைமாவட்டம் கும்பகோணத்திலிருந்து பேருந்துகளில் செல்லலாம். தனபதி அரசன் தன் சாபவிமோசனத்திற்காக ஒரு பிராமணக்குழந்தையை வாங்கித் தந்தையும் தாயும் பிடிக்கச் சோமவார சிவராத்திரியில் அறுத்து அபி ஷேகிக்க, அம்பாள் வெளிப்பட்டு. அந்தக்குழந்தைக்கு அநுக்கிரகித் தார் என்பது செவிவழிச்செய்தியான வரலாறு. வெள்ளைப்பன்றியாகி திருமால் வழிபாடு செய்த தலம். சுவாமிபெயர் சிவபுரநாதர். அம்மை பெயர் சிங்காரவல்லி. தீர்த்தம் சந்திரபுஷ்கரணி. கார்த்திகைச் சோம வாரங்களில் தீர்த்த விசேஷம். கடைசிச் சோமவாரத்தில் உற்சவம். அரசியலார் 1927ல் படியெடுத்த 272 முதல் 282 எண் உள்ள 10 கல்வெட்டுக்கள் உள்ளன.

[1] -538 of 1921. மீனரவி என்றும் பாடம் உண்டு.

Koviloor Digital Library

20. திருமறைக்காடு

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். நாகைமாவட்டம் திருத்துறைப்பூண்டியிலிருந்தும் நாகையிலிருந்தும் பேருந்துகளில் செல்லலாம் திருத்துறைப்பூண்டியிலிருந்து இரயிலிலும் செல்லலாம். இத்தலம் இன்று வேதாரண்யம் என வழங்குகின்றது. வேதங்கள் வழிபட்டமையால் இப்பெயர் பெற்றது. ஆதிராமர் இங்குவந்து, அணைகட்டி, இலங்கைசென்று, இராவணவதஞ்செய்தனர். பின்னர் அப்பழிநீங்கப் பூசித்தார். ஆதலால் ஆதிசேது எனவும் வழங்கும். பிரமதேவர் பூசித்து இறைவன் வாயிலாகவே வேதோபதேசம் பெற்றுச் சிருட்டித்தொழில் கைவரப்பெற்றார். விஸ்வாமித்திரர் பூசைசெய்து பிரமரிஷியாயினர். பிந்திய இராமர் பூசித்து வீரகத்திதோஷம் நீங்கப் பெற்றார். தென்திசையைச் சமப்படுத்த இறைவன் ஆணையால் வந்த அகத்தியமுனிவர்க்கு, இறைவன் மணவாளத் திருக்கோலங்காட்டிய தலம். சுவாமிக்குப் பின்புறம் கருப்பக்கிருகத்துள்ளேயே மணவாளப் பெருமான் திருவுருவம் இருக்கிறது. நெய்யுண்ணவந்த எலி, அபுத்தி பூர்வமாகவே திரியைத்தூண்ட, அதனால் மறுபிறப்பில் அவ் எலி மாவலிச்சக்ரவர்த்தியாகிப் பேறுபெற்ற தலம். இதனைத் திருக்குறுக் கைத் தேவாரத்துள் அப்பர் சுவாமிகள் '' நிறைமறைக் காடுதன்னில்'' என்னும் திருப்பாடலில் விளக்கியிருக்கிறார்கள்.

மூர்த்திகள்:

இறைவன்பெயர் வேதாரண்யேசுவரர்; தேவாரம் 'மறைக் காட்டுறையும் மணாளன்' எனக் குறிக்கின்றது. அம்மைபெயர் யாழைப்பழித்த மொழியம்மை; வீணாகானவிதூஷணி எனவும் வழங்குவர். தலவிருட்சம் வன்னி. சப்தவிடங்கத் தலங்களுள் ஒன்றா தலின் தியாகேசமூர்த்தி எழுந்தருளியிருக்கின்றார். அவர் பெயர் புவனிவிடங்கர். நடனம் ஹம்சநடனம்.

தீர்த்தம்:

மணிகர்ணிகை, வேதபூஷண தீர்த்தம், வேதாமிருதம் (கடல்) முதலியன.

ஞானசம்பந்தசுவாமிகளும், அப்பமூர்த்திகளும் இத்தலத் திற்குத் தரிசனத்திற்காக எழுந்தருளியபோது, வேதங்கள் பூசித்த காலத்து அவை அடைத்த நேர்க்கதவும் திறக்கப்படாமலே வழக்காறற் றிருக்க, அப்பர் திறக்கவும், சம்பந்தர் அடைக்கவும் பாடி அற்புதம்

Koviloor Digital Library

நிகழ்த்திய தலம். சுந்தரமூர்த்திகள் சேரமான் பெருமாளோடு எழுந்தருளி வழிபட்டதலம். இங்கு கோடிதீர்த்தம் ஆதிசேது மிக விசேடமானது. உருத்திரகோடி என்னும் இடத்திலும் கடலாடுவது வழக்கம். அது புதை சேற்றுக் கடலாதலின் மிக எச்சரிக்கையாக இருத்தல் வேண்டும். அழகான கோடியக்காடு உண்டு. கோடிக் குழகர் கோயில் விசேடம்.

தலவிநாயகர் சிந்தாமணி விநாயகர். இராவணன் வழிபட்ட விநாயகர் வீரஹத்தி விநாயகர். துர்க்கை சந்நிதி விசேடமானது. வேதாரணியம் விளக்கழகு என்று ஒரு பழமொழி இத் தலத்தைப்பற்றி வழங்கிவருகிறது. அதனாலே பராந்தகசோழர் முதலிய பலர் விளக்குத் தருமமே செய்திருக்கிறார்கள்போலும்.

கல்வெட்டு:

இத்தலத்திலுள்ள கல்வெட்டுக்களை அரசியலார் கி.பி. 1904 ஆம் ஆண்டில் படியெடுத்திருக்கிறார்கள். மொத்தம் 89 கல்வெட்டுக்களும், ஒரு செப்புப்பட்டயமும் இருக்கின்றன. அவற்றுள் சோழ மன்னர்கள் காலத்தன எண்பத்திரண்டு. ஏனையவற்றுள் ஒன்று தஞ்சை துளஸாமகாராஜாவின் மகனான பிரதாபசிம்ம மகாராஜாவினது. மற்றவை இரண்டும் விஜயநகர அரசன் பிரபுடதேவ மகாராய, தேவ மகாராயர் என்பவர்களுடையன. ஒன்று இன்னாருடைய என்று அறியப்பெறாத செப்புப்பட்டயம்.

சோழர்காலத்துக் கல்வெட்டுக்கள் முதற்பராந்தகன் முதல் குலோத்துங்கன் III வரை உள்ளன. அவற்றுள் முதற்பராந்தகன் செய்த விளக்கீடுகள் பற்றிய தருமம் 38 கல்வெட்டுக்களால் அறிவிக்கப் பெறுகின்றன.

இத்தலம் உம்பள நாட்டுக் குன்னூர்நாட்டுத் திருமறைக்காடு எனக் குறிக்கப்பெறுகின்றது [1]. முதற் பராந்தக சோழன் காலத்துக் கல்வெட்டுகள் அனைத்தும் அவனுடைய ஆட்சி 5ம் ஆண்டுமுதல் 34ம் ஆண்டு வரை ஆண்டுகள்தோறும் விளக்குவைக்க ஆடுகளும், நிலமும், பொன்னும் அளித்தமையை அறிவிக்கின்றன[2]. இராஜராஜ தேவனும், பரகேசரி இராஜராஜனும், குலோத்துங்கன் I குலோத்துங்கன் III இவர்களும் விளக்குக்கு நிலமும் ஆடுகளும் அளித்திருக்கின்றனர். இராஜேந்திரன் III காலத்தில் ஆட்சி 16-ம் ஆண்டில்

[1]-415 of 1094, [2]-433 of 436, 444 to 459, 463 of 469, 478 to 488 of 1904.

Koviloor Digital Library

நிலம்விட்ட செய்தி அறியப்பெறுகின்றது [1]. இராஜராஜன் III காலத்தில் சிங்கள தண்ட நாயகனால் கோடிக்குழகர்கோயில் சீரணோத்தாரணம் செய்விக்கப் பெற்றது [2]. கி.பி. 1496-ல் அர்ச்சகருக்குச் சில உரிமைகள் வழங்கப் பெற்றன என்று செப்புப்பட்டயம் கூறுகிறது.

21. திருக்கோலக்கா

சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். சீகாழிக்கு மேற்கே 1 கி.மீ. தூரத்தில் உள்ளது.

இத்தலம் திருத்தாளமுடையார்கோயில் என வழங்குகிறது. திருஞானசம்பந்த சுவாமிகள் திருமுலைப்பால் உண்டருளிய மறுநாள், இத்தலத்திற்கு எழுந்தருளிக் கையினால் தாளம் இட்டுப் பாடினார். அப்போது இறைவன் திருவருளால் திருவைந்தெழுத்து எழுதப்பெற்ற பொற்றாளம் இவர் கைவந்தருளப்பெற்றது. சுவாமி பெயர் சப்தபுரீசுவரர். அம்மைபெயர் ஓசைகொடுத்தநாயகி. கிழக்குப் பார்த்த சந்நிதி. கோயில் வாயிலில் அழகான தீர்த்தம் இருக்கிறது. சீகாழி திருமுலைப்பால் விழா அன்று மாலை ஞானசம்பந்த சுவாமி இங்கு எழுந்தருளுவர்.

22. திருச்செம்பொன்பள்ளி

சோழநாட்டுக் காவிரித்தென்கரைத்தலம். மயிலாடுதுறையிலிருந்து பேருந்து வசதி உள்ளது.

இத்தலம் செம்பொனார்கோயில் என இக்காலத்து வழங்கப் பெறுகின்றது. இந்திரன் விருத்திராசுரனைக் கொல்வதன் பொருட்டுப் பூசித்து வழிபட்டான். அதனால் இந்திரபுரி எனவும் வழங்கப்பெறும். முருகப்பெருமான் தாரகாசுரவதத்தின் பொருட்டுப் பூசித்தமையின் ஸ்கந்தபுரி எனவும் வழங்கும். அகஸ்தியர் வழிபட்டுப் புருஷார்த்தங்களைப் பெற்றார். பிரமன் பூசித்துப் படைப்புத்தொழில் கைவரப் பெற்றான். இரதி பூசித்துத் தன் பதியாகிய காமனையடைந்தாள். நாககன்னியர்கள் வழிபட்டு நல்ல கணவரை அடைந்தனர். இந்திரன், தக்ஷன்யாகத்தில் கலந்துகொண்ட குற்றத்திற்குப் பரிகாரந்தந்தருளிய தலமும் இதுவே. வசிட்டர், திக்பாலகர்கள், காவிரி, சமுத்திரம் முதலியவர்களும் பூசித்துப் பேறு பெற்றனர். வீரபத்திரர் தக்ஷயாகத்திற்காக

[1]-460 of 1904, [2]-501 of 1904.

Koviloor Digital Library

அவதரித்த தலமும் இதுதான். இத்தலத்திற்கு அருகாமையில் ஓடும் காவிரியில் இட்ட எலும்புகள் பூமரங்களாய் இறைவனுக்குச் சாத்தப் பயன்பெறும்.

சுவாமிபெயர் சுவர்ணபுரீசுவரர். அம்மைபெயர் சுகந்தவன நாயகி; மருவார்குழலி. தலவிருட்சம் வன்னி. தீர்த்தம் இந்திர தீர்த்தம், காவிரி முதலியன. கிழக்குப்பார்த்த சந்நிதி. அம்மை தென்பக்கத்தில் மேற்குமுகமாக எழுந்தருளியிருக்கின்றார்.

கல்வெட்டு:

இத்தலத்தைப்பற்றியனவாக 6 கல்வெட்டுக்கள் உள்ளன. அவை 1925 இல் படியெடுக்கப்பெற்றுள்ளன. இராஜாதிராஜன் ஆட்சி ஐந்தாமாண்டில் திருவாலங்காடுடையார்க்கு விளநகரான நித்த விநோத சதுர்வேதிமங்கலத்து விளநாட்டுச்சபையார் நிலம் விட்ட செய்தியை அறிவிப்பது. அதேயாண்டில் இராஜதிராஜவளநாட்டு திருஇந்தளூர் நாட்டு மணற்குடியான உத்தமசோழ சதுர்வேதிமங் கலத்துச் சபையார், செயங்கொண்டசோழ மண்டலத்து ஆக்கூர்நாட்டு ஆக்கூரான இராஜேந்திரசிம்ம சதுர்வேதிமங்கலத்து மேல்பாதி அபிமானமநல்லூரில் அரசற்கு நன்றாக, வழிபடவருவோர்க்கு உணவிற்காக நிலம் வழங்கப்பெற்றுள்ளது [1]. மூன்றாங்குலோத் துங்கன் காலத்து இராஜேந்திர சிம்ம நாடாகிய ஆக்கூரில் தூண்டா விளக்கெரிக்க நாற்பது பொற்காசுக்கு நிலம் வாங்கி உழவரிடம் ஒப்படைக்கப்பட்டது. 6 ஆம் ஆண்டில் அரசியலில் சிறந்த செய்தி ஒன்று அறிவிக்கப்படுகிறது. சிங்களவர்களைத் துணைக்கொண்டு பாண்டியர் கள் படையெடுத்துவந்த படையேறு கலகத்தில் செம்பொன்னார் கோயிலிலுள்ள தேவடியாரும் கோயில் நியாயத்தாருமாகச் சேர்ந்து எல்லாத் திருவுருவங்களையும் திருவிடைக்கழி இளையபிள்ளையார் கோயிலில் கொண்டுபோய் வைத்துப் பாதுகாத்தனர். மேலும் அவ்வாண்டில் பெரிய புயற்காற்றடித்திருக்கின்றது. அதனால் தப்பாத வேதியன் திருவாசல் வடக்குச்சுவரும் தேரடி இரண்டும் வீழ்ந்தன [2] இன்னார் என்று அறியப்படாத இராஜகேசரி வர்மன் ஆறாம் ஆண்டில் பூசைக்கும் பணிக்குமாகத் தலைச்செங்காட்டுச் சபையார் ஒருவனி டமிருந்து நிலம் வாங்கி அரசற்கு நன்றாக அளித்தனர். இதில் இராஜ சுந்தரன்வீதி என்ற ஒரு தெருப்பெயர் குறிப்பிடப்படுகின்றது [3]. சரபோஜிராஜா கலி 4821-ல் செம்பொன்னாதர் கோயிலுக்குத் தலைச் சங்காடு சபையார் கிராமங்களின் நன்மைக்காக ஆண்டுக்கு ஒருமுறை

[1]-172, 173 of 1925, [2]-170, 171 of 1925, [3]-174 of 1925.

Koviloor Digital Library

வரியோடுகூட தறிகளின் உற்பத்தியளவையொட்டி ஆயம் வசூலித்துக் கொள்ளவும் காவேரிப்பட்டினம் அய்யாவையனும் தாண்டவராய முதலியாரும் வசூலிப்பாளராயிருக்கவும் ஆணை தரப்பட்டுள்ளது [1].

23. திருப்புத்தூர்

பாண்டிய நாட்டுத்தலம். தஞ்சை மதுரை பேருந்து வழித் தடத்திலுள்ளது. மதுரை, புதுக்கோட்டை, காரைக்குடி, சிவகங்கை ஆகிய ஊர்களிலிருந்து பேருந்து வசதிகள் உள்ளன. இத்தலம் திருப் புத்தூர் எனவும், கோயில் திருத்தளி எனவும் வழங்கும். அப்பர் சுவாமிகள் 'திருப்புத்தூரில் திருத்தளியான் காண்' என அறிவிப்பார் கள். உமாதேவியும், இலக்குமியும் பூசித்துப் பேறுபெற்ற தலம். இறைவன் அம்மை சந்நிதிகளுக்கு இடையில் பைரவர் சந்நிதி இருக்கிறது. பைரவர் சிறப்புடையவர். ஆனந்தக்கூத்தப்பெருமான், சிவகாமியம்மை திருவுருவங்கள் கற்சிலையாலான கண்கவரும் வனப்பின. விஷ்ணுவுக்கும் சந்நிதி உண்டு.

சுவாமிபெயர் புத்தூரீசர்; திருத்தளிநாதர். அம்மை சிவகாமி அம்மையார். தீர்த்தம் திருத்தளித் தீர்த்தம், சிவகங்கை முதலியன. தலவிருட்சம் கொன்றை.

கல்வெட்டு:

அரசியலாரால் 1908ம் ஆண்டில் படியெடுக்கப்பெற்ற கல்வெட்டுக்கள் 51 உள்ளன.

இறைவன் திருப்பெயர் திருக்கற்றளிப்பட்டாரர்; [2] ஸ்ரீதளி பரமேஸ்வரர் [3], திருத்தளி உடைய பரமேஸ்வரர், திருத்தளி ஆண்ட நாயனார் [4], என வழங்கப்பெறுகின்றார். அம்மை திருக்காமக் கோட்டமுடைய நாச்சியார் [5], திருப்பள்ளிறை நாச்சியார் எனவும் வழங்கப்படுகின்றார். இவர்களேயன்றிக் கோயிலுக்குள்ளே கைலாச முடைய நாயனார் [6], அகஸ்தீஸ்வரம் உடையார் [7] கோயில்களும் இருந்தனவாக அறியப்படுகின்றன. பைரவர் கோயில் மிகப் பிரசித்த மானது [8]. விஜயநகரத்தை அரசாண்ட வீரப்பிரதாப அச்சுததேவ

[1]-175 of 1925, [2]-90 of 1908, [3]-93 of 1908, [4]-99 of 1908, [5]-123 of 1908, [6]-114 of 1908, [7]-130 of´ 1908, [8]-121 of 1908.

Koviloor Digital Library

மகாராயர் நன்மைக்காகப் பெரிய ராமப்ப நாயக்கரால் பைரவருக்கு நிலம் அளிக்கப்பட்டதாகத் தெரிகிறது. இதைப்பற்றிய குறிப்புக்கள் விஜய நகர அரசர்கள் கல்வெட்டுக்களில் இதற்கு முந்தியதில் இல்லை.

கைலாசமுடைய நாயனார் கோயில் தேவரடியாளான ஒருத்தி திருநாவுக்கரசு நாயனார் படிவத்தைப் பிரதிஷ்டை செய்யவும், நைவேத்தியத்திற்காகவும் பொன் அளித்த செய்தியைத் திரிபுவன சக்கரவர்த்தி விக்கிரமபாண்டியன் 12-ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டொன்று காட்டுகின்றது [1]. கோவில் அடியாளுக்கிருந்த அடியார் பக்தி என்னே! திருஞானசம்பந்தர் திருமடமும்[2] திருத்தொண்டத்தொகைத் திருமடமும்[3] சைவமடம் ஒன்றும் இருந்தன. இவற்றுள் திருஞான சம்பந்தர் திருமடத்தில் ஸ்ரீகண்ட சிவாச்சாரியர் இருந்ததாகவும் சோழதேசத்தில் இருந்த நிலத்தை விற்று அவருக்குக் கொடுக்கப் பெற்றதென்றும் அதே கல்வெட்டு அறிவிக்கின்றது. இக்கல்வெட்டு மாறவர்மன் சுந்தர பாண்டியன்I (கி.பி.1214-35) காலத்தது.

இவையன்றிக் கிராம தேவதைகளாக அங்காளம்மன் கோயில்[4], நின்ற நாராயணப்பெருமாள்கோயில் [5] இவைகளும் திருப்புத்தூர் கிராமங்களில் இருந்தனவாகக் குறிக்கப்படுகின்றன. பெருமாள் கோயில், திருத்தளி உடையார்கோயிலிலேயே இருந்ததாகக் குறிக்கப் பெறாமை ஊன்றி அறிதற்குரியது. இத்தலத்து நிகழ்ச்சிகள் யாவும் பாண்டியர் காலத்துக் கல்வெட்டுக்களாகவே பெரும்பாலும் அமைந்திருக்கின்றன. ஸ்ரீவல்லப பாண்டியன் காலத்தில் இராஜேந்திரசோழ கேரளனான நிச்சலராஜனால் கேரளசிங்க வளநாட்டில் விளக்கிற்காக 50 ஆடு கொடுக்கப்பெற்றிருக்கிறது [6]. அரசனாலேயே 25 பசுக்களும் ஒரு காளையும் விளக்கிற்காகக் கொடுக்கப்பெற்றிருக்கின்றன[7]. சோழ தேசத்தில் கயாமாணிக்க வள நாட்டு மருகல் நாட்டுப் புத்தனூரில் வசித்த ஒருவர் 25 பசுக்களையும் ஒரு காளையையும் விளக்கிற்காகக் கொடுத்தார்.[8] காளிங்கராயன் வேண்டுகோளுக்காக இரண்டு கிராமங்கள் அளிக்கப்பெற்றன. உலக முழுதுடையாள் என்னும் அரசியால் மடப்பள்ளித் திருப்பணி செய்யப் பெற்றது [9].

பராக்கிரம பாண்டியன்:

இவன் காலத்திய கல்வெட்டுக்கள் 4 உள்ளன. அவற்றால்

[1]-117 of 1908, [2]-129 of 1908, [3]-6 of 1908, [4]-138 of 1908, [5]-140 of 1908, [6]-93 of 1908, [7]-108 of 1908, [8]-109 of 1908, [9]-115 of 1908

Koviloor Digital Library

இவன் ஆட்சி பதினொராம் ஆண்டில் புறமலைநாட்டுப் பொன்னமராவதியான இராஜேந்திரசோழ நிஷதராயன் என்பவனால் திருத்தளி உடையார் கோயில் உற்சவத்திற்காக நெல் அளிக்கப்பெற்றது [1]. திருப்புத்தூர்ச் சபையார்கூடி நரலோக வீரன் சந்தி என்னும் விழாவிற்காக நிலம்விற்றுக் கொடுத்த வரலாறு அறிவிக்கப்பெறுகிறது [2]. ஓர் அந்தணனால் திருப்பள்ளி அறை நாச்சியார் நிவேதனத்திற்காகப் பொன் அளிக்கப்பெற்றது. உய்யவந்தான் கண்டிதேவனான காங்கேயன் என்பவனால் கோயிலுக்கு அளிக்கப்பெற்ற சாசனங்கள் பட்டியலாகக் குறிக்கப்பெற்றிருக்கின்றன.

குலசேகர பாண்டியன்:

நியமம் என்னும் ஊரான் ஒருவனால் விளக்குத்தண்டுக்காகப் பொன்னும், தேனாற்றுப்பாசன வசதியும் செய்து கொடுக்கப்பெற்றதாக அறியப்பெறுகிறது. அதிசயப் பாண்டிய நல்லூரான குட்டக்குடியில் கண்டன் உய்யவந்தானான காங்கேயனால் திருப்பதியம் விண்ணப்பிப்பார்க்கு இறையிலியாக அளிக்கப்பெற்றது. இந்த நிலம், வீரகுணப் பெருமாள் என்பவரால் திருப்புத்தூர் திருத்தளியிலுள்ள கூத்தாடு தேவரான நடராஜ தேவருக்கு அளிக்கப்பெற்றிருந்தது. அதே கோயிலிலுள்ள சைவமடம் ஒன்றிற்குத் திருவாலந்துறை உடையானான திருக்கொடுங்குன்ற முடையான் நிஷதராஜனால் சில வரிகள் வசூலித்துக்கொள்ள உரிமை அளிக்கப்பெற்றது. திருப்புத்தூர் மூல பரிஷத் என்னும் சபையார் மதுரைசென்று கோயில் நிலங்களுக்கு வரி கட்டி வரவேண்டியதற்காக வழிப்பயணச்செலவான ஒரு குறிப்பிட்ட தொகையைத் தள்ளுபடி செய்து கொடுத்திருக்கிறான்.

கைலாசமலைநாதர் கோயில் திருவிழாவிற்காகச் சம்வத்சர வாரியமாக வரி தள்ளுபடி செய்தமை குறிக்கப்பெற்றுள்ளது. தயாபஞ்சகம் என்றழைக்கப்படும் மண்டபத்தில் மூலச்சபையார் கூடிச் சில கொடுக்கல் வாங்கல்கள் செய்த செய்தியும், திருத்தொண்டத் தொகையான் திருமடமும் குறிக்கப்பெறுகின்றன. சோழபாண்டிய வளநாட்டு குலசேகரநாட்டுப் பிராமணி ஒருவனால் கோயிலில் நான்கில் மூன்று பங்கு விளக்குக்களை ஏற்றப் பொன் வழங்கப் பெற்றது. கண்டிய தேவரால் திருக்காமக் கோட்டமுடைய நாச்சியாரை மருந்து சாத்திப் பிரதிஷ்டைசெய்யத் தம்முடைய நிலக்குடிவார உரிமை விற்றுக் கொடுக்கப்பட்ட செய்தி அறியப்பெறுகிறது [3], கோயில் கணக்கர்களால் தவறிழைக்கப்பெற்ற கோயில் நிலங்களைத்

[1]-94 of 1908, [2]-98 of 1908, [3]-123 of 1908

Koviloor Digital Library

திரும்பவும் அளந்து கட்டி மீண்டும் கோயிலுக்கே உரிமையாக்கியதாக இவனுடைய 23 ஆம் ஆண்டுக் கல்வெட்டு அறிவிக்கிறது. தேவர கண்டன் மனைவியான அவனிமுழுதுடையாளால் திருமஞ்சன தீர்த்தத்திற்காக நான்கு தண்ணீர்ப் பானைகள் அளிக்கபெற்றன.

மாறன்சடையன்:

இவன் காலத்தில் 40 கழஞ்சு பொன் அளிக்கப்பெற்ற செய்தி அறிவிக்கப்பெறுகிறது [1]. நாகராஜதேவன் I (கி.பி. 985 - 1013) திருப் புத்தூர் சபையார் உறங்காப்புளி அடியில்கூடி ஏதோ தீர்மானித்ததாகத் தெரிகிறது. சிதிலமாதலின் முழுவரலாற்றுக் குறிப்பும் தெரியவில்லை [2]

வீரபாண்டியன்:

திருத்தொண்டத் தொகைத் திருமடத்திற்குத் திருப்புத்தூர்ச் சபையார்கூடி இறையிலிசெய்ததை அறிவிக்கிறது. தயாபஞ்சகம் என்னும் மண்டபத்தைத் திருப்பணிசெய்த வரலாறும் குறிக்கப் பெறுகிறது. தேனாற்றுப் பாசனமான கொறைக்குடியான் அவையன் பெரிய நாயனாரான விசயாலய தேவனால், யவனர்கள் ஆக்கிரமித்த கோயிலை வென்று திரும்பவும் பெற்றுப் புனிதப்படுத்தப்பெற்றது. இது நடைபெற்ற நாள் 2-8-1339 திங்கட்கிழமை என்று *எபிகிராபிகா இண்டிகா* பகுதி 11 பக். 138 கூறுகிறது. 2-12-1339 இல் அவையன் சொரக்குடி மாளவச்சக்ரவர்த்தியினால் பாடிக்காவல் உரிமைகள் விற்கப்பெற்றன. சில கோயில் நிலங்கள் அருச்சகருக்கு மானியமாக அளிக்கப்பெற்றன [3].

விஜயநகர அரசரான கிருஷ்ணப்பதேவமகாராஜன் காலத்து சகம் 1432 இல் பாண்டி மண்டலத்து கேரளசிங்க வளநாட்டுக் கிராமங் களான நாரணமங்கலம், காரையூர் என்ற இரண்டையும் நரசிம்மராய செல்லப்பரது சந்திக்காகக் கோயிலுக்கு அளித்தான். அவை இரண்டும் இப்பொழுது செல்லப்பாபுரம் என்று வழங்கப்படுகின்றன. அச்சுத தேவ மகாராயர் காலத்தில் அருவியூர் நகரமான குலசேகரப் பட்டினத் தான் ஒருவனால் விளக்கிற்காக நிலம் அளிக்கப்பெற்றிருக்கிறது [4]. பெரிய ராமப்பநாயகருக்கு நன்மை உண்டாக வயிரவருக்கு நிலம் அளிக்கப்பெற்றது. கிருஷ்ணராயர் காலத்து வீரநரசிம்மராய நாயக்கரான செல்லப்பர் நன்மைக்காகத் திருப்புத்தூர் உடையான் சிங்கம நாயக்கனால் நிலம் வழங்கப்பெற்றது [5]. நாகமநாயக்கர்

[1]-90 of 1908, [2]-105 of 1908, [3]-128 of 1908,
[4]-112 of 1908, [5]-91 of 1908.

Koviloor Digital Library

மகனான விசுவநாத நாயக்கர் நன்மைக்காக ஒரு கிராமம் (வரகுண புத்தூர்) வழங்கப்பட்டது. இவையன்றி நின்ற நாராயண பெருமாள் கோயிலுக்கும் அங்காளம்மன் கோயிலுக்கும் நிபந்தங்கள் அளிக்கப் பெற்றிருப்பதை அறிவிப்பன மூன்று கல்வெட்டுக்கள். இங்ஙனம் திருப் புத்தூர்க்கோயில் பல பாண்டிய மன்னர்களுடைய சமய உணர்ச்சிக்கு அரணாக இருந்தமை அறிந்து இன்புறுதற்குரியது.

24. திருப்புன்கூர்

சோழநாட்டுக் காவிரிவடகரைத்தலம். வைத்தீஸ்வரன் கோயிலிலிருந்து 3 கி.மீ. தூரத்தில் உள்ளது. பேருந்து வசதிஉண்டு.

இது புன்கமரத்தைத் தலவிருட்சமாகக் கொண்டதாகலின் திருப்புன்கூர் எனப்படுவதாயிற்று. வடமொழியில் காஞ்சாரண்யம் என வழங்கும். இத்தலத்திற்குப் பக்கத்திலுள்ள ஆதனூரில் அவதரித்த திருநாளைப்போவார் என்னும் நந்தனார் பக்திக்காக நந்தியை விலகும்படிச் செய்த தலம். இவர் வெட்டிய திருக்குளம் ஒன்றும் இருக்கின்றது. இதற்கு வடக்கே உள்ள திருப் பெருமங்கலத்தில் வசித்த ஏயர்கோன் கலிக்காமநாயனார் திருக்கோயிலைப் புதுக்கிப் பல திருப்பணிகளைச் செய்திருக்கிறார். கலிக்காமர் வேண்டுகோளுக்காக இறைவன் 12 வேலி நிலங்களைப் பெற்றுக்கொண்டு மழைபெய்வித்து உலகை உய்வித்தார். இதனைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் பதிகத்து ''வையகம் முற்றும் மாமழை'' என்ற பாடலால் குறிப்பிடுகின்றார்கள். இச்செய்தி கோயில் *திருப்பண்ணியர் விருத்தத்*திலும் கூறப்பெறு கிறது.இறைவன் பெயர் சிவலோகநாதர்; இறைவிபெயர் சொக்க நாயகி; தீர்த்தம் கணபதி தீர்த்தம்; விருட்சம் புன்கமரம்.

கல்வெட்டு:

411 முதல் 415 வரையிலுள்ள ஐந்து கல்வெட்டுக்கள் உள்ளன. 1918 இல் படியெடுக்கப்பெற்றன. இறைவன் சிவலோகமுடையநாதர் என்று வழங்கப்பெறுகின்றார் [1]. இராஜராஜன் ஆட்சி 11ம் ஆண்டில் சிவலோகமுடையார் கோயிலிலேயே வடக்கு இரண்டாம் பிராகாரத்து விக்கிரம சோழீச்சுர முடைய நாயனார் கோயிலைக்கட்ட விக்கிரம சோழனான வயநாட்டரையன் மருதூர் உடையான் நிலமளித்து இருக்கிறான் [2]. கோப்பெருஞ்சிங்கன் 2 ஆம் ஆண்டில் இத் தலம்

[1]-411 of 1918, [2]-412 of 1918

Koviloor Digital Library

இராஜாதிராஜவளநாட்டு திருவாலிநாட்டுத் திருப்புன்கூர் எனக் குறிப்பிடப்பெற்றுள்ளது. பாண்டிய குலாசனி வளநாட்டுக் கீழையூர் நாட்டுக் குறிச்சியான் ஒருவன் சிவலோகமுடைய மாதேவர் திரு மஞ்சனத்திற்கும் திருமாலைக்குமாக நிலமளித்திருக்கிறான் [1]. ஏனைய கல்வெட்டுக்கள் விளக்கிற்காக நிலமளித்த செய்தியை அறிவிப்பன.

25. திருச்சோற்றுத்துறை

சோழநாட்டுக் காவிரித்தென்கரைத்தலம். தஞ்சாவூர் - கண்டியூரிலிருந்து பேருந்து வசதி உள்ளது.

அருளாளர் என்னும் அந்தண அன்பருக்கு அட்சயபாத்திரம் அளித்துப் பஞ்சகாலத்தில் அடியார்களுக்கு அன்னமிட்டுக் காத்த தலம். கௌதம முனிவர் தவஞ்செய்து முத்திபெற்றமையால் கௌத மாஸ்ரமம் என்று வழங்கப்படும். இந்திரன், சூரியன் முதலியோர்கள் வழிபட்டு உய்ந்தனர். சூரியன் வழிபட்ட செய்தியை ''செங்கதிரோன் வணங்கும் திருச்சோற்றுத்துறைநாதன்'' என்னும் நேரிசையால் அறிய லாம். திருவையாற்று சப்தஸ்தானஸ்தலங்களில் ஒன்று. இறைவன் பெயர் தொலையாச் செல்வர். இறைவியின்பெயர் ஒப்பிலாம்பிகை. வட மொழியில் முறையே ஓதவனேசுவரர், அன்னபூரணி எனவும் வழங்கப் பெறும். தீர்த்தம் காவிரி.

கல்வெட்டு:

இத்தலத்தைப் பற்றியதாக அரசியலார் படி எடுத்த கல் வெட்டுக்கள் 12 ; எம்.எஸ்.எஸ். எடுத்தன 27 ; வி. ரங்காச்சாரியா எம்.ஏ. அவர்கள் எடுத்தது 25 ஆக 64 கல்வெட்டுக்கள் உள்ளன.

இவை பராந்தகன், இராஜராஜன் I, இன்னான் என்று கணித் தறியமுடியாத கோராஜகேசரி, பரகேசரி, கோநேரின்மை கொண்டான். குலோத்துங்கன் காலத்தன. இவை பெரும்பாலும் சிதைவுற்றிருத்தலின் நிகழ்ச்சிகளை நன்கு அறிந்து கொள்ளக்கூட வில்லை. ஆயினும் விளக்குக்களுக்காகவும், நிவேதனத்துக்காகவும், விழாவிற்காகவும் நிலமும் பொன்னும் அளித்த செய்திகள் குறிக்கப்பெறுகின்றன.

ஒரு கல்வெட்டு நடனமாதிற்குச் சர்வமானயம் விட்ட செய்தியைத் தெரிவிக்கிறது. நலமல்லூர் தேவர் என்பவர் தொலையாச்

[1] 411 of 1918.

Koviloor Digital Library

செல்வருக்கு விளக்குத்தண்டு செய்ய நிலமளித்த செய்தி தெரிகிறது. கடவுள் தொலையாச்செல்வர் என்றும் திருச்சோற்றுத்துறை நாயனார் என்றுங் குறிப்பிடப்பெறுகிறார்.

26. திருநறையூர்

சோழநாட்டுக் காவிரித்தென்கரைத்தலம். கும்பகோணம் நாச்சியார்கோயில் பேருந்தின் வழியே நறையூரை அடையலாம்.

தலத்தின் பெயர் திருநறையூர். ஆலயத்தின் பெயர் சித்தீச்சரம். சித்தர்கள் வழிபட்டுப் பேறுபெற்ற இடமாதலின் இப்பெயர் பெற்றது. இறைவன் சித்திநாதர். அம்மை அழகம்மை. பிள்ளையார் ஆண்ட பிள்ளையார். இங்கு வழிபட்டுய்ந்தோர் குபேரன், தேவர்கள், கந்தருவர்கள் ஆகியோர். தீர்த்தம் பிரம தீர்த்தம். இது கோயிலுக்கு வடபால் உள்ளது. தேன்சித்தி தீர்த்தம் என்ற ஒன்றும் உள்ளதென்பர்.

கல்வெட்டு:

இத்தலத்தில் அரசியலார் படியெடுத்த கல்வெட்டுக்கள் 24 உள்ளன. அவற்றுள், முதல் இராஜராஜன் காலமுதல் குலோத்துங்கன் III காலம் வரையிலுள்ள சோழமன்னர்களின் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. கி.பி. 1118 முதல் 1135 வரை ஆண்ட விக்கிரமனே இத்தலத்தில் மிக ஈடுபாடுடையவன் என்பது தெரிகின்றது. இங்குக் குறிக்கப்பெற்ற அரசர்கள் இராஜராஜன்I, வீரராஜேந்திரன் II, குலோத்துங்கன்I, II, III, விக்ரமசோழன், இராஜராஜன் II, இராஜாதிராஜன்II. இவைகளில், இவ்வூர் க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுத் திருநறையூர் நாட்டுத் திருநறையூர் எனவும், அருண்மொழித்தேவவளநாட்டுத் திருநறையூர் எனவும், விக்கிரமன் முதற் குலோத்துங்கன் இவர்கள் காலத்துக் குலோத்துங்க சோழவள நாட்டுத் திருநறையூர் எனவும் பஞ்சவன் மாதேவியான சதுர்வேதி மங்கலத்துத் திருநறையூர் எனவும் குறிக்கப்பெற்றுள்ளது.

சுவாமிபெயர் சித்தநாதேஸ்வரமுடையதேவர் எனவும் சித்தநாதேஸ்வரமுடையார் எனவும் வழங்கும்[1]. இங்குள்ள பிக்ஷாடன தேவர் சிறப்புடையார். இவருக்குத் திருநறையூர்ச் சிவப்பிராமணர்

[1] 156 of 1908.

Koviloor Digital Library

ஒருவர் 30 காசு பொன்னை நிவேதனத்திற்காக அளித்தார் [1]. இங்கு வழிபாட்டிற்காக வரும் சிவயோகிகட்கு உணவுக்காக மண்ணி நாட்டுக்கருப்பூர் உடையான் ஒருவர் நிலம் விட்டார். இத்தலத்துள்ள பிடாரிகோயிலுக்கு நிலம்விட்ட செய்தியும் குறிக்கப்பெறுகிறது[2]. ஏனைய கல்வெட்டுகள் விளக்குக்காகவும் நிவேதனத்திற்காகவும் பலர் நிலமும் பொன்னும் அளித்ததை அறிவிக்கின்றன.

27. திருக்குரங்கணில் முட்டம்

இது தொண்டைநாட்டுத் தலங்களில் ஒன்று. காஞ்சிபுரத்திலிருந்து வந்தவாசி செல்லும் பேருந்துகளில் ஏறி, பாலாற்றைக் கடந்தவுடன் தூசி என்னும் இடத்தில் இறங்கி கிழக்கே 2 கி.மீ. சென்றால் கோயிலை அடையலாம்.

குரங்காகிய வாலியும், அணிலும், காகமும் வழிபட்டதால் இப்பெயர் பெற்றது. முட்டம் - காகம். இறைவன் திருநாமம் வாலி வழிபட்டதைக் காட்டும் சான்று. காக்கைமடு, காக்கை வழிபட்டதைக் காட்டுவது. மூன்றின் உருவங்களும் சுதையால் ஆலயவாயிலில் அமைக்கப் பெற்றிருக்கின்றன.

இறைவன் திருநாமம் வாலீசுவரர்; இறைவி திருநாமம் இறையார்வளையம்மை. இதனையே ''இறையார் வளையாளை ஓர்பாகத்தடக்கி'' எனப் பதிகம் அறிவிக்கிறது. தீர்த்தம் வாலி தீர்த்தம். இத்தலம் காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலிலிருந்து தெற்கே 12 கி.மீ. தூரத்தில் பாலாற்றின் தென்கரையில் இருக்கிறது.

கல்வெட்டு:

இத்தலத்தைப்பற்றியனவாக 6 கல்வெட்டுகள் உள்ளன. அவை கோநேரின்மைகொண்டான், குலோத்துங்கன், இராஷ்டிரகூட கன்னரதேவன், கிருஷ்ணதேவராயர் இவர்கள் காலத்தன. அவற்றால் இத்தலம் காளியூர்க்கோட்டத்து இருகழிநாட்டு மாவண்டூர்ப்பற்றத்துப் பல்லவபுரமான திருக்குரங்கணில் முட்டம் என்று குறிப்பிடப் பெறுகிறது[3]. கடவுள் திருக்குரங்கணில் முட்டமுடைய நாயனார் என்றும், கொய்யாமலரீசுவர தேவர் என்றும் குறிப்பிடப்பெறுகிறார். பூஜா விருத்திக்காகச் சகம் 1451இல் கிருஷ்ணதேவ மகாராயர் பல்லவ

[1] 161 of 1908, [2] 175 of 1908, [3] 290 of 1902.

Koviloor Digital Library

புரம் கிராமத்தை அளித்தார்[1]. இராஷ்டிரகூட கன்னரதேவன் ஸ்ரீ பலி பூஜைக்காக நிலம் அளித்தான். சம்புவராயரால் சத்திமங்கலமாகிற அம்மநல்லூர் கிராமத்தை நிவந்தமாகவிட நீறணிந்தான் சேதுராய னுக்கு உத்தரவிட்டான்[2].

28. திருவிடைமருதூர்

இத்தலம் மத்தியார்ச்சுனம் எனவும் வழங்கப்பெறும். வடக்கே ஸ்ரீ பர்ப்பதமாகிய மல்லிகார்ச்சுனமும், தெற்கே அம்பாசமுத்திரத்திற்கு அருகாமையிலுள்ள திருப்புடைமருதூராகிய புடார்ச்சுனமும் விளங்க இவற்றின் இடையில் இது விளங்குதலின் இப்பெயர்பெற்றது. அர்ச்சுனம் - மருது. இம் மூன்றுதலங்களுமே மருதைத் தலவிருட்ச மாகக் கொண்டிருப்பது அறியத்தக்கது.

இது சோழநாட்டில் காவிரிக்குத் தென்கரையில் அமைந்து உள்ள தலம். மயிலாடுதுறை - கும்பகோணம் இருப்புப்பாதையில் இரயில் நிலயம். மயிலாடுதுறை - கும்பகோணம் பேருந்துச் சாலையில் உள்ளது.

வழிபட்டோர் உமாதேவியார், விநாயகர், முருகன், விஷ்ணு, காளி, இலக்குமி, சரஸ்வதி, வேதங்கள், மூன்றுகோடி உருத்திரர், பன்னிரு சூரியர், வசிஷ்டர், அயிராவணமென்னும் யானை, சிவ வாக்கியர், கபிலர், அகஸ்தியர், வரகுணதேவர், பட்டினத்தடிகள் முதலியோர்.

வரகுணதேவ பாண்டிய மன்னனுக்குப் பிரமகத்தி நீங்கிய தலம். இப்பிரமகத்தி இரண்டாங் கீழக்கோபுரத்து வாயிலில் வலப் பக்கத்தில் இருக்கின்றது. கிழக்குவாயிலில் பட்டினத்தடிகளும் மேற்கு வாயிலில் பத்திரகிரியாரும் எழுந்தருளி இருந்தனர். அம்மை மௌனமாய் இருந்து தவஞ்செய்த மூகாம்பிகைசந்நிதி, அம்பாள் கோயில் வாசலில் தனியே இருக்கிறது. பெரியபிராகாரத்திற்கு அஸ்வ மேத பிராகாரம் எனப் பெயர். அதனை வலம்வரின் அஸ்வமேதயாகம் செய்தபலன் சித்திக்கும் என்பது மரபு. பேய்பிடித்தவர்களும் பைத் தியம் பிடித்தவர்களும் வலம்வந்தால் அவை நீங்குகின்றன என்பது இன்றும் கண்கூடு. இத்தலம் மகாலிங்கத்தலமாக, இதனைச் சுற்றி சிதம்பரம் நடராஜர் சந்நிதியாகவும், ஆலங்குடி தட்சணாமூர்த்தி

[1] 295 of 1902. [2] 291 of 1902.

Koviloor Digital Library

சந்நிதியாகவும், சூரியனார்கோயில் நவக்கிரகங்களின் சந்நிதியாகவும், திருவலஞ்சுழி விநாயகர் சந்நிதியாகவும், சுவாமிமலை முருகன் சந்நிதியாகவும், சீகாழி வயிரவர் சந்நிதியாகவும், சேய்ஞலூர் சண்டேசுவரர் சந்நிதியாகவும் விளங்குகிறதென்பர். இத்தலத்துத் தைப்பூசவிழா மிகச் சிறந்தது. காவிரி அயிராவணத்துறையில் சுவாமிசென்று தீர்த்தம் அருளுவர்.

கல்வெட்டு:

இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டுக்கள் 149. அவை பராந்தகன் I (கி.பி. 905-947) குலோத்துங்கன் III வரையிலுள்ள சோழ பரம்பரையினர் காலத்திலும் வரகுணன், சுந்தர பாண்டியன் முதலிய பாண்டியமன்னர்கள் காலத்திலும் வெட்டப்பெற்ற கல்வெட்டுக்கள். இவற்றால் அறியப்படும் சிறந்த நிகழ்ச்சிகள். இத்தலம் உய்யக் கொண்ட சோழவளநாட்டு, திரைமூர் நாட்டு திருவிடைமருதூர் என வழங்கப்பெறுகிறது. பரகேசரி வர்மனான முதல் இராஜேந்திரன் மூன்றாமாண்டில் ஏகநாயகன் திருவாசலுக்கு விளக்கு ஏற்றி வர ஆடுகள் அளித்தமை அறியப்படுகிறது[1]. இதனால் மகாலிங்க சுவாமிக்கு ஏகநாயகர் என்ற பெயருண்மை அறியலாம்.

இத்தலத்து எழுந்தருளியுள்ள சோமாஸ்கந்தர் ஆடல் விடங்க தேவர் என்று அழைக்கப்பெறுகிறார்[2]. இத்தேவர் இங்கநாடு பல்லவ ராயனால் பிரதிஷ்டை செய்விக்கப்பெற்றவர். முதல் பராந்தகன் முப்பத்தேழாம் ஆட்சியாண்டில் திருவாதிரை, சதயம், அமாவாசை இந்த நாட்களைக்கொண்டாட மான்யம் விட்டிருக்கிறான். திருவிடைமருதூர் மூலஸ்தானம் தெற்குப் பக்கத்திலுள்ள பூர்ணகணபதி கருப்பக் கிருகத்திற்கு 8 இலைக்காசு கொடுத்தான்[3]. இதனால் மூலஸ்தானக் கணபதி பூர்ணகணபதி என வழங்கப்பெற்றமை அறியலாம். தைப்பூச விழாவைப்பற்றிச்[4]சில கல்வெட்டுகள் அறிவிக்கின்றன. மகாலிங்க சுவாமிக்குச் செண்பகப்பூ நித்தியம் சாத்தி வருவதற்காகத் திருவெண் காடு பிச்சனால் நிபந்தம் அளிக்கப்பெற்றது[5]. சோழன் இராஜகேசரி வர்மன் காலத்தில் (கி.பி.985-1113) 10-ஆவதாண்டில் 278-ஆம் நாளில் அரசி பஞ்சவன் மாதேவியாரால் உமாசகிதருடைய தங்க உருவம் அமைக்கப்பெற்றது[6]. திருக்காமக்கோட்டமுடைய நாச்சியாருக்கு இராஜகேசரிவர்மன் ஒன்பதாமாண்டில் (கி.பி.994) நம்பிராட்டியார் பஞ்சமாதேவியாரால் ஒன்பது கழஞ்சு பொன் அளிக்கப்பெற்றது[7].

[1] 200 of 1907, [2] 212 of 1907, [3] 239 of 1907, [4] 246, 248 of 1907, [5] 247, 260 of 1907, [6] 254 of 1907, [7] 279 to 286 of 1907.

Koviloor Digital Library

பல கல்வெட்டுக்களால் திருமஞ்சனம் கொண்டுவர மண் குடங்கள் அளிக்கப்பெற்றமை அறியப்படுகின்றது. இதனால் அபிஷேகத்திற்கு மண் குடங்களினாலேயே தீர்த்தம்கொண்டு வந்தமை அறியலாம். விக்கிரமசோழன் 5 ஆம் ஆண்டில் மாணிக்கக் கூத்தர் கோயில் குறிக்கப்பெறுகிறது. இது நடராஜர் கோயிலோ இல்லையோ என்பது அறியக்கூடவில்லை. சோழர்கள் காலத்துச் சமயாசாரியரிடம் உள்ள அன்பைவிளக்கும் அறிகுறியாக அமைந்த அடையாளங்கள் பல. அவற்றுள் ஜெயங்கொண்ட சோழவளநாட்டின் திருவழுந்தூர் நாட்டின் விக்கிரம சோழன் ஆறலூரிலுள்ள வாணாதிராயன் என்பவன் ஆளுடைய பிள்ளையார் படிவத்தை அமைக்கப் பணங்கொடுத்தான்[1].மேலும் ஆளுடையபிள்ளையார், ஆளுடையநம்பி இவர்களுடைய படிவத்திற்காக நிவேதிக்க வரியில்லாத நிலத்தை உய்யக்கொண்டான் வளநாட்டில் இருமரபுந்தூய பெருமாள் சதுர்வேதி மங்கலத்தில் அளித்தான்[2]. விக்கிரம பாண்டி யன் சாந்திவிழா என்ற ஒன்று விக்கிரம பாண்டியன் காலத்தில் கொண்டாடப்பெற்றதாக அறிவிக்கிறது[3]. சிறப்பில் சிறப்பாக நாலாவது பிராகாரத்திலுள்ள மூகாம்பிகைபிடாரி, யோகிருந்த பரமேஸ்வரி என வழங்கப்பெறுகிறார்[4].

ஏனைய கல்வெட்டுக்கள் விளக்கீட்டுக்காக அரசனும் அரசியும் நிலமும், பொன்னும், ஆடும் அளித்தமை அறிவிப்பன.

29. திருஅன்பிலாலந்துறை

சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். திருச்சிராப்பள்ளிக்கு அருகே லால்குடிக்குக் கிழக்கே 5 கி.மீ. தூரத்தில் கொள்ளிடத்தின் வடகரையில் உள்ளது. திருச்சிராப்பள்ளி, லால்குடி ஆகிய ஊர்களிலிருந்து பேருந்துகள் உள்ளன.

அன்பில் என்பது தலப்பெயர். ஆலந்துறை என்பது கோயில் பெயர். பிரமதேவர், வாகீச முனிவர் முதலியோர் பூசித்த தலம். இது கொள்ளிடக்கரையில் உள்ளது திருஞானசம்பந்தப் பெருமான் இத்தலத்தெழுந்தருளியிருந்தபோது, கொள்ளிடம் நீர்ப்பெருக்காய் இருந்ததாகவும், இக்கரையில் இருந்தே பாடியதாகவும், இறைவன் ஆணையின்வண்ணம் விநாயகர் காதைச் சாய்த்துக் கேட்டதாகவும் ஒரு கர்ணபரம்பரைச் செய்தியுண்டு. அதற்கேற்ப தலவிநாயகர்

[1] 289 of 1907, [2] 309 of 1907, [3] 313 of 1907,
[4] 307 of 1907.

Koviloor Digital Library

திருவுருவம் முடிசாய்த்துச் செவி சாய்த்துக் கேட்கின்ற பாவனையில் அமைந்திருக்கிறது.

இறைவன்பெயர் சத்யவாகீசர்; இறைவியின்பெயர் சௌந்தர நாயகி. சத்தியலோகவாசியாகிய பிரமனும், வாகீசரும் பூசித்தமையால் சத்தியவாகீசர் என்ற பெயர் போலும். தீர்த்தம் கொள்ளிடநதி.

கல்வெட்டு:

இத்தலத்தைப்பற்றியனவாக 1902 - இல் படியெடுக்கப் பட்டவை பதின்மூன்று கல்வெட்டுக்களும், 1938 - இல் எடுக்கப் பட்டவை ஆறும் உள்ளன. அவற்றில் ஏழு கல்வெட்டுக்கள் திருமால் கோயிலில் உள்ளவை. ஏனையவை சத்தியவாகீசரைப் பற்றியன. கல்வெட்டுகளில் இறைவன்பெயர் பிரமபுரீசுவரர் என வழங்கப் பெறுகிறது. மாறவர்மன் குலசேகரபாண்டியன், மூன்றாம் இராஜேந்திர சோழன், ஹொய்சள வீரராமநாததேவர், மதுரைகொண்ட பரகேசரி வர்மன், இராஜராஜதேவன் முதலியவர்கள் காலத்தனவாகக் காணப்படுகின்றன. இவையெல்லாம் பெரும்பாலும் நிபந்தம் அளிக்கப்பெற்றமையை அறிவிக்கின்றன.[1]

30. திருவையாறு

சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். தஞ்சாவூர் கும்ப கோணம் ஆகிய ஊர்களிலிருந்து பேருந்து வசதிகள் உள்ளன.

இத்தலம் ஐயாறு, பஞ்சநதம், பூலோககயிலாயம் என வழங்கப்பெறும். ஐந்து தெய்விக ஆறுகள் தம்முட் கலப்பதால் வந்த பெயர் என்று நூல்கள் கூறும். ஐந்து ஆறுகளாவன: சூரியபுஷ்கரிணி, சந்திரபுஷ்கரிணி, கங்கை, பாலாறு, நந்திவாய்நுரை என்னும் நந்தி தீர்த்தம் என்பன.

கோயிலுக்குக் காவிரிக்கோட்டம் என்பது திருமுறைகளில் வழங்கும் பெயர், 'காவிரிக்கோட்டத்து ஐயாறுடைய அடிகளோ' என்பது அதற்குப் பிரமாணம். இதற்குக் காவிரிக்கரைக் கண்ணதாகிய ஐயாறு எனப் பொருள்காண்பாரும் உளர். சுவாமி அம்மன் சந்நிதிகள் கிழக்குப்பார்த்தவை. சோமாஸ் கந்தர் கோயில் தனியாக இருக்கின்றது. ஜபேசம் என்னும் முக்திமண்டபம், நூற்றுக்கால் மண்டபம், உற்சவ

[1]-595 to 601 of 1902.

Koviloor Digital Library

மண்டபம் முதலிய சிறந்த மண்டபங்கள் உள்ளன. ஆலயம் தருமை ஆதீன அருளாட்சிக்கு உட்பட்டது.

இறைவன்பெயர் ஐயாறப்பர். செம்பொற்சோதீசுவரர் என்பது திருமுறைகளில் வழங்கும் பெயர். இன்றும் ஐயாறுடைய அடிகள், ஐயாற்றின் பெருமான் எனவும் அவை வழங்குகின்றன. புராணத்தில் கைலாயநாதர், ஜபேசர், பிரணதார்த்திஹரர் எனவும் வழங்கப் பெறுவர். இறைவிபெயர் அறம்வளர்த்தநாயகி, திரிபுரசுந்தரி, தருமாம்பிகை தருமசம்வர்த்தினி என வழங்கும். வல்லபைவிநாயகர், ஓலமிட்ட விநாயகர், ஆதிவிநாயகர் முதலான விநாயக வடிவங்களும், வில்வேள்நாயனார் என்ற வில்லேந்திய சுப்பிரமணியர் வடிவமும் உள்ளன. இங்குள்ள தட்சிணாமூர்த்தித் திருவுருவம் தனிச்சிறப்புடையது. திருவடியில் ஆமையை மிதித்திருப்பது அறிந்து இன்புறுதற்குரியது. இவருக்கு அரிகுரு சிவயோக தட்சிணாமூர்த்தி என்பது பெயர். ஆட்கொண்டார் சந்நிதி மிக விசேஷமானது. எப்போதும் குங்குலியப்புகை கமழ்ந்து கொண்டேயிருக்கும்.

தீர்த்தங்கள் காவிரி, சந்திரபுஷ்கரிணி, சூரியபுஷ்கரிணி, தேனாமிர்த தீர்த்தம், நந்திதீர்த்தம் முதலியன. தலவிருட்சம் வில்வம்.

ஐயாறப்பர் ஆதிசைவவேடந்தாங்கித் தன்னையே பூசித்துக் கொண்டார். இதனைத் திருவாசகம் ''ஐயாறதனிற் சைவனாகியும்'' எனக் குறிப்பிடுகிறது. இதனை ஆத்மபூஜை என்பர். திருநந்திதேவர் சிலாத முனிவர்க்கு மகனாக அவதரித்த தலம். அகத்தியர் பூசித்துக் கயிலை பெற்ற தலம். சுசரிதன் என்னும் அந்தணச் சிறுவன் இறுதியெய்தாத வண்ணம் இறைவன் ஆட்கொண்டார் திருமேனிதாங்கிக் காத்தனர்.

முதன்முதல் பிரியவிருதன் திருப்பணிசெய்தான். அடுத்துக் கரிகாலன் திருப்பணி செய்தான். அடுத்து வேங்கிநாட்டு விமலாதித்தன் இதனைப் புதுக்கினான். முதல் இராஜராஜன் மனைவி உத்தர கயிலாயத்தைப் புதுக்கி ஒலோகமாதேவீச்சரம் எனத் தன்பெயரை இட்டாள்.

சித்திரையில் திருவிழா நடைபெறுகிறது. அதில் 5 - ஆம் திருநாள் ஆத்மபூஜை. சித்திரைப் பூர்ணிமையில் சப்தஸ்தானத் திருவிழா நடக்கும். நந்தியும், அவர் மனைவியான சுயம்பிரகாச அம்மையாருடன் எழுந்தருளுவர்.

Koviloor Digital Library

கல்வெட்டு:

இக்கோயில் முதன்முதல் பல்லவகாலப் படைப்பாக இருக்கலாம் என்பது துவாரபாலகர், கொடுங்கை, தூண் இவற்றைக்கொண்டு துணிகின்றனர். மூன்றாம் பிராகாரத்துக் கீழக்கோபுரம் விக்ரமசோழன் திருப்பணி. கி.பி. 1381இல் செந்தலைக் கருப்பூர் கச்சிவீரப்பெருமான் மகனால் கோயில் திருமதில் மண்டபம் சீர்திருத்தப்பெற்றன. மேலக் கோபுரம், முதல் பிராகாரத்துத் திருமாளிகைப்பத்தி, மூன்றாம் பிராகாரத்துத் தெற்குக் கோபுரம், இடைமருதூர் ஆனையப்ப பிள்ளையாலும், அவர் தம்பி வைத்யநாத அண்ணன் என்பவராலும் எடுப்பிக்கப் பெற்றன. காவிரி பூசப்படித்துறை கட்டியவர்களும் இவர்களே. படித்துறைக்கு அவர்கள் வைத்த பெயர் கல்யாண சிந்து என்பதாம்.

அம்மை பெயர் திருக்காமக்கோட்டத்து ஆளுடைய நாச்சியார், உலகுடைய நாச்சியார் என்பன.

இத்தலம் முதல் இராஜராஜன் காலத்து இராஜேந்திர சிங்க வள நாட்டுப் பொய்கைநாட்டுத் திருவயைாறு எனவும், மூன்றாங் குலோத்துங்கன் காலத்தில் புவனமுழுதுடையான் வளநாட்டுப் பொய்கை நாட்டைச் சேர்ந்ததாகவும், சடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத்து, இராஜராஜ வளநாட்டுப் பொய்கைநாட்டைச் சேர்ந்ததாகவும் குறிக்கப் பெறுகின்றது. இது இன்ன கூற்றத்தைச் சார்ந்தது எனக் குறிக்கப்பெறாமையின் தனியூராக இருக்கலாம் எனத் தெரிகிறது.

ஒலோகமாதேவீச்சரம்; இது உத்தரகைலாசம் எனவும் வழங்கும். இதனைக்கட்டியவர் முதலாம் இராஜராஜனது மனைவியாராகிய தந்திசத்திவிடங்கியாரான ஒலோகமாதேவியார். ஆதலால் இக்கோயில் கி.பி. 1006-இல் கட்டப்பெற்றிருக்கலாம். இங்குள்ள சோமாஸ்கந்தர்க்கு ஒலோக வீதி விடங்கர் எனப்பெயர். இதில் சித்திரைப் பெருவிழா, சதயவிழா கொண்டாடப்பெற்றன.

தென்கயிலாயம்: இதனைத் திருப்பணிசெய்தவர் முதலாம் இராஜேந்திரன் மனைவியான பஞ்சவன்மாதேவியார். இறைவன் பெயர் பஞ்சநதிவாணன். இறைவி அஞ்சலை.

பராந்தகன் I விளக்குப்பல இட்டுவரவும் பொன், வெள்ளி விளக்குக்கள் வைக்கவும், நிபந்தங்கள் அளித்தான், [1] இராஜராஜன் I,

[1] 223 to 227, 231 to 236 of 1844.

Koviloor Digital Library

இராஜேந்திரன்I, இராஜாதிராஜன்I, பரகேசரி இராஜேந்திரன், இவர்கள் தருமங்களும் பல உள்ளன.

31. திருப்பனையூர்

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். பேரளம் - திருவாரூர் பேருந்து வழியில் சன்னாநல்லூரை அடுத்துள்ளது.

இங்கு, சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு இறைவன் நடன தரிசனம் காட்டியருளினார். பராசரமுனிவர் பூசித்துப் பேறு பெற்றார். கரிகால்வளவன் இங்கு வளர்ந்தான் என்றும், அவனுக்கு விநாயகர் துணை இருந்தார் என்றும் சொல்லப்படுகிறது.

இறைவன் பெயர் சௌந்தரநாதர். இறைவிபெயர் பெரிய நாயகி. தீர்த்தம் அமுதபுஷ்கரிணி; இது மகாலட்சுமி தீர்த்தம் எனவும் வழங்கும். விநாயகர் துணையிருந்த பிள்ளையார். தலவிருட்சம் பனைமரம்.

நன்னிலம் இரயில் நிலையத்திலிருந்து தென்கிழக்கே கரை மார்க்கமாக ஒரு கி.மீ. தொலைவில் இருக்கிறது.

32. திருமயிலாடுதுறை

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். சிதம்பரம் - கும்பகோணம் பேருந்து வழியில் உள்ள நகரம். சென்னை - திருச்சி நேர்வழி இருப்புப்பாதையில் இரயில் சந்திப்பு நிலயம். இரயில் நிலையத்திலிருந்து ஆலயம் கிழக்கே 2 கி.மீ. தூரத்தில் உள்ளது.

அம்மை மயில் உருக்கொண்டு இறைவனை வழிபட்ட தலம். இங்கு அம்மையின் வேண்டுகோளுக்காக இறைவன் மயில் உருக்கொண்டு தாண்டவமாடினார். இதற்குக் கௌரீதாண்டவம் என்று பெயர். தலம் கௌரீதாண்டவபுரமாயிற்று.


இறைவன் பெயர் மாயூரநாதர். கல்வெட்டுக்களும் தேவாரமும் மயிலாடுதுறையார், மயிலாடுதுறையரன் எனக் குறிக்கின்றன. இறைவியின் பெயர் அஞ்சல்நாயகி, அபயாம்பிகை என்பன. தீர்த்தம் காவிரியில் இடப தீர்த்தத் துறை விசேடம். துலாமாதம் முழுவதும் இங்கு நீராட்டு விழா நடைபெறும்.

Koviloor Digital Library



திருவையாறு: ஐயாறப்பர் கோயில்தோற்றம்
(தலம் 30)

Koviloor Digital Library



திருவையாறு:ஆலயத்திற்குள் சூர்ய புஷ்கரணி தீர்த்தம்

Koviloor Digital Library

கல்வெட்டு:

இத்தலத்தைப்பற்றிப் படியெடுக்கப்பட்டதாகப் பதினாறு கல்வெட்டுக்கள் உள்ளன. பணிசெய்த அரசர்கள் குலோத்துங்கன் I, இராசாதிராசன் II, குலோத்துங்கன் III, இராஜராஜன் III, சடையவர்மன் சுந்தரபாண்டியன் இவர்களாவர். இக்கல்வெட்டுக்களால் நிலம் பொன் அளிக்கப்பெற்றமை அறியப்பெறுகின்றன. இறைவன் திருமயிலாடுதுறை உடையார்[1] எனவும் குறிக்கப்பெறுவர். இக்கல்வெட்டுகளில் ஐந்துபோக ஏனையவை ஐயாறப்பரைப் பற்றியன. இத்தலத்து ஐயாறப்பர் கோயில் தனியே மாயூரநாதர் கோயிலுக்குத் தென்மேற்கில் உள்ளது. இந்த ஐயாறப்பர் ஜயங்கொண்ட சோழவளநாட்டுத் திருவழுந்தூர்நாட்டு குலோத்துங்க சோழன் குற்றாலமாகிய திருவையாறுடையார் எனக் குறிக்கப் பெறுவர்[2]. இத்தலத்து விக்கிரமசோழன் திருமடம் என ஒன்றிருப்பதாகக் குறிக்கப்பெறுகின்றது[3]. முதற் குலோத்துங்கன் சுங்கம்தவிர்த்த சோழன் எனப்படுகின்றான். ஐயாறப்பர் கோயில் ஐயாறப்பரைப் பிரதிஷ்டை செய்ததுபோன்ற சிறந்த நிகழ்ச்சிகள் அறிவிக்கப்பெறுகின்றன[4].

33. திருவேட்களம்

சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். சிதம்பரத்துக்கு கிழக்கே 2 கி.மீ. தூரத்திலுள்ளது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் கீழ்பால் உள்ளது. சிதம்பரத்திலிருந்து பேருந்து வசதி உள்ளது.

இத்தலம் மூங்கில்வனம் எனவும் கூறப்பெறும். அர்ச்சுனனுக்குப் பாசுபதம் கொடுத்த தலம். பாசுபதாஸ்திரம் ஏந்திய இறைவன் திருவுருவமும், அர்ச்சுனன் தவநிலையைக் காட்டும் திருவுருவமும் இருக்கின்றன. இறைவன் வேடனாகவந்து அர்ச்சுனனுக்கு அருள் வழங்கினார் என்பது வரலாறு. இதனை 'வேடனார் உறைவேட்களம்' என்ற அப்பர் வாக்கும் நன்கு விளக்கும்.

இறைவன் பெயர் பாசுபதேசுவரர், இறைவியின் பெயர் நல்லநாயகி. கோயிலுக்கெதிரில் தீர்த்தம் உண்டு. புதிய திருப்பணி. திருஞானசம்பந்த சுவாமிகள் சிதம்பரத்தில் இருப்பதற்கு அஞ்சி,

[1] 372 of 1907, [2] 380 of 1907, [3] 376 of 1907,
[4] 377 of 1907.

Koviloor Digital Library

இத்தலத்திலேயே தங்கிச் சிதம்பரத்தைத் தரிசித்தார் என்பது பெரிய புராண வரலாறு.

கல்வெட்டு:

சகம் 1488-ல் (கி.பி. 1556-ல்) சிதம்பரேசுவர சிவகாமி கோயிலுக்குத் திருவேட்களங் கிராமத்தை அச்சுதப்பநாயக்கர் அளித்த வரலாறு அறியப்படுகிறது.[1]

34. திருவாழ்கொளிபுத்தூர்

சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். மயிலாடுதுறை யிலிருந்து பேருந்து வசதி உள்ளது.

இன்று திருவாளபுத்தூர் என வழங்குகிறது. தேவாரத்தில் வாழ்கொளிபுத்தூர் எனவும், வாள்ஒளிபுற்றூர் எனவும் வழங்கப்பெறு கின்றது. திருமால் மாணிக்க லிங்கத்தைத் தாபித்து வழிபட்டார். வட மொழியில் அரதனபுரம் என வழங்கும். வண்டு, அருச்சுனன் பூசித்த தலம். அர்ச்சுனன் செய்த பூசைக்கு உகந்தபெருமான் அவன் வாளைப் புற்றில் ஒளித்துவைத்திருந்து, மீட்டும் அவன் அத்தினாபுரி திரும்பும் போது அளித்தார் என்பது வரலாறு. இதனாலேயே வாள்ஒளிபுற்றூர் ஆயிற்று என்பது புராணம். ''உன்கரவாள் நின்ற வாகையின் அயல் புற்றொளித்தான்'' என்பது தலபுராணப் பாடற்பகுதி. இறைவன் திரு மேனி மாணிக்கமாதலின் வாள்ஒளிபுத்தூர் என்பது இங்ஙனமெல் லாம் மாறிற்றோ என்று எண்ணவும் இடமுண்டு. வாள் ஒளி - மிக்க ஒளி.

35. திருப்பாம்புரம்

சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். பேரளம் - கும்ப கோணம், பேருந்து வழியில் உள்ளது.

பாம்பு புரம் என்பது பாம்புரம் என மருவியது. நாகராஜன் பூசித்த தலம். ஆதிசேடனுடைய மூலவிக்கிரகமும் உற்சவ விக்கிரக மும் கோயிலில் உள்ளன. இறைவன் பாம்புரேஸ்வரர். இறைவி வண்டார் குழலி. தலவிருட்சம் வன்னி. தீர்த்தம் ஆதிசேஷ தீர்த்தம்.

[1] 259 of 1913.

Koviloor Digital Library

கல்வெட்டு:

இத்தலத்தைப்பற்றிய கல்வெட்டுக்கள் 15 உள்ளன. அவை இராஜராஜன், இராஜேந்திரன், திரிபுவனவீரதேவன், குலோத்துங்கன் III, சுந்தரபாண்டியன், சரபோஜி மன்னர்கள் காலத்தன. இத்தலம் உய்யக்கொண்டார் வளநாட்டுத் திருப்பாம்புரம் என வழங்கப் படுகிறது. இறைவன் திரும்பாம்புரமுடையார்[1] எனவும், இறைவி மாமலையாட்டியாள்[2] எனவும், விநாயகப் பெருமான் இராஜராஜப் பிள்ளையார்[3] எனவும் வழங்கப்படுகின்றனர்.

இராஜராஜதேவன் காலத்தில் சோழியதரையவேளான் தாமோதரையனால் கோயில் 2 - ஆம் பிராகாரத்தில் மண்டபங் கட்டவும் இதனைப் பராமரிக்கவும் நிலமளிக்கப்பட்டது[4]. வசந்த மண்டபத்தை சரபோஜி மன்னனுடைய பிரதிநிதியான சுபேதார் ரகுபண்டிதராயன் கட்டினான். கி.பி.1209 இல் திருப்பாம்புரத்தில் கடும்பஞ்சம் நிலவியது. ஒரு பொற்காசுக்கு 3 - படி நெல் விற்றது. பஞ்சத்தால் வாடிய ஒரு வேளாளன் தன்னுடைய இரண்டு பெண்களை நூறு பொற்காசுக்குக் கோயிலுக்கு அடிமையாக விற்றான்[5].

36. திருப்பேணுபெருந்துறை

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். கும்பகோணம் - காரைக்கால் பேருந்து வழியில் நாச்சியார் கோயிலை அடுத்துள்ளது.

தலம்:

இது திருப்பந்துறை என இன்று வழங்குகிறது. அம்மை, முருகன், பிரமன் இவர்கள் பூசித்ததலம். இறைவன் சிவானந்தர். அம்மை மலையரசி. தீர்த்தம் மங்கள தீர்த்தம். விருட்சம் வன்னி. முருகனுக்கு ஊமை நீங்கியதாக வரலாறு.

கல்வெட்டு:

அரசியலார் 1932-ல் படியெடுத்த கல்வெட்டுகள் ஐந்து உள்ளன. மதுரைகொண்டபரகேசரி 22-ஆம் ஆண்டுக் கல்வெட்டில்

[1, 2] 90 of 1911, 90 of 1911, [3] 91 of 1911.
[4] 99 of 1911, [5] 86 of 1911.

Koviloor Digital Library

திருநறையூர்நாட்டுக் கிராமமான பேணுபெருந்துறை எனவும், இறைவன் பெயர் பேணுபெருந்துறை மகாதேவர் எனவும் குறிக்கப் பெற்றுள்ளன [1]. இராஜராஜன் ஆட்சி 14 ஆம் ஆண்டில் பாண்டிய குலாசனிவளநாட்டு ஆர்க்காட்டுக் கூற்றத்து அரைசூராள் ஒருத்தியால், அமாவாசையில் சுவாமி அம்மன் பெரியதேவர் அஸ்திரதேவர் வீதி உலாபோதவும், அரிசிலாற்றில் தீர்த்தங்கொடுக்கவும் நிலமளித்தாள் [2]. வீரபாண்டியன் ஆட்சி 6ஆம் ஆண்டில், நல்லுடையான் வழுதூ ரானால் சுவாமி படிமம் செய்து கொடுக்கப்பெற்றது [3].

37. திருக்கற்குடி

இத்தலம் சோழநாட்டுக் காவிரி வடகரைத் தலம். திருச்சிராப் பள்ளிக்கு அருகில் மேற்றிசையில் உள்ளது. நகரப் பேருந்து வசதிகள் உள்ளன.

இன்று உய்யக்கொண்டான் மலையென வழங்குகிறது. நந்தி வர்ம பல்லவனால் திருப்பணி செய்விக்கப்பெற்றமையின் நந்திவர்ம மங்கலம் எனக் கல்வெட்டுக்கள் வழங்குகின்றன. மேற்குநோக்கிய சந்நிதி. அம்மன் சந்நிதிகள் இரண்டு.

இறைவன் பெயர் உச்சிநாதர். முத்தீசர், கற்பகநாதர், உச்சீவ நாத சுவாமி , உய்யக்கொண்ட நாயனார், விழுமியார், ஆள்வார் விழுமிய தேவர், விழுமியநாயனார் எனக் கல்வெட்டுக்களிலும், புராணங்களிலும் வழங்கப்பெறுகின்றன. அம்மை, அஞ்சனாட்சி, தீர்த் தங்கள் பொன்னொளி ஓடை, குடமுருட்டி, ஞானவாவி, எண் கோணக் கிணறு, நாற்கோணக்கிணறு என்பன. மார்க்கண்டர் வழி பட்டு அருள் பெற்ற தலம். முனிவர்கட்குக் குருமூர்த்தியாக இருந்து பெருமான் விழுமிய நூல்களை உபதேசித்த தலம். கரனும், ஈழநாட்டரசனும் வழிபட்ட தலம். தருமை ஆதீன அருளாட்சியில் விளங்குவது.

கல்வெட்டு:

இத்தலம் இராஜராஜன் காலத்து, பாண்டிய குலாசனி வளநாட்டு ராஜாஸ்ரய சதுர்வேதி மங்கலத்துக் கற்குடி எனவும் [4], குலோத்துங்கன் காலத்து, இராஜமகேந்திர வளநாட்டு உறையூர்க் கூற்றத்துப் பிரமதேயமான ஷெ சதுர்வேதி மங்கலத்துக் கற்குடி

[1] 135 of 1932, [2] 137 of 1932, [3] 138 of 1932,
[4] 455 of 1908.

Koviloor Digital Library

எனவும்[1], முதல் இராஜேந்திரன் காலத்து கேரளாந்தக வளநாட்டு உறையூர்க் கூற்றத்துக் கற்குடியெனவும் [2], மல்லிகார்ச்சுன மகாராஜா காலத்து இராஜகம்பீர வளநாட்டுப் பிரமதேயமான உய்யக் கொண்டான் திருமலையெனவும் [3] வழங்கப்பெறுகின்றது.

தருமம் ஆற்றிய மன்னர்கள் முதற்பராந்தகன், கண்டராதித்தன் மனைவி, பராந்தகன் மாதேவ அடிகளாராகிய செம்பியன் மாதேவியார், உத்தமசோழன், இராஜராஜன் I, பரகேசரி இராஜேந்திரன் I, வீர இராஜேந்திரன், குலோத்துங்கன் I, மல்லிகார்ச்சுன மகாராஜா, மயிலைத் திண்ணன் முதலியோர், இவர்கள் அளித்தன; பெரும்பாலும் விளக்கிற்காகப் பொன்னும், ஆடும் நிவேதனத்திற்கு நிலமும் ஆம்.

38. திருப்பாச்சிலாச்சிராமம்

சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். திருச்சி - முசிறி பேருந்து வழித்தடத்தில் உள்ளது.

பாச்சில் கூற்றத்து ஆச்சிராமமாதலின், பாச்சிலாச்சிராமம் என வழங்கப்படுகிறது. கல்வெட்டுக்களில் கொள்ளிடத்தின் வடபகுதி பாச்சில் கூற்றம், வடகரை மழபாடி நாடு, இராஜாதிராஜ வளநாடு எனப் பல பகுதிகளால் வழங்கப்பெற்றதாகத் தெரிகின்றது. கொல்லிமழவன் புதல்விக்கு உற்ற முயலகன் என்னும் நோயைத் திருஞானசம்பந்த சுவாமிகள் நீக்கியருளிய தலம். இங்குள்ள நடராஜர் திருவுருவிலும் முயலகன் உருவம் இல்லாமை அறியத்தக்கது. திருவடியின்கீழ் அதற்குப்பதில் ஒரு பெரும்பாம்பிருக்கிறது. சுந்தரமூர்த்திசுவாமிகள் 'இவரலாதில்லையோ பிரான்' என இகழ்ந்து பேசிப் பொருள் மிகப் பெற்றதலம். இறைவனே ஒரு வைசியன் பெண்ணை மணஞ்செய்து கொண்ட தலம்.

இறைவன்பெயர் மாற்றறிவரதர், சமீவனேசுவரர்; அம்மையின்பெயர் பாலசௌந்தரி; தீர்த்தம் அன்னமாம் பொய்கை, சிலம்புநதி. பொய்கை, அம்பாள் கோயிலுக்கு எதிரில் இருக்கின்றது. இதன்கரையில் தலவிருட்சமாகிய வன்னிமரம் இருக்கின்றது. சிலம்புநதி ஊருக்கு வடக்கில் ஓடுகின்றது. அது பங்குனியாறு என்றும், அமலையாறு என்றும் சொல்வர்.

[1] 460 of 1908, [2] 461 of 1908, [3] 474 of 1908.

Koviloor Digital Library

கோயிலுக்கு எதிரில் மிக உக்கிரதேவதைகளான தேரடிக் கருப்பண்ணசாமியும், மதுரைவீரன் கோயிலும், அடைக்கலங்காத் தான் கோயிலும் இருக்கின்றன. பார்வதி, பிரமன், இலக்குமி, அகத்தியர் முதலியோர் வழிபட்டதலம். வைகாசி மாதம் பெருவிழா நடக்கும்.

கல்வெட்டு:

1891ஆம் ஆண்டில் எடுக்கப்பெற்ற 34 எண்ணுள்ள கல் வெட்டு ஒன்றுள்ளது. ஏனைய எடுக்கப்பெறவில்லை போலும். இது ஹொய்ஸள மன்னன் வீரசோமேஸ்வரன் காலத்தது. இதனால் இக் கோயிலுக்குப் பதினாயிரங்கலம் அரிசி கிடைத்ததாகத் தெரிகின்றது. இவன் கி.பி. 1253 இல் சமயபுரத்தைத் தலைநகராகக்கொண்டு ஆண்டு வந்தான். சோழ அரசர்களில் குலோத்துங்கன் விளக்கு எரிக்க நிபந்தம் அளித்திருக்கிறான்.

39. திருவாலங்காடு

தொண்டை நாட்டுத்தலம். திருவள்ளூர் - அரக்கோணம் பேருந்து வழியில் உள்ளது. திருவாலங்காடு இரயில் நிலையத்தி லிருந்து வடக்கே 5 கி.மீ. தூரத்தில் உள்ளது.

நடராஜப்பெருமான் நடனஞ்செய்யும் சபை ஐந்தனுள் இது இரத்தினசபையாகும். இறைவன் காளியை ஊர்த்துவ தாண்டவத்தால் தோற்கச்செய்த தலம். இதனைத் தேவாரம் 'ஆடினார் காளிகாண ஆலங்காட்டடிகளாரே' என்று சொல்லும். பதஞ்சலி கார்க்கோடகன் என்ற பெயரோடும், வியாக்கிரபாதர் முஞ்சிகேசர் என்ற பெயரோடும் எப்பொழுதும் நடனதரிசனம் செய்வர். கைலைக்குத் தலையாலே நடந்துசென்ற காரைக்காலம்மையார், என்றும் திருவடிக்கீழ் ஆனந்த தாண்டவ தரிசனத்தோடு அமர்ந்திருக்கின்றார். திருஞானசம்பந்த சுவாமிகள், அம்மையார் தலையாலே நடந்த தலமென்று மிதித்தற்கு அஞ்சிப் புறம்போக, இறைவன் கனவில் 'எம்மைப் பாட மறந் தனையோ' என்று கேட்டுப் பாடல்பெற்ற தலம். இங்கே வாழ்ந்த வேளாளர்கள் பழையனூர் நீலிக்குக்கொடுத்த வாக்குப்படி உயிர் கொடுத்து, உண்மையை நிலை நாட்டினார்கள். இதனைத் 'துஞ்ச வரு வாரும்' என்னும் பதிகத்தில் ஞானசம்பந்த சுவாமிகள் விளக்கி யுள்ளார்கள்.

Koviloor Digital Library

சுவாமிபெயர் தேவரசிங்கப்பெருமான், ஊர்த்துவ தாண்டவேசுவரர். அம்மைபெயர் வண்டார்குழலி. தீர்த்தம் முத்திதீர்த்தம். தலவிருட்சம் பலா.

கல்வெட்டு:

அரசியலார் படியெடுத்த கல்வெட்டுக்கள் 52 உள்ளன. இத்தலம் வடகரை மணவிற்கோட்டத்து மேல்மாலை பழையனூர் நாட்டுத் திருவாலங்காடு என்றும், ஜெயங்கொண்ட சோழமண்டலத்து மேல்மாலையாகிய பழையனூர் நாட்டுத் திருவாலங்காடென்றும் வழங்கப்படுகின்றது. பெருமான் திருவாலங்காடு உடைய நாயனார் எனக் குறிப்பிடப்படுகிறார். இத்தலத்துள் ஏதோ ஒரு மண்டபத்தை மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் இருந்த அம்மையப்பன் பழியஞ்சிய பல்லவராயன் கட்டினான் [1]. நடராஜப்பெருமான் திருவரங்கில் அண்டம் உற நிமிர்ந்தருளிய நாயனார் எனக் குறிப்பிடப் படுகிறார். இவருக்கு இலத்தூர்நாட்டு அரும்பாக்கத்துக் குன்றத்தூர்க் கோட்டத்து அறநிலை விசாரகன் திரைலோக்கிய மன்னன் வத்ஸ ராஜன் என்பவன் விளக்குக்காக நிலமளித்தான் [2]. அம்மை வண்டார் குழலி நாச்சியார் எனவும், பிரமராம்பாள் எனவும் குறிப்பிடப்படு கிறார் [3].

ஏனைய கல்வெட்டுக்கள் நிலம் விற்றதையும், தண்ட நாயகருக்கு உத்தரவிட்டதையும் அறிவிப்பன. 477, 476 என்ற விஜய நகர அரசர் கல்வெட்டுக்கள் இம்மடி தர்மசிவாச்சாரியார், பொன்னம் பல சிவாச்சாரியார். அனந்தசிவாச்சாரியார், இவர்களுக்கு விழா நடத்த உத்திரவு அளித்துப் பொன் கொடுத்ததையும் உணர்த்துகின்றன. பராந்தகசோழன் I காலமுதல் விஜயநகர அரசர் காலம் வரையுள்ள இக்கல்வெட்டுகளால் இத்தலத்தின் தொன்மையை அறியலாம்.

40. திருவதிகை

நடுநாட்டுத்தலம். கடலூர் - சென்னை இருப்புப் பாதையில் பண்ணுருட்டி இரயில் நிலயத்துக்கு அருகில் உள்ளது. சென்னை, கடலூர், விருத்தாசலம், சிதம்பரம் நகர்களிலிருந்து பேருந்துகளில் பண்ணுருட்டி வரலாம். அப்பர் அருள் பெற்ற தலம்.

[1] 468 of 1905, [2] 482 of 1905, [3] 495 of 1905.

Koviloor Digital Library

இது அட்ட வீரட்டங்களுள் ஒன்று. முப்புரங்களை எரித்த தலம். கருடன், பிரமன், விஷ்ணு, பஞ்சபாண்டவர்கள் பூசித்துப் பேறுபெற்றனர். பல்லவ அரசன் திருநாவுக்கரசரை நீற்றறையில் இட்ட தலமும் இதுவே. இது இப்போது ஓடையாக இருக்கிறது. சக்கரதீர்த்தம் என வழங்குகிறது. குணதரேச்சுரம் என்ற ஒரு கோயிலும் உண்டு. அது குணதரப் பல்லவனால் பாடலிபுரத்துக்கோயிலை அழித்துக் கட்டப் பெற்றதென்பது வரலாறு. திருஞானசம்பந்த சுவாமிகளுக்குத் திருநடங் காட்டியருளிய தலம். சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குச் சித்தவடமடத்தில் திருவடி தீட்சை அளித்த இடமும் இதுவே. மெய்கண்டதேவர் மாணாக்கராகிய மனவாசகங்கடந்தார் உண்மை விளக்கம் செய்து அருளிய தலமும் இதுவே. இறைவன் பெயர் திருவதிகை வீரட்டானேசு வரர். திரிபுராந்தகேசுவரர். அம்மை திரிபுரசுந்தரி. தீர்த்தம் கெடிலம், சூலகங்கை, சக்கரதீர்த்தம் என்பன. தலவிருட்சம் சரக்கொன்றை.

கல்வெட்டு:

இத்தலத்தில் படி எடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் 34. இவற்றில் ஏழு கல்வெட்டுக்கள் சாரநாராயணக் கோயிலைப் பற்றியவை. ஏனையவை திருவதிகை வீரட்டானமுடையார் கோயிலில் உள்ளவை. அவற்றுள், தெள்ளாற்றுப்போர் எறிந்த நந்திபோத்தரையன் விளக்குக் காக வைத்த நிபந்தம்[1], கோப்பெருஞ்சிங்கன் விளக்கிற்காகப் பசுவுங்காளையும் அளித்தமை [2], பரமேசுவரப் போத்தரையன் பொன்னளித்தமை ஆகிய பல்லவ பரம்பரை நிகழ்ச்சிகள் அறிவிக்கப் பெறுகின்றன. அவ்வாறே சோழர்களில் குலோத்துங்கன் I, II, III, இராஜேந்திர சோழன், பராந்தகன் இராஜாதிராஜன் II முதலிய சோழ அரசர்களும், விக்கிரமபாண்டியன், வீரபாண்டியன் முதலிய பாண்டிய மன்னர்களும் காளிங்கராயன், காடவராயன், கங்கபல்லவன் முதலியோர்களும் உணவிற்காகவும், நிவேதனத்திற்காகவும், விழா விற்காகவும் நிலம் அளித்தமையைக் காட்டும் கல்வெட்டுகள் பல.

சகம் 1235-ல் சேர அரசனான இரவிவர்ம வீரராஜ குலசேகர தேவனால் கோயில் முழுவதும் தூய்மைப்படுத்தப்பெற்ற செய்தி தெரிகிறது [3]. வாகீசமடம் என்ற பெயருடன் ஒன்று இத்தலத்தில் இருந்திருக்க வேண்டும். இதற்குக் குலோத்துங்கன் I தன் ஆட்சிக் காலத்தில் நிலம் அளித்துள்ளான் [4].

[1] 36 of 1903, [2] 47 of 1903, [3] 34 of 1903,
[4] 49 of 1903.

Koviloor Digital Library

41. திருச்சேய்ஞலூர்

சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். கும்பகோணம் - திருப்பனந்தாள் பேருந்து வழியில் உள்ளது.

முருகன் திருக்கைலையில் இருந்து, சூரசம்காரத்தின் பொருட்டு, வீரமகேந்திரத்திற்கு எழுந்தருளியபொழுது, வழிநடையில் இங்குவந்து சிவபூசை செய்தருளினார் என்பது கந்தபுராண வரலாறு. சண்டேசுவர நாயனார் திரு அவதாரஞ் செய்தருளியதலம். இவ் வரலாறு இவ்வூர்ப் பதிகத்து ஏழாம் பாடலில் விளங்கக்காணலாம். சண்டேஸ்வரர் அவதாரஸ்தலம் என்று சம்பந்த சுவாமிகள் சிவிகை யினின்றும் இறங்கி நடந்து சென்று வழிபட்டார்கள் என்று பெரிய புர்ாணங்கூறும். முருகன் வழிபட்ட தலமாதலின் சேய் நல்லூர் என்பது சேய்ஞலூர் என்றாயிற்றுப்போலும். இத்தலம் இக்காலத்துச் சேங்கனூர் என வழங்குகிறது.

சுவாமிபெயர் சத்தகிரீசுவரர். அம்மைபெயர் சகிதேவியார். தீர்த்தம் மண்ணியாறு.

கல்வெட்டு:

1932 இல் எடுத்த 89 ஆம் கல்வெட்டு ஒன்றே உள்ளது.

42. திருவலிவலம்

சோழ நாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். திருவாரூரிலிருந்து பேருந்து வசதிகள் உள்ளன.

இது வலியன் பூசித்த தலமாதலின் இப்பெயர்பெற்றது. வலியன் என்பது கரிக்குருவி. சூரியனும், காரணரிஷியும் பூசித்துப் பேறுபெற்றனர். சுவாமிசந்நிதி கட்டுமலைமேல் இருக்கின்றது. கோயிலைச்சுற்றிக் கிழக்குப்பக்கந்தவிர அகழி சூழ்ந்திருக்கிறது. மாடக்கோயிலுள் ஒன்று. சுந்தரமூர்த்திநாயனார், திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் 'சொல்லியவேசொல்லி ஏத்துகப்பான்' என இருவர் பாடல் சிறப்பையும் எடுத்துக் காட்டுகிறார்.

சுவாமி பெயர் மனத்துணைநாதர். அம்மை பெயர் மாழையங் கண்ணி. தலவிருட்சம் புன்னை. தீர்த்தம் காரணர் கங்கை.

Koviloor Digital Library

கல்வெட்டு:

படியெடுத்தன ஒன்பது உள்ளன. இராஜேந்திரன் III காலத்தன மூன்று. குலோத்துங்கன் காலத்தன இரண்டு. இராஜராஜன் III காலத்தன இரண்டு. சுந்தரபாண்டியன் காலத்தன இரண்டு. இத்தலம் அருமொழித் தேவ வளநாட்டு வலிவலக் கூற்றத்து உபயகுல சுத்த சதுர்வேதி மங்கலமான வலிவலம் என்று வழங்கப்பட்டது [1]. இறைவன் மனத்துள் தேவர் என்றே கல்வெட்டுகளில் அழைக்கப்படுகிறார். உடையார் மனத்துள் நாயனாரதுகோயில் காரியம் பார்ப்பார் சிலரால் தேவப்பெருமான் திருமடத்து எதிர் ஒப்பிலாதார் சோமநாத தேவ முதலியாருக்கு நிலம் மாற்றிக் கொடுக்கப்பட்டது [2]. இந்தத் திருமடம் மனத்துள் நாயனார் கோயிலுக்குத் தெற்குப் பக்கத்தில் இருக்கிறது [3]. தென் விடங்கலூர், குலோத்துங்க சோழ நல்லூர் திரிசூலம், பொன் வேய்ந்த பெருமாள் நல்லூர் முதலிய கிராமங்கள் பல வேறு காரியங் களுக்குத் தானமாக அளிக்கப்பெற்றமை அறியப் பெறுகின்றன. திருமூல தேவர் திருமடத்தில் இருந்த கோயில் அர்ச்சகர் ஒருவருக்கு நிலம் விற்கப்பெற்றது என்பதால் திருமூலதேவர் மடம் என்பது ஒன்று இருந்தமை புலனாகும் [4].

43. திருச்சோபுரம்

நடுநாட்டுத்தலம். சிதம்பரம் - கடலூர் இருப்புப்பாதையில் ஆலப்பாக்கம் இரயில் நிலயத்துக்குக் கிழக்கே உள்ளது. இவ்வழியில் பேருந்துகளிலும் ஆலப்பாக்கம் வரலாம். ஆலப்பாக்கத்திற்குக் கிழக்கே 2 கி.மீ. தூரத்தில் சோபுரம் உள்ளது. சாலை வசதி உள்ளது.

இது இப்பொழுது தியாகவல்லி என வழங்குகிறது. முதற் குலோத்துங்கன் மனைவி மூவருள் பட்டத்து மனைவியாகிய தியாக வல்லியால் திருப்பணி செய்யப் பெற்றமையின் இப்பெயர் பெற்றது போலும். அகஸ்தியர் பூசித்த தலம். சமீபகாலம் வரையில் கடற்கரை மணலால் மூடப்பட்டு மேடாய் இருந்தது. ஒரு துறவி கருப்பக் கிருகத்தின் கல்ஸ்தூபி மணலில் காணப்படத் தோண்டி, ஊரவர் உதவியைக்கொண்டு வெளிப்படுத்தினர். பரிவாரங்களுடன் ஆலயம் முழுவதும் மணலிலிருந்து தோண்டப்பட்டது. சில அறிகுறிகளால் நகரமே புதையுண்டிருக்க வேண்டுமென்று தெரிகிறது.

[1] 110 of 1911, [2] 108 of 1911, [3] 109 of 1911,
[4] 116 of 1911.

Koviloor Digital Library

சுவாமிபெயர் சோபுரநாதர். அம்மைபெயர் சோபுரநாயகி. தீர்த்தம் பரம தீர்த்தம்.

கல்வெட்டு:

கல்வெட்டுக்கள் ஐந்து உள்ளன. இங்கே நர்த்தனகணபதி கோயில் இருந்ததாகவும், அதற்குச் சுந்தர பாண்டியன் நிலம் அளித்த தாகவும் அறியப்படுகிறது.[1] இராஜராஜ தேவர், சாரிபுத்த பண்டிதர், மாறவர்மன் சுந்தரபாண்டியன் I, கோநேரின்மைகண்டான், சுந்தர பாண்டிய தேவர் இவர்கள் பெயர்கள் குறிப்பிடப்பெறுகின்றன.

44. திருநெடுங்களம்

சோழநாட்டுக் காவிரிதென்கரைத்தலம். திருச்சிராப் பள்ளிக்குக் கிழக்கே உள்ளது. பேருந்து வசதி உள்ளது தஞ்சை - திருச்சி பேருந்து வழியில் துவாக்குடி வந்து அங்கிருந்து வடக்கே செல்ல வேண்டும்.

திருநெட்டான்குளம் என இக்காலத்து வழங்கும். வங்கிய சோழன் பூசித்துப் பேறுபெற்ற தலம். சுவாமி நித்தியசுந்தரர். தேவி ஒப்பிலாநாயகி, தீர்த்தம் சுந்தரதீர்த்தம்.

கல்வெட்டு:

இத்தலத்தைப்பற்றிய கல்வெட்டுக்கள் 34 உள்ளன. அவை சுந்தரபாண்டியன் காலத்தன மூன்றும், கரிகாலன் காலத்தது ஒன்றும், ஸ்ரீவல்லபதேவனது ஒன்றும், இராஜகேசரிவர்மன் காலத்தன ஒன்பதும், 3 ஆம் இராஜராஜன் கல்வெட்டு இரண்டும், ஹொய்ஸள வீரராமநாத தேவரது ஒன்றும், திரிபுவன வீரதேவனுடையன இரண்டும், பரகேசரி வர்மனென்று மட்டும் குறிப்பன மூன்றும், விஜயநகர அரசர்களுடை யன ஐந்தும், நாயக்க மன்னரது ஒன்றும் ஏனைய அறியப்படாதன வுமாக அமைந்தன.

இத்தலம் சுந்தரபாண்டியன் காலத்து பாண்டிய குலபதி வடகரைநாட்டுத் திருநெடுங்களம் என்றும்[2], இராஜராஜ தேவன் III காலத்து பாண்டியகுலாசனி வளநாட்டு வடகாவிரிநாட்டுப்

[1] 114 of 1904. [2] 627 of 1909.

Koviloor Digital Library

பிரமதேயம் தியாகவல்லி சதுர்வேதி மங்கலமான திருநெடுங்களம் என்றும் குறிக்கப்பெறுகிறது. இறைவன் திருநெடுங்களமுடைய நாயனார் [1], நெடுங்களமுடையார், உலகாண்டேசுவரமுடையார் [2], களந்தை நாயகர் [3], திருநெடுங்களமுடைய தம்பிரானார் [4], நிழலார் சோலை வளமுடையநாயனார் [5], திருநெடுங்களத்து ஆள்வார் [6] என்றெல்லாம் வழங்கப்பெறுகிறார்.

இவ்வரசர்கள் அனைவரும் கோயிலுக்குப் பொன்னும், நெல்லும், நிலமும் அளித்த செய்தி அறிவிக்கப்பெறுகின்றன. அரசர்களேயன்றி, அரசருடைய் தண்டல் நாயகர்களும், அரசகாரியம் பார்ப்பவர்களும், மனைவியார்களும் அறம் செய்துள்ளனர். இராஜகேசரிவர்மன் மூன்றாமாண்டில் உறையூர் உடையான் ஒருவனால் லோகசுந்தரத் திருப்படிமம் பிரதிஷ்டை செய்யப்பெற்றது [7], பிள்ளையார் கணபதி கோயிலுக்கு விளக்கீடு செய்வித்தான் இராஜகேசரிவர்மன் I (கி.பி. 985-1013). பித்தளையால் செய்யப்பட்டு பொன்முலாம் பூசப்பெற்ற மத்தளி ஒன்றைக் கம்பன் மணியனான விக்கிரமசிங்கன் மூவேந்த வேளாளன் என்பான் ஸ்ரீபலி உபயத்திற்காகச் செய்து கொடுத்தான் [8]. இக்கோயிலில் முழுக்குடி அரசன் வல்லபதேவன் அரங்கமண்டபம் கட்டிக்கொடுத்தான் [9].

45. திருஓத்தூர்

தொண்டை நாட்டுத்தலம். வடார்க்காடு மாவட்டம் செய்யாறுக்கு அருகில் உள்ளது. காஞ்சிபுரத்திலிருந்து பேருந்துகளில் செல்லலாம்.

இது திருவத்தூர் என வழங்குகிறது. இறைவன் தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் வேதத்தை அருளிச்செய்தமையால் இப்பெயர் பெற்றது. சம்பந்தசுவாமிகள் எழுந்தருளியபோது கோயிலைப் பராமரித்துவந்த சிவனடியார் ஒருவர் கோயில் நிலங்களில் பனைவைத்து வளர்த்தார். அவை ஆண்பனையாயின. சமணர்கள் பரிகசித்தனர். அதைக்கண்டு இவர் வருந்திச் சுவாமிகளிடம் விண்ணப்பித்தார். திருஞானசம்பந்தர் பதிகம்பாடி, திருக்கடைக்காப்பில் 'குரும்பை ஆண்பனை ஈன்குலை ஓத்தூர்' என்று அருளியபோது அவை பெண்பனைகளாயின. ஆலயத்தில் பனை

[1] 667 of 1909, [2] 679 of 1909, [3] 692 of 1909,
[4] 693 of 1909, [5] 793 of 1909, [6] 682 of 1909,
[7] 682 of 1909, [8] 691 of 1909, [9] 692 of 1909.

Koviloor Digital Library

உருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டுப் பூசிக்கப்பெற்று வருகிறது. சிவாலயத்துள்ளேயே ஆதிகேசவப்பெருமாள் சந்நிதியும் இருக்கிறது.

சுவாமி வேதநாதர். அம்மை இளமுலைநாயகி. தீர்த்தம் சேயாறு (வேததீர்த்தம்).

கல்வெட்டு:

இத்தலத்தைப்பற்றிய கல்வெட்டுக்கள் 29 உள்ளன. அவற்றுள் இராஜாதிராஜன், குலோத்துங்கன், இராஜேந்திரன், பொத்தப்பிச் சோழன், இராஜராஜன் -1,3, விக்கிரமசோழன் ஆகிய சோழ அரசர்கள் காலத்தனவும், சுந்தரபாண்டியன், வீரபாண்டியன் காலத்தனவும், கோப்பெருஞ்சிங்கன் காலத்தனவும், இராஷ்டிரகூட கன்னரதேவன் காலத்தனவும் ஆக அமைந்துள்ளன.

இறைவன் பெயர் வேதபுரீசுவரர் எனவும், ஓத்தூர் உடைய நாயனார் எனவும் வழங்கும். கோயில்வழிபாட்டிற்கும் நிவேதனத் திற்கும், அர்ச்சகர்க்கும் நிலமளித்த செய்திகளும், பூந்தோட்டத்திற்கு நிலமளித்த செய்திகளும் அறிவிக்கப்பெறுகின்றன. விளக்கிற்காகப் பசுக்கள் வாங்கி விடப்பெற்றமையைத் தெரிவிக்கின்றன. சிறப்பாக, விளையாட்டாக வேட்டைக்குச் சென்ற ஒருவன் எய்த அம்பு குறிதவறி ஒரு மனிதன்மேல் பட்டுவிட, அதற்காகத் திருஓத்தூர் சபையாரைக் கூட்டி, குற்றத்தைக் கூறி, சபை விதித்தவண்ணம் குற்றத்தண்டமாகக் கோயிலுக்கு 16 பசுக்களை வாங்கிக்கொடுத்து விளக்கிடச் செய்தான்.[1] விக்கிரமசோழன் (கி.பி. 1118-35) காலத்து வெள்ளம்புகுந்து விளைச்ச லழிந்ததால் குடிகளுக்கு வரிகட்ட முடியாமல்போக இரண்டாயிரம் குழி நிலத்தை 25 காசிற்கும், 4450 குழி புன்செய்யை 20 காசிற்கும் கோயிலுக்கு விற்று இறையிலி செய்தான்[2], மூன்றாம் குலோத்துங்கன் பொன் ஆபரணங்கள் அளித்திருக்கின்றான். அதேகோயிலில் சிதம்ப ரேசுவர ஆலயம் ஒன்று இருப்பதாக அறியப் படுகிறது[3]. கேதாரிநாதர் மடம் என்ற ஒன்று குறிப்பிடப் பெறுகிறது[4].

46. திருஅம்பர்மாகாளம்

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். மயிலாடுதுறை திருவாரூர் வழியில் பூந்தோட்டத்திலிருந்து காரைக்கால் செல்லும் பேருந்துகளில் செல்லலாம்.

[1] 77 of 1900, [2] 87, 88, [3] 100, [4] 98 of 1910.

Koviloor Digital Library

இத்தலம் கோயில் திருமாகாளம் என வழங்கும். அம்பன், அம்பாசுரன் இருவரையும்கொன்ற காளி பாவந்தீர இறைவனை இத்தலத்துப் பூசை செய்தாள். மாகாளரிஷியும் பூசித்த தலம். காளிகோயில் தெற்குப் பிராகாரத்தில் உள்ளது. வைகாசி மாதத்தில் சோமாசிமாறர் யாக உற்சவம் நடைபெறும். சிறிய உருவமுடைய பாணலிங்கம். குவளை சாத்தப்பட்டுள்ளது. இறைவன் காளகண்டேசுவரர். இறைவி பட்சநாயகி. தீர்த்தம் மாகாளதீர்த்தம். சோமாசிமாற நாயனார் யாகஞ்செய்த தலம். இத்தலம் பேரளம் திருவாரூர் மார்க்கத்திலுள்ள பூந்தோட்டம் இரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 3 கி.மீ. தூரத்தில் உள்ளது.

கல்வெட்டு:

இத்தலம் முதற்குலோத்துங்கன் காலத்து உய்யக்கொண்டார் வளநாட்டு அம்பர் நாட்டு அம்பர் திருமாகாளம் என வழங்கப்பெற்றது [1]. இராஜகேசரிவர்மனான குலோத்துங்கன் காலத்து, பூபாலகுலவல்லி வளநாட்டு அம்பர்நாட்டு அம்பர் மாகாளம் எனவும் [2] வழங்கப் பெற்றது. இறைவன் திருமாகாளம் உடையார் [3], திருமாகாளத்து மகாதேவர் [4] என வழங்கப்பெறுகிறார். கோயிலுக்கு முதற்குலோத்துங்கன் காலத்து நுளம்பராசன் வேண்டுகோளுக்காக மாத்தூர் திருச்சிற்றம் பலநந்தராசனால் புரவுவரி விளாகம் என்ற கிராமம் கோயிலுக்கு அளிக்கப்பெற்றது [5]. மேலும் அவனது ஆட்சி 42- ஆம் ஆண்டில் வேதந்தூர் என்ற கிராமத்தை அம்பர் உதயமார்த்தாண்டன் அளித்திருக்கிறான் [6].

சேக்கிழான்வேளான் திருவாய்க்குலமுடையான் எயினிகுடி கிராமத்தை அளித்தான். முன்னரே அதை அநுபவித்துவந்த காணியாளரைத் தள்ளிவிட்டுப் புதிதாகப்பயிர் செய்ய ஏற்பாடு செய்தான். விக்கிரமசோழன் காலத்தில் (கி.பி. 1118-35) நிலமளித்த செய்தி அறியப்பெறுகிறது. சிறப்பாக ஆட்கொண்ட நாயகனையும் அம்மையையும் கோயிலுக்கு வார்த்துக்கொடுத்து, திருவமுதுக்கு க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுப் பனையூர் நாட்டுச் சிறுவேலூரானான அமுதன் திருச்சிற்றம்பலமுடையான் உதயமார்த்தாண்ட மூவேந்த வேளான் நிலமுமளித்தான். அதே அம்மைக்கு மற்றோர் சிறுவேளூர் உடையான் நிலமுமளித்திருக்கிறான். இந்த ஆட்கொண்டநாயகர் என்பது சோமாஸ்கந்தரின் பெயர்போலும். இவரைப்பற்றி விக்கிரமசோழன்

[1] 93 of 1910, [2] 107 of 1910, [3] 107 of 1910,
[4] 116 of 1910, [5] 94 of 1910, [6] 95 of 1910.

Koviloor Digital Library

காலத்துக் கல்வெட்டும் அறிவிக்கிறது [1]. இறைவனுக்கு முத்துக் கழுத் தணி, வைரமுடி இவற்றைக் காரிபுலியனான சோழமாராயன் அளித் தான், விக்கிரமசோழன் திருமாளிகைப் பத்தியைக் கட்டினான் [2]. மற்றும் விளக்கிற்காகவும், விழாவிற்காகவும் பொன்னும், நிலமும் அளித்த செய்தியை அறிவிக்கின்றன. முதுபகவர் என்ற கோயி லொன்று குறிப்பிடப்படுகிறது [3].

உமாபரமேஸ்வரி காளி அம்மையாக இருத்தல்வேண்டும். இதனை அமைத்தவன் விக்கிரமசோழன். பூசைக்கும் அமுதுக்குமாக நிலம் வழங்கியிருக்கிறான். இராஜேந்திரசோழனும் அக்கோயிலுக்கு நிலம் வழங்கினான் [4].

47. திருவல்லம்

தொண்டை நாட்டுத்தலம். வேலூர் ஆர்க்காட்டிலிருந்து பேருந்துகளில் செல்லலாம். இத்தலம் இப்பொழுது திருவலம் என வழங்கப்பெறுகிறது. வில்வாரண்யதலம், தீக்காலி என்பான் பூசித்துப் பேறுபெற்றமையான் தீக்காலி வல்லம் எனவும் வழங்கும். நவக் கிரகங்களும், வல்லாளனும் பூசித்துப் பேறுபெற்றனர். சுவாமி வல்ல நாதர். இறைவி வல்லாம்பிகை. தீர்த்தம் கௌரிதீர்த்தம்.

கல்வெட்டு:

கோப்பரகேசரியான இராஜேந்திரசோழன் (கி.பி.1050-62) 3-ஆம் ஆண்டில் உத்தியோகஸ்தன் ஒருவனிடமிருந்து 25 கழஞ்சு பொன்வாங்கித் தீட்சிதரிடங் கொடுத்தான் [5]. அதேயாண்டில் வாண புரத்திலுள்ள பேரவையோர் சங்கரதேவன் மகனான வைதும்ப சோமநாதனுக்கு 1000 குழி நிலம் விற்றதையும் அவர்கள் அதைத் திருவைய ஈசுவரருக்கு உரிமையாக்கியதையும் குறிக்கிறது [6]. 4-ஆம் ஆண்டில் முதல் இராஜராஜன் உத்தியோகத்தனான ஈராயிரவன் பல்லவராயனால் இராஜராஜேஸ்வரர் கருப்பக்கிரகம் கட்டப்பெற்றது. 2 விளக்கிற்காக 2000 குழி நிலமும் அளிக்கப்பெற்றது [7].

கோராஜகேசரி வர்மனான இராஜமகேந்திரன் காலத்து 2-ஆம் ஆண்டில் படைத்தலைவனொருவன் திருவல்லம் பேரவையிலிருந்து 800 குழி நிலம்பெற்று அதைக் கோயிலுக்குக் கொடுத்தான். அதன்

[1] 108 of 1910, [2] 99 of 1910, [3] 111 of 1910, [4] 100, 101 of 1910, [5] 75 of 1889, [6] 92 of 1889, [7] 299 of 1897.

Koviloor Digital Library

விலை 64 காசு (22 கழஞ்சு 8 மஞ்சாடி) [1]. குலோத்துங்கன் 23ஆம் ஆண்டில் ஒரு கங்கதலைவனால் வீரசோழன் மனைவியான தன்னுடைய மகளுக்கு நன்றுண்டாக விளக்குப் போடப்பெற்றது [2]. மூன்றாம் குலோத்துங்கன் 8ஆம் ஆண்டில் திரிசூலக்காசு கோயிலுக் களிக்கப்பெற்றது [3]. 34 ஆம் ஆண்டில் கங்க அரசியான அரியபிள்ளை யால் இரண்டு விளக்கு தானம் செய்யப்பெற்றன [4]. கோராஜகேசரி வர்மன்-1, 7ஆம் ஆண்டில் இறைவி திருவுருவம் செய்யவும் ஒரு விளக்குக்கும் ஒரு பிராமணனால் 1700 குழி நிலமும் தூய்நாட்டில் மந்திரம் பேரவையினின்றும் 1700 குழி நிலமும் வாங்கப்பெற்றன [5]. 26ஆம் ஆண்டில் 4ஆம் விக்கிரமாதித்தனிடமும் 3-ஆம் ஜயசிம்ம னிடமும் வெற்றிபெற்றமையும், கோயிலுக்கு விளக்கு பொருத்தியமை யும் தெரிகிறது.[6] 7ஆம் ஆண்டில் மதுராந்தக கண்டராதித்தன் கோயிலுக்கு வந்தமையும் 1000 குடங்களால் அபிஷேகித்தமையும், வருமானத்தை ஆராய்ந்தமையும் குறிக்கப்பெற்றுள்ளன [7].

கோராஜ இராஜகேசரிவர்மன்-1, 16 ஆம் ஆண்டில் 700 குழி நிலம் சங்கரதேவனுக்கு விற்றமையும் அவன் அதைத் திருவைய ஈசுவரருக்களித்தமையும் தெரிகிறது [8]. கோராசகேசரிவர்மன் இராஜ ராஜதேவன் 20ஆம் ஆண்டில் 90 ஆடுகள் தானம்செய்தான். 3ஆம் ஆண்டில் தூய்நாட்டிலுள்ள குக்கனூர் கிராமத்தின் வருவாய்களைத் திருவல்லம் கோயிலுக்குக் கொடுத்தான் [9]. மகாவலி வாணராயனது பொன்படுகுட்டத்திலுள்ள சில நிலங்களை ஒருவன் வாங்கி விளக்கிற்காகவும் படையலுக்காகவும் கொடுத்தான் [10]. வாண வித்தியாதரன் காலத்து விளக்கெரிக்க 20 கழஞ்சு பொன் கொடுக்கப் பெற்றது [11]. விக்கிரமாதித்தன்-1, வேண்டுகோளின்படி மூன்று கிராமங் கள் (விடேல் விடுகு விக்கிரமாதித்த சதுர்வேதிமங்கலம்) தானம் செய்யப்பட்டன [12]. வாணராயனது சகம் 810-ல் எட்கூரிலுள்ள ஒரு பார்ப்பனனால் காரநாட்டிலுள்ள வன்னிப்பேடு கிராமத்தாரிடம் 25 கழஞ்சு பொன் கொடுக்கப்பெற்று அதன் வட்டியிலிருந்து விளக்குப் போடப்பெற்றது [13]. சோழபூபன் மகனான வீரசம்பன் சகம் 1236 இல் அர்த்த மண்டபம் ஞானமூர்த்தி என்ற பெயருடைய துறவியாலும் பிருதா அரசனாலும் கட்டப்பெற்றது. மேலும் கருப்பக்கிருகமும் கட்டப்பெற்றது. (வீரசம்பன் படைத்தலைவனா? ஒருநாயகனா? ஊகிக்க வேண்டியுள்ளது) [14]. வாணவித்தியாதர ராஜன் என்கிற வாண ராயன் விளக்கிற்கு நெய்யிட 25 கழஞ்சு பொன் வழங்கினான் [15].

[1] 5 of 1890, [2] 300 of 1897, [3] 301of 1897, [4] 303 of 1897, [5] 8 A of 1890, [6] 9 of 1890, [7] 10 of 1890, [8] 11 of 1890, [9] 1415 of 1890, [10] 12 of 1890, [11] 298 of 1897, [12] 1A of 1890, [13] 1B of 1890, [14] 3 of 1890, [15] 77 of 1889.

Koviloor Digital Library

விசயகண்ட கோபாலதேவன் மூன்றாமாண்டில் அழகிய பல்லவன் காலத்து 3 ஆம் இராஜராஜன் நிலமணியக்காரர் 1.16 பாகவரியையும் 1.5 பாக வரியையும் தள்ளியமை தெரிகிறது [1]. ராஷ்டிரகுப்த அமோகவர்ஷனன்I மருமகன் காலத்து, பொற்கொல்லன் ஒருவன் கோயிலுக்கு நிலம் தானம் செய்தான் [2].

48. திருப்பருப்பதம்

ஆந்திர மாநிலத்திலுள்ளது. வடநாட்டுத்தலம் ஐந்தனுள் ஒன்று. சென்னையிலிருந்து நந்தியால் வரை புகைவண்டியில் சென்று ஆத்மகூர் வழியாகப் பேருந்தில் செல்லலாம். சென்னையிலிருந்து ஆந்திர மாநிலப் பேருந்து நேரே ஸ்ரீசைலம் (திருப்பருப்பதம்) செல்கிறது.

இத்தலம் பன்னிரு சோதிர்லிங்கத் தலங்களில் ஒன்று. மல்லிகார்ச்சுனம் எனப் பெயர் பெறுவது. இத்தலம் திருப்பருப்பதம் எனவும், ஸ்ரீசைலம் எனவும் வழங்கும். அருச்சுனக்ஷேத்திரங்கள் மூன்றனுள் இது ஒன்று. திருநந்திதேவர் இறைவனைத் தாங்க மலையுருவாகத் தவஞ்செய்த தலம். இத்தலத்திற்குச் செல்லும்வழி மிகக் கடினமானது. இதனைச் சுந்தரமூர்த்தி தேவாரம் 'செல்லல் உறவரிய சீபருப்பதமலை' என்று எடுத்துக் காட்டுகிறது. சுவாமி பருப்பத நாயகர். இறைவி பருப்பத நாயகி. தீர்த்தம் பார்வததீர்த்தம்.

கல்வெட்டு:

விஜயநகர அரசனான வீரப்பிரதாப வீரநரசிங்கராயன் இங்கு வந்து வழிபட்டிருக்கிறான். ஒரு பருவதையன் என்பானும் அவன் மனைவியும் இங்குவந்து 'சித்தபுரம்' என்னுமிடத்தில் ஒரு குளம் வெட்டி நந்தவனம் அமைத்தனர். கிருஷ்ணதேவராயனுடைய மந்திரியான சந்திரசேகர அமாத்யா என்பவன் கல்யாண மண்டபத்தைக் கட்டிப் பொற்கலசம் ஸ்தாபித்தான். மல்லிகார்ச்சுன கோயிலுக்கு முன்புறத்தில் ஒருமண்டபங் கட்டினான். நந்தீசுவரத்திற்கும், பிருங்கீசுவரத்திற்கும் பொன்னாலேயே திருவுரு அமைத்துக் கொடுத்தான். அந்த மண்டபத்தில் தமராசா என்பவன் கிருஷ்ணதேவராயர் சந்திரசேகர அமாத்யா இவர்களுடைய கற்சிலைகளை அமைத்தான். கோயில் செலவுகளுக்காகச் சிவபுரம் என்னும் ஊரைத் தானமாக வழங்கினான். பொற்கிண்ணமும், வெள்ளிப்பீடமும் அளித்தான்.

[1] 79 of 1889, [2] 76 of 1889.

Koviloor Digital Library

நந்தியைப் பிரதிஷ்டைசெய்து அதற்கு முன்பக்கத்தில் பொற்றூண் ஒன்றை நிறுவினான். வீரப்பிரதாப அச்சுதராயன் காலத்தில் மல்லப்ப நாயுடு என்பவன் பிரமராம்பா அம்மைக்கு ஒரு மணியும் சரிகை யாடையும் அளித்தான். விஜயராயமகாராயன் மகளும், பாண்டிய பெருமாள் தேவனின் மனைவியுமாகிய லெட்சம்மாள்ஜிஆயி என்பவள் தினசரி ஐந்து ஜங்கமர்களுக்கு உணவளிக்க நிலம் வழங்கி னாள். சாளுவ அரசனான பதமல்லப்பன் ஒருகுளம் வெட்டியிருக் கிறான். காகதீய அரசனான பிரதாபருத்திரதேவ மகாராஜர் காலத்தில் அவனுடைய முதல் மந்திரி உச்சிக்கால வழிபாட்டிற்காக கமநாட்டில் நிலம் வழங்கியிருக்கிறார். ஜனமாதா மண்டபத்திற்கருகில் ஒரு கோயிலையும் கட்டியிருக்கிறார். அன்னப்பஜயன் என்பவன் மல்லி கார்சுனதேவர்க்கும் பிரமராம்பா தேவிக்கும் நைவேத்திய நிபந்தங் களை அளித்ததோடு முகமண்டபங்கட்டுவித்தான். தென்னண்டை மதில் பிராகாரத்தைப் பழுதுபார்த்தான். இரும்புத் தூண்களை நிறுத்தித் தெற்குக் கோபுரத்தையும் பழுதுபார்த்தான். பயிராகிஸந்தகி என்பவன் தன் மனைவியின் பெயரால் பூந்தோட்டத்திற்கு நிலம் அளித்துள்ளான். இவையன்றி நந்திநாதர், பிருங்கிநாதர் முதலியவர்களை வழிபடு கிறவர்களுக்கு வீடுகள் கட்டி அளித்த செய்தியும், செங்கையன் என் பார் சந்தனக்கல் வைத்ததும் அறியப்பெறுகின்றன. பிரதான கங்கைக்கு இரண்டாம் விதரிகரனின் மனைவியான கடம்பவித்தலம்பா படிக்கட்டு கட்டினாள். வித்தலேசுவரருக்கு ஒரு உருவச்சிலை வழங்கினாள். இந்தத் தருமங்களைச் செய்ய இறைவன் அவளுக்குக் கனவில்வந்து அருளியதாகக் குறிப்பிடுகிறாள். மேலும் சந்திரசேகரன் வீரபத்திர தேவர் கோபுரத்தையும் , தூண்களையும், பொற்கலசங்களையும் அமைத்திருக்கிறான். உதயகிரி அப்பனையங்காரு நந்தித் தூணி லிருந்து துர்க்காதேவிகோயில் வரையில் படிக்கட்டுகளைக் கட்டுவித் தான். கொண்டபட்டி என்பவன் கோயில் முழுமையும் புதுப்பித்திருக் கிறான். இவையன்றிப் பல அன்பர்கள் பொற்றூண்கள் அமைத்தும், படிக்கட்டமைத்தும், முகமண்டபங்கட்டியும் பணிசெய்தார்கள் என்று தெரிகிறது.

49. திருக்கொடிமாடச் செங்குன்றூர்

கொங்குநாட்டுத் தலம். இத்தலம் சங்ககிரிதுர்க்கம் இரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 9 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. ஈரோட்டி லிருந்தும் நாமக்கல், சேலம் ஆகிய ஊர்களிலிருந்தும் பேருந்து மூலமாகவும் இத்தலத்தை அடையலாம். மலைமேல் கோயில் வரை செல்லப் பேருந்து வசதி உள்ளது.

Koviloor Digital Library

இத்தலம் திருச்செங்கோடு, திருச்செங்குன்றூர், நாகாசலம் என வழங்கப்பெறும். மேலவீதியிலிருந்து பார்த்தால் மலை, நாகம் போல் தோன்றுவதால் நாககிரி எனப்பெற்றது. சுப்பிரமணிய சுவாமி சந்நிதி தனியே அமைந்துள்ளது. சுவாமி சந்நிதி மேற்குப் பார்த்தது. முருகன் சந்நிதி கிழக்குப்பார்த்தது. விஷ்ணுகோயில் கோயிலுக் குள்ளேயே தனியேயிருக்கிறது. சுவாமி அர்த்தநாரீசுவரர். அம்மை பாகம்பிரியாள்; அர்த்தநாரீசுவரி. விஷ்ணுவுக்கு ஆதிகேசவப் பெருமாள் என்று பெயர். அர்த்தநாரீசுவரர் பாதத்தில் ஒரு சிறு ஊற்று இருக்கிறது. இது விறல்மிண்ட நாயனாருடைய அவதாரஸ்தலம். தீர்த்தம் பிரமதீர்த்தம் முதல் 16 தீர்த்தங்கள் உள்ளன.

கல்வெட்டு:

பரகேசரி வர்மனான முதலாம் இராஜராஜன், மதுரை கொண்ட முதற் பரகேசரிவர்மன், சுந்தரபாண்டிய தேவன், சொக்கப்பநாயக்கன், சொக்கலிங்கநாயக்கன், மைசூர் கிருஷ்ணராஜ உடையார் முதலிய அரசர்களின் கல்வெட்டுக்கள் இங்குக் காணப்படுகின்றன. அவற்றால் அறியப்படுவன பெரும்பாலானவை அந்தணர்களுக்கு அன்னமும், யாத்தீரிகர்களுக்கு உணவும், விளக்கிற்கு நெய்யும் அளிக்கப்பெற்ற நிபந்தங்களேயாகும். 192 முதல் 194 வரையிலுள்ள கல்வெட்டுக்கள் சுப்பிரமணியப் பிள்ளையார் கோயிலைப்பற்றி அறிவிக்கின்றன. கி.பி. 1660 முதல் 1682 வரை அரசாண்ட விஸ்வநாத சொக்கலிங்கர் காசிவிசுவேசர் கோயிலையும் கோபுரத்தையுங் கட்டினார்.

50. திருப்பூவணம்

பாண்டிநாட்டுத் தலம். மதுரைக்குக் கிழக்கே வைகையின் தென்கரையில் 18.கி.மீ. தூரத்தில் இத்தலம் இருக்கிறது. மதுரை யிலிருந்து பேருந்துகள் உள்ளன.

இது பிரமன் பூசித்த தலம். 'நான்மறையோன் கழலே சென்றுபேணி ஏத்த நின்ற தேவர்பிரான் இடமாம்' என்பது சம்பந்தர் தேவாரம். பொன்னனையாள் என்னும் தாசிக்காகச் சொக்கலிங்கப் பெருமான் சித்தர்வடிவாக எழுந்தருளி ரசவாதம் செய்து சோமாஸ் கந்தர் திருவுருவத்தை அமைக்க அருள் செய்தனர் என்பது திருவிளை யாடற்புராணத்துட் காணப்படும் வரலாறு.

இத்தலம் தமிழ்நாட்டு மூவேந்தர்களும் ஒருங்கு கூடி வழி

Koviloor Digital Library

பட்ட தலமாக இருந்தது என்பதனை 'முன்சேர் தென்னர் சேரர் சோழர்கள் தாம் வணங்கும் திருப்பூவணம்' என்னும் சம்பந்த சுவாமிகள் வாக்காலும், 'உதியருடன் வன்றொண்டர் தாமிருந்த இடங்கெழுமி வளவனார் மீனவனார் வளம்பெருக மற்றவரோடும் அளவளாவிய விருப்பால் அமர்ந்து கலந்து இனிதிருந்தார்' என்னும் சேக்கிழார் திருவாக்காலும் அறியலாம்.

இறைவன் பூவணநாதர். இறைவி மின்னம்மை. மின்னனையாளம்மை என்று வழங்குவதுமுண்டு. விருட்சம் பலா. தீர்த்தம் வைகை.

கல்வெட்டு:

கோநேரின்மைகொண்டான் தனது எட்டாம் ஆட்சியாண்டில் புஷ்பவனேசுவரர் கோயிலுக்கு நிலம் வழங்கினான். குலசேகரதேவன் தனது 25 ஆம் ஆட்சியாண்டில் தினந்தோறும் வேத பாராயணஞ் செய்ய 1008 பிராமணர்களுக்கு உணவிற்காக நிலம் அளித்தான். ஒரு செப்பேடு ராஜகெம்பீர சதுர்வேதி மங்கல சபைக்கு 25 காசுகள் வழங்கியதை அறிவிக்கிறது.

51. திருமாற்பேறு

தொண்டை நாட்டுத்தலம். காஞ்சிபுரம் - அரக்கோணம் இருப்புப்பாதையில் இரயில் நிலயம். காஞ்சிபுரத்திலிருந்து பேருந்து வசதி உள்ளது. இதுவே எளிதானது.

இத்தலம் ஹரிசக்ரபுரம் எனவும் வழங்கும். திருமால் ததீசி முனிவருடன் போர்செய்ய அவர் சக்கரம் வாய்மடிந்து போயிற்று. சலந்தரனைக் கொன்ற சக்கரம் சங்கரனிடத்திருப்பதையறிந்த திருமால் இத்தலத்திற்குவந்து இறைவனை ஆயிரந்தாமரைகொண்டு அர்ச்சிக்க, இறைவன் ஒரு நாள் ஒரு மலரை மறைத்துவிட்டார். திருமால் அதற்குப்பதிலாகத் தம் கண்ணையிடந்து அர்ச்சிக்க, சுதரிசனம் என்னும் சக்கரத்தை ஈந்தார். கண் இடந்து அர்ச்சித்தமைக்காகப் பதுமாக்ஷன் என்னும் பெயரையும் கொடுத்தார். சோமனும் பூசித்துப் பேறுபெற்ற தலம். இச்செய்தி 'மன்னி மாலொடு சோமன் பணிசெயும் மன்னுமாற் பேற்றடிகளை' என்னும் தேவாரத்தானும், 'பெருமாற்றின் படைவேண்டி நற்பூம்புனல் வருமாற்றின் மலர் கொண்டு வழிபடும் கருமாற்கின்னருள் செய்தவன்' என்னும் திருக்குறுந்தொகை யானும் அறியப்படும். இறைவன்பெயர் மால்வணங்கீசர், மணிகண்டேசர்.

Koviloor Digital Library

இறைவி கருணைநாயகி, அஞ்சனாக்ஷியம்மை, தீர்த்தம் பாலாறு.

கல்வெட்டு:

ஜயங்கொண்ட சோழமண்டலத்திலுள்ள காமக்கோட்டத்தின் பகுதியான வல்ல நாட்டிலுள்ள திருமாற்பேறு [1] என்று இராஜகேசரி வர்மன் திரிபுவனச்சக்ரவர்த்தி குலோத்துங்க சோழன்காலத்தில் குறிக்கப்பட்டுள்ளது. இறைவன் பெயர் கல்வெட்டுக்களில் திருமாற் பேறுடையார், ஆளுடையார், உத்தம சோழீசுவரமுடையார், அவி மூக்தீசுவரமுடையார் என்று வழங்கப்படுகின்றன. இத்தலத்தில் அக்கினீசுவரர் கோயில் ஒன்று தனியே இருந்திருக்கவேண்டும். இக்கோயிலுக்குக் கண்டராதித்தனால் ஐம்பெருங்குழு ஏற்படுத்தி நிலங்களைக் கவனிக்கவும், படையலுக்கு நெல்கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன [2]. இங்குள்ள விஷ்ணு கோயிலிலுள்ள இறைவன் பெயர் கோவிந்தபதியில் நின்றருளிய பெருமானடிகள் என்பது [3]. இது தண்டகநாட்டின் மாவட்டமான தர்மக்கோட்டத்தின் பிரிவான வல்ல நாட்டில் கோவிந்தபதியிலுள்ள கோயிலிலுள்ள நின்றருளிய பெருமான் ஆகும் [4]. மாற்பேறுடையார் கோயிலைக் கட்டவும், சுற்று மண்டபத்தை முற்றுப்பெறச் செய்யவும் விராட அரசன் அனையமான் என்கிற மண்டலாதித்யனால் தானம் கொடுக்கப்பட்டது [5]. உத்தம சோழீசுவரமுடையார் உருவம் தயார்செய்ய சேதிராயன் என்பவனால் நிலம் தானம் செய்யப்பட்டது [6], உமாபத்தராகியார் (அதிசுந்தர தேவதேவியார்) உருவம் தயார்செய்ய சோழன் இராஜகேசரிவர்மனால் நிலம் தானம்செய்யப்பட்டது [7]. மணவாளப்பெருமாள் உருவம் செய்யவும், ஆபரணம் தயார்செய்யவும் பரகேசரிவர்மன் இராஜேந்திர சோழன் ஆட்சியில் ஆவனசெய்ததைத் தெரிவிக்கின்றது [8]. கோயிலில் அனையமான் பரமண்டலாதித்தன் ஒரு மண்டபம் கட்டியுள்ளான் [9]. நம்மாழ்வார் திருவாய்மொழியின் வரிகள் கருப்பக்கிருகத்தின் மேற்குச் சுவரில் காணப்படுகின்றன [10]. மணவில் கோட்டத்தின் பகுதியான மேல்பழுங்கூர்நாட்டில் சிறியளூரில் கோவிந்தபதி ஆழ்வார் கோயில் ஒன்று உள்ளது [11]. தோழனார் தந்தையால் கோவிந்தபதி ஆழ்வார்மீது ஒரு திருப்பதியம் பாடப்பட்டுள்ளது [12].

சோழன் இராஜகேசரிவர்மன் காலத்தில் வைஷ்ணவர்களில்

[1] 271 of 1906, [2] 283 of 1906, [3] 303 of 1906,
[4] 314 of 1906, [5] 267 of 1906, [6] 277 of 1906,
[7] 284 of 1906, [8] 321 of 1906, [9] 323 of 1906,
[10] 326 of 1906, [11] 326 of 1906, [12] 333 of 1906.

Koviloor Digital Library

18 நாடு குறிக்கப்படுகின்றது. மேலும் வண்டல்படிந்த நிலங்களைப் பற்றியும் பாலாற்றில் வெள்ளம் வந்ததைப்பற்றியும், இதற்குச் செப்பனிட 1000 கூலிகள் நியமிக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் 12 கோல் நிலம் கொடுக்கப்பட்டது பற்றியும் அறிவிக்கப்பெறுகின்றன [1]. மற்றைய கல்வெட்டுக்கள் விளக்கிற்கு, பிராமண உணவிற்கு, அபிடே கத்திற்குப் பொன், நிலம், பசுக்கள், குடங்கள் முதலியன கொடுக்கப் பட்டதைத் தெரிவிக்கின்றன.

52. திருஊறல்

தொண்டை நாட்டுத்தலம். இத்தலம் தக்கோலம் என வழங்கப் பெறுகிறது. இரயில் நிலயம் உள்ளது. காஞ்சிபுரத்திலிருந்து பேருந்து கள் உள்ளன. நந்திதேவரது வாயினின்றும் நீர் சுரப்பதாலும், இறை வனது திருவடியினின்றும் நீர் சுரப்பதாலும் ஊறல் என்று வழங்குவ தாயிற்று. சம்வர்த்தமுனிவர் பூசித்துப் பேறு பெற்றதலம். இக்கோயி லையடுத்து மதிலோரத்தின் கிழக்கே உள்ள கங்காதரர் சந்நிதியில் மேற்குப் பிராகாரத்தில் விருஷபவாயிலிருந்து அகோராத்ரம் தீர்த்தம் வருவது ஸ்தல மகிமையை விளக்கும். இறைவன் உமாபதீசுவரர், ஜல நாதேசுவரர். இறைவி உமையம்மை. தீர்த்தம் பார்வதி தீர்த்தம். விசயநகர அரசர்களால் நந்திதீர்த்தம் என்றழைக்கப்பட்டது. தக் கோலம் இரயில் நிலையத்திலிருந்து கிழக்கே 1.5.கி.மீ. தொலைவில் இத்தலம் உள்ளது.

கல்வெட்டு:

கல்வெட்டில் ஜலநந்தீசுவரர் என்று வழங்கப்பெறும். இராஜகேசரிவர்மன் ஆட்சியில் கங்கமன்னன் பிருதிவிபதியால் வெள்ளிப்பாத்திரம் தானம் செய்யப்பட்டது [2]. அவன் மனைவி அருள் மொழிநங்கையால் கோதானம் செய்யப்பட்டது [3].கோ பார்த்திவேந்திர வர்மன் ஆட்சியில் துர்க்கைச்சிலைக்கு விளக்குக்கள் அளிக்கப் பட்டுள்ளன [4]. திரிபுவனச்சக்ரவர்த்தி குலோத்துங்கன் ஆட்சியில் திருக்காளத்திதேவன் என்கிற யாதவனால் நிலம் தானம் செய்யப் பெற்றுள்ளது [5]. மற்றவை விளக்கிற்கும், மற்றச்செலவுகளுக்கும் பொன், பணம், நிலம், ஆடுகள், நெல் முதலியன வழங்கியதைத் தெரிவிக்கின்றன.

[1] 322 of 1906, [2] 5 of 1197, [3] 7 of 1197.
[4] 14 of 1197, [5] 16 of 1197.

Koviloor Digital Library

53. இலம்பையங்கோட்டூர்

தொண்டை நாட்டுத்தலம். கூவத்துக்குத் தென்மேற்கே 2 கி.மீ. தூரத்திலுள்ளது. சென்னை, காஞ்சிபுரம், அரக்கோணம் ஆகிய ஊர்களிலிருந்து பேருந்துகள் செல்கின்றன.

இங்கு அரம்பையாதியர் பூசித்துப் பேறுபெற்றனர். அரம்பையங்கோட்டூர் என்பது இலம்பையங்கோட்டூர் என மருவியது. இறைவன் சந்திரசேகரர். இறைவி கோடேந்து முலையம்மை. தீர்த்தம் சந்திர தீர்த்தம். இத்தலம் திருவிற்கோலத்தினின்றும் தென்மேற்கே 5 கி.மீ. தூரத்தில் உள்ளது.

கல்வெட்டு:

பாண்டியன் கோநேரின்மை கொண்டான் திரிபுவனச் சக்ரவர்த்தி ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சியில் மணவிற் கோட்டத்தின் பகுதியான கான்றூர் நாட்டிலுள்ள இலம்பையங்கோட்டூர் என வழங்கப்பெறும்[1], திரிபுவனச் சக்கரவர்த்தி திரிபுவன வீரதேவனது ஆட்சியில் கான்றூர் நாட்டிலுள்ள சதுர்வேதிமங்கலம் இலம்பையங்கோட்டூர் எனவும் வழங்கப் பெறும்[2]. இறைவன் பெயர் இலம்பையங்கோட்டூர் உடையநாயனார் என்பது[3].

இராஜாதிராஜதேவன் காலத்தில், தேவநாயகசுவாமிகோயில், சிவபாதசேகர மூவேந்தவேளானால் கட்டப்பட்டுள்ளது[4]. ஏனையவை விளக்கிற்கு நெல், பொன், ஆடுகள், நிலங்கள் முதலியன தானங் கொடுக்கப்பட்டதை அறிவிக்கின்றன.

54. திருவிடைச்சுரம்

தொண்டை நாட்டுத்தலம். மக்கள் வழக்கில் திருவடிசூலம் என வழங்கப்படுகிறது. செங்கற்பட்டிலிருந்து திருப்போரூர் செல்லும் பேருந்தில் திருவடிசூலம் செல்லலாம். பேருந்து நிறுத்தத்திலிருந்து 1 கி.மீ. தூரத்தில் ஆலயம் உள்ளது.

இத்தலம் மலைகளின் இடையில் கற்சுரத்தில் அமைந்தமையின் இப்பெயர் எய்தியது. சனற்குமாரமுனிவர் பூசித்துப் பேறுபெற்ற தலம்.

[1]232 of 1910, [2]234 of 1910, [3]234 of 1910, [4]231 of 1910.

Koviloor Digital Library

மூலலிங்கம் தீபஒளி பிரதிபலிக்கக் கூடிய மரகதலிங்கம். சம்பந்த சுவாமிகள் தூரத்தே எழுந்தருளும்போது திருமேனிச் செம்மைகண்டு ''இடைச்சுரமேவிய இவர் வணம் என்னே'' என்று வியந்துள்ளார். இறைவன் இடைச்சுரநாதர், ஞானபுரீசுரர். இறைவி இமய மடக்கொடி யம்மை.

கல்வெட்டு:

சோழ அரசன் குலோத்துங்க சோழதேவன் ஆட்சியில் ஜயங் கொண்ட சோழ மண்டலத்திலுள்ள களத்தூர்க் கோட்டத்தின் பகுதி யான வளநாட்டிலுள்ள திருவிடைச்சுரம் என்று [1] குறிக்கப்பட்டுள்ளது. இறைவன் பெயர் திருவிடைச்சுரமுடைய நாயனார்; திருவிடைச்சுரம் உடையார் என்றும், வழங்கப்பெறும். இங்கு ஜனனபுரீசுவரர் கோயில் ஒன்று உள்ளது. மேலும் கோவர்த்தன அம்பாள் திருக்காமக் கோட்ட முடைய பெரிய நாச்சியார் உருவம் நிறுவ, பெருந்தண்டிலத்திலுள்ள கருப்பக்கிருகம் கட்டப்பட்டதையும் கூறுகிறது[2]. இந்த இறைவி கருப்பக்கிருகத்திற்கு விளக்குப்போட, ஆவன செய்யப்பட்டுள்ளது[3]. மகாமண்டலேசுவர குமார ஜலகராஜ திருமலையதேவ மகாராயரால் விளக்குக்காகவும் படையலுக்காகவும் நிலம் கொடுக்கப்பட்டது[4]. பிள்ளையார் நீலங்கநாயனாரைப் பற்றி [5] விவரிக்கின்றது.

ஏனையவை விளக்கிற்காகவும் பிறவற்றிற்காகவும் பொன், நிலம், ஆடுகள், பசுக்கள் இவைகள் அளிக்கப்பட்டமையை அறிவிக் கின்றன.

55. திருக்கழுக்குன்றம்

தொண்டை நாட்டுத்தலம். இத்தலம் செங்கற்பட்டிலிருந்து தென்கிழக்கே 14.கி.மீ. தூரத்தில் உள்ளது. பேருந்துகள் உள்ளன.

கழுகுகள் பூசித்துப் பேறுபெற்றமையின் கழுக்குன்றம் எனப் பெறும். முதல்யுகத்து, சாபமெய்திய சண்டன், பிரசண்டன் என்னும் கழுகுகளும், இரண்டாம் யுகத்து, சம்பாதி, ஜடாயு என்னும் கழுகுகளும், மூன்றாம் யுகத்து, சம்புகுத்தன், மாகுத்தன் என்னும் கழுகுகளும், நான்காம் யுகத்து சம்பு, ஆதி என்னும் கழுகுகளும் பூசித்து முறையே

[1] 335 of 1908, [2] 346 of 1908, [3] 347 of 1906, [4] 337 of 1908, [5] 342 of 1908.

Koviloor Digital Library

பேறுபெற்றன. வேதங்கள் மலையுருவாய்ச் சுவாமியைத் தாங்கலின் வேதகிரி எனவும் வழங்கும். வடதேசத்தினர் பட்சி தீர்த்தம் என்பர். இன்றும் இரண்டு பட்சிகள் தினந்தோறும் அன்னத்தை உண்டு வலம் வருகின்றன. 12 ஆண்டுக்கொருமுறை சங்கு பிறத்தலின் சங்கு பிறந்த குளம் என்னும் மகிமையைப்பெற்றுள்ளது. மாணிக்க வாசக சுவாமி களுக்கு இறைவன் குருமூர்த்தி வடிவமாய்த் தரிசனங்கொடுத்த தலம். இவரன்றி நந்தி, இந்திரன், கோடிருத்திரர் முதலியோர் பூசித்துப் பேறு பெற்றனர். இறைவன் வேதபுரீசுவரர். இறைவி பெண்ணினல்லா ளம்மை, மலைச்சொக்கநாயகி. அடிவார இறைவன் பெயர் பக்தவத் சலர். இறைவி திரிபுரசுந்தரி. தீர்த்தம் சங்கு பிறந்த குளம், சங்க தீர்த்தம், பட்சி தீர்த்தம்.

கல்வெட்டு:

பாண்டியமன்னன் ஜடாவர்மன் என்கிற திரிபுவனச் சக்ரவர்த்தி வீரபாண்டியதேவன் காலத்தில் செயங்கொண்ட சோழ மண்டலத்தில் களத்தூர் கோட்டத்துத் திருக்கழுக்குன்றம் என்றும்[1], சோழர் காலத்தில் களத்தூர் கோட்டத்தில் களத்தூர் நாட்டிலுள்ள உலகளந்த சோழபுரம் என்றும் வழங்கப்பெற்றது. இறைவன் திருக்கழுக்குன்றமுடைய நாயனார் [2] என்று வழங்கப்படுவர். சண்முகப் பிள்ளையார் குறிக்கப் பட்டுள்ளார் [3]. இராஷ்டிரகூட அரசன் கன்னரதேவன் காலத்தில் கருப் பக்கிருகத்தின் முன் மண்டபங்கட்ட ஈசானசிவா விடமிருந்து ஒருபட்டி நிலம் வாங்கப்பட்டது [4]. இராஜராஜ புரத்தில் வசிக்கும் ஒருவர் 10 காசுகள் கொடுக்கத் தான் வாங்கின நிலத்தை 63 நாயன்மாரில் ஒரு வரான நமிநந்தியடிகள் பிதாவிடம் கொடுத்துள்ளார்கள் [5]. பக்தவத் சலக் கோயில் குன்றத்தின் மேலுளதாக [6] இரண்டு கல்வெட்டுகள் அறிவிக்கின்றன. கோயிலைப் பழுதுபார்க்க விஜயநகர அரசன் பிரதாபபுக்கராயர் நிலம் தந்துள்ளார். மேலும் தம் பெயராகிய புக்க ராயன் சந்தி விழாவிற்காகவும் நிலம் தானம் செய்யதுள்ளார்[7]. ஆயிரப்பிரிவிலுள்ள மக்களால் திருமலை ஆளுடை நாயனார் கோயிலுக்கு நிலம் தானம் செய்யப்பட்டுள்ளது[8]. களத்தூர் பிரிவி லுள்ள மக்களால் அதே கோயிலுக்கு காளிங்கராயன் சந்தி விழாவிற் காக நிலம் தானஞ்செய்யப்பட்டது [9]. மாறவர்மன் திரிபுவனச் சக்ர வர்த்தி வீரபாண்டியதேவன் காலத்தில் ஒரு நபரால் சண்முகப் பிள்ளை யார் கர்ப்பக்கிருகத்திற்கு விளக்கிடப் பசுக்கள் தானஞ் செய்யப்

[1] 59 of 1909, [2] 61 of 1909, [3] 62 of 1909, [4] 170 of 1894, [5] 179 of 1894, [6] 189 of 1894, 57 of 1909, [7] 57 of 1909, [8] 58 of 1909, [9] 59 of 1909.

Koviloor Digital Library

பட்டுள்ளன [1]. விஜய நகர அரசன் வீரவிஜய பூபதிராயரது ஆட்சியில் அரசனுடைய அதிகாரியான நாகேசுவரமுடையான் விழாவிற்காக வரியைத் தள்ளுபடி செய்துள்ளான் [2]. 17 ஆம் நூற்றாண்டின் மத்தியில் ஒல்லாந்து நாட்டு அதிகாரிகளைப்பற்றிய அடையாளச் செய்திகள் குன்றின் ஒருகால்மண்டபத்தின் கீழ்த்தாழ்வாரத்தின் 8 சுவர்களின் மேல் பொறிக்கப்பட்டுள்ளன[3]. இவையன்றி விளக்கு முதலானவற்றுக்குப் பொன், நிலம், ஊர், ஆடுகள், பசுக்கள் முதலியன அளிக்கப்பட்ட செய்திகளும் அறியப்படுகின்றன.

56. திருக்கானூர்

சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். இது பூதலூர் இரயில் நிலையத்திலிருந்து வடக்கே 3 கி.மீ. தூரத்தில் உள்ளது. பேருந்தில் வருவோர் திருக்காட்டுப்பள்ளியை அடைந்து அங்கிருந்து செல்ல வேண்டும்.

உமாதேவியார் சிவயோகத்து எழுந்தருளியிருந்தபோது இறைவன் செந்தீவண்ணராகத் திருவுருக்காட்டிய தலம். இதனை அப்பர்சுவாமிகள் 'கானூரில் பரமனாய பரஞ்சுடர்' என்பார்கள். சுவாமி செம்மேனிநாதர். அம்மை சிவயோகநாயகி.

தீர்த்தம் கொள்ளிட நதி.

கல்வெட்டு:

இத்தலம் வடகரை இராஜராஜவளநாட்டுப் பொய்கையூர் நாட்டுப் பணிபதிமங்கலமாகிய கரிகாலசோழ சதுர்வேதி மங்கலத்துத் திருக்கானூர் என்று குறிக்கப்படுகிறது. சுவாமி பெயர் இட்சுபுரீசுவரர் என்று கல்வெட்டுக் குறிப்பாளர் எழுதுகிறார். கி.பி.1268-1308 ஆண்ட மாறவர்மன் குலசேகரதேவன் ஏதோ நிவந்தம் அளித்திருக் கிறான். பெரிய நப்பனான உத்தம சோழ நாடாள்வான் கிராமக் காவலனாக இருந்தான். இராஜாதி ராஜதேவனுடைய நான்காம் ஆண்டுக் கல்வெட்டொன்றில் கரிகாற் சோழீசுரமுடைய மகாதேவர் கோயில் ஒன்று குறிக்கப்படுகிறது. இங்கே திருமேற்கோயில் என்னும் விஷ்ணு கோயில் இருந்ததையும் அது குறிப்பிடுகிறது[4].

[1] 62 of 1909, [2] 63 of 1909, [3] 66 to 73 of 1909, [4] 164 of 1911.

Koviloor Digital Library

57. திருப்பரங்குன்றம்

பாண்டிய நாட்டுத்தலம். மதுரைக்கு அருகில் மேற்குத் திசையில் உள்ளது. பேருந்துகள் பல உள்ளன.

இது முருகனது ஆறு படைவீடுகளில் ஒன்று. முருகன் தெய்வயானையைத் திருமணம் செய்துகொண்ட தலம். முருகன் வழிபட்ட தலம். சுவாமி பெயர் பரங்கிரிநாதர். அம்மை ஆவுடைநாயகி. தீர்த்தம் சரவணப்பொய்கை. மலைமேல் காசிதீர்த்தம் என்ற ஒன்று இருக்கிறது. அதில் பலரக மீன்கள் பார்ப்போர் கண்ணைக்கவரும். நக்கீரர் வாழ்ந்த நன்னகரம். இத்தலம் மதுரைக்குத் தென்மேற்கில் 8 கி.மீ. தூரத்தில் உள்ளது.

கல்வெட்டு:

இத்தலத்துக் கல்வெட்டுக்களாக செவல் பாதிரியார் குறிப்பவை பதினொன்று. ஆனால் அவைகள் தெளிவும், வரலாற்று விளக்கம் உடையனவும் அல்ல. கி.பி. 1843 இல் வீரசிம்மநாயுடு என்பவன் மரபில் வந்த மங்கம்மாள் கோயிலுக்குச் சிறிது தானம் வழங்கினாள். சுந்தரபாண்டியதேவன், வீரநாராயண குளத்திற்குக் கீழ்ப்புறமிருந்த அம்பாண்டியபுரமாகிய புளிங்குன்றூர் கிராமத்தைப் பூசைக்கும் பணிக்கும் அளித்தான். அதில் கடவுள் பெயர் சுந்தரபாண்டீசுவரமுடையார் என்று குறிக்கப்படுகிறது. முகம்மதிய அரசாங்கத்தில் திவானாயிருந்த ராஜகோபாலராயர் ஐரோப்பியர் படை மதுரையில் புகுந்து, கோயிலை அழித்து முன்னேறிக்கொண்டிருந்தபோது, வயிராவி முத்துக்கருப்பன் குமாரன் குட்டி என்பவன் எதிரிப்படைகளைத் தடுப்பதற்காகக் கோபுரத்திலிருந்து கீழே விழ, அவன் பரம்பரையினருக்கு இறையிலியாகச் சில நிலங்கள் அளித்த செய்தி அறியப்படுகிறது.

58. திருப்பழனம்

சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். கும்பகோணம் - திருவையாறு பேருந்துச்சாலையில் திருவையாற்றுக்கு அருகில் உள்ளது.

இது திருவையாற்று ஸப்தஸ்தானத் தலங்களுள் ஒன்று. அப்பூதி அடிகளுடைய அவதாரத் தலமாய திங்களூர் இதற்கு

Koviloor Digital Library

அண்மையில் இருப்பதால் இங்கு வழிபட வந்த அப்பர் அடிகள் இத்தலப் பதிகத்து அப்பூதிநாயனார் திருப்பெயரை அமைத்து அருளிச்செய்தார்கள். விடந்தீர்த்த பதிகமாகிய ''ஒன்று கொலாம்'' என்ற பதிகநிகழ்ச்சிக்கு இடமானதலம் இது. இறைவன் பெயர் ஆபத்சகாயர். அம்மையின் பெயர் பெரிய நாயகி. தீர்த்தம் - காவிரி.

கல்வெட்டு:

இத்தலத்தைப்பற்றிய கல்வெட்டுக்கள் 29 உள்ளன. இவை களும் முதற்பராந்தகன் காலமுதற்கொண்டே தொடங்குகின்றன. இவற்றால் அரசர்களும் அரசியர்களும், அவர்களது தோழிமார்களும், தண்டத் தலைவர்களும் விளக்கிற்காக நிலமும் நெய்யும், பொன்னும் வழங்கியமை அறியலாம். திரிபுவன வீரதேவனான மூன்றாம் குலோத்துங்கன் சிந்திநல்லூரில் உள்ள நிலங்களை 15500 காசுகளுக்கு விற்று, அதைக் கோயிலுக்குக் கொடுத்தான். இராஜராஜன் மூன்று காணி ஒரு முந்திரி நிலம் அளித்தான் என்பதால் அரசர்களின் அன்பின் நுணுக்கம் அறியப்பெறுகிறது. கோஇராஜகேசரிவர்மன் காலத்தில் ஒரு வேளாளன் கல்மண்டபம் ஒன்றை எழுப்பித் தந்தான்.

59. திருப்பராய்த்துறை

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். திருச்சிராப்பள்ளி யிலிருந்து குளித்தலை செல்லும் பேருந்து வழியில் உள்ளது. இத்தலம் இந்திரன், குபேரன், சப்தரிஷிகள் இவர்களால் பூசிக்கப்பெற்றது. அகண்ட காவிரித்துறையில் உள்ளது. இதனை அப்பர் சுவாமிகள் 'பரக்குநீர்ப் பொன்னி மன்னுபராய்த் துறை' என்று அருளுவார்கள். இறைவன் பெயர் பராய்த்துறை நாதர். தேவியார் பெயர் மயிலம்மை யார், தீர்த்தம் காவிரி. விருட்சம் பராய். விருட் சத்தால் இத்தலத்திற்குப் பெயராயிற்று. திருச்சி - ஈரோடு இரயில் பாதையில் இரயில் நிலையம் உள்ளது.

கல்வெட்டு:

மதுரைகொண்ட கோப்பரகேசரி வர்மரான முதற்பராந்தகன் காலத்திய கல்வெட்டுக்கள் மிகுதியாக உள்ளன. இன்னாரது என் றறியமுடியாத இராஜகேசரிவர்மன் காலத்திய கல்வெட்டுக்களும் சில உள்ளன. அவையன்றிச் சுந்தரபாண்டியத்தேவர், கோநேரின்மை கொண்டான். கிருஷ்ணதேவ மகாராயர் கல்வெட்டுக்களும் இன்னா ரென்று அறியமுடியாத சில கல்வெட்டுக்களும் உள்ளன. எல்லாமாக

Koviloor Digital Library

அரசியலார் படியெடுத்த கல்வெட்டுக்கள் 83. அவற்றால் அறியப்படும் கோயிலைப்பற்றிய உண்மைகள், கோயிலுக்கு விளக்கு எரிக்க ஆடும், பொன்னும், நிலமும் அளித்த செய்திகளாகும்.

சுந்தரபாண்டியத் தேவன் தன்னுடைய ஆட்சி ஒன்பதாம் ஆண்டில் தங்க ஆபரணங்கள் அளித்தான்[1]. குலோத்துங்கன் கருப்பக் கிருகத்துக்குப் பொன்வேய்ந்தான்[2]. சோமாஸ்கந்தர் கோயில் முன் மண்டபம், சிறைமீட்டான் திரிவிக்ரம உதயனால் கட்டப்பெற்றது[3]. தலவிநாயகருக்கு ஏகாம்பர உதயன் ஆட்சியில் நிலம் வழங்கப் பெற்றது[4]. இறைவன் திருப்பராய்த்துறை மகாதேவர், பராய்த்துறை பரமேசுவரன்[5]. என்று வழங்கப்பெறுகிறார். இத்தலம் உத்தமசீலிச் சதுர்வேதி மங்கலத்துத் திருப்பராய்த்துறை என்று குறிக்கப்படுகிறது. இங்கே தக்ஷிணாயன புண்ணிய காலத்திலும் சங்கராந்தியிலும் நீராட்டு விழா நடைபெற்றதாகத் தெரிகின்றது.

60. திருநாகைக் காரோணம்

சோழ நாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். தஞ்சை - நாகூர் இருப்புப்பாதையில் இரயில் நிலையம். சென்னை, கும்பகோணம், மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவாரூர் ஆகிய ஊர்களிலிருந்து பேருந்துகள் உள்ளன. நாகை மாவட்டத்தின் தலை நகர். இது சப்தவிடங்க ஸ்தலங்களில் ஒன்று. அதிபத்தநாயனார் அவதரித்த நம்பியாங்குப்பம் திருக்கோயிலுக்கு வடகிழக்கில் 1.5 கி.மீ தூரத்தில் இருக்கிறது. சிவபெருமான் புண்டரீக மகரிஷியை உடலோடு ஏற்றுக்கொண்ட தலமாதலின், காரோணம் எனப் பெயர் பெற்றது. ஆதிசேடன் பூசித்த தலமாதலின் நாகை எனப் பெயர் பெற்றது. அவன் பூசித்த திருக்கோயில் மேற்கே 1.5 கி.மீ. தூரத்தில் நாகநாதர் கோயில் என வழங்குகிறது. முத்திமண்டபம் என்ற ஒன்று இங்கு உள்ளமை தனிச்சிறப்பு.

இறைவன் பெயர் காயாரோகணேஸ்வரர். ஆதிபுராணர் என வழங்குதலும் உண்டு. அம்மை கருந்தடங்கண்ணி. வடமொழியில் நீலாயதாக்ஷி என வழங்குவர். தலவிருட்சம் மா. விநாயகர் மாவடி விநாயகர், நாகாபரணப்பிள்ளையார். தியாகர் திருவுரு தனியே உள்ளது. பாராவாரதரங்க நடனம். தீர்த்தம் புண்டரீக தீர்த்தம், காக தீர்த்தம் முதலியன.

[1] 267 of 1903, [2] 268 of 1903, [3] 280 of 1903,
[4] 282 of 1903, [5] 570 of 1903, 566 of 1903.

Koviloor Digital Library

இது கீழ்க் கடற்கரையோரமாக உள்ள தலம்.

கல்வெட்டு:

இத்தலத்தைப்பற்றிய கல்வெட்டுக்கள் மிகச் சிலவே. இவ் வாலயத்தைப்பற்றியனவாக ஒன்றும் இல்லை. நாயக்கமன்னர்கள், ஒல்லாந்து நாட்டவருக்கு இந்நகரை வழங்கிய வரலாற்றுக் குறிப்பு இதில் காணப்பெறுகிறது.

61. திருநல்லூர்

சோழ நாட்டுக் காவிரித் தென் கரைத்தலம். சுந்தரப் பெருமாள் கோயிலுக்கு அருகில் உள்ளது. பேருந்து வழி உள்ளது. இத்தலம் கோச்செங்கட் சோழனால் திருப்பணி செய்யப் பெற்ற மாடக்கோயிலுள் ஒன்றாக விளங்குவது. திருநாவுக்கரசு சுவாமிகள் திருச்சத்தி முற்றத்திலே 'பூவார் அடிச்சுவடு என்மேல் பொறித்துவை' என்று விண்ணப்பஞ்செய்ய, இறைவன் 'நல்லூருக்குவா! உன்னுடைய நினைப்பை முடிக்கின்றோம்' என்று அருள இங்கு எழுந்தருளினார். திருவடி சூட்டப்பெற்றார். அதனை அமைத்துத் திருத்தாண்டகத்து ஓதுதலைக்காண்க.

பழையாறையில் அவதரித்த அமர்நீதிநாயனார் இத்தலத்தில் திருமடங்கட்டிச் சிவனடியார்களுக்குக் கந்தை கீழ்க் கோவணங் கொடுத்துவந்தார். மறைந்துபோன சிவபெருமானது கோவணத்திற் காக தானும் உரிமையும் உடைமையுமெல்லாம் துலை ஏறி, அத்துலையே விமானமெனக்கொண்டு சிவபதம் அடைந்தார். இதனை அப்பர் சுவாமிகள் ''நாட்கொண்ட'' என்ற பாடலில் (7ஆம் பாட்டு) விளக்கி அருளுகிறார்கள்.

பிருங்கி வண்டுருபமாகப் பூசித்ததால் திருமேனி முழுவதும் துளைகள் உள்ளன. அகத்தியருக்குத் திருமணக்கோலம் காட்டிய தல மாதலால் அகத்தியலிங்கமும், கல்யாண சுந்தரக்கோலமும் கருப்பக் கிருகத்தில் இருக்கின்றன. சுவாமி பொன்வண்ணத் திருமேனியோடு விளங்குகிறார். ஒருநாளைக்கு ஐந்து வர்ணமாய்த் தோன்றுவதாக ஐதீகம். இங்கு சாலிக்கிராமத்தால் செய்யப்பெற்ற சுப்பிரமணியர் விக்கிரகம் ஒன்றுண்டு. சுவாமி பெயர் பெரியாண்டேசுவரர், கல்யாண சுந்தரேசுவரர், பஞ்சவர்ணேசர் என்பன. இறைவிபெயர் பர்வத சுந்தரி, கல்யாணசுந்தரி என்பன. தீர்த்தம் சப்தசாகர தீர்த்தம்.

Koviloor Digital Library

சுந்தரப்பெருமாள் கோயிலுக்குத் தெற்கே 3 கி.மீ. தூரத்தில் உள்ளது. திருவாவடுதுறை ஆதீன அருளாட்சியில் உள்ளது.

கல்வெட்டு:

இத்தலம் ஹொய்சள அரசரான வீர ராமநாததேவரின் 23 ஆவது ஆட்சியில் நித்தவிநோத வளநாட்டு நல்லூர்நாட்டுப் பஞ்சவன் மாதேவி சதுர்வேதி மங்கலமாகிய திருநல்லூர் என்று வழங்குகிறது.

இறைவன் திருநல்லூர் நாயனார் என்று வழங்கப்படுகிறார். இத்தலவிநாயகர் அகம்படிவிநாயகர் என்று குறிக்கப்படுகிறார். நாராயணன்மேகவீரன் என்பவன் ஒரு மண்டபங்கட்டினான். ஏனைய கல்வெட்டுக்கள் நிவேதனத்திற்கு நெல்லும், நிலமும், விளக்கிற்குப் பொன்னும் பூந்தோட்டத்திற்கும், பூக்கட்டவும் நிலமும் பொன்னும் அளித்த செய்தியை அறிவிக்கின்றன. இராஜேந்திர சோழதேவனின் 5 ஆம் ஆண்டுக் கல்வெட்டொன்று கோயிலில் அடித்தளம் அமைக்க நிலம் வழங்கியதைத் தெரிவிக்கின்றது.

62. கோயில் (சிதம்பரம்)

தலம்:

இத்தலம் சிதம்பரம் என வழங்கப்படுகின்றது. சோழ நாட்டுக் காவிரி வடகரைத்தலம். சென்னை-திருச்சி நேர் வழி இருப்புப் பாதையில் சிதம்பரம் இரயில் நிலையம் உள்ளது. தமிழகத்தின் அனைத்து நகர்களிலிருந்தும் பேருந்துகள் உள்ளன. தில்லை, சிதாகாச க்ஷேத்திரம், பெரும்பற்றப்புலியூர் என்பன இதன் மறுபெயர்கள். *மைத்ரேய உபநிஷதம்* ''இருதயாகாச மயம் கோசம் ஆனந்தம் பரமாலயம்'' எனக் குறிப்பிடுகின்றது. திருமந்திரத்தில் திருவம்பலச் சக்கரம், திருக்கூத்து, சிதம்பரம் முதலியன குறிப்பிடப்படுவதால் இதன்தொன்மை விளங்கும். கீஸ்ட் லிச் பேராசிரியர் கி.பி. 5 ஆம் நூற்றாண்டு முதல் 10, 11 வரையில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் இங்கு இருக்கின்றன என்கிறார்.

மூர்த்திகள்:

திருமூலட்டானேசுரர், உமையம்மை, முக்குறுணிவிநாயகர், கற்பகவிநாயகர், பாண்டியநாயகம், அம்மன், நவலிங்கம், துர்க்கை

Koviloor Digital Library

முதலியன மிக விளக்கம் வாய்ந்தவை. வைஷ்ணவத்தில் திருச்சித்திர கூடம் என வழங்கும். பெருமாள் தில்லைக் கோவிந்தராசர். தாயார் புண்டரீகவல்லித்தாயார். ஐந்து சபைகளுள் இது கனகசபை. இத் தலத்திலேயே ஐந்து சபைகள் உள்ளன. அவை சிற்சபை (இது நடராசப் பெருமான் இருக்குமிடம்), ராஜசபை (ஆயிரங்கால் மண்டபம்), கனகசபை (சிற்சபைக்கு முன்னால் உள்ள பகுதி), நிருத்தசபை (நடராசப் பெருமானின் கொடி மரத்திற்கருகிலுள்ளது), தேவசபை (பேரம்பலம்) என்பன.

இத்தலத்துச் சிறப்புடைக் கடவுள் ஆனந்த நடராசர். அவருடைய திருமேனி முழுவதும் பஞ்சாக்கரவடிவம். அவருடைய திருக் கூத்து ஒரேகாலத்தில் ஐந்தொழிலையும் ஆற்றுவது.

தீர்த்தங்கள்:

சிவகங்கை, பரமானந்தகூபம், புலிமடு, வியாக்கிரபாத தீர்த்தம், ஆனந்தத் தீர்த்தம், நாகசேரி, பிரமதீர்த்தம், சிவப்பிரியை, திருப்பாற்கடல் முதலியன. இறைவன் ஊர்த்துவதாண்டவமாடத் தோற்ற காளியின் கோயில் இந்தச் சிவப்பிரியைத் தீர்த்தத்தின் கீழ்க்கரையில், சிதம்பரத்தின் வட எல்லையில் இருக்கிறது.

தலவிருட்சம் ஆல். இது இன்று இல்லை. தில்லைவனம் என்ற பெயரால் தலவிருட்சம் தில்லை என்பாருமுளர்.

கல்வெட்டு:

சிதம்பரம் ஒரு தனியூராக அரசன் நேர்பார்வையில் இருந்து வந்தது. இதனைச்சூழப் பதினான்கு சிற்றூர்கள் இருந்தனவாகக் குறிக்கப் பட்டுள்ளன. இத்தலத்தின் பழைய பெயர் சிற்றம்பலம்[1]. புலியூர், பெரும்பற்றப்புலியூர், பொற்புலியூர், தில்லை, தில்லையூர், கோயில் என்று கல்வெட்டுக்களில் வழங்கப்படுகிறது[2] தில்லையின் தேவகாரியக் கண்காணிப்பாளர்களே சோழநாடு முழுமைக்கும் தேவாலயக் கண்காணிப்பாளராக இருந்துவந்தனர். சோழமன்னர்களுக்கு முடி சூட்டும் உரிமை தில்லை தேவகாரியக் குழுவினர்க்கே இருந்தது.

கல்வெட்டுகளில் மிகப் பழமையானதாகிய இராஜேந்திர சோழ தேவனுடைய 24ஆம் ஆண்டுக் கல்வெட்டும், குலோத்துங்க

[1] A.R. of 1914. para 13. [2] A.R. 117- of 1888.

Koviloor Digital Library

சோழ தேவனுடைய 47 ஆம் ஆண்டுக் கல்வெட்டும் கனகசபையையும் திருமூலட்டானத்தையும் பிரிக்கும் சுவரில் உள்ளன.

கனகசபையைச் சுற்றியுள்ள பிராகாரம் விக்கிரமசோழன் திருமாளிகை என்றும், திருமூலட்டானத்தைச்சேர வருகின்ற இரண்டாம் பிராகாரம் குலோத்துங்கசோழன் திருமாளிகை என்றும், அதற்கும் வெளியிலுள்ள மூன்றாம் பிராகாரம் இராசாக்கள் தம்பிரான் திருமாளிகை என்றும் வழங்கப்பட்டன. இவற்றுள் குலோத்துங்க சோழன் திருமாளிகை என்ற பெயரும் விக்கிரமசோழன் திருமாளிகை என்ற பெயரும் மேற்குறித்த சுவரிலுள்ள கல்வெட்டுக்களிலேயே காணப்படுகின்றமையின், விக்கிரமனே தன் தந்தையாகிய குலோத்துங்கன் பெயரால் உட்பிராகாரத்தையும், தன்பெயரால் இரண்டாம் பிராகாரத்தையும் செய்திருக்க வேண்டுமென்று தெரிகிறது.

சம்பந்தர் முதலிய மூவர் காலத்திலேயே இத்தலம் சிறப்புற் றிருக்கவும், அவர்கள் காலத்திய பல்லவ வேந்தர்களின் கல்வெட் டொன்றும் இதில் காணப்பெறாமை குறிப்பிடத்தக்கது.

சிதம்பரத்தைப்பற்றிய கல்வெட்டுக்கள் 271 உள்ளன, அவைகளுள் பெரும்பாலன கோப்பெருஞ்சிங்க அரசனைப் பற்றியும், ஜடாவர்மன் சுந்தரபாண்டியனைப் பற்றியும் கூறுவன. இராசேந்திரன் முதல் இராஜராஜன் III முடிய உள்ள பலருடைய கல்வெட்டுகளும், விஜயநகர மன்னர்களின் கல்வெட்டுக்களும் நாயக்க மன்னர்களின் கல்வெட்டுகளும் இருக்கின்றன.

இவைகளுள் பெரும்பாலனவற்றில் நந்தவனப் பணிகளே அறிவிக்கப்பட்டுள்ளன. மிகச்சிலவற்றுள் பூசை வழிபாட்டுக்குரிய நிபந்தங்கள் குறிக்கப்பட்டுள்ளன. அறச்சாலைகளைப் பற்றியும், அக்கிரகாரங்கள் அமைப்பதைப்பற்றியும், திருப்பாவாடை போடு வதைப்பற்றியும் தெரிவிக்கின்றன சில கல்வெட்டுக்கள். விக்கிரம சோழனது காலம்வரையில் கோயிற் சார்பாக நடைபெற்ற சாசனங் களெல்லாம் திருப்புலியூர்ச் சண்டேசுவர தேவநாயனார் பெயராலேயே நடைபெற்றுவந்தன. இவன் காலத்துக்குப் பிறகு கோயில் கண் காணிப்புச் சபையின் பெயராலேயே நடைபெற்று வந்திருக்கின்றன.

அரசாங்கத் தலைமை அதிகாரிகளும், உள்நாயகத்தார்களும், சீகாரியஞ் செய்வார்களுமாகப் பலர் மேற்கூறிய சபையின் அங்கத் தினர்களாக இருந்து, கோயிற்காரியங்களை மேற்பார்வை செய்து வந்துள்ளார்கள்.

Koviloor Digital Library

சிதம்பரம் திருக்கோயிலைக் கண்காணித்தவர்களாக 1. தொண்டைமான் 2. திருவையாறுடையான் 3. மதுராந்தகப்பிரமராயன் 4. தில்லையம்பலப் பேரரையன் 5. விழிஞத்தரையன் 6. இராஜராஜ விழுப்பரையன் 7. சித்தரையன் 8. வில்லவரையன், 9. அங்கராயன் 10. சிங்களராயன் 11. விஜயராயன் 12. மூவேந்தரையன் 13. வாணதரையன் 14. வயல்நாட்டரையன் 15. பொத்தப்பிச்சோழன் 16. காரணைவிழுப்பரையன் 17. குருகுலராயன் 18. மழவராயன் 19. காடுவெட்டி 20. வயிராதிராயன் 21. விலாடராயன் 22. விக்ரம சோழப்பிரமராயன் 23. விளநாடுடையான் 24. நிகரில்சோழப் பல்லவரையன் 25. குலோத்துங்க சோழவாணகோவரையன் 26. எதிரில்சோழவேளான் 27. நரசிம்மவர்மன் 28. பாண்டியராயன் 29. மலையப்பிராயன் 30. வேணாடுடையான் என்பவர்கள் குறிக்கப்படு கிறார்கள்.

கிழக்கு, தெற்கு, மேற்குக் கோபுரங்களை முடிசூடிய மன்னர் கள் கட்டியதாகவும், வடக்குக்கோபுரத்தைக் கடவுள் தானே கட்டிக் கொண்டதாகவும், S.I.I..374-1913 கல்வெட்டுப் பாட்டொன்று அறிவிக்கிறது. இவ்வடக்குக் கோபுரத்தைக் கிருஷ்ணதேவராயன் தொடங்கி நிலைமட்டம் வரையிலோ, அல்லது அதற்கு மேலுமோ நிறுத்தியதாகவும், அச்சுத தேவராயன் இதனை முற்றுப் பெறுவித்த தாகவும் கல்வெட்டுக்களால் யூகிக்க இடந்தருவதால் கடவுள் தானே கட்டிக்கொண்டார் என்று கல்வெட்டு உபசாரமாகக் கூறுகிறது போலும். தெற்குக்கோபுரம் கோப்பெருஞ்சிங்கனால் கட்டப் பட்டது. இவனுக்கு அழகிய சிங்கன் என்ற மற்றொரு பெயருமுண்டாதலால் இக்கோபுரம் சொக்கசீயம் என்று குறிக்கப்பட்டுள்ளது. இதனைத் தெற்கில் சொக்கச்சீயம், திருநிலையேழுகோபுரத் திருவாசல் திருப் பணிக்கு உடலாகத் தொண்டை நாட்டு ஆத்தூரில் நிலம்விட்டதாக வரும் ஆத்தூர் முத்தீசுர முடையார் கல்வெட்டும், கச்சிஏகம்பமுடை யார் கல்வெட்டும் தெரிவிக்கின்றன [1].

மேலைக் கோபுரத்தைத் திருப்பணிசெய்த சிற்பிகள் விருத்த கிரிசேவகப் பெருமாளும் அவன் மகன் விச்வமித்துருவும், திருப் பிரைக்குடையாசாரி திருமருங்கனும், அவன் சகோதரன் சாரணாசாரி யும் ஆவார்கள் எனக் கல்வெட்டுக் காட்டுகிறது [2]. இன்னும் அதிலேயே கீழ்ப்புறச் சுவரில் காமதேவன், அகத்தியன், சீதேவி, தேவேந்திரன், கணேசன், துர்க்கை இவ்வுருவங்களும், வடபுறச்சுவரில் ருத்ரதேவர், ராகு கேதுக்கள், நாரதன், அளகேசன், சந்திரன், கிரியாசக்தி, சனி, வாயு

[1]S.I.I. Vol VIII 51. [2]S.I.I. 17 - 1916.

Koviloor Digital Library

இவ்வுருவங்களும் மேல்புறச் சுவரில் [1]க்ஷேத்ரபாலப் பிள்ளையார், கங்காதேவி, தன்வந்திரி, திரிபுரசுந்தரி, சுக்கிரன், வைஜயன், நாகன். யமுனை, பத்ரகாளி, ஆதிசண்டீசர் இவ்வுருவங்களும், தென்சுவரில் புதன், நிருதி, ஞானசக்தி, அக்னிதேவன். இவ்வுருவங்களும் இருப்பனவாக அறிவிக்கிறது. [2] தேவாரம் பாடிய மூவர் முதலிகளாகிய ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவருக்கும் தனித்தனியே ஆலயங்கள் இருந்தனவாகக் கல்வெட்டுகள் அறிவிக்கின்றன.

வடக்குக் கோபுரத்தை யடுத்துத் திருத்தொண்டத் தொகையீச்சரம் என்ற ஒன்று குறிப்பிடப்படுகிறது. இதில், திருத்தொண்டத் தொகையில் பாராட்டப்பெற்ற தனிஅடியார் அறுபத்துமூவரும், தொகையடியார் ஒன்பதின்மருமாக உள்ள பெருமக்களில், தனியடியார்களுக்குத் தனித்தனித் திருவுருவம் அமைக்கப்பெற்றமை போலத் தொகையடியார்களாகிய கூட்டத்தினருக்குத் தனித்தனி உருவம் அமைக்க முடியாமையின் ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு இலிங்கத் திருமேனியாக எழுந்தருளச் செய்திருக்கிறது. முத்தியடைந்த பெருமக்களை உருவம் தெரிந்தால் உருவமமைத்தும், உருஅமைக்க முடியாததற்குச் சிவலிங்கந் தாபித்தும், அதுவுமில்லையானால், பீடங்கள் அமைத்தும் வழிபடலாம் என்று ஆகமங் கூறுகிறது. ஆதலால், உருவம் அமைக்கமுடியாத தொகையடியார்களைச் சிவலிங்கத் திருமேனி வாயிலாக வழிபடவேண்டி, திருத்தொண்டத் தொகையீச்சரம் என்ற இக்கோயிலை அமைத்து உள்ளார்கள். அன்றியும் தொண்டத்தொகை பாடிய சுந்தரர் வடக்குவாயில் வழியாக வந்தாரென்பதும் ஊன்றிக் கருதத்தக்கது. இவ்வாலயம் நவலிங்கம் கோயில் என இப்பொழுது வழங்கப்படுகிறது.

மூர்த்திகளின் திருநாமங்கள்: பொன்னம்பலக் கூத்தன் பொன்னம்பலநாதன்,[3] ஆனந்த தாண்டவப் பெருமாள் நாயனார்,[4] அழகிய திருச்சிற்றம்பலமுடையார், [5] ஆளுடைய நாயனார், [6] சிதம்பரேசுவரர், தில்லைநாயகத் தம்பிரானார் முதலாகிய பலபெயர்களால் குறிக்கப்படுகிறார். திருச்சிற்றம்பலக்கோவையில் மாணிக்கக் கூத்தன் என்றும் இறைவன்பெயர் வழங்கப்படுகின்றது. அதற்குப் பேராசிரியர் மாணிக்கம்போலும் கூத்தினை உடையான் என்று உரை

[1] இது தல விநாயகராகிய கற்பக விநாயகரைக் குறிப்பதாகும்.
[2] S.I.I. 1916 of 17, 48, [3] A.R. 622 of 1888.
[4] A.R.352 of 13, [5] E.P. 1 of 1914, [6] S.I.I. 280 of 13.

Koviloor Digital Library

கண்டார். ஆனாலும், அது இரத்தின சபாபதியாகிய மரகத நடராஜரைக் குறிப்பது என்பது தெளிவு.

அம்மை சிவகாமசுந்தரி என்றும், திருக்காமக்கோட்டமுடைய பெரிய நாச்சியார் என்றும் வழங்கப்படுகிறார். சிவகாமசுந்தரி என்பது சிற்சபையில் இறைவன் இடப்பாகத்தில் எழுந்தருளியிருக்கும் அம்மையைக் குறிப்பதாகும். முக்குறுணி விநாயகர் முகக்கட்டணத்து விநாயகர் எனவும், [1] குலோத்துங்கசோழ விநாயகர் எனவும் கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றார். முகக்கட்டணம் என்பது முகப்பு. தில்லைக்குத் தெற்குக்கோபுரமே சிறந்த பெருவாயில். அவ் வழியாகவே நடராஜப்பெருமானை வழிபடச் செல்கின்றவர்கள் செல் வது முறையாம். நடராஜப்பெருமானின் திருமுன்பும் இதுவே ஆத லால் முகப்பிலிருக்கும் பிள்ளையார் முகக்கட்டண விநாயகர் எனக் குறிப்பிடப்படுகிறார். முகக்கட்டணமென்பது முக்கணமாகி - முக்கணம் முக்குணியாக, போலி இலக்கண அறிவு அதனை முக்குறுணியாக்கி விட்டது. அதன்மேல் உருவத்தின் பெருமையையொட்டி, முக்குறுணி அரிசிக்கு ஒரே மோதகம் செய்து நிவேதிக்கப்படுவதால் இப்பெயர் உண்டாயிற்றென்ற செவிவழிச் செய்தியும் கிளைத்து விட்டது.

விக்கிரமசோழன் தெற்குத் திருவீதியில் வடபக்கத்துச் செங்கனி வாயான் திருநந்தவனத்து எழுந்தருளியிருக்கும் திருஞான சம்பந்தப் பிள்ளையார் பண்டார உடலிட்டும்' என்ற குறிப்பு காணப் பெறுவதால் விக்கிரமசோழன் திருவீதியில் திருஞான சம்பந்தருக்குத் தனியாகக் கோயில் இருந்தமை தெற்றெனப் புலப் படும். மேலைக் கோபுரத்தை யடுத்து, திருநாவுக்கரசருக்குத் தனிமடம் இருந்ததாகக் காட்டப்பெறுகிறது. முருகன், 'சுப்பிரமணியப்பிள்ளையார்' என்று ஒரு கல்வெட்டில் குறிக்கப் பெறுகிறார்.

கற்பகவிநாயகர், 'க்ஷேத்திரபாலப் பிள்ளையார்' என்றும், 'குலோத்துங்கசோழவிநாயகர்' என்றும் குறிப்பிடப்படுகின்றார். தில்லைக்காளி, 'தில்லைவனமுடைய பரமேசுவரி' என்று குறிப்பிட்ப் படுகின்றார்.

விழாக்கள்:

தில்லையில் திருவானித் திருநாளும், மார்கழித் திருவாதிரைத் திருநாளும் சிறப்பாகக் கோப்பெருஞ்சிங்கன் காலத்து முன்பிருந்தே

[1] S.I.I. 365 of 13.

Koviloor Digital Library

நடைபெற்றுவந்தன [1]. மாசிமாதத்தில் ஒரு திருவிழா நடந்ததாகத் தெரிகிறது. அதில் திருத்தொண்டத்தொகை விண்ணப்பம் செய்யப் பெற்று வந்தது [2]. ஏனைச் சிவத்தலங்களில் அம்மைக்கு ஆடிப்பூரவிழா நடைபெற்று வருவது போல இங்கு ஐப்பசிப் பூரவிழா நடைபெற்று வருகிறது[3]. மாசிமக நட்சத்திரத்தன்று நடைபெறும் கடலாட்டு விழாவும் குறிப்பிடப்படுகின்றது ''திருப்புதியது விழா'' என்று ஒன்று காணப்படுகின்றது. அதில் அம்மைக்குப் புதிய ஆடை சாத்தியதாகக் குறிப்பிடப்பெற்றுள்ளது. திருப்புடைவையீடுவிழா என்றும் அது வழங்கப்பெற்றுப் பின் திருப்புதியது விழா என்று வந்திருக்கலாமோ என்று கருத இடமுண்டு [4]. அன்றி, திருப்பாலி வளத்திருநாள் என்று ஒருவிழா குறிப்பிடப்பட்டுள்ளது. அது ஐப்பசிப்பூரத் திருநாளைக் குறிப்பதாகுமோ? என ஐயந்தருகிறது. இதில் அம்மை நீராடி, வெள்ளணி அணிந்து, பயறு முதலிய நவதானியங்களின் முளையைத் தன்மடியில் தரிக்கும் நாளாதலின் பாலிவளத்திருநாள் எனப்பட்டது போலும். (பாலி-நவதானிய முளை)[5] வசந்தத்திருநாள் என்பது பெருமான் வசந்த உற்சவம் கொண்டாடக் குலோத்துங்கன் தோப்புக்கு எழுந்தருளியதாகத் தெரிகிறது [6]. திருக்கண்சாத்தும் திருநாளும், பெருமான் பரிவார நாயன்மார்களுக்குத் திருவருள் நோக்கம் செய்யும் திருநாளாகும் என அக்கல்வெட்டே குறிப்பிடுகிறது.

இந்த ஒன்பது விழாக்களையுமன்றி 'எதிரிலிசோழன் சிவபாதசேகரன் சித்தத்துணைப் பெருமாள்விழா' என ஒன்று குறிப்பிடப்படுகின்றது. சிவபாதசேகரன் என்பது முதல் இராஜ ர்ாஜனுக்கு வழங்கிய பெயர். எதிரிலி என்பது முதற்குலோத்துங் கனுக்கு வழங்கியபெயர். ஆகவே தன் நாடுகளில் தன் குலமுதல் வனாகிய இராஜராஜன்வரையில் இருந்த சோழமன்னர்கட்குச் சித்தத்துணையாகவே இருந்துவந்த நடராஜப் பெருமானுக்கு நடந்த பெருவிழாக்களையே இது குறிப்பிட்டதாகுமென ஊகிக்கலாம். இதுவன்றித் தைப்பூசத்தில் பாவாடையிட்டுப் பெரிய பூசவிழா ஒன்று நடத்தியதாகவும் தெரிகிறது. இத்தகைய திருவிழாக்கள் கல்வெட்டுகளி லிருந்து அறிய வருகிறது என்பது சிந்திக்கத்தக்கதொன்று.

கீழக்கோபுரத்தின் வாயிலின் வலப்பக்கத்தில் காணப்பெறும் கல்வெட்டு,சோழகுலவல்லியால் நாயன்மார்களுடைய பாமாலையைப் பாராயணம் செய்விப்பதற்காக நிபந்தம் விட்டதை அறிவிக்கிறது.

[1] Vol. IV 223, [2] Vol. IV. 223, [3] 360 of 13, [4] 269 of 13,
[5] Vol. IV. 43, [6] Vol. IV. 43.

Koviloor Digital Library

முதலாம் இராஜேந்திரன் காலத்தில் மாசித்திருவிழாவில் அழகிய திருச்சிற்றம்பலமுடைய நாயனார் சந்நிதியில் திருத்தொண்டத் தொகை பாராயணம் செய்வாருக்கு நிலம்விட்டதாக உள்ளது. சம்பந்தர் முதலிய மூவருக்கும், தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய கோபுரங்களைச் சார இராஜாக்கள் தம்பிரான் திருமாளிகைத் திருவீதியில் தனித்தனியே திருக்கோயில்கள் இருந்ததாகவும், அவற்றுள் சம்பந்தப்பிள்ளையார் திருக்கோயில் பொன்வேயப்பெற்றிருந்ததாகவும் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. இதனால் திருமுறைகளுக்கும், திருமுறைகளைப் பாடியருளிய சமயாசாரியர்களுக்கும் எவ்வளவு சிறப்பு, சிதம்பரத்தி லிருந்தது என்பதை ஊன்றிநோக்க வேண்டும்.

அப்பூதியடிகள் நாவுக்கரசர்மீதிருந்த பற்றினால் நிலம் புலம் எல்லாவற்றிற்கும் அவர்பெயரிட்டு வழங்கியதுபோல, அரசர்கள் ஆனந்தக்கூத்தர்மீதிருந்த பற்றால், குடிஞைக் கல்லுக்கும், மரக்காலுக் கும் ஆடவல்லான் என்று பெயரிட்டு வந்தனர். சிற்றூர்களுக்குத் தில்லைவிடங்கன், கூத்தனூர்,கோயிற்பூண்டி, சபாநாயகபுரம், தில்லை நாயகபுரம், நடராஜபுரம் என்றும், ஓடைநீர்நிலை முதலியவற்றிற்குக் கூத்தாடுநாயகன் திருவோடை. ஆளுடையநாயகன் திருவோடை என்றும் பெயரிட்டிருந்தனர். தம்மிடம் அரசகாரியம் பார்ப்பாருக்குத் தில்லையம்பலப் பல்லவராயன், திருச்சிற்றம்பலமுடையான் நக்கன், இளைய திருச்சிற்றம்பலமுடையான், தில்லையம்பலப் பேரரையன் என்றும் பெயர் வைத்திருந்தமை அரசர்கட்கு உள்ள அன்பின் முதிர்ச்சியை எடுத்துக்காட்டும் தக்க சான்றுகளாகும்.

இத்தலத்திற்குப் பணிசெய்த மன்னர்களில் பல்லவர்களில் இரணியவர்மன், கோப்பெருஞ்சிங்கன் முதலியோர்களும் பாண்டியர் களில் மாறவர்மன் சுந்தரபாண்டியன், ஜடாவர்மன் சுந்தரபாண்டியன், மாறவர்மன் வீரபாண்டியன், விக்கிரம பாண்டியன் குலசேகரன் முதலியோர் குறிக்கப்படுகிறார்கள். சோழமன்னர்களில் முதல் பராந்தகன் முதல், மூன்றாம் இராஜராஜன் வரையிலுமாகப் பதின்மர் குறிப்பிடப் படுகிறார்கள். இவர்களில் இரணியவர்மனும், முதற்பராந்த கனும், மணவில் கூத்தன்காளிங்கனும், அனபாயன் முன்னோர்களும் அனபாயனும் பல காலங்களில் பொன்வேய்ந்தார்கள் என்று கல்வெட்டுகள் அறிவிக்கின்றன. இன்னும் விஜயநகர அரசர்களும். நாயக்க அரசர்களும், சேர அரசர்களும் திருப்பணிகள் மிகச்செய்துள் ளார்கள். இவற்றின் விரிவையும் விளக்கத்தையும் எமது சிதம்பரம் என்னும் நூலில் பரக்கக்காண்க.

Koviloor Digital Library

63. திருக்கோளிலி

சோழ நாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். திருவாரூரிலிருந்து பேருந்துகளில் செல்லலாம். திருக்குவளை என வழங்கப் பெறுகிறது.

ஆதியில் பிரமன் சிருட்டித் தொழிலைப் பெறவேண்டிப் பூசித்தான். அதனால் பிரமதபோவனம் என வழங்கப்பெறும். இது சப்த விடங்கத் தலங்களுள் ஒன்று. இங்கே எழுந்தருளியுள்ள தியாகர் அவனி விடங்கர். நவகோள்கள் பூசித்துப் பேறு பெற்றமையால் கோளிலி என வழங்கப்பெறுகிறது.

இறைவன் பிரமபுரீசுவரர். அம்மைவண்டமர்பூங்குழலாள். தியாகர் ஊழிப்பரன், அவனிவிடங்கத்தியாகர். விநாயகர் தியாக விநாயகர். முருகன் சுந்தரவடிவேலன். சுந்தரமூர்த்திகளுக்குக் குண்டையூர்கிழார் தந்த நெல்மலையைப் பூதங்களைக் கொண்டு திருவாரூரில் சேர்ப்பித்த அற்புதத்தலம்.

தீர்த்தம் முத்திநதியாகிய சந்திரநதி, மணிகர்ணிகை, இந்திர தீர்த்தம், அகத்தியதீர்த்தம், விநாயகதீர்த்தம், சக்தி தீர்த்தம் என்பன. விருட்சம் தேற்றாமரம்.

வழிபட்டவர்கள்:

பிரமதேவர், திருமால், இந்திரன், அகத்தியன், முசுகுந்தன், பஞ்சபாண்டவர்கள், நவகோள்கள், ஒமகாந்தன் முதலியோர்.

விழாக்கள்:

மாசிமகத்தில் நெல்திருவிழா, மார்கழிமாதத்தில் ஆருத்ரா தரிசனம். கார்த்திகை ஞாயிற்றுக்கிழமைகளில் தீர்த்தம்.

தருமை ஆதீன அருளாட்சியிலுள்ளது.

கல்வெட்டு:

இங்குள்ள கல்வெட்டுக்கள் 19. இத்தலம் இராஜேந்திர சோழவளநாட்டு இடையளநாட்டு வெண்டாழை வேளூர்க்கூற்றத் திற்கு உட்பட்டதாயிருந்தது. வடவல்லத்து இருள்குடியான் இந்திரா

Koviloor Digital Library

பதிநல்லூர் உய்யவந்தான் சிய்யாழிப் பிள்ளையான ஜெயதுங்க வன்மன் மகாமண்டபந் தொடங்கிக் கீழைவாசல்வரையில் திருப்பணி செய்தான். இத்திருப்பணி ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் காலத்த தாகும். இந்தக்கோயிலில் சிவன்படரில் (செம்படவர்) ஒருவனான ஆலன் என்பான் அதிபத்தநாயனார் படிவத்தை எழுந்தருளுவித்தான்.

64. திருச்சிராப்பள்ளி

சோழ நாட்டுக் காவிரித் தென்கரைத்தலம் தமிழகத்தின் பெரிய நகரங்களில் ஒன்று. இரயில், பேருந்து வசதிகள் உள்ளன. தமிழகத்தின் அனைத்திடங்களிலிருந்தும் செல்லலாம். இத்தலம் மிக விளக்க மானது. மலைக்காட்சியின் முதலிடமாக உள்ளது. காவிரிக்குத் தென் கரையில் அமைந்தது. கலாசாலைகளும், கல்லூரிகளும் நிறைந்தது. எல்லாவிதமான அறிவுத்துறையிலும் வளர்ச்சிக்குரிய இடமாக இருக்கிறது.

சரித்திர காலத்திலும் கி.மு. 2ஆம் நூற்றாண்டுக்கு முன்பு இருந்தே விளங்கிவருவது. சோழர் தலைநகரங்களில் ஒன்றாகிய உறையூரைத் தன்னகத்துக்கொண்டு விளங்குவது.

பெயர்க்காரணம்:

திரிசிராப்பள்ளி என்பதற்கு, திரிசிரன் என்னும் அரக்கன் பூசித்துப் பேறுபெற்றதனால், இப்பெயர்பெற்றது என்று புராணங் கூறும். இம்மலைக்கே மூன்று சிகரங்கள் உள்ளன. அதனால் திரிசிராப் பள்ளியெனப் பெற்றது என்று செவிவழிச் செய்தி நிலவுகிறது. இந்தப் பொருள்களில் வழங்கிய திருசிரப்பள்ளி திரிசிராப்பள்ளி ஆதற்கு என்ன விதியுண்டு என்பதை அறிஞர்கள் ஆய்ந்து முடிவுகாண்பார் களாக.

நமது சமயாசாரியப் பெருந்தகையார்கள் 'சிராப்பள்ளிக் குன்றுடையானை', 'சிராப்பள்ளிச் செல்வன்' 'சிரகிரி' எனவே வழங்குகின்றார்கள். திரிசிரா என்பதில் திரி என்பது மூன்று என்ற பொருள் குறித்த சொல்லாயின் அதனை விடுத்துச் சிராப்பள்ளி என்று வழங்கியிரார்கள். ஆதலால் அவர்கள் காலத்தில் திரு என்பதை அடைமொழியாகக் கொண்டதே சிராப்பள்ளி என்பதற்கு வேறு பொருள் இருந்திருக்கவேண்டும் என்பதனைக் கருத இடந்தருகின்றது.

Koviloor Digital Library

''சிராப்பள்ளி'' என்றதன் பெயர்க்காரணத்தைப் பற்றி நமது சரித்திரப் பேரறிஞர் தி.வி. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் செந்தமிழில் எழுதிய சுருக்கக் கருத்து இங்கே தரப்பெறுகின்றது:-

சிராப்பள்ளிக் கோயில் கட்டியவன் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் நமது அப்பரடிகளை வருத்திச் சைவனான முதல் மகேந்திரவர்மனே. அவன் இத்தலத்து எட்டு சுலோகங்கள் அடங்கிய கல்வெட்டு ஒன்று அமைத்திருக்கிறான். அதில் தான் சைவனானதையும்[1] திருவதிகையில் அமண் பள்ளிகளையிடித்துக் குணபரேச்சுரம் கட்டியதையும் குறிப்பிடு கின்றான். குணபரன் என்பது மகேந்திரவர்மனையே குறிக்கும் பட்டப் பெயர். இதனைச் சிராப்பள்ளியிலும், செங்கற்பட்டு வல்லத்திலும் உள்ள குகைக் கோயிற்கல்வெட்டுக்கள் வலியுறுத்தும். அதைப் போலவே சிராப்பள்ளியாகிய இவ்விடத்தும் அமணப்பள்ளி ஒன்று பெரியதாக இருந்தது. அதனை இடித்தே இந்தக் கோயிலைச் சைவ னான மகேந்திரவர்மன் கட்டினான்[2].

உச்சிப்பிள்ளையார் கோயிலின் பின்பாகத்தில் இன்றும் சமண முனிவர்களுடைய கற்படுக்கைகளைக் காணலாம். அவற்றில் அந்தந்தப் படுக்கையிலிருந்த சமணமுனிவர் பெயர்கள் குறிக்கப் பெற்றுள்ளன. அவைகள் கி.பி. 5 ஆம் நூற்றாண்டின் நிகழ்ச்சிகள். அவர்களில் ஒருவர் சிரா என்னும் பெயருடையவர் என்று ஒரு கற்படுக்கை அறிவிக்கிறது. ஆதலால் பள்ளி கோயிலானாலும், பெயர் போகாமல் சிராப்பள்ளி எனவே வழங்குகிறது.

ஊர்ப்பெயரும்-கோயிற் பெயரும்:

ஊர்ப்பெயர் சிற்றம்பர். கோயிற்பெயர் சிராப்பள்ளி. இதனை நன்கு விளக்குவது, இராஜராஜன் I ஆட்சியாண்டு 16 இல் வெட்டப் பெற்ற விக்கிரமசிங்க மூவேந்த வேளான் விளத்தூர் நாட்டில் நிலம் வாங்கி அதனைஉறையூர்க் கூற்றத்துச் சிற்றம்பரிலுள்ள சிராப்பள்ளிக் கோயிலுக்கு அளித்தான் என்ற கல்வெட்டுப் பகுதியாகும். வரகுண பாண்டியன் II ஆம் ஆண்டுக் கல்வெட்டும் இதனையே குறிக்கிறது. இன்னும் சில பகுதிகளிலும் சிற்றம்பர், சிற்றம்பர்நகர், சிற்றம்பர் பதியென இத்தலம் வழங்கப்படுகின்றது. ஆதலால் ஊர் சிற்றம்பர் எனவும், கோயில் சிராப்பள்ளி எனவும் வழங்கிவந்தமை தெளிவு.

1 S.I.I. Vol. I No. 33, 34. 2 S.I.I. Vol. I No. 33.

Koviloor Digital Library

மூர்த்தி:

இறைவன்பெயர் தாயுமானவர் திருமலைக்கொழுந்தர், செவ்வந்திநாதர் எனவும், அம்மையின்பெயர் மட்டுவார்குழலம்மை எனவும் வழங்கும். வடமொழிவாணர் மாதுருபூதேசுவரர், சுகந்தகுந்த ளாம்பிகையெனக் கூறுவர். கல்வெட்டுக்களில் இறைவன் திருமலைப் பெருமான் அடிகள் என்ற பெயரால் குறிக்கப்பெறுகின்றனர். உச்சிப் பிள்ளையார், மாணிக்கவிநாயகர் ஆலயங்களும், மௌனமடம் முருகன் கோயிலும் மிகச்சிறப்புடையன.

தீர்த்தங்கள்:

காவிரி,சிவகங்கை, நன்றுடையான், தீயதில்லான், பிரமதீர்த் தம் முதலியன உள்ளன. அவற்றுள் 'நன்றுடையான்' 'தீயதில்லான்' என்ற தீர்த்தங்கள் ஞானசம்பந்தர் தெய்வவாக்கிலும் திகழ்வன. இவையன்றித் தெப்பக்குளம் ஒன்றுண்டு. அது 16 ஆம் நூற்றாண்டில் அரசாண்ட விசுவநாத நாயகர் வெட்டுவித்தது.

இது மேருவின் சிகரங்களில் ஒன்று. ஆதிசேடனுக்கும், வாயுதேவனுக்கும் நடந்த சொற்போட்டியால் பிரிந்த சிகரங்களில், ஒன்று திருக்காளத்தி, மற்றொன்று திரிகோணமலை, மற்றொன்று திரிசிராமலை என்று புராணம் கூறும். கருவுயிர்க்க வருந்திய இரத்தினா வதியின் நிறைந்த அன்பிற்கிரங்கிப் பெருமானே தாயாக எழுந்தருளிப் பணிபல புரிந்து பாதுகாத்தார். ஆதலால் தாயுமானார் ஆயினார்.

செவ்வந்திப்பூவைத் திருடிய சிவத்திரவியாபகாரியான பூவாணிகனைக் கண்டிக்காத பராந்தகனது அரச அநீதியைக் கண்டு, சாரமாமுனிவர் வேண்டுகோட்படி பெருமான் மேற்குப் பக்கமாக உறையூரைப் பார்க்கத் திரும்பினார். மண் மாரியால் நகர் அழிந்தது. மன்னன் அழிந்தான். மன்னன் மனைவி கருவுற்றிருந்தாள். காவிரியில் வீழ்ந்தாள். அந்தணன் ஒருவன் பாதுகாத்தான். கரிகாலன் பிறந்தான். கருவுற்ற ஆதித்தசோழன் மனைவியாகிய காந்திமதிக்கு இறைவன் தானே தோன்றிக் காட்சி கொடுத்து, தான்றோன்றீசர் என்ற திருநாமம் பெற்ற வரலாறுகளும் புராணங்களில் பேசப்படுகின்றன.

கல்வெட்டு:

இங்குக் குகைகள் உள்ளன. இவை மகேந்திரன் காலத்தனவே என்பது குறிப்பிடப்பட்டது. ஒன்று மலைமேலுள்ளது. மற்றொன்று அடி

Koviloor Digital Library

வாரத்திலுள்ளது. மலைமேலுள்ள கோயில்களிலேயே கல்வெட்டுக்கள் மிகுதியாக உள்ளன. வடமொழியிலமைந்த எட்டு சுலோகங்கள் மகேந்திரவர்மனது மதமாற்றத்தையும் அதனால் அவன் செய்த சிவப்பணிகளையும் தெரிவிக்கின்றன. அவற்றில் கல்தச்சராலே இந்த அரசனுடைய புகழ் விரிந்து நீடித்திருக்க வேண்டும் என்ற செய்தியைத் தெரிவிக்கிறது ஒரு சுலோகம். இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டுக்களும் செப்புப் பட்டயங்களும் நிரம்ப உள்ளன. அவற்றுள் காலத்தால் முற்பட்டது கி.மு. 2 ஆம் நூற்றாண்டில் எழுந்த பிராமி எழுத்தால் எழுதப்பட்ட கல்வெட்டாகும்[1].

தொடர்ச்சியாகப் பல கல்வெட்டுகள் காணப்படுகின்றன. அவை பல்லவ கிரந்தத்தாலும், தமிழாலும் ஆக்கப்பெற்றன.

இராஜகேசரிவர்மன்:

இவன் ஆட்சி பதினாறாம் ஆண்டில் சாகுபடிக்குக் கொண்டு வரப்படாத நிலங்களைக் குறைந்தவிலையாக ஐந்து கழஞ்சுக்கு விற்று, நிலம் விளைச்சலுக்கு வந்த பிறகு. நிலம் வாங்கியவர்கள் திருவிழாக் காலங்களில் சித்திரைத் திருநாளில் ஒன்பது நாட்களுக்குப் பன்மா கேசுவரர்களுக்கும் உணவு இடும்படி உத்தரவிட்டான்.[2]

பாண்டியன் மாறன் சடையன்:

இவன் ஆட்சி 4-ஆம் ஆண்டில் நிலமளித்திருக்கிறான். இதில் இறைவன் திருமலைப் பெருமான் என்றழைக்கப்படுகிறான்.[3] வேங்கட தேவமகாராயர் சகம் 1351 வீரப்ப நாயக்கருடைய மேன்மைக்காக நிலமளித்தார். மதுரை விஜயரங்க சொக்கநாத நாயக்கருடைய காலத்தில் நரசபந்துலு என்னும் தன்வந்திரி வைத்தியருக்கு இறையிலியாக நிலமளிக்கப்பட்டது.[4]

அவ்வாறே திருமலைஅப்பராயத் தொண்டைமான் மகனும், திருமலைராயத் தொண்டைமான் பேரனுமான இராஜா விஜயரகுநாதத் தொண்டைமான் சகம் 1772-இல் கி.பி. 1805-இல் ஒராண்டிக்கோடி கிராமத்தைத் தேனாம்பட்டணம் இருளப்ப முதலியாரிடம் அளித்து,

[1]139 of 1938, [2]985 of 1013, [3] 413,414 of 1904.
[4] E.P.R. 1911 page 90.

Koviloor Digital Library

திருச்சிராப்பள்ளியில் அறச்சாலைநடத்த ஏற்பாடுசெய்தான் நல்லப்ப காலாட்க தோழராலும், ரங்கப்ப காலாட்க தோழராலும் அளிக்கப்பட்ட தேவதானங்களை அறிவிக்கும் செப்புப்பட்டயங்கள் உள. கல்வெட்டுக்களில் சிறப்பாகக் குகைக்கோயில் பின்சுவரில் திரிசிராமலை அந்தாதியொன்று எழுதப் பெற்றுள்ளது. அது 103 பாடல்களை உடையது. அதில் 104 ஆம் பாடலாக ''மாட மதுரை மணலூர் மதில் வேம்பை, யோடமர் சேய்ஞலூர் குண்டூரின் - நீடிய , நற்பதிக்கோன் நாரா யணன்சி ராமலைமேல், கற்பதித்தான் சொன்ன கவி'' என்றதால் நாராயணன் என்பவன் கல்வெட்டுவித்தான் என்று குறிப்பிடப் படுகிறது.

65. திருப்பாற்றுறை

சோழ வளநாட்டுக்காவிரி வடகரைத்தலம் . திருச்சிராப்பள்ளி யிலிருந்து கல்லணை செல்லும் பேருந்தில் ஏறி, பனையபுரம் என்ற ஊரில் இறங்கி, வடக்குநோக்கி வரவேண்டும். இத்தலத்துப்போந்த மார்க்கண்டேயமுனிவர் சிவபூசைக்குப் பால் இல்லாமையால் வருந்திய போது, சிவபெருமான் அருளினால் பால் பெருகியது ஆதலால் இப்பெயர் எய்தியது. கொள்ளிட நதியின் தென்கரையில் உள்ளது.

இறைவன்பெயர் திருமூலநாதர் , மூலநாதேசுவரர்; இறைவி யின் பெயர் மோகநாயகி, மேகலாம்பிகை; தீர்த்தம் - திருக்குளம்.

இடம் திருவானைக்காவிலிருந்து கிழக்கே 8 கி.மீ. தூரத்தில் உள்ளது.

கல்வெட்டு:

இத்தலத்தைப்பற்றி அரசியலாரால் படியெடுக்கப்பட்ட கல்வெட்டுக்கள் பதினாறு உள்ளன. அவை முதற்பராந்தகன் பரகேசரி வர்மனான விக்கிரமசோழன், இராஜராஜன், இராஜேந்திர சோழ தேவன் காலத்தன. அவற்றால் இத்தலம் கொள்ளிடத்துத் தென் கரைநாட்டுப் பிரமதேயமான உத்தமசீலி சதுர்வேதிமங்கலத்துத் திருப்பால்துறை என விக்கிரமசோழன் காலத்துக் குறிப்பிடப்படுகிறது.[1] இறைவன் திருப்பால்துறை மகாதேவர்[2] என்றும் திருப்பால்துறை

[1]575 of 1908, [2]575 of 1908.

Koviloor Digital Library

நாயனார் என்றும் [1] திருப்பால்துறை உடையார் [2] என்றும் வழங்கப் படுகிறார். கல்வெட்டுக் குறிப்பாளர் ஆதிமூலேசுவரர் என்று அழைக் கிறார். தலம் திருப்பாலைத்துறை என இக்காலத்து வழங்குகிறது. கோயிலுக்கண்மையில் திருநாவுக்கரசர் திருமடமும் [3] ஆண்டார் எம்பிரானார் மடம் எனப்பெரிய லிங்கிய சந்தானத்து மடமும்[4] திருவானைக்கா திருஞானசம்பந்தர் மடமும் [5] நாற்பத்தெண்ணாயிர வர் திருமடமும் [6] இருந்தனவாகக் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கு அரசர்கள் நிலம் வழங்கிய செய்தியும் குறிக்கப்படுகின்றன.

ஏனைய கல்வெட்டுக்கள் திருக்கோயிலுக்கு விளக்கிற்காக நிலமும் பசுவும் ஆடும்விட்ட செய்தியை அறிவிப்பன. இவையன்றி, கோயிலுக்கு வடபக்கத்தில் காக்கும் நாயகன்மடம் என்ற ஒன்று இருந்ததாகவும் அதற்கு மும்முடிச் சோழமங்கலத்துச் சபையார் நிலமளித்ததாகவும் தெரிகிறது.[7] திருப்பனம்பூதூர் பரமேசுவரருக்கு அரிகுலகேசரிதேவரால் உத்தமசீலி சதுர்வேதி மங்கலத்து நிலம்விட்ட செய்தியும் அறியப்படுகிற்து.

66. திருவேற்காடு

தொண்டை நாட்டுத்தலம். சென்னையைச் சேர்ந்த தலம். சென்னையிலிருந்து நகரப் பேருந்துகள் பல உள்ளன. இங்கு வேல் தலவிருட்சமாதலின் இப்பெயர் எய்தியது. இங்குள்ள இறைவன் அகத்தியருக்கு மணக்கோலங்காட்டியருளினார். சுப்பிரமணியர், சூரசம்காரத்தின் பின் பூசித்த தலம்.

இறைவன்பெயர்- வேற்காட்டுநாதர், வேதபுரீசுவரர்; இறைவி யின்பெயர் - வேற்கண்ணியம்மை; தீர்த்தம் - வேலாயுததீர்த்தம்; விருட்சம் - வேல். கருமாரியம்மன் கோயில் பிரசித்தமானது.

67. திருக்கரவீரம்

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். இத்தலம் கரைய புரம் என வழங்கும். திருவாரூர், கும்பகோணம் பேருந்து வழியில் உள்ளது. கௌதமர் பூசித்துப் பேறுபெற்ற தலம். கரவீரம் - பொன் அலரி. அலரியைத் தலமரமாகக் கொண்ட காரணத்தால் கரவீரம்

[1,2] .582, [3] 583, [4] 584, [5] 585, [6] 586, [7] 582.

Koviloor Digital Library

என்றாயது.

இறைவன் கரவீரநாதர். இறைவி பிரத்தியட்சமின்னம்மை. தீர்த்தம் அனவரத தீர்த்தம்.

இத்தலம் திருவாருருக்கு மேற்கே உள்ளது.

68. திருத்தூங்கானைமாடம் (பெண்ணாகடம்)

நடுநாட்டுத் தலம். விருத்தாசலத்திலிருந்து பேருந்துகளில் செல்லலாம். இத்தலம் பெண்ணாகடம் எனவும் திருக்கடந்தைநகர் எனவும் வழங்கும். பெண் (தேவகன்னியர்) ஆ (காமதேனு) கடம் (வெள்ளையானை) ஆகிய இவர்கள் பூசித்துப் பேறுபெற்றதாதலின் இப்பெயர் எய்தியது. ஆலயத்தின் பெயர் தூங்கானைமாடம். அப்பரடிகள் ''பொன்னார்திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம்'' என்றேத்தித் தம்முடைய தோளின்மேல் சூலக்குறியும் இடபக்குறியும் பெற்றதலம். இங்கவதரித்த கலிக்கம்பநாயனார், ஒருநாள் தன்பணி யாளனே சிவனடியாராக வர, தம்மனைவி அவருக்கு நீர்வார்க்கத் தாழ்த்தமையை யறிந்து மனைவியின் கரத்தை வாள்கொண்டு வெட்டி வீடுபெற்றார். மெய்கண்டதேவரின் தகப்பனார் அச்சுத களப்பாளர் வாழ்ந்த தலமும் இதுவே.

சுவாமிபெயர் சுடர்க்கொழுந்துநாதர். அம்மை கடந்தை நாயகி. தீர்த்தம் கெடிலநதி.

கல்வெட்டு:

பரகேசரிவர்மனான இராஜேந்திரன் காலத்தில் வடகரை இராஜாதிராஜ வளநாட்டு மேற்காநாட்டுப் பிரமதேயமான முடி கொண்ட சோழ சதுர்வேதி மங்கலத்துத் திருத்தூங்கானைமாடம் என்று குறிக்கப்பட்டுள்ளது. இறைவன் நாமம் திருத்தூங்கானை மாடமுடைய மகாதேவர் எனவும்[1] திருத்தூங்கானைமாடமுடைய நாயனார்[2] எனவும் நல்ல பெண்ணாகடத்திலுள்ள வீற்றிருந்த

[1]235 of 1929, [2]247 of 1929.

Koviloor Digital Library

பெருமாள்[1] எனவும் திருத்தூங்கானை மாடத்துக்கடவுள் [2] எனவும் வழங்கப்படுகின்றனர். இவையன்றி கோயிலுள் கோச்செங்கணேசு வரமுடையார் கோயிலும் [3] மதுராந்தக ஈச்சரமுடையார் கோயிலும் [4] தனிமையாகப் பள்ளிகொண்ட பெருமாள் கோயிலும் [5] இருந்திருக் கின்றன.

இராஜகேசரிவர்மனான குலோத்துங்கன் காலத்து வடகயி லாயமுடைய மகாதேவர்க்கு விருதராச பயங்கர வளநாட்டு மேற்கா நாட்டு முடிகொண்ட சோழ சதுர்வேதி மங்கலத்துச் சபையாரால் நிலம் தானம் வழங்கப்பட்டது. திருத்தூங்கானை மாடமுடைய மகாதேவர் கோயிலுக்கும் கோச்செங்கணேசுவரமுடையார் கோயிலுக்கும் முடி கொண்டசோழ சதுர்வேதி மங்கலத்துத் தேவதானமான கிராமத்தைச் சேரிசபையார் இறையிலிசெய்தனர். குலோத்துங்கன் தான்பிறந்த நாளாகிய மாதபூச விழாவை நடத்தவும், கோயில் நாட்பூசைக்காகவும் நிலமளிக்க உத்தரவிட்டான். மேலும் மதுராந்தகேசுவரமுடையார் கோயிலிலுள்ள இரு சிவப்பிராமணர்களுக்கு உணவளிக்கப் பணம் வழங்கப்பட்டது. பரகேசரிவர்மனான இராஜேந்திரன் காலத்து, திருத் தூங்கானைமாடமுடைய மகாதேவர் கோயிலுக்குத் தூண்டா விளக் கெரிக்கப் பசுக்கள் வழங்கப்பட்டன. தென்கரை நித்தவினோத வள நாட்டுக் கிழார்க்கூற்றத்துக் கீழநல்லூர் உடைய ஒருவன் பசுக்கள் அளித்த செய்தி குறிக்கப்பட்டுள்ளது. கடவுளுக்கு நீராட்டவும் பார்ப் பனர்களுக்கு அன்னமளிக்கவும் ஸ்ரீராமன் ஸ்ரீதரரான பவித்திர மாணிக் கச்சேரி உடையான் ஒருவனால் ஏற்பாடுசெய்யப்பட்டது. இராஜகேசரி வர்மனான ராஜராஜன் முத்திரையிடப்பட்ட அளவைகளால் வியாபாரி கள், பொருள்களை அளக்கவும் சில வரிகளைக் கோயிலுக்களிக்கவும் ஏற்பாடுசெய்தான் [6] 249-ஆவது கல்வெட்டால் மூவாயிரவன் கோல் என்ற நீட்டலளவை (15அடி) யால் நிலமளந்த செய்தி தெரிகிறது. பரகேசரிவர்மனான விக்கிரமன் காலத்து அரையன் ஆதித்ததேவன் தேவர்கள்நாதன் என்ற மரக்காலைப் பயன்படுத்தியுள்ளான்[7] குலசேகரன் காலத்துப் பொன்பேத்தி அம்பலத்தாடி அழகனால் மண்டபமும், முகப்பும் கட்டப்பட்டன. அரசன் மந்திரியான மையிருஞ் சோலை, மண்டபங் கட்டியுள்ளான்.

விஜயநகர தேவமகாராயர் காலத்தில் நைவேத்தியத்திற்கும் திருப்பணிக்கும் பள்ளிகொண்டபெருமாள் கச்சிராயருடைய மகனான

[1]250 of 1929, [2]255 of 1929, [3]238, [4]239, [5]273,
[6]244 of 1929, [7] 270 of 1929.

Koviloor Digital Library

ஏகாம்பரநாதன் சில கிராமங்களை இறையிலிசெய்தான். தேவராஜ மகாராஜா சகம் 1356இல் 18 -ப் பற்றுச்சபையாரால் வீதிகளுக்கு இறையிலிசெய்து திருமடை விஜயத்திற்காகவும் நல்ல பெண்ணா கடத்துப் பெருமாளுக்கும் திருமாறன் பாடியிலுள்ள தாகந்தீர்த்தருளிய நாயனாருக்கும் விழாசெய்வதற்காக, பெரியநாட்டான் இறையிலி செய்தார். விக்கிரமன் காலத்தில் அமாவாசையில் சுவாமி உலாவரவும் விளக்குக்கு நெய் இடவும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஏனையவை விளக்கு முதலானவற்றிற்கு நிலம், பொன், பசுக்கள், நெல் முதலியன அளித்தமையைக் குறிப்பிடுகின்றன.

69. திருப்பல்லவனீச்சரம்

சோழ நாட்டுக் காவிரி வடகரைத்தலம். பூம்புகாரில் உள்ளது. மயிலாடுதுறை, சீகாழி நகர்களிலிருந்து பேருந்து வசதி உண்டு. இத்தலம் காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரம் எனப் பெயர் பெறும். பல்லவராசன் பூசித்துப் பேறுபெற்ற தலம். இயற்பகை நாயனாரும், பட்டினத்துப் பிள்ளையும் அவதாரம் செய்தருளிய தலம்.

இறைவன் பல்லவனேசுவரர்; இறைவி சௌந்தரநாயகி; தீர்த்தம் காவிரி சங்கமதீர்த்தம்.

70. திருஈங்கோய்மலை

சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். திருச்சிராப்பள்ளி - நாமக்கல் பேருந்து வழியில் அகண்ட காவிரியின் வடகரையிலுள்ளது. தற்காலம் திருவிங்கநாதமலை என மருவி வழங்குகின்றது. அகத்தியர் ஈ உருவாய்ப் பூசித்துப் பேறு பெற்றமையின் இப்பெயர் எய்தியது.

காவிரித் தென்கரையில் உள்ள கடம்பந்துறையைக் காலை யிலும், திருவாட்போக்கியை நண்பகலிலும் இத்தலத்தை மாலை யிலும், ஒரேநாளில் வழிபடுதல் மிக்க பயனைத் தரும். 'காலைக் கடம்பர் மத்தியானச் சொக்கர் மாலைத் திருவிங்கநாதர்' என்பது பழமொழி. கோயில் சிறிய குன்றின் மேல் அமைந்துள்ளது.

இறைவன் மரகதாசலர்; இறைவி மரகதவல்லி; தீர்த்தம் அமிர்த தீர்த்தம்.

Koviloor Digital Library

கல்வெட்டு:

திரிபுவனச்சக்ரவர்த்தி வீரதேவனது 36 ஆம் ஆண்டில் இராஜராஜவளநாட்டுத் திருவாலிநாட்டுத் திருவீங்கோய்மலை என வழங்கப்பட்டது. இறைவன்பெயர் திருவீங்கோய் ஊருடையார் என்று கல்வெட்டு கூறும். இக்கோயிலில் ஆளுடைய பிள்ளையார்க்கும், திருநாவுக்கரசுதேவர்க்கும், ஆலாலசுந்தரப் பெருமானுக்கும், நக்கீர தேவர்க்கும், திருப்படிமாற்றுக்கும், வியஞ்சநத்துக்கும் வடகரை இராஜ ராஜ வளநாட்டு மலை ஸ்ரீ ஜயங்கொண்டசோழ சதுர்வேதிமங்கலத்துப் பெருங்குடி மகாசபையார் நிலம் விற்றுக்கொடுத்தனர்.

71. திருஅச்சிறுபாக்கம்

தொண்டை நாட்டுத்தலம். மயிலாடுதுறை - சென்னை பாதையில் இரயில் நிலையம். திண்டிவனம் செங்கல்பட்டுப் பேருந்து வழியில் உள்ளது.

இறைவரின் தேர் அச்சு இற்ற காரணத்தால் இப்பெயர் எய்தியது. சிவபெருமான் திரிபுரதகனஞ்செய்யும் பொருட்டுத் தேவர்கள் அமைத்த தேரில் எழுந்தருளும்போது, தேவர்கள் விநாயகரை வணங்காமையின் அச்சு முரிந்தது என்பதும், பாண்டியனொருவன் கங்கை மணலை வண்டியில் கொண்டு வரும்போது, இத்தலத்திற்கு வந்ததும் வண்டி மேற்கொண்டும் செல்லாமையின் ஊக்கிச் செலுத்த அச்சு முரிந்தது. அவன் அசரீரியினால் செய்தியறிந்து ஆலயத் திருப்பணி செய்தான் என்பதும் வரலாறு. கண்ணுவர் கௌதமர் பூசித்துப் பேறு பெற்றனர்.

இறைவன் பாக்கபுரேசுரர். இறைவி சுந்தரநாயகி, தீர்த்தம் வேததீர்த்தம். விருட்சம் கொன்றை.

கல்வெட்டு:

இத்தலம் இராஜேந்திர சோழவளநாட்டைச் சேர்ந்ததாகக் குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டுக் கூறுகிறது. இத்தலத்திறைவன் அக்ஷேசுவரர் . கல்வெட்டுக்களில் அச்சுக்கொண்டருளிய தேவர் [1] என வழங்கப்படுகிறார். திரிபுவனசக்கரவர்த்தி கோனேரின்மை கண்டான் காலத்தில் ஆட்கொண்ட நாயகன் சேதிராயனால் ஒருசிலை

[1] 241 of 1901.

Koviloor Digital Library

தயாரிக்கப்பட்டது. இது இன்னார் சிலை என்று அறியக்கூட வில்லை.[1] இராஜகேசரிவர்மன் குலோத்துங்கன் I 5 ஆம் யாண்டில் குலோத்துங் கன் உருவச்சிலை செய்து வைக்கப்பெற்றது.[2] ஏனைய கல்வெட்டுக்கள் கோயிலுக்கு விளக்கிற்காக ஆடுகளும், பொன்னும், திருவமுதிற்காக நிலமும்விட்ட செய்தியை அறிவிப்பன, குலோத்துங்கசோழன் III ஆட்சி 12 ஆம் ஆண்டில் பாண்டியநாட்டைக் கைக்கொண்டசேங்கணி அம்மையப்பன் வைரங்கள் வழங்கினான். [3]கங்கன் என்பவனால் அர்ச்சனாபோகமாக நிலம் அளிக்கப்பெற்றுள்ளது.[4]

72. திருநல்லம்

சோழ நாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். கும்பகோணம் வடமட்டம் பேருந்துகளில் செல்லலாம். இத்தலம் கோநேரிஇராஜபுரம் என வழங்கும். இத்தலத்தில் நடராசருடைய விக்ரகம் மிகப் பெரியதாகவும், அழகாகவும் இருக்கிறது.

சுவாமி உமாமகேசுவரர்; அம்மை மங்களநாயகி; தீர்த்தம் சக்திதீர்த்தம்.

கல்வெட்டு:

இக்கோயிலை மதுராந்தகதேவனான உத்தமசோழன் தாயும் கண்டராதித்தன் மனைவியுமான செம்பியன்மாதேவியார் கருங்கற் பணியாகக் கட்டினாள் [5]. இறைவன் திருநல்லமுடையார், திருநல்ல முடையமகாதேவர் என [6]வழங்கப்பெறுவர்[7], இராஜகேசரிவர்மனான இராஜராஜன் காலத்தில் கோயிலில் திருப்பதிகம் ஓத இருவரால் பூங்குடி கிராமத்தில் நிலம் விடப்பெற்றது[8]. உடையபிராட்டியார் உத்தரவின் படி சாத்தன் குணபட்டனான அரசாணசேகரனால் கோயில் கட்டப் பெற்றது[9]. இராஜராஜன் காலத்தில் தெரிஞ்ச கைக்கோளர்களில் ஒருவனான நக்கன் நள்ளாற்றடிகளால் கடவுளின் வெள்ளி விக்ரகம் ஒன்றும், சண்டேசுவரர் செப்புவிக்ரகமும் செய்விக்கப்பெற்றன. இன்னாரது என்று அறியப்பெறாத கல்வெட்டு ஒன்று செம்பியன்மா தேவி கண்டராதித்தன் பெயரால் இத்திருக்கோயிலைத் திருப்பணி செய்தான் என்கின்றது[10]. இங்கே கைலாசமுடையமகாதேவர்[11]

[1] 235 of 1901, [2] 247 of 1901, [3] 239 of 1901, [4] 108 of 1934,
[5] 450 of 1908, [6] 628 of 1909, [7] 450 , 624 of 1908,
[8] 624 of 1909, [9] 626 of 1909, [10] 635 of 1909, [11] 653 of 1909.

Koviloor Digital Library

ஆதித்தேசுவரமுடைய மகாதேவர்[1], கோயில்களும் தனித்து இருந்தனவாக அறியப்படுகின்றன. உத்தமசோழ விண்ணகரம் என்ற விஷ்ணு ஆலயமும் குறிக்கப்பெறுகின்றது[2].

இவையன்றித் திருநல்லமுடையார்கோயில் தெற்குப் பக்கத்துப் பிராகாரத்தில் புகழாபரண மண்டபம் என்ற ஒன்று இருந்த தாகவும், அதில் பிள்ளையாரைப் பிரதிட்டைசெய்யக் குலோத்துங்கன் IIIகாலத்தில் நிலம் அளிக்கப்பெற்றது என்றும் வரலாறு விளக்கு கின்றது[3]. திட்டைவிழுமியான்பிள்ளையடியாரால் சண்டேசுவரர் கோயில் திருப்பணி செய்விக்கப் பெற்றது[4]. ஆதனூர் விஜயநட்டரைய னான அருமொழித் தேவனால் திருநடைமாளிகை கட்டப்பெற்றது.

ஏனைய கல்வெட்டுக்கள் திருமஞ்சனத்திற்கும், பூமாலைக் கும், நந்தவனத்திற்கும், அமுதுக்கும், விளக்கிற்கும் செய்த பணிகளை அறிவிப்பன. இத்தலத்தால் தெரியும் அரசர்களும், தண்டத் தலைவர் களும், அரசகாரியம் பார்ப்பாரும், வெற்றிக் குறிப்புக்களும் பல.

73. திருவடுகூர் (திரு ஆண்டார் கோயில்)

நடுநாட்டுத் தலம். விழுப்புரம் - பாண்டிச்சேரி (கோலியனூர் - கண்டமங்கலம் வழி) பேருந்து வழியில் உள்ளது. வடுகனாகிய வைரவர் பூசித்துப் பேறுபெற்றதாதலின் இப்பெயர் எய்தியது. தற்காலம் ஆண்டார்கோயில் என வழங்குகிறது.

இறைவன் பெயர் வடுகூர்நாதர். இறைவியின் பெயர் வடுவகிர்க்கண்ணியம்மை. தீர்த்தம் பெண்ணைநதி.

74. திருஆப்பனூர்

பாண்டிய நாட்டுத்தலம். மதுரையிலிருந்து பேருந்துகளில் செல்லலாம். தற்பொழுது திரு ஆப்புடையார் கோயில் எனவழங்கப் பெறுகிறது. சோழாந்தகன் என்னும் பாண்டியமன்னன் பொருட்டுச்

[1] 644 of 1909, [2] 655 of 1909, [3] 662 of 1909.
[4] 658 of 1909

Koviloor Digital Library

சிவபெருமான் ஆப்பினிடத்துத் தோன்றினமையால் இப்பெயர் பெற்றது. நடராசர், சிவகாமி இருவர்களின் உருவம் சிலையிலும் செம்பிலும் உள்ளன.

இறைவன்பெயர் ஆப்பானூர்க்காரணர், ஆப்பனூரீசுரர், திருவாப்புடையார். இறைவியின் பெயர் அம்பிகையம்மை, குரவங்கமழ் குழலம்மை. தீர்த்தம் இடபதீர்த்தம்.

75. திருஎருக்கத்தம்புலியூர்

நடுநாட்டுத்தலம் விருத்தாசலம்-ஐயங்கொண்டம் பேருந்து வழியில் உள்ளது. இராஜேந்திரபட்டினம் எனவழங்குகிறது. எருக் கினைத் தல விருட்சமாக உடைய புலியூராதலின் இப்பெயர்பெற்றது. திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் அவதாரத்தலம்.

இறைவன் பெயர் நீலகண்டர், இறைவியின் பெயர் நீலமலர்க் கண்ணியார். விருட்சம் எருக்கு.

76. திருஅன்னியூர்

சோழ நாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். பொன்னூர் எனவழங்கும். மயிலாடுதுறை-மணல்மேடு பேருந்துகளில் செல்ல லாம். வருணன் பூசித்துப் பேறுபெற்றதலம்.

சுவாமி பெயர் ஆபத்சகாயேசுரர். அம்மையின் பெயர் பெரிய நாயகியம்மை. தீர்த்தம் வருணதீர்த்தம்.

77. திருக்கண்ணார்கோயில்

சோழ நாட்டுக் காவிரி வடகரைத்தலம். மயிலாடுதுறை - வைத்தீசுவரன் கோயில் பேருந்துவழியில் உள்ளது. குறுமாணக்குடி என வழங்கும். கௌதம முனிவரால் சாபம்பெற்ற இந்திரன் பூசித்துச் சரீரத்திலுள்ள குறிகள் அனைத்தையும் கண்களாக மாற்றிக் கொண்ட மையால் இப்பெயர் எய்தியது. வாமனமூர்த்தியும் பூசித்துப்பேறு பெற்றமையின் குறுமாணக்குடி என்ற மறு பெயரும் உண்டாயிற்று.

Koviloor Digital Library

இறைவன் பெயர் கண்ணாயிரநாதர். இறைவியின் பெயர் முருகுவளர்கோதை. தீர்த்தம் இந்திரதீர்த்தம்.

இடம் வைத்தீஸ்வரன் கோயிலுக்குத் தென்கிழக்கே 2.5 கி.மீ. தூரத்தில் உள்ளது.

78. திருப்பாதாளீச்சரம்

சோழ நாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். மன்னார்குடிக்கு அருகில் உள்ளது. பாமணி, பாம்பணி என வழங்கப் பெறுகிறது. சர்ப்ப புரம் எனவும் பெயர் உண்டு. தனஞ்சயன் என்னும் பாம்பு பூசித்துப் பேறுபெற்ற தலம். அம்முனிவருடைய திருவுருவம் கோயிலில் உள்ளது.

இறைவன் பெயர் நாகநாதர், சர்ப்பபுரீசுவரர்; இறைவியின் பெயர் அமிர்தநாயகி; தீர்த்தம் நாகதீர்த்தம்.

கல்வெட்டு:

இத்தலத்தைப்பற்றியதாக ஆறு கல்வெட்டுக்கள் உள்ளன. இத்தலத்திறைவன் திருப்பாதாளீச்சரம் உடையார். செல்வத்திருவாரூர் வாகீசப் பெருமான் வடகீழ்மடத்து முதலியார் பிள்ளையின் நிலங்கள் இக்கோயிலுக்குக் கொடுக்கப்பட்டன. இதில் ஆலாலசுந்தரர் திரு மடமும் குறிக்கப்படுகின்றது. இத்தலம் சுற்றவேலி வளநாட்டுப் பாம் பணிகூற்றத்துப் பாமணி என இராஜராஜன் காலத்து அழைக்கப்படு கின்றது. இவையன்றி ஸ்ரீபூதிவிண்ணகர ஆழ்வார்க்கு விளக்கிற் காகவும், வழிபடவருவார்க்கு உணவிற்காகவும் பொன்னும் ஆடும் வழங்கப்பெற்றன.[1]

79. திருக்கடைமுடி

இத்தலம் கீழூர் எனப் பெயர்பெறும். சோழ நாட்டுக் காவிரி வடகரைத்தலமாய்க் காவிரியின் கடைமுடியாதலின் இப்பெயர் பெற்றது. மயிலாடுதுறையிலிருந்து பேருந்து வசதி உள்ளது. பிரமன் பூசித்துப் பேறுபெற்றதலம்.

[1] 169 to 174 of 1926.

Koviloor Digital Library

சுவாமிபெயர் கடைமுடிநாதர். அம்மையின் பெயர் அபிராமி யம்மை. தீர்த்தம் கருணாதீர்த்தம்.

கல்வெட்டு:

கடைமுடி என்பது கீழூராயின் கல்வெட்டொன்றுமில்லை. சேதுசமஸ்தான வித்துவான் மு. இராகவையங்காரவர்கள் தமது ஆராய்ச்சித் தொகுதியில் சிறந்ததோர் ஆராய்ச்சி வெளியிட்டுள் ளார்கள். அதன் சுருக்கமாவது தஞ்சாவூர் மாவட்டத்தில் கோவிலடி எனவழங்கும் பேருருக்குப் பக்கத்தில் கிழக்கே 2.5 கி.மீ. தூரத்தில் திருச்சின்னம்பூண்டி என்ற கிராமம் உள்ளது. அங்கே உள்ள இறைவர் சடையை உடையர், சடேசுவரர் என்று வழங்கப்படுகிறார். அங்கேயுள்ள சாசனங்கள் தெள்ளாறு எறிந்த மூன்றாம் நந்திவர்மன், அவன் மகன் கோவிஜய நிருபதுங்கவர்மன், முதற்பராந்தகன் இவர்கள் காலத்தன. அவற்றுள் முதற்பராந்தகன் காலத்துக் கல்வெட்டுக்களில் ஒன்றே ஒன்று திருச்சடைமுடி மகாதேவர் எனக் குறிப்பிடப்படுகிறது. ஏனைய இறைவன் பெயரை, திருக்கடைமுடிமகாதேவர் என்றே குறிப்பிடு கின்றன. ஒன்பது பத்தாம் நூற்றாண்டுகளில் அதாவது ஏழாம் நூற்றாண்டினரான திருஞானசம்பந்தர் காலத்திற்கு அணிமையில் திருக்கடைமுடி இப்பொழுது வழங்கும் சென்னப்பூண்டி என்றே விளங்கினமை யறியலாம். திருச்சடைமுடி என்பது திருப்பேராகிய கோவிலடிக்கு வழங்கிய பெயராதலைப் பிற கல்வெட்டுக்களும் எடுத்துக் காட்டுகின்றன. ஆதலால் கீழூர் கடைமுடியன்று என்பர்.

சென்னம்பூண்டி கடைமுடியைப் பற்றியனவாக 22 கல் வெட்டுக்கள் உள்ளன. தென்கரை இடையாற்றுநாட்டு திருக்கடைமுடி எனக் குறிக்கப்பெற்றுள்ளது[1]. நிருபதுங்கவர்மன் காலத்து அரசி ஒருத்தி விளக்கிற்காகப் பொன் அளித்தாள். முதற்பராந்தகன் பணிகள் யாவும் விளக்கிற்காக ஆடுகள் அளித்தமையே. வீரநாராயண மூவேந்த வேளான் முதலான அரசியல் தலைவர்களும் நிபந்தங்கள் அளித்துள்ளார்கள்.

80. திருஇராமனதீச்சரம்

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். இடம் திருப் புகலூரிலிருந்து முடிகொண்டான் ஆற்றைக் கடந்து, கண்ணபுரம்

[1] 284 of 1901.

Koviloor Digital Library

சென்று கிழக்கேசென்றால் இத்தலத்தை அடையலாம். இராமன் பூசித்துப் பேறுபெற்றனராதலின் இப்பெயர் எய்தியது.

இறைவன் பெயர் இராமநாதர். இறைவியின் பெயர் சரிவார்க் குழலி. தீர்த்தம் இராமதீர்த்தம்.

கல்வெட்டு:

இத்தலம் திருக்கண்ணபுரம் கல்வெட்டுக்களிற்சேர்த்தே அரசியலாரால் படியெடுக்கப்பெற்றுள்ளது. ஐந்து கல்வெட்டுக்கள் உள்ளன. இறைவன் இராமனதீச்சரமுடையார் என வழங்கப்பெறுவர். குலோத்துங்கசோழன் இக்கோயில் பூசைக்காகவும், அமுதுபடிக் காகவும் நிலம் அளித்தான். இந்நிலம் பின்னர் சிவபாதசேகரமங்கலம் என்று வழங்கப்பெற்றது. கோயிலைத் திருப்பணிசெய்தவனும் இவனே[1]. பின்னர், திருமலைதேவமகாராயரின் (சகம் 1397) விக்ர மாதித்தன் என்னும் அரசகாரியம் பார்ப்பவன் கோயிலைப் பழுதுபார்த் திருக்கிறான். பூசைக்கும், அமுதுக்கும் நிலம் அளித்திருக்கின்றான் [2]. கோனேரின்மை கண்டான் (யார் என்று அறியக்கூடவில்லை) காலத்தில் அருச்சகருக்குள் உரிமைப்போர் நிகழ்ந்திருக்கின்றது. அதனை நீக்கி, திருமன்னுசோழ பிரமராயனுக்கும், மானவரையனுக் கும் பூசை உரிமைகள் வழங்கப்பெற்றன[3]. தனியூரான தில்லையி லிருந்த மாகேசுவரர்களால் இக்கோயில் நிலம் பஞ்சத்தால் விளை யாதுபோக, இராஜராஜபாண்டிமண்டலம், வீரசோழமண்டலம், நடுவில்நாடு, ஜெயங்கொண்டசோழமண்டலம் முதலியவற்றில் உள்ள கோயில்களிலிருந்து நெல்லும் பொன்னும் கொடுத்துதவும்படி உத்தரவிட்டிருக்கின்றனர். இது கோயில் நிர்வாகத்தின் தனிச்சிறப்பைக் குறிப்பதாகும்[4].

81. திருக்கள்ளில்

தொண்டைநாட்டுத் தலம். சென்னை - வெங்கலூர் பேருந்து வழியில் உள்ளது. திருக்கள்ளம் எனப் பெயர் பெறும். பிருகு முனிவர் பூசித்துப் பேறு பெற்றார்.

சுவாமியின் பெயர் சிவாநந்தர். அம்மையின் பெயர் ஆனந்த வல்லி. தீர்த்தம் ஸ்ரீ நந்தி தீர்த்தம்.

[1] 533 of 1922, [2] 534, [3] 536, [4] 537 of 1922.

Koviloor Digital Library

82. திருப்பறியலூர்

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத்தலம். மயிலாடுதுறை (செம்பொனார் கோயில் வழி) சங்கரன்பந்தல் செல்லும் பேருந்துகளில் பறியலூர் செல்லலாம். இப்பொழுது பரசலூர் என வழங்கும். அட்ட வீரட்டத்தில் ஒன்று. தக்கன்செய்த யாகத்திற்குப் போந்த மாயன் முதலிய விண்ணவர்களின் வேதனையைத் தீர்த்த தலம்.

இறைவன் பெயர் வீரட்டேசுரர். இறைவியின் பெயர் இளம் கொம்பனையாள். தீர்த்தம் சிவகங்கை.

தருமையாதீன அருளாட்சியில் உள்ளது.

கல்வெட்டு:

இத்தலம் சுந்தரபாண்டியன் 5ஆம் ஆட்சி ஆண்டில் ஜெயங் கொண்ட சோழவளநாட்டு வீழைநாட்டு ராஜநாராயண சதுர்வேதி மங்கலமான பறியலூர் என வழங்கப்படுகிறது. இறைவன் தட்சேசு வரமுடையார் எனவும், திருவீரட்டான முடையார் எனவும் வழங்கப் படுகிறார். கிருஷ்ணப்பதேவமகாராயரால் குறிப்பிட்ட சில கிராமங்கள் (பறியலூர் உட்பட) சூலவரி வசூலிக்கப்பெற்றுச் சிவ விஷ்ணு கோயிலுக்களிக்கப்பட்டது. இதில் யாத்ரீகர்களுக்கும் உணவளிக்க ஏற்பாடுசெய்யப்பெற்றது. பூங்காக் குடியான பரராஜ பயங்கரநல் லூரில் 30 வேலி நிலத்தை இறையிலி செய்தளிக்கப்பட்டது. இங்கே ஏழுலகமுழுதுடைய சதுர்வேதி மங்கலத்து ஒரு அக்ரகாரம் அமைக்க நிலம் ஒதுக்கப்பட்டது[1].

83. திருத்தருமபுரம்

சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலம். காரைக்கால் - திருநள்ளாறு பேருந்து வழியில் உள்ளது. பாண்டவர்களில் தருமன் பூசித்துப் பேறுபெற்றமையின் இப்பெயர் எய்தியது. பிரமதேவரும் பூசித்துப் பேறுபெற்றுள்ளார். திருநீலகண்ட யாழ்ப்பாணரது தாயார் பிறந்த இடமாதலின் திருஞானசம்பந்தர் இங்கு எழுந்தருளியபோது, பாணரது சுற்றத்தவர்கள் இவர் யாழ்கொண்டு வாசிக்காவிடில் திருஞானசம்பந்தர் பாடல் சிறக்காதென்றனர். கேட்ட பாணர் வருந்தித்

[1] 167 to 169 of 1925.

Koviloor Digital Library

திருஞானசம்பந்தரிடம் முறையிட்டனர். அவரும் 'மாதர் மடப்பிடி' என்னும் பதிகத்தை ஓதினர். பாணனார் யாழிலிட்டு வாசிக்க இயலாமையை உறவினர்க்குணர்த்தினர். யாழையும் உடைக்கச் சென்றனர். திருஞானசம்பந்தர் தடுத்து, இயன்ற அளவில் வாசிக்கச் சொன்னார்.

இறைவன் பெயர் யாழ்மூரிநாதர். இறைவியின் பெயர் மதுரமின்னமமை, தேனமிர்தவல்லி, சதாமதுராம்பிகை. தீர்த்தம் தர்மதீர்த்தம். தருமை ஆதீன அருளாட்சியில் விளங்குவது.

இடம் காரைக்காலிலிருந்து மேற்கே 1 கி.மீ. உள்ளது.

84. திருக்குடந்தை(கும்பகோணம்)

சோழநாட்டுக் காவிரி வடகரைத்தலம். பெரிய நகரம். மயிலாடுதுறை - திருச்சிராப்பள்ளி இரயில் வழியில் உள்ள இரயில் வண்டி நிலையம். அனைத்து நகரங்களிலிருந்தும் கும்பகோணம் வரப் பேருந்து வசதி உண்டு.

இத்தலம் தேவாரங்களில் குடமூக்கு என வழங்கப்பெறும். பஞ்சக்குரோசத் தலங்கள் சூழ்ந்தது. கங்கை யமுனை முதலிய ஒன்பது தீர்த்தங்களும் வந்து வழிபடும் பெருமையுடையது. பதினான்கு கோயில்களையும், பதினான்கு தீர்த்தங்களையும் உடையது. ஒன்பதாம் நூற்றாண்டுமுதல் சோழ அரசர்கள் இதனைத் தலைநகராகக் கொண்டனர். சோழர்கள் இருந்த இடமாகிய சோழமாளிகையும், இடிந்துபோன பழங்கோயில்களும் இதன் பழமைக்கு அறிகுறி யென்பர் பெர்கூசன் என்னும் அறிஞர் [1]. ஏழாம் நூற்றாண்டில் மூலைக் கூற்றம் என வழங்கப்பட்டதென்பர் பர்னல்துரை. இத்தலத்தில் (குரு, சிம்மராசியில் பிரவேசிக்குங்காலமான) 12 வருஷத்திற்கு ஒருமுறை மகா மகதீர்த்தத்தில் தென்னிந்திய மக்கள் அனைவரும் நீராடுவர். இங்கேயுள்ள பாடல்பெற்ற சிவத்தலங்கள் திருக்குடமூக்கு, குடந்தைக் கீழ்க்கோட்டம், குடந்தைக் காரோணம் என்பன. குடமூக்கு கும்பேசுவர சுவாமிகோயில்; கீழ்க்கோட்டம் நாகேசுவரன் கோயில்; காரோணம் காசி விசுவநாதர்கோயில். இவையன்றிச் சோமேசம் முதலிய பல கோயில்கள் உள்ளன. இத்தலம் மூர்க்கநாயனார் வாழ்ந்த தலம்.

[1] Indian and Eastern Architecture 367 of 9.

Koviloor Digital Library

இறைவன் பெயர் கும்பேசர், அமுதகும்பேசர், ஆதிகும்பேசர், அம்மையின் பெயர் மங்களாம்பிகை. பிரமன், அகத்தியர், கிருத வீரியன், வீரவர்மன், இந்திரன், மாந்தாதா முதலியோர் வழிபட்டுப் பேறுபெற்றனர்.

கல்வெட்டு:

இத்தலம் உய்யக்கொண்டான் வளநாட்டு வடகரையம்பூர் நாட்டுத் திருக்குடந்தை என வழங்கும் [1]. கல்வெட்டுக்கள் பெரும் பாலும் நாகேச்சரமாகிய கீழ்க்கோட்டத்தைப்பற்றியனவே. குடமூக்கு என்னும் இத்தலத்தைப்பற்றியன அல்லவாதலின் அவை ஈண்டுத் தரப்படவில்லை.

85. திருக்கச்சிஏகம்பம்

தொண்டைநாட்டுத் தலங்களில் முதலாவதாக விளங்கும் பெருநகர். சென்னை செங்கற்பட்டு முதலிய பல நகரங்களிலிருந்தும் பேருந்துகளில் வரலாம்.

கயிலாயத்தினின்றும் இங்கு எழுந்தருளிய இறைவி, இறை வனை எய்துதற்பொருட்டுத் தவஞ்செய்தனர். எண்ணான்கு அறங் களையும் வழுவாதியற்றினர். கம்பையாற்றில் ஒற்றை மாமரத் தடியில் மணலால் சிவலிங்கம்செய்து வழிபட்டனர். இறைவன் அருளால் நீர் கடுகிவரக் கம்பித்து, இறைவனைத் தழுவினர். வளைத்தழும்பும் முலைத் தழும்பும் இறைவன் தன் மேனியில் ஏற்றனர் என்பது புராண வரலாறு.

கம்பம் - நடுக்கம். ஏகாம்பரம் - ஒற்றை மாமரம். பஞ்சபூத தலங்களுள் பிருதிவித்தலம். 'முத்திதரும் நகரேழனுள் முக்கியமாம் முதற்காஞ்சி' என்றதற்கேற்ப முத்திதரும் நகருள் முதன்மைபெற்றது. இத்தலத்து அமைந்துள்ள சிவ, விஷ்ணு, தேவி, கணபதி, முருகன் ஆலயங்கள் அளவிடற்கரிய புகழுடையன. ஐயடிகள் காடவர்கோன் நாயனார் ஆட்சிசெய்த தலம். சுந்தரர் இடக்கண்பெற்ற தலம். திருக் குறிப்புத் தொண்ட நாயனார் சாக்கியநாயனார் ஆகிய இவர்கள் முத்தி பெற்ற தலம்.

[1] S.I.256 of 1911,14 of 1980.

Koviloor Digital Library

இறைவன் ஏகாம்பரநாதர், பெரிய கம்பர். இறைவி காமாட்சியம்மை, ஏலவார்குழலி, விநாயகர் விகடசக்கர விநாயகர், முருகன் மாவடிக்கந்தர், விருட்சம் மாமரம். தீர்த்தம் சிவகங்கை, கம்பாநதி, ஸர்வதீர்த்தம்.

இடம் காஞ்சிபுரம் இரயில் நிலையத்திலிருந்து மேற்கே 2 கி.மீ. தூரத்தில் உள்ளது.

கல்வெட்டு:

இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டுக்கள் பலவாயினும் ஏகாம்பரநாதர் கோயிலைப்பற்றியன சிலவே. இங்குள்ள கல்வெட்டில் குறிக்கப்பெற்றுள்ளவர்கள் முறையே திரிபுவனச் சக்கரவர்த்தி இராஜராஜன், கோப்பரகேசரி இராஜராஜன், திரிபுவனச்சக்கரவர்த்தி குலோத்துங்கன்III, இராஜகேசரி குலோத்துங்கன், கோராஜகேசரி குலோத்துங்கன், பரகேசரி உத்தமசோழன் ஆகிய இவர்களும், புவனேகவீரனும், விஜயநகர சதாசிவதேவன், வீரமல்லிகார்ச்சுனன், புக்கராயன் ஆகிய இவர்களும் காகதீய அரசன் கணபதியும், சண்ட கோபாலனுமாகிய இவர்களும் ஆவார்கள்.

இராஜராஜதேவன் I 27ஆம் ஆண்டில் ஒருமாறன் தேவடிகளால் 5 கழஞ்சு பொன் படையலுக்காகக் கோயில் பொக்கிஷத்தில் சேர்க்கப்பட்டது[1]. புவநேகவீரன் என்ற சமரலோகன். சகம் 1391-ல் பாண்டிய நாட்டிலுள்ள இரண்டு கிராமங்களை ஏகாம்பரநாதர் கோயிலுக்கும் காமாட்சியம்மன் கோயிலுக்கும் கொடுத்தமை குறிக்கப்பட்டுள்ளது. [2] காகதீய அரசன் கணபதி காலத்து (சகம் 1172) மந்திரியாக ஆண்ட சாமந்தகபோஜனால் ஒரு கிராமம் கொடுக்கப்பட்டது.[3]

86. திருவாரூர்

இத்தலம் மயிலாடுதுறை அறந்தாங்கிப் பாதையில் உள்ள இரயில் வண்டிக் கூட்டுநிலையம், ஸப்தவிடங்கத் தலங்களுள் தலைமையானது. மயிலாடுதுறை, கும்பகோணம், மன்னார்குடி முதலிய நகரங்களிலிருந்து பேருந்துகள் செல்கின்றன. வீதி விடங்கப் பெருமானே எல்லா இடங்கட்கும் முதன்மையாய்த் திருமாலாலும், இந்திரனாலும் பூசிக்கப்பெற்ற சிறப்புடையார். ஆதலின், அவரைச்சூழ

[1] 54 of 1893, [2] 25 of 1890. [3] 26 of 1890.

Koviloor Digital Library

ஏனைய ஆறுவிடங்கர்களும் எழுந்தருள, இவர் இத்தலத்து நடுநாயக மாக தியாகராஜர் என்ற திருப்பெயரோடு வீற்றிருக்கிறார்.

இத்தலம் மிகத் தொன்மையானது. ''திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ திருவாரூர்க் கோயிலாக் கொண்ட நாளே'' என்ற அப்பர் சுவாமிகள் திருவாக்கு இதனை மெய்ப்பிக்கும்.

இத்தலத்தில் பிரமன் கோயில், துருவாச ஆசிரமம், பரவை யுண் மண்டளி, திருநீலகண்டர் கோயில், தண்டபாணி கோயில், பரவையார் கோயில், இராஜதுர்க்கை கோயில், நடுவணநாதர் கோயில், மாற்றுரைத்த விநாயகர் கோயில், சோமநாதர் கோயில், குளுந்தாளம்மன் கோயில், எல்லையம்மன் கோயில், ஐயனார் கோயில், உருத்திரகோடீசுவரர் கோயில், குமரகோயில், மாணிக்க நாச்சியார் கோயில் முதலிய கோயில்கள் காணத்தக்கவை.

தலப்பெயர்:

இத்தலத்துக்குக் கமலாலயபுரம், க்ஷேத்ரவரபுரம், ஆடகேசுர புரம், மூலாதாரபுரம்,சக்திபுரம், கந்தபுரம் எனப் பல பெயர்கள் இலக்கியங்களில் வழங்குகின்றன.

தீர்த்தங்கள்:

தேவதீர்த்தம், சங்கதீர்த்தம், சரசுவதிதீர்த்தம் முதலிய 21 தீர்த்தங்கள் இருப்பதாகப் புராணங்கள் புகலுகின்றன.

உட்கோயில்கள்:

திருக்கோயிலுக்குப் பூங்கோயில் என்று பெயர். கோயிலுக் குள் அசலேசம், ஆடகேசம், ஆனந்தேசம், அருணாசலேசம், விசுவகன்மேசம், சித்தீசம் எனப் பல உட்கோயில்கள் உள்ளன. அவற்றுள் அசலேசம் திருநாவுக்கரசர் பாடல் பெற்றது.

மூர்த்திகள்:

ஐங்கலக்காசு விநாயகர், வன்மீகநாதர், தியாகேசர், வாதாபி விநாயகர், நீலோத்பலாம்பிகை, விடங்கர், தருணேந்துசேகரர், கமலாம்பிக்க, சுந்தரர், சேரமான் முதலிய மூர்த்திகள் எழுந்தருளியுள் ளார்கள்.

Koviloor Digital Library

வாத்தியம்:

பஞ்சமுகவாத்தியம், பாரிநாயனம், சுத்தமத்தளம் என்பவை இத்தலத்துக்குச் சிறந்த வாத்தியங்கள்.

தியாகப்பள்ளு, தியாகக்குறவஞ்சி, வீராணுக்கவிசயம் என்பன இத்தலத்தில் ஆடப்பட்ட கூத்துவகை நூல்கள்.

மண்டபங்கள்:

தேவாசிரய மண்டபம், பக்தகாட்சி மண்டபம், ஊஞ்சல் மண்டபம், துலாபார மண்டபம், சபாபதி மண்டபம், புராணமண்டபம், இராச நாராயண மண்டபம், தட்டஞ்சுற்றி மண்டபம், வசந்த மண்டபம், திருப்பள்ளித்தாம மண்டபம் முதலிய பல மண்டபங்கள் உள்ளன.

கல்வெட்டு:

சோழர்கள் தம் அரண்மனைத்தெய்வங்களாக வைத்துப் போற்றும் சிவாலயங்களில் இத்தலத்துக் கோயில் முதன்மையானது. இத்தலம் கயாமாணிக்க வளநாட்டைச் சார்ந்த திருவாரூர் என்றும், அதிராஜவளநாட்டைச் சேர்ந்த திருவாரூர் என்றும், க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுத் திருவாரூர்க் கூற்றத்துத் திருவாரூர் என்றும் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

இரண்டாம் இராஜாதிராஜன் தன் ஆட்சி 16 ஆம் ஆண்டில் பெரிய கோபுரத்தையும் சபாபதி மண்டபத்தையும் கட்டினான். செம்பியன் மாதேவியார் அரநெறிக்கோயிலைக் கற்கோயிலாகக் கட்டுவித்தார். இலக்கம தண்டம நாயக்க உடையாருக்கு நன்றாக, அவர் மந்திரி ஒரு கோபுரம் கட்டினான். இரண்டாம் இராஜேந்திரன் வீதி விடங்கநாதர் கருப்பக்கிருகத்தையும், வன்மீகநாதர் கோயிலையும் பொன் வேய்ந்தான்.

திருமுறை ஆசிரியர்களின் திருநாட்களில் விழாக் கொண் டாட ஏற்பாடுகள் செய்யப்பெற்றிருந்தன.

நம்பியாரூரர் தாயாரான இசைஞானியார் கௌதமகோத்திரத் தாரான ஞானசிவாசாரியாருடைய புத்திரி என்பதை ஒரு கல்வெட்டறி விக்கிறது.

Koviloor Digital Library

பராந்தகன், இராஜராஜன்I, இராஜேந்திரன்I, இராஜாதி ராஜன்I, குலோத்துங்கன்I, இராஜேந்திரன்II, விக்ரமசோழன், குலோத்துங்கன்II, இராஜாதிராஜன் முதலிய சோழ அரசருடைய கல்வெட்டுக்களில் திருவிளக்குக்களும் தேவதானங்களும் குறிப்பிடப் படுகின்றன.

தியாகராஜசுவாமிகோயில் இரண்டாம் பிராகார வடசுவரில் உள்ள மனுச்சரிதம் கண்ட கல்வெட்டில் மனுச்சரிதம் முழுவதும் குறிப்பிடப்படுகிறது [1].

இத்தலத்தில் தருமை ஆதி குருமூர்த்திகளின் குருமூர்த்தி யாகிய கமலை ஞானப்பிரகாசருக்குத் தஞ்சை மன்னனும், கிருஷ்ண தேவராயனும் அளித்த தேவதானங்களும், வீதிவிடங்கப் பெரு மானுக்கும் வன்மீகநாதப் பெருமானுக்கும் நித்தியார்ச்சனை, பெரு நீராட்டு இவைகளுக்காக அளித்த தேவதானங்களும், இராஜாங்கக் கட்டளை என்ற பெயரோடு விளங்கிவருகின்றன. அவற்றை அவர்கள் குருஞானசம்பந்த சுவாமிகளிடத்தில் ஒப்படைத்துவிட்டார்கள். அது இப்போதும் தருமை ஆதீன நிர்வாகத்திலேயே நடைபெற்று வருகிறது.

இவற்றின் விரிவைத் '*திருவாரூர்*' என்னும் ஆதீன வெளியீடு 189 இல் காணலாம்.

87. திருக்குற்றாலம்

நெல்லை மாவட்டத்தில் தென்காசிக்கும் செங்கோட்டைக்கும் இடையே உள்ளது. நடராஜப்பெருமானுக்குரிய பஞ்ச சபைகளில் சித்திரசபை. திரிகூடராசப்பக்கவிராயர் தலபுராணம் முதலிய பிரபந்தங்கள் எழுதியுள்ளார். சுற்றுலாத் தலங்களில் சிறப்புடையது.

திருமால் வடிவில் இருந்த மூர்த்தியை அகத்தியர் சிவலிங்கத் திருமேனியாக மாற்றிய தலம். இங்குள்ள அருவி புகழ் பெற்றது. குற்றால அருவியில் குளிப்பதற்கு ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங் களில் சுற்றுலாப் பயணிகள் பலரும் வருவர். திருஞானசம்பந்தர் தேவாரம் பெற்றது. சுவாமி பெயர் குற்றாலநாதர். அம்பாள் பெயர் குழல்வாய்மொழியம்மை. இத்தலம் குறும்பலா எனவும் வழங்கப் பெறும்.

[1] 164 of 1894.

Koviloor Digital Library

88. திருக்கயிலாயம்

வடநாட்டுத் தலம். இந்திய அரசு ஆண்டுதோறும் கயிலாய தரிசனம் விரும்பும் அன்பர்களைக் கட்டணத்துடன் தேர்வு செய்து அழைத்துச் சென்று இந்திய எல்லையில் கொண்டு வந்து சேர்க்கிறது. நேபாளம் திபெத்து வழியும் பயணம் செய்யலாம்.

சுந்தரர் வெள்ளையானைமேல் கயிலை சென்றதும் அப்பர் அடிகள் உடலுறுப்புக்கள் தேய்ந்தொழியுமளவு மன உறுதியோடு கயிலாய யாத்திரை புரிந்ததும் புராண வரலாறுகளிலே இடம் பெற்றுள்ளன.

ஸ்ரீகயிலாயம் இமயமலையின் வடசாரலில் மேற்குத் திபெத்தில் அமைந்துள்ளது. அம்மலையின் தென்பகுதியில் திருக் கேதாரம் போன்ற தலங்களமைந்துள்ளன. தேவாரம் பாடிய மூன்று சமயாசாரியர்களுள் சுந்தரர் கயிலையாத்திரை செய்தார். அப்பரடிகள் கயிலை யாத்திரை செய்து திருவையாற்றில் கயிலைக் காட்சியைக் கண்டார். ஞானசம்பந்தர் திருக்காளத்தி மலையிலிருந்தே திருக் கேதாரத்தையும், திருக்கயிலாயத்தையும் பாடியதாகச் சேக்கிழார் குறிப்பிடுகிறார்.

கயிலையின் அமைப்பு:

இமய உச்சியின் வடபாகத்தில் சமுத்திரமட்டத்துக்கு 22,980 அடி உயரத்தில், தென்திசையை நோக்கியதாகக் கயிலை அமைந்துள்ளது. வெள்ளியங்கிரி என்றதற்கேற்ப அம்மலை பனிபடர் மலையாகக் காணப்பெறுகின்றது. 47 கி.மீ. சுற்றளவு உடையதாய்ச் சமதளமாய் அமைந்துள்ளது. பிராகாரம் போன்ற மலைச் சுவர்கள் செங்குத்தாக உள்ளன. அம்மலையில், சதுரம், முக்கோணம், வட்டம் போன்ற சித்திர வேலைப்பாடுடைய மேடைகளும் கைபுனைந்தியற்றாக் கவின்பெறு வனப்புடையனவாய்க் காட்சியளிக்கின்றன. இந்தியாவில் தென்குமரி முதல் இமயம்வரையுள்ள கோபுரங்கள் எத்தனை வகையுண்டோ அத்தனை மாதிரிக் கோபுரங்களும் கயிலையில் காணக்கிடக்கின்றன. இறைவன் அம்மையப்பராய், தக்ஷிணாமூர்த்தியாய் எழுந்தருளிய திருக்கோலங்களும் இருக்கின்றன.

தீர்த்தங்கள்:


கௌரிகுளம், மானசரோவர் போன்ற தீர்த்தங்களும் உள்ளன.

Koviloor Digital Library


திருக்கயிலாய பரம்பரை

எல்லாம் சிவன் செயல்

தருமபுர ஆதீனம்




Koviloor Digital Library



ஏடுடைய மலரான் பணிந்து ஏத்துதல்

Koviloor Digital Library



சிவபாத இருதயர் சிறுகோல் கொண்டு ஓச்சுதல்

Koviloor Digital Library

உ

சிவமயம்

திருஞானசம்பந்தர் வரலாறு

வித்துவான். திரு. வி. சா. குருசாமிதேசிகர் எம்.ஏ.,
பேராசிரியர், அனைத்துலக்ச் சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்,
தருமை ஆதீனம், தருமபுரம்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

பன்னிரு திருமுறைகளுள் முதல் மூன்று திருமுறைகளை அருளிச் செய்தவர் திருஞானசம்பந்தர். இவர் தம் அருள் வரலாற்றைப் பெரிய புராணத்தில் 1256 பாடல்களால் சேக்கிழார் சுவாமிகள் அழகுற விரித்துரைத்துள்ளார்.

சைவசமய ஆசாரியர்கள் நால்வரில் முதல் ஆசாரியராகவும், அறுபான் மும்மை நாயன்மார்களில் ஒருவராகவும் விளங்கும் இவர் வரலாற்றை முதன்முதல் சுந்தரர் திருத்தொண்டத் தொகையில்,

'வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலால் பேணாத
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்'

எனக் குறிப்பிட்டு அருளியதோடு, தாம் அருளிய தேவாரத் திருப் பதிகங்களிலும் திருஞானசம்பந்தர் பெருமைகளைப் போற்றிப் பாடியுள்ளார்.

திருத்தொண்டர்களின் வரலாறுகளை மேலும் விளக்கி, திருத் தொண்டர் திருவந்தாதி பாடிய நம்பியாண்டார் நம்பிகள், இரண்டு பாடல்களில் இவர் வரலாற்றை அந்நூலில் விளக்கியதோடு பதினொராம் திருமுறையில் இலங்கும் ஆறு பிரபந்தங்களில் திருஞானசம்பந்தர்

குறிப்பு: அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் வெளியிடப் பெற்ற பன்னிரு திருமுறை வரலாற்றில் பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனார் எழுதியதைப் பின்பற்றி இவ்வரலாறு எழுதப் பெற்றுள்ளது.

Koviloor Digital Library

வரலாற்றையும், அவர் தம் அருள் நலங்களையும், அவர் அருளிய தேவாரத் திருமுறைகளின் பெருமைகளையும் விளக்கியுள்ளார்.

இவ்வாறு மிக விரிந்த புகழாளராகிய திருஞானசம்பந்தர் அருள் வரலாற்றைச் சுருக்கமாகக் காண்போம்.

தோற்றம்:

சோழவள நாட்டில் பிரமபுரம் வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சை வயம், கழுமலம் என்னும் பன்னிரு திருப்பெயர்களை உடைய சீகாழிப்பதியில் கவுணியர் கோத்திரத்தில் அந்தணர்குலத்தில் சிவபாத இருதயர் என்னும் வேதியர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர்தம் அருமைத் துணைவியாராக அமைந்தவர் பகவதியார் எனப் பெறுவார். இருவரும் இணைந்து சிவநெறி போற்றி வாழ்ந்து வருங் காலத்தில் தமிழகத்தில் சமண புத்த சமயங்கள் தலைதூக்கி நின்றன. வேத நெறி வளர்ச்சி குன்றியிருந்தது. மக்கள் பூதி சாதனங்களைப் போற்றாது வாழத் தொடங்கினர். அவற்றைக் கண்ட சிவபாத இருதயர் பரசமயம் நிராகரித்து நீறாக்கும் மைந்தர் ஒருவரைத் தமக்குத் தந்தருளுமாறு திருத்தோணிபுரத்து இறைவனை வேண்டி வந்தார்.

திருத்தோணிபுரத்து இறைவர் திருவருளால் அன்னை பக வதியார் மணிவயிறு வாய்த்தார்கள். ஞாயிறு முதலிய கோள்கள் உச்ச நிலையில் அமைந்த நற்பொழுதில், ஒரு திருவாதிரைத் திருநாளில், சிவநெறி சிறந்து விளங்கவும், தமிழ்மக்கள் செய்த தவம் நிரம்பவும், தவநெறி தழைக்கவும், திசைகளில் தென்திசையே சிறப்பெய்தவும், செழுந்தமிழ் வழக்கு ஏனைய மொழிகளின் வழக்கை வென்று மேம்படவும். இசைத்திறன் யாண்டும் நிலைபெறவும், இறையருள் விளக்கம் எங்கும் உண்டாகவும், புறச்சமயங்கள் பொலிவிழக்கவும் சீகாழிப்பதியில், எவ்வுயிர்க்கும் சிவமாந்தன்மையை வழங்கும் ஆளுடைய பிள்ளையார் திருவவதாரம் செய்தருளினார். அவரது தோற்றத்தால் எவ்வுயிர்களும் மகிழ்வுற்றன. வேதவிதிப்படி பெயரிடு தல், தொட்டிலிற் கிடத்தல் முதலிய சடங்குகள் உரிய காலங்களில் நிகழ்ந்தன. பகவதி அம்மையார் இறைவன் திருவடிபரவும்பேரன்பைத் தம் திருமுலைப்பாலுடன் கூட்டி ஊட்டி அன்பான அரவணைப்பில் ஆளுடைய பிள்ளையாரை வளர்த்து வந்தார்.

முன்னைப் பிறப்பில் சிவபிரானை வழிபட்டுச் சிவானந்தம் நுகர்ந்து வந்த பிள்ளையார்க்கு அவனிடமிருந்து வந்த பிரிவுணர்வு

Koviloor Digital Library

அவ்வப்போது வர வெருக்கொண்டு அழும் நிலை அவர்பால் இருந்தது. இந்நிலையில் பிள்ளையாருக்கு வயது இரண்டாண்டுகள் நிரம்பின. மூன்றாவது வயதின் தளர் நடைப்பருவத்தில் பிள்ளையார் ஏனைய குழந்தைகளோடு வீதியில் விளையாடும் நிலையை எய்தினார்.

ஞானப்பால் உண்டது:

ஒரு நாள் காலையில் சிவபாத இருதயர் வேதவிதிப்படி நீராடுதற்குத் திருக்கோயி லுள்ளிருக்கும் பிரமதீர்த்தத்திற்குப் புறப்பட்டார். தந்தையார் வெளியில் செல்வதைக் கண்ட பிள்ளையார் தானும் உடன் வரவேண்டுமென்ற குறிப்போடு கால்களைக் கொட்டிக் கொண்டு அழுதார். தந்தையார் தன் மைந்தரைப் பார்த்து 'உன் செய்கை இதுவாயின் உடன் வருக' எனக் கூறி அவரையும் உடனழைத்துக் கொண்டு சென்று பிரம தீர்த்தக் கரையில் பிள்ளையாரை இருத்திவிட்டு விரைந்து நீராடித் திரும்பும் எண்ணத்தோடு நீர்நிலையில் இறங்கினார். சில நிமிடங்கள் முழ்கியிருந்து செபித்தற்குரிய அகமர்ஷண மந்திரங் களைச் சொல்லிக் கொண்டு நீரில் மூழ்கினார்.

இந்நிலையில் கரையில் அமர்ந்திருந்த பிள்ளையார் தந்தை யாரைக் காணாமல் முற்பிறப்பின் நினைவு மேலிட்டவராய் திருத் தோணி மலைச் சிகரத்தைப் பார்த்துக் கண்மலர்கள் நீர் ததும்பக் கைமலர்களால் பிசைந்து வண்ணமலர்ச் செங்கனிவாய் மணியதரம் புடை துடிப்ப 'அம்மே அப்பா' என அழைத்து அழுதருளினார். பிள்ளையின் அழுகுரல் கேட்ட நிலையில் தோணிபுரத்து இறைவர் இறைவியாருடன் விடைமீது அமர்ந்து குளக்கரைக்கு எழுந்தருளி னார். பெருமான் உமையம்மையை நோக்கி 'அழுகின்ற இப் பிள்ளைக்கு உன் முலைப்பாலைப் பொற்கிண்ணத்தில் கறந்து ஊட்டுக' எனப்பணித்தார். அம்மையாரும் அவ்வாறே தன் திருமுலைப்பாலைப் பொற்கிண்ணத்தில் கறந்து சிவஞானமாகிய அமுதைக் குழைத்து அழுகின்ற குழந்தை கையில் கொடுத்து உண்ணச் செய்து அழுகை தீர்த்தருளினார். தேவர்க்கும் முனிவர்க்கும் கிடைக்காத பேரின்பம் பெற்ற நிலையில் பிள்ளையார் திருஞானசம்பந்தராய் அபரஞானம் பரஞானம் அனைத்தும் கைவரப் பெற்றார்.

எண்ணரிய சிவஞானத் தின்னமுதம் குழைத்தருளி
உண்ணடிசில் எனஊட்ட உமையம்மை எதிர்நோக்கும்
கண்மலர்நீர் துடைத்தருளிக் கையில்பொற் கிண்ணம்அளித்(து)
அண்ணலைஅங்கு அழுகைதீர்த்து அங்கணனார் அருள்புரிந்தார்.

Koviloor Digital Library

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில்ஓங் கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்

எனச் சேக்கிழார் இதனைப் போற்றி உரைத்தலைக் காணலாம்.

அப்பொழுது நீரில் மூழ்கி நியமங்களை முடித்துக் கரையேறிய சிவபாத இருதயர் சிவஞானத் திருவுருவாய்க் கரையில் நிற்கும் தம்மைந்தரைக் கண்டார். கடைவாய் வழியாகப் பால் வழிந்திருப்பதைக் கண்ட அவர், தன் மகனார்க்கு யாரோ பால் அளித்துச் சென்றுள்ளார்கள் என்று எண்ணியவராய் ஞான போனகரை நோக்கிப் 'பிள்ளாய் நீ யார் அளித்த பால் அடிசிலை உண்டாய்? எச்சில் கலக்குமாறு உனக்கு இதனை அளித்தவர் யார்? காட்டுக' என்று வெகுண்டு தரையில் கிடந்த கோல் ஒன்றைக் கையில் எடுத்து ஓச்சியவராய் வினவினார்.

சிறிய பெருந்தகையார் தம் உள்ளத்துள் எழுந்த உயர் ஞானத் திருமொழியால் தமிழ் என்னும் மொழியின் முதல் எழுத்தாகிய தகர மெய்யில் பிரணவத்தை உயிராய் இணைத்துத் தனக்குப் பாலளித்த உமைஅம்மையின் தோடணிந்த திருச்செவியைச் சிறப்பிக்கும் முறையில் 'தோடுடைய செவியன்' என்ற முதற்பெரும் பாடலால் தனக்குப் பாலளித்த கடவுளின் அடையாளங்களைச் சுட்டித் திருப் பதிகம் அருளிச்செய்தார். அதனைக் கேட்ட சிவபாத இருதயர் அடித்தற்கு என ஓங்கிய கோல் நெகிழ்ந்து வீழ வியப்பும் வெருட்சியும் மேலிட்டவராய் நின்றார். ஞானசம்பந்தர் தந்தையார் உடன் வர ஆலயம் சென்று பிரமபுரத்துப் பெருமானை வணங்கிப் போற்றி மீண்டார்.

இச் செய்தி நகர் முழுவதும் பரவிய நிலையில் அன்பர்கள் ஞானசம்பந்தரைப் போற்றி வரவேற்க, சிவபாத இருதயர் பிள்ளையாரைத் தம் தோள்மேல் அமர்த்திக் கொண்டு தம் இல்லம் சென்றடைந்தார்.

பொற்றாளம் பெற்றது:

உமையம்மையார் அளித்த ஞானவாரமுதம் உண்டு திரு நெறிய தமிழ் பாடிய திருஞானசம்பந்தர் தம் திருமாளிகையில் இறையருளையே எண்ணியிருந்து மறுநாட் காலையில் துயிலுணர்ந்

Koviloor Digital Library

தெழுந்து நீராடி திருக்கழுமலத்தீசனை வணங்கிப் போற்றி, சீகாழிக்கு அருகிலுள்ள திருக்கோலக்காவைத் தரிசிக்கும் வேட்கை உடையவ ராய் அத்தலத்தை அடைந்து ஆலயத்தை வலம் வந்து இறைவன் திருமுன் நின்று 'மடையில் வாளை' எனத் தொடங்கும் இசைத்தமிழ்ப் பதிகத்தைத் தம் கைமலர்களால் தாளம் இட்டுப் பாடினார். கோலக்கா இறைவன் பிள்ளையார் கைகள் சிவப்பதைக்கண்டு மனம் பொறாது திருவைந்தெழுத்து எழுதப் பெற்ற பொற்றாளத்தைத் திருஞானசம் பந்தருக்கு அளித்தருளினார். ஞானசம்பந்தர் அத்தாளத்தைத் தலை மேல் கொண்டு போற்றி, தாளமிட்டு அத்திருப்பதிகத்தைப் பாடிப் போற்றினார்.

திருஞானசம்பந்தர் மேற்கொண்ட முதல் தலயாத்திரையாக இது அமைந்தது.

திருக்கோலக்காவில் பொற்றாளம் பெற்றுச் சீகாழி திரும்பிய ஞானசம்பந்தர் நேரே ஆலயம் சென்று 'பூவார் கொன்றை' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைத் தாளமிட்டுப் பாடிப் போற்றித் தம் மாளிகையை அடைந்தார்.

திருநனிபள்ளி யாத்திரை:

ஞானசம்பந்தரின் தாயார் பகவதி அம்மையார் பிறந்த நனிபள்ளியிலுள்ள அந்தணர்கள், அவர் மூவாண்டில் சிவஞானம் பெற்றதையும் சிவபிரானால் பொற்றாளம் அருளப் பெற்றதையும் கேள்வியுற்றுத் தங்கள் ஊருக்கு எழுந்தருள வேண்டுமென ஞானசம் பந்தரை வேண்டினர். அதற்கு இசைந்த ஞானசம்பந்தர் தோணிபுரத்து இறைவரை வணங்கி விடைபெற்றுத் தாமரை மலர் போன்ற தம் திருவடி நோக நனிபள்ளி நோக்கி நடந்தருளினார். ஆளுடைய பிள்ளையார் அடிமலர் வருந்தக் கண்ட சிவபாத இருதயர் ஞானசம்பந்தரைப் பிறர் தூக்கிச் செல்வதை விரும்பாது தாமே தன் திருத்தோளில் அமர்த்திக் கொண்டு செல்வாராயினார். நனிபள்ளியை அணுகிய நிலையில் ஞானசம்பந்தர் 'எதிரே தோன்றும் இப்பதியாது' எனக் கேட்கத் தந்தையார் 'அது தான் நனிபள்ளி' எனச் சொல்லக் கேட்டுக் 'காரைகள் கூகைமுல்லை' எனத் தொடங்கித் திருப்பதிகம் பாடிக் கொண்டே நனிபள்ளி ஆலயத்தை அடைந்து வணங்கிப் போற்றி அவ்வூரின் அருகிலுள்ள தலைச்சங்காடு, சாய்க்காடு, வெண்காடு முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு மீண்டும் சீகாழிப் பதிக்குத் திரும்பி னார். வளம் குன்றிப் பாலையாயிருந்த நனிபள்ளி, ஞானசம்பந்தர் வரவால் நெய்தலாய்ப் பின் மருதமாயிற்று.

Koviloor Digital Library

இது ஞானசம்பந்தர் வரலாற்றில் அமைந்த இரண்டாவது தல யாத்திரை யாகும்.

சில நாட்கள் கழித்து ஞானசம்பந்தர் மயேந்திரப்பள்ளி, குருகாவூர், முல்லை வாயில் முதலிய தலங்களைச் சென்று வணங்கி மீண்டார். இது மூன்றாவது தலயாத்திரை.

திருநீலகண்ட யாழ்ப்பாணர் தொடர்பு:

திருஞானசம்பந்தர் மிக இளைய பருவத்திலேயே இறைவனால் ஆட்கொள்ளப் பெற்ற அற்புத நிகழ்ச்சியைக் கேள்வியுற்று அவரை வணங்குதற் பொருட்டு, திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவர்தம் மனைவியார் மதங்கசூளாமணியாரும் சீகாழிப் பதியை அடைந்தனர். அவ்விருவரின் வரவறிந்த ஞானசம்பந்தர் அவர்களை எதிர்சென்று அழைத்து வந்து திருத்தோணிபுரத் திருக்கோயிலில் இருத்தி யாழிசையில் இறைவரைப் போற்றுமாறு செய்து அவர்கள் தங்குதற்குத் தனி இல்லம் அமைத்துக் கொடுத்தருளினார். திருநீலகண்டர் ஞானசம்பந்தர் பாடும் பாடல்களை யாழிசையில் வாசித்து இன்புறுத்தும் பணியை மேற்கொண்டார்.

திருஞானசம்பந்தர் அடியவர் புடைசூழ யாழ்ப்பாணருடன் கொள்ளிட நதியைக் கடந்து தில்லை சென்றார். தென் திசைவாயில் வழியே ஆலயத்தினுட்சென்றுபேரம்பலத்தை வணங்கிக் 'கற்றாங்கு எரியோம்பி' 'ஆடினாய் நறுநெய்' என்பனவாகிய திருப்பதிகத்தால் போற்றி வழிபட்டார். அத்தலத்தில் தங்குதற்கு மனமின்றி திருவேட்களத்தில் தங்கியிருந்து நாள்தோறும் தில்லைக் கூத்தனை வழிபட்டார். அங்குத் தங்கியிருக்கும் நாட்களில் திருக்கழிப்பாலை, திருநெல்வாயில் முதலிய தலங்களை வழிபட்டார்.

திருநீலகண்ட யாழ்ப்பாணர் தில்லையின் மேற்றிசையில் வெள்ளாற்றின் கரையிலுள்ள தலங்களை வழிபட வேண்டுமென வேண்ட ஞானசம்பந்தரும் அதற்கிசைந்து புறப்பட்டார். எருக்கத்தம் புலியூரை அடைந்தவுடன் 'இத்தலம் அடியேன் பிறந்த தலம்' என யாழ்ப்பாணர் கூறக்கேட்டு மகிழ்ந்து திருக்கோயிலுக்குச் சென்று பதிகம் பாடிப்பரவினார்.

முத்துச் சிவிகை, குடை, சின்னம் பெறல்:

ஞானசம்பந்தர் எருக்கத்தம் புலியூரிலிருந்து திருமுதுகுன்றம்

Koviloor Digital Library

திருபெண்ணாகடம் ஆகிய தலங்களை வணங்கிக்கொண்டு திருநெல் வாயில்அரத்துறை செல்லப் புறப்பட்டார். தந்தையார் தோள்மேல் அமர்ந்து செல்ல மனம் இன்றித்திருவடி நோக நடந்தே வருவதைக் கண்ட தந்தையாரும் அடியவர்களும் மிகவும் பரிவுற்றனர். திருநெல் வாயில் அரத்துறை அணுகிய போது மாலை நேரம் வந்தது. வழி நடந்த இளைப்பு வர ஞானசம்பந்தர் அடியவர்களோடு மாறன்பாடி என்ற ஊரில் தங்கினார்.

அரத்துறை இறைவன் ஞானசம்பந்தரின் வழி நடைவருத் தத்தை அறிந்து அரத்துறை அந்தணர்கள் கனவில் தோன்றி 'ஞானசம் பந்தன் நம்மைக் காண வருகின்றான். அவனுக்கென ஆலயத்துள் முத்துச் சிவிகை, முத்துக்குடை, முத்துச் சின்னம் ஆகியன வைத்துள் ளோம் எடுத்துச்சென்று கொடுத்து அழைத்து வருக' எனப் பணித் தருளினான். அவ்வாறே இறைவன் ஞானசம்பந்தர் கனவிலும் தோன்றி 'யாம் அளிக்கும் பொருள்களை ஏற்று வருக' எனக் கூறியருளினான். அரத்துறை அந்தணர்கள் வியந்து எழுந்து இறைவனளித்த அப் பொருள்களைக் கொண்டு சென்று ஞானசம்பந்தரிடம் நடந்ததைக் கூறிச் சிவிகையில் ஆரோகணித்து அரத்துறை வரவேண்டுமென வேண்டினர். ஞானசம்பந்தர் இறைவன் திருவருளை எண்ணி வியந்து அச்சிவிகையை மும்முறை வலம் வந்து பணிந்து ஐந்தெழுத்தோதி அச்சிவிகையில் அமர்ந்து ''எந்தை ஈசன் எம்பெருமான்' என்ற திருப்பதிகத்தால்,இறையருளை வியந்து புறப்பட்டுச் சென்று அரத்துறை ஈசனை வணங்கிப் போற்றினார். திருநெல்வாயில் அரத்துறையில் சில நாள் தங்கியிருந்து புறப்பட்டுச் சிவிகையில் விசையமங்கை, திருவைகா, புறம்பயம், சேய்ஞலூர், திருப்பனந்தாள், பந்தணைநல்லூர், ஓமாம் புலியூர், வாழ்கொளிப்புத்தூர், கடம்பூர், நாரையூர், கருப்பறியலூர், முதலிய தலங்களைப் பணிந்து திருப்பிரம புரம் மீண்டருளினார். இது நான்காவது தலயாத்திரையாகும்.

உபநயனம்:

திருஞானசம்பந்தருக்கு ஏழாவது வயது தொடங்கியது. வேதியர்கள் தங்கள் குலமரபை எடுத்துக்கூறி இருபிறப்பாளர் நிலையை விளக்கி அவருக்கு முப்புரிநூல் அணிவிக்கும் உபநயனச் சடங்கினைச் செய்து 'மறை நான்கும் தந்தோம்' என்றனர். பிள்ளையார் இறையருளால் எல்லாக் கலையுணர்வுகளையும் ஓதாது உணந்தவர். ஆதலின் வேதங்களின் பல பகுதிகளையும் அவற்றின் பொருளோடு ஓதக் கேட்ட அந்தணர்கள் வேதங்களில் தங்கட்கிருந்த ஐயங்களை ஞானசம்பந்தரிடம் கேட்டுத் தெளிவு பெற்றனர்.

Koviloor Digital Library

ஞானசம்பந்தர் அவர்களை நோக்கி வேதம் நான்கிலும் மெய்ப் பொருளாய் விளங்கும் திருவைந்தெழுத்தின் சிறப்பை, 'துஞ்சலும் துஞ்சல்' என்று தொடங்கிப்பாடி அனைவர்க்கும் உணர்த்தி யருளினார்.

அப்பர், சம்பந்தர் சந்திப்பு:

உபநயனச் சடங்கு முடிந்து ஞானசம்பந்தர் சீகாழியில் தங்கியிருக்கும் பொழுது, தில்லை வந்தருளிய திருநாவுக்கரசர் ஞான சம்பந்தரை இறைவன் ஆட்கொண்டருளிய அற்புத நிகழ்ச்சியைக் கேள்வியுற்று அவரைக் காணும் பெருவேட்கையோடு சீகாழிப்பதிக்கு எழுந்தருளினார். கல்லைப் புணையாகக் கொண்டு கடலிடைக் கரை யேறிய நாவுக்கரசர் பெருமைகளைக் கேட்டறிந்திருந்த ஞானசம்பந்தர் அவர் தன்னைக் காண வருகின்றார் என்பதை அறிந்து அன்பர்களோடு சென்று அவரை எதிர் கொண்டு அழைத்தனர். தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும் நாயகன் சேவடிதைவரும் நெஞ்சும் அன்பு பாய்வது போல் கண்ணீரும்கொண்டு முதியராய் வந்த திருநாவுக்கரசரை ஞானசம்பந்தர் வணங்கினார். நாவுக்கரசர் அவரை வணங்கித் தன்னை வணங்கிய ஞானசம்பந்தரைத் தம் எழுதரிய மலர்க்கையால் எடுத்து 'அப்பரே' என அழைக்க அவரும் அடியேன் என மகிழ்ந்துரைத்தார். இருவரும் அளவளாவி மகிழ்ந்து திருத்தோணி புரத் திருக்கோயிலுக்கு வந்து வழிபட்டனர். ஞானசம்பந்தர் அப்பரைத் தம் திருமாளிகைக்கு அழைத்துச் சென்றார். இருவரும் திருவமுது கொண்டு அளவளாவி மகிழ்ந்தனர். சிலநாள்கள் சீகாழிப் பதியில் தங்கிப் போற்றிய அப்பர் பிரியாவிடைபெற்றுச் சோழ நாட்டுத் திருத் தலங்களை வணங்கப் புறப்பட்டார்.

ஞானசம்பந்தர் சீகாழியில் தங்கியிருக்கும் நாள்களில் மொழி மாற்று மாலைமாற்று முதலிய பல திருப்பதிகங்களைச் சித்திரகவி களுக்குரிய இலக்கியங்களாகப் படைத்துக் காழி இறைவனைப் பாடிக் களிப்புற்றார். திருநீல கண்டயாழ்ப்பாணரும் அவர்தம் துணைவியார் மதங்கசூளாமணியாரும் அப்பதிகங்களை யாழில் இணைத்து இசைத்து வாழ்ந்து வந்தனர்.

முயலகன் நோய் தீர்த்தல்:

திருஞானசம்பந்தர் தமிழ் நாட்டிலுள்ள பல தலங்களையும் தரிசித்து வழிபடவும் ஆங்காங்குள்ள மக்கட்கு அவற்றின் பெருமை களை அறிவுறுத்தவும் விரும்பி மிகப்பெரிய தமது ஐந்தாவது தல

Koviloor Digital Library

யாத்திரையை மேற்கொள்ள எண்ணினார். தன் தந்தையாரிடம் அவ் விருப்பத்தைத் தெரிவித்தார். சிவபாதஇருதயர் தமது அருமருந்தன்ன பிள்ளையைப் பிரிய மனமின்றி 'யான் உம்மைப் பிரிந்து ஒருகணமும் தரியேன் ஆயினும், இருமை யின்பம் அளிக்கும் யாகம் ஒன்றையும் செய்ய எண்ணுகிறேன். எனவே, சில தலங்கட்கு உம்மோடு வரு கிறேன்', என்று கூறி விடை யளித்துத் தானும் அவரோடு உடன் சென்றார்.

திருஞானசம்பந்தர் திருத்தோணிபுரப் பெருமானை வணங்கி விடைபெற்றுப் பயணம் மேற்கொண்டார். திருக்கண்ணார்கோயில் புள்ளிருக்கு வேளூர் முதலிய தலங்களை வணங்கிக் கொண்டு காவிரி வடகரை வழியே மழவர் நாட்டுத் திருப்பாச்சிலாச்சிராமம் சென்றடைந் தார். அந்நகரில் வாழும் குறுநில மன்னனாகிய கொல்லி மழவன் என்பான் முயலகன் என்ற நோயினால் வருந்தி வந்த தன் மகளைப் பல்வகை மருத்துவம் செய்தும் குணப்படுத்த இயலாத நிலையில் பாச்சிலாச் சிராமத்து ஆலயத்தில் இறைவர் திருமுன் கிடத்தியிருந் தான்.

திருஞானசம்பந்தர் வருகையை அறிந்த அம்மன்னன் நகரை அலங்கரித்து நன்முறையில் அவரை வரவேற்று ஆலயத்துக்கு அழைத்துச் சென்றான். ஆலயத்தில் இளம்பெண் ஒருத்தி உணர்வற்ற நிலையில் நிலத்திற் கிடத்தலைக் கண்டு அம்மழவனை வினவியறிந்து அப்பெண்ணுக்கு ஏற்பட்ட முயலகன் என்னும் நோயைப் போக்கி யருளுமாறு இறைவனை வேண்டி, 'துணிவளர்திங்கள்' என்று தொடங்கித் திருப்பதிகம் பாடியருளினார். அந்நிலையில் அப்பெண், நோய் நீங்கி நல் உணர்வு பெற்று எழுந்து ஞானசம்பந்தரை வணங்கிப் போற்றினாள். மழவன் மகிழ்ந்து அவர் திருவடிகளை வணங்கித் தன் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொண்டான்.

பனி நோய் தீர்த்தல்:

பாச்சிலாச் சிராமத்துப் பரமனைப் பணிந்து போற்றிய ஞான சம்பந்தர் அவ்வூரினின்றும் புறப்பட்டுப் பைஞ்ஞீலி, ஈங்கோய்மலை முதலான தலங்களை வணங்கிக் கொண்டு கொங்கு நாட்டிலுள்ள கொடிமாடச் செங்குன்றூரைச் சென்றடைந்தார். அங்கு விளங்கும் மாதொரு பாகரைப் போற்றி அருகிலுள்ள திருநணாவை வழிபட்டு, திருச்செங்குன்றூர் வந்து திருமடம் ஒன்றில் தங்கியிருந்தார். அக்காலம் பனிக்காலம் ஆனதால் அந்நிலத்தின் இயல்புப்படி பனி நோய் என்னும் குளிர் காய்ச்சல் அவருடன் வந்த அடியார்களைப் பற்றி வருத்தியது.

Koviloor Digital Library

அதனை அறிந்த ஞானசம்பந்தர் அடியவர்களைப் பற்றியிருந்த அந்நோய் தீருமாறு நஞ்சுண்டு அமரர்களைக் காத்த திருநீல கண்டப் பெருமானைப் போற்றி 'அவ்வினைக்கு இவ்வினை' என்னும் திருப்பதிகம் அருளிச் செய்தார். அக்கணமே அடியவர்கட்கே யன்றி கொங்கு நாடெங்கிலும் அந்நோய் வாராது நீங்கியது.

முத்துப் பந்தர் பெற்றது:

திருஞானசம்பந்தர், திருச்செங்குன்றூரிலிருந்து புறப்பட்டுப் பாண்டிக் கொடுமுடி, வெஞ்சமாக் கூடல், கருவூர் ஆனிலை முதலிய தலங்களைப் பணிந்து சோழ நாடு மீண்டு திருச்சிராப்பள்ளி முதலிய காவிரித் தென்கரைத் தலங்களை வணங்கிக் கொண்டு திருவலஞ்சுழி வந்தடைந்தார். அப்போது இளவேனிற் பருவம் தொடங்கியது. திருவலஞ்சுழி இறைவனை வணங்கிப் பழையாறை மேற்றளியையும் திருச்சத்தி முற்றத்தையும் பணிந்து நண்பகற்போதில் பட்டீச்சுரம் வந்தடைந்தார். சிவபூதங்கள் வானத்தில் மறைந்து நின்று பட்டீசுரர் அளித்த முத்துப் பந்தரை ஏந்தியவாறு 'இது சிவபெருமான் அளித்தது' எனக் கூறி ஞானசம்பந்தரின் சிவிகையின் மேல் ஏந்தி நிழல் செய்தன. அடியவர் வானினின்று இழியும் அப்பந்தரை ஏந்தியவர்களாய்த் தண்ணிழலில் ஞானசம்பந்தரை ஆலயத்துக்கு அழைத்துச் சென்றனர். ஞானசம்பந்தர் இறைவனது தடங் கருணையை வியந்தவாறு 'பாடல் மறை' பதிகம் பாடிப் பட்டீச்சுரரை வழிபட்டு மகிழ்ந்தார்.

உலவாக் கிழி பெறுதல்:

ஞானசம்பந்தர் பட்டீச்சுரத்திலிருந்து புறப்பட்டுப் பல தலங்களையும் வணங்கியவராய்த் திருவாவடுதுறை வந்தடைந்தார். அதுபோது சிவபாத இருதயர், தான் வேள்வி செய்தற்கு ஏற்ற காலம் இதுவாகும். அதற்குப் பொருள் வேண்டுமென ஞானசம்பந்தரிடம் தெரிவித்தார். ஞானசம்பந்தர் தந்தையாருக்கு அளிக்கப் பொருள் இல்லையே என வருந்தியவராய் 'இடரினும் தளரினும்' என்ற திருப்பதிகத்தால் இறைவனிடம் விண்ணப்பித்தார். சிவபூதம் ஒன்று ஆயிரம் பொன்னடங்கிய பொற்கிழி ஒன்றை ஆலயத்தில் மாசிலாமணியீசர் சந்நிதியில் உள்ள பீடத்தில் வைத்து 'இப்பொற்கிழி எடுக்க எடுக்கக் குறையாத உலவாக் கிழி, இறைவர் இக்கிழியை உமக்கு வழங்குமாறு அளித்துள்ளார்' எனக் கூறி மறைந்தது. ஆளுடைய பிள்ளையார் உலவாக் கிழியைத் தலைமேற் கொண்டு போற்றி அதனைத் தந்தையார் கையில் கொடுத்து, இக்கிழியின் பொன்னைக் கொண்டு தந்தையாரையும் கழுமலத்திலுள்ள ஏனைய

Koviloor Digital Library

அந்தணர்களையும் நல் வேள்விகள் பலவும், செய்யுமாறு கூறி வழி யனுப்பி வைத்தார்.

யாழ்மூரி பாடியது:

பின்னர் ஞானசம்பந்தர் திருக்கோழம்பம் வைகல் முதலான தலங்களை வணங்கிக் கொண்டு திருத்தருமபுரம் சென்றடைந்தார். தருமபுரம் திருநீலகண்ட யாழ்ப்பாணரின் தாயார் பிறந்த ஊர், ஆதலின் அங்கு வாழும் அவரது சுற்றத்தார் ஞானசம்பந்தரையும், யாழ்ப்பாண ரையும் அன்புடன் வரவேற்றுப் போற்றினர். பாணர், தம் உறவினர் களோடு உரையாடுகையில், அவர்கள் ஞானசம்பந்தரின் திருப்பதிக இசையைப் பாணர் உடனிருந்து யாழில் வாசித்து வருதலினாலேயே திருப்பதிக இசை சிறப்படைகிறது என முகமன் உரை கூறினர். அதைக் கேட்டு மனம் பொறாது ஞானசம்பந்தரை வணங்கித் திருப்பதிக இசை யாழில் அடங்காதது என்பதனை உறவினர்கள் உணருமாறு செய்தருள வேண்டுமெனப் பணிந்தார். ஞானசம்பந்தர் கண்டத்திலும் கருவி யிலும் அடங்காத இசைக் கூறுடைய 'மாதர் மடப்பிடி' என்ற திருப் பதிகத்தை அருளிச் செய்தார். யாழ்ப்பாணர் அப்பதிகஇசை தம் கருவியில் அடங்காததை உணர்ந்து இக்கருவியினாலன்றோ உறவினர் ஞானசம்பந்தரையும் தன்னையும் ஏற்றத் தாழ்வு கற்பிக்க முற்பட்டனர் என, அதனை உடைத்தற்கு ஓங்கினார். ஞானசம்பந்தர் அதனைத் தடுத்து, இறைவன் பெருமை இக்கருவியில் அடங்குமெனக் கருதல் கூடாது. ஆயினும் இயன்றவாறு வாசிப்பீர் எனத் திரும்பக் கொடுத்து, இசைத் தொண்டு செய்யப் பணித்து, சிலநாள் அப்பதியில் தங்கி, திருநள்ளாறு அடைந்து 'போகமார்த்த பூண் முலையாள்' எனத் தொடங்கித் திருப்பதிகம் பாடி நள்ளாற்றிறைவரை வணங்கித் திருச்சாத்த மங்கைக்கு எழுந்தருளினார்.

நீலநக்கர் சிறுத் தொண்டர் உபசரிப்பு:

நீலநக்கநாயனார் ஞானசம்பந்தரை எதிர்கொண்டழைத்துத் தம் திருமனையில் திருவமுதளித்து உபசரித்தார். திருச்சாத்த மங்கையில் அயவந்தி என்னும் ஆலயத்திலுள்ள இறைவனை வழிபட்டார். அத்தலத் திருப்பதிகத்தில் நீலநக்கரின் அன்பின் திறத்தைப் பாராட்டினார். பின்னர்ப் பல பதிகளையும் வழிபட்டுத் திருச்செங்காட்டங்குடியை அடைந்தார்.

திருச்செங்காட்டங்குடியில் கணபதீச்சுரம் சென்று 'பைங் கோட்டு மலர்ப் புன்னை' எனத் தொடங்கிப் பதிகம் பாடிப் பரவினார்.

Koviloor Digital Library

அத்திருப்பதிகத்தில் சிறுத்தொண்டர் பக்திச் சிறப்பைப் பாராட்டித் திருமருகல் சென்றடைந்தார்.

விடந் தீர்த்தல்:

திருஞானசம்பந்தர் மருகற் பெருமானை வழிபட்டுச் சிலநாள் அங்குத் தங்கியிருந்தார். அப்பொழுது ஓர் அற்புத நிகழ்ச்சி நடந்தது.

வணிகன் ஒருவன் தனக்கு முறைப் பெண்ணான கன்னி ஒருத்தியை உடன் அழைத்துக் கொண்டு தன்னூர் செல்பவன், மாலை நேரம் வந்ததால் தன் பயணத்தைத் தொடர முடியாமல் திருமருகல் கோயில் அயலிலுள்ள ஒரு திருமடத்தில் தங்கினான். இரவில் வணிகனை அரவு தீண்டி விட்டது. விடந் தலைக்கேறி மயங்கிச்சோர்ந் தான். அந்நிலையில் அவனுடன் வந்த பெண் மணமாகாத நிலையில் அவனைத் தொட இயலாதவளாய்ப் பெற்றோர்க்குத் தெரியாமல் உடன் போக்காக வந்தவளாதலின் செய்வதறியாது திகைப்புற்று அழுது அரற்றினாள். ஊர்மக்கள் மந்திரம் வல்லாரைக் கொண்டு மந்திரித்தும் பயனின்றிக் கிடந்த வணிகனின் உடல் அருகே இருந்து கதறி அழும் பெண் 'நஞ்சுண்டு தேவர்களைக் காத்த பெருமானே, மன்மதன் உயிரை அவன் மனைவி வேண்ட அளித்தருளிய கருணை யாளனே மார்க்கண்டேயர்க்காக காலனை உயிர்துறக்கச் செய்தருளிய வனே என் நாயகனைப் பற்றிய விடவேகம் தணியுமாறும், துன்பக் குழியிலிருந்து நான் கரையேறுமாறும் அருள் புரிய வேண்டும்' என இறைவனை நினைந்து அழுதரற்றினாள். அவ்வழியில் காலை இளம் போதில் மருகற் பெருமானை வழிபட வந்த திருஞானசம்பந்தப் பெருமானின் திருச்செவிகளுக்கு இவ்அவலக் குரல் எட்டியது. உடன் ஞானசம்பந்தர் அத்திருமடத்தை அடைந்து அவளுக்கு ஆறுதல் கூறி நடந்ததை வினாவினார். அப்பெண் ஞானசம்பந்தரை வீழ்ந்து வணங்கித் தன் வரலாற்றைச் சொல்லலானாள்.

'வைப்பூரிலுள்ள தாமன் என்போன் என் தந்தை. அவனுக்கு மகளிர் எழுவர். அரவு தீண்டப்பட்டவன் என் தாய்மாமன். என் தந்தை தன் மகளிருள் மூத்தவளை மாமனுக்குத் தருவதாகக் கூறிப் பொரு ளாசையால் பிறன் ஒருவனுக்கு மணம் செய்வித்தார், அடுத்த பெண்ணை உனக்குத் தருகிறேன் என்று ஆறுதல் கூறிக்கொண்டே ஆறு பெண்களையும் இவ்வாறே பிறருக்கு மணம் முடித்து வந்தார். ஏழாவது பெண்ணாகிய நான் என்னையும் இவ்வாறே வேறு ஒருவருக்கு மணம் செய்வித்துத் தன் மருகனைத் தந்தை தளர்வுறச் செய்வார் என்ற எண்ணத்தால் உறவினர்க்கும் தெரியாமல் இவரோடு

Koviloor Digital Library

போந்து மணம் முடித்து வாழ எண்ணினேன். வழியிடையே இவ்வூரில் அரவு தீண்டி இவரும் இறந்தார். கடல் நடுவே கலம் கவிழ்ந்த நாய்கன் போலத் துன்பத்துக்கு ஆளானேன். இந்நிலையில் என் சுற்றத்தார் போல என்பால் பரிவு காட்டி அருள் செய்கின்றீர்கள்! என்று கூறிய பெண்ணின் ஆற்றாமையைக் கேட்டுத் திருவுளம் இரங்கிய ஞான சம்பந்தர் மருகற் பெருமான் ஆலயம் சென்று பணிந்து 'உன் பெயர் கூறி ஒள்ளிழையாள் உளம் மெலிந்து வருந்துதல் அருட் கடலாகிய உனக்கு அழகோ' என முறையிடும் நிலையில் 'சடையாயெனுமால்' எனத் தொடங்கித் திருப்பதிகம் பாடிப் போற்றினார். அந்நிலையில் வணிகனும் உயிர்பெற்று எழுந்தான். இருவரும் தங்கட்கு வாழ்வளித்த ஞான சம்பந்தர் திருவடிகளைப் பணிந்தனர். ஞானசம்பந்தர் அவ்விருவருக்கும் இறைவன் திருமுன்னிலையில் மணம் புணரும் பெருவாழ்வு வழங்கி வாழ்த்தினார்.

திருஞானசம்பந்தர் திருமருகலில் தங்கியிருந்தபோது, சிறுத் தொண்ட நாயனார் அவரை வணங்கி மீண்டும் திருச்செங்காட்டங் குடிக்கு எழுந்தருளுமாறு வேண்டினார். மருகற் பெருமானை வணங்கி விடைபெறச் சென்ற ஞானசம்பந்தருக்கு இறைவன் செங்காட்டங்குடிக் காட்சியைக் காட்ட இரு தலங்களையும் இணைத்து 'அங்கமும் வேதமும்' என்ற திருப்பதிகம் பாடிப் போற்றிச் சிறுத் தொண்டருடன் செங்காட்டங்குடி சென்று கணபதீச் சுரத்தை வழிபட்டுக் கொண்டு சிலநாள் அங்குத் தங்கியிருந்தார். பின்னர் சிறுத்தொண்டருக்கு விடையருளித் திருப்புகலூர் தொழச் சென்றார்.

முருக நாயனார் உபசரிப்பு:

முருக நாயனார் எதிர் கொண்டழைக்கத் திருப்புகலூர் சென்ற ஆளுடைய பிள்ளையார் ஆலயம் சென்று பெருமானை வணங்கி திருப்பதிகம் பாடிப் போற்றி முருக நாயனார் திருமடத்தில் தங்கி யிருந்தார்.

திருநாவுக்கரசர் திருவாரூரில் புற்றிடங் கொண்ட பெருமானை வழிபாடாற்றித் திருப்புகலூரை வழிபட எழுந்தருளினார். அப்பர் வருகையை அறிந்த ஞானசம்பந்தர் அவரை எதிர்கொண் டழைத்து அளவளாவி மகிழ்ந்தார். அப்பர் திருவாரூரில் நிகழ்ந்த திருவாதிரை நாளின் சிறப்பை விரித்துரைக்கக் கேட்ட ஞானசம்பந்தர் அப்பரைத் திருப்புகலூரில் இருக்கச் செய்து விற்குடி வீரட்டத்தைப் பணிந்து திருவாரூருக்கு எழுந்தருளினார். ஞானசம்பந்தரின் வருகையை அறிந்த நகர மக்கள் எதிர்கொண்டு போற்றினர். ஞான

Koviloor Digital Library

சம்பந்தர் திருவாரூர்ப் பூங்கோயிலை அடைந்து 'சித்தம் தெளிவீர் காள்' என்பது முதலிய பல திருப்பதிகங்களை அருளிப் பரவி வழிபட்டார். அரனெறியைத் தரிசித்தார். பின்னர் வலிவலம் கோளிலி முதலான தலங்களை அடைந்து வழிபட்டு மீண்டும் திருவாரூரை அடைந்து தங்கியிருந்து வழிபட்டு அத்தலத்தைப் பிரிய மனம் இன்றி அப்பர் நினைவால் திருப்புகலூருக்கு எழுந்தருளினார். வழியிடையே பனையூரைத் தொழுது திருப்புகலூர் வந்தடைந்தார். ஊர் எல்லையில் முருக நாயனார் முதலிய அடியவர்கள் வரவேற்கத் திருப்புகலூரை அடைந்து இறைவனை வழிபட்டு முருகநாயனார் திருமடத்தில் திருநாவுக்கரசர், நீலநக்கர், சிறுத்தொண்டர் முதலிய அடியவர்களோடு உரையாடிக் கலந்து மகிழ்ந்து உடனுறைந்தார்.

திருநாவுக்கரசருடன் தலயாத்திரை:

ஞானசம்பந்தரும் அப்பரும் நீலநக்கர் சிறுத்தொண்டர் முதலானோர்க்கு விடையளித்து இறைவன் வீற்றிருக்கும் பல திருத் தலங்களையும் வழிபட விரும்பிப் புறப்பட்டனர். ஞானசம்பந்தர் அப்பர் உடன்வருவதால், முத்துச்சிவிகை பின்வர, தானும் அவருடன் நடந்து சென்றார். அதைக்கண்ட அப்பர் பெருமான் தாங்கள் சிவிகையில் எழுந்தருள்வீராக எனக் கேட்டுக் கொள்ள ஞானசம்பந்தர் அப்பரை முன்னே விடுத்து அவர் செல்லும் திருத்தலங்களைத் தொடர்ந்து சென்று வழிபட்டார். இருவரும் அம்பர் மாகாளத்தை வணங்கித் திருக்கடவூர் சென்றனர். குங்குலியக்கலயர் வரவேற்க இருவரும் கடவூர் வீரட்டத்தைத் தொழுது போற்றி அந்நாயனார் திருமனையில் அமுது கொண்டு திருக்கடவூர் மயானம் ஆக்கூர் மீயச்சூர் பாம்புரம் முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு திருவீழிமிழலைவந்தடைந்தனர். அத்தலத்தில் விண்ணிழி விமானத் தில் வீற்றிருந்தருளும் பெருமானை வணங்கி இருவரும் தனித்தனி ஆலயத்தின் அருகே விளங்கிய இரண்டு திருமடங்களில் தனித்தனியே அடியார்களுடன் தங்கினர்.

கோயிலின் வடபால் உள்ள திருமடத்தில் ஞானசம்பந்தர் எழுந்தருளியிருந்தார். அங்கிருக்கும் நாள்களில் திலதைப்பதி, பேணு பெருந்துறை என்ற தலங்களை ஞானசம்பந்தர் வழிபட்டுப் போற்றி னார்.

ஞானசம்பந்தர் வீழியில் இருந்தபோது காழிமக்கள் அவர் பிரிவாற்றாது எங்களோடு சீகாழிக்கு வந்தருள வேண்டுமென வேண்டினர். ஞானசம்பந்தர் வீழிநாதனின் அருள் பெற்று இன்று

Koviloor Digital Library

கழித்து நாளை செல்வோம் எனக் கூறி அன்றிரவு துயில் கொண்டார். பெருமான் அவர் தம் கனவில் தோன்றி 'யாம் தோணியிலமர்ந்த வண்ணத்தை நாளை நீ வீழிமிழலையிலேயே காணலாம்' எனக் கூறக் கேட்டு விழித்தெழுந்து நீராடி ஆலயம் சென்றபோது இறைவன் காழிக் காட்சியை அவ்வாலயத்திலேயே காட்டக் கண்டு 'மைம் மருபூங் குழல்' எனத் திருப்பதிகம் பாடிப் பரவினார், காழிமக்கட்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டு வீழிமிழலையிலேயே தங்கியிருந்தார்.

வாசி தீரக் காசு பெறுதல்:

ஞானசம்பந்தரும் அப்பரும் திருவீழிமிழலையில்தங்கி யிருந்த காலத்து மழையின்மையால் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. உயிர்களெல்லாம் பசியால் வருத்தமுற்றன. அடியார்களும் துயருற் றனர். அதனை அறிந்த பிள்ளையார் 'கண்ணுதலான் திருநீற்றுச் சார்வினோர்க்கும் கவலை வருமோ? என்று கருதியவராய் இரவில் துயிலலுற்றார். பெருமான் அவர் கனவில் தோன்றிப் பஞ்சம் நீங்கும் கால எல்லைவரை ஆலயத்தின் கிழக்குப் பலிபீடத்திலும் மேற்குப் பலிபீடத்திலும் இருவருக்கும்பொற்காசு அளிக்கின்றோம்! எனக்கூறி மறைந்தார். விழித்தெழுந்த ஞானசம்பந்தர் அப்ப மூர்த்திகளுடன் ஆலயம் சென்றார். கிழக்குப் பலிபீடத்தில் ஞானசம்பந்தர் காசு பெற்றார். மேற்குப் பலிபீடத்தில் அப்பர் காசு பெற்றார். இருவரும் அக்காசுகளைப் பெற்றுத் தத்தம் திருமடங்களில் அடியவர்களுக்கு அமுதளிக்கச் செய்தருளினர். இங்ஙனம் நிகழும் நாள்களில் நாவுக்கரசர் திருமடத்தில் உரிய காலத்திலும்; ஞானசம்பந்தர் திருமடத்தில் சிறிது காலம் தாழ்த்தும் அமுதளிக்கப் பெறுவதை அறிந்த ஞானசம்பந்தர், உரியவர்களை அழைத்துத் தாமதத்திற்குரிய காரணம் வினவினார்.

இறைவன் தனக்கு அளிக்கும் காசுகள் வாசியுள்ளதாக இருத்தலையும் அதனால் அக்காசினை மாற்றிப் பொருள்கள் பெற்று வருதலினால் காலத்தாழ்ச்சி ஏற்படுதலையும் அறிந்த ஞானசம்பந்தர், அப்பர் கைத்தொண்டும் செய்தலால் அவருக்கு வாசியில்லாத காசு வழங்குதலை அறிந்து மறுநாள் ஆலயம் சென்று 'வாசிதீரவே காசு நல்குவீர்' எனத் திருப்பதிகம் பாடி நல்ல காசினைப் பெற்று உரிய காலத்தில் தமது திருமடத்திலும் அடியவர்களுக்கு அமுதளிக்கச் செய்து மகிழ்ந்திருந்தார். சில திங்களில் மழைபெய்து நாடு செழித்தது. பஞ்சம் நீங்கி மக்கள் இனிது வாழத் தொடங்கினர்.

Koviloor Digital Library

மறைக்கதவம் அடைத்தல்:

ஞானசம்பந்தரும் அப்பரும் அடியவர்களுடன் திருவீழி மிழலையிலிருந்து புறப்பட்டுத் திருவாஞ்சியம் முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு அடியவர் எதிர்கொண்டு போற்றத் திருமறைக் காடு அடைந்தனர். ஆலயத்தை வலம் வந்து வாயிலை அணுகினார் கள். வேதங்களால் பூசிக்கப்பெற்றுத் திருக்காப்பிடப்பெற்ற அத்திருக் கதவுகள் திறக்கப்படாதிருத்தலையும் மக்கள் வேறோர் பக்கத்தில் வாயில் அமைத்துச் சென்று வழிபட்டு வருதலையும் கண்ட ஞான சம்பந்தர் வேதவனப் பெருமானை உரிய வாயில் வழியே சென்று வழிபட வேண்டுமெனத் திருவுளத்தெண்ணி அப்பரைப் பார்த்து 'இக்கதவுகள் திறக்கத் தாங்கள் திருப்பதிகம் பாடியருளுக' என வேண்டினார். அப்பர் 'பண்ணினேர் மொழியாள்' எனத் தொடங்கித் திருப்பதிகம் பாட அப்பதிகப் பொருட் சுவையில் ஈடுபட்ட இறைவன் பதிகத்தின் நிறைவில் திருக்கதவுகள் திறக்குமாறு செய்தருளினார். இருவரும் ஆலயம் சென்று மறைக்காட்டுறையும் மணாளனைப் போற்றிப் பரவித் திரும்பினர். அப்பர் இக்கதவுகள் இனி திறக்கவும் அடைக்கவும் உரியனவாக இருத்தல் வேண்டுமென எண்ணி ஞான சம்பந்தரை நோக்கி இப்போது தாங்கள் திருக்கதவுகள் அடைக்கப் பாட வேண்டுமென வேண்டினார். ஞானசம்பந்தர் 'சதுரம் மறை' எனத் தொடங்கித் திருப்பதிகம் பாடினார். முதற்பாடலிலேயே கதவு அடைத்துக் கொண்டது. ஏனைய பாடல்களையும் பாடிப் போற்றினார் ஞானசம்பந்தர். பின்னர் இருவரும் சென்று தத்தம் திருமடங்களில் இனிதுறைந்தனர்.

வாய்மூரில் இறைவன் ஆடல் காட்டி அருளல்:

அப்பர் அரிய வேதங்களால் திருக்காப்பிடப்பெற்றகதவுகள் தாம் பாடிய திருப்பதிகத்தால் அரிதில் திறக்கப்பெற்றதையும் ஞானசம்பந்தரின் பாடலுக்கு எளிதில் அடைத்துக் கொண்டதையும் எண்ணியவராய்த் துயில் கொண்டார். அவர் தம் மனக்கருத்தை அறிந்த இறைவன் அவர் எதிரே சைவ வேடத்துடன் காட்சி நல்கி 'நாம் வாய்மூரில் இருக்கின்றோம். நம்மைத் தொடர்ந்து வருக' என அழைத்து முன்னே செல்ல அவரைப் பின் தொடர்ந்து சென்றார் அப்பர் நெடுந்தூரம் சென்ற நிலையில் பெருமான் மறைந்தார். அப்பர் வாய்மூரை அடைந்து வழிபட்டுத் திருப்பதிகம் பாடினார். இந்நிலை யில் அப்பரை அவர்தம் திருமடத்தில் காணாத ஞானசம்பந்தர் அவர் சென்ற வழி கேட்டறிந்து அவரைத் தேடித் திருவாய்மூர் வந்தடைந் தார்.

Koviloor Digital Library

ஞானசம்பந்தரின் வருகையை அறிந்த அப்பர் அவரைக் கண்டு மகிழ்ந்து தாம் அருளிய திருப்பதிகத்தில் திறக்கப்பாடிய என்னினும் சிறப்புடைய செந்தமிழ்பாடித் திருக்கதவம்அடைப்பித்த ஞானசம்பந்தர் வந்துள்ளார் திருக்காட்சி நல்குக,என வேண்டினார். வாய்மூர் உறையும் இறைவர் ஞானசம்பந்தருக்கு மட்டும் தமது ஆடல்காட்சியைக் காட்ட பிள்ளையார் 'தளிரிள வளரென' எனத் திருப்பதிகம் பாடிப் போற்றி அக்காட்சியை அப்பருக்கும் காட்டியருளினார். பின்னர் அப்பரும் அவ்வருட் காட்சியைக் கண்டு பதிகம் பாடிப் போற்றினார். இருவரும் வாய்மூரில் சில நாள் தங்கி மகிழ்ந்து மீண்டும் திருமறைக்காடு சென்று தத்தம் திருமடங்களில் இனிதுறைவாராயினர்.

மதுரைப் பயணம்:

அக்காலத்தில் பாண்டிநாடு சமண் சமய இருளில் மூழ்கியிருந்தது. ஆனைமலை முதலிய மலைகளைத் தம் இருப்பிடங்களாகக் கொண்ட சமண சமயிகள் தங்கள் சமயத்தைப் பரப்புவதுடன் சைவ சமயத்தை இகழ்ந்தும் பழித்தும் வந்தனர். அக்காலத்தில் அரசு புரிந்த கூன்பாண்டியன் சமண சமயத்தைச் சார்ந்து ஒழுகிய காரணத்தால் மக்களும் அச்சமயம் சார்ந்து ஒழுகத்தலைப்பட்டனர். சிவாலயங்கள் சமண் பாழிகளாகவும் பள்ளிகளாகவும் மாற்றப்பட்டும் வழிபாடு இன்றியும் இருந்தன. மன்னனின் மாதேவியார் மங்கையர்க்கரசியாரும்அமைச்சர் குலச்சிறையாரும் உறுதியாய்ச் சிவநெறி கடைப்பிடித்து வாழ்ந்து வந்தனர். இந்நிலையில் இறையருள் பெற்ற ஞானசம்பந்தரின் பெருமைகளைக் கேள்வியுற்ற அரசியாரும் அமைச்சரும் அவர் திருமறைக்காட்டுக்கு எழுந்தருளியிருப்பதை அறிந்து தம் பரிசனங்களை அனுப்பி வணங்கி தம் நாட்டு நிலையைத் தெரிவித்து வருமாறு செய்தனர்.

பாண்டி நாட்டிலிருந்து திருமறைக்காடு வந்த பரிசனங்கள் ஞானசம்பந்தரை வணங்கித் தங்கள் நாட்டின் நிலையை எடுத்துரைத்தனர். உடன் இருந்த அடியவர்கள் ஞானசம்பந்தரிடம் பாண்டி நாட்டுக்கு எழுந்தருள வேண்டுமெனத் தெரிவித்துக் கொண்டார்கள். ஞானசம்பந்தரும் அப்பரும் மறைக்காட்டீசன் திருக்கோயில் சென்று வணங்கினர். ஞானசம்பந்தர் மதுரைக்குச் செல்லும் தம் வேட்கையை அப்பரிடம் தெரிவித்தார். அதனை அறிந்த அப்பர் ஞானசம்பந்தரை நோக்கிப் 'பிள்ளாய் அமணர் செய்யும் வஞ்சனைக் கோர் அளவில்லை என்பதை நான் உணர்ந்தவன். மேலும் இன்று நாளும் கோளும் நன்றாக இல்லை. இதுபோது பாண்டிநாடு செல்வது கூடாது?' எனத்தடுத்தார். ஞானசம்பந்தர் அப்பரை நோக்கி 'நாம் போற்றுவது நம்

Koviloor Digital Library

பெருமானுடைய திருவடிகளை. ஆதலால் நம்பால் எத்தகைய தீங்கும் வாராது' எனக் கூறியதோடு, நாள் கோள்களின் குற்றங்கள் நீங்க 'வேயுறு தோளிபங்கன்' என்னும் திருப்பதிகம் பாடி, மதுரைப் பயணத்தை மேற்கொண்டார். தம்மோடு உடன் வரமுற்பட்ட அப்பரடி களைத் தடுத்து நிறுத்திச் சோழ நாட்டில் இறைவனைத் தொழுது இருப்பீர்களாக எனக் கூறித் தமது மதுரைப் பயணத்தைத் தொடர்ந் தார்.

அமைச்சர் வரவேற்பு:

திருஞானசம்பந்தர் திருமறைக் காட்டிலிருந்து அடியவர் புடைசூழச் சிவிகையில் ஏறிப் புறப்பட்டு அகத்தியான்பள்ளி, கோடிக் குழகர் முதலிய தலங்களை வணங்கிக் கொண்டு தென் மேற்றிசை நோக்கிச் சென்று திருக் கொடுங்குன்றம் பணிந்து மதுரையின் எல்லையை அடைந்தார், மங்கையர்க்கரசியார் ஞானசம்பந்தர் வருகையை அறிந்து ஊர் எல்லையில் வரவேற்குமாறு குலச்சிறை யாரை அனுப்பியிருந்தார். மதுரை எல்லையை அடைந்த ஞானசம்பந் தரைக் குலச்சிறையார் வணங்கி வரவேற்றார். பிள்ளையார் சிவிகை யிலிருந்து இறங்கி 'அரசியார்க்கும் அமைச்சர்க்கும் திருவருளால் நன்மைகள் விளைக' என வாழ்த்தினார். குலச்சிறையார் 'இன்று தாங்கள் எழுந்தருளப் பெற்ற பேற்றினால் என்றைக்கும் திருவருள் உடையோம். இனி எங்கள் நாட்டில் திருநீற்றொளி விளங்குவது உறுதி' என முகமனுரை கூறி, மங்கையர்க்கரசியார் ஞானசம்பந்தரை வரவேற்கத் தன்னை அனுப்பியுள்ளதைத் தெரிவித்தார். மேலும் மதுரை மிக அண்மையிலுள்ளது என்றும் கூறினார்.

ஞானசம்பந்தர் மதுரையை நெருங்கிய நிலையில் 'மதுரை இன்னும் எவ்வளவு தூரம் உள்ளது' எனக் கேட்க அடியவர்கள் கோபுரத்துடன் திருக்கோயிலைச் சுட்டிக்காட்டி 'அதுவே திருவால வாய்' எனக் கூறக்கேட்டு 'மங்கையர்க்கரசியார் குலச்சிறையார் ஆகியோரின் பக்தி நலத்தைப் புகழ்ந்து திருப்பதிகம் அருளிச் செய்து கொண்டே ஆலவாய்த் திருக்கோயிலை அடைந்து குலச்சிறை யாருடன் வலங்கொண்டு பணிந்து 'நீலமாமிடற்று' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடிப் போற்றினார்.

மங்கையர்க்கரசியார் சந்திப்பு:

ஆலவாய் இறைவர் திருக்கோயிலை வழிபட வந்த மங்கை யர்க்கரசியார் வழிபாடு முடித்துக் கோயில் முன்றிலில் திருஞான

Koviloor Digital Library

சம்பந்தரைக் கண்டு அவர் திருவடித் தாமரைகளில் வீழ்ந்து பணிந்தார். பிள்ளையார் எழுதரிய மலர்க்கரங்களால் அவரை எடுத்தார். 'யானும் என் நாயகனும் செய்த தவப்பயனால் தங்களைத் தரிசிக்கும் பேறு பெற்றேன்' எனக் கூற ஞானசம்பந்தர் 'புறச் சமயச் சூழலுள்ளும் சிவ னடித் தொண்டினை மறவாது போற்றும் உம்மைக் காணும் பொருட்டே இங்குவந்தோம்' எனக்கூறி அவருக்கு விடைகொடுத்து அனுப்பித் திருக்கோயில் புறத்தணைந்து குலச்சிறையார் காட்டிய திருமடம் ஒன் றில் அடியவர்களோடு எழுந்தருளியிருந்தார். அரச மாதேவியாரின் கட்டளைப்படி குலச்சிறையார் அடியார்களுக்கு நல்விருந்தளித்து உபசரித்தார்.

திருமடத்திற்குத் தீ வைத்தல்:

பகற்பொழுது கழிந்து இரவு வந்தது. ஞானசம்பந்தரோடு உடன் வந்த அடியவர் அந்தணர் முதலானோர் வருகையை அறிந்த சமணர் கண்டு முட்டு ஆயினர். மன்னனிடம் சென்று முறையிட்டனர். தாங்கள் அறிந்த மந்திரத்தால் ஞானசம்பந்தர் தூங்குகின்ற மடத்திற்குத் தீவைக்க அநுமதி பெற்றனர்.

சமணர் அனலை ஏவிய மந்திரம் ஞானசம்பந்தரின் அடியவர் ஓதும் ஐந்தெழுத்துக்கு முன்னால் பலிதம் ஆகவில்லை. அதை அறிந்த சமணர்கள் ஞானசம்பந்தர் திருமடத்திற்குத் தீ வைத்தனர். ஒருபகுதி தீப்பற்றி எரிந்தது. அடியவர்கள் சமணர்களின் வஞ்சனையை அறிந்து ஞானசம்பந்தரிடம் தெரிவித்தனர். 'இத்தீ அரசன் முறை செய்யாமை யால் நேர்ந்ததாகும், ஆதலால் இத்தீ அவனைச் சென்று பற்றுதலே முறையாயினும் மங்கையர்க்கரசியாரின் மங்கல நாணுக்கு ஊறு நேராதவாறு பையச் சென்று பாண்டியனைப் பற்றுவதாகுக' என்று கூறி 'செய்யனே திரு' என்று பதிகம் ஓதி தீயை ஏவினார்.

பொழுது விடிந்தது. ஞானசம்பந்தர் திருமடத்தில் சமணர்கள் தீவைத்த செய்தி மதுரை மாநகர் முழுதும் பரவியது. அதனைக் கேள்வியுற்ற மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் மிகவும் மன நடுக்கம் உற்றனர். இக்கொடியோர் வாழும் நாட்டில் ஞானசம்பந்தரை வரவழைத்த குற்றத்துக்கு நாம் இறப்பதே சரியான தண்டனை என்று எண்ணினர். திருமடத்திலிடப்பட்ட தீயால் யாருக்கும் எந்தத் தீங்கும் ஏற்படாமை கருதி ஆறுதல் உற்றனர். இந்நிலையில் பாண்டி மன்னனை வெப்பு நோய் பற்றி வருத்தியதறிந்து உளம் நடுங்கி மன்னனை அடைந்தார்கள். மருத்துவர்களாலும் சமண முனிவர்களாலும் நோயைக் குணப்படுத்த இயலவில்லை.. இந்நிலையில் குலச்சிறையார்

Koviloor Digital Library

அரசனை அணுகி 'ஞானசம்பந்தர் திருமடத்துக்குச் சமணர்கள் இட்ட தீயே நோயாகி வந்துள்ளது. அவர் வந்தால் நோய் தீரலாம்' என்றார். மன்னன் ஞானசம்பந்தர் என்ற நாம மந்திரத்தைக் கேட்ட அளவில் அயர்வு நீங்கியதை உணர்ந்து 'அவரை அழைப்பீராக' என்று கூறினான். சமணர்கள் அரசனிடம் இந்நோய் ஞானசம்பந்தரால் தீர்க்கப் பெற்றாலும் தங்களாலேயே தணிந்தது எனப் பொய்யுரைக்க வேண்டினர். மன்னன் நடுநிலை பிறழேன் என மறுத்தான். குலச்சிறையாரும் அரசியாரும் ஞானசம்பந்தரைச் சென்று தரிசித்துத் திருமடத்திற்குத் தீயிட்ட செயலுக்கு மிக வருந்தியவர்களாய் மன்னன் வெப்பு நோயால் வாடுவதை விண்ணப்பித்துத் 'தாங்கள் எழுந்தருளி நோயைக் குணப்படுத்தினால் உய்வோம்' எனக் கூறி நின்றனர். ஞானசம்பந்தர் சமணர்களோடு செய்யும் வாதில் வென்று 'தென்னர் கோனுக்குத் திருநீறு அணிவிப்போம்' எனக் கூறிப் புறப்பட்டுத் திருக்கோயிலை அடைந்து 'காட்டு மாவது உரித்து' என்ற திருப்பதிகத்தால் போற்றி இறைவன் திருவுளக் குறிப்பை அறிந்தார். மேலும் சமணர் மேற்கொள்ளும் வாதங்களிலும் வெற்றி நல்க 'வேத வேள்வியை' என்ற திருப்பதிகம் பாடி இறைவனிடம் விடை பெற்று வெளிவந்து சிவிகையில் ஏறி மன்னனின் மாளிகையை அடைந்தார்.

வெப்பு நோய் தவிர்த்தல்:

ஞானசம்பந்தர் பாண்டியன் அரண்மனையை அடைந்து மன்னன் அருகில் இடப்பெற்ற பொற்றவிசில் எழுந்தருளினார். மன்னன் ஞானசம்பந்தரைத் தரிசித்த அளவில் நோய் சிறிது தணியப் பெற்றவனாய் அவரோடு உரையாடும் முறையில் 'நுமது ஊர் எது' எனக் கேட்கப் 'பிரமனூர்' என்ற திருப்பதிகத்தால் விடையளித்தார்.

சமணர்கள் அச்சமுற்றார்கள். ஆயினும் அதனை மறைத்துக் கொண்டு சம்பந்தரை நோக்கி 'உங்கள் சமயக் கொள்கைகளைக் கூறுங்கள்' எனக்கூறினர். அரசியார் கொடிய சமணர்கள் நடுவில் இப் பாலகரை நாம் அழைத்தது தவறோ என வருந்திச் சமணர்களை நோக்கி 'மன்னனின் நோயை முதலில் தணிக்க முயலுங்கள். நோய் தணிந்த பிறகு வாது செய்யலாம்' என்றார். ஞானசம்பந்தர் அரசமாதேவியாரைப் பார்த்து 'அஞ்சற்க; என்னைப் பாலகன் எனக் கருத வேண்டா; ஆலவாயரன் துணைநிற்க வாதில் வெல்வோம்' என்றார். சமணர்கள் மன்னன் உடலில் இடப்பாகம் பற்றிய நோயை நாங்கள் குணப்படுத்துகிறோம் என்று பீலி கொண்டு உடலைத் தடவிய அளவில் நோய் மேலும் கூடியது. ஞானசம்பந்தர் 'மந்திரமாவது நீறு' என்ற திருப்பதிகம் பாடி, தம் திருக்கரத்தால் வலப்பாகத்தில் திரு

Koviloor Digital Library

நீற்றைத் தடவிய அளவில் நோய் தணிந்து இடப்பாகத்தே மூண்டெழக் கண்ட மன்னன் அப் பாகத்தையும் தாங்களே தீர்த்தருள வேண்டுமென வேண்டினான். ஞானசம்பந்தர் இடப்பாகத்திலும் திருநீறு பூசிய அளவில் நோய் தணிந்தது. மன்னன் எழுந்து ஞானசம்பந்தரைப் பணிந்து 'யான் உய்ந்தேன்' என்று போற்றினான்.

அனல் வாதம்:

பாண்டியனது வெப்பு நோயைப் போக்க இயலாத சமணர்கள் தருக்க வாதம் புரிவதை விடுத்துத் தீயிலும் நீரிலும் அவரை வெல்ல லாம் என்று எண்ணினார்கள். திருஞானசம்பந்தர் 'இனி உங்கள் வாய்மையைக் கூறுங்கள்' என்றார். சமணர்கள் 'இருதிறத்தாரும் தாங்கள் கண்ட பேருண்மையை ஏட்டில் எழுதி நெருப்பில் இட்டால் வேகாத ஏடு எவருடையதோ அவர்கள் சமயமே மெய்ச்சமயம் எனக் கொள்வோம்' என்றனர். ஞானசம்பந்தரும் அதற்கிசைந்தார். பாண்டியன் தீக்குண்டம் அமைக்கக் கட்டளையிட்டான்.

ஞானசம்பந்தர் தாம் அருளிய திருப்பதிகச் சுவடியைக் கொணரச் செய்து வழிபட்டு அதனை விரித்தருளினார். 'போகமார்த்த பூண்முலையாள்' என்ற திருநள்ளாற்றுத் திருப்பதிகம் உதயமாயிற்று. ஞானசம்பந்தர் நள்ளாற்றிறைவனைப் போற்றி அவ் ஏட்டினை எடுத்து அத்திருப்பதிகம் அனலிடை வேகாதிருக்க வேண்டி 'தளிரிள வள ரொளி' என்றதொரு திருப்பதிகம் அருளி எடுத்த ஏட்டினைத் தீயில் இட்டார். அவ்வேடு தீயில் எரியாது பச்சென்றிருந்தது. சமணர்கள் தங்கள் நூற் பொருள் எழுதப் பெற்றதொரு ஏட்டினைத் தீயில் இட்டனர். அது எரிந்து கரிந்து சாம்பலாயிற்று. ஞானசம்பந்தர் குறித்த நேரம் வரை காத்திருந்து தான் இட்ட ஏட்டை யாவரும் காண எடுத்தருளினார். அது முன்னையினும் பச்சென்றிருந்த காரணத்தால் பச்சைத் திருப்பதிகம் எனப் போற்றப்பெறுவதாயிற்று.

புனல்வாதம்:

சமணர்கள் தங்கள் ஏடு எரிந்து சாம்பலானதைக் கண்டு மன்னனை நோக்கி 'ஓர் வாதினை மும்முறை செய்து உண்மை காணுதலே முறையாகும். ஆதலால் இருதிறத்தாரும் தத்தம் சமய உண்மைகள் எழுதிய ஏட்டினை ஆற்றில் இடும்போது எவருடைய ஏடு எதிரேறிச் செல்கின்றதோ அவர்கள் சமயமே மெய்ச்சமயம் எனக் கொள்ளலாம்' என்றனர். அப்பொழுது அமைச்சர் குலச்சிறையார் இதிலும் தோற்றவர்களுக்கு ஏற்படும் இழப்பு யாது எனக் கேட்டார்.

Koviloor Digital Library

சமணர்கள் இவ்வாதில் தோல்வியுற்றோமானால் எங்களை இவ் வேந்தன் கழுவேற்றி முறை செய்யலாம் என்றனர். மன்னனும் உடன் பட்டான்.

ஞானசம்பந்தரும் சமண முனிவர்களும் வைகையாற்றின் கரையை அடைந்தனர் முதலில் சமணர்கள் தங்கள் சமய உண்மை யாகக் கூறும் 'அஸ்தி நாஸ்தி' என்ற வசனத்தை எழுதி ஆற்றிலிட்டனர். அம்மொழி ஆற்று நீரோட்டத்தை எதிர்க்கும் ஆற்றலின்றி நீர் ஓடும் நெறியிலேயே விரைந்தோடிற்று. அதனைக் கண்ட சமணர்கள் நீவிரும் உமது சமய உண்மையை எழுதி நீரில் இடுக எனக்கூறினர். ஞான சம்பந்தர், திருப்பாசுரம் எனப்படும் 'வாழ்க அந்தணர்' என்னும் திருப்பதிகத்தை அருளிச் செய்து, அதனை ஏட்டில் எழுதச் செய்து அவ் ஏட்டை ஆற்றில் இட்டருளினார். ஏடு வைகை ஆற்று வெள்ளத்தைக் கிழித்து எதிர் ஏறிச் சென்றது.

அத்திருப்பதிகப் பாடலில் 'வேந்தனும் ஓங்குக' என ஞான சம்பந்தர் அருளிச் செய்ததால் பாண்டியன் கூன் நிமிர்ந்து நின்றசீர் நெடு மாறன் ஆயினான். குலச்சிறையார் குதிரையின் மீது ஏறி ஏட்டினைத் தொடர்ந்து சென்றார். ஏடு எதிரேறிச் செல்வதைக் கண்ட பிள்ளையார் 'வன்னியும் மத்தமும்' என்ற திருப்பதிகத்தை அருளிச் செய்தார். அவ் வேடு வைகையின் வடகரையிலமைந்த ஒரு கோயிலுக்கு அருகே சென்று நின்றது. ஏடு நின்ற கோயில் ஏடகம் எனப் பெற்றது. குலச் சிறையார் அதனை எடுத்து வந்து ஞானசம்பந்தரிடம் சேர்ப்பித்தார். அனைவரும் கண்டு அதிசயித்து மகிழ்ந்தனர்.

சமணர்கள் தாங்கள் செய்த சபதத்தின்படிக் கழுவேறினர். ஞானசம்பந்தர் பாண்டியமன்னனுடன் ஆலவாய் இறைவர் திருக் கோயில் சென்று 'வீடலால வாயிலாய்' என்ற திருப்பதிகம் பாடி வழிபட்டுத் தம் திருமடத்துக்கு எழுந்தருளினார்.

பாண்டித் தலங்களைத் தரிசித்தல்:

ஞானசம்பந்தர் மதுரையில் தங்கியிருக்கும் நாளில் அவரைக் காண விரும்பிய சிவபாத இருதயர் மதுரை வந்தார். அப்பொழுது ஞானசம்பந்தர் அவரைப் பார்த்து அருந்தவத்தீர் குழந்தைப் பருவத்தில் எனக்குப் பொற்கிண்ணத்தில் பாலளித்து அருள் புரிந்த தோணிபுரப்பெருந்தகை எம்பெருமாட்டியோடு இனிதாக இருந்ததே? என நலம் உசாவும் முறையில் 'மண்ணில் நல்ல வண்ணம்' என்ற திருப்பதிகத்தை அருளிச் செய்தார். பாண்டியனும் மங்கையர்க்கரசி

Koviloor Digital Library

யாரும் குலச்சிறையாரும் உடன் வர திருப்புத்தூர், கானப்பேர், சுழியல், குற்றாலம், நெல்வேலி முதலிய தலங்களை வழிபட்டு இராமேச்சுரம் சென்றடைந்தார். திருமால் இராமாவதாரத்தில் தாபித்து வழிபட்ட இராமநாதரைத் தரிசித்து அங்கிருந்தபடியே ஈழத்தலங்களாகிய திருக்கேதீச்சரம், திருக்கோணமலை ஆகிய தலங்களை நினைந்து போற்றினார்.

சோழ நாடு மீளல்:

இராமேச்சுரத்திலிருந்து ஆடானை, புனல்வாயில், மணமேற் குடி ஆகியவற்றை வழிபட்டுப் பாண்டிய மன்னன் அரசியார் அமைச்சர் முதலானோர்க்கு விடை கொடுத்து அனுப்பிவிட்டுச் சோழநாடு புகுந்து பாதாளீச்சரம், திருக்களர் முதலான தலங்களை வழிபட்டுக் கொண்டு திருக்கொள்ளம்பூதூர் வந்தடைந்தார்.

ஓடம் உய்த்தது:

கொள்ளம்பூதூர் எல்லையில் முள்ளியாறு வெள்ளத்தால் நிறைந்து காணப்பட்டது. மறுகரைக்கு ஏற்றிச் செல்லும் ஓடம் செலுத்துவோர் வெள்ளமிகுதி கண்டு ஓடத்தைக் கரையில் கட்டி விட்டுப் போயிருந்தனர். ஞானசம்பந்தர் ஓர் ஓடத்தை அவிழ்க்கச் செய்து அடியவர்களுடன் தானும் ஏறிக் கொள்ளம்பூதூர் இறைவனைப் போற்றிக் 'கொட்டமே கமழும்' என்ற திருப்பதிகத்தை அருளிச் செய்தார். ஓடம் தானே மறுகரைக்கு ஞானசம்பந்தரை அழைத்துச் சென்றது. ஞானசம்பந்தர் கொள்ளம்பூதூர் ஆலயத்தை அடைந்து எடுத்த திருப்பதிகத்தின் எஞ்சிய பாடல்களால் இறைவனைப் பரவினார். திருநள்ளாறு அடைந்து மதுரை மாநகருக்கு வந்து அனல் வாதத்தில் வெற்றியருளிய நள்ளாற்றிறைவன் மீது 'பாடகமெல்லடி' என்ற பதிகத்தால் போற்றித் தன் பயணத்தைத் தொடர்ந்தார்.

புத்தரை வாதில் வென்றது:

திருத்தெளிச்சேரியை அடைந்து வழிபட்டுப் போதி மங்கை அருகே ஞானசம்பந்தர் வரும்போது, அவரது முத்துச்சின்னம், காளம், 'பரசமயகோளரி வந்தான் பாலறாவாயன் வந்தான்' என முழங்கிய ஓசை கேட்ட புத்த நந்தி, தேரர் குழாத்துடன் வந்து தங்களோடு வாதிட அழைத்தான். ஞானசம்பந்தருடன் வந்த அடியவர் ஒருவர் அவர் அருளிய தேவாரங்களில் 'புத்தர் சமண்கழுக் கையர்' என்ற பாடலைப் பாடி 'புத்தன் தலை இடி வீழ்ந்து உருளுக' என உரைத்த அளவில் புத்த

Koviloor Digital Library

நந்தியின் மேல் இடி வீழ்ந்தது. உடன் தேரர்கள் அஞ்சி அகன்றனர். சாரி புத்தன் என்பான் தர்க்க வாதம்புரியுமாறு ஞானசம்பந்தரை அழைத்த போது அந்த அடியவரைக் கொண்டே வாதிடச் செய்து வெற்றி கண்டார். புத்தர்கள் தங்கள் பிழை உணர்ந்து ஞானசம்பந்தரை வணங்கிச் சைவரானார்கள். பின்னர்த் திருக்கடவூர் சென்று வழிபட்டு அப்பர் எங்குள்ளார் எனக் கேட்டு அவர் திருப்பூந்துருத்தியில் இருக்கும் செய்தி அறிந்து அவரைக் காணத் திருப்பூந்துருத்தி வந்து அடைந்தார்.

அப்பரைக் கண்டு மகிழ்தல்:

ஞானசம்பந்தர் வருகையை அறிந்த அப்பர், திருப்பூந்துருத்தி எல்லைக்குமுன் சென்று அடியவர் கூட்டத்தினரோடு அவர் ஏறி வரும் சிவிகையைத் தானும் ஒருவராய்ச் சுமந்து வருவாராயினார்.

திருஞானசம்பந்தர் திருப்பூந்துருத்தி எல்லையை அடைந்த போது அப்பர் வரவைக் காணாது 'அப்பர் எங்குற்றார்?' என அடியவர் களை வினாவினார். அவ்வுரை கேட்ட அப்பர் 'உம் அடியேன் உம் அடிகள் தாங்கி வரும் பெரு வாழ்வு வந்து எய்தப் பெற்று இங்குற்றேன்' என்றார். ஞானசம்பந்தர் விரைந்து சிவிகையினின் றிறங்கி 'இவ்வாறு செய்தருள்வது தகுமா?' எனக் கூறி அப்பரை வணங்கினார். அப்பரும் உடன் வணங்கினார். பின்னர் இருவரும் ஆலயம் சென்று இறைவனை வணங்கினர். ஞானசம்பந்தர் அப்பர் திருமடத்தில் அவரோடு உடன் உறைந்து பாண்டி நாட்டில் நடந்தவைகளை விவரித்தார். அப்பர் 'திருநெறித் தொண்டெனும் வான்பயிர் தழைக்கச்சூழும் பெருவேலி ஆயினீர்' எனப் போற்றினார். பாண்டி நாட்டில் சைவம் தழைக்கத் தொடங்கியதை அறிந்த அப்பர்அந்நாடுசெல்லும் விருப்புடையவ ரானார். அப்பர் தொண்டை நாட்டின் சிறப்பைக் கூறக்கேட்ட ஞான சம்பந்தர் தொண்டை நாடு செல்லும் விருப்புடையரானார். இருவரும் ஒருவரையொருவர் பிரிந்து யாத்திரை மேற்கொண்டனர்.

ஞானசம்பந்தர் காவிரி வடகரையை அடைந்து நெய்த்தானம் ஐயாறு பழனம் முதலிய தலங்களை வணங்கி, சீகாழிப் பதியை அடைந்து தோணிபுரப் பெருமானைப் போற்றித் தம் திருமாளிகையை அடைந்தார்.

தொண்டைநாட்டுத் தல யாத்திரை:

ஞானசம்பந்தர் கச்சித்திருஏகம்பப் பெருமானை வழிபடும்

Koviloor Digital Library

கருத்தினராய்ச் சீகாழியிலிருந்து புறப்பட்டுத் தில்லை சென்று ஆனந்தக் கூத்தனைப் பணிந்து மாணிகுழி, பாதிரிப் புலியூர், வடுகூர், வக்கரை இரும்பை மாகாளம் முதலிய தலங்களை வணங்கித் திருவதிகை வீரட்டம் தொழுது போற்றிக் கோவலூர் அறையணி நல்லூர் ஆகிய தலங்களை வணங்கி அண்ணாமலை சென்றடைந்தார். உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவனை வணங்கிப் பதிகங்கள் பாடி திருஓத்தூர் அடைந்து இறைவனைப் போற்றினார். சிவனடியார் ஒருவர் அடியவர்க்கெனத் தான் வளர்த்த பனைகள் அனைத்தும் ஆண்பனைகளாக இருத்தலையும் சமணர்கள் சிலர் சிவனருளால் காய்க்க வைக்க முடியுமா? என ஏளனமாகக் கேட்டதையும் ஞான சம்பந்தரிடம் கூற அவர் ஆலயம் சென்று வணங்கி, 'பூத்தேர்ந்தாயன' என்னும் பதிகம் பாடிய அளவில் ஆண்பனைகளனைத்தும் பெண் பனைகளாய்க் குலையீன்றன. அடியவர் அதிசயித்தனர். சமணர்கள் பிழைபொறுக்க வேண்டியதோடு சைவ சமயத்தின் சிறப்பினை அறிந்து சைவ சமயத்திற்கு மதம் மாறி ஞானசம்பந்தரைப் போற்றினர்.

திருவோத்தூரிலிருந்து புறப்பட்டு ஞானசம்பந்தர் திருமாகறல் குரங்கணில் முட்டம் ஆகிய தலங்களை வணங்கிக் காஞ்சிபுரம் சென்றடைந்தார். கச்சி ஏகம்பம் , காம கோட்டம் ஆகிய ஆலயங்களை வணங்கிக் கொண்டு அத்தலத்தின் அருகில் விளங்கும், ஆலயங் களைப் போற்றிக் காரைக்காலம்மையார் முத்திப் பேறு பெற்றருளிய திருவாலங்காட்டை வணங்கிப் போற்ற எண்ணினார். அம்மையார் தலையால் நடந்து வந்த அத்தலத்தை மிதித்தற்கு அஞ்சி அத்தலத்தின் அருகில் உள்ளதொரு ஊரில் அன்றிரவு துயில் கொண்டார். ஆலங் காட்டு இறைவர் அவர் கனவில் தோன்றி நம்மைப் பாடுதற்கு மறந்தனையோ என்ன உடனெழுந்து 'துஞ்சவருவாரும்' எனத் தொடங்கித் திருப்பதிகம் பாடிப் போற்றினார். பின்னர் அவ்வூரை விட்டகன்று பாசூர் வெண்பாக்கம் காரிகரை ஆகிய தலங்களை வணங்கிக் கொண்டு காளத்தியை அடைந்தார். கண்ணப்பரின் பக்தித் திறம் போற்றிக் காளத்தி இறைவரைப் பணிந்து அங்குள்ள திருமடம் ஒன்றில் பலநாள் தங்கிப் பரவினார். அங்கிருந்தே வடதிசையிலுள்ள கயிலாயம், கேதாரம், திருப்பருப்பதம் முதலிய தலங்களைப் போற்றிப் பதிகங்கள் அருளினார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு திருவேற்காடு பணிந்து திருவொற்றியூரை வந்தடைந்தார்.

எலும்பைப் பெண்ணாக்கியது:

மயிலாப்பூரில் வணிகர் குலத்தில் எல்லையில் செல்வம் உடையவராய் செம்மையே புரிமனத்தினராய் வணிகர் குலத்தில்

Koviloor Digital Library

சிவநேசன் என்னும் அடியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் சைவ சமயமே மெய்மைச் சமயம் என்பதையும், அறிந்த பெரியவர். அவர் ஞானசம்பந்தரது பெருமைகளைக் கேள்வியுற்று அவர்பால் எல்லையில்லாத பேரன்புடையராயினார். அவருக்கு ஒரு பெண் மகவு இருந்தாள். அழகிற் சிறந்த அப்பெண்ணுக்குப் பூம்பாவை எனப் பெயரிட்டார். அப்பெண்ணும் மணப்பருவம் எய்திய நிலையில் இருந்தாள்.

ஞானசம்பந்தர் மதுரை சென்று பரசமயம் நிராகரித்துப் பாண்டி நாட்டில் சைவ சமயத்தை நிலைநிறுத்தி வந்த செய்தி கேட்டு 'என்னையும், என்மகளையும் என் செல்வத்தையும் அவருக்கே உடமையாக்கினேன்?' என மொழிந்தார். இந்நிலையில் ஞானசம்பந்தருக்கு உரியள் என, சிவநேசர் மொழிந்திருந்த பூம்பாவை பூஞ்சோலையில் மலர் பறிக்கச் சென்றபோது அரவு தீண்டி இறந்தாள். சிவநேசர் மிகவும் வருந்தியவராய் அப்பெண்ணை உயிருடன் ஒப்புவிக்கும் புண்ணியம் அமையவில்லை. ஆயினும் அவள் உடலைத் தகனம் செய்து, எலும்பையும் சாம்பலையும் ஒரு மட்குடத்திலிட்டு, அதையேனும் ஒப்புவிப்போம் என்று பேணிவந்தார்.

ஞானசம்பந்தர் திருவொற்றியூர் வழிபாடு முடித்து மயிலாப்பூருக்கு எழுந்தருளும் செய்தி கேட்டு வரவேற்க எதிரே வந்தார். ஞானசம்பந்தரைக் கண்டு வணங்கிய அளவில் உட்ன் வந்த அடியார்கள் அவரை அறிமுகம் செய்ததோடு அவள் மகள் இறந்த செய்தியையும் அவரிடம் கூறினர்.

ஞானசம்பந்தர் மயிலாப்பூருக்கு எழுந்தருளி வழிபாடாற்றிப் புறத்தே போந்தவர் சிவநேசரை அழைத்து அவர் மகளின் என்பு நிறைந்த குடத்தினை எடுத்து வரச் செய்து அக்குடத்தை இறைவன் திருமுன்னே வைக்கச் செய்து 'மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல் என்பது உண்மையாயின் உலகவர் முன் இப்பூம்பாவை உயிர் பெற்று எழுந்து வருவாளாக' எனக்கூறி இறைவனை வேண்டிப் பூம்பாவைத் திருப்பதிகமாகிய 'மட்டிட்ட புன்னை' எனத் திருப்பதிகம் தொடங்கிப் பத்தாவது பாடல் பாடிய அளவில் செந்தாமரையில் வீற்றிருக்கும் திருமகள் போல அப்பெண் உலகவர் வியக்க உயிர் பெற்றுக் குடம் உடைய வெளிப்பட்டு ஞானசம்பந்தரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினாள். ஞானசம்பந்தர் திருப்பதிகத்தின் பதினொன்றாவது பாடலைப் பாடி நிறைவு செய்தார். சிவநேசர் ஞானசம்பந்தரை வணங்கித் திருவருளைப் போற்றினார். தன் திருமகளைத் திருமணம் புரிந்து ஏற்றருள வேண்டுமென வேண்டினார். ஞானசம்பந்தர் மறை

Koviloor Digital Library

நெறி மரபை அவருக்கு உணர்த்தியதோடு பூம்பாவையை யாம் மீண்டும் உயிர்ப்பித்தோம் ஆதலின் அவள் எமக்கு மகளாவாள் எனக்கூறிய அளவில் சிவநேசர் மனத் தெளிவுற்று அப்பெண்ணை வேறொருவர்க்கு மணம் முடிக்க மனமின்றிக் கன்னிமாடத்தே இருக்கச்செய்தார். பின்னர் பூம்பாவையும் சிவன் அருளையே சிந்தித்துச் சிவனடி கூடினார்.

பின்னர் ஞானசம்பந்தர் மயிலாப்பூரினின்றும் புறப்பட்டுத் திருவான்மியூர், இடைச்சுரம், திருக்கழுக்குன்றம் முதலான தலங்களை வணங்கிக் கொண்டு தில்லையை அடைந்து திருச்சிற்றம்பலம் உடையானைப் போற்றிச் சீகாழிக்கு எழுந்தருளிப் பிரமபுரத்துப் பெருமானைப் போற்றித் தம் திருமாளிகையை அடைந்தார். இது ஞானசம்பந்தரின் ஆறாவது தல யாத்திரையாகும்.

திருமணம்:

ஞானசம்பந்தரைக்காணும் பெருவேட்கையில் முருக நாயனாரும் நீலநக்க நாயனாரும் சீகாழி வந்தனர். சிவபாத இருதயரும் சுற்றத்தாரும் ஞானசம்பந்தர் புண்ணியப் பதினாறு ஆண்டு எய்திய நிலையினராய் இருத்தலை எண்ணி அவரை அணுகி மறை நெறிப்படி வேள்வி செய்ய ஒருகன்னியைத் திருமணம் புரிந்து கொள்ள வேண்டும் என வேண்டினர். ஞானசம்பந்தர் முதலில் மறுத்தார். ஆயினும் திருவருளை நினைந்து மறைவாழவும் அந்நெறியின் துறைவாழவும் திருமணத்திற்கு இசைவு தெரிவித்தார்.

சிவபாத இருதயர் திருநல்லூரில் வாழும் நம்பாண்டார் என்பாரின் மகளை மணம் பேசி நிச்சயித்தார். நல்லூர் மணவிழா வினால் பொலிவு பெற்றது. ஞானசம்பந்தர் உரிய நாளில் தோணிபுரத் தில் பெரிய நாயகியாருடன் வீற்றிருந்தருளும் பெருமானை வணங்கிச் சிவிகைமீது அமர்ந்து அடியவர்கள் உறவினர்கள் உடன் வரத் திருநல்லூரை அடைந்தார். அங்கு விளங்கும் பெருமணம் என்னும் கோயிலை அடைந்து சிவபிரானைப் பணிந்து போற்றினார். உறவினர் கள் வேண்டக் கோயிலின் பக்கத்தே அமைந்த திருமடத்தில் திரு மஞ்சனமாடித் திருமணக் கோலம் பூண்டு திருமணச் சாலைக்கு எழுந்தருளினார். நம்பாண்டார் நம்பியும் அவரது துணைவியாரும் அவரைப் பொற்பீடத்தில் இருத்தித் திருவடிகளைத் தூய நீரால் விளக்கி அந்நன்னீரை உட்கொண்டு அனைவர் மேலும் தெளித்து, ஞான சம்பந்தரை நோக்கி 'யான் பெற்ற அருநிதிப் பாவையை ஆளுடைய பிள்ளையார்க்கு அளித்தேன்' என உரைத்தார். மங்கல மகளிர் மணப்

Koviloor Digital Library

பெண்ணை அழைத்து வந்து ஞானசம்பந்தரின் வலப்பால் அமரச் செய்தனர். திருநீலநக்க நாயனார் வேத விதிப்படி திருமணச் சடங்குகளை நிகழ்த்தினார். ஞானசம்பந்தர் காதலியாரைக் கைப்பற்றித் தீவலம் வரும்போது 'விருப்புறும் அங்கியாவார் விடை உயர்த்தவரே' என்னும் நினைவினராய்' 'இருவினைக்கு வித்தாகிய இந்த இல்லறம் நம்மைச் சூழ்ந்து கொண்டதே இனி இவளோடும் அந்தமில் சிவன்தாளை அடைவோம்' என உறுதி கொண்டு திருப்பெருமணக் கோயிலை அடைந்தார். இறைவன் திருமுன் நின்று 'கல்லூர்ப் பெருமணம் வேண்டா' எனத் தொடங்கித் திருப்பதிகம் அருளிச் செய்தார். அப்போது சிவபெருமான் தூய சோதிப் பிழம்பாய்த் தோன்றி நின்று 'ஞானசம்பந்தனே நீயும் நின் மனைவியும் திருமணம் காணவந்தோரும் இச்சோதியினுள்ளே வந்து சேர்மின்' எனக்கூறி அதனுள்ளே புகுதற்கு வாயிலையும் காட்டி நின்றார். ஞானசம்பந்தர் 'இம்மண விழாக்காண வந்தோர் அனைவரும் இச் சோதியுட் புகுமின்' எனக் கூறி 'காதலாகி' எனத் தொடங்கும் நமச்சிவாயத் திருப்பதிகம் அருளி நின்றார். திருநீல நக்கர் முருக நாயனார் சிவபாத இருதயர் நம்பாண்டார் நம்பி திருநீலகண்டப் பெரும்பாணர் முதலானோர் தத்தம் துணைவியாருடன் சிவசோதியுட் புகுந்தார்கள். ஆளுடைய பிள்ளையாரைத் தொடர்ந்து வந்த அடியவர் பரிசனங்கள் அருந்தவ முனிவர்கள் முதலிய அனைவரும் சிவசோதியுட் புகுந்த பின் திருஞானசம்பந்தர் தம் காதலியாரைக் கைப்பிடித்து இறைவனது எழில்வளர் சோதியை வலம் வந்து அதனுள்ளே புகுந்து பெருமானோடு ஒன்றி உடனானார்.

''காதலியைக் கைப்பற்றிக் கொண்டுவலம் செய்தருளித்
தீதகற்ற வந்தருளும் திருஞான சம்பந்தர்
நாதனெழில் வளர்சோதி நண்ணியதன் உட்புகுவார்
போதநிலை முடிந்தவழிப் புக்கொன்றி உடனானார்.''

அச்சோதி மறைய பெருமணக்கோயில் முன்போலவே அமைந்தது. அனைவர்க்கும் சிவலோகம் வழங்கிய பெருமானை அன்பர்கள் சிவலோகத்தியாகர் எனப் போற்றினர்.

காலம்:

திருஞானசம்பந்தர் கி.பி. 7 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தமிழகத்தே வாழ்ந்த திருவருட்செல்வராவார் என்பது வரலாற்று ஆசிரியர்கள் ஒப்ப முடிந்த உண்மையாகும்.

Koviloor Digital Library

திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் சம காலத்தவர் என்பது அவர் தம் வரலாறுகளால் நன்கினிது விளங்கும். திருநாவுக்கரசர் காலத்தில் குணபரன் என்ற சிறப்புப் பெயரோடு வாழ்ந்த பல்லவன் மகேந்திர வர்மன் ஆவான். இவன் காலம் கி.பி. 600 முதல் 630 வரை ஆகும். திருஞானசம்பந்தர் காலத்தில் வாழ்ந்த நாயன்மார்களில் சிறுத் தொண்டர் என்னும் பரஞ்சோதியார் மகேந்திரவர்மனின் புதல்வனான நரசிம்ம வர்மப் பல்லவன் காலத்தில் படைத்தளபதியாயிருந்து சாளுக்கியரோடு வாதாபியில் நிகழ்த்திய போரில் வெற்றி கண்டவர். அதன் பின்னரே அவர் திருச்செங்காட்டங்குடி சென்று சிவனடித் தொண்டு பூண்டு அடியவராக விளங்கினார். நரசிம்மவர்மன் வாதாபிப் போர் நிகழ்த்திய காலம் கி.பி. 642 ஆகும்.

திருஞானசம்பந்தரால் வெப்புநோய் தவிர்த்தருளப் பெற்ற பாண்டிய மன்னன் நெடுமாறன் மாறவர்மன் அரிகேசரி என்ற பெயருடையவன். மங்கையர்க்கரசியாரின் மணாளனாக விளங்கிய இம்மன்னன் காலம் கி.பி. 640 - 670. இவற்றையெல்லாம் கருத்திற் கொண்டு எண்ணுங் கால் திருஞானசம்பந்தரின் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப்பகுதியேயாகும் என்பதை ஐயம் இன்றித் துணியலாம்.

திருஞானசம்பந்தர் துதி

பரசமய கோளரியைப் பாலறா வாயனைப்பூம்
பழனம் சூழ்ந்த
சிரபுரத்துத் திருஞான சம்பந்தப் பெருமானைத்
தேய மெல்லாம்
குரவையிடத் தமிழ்வேதம் விரித்தருளும் கவுணியர்கள்
குலதீ பத்தை
விரவிஎமை ஆளுடைய வென்றிமழ இளங்களிற்றை
விரும்பி வாழ்வாம்.

- சிவஞானமுனிவர்

Koviloor Digital Library

முதல் திருமுறை

அற்புதத் திருப்பதிகங்களும் பண்களும்

1. அற்புதத் திருப்பதிகங்கள்

எண்	அற்புதத் திருப்பதிகம்	பதிக எண்
1.	ஞானப்பால் உண்டது தோடுடைய செவியன்	1
2.	பொற்றாளம் பெற்றது மடையில் வாளை	23
3.	முயலகன் நோய் நீக்கியது துணிவளர் திங்கள்	44
4.	சுர நோய் நீக்கியது அவ்வினைக்கிவ்வினை	116
5.	மதுரை அனல்வாதம் போகமார்த்த பூண்முலையாள்	49
6.	ஆண்பனை பெண்பனையாக்கியது பூத்தேர்ந்தாயன	54
7.	படிக்காசு வாசி தீரப் பாடியது வாசிதீரவே	92

Koviloor Digital Library

2. பண்கள்

எண்	பண்கள்		பதிகங்கள்
1.	நட்டபாடை	1-22	22
2.	தக்கராகம்	23-46	24
3.	பழந்தக்கராகம்	47-62	16
4.	தக்கேசி	63-74	12
5.	குறிஞ்சி	75-103	29
6.	வியாழக்குறிஞ்சி	104-128	25
7.	மேகராகக் குறிஞ்சி	129-135	7
	யாழ்மூரி	136	1
			136

யாழ்மூரி எனப்பெறும் 'மாதர் மடப்பிடி' திருப்பதிகம் மேகராகக் குறிஞ்சிப் பண்ணைச் சேர்ந்தது என்றும், தனிப்பண் என்றும் இருவகையாகக் கூறப்பெறும்.

●●●●●●●●●●●●●

Koviloor Digital Library

முதல் திருமுறை
திருப்பதிகங்களின் சிறப்புப் பெயர்கள்

எண்	சிறப்புப் பெயர்	பதிக எண்
1.	திருவிராகம்	
	பிறையணி படர்	19
	தடநிலவிய	20
	புவம்வளி கனல்	21
	சிலைதனை நடு	22
	பணிந்தவர் அருவினை	120
	நடைமரு	121
	விரிதரு புவி	122
	பூவியல்புரி	123
	அலர்மகள்	124
	கலைமலி	125
2.	வினாவுரை	
	மைம்மரு பூங்	4
	அங்கமும் வேதமும்	6
	பாடக மெல்லடி	7
3.	பல்பெயர்ப் பத்து	
	எரியார் மழு	63

குறிப்பு: பல்லடைந்த பதி - 47, நூலடைந்த பதி -48, வெங்கணானை பதி - 51 ஆகியனவும் வினாவுரையாகக் கொள்ளத் தக்கன.

Koviloor Digital Library

எண்	சிறப்புப் பெயர்	பதிக எண்
4.	திருஇருக்குக்குறள்	
	அரனை உள்குவீர்	90
	சித்தந்தெளி	91
	வாசிதீரவே	92
	நின்றுமலர்	93
	நீலமாமிடற்	94
	தோடொர் காதினன்	95
	மன்னியூரிறை	96
5.	திருநீலகண்டம்	
	அவ்வினைக்கிவ்வினை	116
6.	மொழிமாற்று	
	காடதணிகலங்	117
7.	திருத்தாளச் சதி	
	பந்தத்தால்	126
8.	ஏகபாதம்	
	பிரமபுரத் துறை	127
9.	திரு எழுகூற்றிருக்கை	
	ஓருருவாயினை	128
10.	யாழ்மூரி	
	மாதர் மடப்பிடி	136

Koviloor Digital Library

முதல் திருமுறை

சிறப்புக் குறிப்புடைய திருப்பதிகங்கள்

		பதிக எண்
1.	அகப் பொருள் அமைதியில் தூது	60
2.	அனைத்துப் பதிகங்களையும் ஓதிய பயனைத் தருவது	128
3.	ஆண் பனையைப் பெண் பனையாக்கியது	54
4.	இடர் களையும் திருப்பதிகம்	52
5.	இம்மைப் பயன்கள் அனைத்தையும் நல்கும் பதிகங்கள்	21,93
6.	இறைவன் அருள் பெற அரற்றி யுரைப்பது	50
7.	காளத்தியிலிருந்து கயிலையைப் பாடியது	68
8.	சீகாழிப் பன்னிரு திருப்பெயர்	63
9.	திருச்செங்காட்டங்குடி திருவோலக்கத்தைத் திருமருகலில் கண்டது	6
10.	திருத்தோணிபுரக் காட்சியைத் திருவீழிமிழலையில் கண்டது	4

Koviloor Digital Library


		பதிக எண்
11.	திருநள்ளாறும், திருவாலவாயும்	7
12.	திருநாவுக்கரசர், முருக நாயனார், திருநீலநக்கர், சிறுத்தொண்டர் ஆகியோருடன் அளவளாவிப் புகழால் இறைவரைப் போற்றியது	2
13.	திருநீலகண்டத் திருப்பதிகம்	116
14.	திருப்பதிக இசை யாழில் அளவுபடாமையைத் தெரிவித்தது	136
15.	திருமுலைப்பால் உண்டது	1
16.	திருவண்ணாமலையைச் சேய்மையில் கண்டு பாடியது	69
17.	திருவதிகை வீரட்டானத்து நடன தரிசனம்	46
18.	திருவாலங்காட்டை அயர்த்த போது இறைவன் கனவில் உணர்த்தப் பாடியது	45
19.	திருவிடைமருதூரைப் பாடி அடைவது	32
20.	திருவேணுபுரத்தைச் சேய்மையில் கண்டு போற்றியது	9

Koviloor Digital Library

		பதிக எண்
21.	நாவே பாடுக	8
22.	நாட்டிய சதிக் குறிப்புக் கொண்டது	126
23.	நெஞ்சே நினைக	29
24.	நிலையாமை உணர்த்தி இறைவனை நினைப்பிப்பது	59
25.	நினைக்க வினை நீக்கும் பதிகம்	79
26.	பச்சைத் திருப்பதிகம்	49
27.	பொற்றாளம் பெற்றது	3
28.	மழை வளந்தரும் பதிகங்கள்	129 - 136
29.	முருகன் வழிபட்டதையும், சண்டேசுரர் வழிபட்டதையும் போற்றியது	48
30.	முயலகன் நோய் தீர்த்தது	44

Koviloor Digital Library

Koviloor Digital Library



திருஞானசம்பந்த சுவாமிகள்

Koviloor Digital Library

உ
திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்த சுவாமிகள்

அருளிச் செய்த

தேவாரத் திருப்பதிகங்கள்

முதல் திருமுறை

1. திருப்பிரமபுரம்

பதிக வரலாறு:

சோழ நாட்டிலே, சீகாழியிலே, தவம்பெருகும் கவுணிய குலத்தில், சிவதீக்ஷைபெற்ற வேதியர்குல திலகராகிய சிவபாத இருதயருக்கும் பகவதியம்மையாருக்கும் வேதநெறி தழைத் தோங்க, மிகுசைவத் துறைவிளங்க, சித்திரைமாதத்துத் திரு வாதிரைத் திருநாளிலே திருமகனார் ஒருவர் தோன்றினார். இவருக்கு மூன்றாமாண்டு நடக்கும்பொழுது ஒருநாள் சிவபாத இருதயர் சீகாழிக் கோயிலுள் இருக்கும் பிரமதீர்த்தத்தில் நீராடச் சென்றார். குழந்தையும் அழுது கொண்டே உடன் சென்றது. சிவபாத இருதயர் உடன் வந்த சிறுவரைக் குளக்கரையில் உட்கார வைத்து, நீருள்மூழ்கி 'அகமர்ஷணம்'[1] என்னும் திருமந்திரத்தைச்

[1] அகமர்ஷணம் என்பதற்குப் பாவத்தைப் போக்குதல் என்பது பொருள். நீருள் மூழ்கியிருந்து 'ஹ்ரண்யசிருங்கம்' என்று தொடங்கும் யஜுர் வேத மந்திரத்தை முழுவதுமாகவோ ,

''ருதஞ்ச சத்யஞ் சாபீத் தாத்தப ஸோத் யஜாயத;
ததோ ராத்ரி ரஜாயத ததஸ் சமுத்ரோ அர்ணவ:
ஸமுத்ரா தர்ணவாததி ஸம்வத்ஸரோ அஜாயத;
அஹோராத்ராணி விதத‌த் விச்வஸ்ய மிஷதோ வசீ;
சூர்யா சந்த்ர மஸௌ தாதா யதா பூர்வ மகல்பயத்;
திவஞ்ச ப்ருதிவிஞ் சாந்தரிக்ஷ மதோ ஸுவ:''

Koviloor Digital Library

செபித்துக் கொண்டிருந்தார். அங்ஙனம் அவர் மூழ்கியதும் உடல் தந்தையைக் காணாது சிறிதும் தனித்திரார் என்ற வியாசத்தால் முழுமுதல்தந்தையாகிய சிவபெருமானது திருவடிகளை முறைப் படி வழிபட்ட பண்டையுணர்வு மூண்டெழ, பிள்ளையார் திருத் தோணிச்சிகரம் பார்த்து, 'அம்மே! அப்பா!' என அழுதார். இவ்வொலி திருத்தோணி மலையில் வீற்றிருக்கும் அம்மை யப்பர் திருச்செவியில் சென்று சேர்ந்தது. முன்னிலைமைத் திருத் தொண்டு முன்னி, அவர்க்கருள் புரிவதற்காகப் பெருமான் பொருவிடைமேல் அம்மையுடன் எழுந்தருளினார். எவ்வுலகும் தொழநின்ற மலைக் கொடியைப் பார்த்து, 'துணை முலைகள் பொழிகின்ற பாலடிசில் பொன்வள்ளத்து ஊட்டுக' என ஆணை தந்தார். அப்படியே அம்மையாரும் கறந்தருளி, எண்ணரிய சிவ ஞானத்தின்னமுதம் குழைத்து 'உண்அடிசில்' என ஊட்டினார்; கண்ணீரைத் துடைத்தார்; அழுகையை அகற்றினார். உயிர்த் தந்தையும் தாயுமாகிய இவர்களே திருமேனி தாங்கி வெளிப் பட்டுவந்து இங்ஙனம் அருளப் பெற்றமையால் இவர் ஆளுடைய பிள்ளையார் எனவும் தேவர் முதலானோர்க்கும் அறிய முடியாத சிவஞானம் சம்பந்திக்கப் பெற்றமையால் திருஞானசம்பந்தர் எனவும் அழைக்கப் பெறுவாராயினார்.

செப முடித்து நீராடிக் கரையேறிய சிவபாத இருதயர் கடை வாய் வழிந்து கிடக்கின்ற பாலைக் கண்டு ''நீ யார் தந்த பாலை உண்டாய்? எச்சில் மயங்கிட உனக்கு இது இட்டாரைக் காட்டு'' என்று சிறுகோல் கொண்டு ஓச்சி உரப்பினார். குழந்தை யாகிய பிள்ளையார் கண்களில் ஆனந்தக் கண்ணீர் துளிக்க வலக் கையைச் சிரத்தின் மேலுயர்த்தி, வானிடமெல்லாம் பரவி நிற்கும் ஒளியோடு விடையின்மீது பண்ணிறைந்த அரு மறைகள் பணிந் தேத்த, பரமகருணையின் வடிவாகிய பராசக்தியோடு நின்ற அருள் வண்ணப் பெருமானைச் சுட்டிக் காட்டினார். உளம் நிறைந்து வழிந்த உயர் ஞானத்திருமொழியால் இத்திருப் பதிகத்தைப் பாடியருளினார்.

இந்த ஆறு வாக்கியங்களையோ, பன்னிரண்டு முறை, எட்டுமுறை, அல்லது மூன்று முறை சக்திக்குத் தக்கவாறு உச்சரித்து இறைவனை நினைந்து, அவன் திருவடி களிலிருந்து வரும் கங்கைநீர் தலையில் விழுவதாகப் பாவித்து நீராடல் அகமர்ஷணம் ஆகும்.

Koviloor Digital Library

பண்: நட்டபாடை

பதிக எண்: 1

திருச்சிற்றம்பலம்

1. தோடுடையசெவி[1]யன்விடையேறியோர்
தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென்
னுள்ளங்கவர்கள்வன்[2]
ஏடுடையமல ரான்முனை நாட்பணிந்
தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. 1

1. பொழிப்புரை: தோடணிந்த திருச்செவியை உடைய உமையம்மையை இடப்பாகத்தே உடையவனாய், விடை மீது ஏறி, ஒப்பற்ற தூய வெண்மையான பிறையை முடிமிசைச் சூடி, சுடுகாட்டில் விளைந்த சாம்பற் பொடியை உடல் முழுதும் பூசி வந்து என் உள்ளத்தைக் கவர்ந்த கள்வன், இதழ்களை உடைய தாமரை மலரில் விளங்கும் நான்முகன், படைத்தல் தொழில் வேண்டி முன்னை நாளில் வழிபட அவனுக்கு அருள்புரிந்த பெருமை மிக்க பிரமபுரத்தில் எழுந்தருளியுள்ள பெருமானாகிய இவன் அல்லனோ!

குறிப்புரை: தோடுடையசெவியன் என்பது முதலாக உள்ளங் கவர்ந்த கள்வனுடைய சிறப்பியல்புகள் தெரிவிக்கப்பெறுகின்றன. பிள்ளையாருடைய அழுகைக் குரல் சென்று பரந்து திருமுலைப்பால் அருளச் செய்தது திருச்செவியாதலின் அதனை முதற்கண் தெரிவிக்கிறார். உலகுயிர்கள் துன்பம் நீங்கி இன்பம் அடைதலே பொருளாக, பாடல் பரமனார் திருச்செவியில் சென்று சேர, திருச்செவியை முதற்கண் சிறப்பித்தார் என்பது, ''பல்லுயிரும் களிகூரத் தம் பாடல் பரமர்பால் செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச் சிறப்பித்து'' என்ற சேக்கிழார் வாக்கால் தெரிய லாகும். தோடுடையசெவி என்றதால்

[1] ''தக்ஷிணே குண்டலே கர்ணே வாம கர்ணேது பத்ரகம்''

- பூர்வ காரணம்

[2] ''தஸ்கராணாம் பதயே நமோ நம:''

- ஸ்ரீருத்திரம்

Koviloor Digital Library

இடப் பாகத்துச் செவி என்பது குறிக்கப்பெறுகின்றது. கருணைக் கேற்றது, தாய்தழீஇய இடப்பக்க மாதலின், அதனை முற்கூறினார். ''தோடு கூற்று பித்தா மூன்றும் பீடுடைத்தேசிகன் பேரருள் ஆகும்'' என்பதால் இது ஞானதேசிகனது திருவருட்டிறத்தை விளக்குவதாகும். சொரூபசிவம் மூவகை ஆன்மாக்களுக்கும் மூவகையால் அநுக் கிரகித்து மும்மலங்களையும் போக்கி அருளாரமுதத்தை உண்பித் தருளும் முறையில், சகலான்மாக்களுக்குப் படர்க்கையில் தோன்றிப் புரியும் குருவருளைக் குறிப்பதாகுமென்று ''குரு அருளும்'' (*அகத்தியர் தேவாரத் திரட்டு*) என்ற பாடலும் குறிக்கிறது.

மூன்றுவயதுக் குழந்தையாகிய ஞானசம்பந்தப் பிள்ளையார் தீவிரதர அன்புகொண்டு சன்மார்க்க நெறியாகிய நாயக நாயகித் தன்மையில் எடுத்த எடுப்பிலேயே ஈடுபடுகின்றார். உமையொரு பாகனாக ஒரு பெண்ணோடு இருந்த பயில்வால் என்னுள்ளங் கவர்கின்றார் என நயந்தோன்றக் கூறியவாறு. விடையேறி-தாம் கண்ட காட்சி இடபாரூடராதலின் அதனைக் குறித்தபடி. தூவெண்மதி- தூய்மையான வெண்ணிறம் பொருந்திய மதி. மதிக்குத் தூய்மை களங்கமின்மை, இருள் ஒளியைச் சாராதவாறுபோலக் களங்கம் இறைவனையும், அவனருள் பெற்றாரையும் சாராது. தூய்மை மனத்திலும் வெண்மைபுறத்திலும் நிகழ்வது ஆதலின், இங்கே குறிப்பிடும் மதி நாம் காணும் சந்திரன் போன்று பிராகிருத சந்திரன் அல்லன் என்பது தெளியத்தக்கது. அன்றியும் ஒரு கலைப் பிறை யாதலின் களங்கத்திற்கு இடமில்லை என்பதுமாம். இறைவன் சுடலைப் பொடி பூசுதல்: சர்வ சங்கார காலத்து எல்லாவுலகமும் தத்தங் காரணத்துள் முறையே ஒடுங்க-காரணங்கள் யாவும் இறுதியாக இறைவனிடம் ஒடுக்கப் பெறும்போது நிகழ்வது. மகாசங்காரமாவது, நிவர்த்தியாதி பஞ்ச கலைகளிலும் அடங்கிய எல்லாப் புவனங் களையும் சங்கரிக்கின்ற நிலை. அப்போதுதான் எல்லாம் சுடலைக் காடாகும்.

உள்ளங்கவர்தலாவது அவனையன்றி உளங்கள் அறியாவாறு ஆட்கொள்ளுதல். ஏடு-இதழ். மலரான்-பிரமன். பிரமன் வழிபாடு செய்த தலமாதலின் இறைவற்குப் பிரமபுரீசர் என்பதும் தலத்திற்குப் பிரமபுரம் என்பதும் பெயராயிற்று. பிரமாபுரம் எனவே பிரமன் வழிபட்ட தலம் என்பது விளங்குதலின் மலரான் என்பது பிரமனைக் குறியாது என்றும், இந்நாயனாரே முற்காலத்து ஏடுடைய மலரால் பூசித்த காரணம் பற்றி இங்ஙனம் கூறினார் என்றும் சதாசிவச் செட்டியாரவர்கள் கருதினார்கள். பீடு-பெருமை. மேவிய-தாமே விரும்பி எழுந்தருளியுள்ள. இறைவன் நித்யசுதந்திரன் ஆதலின்

Koviloor Digital Library

இங்ஙனம் கூறப் பெற்றது. பெம்மான்-பெருமான் என்பதன் திரிபு. கள்வன் பெருமானாகிய இவன் அன்றே எனக் கூட்டுக. ஏறி, பூசி என்பன பெயர்ச்சொற்கள். வினையெச்சமாக்கி, கவர்கள்வன் என்ற வினைத்தொகையின் நிலைமொழியோடு முடிப்பாரும் உண்டு.

இத் திருப்பாடலுக்கு உரை எழுதிய கயப்பாக்கம் திரு. சதாசிவச்செட்டியார் அவர்கள் ''விடையேறி'' என்பது நித்யத் தன்மையை வேண்டிய அறக்கடவுளை வெள்விடையாகப் படைத்து ஊர்தியாகக் கொண்டதால் சிருஷ்டியும், ''மதிசூடி'' என்பது சந்திரனுக்கு அபயம் தந்து திருமுடியில் ஏற்றிக் காத்ததால் திதியும், ''பொடிபூசி'' என்பது சர்வசங்காரகாலத்து நிகழ்ச்சியை அறிவித் தலால் சங்காரமும், ''கள்வன்'' என்பது இறைவன் எல்லா உயிர்களிடத் தும் நீக்கமற நிறைந்திருந்தும் அவைகள் வினைப்போகங்களை நுகர ஒளித்து நிற்பதால் திரோபவமும், ''அருள்செய்த'' என்பது அனை வருக்கும் அருள் செய்யும் அநுக்கிரகமும் ஆகிய ஐந்தொழிலையும் விளக்கும் குறிப்பு என்பார்கள்.

ஸ்ரீமத் செப்பறைச் சுவாமிகள் அவர்கள், 'தோடுடைய செவியன்' முதலாயின இறைவனது எண்குணங்களாகிய சிறப்பு இயல்புகளை உணர்த்துவன என்றும், 'பிரமாபுரம்' 'விடையேறி' முதலியன இறைவனது தசாங்கங்களைக் குறிப்பால் உணர்த்தி நிற்பன என்றும், 'விடையேறி' 'பொடிபூசி' 'உள்ளங்கவர்கள்வன்' என்பன முறையே இறைவனுடைய மூன்று திருமேனிகளாகிய உருவம் அருஉருவம் அருவம் என்ற மூன்றையும் குறித்து நிற்பன என்றும், எழுதியுள்ளார்கள். சேக்கிழார் சுவாமிகள் ''மறைமுதல் மெய்யுடன் எடுத்த எழுதுமறை'' என்பதால் பிரணவத்தின் முதலாகிய ஓங் காரத்தைச் சிவசக்தியின் உண்மைச் சொரூபமாகிய தகரவித்தையின் அடையாளமாகிய ''த்'' என்பதோடு சேர்த்து 'தோ' என்று தொடங்கியதாகக் குறிப்பிடுவார்கள். பன்னிரண்டாம் திருமுறையில் ''உலகெலாம்'' என்று முடிவதனையும் இதனோடு சேர்த்துத் திருமுறை முழுவதுமே வேத மூலமாகிய பிரணவத்துள் அட்ங்கியது என்பது குறிப்பு.

தேவாரத்திற்கும் வேதத்திற்கும் உள்ள ஒற்றுமையை உணர்த்த, வேதம் பயின்ற மரபில் வந்து தமிழ்வேதம் தந்த இவர்கள்,

தத் ஸவிதுர் வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ ந: ப்ரசோ தயாத்

- காயத்திரி

Koviloor Digital Library

2. முற்றலாமையிள[1] நாகமோடேன
முளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகல னாப்பலிதேர்ந்தென
துள்ளங்கவர்கள்வன்

என்ற காயத்திரி மந்திரத்தின் முதலெழுத்தாகிய தகரத்தின்மீது பிரணவத்தின் முதலெழுத்தாகிய ஓகாரத்தைச் சேர்த்துத் தொடங்கி யிருப்பது அறிந்து இன்புறற்குரியது.

குருவருள்: ''தோடுடைய செவியன்'' என்றமையால் அம்மை யப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்பதை முதலில் உணர்த்தி, அதனால் ஒருதெய்வ வழிபாட்டை நிலைநிறுத்துகிறார் ஞான சம்பந்தர். தோடுடைய செவியே ''ஓம்'' என்ற பிரணவ சொரூபமாய் உள்ளதையும் காட்டி அருளுகிறார்.

''ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த பீடுடைய பிரமாபுரம்'' என்பது பிரமன் பூசித்தமைக்கு இரங்கிய பெருமான் அருள் செய்ததையே குறிக்கும். இதை வலியுறுத்துவார் போன்று ''சேவுயரும் திண்கொடியான் திருவடியே சரண் என்று சிறந்த அன்பால் நாவியலும் மங்கையொடு நான்முகன்தான் வழிபட்ட நலங்கொள் கோயில்'' எனப் பிள்ளையார் மேகராகக் குறிஞ்சிப் பண் பாடலிலும் விளக்கியுள்ளார். இதனால் ''ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த அருள்செய்த'' என்பது ஞானசம்பந்தர் ஏடுடைய மலரால் தான் வழிபட்டு அருள்பெற்றதாகக் கூறல் முறை யாகாது என்பதை உணரலாம்.

2. பொ-ரை: வயது முதிர்ந்த ஆமையினது ஓட்டினையும், இளமையான நாகத்தையும், பன்றியினது முளை போன்ற பல்லையும் கோத்து மாலையாக அணிந்து, தசை வற்றிய பிரம கபாலத்தில் உண்பொருள் கேட்டு வந்து என் உள்ளம் கவர்ந்த கள்வன், கல்வி கேள்விகளிற் சிறந்த பெரியோர்கள் தன் திருவடிகளைக் கைகளால்

[1]கத்வா கைலாச மதுரம் மஹாதேவம் வ்யஜுக் ஞபன்
ததா தபதி தேவோயம் ஹத்வா கூர்மம் மகாபலம்
ஜக்ராஹ தஸ்ய ப்ருஷ்டாஸ்த்தி மகா கோரஸ்ய சங்கர:
தேவைஹி ஸம்ப்ரார்த்தி தோ தேவ: பபாரைதத் ப்ரஜாபதே.

– ஸ்காந்தம்

Koviloor Digital Library

கற்றல்கேட்டலுடை யார்பெரியார்கழல்
கையால் தொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. 2

3. நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர்
நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தவின வெள்வளைசோரவென்
னுள்ளங்கவர்கள்வன்

தொழுது ஏத்த அவர்கட்கு அருளும் நிலையில் விடைமீது காட்சி வழங்கும் பிரமபுரத்தில் விளங்கும் பெருமானாகிய இவனல்லனோ!

கு-ரை: இதனால் இறைவன் அணிகளைக் கொண்டு அடையாளங்கள் அறிவிக்கப் பெறுகின்றன. முற்றல் ஆமை-ஆதி கமடமாதலின் வயது முதிர்ந்த ஆமை. ஆமை என்றது ஈண்டு அதன் ஓட்டினை. இளநாகம் என்றது இறைவன் திருமேனியையிடமாகக் கொண்ட பாம்பிற்கு நரை திரை யில்லையாதலின் என்றும் இளமை யழியாத நாகம் என்பதைக் குறிப்பிக்க.

ஏனம் - பன்றி; ஆதிவராகம். வற்றல் ஓடு - சதை வற்றிய மண்டையோடு கலன்-பிச்சையேற்கும் பாத்திரம். பலி - பிச்சை, பெரியார்க்கிலக்கணம் கற்றலும் கேட்டலுமே என்பது. கற்றல்-உலக நூல்களை ஓதித் தருக்குவதன்று, இறைவன் புகழையே கற்று அடங்கல். கேட்டலும் அங்ஙனமே.இறைவன் புகழை யன்றி வேறொன்றையுங் கல்லாத - கேளாத பெரியோர்களாலேயே இறைவன் தொழற்குரியன் என அதிகாரிகளை யறிவித்தவாறு. 'கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்' 'கற்றவர் வணங்குங் கற்பகக் கனியை' என்பன ஒப்புநோக்கற்குரியன. 'கற்றல் கேட்டலுடையார் பெரியார்' எனவே, உபலக்கணத்தால் சிந்தித்தல் தெளிதல் நிட்டைகூடல் முதலியனவும் கொள்ளப் பெறும். ''கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை, கிளத்தல் என ஈரிரண்டாம் கிளக்கின் ஞானம்'' என்பது *சிவஞான சித்தியார்*. தமக்கு அருள் செய்தவண்ணமே தொழுதேத்தும் பெரியோர்க்கெல்லாம் அருள் வழங்கப் பெருமான் இடபத்தை ஊர்ந்தே இருக்கிறார் என்பதாம். பெற்றம் - இடபம்.

3. பொ-ரை: கங்கை நீர் நிரம்பி நிமிர்ந்த சிவந்த சடைமுடி மீது ஒரு கலையை உடைய நிலவைப் பொழியும் வெள்ளிய பிறைமதியைச்

Koviloor Digital Library

ஊர்பரந்தவுல கின்முதலாகிய
வோரூரிதுவென்னப்
பேர்பரந்தபிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. 3

4. விண்மகிழ்ந்தமதி லெய்ததுமன்றி
விளங்குதலையோட்டில்
உண்மகிழ்ந்துபலி தேரியவந்தென
துள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவர வம்மலர்க்கொன்றை
மலிந்தவரைமார்பில்
பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. 4

சூடி வந்து விரகமூட்டிக் கைகளில் அணிந்துள்ள ஓரினமான சங்கு வளையல்கள் கழன்று விழுமாறு செய்து, என் உள்ளத்தைக் கவர்ந்த கள்வன், மகாப்பிரளய காலத்தில் ஊர்கள் மிக்க இவ்வுலகில் அழியாது நிலை பெற்ற ஒப்பற்ற ஊர் இது என்ற புகழைப் பெற்ற பிரமபுரம் மேவிய பெருமானாகிய இவனல்லனோ!

கு-ரை: நீர் - கங்கை, நிமிர்புன்சடை - நிறைந்த புல்லியசடை, ஓர் நிலா வெண்மதி - ஒரு கலைப்பிறை, ஏர் - அழகு. வெள்வளை - சங்குவளை. சோர - நழுவ, அவன் மதியைச் சூடியிருத்தலின் விரக மிக்கு உடலிளைத்து வளைசோர்ந்தது என்பதாம். ஊர் பரந்த உலகு - ஊர்கள் மிகுந்த உலகு. மகாப்பிரளய காலத்து உலகமே அழிக்கப் பெற்றபோது, இத்தலம் மட்டும் அழியாது இருத்தலின் உலகிற்கே ஒருவித்தாக இருக்கின்றது சீகாழி என்பது. பேர் - புகழ்.

4. பொ-ரை: வானவெளியில் மகிழ்ச்சிச் செருக்கோடு பறந்து திரிந்த மும்மதில்களையும் கணையொன்றினால் எய்து அழித்தது மல்லாமல், விளங்கிய பிரமகபாலமாகிய தலையோட்டில் மனமகிழ் வோடு பலியேற்க வந்து எனது உள்ளத்தைக் கவர்ந்த கள்வன் புற்றிடையே வாழும் பாம்பு, கொன்றை மலர் ஆகியவற்றால் நிறைந்த வரை போன்ற மார்பின் இடப்பாகத்தே உமையம்மையை மகிழ்வுடன் கொண்டருளியவனாய்ப் பிரமபுரத்தில் எழுந்தருளிய பெருமானாகிய இவன் அல்லனோ!

Koviloor Digital Library

5. ஒருமைபெண்மையுடை யன்சடையன்விடை
யூரும்மிவனென்ன
அருமையாகவுரை செய்யவமர்ந்தென
துள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததொர்
காலம்மிதுவென்னப்
பெருமைபெற்றபிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. 5

கு-ரை: விண்மகிழ்ந்தமதில் - ஆகாயத்தில் பறத்தலை விரும்பிய மதில். இவை திரிபுராரிகளின் பொன், வெள்ளி, இரும்பாலான கோட்டை. எய்தது - மேருவை வில்லாக்கி, வாசுகியை நாணாக்கித் துளைத்தது. உள்மகிழ்ந்து - மனமகிழ்ந்து, தேரிய - ஆராய, செய்யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம். மண் மகிழ்ந்த அரவம் - புற்றினை விரும்பும் பாம்பு, இறைவன் அணிந்த பாம்பு புற்றில் வாழாததாயினும் சாதி பற்றிக் கூறப்பட்டது. அரவம் கொன்றை மலிந்த மார்பு-அச்சுறுத்தும் விஷம் பொருந்திய பாம்பையும், மணமும் மென்மையும் உடைய கொன்றையையும் அணிந்த மார்பு, என்றது வேண்டுதல் வேண்டாமையைக் காட்டும் குறிப்பாகும். பெண் - உமாதேவியார். பலிதேரவந்தார் எனதுள்ளம் கவர்ந்தார் என்றது என்னுடைய பரிபாகம் இருந்தபடியை அறிந்து ஒன்று செய்வார் போல வந்து உள்ளமாகிய ஆன்மாவை மலமகற்றித் தமதாக்கினார் என்பதை விளக்கியவாறு.

5. **பொ-ரை:** ஒரு திருமேனியிலேயே உமையம்மைக்கு இடப்பாகத்தை அளித்தவன் என்றும், சடைமுடியை உடையவன் என்றும், விடையை ஊர்ந்து வருபவன் என்றும் அவனது அழகைத் தோழியர் கூற அவ்வுரைப் படியே வந்து எனது உள்ளத்தைக் கவர்ந்த கள்வன், சர்வசங்கார காலத்தில் கரிய கடல் பொங்கி வந்து உலகைக் கொண்டபோது தோணிபுரமாய் மிதந்த பெருமை பெற்ற பிரமபுரத்தில் மேவிய பெருமானாகிய இவன் அல்லனோ.

கு-ரை: ஒருமை - ஒரு திருமேனியிலேயே, பெண்மை உடையன் - பெண் உருவத்தை உடையன்; என்றதால் பெண்ணுருவும் ஆணுருவுமாகிய இருமையும் உடையன் என்பது குறித்தவாறு. பெண்மை - பெண்ணுரு. உடையன் என்றதிலுள்ள விகுதியால் ஆணுருவாயினும் பெண்மை உடைமையும், சிவம் உடையானும் ஆம் என்றவாறு. சடையன் - பெண்மையுருவில் பின்னிய சடையும்

Koviloor Digital Library

6. மறைகலந்தவொலி பாடலோடாடல
ராகிமழுவேந்தி
இறைகலந்தவின வெள்வளைசோரவென்
னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடி யார்பொழில்நீடுயர்
சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. 6

ஆணுருவில் அமைந்த சடையுமாயிருத்தலின் இரண்டிற்கு மேற்பச் சடையன் என்றார். உரைசெய்ய - தோழியர் தலைவன் இயல்பைச் சொல்ல. உரையின் வாயிலாக உள்ளத்தில் புகுந்து விரும்பி உள்ளத்தைத் தமதாக்கிக் கொண்டான் என்பார் ''அமர்ந்து எனது உள்ளம் கவர்கள்வன்'' என்றார். 'ஓர் காலம் கடல் கொள்ள மிதந்த தலம் இது என்னும் பெருமைபெற்ற பிரமபுரம்' என இயைத்துப் பொருள் காண்க. ஓர்காலம் - சர்வ சங்காரகாலம்.

6. பொ-ரை: ஒலி வடிவினதான வேதத்தைப் பாடிக் கொண்டும், ஆடிக் கொண்டும், மழுவாயுதத்தைக் கையில் ஏந்திக் கொண்டும் வந்து எனது முன் கையில் உள்ள ஓரினமான வெள்ளிய வளையல்கள் கழன்று விழ என்னை மெலிவித்து உள்ளத்தைக் கவர்ந்த கள்வன், இருள் செறிந்த, மணமுடைய பொழில்களிடத்தும் நீண்டு வளர்ந்த மரங்களை உடைய சோலைகளிடத்தும் நிலவைப் பொழியும் பிறையைச் சூடியவனாய்ப் பிரமபுரத்தில் மேவிய பெருமானாகிய இவன் அல்லனோ!

கு-ரை: பாடுவது வேதம், செய்வது கள்ளம் என்ற நிலையில் பெருமான் இருக்கின்றார் என்பதைக் காட்டுவன முன் இரண்டு அடி. ஒலி கலந்த மறை பாடலோடு எனக் கூட்டி ஒலிவடிவாய வேதத்தைப் பாடுதலை உடையவர் எனப் பொருள் காண்க.

மழு - தவறிழைத்தாரைத் தண்டித்தற்காக ஏந்திய சங்கார காரணமாகிய தீப்பிழம்பு; ஆயுதமுமாம். இறை - மணிக்கட்டு. வெள் வளை-சங்க வளையல்கள். முன்கையில் செறிந்து கலந்திருந்த சங்க வளையல்கள் சோர்ந்தன என்பதால், 'உடம்புநனி சுருங்கல்' என்னும் மெய்ப்பாடு உணர்த்திய வாறு. கறை - இருள். கடி - மணம். பொழில் - நந்தனவனத்தும், சோலை - தானே வளர்ந்த சோலைகளிடத்தும். கதிர்

Koviloor Digital Library

7. சடைமுயங்குபுன லன்அனலன்னெரி
வீசிச்சதிர்வெய்த
உடைமுயங்குமர வோடுழிதந்தென
துள்ளங்கவர்கள்வன்
கடன்முயங்குகழி சூழ்குளிர்கானலம்
பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. 7

சிந்த என்றதால் நிலவொளி அங்குமிங்குமாகச் சிதறியிருந்தமை அறியப்படும். கதிர் சிந்து அப்பிறை எனப்பிரிக்க.

7. பொ-ரை: சடையில் கலந்த கங்கையை உடையவனும், திருக் கரத்தில் அனலைஉடையவனும், ஆடையின் மேல் இறுகக் கட்டிய பாம்பினனுமாய் எரிவீசி நடனமாடித் திரிந்து வந்து என் உள்ளம் கவர்ந்த கள்வன், கடலைத் தழுவிய உப்பங்கழிகளால் சூழப் பெற்ற தும், குளிர்ந்த கடற்கரைச் சோலைகளையுடையதும், தம்முடைய பெடைகளை முயங்கித் திரியும் அழகிய சிறகுகளோடு கூடிய அன்னங் களை உடையதும், ஆகிய பிரமபுரத்தில் மேவிய பெருமானாகிய இவன் அல்லனோ!

கு-ரை: சடைமுயங்கு புனலன் - சடையில் கலந்திருக்கின்ற கங்கையை உடையவன். அனலன்-திருக்கரத்தில் அனலை உடைய வன், உடை முயங்கும் அரவு - ஆடையின் மேல் இறுகக் கட்டிய கச்சை யாகிய பாம்பு.

சதிர்வு - பெருமை. உழிதந்து - திரிந்து. ஊடத்தக்க ஒரு பெண்ணையும், அஞ்சத்தக்க எரி அரவு முதலியவற்றையும் அணிந்து திரிபவராயிருந்தும் எனது உள்ளத்தைக் கவர்ந்தார் என்றது, அவர்க் குள்ள பேரழகின் திறத்தையும், கருணையையும், எல்லாவுயிரையும் பகைநீக்கியாளும் வன்மையையும் வியந்தவாறு.

கழி - உப்பங்கழி. கானல் - கடற்கரைச் சோலை. பிரமபுரத்தில் சடை முயங்கு புனலனாய் உள்ளம் கவர்கின்ற தன்மையால் போகியா யிருந்து உயிர்க்குப் போகத்தைப் புரிய, சிறகன்னங்களும் தத்தம் பெடைகளை முயங்குகின்றன எனல், 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்பதை அறிவித்தவாறு.

Koviloor Digital Library

8. வியரிலங்குவரை யுந்தியதோள்களை
வீரம்விளைவித்த
உயரிலங்கையரை யன்வலிசெற்றென
துள்ளங்கவர்கள்வன்
துயரிலங்கும்முல கிற்பலவூழிகள்
தோன்றும்பொழுதெல்லாம்[1]
பெயரிலங்குபிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. 8

9. தாணுதல்செய்திறை காணியமாலொடு
தண்டாமரையானும்
நீணுதல்செய்தொழி யந்நிமிர்ந்தானென
துள்ளங்கவர்கள்வன்

8. பொ-ரை: கயிலை மலையைப் பெயர்த்துத் தனது பெரு வீரத்தை வெளிப்படுத்திய புகழால் உயர்ந்த இலங்கை மன்னன் இராவணனின் வியர்வை தோன்றும் மலை போன்ற தோள்களின் வலிமையை அழித்த எனது உள்ளம்கவர் கள்வன், துயர் விளங்கும் இவ்வுலகில் பல ஊழிகள் தோன்றும் பொழுதெல்லாம் அழியாது தன் பெயர் விளங்கும் பிரமபுரம் மேவிய பெருமானாகிய இவன் அல்லனோ!

கு-ரை: வியர் இலங்கு தோள் - வியர்வை விளங்குகின்ற தோள். வியர் அகலம் எனவும் பொருள் கொள்ளலாம். இலங்கை அரையன் - இராவணன். அரையன் தோள்களை வலிசெற்று என மாறிக் கூட்டுக. துயர் இலங்கும் உலகு - துன்பம் விளங்குகின்ற கன்மபூமி. இதனைத் துன்ப உலகு என்றது வினைவயத்தான் மாறித் துய்க்கப்படும் இன்ப துன்பங்களுள் இன்பக் களிப்பைக் காட்டிலும் துன்பக்கலக்கம் மிகுந்து தோன்றலின். பல ஊழி-பிரம ஊழி முதலிய பல ஊழிகள். இறைவன் பல ஊழிகளை விளைவிப்பது ஆன்மாக்களின் மலம் பரிபாக மாதற்பொருட்டு. பெயர் - புகழ்.

9. பொ-ரை: திருமாலும், தாமரை மலரில் எழுந்தருளியிருக்கும் நான்முகனும், தனது தாளையும் முடியையும் சிறிதே காணுதற்

[1] '..... முன்னாள் நிகழந்த பன்னீருகத்து
வேறுவேறு பெயரின் ஊறின் றியன்ற புகலி'
- திருக்கழுமல மும்மணிக்கோவை. 10: 2-5.

Koviloor Digital Library

வாணுதல்செய்மக ளீர்முதலாகிய
வையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. 9

10. புத்தரோடுபொறி யில்சமணும்புறங்
கூறநெறிநில்லா
ஒத்தசொல்லவுல கம்பலிதேர்ந்தென
துள்ளங்கவர்கள்வன்

பொருட்டுப் பன்றியாயும் அன்னமாயும் தேடிச் செயலற, அண்ணா மலையாய் நிமிர்ந்தவனாய், என் உள்ளம் கவர் கள்வனாய் விளங்கு பவன், ஒளி பொருந்திய நுதலையும் சிவந்த நிறத்தையும் உடைய மகளிர் முதலாக உலகோர் அனைவரும் துதிக்க விரும்புதலைச் செய்யும் பிரமபுரம் மேவிய பெருமானாகிய இவன் அல்லனோ!

கு-ரை: மாலொடு தண்தாமரையானும் தாள் நுதல் செய்து இறை காணிய நீணுதல் செய்து நிமிர்ந்தான் எனக் கூட்டுக. மால் தாள்காணிய நிமிர்ந்தான் எனவும், தாமரையான் நுதல் காணிய நிமிர்ந்தான் எனவும் தனித்தனிக் கூட்டிப் பொருள் காண்க. தாள் நுதல் செய்து - தாளையும் நுதலையும் தமது குறிக்கோளாகக் கருதி. இறை காணிய - தம்முள் யார் இறை என்பதைக் காணும்பொருட்டு; இறைவனைக் காணும்பொருட்டு என்பாரும் உளர். நீணுதல் - மால் பெரிய பன்றியாய் நீளுதலும் பிரமன் அன்னமாய் வானத்தில் நீளுதலுமாகிய இரண்டின் செயல்கள். ஒழிய - செயலற்றுப்போக. நிமிர்ந்தான் - அண்ணாமலையாய் உயர்ந்தவன். சென்று பற்றுவேன் என்று செருக்கிய தேவர்க்கு அப்பாற்பட்டவன், செயலழிந்திருந்த தலைவியின் சிந்தையை வலியவந்து கவர்கின்றான் என்பது இறைவனது எளிமை தோன்ற நின்றது. மகளிர் முதலாகிய வையத்தவர் ஏத்த மேவிய பெம்மான் என்றது இவளும் வையத்த வருள் ஒருத்தியாயிருக்க இங்ஙனம் கூறினாள், ஏனைய மகளிர்க்கு இல்லாததாகிய, இறைவனே வலியவந்து உள்ளங்கவரும்பேறு தனக்குக் கிட்டியமையைத் தெரிவிக்க.

10. பொ-ரை: புண்ணியம் இன்மையால் புத்தர்களும் அறிவற்ற சமணர்களும் சைவத்தைப் புறங்கூறச் சான்றோர் வகுத்த நெறியில் நில்லாது, தமக்கு ஏற்புடையவாகத் தோன்றிய பிழைபட்ட கருத்துக் களைச் சொல்லித் திரிய, உலகனைத்தும் சென்று பலி தேர்ந்து எனது

Koviloor Digital Library

மத்தயானைமறு கவ்வுரிபோர்த்ததோர்
மாயம்மிதுவென்னப்
பித்தர்போலும்பிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. 10

11. அருநெறியமறை வல்லமுனியகன்
பொய்கையலர்மேய
பெருநெறியபிர மாபுரமேவிய
பெம்மானிவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம்
பந்தன்னுரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை
தீர்தல்எளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்

உள்ளத்தைக் கவர்ந்த கள்வன், மதயானையை மருளுமாறு செய்து அதன் தோலை உரித்துப் போர்த்தது ஒரு மாயமான செயல் என்னுமாறு செய்து, பித்தனாய் விளங்கும் பிரமபுரம் மேவிய பெருமானாகிய இவன் அல்லனோ!

கு-ரை: பொறி இல் சமண் - அறிவற்ற சமணர்கள். புறங்கூற - நேர்நின்று சொல்லமாட்டாமையாலே மறைவான இடத்தில் எளிமையாய்ச் சொல்ல. நெறி நில்லா - வரம்பில் நில்லாதனவாக. ஒத்த சொல்ல - ஒரே கருத்தை உரைக்க. புறச்சமயத்தார் ஒருமித்துப் புறங்கூறவும் பிச்சையேற்று உள்ளங்கவர்கின்ற கள்வனாதலின் யானைத் தோலைப் போர்த்து மாயம் செய்தார் என்று இயைபில் பொருள் தோன்ற வைத்தார்.

11. பொ-ரை: அருமையான நெறிகளை உலகிற்கு வழங்கும் வேதங்களில் வல்ல பிரமனால் படைக்கப்பட்டதும், அகன்ற மலர் வாவியில் தாமரைகளையுடையதும் ஆகிய பிரமபுரத்துள் மேவிய முத்தி நெறி சேர்க்கும் முதல்வனை, ஒருமைப்பாடு உடைய மனத்தைப் பிரியாதே பதித்து உணரும் ஞானசம்பந்தன் போற்றி உரைத்தருளிய திருநெறியாகிய அருநெறியை உடைய தமிழாம் இத்திருப்பதிகத்தை ஓத வல்லவர்களின் பழவினைகள் தீர்தல் எளிதாகும். ஊழ்வினை தீர்வதற்குரிய மார்க்கங்கள் பல இருப்பினும், இத்திருப்பதிகத்தை ஓதுதலே எளிமை வாய்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

Koviloor Digital Library

கு-ரை: அருநெறியமறை வல்லமுனி - அருமையான நெறிகளை வகுக்கும் மறைகளில் வல்ல முனிவனாகிய பிரமன். அலர்மேய அகன்பொய்கை பிரமாபுரம் மேவிய பெருநெறிய பெம்மான் இவன்றன்னை - தாமரைகள் பொருந்திய அகன்ற பொய்கையை உடைய பிரமாபுரத்தில் விரும்பியிருந்த முத்திநெறிசேர்க்கும் முதல்வனை. ஒருநெறியமனம் - ஒன்றுபட்ட மனம். மனம் ஐந்து வழியாகவும் அறிந்தவற்றை வழியடைத்தகாலத்தும் சென்று பற்றித் தன்மயமாயிருப்பதொன்றாகலின் அங்ஙனம் செல்லாது ஒருங்கிய மனத்தை ஈண்டு விதந்தார்கள். வைத்து - பிரியாதே பதித்து. திருநெறியதமிழ் - சிவ நெறியாகிய அருநெறியையுடைய தமிழ். தொல்வினை - பழமையாகிய வினை; என்றது ஆகாமிய சஞ்சிதங்களையும், இனி வரக்கடவ பிராரத்த சேடத்தையும். முன்னைய தீரினும் பிராரத்த சேடம் நுகராதொழியாதாகவும் இங்ஙனங்கூறியது, யான் நுகர்கிறேன் என்ற இன்னலுமின்றிக் கழிக்கப்படுதலை. இதனால் பழவினை நீக்கமே இப்பதிகப் பயன் என்று உணர்த்தியவாறு.

குருவருள்: வேதம் உலகினருக்கு வேண்டிய பொது அறங்கள் பலவற்றைச் சொல்வது ஆதலின், அதை இங்குஅருநெறிய மறை என்றும், ஆகமம் சத்திநிபாதர்க்குரிய சைவ நுட்பங்களைச் சொல்வது ஆதலின், அதனை இங்கு அவற்றின் மேம்பட்டது எனும் பொருளில் பெருநெறி என்றும் கூறினார். ஒருநெறி அல்லது ஒருசமயம் என்றால் அது உலகினர் அனைவருக்கும் பயன்தரத் தக்கதாய் இருத்தல் வேண்டும். அதுபற்றியே ஞானசம்பந்தர் உலகினருக்கு அருநெறிப் பயனும் சத்திநிபாதர்க்கு பெருநெறிப்பயனும் உணர்த்தினார். ஆயினும் அருநெறியும் பெருநெறியும் ஒருநெறியே என்பதையும் அதுவே திருநெறி என்பதையும் உணர்த்தியருளினார். இக்கருத்தைத் திருமந்திரமும்

திருநெறி யாவது சித்தசித் தன்றிப்
பெருநெறி யாய பிரானை நினைந்து
குருநெறி யாம்சிவ மாநெறி கூடும்
ஒருநெறி ஒன்றாக வேதாந்தம் ஓதுமே.

- திருமந்திரம் - வேதச் சிறப்பு.

என உணர்த்துவது காண்க. பீடுடைத்தேசிகன் செயல் திருநோக்கால் ஊழ்வினையைப் போக்குதல் எனவே தேசிகன் பேரருள் தொல்வினை தீர்த்தல் ஆயிற்று. ''தோடு கூற்று பித்தா மூன்றும் பீடுடைத் தேசிகன் பேரருளாகும்'' என்பது அபியுக்தர் வாக்கு.

Koviloor Digital Library

2. திருப்புகலூர்

பதிக வரலாறு:

திருஞானசம்பந்தப்பெருமான் திருப்புகலூருக்கு எழுந்தருளும்போது, இதற்கு முன்னரே அங்கு எழுந்தருளியிருந்த திருநாவுக்கரசு சுவாமிகள் அவ்வூர் அடியார் பெருமகனாராகிய முருக நாயனாரோடும் பிற அடியார்களோடும் பிள்ளையாரை எதிர்கொண்டு அழைத்தனர். சம்பந்தப் பெருமான் அவர்கள் வேண்டுகோட்கு இணங்கி, முருக நாயனார் திருமடத்தில் எழுந்தருளினார்கள். அங்கே சிறுத்தொண்டர், திருநீலநக்கர் முதலிய அடியார்களும் வந்து தரிசித்து அளவளாவி இருந்தனர். சுவாமிகள், அவர்கள் அனைவரோடும் திருக்கோயிலுக்குச் சென்று வழிபடும்போது புகலூர்ப் பெருமையை உணர்த்தும் முகத்தான் இப்பதிகத்தை அருளிச்செய்தார்கள்.

பண்: நட்டபாடை

பதிக எண்: 2

திருச்சிற்றம்பலம்

12. குறிகலந்தவிசை பாடலினான்நசை
யாலிவ்வுலகெல்லாம்
நெறிகலந்ததொரு நீர்மையனாயெரு
தேறிப்பலிபேணி
முறிகலந்ததொரு தோலரைமேலுடை
யானிடமொய்ம்மலரின்
பொறிகலந்தபொழில் சூழ்ந்தயலேபுய
லாரும்புகலூரே. 1

1. பொ-ரை: சுரத்தானங்களைக் குறிக்கும் இசையமைதியோடு கூடிய பாடல்களைப் பாடுபவன். உயிர்கள் மீது கொண்ட பெருவிருப்பால் இவ்வுலகம் முழுவதும் வாழும் அவ்வுயிர்கள் தம்மை உணரும் நெறிகளை வகுத்து அவற்றுள் கலந்து நிற்பவன். எருதின்மிசை ஏறி வந்து மக்கள் இடும்பிச்சையை விரும்பி ஏற்பவன், இடையில் மான் தோலாடையை உடுத்துபவன். அவன் விரும்பி உறையும் இடம்

Koviloor Digital Library

13. காதிலங்குகுழை யன்னிழைசேர்திரு
மார்பன்னொருபாகம்
மாதிலங்குதிரு மேனியினான்கரு
மானின்னுரியாடை
மீதிலங்கவணிந் தானிமையோர்தொழ
மேவும்மிடஞ்சோலைப்
போதிலங்குநசை யால்வரிவண்டிசை
பாடும்புகலூரே. 2

செறிந்த மலர்கள்மீது புள்ளிகளை உடைய வண்டுகள் மொய்த்துத் தேனுண்ணும் வானளாவிய பொழில் சூழ்ந்த புகலூராகும்.

கு-ரை: குறி கலந்த இசை - குறித்த சுரத்தானங்களோடு ஒன்றிய இசை, பாடலினான் - இறைவன், மனக்குறிப்போடு ஒன்றிய இசை யமைந்த பாடலினான் என்பாரும் உளர். நசை - விருப்பம். நெறி - முறை, அஃதாவது அவ்வவ்வான்மாக்களின் பருவநிலைக்கு ஏற்ப, விறகில் தீயாகவும் பாலின்நெய்யாகவும் மணியுட்சோதியாகவும் கலந்து நிற்கும் முறை, பலி - பிச்சை; முறி கலந்தது ஒரு தோல் - கொன்ற புலியின் தோலை.

பொறி - வண்டு. உடையான் இடம் புகலூர் என இயைக்க. இது பின்வரும் பாடற்கும் இயையும்.

2. பொ-ரை: காதில் விளங்கும் குழையை அணிந்தவன். பூணூல் அணிந்த அழகிய மார்பினன். இடப்பாகமாக உமையம்மை விளங்கும் திருமேனியன். யானையினது தோலை உரித்து மேல் ஆடையாக அணிந்தவன். அத்தகையோன் இமையவர் தொழமேவும் இடம், சோலைகளில் தேனுண்ணும் விருப்பினால் வரிவண்டுகள் இசைபாடும் புகலூராகும்.

கு-ரை: ஒருபாகம் மாது இலங்கும் திருமேனியன் என்பதால், காதிலங்கு குழையன் என்பதற்குப் பெண்பாதியில் காதில் விளங்கும் குழையை உடையவன் என்றும், ஆண்பாதியில் தளிரை உடையவன் என்றும் பொருள்கொள்க. குழை - பனந்தோட்டால் செய்யப்படும் மகளிர் காதணி; ஆடவர் காதில் செருகிக்கொள்ளும் மணத்தழை; இதனை வடநூலார் 'கர்ணவதம்சம்' என்பர். இழைசேர் திருமார்பன் - பூணூல் சேர்ந்த, இழைத்த தங்க அணிகள் சேர்ந்த மார்பினையுடை

Koviloor Digital Library

14. பண்ணிலாவும்மறை பாடலினான்இறை
சேரும்வளையங்கைப்
பெண்ணிலாவவுடை யான்பெரியார்கழல்
என்றுந்தொழுதேத்த
உண்ணிலாவியவர் சிந்தையுள்நீங்கா
வொருவன்னிடமென்பர்
மண்ணிலாவும்மடி யார்குடிமைத்தொழின்
மல்கும்புகலூரே. 3

15. நீரின்மல்குசடை யன்விடையன்அடை
யார்தம்மரண்மூன்றுஞ்
சீரின்மல்குமலை யேசிலையாகமு
னிந்தானுலகுய்யக்

யவன். கருமான் - 'கிருஷ்ண மிருகம்' என்னும் மான், உரி - தோல், இமையோர் - தேவர்கள்; சோலைப்போதில் அங்கு நசையால் வரிவண்டு பாடும் எனப் பிரித்துப் பொருள்கொள்க. அங்கு - அசை; போது இலங்கு எனப் பிரித்துக்கோடலும் ஒன்று.

3. பொ-ரை: இசையமைதி விளங்கும் வேத கீதங்களைப் பாடு பவன் - முன்கைகளில் வளையல்கள் விளங்கும் அழகிய கைகளை உடைய உமையம்மையைத் தனது தேவியாக உடையவன். தன் திருவடிகளை என்றும் தொழுது ஏத்தும் பெரியவர்களின் உள்ளத்தே விளங்குவதோடு அவர்களின் அடிமனத்தில் என்றும் நீங்காதிருப் பவன். அத்தகையோன் விரும்பி உறையுமிடம் நிலவுலகில் வாழும் அடியவர்கள் குடும்பத்துடன் வந்து பணி செய்யும் புகலூராகும்.

கு-ரை :பண் நிலாவும் மறை - இசை தாமே விளங்கும் வேதம். இறை - முன்கை, பெண் - உமாதேவி, பெரியார் - சிவஞானத்தில் பெரியவர்கள்; உள்நிலாவி அவர் சிந்தை நீங்கா ஒருவன் எனப்பிரிக்க. குடிமைத்தொழில் - வேளாண்மைத் தொழில்; மிராசுக்குக் குடித்தனம் என்ற வழக்குண்மை காண்க. பாடலினன், உடையான், ஒருவன் இடம் புகலூரே என்பர் எனக் கூட்டுக.

4. பொ-ரை : கங்கை நீரால் நிறைவுற்ற சடைமுடியை உடைய வன். விடையூர்தியன். முப்புரங்களையும் சிறப்புமிக்க மேருமலையை

Koviloor Digital Library

காரின்மல்குகடல் நஞ்சமதுண்ட
கடவுள்ளிடமென்பர்
ஊரின்மல்கிவளர் செம்மையினாலுயர்
வெய்தும்புகலூரே. 4

16. செய்யமேனிவெளி யபொடிப்பூசுவர்
சேரும்மடியார்மேல்
பையநின்றவினை பாற்றுவர்போற்றிசைத்
தென்றும்பணிவாரை
மெய்யநின்றபெரு மானுறையும்மிட
மென்பரருள்பேணிப்
பொய்யிலாதமனத் தார்பிரியாது
பொருந்தும்புகலூரே. 5

வில்லாகக் கொண்டு முனிந்தவன். உலக உயிர்கள் உய்யக் கருநிற முடைய கடலிடையே தோன்றிய நஞ்சை அமுதமாக உண்ட கடவுள். அத்தகையோன் விரும்பி உறையுமிடம் ஒழுக்கத்தால் உயர்ந்த மக்கள் வாழ்ந்து சிறப்பெய்தும் புகலூராகும்.

கு-ரை: அடையார் - (தேவர்க்குப்) பகைவர். மலையைச் சிலையாக முனிந்தான் என்றது அவன் முனிவொன்றுமே பகை தணித்து ஆட்கொண்டது; வில்லான மலை அன்று என்பதாம், காரின் மல்கும் - கருமைநிறத்தில் மிகுந்த, ஊரின் மல்கிவளர் செம்மையினால் உயர்வெய்தும் புகலூர் - ஊர்களில் ஒருகாலைக்கு ஒருகால் நிறைந்து வளரும் ஒழுக்கத்தாலுயர்ந்த புகலூர்.

5. பொ-ரை : சிவந்த திருமேனியில் வெண்ணிறமான திரு நீற்றைப் பூசுபவர். தம்மை வந்தடையும் அடியவர்களைத் தாக்க வரும் வினைகளை நீக்குபவர். என்றும் தம்மைப் பாடிப் பணிவார்க்கு உண்மையானவர். அவர் விரும்பி உறையும் இடம், அருளையே விரும்பிப் பொய்யில்லாத மனத்தவர் நீங்காது வாழும் புகலூர் என்பர்.

கு-ரை: அடியார்மேல் நின்றவினை பையப் பாற்றுவார். பைய - மெதுவாக, நோயை விரைந்து நீக்கினுல் அதனால் விளையும் தீமை பெரிதாய், நோயின் பெருமையும், மருத்துவன் உழைப்பும் அறியப்படாதவாறுபோல, வினைகளை விரைந்து நீக்கின் விளையுங்

Koviloor Digital Library

17. கழலினோசைசிலம் பின்னொலியோசை
கலிக்கப்பயில்கானில்
குழலினோசைகுறட் பாரிடம்போற்றக்
குனித்தாரிடமென்பர்
விழவினோசையடி யார்மிடைவுற்று
விரும்பிப்பொலிந்தெங்கும்
முழவினோசைமுந் நீரயர்வெய்த
முழங்கும்புகலூரே. 6

18. வெள்ளமார்ந்துமிளிர் செஞ்சடைதன்மேல்
விளங்கும்மதிசூடி
உள்ளமார்ந்தவடி யார்தொழுதேத்த
வுகக்கும்அருள்தந்தெம்

கேடு பலவாமாகலின் பையப் பாற்றுவார் என்றுர். பாற்றுதல் - சிதறிப்போகச் செய்தல். பணிவாரை - அடியார்கள் இடத்தில்; வேற்றுமை மயக்கம், மெய்ய - உண்மையாக, பொய் - அஞ்ஞானம்.

6. பொ-ரை : இரண்டு திருவடிகளிலும், விளங்கும் வீரக் கழல் சிலம்பு ஆகியன ஒலிக்கவும், குழல் முதலிய இசைக்கருவிகள் முழங் கவும், குள்ளமான பூதகணங்கள் போற்றவும், பலகாலும் பழகிய இட மாக இடுகாட்டில் முற்றழிப்பு நடனம் புரியும் இறைவனுடைய இடம், திருவிழாக்களின் ஓசையும், அடியவர் மனமகிழ்வோடு எங்கும் முழக் கும் முழவோசையும் கடலோசையைத் தளரச் செய்யும் ஒலியைத் தரும் புகலூர் என்பர்.

கு-ரை : கழலின் ஓசை - ஆண்பகுதியாகிய வலத்தாளில் அணிந்த வீரக்கழலின் ஓசை; சிலம்பின் ஓசை - பெண்பகுதியாகிய இடத்தாளில் அணிந்த சிலம்பின் ஓசை. அன்றிச் சிவபெருமானது கழலின் ஓசையும் மாருடிய மகாகாளியின் சிலம்பின் ஓசையும் என்பாருமுளர். குனித்தார் - ஆடியவர், குறள்பாரிடம் - குள்ளமான பூதங்கள், மிடைவுற்று - நெருங்கி, முந்நீர் - கடல்.

7. பொ-ரை : கங்கைநீர் அடங்கி விளங்கும் செஞ்சடைமேல் விளக்கமான பிறைமதியைச் சூடி, தம்மிடம் மனம் ஒன்றிய அடியவர் தொழுது ஏத்த அவர்கள் மனம் மகிழும் அருளைப் புரிந்து என்னைப்

Koviloor Digital Library

கள்ளமார்ந்துகழி யப்பழிதீர்த்த
கடவுள்ளிடமென்பர்
புள்ளையார்ந்தவய லின்விளைவால்வளம்
மல்கும்புகலூரே. 7

19. தென்னிலங்கையரை யன்வரைபற்றி
யெடுத்தான்முடிதிண்டோள்
தன்னிலங்குவிர லால்நெரிவித்திசை
கேட்டன்றருள்செய்த
மின்னிலங்குசடை யான்மடமாதொடு
மேவும்மிடமென்பர்
பொன்னிலங்குமணி மாளிகைமேல்மதி
தோயும்புகலூரே. 8

பற்றிய வினையையும் பழியையும் தீர்த்தருளிய கடவுள் உறையும் இடம், மீன் கொத்தி முதலிய பறவை இனங்கள் மீன்களைக் கவர வந்து தங்கும் வயல்களின் விளைவால் வளம் மல்கிய புகலூராகும்.

கு-ரை:வெள்ளம் - கங்கை; வெள்ளம் ஆர்ந்து மிளிர் செஞ் சடை என்றது செருக்கால் மிக்க கங்கையை அடக்கியது என்றவாறு. விளங்கும் மதி சூடி என்பது இளைத்த மதியை விளங்க வைத்தது. இதனுல் தருக்கினாரை ஒடுக்குதலும் தாழ்ந்தாரை உயர்த்துதலும் இறைவன் கருணை என்பது தெரிவிக்கப்படுகின்றன. எம் கள்ளம் ஆர்ந்து பழிதீர்த்த கடவுள் - அநாதியே பற்றிநிற்கும் எமது ஆணவ மலமாகிய வஞ்சனை நீங்கப் 'பெத்தான்மாக்கள்' என்னும் பழியைத் தீர்த்த கடவுள். புள் - நாரை முதலியன.

8. பொ-ரை :அழகிய இலங்கை அரசனாகிய இராவணன் கயிலை மலையை இரு கரங்களாலும் பற்றி எடுத்தபோது அவனுடைய தலைகள், திண்ணிய தோள்கள் ஆகியவற்றைத் தன் கால் விரலால் நெரித்துப் பின் அவன் சாமகானம் பாடக்கேட்டு அன்று அவனுக்கு அருள் செய்தவனாகிய தாழ்ந்த சடைமுடி உடைய பெருமான் தன் தேவியோடு மேவும் இடம், மதி தோயும் அழகிய மாளிகைகள் நிறைந்த புகலூராகும்.

கு-ரை : தென் - அழகு, திசைகுறித்ததன்று. வரை - கயிலை;

Koviloor Digital Library

20. நாகம்வைத்தமுடி யானடிகைதொழு
தேத்தும்மடியார்கள்
ஆகம்வைத்தபெரு மான்பிரமன்னொடு
மாலுந்தொழுதேத்த
ஏகம்வைத்தவெரி யாய்மிகவோங்கிய
எம்மானிடம்போலும்
போகம்வைத்தபொழி லின்னிழலான்மது
வாரும்புகலூரே. 9

21. செய்தவத்தர்மிகு தேரர்கள்சாக்கியர்
செப்பிற்பொருளல்லாக்
கைதவத்தர்மொழி யைத்தவிர்வார்கள்
கடவுள்ளிடம்போலும்

நெரித்து எனாது நெரிவித்து என்றது விரலின்செயல் என்பதைத் தெரிவிக்க. இவரே நினைத்துச் செய்யின் நேரும் தீமை பெரிதாயிருக்கும் என்பது. இசை - சாமகானம். பொன்னிலங்கும் மணி மாளிகையின்மேல் மதிதோயும் என்பது, புகலூரும் மதிசூடி இறைவனைப் போல் சாரூபம் பெற்றது என்பது அறிவித்தவாறு.

9. பொ-ரை : பாம்பை முடிமிசை வைத்துள்ளவனும், தன் திருவடிகளைப் போற்றும் அடியார்கள், தம் மனத்தின்கண் வைத்துப் போற்றும் தலைவனும், பிரமனும், திருமாலும் தொழுதேத்த ஏகனாய் எரி வடிவில் மிக ஓங்கிய எம்மானுமாகிய இறைவனுக்கு மிக உகந்த இடம், பல்வகைப் பயன்களையும் தருவதோடு நிழலாற் சிறந்ததாய்த் தேன் நிறைந்து விளங்கும் பொழில் சூழ்ந்த புகலூராகும்.

கு-ரை : அடியார்கள் ஆகம்வைத்த பெருமான் - அடியார்களைத் தமது திருவுள்ளத்து இடம்பெறவைத்த பெருமான், அடியார்கள் தமது நெஞ்சத்தில்வைத்த பெருமான் என்றுமாம். ஏகம்வைத்த எரி - ஒன்றான தீப்பிழம்பு, போகம்வைத்த பொழில் என்றது தனிமகன் வழங்காப் பனிமலர்க்கா என்றதுபோல இன்பச் சிறப்பு அறிவித்தவாறு.

10. பொ-ரை : எண்ணிக்கையில் மிக்கதேரர், சாக்கியர் சமணர்கள் ஆகியவர்களின் உண்மையல்லாத வஞ்சகம் நிறைந்த மொழிகளைக் கேளாதவராய், மிகுதியான தவத்தைச் செய்யும் மெய்யடியார்

Koviloor Digital Library

கொய்துபத்தர்மல ரும்புனலுங்கொடு
தூவித்துதிசெய்து
மெய்தவத்தின்முயல் வாருயர்வானக
மெய்தும்புகலூரே. 10

22. புற்றில்வாழும்அர வம்மரையார்த்தவன்
மேவும்புகலூரைக்
கற்றுநல்லவவர் காழியுண்ஞானசம்
பந்தன்றமிழ்மாலை
பற்றியென்றும்இசை பாடியமாந்தர்
பரமன்னடிசேர்ந்து
குற்றமின்றிக்குறை பாடொழியாப்புக
ழோங்கிப்பொலிவாரே. 11

திருச்சிற்றம்பலம்

களின் தலைவராகிய சிவபிரானுக்கு மிக உகந்த இடம், அடியவர்கள் மலர் கொய்து வந்து தூவிப் புனலாட்டித் துதி செய்து தவநெறியில் முயன்று உயர் வானகத்தை எய்துதற்குரிய வழிபாடுகளை ஆற்றும் புகலூராகும்.

கு-ரை: மொழியைத் தவிர்வார்களாகிய செய்தவத்தரது கடவுளிடம் என இயைக்க. அன்றிச்செய்த அவத்தர் எனப்பெய ரெச்சத்து அகரம் விகாரத்தால் தொக்கதாகக்கொண்டு வீண்காரியம் விளைவிப்பவர்கள் எனத் தேரர்க்கு அடைமொழியாகவும் ஆக்கலாம். செப்பில் - உரையில், மெய்தவம் எதுகை நோக்கி மிகாதாயிற்று.

11. பொ-ரை: புற்றில் வாழும் பாம்புகளை இடையிலே கட்டிய வனாகிய சிவபிரான் எழுந்தருளிய புகலூர்மீது இறைவனது பொருள் சேர் புகழைக் கற்று வல்லவர்கள் வாழும் சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன் பாடிய தமிழ்மாலையாகிய இத்திருப்பதிகத்தை, என்றும் இசையோடு பாடி வழிபடும் மாந்தர்கள் இறைவன் திருவடி நீழலை அடைந்து குற்றம் குறைபாடு அகன்று புகழோங்கிப் பொலி வெய்துவார்கள்.

கு-ரை: பாம்பு என்ற பொதுமை பற்றி, யாகத்திலிருந்து வந்த இந்தப் பாம்புகளையும் 'புற்றில் வாழும் அரவம்' என்ருர். சாதியடை.

Koviloor Digital Library

மேவும் - விரும்பும். கற்று நல்ல அவர் - இறைவன் புகழைப்படித்து நல்லவராயினார்கள். குற்றம் - சொல்லான் வருங்குற்றம். குறை - சிந்தனையால் வரும் தோஷம்.

ஞானசம்பந்தன் புகலூரைச் (சொன்ன) தமிழ்மாலை பற்றி, பாடிய மாந்தர் பொலிவார் என இயைத்துப் பொருள் கொள்க. 'கற்று நல்ல அவர் காழி' என்றது 'கற்றவர்கள் பணிந்தேத்தும் கழுமலத்துள் ஈசன்' என்ற பகுதியை நினைவூட்டுவது. ஒழியா - ஒழிந்து; செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

திருத்தொண்டர் புராணம்

திருஞானசம்பந்தர் புராணம்

நீலநக் கடிகளும் நிகழ்சிறுத் தொண்டரும்
உடன் அணைந்தெய்து நீர்மைச்
சீலமெய்த் தவர்களுங் கூடவே கும்பிடுஞ்
செய்கைநேர் நின்று வாய்மை
சாலமிக் குயர்திருத் தொண்டின்உண்மைத்திறந்
தன்னையே தெளிய நாடிக்
காலமுய்த் தவர்களோ டளவளா விக்கலந்
தருளினார் காழி நாடர்.

கும்பிடுங் கொள்கையிற் குறிகலந் திசை எனும்
பதிகமுன் னான பாடல்
தம்பெருந் தலைமையால் நிலைமைசால் பதியதன்
பெருமைசால் புறவி ளம்பி
உம்பரும் பரவுதற் குரியசொற் பிள்ளையார்
உள்ள மெய்க் காதல் கூர
நம்பர்தம் பதிகளா யின எனைப் பலவுமுன்
நண்ணியே தொழந யந்தார்.

– சேக்கிழார்.

Koviloor Digital Library

3. திருவலிதாயம்

பதிக வரலாறு:

திருஞானசம்பந்த சுவாமிகள் அடியார் கூட்டத்தோடும் 'மலேயுங் கானுங் கடந்து போந்து, பாலியாற்று வடகரையை அடைந்து, திருவேற்காட்டை வணங்கி அதனை அடுத்துள்ள வலிதாயத்தை வணங்கும்போது 'பத்தரோடு' என்னும் இத்திருப் பதிகத்தைப் பாடியருளினுர்கள்.

பண்: நட்டபாடை

பதிக எண்: 3

திருச்சிற்றம்பலம்

23. பத்தரோடுபல ரும்பொலியம்மலர்
அங்கைப்புனல்தூவி
ஒத்தசொல்லியுல கத்தவர்தாந்தொழு
தேத்தவுயர்சென்னி
மத்தம்வைத்தபெரு மான்பிரியாதுறை
கின்றவலிதாயம்
சித்தம்வைத்தவடி யாரவர்மேலடை
யாமற்றிடர்நோயே. 1

1. பொ-ரை : வலிதாயம் சித்தம் வைத்த அடியார்களை இடர் நோய் அடையா என வினை முடிபு கொள்க. சிவனடியார்கள், விளங்குகின்ற அழகிய மலர்களை அகங் கையில் ஏந்தி மந்திரத்தோடு நீர் வார்த்துப் பூசிக்க அவர்களோடு ஒரே இசையில் அம்மந்திரங் களைச் சொல்லி உலக மக்கள் தாமும் வெளிநின்று தொழுதேத்துமாறு ஊமத்தை மலரை முடிமிசைச் சூடிய பெருமான் பிரியாதுறையும் வலிதாயம் என்ற தலத்தைத் தம் சித்தத்தில் வைத்துள்ள அடியவர்கள் மேல் துன்பங்களோ நோய்களோ வந்தடைய மாட்டா.

கு-ரை : இது திருவலிதாயத்தைத் தியானிப்பவர்களுக்குத் துன்பம் இல்லை என்கின்றது.

மந்திர புஷ்பம் இடுவதற்காக வலக்கையில் பூவை வைத்து

Koviloor Digital Library

24. படையிலங்குகர மெட்டுடையான்படி
றாகக்கலனேந்திக்
கடையிலங்குமனை யிற்பலிகொண்டுணுங்
கள்வன்னுறைகோயில்
மடையிலங்குபொழி லின்னிழல்வாய்மது
வீசும்வலிதாயம்
அடையநின்றவடி யார்க்கடையாவினை
யல்லற்றுயர்தானே. 2

அர்க்கிய ஜலத்தைச் சொரிந்து கையைமூடி அபிமந்திரித்துப் பலர் கூடி வேத மந்திரங்களைச் சொல்லி, இறைவற்குச் சாத்துதல் மரபாதலின் அதனைப் 'பத்தரோடு....... ஒத்தசொல்லி' என்பதால் குறிப்பிடுகிருர்.

பத்தர் - பூசிக்கும் சிவனடியார்கள். பலர் - உடனிருக்கும் சிவனடியார்கள். பொலியம்மலர் - விளங்குகின்ற அழகிய மலர். புனல் தூவி - அர்க்கிய ஜலத்தை மந்திரத்தோடு சொரிந்து. ஒத்த சொல்லி - ஒரே ஸ்வரத்தில் வேதமந்திரங்களைச் சொல்லி என்ற செய்தென் எச்சத்தைச் சொல்ல என்று செயவெனெச்சமாக்குக. அங்ஙனம் அவர்கள் திருவணுக்கன் திருவாயிலில் நின்று வேத மந்திரங்களைச் சொல்கின்ற காலத்து வழிபடும் அடியார்கள் தொழுவார்கள் ஆதலின், அதனை உலகத்தவர் தாம் தொழுதேத்த என்பதால் விளக்குகின்றார். பிரியாதுறைகின்ற என்றது இறைவன் எங்கணும் பிரியாது உறைபவனாயினும் இங்கே அனைவர்க்கும் விளங்கித் தோன்றும் எளிமைபற்றி. அடியாரவர்மேல் என்றதில் 'அவர்' வேண்டாத சுட்டு. இதனைச் சேர்த்து அடியார்கள் பெருமை விளக்கியவாறு. இடர் - ஆதிபௌதிகம் முதலிய வினைகளால் வரும் துன்பம். நோய் - பிறவிநோய். 'பத்தரோடு பலரும் தூவிச்சொல்ல உலகத்தவர் தொழுது ஏத்தப்பெருமான் பிரியாதுறைகின்ற வலிதாயத்தைச் சித்தம் வைத்த அடியார்மேல் இடர் நோய் அடையா' எனக் கூட்டுக.

2. பொ-ரை : படைக் கலங்களை ஏந்திய எட்டுத் திருக்கரங்களை உடைய பெருமானும், பொய்யாகப் பலியேற்பது போலப் பிரம கபாலத்தைக் கையில் ஏந்தி வீடுகளின் வாயில்களிற் சென்று பலி யேற்றுண்ணும் கள்வனும் ஆகிய பெருமான் உறையும் கோயிலை உடையதும், நீர்வரும் வழிகள் அடுத்துள்ள பொழில்களின் நீழலில் தேன்மணம் கமழ்வதுமாகிய வலிதாயத்தை அடைய எண்ணும் அடியவர்களை வினை அல்லல் துயர் ஆகியன வந்தடைய மாட்டா.

Koviloor Digital Library

25. ஐயன்நொய்யன்னணி யன்பிணியில்லவ
 ரென்றுந்தொழுதேத்தச்
செய்யன்வெய்யபடை யேந்தவல்லான்றிரு
 மாதோடுறைகோயில்
வையம்வந்துபணி யப்பிணிதீர்த்துயர்
 கின்றவலிதாயம்
உய்யும்வண்ணந்நினை மின்நினைந்தால்வினை
 தீரும்நலமாமே. 3

கு-ரை: இது வலிதாயத்தை அடையும் அடியார்கட்கு வினை யில்லை என்றது.

படிறாக - பொய்யாக. கலனேந்தி - பிரமகபாலத்தைத் திருக்கரத்தில் ஏந்தி; என்றது உலகமெல்லாவற்றையும் தமக்கு உடைமையாகக் கொண்ட இறைவன் பலிகொண்டுண்டான் என்பது பொருந்தாது ஆகலின், அதுவும் அவருக்கோர் விளையாட்டு என்பதை விளக்க. படிருக, ஏந்தி, கொண்டு, உண்டுணும் கள்வன் எனக்கூட்டுக. அன்றியும், கள்வனாதற்குப் படிறும் இயைபுடைமை காண்க. வினை அல்லல் துயர் - வினை ஏதுவாக வரும் அல்லலும் துன்பமும்.

3. பொ-ரை : வலிதாயத்தை உய்யும் வண்ணம் நினைமின்; நினைந்தால் பிணி தீரும், இன்பம் ஆம் என வினை முடிபு கொள்க. அழகன், நுண்ணியன், அருகிலிருப்பவன், செந்நிறமேனியன், நெடிய மழுவை ஏந்தும் ஆற்றலன். அவன் பாசங்கள் நீங்கிய அடியவர் எக்காலத்தும் வணங்கித் துதிக்குமாறு உமையம்மையோடு உறையும் கோயில் உலக மக்கள் அனைவரும் வந்து பணிய அவர்களின் பிணிகளைத் தீர்த்து உயரும் திருவலிதாயம் என்ற அத்தலத்தை நீர் உய்யும்வண்ணம் நினையுங்கள். நினைந்தால் வினைகள் தீரும். நலங்கள் உண்டாகும்.

கு-ரை : இது வலிதாயம் உலகப் பிணியைத்தீர்ப்பது; அதனை நினைத்தால் நும் பிணியும் தீரும்; இன்பம் ஆம் என்கின்றது.

ஐயன் - அழகியன். நொய்யன் - அணுவினுக்கு அணுவாய் இருப்பவன். பிணியில்லவர் - அநாதியே பந்தித்து நிற்பதாகிய ஆணவமலக் கட்டற்ற பெரியார்கள். என்றும் தொழுதேத்த - முத்திநிலையிலும் தொழ. வெய்ய படை - கொடியவர்களுக்கு

Koviloor Digital Library

26. ஒற்றையேறதுடை யான்நடமாடியோர்
பூதப்படைசூழப்
புற்றினாகமரை யார்த்துழல்கின்றவெம்
பெம்மான்மடவாளோ
டுற்றகோயிலுல கத்தொளிமல்கிட
வுள்கும்வலிதாயம்
பற்றிவாழும்மது வேசரணாவது
பாடும்மடியார்க்கே. 4

வெம்மையாய் அடியவர்களுக்கு விருப்பமாய் இருக்கும்படை. திருமாது-உமாதேவி.

முடியுடை மன்னனைக்கண்டு பிடியரிசி யாசிப்பார் போலாது வலிதாயநாதரைத் தியானித்துக் காமியப் பயனைக் கருதாதீர்கள்; உய்யுநெறியைக் கேளுங்கள்; அப்போது அதற்கிடையூறாகிய வினைகள் நீங்கும்; இன்பம் உண்டாகும்; வினை நீங்குத லொன்றுமே இன்பம் என்பது சித்தாந்த முத்தியன்றாதலின் வினை தீரும் என்பதோ டமையாது நலமாமே என்று மேலும் கூறினார்.

4. பொ-ரை :அடியவர்க்கு வலிதாயத்தைப் பற்றி வாழ்வதே சரண் என முடிபு காண்க.

ஒற்றை விடையை உடையவன். சிறந்த பூதப்படைகள் சூழ்ந்துவர, புற்றில் வாழும் நாகங்களை இடையில் கட்டி நடனமாடி, உழலும் எம்பெருமான், உமையம்மையோடு உறையும் கோயில் உலகின்கண் ஒளி நிலைபெற்று வாழப் பலரும் நினைந்து போற்றும் வலிதாயமாகும். அடியவர்கட்கு அத்தலத்தைப் பற்றி வாழ்வதே அரணாம்.

கு-ரை : இது அடியார்களாகிய உங்களுக்கு வலிதாயத்தைப் பற்றி வாழ்வதே சரண் என்கின்றது.

ஒற்றையேறு - மற்ற இடபங்களோடு உடன்வைத்து எண்ணக் கூடாத அறவடிவமாகிய இடபம். புற்றில் நாகம் சாதியடை. வலிதாயம் உலகம் முழுவதுமே ஒளிநிறைய நினைக்கப்படுவது என்பது, வாழுமது - வாழ்வது. சரண் - அடைக்கலஸ்தானம்.

Koviloor Digital Library

27, புந்தியொன்றிநினை வார்வினையாயின
தீரப்பொருளாய
அந்தியன்னதொரு பேரொளியானமர்
கோயிலயலெங்கும்
மந்திவந்துகடு வன்னொடுங்கூடி
வணங்கும் வலிதாயஞ்
சிந்தியாதவவர் தம்மடும்வெந்துயர்
தீர்தலெளிதன்றே. 5

28. ஊனியன்றதலை யிற்பலிகொண்டுல
கத்துள்ளவரேத்தக்
கானியன்றகரி யின்னுரிபோர்த்துழல்
கள்வன்சடைதன்மேல்

5. பொ-ரை : வலிதாயம் கோயிலைச் சிந்தியாதவர் துயர் தீர்தல் எளிதன்று என முடிபு கொள்க. மனம் ஒன்றி நினைபவர் வினைகளைத் தீர்த்து அவர்க்குத் தியானப் பொருளாய்ச் செவ்வான் அன்ன பேரொளி யோடு காட்சி தரும் இறைவன் எழுந்தருளியுள்ள கோயிலாய் அயலில் மந்தி ஆண்குரங்கோடு கூடி வந்து வணங்கும் சிறப்பை உடைய திருவலிதாயத்தைச் சிந்தியாத அவர்களைத் தாக்கும் கொடிய துன்பம், தீர்தல் எளிதன்று.

கு-ரை : இது, பரிபாக விசேடம் கைவரப் பெறாத மந்தியும் கடுவனும்கூட வணங்கும்பொழுது, அச்சிறப்பு வாய்ந்த மக்கள் வழி படாராயின் அவர் வினை தீராதென்பதை அறிவிக்கின்றது. புந்தி யொன்றி நினைவார் - மனம் பொறிவழிச்சென்று புலன்களைப் பற்றாமல் ஒருமையாய் நின்று தியானிக்கும் அடியார்கள். பொரு ளாய - தியானிக்கும் பொருளாய. அந்தியன்னதொரு பேரொளி யான் - அந்திக்காலத்துச் செவ்வொளிபோன்ற திருமேனியுடையான். மந்தியும் கடுவனும் வணங்கும் வலிதாயம் என்றமையால் மக்களும் தம் இல்லற இன்பம் குலையாதே வந்து வணங்கும் பெற்றியர் என்பது விளக்கியவாறு.

6. பொ-ரை : வலிதாயத்திறைவனை நறுமாமலர் கொண்டு நின்றேத்தத் தெளிவு ஆம் என வினை முடிபு கொள்க. ஊன் கழிந்த பிரமகபாலத்தில் பலி ஏற்று உலகத்தவர் பலரும் ஏத்தக் காட்டில் திரியும் களிற்றுயானையின் தோலை உரித்துப் போர்த்துத் திரியும் கள்வனும்,

Koviloor Digital Library

வானியன்றபிறை வைத்தவெம்மாதி
மகிழும்வலிதாயந்
தேனியன்றநறு மாமலர்கொண்டுநின்
றேத்தத்தெளிவாமே. 6

29. கண்ணிறைந்தவிழி யின்னழலால்வரு
காமன்னுயிர்வீட்டிப்
பெண்ணிறைந்தவொரு பான்மகிழ்வெய்திய
பெம்மானுறைகோயில்
மண்ணிறைந்தபுகழ் கொண்டடியார்கள்
வணங்கும்வலிதாயத்
துண்ணிறைந்தபெரு மான்கழலேத்தநம்
முண்மைக்கதியாமே. 7

சடையின்மேல் வானகத்துப் பிறைக்கு அடைக்கலம் அளித்துச் சூடிய எம் முதல்வனும் ஆகிய பெருமான், மகிழ்ந்துறையும் திருவலி தாயத்தைத் தேன் நிறைந்த நறுமலர் கொண்டு நின்று ஏத்தச் சிவஞானம் விளையும்.

கு-ரை : இது வலிதாயம் தொழ ஞானம் உண்டாம் என்கின்றது. ஊனியன்ற தலை - ஊன்கழிந்த தலை. பலி - பிச்சை. கான் - காடு. வானியன்ற - வானில் இலங்குகின்ற. ஆதி - முதற்பொருள்; யாவற் றிற்கும் முதலாயுள்ளவன். தெளிவு - ஞானம்.

7. பொ-ரை : வலிதாய நாதன் கழலை ஏத்தினால் வீட்டின்பத்தை அடையலாம் என வினை முடிபு காண்க.நெற்றி விழியின் அழலால், தேவர் ஏவலால் வந்த காமனது உயிரை அழித்துத் தனது திருமேனி யின் பெண்ணிறைந்த இடப் பாகத்தால் மகிழ்வெய்திய பெருமான் உறை கோயிலாய் நிலவுல கெங்கும் நிறைந்த புகழைக்கொண்ட, அடியவர்கள் வணங்கும் திருவலிதாயத்துள் நிறைந்து நிற்கும் பெருமான் திருவடிகளை வணங்கினால் வீடு பேறு அடையலாம்.

கு-ரை : இது ஆன்மாக்கள் என்றும் அடையத்தகும் கதியாகிய வீட்டின்பத்தை வலிதாயநாதன் கழல் ஏத்த அடையலாம் என்கின்றது. கண்நிறைந்த விழி - கண்ணாகிய உறுப்பு முழுவதும் வியாபித் திருக்கின்ற விழி. அன்றியும் கண் நிறைந்த அழல் எனவும்கூட்டலாம்.

Koviloor Digital Library

30. கடலினஞ்சமமு துண்டிமையோர்தொழு
தேத்தநடமாடி
அடலிலங்கையரை யன்வலிசெற்றருள்
அம்மான்அமர்கோயில்
மடலிலங்குகமு கின்பலவின்மது
விம்மும்வலிதாயம்
உடலிலங்குமுயி ருள்ளளவுந்தொழ
வுள்ளத்துயர்போமே. 8

வருகாமன் - தேவ காரியத்தை முடிப்பதற்காக இந்திரன் கோபத்திற் காளாகி இறப்பதைக்காட்டிலும் சிவபெருமான் மறக்கருணையால் உய்வேன் என்று விரும்பிவந்த காமன். வீட்டி - அழித்து. உயிர் வீட்டி என்றது நித்தியமாகிய உயிரை அழித்ததன்று, அதனைத் தன்னகத் தொடுக்கி, உண்மைக்கதி - என்றும் நிலைத்த முத்தி.

8. பொ-ரை : உடலில் உயிர் உள்ள அளவும் தொழுவாரது மனத் துயரம் கெடும் என வினை முடிபு காண்க. திருப்பாற்கடலைக் கடைந்த போது எழுந்த நஞ்சினை அமுத மாக உண்டு தேவர்கள் தொழுது வாழ்த்த நடனம் ஆடி, வலிமை மிக்க இலங்கை மன்னனின் ஆற்றலை அழித்துப் பின் அவனுக்கு நல்லருள் புரிந்த இறைவன் எழுந்தருளிய கோயிலை உடையதும், மடல்கள் விளங்கும் கமுகு பலாமரம் ஆகியவற்றின் தேன் மிகுந்து காணப்படுவதுமாகிய திருவலிதாயத் தலத்தை நினைக்க மனத்துயர் கெடும்.

கு-ரை : இது வினைக்கீடாகிய உடலில் உயிருள்ள அளவும் தொழுவாரது மனத்துன்பம் மடியும் என்கின்றது. கடல் - பாற்கடல் நஞ்சம் அமுதுண்டு என்றது நஞ்சின் கொடுமைகண்டும் அதனை அமுதாக ஏற்றமையை. இலங்கை யரையன் வலிசெற்று என்றது அவன் வலிமை காரணமாகவே செருக்கியிருந்தானாகலின் அவனை அது கெடுத்து ஆட்கொண்டார் என்றது.

குருவருள்: சிவபூசை எடுத்துக்கொள்பவர் ''என் உடலில் உயிர் உள்ள அளவும் பூசையை விடாது செய்து வருவேன்'' என்ற உறுதி மொழி கொடுத்தே எடுத்துக்கொள்வர். அக்கருத்தை இப்பாடலின் இறுதிவரி குறிப்பிடுதலைக் காணலாம். ''பழனஞ்சேர் அப்பனை என்கண் பொருந்தும் போழ்தத்தும் கைவிட நான் கடவேனோ'' என்ற அப்பர் தேவாரமும் காண்க.

Koviloor Digital Library

31. பெரியமேருவரை யேசிலையாமலை
வுற்றாரெயின்மூன்றும்
எரியவெய்தவொரு வன்னிருவர்க்கறி
வொண்ணாவடிவாகும்
எரியதாகியுற வோங்கியவன்வலி
தாயந்தொழுதேத்த
உரியராகவுடை யார்பெரியாரென
வுள்கும்முலகோரே. 9

32. ஆசியாரமொழி யாரமண்சாக்கிய
ரல்லாதவர்கூடி
ஏசியீரமில ராய்மொழிசெய்தவர்
சொல்லைப்பொருளென்னேல்

9. பொ-ரை : வலிதாயத்தை வணங்குவாரைப் பெரியார் என உலகோர் உள்குவர் என முடிபு காண்க.தேவர்களோடு மாறுபட்ட திரிபுரஅசுரர்களின் கோட்டைகள் மூன்றையும், மிகப் பெரிய மேரு மலையை வில்லாகக் கொண்டு எரியும்படி அழித்த ஒருவனும், திரு மால் பிரமன் ஆகிய இருவராலும் அறிய ஒண்ணாத அழல் வடிவாய் உயர்ந்தோங்கியவனும் ஆகிய சிவபிரானது திருவலிதாயத்தைத் தொழுது ஏத்தலைத் தமக்குரிய கடமையாகக் கொண்ட உலக மக்கள் பலரும் பெரியார் என நினைந்து போற்றப்படுவர்.

கு-ரை : இது வலிதாயத்தை வணங்குவாரே பெரியர் என உலகத்தோர் உள்குவர் என்கின்றது. பெரிய மேருவரை என்றது மலை களில் எல்லாம் பெரியதாய், தலைமையாய் இருத்தலின். சிலை - வில். மலைவுற்ருர் - சண்டைசெய்த திரிபுராதிகள். எய்த ஒருவன் - அம்பு எய்து எரித்த ஒப்பற்றவன். இருவர் - பிரமனும் திருமாலும். எட்டுக்கண்ணும், இருகண்ணும் படைத்திருந்தும் அறியமுடியாத அக்கினிப்பிழம்பாகிய அண்ணாமலையாய் நின்ற இறைவன். தாம் தெய்வம் என்று இறுமாப்பார் இருவராலும் அறிய ஒண்ணாதவன் என்பதாம். ஏத்த உரியராக உடையார் - பணிதலே தமக்கு உரிமையாக உடைய அடியார்கள். உலகோர் உள்கும் - உலகத்தார் நினைப்பர்.

10. பொ-ரை : வலிதாயத்தின் புகழைப் பேசுபவர்க்கு யாம் அடியர் எனப் பெரியோர்கள் பேணுவர்.மனமார வாழ்த்தும் இயல்பின ரல்லாத சமணர் சாக்கியர் ஆகிய புறச்சமயிகள் கூடி இகழ்ந்தும்

Koviloor Digital Library

வாசிதீரவடி யார்க்கருள்செய்து
வளர்ந்தான்வலிதாயம்
பேசுமார்வமுடை யாரடியாரெனப்
பேணும்பெரியோரே. 10

33. வண்டுவைகும்மண மல்கியசோலை
வளரும்வலிதாயத்
தண்டவாணனடி யுள்குதலாலருண்
மாலைத்தமிழாகக்
கண்டல்வைகுகடற் காழியுண்ஞானசம்
பந்தன்றமிழ்பத்துங்
கொண்டுவைகியிசை பாடவல்லார்குளிர்
வானத்துயர்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

அன்பின்றியும் பேசும் சொற்களைப் பொருளாகக் கொள்ளாதீர். குற்றம் தீர, அடியவர்கட்கு அருள் செய்து புகழால் ஓங்கிய பெருமானது வலிதாயத்தின் புகழைப் பேசும் ஆர்வம் உடையவர்களே, அடியார்கள் என விரும்பப்படும் பெரியோர் ஆவர்.

கு-ரை : இது, ஏற்றத்தாழ்வற அடியார் எல்லார்க்கும் அருள் செய்யும் வலிதாயத்தைப் பேசுபவர்க்கு யாம் அடியர் எனப் பெரியோர்கள் பேணுவார் என்கின்றது. ஆசியார மொழியார் - ஆசிகளை நிரம்பச்சொல்லும் மனப்பண்பற்ற சமணர்கள். அல்லாதவர் - சைவத்திற்குப் புறம்பானவர்கள். ஏசி - இகழ்ந்து, ஈரம் - அன்பு. பொருள் என்னேல் - உறுதிப் பொருளாகக் கொள்ளாதே. வர்சிதீர - வேற்றுமை நீங்க. இறைவன் வாசிதீரக்காசு நல்கும் வள்ளன்மை விளங்கக் கூறியதுமாம். பேசும் ஆர்வம் - இடைவிடாது பாராட்டிப்பேசும் விருப்பம். ஆர்வம் - அமையாத காதல். பெரியோர் ஆர்வமுடையார்க்கு அடியார் எனப் பேணும் என உருபுவிரித்துப் பொருள்காண்க.

11. பொ-ரை : வலிதாய நாதன்மீது பாடிய இத்திருப்பதிகத்தை இசையோடு பாடுவார் குளிர் வானத்துயர்வார் என முடிபு காண்க.

வண்டுகள் மொய்க்கும் மணம் நிறைந்த சோலைகள் வளரும் திருவலிதாயத்தில் விளங்கும் அனைத்துலக நாதனின் திருவடிகளைத்

Koviloor Digital Library

தியானிப்பதால், தாழைகள் வளரும் கடற்கரையை அடுத்துள்ள சீகாழிப்பதியில் தோன்றிய ஞானசம்பந்தன் தமிழ் மாலையாக அருளிச் செய்த இத்திருப்பதிகத்தைச் சிறந்த தோத்திரமாகக் கொண்டு அமர்ந் திருந்து இசை யோடு பாடவல்லார், குளிர்ந்த வானுலக வாழ்க்கையினும் உயர்வு பெறுவர்.

கு-ரை : இது, வலிதாயநாதன்மீது பாடிய இப்பத்துப் பாடலை யும் மனத்துள்கொண்டு சிந்தித்துத் தெளிந்து இசையோடு பாடவும் வல்லவர்கள் சுவர்க்கபோகத்தினும் பெரிய போகம் எய்துவர் என்கின்றது. மல்கிய - நிறைந்த. அண்டவாணன் - அண்டங்கள் தோறும் ஒன்றாயும் உடனாயுமிருந்து வாழ்பவன். அவன் திருவடியை இடைவிடாது தியானிப்பதால் மாலைபோன்ற தமிழாகக் கூறிய ஞானசம்பந்தப் பெருமானது தமிழ்ப்பாடல் பத்தையும் வல்லவர் உயர்வார் எனக் கூட்டுக. கண்டல் - தாழை. கடற்காழி - கடற்கரை நாடாகிய காழி என்பதுமட்டும் அன்று; கடலில் மிதந்த காழி என்ற தையும் உட்கொண்டு. மாலைத்தமிழ் - ஒருபொருள்மேற்கூறிய கோவையாகிய பாடல். வலிதாயநர்தரை மனமொழி மெய்களான் வணங்கியவர் வினையறுவர் வீடுபெறுவர் என்ற ஒருபொருளையே கூறுதலின் இது மாலைத்தமிழாயிற்று. இசைபாடவல்லார் வானத்து வைகி உயர்வார் என இயைப்பாரும் உளர். இசைபாட வல்லார்க்கு வானத்தின்பம் ஒரு பொருளாகத் தோன்றாதாதலின் வானத்தினும் உயர்வர் என்பதே அமையுமாறு காண்க.

திருத்தொண்டர் புராணம்

திருஞானசம்பந்தர் புராணம்

திருவேற்கா டமர்ந்தசெழுஞ் சுடர்பொற் கோயில்
சென்றணைந்து பணிந்துதிருப் பதிகம் பாடி
வருவேற்று மனத்தவுணர் புரங்கள் செற்றார்
வலிதாயம் வந்தெய்தி வணங்கிப் போற்றி
உருவேற்றார் அமர்ந்துறையும் ஓத வேலை
ஒற்றியூர் கைதொழச் சென் றுற்றபோது
பெருவேட்கை தருவாழ்வு பெற்ற தொண்டர்
பெரும்பதியோர் எதிர்கொள்ளப் பேணி வந்தார்.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

4. திருப்புகலியும் திருவீழிமிழலையும்

பதிக வரலாறு:

திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருப்பேணு பெருந்துறையும், திருத்திலதைப் பதியும் வழிபட்டுத் திருவீழிமிழலைக்கு மீட்டும் எழுந்தருளி அங்கே வீற்றிருக்கின்றார்கள். அப்போது சீகாழிப் பதியிலுள்ள அந்தணர்கள் வீழிமிழலைக்கு வந்து பிள்ளையாரைச் சீகாழிக்கு எழுந்தருளும்படி வேண்டிக் கொள்கின்றனர். சுவாமிகள் 'தோணிநாதர் கழலிறைஞ்ச, நாளைக்கு வீழிநாதன் அருள்பெற்றுப்போகலாம்' என்றருளிச் செய்திருந்தனர். அன்றிரவு சுவாமிகள் கனவில், 'தோணியில் நாம் அங்கிருந்தவண்ணம் தூமறைவீழி மிழலை தன்னுள், சேணுயர் விண்ணின் இழிந்த இந்தச் சீர்கொள் விமானத்துக் காட்டுகின்றோம் பேணும்படியால் அறிதி' என்று காழிநாதர் திருவாய்மலர்ந்தனர். இதனை அறிந்த சுவாமிகள் விம்மிதமுற்று, விடிந்ததும் எழுந்து திருமஞ்சனம் முடித்து வீழிக் கோயிலில் விண்ணிழி விமானத்துட்சென்று வணங்கினார். அங்கே திருத்தோணியிற் காணுந்திருவோலக்கத்தைக் கண்டு வியந்து வினாவுரையாக 'மைம்மரு பூங்குழல்' என்ற இந்தத் திருப் பதிகத்தைப் பாடியருளுகிறார்கள்.

இத்திருப்பதிகத்தின் ஒன்பதாம் பாடலில் வீழிமிழலையில் பெருமான் 'எறிமழு வோடிள மான்கை யின்றி' இருந்த பண்டைய நிலையைக் கூறி மகிழ்கிறார்கள். காழிக்காட்சியாகச் சுவாமிகள் வீழியிற் கண்டதைச் சேக்கிழார்பெருமான் 'மறியுற்ற கையரைத் தோணிமேல் முன் வணங்கும்படி அங்குக் கண்டு' என்று குறிப்பிடுகின்றார்கள். இது அறிஞர்க்குப் பெருவிருந்தாகும்.

வினாவுரை:- காழியில் அம்மையப்பராக எழுந்தருளி யிருக்கும் காட்சியை வீழிமிழலையிற்காட்ட, தரிசித்த சம்பந்தப் பெருமான் வினாவாக உரைத்தன.

KOVILOOR LIBRARY
A. No. 16811

Koviloor Digital Library

வினாவுரை
பண்: நட்டபாடை

பதிக எண்: 4

திருச்சிற்றம்பலம்

34. மைம்மரு பூங்குழற் கற்றைதுற்ற
வாணுதன் மான்விழி மங்கையோடும்
பொய்ம்மொழி யாமறை யோர்களேத்தப்
புகலி நிலாவிய புண்ணியனே
எம்மிறை யேயிமை யாதமுக்க
ணீசவெ னேசவி தென்கொல்சொல்லாய்
மெய்ம்மொழி நான்மறை யோர்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே. 1

இதுமுதல் பத்துத் திருப்பாடல்களும் புகலி நிலாவிய புண்ணியனே! நீ வீழிமிழலையிலுள்ள விண்ணிழி விமானம் விரும்பியது ஏன்? என வினவுவதாக அமைந்துள்ளன.

1. பொ-ரை: கற்றையாகச் செறிந்து கருமை மருவி வளர்ந்த அழகிய கூந்தலையும், ஒளி சேர்ந்த நுதலையும், மான் விழி போன்ற விழியையும் உடைய உமையம்மையோடு, பொய் பேசாத அந்தணர்கள் ஏத்தப் புகலியில் விளங்கும் புண்ணியம் திரண்டனைய வடிவினனே, எம் தலைவனே! இமையாத முக்கண்களை உடைய எம் ஈசனே!, என்பால் அன்பு உடையவனே, வாய்மையே பேசும் நான்மறையை ஓதிய அந்தணர் வாழும் திருவீழிமிழலையில் திருமாலால் விண்ணிலிருந்து கொண்டுவந்து நிறுவப்பட்ட கோயிலில் விரும்பியுறைதற்குரிய காரணம் என்னையோ? சொல்வாயாக!

கு-ரை: மை மரு - கருமை சேர்ந்த. பொய்மொழியா மறையோர்கள் - என்றும் பொய்யேசொல்லாத வேதியர்கள்.

புகலி - சீகாழி. நேச - அன்புடையவனே. மெய் மொழி நான் மறை - என்றும் நிலைத்தமொழியினையுடைய நான்கு வேதம். மங்கையோடும் நிலாவிய, ஏத்த நிலாவிய புண்ணியன் எனக்கூட்டுக.

குருவருள்: ''பொய் மொழியா மறையோர்'' என்று காழி அந்தணர்களை எதிர்மறையால் போற்றிய ஞானசம்பந்தர் ''மெய்ம்

Koviloor Digital Library

35. கழன்மல்கு பந்தொடம் மானைமுற்றில்
கற்றவர் சிற்றிடைக் கன்னிமார்கள்
பொழின்மல்கு கிள்ளையைச் சொற்பயிற்றும்
புகலி நிலாவிய புண்ணியனே
எழின்மல ரோன்சிர மேந்தியுண்டோ
ரின்புறு செல்வமி தென்கொல்சொல்லாய்
மிழலையுள் வேதிய ரேத்திவாழ்த்த
விண்ணிழி கோயில் விரும்பியதே. 2

மொழி நான்மறையோர்'' என வீழி அந்தணர்களை உடன்பாட்டு முகத்தால் கூறியுள்ள நுண்மை காண்க. ''பொய்யர் உள்ளத்து அணு கானே'' என்ற அருணகிரிநாதர் வாக்கினையும் இதனோடு இணைத்து எண்ணுக.

சீனயாத்திரீகன் யுவான்சுவாங் என்பவன் தனது யாத்திரைக் குறிப்பில் பொய், களவு, சூது, வஞ்சகம் இல்லாதவர்கள் என இந்தியரின் சிறப்பைக் குறித்துள்ளமை இங்கு ஒப்பு நோக்கத் தக்கதாம். ஞானசம்பந்தர் காலமும் யுவான்சுவாங் காலமும் கி.பி. ஏழாம் நூற்றாண்டு ஆகும்.

2. பொ-ரை: மகளிர்க்குப் பொருந்திய கழங்கு, பந்து, அம்மானை, முற்றில் ஆகிய விளையாட்டுக்களைக் கற்ற சிற்றிடைக் கன்னிமார்கள், சோலைகளில் தங்கியுள்ள கிளிகட்குச் சொற்களைக் கற்றுக் கொடுத்துப் பேசச் செய்யும் திருப்புகலியில் விளங்கும் புண்ணியனே! அழகிய தாமரை மலரில் விளங்கும் பிரமனது தலையோட்டில் பலியேற்றுண்டு இன்புறும் செல்வனே! திருவீழி மிழலையில் வேதியர்கள் போற்றித் துதிக்க விண்ணிழி கோயிலை நீ விரும்பியதற்குக் காரணம் என்ன? சொல்வாயாக!

கு-ரை: கழல், பந்து, அம்மானை, முற்றில் முதலிய மகளிர் விளையாட்டுப் பொருள்கள் குறிக்கப் பெறுகின்றன.

கழல் - கழற்சிக்காய். முற்றில் - முச்சி(சிறுசுளகு), கன்னியர், சோலையிலுள்ள கிளிகட்குச் சொல் கற்றுக்கொடுக்கும் புகலி. எழில் - அழகு. மலரோன் - பிரமன். ஓர் - அசை. விண்ணிழிகோயில் - வீழி மிழலையிலுள்ள கோயிலின் பெயர்.

Koviloor Digital Library

36. கன்னிய ராடல் கலந்துமிக்க
கந்துக வாடை கலந்துதுங்கப்
பொன்னியன் மாட நெருங்குசெல்வப்
புகலி நிலாவிய புண்ணியனே
இன்னிசை யாழ்மொழி யாளோர்பாகத்
தெம்மிறை யேயிது வென்கொல்சொல்லாய்
மின்னிய நுண்ணிடை யார்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே. 3

37. நாகப ணந்திக ழல்குன்மல்கு
நன்னுதன் மான்விழி மங்கையோடும்
பூகவ னம்பொழில் சூழ்ந்தவந்தண்
புகலி நிலாவிய புண்ணியனே

3. பொ-ரை: கன்னிப் பெண்கள் விளையாட்டை விரும்பிப் பந்தாடுதற்குரிய தெருக்களில் கூடியாட உயர்ந்த பொன்னிறமான அழகுடன் விளங்கும் மாடங்கள் நெருங்கும் செல்வப் புகலி நிலாவிய புண்ணியனே! யாழினது இனிய இசைபோலும் மொழி பேசும் உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்ட எம் தலைவனே! மின்னல் போன்ற நுண்ணிய இடையினை உடைய அழகிய மகளிர் மருவும் திருவீழிமிழலையில் விண்ணிழி விமானத்தை நீ விரும்பியதற்குக் காரணம் என்னையோ? சொல்வாயாக!

கு-ரை: கன்னியர், விளையாட்டை விரும்பிப் பந்தாடு தற்குரிய வீதியில் கலந்து மாடங்களில் நெருங்குகின்ற செல்வப் புகலி எனக்கூட்டுக. கந்துகம் - பந்து. துங்கம் - உயர்ச்சி. மின் இயல் - மின்னலைப் போலும் இயல்பினையுடைய. யாழ் இன்னிசை மொழியாள் - யாழினது இனிய இசைபோலும் மொழியினை உடையாள். புகலியும் கன்னியர் பந்தாடுதற்குரிய வீதிகள் மாடங்கள் நெருங்கும் இயல்பினது; வீழியும் மின்னியல் நுண்ணிடையாரையுடையது; அங்ஙனமாகத் தேவரீர் வீழியை விரும்பியது ஏன்? என்றதில் நயம் காண்க.

4. பொ-ரை: பாம்பின் படம் போன்று திகழும் அல்குலையும், அழகு மல்கும் நுதலையும், மான் விழி போன்ற விழியையும் உடைய பார்வதிஅம்மையுடன் வளமான கமுகஞ்சோலைகள் சூழ்ந்து விளங்கும் அழகும் தண்மையும் உடைய சீகாழிப் பதியில் விளங்கும்

Koviloor Digital Library

ஏகபெ ருந்தகை யாயபெம்மா
னெம்மிறை யேயிது வென்கொல்சொல்லாய்
மேகமு ரிஞ்செயில் சூழ்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே. 4

38 . சந்தள றேறுத டங்கொள்கொங்கைத்
தையலொ டுந்தள ராதவாய்மைப்
புந்தியி னான்மறை யோர்களேத்தும்
புகலி நிலாவிய புண்ணியனே
எந்தமை யாளுடை யீசவெம்மா
னெம்மிறை யேயிது வென்கொல்சொல்லாய்
வெந்தவெண் ணீறணிவார்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே. 5

புண்ணியனே! தன்னொப்பார் இன்றித் தானே முதலாய பெருமானே! எம் தலைவனே! மேகங்கள் தோயும் மதில்கள் சூழ்ந்த திருவீழி மிழலையில் விண்ணிழி விமானக் கோயிலை விரும்பியது ஏன்! சொல்வாயாக.

கு-ரை: புண்ணியனே! எம் இறையே! விண்ணிழிகோயில் விரும்பியது என் கொல் சொல்லாய் எனக் கூட்டுக. நாகபணம் - பாம்பின் படம். அல்குலையும், நன்னுதலையும், மானவிழியையும் உடைய மங்கை எனக்கூட்டுக. பூகவனம் - கமுகந்தோட்டம். புகலி - சீகாழி, ஏகபெருந்தகை - பெருந்தகுதியால் தன்னொப்பார் பிறரின்றித் தான் ஒருவனே பெருந்தகையானவன். பெம்மான் - பெருமான் என்பதன் திரிபு. உரிஞ்சு - தோய்ந்த.

5. பொ-ரை: சந்தனக் குழம்பு பூசிய, பெரிதான தனங்களை உடைய உமையம்மையோடு, உண்மையில் தவறாத புத்தியினை உடைய நான்மறை அந்தணர்கள் போற்றும் புகலியில் விளங்கும் புண்ணியனே! எம்மை அநாதியாகவே ஆளாய்க் கொண்டுள்ள ஈசனே! எம் தலைவனே! எமக்குக் கடவுளே! வெந்த திருவெண் ணீற்றை அணிந்த அடியவர் வாழும் திருவீழிமிழலையுள் விண்ணிழி கோயிலை நீ விரும்புதற்குக் காரணம் என்னையோ? சொல்வாயாக!

கு-ரை: தளராத வாய்மைப் புந்தியின் நான்மறையோர்கள் - வேதங்களைப் பலகாலும் பயின்றதால் உண்மையினின்றும் தளராத

Koviloor Digital Library

39. சங்கொளி யிப்பி சுறாமகரந்
தாங்கி நிரந்து தரங்கமேன்மேற்
பொங்கொலி நீர்சுமந் தோங்குசெம்மைப்
புகலி நிலாவிய புண்ணியனே
எங்கள்பி ரானிமை யோர்கள்பெம்மா
னெம்மிறை யேயிது வென்கொல்சொல்லாய்
வெங்கதிர் தோய்பொழில் சூழ்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே. 6

புத்தியினையுடைய மறையோர்கள். சந்து அளறு - சந்தனச்சேறு.

தையலாரோடும் மறையோர்கள் ஏத்தும் எனச் சிறப்பித்தது மனந் தளர்தற்கேது இருந்தும் தளராத பொறிவாயில் ஐந்தவித்த புண்ணியர் எனத்தெரிவித்தவாறு. வெந்த வெண்ணீறு - இனி வேகுதற் கில்லாத - மாற்றமில்லாது, ஒருபடித்தான வெண்ணீறு.

எந்தமையாளுடையீச - எம்மை அநாதியே வழிவழியாளாக் கொண்ட தலைவ. ஈசன் - செல்வமுடையவன். எம்மான் - எமக் கெல்லாம் பெரியோய். இறை - தங்குதலையுடையவன். அணிவார் என்றது அடியார்களை.

6. பொ-ரை: ஒளி உடைய சங்கு, முத்துச் சிப்பிகள், சுறா, மகரம் ஆகிய மீன்கள், ஆகிய இவற்றைத் தாங்கி வரிசை வரிசையாய் வரும் கடல் அலைகளால் மேலும் மேலும் பொங்கும் ஒலியோடு கூடிய ஓதநீர் ஓங்கும் செம்மையான புகலியில் விளங்கும் புண்ணியனே! எங்கள் தலைவனே! இமையோர் பெருமானே! எம் கடவுளே! கதிரவன் தோயும் பொழில்களாற் சூழப்பெற்ற விண்ணிழி கோயிலை விரும்பியதற்குக் காரணம் என்னையோ! சொல்வாயாக!

கு-ரை: காழிக்குள்ள பெருமை கடலோதத்தில் தாழாது ஓங்கி யிருப்பது என்றது முதலிரண்டடிகளான் உணர்த்தப் பெறுகின்றது.

நிரந்து - வரிசையாய். தரங்கம் - அலை. பிரான் - வள்ளன்மை யுடையவன். பெம்மான் - பெருமான் என்பதன் திரிபு. வெங்கதிர் - சூரியன்.

Koviloor Digital Library

40. காமனெ ரிப்பிழம் பாகநோக்கிக்
காம்பன தோளியொ டுங்கலந்து
பூமரு நான்முகன் போல்வரேத்தப்
புகலி நிலாவிய புண்ணியனே
ஈமவ னத்தெரி யாட்டுகந்த
வெம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்
வீமரு தண்பொழில் சூழ்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே. 7

41. இலங்கையர் வேந்தெழில் வாய்த்ததிண்டோள்
இற்றல றவ்விர லொற்றியைந்து
புலங்களைக் கட்டவர் போற்றவந்தண்
புகலி நிலாவிய புண்ணியனே

7. பொ-ரை : மன்மதன் தீப்பிழம்பாய் எரியுமாறுகண்ணால் நோக்கி, மூங்கில் போலும் தோளினையுடைய உமையம்மையோடும் கூடி, தாமரை மலரில் விளங்கும் நான்முகன் போல்வார் போற்றப் புகலியில் விளங்கும் புண்ணியனே! சுடுகாட்டில் எரியாடலை விரும்பும் எம்பெருமானே! மலர்கள் மருவிய குளிர்ந்த பொழில்களால் சூழப் பெற்ற திருவீழிமிழலையில் விண்ணிழி கோயிலை விரும்பிய தற்குக் காரணம் என்னையோ! சொல்வாயாக!

கு-ரை : காமன் - விருப்பத்தை விளைவிக்குந் தெய்வம். எரிப் பிழம்பாக - தீயின் திரட்சியாக. நோக்கி என்றதால் விழித்தெரித்தமை குறிக்கப்படுகின்றது. காம்பு - முள்ளில்லாத மூங்கில். பூ மரு - தாமரைப் பூவைச் சேர்ந்த பிரமன் இந்திரன் முதலியவர்கள் பூசித்த தலமாதலின் நான்முகன் போல்வார் ஏத்த என்றார். ஈமவனம் - சுடுகாடு; என்றது சர்வசங்கார காலத்து எல்லாம் சுடுகாடாதலைக் குறித்தது. வீ - பூ. காமனை எரித்தவர் ஒரு பெண்ணோடு கலந்திருக் கின்றார் என்றது, அவர் கலப்பு எம்போலியர் கலப்புப்போல் காமத் தான் விளைந்ததன்று; உலகம் போகந்துய்க்கத் தான் போகியா யிருக்கின்ற நிலையைத் தெரிவித்தவாறு. ஈம எரியிலாட்டுகந்த பெருமான் பொழில் சூழ் மிழலை விரும்பியது எங்ஙனம் பொருந்தும்? என வினாவியது.

8. பொ-ரை : இலங்கையர் தலைவனாகிய இராவணன் அழகிய வலிய தோள்கள் ஒடிந்து, அலறுமாறு தன் கால் விரலால் சிறிது ஊன்றி,

Koviloor Digital Library

இலங்கெரி யேந்திநின் றெல்லியாடு
மெம்மிறை யேயிது வென்கொல்சொல்லாய்
விலங்கலொண் மாளிகை சூழ்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே. 8

42. செறிமுள ரித்தவி சேறியாறுஞ்
செற்றதில் வீற்றிருந் தானுமற்றைப்
பொறியர வத்தணை யானுங்காணாப்
புகலி நிலாவிய புண்ணியனே
எறிமழு வோடிள மான்கையின்றி
யிருந்தபி ரானிது வென்கொல்சொல்லாய்
வெறிகமழ் பூம்பொழில் சூழ்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே. 9

ஐம்புல இன்பங்களைக் கடந்தவர்களாகிய துறவியர் போற்ற, அழகிய தண்மையான புகலியில் விளங்கும் புண்ணியனே! விளங்கும் தீப் பிழம்பைக் கையில் ஏந்தி இரவில் இடுகாட்டில் ஆடும் எம் தலைவனே! மலை போன்ற ஒளி பொருந்திய மாளிகைகளால் சூழப் பெற்ற திருவீழிமிழலையில் விண்ணிழி கோயிலை விரும்பியதற்குக் காரணம் என்னையோ! சொல்வாயாக.

கு-ரை: புலங்களை வெல்லாத இராவணனை யலறச் செய்து, புலன்களை வென்றவர்கள் போற்ற இருக்கும் புகலியான் என நயந்தோன்றக் கூறியவாறு, இற்று - ஒடிந்து, விரல் ஒற்றி - காற்பெருவிரலால் சிறிது ஊன்றி. புலன் களை கட்டவர் - புலன் களாகிற களைகளைக் களைந்தவர். எல்லி - இரவு. விலங்கல் - மலை.

9. பொ-ரை: மணம் செறிந்த தாமரைத் தவிசில் அறுவகைக் குற்றங்களையும் விலக்கி ஏறி அதில் வீற்றிருக்கும் நான்முகனும், புள்ளிகளையுடைய பாம்பினைப் படுக்கையாகக் கொண்ட திருமாலும் காண இயலாதவனாய்ப் புகலியில் விளங்கும் புண்ணியனே! பகைவரைக் கொல்லும் மழுவாயுத்தோடு இளமான் ஆகியன கையின்கண் இன்றி விளங்கும் பெருமானே! மணம் கமழும் அழகிய பொழில்களால் சூழப்பெற்ற திருவீழிமிழலையில் விண்ணிழி கோயிலை விரும்பியதற்குக் காரணம் என்னையோ! சொல்வாயாக.

Koviloor Digital Library

43. பத்தர்க ணம்பணிந் தேத்தவாய்த்த
பான்மைய தன்றியும் பல்சமணும்
புத்தரு நின்றலர் தூற்றவந்தண்
புகலி நிலாவிய புண்ணியனே
எத்தவத் தோர்க்குமி லக்காய்நின்ற
வெம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்
வித்தகர் வாழ்பொழில் சூழ்மிழலை
விண்ணிழி கோயில் விரும்பியதே. 10

கு-ரை: முளரித் தவிசு - தாமரையாசனம்; (பதுமாசனம் என்னும் யோகாசனமுமாம்) ஆறும் செற்று - காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் என்னும் உட்பகை ஆறையும் அழித்து. அதில் வீற்றிருந்தான் - அந்தத் தாமரையில் வீற்றிருந்த பிரமன். பொறி அரவம் - படப்பொறிகளோடு கூடிய ஆதிசேடன். அணையான் என்றது திருமாலை.

குருவருள்: ''எறிமழுவோடிள மான் கையின்றி இருந்த பிரான்'' என்றதனால் தனக்குத் திருவீழிமிழலையில் அருள் செய்த பெருமான் மழு ஆயுதமும் மானும் கைகளில் இல்லாமல் சீகாழித் திருத்தோணி மலையில் வீற்றிருந்தருளும் உமாமகேசுரர் என்பதைக் குறித்தருள்கின் றார் ஞானசம்பந்தர். அங்ஙனம் உள்ள காழிக் கோலத்தை வீழியிலும் காட்டியது என்னே என்று வியந்து பாடுவதாக இப்பாடல் அமைந் துள்ளது.

10. பொ-ரை : தன்னிடம் பத்திமையுடையோர் பணிந்து போற்றும் பான்மையோடுகூடச் சமணரும், புத்தரும் அலர் தூற்ற, அழகிய குளிர்ந்த புகலியின்கண் விளங்கும் புண்ணியனே! எவ் வகையான தவத்தை மேற்கொண்டோரும் அடைதற்குரிய இலக்காய் நின்ற எம்பெருமானே! சதுரப்பாடுடைய அறிஞர்கள் வாழும் பொழில்கள் சூழ்ந்த திருவீழிமிழலையில் விண்ணிழி கோயிலை விரும்பியதற்குக் காரணம் என்னையோ! சொல்வாயாக.

கு-ரை : பத்தர்கணம் ஏத்த வாய்த்த பான்மையது அன்றியும் - அடியார்கள் தோத்திரிக்கப் பொருந்தியதோடல்லாமல். புறச்சமயத்தார் அலர் தூற்றவும் நிலவிய புண்ணியன் என்க. எத்தவத் தோர்க்கும் - ஹடயோகம், சிவயோகம் ஆகிய எத்தகைய தவத்தினை

Koviloor Digital Library

44 . விண்ணிழி கோயில் விரும்பிமேவும்
வித்தக மென்கொ லிதென்றுசொல்லிப்
புண்ணிய னைப்புக லிந்நிலாவு
பூங்கொடி யோடிருந் தானைப்போற்றி
நண்ணிய கீர்த்தி நலங்கொள்கேள்வி
நான்மறை ஞானசம் பந்தன்சொன்ன
பண்ணியல் பாடல்வல் லார்களிந்தப்
பாரொடு விண்பரி பாலகரே. 11

திருச்சிற்றம்பலம்

யுடையவர்க்கும், இலக்காய் - அவரவர் நிலைக் கேற்பக் குறித்துணரத் தக்க பொருளாய், வித்தகர் - சதுரப் பாடுடையவர்கள்; ஞானிகள்.

11.பொ-ரை : விண்ணிழி கோயில் விரும்பிய புண்ணியனைப் போற்றி ஞானசம்பந்தன் சொன்ன பாடல் வல்லார்கள் பாரொடு விண்ணகத்தையும் பரிபாலனம் புரிவர்.

புகலிப் பதியில் விளங்கும் புண்ணியனாய், அழகிய இளங்கொடி போன்ற உமையம்மையோடு விளங்குவானைத் துதித்துத் திருவீழிமிழலையில் விண்ணிழி கோயிலை விரும்பிய வித்தகம் என்னையோ சொல்லாய் என்று கேட்டுப் புகழால் மிக்கவனும் நலம்தரும் நூற்கேள்வி உடையவனும் நான்மறை வல்லவனும் ஆகிய ஞானசம்பந்தன் பாடிய பண்ணிறைந்த இப்பதிகத் திருப்பாடல்களை ஓதுபவர் நிலவுலகத்தோடு விண்ணுலகத்தையும் ஆளும் சிறப்புடையவராவர்.

கு-ரை: நண்ணிய கீர்த்தி நலங்கொள் கேள்வி நான்மறை ஞானசம்பந்தன் எனத் தன்னை வியந்ததாமோ எனின்; அன்று. ஞானசம்பந்தப் பிள்ளையார் இறைவனருள் வழிநின்று, தன் வசமற்று அவனுரை தனதுரையாகப் பாடிய பாடல்களாதலின் இது அவனுரை. ஆதலின் தன்னை வியந்து தான் கூறியதன்று. பாரொடு விண் என்ற ஒடு உயர்பின் வழித்தாய், பார் கன்ம பூமியாய் வீட்டிற்கு வாயிலாகும் சிறப்புடைமையின் சேர்க்கப் பெற்றது.

Koviloor Digital Library

5. கீழைத்திருக்காட்டுப்பள்ளி

பதிக வரலாறு:

திருவெண்காடு முதலிய தலங்களை வணங்கிக் கொண்டு சீகாழியை வந்தடைந்த பிள்ளையார், கீழ்ப்பாலுள்ள தலங்களாகிய மயேந்திரப்பள்ளி, குருகாவூர் முதலியவற்றையும் வணங்கத் திருவுளங்கொண்டெழுந்தருளியபோது, தென் கீழ்த் திசையிலுள்ள காழிநகருக்கு 12 - கி. மீ. தொலைவில் உள்ள கீழைத்திருக்காட்டுப்பள்ளியை அடைந்து வணங்கினார்கள்: வணங்கிய சுவாமிகள் 'செய்யருகே' என்னும் இப்பதிகத்தை அருளிச்செய்கிறார்கள்.

பண்: நட்டபாடை

பதிக எண்: 5

திருச்சிற்றம்பலம்

45. **செய்யரு கேபுனல் பாயவோங்கிச்**
செங்கயல் பாயச் சிலமலர்த்தேன்
கையரு கேகனி வாழையீன்று
கானலெல் லாங்கமழ் காட்டுப்பள்ளிப்
பையரு கேயழல் வாயவைவாய்ப்
பாம்பணை யான்பணைத் தோளிபாகம்
மெய்யரு கேயுடை யானையுள்கி
விண்டவ ரேறுவர் மேலுலகே. 1

1. பொ-ரை : வயலின்கண் நீர் பாய, அதனால் களித்த செங்கயல்மீன்கள் துள்ள, அதனால் சில மலர்களிலிருந்து தேன் சிந்துதலானும், கைக்கெட்டும் தூரத்தில் வாழை மரங்கள் கனிகளை ஈன்று முதிர்ந்ததனானும், காடெல்லாம் தேன் மணமும் வாழைப்பழ மணமும் கமழும் திருக்காட்டுப்பள்ளியுள், நச்சுப்பையினருகே அழலும் தன்மை உடைய ஐந்து வாயையும் கூரிய நச்சுப் பற்களையும் உடைய ஆதி சேடனை அணையாகக் கொண்ட திருமாலையும் உமையம்மையையும்

Koviloor Digital Library

✵ ✵ ✵ ✵ ✵ ✵ ✵ ✵ ✵ 2

46. திரைகளெல் லாமல ருஞ்சுமந்து
செழுமணி முத்தொடு பொன்வரன்றிக்
கரைகளெல் லாமணி சேர்ந்துரிஞ்சிக்
காவிரி கால்பொரு காட்டுப்பள்ளி
உரைகளெல் லாமுணர் வெய்திநல்ல
வுத்தம ராயுயர்ந் தாருலகில்
அரவமெல் லாமரை யார்த்தசெல்வர்க்
காட்செய வல்ல லறுக்கலாமே. 3

தனது மெய்யின் இடப்பாகமாகக் கொண்டு (அரியர்த்தர், அர்த்த நாரீசுரர்) விளங்கும் இறைவன் மீது பற்றுக்கொண்டு ஏனைய பற்றுக் களை விட்டவர், வீட்டுலகை அடைவர்.

கு-ரை: இது, ஆரணிய சுந்தரரைத் தியானித்து நெகிழ்ந்த மனத்தடியவர்கள் மேலுலகடைவர் என்கின்றது. செய் - வயல். வயலருகே நீர்பாய (அதனாற் களித்த) கயல்மீன் ஓங்கிப்பாய, சிலவாகிய மலர்களிலிருந்து தேன், காடெல்லாம்கமழும் காட்டுப் பள்ளி எனவும், கைக்கெட்டுந்தூரத்தில் வாழை, கனிகளை யீன்று கமழ்கின்ற காட்டுப்பள்ளி எனவும் கூட்டிப் பொருள் கொள்க. பையருகுஅழல்வாய்ப்பாம்பு அணையான் - விஷப்பையினருகே அழலுந்தன்மை வாய்ந்த கூரிய விஷப்பற்களையுடைய பாம்பை (ஆதிசேடனை) அணையாகக்கொண்ட திருமால்(போல). உள்கி, விண்டவர் மேலுலகு ஏறுவர் என முடிக்க. திருமால் பாம்பணை மேலிருந்து ஆனந்தத் தாண்டவத்தைத் தியானித்து மனம் நெகிழ்ந்தார் ஆதலின், அவ்வரலாற்றை உட்கொண்டு கூறியதாம். பணை - மூங்கில். மெய்யருகே - மெய்யில்.

2. ✵ ✵ ✵ ✵ ✵ ✵ ✵ ✵ ✵ ✵

3. பொ-ரை: காவிரியின் வாய்க்கால்கள் எல்லா மலர்களையும் சுமந்தும், செழுமையான மணிகள் முத்துக்கள் பொன் ஆகியவற்றை

Koviloor Digital Library

47. தோலுடை யான்வண்ணப் போர்வையினான்
சுண்ண வெண்ணீறு துதைந்திலங்கு
நூலுடை யானிமை யோர்பெருமான்
நுண்ணறி வால்வழி பாடுசெய்யுங்
காலுடை யான்கரி தாயகண்டன்
காதலிக் கப்படுங் காட்டுப்பள்ளி
மேலுடை யானிமை யாதமுக்கண்
மின்னிடை யாளொடும் வேண்டினானே. 4

வாரிக் கொண்டும் வந்து இருகரைகளிலும் அழகு பொருந்த உராய்ந்து வளம் சேர்க்கும் திருக்காட்டுப்பள்ளியுள் பாம்புகளை இடையில் கட்டிய செல்வராய் எழுந்தருளியிருக்கும் சிவபிரானுக்கு, வேதம் முதலான மேம்பட்ட உரைகள் யாவற்றையும் உணர்ந்த நல்ல உத்தமராய்த் தொண்டு செய்யின் அல்லல் அறுக்கலாம்.

கு-ரை: இது இறைவற்கு ஆட்செய்யின் அல்லல் அறுக்கலாம் என்கிறது. காவிரி கால் திரைகள் எல்லாமலருஞ்சுமந்து, மணி முத்தொடு பொன்வரன்றி, கரைகள் எல்லாம் அணிசேர்ந்து உரிஞ்சி பொருகாட்டுப்பள்ளி என இயைத்து, காவிரியாற்றின் வாய்க் கால்களின் அலைகள் எல்லா வகையான மலரையும் சுமந்து மணி களையும் முத்துக்களையும் பொன்னையும் வாரிக்கொண்டு, இரு கரைகளிலும் அழகு பொருந்த மோதிப் பொருதற்கு இடமாகிய காட்டுப்பள்ளி எனப் பொருள்கொள்க. உரைகள் எல்லாம் உணர் வெய்தி - வேதங்கள் யாவற்றையும் உணர்ந்து. நல்ல உத்தமராய் உலகில் உயர்ந்தார் செல்வர்க்கு ஆட்செய அல்லல் அறுக்கலாம் எனக்கூட்டுக.

4. பொ-ரை : புலித்தோலை ஆடையாக உடுத்தவன். யானைத் தோலை அழகிய போர்வையாகப் போர்த்தவன். திருவெண்ணீறாகிய சுண்ணத்தில் செறிந்து விளங்கும் பூணூலை மார்பகத்தே உடையவன். தேவர்கட்குத் தலைவன். பதிஞானத் தாலே அன்பர்கள் வழிபாடு செய்யும் திருவடிகளை உடையவன். கரிய கண்டத்தை உடையவன். பலராலும் விரும்பப் பெறும் திருக்காட்டுப்பள்ளியில் இமையாத

Koviloor Digital Library

48. சலசல சந்தகி லோடுமுந்திச்
சந்தன மேகரை சார்த்தியெங்கும்
பலபல வாய்த்தலை யார்த்துமண்டிப்
பாய்ந்திழி காவிரிப் பாங்கரின்வாய்க்
கலகல நின்றதி ருங்கழலான்
காதலிக் கப்படுங் காட்டுப்பள்ளிச்
சொலவல தொண்டர்க ளேத்தநின்ற
சூலம்வல் லான்கழல் சொல்லுவோமே. 5

மூன்றாவது கண்ணை நெற்றியில் உடைய அவ்விறைவன் மின்னல் போன்ற இடையினை உடைய உமையம்மையோடு விரும்பி எழுந் தருளியுள்ளான்.

கு-ரை : இது இறைவன் உமையாளோடு காட்டுப்பள்ளியை விரும்பி மேவினான் என்கின்றது. வண்ணப்போர்வை - அழகிய போர்வை, துதைந்து - செறிந்து, நுண்ணறிவால் வழிபாடு செய்யும் காலுடையான் - சிவஞானத்தால் அருளே வடிவாகக் கொண்டு வழி படும் திருவடியை உடையவன். நுண்ணறிவால் வழிபடாதவர்க்குத் திருவடி அருளாகக் காட்சியளிக்காது என்பது வெளிப்படை. நுண்ணறிவு - மெய்யறிவு.

5. பொ-ரை : சலசல என்னும் ஒலிக் குறிப்போடு சந்தனம் அகில் முதலியவற்றை அடித்துவந்து, சந்தனத்தைக் கரையில் சேர்த்துப் பற்பல வாய்க்கால்களின் தலைப்பில் ஆரவாரித்து ஓடிப் பாய்ந்து வயல்களில் இழிந்து வளம் சேர்க்கும் காவிரியின் தென்பாங்கரில் சலசல என்னும் ஓசையோடு அதிரும் கழல்களை அணிந்த இறைவ னால் விரும்பப்படும் திருக்காட்டுப்பள்ளியை அடைந்து இறைவனது பொருள்சேர் புகழ் பேசும் தொண்டர்களால் துதிக்கப்படும் அச் சூல பாணியின் திருவடிப் பெருமையை நாமும் கூறித் தோத்திரிப்போம்.

கு-ரை : இது காட்டுப்பள்ளியுள் தொண்டர்கள் துதிக்க இருந்த பெருமான் கழல்களைத் தோத்திரிப்போம் என்கின்றது. சலசல கலகல - ஒலிக்குறிப்பு, சந்து - சந்தனம், உந்தி - செலுத்தி. வாய்த்தலை -

Koviloor Digital Library

49. தளையவிழ் தண்ணிற நீலநெய்தல்
தாமரை செங்கழு நீருமெல்லாங்
களையவி ழுங்குழ லார்கடியக்
காதலிக் கப்படுங் காட்டுப்பள்ளித்
துளைபயி லுங்குழ லியாழ்முரலத்
துன்னிய வின்னிசை யாற்றுதைந்த
அளைபயில் பாம்பரை யார்த்தசெல்வர்க்
காட்செய வல்ல லறுக்கலாமே. 6

50. முடிகையி னாற்றொடு மோட்டுழவர்
முன்கைத் தருக்கைக் கரும்பின்கட்டி
கடிகையி னாலெறி காட்டுப்பள்ளி
காதல்செய் தான்கரி தாயகண்டன்

வாய்க்காலின் தலைப்புக்கள். ஆர்த்து - ஒலித்து, கழலான் - கழலானாய சிவபெருமான்.

6. பொ-ரை : கட்டவிழ்ந்த குளிர்ந்த நிறத்துடன்கூடிய நீலோற்பலம், நெய்தல், தாமரை, செங்கழுநீர் ஆகிய எல்லா மலர்களையும், அவிழ்ந்து, விழும் கூந்தலை உடைய உழத்தியர் களைகளாய்ப் பிடுங்கி எறியும் வளம் உடையதும், பலராலும் விரும்பப்படுவதும் ஆகிய திருக்காட்டுப்பள்ளியில் துளைகளால் ஓசை பயிலப் பெறும் புல்லாங் குழல் யாழ் ஆகியன இடைவிடாமல் ஒலிக்கும் இன்னிசை முழக்கோடு வளையினின்றும் பிரியாத பாம்புகளை இடையிற் கட்டி எழுந்தருளிய செல்வராகிய பெருமானுக்கு ஆளாய்த் தொண்டு செய்யின் அல்லல் அறுக்கலாம்.

கு-ரை : இதுவும் ஆரண்ய சுந்தரர்க்கு ஆட்செய அல்லல் அறுக்கலாம் என்கிறது. தளை - இதழ்களின்கட்டு. நீலம் முதலிய நீர்ப் பூக்களை, அவிழுங் கூந்தலையுடைய கடைசியர்கள் களையாகப் பிடுங்கி எறிகின்றார்கள். குழலார் களை கடிய எனக்கூட்டுக. துதைந்த ஆர்த்த செல்வர் எனக்கூட்டுக.

7. பொ-ரை : நாற்று முடியைக் கையால் பறிக்கும் வலிய உழவர்கள் தங்கள் முன்கைத் தினவை வெல்லக்கட்டியை உடைப்ப

Koviloor Digital Library

பொடியணி மேனியி னானையுள்கிப்
போதொடு நீர்சுமந் தேத்திமுன்னின்
றடிகையினாற்றொழ வல்லதொண்ட
ரருவினை யைத்துரந் தாட்செய்வாரே. 7

51. பிறையுடை யான்பெரி யோர்கள்பெம்மான்
பெய்கழ னாடொறும் பேணியேத்த
மறையுடை யான்மழு வாளுடையான்
வார்தரு மால்கடல் நஞ்சமுண்ட
கறையுடை யான்கன லாடுகண்ணாற்
காமனைக் காய்ந்தவன் காட்டுப்பள்ளிக்
குறையுடை யான்குறட் பூதச்செல்வன்
குரைகழ லேகைகள் கூப்பினோமே. 8

தால் போக்கிக் கொள்கின்ற திருக்காட்டுப்பள்ளியை விரும்பி உறைபவனும், கரிதான கண்டமுடையவனும், திருநீறணிந்த மேனியனும் ஆகிய பெருமானை நினைந்து அபிடேகநீர் மலர்கள் ஆகியவற்றை எடுத்துச் சென்று துதித்து முன்நின்று அவன் திருவடிகளைக் கையால் தொழ வல்ல தொண்டர்கள் நீக்குதற்கு அரிய வினைகளினின்றும் நீங்கி அவ்விறைவனுக்கு ஆட்செய்வர்.

கு-ரை : இது பூவும் நீருங்கொண்டு பூசித்துத் தொழும் தொண்டர்கள் வினைநீங்கி ஆட்செய்வர் என்கின்றது. முடி - நாற்றுமுடி. தொடும் - பறிக்கின்ற, மோட்டுழவர் - வலிய உழவர்கள், மணிக்கட்டின் வலியை வெல்லக்கட்டியை உடைப்பதால் போக்குகின்ற காட்டுப்பள்ளி என்க. கரிதாயகண்டன் என்றதிலுள்ள ஆக்கப் பெயரெச்சம் கருமை இயற்கையன்மையை உணர்த்தியது. அருவினை - இறைவனருள் ஒன்றாலன்றி வேறு எவற்றாலும் நீங்காத ஆகாமிய சஞ்சித வினைகள். எனவே இறைவற்கு ஆட்செய்யவும் வினைநீக்கம் வேண்டும் என்பது வலியுறுத்தியவாறு.

8. பொ-ரை : தலையில் பிறையை அணிந்தவனும், பெரியோர்கள், தலைவனும், வேதங்களை அருளியவனும், மழுவாகிய

Koviloor Digital Library

52. செற்றவர் தம்மர ணம்மவற்றைச்
செவ்வழல் வாயெரி யூட்டிநின்றுங்
கற்றவர் தாந்தொழு தேத்தநின்றான்
காதலிக் கப்படுங் காட்டுப்பள்ளி
உற்றவர் தாமுணர் வெய்திநல்ல
வும்பருள் ளார்தொழு தேத்தநின்ற
பெற்றம ரும்பெரு மானையல்லாற்
பேசுவதும் மற்றொர் பேச்சிலோமே. 9

வாளை உடையவனும், நீண்ட கரிய கடலிடையே தோன்றிய நஞ்சினை உண்ட கறைக் கண்டனும், கனல் சேர்ந்த நுதல்விழியால் காமனைக் காய்ந்தவனும், அன்பர்களின் குறைகளைக் கேட்டறி பவனும், குறட்பூதச் செல்வனுமாகிய, திருக்காட்டுப் பள்ளியில் உள்ள இறைவன் திருவடிகளை நாள்தோறும் விரும்பி ஏத்தி அத்திரு வடிகளையே கை கூப்பினோம்.

கு-ரை : இது ஆரண்யசுந்தரரின் அடிகளைக் கைகூப்பி வணங்கினோம் என்கிறது. பிறை - முதற்பிறை. வார்தரு - ஒழுகுகின்ற, மால்கடல் - மால் துயிலுகின்ற கடலாகிற பாற்கடல். கறை - களங்கம். கனலாடு கண்ணால் - நெற்றிக்கண்ணால். காட்டுப் பள்ளிக் குறை யுடையான் - காட்டுப்பள்ளியில் நேர்த்திக் குறையை நிறைவித்தலை யுடையவன். குறள் - குறுகிய.

9. பொ-ரை : தேவர்க்குப் பகைவராய திரிபுரத்துஅசுரர் தம் அரணங்களைச் செவ்வழலால் எரியூட்டி அழித்துப் பெருவீரத்தோடு கற்றவர்கள் தொழுதேத்த மேம்பட்டு, விளங்கும் இறைவனால் காதலிக்கப்படும் திருக்காட்டுப்பள்ளியை அடைந்து, மெய்யுணர்வு பெற்ற தேவர்கள் பலரும் தொழுது ஏத்தும், விடைமீது ஏறி அமரும் அப்பெருமான் புகழல்லால் மற்றோர் பேச்சைப் பேசுவதிலோம்.

கு-ரை : இது நாம் ஆரண்யசுந்தரரைப்பற்றியன்றி வேறொன் றையும் பற்றிப் பேசோம் என்கின்றது. செற்றவர் - பகைவர், அரணம் - கோட்டை. உற்றவர்தாம் - மலபரிபாகம் உற்ற ஆன்மாக்கள். உணர்வு

Koviloor Digital Library

53. ஒண்டுவ ரார்துகி லாடைமெய்போர்த்
துச்சிகொ ளாமையுண் டேயுரைக்குங்
குண்டர்க ளோடரைக் கூறையில்லார்
கூறுவதாங்குண மல்லகண்டீர்
அண்டம றையவன் மாலுங்காணா
ஆதியி னானுறை காட்டுப்பள்ளி
வண்டம ரும்மலர்க் கொன்றைமாலை
வார்சடை யான்கழல் வாழ்த்துவோமே. 10

- மெய்ஞ்ஞானம். பெற்றம் அமரும் - இடபத்தை ஊர்கின்ற; பெற்ற மரும் என அம் ஈறு கெட்டது. அவனை யன்றிப் பேசும் பேச்சு மற்றொன்றிலாமையால் மற்றொர் பேச்சிலோம் என்றார்.

10. பொ-ரை : நிறம் பொருந்திய காவியாடையை மேனியில் போர்த்து, உச்சி வேளையில் வயிறு கொள்ளாத அளவில் தின்று பொய் கூறும் உடல் பருத்த புத்தர், இடையில் உடையில்லாத திகம்பர சமணர் கூறுவன நற்பயனைத் தாராதன என்பதை அறிந்து கொள்ளுங்கள். உலகைப் படைத்த வேதாசாரியனான பிரமனும், மாலுங் காணாத முதல்வன் உறையும் திருக்காட்டுப்பள்ளிக்குச் சென்று வண்டு அமரும் மலர்க்கொன்றை புனைந்த வார் சடையோன் கழல்களை ஏத்தி வாழ்த்துவோம்.

கு-ரை : இது புத்தரும், சமணரும் கூறுவன குணமற்ற சொற்கள்; அவைகளை உறுதியென நம்பாதீர்; இறைவன் கழலை ஏத்துவோம் என்கின்றது. துவர் ஆர் துகில் - காவியாடை, கொள்ளாமை உண்டு - கொள்ளாத அளவு மிகுதியாக உண்டு, குண்டர்கள் - உடல் பருத்த புத்தர்கள். அரைக்கூறையில்லார் - அரையில் ஆடையில்லாதவர்கள்; திகம்பர சைனர்கள் கூறுவன குணமல்ல. தாம் அசை. கண்டீர் - கண்டு தெளியுங்கோள். அண்ட மறையவன் - இரண்ய கருப்பனாகிய பிரமன். பிரமன் நீரையே முதற்படைத்தான் என்பதும், அதில் பொன்மயமான முட்டையாக உலகையாக்கினான் என்பதும் புராண வரலாறு. அமரும் - விரும்பும்.

Koviloor Digital Library

54. பொன்னியல் தாமரை நீலநெய்தல்
போதுக ளாற்பொலி வெய்துபொய்கைக்
கன்னியர் தாங்குடை காட்டுப்பள்ளிக்
காதல னைக்கடற் காழியர்கோன்
துன்னிய வின்னிசை யாற்றுதைந்து
சொல்லிய ஞானசம் பந்தனல்ல
தன்னிசை யாற்சொன்ன மாலைபத்துந்
தாங்கவல் லார்புகழ் தாங்குவாரே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : திருமகள் வாழும் தாமரை, நீலம், நெய்தல் ஆகிய மலர்களால் பகலும் இரவும் பொலிவெய்தும் பொய்கைகளில் கன்னிப் பெண்கள் குடைந்தாடும் திருக்காட்டுப்பள்ளியை விரும்பும் இறைவனைக் கடல் சூழ்ந்த காழி மாநகர்த் தலைவனாகிய ஞானசம்பந்தன் பொருந்திய இன்னிசை கூட்டிச் சொன்னதும், தானே தன்னிச்சையால் பாடியவும் ஆகிய இத் திருப்பதிகப் பாடல் மாலை பத்தையும் மனத்திடைத் தரிக்க வல்லவர் புகழ் எய்துவர்.

கு-ரை : இது ஞானசம்பந்தன் இசையாற்சொன்ன இந்தமாலை பத்தும் வல்லார் புகழ் எய்துவர் என இம்மைப்பயன் கூறி, மறுமைப்பயனும் உடன்தோன்றத் தெரிவித்துத் திருக்கடைக் காப்பு அருளிச்செய்கிறது. பொன்னியல் தாமரை - இலக்குமி வசிக்கும் தாமரை. தாமரை பகலில் பொலிவது; நீலமும் நெய்தலும் இரவிற் பொலிவன; இவைகளையுடைமையால் பொய்கை எஞ்ஞான்றும் பொலிகின்றது என்பது குறித்தவாறு, காட்டுப்பள்ளிக் காதலன் - காட்டுப்பள்ளியில் விருப்புடைய பெருமான், துதைந்து - செறிந்து, நல்ல தன் இசையால் சொன்ன - நல்ல தனது மிடற்றிசையால் அமைத்து அருளிய.

பத்துத் திருப்பாடல்களும் கூடியே மாலையாகவும், மாலை பத்தும் என்றது, ஒவ்வொரு திருப்பாடலுமே தனித்தனிப் பயனுடைய

Koviloor Digital Library

தாய், வழிபடும் முறைகளை உடையதாய் இருக்கும் சிறப்புநோக்கி. ஒவ்வொரு பாடலுமே ஒரு மாலைபோன்றது. அங்ஙனமாகிய பத்து மாலைகளையும் மனத்தில் தரிக்கவல்லவர் இம்மையிற் புகழ் எய்துவர்; எனவே மறுமையில் வீடெய்துவர் என்பது தாமே பெறப்பட்டது.

சேது புராணம்

சங்கமணிக் குழைதயங்கத் தழைந்த காதும்
தனிவிடையு முதலபல தணப்பில் காட்சி
பொங்குமடை யாளங்கள் புகன்று போற்றிப்
பொருவிறந்த பரஞ்சுடரைப் புந்திக் கெட்டா
அங்கணனை வழுதியுடல் வெப்பு நீங்க
அணிதிகழ்வெண் டிருநுண்தூள் அள்ளிச் சாத்தும்
செங்கைவிரல் கொடுகுறித்துத் தெரிக்குந் தோன்றல்
சிற்றடியின் பெருந்தகைமை சிந்தை செய்வாம்.

- நிரம்ப அழகிய தேசிகர்.

இலிங்க புராணம்

என்புவார் குழலும் பொருகயல் விழியும்
எழில்பெறு திங்கள்வாள் முகமும்
பொன்பிறழ் திதலை பூத்தவெம் முலையும்
பூந்தளி ரடியும்வாய்ந் திலங்கு
மின்புரை மருங்குல் பெண்கொ டியாகி
மெல்லவந் தெழுந்திட இறைதாள்
அன்பினிற் பாடும் காழிமா முகிலின்
அடிமலர் சென்னியில் வைப்பாம்.

- அதிவீரராம பாண்டியன்.

Koviloor Digital Library

6. திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும்

பதிக வரலாறு:

திருஞானசம்பந்தப் பெருமான் வணிகனது விடந்தீர்த்து அவனுக்கு மணவாழ்வு வகுத்துத் திருமருகலில் எழுந்தருளி யிருந்தார்கள். அப்போது சிறுத்தொண்ட நாயனுர் வந்து மீட்டும் தமது ஊருக்கு வரவேண்டும் என விண்ணப்பித்தார். பிள்ளேயார் மற்ற தலங்களேயும் சென்று வழிபட வேண்டும் என்ற திருவுள்ளக் குறிப்போடு மருகலானடியைப் போற்றத் திருக்கோயிலுள் சென்றுர்கள். அப்போது மருகற்பெருமான் திருச்செங்காட்டங் குடிக் கணபதியீச்சரத்திலுள்ள திருவோலக்கத்தைக் காட்டியருள இப்பதிகத்தைப் பாடினுர்கள். இங்கேயே அக்கோலத்தைக் காட்டியருளிய உள்ளக் குறிப்பை உணர்த்திச் சிறுத்தொண்டர்க்கு விடை கொடுத்தனுப்பினார்கள்.

இப்பதிகம் திருமருகற்பெருமானைக் கணபதியீச்சரங் காமுறக் காரணம் என்ன? என்று வினாவுவதாக அமைந்தமை யின் வினாவுரையாயிற்று.

வினாவுரை

பண்: நட்டபாடை

பதிக எண்: 6

திருச்சிற்றம்பலம்

55. **அங்கமும் வேதமும் ஓதும்நாவர்**
அந்தணர் நாளும் அடிபரவ
மங்குன் மதிதவழ் மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்புனற் செல்வமல்கு
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. 1

1. பொ-ரை : நான்கு வேதங்களையும் ஆறு அங்கங்களையும் ஓதும் நாவினராகிய அந்தணர்கள் நாள்தோறும் தன் திருவடிகளை

Koviloor Digital Library

56. நெய்தவழ் மூவெரி காவலோம்பும்
நேர்புரி நூன்மறை யாளரேத்த
மைதவழ் மாட மலிந்தவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
செய்தவ நான்மறை யோர்களேத்துஞ்
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கைதவழ் கூரெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. 2

வணங்க, வானமண்டலத்திலுள்ள சந்திரன் தவழ்ந்து செல்லுதற்கு இடமாய் உயர்ந்து விளங்கும் மாடவீதிகளை உடைய திருமருகலில் எழுந்தருளியுள்ள இறைவனே! செங்கயல்கள் நிறைந்த புனல் சூழ்ந்ததும், செல்வ வளம் நிறைந்ததுமான புகழார்ந்த திருச்செங் காட்டங்குடியில் எரியைக்கையில் ஏந்தி நள்ளிருளில் நட்டம் ஆடுதற்கு இடமாய்க் கணபதியீச்சரத்தைக் காமுறுதல் ஏன்? சொல்வாயாக.

கு-ரை : அங்கம் - வேதத்தின் அங்கங்களாகிய நிருத்தம், சிட்சை, கற்பம், சந்தஸ், வியாகரணம், ஜோதிஷம் என்ற ஆறு. மங்குல்மதி - வானமண்டலத்துச் சந்திரன், அந்தணர் அடிபரவ மருகல் நிலாவிய மைந்த! கணபதியீச்சரம் காமுறவு சொல்லாய் என இயைக்க. கங்குல் - அர்த்தயாமம். எரி - திருக்கரத்திலுள்ள தீ.

2. பொ-ரை : அவியாக அளிக்கப் பெறும் நெய் தவழ்ந்து எரியும் முத்தீயைப் பாதுகாப்பாக ஓம்பி வரும் நேர்மையாளரும், முப்புரி நூல் அணிந்த வேத வித்துக்களும் ஆகிய அந்தணர் ஏத்த, கரிய மேகங்கள் தவழும் மாட வீடுகள் நிறைந்த வீதிகளை உடைய திருமருகலில் எழுந்தருளிய இறைவனே! தவங்கள் பலவும் செய்யும் நான்மறை யோர் போற்றும் புகழ் பொருந்திய திருச்செங்காட்டங்குடியில், திருக் கரத்தில் மிக்க தீயை ஏந்தி ஆடுதற்கு இடமாய்க் கணபதி யீச்சரத்தைக் காமுறக் காரணம் என்ன? சொல்வாயாக.

கு-ரை : அக்கினிகாரியம் செய்யும் அந்தணர்கள் வழிபடும் மருகல் என்றும், தவமுதியோர்களாகிய மறையோர் போற்றும் செங் காட்டங்குடி என்றும் இரண்டினியல்பும் ஒத்தமை உரைக்கப் பெறுகின்றது.

மூஎரி - ஆகவனீயம், காருகபத்யம், தக்ஷிணாக்கினி என்ற முத்தீ. அந்தணர்கள் மணக்காலத்து எடுத்த தீயை அவியாதே பாது

Koviloor Digital Library

57. தோலொடு நூலிழை சேர்ந்தமார்பர்
தொகுமறை யோர்கள் வளர்த்தசெந்தீ
மால்புகை போய்விம்மு மாடவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
சேல்புல்கு தண்வயற் சோலைசூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கால்புல்கு பைங்கழ லார்க்கவாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. 3

58. நாமரு கேள்வியர் வேள்வியோவா
நான்மறை யோர்வழி பாடுசெய்ய
மாமரு வும்மணிக் கோயின்மேய
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்

காக்க வேண்டியது மரபாதலின் மூ எரிகாவல் ஓம்பும் மறையாளர் என்றார். நேர் - நேர்மை. புரிநூல் - மூன்று புரியாகத் திரிக்கப்பெற்ற பூணூல். மை - மேகம். கை தவழ் - திருக்கரத்தில் திகழ்கின்ற. கூர் எரி - மிக்க தீ.

3. பொ-ரை : மான் தோலோடு கூடிய முப்புரி நூல் அணிந்த மார்பினராய்த் திரளாய்நின்று வேதம் வல்ல அந்தணர்கள் வளர்த்த செந்தீயிலிருந்து எழுந்த கரிய புகை போய் மிகவும் மிகுதியாக வெளிப் படும் மாடங்களோடு கூடிய வீதிகளை உடைய திருமருகலில் விளங்கும் இறைவனே, சேல்கள் நிறைந்த குளிர்ந்த வயல்களை அடுத்த சோலைகளால் சூழப்பட்ட சிறப்புமிக்க திருச்செங்காட்டங் குடியில் காலில் கட்டிய கழல்கள் ஆர்க்க ஆடிக் கணபதியீச்சரத்தைக் காமுறுதற்குக் காரணம் என்ன? சொல்வாயாக.

கு-ரை : இது, யாகப்புகை விம்முகிற மருகலிலுள்ள தேவனை, குளிர்ந்த வயலும் சோலையும் சூழ்ந்த செங்காட்டங்குடியை விரும்பு வதேன் என்று வினாவுகிறது. தோல் - கிருஷ்ணாஜினம் என்னும் மான்தோல். மால் புகை - கரிய புகை. சேல் புல்கு - சேல்மீன்கள் தழுவிய. கால் - திருவடி.

4. பொ-ரை : நாவிற் பொருந்தியவாய்ப் பயிலப்பட்டுவரும் வேதங்களை ஓதி உணர்ந்தவர்களும், வேள்விகளை இடைவிடாமல்

Koviloor Digital Library

தேமரு பூம்பொழிற் சோலைசூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
காமரு சீர்மகிழ்ந் தெல்லியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. 4

59. பாடன் முழவும் விழவுமோவாப்
பன்மறை யோரவர் தாம்பரவ
மாட நெடுங்கொடி விண்டடவும்
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
சேடக மாமலர்ச் சோலைசூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
காடக மேயிட மாகவாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. 5

செய்து வருபவர்களுமாகிய நான்மறையாளர் வழிபடச் செல்வம் மருவிய மணிக்கோயிலை உடைய மருகலில் விளங்கும் மைந்தனே! தேன் நிறைந்த அழகிய பொழில்களால் சூழப்பெற்ற சிறப்புமிக்க செங்காட்டங்குடியில் விளங்குகின்ற அழகும் பெருமையும் மிக்க கணபதியீச்சரத்தைக் காமுற்று இராப்போதில் நடனம் ஆடுதற்குக் காரணம் யாது? சொல்வாயாக.

கு-ரை : இது, அந்தணர் வேள்வி இடையறாத மருகல் நிலாவிய நீ, பொழிலும் சோலையும் சூழ்ந்த செங்காட்டங்குடியைக் காமுறுதல் ஏன் என்கின்றது. நா மரு கேள்வியர் - நாவிற் பொருந்திய வேதங்களை யுடையவர். கேள்வி - வேதம் (சுருதி என்பதன் மொழி பெயர்ப்பு) மா - பெருமை, இலக்குமி. காமரு - அழகிய.

5. பொ-ரை : பாடலும், அதற்கிசைந்த முழவு ஒலியும், திரு விழாக்கள் ஒலியும்,இடைவிடாமல் நிகழ்வதும் மாடவீடுகளில் கட்டிய கொடிகள் வானைத் தடவுவதும் ஆகிய சிறப்புக்களை உடைய திருமருகலில் வேதங்கள் பலவும் கற்ற அந்தணாளர் பரவ எழுந் தருளிய இறைவனே! உயரமான மணம் மிக்க மலர்ச் சோலைகளால் சூழப் பெற்ற சிறப்புமிக்க செங்காட்டங்குடியில், காட்டிடமே நாடக மாடுதற்கு இடமாக இருக்கவும், ஆடுதற்குரிய இடமாகக் கணபதி யீச்சரத்தைக் காமுறக் காரணம் என்ன? சொல்வாயாக.

Koviloor Digital Library

60. புனையழ லோம்புகை யந்தணாளர்
பொன்னடி நாடொறும் போற்றிசைப்ப
மனைகெழு மாட மலிந்தவீதி
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
சினைகெழு தண்வயற் சோலைசூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கனைவளர் கூரெரி யேந்தியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. 6

கு-ரை : இது விழவறாத மாடங்களோடுகூடிய மருகலிலுள்ள நீ, காடகமே யிடமாக ஆடுங் கணபதியீச்சரம் காமுறல் ஏன் என்கிறது. பாடலும், முழவும், விழாவும் இடையருத மருகல் எனவும், மறையோர் பரவ நிலாவிய மைந்த எனவும், கொடி தடவு மருகல் எனவும் இயைத்துப் பொருள் காண்க. சேடகம் - கேடகம்போலும் வட்டமாகிய மலர். ஆடும் - ஆடுதற்கிடமாகிய.

6. பொ-ரை : கிரியைகள் பலவற்றாலும் அழகு செய்யப் பெற்ற முத்தீயை வளர்க்கும் கைகளை உடைய அந்தணர்கள், நாள்தோறும் தன் திருவடிகளைப் போற்ற, இல்லங்களும் விளங்கும் மாடங்களும் நிறைந்த வீதிகளை உடைய திருமருகலில் விளங்கும் இறைவனே! நெற்பயிர்கள் திளைத்து வளரும் தண் வயல்களையடுத்த சோலை களால் சூழப்பெற்ற நீர் வளம் மிக்க செங்காட்டங்குடியில் எரியேந்திக் கணபதியீச்சரத்தைக் காமுறக் காரணம் என்ன? சொல்வாயாக.

கு-ரை : இது அழலோம்பும் அந்தணர்கள் வணங்க மருகலில் எழுந்தருளியுள்ள மைந்தனே! கணபதீயீச்சரம் காமுறல் ஏன் என்கிறது. புனையழல் - சாதகன்மம் முதலான பதினாறு கிரியைகளாலும் அழகு செய்யப்பெற்ற யாகாக்கினி. பொன்னடி - பொன்போல அனைவ ராலும் போற்றப்பெறுகின்ற திருவடி, இயற்கையே களிம்பற்று ஒளிபெற்று என்றும் மங்காத பொன்னைப்போல, இயற்கையே பாசம் இன்றி அடைந்தாரையும் பாசங்களினீக்குகின்ற திருவருள், கல்லெறிய விலகும் பாசி போல ஒருநாள் ஒருகால் போற்ற, சிவஞானம் சித்திக்கும்; அந்தணர்கள் நாடோறும் போற்றிசைப்பதால் நிலைத்த ஞானத்தை எய்துகின்றனர் என்பதாம். உடன்பிறந்தே கொல்லும் பகையாய்,தன்னையும் காட்டாது தலைவனையும் காட்டாது நிற்கின்ற மூலமலப்பகையை வெல்லும் வீரனாதலின் மைந்த என்றார். மைந்து - வலிமை, சினை - கிளை; முளையுமாம். கனை - மிகுதி. ஓசையுமாம்.

Koviloor Digital Library

✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ 7

61. பூண்டங்கு மார்பி னிலங்கைவேந்தன்
பொன்னெடுந் தோள்வரை யாலடர்த்து
மாண்டங்கு நூன்மறை யோர்பரவ
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்
சேண்டங்கு மாமலர்ச் சோலைசூழ்ந்த
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
காண்டங்கு தோள்பெயர்த் தெல்லியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. 8

62. அந்தமு மாதியுந் நான்முகனு
மரவணை யானு மறிவரிய
மந்திர வேதங்க ளோதுநாவர்
மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்

7. ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱

8. பொ-ரை : கயிலை மலையைப் பெயர்க்க முற்பட்ட அணிகலன்கள் பொருந்திய மார்பினை உடைய இலங்கை மன்னன் இராவணனின் அழகிய பெரிய தோள்களை அம்மலையாலேயே அடர்த்து, மாட்சிமை பொருந்திய நான்மறையோர் பரவத் திரு மருகலில் எழுந்தருளி விளங்கும் இறைவனே! வானளாவிய மண மலர்ச் சோலைகளால் சூழப்பெற்ற சீர்மிக்க செங்காட்டங்குடியில் அழகிய உன் திருத்தோள்களை அசைத்து இரவில் நடமிடுதற்கு இடனாய்க் கணபதியீச்சரத்தைக் காமுறக் காரணம் யாதோ? சொல்வாயாக.

கு-ரை : பூண் - மதாணி முதலிய மார்பணிகள், மாண் தங்கு - மாட்சிமை தங்கிய. சேண் - ஆகாயம். காண் தங்கு - அழகு தங்கப் பெற்ற. எல்லி - இரவு.

9. பொ-ரை : நான்முகனும் அரவணையானும் ஆதியாய முடியையும் அந்தமாகிய அடியையும் அறிதற்கு அரியவனாய், மந்திர வடிவான வேதங்களை ஓதும் நாவினரான அந்தணர் பரவி ஏத்தத் திருமருகலில் விளங்கும் இறைவனே! செந்தமிழ் வல்லோர் பரவித்

Koviloor Digital Library

செந்தமி ழோர்கள் பரவியேத்துஞ்
சீர்கொள்செங் காட்டங் குடியதனுள்
கந்தம கிற்புகை யேகமழுங்
கணபதி யீச்சரங் காமுறவே. 9

63. இலைமரு தேயழ காகநாளும்
இடுதுவர்க் காயொடு சுக்குத்தின்னும்
நிலையமண் தேரரை நீங்கிநின்று
நீதரல் லார்தொழு மாமருகல்
மலைமக டோள்புணர் வாயருளாய்
மாசில்செங் காட்டங் குடியதனுள்
கலைமல்கு தோலுடுத் தெல்லியாடுங்
கணபதி யீச்சரங் காமுறவே. 10

துதிக்கும் சிறப்புமிக்க செங்காட்டங்குடியில் அகில் புகை மணமே கமழும் கணபதியீச்சரத்தைக் காமுறக் காரணம் யாதோ? சொல்வாயாக.

கு-ரை : அந்தம் அரவணையானும் ஆதி நான்முகனும் அறிவரிய என எதிர்நிரனிறை. அந்தம் ஆதி - அடி முடி. மந்திர வேதங்கள் - மந்திர வடிவாகிய வேதங்கள், அவை இருக்கு, வேதங் களில் இருக்கு மந்திரங்களும், யஜுர் பிரயோகங்களும், சாமம் கானங்களுமாக அமைந்தன, வேதம் ஓதும் அந்தணர்கள் விளங்கும் மருகலில் இருக்கும் இறைவன், செந்தமிழ் நூலோர் பரவியேத்தும் செங்காட்டங்குடியை விரும்பியதில் நயமிருத்தல் ஓர்க. கந்தமே கமழும் என மாற்றுக.

10. பொ-ரை : மருத மரத்து இலையின் சாற்றினால் நிறமூட்டிய ஆடைகளை அணிந்த புத்தர், கடுக்காய், சுக்கு, இவற்றைத் தின்னும் சமணர் ஆகியோரை விடுத்து, சைவர்கள் தொழத் திருமருகலில் மலைமகளோடு உறையும் மைந்தனே! குற்றமற்ற செங்காட்டங்குடியில் மான் தோலை உடுத்தி நள்ளிருளில் ஆடுதற்கு இடனாய்க் கணபதி யீச்சரத்தைக் காமுறுதற்குக் காரணம் யாதோ? சொல்வாயாக.

கு-ரை : மருது இலை - மருதமரத்தின் இலை. துவர்க்காய் -கடு, பாக்கு. தேரர் - சாக்கியர். நீதர் - இழிந்தோர்; நீசர் என்பதன் போலி,

Koviloor Digital Library

64. நாலுங் குலைக்கமு கோங்குகாழி
ஞானசம் பந்தன் நலந்திகழும்
மாலின் மதிதவழ் மாடமோங்கும்
மருகலின் மற்றதன் மேன்மொழிந்த
சேலும் கயலும் திளைத்தகண்ணார்
சீர்கொள்செங் காட்டடங் குடியதனுள்
சூலம்வல் லான்கழ லேத்துபாடல்
சொல்லவல் லார்வினை யில்லையாமே. 11

திருச்சிற்றம்பலம்

கலைமல்கு தோல் - மான்தோலாடை, எல்லி - இரவு. கையில் மருதிலைச் சாயம்பூசி, வெற்றிலைபாக்கும் சுக்கும் தின்னுதல் சமணத்துறவியர் இயல்பு போலும். நீதரல்லார் தேரரை நீங்கிநின்று தொழும் மாமருகல் எனக்கூட்டுக.

11. பொ-ரை : தொங்குகின்ற குலைகளோடு பாக்கு மரங்கள் ஓங்கி வளரும் சீகாழிப் பதியினனாய ஞானசம்பந்தன், நலம் திகழ்வதும், மேகமும் பிறையும் தவழும் மாடங்கள் ஓங்கியதுமான திருமருகல் இறைவனையும், சேல் கயல் ஆகிய மீன் வகைகளை ஒத்த கண்களை உடைய மகளிர் வாழ்வதும் சிறப்பு மிக்கதும் ஆகிய செங்காட்டடங் குடியில் முத்தலைச் சூலம் ஏந்தியவனுய் விளங்கும் பெருமானையும் புகழ்ந்து ஏத்திய பாடல்களைச் சொல்லித் துதிக்க வல்லார் வினைகள்,இல்லையாகும்.

கு-ரை : நாலும் - தொங்குகின்ற. மாலின் மதி தவழ் மாடம் -மேகத்தோடு பிறையுந்தவழ்கின்ற மாடங்கள். திளைத்த - ஒத்த. சூலம் ஞானப்படையாய் மலமாயாகன்மங்களைப் போக்குவ தாகலின், சூலம் வல்லான் கழல் ஏத்து பாடல் வல்லார் வினை இல்லையெனக் காரணம் குறிப்பித்தருளினார்கள்.

Koviloor Digital Library

7. திருநள்ளாறும் திருவாலவாயும்

பதிக வரலாறு:

திருக்கொள்ளம்பூதூரை வழிபட்ட சிரபுரச் செல்வராகிய திருஞானசம்பந்தப் பிள்ளையார், மதுரையில் பாண்டியனது அவைக்களத்திலே, அனல்வாதத்தில் பச்சைப் பதிகமாக இருந்த 'போகமார்த்த' என்னும் பதிகம்பெற்ற தலமாகிய திருநள் ளாற்றை அடைந்து 'பாடக மெல்லடிப் பாவை' என்ற இப் பதிகத்தைப் பாடியருளுகிறார்கள்.

இதில் நள்ளாறுடைய நம் பெருமானே! அமணர் செய்த வாதில் தீயிலிடும் ஏடு பச்சையாக்கி என்னுள்ளத்துணையாகி, திருவாலவாயின்கண் அமர்ந்தவாறு என்னை? என்று வினாவி யருளுகின்றார். பச்சைப் பதிகமும் 'போகமார்த்த பூண்முலை யாள்' என அம்மையைக்கொண்டு தொடங்குகின்றது. இதுவும் 'பாடக மெல்லடிப் பாவையோடும்' என அம்மையையே இன்புறுதற்கு உரியன.

வினாவுரை

பண்: நட்டபாடை

பதிக எண்: 7

திருச்சிற்றம்பலம்

65. பாடக மெல்லடிப் பாவையோடும்
படுபிணக் காடிடம் பற்றிநின்று
நாடக மாடும்நள் ளாறுடைய
நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்

ஒன்று முதல் பத்துப் பாடல்களும் நள்ளாறுடைய நம் பெருமானே! நீ ஆலவாயினை விரும்பியவனாய் அங்கு உறைதற்குக் காரணம் யாதோ சொல்வாயாக என்னும் வினை முடிபுடையன.

1. பொ-ரை : பாடகம் என்னும் அணிகலன் அணிந்த மென்மை யான அடிகளை உடைய உமையம்மையோடு, பிணக்காடாகிய இடு காட்டைப் பற்றி நின்று நாடகம் ஆடும் நள்ளாற்று நம் பெருமானே! நீ

Koviloor Digital Library

சூடக முன்கை மடந்தைமார்கள்
துணைவ ரொடுந்தொழு தேத்திவாழ்த்த
ஆடகமாடம் நெருங்குகூடல்
ஆலவா யின்க ணமர்ந்தவாறே. 1

கையில் வளையல் அணிந்த மகளிர் தம் துணைவர்களோடும் கூடி வந்து வழிபடுவதும், பொன் மாளிகைகள் நிறைந்ததுமான கூடல் ஆலவாயின்கண் விரும்பி உறைதற்குக் காரணம் யாதோ? சொல்வாயாக.

கு-ரை: பாடகம் - காலணிகளுள் ஒன்று. பாடக மெல்லடி என்று இணைத்தது பாடகத்தின் வன்மையும் அதனைத் தாங்கல் ஆற்றாத அடியின் மென்மையும் குறித்தவாறு. சூடகம் - வளை. துணைவர் - கணவர். ஆடகமாடம் - பொன்மாளிகைகள்.

குருவருள்: பாண்டி நாட்டின் மூன்று வாதங்களிலும் வெற்றி கொண்டு சைவ சமயத்தை நிலைநிறுத்திய பிள்ளையார், பாண்டியன் நெடுமாறன், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் ஆகிய மூவரும் பிரிவாற்றாது உடன்வர பாண்டி நாட்டுத் தலங்களைத் தரிசித்துப் பதிகம் பாடிப் பாண்டிநாட்டுக் கீழ் எல்லையில் உள்ளதும் குலச் சிறையார் அவதரித்ததுமான மணமேற்குடி வந்து வழிபட்டுச் சுற்றி யுள்ள பல பதிகளையும் வணங்கிப் போற்றினார். காவிரி நாடு மீண்டருளத் திருவுளம் பற்றினார். தன்னோடு உடன் வந்த மன்னன் முதலிய மூவரும் பிரிவாற்றாது உடன்வரும் குறிப்பு நோக்கிய பிள்ளையார், ''இங்கு நான் மொழிந்ததனுக்கு இசைந்தீராகில் ஈசர் சிவநெறி போற்றி இருப்பீர்'' என்று அவர்கட்கு விடைகொடுத்துப் பொன்னி நாடணைந்தார். பாண்டி நாட்டில் அனல்வாதம் செய்தபோது கயிறு சாத்திப் பார்த்தபோது ''போகமார்த்த பூண்முலையாள்'' என்னும் திருநள்ளாற்றுப் பதிகம் கிடைத்தது. அதனால் வெற்றியும் கிடைத்தமையைத் திருவுளம் கொண்டு நள்ளாறு சென்று வழிபட எண்ணினார். வழியில் திருக்கொள்ளம்பூதூர் முதலிய தலங்களை வழிபட்டுத் திருநள்ளாறு சேர்ந்து நம்பெருமானைப் ''பாடக மெல்லடிப் பாவையோடும்'' என்னும் பதிகத்தால் பெருமான் நடத்திய நாடகத்தை ''நாடகம் ஆடும் நள்ளாறுடைய நம்பெருமான் இது என் கொல் சொல்லாய்?'' என்று வினவினார். பிள்ளையார் நம்பெருமான் என்றே இப்பதிகப் பாடல்தோறும் குறிப்பிட்டுள்ளார். தர்ப்பாரண்யே சுரர் என்று இன்று வழங்கும் பெயர் குறிக்கப்பெறாமை சிந்திக்கத் தக்கது.

Koviloor Digital Library

66. திங்களம் போதுஞ் செழும்புனலும்
செஞ்சடை மாட்டயல் வைத்துகந்து
நங்கண் மகிழும்நள் ளாறுடைய
நம்பெருமானிது வென்கொல்சொல்லாய்
பொங்கிள மென்முலை யார்களோடும்
புனமயி லாட நிலாமுளைக்கும்
அங்கழ கச்சுதை மாடக்கூடல்
ஆலவா யின்க ணமர்ந்தவாறே. 2

67. தண்ணறு மத்தமும் கூவிளமும்
வெண்டலை மாலையும் தாங்கியார்க்கும்
நண்ணல ரியநள் ளாறுடைய
நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்

2. பொ-ரை : பிறைமதி, அழகிய மலர்கள், வளமான கங்கை நதி ஆகியவற்றைத் தன் செஞ்சடையின் மேல் அருகருகே வைத்து மகிழ்ந்து நம் கண்கள் களிக்குமாறு நள்ளாற்றின்கண் எழுந்தருளிய நம் பெருமானே! நீ, பூரித்து எழும் மென்மையான இளைய தனங்களை உடைய மடந்தையரோடு கானகத்தில் வாழும் ஆண் மயில்கள் களித்தாட, பெருமை மிக்க தமிழ்ச் சங்கத்தினையும், நிலவொளி வெளிப்படுமாறு வெண்மையான சுண்ணாம்பினால் கட்டப்பட்ட மாடங்களையும் உடைய கூடல் ஆலவாயின்கண் விரும்பி உறைதற்குக் காரணம் யாதோ? சொல்வாயாக.

கு-ரை : போது வாடாமைப் புனல் வைப்பார்போலத் திங்களம் போது வாடாத வண்ணம் செழும் புனலைச் சேரவைத்தார் என்பது சிந்தித்தற் குரியது. நங்கண் - நம்மிடத்து. மகளிரோடு மயிலாட என்றது சாயலால் வேற்றுமை தோன்றாமையால். கார் வரவால் களிப்பது மயில். கணவர் வரவால் களிப்பவர் மகளிர். ஆட்டம் ஈரிடத்தும் நிகழ்வது இயல்பு. அம் கழகம் - பெருமை மிக்க தமிழ்ச் சங்கம். நிலா - வெள்ளொளி.

3. பொ-ரை : குளிர்ந்த மணம் வீசும் ஊமத்தை மலர் வில்வம் ஆகியவற்றையும் வெண்மையான தலை மாலையையும் அணிந்து, திருவருள் இருந்தாலன்றி யாராலும் சென்று வழிபடற்கரிய நள்ளாற்றின்கண் எழுந்தருளிய நம் பெருமானே! நீ, புண்ணிய வாணரும் மாதவர்களும் வந்து ஏத்துவதும் அணி கலன்கள் புனைந்த மகளிர்

Koviloor Digital Library

புண்ணிய வாணரும் மாதவரும்
புகுந்துட னேத்தப் புனையிழையார்
அண்ணலின் பாட லெடுக்குங்கூடல்
ஆலவா யின்க ணமர்ந்தவாறே. 3

68. பூவினில் வாசம் புனலிற்பொற்புப்
புதுவிரைச் சாந்தினில் நாற்றத்தோடு
நாவினிற் பாடல்நள் ளாறுடைய
நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்
தேவர்கள் தானவர் சித்தர்விச்சா
தரர்கணத் தோடுஞ் சிறந்துபொங்கி
ஆவினில் ஐந்துகந் தாட்டுங்கூடல்
ஆலவா யின்க ணமர்ந்தவாறே. 4

இறைவனது புகழ் சேர்ந்த பாடல்களைப் பாடுவதுமான கூடல் ஆலவாயின்கண் விரும்பி உறைதற்குக் காரணம் யாதோ? சொல்வாயாக.

கு-ரை : தண்ணறு மத்தம் - குளிர்ந்த மணம் வீசுகின்ற ஊமத்தம்பூ. இறைவனுக்கு உன்மத்த சேகரன் என்பதும் ஒருபெயர். கூவிளம் - வில்வம். தாங்கி உடைய பெருமான் என முடிக்க. யார்க்கும் நண்ணலரிய நள்ளாறு - எவர்க்கும் அணுக முடியாத நள்ளாறு. என்றது நாடிழந்தும் நகரிழந்தும் மனைவியையிழந்தும் உருமாறியும் வினையை நுகர்ந்து கழித்த நளன் போன்றோரன்றி வினைச் சேடமுடைய எவர்க்கும் நணுக முடியாதது என்பதை விளக்க. புண்ணியவாணர் - சென்ற பிறவி களில் ஈட்டிய புண்ணியங் கொண்டு வாழ்பவர்கள். மாதவர் - இப்பிறவியில் புண்ணியம் ஈட்டுவார். அண்ணலின் பாடல் - இறைவனுடைய புகழ் சேர்ந்த பாடல்கள்.

4. பொ-ரை : பூக்களில் வாசனையாய், நீரில் தண்மையாய், புதிய சந்தனத்தில் மணமாய், நாவில் பாடலாய்க் கலந்து விளங்கும் நள்ளாற்று நம் பெருமானே! நீ, தேவர்களும், அசுரர்களும், சித்தர்களும், வித்யாதரர்களும் ஆகிய கூட்டத்தினரோடு சிறந்து விளங்குபவராய்ப் பசுவினிடம் தோன்றும் பஞ்சகவ்யங்களால் ஆட்டி வழிபடக் கூடல் ஆலவாயின்கண் விரும்பி உறைதற்குக் காரணம் யாதோ? சொல்வாயாக.

Koviloor Digital Library

69. செம்பொன்செய் மாலையும் வாசிகையும்
திருந்து புகையும் அவியும்பாட்டும்
நம்பும் பெருமைநள் ளாறுடைய
நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்
உம்பரும் நாகரு லகந்தானும்
ஒலிகடல் சூழ்ந்த வுலகத்தோரும்
அம்புத நால்களால் நீடுங்கூடல்
ஆலவா யின்க ணமர்ந்தவாறே. 5

கு-ரை : பூவினில் வாசம் முதலியன இறைவன் கலந்து நிற்கும் நிலை கூறியன. ''பூவினுள் நாற்றம் நீ தீயினுள் தெறலும் நீ'' என்னும் பரிபாட்டானும் அறிக.

புனலில் பொற்பு - நீரில் அழகு. புது விரைச் சாந்து - புதிதாக அரைத்து எண்வகை மணப் பொருள்களும் கூட்டப் பெற்ற சந்தனம். நள்ளாறன் ஐம்பொறிகளுக்கும் இன்பப் பொருளாயிருக்கும் தன்மையைச் சில சொல்லித் தெரிவிக்கின்றார். பூவினில் வாசம் என்பது முதல் நாவினில் பாடல் என்பதுவரை. பொற்பு - அழகு. என்றது தட்பமும் தெளிவும். தானவர் - அசுரர். ஆவினில் ஐந்து - பால், தயிர், நெய், கோசலம், கோமயம், என்பன.

5. பொ-ரை : செம்பொன்னால் செய்த மாலைகள், திருவாசி ஆகியவற்றுடன் மணப்புகை நிவேதனம் தோத்திரம் ஆகியவற்றை விரும்பி ஏற்கும் பெருமை உடைய, நள்ளாற்றில் விளங்கும் நம் பெருமானே! நீ, விண்ணவரும், நாகர் உலகத்தவரும், ஒலிக்கும் கடலால் சூழப்பட்ட மண்ணுலக மக்களும் ஏத்த, நான்கு மேகங்களால் சூழப்பட்ட கூடல் ஆலவாயின்கண் விரும்பி உறைதற்குக் காரணம் யாதோ? சொல்வாயாக.

கு-ரை : வாசிகை - திருவாசி (ஒருவகை மாலை). அவி - நைவேத்தியம். பாட்டு - தோத்திரம். விரும்பும் பெருமை - அனைவரும் இவரே எமக்கு அடைக்கலமாவார் என்று நம்பும் பெருமை. உம்பர் - தேவர்.

அம்புதம் - மேகம். அம்புதம் நால்களான் நீடுங்கூடல் - நான்கு மேகங்கள் கூடிய கூடல் நகர், நால்கள் - நான்கு. நால் - நான்கு, அதன்மேற்பன்மை விகுதி நால்கள்; இது அரும்பிரயோகம்.

Koviloor Digital Library

70. பாகமுந் தேவியை வைத்துக்கொண்டு
பைவிரி துத்திப் பரியபேழ்வாய்
நாகமும் பூண்டநள் ளாறுடைய
நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்
போகமும் நின்னை மனத்துவைத்துப்
புண்ணியர் நண்ணும் புணர்வுபூண்ட
ஆகமு டையவர் சேருங்கூடல்
ஆலவா யின்க ணமர்ந்தவாறே. 6

71. கோவண வாடையும் நீறுப்பூச்சுங்
கொடுமழு வேந்தலுஞ் செஞ்சடையும்
நாவணப் பாட்டும்நள் ளாறுடைய
நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்

6. பொ-ரை : இடப்பாகமாக உமையம்மையை வைத்துக் கொண்டு, படமும் புள்ளிகளும் பெரிதாகப் பிளந்த வாயும் உடைய நாகத்தைப் பூண்டுள்ள நள்ளாறுடைய நம் பெருமானே! நீ, உன்னை மனத்தில் கொண்டு சிவபோகமும், புண்ணியர்களாம் அடியவர்கள் கூட்டுறவும் கொண்ட மேனியராகிய சான்றோர்கள் சேர்ந்துறையும் கூடல் ஆலவாயின்கண் அமர்ந்து உறைதற்குக் காரணம் யாதோ? சொல்வாயாக.

கு-ரை: பாகமும் தேவியை வைத்துக் கொண்டு நாகமும் பூண்ட என்றது பாம்பைக் கண்டாற் பெரிதும் அஞ்சுகின்ற தேவியை வைத்துக் கொண்டேயும் நாகம் பூணுதல் சாலாது என்ற நயந்தோன்ற நின்றது. பை - படம். துத்தி - படப்பொறி. பேழ்வாய் - பிளந்தவாய். புண்ணியர் நின்னை மனத்துவைத்துப் போகம் நண்ணும் புணர்வு பூண்ட ஆகமுடையவர் என இயைக்க. போகியாய் உமையொரு பாதியாய் இருக்கும் இறைவனைத் தியானிப்பதாலேயே புண்ணியர் போகம் நண்ணுவர் என்பதாம். புணர்வு - சம்பந்தம். ஆகம் - திரு மேனி.

7. பொ-ரை : வேதமாகிய கோவண ஆடையும் திருநீற்றுப் பூச்சும் கொடிய மழுவாயுதத்தை ஏந்தலும் சிவந்த சடையும் நாவில் பல்வேறு சந்தங்களில் பாடும் வேதப் பாட்டும் உடையவனாய் இலங்கும் நள்ளாற்றுள் எழுந்தருளிய நம் பெருமானே! நீ பூப்போலும்

Koviloor Digital Library

பூவண மேனி யிளையமாதர்
பொன்னும் மணியும் கொழித்தெடுத்து
ஆவண வீதியி லாடுங்கூடல்
ஆலவா யின்க ணமர்ந்தவாறே. 7

72. இலங்கை யிராவணன் வெற்பெடுக்க
வெழில்விர லூன்றி யிசைவிரும்பி
நலங்கொளச் சேர்ந்தநள் ளாறுடைய
நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்
புலன்களைச் செற்றுப் பொறியைநீக்கிப்
புந்தியி லுந்நினைச் சிந்தைசெய்யும்
அலங்க னல்லார்க எமருங்கூடல்
ஆலவா யின்க ணமர்ந்தவாறே. 8

மெல்லிய மேனியை உடைய இளம் பெண்கள் பொன்மணி முதலிய வற்றைக் கொழித்து எடுத்துக் கடைவீதியில் விளையாடும் கூடல் ஆல வாயின்கண் அமர்ந்து விளங்கக் காரணம் யாதோ? சொல்வாயாக.

கு-ரை : இறைவனுக்கு வேதமே கோவணமாதலின் கோவண ஆடையர் என்றார். நீறுப்பூச்சும் - நீற்றுப்பூச்சும் எனற்பாலது ஓசைநோக்கி இரட்டாதாயிற்று. இறைவன் நீறுபூசி ஒளிர்தலை மாணிக்கவாசக சுவாமிகளும் 'நீறுபட்டே ஒளிகாட்டும் மேனி' என்பார்கள். நாவணப்பாட்டும் - நாவில் பல்வேறுவண்ணங்களை யுடையபாட்டும். வண்ணம் - பாஅவண்ணம் முதலிய செய்யுள் வண்ணங்கள். பூவணமேனி - பூப்போலும் மெல்லிய மேனி. ஆவண வீதி - கடைவீதி.

8. பொ-ரை : இலங்கை மன்னன் இராவணன் கயிலை மலையைப் பெயர்த்தபோது, தனது அழகிய கால் விரலை ஊன்றி அடர்த்துப் பின் அவனது இசையை விரும்பிக்கேட்டு அவனுக்கு நன்மைகள் பலவும் பொருந்துமாறு உளங் கொண்ட நள்ளாறுடைய நம் பெருமானே! நீ, ஐம்புல இன்பங்களை வெறுத்து அவற்றைத் தரும் ஐம்பொறிகளை மடை மாற்றிப் புந்தியில் உன்னையே சிந்தனை செய்யும் தூய வாழ்க்கையையுடைய சிவஞானிகள் வாழும் கூடல் ஆல வாயின்கண் அமர்ந்துறைதற்குக் காரணம் யாதோ? சொல்வாயாக.

கு-ரை : விரல் ஊன்றி என்றது நிக்கிரகம். விரும்பி என்றது

Koviloor Digital Library

73. பணியுடை மாலும் மலரினோனும்
பன்றியும் வென்றிப் பறவையாயும்
நணுகல ரியநள் ளாறுடைய
நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்
மணியொலி சங்கொலி யோடுமற்றை
மாமுர சின்னொலி யென்றுமோவா
தணிகிளர் வேந்தர் புகுதுங்கூடல்
ஆலவா யின்க ணமர்ந்தவாறே. 9

கருணைக்கு ஏது. நலங்கொள என்றது அநுக்கிரகம். விரலூன்றிய வரலாற்றை மணிவாசகப் பெருந்தகை 'மதிக்குந் திறலுடைய வல்லரக்கன் தோள்நெரிய மிதிக்குந் திருவடி' என்னுதல் காண்க.

புலன்களைச் செற்று - விஷயங்களைக் கெடுத்து. பொறியை நீக்கி - இந்திரியங்களைச் சேட்டியாதே செய்து. நினைப்புந்தியிலும் சிந்தை செய்யும் - தேவரீரைப் புத்தியாலும் தியானிக்கின்ற, பொறிகள் புலன்களின் வழிச்செல்லாது அடக்கிய பெரியோர்களின் புத்தியில் சென்று பதியும் பொருள், கருவி கரணங்களைக் கடந்துநிற்கும் இறைப் பொருள் ஒன்றுமே யாதலின் இங்ஙனம் கூறினார்.

அலங்கல் - தாபத வாகைக்குரிய மாலை. நல்லார்கள் - சிவ ஞானிகள். கூடல் ஆலவாய் என்பது ஒரு பொருட் பன்மொழி.

9. பொ-ரை : பாம்பணையானாகிய திருமாலும் தாமரை மலரில் எழுந்தருளிய நான்முகனும் முறையே பன்றியாயும் பறவை இனங்களில் மேம்பட்ட அன்னமாயும், அடிமுடிகளை மாறித் தேடியும் நணுக முடியாத நள்ளாறுடைய நம் பெருமானே! நீ மணி ஒலியும், சங்கொலியும், சிறந்த முரசின் ஒலியும் என்றும் இடையறவின்றிக் கேட்கும் சிறப்பினதும், மேம்பட்ட வேந்தர்கள் புகுந்து வழிபடும் பெருமையதும் ஆகிய கூடல் ஆலவாயின்கண் எழுந்தருளி விளங்கக் காரணம் யாதோ? சொல்வாயாக.

கு-ரை : பணி - ஆதிசேடன், வென்றிப் பறவை - 'திருமுடி கண்டேன்' என்று பொய் வென்றியைக் கூறிக்கொண்ட பறவையாகிய அன்னம். பாண்டிய மன்னனிடம் கப்பங்கட்ட வருமன்னர் பலர், பலவகை ஒலிகளோடும் இடையறாதுவருகின்ற, கூடல் என்பதாம்.

Koviloor Digital Library

74. தடுக்குடைக் கையருஞ் சாக்கியருஞ்
சாதியி னீங்கிய வத்தவத்தர்
நடுக்குற நின்றநள் ளாறுடைய
நம்பெரு மானிது வென்கொல்சொல்லாய்
எடுக்கும் விழவும் நன்னாள்விழவும்
இரும்பலி யின்பினோ டெத்திசையும்
அடுக்கும் பெருமைசேர் மாடக்கூடல்
ஆலவா யின்க ணமர்ந்தவாறே. 10

75. அன்புடை யானை யரனைக்கூடல்
ஆலவாய் மேவிய தென்கொலென்று
நன்பொனை நாதனை நள்ளாற்றானை
நயம்பெறப் போற்றி நலங்குலாவும்
பொன்புடை சூழ்தரு மாடக்காழிப்
பூசுரன் ஞானசம் பந்தன்சொன்ன
இன்புடைப் பாடல்கள் பத்தும்வல்லார்
இமையவ ரேத்த விருப்பர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை : ஓலைத் தடுக்கைக் கையில் ஏந்தித் திரியும் சமணர்களும் சாக்கியர்களும் மரபு நீங்கிய வீண் தவத்தராவர். அவர்கள் மெய்ந் நெறியாகிய சைவசமயத்தைக் கண்டு அச்சமயிகளின் வழிபடு கடவுளைக் கண்டு நடுக்கம் உறுமாறு திரு நள்ளாற்றுள் விளங்கும் நம் பெருமானே! நீ, நாள் விழாவும், சிறப்பு விழாவும் . நன்கு நடைபெற, அவ்விழாவில் வழங்கும் பெருவிருந்தால் விளையும் மகிழ்வு எத்திசையும் பொருந்திப் பெருமை சேர்க்கும் மாடக் கூடல் ஆலவாயின் கண் மகிழ்ந்துறைதற்குக் காரணம் யாதோ? சொல்வாயாக.

கு-ரை : தடுக்கு - ஓலையிருக்கை. சாதியின் நீங்கிய வத்தவத்தர் - தத்தம் மரபின் நீங்கி வீணான தவத்தைச் செய்பவர்கள். எடுக்கும் விழா - நைமித்திகத் திருவிழா. நன்னாள் விழா - நித்தியத் திருவிழா.

11. பொ-ரை : எல்லா உயிர்களிடத்தும் அன்புடையவனாம், அரனைக் கூடல் ஆலவாயில் மேவியதற்குக் காரணம் யாதெனக் கேட்டுத் தூய பொன் போன்றவனாகவும், தலைவனாகவும் விளங்கும்

Koviloor Digital Library

திருநள்ளாற்று இறைவனை நயமாகப் போற்றி, நலம் பயக்கும் செம்பொன் நிறைந்த மாட வீடுகளால் சூழப்பட்ட சீகாழிப் பதியில் தோன்றிய பூசுரனாகிய ஞானசம்பந்தன் பாடிய இனிய இத் திருப்பதிகப் பாடல்கள் பத்தையும் ஓதவல்லவர், இமையவர் ஏத்தத் தேவருலகில் விளங்குவர்.

கு-ரை : அன்புடையானை - உலகமே இறைவனுடைய மக்களாதலின் வாற்சல்ய முடையவனை, நயம்பெறப் போற்றி - போற்றுவதில் ஒரு நயம் உண்டாம்படிப் பணிந்து, அல்லது தாம் நலம் பெறப் போற்றி என்றுமாம், இமையவர் ஏத்த இருப்பர் - தேவர்க் கெல்லாம் தேவராய் அவர்கள் தொழ விளங்குவர். இந்திரனார் என்றுமாம்.

திருத்தொண்டர் புராணம்

திருஞானசம்பந்தர் புராணம்

நீடுதிருத் தொண்டர்புடை சூழ அங்கண்
நித்திலயா னத்திடைநின் றிழிந்து சென்று
பீடுடைய திருவாயில் பணிந்து புக்குப்
பிறையணிந்த சென்னியார் மன்னுங் கோயில்,
மாடுவலங் கொண்டுள்ளால் மகிழ்ந்து புக்கு
மலர்க்கரங்கள் குவித்திறைஞ்சி வள்ள லாரைப்
பாடகமெல் லடிஎடுத்துப் பாடி நின்று
பரவினார் கண்ணருவி பரந்து பாய.

– சேக்கிழார்.

சைவசமய நெறி

வெப்பொழிய மீனவற்கு நீறளித்த வேதியன்தாள்
எப்பொழுதும் சிந்திப்பாம் யாம்.

– மறைஞான சம்பந்தர்.-

Koviloor Digital Library

8. திரு ஆவூர்ப்பசுபதீச்சரம்

பதிக வரலாறு:

திருப்பூவனூர்சென்று வணங்கிய திருஞானசம்பந்தர், சிவனடியார்கள் பலர் ஏத்தொலியெடுப்ப, மிகப்பழம்பதியாகிய ஆவூரையடைந்தார்கள். பசுபதீச்சரத்தை வணங்கி இப்பதிகத்தை அருளிச்செய்தார்கள்.

பண்: நட்டபாடை

பதிக எண்: 8

திருச்சிற்றம்பலம்

76. **புண்ணியர் பூதியர் பூதநாதர்**
புடைபடு வார்தம் மனத்தார்திங்கட்
கண்ணிய ரென்றென்று காதலாளர்
கைதொழு தேத்த விருந்தவூராம்
விண்ணுயர் மாளிகை மாடவீதி
விரைகமழ் சோலை சுலாவியெங்கும்
பண்ணியல் பாடல றாதவாவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடுநாவே. 1

1. பொ-ரை : அன்புடை அடியவர் புண்ணியம் திரண்டனைய வடிவினர் எனவும், நிறைந்த செல்வம் உடையவர் எனவும், பூத கணங்களின் தலைவர் எனவும், அருகில் வந்து பரவுவாரின் மனத்தார் எனவும், பிறைமதிக் கண்ணியர் எனவும் கைதொழுது போற்றச் சிவபிரான் எழுந்தருளிய ஊர் ஆகிய வானளாவ உயர்ந்த மாட மாளிகைகளோடு கூடியதும், மணம் கமழும் சோலைகளால் சூழப் பெற்றதும், எங்கும் பண்ணியலோடு கூடிய பாடல்கள் இடைவிடாது கேட்கப்படுவதும் ஆகிய ஆவூர்ப்பசுபதியீச்சரத்தை, நாவே தொழுது பாடுவாயாக.

கு-ரை : பூதியர் - செல்வம் உடையார். புடைபடுவார் - பக்கம் நண்ணிப் பரவுவார். கண்ணி - திருமுடியிற் சூடப் பெறும் மாலை.

Koviloor Digital Library

77. முத்தியர் மூப்பில ராப்பினுள்ளார்
முக்கணர் தக்கன்றன் வேள்விசாடும்
அத்திய ரென்றென் றடியரேத்தும்
ஐயன ணங்கொ டிருந்தவூராம்
தொத்திய லும்பொழில் மாடுவண்டு
துதைந்தெங்குந் தூமதுப் பாயக்கோயிற்
பத்திமைப் பாடல றாதவாவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடுநாவே. 2

78. பொங்கி வரும்புனல் சென்னிவைத்தார்
போம்வழி வந்திழி வேற்றமானார்
இங்குயர் ஞானத்தர் வானோரேத்தும்
இறையவ ரென்றுமி ருந்தவூராம்

2. பொ-ரை : அடியவர்கள், முத்திச் செல்வத்தை உடையவர் என்றும், மூப்பு இலர் என்றும், மாட்டுத் தறியில் விளங்குபவர் என்றும், முக்கண்ணர் என்றும், தம்மை இகழ்ந்து செய்த தக்கனின் வேள்வியை அழித்தவர் என்றும், போற்றித் துதிக்கும் தலைவராகிய சிவபிரான் உமையம்மையாரோடு எழுந்தருளிய ஊராகிய பொழில்களில் கொத்தாக மலர்ந்த பூக்களில் வண்டுகள் தோய்தலால் எங்கும் தூயதேன்துளிகள் பாய்வதும், கோயிலில் பத்தி பூண்ட அடியவர் பாடும் பாடல் இடைவிடாது கேட்பதுமாகிய ஆவூர்ப்பசுபதியீச் சரத்தை நாவே அதனைத் தொழுது பாடுவாயாக.

கு-ரை : முத்தியர் - முத்தியின்பத்தை உடையவர். ஆப்பு - கன்றாப்பூர், வேள்விசாடும் அத்தியர் என்றது தக்கன் வேள்விக்கண் அளிக்கும் அவியை ஏற்கும் இரவலராயிருந்தும் வேள்வியை அழித்தமை சாலாது என்னும் பழிப்பு தோன்றக்கூறியது. அத்தியர் - இரவலர். ஹத்தி என்பதன் திரிபாகக்கொண்டு கொலை என்பாரும் உளர்; அது பொருந்தாமை ஓர்க. தொத்து இயலும் - பூங்கொத்துக்கள் அழகு செய்கின்ற. பத்திமைப் பாடல் - சிவபத்தியைப் பயக்கும் பாடல்கள்.

3. பொ-ரை : சினந்து வந்த கங்கையைத் தம் திருமுடியில் வைத்தவரும், பிறவி போதற்குரிய பிறப்பான மனிதப் பிறவி எடுத்து இழிவடைதற்கும் ஏற்றம் பெறுதற்கும் உரிய மக்களும் அவருள்

Koviloor Digital Library

தெங்குயர் சோலைசே ராலைசாலி
திளைக்கும் விளைவயல் சேரும்பொய்கைப்
பங்கய மங்கை விரும்புமாவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடுநாவே. 3

79. தேவியொர் கூறின ரேறதேறுஞ்
செலவினர் நல்குர வென்னைநீக்கும்
ஆவிய ரந்தண ரல்லல்தீர்க்கும்
அப்பனா ரங்கே யமர்ந்தவூராம்
பூவிய லும்பொழில் வாசம்வீசப்
புரிகுழ லார்சுவ டொற்றிமுற்றப்
பாவியல் பாடல றாதவாவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடுநாவே. 4

இப்பிறப்பில் உயர்தற்குரிய சிவஞானத்தைப் பெற்றோரும் வான வரும் துதிக்கச் சிவபிரான் எழுந்தருளிய ஊர், உயரமாக வளர்ந்த தென்னஞ் சோலைகளும், கரும்பாலைகளும், செந்நெற்பயிர்களும் திளைத்து விளைவுதரும் வயல்களை உடையதும், பொய்கைகள் சூழ்ந்ததும், திருமகள் விரும்புவதுமாகிய வளம்சான்ற ஆவூர்ப் பசபதீயீச்சரமாகும். நாவே அதனைப் பாடுவாயாக.

கு-ரை : பொங்கிவரும் புனல் - கங்கை. அதுவந்த செருக்கினைக் குறிப்பித்தபடி. போம் வழிவந்து - பிறவியினீங்கி உய்ந்து போகக் கூடிய மனிதப்பிறவியில் வந்து. இழிவு ஏற்றம் ஆனார் - தீயனசெய்து இழிந்தும் நல்லன செய்து உயர்ந்தும் உய்ந்த மக்கள். இழிவேற்றமானாரும், ஞானத்தரும், வானோரும் ஏத்தும் இறைவர் என்று ஒரு தொடராக்குக. தென்னஞ் சோலைகளும் ஆலைகளும் வயல்களில் நெற்பயிர்களும் சேரும் ஆவூர் எனவும், பங்கயமங்கை விரும்பும் ஆவூர் எனவும் கூட்டுக. பொய்கை மானிடர் ஆக்காத நீர் நிலை.

4. பொ-ரை : உமாதேவியை ஒரு பாதியாக உடையவர், இடப வாகனத்தில் ஏறி வருபவர். வறுமை புகுதாது என்னைக் காப்பவர். எனக்கு உயிர் போன்றவர். கருணையர், என்துயர் போக்குதலால் எனக்குத் தந்தையாக விளங்குபவர். அவர் எழுந்தருளிய ஊர், பூக்கள் நிறைந்த பொழில்களின் வாசனை வீசுவதும் சுருண்ட கூந்தலை

Koviloor Digital Library

80. இந்தணை யுஞ்சடை யார்விடையார்
இப்பிறப் பென்னை யறுக்கவல்லார்
வந்தணைந் தின்னிசை பாடுவார்பால்
மன்னினர் மன்னி யிருந்தவூராம்
கொந்தணை யுங்குழ லார்விழவிற்
கூட்ட மிடையிடை சேரும்வீதிப்
பந்தணையும் விர லார்தமாவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடுநாவே. 5

உடைய மகளிர் காலாலே தாளமிட்டு ஆடித் தேர்ந்த இசையோடு பாடும் பாடல்கள் இடைவிடாது கேட்கப்படுவதுமான ஆவூர்ப்பசுபதி யீச்சரத்தை நாவே அதனைப் பாடுவாயாக.

கு-ரை : நல்குரவு என்னை நீக்கும் ஆவியர் - வறுமை புகுதாதே என்னைக் காக்கும் உயிர்போன்றவர். இதனோடு ''இடரினும் தளரினும் எனதுறுநோய் தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்'' என்று யாகத்துக்குப் பொன்வேண்டிய காலத்துப் பாடிய பாடலையும் ஒப்பிடுக. அந்தணர் - முனிவர். புரிகுழலார் சுவடு ஒற்றி - பெண்கள் காற்சுவட்டினாலே தாளமிட்டு, பாவியல் பாடல் - இசையமைந்த பாடல், பா - பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை.

5. பொ-ரை : திங்கள் தங்கும் சடையினரும், விடையை ஊர்தியாக உடையவரும், என்னைப் பற்றிய இப்பிறவியின் வினையை நீக்கி முத்தியளிக்க வல்லவரும்,தம்மை வந்தடைந்து இன்னிசையால் பாடி வழிபடுவாரிடம் மன்னியிருப்பவரும் ஆகிய சிவபிரான், நிலைபெற்று விளங்கும் ஊர், பூங்கொத்தணிந்த கூந்தலை உடைய மங்கல மகளிர் வாழ்வதும், திருவிழாக்களில் மக்கள் கூட்டம் இடையிடையே சேரும் அகன்ற வீதிகளை உடையதும், பந்தாடும் கைவிரல்களினராகிய இளம்பெண்கள் நிறைந்ததுமாகிய ஆவூர்ப் பசுபதியீச்சரத்தை நாவே அதனைப் பாடுவாயாக.

கு-ரை : இந்து - சந்திரன்; இப்பிறப்பு அறுக்க வல்லார் என்றது என் வினை முழுவதும் உலர்ந்துபோதலின் முத்தி அளிக்கவல்லார் என்பதாம், வந்து அணைந்து - திருக்கோயிலின் திருவணுக்கன் திருவாயிலை வந்து அடைந்து. மன்னினர் - நிலை பெற்று இருப்பவர். கொந்து - பூங்கொத்து; குழலார் விரலார் என்பன மகளிரைக்குறித்து நின்றன.

Koviloor Digital Library

81. குற்ற மறுத்தார் குணத்தினுள்ளார்
கும்பிடு வார்தமக் கன்புசெய்வார்
ஒற்றை விடையினர் நெற்றிக்கண்ணார்
உறைபதி யாகுஞ் செறிகொண்மாடம்
சுற்றிய வாசலின் மாதர்விழாச்
சொற்கவி பாடநி தானநல்கப்
பற்றிய கையினர் வாழுமாவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடுநாவே. 6

82. நீறுடை யார்நெடு மால்வணங்கு
நிமிர்சடை யார்நினை வார்தமுள்ளம்
கூறுடை யாருடை கோவணத்தார்
குவலய மேத்தவி ருந்தவூராம்

6. பொ-ரை : அடியவர் செய்யும் குற்றங்களை நீக்கியவரும், நற்குணங்களை உடையோரிடம் வாழ்பவரும், தம்மைக் கும்பிடு வார்க்கு அன்பு செய்பவரும், ஓர் எருதைத் தமக்கு ஊர்தியாகக் கொண்டவரும், பிறர்க்கில்லாத நெற்றிக் கண்ணை உடையவரும் ஆகிய சிவபிரான் உறையும் பதி, செறிந்த மாட வீடுகளைச் சார்ந்துள்ள வாசலில் விழாக் காலங்களில் பெண்கள் புகழ்ந்து கவி பாடக் கேட்டு அவ்வீடுகளில் வாழும் செல்வர்கள் பொற்காசுகள் வழங்க, அதனைப் பற்றிய கையினராய் மகளிர் மகிழ்ந்துறையும் ஆவூர்ப்பசுபதியீச் சரமாகும். நாவே அதனைத் தொழுது பாடுக.

கு-ரை : குற்றம் அறுத்தார் - அடியார்கள் செய்த குற்றங்களை நீக்கியவர். குற்றம் மறுத்தார் - நறுநாற்றத்திலன்றி தீநாற்றத்தில் செல்லாத வண்டுபோல் குற்றங்களில் சென்று பொருந்த மறுத்தவர். மாதர்கள் விழாவின்கண் சொல்லானியன்ற கவிகளைப்பாட, அதனைக்கண்ட மாந்தர்கள் பொன்னளிக்க, அதனை ஏற்ற கையர் களாய் வாழ்கின்ற ஆவூர் என்க. நிதானம் - பொன், ''நிதானம் - முற்காரணம் தூய்மை நியமம் நிதி மறைத்துக்கொள் பொருள் கன்றின் கயிறாம்'' என்பது நானார்த்ததீபிகை

7. பொரை : திருவெண்ணீற்றை அணிந்தவரும், திருமாலால் வணங்கப் பெறுபவரும், நிமிர்த்துக் கட்டிய சடைமுடியுடையவரும், தம்மை நினைவார் உள்ளத்தில் குடி கொண்டிருப்பவரும், கோவண

Koviloor Digital Library

தாறுடை வாழையிற் கூழைமந்தி
தகுகனி யுண்டுமின் டிட்டினத்தைப்
பாறிடப் பாய்ந்துப யிலுமாவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடுநாவே. 7

83. வெண்டலை மாலை விரவிப்பூண்ட
மெய்யுடை யார்விற லாரரக்கன்
வண்டமர் பூமுடி செற்றுகந்த
மைந்தரி டம்வள மோங்கியெங்கும்
கண்டவர் சிந்தைக் கருத்தின்மிக்கார்
கதியரு ளென்றுகை யாரக்கூப்பிப்
பண்டலர் கொண்டு பயிலுமாவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடுநாவே. 8

ஆடை தரித்தவரும் ஆகிய சிவபிரான், மண்ணுலக மக்கள் தம்மைப் புகழ்ந்து போற்ற எழுந்தருளிய ஊர், குள்ளமான மந்தி பழுத்துள்ள வாழைத் தாற்றில் உண்ணத் தகுதியான பழங்களை வயிறார உண்டு, எஞ்சியுள்ள பழங்களை உண்ணவரும் குரங்குகளை அஞ்சுமாறு பாய்ந்து விரட்டும் தோட்டங்களை உடைய ஆவூர்ப் பசுபதியீச்சர மாகும். நாவே அதனைப் பாடுவாயாக.

கு-ரை : நீறுடையார் - தாம் தொன்மைக்கெல்லாம் தொன்மை யாயிருத்தலைத் தோற்றுவிக்கச் சர்வசங்காரகாலத்துத் திருநீற்றினைத் திருமேனியிலணிந்தவர். உள்ளம் கூறுடையார் - உள்ளத்தில் குடி கொண்டிருப்பர், தாறிட்ட வாழையில் தழைவால் மந்திகள் கனிந்த பழத்தை உண்டு செருக்கி, குரங்கினத்தைக் கலைந்தோடப்பாய்கின்ற ஆவூர் என்றதால் நினைந்துருகும் அடியார்க்குச் சிவாநுபவ வன்மை யளிக்கும் ஆவூர் என்பது குறிப்பால் போந்த பொருள்.

8. பொ-ரை : வெண்மையான தலைகளை மாலையாகக் கோத்துப் பிற மாலைகளுடன் அணிந்துள்ள திருமேனியை உடைய வரும், வண்டுகள் மொய்க்கும் மலர்களைச் சூடிய வலிய இராவண னின் முடியை நெரித்து மகிழ்ந்த வலியரும் ஆகிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள இடம், எங்கும் வளம் ஓங்கியதும், தரிசித்தவர்கள் சித்தத்தால் உயர்ந்தவர்களாய்த் தமக்குக் கதியருள் என்று கைகளைக் கூப்பிப் பழமைதொட்டுச் சிவபெருமானுக்கு உரியனவாகிய

Koviloor Digital Library

84. மாலு மயனும் வணங்கிநேட
மற்றவ ருக்கெரி யாகிநீண்ட
சீல மறிவரி தாகிநின்ற
செம்மையி னாரவர் சேருமூராம்
கோல விழாவி னரங்கதேறிக்
கொடியிடை மாதர்கள் மைந்தரோடும்
பாலென வேமொழிந் தேத்துமாவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடுநாவே. 9

மலர்களைச் சாத்தி வழிபடும் இயல்பினதும் ஆகிய ஆவூர்ப்பசுபதி யீச்சரமாகும். நாவே அதனைப் பாடுவாயாக.

கு-ரை : வெண்டலைமாலை உம்மைத்தொகை; வெண்தலை களையும் மாலைகளையும் கலந்து அணிந்த திருமேனியுடையவர். விறல் - வலிமை. நாளும் புதுப்பூச்சூடி, போகம் நுகர்பவனாதலின் இராவணன்முடி வண்டமர் பூமுடி எனப்பட்டது. அதனைச் செற்றுகந்த மைந்தர் என்பதால் வினைப்போகக் கழிவின்கண் ஆட்கொள்ளும் இறைவன் என்பது போதரும். சிந்தைக் கருத்து - இடைவிடாத சிந்தனையால் எழுந்த கருத்து.

9. பொ-ரை : திருமாலும் பிரமனும் வணங்கித் தேட, அவர்கட்குச் சோதிப் பிழம்பாய் நீண்டு தோன்றிய, அறிதற்கு அரியராய் விளங்கும் செம்மையராகிய சிவபிரான் எழுந்தருளிய ஊர், அழகிய விழாக் காலங்களில் கொடியிடைப் பெண்கள் அரங்கின்கண் ஏறி ஆடவர்களோடு கூடிப் பால்போன்று இனிக்கும் மொழிகளால் இறைவனை ஏத்தும் ஆவூர்ப் பசுபதியீச்சரமாகும். நாவே அதனைப் பாடுவாயாக.

கு-ரை: நேட - தேட. மற்று வினைமாற்றுப் பொருளில் வந்தது. சீலம் - எளிமை; இதனைச் சௌலப்யம் என்பர் வடநூலார். சீலமாவது அடியார்க்கு எளியராய் இருக்கும் தன்மை. மாலும் அயனும் தேட அவர்களுக்குச் சோதிப் பிழம்பாய்த் தோன்றிய எளிமையை விளக்கியது. அதனைச் சிற்றறிவுடைய ஆன்மாக்கள் அறியமுடியாமை யால் அறிவரிதாகிநின்ற என்றார். கோலவிழா - அழகியவிழா. மாதரும் மைந்தரும் அரங்கேறியும் பால்போன்ற மொழியால் இறைவனை ஏத்துகிறார்கள் என்பது, இன்பக்காலத்தும் இறை வனையே தியானிக்கும் பெருமை விளக்கியவாறு.

Koviloor Digital Library

85. பின்னிய தாழ்சடை யார்பிதற்றும்
பேதைய ராஞ்சமண் சாக்கியர்கள்
தன்னிய லும்முரை கொள்ளகில்லாச்
சைவ ரிடந்தள வேறுசோலைத்
துன்னிய மாதரும் மைந்தர்தாமுஞ்
சுனையிடை மூழ்கித் தொடர்ந்த சிந்தைப்
பன்னிய பாடல் பயிலுமாவூர்ப்
பசுபதி யீச்சரம் பாடுநாவே. 10

86. எண்டிசை யாரும்வ ணங்கியேத்தும்
எம்பெரு மானையெ ழில்கொளாவூர்ப்
பண்டுரி யார்சிலர் தொண்டர்போற்றும்
பசுபதி யீச்சரத் தாதிதன் மேல்

10. பொ-ரை : பின்னித் தொங்கவிடப்பட்ட சடையை உடையவராய், அறிவின்மையோடு சமணர்கள் சாக்கியர்கள் ஆகியோர் தங்களைப் பற்றியும் தாங்கள் சார்ந்த மதங்களின் சிறப்புக்களைப் பற்றியும் கூற, அவற்றை ஏலாதவராய் விளங்கும் சைவன் விரும்பி உறையும் இடம், முல்லைக் கொடி படர்ந்த சோலைகளில் மாதரும் மைந்தரும் நெருங்கிச் சுனையில் மூழ்கிச் சிவபிரானை மனம் ஒன்றிப் பாடும் ஆவூர்ப் பசுபதியீச்சரமாகும். நாவே அதனைப் பாடுவாயாக.

கு-ரை : பின்னிய தாழ் சடையார் - பின்னித் தொங்கவிடப் பெற்ற சடையை உடையவர்கள்; சமணரில் இல்லறத்தாராகிய ஆண்கள் தலையைப் பின்னித் தொங்கவிடுதல் மரபு, இன்றும் சீனமக்களிடத்துக் காணலாம். சாக்கியர் - புத்தர். தன்னியலும் உரை - தன்னைப்பற்றி அவர்கள் சொல்லும் உரைகள். உரைகொள்ள இல்லா சைவர் - அவ்வுரைகளுக்குப் பொருளாகத் தாம் ஆகாத சிவபெருமான் என்றது, சிவத்தைப்பற்றி அவர்கள் கூறும் உரைகள் சிற்றறிவினால் சொல்லப்பட்டன ஆதலின் அவற்றைக் கடந்துநின்ற இயல்பினை உடையவர் என்பதாம். தளவு - முல்லை. மாதரும் மைந்தரும் சுனையில் மூழ்கிப் புறத்தூய்மையொடு அகத்தூய்மையும் கொண்டு வழிபடு கின்றனர் என்றவாறு.

11. பொ-ரை : எட்டுத் திசையில் உள்ளவர்களும் வணங்கிப் போற்றும் எம் தலைவரும், அழகிய ஆவூரில் பழ அடியார்களால்

Koviloor Digital Library

கண்டல்கண் மிண்டிய கானற்காழிக்
கவுணியன் ஞானசம் பந்தன்சொன்ன
கொண்டினி தாவிசை பாடியாடிக்
கூடும வருடை யார்கள்வானே. 11

திருச்சிற்றம்பலம்

போற்றப் பெறுபவரும் ஆகிய பசுபதியீச்சரத்து இறைவர்மேல் தாழை மரங்கள் நிறைந்த கடற்கரைச் சோலைகளால் சூழப்பட்ட சீகாழிப் பதியில் கவுணியர் குடியில் தோன்றிய ஞானசம்பந்தன் பாடிய பாடல்களை இசையோடு பாடி ஆடி வணங்குபவர்கள், வானகத்தைத் தமது உடைமையாகப் பெறுவர்.

கு-ரை : திசையிலுள்ளார் அனைவரும் வணங்கும் பெருமானை ஆவூரில் வழிவழி உரிமைபூண்ட சில அடியார்கள் போற்றுகின்றார்கள் என்பதாம். கண்டல் - தாழை, சொன்ன - சொல்லினவாய பாடல்கள். பாடி - வாய்த்தொண்டு. ஆடி - மெய்த்தொண்டு. கூடுதல் - சிந்தைத்தொண்டு. கூடுமவர் - தியானிப்பவர்.

நல்லூர்ப் புராணம்

கோழி வந்த கொடியவன் தாதையை
வாழி வந்தனை செய்து வழுத்திடும்
ஆழி வந்த வமுதை நிகர்கவிக்
காழி வந்த கவுணியன் போற்றுவாம்.

- வேலைய தேசிகர்.

காசி காண்டம்

கேழ்கிளர் புனிற்றுத் திங்கள் கிடந்தொளிர் சடையோன் பங்கில்
தாழிருங் கூந்தற் பேதை தடமுலைத் தீம்பால் மாந்தி
யேழ்நிலை வரைப்பு முய்ய வீர்ந்தமிழ் மாரி பெய்த
காழிமா முகிலின் செய்ய மலரடி கருத்துள் வைப்பாம்.

- அதிவீரராம பாண்டியன்.

Koviloor Digital Library

9. திருவேணுபுரம்

பதிக வரலாறு:

மயிலையில் பூம்பாவையை உயிர்ப்பித்த பிள்ளையார், திருவான்மியூர், இடைச்சுரம், கழுக்குன்றம், அச்சிறுபாக்கம், அரசிலி புறவார் பனங்காட்டூர் ஆகிய தலங்களை வழிபட்டு, நற்றவர் குழாத்தோடும், ஆனந்த நடராஜர் ஞானநடஞ்செயும் தில்லையம்பதியின் எல்லையில் வணங்கிக்கொண்டு, திருக் கழுமலம் சென் றடைந்து, சீகாழிப் பதியைத் தூரத்தே கண்டதும், பல்லக்கை விட்டிறங்கி, 'வண்டார் குழல் அரிவை' என்னும் இப்பதிகத்தைப் பாடியருளுகிறார்.

பண்: நட்டபாடை

பதிக எண்: 9

திருச்சிற்றம்பலம்

87. வண்டார்குழ லரிவையொடு
பிரியாவகை பாகம்
பெண்டான்மிக வானான்பிறைச்
சென்னிப்பெரு மானூர்
தண்டாமரை மலராளுறை
தவளந்நெடு மாடம்
விண்டாங்குவ போலும்மிகு
வேணுபுர மதுவே. 1

இத்திருப்பதிகத்தின் ஒன்று முதல் பத்துப் பாடல்களும் சிவபிரானது ஊர் வேணுபுரம் என உள்ளவாறே பொருள் கொள்ளத் தக்கன. தூரத்தே கண்டதும் பாடினார் என்பதற்கு ''வேணுபுரம் அதுவே'' என்றதே அகச்சான்றாயிற்று.

1. பொ-ரை : வண்டுகள் மொய்க்கும் கூந்தலை உடைய பெண்ணாகிய உமையம்மை, தன்னிற் பிரியாதிருக்கத் தன் திருமேனி யில் இடப்பாகத்தை அளித்து, அப்பாகம் முழுதும் பெண் வடிவான வனும், பிறையணிந்த திருமுடியை உடையவனும் ஆகிய பெருமானது ஊர், தாமரை மலரில் விளங்கும் திருமகள் வாழும் வெண்மையான

Koviloor Digital Library

88. படைப்புந்நிலை யிறுதிப்பயன்
பருமையொடு நேர்மை
கிடைப்பல்கண முடையான்கிறி
பூதப்படை யானூர்
புடைப்பாளையின் கமுகின்னொடு
புன்னைமலர் நாற்றம்
விடைத்தேவரு தென்றன்மிகு
வேணுபுர மதுவே. 2

பெரிய மாடங்கள் விண்ணைத் தாங்குவன போல உயர்ந்து விளங்கும் வேணுபுரமாகும்.

கு-ரை : இது உமாதேவியைப் பிரியாதிருக்க ஒருபாகமே பெண்ணான பெருமான் ஊர் வேணுபுரம் என்கின்றது. வண்டார்குழல் அரிவை - வண்டுகள் மொய்க்கும் கூந்தலையுடைய பெண்ணாகிய உமை. பிரியாவகை - பிரியாதிருக்க. பாகம் - ஒரு பாகத்திலேயே. மிகப் பெண் ஆனான் - முழுதும் பெண்வடிவானவன். தவளம் - வெண்மை. மாடம் விண்தாங்குவ போலும் என்றது உயர்வு நவிற்சியணி.

2. பொ-ரை : படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில் புரிவோனும், அவற்றின் முடிந்த பயனாய வீட்டின்ப வடிவாய் விளங்குவோனும், பருமை நுண்மை இவற்றிற்கோர் எல்லையாக இருப்பவனும், வேதங்களை ஓதும் கணங்களை உடையோனும், வஞ்சகமான பூதப்படைகளை உடைய்வனும் ஆகிய சிவபிரானது ஊர், பக்கங்களில் வெடித்து மலர்ந்திருக்கும் கமுகம் பாளையின் மணத்தோடு புன்னை மலர்களின் மணத்தைத் தாங்கி மெல்லெனப் பெருமிதத்தோடு வரும் தென்றல் காற்று மிகுந்து வீசும் வேணுபுரம் ஆகும்.

கு-ரை: படைப்பு - சிருஷ்டி. நிலை - திதி. இறுதி - சம்ஹாரம். பயன் - முத்தொழிலின் பயனாகிய வீட்டின்பத்தின் வடிவாய் இருப்பவன். பயன் - பயன் வடிவாகிய இறைவனை உணர்த்திற்று. பருமை - பருப்பொருள். நேர்மை - நுண் பொருள் என்றது அணுவுக்கு அணுவாயும் பெரியவற்றிற்கெல்லாம் பெரிதாயும் நிற்கும் இறைவனின் நிலை உணர்த்தியவாறு. கிடை பல் கணம் உடையான் - வேதத்தை ஓதும் கூட்டமாகிய பல சிவகணங்களையுடையவன். கிடை - வேதம் ஓதும் கூட்டம். 'ஓதுகிடையின் உடன் போவார்' (பெரிய,

Koviloor Digital Library

89. கடந்தாங்கிய கரியையவர்
வெருவவுரி போர்த்துப்
படந்தாங்கிய வரவக்குழைப்
பரமேட்டிதன் பழவூர்
நடந்தாங்கிய நடையார்நல
பவளத்துவர் வாய்மேல்
விடந்தாங்கிய கண்ணார்பயில்
வேணுபுர மதுவே. 3

90. தக்கன்றன சிரமொன்றினை
யரிவித்தவன் றனக்கு
மிக்கவ்வர மருள்செய்தவெம்
விண்ணோர்பெரு மானூர்

சண்டே - 17) கிறி-வஞ்சகம். புடைப்பாளை - பக்கங்களில் வெடித்து மலர்ந்திருக்கின்ற பாளைகள். விடைத்தே - வேறுபடுத்தியே, கமுகு புன்னைகளின் நாற்றத்தை ஒன்றாகக் காட்டாது மிக்கு வேறு படுத்திக் காட்டுகிறது.

3. பொ-ரை : தாருகாவனத்து முனிவர்கள் ஏவிய மதநீர் ஒழுகும் யானையை அம்முனிவர்கள் வெருவுமாறு உரித்துப் போர்த்தவரும், படத்தோடு கூடிய பாம்பைக் குழையாக அணிந்தவரும் ஆகிய சிவபிரானது பழமையான ஊர், நடனத்துக்குரிய சதிகளோடு கூடிய நடையையும், அழகிய பவளம் போன்ற சிவந்த வாயினையும் மேலான விடத்தன்மையோடு கூடிய கண்களையும் உடைய அழகிய மகளிர் பலர் வாழும் வேணுபுரம் ஆகும்.

கு-ரை : கடம் - மதநீர். அவர் வெருவ - யானையை ஏவிய தாருகாவனத்து முனிவர்களஞ்ச. பழவூர் என்றது மகாப்ரளய காலத்திற்கும் தொன்மையதாதலின். நடந்தாங்கிய நடையார் - நடனத்திற்கு ஏற்ற ஜதிவைப்பைத் தாங்கிய நடையையுடையவர்கள். துவர் - சிவப்பு. மேல்விடம் - மேலாகிய விடம். விடம் உண்டாரை யன்றிக் கொல்லாது; இது நோக்கினாரையும் கொல்லும் ஆதலின் மேல்விடம் என்றார். வாய்மேல்(விடந்தாங்கிய) கண் எனலுமாம்.

4. பொ-ரை : தக்கனது தலையை வீரபத்திரக் கடவுளைக் கொண்டு அரியச் செய்து, பிழையை உணர்ந்து அவன் வேண்டிய

Koviloor Digital Library

பக்கம்பல மயிலாடிட
மேகம்முழ வதிர
மிக்கம்மது வண்டார்பொழில்
வேணுபுர மதுவே. 4

91. நானாவித வுருவானமை
யாள்வானணு காதார்
வானார்திரி புரமூன்றெரி
யுண்ணச்சிலை தொட்டான்
தேனார்ந்தெழு கதலிக்கனி
யுண்பான்றிகழ் மந்தி
மேனோக்கிநின் றிரங்கும்பொழில்
வேணுபுர மதுவே. 5

போது அவனுக்கு மிகுதியான வரங்கள் பலவற்றை அளித்தருளிய வானோர் தலைவனாகிய சிவபெருமானது ஊர், மேகங்கள் முழவாக ஒலிக்க, நாற்புறமும் மயில்கள் ஆடுவதும், மிகுதியான தேனை வண்டுகள் அருந்தும் வளமுடையதுமான பொழில்கள் சூழ்ந்த வேணு புரமாகும்.

கு-ரை : தக்கன் தன் சிரம் - தக்கன் தலை. தன அகரம் வேண்டா வழிச் சாரியை. அரிவித்து என்றது வீரபத்திரக் கடவுளைக் கொண்டு வெட்டுவித்த வரலாற்றினை உட்கொண்டு.

5. பொ-ரை : அன்போடு வழிபடும் நாம் எவ்வுருவில் நினைக்கின்றோமோ அவ்வுருவில் தோன்றி நம்மை ஆட்கொள் பவனும், தன்னை நணுகாதவராகிய அசுரர்களின் வானில் திரிந்த மூன்றுபுரங்கள் வெந்தழியுமாறு வில்லை வளைத்துக் கணை தொடுத்து எரியூட்டியவனும் ஆகிய சிவபிரானது ஊர், மரங்களில் அமர்ந்த மந்திகள் தேனின் சுவை பொருந்தியனவாய்ப் பழுத்துத் தோன்றிய வாழைப் பழங்களைக் கண்டு அவற்றை உண்ணுதற் பொருட்டு மேல் நோக்கியவாறே தாம் ஏறிப்பறிக்க இயலாத தம் நிலைக்கு வருந்தும் பொழில்கள் சூழ்ந்த வேணுபுரம் ஆகும். ''வாழை மரத்தில் குரங்கு ஏறாதன்றோ''.

கு-ரை : நானாவித உருவால் நமையாள்வான் - தியானிக்கின்ற அடியார்கள் நினைத்த உருவத்தோடு வெளிப்பட்டு அருள்புரிபவன்.

Koviloor Digital Library

92. மண்ணோர்களும் விண்ணோர்களும்
வெருவிம்மிக வஞ்சக்
கண்ணார்சல மூடிக்கட
லோங்கவ்வுயர்ந் தானூர்
தண்ணார்நறுங் கமலம்மலர்
சாயவ்விள வாளை
விண்ணார்குதி கொள்ளும்வியன்
வேணுபுர மதுவே. 6

✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ 7

நணுகாதார் - பகைவர்களாகிய திரிபுராதிகள். வானார் - வானத்திற் பறந்து திரிகின்ற. சிலை தொட்டான் - வில்லால் அம்பைச் செலுத்தியவன். தொடுதல் - செலுத்துதல். 'கடுங் கணைகள் தம்மைத் தொட்டனன்' (*கந்த. சூரபன்மன் வதை. 191*) சிலை தொட்டான் என்றது சிலையைத் தொட்ட அளவே! திரிபுரங்கள் எரிந்தன என்னும் நயப்பொருள் தோன்ற.

தேன் ஆர்ந்து எழு கதலி - தேன்கதலி என்னும் ஒருவகை வாழை. மந்தி மேல்நோக்கி ஏறிப்பறிக்க இயலாத நிலைக்கு இரங்குகின்ற (வருந்துகின்ற) இயற்கையை அறிவித்தபடி. இறங்கும் என்றும் பாடம். இதற்கு, குரங்கு மேல்நோக்கியவாறே கீழிறங்கும் என்பது பொருள்.

6. பொ-ரை : மண்ணுலக மக்களும் விண்ணகத்தேவரும் கண்டு நடுங்கி மிகவும் அஞ்சுமாறு நிலமெல்லாம் நிறைந்த நீர் மூடிக் கடல் ஊழி வெள்ளமாய் ஓங்க, அவ்வெள்ளத்திலும் அழியாது உயர்ந்து தோணியாய்த் தோன்றுமாறு செய்த சிவபிரானது ஊர், தண்ணிய மணம் கமழும் தாமரை மலர்கள் சாயுமாறு இளவாளை மீன்கள் வானிடை எழுந்து குதிக்கும் நீர்வளம் சான்ற பெரிய வேணுபுரம் ஆகும்.

கு-ரை : கண்ணார் சல மூடி - நிலமெல்லாம் நிறைந்து நீர் மூடி. மூடி ஓங்க உயர்ந்தான் ஊர் எனக் கூட்டுக.

7. ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱

Koviloor Digital Library

93. மலையான்மக ளஞ்சவ்வரை
யெடுத்தவ்வலி யரக்கன்
தலைதோளவை நெரியச்சர
ணுகிர்வைத்தவன் றன்னூர்
கலையாறொடு சுருதித்தொகை
கற்றோர்மிகு கூட்டம்
விலையாயின சொற்றேர்தரு
வேணுபுர மதுவே. 8

94. வயமுண்டவ மாலும்மடி
காணாதல மாக்கும்
பயனாகிய பிரமன்படு
தலையேந்திய பரனூர்
கயமேவிய சங்கந்தரு
கழிவிட்டுயர் செந்நெல்
வியன்மேவிவந் துறங்கும்பொழில்
வேணுபுர மதுவே. 9

8. பொ-ரை :மலையரையன் மகளாகிய பார்வதி தேவி அஞ்சுமாறு கயிலை மலையைப் பெயர்த்தெடுத்த வலிமை சான்ற இராவணனின் தலைகள் தோள்கள் ஆகியவை நெரியுமாறு கால் விரலை ஊன்றிய சிவபிரானது ஊர், ஆறு அங்கங்களோடு வேதங் களின் தொகுதியைக் கற்றுணர்ந்தோர் தம்முள் கூடும் கூட்டத்தில் விலை மதிப்புடைய சொற்களைத் தேர்ந்து பேசும் கல்வி நலம் சான்றவர் வாழும் வேணுபுரம் ஆகும்.

கு-ரை : இராவணனது தலையும் தோளும் நெரிய விரலினது நுனியை ஊன்றி மறக்கருணை காட்டியது வரையை யெடுத்ததற்காக அன்று; உமாதேவிக்கு அச்சம் விளைத்தமையான். பெண்மையின் பொதுமை நோக்கி உரைத்தலாயிற்று. உகிர் - நகம். சுருதித்தொகை - சாகைகளின் கூட்டமாகிய வேதம். விலையாயின சொல் - பெறுமதி யுடைய சொற்கள்.

9. பொ-ரை : உலகை உண்ட திருமாலும் தன் அடிகளைக் காணாது அலமருமாறு செய்தவனும், மக்கள் அடையத்தக்க பயன் களில் ஒன்றான பிரமலோகத்தை உடைய பிரமனது கிள்ளப்பட்ட

Koviloor Digital Library

95 . மாசேறிய வுடலாரமண்
குழுக்கள்ளொடு தேரர்
தேசேறிய பாதம்வணங்
காமைத்தெரி யானூர்
தூசேறிய வல்குற்றுடி
யிடையார்துணை முலையார்
வீசேறிய புருவத்தவர்
வேணுபுர மதுவே. 10

தலையோட்டினை ஏந்தியவனுமாகிய சிவபிரானது ஊர்; ஆழ்ந்த நீர் நிலைகளில் வாழும் சங்குகள், கடல் தரும் உப்பங்கழியை விடுத்துச் செந்நெல் விளைந்த அகன்ற வயலில் வந்து உறங்கும் வேணுபுர மாகும்.

கு-ரை : வயம் - வையம் - போலி. வயம் உண் தவம் மாலும் - உலகை உண்ட தவத்தைச் செய்த திருமாலும். அடிகாணாது அல மாக்கும் - திருவடியைக் காணப் பெறாது சுழலும். அலமாக்கும் பரன் எனவும் ஏந்திய பரன் எனவும் தனித்தனியே கூட்டுக. பயன் ஆகிய பிரமன் - அச்சத்தை உடையவனாகிய பிரமன். கயம் - ஆழ்ந்த நீர்நிலை. சங்கம் உப்பங்கழியைவிட்டுச் செந்நெல் வயலில் வந்து உறங்கும் வேணுபுரம். செந்நெல்வியன் - செந்நெல் விளைந்துள்ள அகன்ற இடம்.

10. பொ-ரை : அழுக்கேறிய உடலினை உடையவர்களாகிய சமணர் கூட்டத்தினரோடு, புத்த மதத்தினராகிய தேரர்களும் ஒளி பொருந்திய திருவடிகளை வணங்காமையால் அவர்களால் அறியப் பெறாத சிவபிரானது ஊர்; அழகிய ஆடை தோயும் அல்குலையும், உடுக்கை போன்ற இடையையும், பருத்த தனங்களையும், ஆடவர் மேல் தம் குறிப்பு உணர்த்தி நெரியும் புருவங்களையும் உடைய அழகிய மகளிர் வாழும் வேணுபுரம் ஆகும்.

கு-ரை : மாசு ஏறிய உடல் - தேயாது தோய்வதால் அழுக்கு ஏறிய உடல். தேரர் - புத்த முனிவர். தேசு ஏறிய பாதம் - ஒளியுள்ள திருவடி. வணங்காமைத் தெரியான் - வணங்காதபடி அவர்களால் அறியமுடியாதவன். தூசு - ஆடை. துடி - உடுக்கை. வீசு ஏறிய புருவத்தவர் - ஆடவர்மேல் வீசி நெற்றியின்கண் ஏறிய புருவத்தினை உடையார்.

Koviloor Digital Library

96. வேதத்தொலி யானும்மிகு
வேணுபுரந் தன்னைப்
பாதத்தினின் மனம்வைத்தெழு
பந்தன்றன பாடல்
ஏதத்தினை யில்லாவிவை
பத்தும்மிசை வல்லார்
கேதத்தினை யில்லார்சிவ
கெதியைப்பெறு வாரே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : ஞானசம்பந்தரின் ஏதம் இல்லாத இப்பத்துப் பாடல்களையும் இசையோடு பாடுவார் சிவகதி பெறுவார் என வினை முடிபு கொள்க.

மங்கல ஒலிகள் பலவற்றோடு வேத ஒலியாலும் மிக்குத் தோன்றும் வேணுபுரத்துப் பெருமானின் பாதங்களை மனத்துட் கொண்டு பாடப்பெற்ற ஞானசம்பந்தரின் துன்பந்தரல் இல்லாத இப் பதிகப் பாடல்களை இசையோடு பாடவல்லவர் துயர் நீங்குவர்; முடிவில் சிவகதியைப் பெறுவர்.

கு-ரை : சென்ற திருப்பாடல்களில் கூறிய முழவதிர்தலும், வாளை குதிகொள்ளுதலும், கற்றோர்கள் சொல்தேர்தலும் ஆகிய இவற்றால் உண்டான ஒலியோடு வேத ஒலியாலும் மிகுந்திருக்கின்ற வேணுபுரம். பாதம் - சிவனது திருவடி. பந்தன் - ஞானசம்பந்தன். ஏதத்தினை இல்லா இவை பத்தும் - துன்பம் தரல் இல்லாத இந்தப் பத்துப்பாடல்களும் துன்பம் நீக்குமாற்றை ஊன்றி நோக்கி இன்புறுதற்குரியது. கேதம் - துன்பம்.

பரமத திமிரபாநு

பூம்பாவாய் போதியோ என்றழைத்த பூசுரன்றாள்
நாம்பாவா லேத்திநயப் பாம்.

- மறைஞான சம்பந்தர்.

Koviloor Digital Library

10. திருவண்ணாமலை

பதிக வரலாறு:

திருஅறையணிநல்லூரை வழிபட்ட பிள்ளையாருக்கு, அன்பர்கள் அண்ணாமலையைக் காட்டினார்கள். அண்ணா மலை, இறைவன் திருவுருவாகவே காட்சியளித்தது. அதனைக் கண்ணாற்பருகிக் கைதொழுது கலந்து போற்றுங்காதலினால் இப் பதிகத்தை அருளிக்கொண்டே தலத்தையடைகின்றார்கள். இப் பதிகமும் சேய்மையில் அண்ணாமலையை அன்பர் காட்டக் கண்டு தொழுது பாடியதாகவே சேக்கிழார் தெரிவிக்கின்றார். (பெரிய. திருஞா. 969, 970.)

பண்: நட்டபாடை

பதிக எண்: 10

திருச்சிற்றம்பலம்

97 . உண்ணாமுலை யுமையாளொடும்
உடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை
திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரண்
மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை
வழுவாவண்ண மறுமே. 1

இப்பதிகப் பாடல்கள் உள்ளவாறே பொருள் கொள்ள அமைந்தவை.

1. பொ-ரை : உண்ணாமுலை என்னும் திருப்பெயருடைய உமையம்மையாரோடு உடனாக எழுந்தருளியவரும், தம் இடப்பாகம் முழுவதும் பெண்ணாகியவருமாகிய சிவபிரானது மலை, அடித்து வரும் அழகிய மணிகள் சுடர்விட மண்ணை நோக்கி வருவனவாகிய அருவிகள் பொருள் புரியாத மழலை ஒலியோடு கூடிய முழவு போல ஒலிக்கும் திருவண்ணாமலை யாகும். அதனைத் தொழுவார் வினைகள் தவறாது கெடும்.

கு-ரை: உமையாளொடும் உடனாகிய ஒருவன் என்றது

Koviloor Digital Library

98. தேமாங்கனி கடுவன்கொள
விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுகன்மிசை
சிறுநுண்டுளி சிதற
ஆமாம்பிணை யணையும்பொழி
லண்ணாமலை யண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி
நினைவார்வினை யிலரே. 2

99. பீலிம்மயில் பெடையோடுறை
பொழில்சூழ்கழை முத்தம்
சூலிம்மணி தரைமேனிறை
சொரியும்விரி சாரல்

உமாதேவியை இடப்பாகத்திருத்தி இருக்கிற உடனாய நிலையை உணர்த்தியது. பெண்ணாகிய பெருமான் என்றது உமையம்மையோடு ஒன்றாகிய நிலையை உணர்த்தியது. மழலை முழவு - சொற்றூய்மை யில்லாத முழவொலி. சொல் - மத்தளத்தின் ஜதி ஒலி.

2. பொ-ரை : கிளைகளை வளைத்து இனிய மாங்கனிகளை உண்ட ஆண் குரங்குகள் விடுத்த அக்கொம்புகள் வேகமாகத் தீண்டப் படுதலால் தூய மழை மேகங்கள் மலைப் பாறைகளில் சிறிய நுண்ணியவான மழைத்துளிகளைச் சிதறுவதால் காட்டுப்பசுக்கள் மழை எனக் கருதி மரநிழலை அடையும் பொழில்களை உடைய அண்ணாமலை இறைவனின், அழகிய மலர் போன்றனவும் வீரக்கழல் அணிந்தனவுமான சிவந்த திருவடிகளை நினைவார் வினை இலராவர்.

கு-ரை : கடுவன் - ஆண் குரங்கு. விடுகொம்பு - மாம்பழத்தைப் பறித்துவிட்ட மாங்கொம்பு. தூ மா மழை - தூய்மையான கரிய மேகம். துறுகல் - பாறை. ஆமா பிணை - காட்டுப் பசு; பெண்பசுவோடு, ஆமாப் பிணை என்பது எதுகைநோக்கி ஆமாம்பிணையாயிற்று, பூமாங்கழல் - அழகிய மாவிலையின் வடிவந்தோன்றப் புனையப் பட்ட காலணி. மாண் கழலுமாம். நினைக்க முத்தி தரும் தலம் ஆதலின் நினைவார் வினையிலரே என்றார்.

3. பொ-ரை : தோகைகளோடு கூடிய ஆண்மயில்கள் பெண் மயில்களோடு உறையும் பொழில் சூழ்ந்ததும், மூங்கில்கள் சூல்

Koviloor Digital Library

ஆலிம்மழை தவழும்பொழி
லண்ணாமலை யண்ணல்
காலன்வலி தொலைசேவடி
தொழுவாரன புகழே. 3

100. உதிரும்மயி ரிடுவெண்டலை
கலனாவுல கெல்லாம்
எதிரும்பலி யுணலாகவு
மெருதேறுவ தல்லால்
முதிருஞ்சடை யிளவெண்பிறை
முடிமேல்கொள வடிமேல்
அதிருங்கழ லடிகட்கிடம்
அண்ணாமலை யதுவே. 4

கொண்டு உதிர்க்கும் முத்துக்கள் நிறைந்து சொரிவதும், விரிந்த மலைப் பகுதிகளில் நீர்த்துளிகளோடு கூடிய மழை மேகங்கள் தவழும் பொழில்களை உடையதுமாகிய அண்ணாமலை, இறைவனின், காலனது வலிமையைத் தகர்த்த சிவந்த திருவடிகளைத் தொழுவார் மேலன புகழ். (தொழுவார் புகழ் பெறுவர் என்பதாம்)

கு-ரை : பீலிம்மயில், ஆலிம்மழை, சூலிம்மணி என்பன விரித்தல் விகாரம். சூலி மணி - சூலிருந்து பெற்ற முத்துக்கள். ஆலி - நீர்த்துளி. திருவடியால் எட்டியுதைத்தார் ஆகலின் காலன் வலிதொலை சேவடி என்றார். புகழ் தொழுவார் எனக்கூட்டுக.

4. பொ-ரை : உடலிலிருந்து பிரிக்கப்பட்ட மயிர் நீங்கிய பிரமனது வெண்மையான தலையோட்டை உண்கலனாக் கொண்டு உலகெலாம் திரிந்து ஏற்கும் பலியை உணவாகக் கொள்ளுதற்கு எருது ஏறி வருவதோடு முதிர்ந்த சடைமுடியின் மீது வெண்பிறையைச் சூடித் திருவடிகளில் அதிரும் வீரக் கழல்களோடு விளங்கும் சிவபிரானுக் குரிய இடம் திருவண்ணாமலையாகும்.

கு-ரை : உதிரும் மயிர் இடு வெண்டலை - சதை வற்றிப் போனதால் உதிர்கின்ற மயிரையுடைய காட்டில் இடப்பெற்ற பிரம கபாலம். எதிரும் பலி - வந்து இடப்பெறும் பிச்சை. பிச்சை ஏற்பார் யாசியாது தெருவிற்செல்ல மகளிர் தாமே வந்து இடுதல் மரபாதலின்

Koviloor Digital Library

101. மரவஞ்சிலை தரளம்மிகு
மணியுந்துவெள் ளருவி
அரவஞ்செய முரவம்படும்
அண்ணாமலை யண்ணல்
உரவஞ்சடை யுலவும்புன
லுடனாவது மோரார்
குரவங்கமழ் நறுமென்குழல்
உமைபுல்குதல் குணமே. 5

102. பெருகும்புன லண்ணாமலை
பிறைசேர்கடல் நஞ்சைப்
பருகுந்தனை துணிவார்பொடி
யணிவாரது பருகிக்

அதனை விளக்க எதிரும்பலி என்றார். முதிருஞ்சடை இள வெண் பிறை: முரண்.

5. பொ-ரை : வெண் கடம்பமரம், சிலை, முத்து, மிக்க மணிகள் ஆகியவற்றை உந்திவரும் வெண்மையான அருவிகள் பறைபோல ஆரவாரம் செய்யும் திருவண்ணாமலையில் விளங்கும் அண்ணலாகிய சிவபிரான், சடையில் பாம்பும் கங்கையும் உடனாயிருந்து உலவுவதை ஓராமல், குராமணம் கமழும் மென்மையான கூந்தலை உடைய உமையம்மையாரைத் தழுவுதல் நன்றோ?

கு-ரை : சிலை - ஒருவகை மரம். தரளம் - முத்து. மணி - இரத்தினம். அரவம் - ஒலி, உரவம் - உரகம் என்பதன் திரிபு; பாம்பு. உரகமும், கங்கையும் சடையில் உலாவுதலையும் ஓராமல் உமையாளைத் தழுவுதல் குணமாகுமா என்று வினவுகிறார். புணர்ச்சிக்குத் தனிமை இனியதாய், நாணங் காப்பாகவும். இவர் பாம்பும், கங்கையும் சடைமீது உலாவப் புல்லல் நன்றன்று என்று நகைபடச் சொல்லிற்றாம்.

6.பொ-ரை : பெருகிவரும் அருவி நீரை உடைய திருவண்ணாமலையில் பிறைமதி தோன்றிய பாற்கடலிடைத் தோன்றிய நஞ்சை உட்கொள்ளும் அளவிற்குத் துணிபுடையவரும், அந் நஞ்சினை உண்டு கண்டம் கறுத்தவரும், திருவெண்ணீற்றை அணிந்தவரும், மணம் கமழும் சடைமுடியை உடையவரும் ஆகிய சிவபிரானின் திருவடிகளை

Koviloor Digital Library

கருகும்மிட றுடையார்கமழ்
சடையார்கழல் பரவி
உருகும்மன முடையார்தமக்
குறுநோயடை யாவே. 6

103. கரிகாலன குடர்கொள்வன
கழுதாடிய காட்டில்
நரியாடிய நகுவெண்டலை
யுதையுண்டவை யுருள
எரியாடிய விறைவர்க்கிட
மினவண்டிசை முரல
அரியாடிய கண்ணாளொடும்
அண்ணாமலை யதுவே. 7

வாழ்த்தி உருகும் மனம் உடையவர்கட்கு மிக்க நோய்கள் எவையும் வாரா.

கு-ரை : பிறை சேர் கடல் - ஒருகலைப்பிறை உண்டாதற்கு இடமாகிய பாற்கடல். பருகுந்தனை துணிவார் - உட்கொள்ளும் அளவிற்குத் துணிவுடையவர்.

பொடி - விபூதி. கருகும் மிடறு - கருமை ஒருகாலைக்கு ஒருகால் மிக்குத்தோன்றும் கழுத்து.

7. பொ-ரை : கரிந்த கால்களை உடையனவும், குடரைப் பிடுங்கி உண்பனவும் ஆகிய பேய்கள் ஆடும் இடுகாட்டில், நரிகள் உருட்டி விளையாடும் சிரிக்கும் வெண்டலை ஓடுகள் உதைக்கப்பட்டு உருள, கையில் எரி ஏந்தி ஆடும் சிவபெருமான், வண்டுக் கூட்டங்கள் இசைபாடச் செவ்வரி பரந்த கண்களை உடைய உமையம்மையோடு எழுந்தருளிய இடம், திருவண்ணாமலை.

கு-ரை : கரிகாலன - எரிபிணத்தை நுகர எரியில் நிற்பதால் கரிந்துபோன கால்களையுடையன. கழுது - பேய்.

நரியாடிய - நரிகள் உருட்டி விளையாடிய. எரியாடிய - இடுகாட்டில் தீப்பிழம்பில் நின்றாடிய. அரி - செவ்வரி.

Koviloor Digital Library

104. ஒளிறூபுலி யதளாடையன்
உமையஞ்சுதல் பொருட்டால்
பிளிறூகுரன் மதவாரண
வதனம்பிடித் துரித்து
வெளிறூபட விளையாடிய
விகிர்தன்னிரா வணனை
அளறூபட வடர்த்தானிடம்
அண்ணாமலை யதுவே. 8

105. விளவார்கனி படநூறிய
கடல்வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை
கேடில்புக ழோனும்
அளவாவண மழலாகிய
அண்ணாமலை யண்ணல்
தளராமுலை முறுவல்லுமை
தலைவன்னடி சரணே. 9

8. பொ-ரை : ஒளி செய்யும் புலித்தோலை ஆடையாகக் கொண்டவனும், உமையம்மை அஞ்சுமாறு பிளிறும் குரலை உடைய மதம் பொருந்திய யானையின் தலையைப் பிடித்து அதன் தோலை உரித்து எளிதாக விளையாடிய விகிர்தனும், இராவணனை மலையின்கீழ் அகப்படுத்தி இரத்த வெள்ளத்தில் அடர்த்தவனும் ஆகிய சிவபெருமானது இடம் திருவண்ணாமலை.

கு-ரை : ஒளிறூபுலியதள் - ஒளிசெய்யும் புலித்தோல், பிளிறூ வெளிறூ அளறூ என்ப சந்தம் நோக்கி நீண்டன. மதவாரணம் - மதம் பிடித்த யானை. வதனம் பிடித்து உரித்து - முகத்தில் திருவடியை யூன்றிப் பிடித்துக்கொண்டு உரித்து, வெளிறுபட விளையாடிய - வெள்ளையாக விளையாடிய, வயிரமில்லாத மரத்தை வெளிறு என்றல்போல, கபடமின்றி விளையாடுதலை இங்ஙனம் கூறி இன்புற்றார். அளறுபட - மலைக்கீழகப்பட்டு நசுங்கிச் சேறாக. அடர்த்தான் - நெருக்கியவன்.

9. பொ-ரை : விள மரத்தின் கனியை உகுப்பது போல அம் மரவடிவாய் நின்ற அரக்கனை அழித்த கருங்கடல் வண்ணனாகிய திருமாலும், நீரில் கிளர்ந்து தோன்றிய தாமரை மலர்மேல் உறையும்

Koviloor Digital Library

106. வேர்வந்துற மாசூர்தர
வெயினின்றுழல் வாரும்
மார்பம்புதை மலிசீவர
மறையாவரு வாரும்
ஆரம்பர்த முரைகொள்ளன்மின்
அண்ணாமலை யண்ணல்
கூர்வெண்மழுப் படையானல்ல
கழல்சேர்வது குணமே. 10

குற்றம் அற்ற புகழாளனாகிய வேதாவும் அடிமுடிகளை அளவிட்டுக் காண இயலாதவாறு அழல் வடிவாய் நின்ற தலைவனும், தளராத தன பாரங்களையும் மலர்ந்த சிரிப்பையும் உடைய உமையம்மையின் கணவனும் ஆகிய சிவபிரானின் திருவடிகளே நமக்குக் காப்பு.

கு-ரை : விளவு ஆர் கனிபட நூறிய கடல்வண்ணன் - விளா மரமாய் நின்ற கபித்தன் அழியக்கொன்ற கண்ணபிரான் கேடில் புகழோன் - அழியாப் புகழ் பெற்ற பிரமன். அளவா வண்ணம் - தம்முட் பகைகொண்டு கலவாதபடி. இது இத்தலத்தில் பிரம விஷ்ணுக்கள் செருக்கிச்செய்த சண்டையைத் தீர்க்கப் பெருமான் தீப் பிழம்பாகிய அண்ணாமலையாய் நின்ற தலவரலாற்றுக் குறிப்பை விளக்குவது. உண்ணத் தளர்தல் நகிற்கு இயல்பாதலின் உண்ணா முலை என்பார் தளராமுலை என்றார். தனது நகில் கொண்டும் இறை வனைத் தன்வசமாக்கியவள் என்பது குறிப்பிக்கப் பெற்றது.

10. பொ-ரை : உடலில் வியர்வை தோன்றவும் அழுக்கேறவும் வெயிலில் நின்று உழல்வதைத் தவமாகக் கொள்வோராகிய சமணரும், மரவுரியால் மார்பை மிகவும் மறைத்து வருபவர் ஆகிய புத்தரும் போதிய பயிற்சியின்றித் தொடக்க நிலையில் உள்ளவர்கள் ஆதலின், அவர்களுடைய உரைகளைக் கொள்ளாதீர். திருவண்ணாமலையில் உறை யும் தலைவனும் கூரிய வெண்மையான மழுவாயுதத்தைக் கைக் கொண்டவனும் ஆகிய சிவபெருமானது நன்மைதரும் திருவடிகளை அடைதலே மேலானகுணம்.

கு-ரை : வேர் - வியர்வை. மாசு - அழுக்கு. சீவரம் - மஞ்சள் நிற ஆடை. மார்பு புலப்படாதவண்ணம் மறைத்தல் சமணத்துறவியர் இயல்பு. ஆரம்பர் - தொடக்க நிலையிலுள்ளார்; ஆரம்பவாதிகள் போதிய பயிற்சியில்லார் என்பதாம். ஆடம்பரமில்லாதவர்கள் என்பதுமாம்.

Koviloor Digital Library

107. வெம்புந்திய கதிரோனொளி
விலகும்விரி சாரல்
அம்புந்திமூ வெயிலெய்தவன்
அண்ணாமலை யதனைக்
கொம்புந்துவ குயிலாலுவ
குளிர்காழியுண் ஞான
சம்பந்தன தமிழ்வல்லவர்
அடிபேணுதல் தவமே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை :வெம்மை மிக்க கதிரவன் ஒளிபுகாதவாறு தடுக்கும் விரிந்த சாரலை உடையதும், அம்பைச் செலுத்தி முப்புரங் களை அழித்த சிவபிரான் எழுந்தருளியதுமான அண்ணாமலையைக் கொம்பு என்னும் வாத்தியங்களின் ஒலியைக் கேட்டு குயில்கள் எதிர் ஒலிக்கும் குளிர்ந்த காழிப் பதியுள் தோன்றிய ஞானசம்பந்தன் பாடிய இத்திருப்பதிகத் தமிழை ஓதவல்லவர்களின் திருவடிகளை வணங்கு தல் சிறந்த தவமாம்.

கு-ரை : வெம்பு உந்திய - வெப்பமிக்க, மலையே இறைவன் திருமேனியாதலின் அவனைத் தீண்டிப் பழியேற்க விருப்பின்றி கதிரோன் விலகிச் சென்றான் என்பதாம். கொம்பு ஒருவகை வாத்திய விசேடம். கொம்பு ஊதிய இனிய ஓசையைக் குயில் ஒலிக்கும் காழி.

குருவருள் : இப்பாடலின் இறுதிவரி 'ஞானசம்பந்தன தமிழ் வல்லவர் அடிபேணுதல் தவமே' என்கின்றது. இத்திருப்பதிகத்தை வல்லவாறு ஓதுவார்களின் அடியை விரும்பிப் போற்றுதலே ஒருவருக்குத் தவமாக அமையும் என்கிறது. இவ்வாறே திருவலஞ்சுழி பற்றிய 'விண்டெலாம்' என்ற பதிகத்தின் திருக்கடைக்காப்பாகிய 'வீடும் ஞானமும் வேண்டுதிரேல்' என்ற பாடலும், 'நாடி ஞான சம்பந்தன செந்தமிழ் கொண்டு இசை பாடும் ஞானம் வல்லார் அடி சேர்வது ஞானமே' என்ற வரிகளால் இப்பதிகத்தை ஓதுவார்களின் அடிசேர்ந்து வாழ்தலே உண்மை ஞானம் கிடைத்தற்கு ஏதுவாம் என்கின்றது. இவ்விரு பாடல்களும் காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி ஓதுவார் அடிபோற்றின் தவமும் அதன் வழி ஞானமும் உண்டாம் என்பதை வற்புறுத்துவது காணலாம்.

Koviloor Digital Library

11. திருவீழிமிழலை

பதிக வரலாறு:

திரும்பாம்புரம் என்னும் தலத்தை வணங்கிக்கொண்டு பிள்ளையார் திருவீழிமிழலைக்கு அப்பருடன் எழுந்தருள அந்தணர்கள் எதிர்கொண்டழைத்தார்கள். பிள்ளையார் சிவிகையினின்றிழிந்து அந்தணர்கள் புடைசூழ விண்ணிழிந்த கோயிலை வலங்கொண்டார். வியந்தார். கீழேவிழுந்து வணங்கினார். உள்ளத்தில் உணர்ச்சி பொங்கி வழிந்தது. இசை ஆயிற்று. ''சடையார் புனல் உடையான்'' என்றெடுத்துச் சந்த இசைத் தமிழைச் சாற்றி மணவாளப் பெருமானது திருவடிக்கீழ் ஆனந்த வெள்ளத்தாடினார்.

பண்: நட்டபாடை

பதிக எண்: 11

திருச்சிற்றம்பலம்

108. சடையார்புன லுடையானொரு
சரிகோவண முடையான்
படையார்மழு வுடையான்பல
பூதப்படை யுடையான்
மடமான்விழி யுமைமாதிட
முடையானெனை யுடையான்
விடையார்கொடி யுடையானிடம்
வீழிம்மிழ லையே. 1

இத்திருப்பதிகத்தின் பத்துப் பாடல்கள், பல்வகைப் பெருமைகளையும் உடைய சிவபிரான் எழுந்தருளியுள்ள இடம் திருவீழி மிழலை என்கின்றது.

1. பொ-ரை : சடைமுடியில் கங்கையைத் தரித்தவனும், இடையினின்று சரிந்து நழுவும் ஒப்பற்ற கோவண ஆடையை அணிந்தவனும், மழுப் படையை உடையவனும், பலவகையான பூதங்களைப் படையாகக் கொண்டவனும், மடமைத் தன்மை பொருந்திய மான்விழி போன்ற விழிகளை உடைய உமையம்மையாகிய பெண்ணை

Koviloor Digital Library

109. ஈறாய்முத லொன்றாயிரு
பெண்ணாண்குண மூன்றாய்
மாறாமறை நான்காய்வரு
பூதம்மவை யைந்தாய்
ஆறார்சுவை யேழோசையொ
டெட்டுத்திசை தானாய்
வேறாயுட னானானிடம்
வீழிம்மிழ லையே. 2

இடப்பாகத்தே கொண்டவனும், என்னை ஆளாக உடையவனும், விடைக் கொடி உடையவனும் ஆகிய சிவபிரான் எழுந்தருளிய இடம் திருவீழிமிழலை.

கு-ரை : சடையார் புனல் - சடைக்கண் நிறைந்த கங்கை. படையார் மழு என்றது தீப்பிழம்பன்று; எரியாகிய படை என்பதை விளக்க. இடம் - இடப்பாகத்து. எனை உடையான் - என்னை அநாதியே ஆளாக உடையவன். விடையார் கொடி - இடபக்கொடி. இது இறைவனுக்குரிய அடையாளக்கொடி, இறைவன் தருமஸ்வரூபி யாதலால் அறவடிவான காளை அவன் கொடிக்கண்ணதாயிற்று.

2. பொ-ரை : ஊழிக் காலத்தில் அனைத்தையும் ஒடுக்கு வோனாய், ஒடுங்கிய உடலைத் தானொருவனே முதற்பொருளாய் நின்று தோற்றுவிப்பவனாய், சக்தி சிவம் என இருவகைப்பட்டவனாய், முக்குண வடிவினனாய், எக்காலத்தும் மாறுபடாத நான்மறை வடிவின னாய், ஐம்பெரும் பூதங்கள், ஆறுசுவை, ஏழு ஓசை, எட்டுத்திசை ஆகியவற்றில் நிறைந்தவனாய், உயிரோடு ஒன்றாகியும், வேறாகியும், உடனாகியும் விளங்கும் இறைவனது இடம் திருவீழிமிழலை.

கு-ரை : ஈறாய் - உலகத்துயிர்களெல்லாம் தன்னிடத்து ஒடுங்கத் தான் ஒருவனே நிற்றலின் இயங்குவ நிற்பவான எல்லாவற்றிற்கும் தான் இறுதியாய். முதல் ஒன்றாய் - இறுதியாக நிற்பவனே உலக காரணனாய் (முதலாய்) நிற்குந் தன்மையன் ஆதலின் ஒடுங்கிய உலகமெல்லாம் மீளத்தோன்றுதற்குக் காரணமான (முதற்) பொருள் தானொருவனேயாய். பெண் ஆண் இரண்டாய் என்பது இரு பெண் ஆண் (ஆய்) என நின்றது. குணம் மூன்றாய் - சத்துவ முதலிய குணங்கள் மூன்றாய். மாறா மறை நான்காய் - தம்முள் மாறுபடாத வேதங்கள் நான்குமாய். அவை இருக்கு, *யசுர்*, *சாமம்*, *அதர்வணம்*

Koviloor Digital Library

110. வம்மின்னடி யீர்நாண்மல
ரிட்டுத்தொழு துய்ய
உம்மன்பினொ டெம்மன்புசெய்
தீசன்னுறை கோயில்
மும்மென்றிசை முரல்வண்டுகள்
கெண்டித்திசை யெங்கும்
விம்மும்பொழில் சூழ்தண்வயல்
வீழிம்மிழ லையே. 3

என்பன. மாறா மறை - என்றும் ஒரு படித்தான வேதம் எனினுமாம். வருபூதம் அவை ஐந்தாய் - தத்தம் காரணமாகிய புலன்களிலிருந்து தோன்றுகின்ற பூதம் ஐந்தாய். ஆறு ஆர் சுவை - ஆறாக அமைந்த சுவை (ஆய்); அவை, அறுவகையான நாப்பொறி கவரும் உப்பு, துவர்ப்பு, கார்ப்பு, கைப்பு, புளிப்பு, தித்திப்பு என்பன. ஏழ் ஓசை - சட்சம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம், என்ற ஓசைகள் ஏழு. குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பன தமிழ்நூல் வழக்கு. எட்டுத்திசை - மாயாகாரியமான உலகத்தில் காணப்பெறும் எட்டுத்திசை. தானாய் - ஒன்றாய். வேறாய் - அவற்றின் வேறாய். உடனானான் - உடனாய் நிற்பவன். இறைவன் கண்ணும் ஒளியும், கதிரும் அருக்கனும், ஒளியும் சூடும்போல உயிர்களோடு கலந்திருக்கின்ற மூவகை நிலைகளை உணர்த்தியவாறு. இப்பாடல் எண்ணலங்காரம் பட வந்தது.

குருவருள் : இப்பாடலில் 'ஈறாய் என்பது முதல் எட்டுத்திசை தானாய்' என்பது முடிய இறைவன் அவையே தானேயேயாய்ப் பிரிப்பின்றி உடலும் உயிரும் போல் ஒன்றாயிருந்து அருள் புரியும் நிலையையும், காணும் ஒளியாகிய கண்ணுக்குக் காட்டும் ஒளியாகிய சூரியன் வேறாயிருந்து உதவுவது போல் இறைவன் வேறாயிருந்து அருள்புரியும் நிலையையும், கண் ஒளி ஒரு பொருளைப் பார்த்தாலும் அக்கண் ஒளியுடன் உடனாய் உயிர் கலந்தாலன்றி, கண் காணாதவாறு போல இறைவன் உயிர்களுடன் உடனாயிருந்து அருள்புரியும் நிலையையும் உணர்த்துகின்றார் ஞானசம்பந்தர்.

3. பொ-ரை : அன்றலர்ந்த மலர்களைச் சாத்தி வணங்கி உய்தி பெற அடியவர்களே வாருங்கள். உயர்ந்த உம் அன்போடு எம் அன்பையும் ஏற்றருளும் இறைவன் உறையும் கோயில், மும் என்ற ஒலிக்குறிப்போடு இசைபாடும் வண்டுகள் மலர்களைக் கிளறுவதால்

Koviloor Digital Library

111. பண்ணும்பத மேழும்பல
வோசைத்தமி ழவையும்
உண்ணின்றதொர் சுவையும்முறு
தாளத்தொலி பலவும்
மண்ணும்புன லுயிரும்வரு
காற்றுஞ்சுடர் மூன்றும்
விண்ணும்முழு தானானிடம்
வீழிம்மிழ லையே. 4

திசையெங்கும் மணம் கமழும் பொழில்கள் சூழ்ந்ததும், தண்ணிய வயல்களைக் கொண்டதுமாகிய திருவீழிமிழலை.

கு-ரை : இது அடியார்களை அழைத்து அறிவித்தது. நாண் மலர் - அன்று அலர்ந்த புதுப்பூ. அடியீர் உம் அன்பினொடு மலரிட்டுத் தொழுதுய்ய வம்மின் எனக்கூட்டுக. அன்றி, உம் அன்பினொடு எம்மன்பு செய்து இட்டுத் தொழுது உய்யவம்மின் என்றுமாம். செய்து செய்ய எனத்திரிக்க. மும்மென்பது ஒலிக்குறிப்பு. முரல் - ஒலிக்கின்ற. கெண்டி - மகரந்தங்களைக் கிளறி. வண்டு முரல் பொழில் சூழ் மிழலை எனவே புதுப்பூவிற்குக் குறைவில்லை. ஆதலால் உம்மன்பினொடு இட்டுத் தொழுவதே வேண்டப்படுவது என்பது குறிப்பு. எம்மன்பு செய்து என்றதற்கு, எம்மன்பின் பயனாக எழுந்த திருப்பாடல்களைப் பாடிக்கொண்டே என்பது பொருளாம். பின்னர்த் திருக்கடைக் காப்பில் 'தமிழ்பத்தும் இசை வல்லார் சொலக்கேட்டார் வினைபோயிட வான் அடைவார்' என்று அருள்வாராதலின் இதுவே கருத்தாதல் துணிபாம்.

4. பொ-ரை :இசையும், அதற்கு அடிப்படையான ஏழு சுரங் களும் வல்லோசை, மெல்லோசை முதலியனவற்றையுடைய தமிழும் உள்ளத்துணர்வாகிய சுவையும், பொருந்திய தாள வேறு பாட்டு ஒலி களும், மண், புனல், உயிர், காற்று, நெருப்பு, சூரியன், சந்திரன், விண் ஆகிய எண்வகை வடிவங்களும் ஆகிய இறைவனது இடம் திருவீழி மிழலை.

கு-ரை : பண் - இசை. பதம் ஏழு - ஸ்வரஸ்தானங்கள் ஏழு. பதம் - தானம். பல ஓசைத்தமிழ் - வல்லோசை, மெல்லோசை, இடை யோசை முதலிய வேறுபாடுகளையுடைய தமிழ். உள் நின்றது ஓர் சுவை - பண்ணைச் சுரத்தானங்களில் நின்று ஆலத்தி பண்ணி, பல ஓசை

Koviloor Digital Library

112. ஆயாதன சமயம்பல
வறியாதவன் நெறியின்
தாயானவ னுயிர்கட்குமுன்
தலையானவன் மறைமுத்
தீயானவன் சிவனெம்மிறை
செல்வத்திரு வாரூர்
மேயானவ னுறையும்மிடம்
வீழிம்மிழ லையே. 5

பொருந்தப் பாடுங்கால் உண்டாகின்ற உள்ளத்து உணர்வாகிய சுவை. உறுதாளத்தொலி - அங்ஙனம் சுவையை அனுபவிக்கும்போது உண்டாகின்ற சச்சபுடம் சாசபுடம் முதலான தாளஒத்துக்கள் பலவும். சுடர் மூன்றும் - சூரியன் சந்திரன் அக்கினி என்ற ஒளிப் பொருள் மூன்றும், இப்பகுதி இறைவனுடைய அட்டமூர்த்தி வடிவம் கூறுகிறது. உயிர் - இயமானனாகிய ஆன்மா.

5. பொ-ரை : சுருதி, யுக்தி, அநுபவங்களால் ஆராய்ச்சி செய் யாத பல சமயங்களால் அறியப் பெறாதவன். அறநெறிகளின் தாயாய் விளங்குவோன். எல்லா உயிர்கட்கும் அநாதியாகவே தலைவன். வேத வேள்விகளில் முத்தீ வடிவினன். சிவன் எனும் திருப் பெயருடை யவன். எங்கட்குத் தலைவன். செல்வம் நிறைந்த திருவாரூரில் எழுந் தருளியிருப்பவன். அத்தகையோன் உறையுமிடம் திருவீழிமிழலை.

கு-ரை : ஆயாதன சமயம் பல அறியாதவன் - இறையுண் மையையும் இறையிலக்கணத்தையும், அளவையானும், அநுபவத் தானும் உள்ளவாறு ஆராயாதனவாகிய சித்தாந்த சைவம் ஒழிந்த ஏனைச் சமயங்களால் சிறப்பியல்பை அறியப் பெறாதவன். நெறி - இறைவனை அறிதற்கு ஏற்ற பல்வேறு சமயநிலைகள். உயிர்கட்கு முன் தலையானவன் - ஆன்மாக்கட்கு அநாதியே தலைமையாக அமைந் தவன். மறை முத்தீயானவன் - வேத வேள்விக் கேற்ற சிவாக்கினி யாகிய முத்தீயானவன். ஆயாதன என்பது முதல் தீயானவன் என்பது வரை இறையிலக்கணம் கூறியது. சிவன் எனச் சிறப்பியல்பு கூறியது. எம்மிறை எனத் தம்மோடு உளதாகிய அநாதித் தொடர்பு கூறியது. செல்வத் திருவாரூர் மேயான் என்றது திருவாரூரின் தொன்மை நோக்கிக் கூறியது.

Koviloor Digital Library

113. கல்லானிழற் கீழாயிடர்
காவாயென வானோர்
எல்லாமொரு தேராயயன்
மறைபூட்டிநின் றுய்ப்ப
வல்லாயெரி காற்றீர்க்கரி
கோல்வாசுகி நாண்கல்
வில்லாலெயி லெய்தானிடம்
வீழிம்மிழ லையே. 6

6. பொ-ரை : சிவபிரான் கல்லால மரநிழற்கீழ் யோகியாய் வீற்றிருந்த காலத்து அசுரர்களால் இடருழந்த வானோர் காவாய் என வேண்ட, சூரிய சந்திரராகிய சக்கரம் பூட்டிய பூமியைத் தேராகக் கொண்டு நான்முகன் வேதங்களாகிய தேரிற் பூட்டிய குதிரைகளைச் செலுத்த, அக்கினிதேவனை வலிய வாயாகவும், வாயுதேவனை இறகாக வும் கொண்ட திருமால் ஆகிய அம்பை வாசுகி என்னும் பாம்பினை நாணாகப் பூட்டி மேருமலையாகிய வில்லால் செலுத்தித் திரிபுரங்களை எய்து அழித்த சிவபிரானது இடம் திருவீழிமிழலை.

கு-ரை : கல் ஆல் நிழற்கீழாய் - இறைவன் யோகியாய்க் கல்லால நிழலின் கீழ் அறம் நால்வர்க்கு உரைத்திருந்த காலத்து. வானோர் காவாய் என - அசுரர்களால் வருந்திய தேவர்கள் காவாய் என்று வேண்டிக்கொள்ள, என்றது வேண்டுதல் வேண்டாமையற்ற சனகாதியர் யாதொரு துன்பமுமின்றி இருந்த காலத்தே வினை வயத்தான் வருந்தும் தேவர்கள் அசுரர் ஒறுத்தற்கு ஆற்றாது வருந்திக் காவாய் என வேண்டினர் என்பதை விளக்கியவாறு காண்க.

எல் ஆம் ஒரு தேர் - ஒளிப் பொருளாகிய சூரிய சந்திரர்கள் ஆகிய சக்கரம் பூண்ட ஒரு தேர். அயன் - பிரமன், இங்கே பாக னானான். மறை பூட்டி என்றதால் வேதங்கள் குதிரைகளாயினமை வெளிப்படை.

வல்லாய் எரி - விரைந்து பற்றும் நெருப்பு. காற்று ஈர்க்கு - காற்றாகிய இறகு. அரி கோல் - திருமாலாகிய அம்பு. கல் - மேரு மலை.வல்வாய் எரி - வலிய வாயாகிய எரி, வல்லாய் என்று பாடம் ஓதுவாரும் உளர்.

Koviloor Digital Library

114. கரத்தான்மலி சிரத்தான்கரி
யுரித்தாயதொர் படத்தான்
புரத்தார்பொடி படத்தன்னடி
பணிமூவர்கட் கோவா
வரத்தான்மிக வளித்தானிடம்
வளர்புன்னைமுத் தரும்பி
விரைத்தாதுபொன் மணியீன்றணி
வீழிம்மிழ லையே. 7

7. பொ-ரை : பிரமகபாலம் பொருந்திய திருக்கரத்தினன். யானையை உரித்ததால் கிடைத்ததொரு மேற்போர்வையினன். முப்புர அசுரர் அழியத் தன்னடி பணிந்த அம்முப்புரத்தலைவர் மூவர்கட்கும் மிக்க வரங்களை அளித்தவன். அப்பெருமானது இடம், வளர்ந் தோங்கிய புன்னை மரங்கள் முத்துக்கள் போல் அரும்பி மலர்ந்து பொன் தாதுக்களை ஈன்று பச்சை மணிகளைப்போல் காய்த்து அழகு செய்கின்ற திருவீழிமிழலையாகும்.

கு-ரை : சிரத்தான் மலி கரத்தான் என மாற்றிப், பிரம கபாலத் தான் நிறைந்த திருக்கரத்தையுடையவன் எனப் பொருள் காண்க. படம் - மேற்போர்வை, புரத்தார் பொடிபட - முப்புரங்களின் வரிசை பொடியாக. தன்னடிபணி மூவர்கட்கு - தம் திருவடியைப் பணிந்த மேம்பட்ட அடியவர்களான தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மாலி என்ற மூவர்கட்கும். ஓவா வரத்தான் மிக அளித்தான் - சுதர்மன், சுநீதி, சுபுத்தி எனப் பெயரீந்து வாயிற்காவலராகும் வரத்தால் மிக அருள் செய்தவன். புரத்தார் பொடிபட என்பதற்கு முப்புராதிகள் பொடி யாயினார் எனப் பொருள் கொள்ளின் 'உய்ந்த மூவரில் இருவர் நின் திருக்கோயிலின் வாய்தல் காவலாளர் என்றேவி' என்பதனோடு மாறு கொள்ளும். அன்றியும் அதிகைப்புராணவரலாற்றொடும் முரணும். ஆதலால் புரத்தார் பொடிபட எனப் பிரித்தலே சால்புடைத்து. திரிபுரம் எரிந்த காலத்துஅடியவர்கள் மூவர் அழிந்திலர் என்பதைப் புரம் எரிந்த காலத்து இவர்கள் மூவரும் கைலாசத்தில் துவாரபாலகராகும் பதவியைக் கொடுக்கவேண்டும் என வேண்டிக் கொண்டார்கள் என்னும்தர்மசங்கிதைவசனமும் வலியுறுக்கும். புன்னை முத்துப் போலரும்பி, மலர்ந்து, பொன்தாதுக்களை ஈன்று, காய்த்துப் பச்சை மணிகளை யீன்று, அழகு செய்கின்ற மிழலை எனக்கூட்டிப் பொருள் கொள்க.

Koviloor Digital Library

115. முன்னிற்பவ ரில்லாமுர
ணரக்கன்வட கயிலை
தன்னைப்பிடித் தெடுத்தான்முடி
தடந்தோளிற வூன்றிப்
பின்னைப்பணிந் தேத்தப்பெரு
வாள்பேரொடுங் கொடுத்த
மின்னிற்பொலி சடையானிடம்
வீழிம்மிழ லையே. 8

116. பண்டேமுல குண்டானவை
கண்டானுமுன் னறியா
ஒண்டீயுரு வானானுறை
கோயின்னிறை பொய்கை

8. பொ-ரை : தன்னை எதிர்த்து நிற்பார் யாரும் இல்லாத வலிமை பெற்ற அரக்கனாகிய இராவணன் வடதிசையிலுள்ள கயிலாய மலையைப் பற்றித் தூக்கினான். அவன் தலைகள் தோள்கள் ஆகியன நெரிய ஊன்றி அதனால் இடருழந்த அவன் பின்னர்ப் பணிந்தேத்த அவனுக்குப் பெரிதாகிய வாள், இராவணன் என்ற பெயர் ஆகியன வற்றைக் கொடுத்தருளிய மின்னல் போலப் பொலியும் சடைமுடியை உடைய சிவபிரானது இடம் திருவீழிமிழலையாகும்.

கு-ரை : முன் நிற்பவர் இல்லா மூரண் அரக்கன் - தன்னொடு எதிர்த்து நின்று பொருவார் யாரும் இல்லா வலிமைபெற்ற தசக்கிரீவன். இற - இற்றறும்படி. ஊன்றி - வலக்காற் பெருவிரல் நுனியை ஊன்றி. பெருவாள் - சந்திரகாசம் என்னும் வாள். பேர் - மலைக் கீழகப்பட்டு அழுதமையால் உண்டான இராவணன் என்னும் பெயர்; கீர்த்தியுமாம். இதனால் ஆன்மாக்கள் முனைப்புற்ற காலத்து மறக் கருணை காட்டித் தண்டித்து நற்புத்தி வரச்செய்து, 'நின்னல்லது உறு துணை வேறில்லை' என உணர்ந்து பணிந்த காலத்து அருள் செய்தல் கூறப்பட்டது.

9. பொ-ரை : முன்னொரு காலத்து ஏழுலகையும் தன் வயிற்றில் அடக்கிக்காட்டிய திருமாலும், அவ்வுலகங்களைப் படைத்தருளிய நான்முகனும் தன்னை அறியாதவாறு ஒளி பொருந்திய தீயுருவான சிவபிரான் உறையும் கோயில்; நீர் நிறைந்த பொய்கைகளில் பூத்த செழுமையான தாமரை மலர்மீது இள அன்னம் நடை பயில வெண்

Koviloor Digital Library

வண்டாமரை மலர்மேன்மட
வன்னந்நடை பயில
வெண்டாமரை செந்தாதுதிர்
வீழிம்மிழ லையே. 9

117. மசங்கற்சமண் மண்டைக்கையர்
குண்டக்குண மிலிகள்
இசங்கும்பிறப் பறுத்தானிடம்
இருந்தேன்களித் திரைத்துப்
பசும்பொற்கிளி களிமஞ்ஞைகள்
ஒளிகொண்டெழு பகலோன்
விசும்பைப்பொலி விக்கும்பொழில்
வீழிம்மிழ லையே. 10

தாமரை சிவந்த தாதுக்களை உதிர்க்கும் திருவீழிமிழலையாகும். அன்னத்தின் நிறத்தால் செந்தாமரை வெண்தாமரை ஆயிற்று. அதன் கால்களின் செம்மையால் பொன்னிறத்தாதுக்கள் செந்தாதுக்கள் ஆயின.

கு-ரை : உலகுண்டான் - ஏழுலகையும் தன்வயிற்றில் அடக்கிய திருமால். அவைகண்டான் - அந்த உலகைப் படைத்த பிரமன்.

10. பொ-ரை : மயக்க உணர்வுடையவரும், பிச்சை ஏற்கும் மண்டை என்னும் பாத்திரத்தைக் கையின்கண் ஏந்தியவரும், நற்குணங்கள் இல்லாதவர்களும் ஆகிய சமணர், புத்தர்கள் நிற்கத் தன்னை வழிபடும் அன்பர்கட்கு வினைவயத்தாற் பொருந்திய பிறப்பினைப் போக்கியவன் எழுந்தருளிய இடம், மிகுதியான தேனீக்கள் தேனை உண்டு களித்து ஒலி செய்யவும், பசுமை நிறமேனியும் பொன் நிறக் காலும் உடைய கிளிகளும், களிப்புற்ற மயில்களும் நிறைந்ததும் ஒளியோடு தோன்றும் கதிரவன் இருக்கும் வான மண்டலத்தை அழகுறுத்துவதும் ஆகிய பொழில் சூழ்ந்த திருவீழிமிழலையாகும்.

கு-ரை : மசங்கல், மயங்கல் - மயக்கம். மண்டை - பிச்சையேற்கும் பனையோலைக்குடைப் பாத்திரம். குண்டர் - அறிவற்றவர். இசங்கும் - வினைவயத்தான் பொருந்திய. இருந்தேன் - பெரிய வண்டு; கரியவண்டுமாம். பசும் பொற்கிளி - பசுமை நிறமும் பொன் போலுஞ் செந்தாளும் உடைய கிளி. திருவீழிமிழலைப் பொழில்

Koviloor Digital Library

118. வீழிம்மிழ லைம்மேவிய
விகிர்தன்றனை விரைசேர்
காழிந்நகர் கலைஞானசம்
பந்தன்றமிழ் பத்தும்
யாழின்னிசை வல்லார்சொலக்
கேட்டாரவ ரெல்லாம்
ஊழின்மலி வினைபோயிட
வுயர்வானடை வாரே. 11

திருச்சிற்றம்பலம்

விண்ணளவும் ஓங்கி வளர்ந்து பொலிவு செய்யும் என்று உரைத் தருளியதால் இன்றும் அச்சிறப்பிற் குன்றாது ஒளிர்கின்றது.

11. பொ-ரை : வீழிமிழலையுள் எழுந்தருளிய விகிர்தனாகிய இறைவனைப்பற்றி மணம் பொருந்திய சீகாழிப் பதியில் தோன்றிய கலைவல்ல ஞானசம்பந்தன் பாடியருளிய பாடல்கள் பத்தினையும் யாழிசையில் பாட வல்லார்களும் சொல்லக் கேட்டார்களும் ஆகிய அனைவரும் ஊழாக அமைந்த வினைகள் நீங்கச் சிவப்பேறு எய்துவர்.

கு-ரை : ஊழின் மலி வினை - முறைமையானிறைந்த வினை; அதாவது இன்னதன்பின் இன்னது நுகர்ச்சிக்கு உரியது என நியதி தத்துவத்தான் வரையறுக்கப்பெற்ற வினை.

இத்திருப்பதிகத்தை யாழிசை வல்லவர் பாடக்கேட்டுச் சிவ பக்தியுடன் வழிபட்டவர் எல்லாரும் ஊழ்வினை ஒழியவும் வீட்டுலகம் எய்தவும் பெறுவர் என்றதால், தேவாரத் திருப்பதிகங்களை இசை யுடன் பாடல் வேண்டும் என்பதும் அது பத்தியை விளைத்துப் பேரின்ப வீட்டை அருளும் என்பதும் புலனாகும். யாழின் இசை என்றும், யாழ் இன்னிசை என்றும் பிரிக்கலாம். ஊழின்மலி வினை போயிடல் - பாசநீக்கம். உயர் வானடைதல் - சிவப்பேறு.

Koviloor Digital Library

12. திருமுதுகுன்றம்

பதிக வரலாறு:

திருஎருக்கத்தம்புலியூரை வணங்கிப் பதிகம்பாடிப் புறப்பட்ட ஆளுடைய பிள்ளையார் இடையிலுள்ள தலங்கள் பல வற்றையும் வணங்கித் துதித்துத் திருமுதுகுன்றம் என்னும் விருத்தாசலத்தைஅடைந்தார்.போகின்றவழியிலேயே முதுகுன்ற நாதருடையஅருட்செயல்களும், ஆட்கொள்ளுந் திறனும், இயற்கை வளமும், நதியின் செலவும் மனத்தைக் கவர அவற்றை அமைத்து 'மத்தாவரை நிறுவி' என்னும் பதிகத்தைத் தொடங்கி; 'முத்தாறு வந்தடி சூழ்தரு முதுகுன்றடைவோம்' என அருளிச் செய்கின்றார்

பண்: நட்டபாடை

பதிக எண்: 12

திருச்சிற்றம்பலம்

119. மத்தாவரை நிறுவிக்கடல்
கடைந்தவ்விட முண்ட
தொத்தார்தரு மணிநீண்முடிச்
சுடர்வண்ணன திடமாம்
கொத்தார்மலர் குளிர்சந்தகி
லொளிர்குங்குமங் கொண்டு
முத்தாறுவந் தடிவீழ்தரு
முதுகுன்றடை வோமே. 1

1. பொ-ரை : மந்தர மலையை மத்தாக நட்டுக் கடலைக் கடைந்தபோது, கொடிது எனக் கூறப்பெறும் ஆலகால விடம் தோன்ற, அதனை உண்டவனும், பூங்கொத்துக்கள் சூடிய அழகிய நீண்ட சடை முடியினனும், எரி சுடர் வண்ணனும் ஆகிய சிவபெருமான் எழுந்த ருளிய இடம்; மலர்க் கொத்துக்கள் குளிர்ந்த சந்தனம் அகில் ஒளிதரும் குங்கும மரம் ஆகியவற்றை அலைக்கரங்களால் ஏந்திக் கொண்டு வந்து மணிமுத்தாறு அடிவீழ்ந்து வணங்கும் திருமுதுகுன்றமாகும். அதனை அடைவோம்.

கு-ரை : வரை மத்தா நிறுவி - மந்தரமலையை மத்தாக நிறுத்தி.

Koviloor Digital Library

120. தழையார்வட வியவீதனில்
தவமேபுரி சைவன்
இழையாரிடை மடவாளொடும்
இனிதாவுறை விடமாம்
மழைவானிடை முழவவ்வெழில்
வளைவாளுகி ரெரிகண்
முழைவாளரி குமிறும்முயர்
முதுகுன்றடை வோமே. 2

அ விடம் என்றது அத்தகைய ஆலகாலவிடம் எனச் சுட்டு, பெருமை யுணர்த்தி நின்றது.

தொத்து - கொத்து. மணிமுத்தாறு மலர், சந்தனம், குங்குமப்பூ முதலிய காணிக்கைகளைக் கொண்டுவந்து சமர்ப்பித்து அடிவணங்கு கிறது என்பதாம்.

2. பொ-ரை : தழைகளுடன் கூடிய ஆலமர நீழலில் யோகியாய் வீற்றிருந்து தவம் செய்யும் சிவபிரான், போகியாய் நூலிழை போன்ற இடையினை உடைய உமையம்மையோடு மகிழ்ந்துறையும் இடம், மேகங்கள் வானின்கண் இடித்தலைக் கேட்டு யானையின் பிளிறல் எனக்கருதி அழகிதாய் வளைந்த ஒளி பொருந்தி விளங்கும் நகங் களையும் எரிபோலும் கண்களையும் உடையனவாய்க் குகைகளில் வாழும் சிங்கங்கள் கர்ச்சிக்கும் உயர்ந்த திருமுதுகுன்றமாகும். அதனை வழிபடச் செல்வோம்.

கு-ரை : வடவிய வீதனில் - ஆலமரத்தினது அகன்ற நீழலில். பதுமாசனத்திலிருந்து தவஞ் செய்கின்ற சைவன் என்றது அநாதி சைவனாகிய சிவனை. இழையார் இடை - நூலிழையை ஒத்த இடை. மழைவானிடைமுழவ - மேகம் வானத்தில் பிளிற. முழவம் பெயரடியாக முழவ என்ற வினையெச்சம் பிறந்தது. ஒலிக்க என்பது பொருளாம். எழில் வளை வாள் உகிர் - அழகிய வளைந்த ஒளி பொருந்திய நகத்தையும்.

எரி கண் - காந்துகின்ற கண்ணையும். முழை - மலைக்குகை. அரி - சிங்கம். சிங்கம் உறுமுதல் மழை ஒலியை யானையின் பிளிறல் என்று எண்ணி. மேருமலையின் வடபால் தனித்து யோகத்திருந்த இறைவன் முதுகுன்றில் உமையாளொடு போகியாக உறைகின்றான் என்றது.

Koviloor Digital Library

121. விளையாததொர் பரிசில்வரு
பசுபாசவே தனையொண்
தளையாயின தவிரவ்வருள்
தலைவன்னது சார்பாம்
களையார்தரு கதிராயிரம்
உடையவ்வவ னோடு
முளைமாமதி தவழும்முயர்
முதுகுன்றடை வோமே. 3

3. பொ-ரை : உயிர்களுடன் அநாதியாகவே வருகின்ற வேதனைகளைத் தரும் பாசங்களாகிய ஒள்ளிய தளைகள் நீங்குமாறு அருள்புரிதற்கு எழுந்தருளிய சிவபிரானது இடம், ஒளி பொருந்திய கிரணங்கள் ஆயிரத்தைக் கொண்ட கதிரவனும் முளைத்தெழுந்து வளரும் சந்திரனும் தவழும் வானளாவிய மலையாகிய திருமுது குன்றமாகும். அதனை அடைவோம்.

கு-ரை : விளையாதது ஒருபரிசில்வரும் பசுபாச வேதனை ஒண்தளை - மீண்டும் அங்குரியாதவாறு அவிந்ததாகிய ஒரு தன்மை யில் வரும் பாசங்களாகின்ற துன்பத்தைத் தருகின்ற ஒள்ளிய கட்டு. பசுபாசம் - ஆன்மாக்களை அனாதியே பந்தித்து நிற்கும் ஆணவமலக் கட்டு எனப்பாசத்திற்கு அடையாளமாய் நின்றது. வேதனை - துன்பம் எனப் பொருள் கொண்டு அதன் காரணமாகிய தீவினை என்பாரும் உளர். அப்போது பாசவேதனை உம்மைத்தொகை. பாசமும் வேதனையும் என்பது பொருள். வேதனைக்கு விளையாமையாவது பிராரத்தத்தை நுகருங்கால் மேல்வினைக்கு வித்தாகாவண்ணம் முனைப்பின்றி நுகர்தல். சார்பு - இடம். களை - தேஜஸ். ஆயிரம் பன்மை குறித்து நின்றது. கதிர் ஆயிரம் உடையவன் - சூரியன். சகத்திர கிரணன் என்னும் பெயருண்மையையும் அறிக. செங்கதிரோடு முளை மாமதி தவழும் முதுகுன்று என்றமையால் பிள்ளையார் கண்ட காலம் வளர்பிறைக் காலத்து மூன்றாம் நாளாகலாம் என்று ஊகிக்கலாம்.

குருவருள் : இறை, உயிர், தளை என்ற முப்பொருள்களும் என்றும் உள்ள உண்மைப் பொருள்கள். ஒரு காலத்தே தோன்றியன அன்று. இக்கருத்தையே ''விளையாததொர் பரிசில்வரு பசுபாச வேதனை ஒண்தளை'' என்றார். இவை நீங்க அருள்பவனே இறை யாகிய தலைவன் என்று குறிப்பிட்டுள்ளார். இதில் பசு - உயிர். பாசம் - ஆணவம். வேதனை - நல்வினை தீவினையாகிய இருவினைகள்.

Koviloor Digital Library

122. சுரர்மாதவர் தொகுகின்னர
ரவரோதொலை வில்லா
நரரானபன் முனிவர்தொழ
விருந்தானிட நலமார்
அரசார்வர வணிபொற்கல
னவைகொண்டுபன் னாளும்
முரசார்வரு மணமொய்ம்புடை
முதுகுன்றடை வோமே. 4

123. அறையார்கழ லந்தன்றனை
அயின்மூவிலை யழகார்
கறையார்நெடு வேலின்மிசை
யேற்றானிடங் கருதில்
முறையாயின பலசொல்லியொண்
மலர்சாந்தவை கொண்டு
முறையான்மிகு முனிவர்தொழு
முதுகுன்றடை வோமே. 5

ஒண்தளை - மாயை. ஆணவக் கட்டினின்றும் ஆன்மாவை விடுவிப்ப தற்குத் துணை செய்வதால் மாயையை ஒண்தளை என்றார்.

4. பொ-ரை : தேவர்களும், சிறந்த தவத்தை மேற் கொண்ட வர்களும், கின்னரி மீட்டி இசை பாடும் தேவ இனத்தவரான கின்னரரும், மக்களுலகில் வாழும் மாமுனிவர்களும் தொழுமாறு சிவபிரான் எழுந்தருளிய இடம், அழகிய அரசிளங்குமாரர்கள் வர அவர்களைப் பொன் அணிகலன்கள் கொண்டு வரவேற்கும் மணமுரசு பன்னாளும் ஒலித்தலை உடைய திருமுதுகுன்றமாகும். அதனை அடைவோம்.

கு-ரை : தொகு கின்னரர் - எப்பொழுதும் கூட்டமாகவே இருந்து கின்னரி பயிலும் தேவகூட்டத்தார்.

5. பொ-ரை : ஒலிக்கின்ற வீரக்கழல் அணிந்த அந்தகாசுரனைக், கூரிய மூவிலை வடிவாய் அமைந்த குருதிக் கறைபடிந்த அழகிய நீண்ட வேலின் முனையில் குத்தி ஏந்திய சிவபெருமானது இடம் யாதெனில், முனிவர்கள் பலரும் வேதங்கள் பலவும் சொல்லி நறுமலர் சந்தனம்

Koviloor Digital Library

124. ஏவார்சிலை யெயினன்னுரு
வாகியெழில் விசயற்
கோவாதவின் னருள்செய்தவெம்
மொருவற்கிட முலகில்
சாவாதவர் பிறவாதவர்
தவமேமிக வுடையார்
மூவாதபன் முனிவர்தொழு
முதுகுன்றடை வோமே. 6

முதலான பொருள்களைக் கொண்டு முறைப்படி சார்த்தி வழிபடுகின்ற திருமுதுகுன்றமாகும். அதனை நாம் அடைவோம்.

கு-ரை : இப்பாட்டின் முன்னடியிரண்டிலும், அந்தகனை முத்தலைச் சூலத்தின் உச்சியில் தாங்கிய வரலாறு குறிப்பிடப் படுகிறது. அந்தன் - அந்தகாசுரன். அயில் - கூர்மை. வேலுக்கு அழகு இவ் வண்ணம் தண்டிக்கத் தக்கவர்களைத் தண்டித்தல். முனிவர் மறை யாயின சொல்லி, மலர்ச் சாந்துகொண்டு முறையான் தொழு முதுகுன்று எனக் கூட்டுக.

அந்தகாசுரன் தன்தவமகிமையால் தேவர்களை வருத்தினான். தேவர்கள் பெண்வடிவந்தாங்கி மறைந்து வாழ்ந்தனர். பின் அவர்கள் வேண்டுகோட்கிரங்கிச் சிவபெருமான் பைரவருக்கு ஆணையிட அவர் தனது முத்தலைச் சூலத்திற் குத்திக் கொணர்ந்தார். அவன் சிவனைக் கண்டதும் உண்மை ஞானம் கைவரப் பெற்றான். கணபதி யாம் பதவியை அளித்தார் என்பது வரலாறு. (*கந்தபுராணம்.*)

6. பொ-ரை : அம்புகள் பூட்டிய வில்லை ஏந்திய வேட உருவந்தாங்கி வந்து போரிட்டு அழகிய அருச்சுனனுக்கு அருள்செய்த எம் சிவபெருமானுக்கு உகந்த இடம், சாவாமை பெற்றவர்களும், மீண்டும் பிறப்பு எய்தாதவர்களும், மிகுதியான தவத்தைப் புரிந்த வர்களும், மூப்பு எய்தாத முனிவர் பலரும் வந்து வணங்கும் திருமுது குன்றமாகும். நாமும் அதனைச் சென்றடைவோம்.

கு-ரை : இதில் இறைவன் வேடவுருத்தாங்கிப் பன்றியை எய்து வீழ்த்தி அருச்சுனன் தவங்கண்டு வந்து பாசுபதம் அருளிய வரலாறு குறிக்கப்பெறுகின்றது. ஏ - அம்பு. சிலை - வில். எயினன் - வேடன். விசயற்கு - அருச்சுனற்கு. ஓவாத - கெடாத. சாவாதவர்களும், மீட்டும்

Koviloor Digital Library

125. தழல்சேர்தரு திருமேனியர்
சசிசேர்சடை முடியர்
மழமால்விடை மிகவேறிய
மறையோனுறை கோயில்
விழவோடொலி மிகுமங்கையர்
தகுமாடக சாலை
முழவோடிசை நடமுன்செயு
முதுகுன்றடை வோமே. 7

126. செதுவாய்மைகள் கருதிவ்வரை
யெடுத்ததிற லரக்கன்
கதுவாய்கள்பத் தலறீயிடக்
கண்டானுறை கோயில்
மதுவாயசெங் காந்தண்மலர்
நிறையக்குறை வில்லா
முதுவேய்கண்முத் துதிரும்பொழின்
முதுகுன்றடை வோமே. 8

பிறப்பெய்தாதவர்களும், ஆகத் தவமிக்க முனிவர்கள்; என்றும் இளமை நீங்காத முனிவர்கள் தொழும் முதுகுன்றம் என்றவாறு.

7. பொ-ரை : தழலை ஒத்த சிவந்த திருமேனியரும், பிறைமதி அணிந்த சடைமுடியினரும், இளமையான திருமாலாகிய இடபத்தில் மிகவும் உகந்தேறி வருபவரும், வேதங்களை அருளியவருமாகிய சிவ பிரான் எழுந்தருளிய கோயில், விழாக்களின் ஓசையோடு அழகு மிகு நங்கையர் தக்க நடனசாலைகளில் முழவோசையோடு பாடி நடனம் ஆடும் திருமுதுகுன்றம் ஆகும். அதனை நாமும் சென்றடைவோம்.

கு-ரை : தழல் சேர்தரு திருமேனியர் - தழலை ஒத்த செந்நிற மேனியை யுடையவர். 'தழல்வண்ண வண்ணர்' என்றதும் அது நோக்கி. சசி - சந்திரன். மழ மால் விடை - இளைய பெரிய இடபம். ஆடகசாலை - நடனசாலை.

8. பொ-ரை : பொல்லா மொழிகளைக் கருதிக் கயிலை மலையைப் பெயர்த்தெடுத்த வலிய இராவணனின் வடுவுள்ள வாய்கள் பத்தும் அலறும்படி கால்விரலால் ஊன்றி அடர்த்த சிவ

Koviloor Digital Library

127. இயலாடிய பிரமன்னரி
யிருவர்க்கறி வரிய
செயலாடிய தீயாருரு
வாகியெழு செல்வன்
புயலாடுவண் பொழில்சூழ்புனற்
படப்பைத்தடத் தருகே
முயலோடவெண் கயல்பாய்தரு
முதுகுன்றடை வோமே. 9

பிரானது கோயில் விளங்குவதும், தேன் நிறைந்த இடம் உடைய செங் காந்தள் மலர்களாகிய கைகள் நிறையும்படி முதிய மூங்கில்கள் குறை வின்றி முத்துக்களை உதிர்க்கும் பொழில்களால் சூழப்பட்டதுமாகிய திருமுதுகுன்றை நாம் அடைவோம்.

கு-ரை : செதுவாய்மைகள் கருதி - பொல்லாச் சொல்லை எண்ணி. செதுவாய்மை - பொல்லாமொழி. 'செதுமொழிந்த சீத்த செவி' என்பதுபோல நின்றது. கதுவாய்கள் - வடுவுள்ளவாய் 'கது வாய் எஃகின்' என்னும் பதிற்றுப்பத்தடி ஒப்பு நோக்குக. மலைப் பிளப்பை ஒத்த வாயுமாம். மதுவாய - தேனை மலரின் முகத்தே உடைய, செங்காந்தள் பூக்களில் நிறைய மூங்கில்கள் முத்தைச் சொரி கின்றன என்பது. செங்காந்தள் கையேந்தி ஏற்பாரையும், வேய்வரை யாது கொடுப்பாரையும் ஒத்திருக்கின்றன என்று கொள்ள வைத்த வாறு.

9. பொ-ரை : தற்பெருமை பேசிய பிரமன் திருமால் ஆகிய இருவராலும் அறிதற்கரிய திருவிளையாடல் செய்து எரியுருவில் எழுந்த செல்வனாகிய சிவபிரான் எழுந்தருளியதும், மேகங்கள் தோயும் வளமையான பொழில்கள், நீர்வளம் மிக்க நிலப்பரப்புகள், நீர் நிலைகட்கு அருகில் வரும் முயல்கள் ஓடுமாறு வெள்ளிய கயல் மீன்கள் துள்ளிப் பாயும் குளங்கள் இவற்றின் வளமுடையதும் ஆகிய திருமுதுகுன்றத்தை நாம் அடைவோம்.

கு-ரை : இயலாடிய பிரமன், இயலாடிய அரி என அடை மொழியை இருவர்க்கும் கூட்டுக. இயல் - தற்பெருமை. செயல் ஆடிய - செயலால் வெற்றி கொண்ட. புயல் - மேகம். புனற் படைப்பை - நீர்பரந்த இடம்.

Koviloor Digital Library

128. அருகரொடு புத்தரவ
ரறியாவரன் மலையான்
மருகன்வரு மிடபக்கொடி
யுடையானிட மலரார்
கருகுகுழன் மடவார்கடி
குறிஞ்சியது பாடி
முருகன்னது பெருமைபகர்
முதுகுன்றடை வோமே. 10

129. முகில்சேர்தரு முதுகுன்றுடை
யானைம்மிகு தொல்சீர்ப்
புகலிந்நகர் மறைஞானசம்
பந்தன்னுரை செய்த
நிகரில்லன தமிழ்மாலைக
ளிசையோடிவை பத்தும்
பகரும்மடி யவர்கட்கிடர்
பாவம்மடை யாவே. 11

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை : சமணர்களாலும் புத்தர்களாலும் அறியப் பெறாத அரனும், இமவான் மருகனும், தோன்றும் இடபக் கொடி உடையோனும், ஆகிய சிவபிரான் எழுந்தருளிய இடம், மலர் சூடிய கரிய கூந்தலை உடைய இளம் பெண்கள் தெய்வத்தன்மை வாய்ந்த குறிஞ்சிப் பண்ணைப் பாடி முருகப் பெருமானின் பெருமைகளைப் பகரும் திருமுதுகுன்றமாகும். அதனை நாம் அடைவோம்.

கு-ரை : புறச்சமயிகளால் அறியப்படாமை அறிவித்தவாறு. மலையான் மருகன் - இமவானுக்கு மருமகன். வருமிடபம் என்ற சொற்றொடர் இவர் பதிகங்களிற் பலவிடத்தும் வரல் கண்டு இன்புறற்பாலர் முதற்காட்சியதுவாதலின். கருகு குழல் - ஒருகாலைக்கொருகால் கருப்பு ஏறிக்கொண்டே போகின்ற குழல். கடிகுறிஞ்சி - தெய்வத் தன்மை பொருந்திய குறிஞ்சிப் பண், இப்பண்ணே முருகனது பெருமையைக் கூறுதற்கு ஏற்றதென்பது.

11. பொ-ரை : மேகங்கள் வந்து தங்கும் திருமுதுகுன்றத்தில் விளங்கும் பெருமானைப் பழமையான மிக்க புகழையுடைய புகலி

Koviloor Digital Library

நகரில் தோன்றிய மறைவல்ல ஞானசம்பந்தன் உரைத்த ஒப்பற்ற தமிழ்மாலைகளாகிய இப்பதிகப் பாடல்கள் பத்தையும் இசையோடு பகர்ந்து வழிபடும் அடியவர்களைத் துன்பங்களும் அவற்றைத் தரும் பாவங்களும் அடையா.

கு-ரை : நிகரில்லன தமிழ்மாலை என்றார்; ஒவ்வொரு திருப்பாடலின் முதலிரண்டடிக் கண்ணும் இறைவன் ஆன்மாக்களின் மலத்தைநீக்கி ஆட்கொள்ளும் முறைமையும், உபதேச குருமூர்த்தி யாய் வந்தருளும் சிறப்பும், தானே முதல் என உணர்த்தும் தகுதியும் உணர்த்திப் பின்னிரண்டடிகளிலும் இயற்கையழகுகளின் வழியாக இறைவளத்தையுணர்த்துதலின். இடர் - பாவம்.

திருத்தொண்டர் புராணம்

திருஞானசம்பந்தர் புராணம்

மொய்கொள் மாமணி கொழித்துமுத் தாறுசூழ்
முதுகுன்றை அடைவோம் என்
றெய்து சொன்மலர் மாலைவண் பதிகத்தை
இசையொடும் புனைந்தேத்திச்
செய்த வத்திரு முனி வரும் தேவரும்
திசையெலாம் நெருங்கப்புக்கு
ஐயர் சேவடி பணியும் அப் பொருப்பினில்
ஆதரவுடன் சென்றார்.

- சேக்கிழார்.

மச்ச புராணம்

பொருகயற்க ணுமைமுலைப்பா லருந்தியருந்
தமிழ்ப்பதிகம் புரமூன் றெய்த
வொருவனைப்பா டிச்சமணக் குறும்பகற்றிக்
கைதவன்கூ னொழித்தே யென்பைத்
திருவுருவாச் செய்துசிவ சமயமே
சமயமெனச் செகத்தி லோங்கக்
கருணைபுரி பிரமபுரக் கௌணியர்கோன்
இருசரணங் கருத்துள் வைப்பாம்.

- வடமலையப்பப் பிள்ளையன்.

Koviloor Digital Library

13. திருவியலூர்

பதிக வரலாறு:

திருமங்கலக்குடியை வணங்கிப் போந்த பிள்ளையார், திருவியலூருக் கெழுந்தருளி இறைவனை வணங்கிக் 'குரவங் கமழ்' என்னும் இன்னிசை கூடும் இத்தமிழ்ப்பதிகத்தொடை சாத்த,இறைவன்அவருக்குஅருளார்திருவேடங் காட்டியருளி னார். பிள்ளையார் வணங்கி உய்ந்தார். இதனைப் பிள்ளையார் இப்பதிக ஐந்தாம் பாட்டில், 'கண்ணூர்தரும் உருவாகிய கடவுள்' என்றும், ஒன்பதாம் பாட்டில், 'உருவம் விளம்பட்டு அருள் செய்தான்' என்றும் குறிப்பித்தருளுகிறார்கள்

பண்: நட்டபாடை

பதிக எண்: 13

திருச்சிற்றம்பலம்

130. குரவங்கமழ் நறுமென்குழல்
அரிவையவள் வெருவப்
பொருவெங்கரி படவென்றதன்
உரிவையுட லணிவோன்
அரவும்மலை புனலும்மிள
மதியும்நகு தலையும்
விரவுஞ்சடை யடிகட்கிடம்
விரிநீர்விய லூரே. 1

1. பொ-ரை : குரா மலரின் மணம் கமழ்வதும், இயற்கையிலேயே மணமுடையதுமான மென்மையான கூந்தலையுடைய உமையம்மை அஞ்ச, தன்னோடு பொருதற்கு வந்த சினவேழத்தைக் கொன்று, அதன் தோலைத் தன் திருமேனியில் போர்த்தவனும், அரவு, கங்கை, பிறை, வெண்தலை ஆகியவற்றை அணிந்த சடையை உடையவனுமாய சிவபிரானுக்குரிய இடம் நீர்வளம் மிக்க வியலூராகும்.

கு-ரை : குரவம் - குராமலர். அரிவை என்றது உமாதேவியை. சிவனுக்கு உமையம்மை வெருவ யானையை உரித்துப் போர்த்ததாகச் சொல்லுதல் வழக்கம். அரவு முதலியன விரவிய சடையென்பது தம்

Koviloor Digital Library

131. ஏறார்தரு மொருவன்பல
வுருவன்னிலை யானான்
ஆறார்தரு சடையன்அனல்
உருவன்புரி வுடையான்
மாறார்புர மெரியச்சிலை
வளைவித்தவன் மடவாள்
வீறார்தர நின்றானிடம்
விரிநீர்விய லூரே. 2

132. செம்மென்சடை யவைதாழ்வுற
மடவார்மனை தோறும்
பெய்ம்மின்பலி யெனநின்றிசை
பகர்வாரவ ரிடமாம்

முள் மாறுபட்ட, பல பொருள்களும் பகை நீங்கி வாழ்தற்கிடமாகிய சடை என்றவாறு.

2. பொ-ரை : எருதின்மேல் வருபவனும், பல்வேறு மூர்த்தங் களைக் கொண்டவனும், என்றும் நிலையானவனும், கங்கையாற்றைச் சடையில் நிறுத்தியவனும், அனல் போன்ற சிவந்த மேனியனும், அன்புடையவனும், பகைவராய் வந்த அசுரர்தம் முப்புரங்கள் எரியு மாறு வில்லை வளைத்தவனும், உமையம்மை பெருமிதம் கொள்ளப் பல் வகைச் சிறப்புக்களோடு நிற்பவனுமாய சிவபிரானுக்குரிய இடம் நீர் வளம் மிக்க வியலூராகும்.

கு-ரை : ஆர்தருதல் - ஊர்தல். பல உருவன் - அடியார்கள் வேண்டிய வேண்டியாங்கு கொள்ளும் வடிவங்களையுடையவன். அதாவது எம்போலியர்க்கு வினைவாய்ப்பால் கிடைக்கும் உடல் போல்வதன்று, அவன் வடிவென்பது. நிலையானான் - என்றும் அழி யாமல் ஏனைய பொருள்கள் தத்தம் கால எல்லை வரை நிலைத்து நிற்கஏதுவானவன். புரிவுடையான்-அன்புடையான். ஆன்மாக்களி டத்துக் காரணமின்றியே செலுத்தும் அன்புடையவன் என்பது கருத்து. மாறார் - பகைவர். வீறு - பிறிதொன்றற்கில்லாத பெருமை.

3. பொ-ரை : சிவந்த மென்மையான சடை தாழத் தாருகாவன முனிவர்களின் மனைவியர் வாழ்ந்த இல்லங்கள்தோறும் சென்று

Koviloor Digital Library

உம்மென்றெழு மருவித்திரள்
வரைபற்றிட வுரைமேல்
விம்மும்பொழில் கெழுவும்வயல்
விரிநீர்விய லூரே. 3

133. அடைவாகிய வடியார்தொழ
வலரோன்றலை யதனில்
மடவாரிடு பலிவந்துண
லுடையானவ னிடமாம்
கடையார்தர வகிலார்கழை
முத்தம்நிரை சிந்தி
மிடையார்பொழில் புடைசூழ்தரு
விரிநீர்விய லூரே. 4

உணவிடுங்கள் என்று இசை பாடியவனாய சிவபிரானது இடம், உம் என்ற ஒலிக் குறிப்போடு அருவிகள் குடகு மலை முகடுகளிலிருந்து காவிரியாய் வர அந்நீர் வளத்தால் புகழோடு செழித்து வளரும் பொழில்களையும் பொருந்திய வயல்களையும் உடைய நீர்வளம் மிக்க வியலூராகும்.

கு-ரை : செம்மென்சடை - செம்மையாகிய மெல்லிய சடை. மடவார் - கர்மபிரமவாதிகளான தாருகாவனத்து முனிவர் பெண்கள். பலி - பிச்சை. உம் - ஒலிக்குறிப்பு. உரை - புகழ்.

4. பொ-ரை : அடியவர்கள் தத்தம் அடைவின்படி தொழப் பிரம கபாலத்தில் மகளிர் இட்ட உணவை உண்பவனாகிய சிவபிரான் விரும்பி உறையும் இடம், பள்ளர்கள் வயல்களில் நிறையவும் நிறைந்த மூங்கில்கள் முத்துக்களை வரிசையாகச் சொரியவும் ஆற்றில் வரும் அகில் மரங்களைக் கொண்டதும் நெருங்கிய மரங்களைக் கொண்ட பொழில் சூழ்ந்ததுமாகிய நீர்வளம் மிக்க வியலூராகும்.

கு-ரை : அடைவாகிய அடியார் - தத்தம் நெறியினின்று வழி படுமடியவர்கள். அடைவு - முறைமை.

அலரோன் - பிரமன். கடையார் - பள்ளர்கள். அகில்ஆர் கழை எனப்பிரித்து அகிலும் நிறைந்த மூங்கிலும் எனப் பொருள் காண்க.

Koviloor Digital Library

134. எண்ணார்தரு பயனாயய
னவனாய்மிகு கலையாய்ப்
பண்ணார்தரு மறையாயுயர்
பொருளாயிறை யவனாய்க்
கண்ணார்தரு முருவாகிய
கடவுள்ளிட மெனலாம்
விண்ணோரொடு மண்ணோர்தொழும்
விரிநீர்விய லூரே. 5

135. வசைவிற்கொடு வருவேடுவ
னவனாய்நிலை யறிவான்
திசையுற்றவர் காணச்செரு
மலைவானிலை யவனை
அசையப்பொரு தசையாவண
மவனுக்குயர் படைகள்
விசையற்கருள் செய்தானிடம்
விரிநீர்விய லூரே. 6

5. பொ-ரை : தியானத்தின் பயனாய் இருப்பவனும், நான் முகனாய் உலகைப் படைப்போனும், எண்ணற்ற கலைகளாய்த் திகழ் வோனும் சந்த இசையோடு கூடிய வேதங்களாய் விளங்குவோனும், உலகில் மிக உயர்ந்த பொருளாய் இருப்போனும், எல்லோர்க்கும் தலைவனானவனும், கண்ணிறைந்த பேரழகுடையோனும் ஆகிய கடவுளது இடம் விண்ணவராகிய தேவர்களும் மண்ணவராகிய மக்க ளும் வந்து வணங்கும் நீர்வளம் நிரம்பிய வியலூர் ஆகும்.

கு-ரை : எண் - தியானம். எண்ணார்தருபயன் - தியானப்பயன். அயனவனாய் - பிரமனாய் என்றது. பவமலி நினைவொடு பதுமனன் மலரது மேவிய நிலையை. மிகுகலையாய் - ஒன்றினொன்று மிகுந் திருக்கின்ற கலைப்பொருள்களாய். பண் - சந்தம். கண்ணார் தரு உரு - கண்நிறைந்த வடிவம். பேரழகன் என்றபடி.

6. பொ-ரை : வளைந்த வில்லை ஏந்தி வேட்டுவ வடிவம் கொண்டு வந்து,. தன்னை நோக்கித் தவம் இயற்றும் விசயனின் ஆற் றலை அறிதற்பொருட்டு எண்திசையிலுள்ளோரும் காண ஒரு காலில்

Koviloor Digital Library

136. மானார்அர வுடையானிர
வுடையான்பகல் நட்டம்
ஊனார்தரு முயிரானுயர்
விசையான்விளை பொருள்கள்
தானாகிய தலைவன்னென
நினைவாரவ ரிடமாம்
மேனாடிய விண்ணோர்தொழும்
விரிநீர்விய லூரே. 7

நின்று தவம் செய்த அவன் வருந்தும்படி, அவனோடு செருமலைந்து அவ்னது ஆற்றலைப் பாராட்டி அவன் அழியாதவாறு அவனுக்குப் பாசுபதம் முதலிய படைக் கலங்களை அருளியவனாகிய சிவபிரானது இடம், நீர்வளம் மிக்க வியலூராகும்.

கு-ரை : வசைவில் - வளைந்தவில். நிலையறிவான் - அருச்சுன னுடைய உண்மையான தவநிலையை உணர்த்தும்படி. செரு - போர். நிலையவன் - ஒரு காலில் நின்று தவம் செய்யும் விசயன்.

7. பொ-ரை : தலைமையான அரவை அணிந்தவனும், தலை யோட்டில் இரத்தல் தொழில் புரிகின்றவனும், பகலில் நட்டம் ஆடுபவனும், ஊனிடை உயிராய் விளங்குபவனும், உயரிய வீரம் உடையவனும், அனைத்து விளை பொருள்களாய் நிற்கும் தலைவன் என நினைத்தற்குரியவனுமாகிய சிவபிரானது இடம், புண்ணியப் பயனால் மேல் உலகை நாடிய விண்ணவர்களால் தொழப் பெறும் நீர் வளம் சான்ற வியலூராகும்.

கு-ரை : மான் - மான்தோல். இரவுடையான் - இரத்தற்றொழில் உடையான். உடையான் என்பது நடுநிலைத்தீவகமாக பகல் நட்டம் உடையான் எனப்பின்னதனோடும் சென்றியையும். ஊனார் தரும் உயிரான் - உடம்பினுள் எங்கும் வியாபகமாய் இருக்கும் உயிர்க் குயிராய் இருப்பவன். உயர்வு இசையான் - பசுபோத முனைப்பால் உயர்வாக எண்ணுகின்ற உயிர்களிடத்துப் பொருள்கள் எல்லாமாய் இருக்கின்ற இறைவன். மேல்நாடிய விண்ணோர் தொழும் என்றது விண்ணோர்கள் தாம் செய்த புண்ணியப்பயனை நுகர்தலிலேயே மயங்கி நிற்பவராதலின், மேல்நாடற்குரிய சிறப்பு என்றும் இல்லாதவர் என்று குறிப்பித்தவாறு.

Koviloor Digital Library

137. பொருவாரெனக் கெதிராரெனப்
பொருப்பையெடுத் தான்றன்
கருமால்வரை கரந்தோளுரங்
கதிர்நீண்முடி நெரிந்து
சிரமாயின கதறச்செறி
கழல்சேர்திரு வடியின்
விரலாலடர் வித்தானிடம்
விரிநீர்விய லூரே. 8

138. வளம்பட்டலர் மலர்மேலயன்
மாலும்மொரு வகையால்
அளம்பட்டறி வொண்ணாவகை
யழலாகிய வண்ணல்
உளம்பட்டெழு தழற்றூணதன்
நடுவேயொரு வுருவம்
விளம்பட்டருள் செய்தானிடம்
விரிநீர்விய லூரே. 9

8. பொ-ரை : எனக்கெதிராகச் சண்டையிடுவார் யார் என்ற செருக்கால் கயிலை மலையை எடுத்த இராவணனின் வலிய பெரிய மலைபோலும் கைகள் தோள்கள் மார்பு ஆகியனவும் ஒளி பொருந்திய நீண்ட மகுடங்களுடன் கூடிய தலைகளும் நெரிதலால் அவன் கதறுமாறு, செறிந்த கழல்களுடன் கூடிய திருவடியின் விரலால் அடர்த்த சிவபிரானது இடம், நீர்வளம் மிக்க வியலூராகும்.

கு-ரை : எனக்கு எதிர் பொருவார் ஆர் என, எனக் கூட்டுக. பொருப்பை எடுத்தான் - இராவணன். கருமால்வரை - வலிய பெரிய மலையை ஒத்த. முடிநெரிந்து - கிரீடம் நெரிதலால். சிரமாயின கதற - சிரங்கள் பத்தும் கதற. அடர்த்தான் என்னாது அடர்வித்தான் என்றது அவனுடைய ஆணவம் குறைந்து பரிபாகம் ஏற்படும்வரை வருத்தி என்ற நயம்தோன்ற நின்றது.

9. பொ-ரை : வளமையோடு அலர்ந்த தாமரை மலர் மேல் உறையும் நான்முகனும், திருமாலும் தமக்குள் முடி அடி காண்பவர் பெரியவர் என்ற ஒரு வகையான உடன்பாட்டால் அன்னமும் பன்றியுமாய்

Koviloor Digital Library

139. தடுக்காலுடன் மறைப்பாரவர்
தவர்சீவர மூடிப்
பிடக்கேயுரை செய்வாரொடு
பேணார்நமர் பெரியோர்
கடல்சேர்தரு விடமுண்டமு
தமரர்க்கருள் செய்த
விடைசேர்தரு கொடியானிடம்
விரிநீர்விய லூரே. 10

வருந்தி முயன்றும் அறிய வொண்ணாதவாறு அழலுருவாகி நின்ற அண்ணலும், அவ்விருவர்தம் முனைப்பு அடங்கி வேண்டத் தழல் வடிவான தூணின் நடுவே ஒருருவமாய் வெளிப்பட்டு அருள் செய்தவனுமாகிய சிவபிரானது இடம், நீர்வளம் மிக்க வியலூராகும்.

கு-ரை : வளம்பட்டு அலர் மலர் - திருமாலின் உந்தியினின்றும் தோன்றியது ஒன்றாதலால், வளமான தாமரை மலர். அளம் பட்டு - வருந்தி. உளம் பட்டு - மனம் உடைய; பட என்பது பட்டெனத் திரிந்து நின்றது எதுகைநோக்கி.

விளம்பட்டு - வெளிப்பட்டு. விள்ளப்பட்டு என்பது எதுகை நோக்கி விளப்பட்டு ஆகி அது மெலிந்து விளம்பட்டு என நின்றது. விளம் - அகந்தை. செருக்கொழிய என்றுமாம்.

10. பொ-ரை : ஓலைப் பாயால் உடலை மறைப்பவராகிய சமண முனிவர்களுடனும், பொன்னிறஆடையால் உடலை மூடிப்பிடகம் என்னும் நூலைத் தம் மத வேதமாக உரைக்கும் புத்த மதத் தலைவர்கள் உடனும் நம் பெரியோர் நட்புக் கொள்ளார். கடலில் தோன்றிய நஞ்சைத் தான் உண்டு, அமுதை அமரர்க்களித்தருளிய விடைக் கொடியை உடைய சிவபிரானது இடம் நீர்வளமிக்க வியலூராகும். அதனைச் சென்று வழிபடுமின்.

கு-ரை : தடுக்கு - ஓலைப்பாய். சீவரம் - பொன் நிற ஆடை. பிடக்கு - பிடகம் என்னும் புத்த நூல். நமர்பெரியோர் - நம்மவர்களாகிய பெரியோர். கடல் - பாற்கடல். விடமுண்டு அமுது அமரர்க்கு அருள்செய்த - ஆலகால விடத்தைத் தாம் அருந்தி, இனிய அமுதத்தைத் தேவர்க்கு அளித்த கருணையைக் காட்டியவாறு.

Koviloor Digital Library

140. விளங்கும்பிறை சடைமேலுடை
விகிர்தன்விய லூரைத்
தளங்கொண்டதொர் புகலித்தகு
தமிழ்ஞானசம் பந்தன்
துளங்கில்தமிழ் பரவித்தொழு
மடியாரவ ரென்றும்
விளங்கும்புக ழதனோடுயர்
விண்ணும்முடை யாரே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : விளங்கும் பிறையைச் சடைமேலுடைய விகிர்தனாய சிவபிரானது வியலூரை, இடமகன்ற ஊராகிய புகலியில் தோன்றிய தக்க தமிழ் ஞானசம்பந்தன் போற்றிப் பாடிய துளக்கமில்லாத இத்தமிழ் மாலையைப் பாடிப் பரவித் தொழும் அடியவர், எக்காலத்தும் விளங்கும் புகழோடு உயரிய விண்ணுலகையும் தமதாக உடையவராவர்.

கு-ரை : விகிர்தன் - சதுரப்பாடுடையவன். தளம் - இடம். துளங்குஇல் தமிழ் - நடுக்கமில்லாத தமிழ்.

திருவையாற்றுப் புராணம்

வீதி கண்டவர் சீசீசீயென வேத
வஞ்சகர் பாழ்வாய் வீணர்கள்
வாதி டுஞ்சமண் வேரோ டேயற
வாழ்க அந்தணர் வானோரான்என
ஓது பண்டித ஞானா சாரியன்
யோக சிந்தையன்ஓதா தோதிய
வாதி வெங்குரு நாடாள் வேதியன்
ஆய புங்கவன் மேன்மேல் வாழிய.

– ஞானக்கூத்தர்.

Koviloor Digital Library

14. திருக்கொடுங்குன்றம்

பதிக வரலாறு:

பாண்டிய நாடு செல்லத்திருவுளம் பற்றிய ஆளுடைய பிள்ளையார், நதிகள் பலவற்றையுந் தாண்டி, காட்டு வழிகளை யுங்கடந்து, திருக்கொடுங் குன்றத்தை அடைந்தார்கள். அங்கு எழுந்தருளியுள்ள கொழும்பவளச் செழுங்குன்றை வணங்கி 'வானிற் பொலி' என்னும் இப்பதிகத்தை யருளிச் செய்தார்கள்.

பண்: நட்டபாடை

பதிக எண்: 14

திருச்சிற்றம்பலம்

141. **வானிற்பொலி வெய்தும்மழை**
மேகங்கிழித் தோடிக்
கூனற்பிறை சேருங்குளிர்
சாரற்கொடுங் குன்றம்
ஆனிற்பொலி யைந்தும்அமர்ந்
தாடியுல கேத்தத்
தேனிற்பொலி மொழியாளொடு
மேயான்திரு நகரே. 1

1. பொ-ரை : வளைந்த பிறைமதி வானின்கண் விளங்கும் மழை மேகங்களைக் கிழித்து ஓடிச் சென்று சேரும் குளிர்ந்த சாரலை உடைய கொடுங்குன்றம், பசுவிடம் விளங்கும் பால் நெய் தயிர் கோமயம் கோசலம் ஆகிய ஐந்து பொருள்களையும் மகிழ்ந்தாடி உலகம் போற்றத் தேன்போலும் மொழியினைப் பேசும் உமையம்மையோடு சிவபிரான் மேவிய திருத்தலமாகும்.

கு-ரை : கூனல்பிறை மேகங்கிழித்து ஓடிச்சேருங் கொடுங் குன்றம் எனக்கூட்டுக. மழைமேகம் - சூல்முற்றி மழை பொழியும் மேகம். தேனில் பொலி மொழியாள் - குயில் அமுதநாயகி. இளம் பிறை கனத்த மேகப் படலத்தைக் கிழித்துச் சென்று சேர்தற்கிடமாகிய குளிர்சாரல் குன்று என்றமையால், ஆன்மாக்கள் அநாதியான ஆணவமலப் படலத்தைக் கிழித்துச் சென்று எய்தி, திருவடி நிழலாகிய தண்ணிய இடத்தைச் சாரலாம் என்பது குறித்தவாறு.

Koviloor Digital Library

142. மயில்புல்குதண் பெடையோடுட
னாடும்வளர் சாரல்
குயிலின்னிசை பாடுங்குளிர்
சோலைக்கொடுங் குன்றம்
அயில்வேன்மலி நெடுவெஞ்சுடர்
அனலேந்திநின் றாடி
எயில்முன்பட எய்தானவன்
மேயவ்வெழில் நகரே. 2

143. மிளிரும்மணி பைம்பொன்னொடு
விரைமாமல ருந்திக்
குளிரும்புனல் பாயுங்குளிர்
சாரற்கொடுங் குன்றம்
கிளர்கங்கையொ டிளவெண்மதி
கெழுவுஞ்சடை தன்மேல்
வளர்கொன்றையும் மதமத்தமும்
வைத்தான்வள நகரே. 3

2. பொ-ரை : ஆண் மயில்கள் தண்ணிய தம் பெடைகளைத் தழுவித் தோகைவிரித்தாடும் விரிந்த சாரலையும், குயில்கள் இன்னிசை பாடும் குளிர்ந்த சோலைகளையும் உடைய கொடுங்குன்றம், கூரிய வேல்போலும் நெடிய வெம்மையான ஒளியோடு கூடிய அனலைக் கையில் ஏந்தி நின்றாடி முப்புரங்களைக் கணை தொடுத்து அழித்த சிவபிரான் எழுந்தருளிய திருத்தலமாகும்.

கு-ரை : புல்கு - தழுவிய, தண்பெடை என்றது மயிலுக்குள்ள கற்பின் சிறப்புக்கருதி. குயில் இன்னிசைபாடும் சாரல், மயில் தண் பெடையோடு ஆடும் சாரல் என்றது, தன்வசமற்றுப் பாடியும் ஆடியும் செல்லும் அன்பர்க்குக் குளிருஞ்சாரல் கொடுங்குன்றம் என்ற கருத்துத் தொனித்தல் காண்க.

3. பொ-ரை : அருவிகள், ஒளிவீசும் மணிகள், பசும்பொன், மணமுள்ள மலர்கள் ஆகியவற்றைத் தள்ளிக்கொண்டு வந்து நீரைச் சொரிதலால், குளிர்ந்துள்ள மலைச்சாரலை உடைய கொடுங்குன்றம், பொங்கி எழும் கங்கையோடு, வெள்ளிய பிறைமதி பொருந்திய சடை, முடிமேல், மணம் வளரும் கொன்றை மலரையும் மதத்தை ஊட்டும்

Koviloor Digital Library

144. பருமாமத கரியோடரி
யிழியும்விரி சாரல்
குருமாமணி பொன்னோடிழி
யருவிக்கொடுங் குன்றம்
பொருமாவெயில் வரைவில்தரு
கணையிற்பொடி செய்த
பெருமானவ னுமையாளொடு
மேவும்பெரு நகரே. 4

145. மேகத்திடி குரல்வந்தெழ
வெருவிவ்வரை யிழியும்
கூகைக்குல மோடித்திரி
சாரற்கொடுங் குன்றம்

ஊமத்தை மலரையும் அணிந்துள்ள சிவபிரானது வளமையான நகராகும்.

கு-ரை : கிளர்கங்கை - பொங்கும் கங்காநதி. மதமத்தம் - மதத்தை யூட்டும் ஊமத்தம்பூ.

4. பொ-ரை : பெரிய கரிய மத யானைகளும் சிங்கங்களும் இரை தேடவும், நீர் பருகவும் இறங்கிவரும் பெரிய மலைச்சாரலையும், நிறம் பொருந்திய பெரிய மணிகளைப் பொன்னோடு சொரியும் அருவி களையும் உடைய கொடுங்குன்றம், தன்னோடு பொரவந்த பெரிய முப் புரக் கோட்டைகளை மலை வில்லில் தொடுத்த கணையால் பொடியாக் கிய சிவபிரான் உமையம்மையோடு எழுந்தருளிய பெருநகராகும்.

கு-ரை : கரி - யானை. அரி - சிங்கம். இழியும் - இறங்குகின்ற சாரல். எனவே பகைகொண்ட வலிவுள்ள யானையும் சிங்கமுமாகிய இவ்விரண்டின் வலிமை யடங்க, அருவி கிழித்துவருவது போல, கொடுங்குன்றச்சாரலை அடையின் தம்முள் மாறுபட்ட ஆணவக் களிறும், ஐம்பொறிகளாகிய அரிகளும் தம் வலிமையற்றுக் கருணை யருவியின் வழியே இழுக்கப்பட்டு அமிழ்த்தப்படும் என்பது அறிவித்தவாறாம்.

5. பொ-ரை : மேகத்திடம் இடிக்குரல் தோன்றக் கேட்டுக் கோட்டான் என்னும் பறவை இனங்கள் அஞ்சி மலையினின்றும்

Koviloor Digital Library

நாகத்தொடும் இளவெண்பிறை
சூடிந்நல மங்கை
பாகத்தவ னிமையோர்தொழ
மேவும்பழ நகரே. 5

146. கைம்மாமத கரியின்னின
மிடியின்குர லதிரக்
கொய்ம்மாமலர்ச் சோலைபுக
மண்டுங்கொடுங் குன்றம்
அம்மானென வுள்கித்தொழு
வார்கட்கருள் செய்யும்
பெம்மானவ னிமையோர்தொழ
மேவும்பெரு நகரே. 6

இறங்கி வந்து ஓடித் திரியும் மலைச்சாரலை உடைய கொடுங்குன்றம், நாகத்தோடு இளவெண்பிறையை முடியிற் சூடி அழகிய உமை நங்கையை ஒருபாகமாகக் கொண்டுள்ள சிவபிரான், தேவர்கள் தன்னை வணங்குமாறு எழுந்தருளும் பழமையான நகராகும்.

கு-ரை: கூகைக்குலம் - கோட்டான்களின் கூட்டம். கூகைகள் இருள் வாழ்க்கையுடையன. அவைகள் மேக இடிக்குரல்கேட்டு அஞ்சி மலையை விட்டிறங்கிப் புகலிடம் காணாது திரிகின்றன என்றது, அஞ்ஞானமாகிய வாழ்க்கையையுடைய ஆன்மாக்கள் கருணைமழை பொழியும் இறைவனது மறக்கருணை காட்டும் மொழியைக்கேட்டு மலையை அணுகமுடியாதே அலைவர் என்று குறிப்பித்தவாறு. நல மங்கை - அழகிய உமாதேவி.

6. பொ-ரை: துதிக்கையை உடைய கரிய மதயானைகளின் கூட்டம் இடிக்குரல் அதிரக்கேட்டு அஞ்சிக் கொய்யத்தக்க மண மலர்களை உடைய சோலைகளில் புகுந்து ஒளிதற்குச் செறிந்து வரும் கொடுங்குன்றம், இவரே நம் தலைவர் என இடைவிடாது நினைந்து தொழும் அடியவர்கட்கு அருள் செய்யும் சிவபெருமான் விண்ணோர் தன்னைத் தொழ வீற்றிருந்தருளும் பெருநகராகும்.

கு-ரை: கைம்மா - யானை. வெளிப்படைமொழி. யானை, இடியோசையைக்கேட்டுச் சோலைகளிற் புகுகின்றன. இது'நெறி

Koviloor Digital Library

147. மரவத்தொடு மணமாதவி
மௌவல்லது விண்ட
குரவத்தொடு விரவும்பொழில்
சூழ்தண்கொடுங் குன்றம்
அரவத்தொடு மிளவெண்பிறை
விரவும்மலர்க் கொன்றை
நிரவச்சடை முடிமேலுடன்
வைத்தானெடு நகரே. 7

148. முட்டாமுது கரியின்னின
முதுவேய்களை முனிந்து
குட்டாச்சுனை யவைமண்டிநின்
றாடுங்கொடுங் குன்றம்
ஒட்டாவரக் கன்றன்முடி
யொருபஃதவை யுடனே
பிட்டானவ னுமையாளொடு
மேவும்பெரு நகரே. 8

நில்லார் தீயோசைகேட்டு அஞ்சிஓடித் தாணிழல் செல்லும் அன்பரை நினைவூட்டும் நிகழ்ச்சி. அம்மான் - தலைவன். உள்கி - தியானித்து.

7. பொ-ரை : கடம்பு, குருக்கத்தி, முல்லை ஆகியவற்றின் நாள் அரும்புகள் குரவமலர்களோடு விண்டு மணம் விரவும் பொழில் சூழ்ந்த தண்ணிய கொடுங்குன்றம், அரவு, வெள்ளிய இளம்பிறை, மணம் விரவும் கொன்றை மலர் ஆகியவற்றை நிரம்பத் தன் முடிமேல் அணிந்துள்ள சிவபிரானது நெடுநகராகும்.

கு-ரை : மரவம் - கடம்பு. மாதவி - குருக்கத்தி. மௌவல் - முல்லை. நிரவ - நிரம்ப. ஒன்ற என்றுமாம்.

8. பொ-ரை : யானைக் கூட்டங்கள் யாரும் தடுப்பார் இன்றி முதிய மூங்கில்களை உண்டு வெறுத்துப் பிறரால் அகழப்படாது இயற்கையிலேயே ஆழமாக உள்ள சுனைகளில் இறங்கிநின்று நீராடும் கொடுங்குன்றம், தன்னோடு மனம் பொருந்தாது கயிலை மலையை எடுத்த அரக்கனாகிய இராவணனின் முடியணிந்த பத்துத் தலைகளையும் அடர்த்து ஒடித்தவனாகிய சிவபெருமான் உமையம்மையோடு மேவும் பெருநகராகும்.

Koviloor Digital Library

149. அறையும்மரி குரலோசையை
யஞ்சியடு மானை
குறையும்மன மாகிம்முழை
வைகுங்கொடுங் குன்றம்
மறையும்மவை யுடையானென
நெடியானென விவர்கள்
இறையும்மறி வொண்ணாதவன்
மேயவ்வெழில் நகரே. 9

150. மத்தக்களி றாளிவ்வர
வஞ்சிம்மலை தன்னைக்
குத்திப்பெரு முழைதன்னிடை
வைகுங்கொடுங் குன்றம்

கு-ரை : முட்டா - தடையில்லாத. முதுவேய்கள் - முதிர்ந்த மூங்கில்கள். யானைகள் மூங்கிலை முரித்து வைத்துக்கொண்டு சுனைகளில் ஆடுகின்றன. குட்டாச்சுனை - தானே ஆழமான சுனை என்பதாம். குட்டம் - ஆழம். குட்டா - ஆழமாக்கப்படாத. ஒட்டா - பொருந்தாத. பிட்டான் - இரண்டாக ஒடித்தான்.

9. பொ-ரை : சிங்கத்தின் கர்ச்சனை ஓசையைக் கேட்டு அஞ்சிக் கொல்லும் தன்மையினவாகிய யானைகள் மன எழுச்சி குன்றி மலையிடையே உள்ள குகைப் பகுதிகளில் மறைந்து வைகும் கொடுங் குன்றம், வேதங்களுக்கு உரியவனாய நான்முகன் திருமால் ஆகிய இருவரும் சிறிதும் அறிய முடியாதவனாய் நின்ற சிவபிரான் மேவிய அழகிய நகராகும்.

கு-ரை : அறையும் - முன்கால்களால் அறைந்து கொல்லும். அடும் ஆனை - கொல்லும் தன்மைவாய்ந்த மதயானை. குறையும் மனமாகி - வன்மைகுறைந்த மனத்தை யுடையவராகி. முழை - குகை. மறையும் அவை யுடையான் - வேதங்களை யுடையவனாய பிரமன். நெடியான் - திருமால் என்றது. இறையும் - சிறிதும்.

10. பொ-ரை : மதம் பொருந்திய யானைகள் தம்மின் வலிய சிங்கம் வருதலைக் கண்டு அஞ்சி மலையைக் குத்திப் பெருமுழையாக்கி, அதனிடை வைகும் கொடுங்குன்றம், புத்தர்களும் பொல்லா

Koviloor Digital Library

புத்தரொடு பொல்லாமனச்
சமணர்புறங் கூறப்
பத்தர்க்கருள் செய்தானவன்
மேயபழ நகரே. 10

151. கூனற்பிறை சடைமேன்மிக
வுடையான்கொடுங் குன்றைக்
கானற்கழு மலமாநகர்
தலைவன்னல கவுணி
ஞானத்துயர் சம்பந்தன
நலங்கொள்தமிழ் வல்லார்
ஊனத்தொடு துயர்தீர்ந்துல
கேத்தும்மெழி லோரே. 11

திருச்சிற்றம்பலம்

மனமுடைய சமணர்களும் புறங்கூறத் தன் பக்தர்கட்கு அருள் செய்பவனாகிய சிவபிரான் மேவிய பழமையான நகராகும்.

கு-ரை : யானை ஆளிவர அஞ்சி, மலையைக் குத்திக்கொண்டு குகையில் தங்குகின்றது என்பதாம்.

11. பொ-ரை : வளைந்த பிறை மதியைச் சடைமுடிமீது அழகு மிகுமாறு அணிந்த சிவபிரானது திருக்கொடுங்குன்றைக் கடற்கரைச் சோலைகளால் சூழப்பட்ட கழுமலமாநகரின் தலைவனும் நல்ல கவுணியர் கோத்திரத்தில் தோன்றியவனுமாகிய ஞானசம்பந்தன் பாடிய தமிழ்மாலைகளை ஓதி வழிபட வல்லவர் தம்மிடமுள்ள குறைபாடுகள் நீங்கித்துன்பங்கள் அகன்று உலகம் போற்றும் புகழுடையோராவர்.

கு-ரை : கானல் - கடற்கரைச்சோலை. தலைவன் நல்ல கவுணி - தலைவனாகிய நல்ல கவுண்டின்ய கோத்திரத்துண்டானவன். ஊனம் - குறைபாடு. எழில் - எழுச்சி.

Koviloor Digital Library

15. திருநெய்த்தானம்

பதிக வரலாறு:

பெரும்புலியூர் முதலிய தலங்களை வணங்கிப் பிள்ளையார் வீற்றிருக்குங் காலத்தில், மேற்குத் திசைத் தலங்களையும் வணங்கத் திருவுள்ளங் கொண்டு விடைபெற்றுத் திருவருட் குறிப்பின் வழியே செல்லுகின்றார்கள். திருநெய்த்தானத்தை யடைந்தார்கள். மனம் பொருந்த வணங்கினார்கள். 'மையாடிய கண்டன்' என்னும் இப் பதிகத்தைப் பாடினார்கள். இதில் 'நெய்யாடிய பெருமானிடம் நெய்த் தானம் என்னுங்கள்: செல்வன் அடி, சிவகதி சேரலாம்' என்று ஆணை வழங்குகிறார்கள்.

பண்: நட்டபாடை

பதிக எண்: 15

திருச்சிற்றம்பலம்

152. மையாடிய கண்டன்மலை
மகள்பாகம துடையான்
கையாடிய கேடில்கரி
யுரிமூடிய வொருவன்
செய்யாடிய குவளைம்மலர்
நயனத்தவ ளோடும்
நெய்யாடிய பெருமானிடம்
நெய்த்தானமெ னீரே. 1

1. பொ-ரை : கருநிறம் அமைந்த கண்டத்தை உடையவனும், மலை மகளாகிய பார்வதியை இடப் பாகமாகக் கொண்ட வனும், துதிக் கையோடு கூடியதாய்த் தன்னை எதிர்த்து வந்ததால் அழிவற்ற புகழ் பெற்ற யானையைக் கொன்று அதன் தோலைப் போர்த்த, தன்னொப் பார் இல்லாத் தலைவனுமாகிய சிவபிரான் வயல்களில் முளைத்த குவளை மலர் போலும் கண்களை உடைய உமையம்மையோடும் நெய் யாடிய பெருமான் என்ற திருப்பெயரோடும் விளங்குமிடமாகிய நெய்த்தானம் என்ற திருப்பெயரைச் சொல்வீராக.

கு-ரை : மையாடிய கண்டன் - விஷம் பொருந்திய கழுத்தை யுடையவன். கையாடிய கரி - கையோடு கூடிய யானை, கேடில்கரி

Koviloor Digital Library

153. பறையும்பழி பாவம்படு
துயரம் பலதீரும்
பிறையும்புன லரவும்படு
சடையெம்பெரு மானூர்
அறையும்புனல் வருகாவிரி
யலைசேர்வட கரைமேல்
நிறையும்புனை மடவார்பயில்
நெய்த்தானமெ னீரே. 2

154. பேயாயின பாடப்பெரு
நடமாடிய பெருமான்
வேயாயின தோளிக்கொரு
பாகம்மிக வுடையான்

என்றது இறைவன் உரித்துப் போர்த்ததால் நிலைத்த புகழ் கொண்டமையின். செய் - வயல். நெய்யாடிய பெருமான் என்பது இத்தலத்து இறைவன் திருநாமம். நெய்த்தானம் எனத் தலப்பெயரைச் சொல்லுங்கள் போதும் என்கின்றார்கள்.

2. பொ-ரை : காவிரி வடகரை மேல் உள்ள எம்பெருமான் ஊராகிய நெய்த்தானம் என்ற பெயரைச் சொல்லுமின் பழி பாவம் தீரும் என வினை முடிபு காண்க.

ஆரவாரத்துடன் வரும் புனலின் அலைகள் சேரும் காவிரி வடகரையில் விளங்குவதும், பிறை கங்கை அரவம் ஆகியவற்றுடன் கூடிய சடைமுடியை உடைய எம்பெருமான் எழுந்தருளியதும், மனத்தைக் கற்பு நெறியில் நிறுத்தும் நிறை குணத்துடன் தம்மை ஒப்பனை செய்து கொள்ளும் மகளிர் பயில்வதுமாகிய நெய்த்தானம் என்ற ஊரின் பெயரைச் சொல்லுமின்; பழிநீங்கும், பாவங்கள் துன்பங்கள் அனைத்தும் தீரும்,

கு-ரை : பறையும் - கழியும், அறையும் - ஒலிக்கும், நிறையும் புனைமடவார் - மனத்தைக் கற்பு நெறிக்கண் நிறுத்துவதாகிய நிறைக் குணத்தால் தம்மை ஒப்பனை செய்த மடவார்.

3. பொ-ரை : ஊழிக் காலத்து, பேய்கள் பாட, மகா நடனம் ஆடிய பெருமானும், மூங்கில் போலத் திரண்ட தோள்களை உடைய உமை

Koviloor Digital Library

தாயாகிய வுலகங்களை
நிலைபேறுசெய் தலைவன்
நேயாடிய பெருமானிடம்
நெய்த்தானமெ னீரே. 3

155. சுடுநீறணி யண்ணல்சுடர்
சூலம்மன லேந்தி
நடுநள்ளிருள் நடமாடிய
நம்பன்னுறை யிடமாம்
கடுவாளிள வரவாடுமிழ்
கடனஞ்சம துண்டான்
நெடுவாளைகள் குதிகொள்ளுயர்
நெய்த்தானமெ னீரே. 4

யம்மைக்குத் தனது திருமேனியின் ஒரு பாகத்தை வழங்கியவனும், அனைத்து உலகங்களிலும் வாழும் உயிர்களை நிலைபேறு செய் தருளும் தாய்போன்ற தலைவனும், அன்பர்களின் அன்பு நீரில் ஆடு பவனும் ஆகிய சிவபெருமான் எழுந்தருளிய நெய்த்தானம் என்ற திருப்பெயரைப் பலகாலும் சொல்வீராக.

கு-ரை : பெருநடம் - மகாப்பிரளய காலத்துச் செய்யப்பெறும் மகாநடனம், வேய் - மூங்கில். அவ்வுலகங்களைத்தாயாகி நிலைபேறு செய்ததலைவன் எனக் கூட்டுக. நெய்யாடிய என்பது எதுகை நோக்கி நேயாடிய என்றாயிற்று. நே - அன்பு. அன்பே அபிடேக மாதல் ஞானப் பூசையிலுண்டு.

4. பொ-ரை : சுடப்பட்ட திருநீற்றை அணியும் தலைமையான வனும் ஒளி பொருந்திய சூலம் அனல் ஆகியவற்றைக் கைகளில் ஏந்தி இருள் செறிந்த இரவின் நடுயாமத்தே நடனம் ஆடும் நம்பனும், கொடிய ஒளி பொருந்திய இளைய வாசுகியாகிய பாம்பு உமிழ்ந்த நஞ் சோடு கடலில் தோன்றிய நஞ்சினை உண்டவனுமாகிய சிவபிரான் உறையும் இடமாகிய நீண்ட வாளை மீன்கள் துள்ளி விளையாடும் நீர்வளம் மிக்க நெய்த்தானம் என்ற ஊரின் பெயரைச் சொல்வீராக.

கு-ரை : சுடுநீறு - சுட்டநீறாகிய விபூதி. நடுநள்ளிருள் - அர்த்த யாமம், நடுநள் - ஒருபொருட் பன்மொழி. நள் - செறிவுமாம். நம்பன் -

Koviloor Digital Library

156. நுகராரமொ டேலம்மணி
செம்பொன்னுரை யுந்திப்
பகராவரு புனல்காவிரி
பரவிப்பணிந் தேத்தும்
நிகரான்மண லிடுதண்கரை
நிகழ்வாயநெய்த் தான
நகரானடி யேத்தந்நமை
நடலையடை யாவே. 5

157. விடையார் கொடி யுடையவ்வணல்
வீந்தார்வெளை யெலும்பும்
உடையார்நறு மாலைசடை
யுடையாரவர் மேய
புடையேபுனல் பாயும்வயல்
பொழில்சூழ்ந்தநெய்த் தானம்
அடையாதவ ரென்றும்அம
ருலகம்அடை யாரே. 6

நம்பப்படத்தக்கவன், விருப்பிற்குரியன். கடுவாள் இளஅரவு ஆடு உமிழ் நஞ்சு - கொடிய ஒளிபொருந்திய இளைய வாசுகியாகிய பாம்பு உமிழ்ந்த அடுதலை உடைய நஞ்சம்.

5. பொ-ரை : நுகரத்தக்க பொருளாகிய சந்தனம், ஏலம், மணி, செம்பொன் ஆகியவற்றை நுரையோடு உந்தி விலை பகர்வதுபோல ஆரவாரித்து வரும் நீரை உடைய காவிரி பரவிப் பணிந்தேத்துவதும், ஒருவகையான மணல் சேர்க்கப்பெற்ற அவ்வாற்றின் தண்கரையில் விளங்குவதுமாகிய நெய்த்தானத்துக் கோயிலில் விளங்கும் சிவபிரான் திருவடிகளை ஏத்தத் துன்பங்கள் நம்மை அடையா.

கு-ரை : நுகர் ஆரம் - நுகரத்தக்க பொருளாகிய சந்தனம், பகரா வரும் - விலை கூறிவருகின்ற. நிகரான் மணல் - ஒருவிதமான மணல். நடலை - துன்பம்.

6. பொ-ரை : இடபக் கொடியை உடைய அண்ணலும், மணம் கமழும் மாலைகளைச் சடைமேல் அணிந்தவனும் ஆகிய சிவபிரான் மேவியதும், அருகிலுள்ள கண்ணிகளிலும் வாய்க்கால்களிலும் வரும் நீர்பாயும் வயல்கள் பொழில்கள் சூழ்ந்ததும் ஆகிய நெய்த்தானம்

Koviloor Digital Library

158. நிழலார்வயல் கமழ்சோலைகள்
நிறைகின்றநெய்த் தானத்
தழலானவ னனலங்கையில்
ஏந்தியழ காய
கழலானடி நாளுங்கழ
லாதேவிட லின்றித்
தொழலாரவர் நாளுந்துய
ரின்றித்தொழு வாரே. 7

159. அறையார்கட லிலங்கைக்கிறை
யணிசேர்கயி லாயம்
இறையாரமு னெடுத்தானிரு
பதுதோளிற வூன்றி

என்னும் தலத்தை அடையாதவர் எக்காலத்தும் வீட்டுலகம் அடையார்.

கு-ரை : உடைய அண்ணல், உடையவ் வணல் என விரித்தல் தொகுத்தல் விகாரம் வந்தன சந்தம் நோக்கி. வீந்தார் - இறந்தவர் களாகிய பிரமவிஷ்ணுக்ளது. வெளை; வெள்ளை என்பதன் தொகுத் தல். நெய்த்தானம் அடையாதவர் அமருலகம் அடையார் என எதிர் மறைமுகத்தால் பயன் கூறியவாறு. அமருலகம், தேவருலகம் என் பாரும் உளர். விரும்பிய தலமாகிய வீடென்பதே பொருந்துவதாம்; அமரர் உலகு என்னாது அமருலகென்றே இருத்தலின்.

7. பொ-ரை : பயிர் செழித்து வளர்தலால் ஒளி நிறைந்த வயல் களும் மணம் கமழும் சோலைகளும் நிறைகின்ற நெய்த்தானத்தில், தழல் உருவில் விளங்குபவனும் அனலைத் தன் கையில் ஏந்தியவனும் அழகிய வீரக் கழல்களை அணிந்தவனும் ஆகிய சிவபிரானது திரு வடிகளை நாள்தோறும் தவறாமலும் மறவாமலும் தொழுதலை உடைய அடியவர் எந்நாளும் துயரின்றி மற்றவர்களால் தொழத்தக்க நிலையின ராவர்.

கு-ரை : கழலாதே - நீங்காதே. விடல் இன்றி - இடைவிடாமல். தொழலார் அவர் - தொழுதலையுடைய அடியார்கள்.

8. பொ-ரை : அழகிய கயிலாய மலையைத் தன் இருபது முன் கரங்களாலும் பெயர்த்து எடுத்த ஓசை கெழுமிய கடல் சூழ்ந்த

Koviloor Digital Library

நிறையார்புனல் நெய்த்தானன்நல்
நிகழ்சேவடி பரவக்
கறையார்கதிர் வாளீந்தவர்
கழலேத்துதல் கதியே. 8

160. கோலம்முடி நெடுமாலொடு
கொய்தாமரை யானும்
சீலம்மறி வரிதாயொளி
திகழ்வாயநெய்த் தானம்
காலம்பெற மலர்நீரவை
தூவித்தொழு தேத்தும்
ஞாலம்புக ழடியாருடல்
உறுநோய்நலி யாவே. 9

இலங்கைக்குரிய மன்னனாகிய இராவணன் இருபது தோள்களும் நெரியுமாறு காலை ஊன்றிப் பின் அவன் புனல் நிறைந்த நெய்த்தானப் பெருமானது விளங்கும் திருவடிகளைப் பரவ அவனுக்கு முயற் கறையை உடைய சந்திரனின் பெயரைப் பெற்ற சந்திரகாசம் என்ற வாளை ஈந்த அப்பெருமான் திருவடிகளை ஏத்துதலே, ஒருவற்கு அடையத்தக்க கதியாம்.

கு-ரை : அறை - ஓசை. இறை ஆர - மணிக்கட்டுப் பொருந்த, நெய்த்தானன் - அன் தவிர்வழி வந்த சாரியை; நெய்த்தானத்த வனாகிய இறைவன். கறையார் கதிர்வாள் ஈந்த - சந்திரன் பெயரைப் பொருந்திய வாளைத் தந்த என்றது சந்திரஹாசம் என்னும் வாளைத் தந்த என்பதாம். அவர் கழல் ஏத்துதல் கதியே - அந்த இறைவனுடைய கழலை ஏத்துதலே மீட்டும் அடையத்தக்க கதியாம்.

9. பொ-ரை : அழகிய முடியை உடைய திருமாலும், கொய்யத் தக்க தாமரைமலர் மேல் விளங்கும் நான்முகனும் தன் இயல்பை அறி தற்கியலாத நிலையில் ஒளிவடிவாய்த் திகழ்ந்த நெய்த்தானப் பெரு மானை விடியற் பொழுதிலே நீராட்டி மலர் சூட்டித் தொழுதேத்தும் உலகு புகழ் அடியவரை உடலுறும் நோய்கள் நலியா.

கு-ரை : கோலம் முடி - அழகிய கிரீடம், சீலம் - சௌலப்யம் என்னும் எளிமைக்குணம். காலம் பெற - விடியலிலேயே. உடலை நோய் நலியா என்க. உறுநோய் - பிராரத்த வினையான் வரும் துன்பம்.

Koviloor Digital Library

161. மத்தம்மலி சித்தத்திறை
மதியில்லவர் சமணர்
புத்தரவர் சொன்னம்மொழி
பொருளாநினை யேன்மின்
நித்தம்பயில் நிமலன்னுறை
நெய்த்தானம தேத்தும்
சித்தம் முடை யடியாருடல்
செறுநோயடை யாவே. 10

162. தலமல்கிய புனற்காழியுட்
டமிழ்ஞானசம் பந்தன்
நிலமல்கிய புகழான்மிகு
நெய்த்தானனை நிகரில்

10. பொ-ரை : சித்தத்தில் செருக்குடையவரும், சிறிதும் மதியில்லாதவரும் ஆகிய சமணர்களும், புத்தர்களும் கூறும் பொருளற்ற உரைகளை ஒரு பொருளாக நினையாதீர். நாள்தோறும் நாம் பழகி வழிபடுமாறு, குற்றமற்ற சிவபிரான் உறையும் நெய்த்தானத்தை வணங்கிப் போற்றும் சித்தத்தை உடைய அடியவர் உடலைத் துன்புறுத்தும் நோய்கள் அடையா.

கு-ரை : மத்தம் - மதம். இறைமதியில்லார் - கடவுளுணர்ச்சி சிறிதும் இல்லாதவர்கள். செறுநோய் - வருத்தும் நோய்கள்.

குருவருள் : ''உருகும் மனம் உடையார் தமக்கு உறுநோய் அடையாவே'' என்ற பிள்ளையார் இங்கு ''நித்தம் பயில் நிமலன் உறை நெய்த்தானமதேத்தும் சித்தம்முடை அடியார்உடல் செறுநோய் அடையாவே'' என்று கூறுதல் சிந்திக்கத்தக்கது. இறைவழிபாட்டில் ஈடுபாடுள்ள அடியவர்களை உறத்தக்க நோயும் செறத்தக்க நோயும் அடையா என்பதைத் தெளிவித்த வாறறியலாம்.

11. பொ-ரை : தலங்களில் சிறந்த புனல் சூழ்ந்த காழிப்பதியுள் தோன்றிய தமிழ் ஞானசம்பந்தன் உலகெங்கும் பரவிய புகழால் மிக்க நெய்த்தானத்துப் பெருமான் மீது பாடிய ஒப்பற்ற பயன்கள் பலவற்றைத்தரும் பாடல்களாகிய இவற்றைக் கற்றுப் பலகாலும் பரவ வல்லவர் சீலம் நிறைந்த செல்வன் அடியாகிய சிவகதியைச் சேர்வர்.

Koviloor Digital Library

பலமல்கிய பாடல்லிவை
பத்தும்மிக வல்லார்
சிலமல்கிய செல்வன்னடி
சேர்வர்சிவ கதியே. 11

திருச்சிற்றம்பலம்

கு-ரை : பலம் மல்கிய பாடலிவை பத்தும் என்றது, முதல் நான்கு பாடலிலும் நெய்த்தானம் என்னுங்கள், உங்களை நடலை யடையா, அமருலகு அடையலாம், துயரின்றித் தொழலாம், நோய் நலியா, அடையா, கழலேத்துதல் கதி என இம்மைப் பயனையும்; மறுமைப் பயனையும் எய்தலாம் என்கிறார்கள் ஆதலின். சில மல்கிய - சிலவே நிறைந்த. இறைவனடியைச் சில என்றதால் நிறைவு ஏது? மல்குதற்கேற்ற புண்ணிய வாய்ப்புடையன சிலவே யாதலின் இங்ஙனம் கூறினார்.

சீகாளத்திப் புராணம்

மேவ ரும்பர மானந்த வீட்டினுள்
தாவி னன்மணம் காணிய சார்ந்தவர்
யாவ ரும்புகு வித்தருள் செந்தமிழ்ப்
பாவ லன்மலர்த் தாள்முதல் பற்றுவாம்

- மூவர்.

திருக்கழுக்குன்றப் புராணம்

கண்ணைப்பா டசையுமிரு கனங்குழையைக்
கமழ்குழலைக் கனகச் செப்பை
விண்ணைப்பா டகத்தாளைக் கழைத்தோளைக்
கலந்துதிரு மேனி தோன்றப்
பண்ணைப்பா டலத்தாறு பதம்பாடும்
பொழின்மயிலைப் பதியென் பாய
பெண்ணைப்பா டியபுகலிப் பிள்ளையைப்பா
டித்துயரம் பெயரச் செய்வாம்.

- அந்தகக்கவி வீரராகவப் புலவர்.

Koviloor Digital Library

16. திருப்புள்ளமங்கை

பதிக வரலாறு:

வேதங்களில் சொல்லப்பட்ட அருங்கருத்துக்களின் உள்ளீடாகிய சிவஞானம் தம்மறிவில் நிரம்பப்பெற்ற பிள்ளையார் திருச்சக்கரப்பள்ளியை வணங்கிக்கொண்டு வயற்கரை வழியாகப் புள்ளமங்கையை அடைந்தார்கள். அங்கேயுள்ள ஆலந்துறை என்னும் திருக்கோயிலுக்குச் சென்றார்கள். இறைவன் திருவடித்தலத்தை அன்போடு வணங்கிப் 'பாலுந்துறுதிரளாயின' என்னும் இத்திருப்பதிகத்தை அருளிச் செய்தார்கள்.

பண்: நட்டபாடை

பதிக எண்: 16

திருச்சிற்றம்பலம்

163. பாலுந்துறு திரளாயின
பரமன்பிர மன்றான்
போலுந்திற லவர்வாழ்தரு
பொழில்சூழ்புள மங்கைக்
காலன்றிற லறச்சாடிய
கடவுள்ளிடங் கருதில்
ஆலந்துறை தொழுவார்தமை
யடையாவினை தானே. 1

1. பொ-ரை : பாலினின்று மிதந்து வரும் வெண்ணெய்த் திரள் போல்பவரும், காலனது வலிமை முழுவதையும் அழித்தவரும், வேதப் புலமையில் நான்முகன் போன்ற அந்தணர் வாழும் பொழில்கள் சூழ்ந்த திருப்புள்ளமங்கையில் விளங்குபவரும் ஆகிய இறைவனை நினைந்து வழிபடுபவர்களை வினைகள் அடையா.

கு-ரை : பால் உந்து உறுதிரள் - பாலைக் கடைதலால் விளைந்த வெண்ணெய். பிரமன் தான் போலுந்திறலவர் - பிரமனும் அவன் போலும் தன்மையினராகிய அந்தணரும். ஆலந்துறை கோயிலின் பெயர்; புள்ளமங்கை தலத்தின் பெயர். இதனை ''புளமங்கை ஆதி யவர் கோயில் திருவாலந்துறை தொழுமின்'' என்ற இப்பதிகம் பத்தாம்

Koviloor Digital Library

164. மலையான்மகள் கணவன்மலி
கடல்சூழ்தரு தண்மைப்
புலையாயின களைவானிடம்
பொழில்சூழ்புள மங்கைக்
கலையான்மலி மறையோரவர்
கருதித்தொழு தேத்த
அலையார்புனல் வருகாவிரி
யாலந்துறை யதுவே. 2

165. கறையார்மிட றுடையான்கமழ்
கொன்றைச்சடை முடிமேல்
பொறையார்தரு கங்கைப்புன
லுடையான்புள மங்கைச்

பாடலால் அறிக. வினையடையா என்றது ஆகாமியங்கள் அடையா என்பதாம்.

2. பொ-ரை : இமவான் மகளாகிய பார்வதி தேவியின் கணவனும் நீர் நிறைந்த கடல் சூழ்ந்த குளிர்ந்த இவ்வுலகில் உடலோடு பிறக்கும் பிறப்பைக் களைபவனும் ஆகிய சிவபெருமானது இடம், கலைகள் பலவற்றை அறிந்த அறிவால் நிறைந்த மறையவர்கள் மனத்தால் கருதிக் காயத்தால் தொழுது வாயால் ஏத்தி வழிபடுவதும், பொழில் சூழ்ந்ததும் அலைகளோடு கூடி நீர்பெருகி வரும் காவிரிக் கரையிலுள்ளதும் ஆகிய ஆலந்துறை என்னும் தலத்திலுள்ள புள்ள மங்கை என்னும் கோயிலாகும்.

கு-ரை : கடல்சூழ்தரு தண்மைப் புலையாயின களைவான் இடம் பொழில்சூழ் புளமங்கை - கடல் சூழ்தலால் வந்த பண்பாகிய குளிர்ச்சியோடு புலால் மணத்தைக் களைகின்ற பெரிய இடம் (மணந் தருகின்ற) பொழில் சூழ்ந்த புள்ளமங்கை என்க. களைவான் என ஒரு சொல்லாக்கி, நிற்பவனாகிய இறைவன் என்பாரும் உளர். புலை களைதல் பொழிலின் செயலேயன்றி இறைவன் செயலாகாமை ஓர்க.

3. பொ-ரை : விடக்கறை பொருந்திய கண்டத்தை உடைய வனும், மணம் கமழும் கொன்றை மலர் அணிந்த சடைமுடியின்மீது சுமையாக அமைந்த கங்கையாற்றை அணிந்தவனுமாய சிவபிரானுக்

Koviloor Digital Library

சிறையார்தரு களிவண்டறை
பொழில்சூழ்திரு வாலந்
துறையானவ னறையார்கழல்
தொழுமின்துதி செய்தே. 3

166. தணியார்மதி யரவின்னொடு
வைத்தானிட மொய்த்தெம்
பணியாயவ னடியார்தொழு
தேத்தும்புள மங்கை
மணியார்தரு கனகம்மவை
வயிரத்திர ளோடும்
அணியார்மண லணைகாவிரி
யாலந்துறை யதுவே. 4

குரியது, சிறகுகளுடன் கூடிய மதுவுண்ட வண்டுகள் ஒலிக்கும் பொழில்களால் சூழப்பட்ட ஆலந்துறையிலுள்ள புள்ளமங்கை என்னும் கோயிலாகும். அக்கோயிலுக்குச் சென்று அப்பெருமானது திருவடிகளைத் துதி செய்து தொழுவீராக.

கு-ரை : கறை - விடம். மிடறு - கழுத்து. பொறையார்தரு - சுமையாகப் பொருந்திய. நறை - மணம்.

4. பொ-ரை : தண்ணிய பிறைமதியைப் பாம்போடு முடிமிசை வைத்துள்ள சிவபெருமானது இடம், அடியவர்கள் எமது தொண்டு களுக்குரியவன் எனத் தொழுது ஏத்துவதும், மணிகளோடு கூடிய பொன்னை வயிரக்குவைகளோடும், அழகிய மணலோடும் கொணர்ந்து சேர்க்கும் காவிரியின் தென்கரையிலுள்ளதுமான ஆலந்துறையில் அமைந்த புள்ளமங்கையாகும்.

கு-ரை : தணி ஆர் மதி - குளிர்ந்தபிறை. இகரம் சாரியை. எம் பணி ஆயவன் - எமது தொண்டு விளங்குதற்கு இடமாயவன். எம் மைப் பணிகொள்ளும் தலைவனானவன் என்பாரும் உண்டு.

பொன்னும் மணியும் முதலாயின மணலில் அணையும் காவிரி என்றது ஓடும் பொன்னும் ஒக்கநோக்கும் இயல்பு காவிரிக்கு உண்டென்பதால் அடியாரியல்பு விளக்கியவாறு.

Koviloor Digital Library

167. மெய்த்தன்னுறும் வினைதீர்வகை
தொழுமின்செழு மலரின்
கொத்தின்னொடு சந்தாரகில்
கொணர்காவிரிக் கரைமேல்
பொத்தின்னிடை யாந்தைபல
பாடும்புள மங்கை
அத்தன்நமை யாள்வானிடம்
ஆலந்துறை யதுவே. 5

168. மன்னானவ னுலகிற்கொரு
மழையானவன் பிழையில்
பொன்னானவன் முதலானவன்
பொழில்சூழ்புள மங்கை
என்னானவ னிசையானவ
னிளஞாயிறின் சோதி
அன்னானவ னுறையும்மிடம்
ஆலந்துறை யதுவே. 6

5. பொ-ரை : உயிர் உடலை அடுத்தற்குக் காரணமான வினைகள் நீங்கும் வகையில் பெருமானை நீவிர் வணங்குவீர்களாக. செழுமையான மலர்க் கொத்துக்களை உடைய சந்தனம், அகில் முதலியவற்றைக் கொண்டு வரும் காவிரியாற்றின் கரைமேல் உள்ளதும் பொந்துகளில் ஆந்தைகள் பல தங்கிப் பாடுவதும் ஆகிய ஆலந்துறையில் அமைந்த புள்ளமங்கை என்னும் கோயிலை இடமாகக் கொண்டுள்ள தலைவனாகிய சிவபெருமான் நம்மை ஆள்வான்.

கு-ரை : மெய் - உண்மையாகவே, அல்லது உடலானது உயிரை அடுத்தற்குக் காரணமாகிய வினைதீரும்வகை என்றுமாம். தொழுதற்கேற்ற சாதனப் பொருள்களைத் தேடிச்செல்ல வேண்டாம். காவிரியே சந்தனம், பூங்கொத்து, அகில் முதலியவற்றைக் கொணர்ந்து தருகின்றது. அவற்றைக் கொண்டு நீவிர் தொழவேண்டும் என்பதுதான் கருத்து.

6. பொ-ரை : உலகிற்குத் தான் ஒருவனே மன்னனாய் விளங்குபவனும், மழையாய்ப் பயிர்களை விளைவிப்பவனும், குற்றமற்ற பொன்னானவனும், உயிர்களுக்கு வாழ்முதலாக உள்ளவனும்,

Koviloor Digital Library

169. முடியார்தரு சடைமேன்முளை
யிளவெண்மதி சூடிப்
பொடியாடிய திருமேனியர்
பொழில்சூழ்புள மங்கைக்
கடியார்மலர் புனல்கொண்டுதன்
கழலேதொழு தேத்தும்
அடியார்தமக் கினியானிடம்
ஆலந்துறை யதுவே. 7

170. இலங்கைமனன் முடிதோளிற
வெழிலார்திரு விரலால்
விலங்கல்லிடை யடர்த்தானிடம்
வேதம்பயின் றேத்திப்

எனக்குத் தலைவனாய் இசை வடிவாக விளங்குபவனும், இள ஞாயிற்றின் ஒளியைப் போன்ற ஒளியினனுமாகிய சிவபெருமான் உறையும் இடம், ஆலந்துறையிலுள்ள புள்ளமங்கையாகும்.

கு-ரை : உலகிற்கு ஒரு மன்னானவன் மழையானவன் எனக் கூட்டுக. பிழையில் பொன் - குற்றமற ஓடவிட்ட பொன்னாகிய சாம்பூநதம் முதலியன. என் ஆனவன் - எனக்குத் தலைவனானவன்.

7. பொ-ரை : தலைமேல் விளங்கும் சடைமிசை முளை போன்ற இளம்பிறையைச் சூடி வெள்ளிய திருநீறு அணிந்த திருமேனியனாய், மணம் கமழும் மலர்களையும் நீரையும் கொண்டு தன் திருவடிகளை வணங்கி ஏத்தும் அடியார்களுக்கு இனியனாய் விளங்கும் சிவ பெருமான் விரும்பி உறையும் இடம் பொழில் சூழ்ந்த ஆலந்துறையிலுள்ள புள்ளமங்கை என்னும் கோயிலாகும்.

கு-ரை : முளைஇளவெண்மதி - முளைவடிவான இளைய பிறை. பொடி - திருநீறு. திருமேனியர், இனியான் என ஒருமை பன்மை மயங்கி வந்தது, செய்யுளாதலின்.

8. பொ-ரை : இலங்கை மன்னனாகிய இராவணனின் தலைகளும் தோள்களும் நெரிய, எழுச்சி பொருந்திய அழகிய கால்விரலால் கயிலை மலையிடை அகப்படுத்தி அவனை அடர்த்த சிவபெருமானது

Koviloor Digital Library

புலன்கள்தமை வென்றார்புக
ழவர்வாழ்புள மங்கை
அலங்கல்மலி சடையானிடம்
ஆலந்துறை யதுவே. 8

171. செறியார்தரு வெள்ளைத்திரு
நீற்றின்றிரு முண்டப்
பொறியார்தரு புரிநூல்வரை
மார்பன்புள மங்கை
வெறியார்தரு கமலத்தயன்
மாலுந்தனை நாடி
அறியாவகை நின்றானிடம்
ஆலந்துறை யதுவே. 9

இடம், வேதங்களை முறையாகக் கற்றறிந்து ஓதித் துதித்தலோடு புலன்களை வென்ற புகழுடைய அந்தணர் வாழ்வதும் மாலை அணிந்த சடைமுடி உடைய சிவபிரானுக்கு இடமாயிருப்பதும் ஆகிய ஆலந்துறையிலுள்ள புள்ளமங்கையாகும்.

கு-ரை : மனன் - மன்னன். தொகுத்தல் விகாரம். எழில் - எழுச்சி. விலங்கலிடை - மலையின் அடியில். புலன்கள் தம்மை வென்றார் - புலன்களாகிய பொறிகளைத் தன்வயமாக்கவிடாமல் வென்ற முனிவர்கள். அலங்கல் - மாலை.

9. பொ-ரை : வெண்மையான திருநீறு மூன்று பட்டைகளாய்ச் செறிய உத்தம இலக்கணம் ஆகிய மூன்று வரி பொருந்திய, முப்புரிநூல் அணிந்த மலை போன்ற திண்ணிய மார்பினை உடையவனும் மணம் கமழும் தாமரை மலர்மேல் உறையும் நான்முகன், திருமால் ஆகியோர் தன்னைத் தேடி அறியாவகை ஓங்கி நின்றவனுமாகிய சிவபெருமானுக்கு உரிய இடம், ஆலந்துறையிலுள்ள புள்ள மங்கையாகும்.

கு-ரை : செறி ஆர்தரு - நெருங்குதல் பொருந்திய. திருமுண்டம் - அழகிய திரிபுண்டரம். பொறியார்தரு மார்பன் எனக் கூட்டுக. உத்தம விலக்கணம் பொருந்திய மார்பு. (*சிந்தாமணி 1462, 1706*) வெறி - மணம். அறியாவகை நின்றான் - (அவர்கள்) ஞானக் கண்ணினிற் சிந்தையில் நாடவேண்டிய பதியை ஊனக் கண்ணினிற் காணலுற்றார்களாதலின் அறியா வண்ணம் சோதிவடிவாய் நின்றவன்.

Koviloor Digital Library

172. நீதியறி யாதாரமண்
கையரொடு மண்டைப்
போதியவ ரோதும்முரை
கொள்ளார்புள மங்கை
ஆதியவர் கோயில்திரு
வாலந்துறை தொழுமின்
சாதிம்மிகு வானோர்தொழு
தன்மைபெற லாமே. 10

173. பொந்தின்னிடைத் தேனூறிய
பொழில்சூழ்புள மங்கை
அந்தண்புனல் வருகாவிரி
யாலந்துறை யானைக்
கந்தம்மலி கமழ்காழியுட்
கலைஞானசம் பந்தன்
சந்தம்மலி பாடல்சொலி
யாடத்தவ மாமே. 11

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை : நீதி அறியாத அமணராகிய கீழ் மக்களும் பிச்சைப் பாத்திரத்தைக் கையில் ஏந்திப் போதிமரத்தடியில் உறையும் புத்த மதத்தினரும் கூறும் உரைகளை மெய்ம்மை எனக் கொள்ளாது எல்லாப் பொருள்கட்கும் ஆதியானவனாகிய ஆலந்துறைப் புள்ளமங்கைக் கோயிலில் உறையும் இறைவனைத் தொழுமின்; பல்வேறு பிரிவின ராகிய தேவர்கள் தொழும் தன்மை பெறலாம்.

கு-ரை : அமண்கையர் - அமணர்களாகிய கீழ்மக்கள். மண்டைப் போதியவர் - மண்டையை (பிச்சைக் கலத்தை)க் கையிலு டைய புத்தர். சாதி மிகுவானவர் - முப்பத்துமூன்று கோடியாகச் சாதியினையுடைய தேவர்கள்.

11. பொ-ரை : மரப்பொந்துகளில் தேனீக்கள் சேகரித்த தேன் மிகுதியான அளவில் கிடைக்கும் பொழில்கள் சூழ்ந்ததும், அழகிய தண்மையான நீரைக் கொணர்ந்துதரும் காவிரிக்கரையில் உள்ளதும் ஆகிய ஆலந்துறைப் புள்ளமங்கை இறைவனை, மணம் நிறைந்து

Koviloor Digital Library

கமழும் காழிப் பதியில் தோன்றிய கலை நலம் உடைய ஞானசம்பந்தன் பாடிய சந்தம் நிறைந்த இத்திருப்பதிகப் பாடல்களை ஓதிப் பரவசமாய் ஆடத் தவம் கைகூடும்.

கு-ரை : பொந்து - மரப் பொந்துகள். இப்பதிகச் சந்தம், படிக்குங் காலத்தேயே பரவசமாய் ஆட வருந்தன்மையது என்பது குறித்தவாறு.

பேரூர்ப் புராணம்

தவந்த வென்பினைப் பெண்ணெனப் படைத்தும் சார்மழவன்
உவந்த பெண்ணுயி ரளித்துமொட் டாதெதிர் புத்தன்
நிவந்த சென்னியை யுருட்டியு முத்தொழில் நிறுவிப்
பவந்த டுத்துயிர்க் கருளுஞ்சொற் பனவனைப் பணிவாம்.

- கச்சியப்ப முனிவர்.

திருவானைக்காப் புராணம்

மழலை யின்னமு தூற்றெழு மாசைவள் ளத்துக்
குழலின் மென்மொழி யுமையவள் கொடுத்தபால் கமழப்
பழகு செந்தமிழ்ப் பாடலந் தேன்வடிந் தாடு
மழக னஞ்செவி யூட்டிய அறிஞனை யடுப்பாம்.

- கச்சியப்ப சுவாமிகள்.

சங்கற்ப நிராகரணம்

ஈசனரு ளாலெரியிட் டேடெடுத்து வாதுவென்ற
பூசுரனைப் பாதநினைப் பாம்.

-உமாபதி சிவாசாரியார்.

Koviloor Digital Library

17. திருஇடும்பாவனம்

பதிக வரலாறு:

சிவபெருமான் மிக விரும்பிய தலமாகிய 'திருக்கடிக் குளம்' என்னுந்தலத்தை வணங்கிப் பிள்ளையார் இடும்பா வனத்தை எய்தினார்கள். அங்கே எழுந்தருளிய சுவாமிகள் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் சற்குணநாதரை 'மனமார்தரு' என்னும் பதிகம்பாடி வணங்கினார்கள். இதில் இடும்பன் தலைநகரமாகிய கொடிமாடக் குன்றளூரையும் சேர்த்துக் குறிப்பிட்டிருத்தல் காண்க.

பண்: நட்டபாடை

பதிக எண்: 17

திருச்சிற்றம்பலம்

174. மனமார்தரு மடவாரொடு
மகிழ்மைந்தர்கள் மலர்தூய்த்
தனமார்தரு சங்கக்கடல்
வங்கத்திர ளுந்திச்
சினமார்தரு திறல்வாளெயிற்
றரக்கன்மிகு குன்றில்
இனமாதவ ரிறைவர்க்கிடம்
இடும்பாவன மிதுவே. 1

1. பொ-ரை : மனத்தால் விரும்பப் பெற்ற மனைவியரோடு மகிழ்ச்சிமிக்க இளைஞர்களால் மலர்தூவி வழிபட்டுச் செல்வம் பெறுதற்குரியதாய் விளங்குவதும், சங்குகளை உடைய கடலில் உள்ள கப்பல்களை அலைகள் உந்தி வந்து சேர்ப்பிப்பதும் ஆகிய இடும்பா வனம், சினம் மிக்க வலிய ஒளிபொருந்திய பற்களை உடைய இடும் பன் என்னும் அரக்கனுக்குரிய வளம்மிக்க குன்றளூர் என்னும் ஊரில் முனிவர் குழாங்களால் வணங்கப் பெறும் சிவபிரானுக்குரிய இடம் ஆகும்.

கு-ரை : மனம் ஆர்தரு மடவார் - மனம் பொருந்திய சிறு பெண்கள். குன்றில் - குன்றளூரில். இது இடும்பன் தலைநகரம், மத்தியி லுள்ள தனம் ஆர்தரு குன்றில், உந்தி மிகு குன்றில், எனத் தனித்தனிக்

Koviloor Digital Library

175. மலையார்தரு மடவாளொரு
பாகம்மகிழ் வெய்தி
நிலையார்தரு நிமலன்வலி
நிலவும்புக ழொளிசேர்
கலையார்தரு புலவோரவர்
காவன்மிகு குன்றில்
இலையார்தரு பொழில்சூழ்தரு
மிடும்பாவன மிதுவே. 2

176. சீலம்மிகு சித்தத்தவர்
சிந்தித்தெழு மெந்தை
ஞாலம்மிகு கடல்சூழ்தரு
முலகத்தவர் நலமார்

கூட்டுக. போககாமிகளாகிய காதலர்கள் அருச்சனைசெய்து அதற்குக் காரணமாகிய தனத்தை யடைகின்றனர். கடலில் அலைகள் இருப்ப தால் கப்பல்களை உந்தி மிகுகின்றன. அரக்கன் - இடும்பன். சினம் ஆர் தரு, திறல்வாள், எயிறு என்பன அரக்கனுக்குத் தனித்தனியே அடை மொழியுமாம். இனமாதவர் இறைவர் - கூட்டமாகிய முனிவர்களுக்கு இறைவர்; என்றது சிவபெருமானை.

2. பொ-ரை : இமவான் மகளாய் மலையிடைத் தோன்றி வளர்ந்த பார்வதி தேவியை ஒரு பாகமாகக் கொண்டு மகிழ்ந்து நிலை யாக வீற்றிருந்தருளும் குற்றமற்ற சிவபிரானது வென்றி விளங்கு வதும், புகழாகிய ஒளி மிக்க கலை வல்ல புலவர்கள் இடைவிடாது பயில்வதால் காவல்மிக்கு விளங்குவதுமான குன்றளூரை அடுத்துள்ள இலைகள் அடர்ந்த பொழில் சூழ்ந்த இடும்பாவனம் இதுவேயாகும்.

கு-ரை : மலையார் - மலையரசனாகிய இமவான். தரு - பெற்ற, மலை ஆர்தரு மடவாள் எனப்பிரித்து மலையிடத்து வசிக்கின்ற உமாதேவி என்பாரும் உளர். நிலையார்தரு நிமலன் - என்றும் எங்கும் நிற்றலையுடைய நித்தியப் பொருளாகிய இறைவன். ஒளிசேர் இடும்பாவனம், பொழில் சூழ்தரும் இடும்பாவனம் எனக் கூட்டுக. கலை ஆர்தரு புலவோர் - ஒளிமிகுந்த தேவர்கள்.

3. பொ-ரை : தவ ஒழுக்கத்தால் மேம்பட்ட முனிவர்களால் சிந்தித்து வணங்கப்பெறும் எம் தந்தையாகிய சிவபிரான் எழுந்தருளிய

Koviloor Digital Library

கோலம்மிகு மலர்மென்முலை
மடவார்மிகு குன்றில்
ஏலங்கமழ் பொழில்சூழ்தரும்
இடும்பாவன மிதுவே. 3

177. பொழிலார்தரு குலைவாழைக
ளெழிலார்திகழ் போழ்தில்
தொழிலான்மிகு தொண்டரவர்
தொழுதாடிய முன்றில்
குழலார்தரு மலர்மென்முலை
மடவார்மிகு குன்றில்
எழிலார்தரு மிறைவர்க்கிடம்
இடும்பாவன மிதுவே. 4

தலம், நிலப்பரப்பினும் மிக்க பரப்புடைய கடலால் சூழப்பட்ட இவ்வுலகச் சான்றோர்களும், நற்குணங்களும் அழகும் மலர்போலும் மென்மையான தனங்களும் உடைய பெண்களும் மிக்குள்ள குன்ற ளூரைச் சார்ந்த ஏல மணங்கமழும் பொழில் சூழ்ந்த இடும்பாவனம் எனப்படும் தலம் இதுவேயாகும்.

கு-ரை : சீலம் - காட்சிக்கெளியனாந் தன்மை. இயமம் முதலான தவ ஒழுக்கங்களும் ஆம். ஒழுக்கம் என்றும் ஆம். சிந்தித்தெழும் எந்தை என்றது, 'கொழுநற்றொழு தெழுவாள்' போல முனிவர்கள் சிந்தித்துக் கொண்டே எழுவர் என்பதாம். அன்றி ஒழுக்கம் மிக்க மனத்தை யுடையவர்களைத் திருவுள்ளத்தடைத்துத் திருவோலக்கம் கொண்டருளுகின்ற எந்தை. ஞாலம் மிகுகடல் - நிலத்தின் பரப்பைக் காட்டிலும் மிகுந்திருப்பதாகிய கடல். நிலப்பரப்புக் கால்பங்கும், நீர்ப்பரப்பு முக்கால்பங்கும் என்பது மரபாகலின். கோலம் - அழகு, நலமார் இடும்பாவனம் எனக்கூட்டுக. உலகத்தவர் நன்மையடைதற்கு (முத்தியின்பத்தை யடைதற்கு) இடமாகிய இடும்பாவனம்.

4. பொ-ரை : குலைகள் தள்ளிய வாழைகள் செழித்துள்ள பொழில்கள் சூழப் பெற்றதும், அழகு திகழும் காலை மாலைப் பொழுதுகளில் பணி செய்வதால் சிறப்பு மிகுந்து விளங்கும் தொண்டர்கள் தொழுது ஆடி மகிழும் முன்றிலை உடையதும் மலர் சூடிய கூந்தலை உடைய மென்முலை மடவார் சூழ்ந்துள்ளதுமான

Koviloor Digital Library

178. பந்தார்விர லுமையாளொரு
பங்காகங்கை முடிமேல்
செந்தாமரை மலர்மல்கிய
செழுநீர்வயற் கரைமேல்
கொந்தார்மலர் புன்னைமகிழ்
குரவங்கமழ் குன்றில்
எந்தாயென விருந்தானிடம்
இடும்பாவன மிதுவே. 5

குன்றளூரை அடுத்துள்ள இடும்பாவனம் அழகுக்கு அழகு செய்யும் இறைவர்க்குரிய இடமாகும்.

கு-ரை : முன்றில் இடும்பாவனம் இது எனக்கூட்டுக. சோலைகளில் விளங்குகின்ற குலைவாழைகள் அழகுமிகுகின்ற காலத்துத் தொண்டர்கள் தொழுது ஆடுகின்ற முன்றிலையுடைய குன்று எனவும், அத்தகைய குன்றில் இறைவர்க்கு இடம் இத்தகைய இடும்பாவனம் எனவும் கொண்டு கூட்டிப் பொருள் கொள்க. குலைவாழைகள் அழகோடுகூடி விளங்கும்போது மஞ்சள் வெயிற்படும் மாலைக் காலம்; அப்போது அடியார்கள் தொழுது ஆனந்த மேலீட்டால் ஆடுகின்றார்கள் என்பது. குழலார் தருமலர் மென்முலை மடவார் - குழலின் கண் பொருந்திய மலரையும் மெல்லிய முலையினையுமுடைய மடவார் என்கின்றது வேட்டுவ மகளிரை. எழில் - அழகு. எழுச்சி யுமாம்.

5. பொ-ரை : பந்தாடும் கை விரல்களை உடைய உமையவள் பங்கனே எனவும், கங்கை அணிந்த சடைமுடியோடு செந்தாமரை மலர்கள் நிறைந்த நீர் நிரம்பிய வளமான வயல்களின் கரைமேல் கொத்துக்களாக மலர்ந்த புன்னை, மகிழ், குரா ஆகியவற்றின் மணம் கமழ்கின்ற குன்றளூரில் எழுந்தருளிய எந்தாய் எனவும், போற்ற இருந்த இறைவனது இடம், இடும்பாவனம்.

கு-ரை : பந்தார் விரல் உமையாள் ஒரு பங்கா - பந்தணை மெல் விரலி எனவும், அம்மைக்கொரு நாமம் உண்மையைக் குறிப்பித்தவாறு. பங்காக என்பது பங்கா எனச் செயவென்னெச்சத்தீறு கெட்டது. பங்காகக் கரைமேல், குன்றில் இருந்தான் எனக்கூட்டுக. கங்கையை முடிமேற்கொண்டு என ஒரு சொல் வருவித்து முடிக்க. வயற்கரைமேல் புன்னை, மகிழ்குரவம், கமழ்குன்றில் என்றது இடும்பாவனத்தலம் மருதநிலமும் நெய்தல் நிலமும் தம்முள் மயங்கியிருந்தமைபுலனாம்.

Koviloor Digital Library

179. நெறிநீர்மையர் நீள்வானவர்
நினையுந்நினை வாகி
அறிநீர்மையி லெய்தும்மவர்க்
கறியும்மறி வருளிக்
குறிநீர்மையர் குணமார்தரு
மணமார்தரு குன்றில்
எறிநீர்வயல் புடைசூழ்தரு
மிடும்பாவன மிதுவே. 6

குன்று என்பது குன்றளூர் என்பதன் மரூஉ. எந்தாய் என - அனைத்துயிரும் எமது தாயே என்ன. எந்தை என்பதன் விளியுமாம். தாயும் தந்தையுமாக ஓர் உருவிலேயே நின்று அருள்வது இறைவற்குச் சிறப்பியல்பாகலின் எந்தாய் எனச் சொல் ஒன்றானே நயம்தோன்றக் கூறியவாறு. 'தோடுடைய செவியன்' என்றதற்கேற்ப எந்தாய் என இருந்தான் என ஆண்பால் முடிபேற்றவாறு.

6. பொ-ரை : தவ ஒழுக்கத்தால் சிறந்த முனிவர்கள், உயர்ந்த தேவர்கள் ஆகியோர் நினையும் நினைவுப் பொருளாகி, ஞானத்தால் தொழும் மேலான ஞானியர்கட்குத் தன்னை அறியும் அறிவை நல்கிச் சிவலிங்கம் முதலான குறிகளில் இருந்து அருள் புரிபவனாகிய சிவபெருமான் இடம், தூய சிந்தனையைத் தரும் மணம் கமழ்கின்ற குன்றளூரில் வரப்பை மோதும் நீர் நிரம்பிய வயல்கள் புடை சூழ்ந்து விளங்கும் இடும்பாவனமாகிய இத்தலமேயாகும்.

கு-ரை : நெறிநீர்மையர் - ஒழுக்கத்தின்கண் நிற்கும் இயல்பினையுடைய முனிவர்கள், முனிவர்க்கும் தேவர்க்கும் தியானப் பொருளாய் இருப்பார் என்பது குறித்தவாறு. இவர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் ஞானிகள், அவர்களை 'அறிநீர்மையினில் எய்தும் அவர்' எனக் குறித்தார்கள். அதாவது அறிவானும் அறியப்படும் பொருளும் அறிவுமாகிய மூன்றும் தனிநிலையற்று ஒன்றாயிருந்து அறியும் பரமஞானிகளுக்கு அறியும் அறிவருளி - சிவமாகிய தன்னையறியத் தக்க அறிவும் அருள, என்றது இறைவன் அறியுமாறு அறிந்தாலன்றி ஆன்மாக்கள் தாமாக அறிந்துகொள்ளும் ஆற்றல் இல்லாதன என்பது. ''உணருமா உணரே'' என்பதும் இப்பொருட்டு, குறிநீர்மையர் - அங்ஙனம் அவனருளே கண்ணாகக் காணும் குறிக்கண் நிற்கும் சிவஞானிகள். குணமார்தரும் - இறைவனுக்குள்ள ஐந்தொழில் ஆற்றுதல் ஒழிந்த ஏனைய குணங்களைப் பொருந்தவைக்கும்.

Koviloor Digital Library

180. நீறேறிய திருமேனியர்
நிலவும்முல கெல்லாம்
பாறேறிய படுவெண்டலை
கையிற்பலி வாங்காக்
கூறேறிய மடவாளொரு
பாகம்மகிழ் வெய்தி
ஏறேறிய விறைவர்க்கிடம்
இடும்பாவன மிதுவே. 7

181. தேரார்தரு திகழ்வாளெயிற்
றரக்கன்சிவன் மலையை
ஓராதெடுத் தார்த்தான்முடி
யொருபஃதவை நெரித்துக்
கூரார்தரு கொலைவாளொடு
குணநாமமுங் கொடுத்த
ஏரார்தரு மிறைவர்க்கிடம்
இடும்பாவன மிதுவே. 8

7. பொ-ரை : நீறணிந்த திருமேனியராய், விளங்கும் உலகெங் கணும் சென்று, பருந்து உண்ணவரும் தசையோடு கூடிய காய்ந்த பிரமகபாலத்தைக் கையில் ஏந்தி அன்பர்கள் இடும் உணவைப்பெற்று உமையம்மையைத் தன் மேனியின் ஒரு கூறாகிய இடப்பாகமாக ஏற்று மகிழ்ந்து விடைமீது வரும் சிவபெருமானுக்குரிய இடமாகிய இடும்பா வனம் இதுவேயாகும்.

கு-ரை : ஏறிய - மிகுந்த. பாறு - பருந்து. தலை - பிரமகபாலம். கூறு ஏறிய மடவாள் - தமது திருமேனிக்கண்ணேயே ஒரு பாதியா யமைந்த உமையாளை. ஒருபாகம் மகிழ்வெய்தி - தன்னின் வேறாக இடப்பாகத்து வைத்து மகிழ்ந்து, இதனால் சொற்பொருள் போல அம்மையோடு ஒன்றாய் இருக்குந் தன்மையும் சொல்லும் பொருளும் போல அம்மையை வேறாக வைத்து விரும்பும் தன்மையும் விளக்கிய வாறு. ஏறு - இடபம்.

8. பொ-ரை : வானவெளியில் தேர்மிசை ஏறிவந்த ஒளி பொருந் திய வாளையும் பற்களையும் உடைய அரக்கனாகிய இராவணன், சிவபிரான் எழுந்தருளிய கயிலை மலையின் சிறப்பை ஓராது, தன் தேர்

Koviloor Digital Library

182. பொருளார்தரு மறையோர்புகழ்
விருத்தர்பொலிமலிசீர்த்
தெருளார்தரு சிந்தையொடு
சந்தம்மலர்பலதூய்
மருளார்தரு மாயன்னயன்
காணார்மயலெய்த
இருளார்தரு கண்டர்க்கிடம்
இடும்பாவனமிதுவே. 9

தடைப்படுகிறது என்ற காரணத்திற்காக மலையைப் பெயர்த்துச் செருக்கால் ஆரவாரம் செய்ய, அவன் பத்துத் தலைமுடிகளையும் நெரித்தபின் அவன் வருந்திவேண்ட, கருணையோடு கூரிய கொலை வாள், பிற நன்மைகள், இராவணன் என்ற பெயர் ஆகியவற்றைக் கொடுத்தருளிய அழகனாகிய இறைவற்கு இடம் இடும்பாவனம்.

கு-ரை : தேர் ஆர்தரு - ஆகாயத்தின்கண்ணே அமர்ந்து வந்து. அரக்கன் - இராவணன். ஓராது - ஆராயாமல், அரக்கனாகிய ஆர்த்தானது முடி பத்தினையும் நெரித்து என இயைத்துப் பொருள் காண்க.

வாள் - சந்திரகாசம். குணநாமம் - அழுகைக் குணத்தால் வந்த பெயராகிய இராவணன் என்பது.

9. பொ-ரை : தருக்கு மிகுந்த மாயனும் அயனும் காணாது மயங்கப் பொருள் நிறைந்த வேதங்களைக் கற்றுணர்ந்த அந்தணர்களால் புகழ்ந்து போற்றப் பெறும் பழமையானவரும், புகழ்மிக்க அம்மறையோர்களால் தெளிந்த சிந்தையோடு பல்வகை நிறங்களுடன் கூடிய மலர்களைத் தூவி வழிபடப் பெறுபவரும் ஆகிய அருள் நிறைந்த கண்டத்தை உடைய சிவபிரானுக்குரிய இடமாக விளங்கும் இடும்பாவனம், இதுவேயாகும்.

கு-ரை : பொருளார் தரும் மறை - பொருள் நிறைந்த வேதம். புகழ் விருத்தர் - புகழால் பழையவர்கள். தெருள் - தெளிவு.

மருளார் தருமாயன் அயன் - தாமே தலை யென்னும் தருக்கு நிறைந்த அவரிருவரும். இருளார்தரு - இருளையொத்த. மலர்பல தூய் (தொழும்) இடம் இடும்பாவனம் என ஒருசொல் வருவித்து முடிக்க.

Koviloor Digital Library

183. தடுக்கையுட னிடுக்கித்தலை
பறித்துச்சமண் நடப்பார்
உடுக்கைபல துவர்க்கூறைகள்
உடம்பிட்டுழல் வாரும்
மடுக்கண்மலர் வயல்சேர்செந்நெல்
மலிநீர்மலர்க் கரைமேல்
இடுக்கண்பல களைவானிடம்
இடும்பாவன மிதுவே. 10

184. கொடியார்நெடு மாடக்குன்ற
ளூரிற்கரைக் கோல
இடியார்கட லடிவீழ்தரு
மிடும்பாவனத் திறையை
அடியாயுமந் தணர்காழியுள்
அணிஞானசம் பந்தன்
படியாற்சொன்ன பாடல்சொலப்
பறையும் வினை தானே. 11

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை : பனை ஓலையால் செய்த தடுக்கைத் தம் கையில் இடுக்கிக்கொண்டு தலையிலுள்ள உரோமங்களைப் பறித்து முண்டிதமாக நடக்கும் சமணரும், உடுத்துவதற்குரிய காவியுடைகளை அணிந்து திரியும் புத்தரும் அறிய இயலாதவனாய், துன்பம் நீக்கி இன்பம் அருளும் இறைவனது இடம், தாமரை செங்கழுநீர் போன்ற மலர்களை உடைய மடுக்களும், செந்நெல் வயல்களும் சூழ்ந்த, நீர்மலர் மிக்க நீர்நிலைகளின் கரைமேல் விளங்கும் இடும்பாவனம் இதுவேயாகும்.

கு-ரை : தடுக்கு - பனையோலை மணை. இடுக்கி - தமது அக்குளுள் அடக்கி. உடுக்கை பல துவர்க்கூறைகள் உடம்பு இட்டு - உடுத்துவனவாகப் பல காவியாடைகளை உடம்பில் பூண்டு. மடுக்கள் - ஆழமான நீர்நிலைகள். இடுக்கண் - துன்பம்.

11. பொ-ரை : கொடிகள் கட்டிய நீண்ட மாடங்களோடு கூடிய குன்றளூரில் கரைமீது இடியோசையோடு கூடிய அழகிய கடல் தன்

Koviloor Digital Library

அலைகளால் அடிவீழ்ந்து இறைஞ்சும் இடும்பாவனத்து இறைவனை, திருவடிகளையே சிந்தித்து ஆய்வு செய்யும் அந்தணர்கள் வாழும் காழிப் பதிக்கு அணியாய ஞானசம்பந்தன் முறையோடு அருளிய இப்பாடல்களை ஓத, வினைகள் நீங்கும். தானே - அசை.

கு-ரை : கொடியார் நெடுமாடக் குன்றளூர் - கொடிகள் கட்டிய நீண்ட மாடங்களோடு கூடிய குன்றளூரினது. குன்றளூர் என்பது இடும்பனது தலைநகரம். இதனையே சுவாமிகள் பெயர்க்குறையாக் குன்றில் என்று குறித்தவாறு, பல விடங்களில் காண்க. கோலக்கரை இடியார்கடல் அடிவீழ்தரும் இடும்பாவனம் - அழகிய கரையை இடித்தலைப் பொருந்திய கடல் அடிக்கண் மடங்கி வீழும் இடும்பாவனம். அடி ஆயும் அந்தணர் - திருவடியின்பத்தைச் சிந்திக்கும் அந்தணர்கள். படியாற் சொன்ன பாடல் - அவர் அவர் பக்குவத்திற் கேற்ப முறையால் சொன்ன பாடல். ஊதப்பறையும் மணல்போலப் பாடல் சொல்லப் பறையும் வினை என்பதாம்.

திருத்தொண்டர் புராணம்

திருஞானசம்பந்தர் புராணம்

கண்ணார்ந்த திருநுதலார் மகிழ்ந்தகடிக் குளமிறைஞ்சி
எண்ணார்ந்த திருவிடும்பா வனமேத்தி எழுந்தருளி
மண்ணார்ந்த பதிபிறவும் மகிழ்தரும்அன் பால்வணங்கிப்
பண்ணார்ந்த தமிழ்பாடிப் பரவியே செல்கின்றார்.

- சேக்கிழார்.

பூவாளூர்ப் புராணம்

மட்டுவிரி நறுந்துளப மாலாலும்
அயனாலு மறையி னாலும்
சுட்டியறி யாதபெருஞ் சுகப்பொருளை
யொருவிரலாற் சுட்டிக்காட்டி
மொட்டிளமென் முலையுமையாள் கொடுப்பவருந்
தியவமிழ்த முழுது மாங்கே
கொட்டியது போற்கவிதை கொழித்தகவு
ணியர்மணிதன் குலத்தாள் போற்றி.

- கச்சியப்ப சுவாமிகள்.

Koviloor Digital Library

18. திருநின்றியூர்

பதிக வரலாறு:

புள்ளிருக்குவேளூரை வணங்கிய புகலிவேந்தர் புகழான் நீண்ட நின்றியூருக்கு எழுந்தருளினார்கள். அங்கே எழுந்தருளி யுள்ள சிவபெருமான் திருவடிகளை ஆராக்காதலோடு வணங் கினார்கள். 'சூலம் படை' என்னும் பதிகத்தையருளிச் செய் தார்கள். அதில் நின்றியூர் நிமலரையல்லாது எனது உள்ளம் வேறொன்றையும் உணராது எனவும், பாதம் பணிவார் அச்சம் பழி பாவம் இலராவர் எனவும் குறிப்பிடுவது அன்பருள்ளத் திற்குப் பெருவிருந்து.

பண்: நட்டபாடை

பதிக எண்: 18

திருச்சிற்றம்பலம்

185. சூலம்படை சுண்ணப்பொடி
சாந்தஞ்சுடு நீறு
பாலம்மதி பவளச்சடை
முடிமேலது பண்டைக்
காலன்வலி காலின்னொடு
போக்கிக்கடி கமழும்
நீலம்மலர்ப் பொய்கைநின்றி
யூரின்னிலை யோர்க்கே. 1

1. பொ-ரை : முன்னொரு காலத்தில் காலனின் வலிமையைக் காலால் உதைத்துப் போக்கி, மணம் கமழும் நீல மலர்கள் மலர்ந்த பொய்கைகளை உடைய திருநின்றியூரில் நிலையாக எழுந்தருளியுள்ள இறைவற்குப் படைக்கலன் சூலம். சுண்ணப்பொடியும், சாந்தமும், திரு நீறே. பால் போலும் வெண்மையான பிறைமதி அவரது செந்நிறச் சடை முடியின் மேலது.

கு-ரை : காலன் வலிபோக்கி, நின்றியூரின் நிலையோர்க்கு, சூலம் படை, சுண்ணப்பொடி, சாந்தம், சுடுநீறு, மதி முடிமேலது என்க. நிலையோர் - நிலைபெறுதலையுடையார். சுண்ணப்பொடியும்

Koviloor Digital Library

186. அச்சம்மிலர் பாவம்மிலர்
கேடும்மில ரடியார்
நிச்சம்முறு நோயும்மிலர்
தாமுந்நின்றி யூரில்
நச்சம்மிட றுடையார்நறுங்
கொன்றைநயந் தாளும்
பச்சம்முடை யடிகள்திருப்
பாதம்பணி வாரே. 2

சாந்தமும் நீறேயாம், பால் அம்மதி - பால்போலும் அழகிய மதி, அம்தவிர்வழி வந்த சாரியையுமாம். பண்டைக்காலன் என்றது இப்போது சிவனடியார்மேல் செல்லும் முனைப்பற்று இருக்கின்ற நிலையை உளத்தடைத்து.

2. பொ-ரை : நஞ்சை மிடற்றிலே நிறுத்தித் தேவர்களைக் காத்தருளியவரும், மணம் கமழும் கொன்றை மலர்களை விரும்பிச் சூடியவரும், தம்மை வழிபடும் அடியவர்களை ஆட்கொண்டருளும் அன்புடையவரும் ஆகிய நின்றியூரில் விளங்கும் இறைவரது பாதம் பணிவார் அச்சம், பாவம், கேடு, நாள்தோறும் வரும் நோய் ஆகியன இலராவர்.

கு-ரை : நின்றியூரில் அடிகள் திருப்பாதம் பணியும் அடியார் அச்சமுதலாயின இலராவர் எனக் கூட்டுக. அச்சம் இலர் என்றது தமக்கு உறுதுணையாவார் ஒருவரைப் பெற்றமையால். இந்நிலையை அப்பர் சுவாமிகளும் 'சுண்ணவெண் சந்தனச்சாந்தும்' என்னும் பதிகத்து 'அஞ்சுவதுயாதொன்றுமில்லை அஞ்சவருவதுமில்லை' என்றமை காண்க.

பாவம் இலர் - பிராரத்த நுகர்ச்சிக் கண்ணும் இவர்கள் இது செய்தார் யானிது செய்தேன் என்னும் தருக்கதின்றிச் செய்வார்கள் ஆதலின் மேல்வினைக்கு வித்துமாகும் பாவம் இலர். கேடும் இலர் - அவ்வினை காரணமாக வரும் கேடும் இலராவர். நிச்சம் - நித்யம். நோய் - துன்பங்கள். நச்சம் - நஞ்சு. அம் சாரியை. நறுங்கொன்றை நயந்து - மணம் பொருந்திய கொன்றைப்பூவை விரும்பி, ஆளும் - அதனை விரும்பி அன்போடு சாத்தும் அடியார்களை ஆளுகின்ற. பச்சம் உடை அடிகள் - பட்சமுடைய பெருமான். பச்சம், பக்ஷம் என்பது எதுகை நோக்கித் திரிந்து நின்றது.

Koviloor Digital Library

187. பறையின்னொலி சங்கின்னொலி
பாங்காரவு மார
அறையும்மொலி யெங்கும்மவை
யறிவாரவர் தன்மை
நிறையும்புனல் சடைமேலுடை
யடிகள்நின்றி யூரில்
உறையும்மிறை யல்லதென
துள்ளம் உணராதே. 3

188. பூண்டவ்வரை மார்பிற்புரி
நூலன்விரி கொன்றை
ஈண்டவ்வத னோடும்மொரு
பாலம்மதி யதனைத்
தீண்டும்பொழில் சூழ்ந்ததிரு
நின்றியது தன்னில்
ஆண்டகழல் தொழலல்லது
அறியாரவ ரறிவே. 4

3. பொ-ரை : பறையடிக்கும் ஒலி, சங்கு முழங்கும் முழக்கம், பக்கங்களிலெல்லாம் மிகவும் ஒலிக்கும் ஏனைய ஒலிகள் ஆகிய வற்றில் இறைவனது நாத தத்துவத்தை அறிவோர் உணர்வர். நிறைந்த கங்கைப் புனலைச் சடைமிசை உடையவராய் நின்றியூரில் உறையும் அவ்விறைவரை அல்லது என் உள்ளம் பிறபொருள்களுள் ஒன் றனையும் உணராது.

கு-ரை : பாங்குஆரவும் - பக்கங்களில். மிகவும் - அறையும் ஒலி மிக அடித்தலால் உண்டாகும் (ஏனைய) ஒலிகள் . இவை தோற்கருவி ஒலிகள். அறிவார் அடிகள் இறை அவர் தன்மையல்லது உள்ளம் உணராது என முடிக்க. எங்கும் அவையறிவார் - எவரும் அவ் வொலியினை அறிபவர், என் உள்ளம் உணராது என்பது எங்குங் காண்பது அவனுருவே ஆதலின்.

4. பொ-ரை : அணிகலன்களைப் பூண்ட மலைபோன்ற மார்பில் முப்புரி நூலை அணிந்து, விரிந்த கொன்றை மலர் மாலையையும் அதனோடும் பொருந்தப் பால் போன்ற வெண்மையான திங்களையும்

Koviloor Digital Library

189. குழலின்னிசை வண்டின்னிசை
கண்டுகுயில் கூவும்
நிழலின்னெழில் தாழ்ந்தபொழில்
சூழ்ந்தநின்றி யூரில்
அழலின்வல னங்கையது
வேந்தியன லாடும்
கழலின்னொலி யாடும்புரி
கடவுள்களை கண்ணே. 5

சூடி, வானத்தைத் தீண்டும் பொழில்கள் சூழ்ந்த திருநின்றியூரில் எழுந்தருளி, நம்மை ஆண்டருளிய அவ்விறைவன் திருவடிகளைத் தொழுதல் அல்லது, அவன் இயல்புகளை அடியவர் எவரும் அறியார்.

கு-ரை : பூண்டவரை மார்பு - அணிகளைப்பூண்ட மலை போலத் திண்ணிய மார்பு. பூண்டவ்வரை - விரித்தல் விகாரம்.

ஈண்ட - செறிய. கொன்றை ஈண்ட மதி அதனைத் தீண்டும் பொழில் சூழ்ந்த திருநின்றி எனக் கூட்டுக. திருவடியைத் தொழுதா லல்லது அவர் அறிவான் அறியார் என ஆன்மாக்கள் அருளே கண்ணாகக் காணும் ஆற்றல் விளக்கியவாறு.

5. பொ-ரை : குழலிசை வண்டிசை ஆகியவற்றைக் கேட்டுக் குயில்கள் கூவுவதும், நிழலின் அழகு தங்கியதுமாகிய பொழில்களால் சூழப்பட்ட நின்றியூரிடத்து அழலை வலத் திருக்கரத்தில் ஏந்தி அனலிடை நின்று கழல்களின் ஒலிகள் கேட்குமாறு ஆடும் இறைவன் நமக்குக் களைகண் ஆவான்.

கு-ரை : பாடுவாரைப் பார்த்து மற்றவர்க்கும் பாடத் தோன்றுவதுபோலக் குழலிசையும் வண்டிசையும் கேட்டுக் குயில் கூவுகின்றன. நிழலின் எழில் தாழ்ந்த பொழில் - ஒளியும் நிழலும் விரவித் தோன்றும் நிலை சித்திரப்பூம்படாம் விரித்தது போலுமாகலின் நிழலின் எழில் தாழ்ந்த பொழில் என்பர்.

அழலின் வலன் - வலமாகச் சுற்றியெரியும் மழு. ஆடும்புரி கடவுள் - ஆடுகின்ற விரும்பத்தக்க கடவுள். களைகண் - நமக்கு ஆதாரம்.

Koviloor Digital Library

190. மூரன்முறு வல்வெண்ணகை
யுடையாளொரு பாகம்
சாரன்மதி யதனோடுடன்
சலவஞ்சடை வைத்த
வீரன்மலி யழகார்பொழில்
மிடையுந்திரு நின்றி
யூரன்கழ லல்லாதென
துள்ளம்முண ராதே. 6

191. பற்றியொரு தலைகையினி
லேந்திப்பலி தேரும்
பெற்றியது வாகித்திரி
தேவர்பெரு மானார்
சுற்றியொரு வேங்கையத
ளோடும்பிறை சூடும்
நெற்றியொரு கண்ணார்நின்றி
யூரின்னிலை யாரே. 7

6. பொ-ரை : புன்முறுவலைத் தரும் வெண்மையான பற்களை உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு, சடைமுடியில் சார்ந்துள்ள பிறைமதியோடு கங்கையை வைத்துள்ள வீரனும் அழகு மலிந்த பொழில்கள் செறிந்த திருநின்றியூரில் எழுந்தருளியவனு மாகிய சிவபிரான் திருவடிகளை அல்லாது எனது உள்ளம் வேறு ஒன்றையும் உணராது.

கு-ரை : மூரல் முறுவல் - மிகச் சிறிய புன்சிரிப்பு, சலவம் - கங்கை. கழலைப்பற்றிய உள்ளத்திற்கு, வேறொன்றையும் உணர முடியாமையானும் உணர்ந்து ஆகவேண்டுவது இன்மையானும் உள் ளம் உணராது என்றார்.

7. பொ-ரை : பிரமனது தலைகளில் ஒன்றைப் பறித்து அதனைக் கையினில் ஏந்திப் பலிகேட்கும் இயல்பினராய்த் திரிகின்ற தேவர் தலை வரும் புலித்தோலை இடையில் சுற்றியிருப்பதோடு முடியில் பிறை மதியைச் சூடியவரும், நெற்றியில் ஒரு கண்ணை உடையவரும் ஆகிய பெருமானார் திருநின்றியூரின்கண் நிலையாக எழுந்தருளியுள்ளார்.

Koviloor Digital Library

* * * * * * * * * 8

192. நல்லம்மலர் மேலானொடு
ஞாலம்மது வுண்டான்
அல்லரென வாவரென
நின்றும்மறி வரிய
நெல்லின்பொழில் சூழ்ந்தநின்றி
யூரின்னிலை யாரெம்
செல்வரடி யல்லாதென
சிந்தையுண ராதே. 9

193. நெறியில்வரு பேராவகை
நினையாநினை வொன்றை
அறிவில்சமண் ஆதருரை
கேட்டும்மய ராதே

கு-ரை : தலை கையினில் பற்றி ஏந்தித் தேரும் பெற்றியது வாகியே திரிகின்ற தேவர் பெருமானார் என இயைக்க. பலி பெற்றியது வாகி எனவே அப்பெற்றி அவர்க்கு இயல்பன்மையும், தாருகாவனத்து முனிவர்கள்பால் வைத்த தடையிலாக் கருணையே காரணம் என்பதும் வெளிப்படை, சுற்றி - அரையைச் சுற்றி. வேங்கை - புலித்தோல்.

8. * * * * * * * * * *

9. பொ-ரை : நல்ல தாமரை மலர்மேல் உறையும் நான்முகனோடு உலகைத் தன் வயிற்றகத்து அடக்கிக் காட்டிய திருமாலும், சிவபிரானே முழுமுதற் பொருள் ஆவர் எனவும் அல்லர் எனவும் கூறிக்கொண்டு தேடிக் காணுதற்கரியவராய் நின்றவரும் நெல்வயல்களால் சூழப்பட்ட நின்றியூரில் நிலையாக எழுந்தருளிய எம் செல்வருமாகிய சிவபிரான் திருவடிகளை அல்லது என் சிந்தை வேறொன்றையும் உணராது.

கு-ரை : நல்ல மலர் நல்லம்மலராயிற்று. மலர்மேலான்பிரமன். ஞாலமது உண்டான் திருமால். அல்லர் என ஆவர் என தலைவர் அல்லர் எனவும் தலைவர் ஆவர் எனவும் தாமே தருக்கி நின்று.

10. பொ-ரை : சமய நெறியில் பயில்வதால் பேராமலும் மறவாமலும் நினைக்கும் முழுமுதற்பொருளை அறியும் அறிவற்ற

Koviloor Digital Library

நெறியில்லவர் குறிகள்நினை
யாதேநின்றி யூரில்
மறியேந்திய கையானடி
வாழ்த்தும்மது வாழ்த்தே. 10

194. குன்றம்மது வெடுத்தானுடல்
தோளுந்நெரி வாக,
நின்றங்கொரு விரலாலுற
வைத்தானின்றி யூரை
நன்றார்தரு புகலித்தமிழ்
ஞானம்மிகு பந்தன்
குன்றாத்தமிழ் சொல்லக்குறை
வின்றிநிறை புகழே. 11

திருச்சிற்றம்பலம்

சமணர்களாகிய நெறியற்ற கீழ்மக்களின் உரைகளைக் கேட்டு மயங்காமலும், தமக்கென்று உண்மை நெறியல்லாத புறச் சமயிகளின் அடையாளங்களைக் கருதாமலும் நின்றியூரில் மான் ஏந்திய கையனாய் விளங்கும் இறைவன் திருவடிகளை வாழ்த்துவதே வாழ்த்தாகும்.

கு-ரை : நெறியில் வரும் - தொன்றுதொட்டுக் குரு காட்டிய நெறியினின்று பயில்வதால் வருகின்ற. பேராவகை நினையா நினை வொன்றை அறிவில் சமண் ஆதர் - பேராதே மறவாதே தன்மயமாய் இருந்து நினைக்கப்படும் ஒருபொருளை அறியும் அறிவு அற்ற சமணர் களாகிய கீழ்மக்கள். மயராது - மயங்காது. நெறியில்லவர் - தமக் கென்று உண்மை நெறியில்லாதவர்களாகிய புறச்சமயிகள். குறிகள் - அடையாளங்கள். மறி - மான்.

11. பொ-ரை : கயிலைமலையை எடுத்த இராவணனின் உடல் தோள் ஆகியன நெரியத் தன் கால்விரல் ஒன்றால் ஊன்றியவனது நின்றியூர் மீது, நன்மைகளையே செய்யும் புகலிப் பதியில் தோன்றிய தமிழ் ஞானசம்பந்தன் உரைத்த திருவருள் நலம் குன்றாத இத் திருப்பதிகப் பாடல்களை உரைப்பதனால் குறைவின்றிப் புகழ் நிறையும்.

Koviloor Digital Library

கு-ரை : உற - பொருந்த. ஞானம்மிகுபந்தன் - ஞானசம்பந்தன். இச்சொல் ஞானசம்பந்தன் என்பதற்குப் பொருள் காட்டியது போலும். குன்றாத் தமிழ் - எஞ்ஞான்றும் திருவருள் குறையாத தமிழ்.

திருப்பாதிரிப் புலியூர்ப் புராணம்

தாதுநிலை யொன்றேழா மயிலையினிற்
பாணினியுஞ் சமழ்ப்ப வாக்கி
யேதுநுத லுபமான வளவெவையும்
பிரத்தியக்கத் தெய்தக் காட்டி
யோதுமுறை வேதமுமோ தாதுணர்ந்தே
முத்தியுமீங் குதவி யாண்ட
நாதனெழிற் பூந்தராய்க் கவுணியநா
யகன்பதங்கள் நயந்து வாழ்வாம்.

- மு. சாமிநாதய்யர்.

ஆதிபுரி புராணம்

கும்பந்தன் னிடத்துதித்த முனிவரன்செந்
தமிழ்நாட்டிற் குண்டர் மாயை
கம்பந்தம் பின்செய்து கலதைதனின்
மயங்குகவு ரியன்மே லுற்ற
வெம்பந்த மிகுகூனும் வெப்பினொடு
நீக்கியொளிர் வெண்ணீ றீந்த
சம்பந்தப் பெருமான்தன் சரணார
விந்தமலர் தலைமேற் கொள்வாம்.

- சுப்புராய செட்டியார்.

Koviloor Digital Library

19. திருக்கழுமலம்

திருவிராகம்
பண்: நட்டபாடை

பதிக எண்: 19

திருச்சிற்றம்பலம்

195. பிறையணி படர்சடை முடியிடை
பெருகிய புனலுடை யவனிறை
இறையணி வளையிணை முலையவள்
இணைவன தெழிலுடை யிடவகை
கறையணி பொழினிறை வயலணி
கழுமல மமர்கன லுருவினன்
நறையணி மலர்நறு விரைபுல்கு
நலமலி கழல்தொழன் மருவுமே. 1

196. பிணிபடு கடல்பிற விகளறல்
எளிதுள ததுபெரு கியதிரை
அணிபடு கழுமல மினிதமர்
அனலுரு வினனவிர் சடைமிசை

1. பொ-ரை : பிறை அணிந்த விரிந்த சடைமுடியின்கண் பெருகிவந்த கங்கையை உடைய இறைவனும், முன்கையில் அழகிய வளையலை அணிந்த உமையம்மையின் இரண்டு தனபாரங்களோடு இணைபவனும், அழகிய இடவகைகளில் ஒன்றான நிழல்மிக்க பொழில்கள் நிறைந்ததும் நெல் வயல்கள் அணி செய்வதுமாகிய திருக்கழுமலத்தில் எழுந்தருளியுள்ள அழல் போன்ற சிவந்த மேனியனுமாகிய சிவபிரானின் தேன்நிறைந்த மலர்களின் நறுமணம் செறிந்த அழகிய திருவடிகளைத் தொழுதல் செய்மின்கள்.

கு-ரை : இறை - முன் கை. இணை முலையவள் இணைவனது- பரஞானம் அபரஞானம் என்ற இரண்டு முலைகளையுடைய உமாதேவியோடு இணைபவனாகிய சிவனது. கறையணிபொழில் - நிழல் மிக்க பொழில். நறையணிமலர் - தேனோடுகூடிய அழகிய மலர். உலகீர்! இடமாகிய கழுமலம் அமர் கனல் உருவினனது கழல் தொழுதலை மருவும் எனக்கூட்டுக. மருவும் - பொருந்துங்கள்.

2. பொ-ரை : இடைவிடாமல் நம்மைப் பிணிக்கும் கடல் போன்ற

Koviloor Digital Library

தணிபடு கதிர்வள ரிளமதி
புனைவனை யுமைதலை வனைநிற
மணிபடு கறைமிட றனைநலம்
மலிகழ லிணைதொழன் மருவுமே. 2

197. வரியுறு புலியத ளுடையினன்
வளர்பிறை யொளிகிளர் கதிர்பொதி
விரியுறு சடைவிரை புரைபொழில்
விழவொலி மலிகழு மலமமர்
எரியுறு நிறவிறை வனதடி
யிரவொடு பகல்பர வுவர்தம
தெரியுறு வினைசெறி கதிர்முனை
யிருள்கெட நனிநினை வெய்துமதே. 3

பிறவிகள் நீங்குதல் எளிதாகும். அப்பிறவிக்கடல் மிகப் பெரிதாகிய துன்ப அலைகளை உடையது. ஆதலின் அழகிய கழுமலத்துள் இனிதாக அமர்கின்ற அழலுருவினனும் விரிந்த சடைமீது குளிர்ந்த கிரணங்களை உடைய பிறைமதியைச் சூடியவனும், உமையம்மையின் மணாளனும் , நீலமணிபோலும் நிறத்தினை உடைய கறைக் கண்டனும் ஆகிய சிவபிரானின் நலம் நிறைந்த திருவடிகளைத் தொழுதல் செய்மின்.

கு-ரை : பிணிபடுகடல் பிறவிகள் - ஆதி ஆன்மிகம் முதலிய பிணிகளோடு தொடக்குண்ட கடல் போன்ற பிறவிகள். தன்னகப் பட்டாரை மீளவிடாதே மேலும் மேலும் பிணிக்கின்ற பிறவிக்கடல் என்றுமாம். அறல் - நீங்குதல். அது பெருகிய திரை உளது - அப் பிறவிக்கடல் மிகப் பெருகுகின்ற அலைகளையுடையது. அனல் உருவினனாகிய மதிபுனைவனை, உமைதலைவனை, கறைமிடறனை, கழலிணை தொழல் மருவும் எனக் கூட்டுக. புனைவன் - சூடுபவன். நிறமணி படும் கறை மிடறன் - ஒளிபொருந்திய நீலமணிபோலும் விடம்பொருந்திய கழுத்தினையுடையவன். நலம் - வீட்டின்பம்.

3. பொ-ரை : கோடுகள் பொருந்திய புலியின் தோலை ஆடை யாக உடுத்தவனாய், ஒளி மிக்குத் தோன்றும் கிரணங்களையுடைய வளர்பிறையை அணிந்த சடையை உடையவனாய், மணம் பொருந் திய பொழில்கள் சூழ்ந்ததும் திருவிழாக்களின் ஒலி நிறைந்ததும் ஆகிய

Koviloor Digital Library

198. வினைகெட மனநினை வதுமுடி
கெனில்நனி தொழுதெழு குலமதி
புனைகொடியிடைபொருள் தருபடு
களிறின துரிபுதை யுடலினன்
மனைகுட வயிறுடை யனசில
வருகுறள் படையுடை யவன்மலி
கனைகட லடைகழு மலமமர்
கதிர்மதி யினனதிர் கழல்களே. 4

கழுமலத்துள் அழல் வண்ணனாய் விளங்கும் இறைவன் திருவடிகளை, இரவும் பகலும் பரவுகின்றவர்களின் வருத்துகின்ற வினைகள் மிக்க ஒளியை உடைய ஞாயிற்றின் முன் இருள் போலக் கெட்டொழியும். ஆதலால், அப்பெருமான் திருவடிகளை நன்றாக நினையுங்கள்.

கு-ரை : வரியுறுபுரி அதள் - கோடுகள் பொருந்திய புலித்தோல். வளர்பிறையையும் கதிரையும் பொதிந்த விரியுறுசடையையுடைய இறைவன், கழுமலம் அமர் இறைவன் எனத் தனித் தனிக் கூட்டுக எரியுறு நிற இறைவன் - தீவண்ணன். பரவுவர் தமது நினைவெய்தும் எனக்கூட்டுக. எரியுறுவினை - வருத்துகின்ற நல்வினை தீவினைகள். கதிர்முனை இருள் - ஒளிப்பொருளாகிய சூரியனையும் வெறுத் தோட்டுகின்ற இருள் என்றது ஆணவமலம் என்றவாறு. நனி நினை வெய்தும் - தயிலதாரை போல இடைவிடாது இறைவன் நினைப் பெய்தும்.

4. பொ-ரை : உயர்ந்த பிறை மதி, கொடிபோன்ற இடையை யுடைய கங்கை, மந்திரப்பொருளால் உண்டாக்கப்பட்டுத் தோன்றிய யானையின் தோல் இவற்றை உடைய உடலினனும், வீட்டுக் குடம் போலும் வயிற்றினை உடைய பூதங்கள் சிலவற்றின் படையை உடையவனும் , ஆரவாரம் நிறைந்த கடற்கரையை அடுத்த கழுமலத்துள் ஞாயிறு திங்கள் ஆகியவற்றைக் கண்களாகக் கொண்டு அமர்ந்தவனுமாகிய சிவபெருமானின் ஒலிக்கும் கழற் சேவடிகளை, வினைகள் கெடவும் மனத்தில் நினைவது முடியவும் வேண்டின் நன்கு தொழுதெழுக.

கு-ரை : குலமதிபுனை - உயர்ந்த பிறைமதியை அணிந்த கொடியிடை - சுற்றிக் கொண்டிருக்கின்ற காட்டுக்கொடிகளினிடையே.

Koviloor Digital Library

199. தலைமதி புனல்விட வரவிவை
தலைமைய தொருசடை யிடையுடன்
நிலைமரு வவொரிட மருளின
னிழன்மழு வினொடழல் கணையினன்
மலைமரு வியசிலை தனின்மதி
லெரியுண மனமரு வினனல
கலைமரு வியபுற வணிதரு
கழுமல மினிதமர் தலைவனே. 5

பொருள்தரு படுகளிறினது - பல பொருள்களைக் கொண்டு வருகின்ற இறந்த யானையினது. உரி - தோல். இவருடைய மேனியின் செவ்வொளியைக் களிற்றின் கருந்தோல் புதைத்தது என்பதாம். மனைகுட வயிறு உடையன குறள் படை - வீட்டுக்குடம்போன்ற வயிறு உடையனவாகிய பூதப்படைகள். கதிர் மதியினன் - சூரியனையும் சந்திரனையும் தமது திருக்கண்களாகப் படைத்தவன். உடலினன், உடையவன், மதியினன், கழல்கள். வினைகெட மனநினைவது முடிகெனின், நனிதொழுது எழு எனக்கூட்டுக. மனநினைவிற்கு எல்லாம் காரணமாகிய வினைகள் கெடவும், மனம் நினைந்தது நிறைவேறவும், விரும்பின், கழல்களைத்தொழுதெழு என்று நெஞ்சை நோக்கி அறிவித்தவாறு. முடிக எனின் என்பது முடிகெனின் எனத் தொகுத்தல் விகாரம் பெற்றது. முடியுமாயின் எனப் பொருள் காண்பதும் உண்டு. பொருந்துமேல் கொள்க.

5. பொ-ரை : நல்ல கலைமான்கள் பொருந்திய சிறுகாடுகள் புறத்தே அழகு பெறச் சூழ்ந்துள்ள கழுமலத்தில் இனிதாக எழுந்தருளிய இறைவன், ஒரு நாட்பிறை, கங்கை, நஞ்சு பொருந்திய பாம்பு ஆகியவற்றுக்குத் தன் தலைமையான சடைக் காட்டின் நடுவில் ஒன்றாக இருக்குமாறு இடம் அருளியவன். ஒளி பொருந்திய மழுவோடு அழல் வடிவான அம்பினை மேருமலையாகிய வில்லில் பூட்டி எய்தலால் திரிபுரங்கள் எரியுண்ணுமாறு மனத்தால் சிந்தித்தவன்.

கு-ரை : இடமருளினன், கணையினன், மருவினன் தலைவன் எனப்பொருந்த முடிக்க, தலைமதி - ஒருநாட்பிறை. தலைமையது ஒருசடைஇடை - தலைமையதாகிய சடைக்காட்டின் நடுவில். பகைபட்டபொருளாகிய மதி அரவு இவைகளைப் பகை நீங்கி வாழ ஓரிடத்து அருளினன் என்பது குறித்தவாறு. நிழல் மழு - ஒளிவிடுகின்ற மழு. மலை மருவிய சிலைதனில் - மேருமலையாகிய வில்லில்.

Koviloor Digital Library

200. வரைபொரு திழியரு விகள்பல
பருகொரு கடல்வரி மணலிடை
கரைபொரு திரையொலி கெழுமிய
கழுமல மமர்கன லுருவினன்
அரைபொரு புலியத ளுடையினன்
அடியிணை தொழவரு வினையெனும்
உரைபொடி படவுறு துயர்கெட
வுயருல கெய்தலொரு தலைமையே. 6

201. முதிருறி கதிர்வள ரிளமதி
சடையனை நறநிறை தலைதனில்
உதிருறு மயிர்பிணை தவிர்தசை
யுடைபுலி யதளிடை யிருள்கடி

மதில் - முப்புரங்கள். மனம் மருவினன் - மனம் பொருந்தினன். நலகலை மருவிய புறவு - நல்லகலைமான்கள் பொருந்திய சிறுகாடு. புறவம் என்ற தலப்பெயர்க் காரணம் புலப்படும்.

6. பொ-ரை : மலைகளைப் பொருது இழிகின்ற அருவிகள் பலவற்றைப் பருகுகின்ற பெரிய கடலினை அடுத்துள்ள வரிகளாக அமைந்த மணற் பரப்பில் அமைந்ததும், கரையைப் பொரும் கடல் அலைகளின் ஒசை எப்போதும் கேட்கின்றதுமாகிய கழுமலத்துள் எழுந்தருளியுள்ளவனும், கனல் போலும் சிவந்த திருமேனியனும், இடையிலே கட்டிய புலித்தோலை உடையவனுமாகிய சிவபிரானின் இணை அடிகளைத் தொழின், போக்குதற்கு அரியனவாகிய வினைகள் என்னும் வார்த்தையும் பொடிபட, மிக்க துயர்கள் நீங்க உயர்ந்த உலகமாகிய வீட்டுலகத்தைப் பெறுதல் நிச்சயமாகும்.

கு-ரை : கழுமலத்தில் எழுந்தருளியுள்ள·தீவண்ணப் பெருமானின் திருவடியைத் தொழ, வினை யென்னும் சொல்லும் பொடி பட உயர்ந்த உலகத்தை யடைதல் துணிபு என்கின்றது. அருவிகள் பல பருகு ஒருகடல் - பல அருவிகளைப் பருகுகின்ற பெரியகடல். திரை ஒலி கெழுமிய கழுமலம் - அலையோசையோடு எப்பொழுதும் கூடி யிருக்கிற சீகாழி. உரையும் பொடிபடவே அதன் பொருளாகிய வினைபொடிபடுதல் சொல்லாமலேயமையும் என்பதாம்.

7. பொ-ரை : மலர்கள் சூடுவதால் தேன் நிறைந்துள்ள திருமுடியில் உலகிற் பயிர்களை முதிர்விக்கும் கிரணங்கள் வளர்கின்ற

Koviloor Digital Library

கதிருறு சுடரொளி கெழுமிய
கழுமல மமர்மழு மலிபடை
அதிருறு கழலடி களதடி
தொழுமறி வலதறி வறியமே. 7

202. கடலென நிறநெடு முடியவன்
அடுதிறல் தெறவடி சரணென
அடனிறை படையரு ளியபுகழ்
அரவரை யினனணி கிளர்பிறை
விடநிறை மிடறுடை யவன்விரி
சடையவன் விடையுடை யவனுமை
உடனுறை பதிகள்தன் மறுகுடை
யுயர்கழு மலவிய னகரதே. 8

மதியைச் சூடிய சடையை உடையவனாய், உதிரத்தக்க மயிர் பிணைந்து தசை தவிர்ந்துள்ள புலித்தோலை உடுத்த இடையை உடையவனாய், இருளை நீக்கும் கதிரவனின் சுடரொளி பொருந்திய மழுவாகிய படையை ஏந்திக் கழுமலத்துள் அமர்கின்ற பெருமானின் கழல்கள் அணிந்த திருவடிகளைத் தொழும் அறிவல்லது பிறவற்றை அறியும் அறிவை அறியோம்.

கு-ரை : நற நிறை தலைதனில் - தேனிறைந்த திருமுடியில். முதிர் உறுகதிர் வளர் இளமதி - முதிர்ச்சியடையும் கதிர்கள் வளரும் இளைய ஒருகலைப்பிறைச்சடையை யுடையவனை; உதிர் உறு மயிர்பிணை - உதிரத்தக்க மயிர்கள் உதிராதே பிணைந்திருக்கும், தவிர் தசையுடை புலியதள் - கழன்ற தசையையுடைய புலித்தோலை உடுத்த. இடை - இடையினை யுடையவனை. இடை என்பது உடையானைக் காட்டி நின்றது. படையையும் கழலையும் உடைய அடிகள். அடிகளின் திருவடியைத்தொழும் அறிவல்லது பிறவற்றை யறியோம் என்று உறைத்த திருத்தொண்டைக் கூறியருளியவாறு.

8. பொ-ரை : கடல் போன்ற கரிய நிறத்தினனும், நீண்ட முடியை அணிந்தவனும் ஆகிய இராவணனின் வலிமை கெடுமாறு செய்து பின் அவன் திருவடிகளே சரண் என வேண்ட அவனுக்கு வலிமை மிக்க வாட்படை அருளிய புகழுடையவனும், பாம்பை இடையில் கட்டியவனும், அழகுமிக்க பிறையை அணிந்தவனும், விடம் தங்கிய கண்டத்தை உடையவனும், விரித்த சடையை உடையவனும், விடை

Koviloor Digital Library

203. கொழுமல ருறைபதி யுடையவன்
நெடியவ னெனவிவர் களுமவன்
விழுமையை யளவறி கிலரிறை
விரைபுணர் பொழிலணி விழவமர்
கழுமல மமர்கன லுருவினன்
அடியிணை தொழுமவ ரருவினை
எழுமையுமிலநில வகைதனில்
எளிதிமை யவர்விய னுலகமே. 9

ஊர்தியனும் ஆகிய பெருமான் உமையம்மையோடு உறையும் பதி, கடல் அலைகளையுடைய உயர்ந்த கழுமலம் எனப்படும் பெரிய நகராகும்.

கு-ரை : கடல் என நிறநெடு முடியவன் - கடலை ஒத்த நிறத்தையுடைய நீண்ட கிரீடத்தை யணிந்தவனாகிய இராவணன். அடுதிறல் தெற - பிறரை வருத்தும் வலிமை தொலைய என்றுமாம். அடி சரண் என - திருவடியே அடைக்கலமாவது என்று கூற. அடல் நிறை படை - கொலை நிறைந்த படையாகிய சந்திரகாசம் என்னும் வாள். அரவு அரையினன் - பாம்பை இடுப்பிலணிந்தவன். கடல் மறுகு உடை - கடலுங் கலங்குதலை உடையகாலத்து.

9. பொ-ரை : செழுமையான தாமரை மலரை உறையும் இடமாகக் கொண்ட பிரமன், திருமால் ஆகிய இவர்களும் சிவபெரு மானது சிறப்பைச் சிறிதும் அறியார். அப்பெருமான், மணம் பொருந்திய பொழில்கள் சூழப் பெற்றதும் அழகிய விழாக்கள் பல நிகழ்வதுமாகிய கழுமலத்துள் எழுந்தருளிய அழல் உருவினன். அப்பெருமானுடைய திருவடி இணைகளைத் தொழுபவர்களின் நீங்குதற்கரிய வினைகள் இப்பூவுலகில் ஏழு பிறப்பின்கண்ணும் இலவாகும். இமையவர்களின் பெரிய உலகத்தை அடைதல் அவர் கட்கு எளிதாகும்.

கு-ரை : கொழுவிய தாமரைமலரை உறையுமிடமாக உடைய பிரமன். நெடியவன் - திருமால். அவன் - சிவன். விழுமை - பெருமை. இறையளவு அறிகிலர் எனவும். நிலவகைதனில் வினை எழுமையும் இல. இமையவர் வியன் உலகம் எளிது எனவும் இயைத்துப் பொருள்காண்க.

Koviloor Digital Library

204. அமைவன துவரிழு கியதுகில்
அணியுடை யினரம ணுருவர்கள்
சமையமு மொருபொரு ளெனுமவை
சலநெறி யனவற வுரைகளும்
இமையவர் தொழுகழு மலமமர்
இறைவன தடிபர வுவர்தமை
நமையல வினைநல னடைதலில்
உயர்நெறி நனிநணு குவர்களே. 10

205. பெருகிய தமிழ்விர கினன்மலி
பெயரவ னுறைபிணர் திரையொடு
கருகிய நிறவிரி கடலடை
கழுமல முறைவிட மெனநனி

10. பொ-ரை : தமக்குப் பொருந்துவனவாகிய மருதந்துவர் ஊட்டின ஆடையை அணிந்தவர்களாகிய புத்தர்களும், ஆடையற்ற சமணர்களும் ஒரு பொருள் எனக்கூறும் சமய நெறிகளும் அறவுரை களும் ஆகிய அவை வஞ்சனை மார்க்கத்தை வகுப்பன என உணர்ந்து தேவர்களால் தொழப்படுகின்ற கழுமலத்துள் எழுந்தருளிய இறைவன் திருவடிகளைப் பரவுவார்களை வினைகள் வருத்தா. நலன் அடைத லின் உயர்நெறிகளை அவர்கள் அடைவார்கள்.

கு-ரை : அமைவன - பொருந்துவனவாகிய. துவர் இழுகிய துகிலினர் - மருதந்துவர் ஊட்டின ஆடையராகிய புத்தர். அமண் உருவர்கள் - சமணர்கள். ஒருபொருளெனும் சமயமும், அறவுரை களும் ஆகிய அவை சலநெறியன - மேற் கூறிய புத்தரும் சாக்கியரும் ஒரு பொருளாகக் கூறும் சமயங்களும், அவற்றில் அவர்கள் கூறும் தர்மோபதேசங்களும் ஆகிய அவைகள் வஞ்சனை மார்க்கத்தை வகுப்பன. நமையல - வருத்தா. 'நமைப்புறுபிறவிநோய்' என்னும் சூளாமணிப்பகுதியும் இப்பொருட்டாதல் காண்க. 'நும்மால் நமைப்புண்ணேன்' என்ற அப்பர் வாக்கும் நினைவுறத் தக்கது. வினை நலன் அடைதலின் நமையல நனி உயர்நெறி நணுகுவர்கள் என இயைக்க.

11. பொ-ரை : பரந்துபட்ட நூல்களைக் கொண்டுள்ள தமிழ் மொழியை ஆழ உணர்ந்தவனும், மிக்க புகழாளனும் ஆகிய ஞான

Koviloor Digital Library

பெருகிய சிவனடி பரவிய
பிணைமொழி யனவொரு பதுமுடன்
மருவிய மனமுடை யவர்மதி
யுடையவர் விதியுடை யவர்களே. 11

திருச்சிற்றம்பலம்

சம்பந்தன் நீர்த்துளிகளோடு மடங்கும் அலைகளுடன் கருமை நிறம் வாய்ந்த கடலின் கரையில் விளங்கும் கழுமலம் இறைவனது உறை விடம் என மிகவும் புகழ் பரவிய சிவபெருமானின் திருவடிகளைப் போற்றிப் பாடிய அன்பு பிணைந்த இப்பத்துப் பாடல்களையும் ஓதி மனம் பொருந்த வைக்கும் அன்பர்கள், நிறைந்த ஞானமும் நல்லூழும் உடையவராவர்.

கு-ரை : தமிழ் விரகினனாகிய பெயரவன் பரவிய மொழிகள் பத்தும் மருவிய மனம் உடையவர் மதியுடையர் விதியுடையவர்கள் எனக் கூட்டுக. மலிபெயரவன் - நிறைந்த புகழ் உடையவன். உறை பிணர் திரையொடு - நீர்த்துளிகளோடு மடங்குகின்ற அலைகளோடு. பிணைமொழியன - அன்பு பூட்டிய மொழிகள்.

குருவருள் : இப்பதிகம் ஒருபது பாடல்களையும் மருவிய மனம் உடையவர், நன்மதியுடையவராவர். அவர் நல்விதி உடையவரும் ஆவர். எனவே, இறைநெறி சேராதார் நல்மதியும் நல்விதியும் உடையவராகமாட்டாராய் இடர்ப்படுவர் என்பது குறிப்பெச்சம்.

உத்தரகோச மங்கைப் புராணம்

காரமண ரிருட்குறும்பு கரந்தொளிப்ப
இலங்குதிரைக் கடல்வாய்ச் சூழ்ந்த
பாரடைய நீற்றினொளி நிலவெறிப்பப்
புகழ்நிலவு பரவா நிற்பச்
சீரளவுந் தமிழ்ப்பதிகத் தின்னமுதம்
பொழியுமதிச் செல்வன் வான்றோய்
தாரணியும் பொழில்புடைச்சூழ் சண்பையர்கோன்
பதகமலம் தலைமேற் கொள்வாம்.

- நெல்லைநாதர்.

Koviloor Digital Library

20. திருவீழிமிழலை

திருவிராகம்

பண்: நட்டபாடை

பதிக எண்: 20

திருச்சிற்றம்பலம்

206. தடநில வியமலை நிறுவியொர்
தழலுமிழ் தருபட வரவுகொ
டடலசு ரரொடம ரர்களலை
கடல்கடை வுழியெழு மிகுசின
விடமடை தருமிட றுடையவன்
விடைமிசை வருமவ னுறைபதி
திடமலி தருமறை முறையுணர்
மறையவர் நிறைதிரு மிழலையே. 1

1. பொ-ரை : பெரியதாகிய மந்தரமலையை மத்தாக நிறுத்தி, அழல் போலும் கொடிய நஞ்சை உமிழும் படத்தோடு கூடிய வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகக் கட்டி வலிய அசுரர்களோடு தேவர்கள் அலைகள் பொருந்திய திருப்பாற்கடலைக் கடைந்த விடத்துத் தோன்றிய உக்கிரமான ஆலகாலம் என்னும் நஞ்சு அடைந்த கண்டத்தை உடையவனும், விடையின்மீது வருபவனும் ஆகிய சிவபிரான் உறையும் தலம், நான்மறைகளை முறையாக ஓதி உணர்ந்த உறுதி வாய்ந்த மறையவர் நிறைந்துள்ள திருவீழிமிழலையாகும்.

கு-ரை : தேவர்கள் பாற்கடல் கடைந்த வரலாறு முதல் மூன்று அடிகளில் குறிக்கப்பெறுகிறது. தடம் நிலவிய மலை - விசாலமாகிய மந்தர மலை.

அரவுகொடு அடல் அசுரரொடு அமரர்கள் அலை கடல் கடைவுழி எனப் பிரிக்க. திடம் - மன உறுதி. மறையவர் என்ற பெயர் மறையைமுறையே உணர்தலால் வந்தது எனக் காரணக்குறியாதல் விளக்கியவாறு.

Koviloor Digital Library

207. தரையொடு திவிதல நலிதரு
தகுதிற லுறுசல தரனது
வரையன தலைவிசை யொடுவரு
திகிரியை யரிபெற,வருளினன்
உரைமலி தருசுர நதிமதி
பொதிசடை யவனுறை பதிமிகு
திரைமலி கடன்மண லணிதரு
பெறுதிடர் வளர்திரு மிழலையே. 2

208. மலைமக டனையிகழ் வதுசெய்த
மதியறு சிறுமன வனதுயர்
தலையினொ டழலுரு வனகர
மறமுனி வுசெய்தவ னுறைபதி

2. பொ-ரை : மண்ணுலகத்தோடு விண்ணுலகையும் நலிவுறுத்துகின்ற வலிமை பொருந்திய சலந்தராசுரனின் மலை போன்ற தலையை வேகமாக அறுத்து வீழ்த்திய சக்கராயுதத்தைத் திருமால் வேண்ட அவர்க்கு அருளியவனும், புகழால் மிக்க கங்கை நதி மதி ஆகியன பொதிந்த சடைமுடியை உடையவனுமாகிய சிவபெருமான் உறையும் தலம், பெரிய அலைகளை உடைய கடற்கரை, மணலால் அழகுபெறும் மணல் மேடுகள் நிறைந்த திருவீழிமிழலையாகும்.

கு-ரை : முதல் இரண்டடிகள் சலந்தரன் சிரங்கொய்த சக்கரத்தைத் திருமாலுக்கருளியது குறிக்கப்படுகிறது. திவிதலம் - விண்ணுலகம். சலதரன் - சலந்தராசுரன். வரையன தலை - மலையையொத்த அவனது தலை. திகிரி - சக்கராயுதம், திருமால் ஆயிரம் தாமரை கொண்டு அருச்சித்தமைக்காகச் சக்கராயுதம் அருளினார் என்பது இத் தல வரலாறு. உரைமலிதரு - புகழ் மலிந்த. சுரநதி - தேவகங்கை. கடற்கரை மணல் மேடுகள் நிறைந்த திருவீழிமிழலை என்பது சிந்திக்கத் தக்கது. அவர்கள் காலத்து இத்தலம் நெய்தல் வேலியாக இருந்திருக்கும் போலும்.

3. பொ-ரை : மலைமகளாகிய பார்வதிதேவியை இகழ்ந்த அறிவற்ற அற்ப புத்தியையுடைய தக்கனுடைய தலையோடு அழலோனின் கை ஒன்றையும் அரிந்து, தன் சினத்தை வெளிப்படுத்திய சிவபிரான் உறையும் தலம், கலை ஞானம் நிரம்பிய புலவர்களின் வறுமைத் துன்பம் நீங்க நிறைந்த செல்வத்தை வழங்கும் கொடையாளர்கள்

Koviloor Digital Library

கலைநில வியபுல வர்களிடர்
களைதரு கொடைபயில் பவர்மிகு
சிலைமலி மதிள்புடை தழுவிய
திகழ்பொழில் வளர்திரு மிழலையே. 3

209. மருவலர் புரமெரி யினின்மடி
தரவொரு கணைசெல நிறுவிய
பெருவலி யினனல மலிதரு
கரனுர மிகுபிண மமர்வன
இருளிடை யடையுற வொடுநட
விசையுறு பரனினி துறைபதி
தெருவினில் வருபெரு விழவொலி
மலிதர வளர்திரு மிழலையே. 4

வாழ்வதும் பெரிய மதில்களால் சூழப் பெற்றதும் விளங்குகின்ற பொழில்கள் வளர்வதுமாய திருவீழிமிழலையாகும்.

கு-ரை : முதல் இரண்டடிகளில் தக்கன் சிரங்கொய்த வரலாறும், அக்கினியைக் கையரிந்த வரலாறும் குறிக்கப்படுகின்றன. மதியறு சிறுமனவன் - புத்திகெட்ட சிறுமனத்தையுடைய தக்கன். உயர்தலை - மனிதத்தலை. அழல் உருவன கரம் - தீவடிவினனாகிய அக்கினி யினது கை. சிலை மலிமதிள் - மலையைப் போன்ற மதில்கள். இத்தலத் திலுள்ள கொடையாளிகள் புலவர்களின் துன்பங்களைக் களை கின்றார்கள்.

4. பொ-ரை : பகைமை பாராட்டிய திரிபுராதிகளின் முப்புரங் களும் எரியில் அழியுமாறு கணை ஒன்றைச் செலுத்திய பெரு வலி படைத்தவனும், நன்மைகள் நிறைந்த திருக்கரங்களை உடையவனும், வலிய பிணங்கள் நிறைந்த சுடுகாட்டில் நள்ளிருட்போதில் சென்று அங்குத் தன்னை வந்தடைந்த பேய்களோடு நடனமாடி இசை பாடுபவனுமாகிய பரமன் மகிழ்வோடு உறையும் பதி, தெருக்கள் தோறும் நிகழும் பெருவிழாக்களின் ஆரவாரம் நிறைந்து வளரும் திருவீழிமிழலையாகும்.

கு-ரை : இது இறைவனது திரிபுரமெரித்த வீரத்தையும், கை வண்மையையும், சுடுகாட்டில் நடமாடிய செயலையும் குறிப்பிடுகிறது.

Koviloor Digital Library

210. அணிபெறு வடமர நிழலினில்
அமர்வொடு மடியிணை யிருவர்கள்
பணிதர வறநெறி மறையொடும்
அருளிய பரனுறை விடமொளி
மணிபொரு வருமர கதநில
மலிபுன லணைதரு வயலணி
திணிபொழி றருமண மதுநுகர்
அறுபத முரல்திரு மிழலையே. 5

211. வசையறு வலிவன சரவுரு
வதுகொடு நினைவரு தவமுயல்
விசையன திறன்மலை மகளறி
வுறுதிற லமர்மிடல் கொடுசெய்து

மருவலர் - பகைவர்; திரிபுராதிகள். நலம் மலிதரு கரன் - நன்மை மிகுந்த திருக்கரங்களையுடையவன். உரமிகுபிணம் - வலிமைமிக்க பிணங்கள். அமர்வன இருள் இடை அடை உறவொடு நடை விசை உறு பரன் எனப்பிரிக்க.

5. பொ-ரை : அழகிய கல்லால மரநிழலில் எழுந்தருளியிருந்து தம் திருவடி இணைகளைச் சனகர் சனந்தனர் ஆகிய இருவர் ஒருபுறமும், சனாதனர் சனற்குமாரர் ஆகிய இருவர் மறுபுறமும் பணிய அவர்கட்கு அறநெறியை வேதங்களோடும் அருளிச் செய்த சிவபிரான் உறையும் இடம், ஒளி பொருந்திய மணிகள் ஒப்பில்லாத மரகதம் ஆகியவற்றை அடித்துவரும் ஆற்றுநீர் நிலமெல்லாம் நிறைந்து வளங்களால் அணி செய்யப் பெறுவதும் செறிந்த பொழில்கள்தரும் மணத்தை நுகரும் வண்டுகள் முரல்வதுமான திருவீழிமிழலையாகும்.

கு-ரை : இது ஆலின் கீழ் அறம் நால்வர்க்கு உரைத்தவரலாறு அறிவிக்கிறது. வடமரநிழல் - ஆலநிழல். அமர்வு - விருப்பம். இருவர்கள் - சனகர் முதலிய நால்வரும், இடப்பக்கத்தும் வலப்பக்கத்தும் இருவர் இருவராக இருந்தமை கருதற்குரியது. மறை - இருந்ததனை இருந்தபடி இருந்துகாட்டும் அநுபவநிலை. பொழில்தரு மணமது நுகர் அறுபதம் முரல் திருமிழலை எனப்பிரிக்க.

6. பொ-ரை : குற்றமற்ற வலிய வேடர் உருவைக் கொண்டு, நினைதற்கும் அரிய கடுந்தவத்தைச் செய்யும் விசயனுடைய

Koviloor Digital Library

அசைவில படையருள் புரிதரும்
அவனுறை பதியது மிகுதரு
திசையினின் மலர்குல வியசெறி
பொழின்மலி தருதிரு மிழலையே. 6

212. நலமலி தருமறை மொழியொடு
நதியுறு புனல்புகை யொளிமுதல்
மலரவை கொடுவழி படுதிறன்
மறையவ னுயிரது கொளவரு
சலமலி தருமற லிதனுயிர்
கெடவுதை செய்தவ னுறைபதி
திலகமி தெனவுல குகள்புகழ்
தருபொழி லணிதிரு மிழலையே. 7

வலிமையை உமையம்மைக்கு அறிவுறுத்தும் வகையில் அவனோடு வலிய போரைத் தன் வலிமை தோன்றச் செய்து அவ்விசயனுக்குத் தோல்வி எய்தாத பாசுபதக்கணையை வழங்கி அருள்புரிந்த சிவபிரான் உறை யும் பதி, செறிந்த மரங்கள் திசைகள் எங்கும் மலர்கள் பூத்துக் குலாவும் செறிந்த பொழில்கள் நிறைந்துள்ள திருவீழிமிழலை யாகும்.

கு-ரை : இது விசயன் வீரத்தை உமாதேவிக்குக் காட்டிப் பாசு பதம் அருளிய வீரம் குறிப்பிடுகிறது. வசையறு வலி - குற்றமற்ற வலிமை. வனசர உருவு - வேடஉருவம். நினைவருதவம் - முனிவர் எவரும் நினைத்தற்கரிய கடுந்தவம், மிடல் - வலிமை, அசைவில படை - தோற்காத பாசுபதாஸ்திரம்.

7. பொ-ரை : நன்மைகள் பலவும் நிறைந்த வேத மந்திரங்களை ஓதி, ஆற்று நீர், மணப்புகை, தீபம், மலர்கள் ஆகியனவற்றைக் கொண்டு பூசை புரிந்து வழிபடும் மறையவனாகிய மார்க்கண்டேய னின் உயிரைக் கவரவந்த வஞ்சகம் மிக்க இயமனின் உயிர் கெடுமாறு உதைத்தருளிய சிவபிரான் உறையும்பதி, உலக மக்கள் திலகம் எனப் புகழ்வதும் பொழில்கள் சூழ்ந்துள்ளதுமான திருவீழிமிழலையாகும்.

கு-ரை : இது மார்க்கண்டேயற்காகக் காலனை உதைத்த வர லாற்றைக் கூறுகிறது. மறைமொழியொடு - வேதமந்திரங்களொடு. நதியுறு புனல் - தேவகங்கையின் திருமஞ்சனதீர்த்தம். புகை ஒளி

Koviloor Digital Library

213. அரனுறை தருகயி லையைநிலை
குலைவது செய்ததச முகனது
கரமிரு பதுநெரி தரவிரல்
நிறுவிய கழலடி யுடையவன்
வரன்முறை யுலகவை தருமலர்
வளர்மறை யவன்வழி வழுவிய
சிரமது கொடுபலி திரிதரு
சிவனுறை பதிதிரு மிழலையே. 8

214. அயனொடு மெழிலமர் மலர்மகள்
மகிழ்கண னளவிட லொழியவொர்
பயமுறு வகைதழ னிகழ்வதொர்
படியுரு வதுவர வரன்முறை

முதல் - தூபம் தீபம் முதலான ஆராதனைப் பொருள்கள். மறையவன் - மார்க்கண்டேயன். சலம் மலிதரு மறலி - வஞ்சம் மிகுந்த இயமன். உலகுகள் திலகம் இது எனப் புகழ் தரு பொழில் அணிமிழலை என மாறிக் கூட்டுக.

8. பொ-ரை : சிவபிரான் எழுந்தருளிய கயிலைமலையை நிலைகுலையச் செய்து அதனைப் பெயர்த்த பத்துத் தலைகளை உடைய இராவணனுடைய இருபது கரங்களும் நெரியுமாறு தன் கால் விரலை ஊன்றிய வீரக்கழல் அணிந்த திருவடிகளை உடையவனும், வரன் முறையால் உலகைப் படைக்கும் பூவின் நாயகனான பிரமன் வழி வழுவியதால் ஐந்தாயிருந்த அவன் சிரங்களில் ஒன்றைக் கிள்ளி எடுத்து அதன்கண் பலியேற்றுத் திரிபவனுமாகிய சிவபிரான் உறையும் பதி திருவீழிமிழலையாகும்.

கு-ரை : இது வழக்கம்போல இராவணன் வரலாறு கூறுகிறது. தசமுகன் - இராவணன். வரன்முறை உலகவைதரும் மலர்வளர் மறை யவன் - அந்தந்த ஆன்மாக்களுக்கு வகுக்கப்பெற்ற நியதி தத்துவத்தின் வழிநின்று உலகம் உடல் போகம் இவற்றைப் படைக்கின்ற பிரமன். வழிவழுவிய - உமாதேவியாரை இகழ்ந்ததாகிய தவறு இழைத்த.

9. பொ-ரை : நான்முகனும் அழகிய மலர்மகள் கேள்வனாகிய கண்ணனும் அளவிடமுடியாது அஞ்சி நிற்க, ஒரு சோதிப் பிழம்பாய்த் தோன்ற அவ்விருவரும் முறையாக சயசய எனப்போற்றித் துதி

Koviloor Digital Library

சயசய வெனமிகு துதிசெய
வெளியுரு வியவவ னுறைபதி
செயநில வியமதின் மதியது
தவழ்தர வுயர்திரு மிழலையே. 9

215. இகழுரு வொடுபறி தலைகொடும்
இழிதொழின் மலிசமண் விரகினர்
திகழ்துவ ருடையுடல் பொதிபவர்
கெடவடி யவர்மிக வருளிய
புகழுடை யிறையுறை பதிபுனல்
அணிகடல் புடைதழு வியபுவி
திகழ்சுரர் தருநிகர் கொடையினர்
செறிவொடு திகழ்திரு மிழலையே. 10

செய்யுமாறு அண்டங்கடந்த அச்சிவபிரான் உறையும் பதி, வெற்றி விளங்கும் மதில்களில் மதி தோய்ந்து செல்லுமாறு உயர்ந்து தோன்றும் திருவீழிமிழலையாகும்.

கு-ரை : இது அயனும் மாலும் அறியாத அழல் உருவாய் நின்ற வரலாற்றை அறிவிக்கிறது. மலர் மகள் மகிழ் கணன் - திருமகள் மகிழும் கண்ணனாகிய திருமால். தழல் நிகழ்வதொர்படி உருவது வர - தீப்பிழம்பாக ஒளிரும் திருமேனி பொருந்த, வெளி உருவிய அவன் - ஆகாயத்தைக் கடந்த அவன்; செயம் நிலவிய மதில் - வெற்றி விளங்குகின்ற மதில்.

10. பொ-ரை : பிறரால் இகழத்தக்க உருவோடும் உரோமங் களைப் பறித்தெடுத்தலால் முண்டிதமான தலையோடும் இழி தொழில் மிகுதியாகப் புரியும் சமணர்களாகிய தந்திரசாலிகளும், விளங்கும் மருதந்துவராடையை உடலில் போர்த்துத் திரியும் சாக்கியர்களும் அழிந்தொழியத் தன் அடியவர்களுக்கு மிகவும் அருள் புரிபவனும் புகழாளனுமாகிய இறைவன் உறையும் பதி நீர்வளம் மிக்கதும் கடலாற் சூழப்பட்ட இவ்வுலகில் விளங்கும் சுரர் தருவாகிய கற்பகம் போன்ற கொடையாளர் மிக்கு விளங்குவதுமாகிய திருவீழிமிழலையாகும்.

கு-ரை : இது சமணர்கெட அடியவர்க்கருளியதை யறிவிப்பது. இகழ் உரு - பிறரால் இகழத்தக்க வடிவம். துவர் உடை உடல்

Koviloor Digital Library

216. சினமலி கரியுரி செய்தசிவ
னுறைதரு திருமிழ லையைமிகு
தனமனர் சிரபுர நகரிறை
தமிழ்விர கனதுரை யொருபதும்
மனமகிழ் வொடுபயில் பவரெழின்
மலர்மகள் கலைமகள் சயமகள்
இனமலி புகழ்மக ளிசைதர
இருநில னிடையினி தமர்வரே. 11

திருச்சிற்றம்பலம்

பொதிபவர் - உடல் முழுவதும் போர்த்து மூடும் புத்தர். சுரர்தரு நிகர் கொடையினர் - கற்பக விருட்சத்தை யொத்த கொடையினை யுடையவர்.

11. பொ-ரை: சினவேகத்தோடு வந்த யானையை உரித்துப் போர்த்த சிவபிரான் எழுந்தருளிய திருவீழிமிழலையை, மிக்க செல்வங் களால் நிறைந்த மனமகிழ்வுடையவர் வாழும் சிவபுரநகரின் மன்னனும் தமிழ் விரகனுமாகிய ஞானசம்பந்தன் உரைத்த இத்திருப்பதிகப் பாடல்கள் பத்தையும் மனமகிழ்வோடு பயில்பவர் அழகிய திருமகள், கலைமகள், சயமகள், அவர்க்கு இனமான புகழ் மகள் ஆகியோர் தம்பால் பொருந்த, பெரிய இவ்வுலகின்கண் இனிதாக வாழ்வர்.

கு-ரை: இது பயன்கூறித் திருக்கடைக் காப்பருளுகிறது. தன மிகு மனர் - செல்வம் மிகுந்த மனத்தை யுடையவர். சிரபுரம் - சீகாழி, இப்பதிகத்தைப் பரிவொடு பயில்வார் திருமகள் கலைமகள் வெற்றி மகள் புகழ்மகள் பொருந்தப் பூமியில் நீடுவாழ்வார் என்பதாம்.

திருநெல்வேலிப் புராணம்

வரைவன வரதனை மகிழ்ந்து பாடவே
பரையுமை திருமுலைப் பாலை யுண்டவர்
தரைபுகழ் ஞானசம் பந்தர் சண்பையார்
விரைமல ரடியிணை விரும்பிப் போற்றுவாம்.

- நெல்லையப்ப பிள்ளை.

Koviloor Digital Library

21. திருச்சிவபுரம்

பதிக வரலாறு:

திருநறையூர்ச் சித்தீச்சரம் முதலிய தலங்களை வணங்கிப் பதிகப்பணி செய்து, திரு அரிசிற்கரைப்புத்தூரில் இருக்கின்ற காலத்து, திருஞானசம்பந்தப்பிள்ளையார் திருச்சிவபுரத்திற்கு எழுந்தருளினார்கள். இத்தலம் திருமால் வெள்ளைப்பன்றி யாய்ச் சிவபெருமானை வழிபட்ட தலமாதலின் அங்கே எழுந் தருளியிருக்கின்ற இறைவன் திருவடியை வணங்கிப் 'புவம் வளி' என்னும் இப்பதிகத்தை யருளிச் செய்தார்கள்.

இப்பதிகம் சிவனே ஐந்தொழிலை ஆற்றும் முதல்வன். பதவிகளில் இருப்பார் அனைவரும் சிவன் அருளைத் தாங்கி நின்றே ஆற்றுகின்றனர். அச்சிவனை அடையும் நெறிகள் தாசமார்க்கம், சற்புத்திரமார்க்கம், சகமார்க்கம்,சன்மார்க்கம் என்பன. அவ்வந்நெறிகளில் வழுவாது நின்றார் சாலோக சாமீப சாரூப சாயுச்சியமாகிய முத்திகளை எய்துகின்றனர். அவனைச் சிவபுரத்தில் வழிபடுகின்றவர்கள் நிலமிசை நிலை பெறுவர், கலைமகள், அலைமகள், செயமகள் அருள் பெறுவர். எல்லா நன்மையும் பெறுவர் என்கின்றது. இதனைச் சேக்கிழார் பெருமான் பொங்குமிசைத் திருப்பதிகம் என்பார்கள்.

திருவிராகம்
பண்: நட்டபாடை

பதிக எண்: 21

திருச்சிற்றம்பலம்

217. புவம்வளி கனல்புனல் புவிகலை
யுரைமறை திரிகுண மமர்நெறி
திவமலி தருசுரர் முதலியர்
திகழ்தரு முயிரவை யவைதம

1. பொ-ரை : விண், காற்று, தீ, நீர், மண் ஆகிய ஐம்பெரும் பூதங் களையும், எண்ணெண் கலைகளை உரைத்தருளும் வேதங்களையும், முக்குணங்களையும், விரும்பத்தக்க மார்க்கங்களையும், வானுலகில்

Koviloor Digital Library

பவமலி தொழிலது நினைவொடு
பதுமநன் மலரது மருவிய
சிவனது சிவபுர நினைபவர்
செழுநில னினில்நிலை பெறுவரே. 1

218. மலைபல வளர்தரு புவியிடை
மறைதரு வழிமலி மனிதர்கள்
நிலைமலி சுரர் முத லுலகுகள்
நிலைபெறு வகைநினை வொடுமிகும்

வாழும் தேவர்கள் முதலியவர்களாய் விளங்கும் உயிர்களையும், தம்முடைய படைப் பாற்றல் நினைவோடு நல்ல தாமரை மலரில் விளங்கும் நான்முகனை அதிட்டித்து நின்று உலகைத் தோற்றுவித் தருளும் சிவபெருமானது சிவபுரத் தலத்தை நினைப்பவர் வளமை யான இவ்வுலகில் நிலைபெற்று வாழ்வர்.

கு-ரை : இது இறைவனே சிருட்டித்தொழில் இடையறாது நிகழ்த்தத் திருவுள்ளங் கொள்கின்றார். அத்தொழிலைச் செய்யும் பிரமன் அந்தப் பாவனையில் இருந்து சிருட்டிக்கின்றான். ஆதலால் பவமலி தொழிலது நினைவொடு இருக்கும் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் சிவபுரத்தை நினைப்பவர் நிலைபேறான வாழ்வடைவர் என்கின்றது. புவம், வளி, கனல், புனல், புவி - விண்ணாதி மண்ணந்தமாகிய ஐம்பெரும் பூதங்கள். புவம் - வான், கலை - எண்ணெண் கலைகள். உரைமறை - இறைவன் புகழைச் சொல்லும் வேதம். திரி குணம் - சத்துவம் முதலிய மூன்று குணங்கள். அமர்நெறி - விரும்பத்தக்க மார்க்கங்கள். திவம் - தேவலோகம். உயிரவை - தேவர் முதலாகத் தாவரம் ஈறாகச் சொல்லப்பட்ட உயிர்கள். அவைதம பவமலி தொழிலது நினைவொடு - அவ்வவ் ஆன்மாக்களுடைய வினைக்கு ஈடாக அருளப் படுகின்ற பிறவிக் கேற்ற சிருட்டித் தொழிலின் நினைவொடு. எனவே இறைவன் பிரமனைப்போல விகாரியாய்ப் படைப்பவனல்லன், இச்சையால் எல்லாம் இயங்குகின்றன என்பது. பதும நன்மலரது மருவிய சிவன் - தாமரை மலர் மேல் வீற்றிருக்கும் சிவன். சிவபெருமான் பிரமன் உருக்கொண்டு வீற்றிருப்பாரல்லர். இத்தகைய திருவுருவத்தைப் பிரமன் தியானித்தலான் சிருட்டி கைவரப்பெறுவன் என்பது.

2. பொ-ரை : மலைகள் பல வளரும் இம்மண்ணுலகில் வேத விதிகளின் படி நடக்கும் மிகுதியான மக்கள், விண்ணில் நிலை

Koviloor Digital Library

அலைகட னடுவறி துயிலமர்
அரியுரு வியல்பர னுறைபதி
சிலைமலி மதிள்சிவ புரநினை
பவர்திரு மகளொடு திகழ்வரே. 2

219. பழுதில கடல்புடை தழுவிய
படிமுத லியவுல குகள்மலி
குழுவிய சுரர்பிறர் மனிதர்கள்
குலமலி தருமுயி ரவையவை
முழுவது மழிவகை நினைவொடு
முதலுரு வியல்பர னுறைபதி
செழுமணி யணிசிவ புரநகர்
தொழுமவர் புகழ்மிகு முலகிலே. 3

பேறுடையவராய் வாழும் தேவர்கள் ஆகியோரும் மற்றுமுள்ள உலக உயிர்களும் நிலைபெற்று வாழ்தற்குரிய காத்தல் தொழில் நினைவோடு, மிகுந்துவரும் அலைகளை உடைய திருப்பாற்கடல் நடுவில் அறிதுயில் அமர்ந்துள்ள திருமாலை அதிட்டித்துநின்று காத்தல் தொழிலைச் செய்தருளும் சிவபிரான் உறையும் பதி, கற்களால் கட்டப்பட்ட மதில்கள் சூழ்ந்த சிவபுரமாகும். அதனை நினைப்பவர் திருமகளொடு திகழ்வர்.

கு-ரை : இது எல்லா உலகங்களும் தத்தம் கால எல்லை வரையில் நிலைபெறுக என்னும் திருவுள்ளக் குறிப்போடு பாற்கடல் மேல் பள்ளிகொள்ளும் திருமால் உருவின் இயல்போடு அரன் உறையும்பதி. நினைப்பவர் திருமகளோடு திகழ்வர் என்கின்றது. உலகு நிலைப்பதற்கு மலை இன்றியமையாமையின் மலை பல வளர் தருபுவி எனப் புவியை விசேடித்தார். மறைதரு வழிமலி மனிதர்கள் - வேத விதியின்படி அக ஒழுக்கத்தையும், புறவொழுக்கத்தையும் வரையறுத்த மக்கள். நிலைமலிசுரர் - மக்களைக் காட்டிலும் வாழ்வால் நீடித்த தேவர்கள், முதல் உலகுகள் என்றது, விண்ணும் மண்ணும் கூறவே இடைப்பட்டனவெல்லாம் உணரவைத்தார், அறிதுயில் - யோகநித்திரை.

3. பொ-ரை : பழுதுபடாத, கடலால் சூழப்பட்ட நிலவுலகம் முதலிய எல்லா உலகங்களையும், அவ்வுலகங்களில் நிறைவுடன் குழுமிவாழும் தேவர்கள் நரகர்கள் மற்றும் மனிதர்கள் ஏனையோர்

Koviloor Digital Library

220. நறைமலி தருமள றொடுமுகை
நகுமலர் புகைமிகு வளரொளி
நிறைபுனல் கொடுதனை நினைவொடு
நியதமும் வழிபடு மடியவர்
குறைவில பதமணை தரவருள்
குணமுடை யிறையுறை வனபதி
சிறைபுன லமர்சிவ புரமது
நினைபவர் செயமகள் தலைவரே. 4

ஆகிய அனைவர் உயிர்களையும் அழிக்கும் வகையான நினைவோடு உருத்திரனை அதிட்டித்து அவனுருவில் அழித்தலைச் செய்தருளும் சிவபிரான் உறையும் பதியாகிய செழுமையான மணிகள் அழகு செய்யும் சிவபுர நகரைத் தொழுவோரின் புகழ் உலகில் மிகும்.

3. கு-ரை : இது நிலம் முதலிய உலகுகள் முழுவதுமழியும்படி ருத்திராம்சத்தோடு எழுந்தருளும் இறைவன் பதியைத் தொழுமவர் புகழ் உலகில் மிகும் என்கின்றது. கடல்புடை தழுவியபடி என்றது சங்கார கிருத்தியத்திற்குப் பயன்படும் தண்ணீரைக் கூறி விசேடித்தபடி. படி - பூமி. படி முதலிய உலகுகள் என்றது ஒடுக்க முறைக்கண் பிருதிவி முதலாயின முறையே தத்தம் காரணமாகிய மாயையில் ஒடுங்கும் முறை பற்றி. உயிரவை அவை முழுவதும் அழிவகை என்றது உயிர்கள் ஒடுங்குதலை உயிர்களுக்கு என்றும் அழிவின்மையின். முதல் - இறைவனது உருவாகிய உருத்திரவடிவு.

4. பொ-ரை : மணம் மிகுந்த சந்தனம், அரும்புகள், இதழ் விரிந்த மலர்கள், குங்கிலியம், சீதாரி முதலிய தூபம், ஒளி வளர் தீபங்கள், நிறைந்த நீர் ஆகியவற்றைக் கொண்டு நீராட்டியும், மலர் சூட்டியும் ஒளி காட்டியும் தன்னை நாள்தோறும் நினைவோடு வழிபடும் அடியவர், குறைவிலா நிறைவான சாமீபம் முதலான முத்திகளை அடைய அருள்செய்யும் குணம் உடைய இறைவன் உறையும் அழகிய பதி, நீர் நிலைகள் பலவற்றாலும் வளம் நிரம்பி விளங்கும் சிவபுரமாகும். அதனை நினைபவர் சயமகள் தலைவராவர்.

கு-ரை : இது அபிஷேக ஆராதனைப் பொருள்களோடு நியதியாக வழிபடும் அடியார்களுக்குக் குறைவிலாப் பதத்தைக் கொடுக்கும் மகேச்சுரனது பதியை வழிபடுமவர்கள் செயமகளுக்குத் தலைவராவர் என்கின்றது. நறை மலிதரும் அளறு - மணம் மிகுந்த சந்தனம். முகை நகு மலர் - முகையும் மலரும், புகை - தூபம். ஒளி -தீபம்.

Koviloor Digital Library

221. சினமலி யறுபகை மிகுபொறி
சிதைதரு வகைவளி நிறுவிய
மனனுணர் வொடுமலர் மிசையெழு
தருபொரு ணியதமு முணர்பவர்
தனதெழி லுருவது கொடுவடை
தகுபர னுறைவது நகர்மதில்
கனமரு வியசிவ புரநினை
பவர்கலை மகள்தர நிகழ்வரே. 5

நினைவொடு - ஈசுவர தியானத்தோடு. நியதமும் - ஒழுங்காக. குறைவிலபதம் - சாமீபம், வனபதி - அழகிய நகரம். சிறைபுனல் - மதகுகளோடு கூடிய புனல். இது கிரியாவான்கள் பெறுபயன் கூறியது.

5. பொ-ரை : காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாற்சரியம் எனப்படும் ஆறு பகைகளையும் வென்று, மெய்,வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்பொறிகளையும் அடக்கும் வகையில், காற்றை நிறுத்தியும் விடுத்தும் செய்யப்படும் பிராணாயாமத்தைப் புரிந்தும், தியானித்தலால் உள்ளத்தில் தோன்றியருளும் ஒளிப் பொருளாகிய சிவபெருமானை நாள்தோறும் உணர்பவராகிய யோகியர்கட்குத் தனது எழிலுருவாகிய சாரூபத்தைத் தந்தருளும் சிவபிரான் உறைந்தருளும் நகர், மேகந் தவழும் மதில்கள் சூழ்ந்த சிவபுரமாகும். அதனை நினைபவர், கலைமகள் தன் அருளைத் தர வாழ்வர்.

கு-ரை : இது அகப்பகை ஆறும் வென்று ஐம்பொறி அடக்கி, பிராணவாயுவை ஒழுங்குபடுத்திய யோகியர்க்குச் சாரூபந் தரும் பரசிவன் பதியாகிய சிவபுரத்தை நினைப்பவர் சாரூபர்களாவார்கள் என்கின்றது. சினமலி அறுபகை - கோபம் முதலிய உட்பகையாறும், இதனை அரிஷட்வர்க்கம் என்பர் வடநூலார். பொறி - ஐம்பொறிகள். பொறிகள் புலன்களைச் சென்று பற்றுவதைத் தடுப்பது பிராணாயாமம் ஒன்றே என்பதாம். மனன் உணர்வு - தியானம். மலர் மிசை எழுதரு பொருள் - பிரமரந்தரத்தின்கண்ணதாகிய சகஸ்ரதளத்தையுடைய தாமரை மலரின்மேல் எழுந்தருளியிருக்கும் பேரொளிப் பிழம்பாகிய பொருளை. நியதமும் உணர்பவர் - அனவரதமும் அறிபவர்கள். தனது எழில் உருவு கொடு - தன்னுடைய அழகிய வடிவத்தைக் கொண்டு. என்றது கண்டக்கறையும் கங்கையும் ஒழிந்த சாரூபத்தை. கனம் - மேகம்.

Koviloor Digital Library

222. சுருதிகள் பலநல முதல்கலை
துகளறு வகைபயில் வொடுமிகு
உருவிய லுலகவை புகழ்தர
வழியொழு குமெயுறு பொறியொழி
அருதவ முயல்பவர் தனதடி
யடைவகை நினையர னுறைபதி
திருவருள் சிவபுர நினைபவர்
திகழ்குல னிலனிடை நிகழுமே. 6

223. கதமிகு கருவுரு வொடுவுகி
ரிடைவட வரைகண கணவென
மதமிகு நெடுமுக னமர்வளை
மதிதிக ழெயிறத னுதிமிசை

6. பொ-ரை : வேதங்களையும், பலவாகிய நன்மைகளைத் தரும் தலைமையான கலைகளையும், குற்றம் அறப் பயின்று,உலகியலில் பழி பாவங்களுக்கு அஞ்சித் தூய ஒழுக்க சீலராய் உலகம் புகழ விளங்கி உடலின்கண் உள்ள பொறிகள்வழி ஒழுகாது அரிய தவத்தை மேற் கொண்ட அடியவர்கள் தன் திருவடிகளை அடையும் வகை சங்கற் பிக்கும் சிவபிரான் உறையும் பதி திருவருள் தேங்கிய சிவபுரமாகும். அத்தலத்தை நினைவோர்தம் விளக்கமான குலம் உலகிடை நின்று நிகழும்.

கு-ரை : வேதம் முதலான கலைகளைக் குற்றமறப்பயின்று உலகம் புகழ, பொறிவாயில் அவித்து, அருந்தவம் முயல்வார்கள் திருவடி ஞானத்தைப்பெறத் திருவுளங்கொண்டருள்கின்ற பரமசிவன் உறை பதியைச் சிந்திப்பவர் குலம் நிலத்திடை நீடுவாழும் என்கின்றது. பலநலமுதல்கலை - பலவாகிய நன்மைகளைக் கருதுகின்ற கலை. துகள் அறுவகை - சந்தேக விபரீதங்கள் அறும்படி, உருவு இயல் - தோற்றத்தின் அழகு. தனது அடி அடைவகை: இது சாயுச்சியம் அளிப்பது அறிவித்தது.

7. பொ-ரை : திருமால் வராக அவதாரத்தில் சினம்மிக்க கரிய உருவோடு, தனது நகங்களிடையே வடக்கின்கண் உள்ள மேருமலை கணகண என ஒலி செய்ய, மதம் மிக்க நீண்ட அவ்வராகத்தின் முகத்திற் பொருந்திய வளைந்த பிறை போன்ற எயிற்றின் முனைக்கண் பூமி இதமாக அமர்ந்து விளங்க, அப்பூமியை உலகின்கண் அவியாது

Koviloor Digital Library

இதமமர் புவியது நிறுவிய
வெழிலரி வழிபட வருள்செய்த
பதமுடை யவனமர் சிவபுர
நினைபவர் நிலவுவர் படியிலே. 7

224. அசைவுறு தவமுயல் வினிலயன்
அருளினில் வருவலி கொடுசிவன்
இசைகயி லையையெழு தருவகை
யிருபது கரமவை நிறுவிய
நிசிசரன் முடியுடை தரவொரு
விரல்பணி கொளுமவ னுறைபதி
திசைமலி சிவபுர நினைபவர்
செழுநில னினில்நிகழ் வுடையரே. 8

நிறுத்திக் காத்த அழகிய திருமால் வழிபட, அவர்க்கு அருள்புரிந்த திருவடிகளை உடையவனாகிய சிவபெருமான் எழுந்தருளிய சிவபுரத்தை நினைப்பவர் உலகிற் புகழோடு விளங்குவர்.

கு-ரை : ஆதிவராகமான அரிவழிபட அருள் செய்தவரது சிவபுரத்தை நினைபவர் என்றும் விளங்குவர் என்கின்றது. கதம் மிகு - கோபம் மிகுந்த. கருவுருவொடு - கறுத்த மேனியோடு. உகிர்இடை - நகங்களின் இடையே. மதம் மிகு நெடுமுகன் அமர் - மதம் மிக்க நீளமான முகத்திலே இருக்கின்ற. வளைமதி திகழ் எயிறு - பிறை மதியை யொத்த கோரப்பல். நுதி - நுனி. இதம் அமர் புவி - இன்பத் தோடு இருக்கின்ற பூமி. ஆதிவராக உருவெடுத்த திருமாலின் சத்தி பூமியாதலின், அவள் வராகத் தந்தத்தில் இதமாக இருந்தாள் என்றார். பதம் - திருவடி.

8. பொ-ரை : உடல் வருத்தத்தைத் தரும் கடுமையான தவத்தைச் செய்து நான்முகன் அருளினால் வரமாகக் கிடைக்கப் பெற்ற வலிமையைக் கொண்டு சிவபிரான் எழுந்தருளிய கயிலைமலையை அது பெயரும்வகையில் இருபது கரங்களை அம்மலையின் கீழ்ச் செலுத்திய இராவணனின் பத்துத் தலைகளில் உள்ள முடிகள் சிதறு மாறு தனது ஒரு கால் விரலால் அடர்த்துத் தன் வலிமையை அவனுக்கு உணர்த்தி அவனைப் பணி கொண்டருளும் சிவபிரான் உறையும் பதி, எண் திசைகளிலும் புகழ் நிறைந்த சிவபுரமாகும். அத்தலத்தை நினைபவர் வளமான இவ்வுலகில் எஞ்ஞான்றும் வாழ்வர்.

Koviloor Digital Library

225. அடன்மலி படையரி யயனொடு
மறிவரி யதொரழன் மலிதரு
சுடருரு வொடுநிகழ் தரவவர்
வெருவொடு துதியது செயவெதிர்
விடமலி களநுத லமர்கண
துடையுரு வெளிபடு மவனகர்
திடமலி பொழிலெழில் சிவபுர
நினைபவர் வழிபுவி திகழுமே. 9

கு-ரை : இது பிரமன் அருளால் வந்த தவவலிமையைக் கொண்டு இறைவனது கயிலையையெடுத்த இராவணனது முடியை நெரித்த முதல்வன் நகரத்தை நினைபவர் உலகத்தில் என்றும் வாழ்வர் என்கின்றது.

அசைவுஉறுதவம் - வருத்தம்மிக்க தவம். முயல் வினில் - முயன்றதால். நிசிசரன் - இராவணன்.

9. பொ-ரை : வலிமை மிக்க சக்கராயுதத்தைப் படைக்கலனாகக் கொண்ட திருமாலும் நான்முகனும் அறிதற்கரிய வகையில் அழல்மிக்க பேரொளிப் பிழம்பாய் வெளிப்பட்டருள அதனைக் கண்ட அவர்கள், அச்சங் கொண்டு துதி செய்த அளவில் அவர்கட்கு எதிரே விடம் பொருந்திய கண்டமும் நெற்றிக் கண்ணும் உடைய தனது உருவத்தோடு காட்சி நல்கிய சிவபிரான் எழுந்தருளிய தலம், உறுதியான மரங்கள் செறிந்த பொழில்கள்சூழ்ந்த எழில் பெற்ற சிவபுரமாகும். அதனை நினைபவரும் அவர் மரபினரும் உலகில் புகழோடு விளங்குவர்.

கு-ரை : அயன் மால் இவர்களுக்கிடையே அழல் வண்ணராய்த் தோன்றி, அவர்கள் துதிசெய்யக் கண்ணுதல் கண்டக் கறையோடு கூடிய தனதுருவத்தைக்காட்டிய இறைவன் நகரத்தை நினைப்பவர் வைத்தபடி உலகம் நடக்கும் என்கின்றது.

அடல் மலிபடை - வலிமை மிக்க சக்கரம், அவர் வெருவொடு துதி அது செய்ய - அவர்கள் அச்சத் தோடு துதிக்க (அதற்காக இரங்கி) வெளிபடுமவன் எனக் கூட்டுக. விடமலிகளம் - நீலகண்டம். நுதலமர் கண் அது உடை உரு - நெற்றிக் கண்ணையுடைய உரு. நினைபவர் வழி புவிதிகழும் எனப்பிரிக்க. வழி - வமிசம்.

Koviloor Digital Library

226. குணமறி வுகணிலை யிலபொரு
ளுரைமரு வியபொருள் களுமில
திணமெனு மவரொடு செதுமதி
மிகுசம ணருமலி தமதுகை
உணலுடை யவருணர் வருபர
னுறைதரு பதியுல கினினல
கணமரு வியசிவ புரநினை
பவரெழி லுருவுடை யவர்களே. 10

227. திகழ்சிவ புரநகர் மருவிய
சிவனடி யிணைபணி சிரபுர
நகரிறை தமிழ்விர கனதுரை
நலமலி யொருபது நவில்பவர்

10. பொ-ரை : குணங்களும் அறிவும் நிலையில்லாதன எனவும், காணப்படும் உலகப் பொருள்களும், உரைக்கும் உரையால் உணர்த்தப் படும் ஏனைய பொருள்களும், அவ்வாறே அழிந்து தோன்றுமியல்பின. இது திண்ணம் எனவும், கணபங்க வாதம் புரியும் கேட்டிற்குக் காரண மான அறிவினராகிய புத்தர்களும், தமது கையில் நிறைந்த உணவை வாங்கி உண்ணும் சமணர்களும், உணர்தற்கரிய சிவபிரான் உறையும் பதி, இவ்வுலகில் நல்லவர்கள் திரளாய் வாழும் சிவபுரமாகும். அதனை நினைபவர் அழகிய உருவோடு விளங்குவர்.

கு-ரை : குணம் அறிவு முதலாயின நிலையில்லாதன; உலகப் பொருள்களும் அங்ஙனமே என்னும் கணபங்கவாதிகளான புத்தர்களும் சமணர்களும் அறிவரிய அரன்பதியை நினைப்பவர் அழகான வடிவத்தை யடைவர் என்கின்றது. குணம் அறிவுகள் நிலையில எனப்பிரிக்க. செதுமதி - குற்றம்பொருந்தியபுத்தி. கை உணல் உடையவர் - கையில் பிச்சையேற்றுண்ணும் சமணர்.

11. பொ-ரை : இவ்வுலகில் புகழால் விளங்கும் சிவபுரநகரில் எழுந்தருளிய சிவபெருமானின் திருவடி இணைகளைப் பணிகின்ற சிரபுர நகர்த் தலைவனும், தமிழ் விரகனுமாகிய ஞானசம்பந்தன் பாடிய உரைச் சிறப்பு வாய்ந்த இத்திருப்பதிகப் பாடல்கள் பத்தினையும் ஓதி வழிபடுபவர் குலம், நிலம், நிறைந்த செல்வம், அழகிய வடிவம், ஒப் பற்ற கொடை வண்மை, மிக்க வெற்றித் திரு, இவ்வுலகிடை தொடர்ந்து

Koviloor Digital Library

நிகழ்குல நிலநிறை திருவுரு
நிகரில கொடைமிகு சயமகள்
புகழ்புவி வளர்வழி யடிமையின்
மிகைபுணர் தரநல மிகுவரே. 11

திருச்சிற்றம்பலம்

வரும் சந்ததி, இறைவனடியார் என்ற பெருமிதம் ஆகியன தம்பால் விளங்க எல்லா நலங்களும் மிகப் பெறுவர்.

கு-ரை : இதுவரை பாடல்தோறும் சிவனியல்பும், அவர் எழுந்தருளியுள்ள நகரழகும், அவரை அடைவார் அடைந்து வந்த பயன்களும் கூறிவந்த பிள்ளையார் இப்பாட்டில் இப்பதிகத்தைப் படிப்பார் எய்தும் பயனைத் தொகுத்துக் கூறுகின்றார். குலம் (6) நிலம் (8) நிறை திரு (2) உரு (10) சயமகள் (4) கலைமகள் (5) புகழ் (3) புவி வளர்வழி (9) அடிமை (7) இவ்வாறு இப்பதிகப்பயன் ஒவ்வொரு பாடலிலும் இருப்பதை ஓர்ந்து உணர்க.

அவிநாசி புராணம்

செம்புகலி லெழுதுபுகழ் வளவர்பிரான்
திருமகளார் திருநின் றோங்க
வெம்புகலி யமண்மாறத் தென்னர்புவி
வெண்ணீறு விளங்கி வாழ
நம்புகலி யாளுடைய பிள்ளையெனும்
தெள்ளுதமிழ் ஞான தீபம்
பம்புகலி நீர்த்தரங்கப் பொய்கைமருங்
கலர்கமல பதம்பெற் றுய்வாம்.

- இளையான் கவிராயர்.

திருவிளையாடற் புராணம்

கடியவிழ் கடுக்கை வேணித் தாதைபோற் கனற்கண் மீனக்
கொடியனை வேவ நோக்கிக் குறையிரந் தனையான் கற்பிற்
பிடியன நடையாள் வேண்டப் பின்னுயி ரளித்துக் காத்த
முடியணி மாடக் காழி முனிவனை வணக்கஞ் செய்வாம்.

- பரஞ்சோதி முனிவர்.

Koviloor Digital Library

22. திருமறைக்காடு

பதிக வரலாறு:

பிள்ளையார் திருநாவுக்கரசு சுவாமிகளோடு திருவாய்மூரைத் தரிசித்துக்கொண்டு மீண்டும் திருமறைக்காட்டிற்கு எழுந்தருளினார்கள். அங்கே 'கண்பயிலும் நெற்றியார்தம் கழலிணை பணிந்துபோற்றிச் 'சிலைதனை நடுவிடை' என்னும் பண்பயில் பதிகம் பாடிப் பரவி அங்கு எழுந்தருளியிருந்தார்கள்.

திருவிராகம்
பண்: நட்டபாடை

பதிக எண்: 22

திருச்சிற்றம்பலம்

228. சிலைதனை நடுவிடை நிறுவியொர்
சினமலி யரவது கொடுதிவி
தலமலி சுரரசு ரர்களொலி
சலசல கடல்கடை வுழிமிகு
கொலைமலி விடமெழ வவருடல்
குலைதர வதுநுகர் பவனெழில்
மலைமலி மதில்புடை தழுவிய
மறைவன மமர்தரு பரமனே. 1

1. பொ-ரை : மந்தரமலையை மத்தாக நடுவே நிறுத்தி, சினம் மிக்க ஒப்பற்ற வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகக் கொண்டு, விண்ணுலகில் வாழும் தேவர்களும் அசுரர்களும் சலசல என்னும் ஒலி தோன்றுமாறு திருப்பாற்கடலைக் கடைந்தகாலத்துக் கொல்லும் தன்மை வாய்ந்த ஆலகால விடம் அக்கடலில் தோன்ற, அதனால் தேவாசுரர்கள் அஞ்சி நடுங்கித் தன்னை நோக்கி ஓலமிட்ட அளவில் அந்நஞ்சை உண்டு அவர்களைக் காத்தருளியவன் அழகிய மலை போன்ற மதில்களால் சூழப்பட்ட மறைவனத்தில் எழுந்தருளிய பரமன் ஆவான்.

கு-ரை : இது விடத்தைக்கண்டு விண்ணவர் எல்லாரும் நடு நடுங்க, அதனை நுகர்பவன் மறைக்காட்டுறையும் பரமன் என்கின்றது.

Koviloor Digital Library

229. கரமுத லியவவ யவமவை
கடுவிட வரவது கொடுவரு
வரன்முறை யணிதரு மவனடல்
வலிமிகு புலியத ளுடையினன்
இரவலர் துயர்கெடு வகைநினை
யிமையவர் புரமெழில் பெறவளர்
மரநிகர் கொடைமனி தர்கள்பயில்
மறைவன மமர்தரு பரமனே. 2

சிலை - மந்தரமலை. சினம் மலி அரவு என்றது வாசுகி என்னும் பாம்பை. திவிதலம் - சுவர்க்கம். சலசல என்பது மத்தைக் கடையும் போது உண்டாகும் ஒலிக்குறிப்பு. அவர் உடல் குலைதர - அத்தேவா சுரர்கள் உடல் நடுநடுங்க.

மலைமலி மதில் - மலையை ஒத்த மதில். எல்லாத் தேவர் கட்கும் நடுக்கம் தந்த கடுவிடம் இவர்க்கமுதாயிற்று என்றது சிவனது அளவிலாற்றலையும் காக்கும் கருணையையும் விளக்கியது.

2. பொ-ரை : கைகள் முதலிய அவயவங்களில், கொடிய விடம் பொருந்திய பாம்புகளைத் தொன்றுதொட்டுவரும் வரன் முறைப்படி, வளை கேயூரம் முதலியனவாக அணி செய்து கொள்பவனும், கொலைத் தொழிலில் வல்லமை மிக்க புலியைக் கொன்று அதன் தோலை ஆடையாக அணிந்தவனுமாகிய பெருமான், இரவலர்களின் வறுமைத் துயர் போக எல்லோரும் நினைக்கும் தேவருலகம் அழகு பெற வளரும் கற்பகமரம் போன்ற கொடையாளர்கள் வாழும் மறைவனம் அமர்பரமன் ஆவான்.

கு-ரை : இது கற்பகம் ஒத்த கொடையாளர்கள் பயில்கின்ற மறைக்காட்டுறையும் பரமனே எங்கும் அரவத்தை அணிந்து புலித் தோலாடை புனைந்து விளங்குபவன் என்கின்றது. இதனால் இறை வனது ஆடையும் அணியுங்கூறி அறிவித்தவாறு.

கரம் - கை. கடு விட அரவு அது கொடு - கொடிய விடப் பாம்பைக் கொண்டு. வரன்முறையணிதரும் அவன் - முறையாக அவயவங்கட்கேற்றவாறு அணிபவன். அடல் வலி - கொல்லும் வன்மை. துயர்கெடுவகை நினைமனிதர்கள், இமையவர்புரம் எழில்பெற வளர் மரம் எனக்கூட்டுக. மரம் என்றது கற்பகத்தை.

Koviloor Digital Library

230. இழைவளர் தருமுலை மலைமகள்
இனிதுறை தருமெழி லுருவினன்
முழையினின் மிகுதுயி லுறுமரி
முசிவொடு மெழமுள ரியொடெழு
கழைநுகர் தருகரி யிரிதரு
கயிலையின் மலிபவ னிருளுறும்
மழைதவழ் தருபொழி னிலவிய
மறைவன மமர்தரு பரமனே. 3

231. நலமிகு திருவித ழியின்மலர்
நகுதலை யொடுகன கியின்முகை
பலசுர நதிபட வரவொடு
மதிபொதி சடைமுடி யினன்மிகு
தலநில வியமனி தர்களொடு
தவமுயல் தருமுனி வர்கடம்
மலமறு வகைமன நினைதரு
மறைவன மமர்தரு பரமனே. 4

3. பொ-ரை : அணிகலன்கள் பொருந்திய தனங்களை உடைய மலைமகள் இடப்பாகமாக இனிதாக உறையும் அழகிய திருமேனியை உடையவனும், குகைகளில் நன்கு உறங்கும் சிங்கங்கள், பசி வருதலினாலே மூரி நிமிர்ந்து எழ, தாமரை மலர்களோடு வளர்ந்து செழித்த கரும்புகளை உண்ணும் யானையினங்கள் அஞ்சி ஓடுகின்ற கயிலைமலையில் எழுந்தருளியவனும் ஆகிய பெருமான் கரிய மழை மேகங்கள் தவழும் பொழில்களை உடைய மறைவனத்தில் அமரும் பரமனாவான்.

கு-ரை : இது மறைவனத்துறையும் பரமனே மலைமகள் மணாளன், கயிலையின்பதி என்கின்றது. இழை - ஆபரணம். எழில் - அழகு, முழை - மலைக்குகை. அரி - சிங்கம். முசிவு, மெலிவு. முளரி - தாமரை. கழை - கரும்பு.

4. பொ-ரை : அணிவிப்பவர்க்கு நலம் மிகுவிக்கின்ற அழகிய கொன்றை மலர், கபாலம், ஊமத்தை, கங்கை நதி, பட அரவு, பிறை ஆகியனவற்றைச் சூடிய சடைமுடியினனாகிய பெருமான், பெரிதாய இவ்வுலகில் வாழும் மனிதர்கள், தவம் முயலும் முனிவர்கள்

Koviloor Digital Library

232. கதிமலி களிறது பிளிறிட
வுரிசெய்த வதிகுண னுயர்பசு
பதியதன் மிசைவரு பசுபதி
பலகலை யவைமுறை முறையுணர்
விதியறி தருநெறி யமர்முனி
கணனொடு மிகுதவ முயல்தரும்
அதிநிபு ணர்கள்வழி படவளர்
மறைவன மமர்தரு பரமனே. 5

ஆகியோர் தன்னை வழிபட அவர்கள் மலம் அகன்று உய்யும் வகையை நினையும் மறைவனம் உறையும் பரமன் ஆவான்.

கு-ரை : இது மக்கள் முனிவர் இவர்கள் மலம் அகன்று உய்யும் வகை திருவுளம்பற்றிய மறைவனத்திறைவனே கொன்றையும், கபாலமும், ஊமத்தமும், கங்கையும், அரவும், பிறையும் பொதிந்த சடைமுடியினன் என்கின்றது. இதழி - கொன்றை, நகுதலை - இறந்த பிரமனது மண்டையோடு. கனகி - ஊமத்தை, முனிவர்கள் தம் மலம் அறுவகை எனப்பிரிக்க. நகுதலை, மதி, அரவு முதலியவற்றின் தீமைகளைநீக்கி அருள் செய்கின்றான் என்பது.

5. பொ-ரை : நடை அழகுடன் தன்னை எதிர்த்து வந்த களிறு அஞ்சிப் பிளிற, அதனை உரித்தருளிய மிக்க குணாளனும், உயர்ந்த பசுக்களின் நாயகனாகிய விடையின்மீது வரும் ஆருயிர்களின் தலைவனும் ஆகிய பெருமான், பல கலையும் முறையாகக் கற்று உணர்ந்தவர்களும், விதிகளாகத் தாம் கற்ற நெறிகளில் நிற்போரும் ஆகிய முனிவர் குழாங்களும், மிக்க தவத்தை மேற்கொண்டொழுகும் அதி நிபுணர்களும், தன்னை வழிபடுமாறு வளங்கள் பலவும் வளரும் மறைவனத்தில் அமர்ந்தருளும் பரமன் ஆவான்.

கு-ரை : இது பலகலையாகமவேத நூல்களை முறையாகக்கற்று, கற்றவண்ணம் ஒழுகுகின்ற முனிவர்களும், மிகத் தவஞ்செய்யும் அதி நிபுணர்களும் வழிபடும் மறைவனநாதனே யானையை உரித்துப் போர்த்த பெருவீரன், பசுபதிமேல்வரு பசுபதி என்கின்றது.

கதி - நடை. அதிகுணன் - குணங்களான் மிகுந்தவன். பசு - இடபம். பசுபதி - ஆன்மாக்கள் அனைவர்க்கும் தலைவன். விதி - செயல்முறை.

Koviloor Digital Library

233. கறைமலி திரிசிகை படையடல்
கனன்மழு வெழுதர வெறிமறி
முறைமுறை யொலிதம ருகமுடை
தலைமுகிழ் மலிகணி வடமுகம்
உறைதரு கரனுல கினிலுய
ரொளிபெறு வகைநினை வொடுமலர்
மறையவன் மறைவழி வழிபடு
மறைவன மமர்தரு பரமனே. 6

234. இருநில னதுபுன லிடைமடி
தரவெரி புகவெரி யதுமிகு
பெருவெளி யினிலவி தரவளி
கெடவிய னிடைமுழு வதுகெட

6. பொ-ரை : குருதிக் கறைபடிந்த முத்தலைச் சூலம், வருத்தும் தழல் வடிவினதாகிய மழுவாயுதம், கையினின்று எழுவது போன்ற வெறித்த கண்களை உடைய மான், முறைமுறையாக ஒலி செயும் உடுக்கை, முடைநாறும் பிரம கபாலம், முகில் போலும் கூரிய கணிச்சி, வடவை முகத்தீ ஆகியன உறையும் திருக்கரங்களை உடையவனும், தாமரை மலரில் எழுந்தருளிய வேதாவாகிய நான்முகனால் உலகில் உயர்ந்த புகழோடு விளங்கும் நினைவோடு வேத விதிப்படி வழிபடப் பெறுபவனுமாகிய சிவபிரான் மறை வனத்தில் உறையும் பரமன் ஆவான்.

கு-ரை : இது உலகத்தில் உயர்வதற்காகப் பிரமன் வழிபட்ட மறைவனத்து இருந்தருள் பரமன் திரிசூலம் முதலியவற்றைத் தாங்கிய எட்டுக்கரங்களை யுடையவன் என்கின்றது. கறை - இரத்தக்கறை. திரிசிகை - முத்தலைச்சூலம். அடல்கனல் மழு - வருத்தும் தழல்வடிவாகிய மழுப்படை. எழுதர வெறி மறி - திருக்கரத்தை விட்டு எழும்புவது போலும் வெறித்தகண்ணையுடைய மான். முடைதலை - முடைநாற்றம் வீசும் பிரமகபாலம். முகிழ் மலி கணி - முகில்போலும் கூரிய குந்தாலிப்படை. வடமுகம் - வடவாமுகாக்கினி. ஒளி - புகழ். 'ஒளிநிறான்' என்பதும் ஓர்க. மறைவழி - வேதவிதிப்படி. இறைவன் படையிலங்கு கரம் எட்டுடையானாக இருப்பது குறிக்கப்பெறுகிறது.

7. பொ-ரை : பேருழிக் காலத்தில் பெரிய இந்நிலமாகிய மண் புனலில் ஒடுங்க, நீர் எரியில் ஒடுங்க, எரி வளியில் ஒடுங்க, வளி

Koviloor Digital Library

இருவர்க ளுடல்பொறை யொடுதிரி
யெழிலுரு வுடையவ னினமலர்
மருவிய வறுபத மிசைமுரன்
மறைவன மமர்தரு பரமனே. 7

ஆகாயத்தில் ஒடுங்க, பரந்துபட்ட இவ்வுலகமும் உலகப் பொருள் களும் ஆகிய அனைத்தும் அழிய, அதுபோது பிரம விட்டுணுக்களது முழு எலும்புக் கூட்டை அணிந்து, தான் ஒருவனே தலைவன் எனத் திரியும் அழகுடையவன், வண்ண மலர்க் கூட்டங்களில் வண்டுகள் இசை முரலும் மறைவனம் அமரும் பரமன் ஆவான்.

கு-ரை : இது ஐம்பெரும் பூதங்களும் ஒன்றினொன்று ஒடுங்க, இறுதியில் மால் அயன் இவர்களுடைய உடற்பொறையோடு திரிகின்ற இறைவன், மறைவனநாதன் என்கின்றது. நிலன் நீரில் ஒடுங்க, நீர் எரியில் ஒடுங்க, எரி வளியில் ஒடுங்க வளி ஆகாயத்தில் ஒடுங்க அப்போது மாலயன் இருவரும் அழிய, அவர்கள் எலும்பை அணிந்து, தான் ஒருவனே தலைவன் என்பதை உணர்த்தித் திரிபவன் என்ப தையும், இத்தகைய சங்காரகாரணனையே உலகு முதலாகவுடையது என்பதையும் உணர்த்தி நிற்பன் என்பதாம். இனமலர் - கூட்டமான மலர், அறுபதம் - வண்டு. இது ஒடுக்க முறை கூறியது.

இதனால் மண் முதலிய பூதங்கள் ஒன்றினொன்று தோன்றும் என்பதுபெறப்படுகிறது. இதனையே உட்கொண்டு இப்பாடலும் ஒடுக்கமுறை கூறுகிறது. இது காரியத்தின் குணம் காரணத்தினும் உண் டென்பது நியமமாகலின் புடவிக்குரிய ஐந்து குணங்களும் அதற்குக் காரணமென்ற புனலுக்கும் உளவாதல் வேண்டும். அங்ஙனமே ஏனைய பூதங்கட்கும், அஃதின்மையின் ஒரு பூதம் மற்றொரு பூதத் திற்குக் காரணமாகாது பஞ்சதன்மாத்திரைகளே காரணமாகும் என்பது சைவசித்தாந்தத் துணிபு. அதனோடு ஒடுக்கமுறை கூறும் இச்செய்யுள் முரணுமெனின், முரணது. மாதவச் சிவஞான யோகிகள் மாபாடியத்து இச்செய்யுளை எடுத்துக்காட்டிக் கூறுவது:

''அற்றேல், வேதத்துள் அங்ஙனம்[1] ஒன்றினொன்று தோன்று'' மென்ற வாக்கியத்தோடும், ''இருநில னதுபுன லிடை மடி தரவெளி புகவெரி யதுமிகு - பெருவெளியினிலவி தரவளி கெடவிய

[1] இதனை ''நாகாசாத் ஜாயதே வாயுர் நவாயோ ரக்னி ஸம்பவ: நாக்னொராபஸ்த: ப்ருத்வீ தர்மாதி சயதர்ச நாத்'' ''காரணாத்குணசங்க்ராந்திர்யுக்தா கார்யெஷு நஸ்வத: ''வ்யோம்ந: பஞ்ச குணத்வம் ஸ்யாத் ததா ஸ்ருஷ்டி க்ரமோ

Koviloor Digital Library

னிடைமுழு வதுகெட - விருவர்களுடல் பொறையொடுதிரி யெழிலுரு வுடையவன்'' எனச் சங்கார முறைபற்றி வேதவாக்கியப் பொருளை வலியுறுத்தோதிய திருப்பாட்டோடும் முரணுமாலெனின், - அற்றன்று; [1]வேதஞ்சிவாகமம் இரண்டும் செய்த முதற்கருத்தா பரமசிவ னொருவனேயாகலின், அவைதம்முண் முரணுமாறின்மையின், ஒரோவழிமுரணுவன போலத் தோன்றியவழி, முரணாகாதவாறு வன்மை மென்மைபற்றித் தாற்பரியங்கோடல் வேண்டும். அற்றாக லினன்றே [2]தேயுமுதன் முப்பூதங்கட்கே தோற்றங்கூறி, ''இம்முப் பூதமயமே பிரபஞ்சமெல்லாம்'' என விரித்தோதிய சாந்தோக்கிய வுபநிடதமும், ஆகாயமுதல் ஐந்திற்குந் தோற்றங்கூறி, ''ஐம்பூதமயமே பிரபஞ்சமெல்லாம்'' என்னும் தைத்திரீயவுபநிடதமும் தம்முண் முரணுவனபோலத் தோன்றுதலின், அங்ஙனம் முரணாமைப் பொருட்டு வன்மைமென்மைநோக்கித் தைத்திரீயத்திற் கூறியதே பிரமாணமெனவும், சாந்தோக்கியத்திற்கூறும் வாக்கியங்கட்கும் அதுவே தாற்பரிய மெனவும், உத்தரமீமாஞ்சையின் வியததிகரணத்து ளோதியதூஉம்; மற்றும் ஆண்டாண்டு முரணாதவண்ணம் ஒன்று முக்கியப்பொருளும், ஒன்று தாற்பரியப்பொருளுமாக வைத்துப் பொருளொருமையுணர்த்தியதூஉ மென்க.

ஆதலின் இப்பகுதிக்கு நிலம் இரதத்தோடு கூடி விசிட்டமாய் நின்ற கந்த தன்மாத்திரையில் ஒடுங்கிற்றென்றும், நீர் உருவத்தோடு

யதி! தந்மாத்ர பஞ்ச காஜாதம் ததோ வ்யோமாதி பஞ்சகம்'' என்னும் பவுட்கராகமத்தான் அறிக. பூதங்கள் ஒன்றினொன்று தோன்றுமென்னும் வேதவாக்கியம் ''தஸ்மாத்வா ஏதஸ்மாதாத்மன ஆகாச ஸம்பூத: ஆகாசாத் வாயு: வாயோரக்னி: அக்னேராப: அத்ப்ய: ப்ருதிவீ'' என்பதாம்.

– தைத்திரீயம் 2 -1.

[1] சாந்தோக்கியத்தில், ''தத்தேஜோ ஸ்ருஜத தத்தேஜ ஐக்ஷத பஹுஸ்யாம் பிரஜா யேயேதி ததபோ ஸ்ருஜத சஸ்மா த்யத்ரக்வச சோசதி ஸ்வேததேவா புருஷஸ் தேஜஸ ஏவ தத்த்யா போ ஜாயந்தே (6-2-3) தாஆப ஐக்ஷந்தே ப்ஹ்வ்ய ஸ்யாம பிரஜாயே மஹீதி தா அன்னம ஸ்ருநந்த (6-2-4)'' எனவும், ''தேஷாம் கல்பேஷாம் பூதானாம் த்ரீண்யேவ பீஜாநி பவத் யண்டஜம் ஜீவஜ முத்பிஜ் ஜமிதி'' எனவும் வருதல்காண்க.

[2] பூதங்கள் ஒன்றினொன்று தோன்றுமென்னும் வேதவாக்கியம், ''தஸ்மாத்வா ஏகஸ்மா தாத்மந ஆகாச சம்புத: ஆகாசா துவாயு:வாயோ ரக்னிஹி அக்னோ ராப:அசத்ப்ய:''

– ப்ருதிவீ தைத்திரயம் 2 -1.

Koviloor Digital Library

235. சனம்வெரு வுறவரு தசமுக
னொருபது முடியொடு மிருபது
கனமரு வியபுய நெரிவகை
கழலடி யிலொர்விர னிறுவினன்
இனமலி கணநிசி சரன்மகிழ்
வுறவருள் செய்தகரு ணையனென
மனமகிழ் வொடுமறை முறையுணர்
மறைவன மமர்தரு பரமனே. 8

236. அணிமலர் மகள்தலை மகன்அயன்
அறிவரி யதொர்பரி சினிலெரி
திணிதரு திரளுரு வளர்தர
வவர்வெரு வுறலொடு துதிசெய்து

கூடி விசிட்டமாய்நின்ற இரத தன்மாத்திரையில் ஒடுங்கிற்றென்றும் தீ பரிசத்தோடு கூடி விசிட்டமாய் நின்ற உருவ தன்மாத்திரையில் ஒடுங்கிற்றென்றும், காற்று சத்தத்தோடு கூடி விசிட்டமாய் நின்ற பரிச தன்மாத்திரையில் ஒடுங்கிற்றென்றும், ஆகாயம் பிரமமாகிய சதா சிவத்தால் அதிட்டிக்கப்படும் சத்த தன்மாத்திரையில் ஒடுங்கிற் றென்றும் பொருள் கோடலே மரபாம்.

8. பொ-ரை : மக்கள் அஞ்சுமாறு வருகின்ற இராவணனின் பத்துத் தலைகளோடு பெரிதாய இருபது தோள்களும் நெரியுமாறு வீரக் கழல் அணிந்த திருவடியில் உள்ளதொரு விரலை ஊன்றி அடர்த் தவன். அவன் பிழை உணர்ந்த அளவில் அரக்கர் கூட்டமுடைய அவ் இராவணன் மனம் மகிழ்வுறுமாறு பேர், வாழ்நாள், தேர், வாள் முதலியன அளித்தருளிய கருணையாளன் என நான்மறைகளை முறை யாக உணர்ந்த வேதியர் மனமகிழ்வொடு புகழும் மறைவனத்தில் அமர்ந்தருளும் பரமன் ஆவான்.

கு-ரை : இது இராவணனுக்கு அருள் செய்த கருணையை யுடையன் என்று அனைவரும் உணர 'மறைவனம் அமர்தரு பரமன்' இருக்கின்றான் என்கின்றது. சனம் - மக்கள். கனமருவிய புயம் - பருத்ததோள். இனம் மலி - அரக்கர் கூட்டத்தால் நிறைந்த, நிசிசரன் - இராவணன்.

9. பொ-ரை : அழகிய மலர்மகள் கேள்வனும், அயனும்

Koviloor Digital Library

பணியுற வெளியுரு வியபர
னவனுரை மலிகட றிரளெழும்
மணிவள ரொளிவெயின் மிகுதரு
மறைவன மமர்தரு பரமனே. 9

237. இயல்வழி தரவிது செலவுற
வினமயி லிறகுறு தழையொடு
செயன்மரு வியசிறு கடமுடி
யடைகையர் தலைபறி செய்துதவம்
முயல்பவர் துவர்பட முடல்பொதி
பவரறி வருபர னவனணி
வயலினில் வளைவள மருவிய
மறைவன மமர்தரு பரமனே. 10

அறிதற்கு அரியதொரு தன்மையில் அனல் செறிந்த பிழம்புருவத்தோடு தோன்ற அதனைக் கண்டு அவ்விருவரும் அஞ்சித் துதி செய்து பணிய, வானவெளியைக் கடந்த பேருருவத்தோடு காட்சி நல்கிய பரனாகிய அவன் நுரைமிக்க கடல் திரட்சியில் தோன்றும் மணிகளின் வளர் ஒளியினால் வெயிலொளி மிகுந்து தோன்றும் மறைவனத்தில் அமரும் பரமன் ஆவான்.

கு-ரை : மறைவனத்துப் பரமனே அயனும் மாலும் அறியொண்ணுதபடி அண்ணுமலையாய், அவர்கள் அச்சத்தோடு துதி செய்ய வெளிப்பட்டு உருவங்கொண்ட பரன் என்கின்றது. மலர் மகள் தலைமகன் - திருமால். பரிசு - தன்மை. எரி திணிதரு திரள் உரு - செறிவான தீப்பிழம்பின் வடிவு, வெளி உருவிய - ஆகாயத்தைக் கடந்த, நுரை மலிகடல் - நுரைமலிந்த கடல்.

10. பொ-ரை : உலக இயல்பு கெடுமாறு நடை உடை பாவனைகளால் வேறுபடத் தோன்றிப் பல மயில்களின் தோகைகளைக் கொண்டு வழிகளை உயிரினங்களுக்கு ஊறு வாராதபடி தூய்மை செய்து நடத்தலைச் செய்து சிறிய குண்டிகை வைக்கப்பட்ட உறியை ஏந்திய கையராய்த் தலையைப் பறித்து முண்டிதமாக்கிக் கொண்டு தவம் முயலும் சமணர்களும், துவராடையால் உடலை மூடியவர்களாகிய புத்தர்களும் அறிதற்கரிய பரனாகிய அவன், அழகிய வயலில் சங்கீன்ற முத்துக்கள் நிறைந்துள்ள மறைவனத்தில் அமர்ந்துறையும் பரமன் ஆவான்.

Koviloor Digital Library

238. வசையறு மலர்மக ணிலவிய
மறைவன மமர்பர மனைநினை
பசையொடு மிகுகலை பலபயில்
புலவர்கள் புகழ்வழி வளர்தரு
இசையமர் கழுமல நகரிறை
தமிழ்விர கனதுரை யியல்வல
இசைமலி தமிழொரு பதும்வல
வவருல கினிலெழில் பெறுவரே. 11

திருச்சிற்றம்பலம்

கு-ரை : இது புறச்சமயத்தாரால் அறியமுடியாத பரன் 'மறை வனநாதன்' என்கின்றது. இயல்வு அழிதர - உலகவியற்கை கெட, விதுசெலவுற - காற்று வீச. மயில் இறகு தழையொடு - மயிற்பீலிக் கற்றையொடு. செயல் மருவிய சிறுகடம் முடி - வேலைப்பாடமைந்த குண்டிகை வைக்கப்பட்ட உறி, துவர்படம் - கல்லாடை. வளை வளம் - சங்குதந்த முத்தாகிய வளப்பங்கள்.

11. பொ-ரை : குற்றமற்ற திருமகள் நிலவும் மறைவனத்தில் அமர்ந்துள்ள பரமனை அன்போடு நினையும் மிகுந்த கலைகளில் வல்ல புலவர்களின் புகழோடு வளரும் கழுமலநகர்த் தலைவனும் தமிழ் விரகனும் ஆகிய ஞானசம்பந்தனுடைய இயற்றமிழிலும் மேம்பட்ட இசை மலிந்த இத்திருப்பதிகப் பாடல்கள் பத்தையும் வல்லவர் உலகினில் அழகெய்துவர்.

கு-ரை : இது மறைவனநாதனை மனத்தெண்ணிய அன்போடு, கற்றார் பயிலும் காழி ஞானசம்பந்தன் சொன்ன இப்பத்துப் பாடல்களையும் வல்லவர்கள் உலகில் அழகெய்துவர் என்கின்றது. வசையறு மலர்மகள் - குற்றமற்ற திருமகள், திருமகளுக்குக் குற்றம் ஓரிடத்தும் நில்லாமையும், தக்காரிடத்துச் செல்லாமையும் போல்வன. மறைவனத்து அங்ஙனம் இல்லாமையின் குற்றமற்றவள் ஆயினள்.

Koviloor Digital Library

23. திருக்கோலக்கா

பதிக வரலாறு:

ஞானபோனகராகிய பிள்ளையார் தமது காழித் தந்தையாரையும் ஞானப்பால் தந்த தாயாரையும் வணங்கிப் பக்கத்திலுள்ள திருக்கோலக்காவிற்கு வழிபடச் சென்றார். அங்கே திருக்கோயிலை வலஞ்செய்து கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் செம்பொருளாகிய வேதவிழுப்பொருளை, நீலகண்டப் பெருமானைப் பொருளாகக்கொண்டு 'மடையில் வாளைபாய' என்னும் பதிகத்தால் கைத்தாளம் இட்டுப்பாடி யருளினார். அதனைக்கண்ட இறைவன் கனிந்து திருவைந் தெழுத்தெழுதிய செம்பொற்றாளத்தை ஈந்தருளினார். தாளம் வையம் எல்லாம் உய்யவரும் மறைச்சிறுவர் கைத்தலத்து வந்தது. அவற்றைப் பிள்ளையார் கையேற்றுத் திருமுடிமேல் வைத்து ஏழிசையுந்தழைத்தோங்க இன்னிசைப் பதிகம் பாடி யருளினார். இப்பதிகத்தின் திருக்கடைக்காப்புச் செய்யுளைச் சேக்கிழார் பெருமான் 'தக்கதிருக்கடைக்காப்பு' என்கிறார்கள்.

பண்: தக்கராகம்

பதிக எண்: 23

திருச்சிற்றம்பலம்

239. மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீள்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ. 1

1. பொ-ரை : நீரைத் தேக்கி வெளிவிடும் மடையில் வாளை மீன்கள் துள்ளிப் பாயுமாறு பெண்கள் கையால் குடைந்து நீராடும் பொய்கைகளை உடைய திருக்கோலக்காவில் எழுந்தருளியுள்ள இறைவன், சடைமுடியையும், அதன்கண் பிறையையும், திருமேனி முழுவதும் திருநீற்றுப் பூச்சையும் இடையில் ஆடையாகக் கீள் உடையையும் கொண்ட உருவம் உடையவனாய் இருப்பது ஏனோ?

கு-ரை : இது மாதர் நீராடுவதால் வாளைமீன் துள்ளும் பொய்கைக் கரையிலுள்ள கோலக்காவிலுள்ளவன், சடையும் பிறையும்

Koviloor Digital Library

240. பெண்டான் பாக மாகப் பிறைச்சென்னி
கொண்டான் கோலக் காவு கோயிலாக்
கண்டான் பாதங் கையாற் கூப்பவே
உண்டா னஞ்சை யுலக முய்யவே. 2

தாங்கி, சாம்பலைப்பூசி, கீள்உடுத்து இருக்கின்ற வடிவத்தைக் கொண்டது ஏனோ என்கின்றது.

தலமோ மாதர் நீராட வாளை மடையில் பாயும் வளம் பொருந்திய தலம் . அதற்கேற்ப இவர் அணியணிந்து, சாந்தம்பூசி, பட்டுடுத்து வாழாது இங்ஙனமாய திருக்கோலத்தைக் கொண்டதேன்? கீளுடை - கீளோடு கட்டின கோவண உடை.

குருவருள் : இப்பாடலில் கீள் உடை என்பதே சரியான பாடம். கீள் என்பது கீளப்பட்ட அஃதாவது கிழிக்கப்பட்ட வாராகும். 'கீளார் கோவணமும்' என்ற சுந்தரர் தேவாரமும் காண்க. சடை இறைவனது எண்குணங்களுள் அளவிலாற்றலுடைமையைக் குறித்தது. 'கடுத்து வரும் கங்கைதனைக் கமழ்சடை ஒன்று ஆடாமே தடுத்தவர்' என்ற பிள்ளையார் வாக்கும் காண்க. எண்குணங்களுள் பிறை, பெருமான் கருணையாளன் என்பதை நினைவுறுத்துகிறது. தவறு செய்தவன் உணர்ந்தால் மன்னித்து அருள் வழங்கும் கருணை இதில் புலப்படுதல் காணலாம். சாம்பற் பூச்சும், கீள் உடையும் பரமனின் பற்றற்ற நிலையைக் குறிப்பன. எல்லாம் இருந்தும் தான் ஒன்றும் அநுபவி யாமல் யோகியாயிருந்து உயிர்கட்கு யோகநெறி காட்டி விடுதலை செய்பவன் என்பதைக் குறிப்பது.

2. பொ-ரை : உமையம்மையைத் தன் திருமேனியில் இடப் பாதியாகக்கொண்டு, கலைகள் ஒன்றொன்றாகக் குறைந்து வந்த இளம் பிறையைச் சடைமுடி மீது ஏற்றுக் கொண்டவனாகிய சிவபிரான், கோலக்காவிலுள்ள கோயிலைத் தன் இருப்பிடமாகக் கொண்டவன். திருப்பாற்கடலில் நஞ்சு தோன்றியபோது காவாய் என அனைவரும் கைகூப்பி வணங்க உலகம் உய்யுமாறு அந்நஞ்சினை உண்டு அருளியவன்.

கு-ரை : இது கோலக்காவிற் கோயில்கொண்ட இறைவன், எல்லாருந்தொழ, உலகம் உய்ய, கடல் நஞ்சை உண்டான் என்கின்றது. நஞ்சுண்டது தம் வீரத்தை வெளிப்படுத்தற்கன்று; உலகமுய்ய எழுந்த பெருங்கருணையைத் தெரிவித்தவாறு.

Koviloor Digital Library

241. பூணற் பொறிகொ ளரவம் புன்சடை
கோணற் பிறையன் குழகன் கோலக்கா
மாணப் பாடி மறைவல் லானையே
பேணப் பறையும் பிணிக ளானவே. 3

242. தழுக்கொள் பாவந் தளர வேண்டுவீர்
மழுக்கொள் செல்வன் மறிசே ரங்கையான்
குழுக்கொள் பூதப் படையான் கோலக்கா
இழுக்கா வண்ண மேத்தி வாழ்மினே. 4

3. பொ-ரை : அழகிய புள்ளிகளை உடைய பாம்பை அணி கலனாகக் கொண்டு, சிவந்த சடையின்மேல் வளைந்த பிறைமதியைச் சூடிய, என்றும் மாறா இளமைத் தன்மை உடைய சிவபிரான் எழுந்தருளி விளங்கும் திருக்கோலக்காவை மாட்சிமை தங்கப் பாடி, வேதங்களை அருளிய அப்பெருமானைப் பேணித் தொழப் பிணி களானவை நீங்கும்.

கு-ரை : கோலக்காவில் குழகனைப் பேணப் பிணிகள் நீங்கும் என்கின்றது. பூண் நல் பொறிகொள் அரவம் - நற்பொறிகொள் அரவம் பூண் என மாற்றுக. குழகன் - இளமையுடையவன் . மாண - மாட்சிமை மிக. பேண - மனத்துள் இடைவிடாது தியானிக்க. பறையும் - ஒன்றொன்றாக உருவமின்றிக் கெடும்.

4. பொ-ரை : பல்வேறு சமயங்களிலும் செய்த பாவங்கள் நீங்க வேண்டும் என்று விரும்புகின்றவர்களே! மழுவாயுதத்தைப் படைக் கலனாகக் கொண்ட செல்வனும், மானை ஏந்திய அழகிய கையை உடையவனும், பூதங்களின் குழுக்களை உடையவனும் ஆகிய சிவபிரானது கோலக்காவைத் தவறாமல் சென்று தரிசித்து வாருங்கள். நும் பாவங்கள் அகலும்.

கு-ரை : பாவங்கள் தளர வேண்டுபவர்களே! கோலக்காவில் இறைவனைக் கும்பிட்டு வாழ்த்துங்கள் என்கின்றது.


தழுக்கொள் பாவம் - ஆணவமுனைப்போடு கூடிய ஆன்ம போதத்தால் தழுவிக் கொள்ளப்பட்ட பாவங்கள். இழுக்கா வண்ணம் - தவறாதபடி.

Koviloor Digital Library



திருக்கோலக்கா: பொற்றாளம் பெற்றது

Koviloor Digital Library



திருக்கோலக்கா:
அருள்மிகு சப்தபுரீசுவரர் ஆலயம்

Koviloor Digital Library

243. மயிலார் சாயன் மாதோர் பாகமா
எயிலார் சாய வெரித்த வெந்தைதன்
குயிலார் சோலைக் கோலக் காவையே
பயிலா நிற்கப் பறையும் பாவமே. 5

244. வெடிகொள் வினையை வீட்ட வேண்டுவீர்
கடிகொள் கொன்றை கலந்த சென்னியான்
கொடிகொள் விழவார் கோலக் காவுளெம்
அடிகள் பாத மடைந்து வாழ்மினே. 6

5. பொ-ரை : ஆண்மயில் போலும் கட்புலனாகிய மென்மையை உடைய உமையம்மையை ஒரு பாகமாக உடையவனும், அசுரர்களின் முப்புரங்கள் கெடுமாறு அவற்றை எரித்தவனும் ஆகிய எம் தந்தை யாகிய சிவபிரானது, குயில்கள் நிறைந்து வாழும் சோலைகளை உடைய திருக்கோலக்காவைப் பலகாலும் நினைக்கப் பாவங்கள் நீங்கும்.

கு-ரை : திரிபுரம் எரித்த செல்வன் எழுந்தருளியுள்ள கோலக்காவை இடைவிடாது நினைக்கப் பாவம் பறையும் என்கின்றது.

மாது - உமாதேவி. நோக்கினார்கண்ணுக்கு இனிமையும், பிறவியான் வரும் மயக்கம் அறுக்கும் மருந்துமாகலின் இறைவி மயிலார்சாயலள் ஆயினள். எயிலார் - திரிபுராதிகள். பயிலா நிற்க - இடைவிடாது தியானிக்க.

6. பொ-ரை : ஒன்றிலிருந்து பிறிதொன்று கிளைக்கும் வினைப்பகையை நீக்கிக் கொள்ள விரும்புகின்றவர்களே! மணம் பொருந்திய கொன்றை மலர் விரவிய சென்னியை உடையோனும்; கொடிகள் கட்டப்பெற்று விழாக்கள் பலவும் நிகழ்த்தப்பெறும் கோலக்காவில் விளங்கும் எம் தலைவனும் ஆகிய பெருமான் திருப்பாதங்களை அடைந்து வாழ்வீர்களாக.

கு-ரை : இது வினைகெட வேண்டுவீர் கோலக்காவின் அடிகளை அடைந்து வாழுங்கள் என்கின்றது.

வெடிகொள்வினை - வாழை சிங்கம் வெடித்தது என்றாற் போல ஒரு முதலிலிருந்து பலவாகப் பல்கும்வினை. கடி - மணம்.

Koviloor Digital Library

245. நிழலார் சோலை நீல வண்டினங்
குழலார் பண்செய் கோலக் காவுளான்
கழலான் மொய்த்த பாதங் கைகளால்
தொழலார் பக்கல் துயர மில்லையே. 7

246. எறியார் கடல்சூ ழிலங்கைக் கோன்றனை
முறியார் தடக்கை யடர்த்த மூர்த்திதன்
குறியார் பண்செய் கோலக் காவையே
நெறியாற் றொழுவார் வினைகள் நீங்குமே. 8

247. நாற்ற மலர்மே லயனு நாகத்தில்
ஆற்ற லணைமே லவனுங் காண்கிலாக்

7. பொ-ரை : நிழல் செறிந்த சோலைகளில் நீல நிறம் பொருந்திய வண்டினங்கள் வேய்ங்குழல் போல இசை வழங்கும் திருக்கோலக்காவில் விளங்கும் சிவபிரானுடைய வீரக்கழல் செறிந்த திருவடிகளைக் கை கூப்பித் தொழுபவர் பக்கம் துயரம் வாராது.

கு-ரை : இது கோலக்காவுளான் பாதம் தொழுவார்க்குத் துயர மில்லை என்கின்றது. குழலார் - குழல்போல. கழலான் மொய்த்த பாதம் - வீரக்கழலோடு செறிந்த சேவடி.

8. பொ-ரை : அலைகள் எறியும் கடலால் சூழப்பட்ட இலங்கை மன்னனாகிய இராவணனை, அவன் நீண்ட கைகள் முரிதலைப் பொருந்துமாறு அடர்த்த சிவ்பிரானைச் சுரத்தானங்களைக் குறித்த பண்ணிசையால் கோலக்காவில் சிவாகம நெறிகளின்படி வழிபடுவார் வினைகள் நீங்கும்.

கு-ரை : கோலக்காவைத் தொழுவார் வினை நீங்கும் என் கின்றது . எறியார்கடல் - எறிதலைப் பொருந்துகின்ற கடல். அதாவது கரையொடு மோதுகின்றகடல். முறியார் தடக்கை - முரிதல் அமைந்த தடக்கை என்றது அவனது இருபது தோள்களையும். குறியார் பண் 'குறிகலந்த இன்னிசை' என்பது போலக் கொள்க. நெறியால் தொழு வார் - சிவாகம நெறிப்படியே வணங்குகின்றவர்கள். வினைகள் நீங்கும் என்றது வினைகள் தாமே கழலும் என்பதை விளக்கிற்று.

9. பொ-ரை : மணம் பொருந்திய தாமரை மலர் மேல் விளங்கும் நான்முகனும், ஆற்றல் பொருந்திய ஆதிசேடனாகிய அணையில்

Koviloor Digital Library

கூற்ற முதைத்த குழகன் கோலக்கா
ஏற்றான் பாத மேத்தி வாழ்மினே. 9

248. பெற்ற மாசு பிறக்குஞ் சமணரும்
உற்ற துவர்தோ யுருவி லாளருங்
குற்ற நெறியார் கொள்ளார் கோலக்காப்
பற்றிப் பரவப் பறையும் பாவமே. 10

249. நலங்கொள் காழி ஞானசம் பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானையே

உறங்கும் திருமாலும் காணுதற்கு இயலாத, இயமனை உதைத்த குழகன் ஆகிய கோலக்காவில் விளங்கும் ஆன்ஏற்றை வாகனமாகக் கொண்ட இறைவன் திருவடிகளைப் போற்றி வாழ்வீர்களாக.

கு-ரை : அயனும் மாலுங் காணாத கூற்ற முதைத்த குழகன் பாதத்தை ஏத்தி வாழுங்கள் என்கின்றது. நாற்றம் - மணம். நாகத்தில் - ஆதிசேடனிடத்தில். ஏற்றான் - இடமாக ஏற்றுக் கொண்டவன்.

10. பொ-ரை : நீராடாமல் தம் உடலிற் சேர்ந்த மாசுடன் தோன்றும் சமணரும், தம் உடலிற் பொருந்திய கல்லாடையால் தம் உருவை மறைத்துக் கொள்ளும் புத்தர்களும், குற்றமுடைய சமய நெறியை மேற்கொண்டவராவர். அவர்கள் தம் தெய்வம் என்று ஏற்றுக் கொள்ளாத கோலக்கா இறைவனைப் பற்றிப் போற்றப் பாவம் தீரும்.

கு-ரை : சமணர்களும் புத்தர்களும் சொல்வனவற்றைக் கொள்ளாத பெரியோர்கள் கோலக்காவைத் தொழப் பாவம் பறையும் என்கின்றது. பெற்றமாசு பிறக்கும் சமணர் - தாங்களாகவே பெற்ற அழுக்குக்களை மறையாது (கழுவாது) வெளிப்படுத்திக் கொள்ளும் சமணர்கள். துவர்தோய் உருவிலாளர் - காவியாடையால் உருவந் தோன்றாதே மறைத்த புத்தர்கள். ஆகிய இருவரும், குற்ற நெறியார் - குற்றப்பட்ட சமயநெறியை உடையவர்கள்.

11. பொ-ரை : இயற்கை நலங்கள் யாவும் நிறைந்த சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன், பண்பால் உயர்ந்த குலத்தினரைக் கொண்டுள்ள கோலக்காவில் விளங்கும் இறைவனைப் பாடிய திருவருள் வென்றியைக் கொண்ட இத்திருப் பதிகப் பாடல்களை ஓதி

Koviloor Digital Library

வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கொள் வினைபோ யோங்கி வாழ்வரே. 11

திருச்சிற்றம்பலம்

வழிபடவல்ல வாய்மையாளர், மலை போலும் திண்ணிய வினைகள் நீங்கப் பெற்றுச் சிறந்து வாழ்வர்.

கு-ரை : கோலக்காவைப்பற்றிய இப்பாடல் பத்தையும் வல்லவர் மலைபோன்ற தம்வினையும் மாள ஓங்கிவாழ்வார்கள் என்கின்றது. வலங்கொள்பாடல் - திருவருள் வன்மையைக்கொண்ட பாடல் அல்லது வலமாகக் கொண்ட பாடல் என்றுமாம். உலம் - மலை.

குருவருள் : உலம் - மலை. மலையளவு பாவம் செய்திருப்பினும் நெறியாக இப்பதிகத்தை ஓதினால், மலையளவு வினைகளும் பொடி யாக உயர்ந்த வாழ்வு பெறுவர். முடிவான பேரின்ப் வாழ்வு பெறுவர் என்பதை உணர்த்துகின்றது. மேலும் ஞானசம்பந்தர் ''மந்தரம் மன பாவங்கள் மேவிய, பந்தனையவர் தாமும் பகர்வரேல், சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால், நந்திநாமம் நமச்சிவாயவே'' என்ற பாடலாலும் இக்கருத்தை வலியுறுத்துவார்.

திருத்தொண்டர் புராணம்

திருஞானசம்பந்தர் புராணம்

கையதனால் ஒத்தறுத்துப் பாடுதலுங் கண்டருளிக்
கருணை கூர்ந்த
செய்யசடை வானவர்தம் அஞ்செழுத்தும் எழுதியநற்
செம்பொற் றாளம்
ஐயரவர் திருவருளால் எடுத்தபா டலுக்கிசைந்த
அளவால் ஒத்த
வையமெலாம் உய்யவரு மறைச்சிறுவர் கைத்தலத்து
வந்த தன்றே.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

24. சீகாழி

பண்: தக்கராகம்

பதிக எண்: 24

திருச்சிற்றம்பலம்

250. பூவார் கொன்றைப் புரிபுன் சடையீசா
காவா யெனநின் றேத்துங் காழியார்
மேவார் புரமூன் றட்டா ரவர்போலாம்
பாவா ரின்சொற் பயிலும் பரமரே. 1

251. எந்தை யென்றங் கிமையோர் புகுந்தீண்டிக்
கந்த மாலை கொடுசேர் காழியார்
வெந்த நீற்றர் விமல ரவர்போலாம்
அந்தி நட்ட மாடும் மடிகளே. 2

1. பொ-ரை : பாடல்களின் சொற்பொருளாய்க் கலந்து நிற்கும் பரமர், பக்தர்கள், ''கொன்றைப் பூக்கள் பொருந்திய முறுக்கேறிய செஞ் சடை ஈசா காவாய்!'' என நின்று துதித்துப் போற்றும் சீகாழிப் பதியின ராவார். மனம் ஒன்றாத அசுரர்களின் மூன்று புரங்களை அழித்தவரும் அவரேயாவார்.

கு-ரை : இது பாக்களின் சொற்பொருளாய்ப் பயிலும் பரமர் திரி புரம் எரித்த சீகாழியார் போலும் என்கின்றது. புரிபுன் சடை - புரியாக முறுக்கேறிய புல்லிய சடை. ஏத்தும் - மக்களாலும் தேவர்களாலும் ஏத்தப்படுகின்ற. மேவார் - பகைவர்களாகிய திரிபுராதிகள். பாவார் இன் சொல் - பாக்களில் நிறைந்த இனியசொல், பயிலுதல் - சொற்கள் தோறும் பொருளாய் அமைதல்.

2. பொ-ரை : அந்திக் காலத்தில் நடனம் ஆடும் அடிகளாகிய இறைவர், தேவர்கள் எந்தையே என அன்போடு அழைத்து ஆல யத்துட் புகுந்து குழுமி மணம்மிக்க மாலைகளை அணிவித்தற் பொருட்டுச் சேரும் சீகாழிப் பதியினராவார். அவரே நன்றாகச் சுட்டு எடுத்த திருநீற்றை அணிந்தவரும், குற்றம் அற்றவருமாவார்.

கு-ரை : அந்திக்காலத்து நடமாடும் அடிகளே மாலையுஞ் சாந்தும் கொண்டு தேவர்கள் வழிபடும் காழியார்போலாம் என்

Koviloor Digital Library

252. தேனை வென்ற மொழியா ளொருபாகங்
கான மான்கைக் கொண்ட காழியார்
வான மோங்கு கோயி லவர்போலாம்
ஆன வின்ப மாடும் மடிகளே. 3

253. மாணா வென்றிக் காலன் மடியவே
காணா மாணிக் களித்த காழியார்
நாணார் வாளி தொட்டா ரவர்போலாம்
பேணார் புரங்க ளட்ட பெருமானே. 4

கின்றது. இமையோர் - தேவர்கள். எந்தை என்று - எம்உயிர்த் தந்தையே என்று. அந்திநட்டம் - சந்தியாதாண்டவம்.

3. பொ-ரை : முற்றிய இன்பத்தோடு ஆடுகின்ற சிவபிரான், இனிப்பில் தேனை வென்று விளங்கும் மொழிகளைப் பேசுகின்ற உமை யம்மையை ஒரு பாகமாகக் கொண்டு காட்டில் திரியும் இயல்பின தாகிய மானைக் கையின்கண் ஏந்தி விளங்கும் காழிப் பதியினராவார். அவர் வானளாவ உயர்ந்த திருக்கோயிலில் விளங்குபவர் ஆவார்.

கு-ரை : இது உமையாளை ஒருபாகம்வைத்து மானைக் கையேந்திய காழியார் இன்பத்தோடு நடமாடும் இறைவர் என்கின்றது. தேனைவென்ற மொழியாள் - வாய்வழிபுகுந்து முன் இனிப்பாய்ப் பின் புளிக்கும் தேனை, செவிவழியாகச் சிந்தையுள் புகுந்து பின்னும் இனிக் கும் மொழி வென்றது என்பது குறிப்பு. கான மான் : சாதியடை, இறை வன் கையில் உள்ளது காட்டுமான் அன்று. ஆன இன்பம் ஆடும் - முற் றிய இன்பத்தோடு ஆடுகின்ற. ஆனநெய் என்பதுபோல் பசு வினால்வரும் இன்பமாகிய பால் முதலியனவுமாம்.

4. பொ-ரை : தம்மைப் பேணி வழிபடாத அசுரர்களின் முப் புரங்களை அழித்த பெருமான், மாட்சிமையில்லாத வெற்றியை உடைய காலனை மடியுமாறு செய்து, தம்மையன்றி வேறொன்றையும் காணாத மார்க்கண்டேய முனிவருக்கு என்றும் பதினாறாண்டோடு விளங்கும் வரத்தை அளித்தருளிய காழிப் பதியினர் ஆவார். முப் புரங்களை அழித்தற்பொருட்டு நாணிற் பூட்டிய அம்பைத் தொடுத்த வருமாவார்.

கு-ரை : சரந்தொடுத்துப் புரம் அட்ட பெருமான் காலனை

Koviloor Digital Library

254. மாடே யோத மெறிய வயற்செந்நெற்
காடே றிச்சங் கீனுங் காழியார்
வாடா மலராள் பங்க ரவர்போலாம்
ஏடார் புரமூன் றெரித்த விறைவரே. 5

255. கொங்கு செருந்தி கொன்றை மலர்கூடக்
கங்கை புனைந்த சடையார் காழியார்
அங்க ணரவ மாட்டு மவர்போலாஞ்
செங்க ணரக்கர் புரத்தை யெரித்தாரே. 6

உதைத்த காழியார்போலாம் என்கின்றது. மாணு வென்றி - மாட்சிமைப்படாத வெற்றி. காணு மாணிக்கு - இறைவனையன்றி வேறொன்றையும் காணுத பிரமசாரியாகிய மார்க்கண்டருக்கு. பேணர் - பகைவர்.

5. பொ-ரை : குற்றம் பொருந்திய அசுரர்களின் புரங்கள் மூன்றையும் எரித்தருளிய இறைவர், அருகில் கடல் நீரின் அலைகள் எறிந்த சங்குகள் வயல்களில் விளைந்த செந்நெற் பயிர்களின் செறிவில் ஏறி முத்துக்களை ஈனும் சீகாழிப் பதியினர். அவர் வாடா மலர்களைச் சூடி விளங்கும் பார்வதி தேவியைத்தம் திருமேனியின் ஒரு பங்காக உடையவராவார்.

கு-ரை : புரம் எரித்த இறைவரே காழியில் உள்ள உமைபாகர் போலும் என்கின்றது. கடல் ஓதத்தால் பக்கங்களில் எறியப்பட்ட சங்குகள் வயலிலே உள்ள செந்நெற்காட்டில் ஏறி முத்தீனும் காழி என்றது திருவருள் வாய்ப்பிருக்குமானால் மடுவிலிருந்த ஒன்றும் காழிக் கரையேறிக் கடவுள் கருணையெய்தி இன்பமுறும் என்று குறிப்பித்தவாறு, வாடாமலராள் என்றது தெய்வக் கற்புடையாள் என்பதைத் தெரிவிக்க. ஏடு - குற்றம்,

6. பொ-ரை : சிவந்த கண்களை உடைய அரக்கர் மூவரின் திரி புரங்களை எரித்தவராகிய இறைவர், கோங்கு, செருந்தி,கொன்றை மலர் இவற்றுடன் கங்கையை அணிந்துள்ள சடைமுடியினர். அக் காழியர் தாம் அணிந்துள்ள பாம்புகளை அவ்விடத்தே தங்கி ஆட்டுபவராகவும் உள்ளார்.

கு-ரை : புரமெரித்த பெருமானே காழியாராகிய பாம்பாட்டி

Koviloor Digital Library

256. கொல்லை விடைமுன் பூதங் குனித்தாடுங்
கல்ல வடத்தை யுகப்பார் காழியார்
அல்ல விடத்து நடந்தா ரவர்போலாம்
பல்ல விடத்தும் பயிலும் பரமரே. 7

257. எடுத்த வரக்க னெரிய விரலூன்றிக்
கடுத்து முரிய வடர்த்தார் காழியார்
எடுத்த பாடற் கிரங்கு மவர்போலாம்
பொடிக்கொள் நீறு பூசும் புனிதரே. 8

போலும் என்கின்றது. அங்கண் அரவம் ஆட்டுமவர் - அவ்விடத்துப் பாம்பை அவயவங்களிலணிந்து ஆட்டுவர்.

7. பொ-ரை : எல்லா இடங்களிலும் நிறைந்து விளங்கும் பரமராகிய பெருமானார், முல்லை நிலத்துக்குரிய ஆன் ஏற்றை ஊர்ந்து அதன் முன்னே பூத கணங்கள் வளைந்து நெளிந்து ஆடிச்செல்லக் கல்ல வடம் என்னும் பறையை விரும்புபவர். அக்காழியார் தம்மை அறிந்து போற்றுநர் அல்லாதார் இடங்களிலும் தோன்றி அருள் வழங்கும் இயல்பினர்.

கு-ரை : கொல்லைவிடை - முல்லைக் கடவுளாகிய திருமாலாகிய விடை. கல்லவடம் - ஒருவகைப்பறை.

அல்லவிடத்தும் - தம்மையறிந்து போற்றற்குரியர் அல்லாத விடத்தும். பல்லவிடத்தும் - உயர்வு தாழ்வு கருதாதே பலவிடங்களிலும்.

8. பொ-ரை : பொடியாக அமைந்த திருநீற்றைப் பூசும் தூயவராகிய பெருமானர், கயிலைமலையை எடுத்த இராவணனின் முடிகள் நெரியுமாறு தம் கால் விரலை ஊன்றிச் சினந்து அவனது ஆற்றல் அழியுமாறு அடர்த்தவர். அக்காழியார் இராவணன் எடுத்த பாடலாகிய சாமகானத்துக்கு இரங்கி அருள் செய்தவராவார்.

கு-ரை : இராவணனை நெரித்த காழியார் கானத்திற்கிரங்கும் கருணையாளர் போலாம் என்கின்றது. கடுத்து - கோபித்து. பாடல் - சாமகானம்.

Koviloor Digital Library

258. ஆற்ற லுடைய வரியும் பிரமனுந்
தோற்றங் காணு வென்றிக் காழியார்
ஏற்ற மேறங் கேறு மவர்போலாங்
கூற்ற மறுகக் குமைத்த குழகரே. 9

259. பெருக்கப் பிதற்றுஞ் சமணர் சாக்கியர்
கரக்கு முரையை விட்டார் காழியார்
இருக்கின் மலிந்த விறைவ ரவர்போலாம்
அருப்பின் முலையாள் பங்கத் தையரே. 10

9. பொ-ரை : வாழ்நாளைக் கூறுபடுத்திக் கணக்கிட்டு உயிர் கொள்ளும் இயமன் அஞ்சுமாறு அவனை உதைத்து, மார்க் கண்டேயர்க்கு அருள்செய்த குழகராகிய சிவபிரானார், ஆற்றல் உடைய திருமாலும் பிரமனும் தம் அடிமுடிகள் தோன்றுமிடங்களைக் காணாதவாறு வானுற ஓங்கிய வெற்றியை உடையவராய்க் காழிப்பதி யில் எழுந்தருளியுள்ளார். அவர் மிக உயர்ந்த ஆன்ஏற்றில் ஏறி உலா வந்து அருள்பவராவார்.

கு-ரை : கூற்றங்குமைத்த குழகராகிய காழியார் இடபம் ஏறும் கருணையாளர் போலாம் என்கின்றது.

ஆற்றலுடைய என்றது ஆற்றல் இருந்தும் இறைவனைக் காணப் பயன்பெற்றில என்பதைத் தெரிவிக்க. ஏற்றம் ஏறு - உயர்ந்த இடபம்.

10. பொ-ரை : தாமரை அரும்பு போன்ற தனபாரங்களை உடைய உமையம்மையை ஒருபங்காகக் கொண்டுள்ள தலைவராகிய சிவபிரான், உண்மையின்றி மிகப் பிதற்றுகின்ற சமணர் சாக்கியர்களின் வஞ்சக உரைகளைக் கொள்ளாதவராய்க் காழியில் எழுந்தருளி யுள்ளார். அவரே இருக்கு வேதத்தில் நிறைந்துள்ள இறைவரும் ஆவார்.

கு-ரை : உமையொருபாகனாகிய காழியார் இருக்குவேதத்தில் நிறைந்த இறைவர் போலாம் என்கின்றது.

பெருக்கப்பிதற்றும் - உண்மையில்லாமல் மிகப் பிதற்றுகின்ற. கரக்கும் உரை - வஞ்சக உரை. அருப்பின் முலையாள் - அரும்பு போன்ற முலையையுடைய பார்வதி.

Koviloor Digital Library

260. காரார் வயல்சூழ் காழிக் கோன்றனைச்
சீரார் ஞான சம்பந் தன்சொன்ன
பாரார் புகழப் பரவ வல்லவர்
ஏரார் வானத் தினிதா விருப்பரே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : நீர்வளத்தால் கருஞ்சேறுபட்டு விளங்கும் வயல்களால் சூழப்பட்ட சீகாழிப் பதியில் விளங்கும் கோமகனாகிய சிவபிரான்மீது, சிறப்புப் பொருந்திய ஞானசம்பந்தன் அருளிச்செய்த பாடல்களை ஓதி உலகோர் போற்றத் துதிக்க வல்லவர், அழகிய வானகத்தில் இனிதாக இருப்பர்.

கு-ரை : காழிநாதனைப்பற்றி ஞானசம்பந்தன் சொன்னவைகளை உலகோர் புகழ உரைக்கவல்லவர்கள் வானத்து இனிதாய் இருப்பர் என்கின்றது. ஏர் - அழகு.

திருத்தொண்டர் புராணம்

திருஞானசம்பந்தர் புராணம்

திருப்பெருகு பெருங்கோயில் சூழவலங் கொண்டருளித்
திருமுன் நின்றே,
அருட்பெருகு திருப்பதிகம் எட்டொருகட் டளையாக்கி
அவற்றுள் ஒன்று
விருப்புறுபொற் றிருத்தோணி வீற்றிருந்தார் தமைப்பாட
மேவு காதல்
பொருத்தம்உற அருள் பெற்றுப் போற்றிஎடுத் தருளினார்
பூவார் கொன்றை.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

25. திருச்செம்பொன்பள்ளி

பதிக வரலாறு:

ஆளுடைய பிள்ளையார் திருமயிலாடுதுறை யென்னும் மாயூரத்தை வணங்கிப் பதிகம்பாடி வழியில் விளநகரை வணங்கித் திருச்செம்பொன் பள்ளியையடைந்தார். அங்கு அணி கிளர் சூலக் கைத்தலப் படை வீரராகிய செம்பொன் பள்ளியாரை வணங்கி 'மருவார் குழலி' என்னும் திருப்பதிகத்தைப் பாடினார். இப்பதிகத்து மருவார் குழலி என அம்மையின் திருநாமமும், செம்பொன்பள்ளி மேயான் எனச் சுவாமியின் திருநாமமும் அறிவிக்கப்படுகின்றன. ஏழாம் திருப்பாடலில் வரும் 'கையார் சூலமேந்தும் கடவுளை' என்பதைச் 'சூலக் கைத்தலப் படைவீரர்' எனச் சேக்கிழார் பெருமான் சொல்லிக்காட்டுகிறார்.

பண்: தக்கராகம்

பதிக எண்: 25

திருச்சிற்றம்பலம்

261. மருவார் குழலி மாதோர் பாகமாய்த்
திருவார் செம்பொன் பள்ளி மேவிய
கருவார் கண்டத் தீசன் கழல்களை
மருவா தவர்மேன் மன்னும் பாவமே. 1

1. பொ-ரை : மணம் பொருந்திய கூந்தலை உடையவளாகிய பார்வதிதேவியை ஒரு பாகமாக உடையவராய்த் திருமகள் வாழும் செம்பொன்பள்ளி என வழங்கும் திருத்தலக் கோயிலில் எழுந்தருளிய, கருநீலம் பொருந்திய கண்டத்தை உடைய ஈசன் திருவடிகளை வணங்கி அவற்றைத் தம் மனத்தே பொருந்த வையாதவர்களைப் பாவங்கள் பற்றும்.

கு-ரை : இது செம்பொன்பள்ளி ஈசன் கழல்களை அடையாத வரைப் பாவம் அடையும் என்கின்றது. மருவார்குழலி, இத்தலத்து அம் மையின் திருநாமம். வடமொழியில் சுகந்தவனப் பாவை என வழங்குவர். கருவார்கண்டம் - நீலகண்டம். இறைவன் அடைந்தார் இன்னல் தீர்க்க அடையாளமாக நீலகண்டத்தைக் காட்டியும் அவன் கழல்களை மருவாதவரைப் பாவம் மருவும் என்ற நயந்தோன்ற நின்றது.

Koviloor Digital Library

262 . வாரார் கொங்கை மாதோர் பாகமாய்ச்
சீரார் செம்பொன் பள்ளி மேவிய
ஏரார் புரிபுன் சடையெம்மீசனைச்
சேரா தவர்மேற் சேரும் வினைகளே. 2

263. வரையார் சந்தோ டகிலும் வருபொன்னித்
திரையார் செம்பொன் பள்ளி மேவிய
நரையார் விடையொன் றூரும் நம்பனை
உரையா தவர்மே லொழியா வூனமே. 3

264 . மழுவா ளேந்தி மாதோர்பாகமாய்ச்
செழுவார் செம்பொன் பள்ளி மேவிய

2. பொ-ரை : கச்சணிந்த தனங்களை உடைய உமையம்மையை ஒரு பாகமாக உடையவராய், சிறப்புப் பொருந்திய செம்பொன் பள்ளியில் எழுந்தருளிய அழகிய முறுக்கேறிய சிவந்த சடைமுடியை உடைய எம் ஈசனாகிய சிவபிரானைச் சென்று வணங்கி இடைவிடாது மனத்தில் நினையாதவர்களிடம் வினைகள் சேரும்.

கு-ரை : இதுவுமது. சேராதவர் - இடைவிடாது தியானியாதவர். வினைகள் எனப்பன்மையாற் கூறியது வெடிக்கும் வினைகளாய் இருத்தலின்.

3. பொ-ரை : மலைகளில் செழித்து வளர்ந்த சந்தன மரங்களோடு, அகில் மரங்களையும் அடித்துக் கொண்டு வருகின்ற பொன்னி நதிக்கரையில் விளங்கும் செம்பொன்பள்ளியில் எழுந்தருளிய வெண்ணிறம் பொருந்திய விடை ஒன்றை ஊர்ந்து வருபவனாகிய சிவபெருமான் புகழை உரையாதவர்களைப் பற்றியுள்ள குற்றங்கள் ஒழியா.

கு-ரை : செம்பொன்பள்ளி நம்பனைத் தோத்திரியாதவர் மேலுள்ள ஊனம் ஒழியாதென்கின்றது. வரை - மலை. நரை - வெள்ளை. உரையாதவர் - புகழாதவர்.

4. பொ-ரை : மழுவாகிய வாளை ஏந்தி உமையொரு பாகனாய் வளம் பொருந்திய செம்பொன் பள்ளியில் எழுந்தருளிய அழகு பொருந்திய முறுக்கேறிய சிவந்த சடைமுடியை உடைய எம் இறைவனைத் தொழுபவர்கட்குத் துயரம் இல்லை.

Koviloor Digital Library

எழிலார் புரிபுன் சடையெம் மிறைவனைத்
தொழுவார் தம்மேற் றுயர மில்லையே. 4

265 மலையான் மகளோ டுடனாய் மதிலெய்த
சிலையார் செம்பொன் பள்ளி யானையே
இலையார் மலர்கொண் டெல்லி நண்பகல்
நிலையா வணங்க நில்லா வினைகளே. 5

266. அறையார் புனலோ டகிலும் வருபொன்னிச்
சிறையார் செம்பொன் பள்ளி மேவிய
கறையார் கண்டத் தீசன் கழல்களை
நிறையால் வணங்க நில்லா வினைகளே. 6

கு-ரை : தொழுவார்க்குத் துயரமில்லை என்கின்றது. துயரம் இல்லாமைக்கு இரண்டு ஏது; ஒன்று பகையும் பிணியும் தடுத்தல். மற்றொன்று இன்பம் பெருக்கல். இவ்விரண்டையும் பெற இற்றைவன் மழுவாள் ஏந்திப் பகையும் பிணியும் தடுத்தும், மாதோர் பாகமாய்த் தான் இருந்து இன்பம் பெருக்கியும் காக்கின்றார் என்று உணர வைத்தவாறு.

5. பொ-ரை : மலையரையன் மகளாகிய பார்வதி தேவியோடு உடனாய் விளங்குபவனும், அசுரர்களின் மும்மதில்களை எய்தழித்த மலை வில்லை உடையவனுமாகிய செம்பொன் பள்ளியில் விளங்கும் சிவபிரானையே, இலைகளையும் மலர்களையும் கொண்டு இரவிலும் நண்பகலிலும் மனம் நிலைத்து நிற்குமாறு வணங்குவார் மேல் வினை நில்லா.

கு-ரை : இலையும் பூவுங்கொண்டு இரவும் பகலும் வணங்குவார்க்கு வினைகள் இல்லை என்கின்றது. மதில் எய்து மறத்தைக் காட்டினாலும் அதுவும் கருணையாய் முடிந்தது என்பார் மலையான் மகளோடுடனாய் மதில் எய்த என்றார். எல்லி - இரவு. நிலையா வணங்க - வேறொன்றிலும் மனம் சென்று பற்றாது இறைவனிடத்தேயே நிலைத்து வணங்க.

6. பொ-ரை : பாறைக்ளிற் பொருந்திவரும் நீரில் அகில் மரங்களையும் அடித்துவரும் பொன்னியாற்றின் கரையில் அமைந்த செம்பொன்பள்ளியில் எழுந்தருளிய விடக்கறை பொருந்திய கண்டத்தை உடைய ஈசன் திருவடிகளை மன ஒருமைப்பாட்டோடு வணங்க வினைகள் நில்லா.

Koviloor Digital Library

267. பையா ரரவே ரல்கு லாளொடும்
செய்யார் செம்பொன் பள்ளி மேவிய
கையார் சூல மேந்து கடவுளை
மெய்யால் வணங்க மேவா வினைகளே. 7

268. வானார் திங்கள் வளர்புன் சடைவைத்துத்
தேனார் செம்பொன் பள்ளி மேவிய
ஊனார் தலையிற் பலிகொண் டுழல்வாழ்க்கை
ஆனான் கழலே யடைந்து வாழ்மினே. 8

கு-ரை : மனத்தை ஒருநெறிக்கண் நிறுத்தும் வன்மையோடு வணங்க வினைநில்லா என்கின்றது.

அறையார் புனல் - பாறைகளைப் பொருந்தி வருகின்ற புனல். சிறை - கரை. கறை - விடம். நிறை - மகளிர்க்குள்ள நிறையென்னுங் குணம்போல மக்களுக்கமைய வேண்டிய இவனலாது இறை இல்லை என்ற உறைப்பு.

7. பொ-ரை : அரவின் படம் போன்ற அழகிய அல்குலை உடைய உமையம்மையோடு வயல்கள் சூழ்ந்த செம்பொன்பள்ளியில் வீற்றிருக்கின்ற கையில் பொருந்திய சூலத்தை ஏந்தி விளங்கும் கடவுளை உடம்பால் வணங்க வினைகள் மேவா.

கு-ரை : மெய்யால் வணங்கினாலும் போதும்; வினைமேவா என்கின்றது. பையார் அரவு - படம் பொருந்திய நாகம். செய் - வயல், மெய்யால் வணங்க - உடம்பால் வணங்க. உண்மையோடு வணங்க என்பாரும் உளர்.

இப்பொருள் 'நிலையா வணங்க' 'நிறையால் வணங்க' என்ற விடத்தும் போந்தமையின் இறைவனது எளிமைக் குணந்தோன்ற உள்ளம் பொருந்தாது உடம்பால் வணங்கினாலும் போதும்; வினைகள் மேவா. ஆதலால் பொருந்துமாறு ஓர்க.

8. பொ-ரை : வானத்தில் விளங்கும் பிறை மதியை, வளர்ந்துள்ள சிவந்த தன் சடைமீது வைத்து, இனிமை பொருந்திய செம்பொன் பள்ளியில் எழுந்தருளியவனும், புலால் பொருந்திய பிரமனது தலை யோட்டில் பலியேற்று உழல்வதையே தன் வாழ்வின் தொழிலாகக்

Koviloor Digital Library

269. காரார் வண்ணன் கனக மனையானும்
தேரார் செம்பொன் பள்ளி மேவிய
நீரார் நிமிர்புன் சடையெந் நிமலனை
ஓரா தவர்மே லொழியா வூனமே. 9

270. மாசா ருடம்பர் மண்டைத் தேரரும்
பேசா வண்ணம் பேசித் திரியவே
தேசார் செம்பொன் பள்ளி மேவிய
ஈசா வென்ன நில்லா விடர்களே. 10

கொண்டவனும் ஆகிய சிவபிரான் திருவடிகளையே அடைந்து வாழ்மின்.

கு-ரை : பலி ஏற்றுண்ணும் வாழ்க்கையானான் தாளை வணங்கி உய்யுங்கள் என்கின்றது. வானார் திங்கள் -.ஒருகலைப்பிறை; வானில் பொருந்தாதாயினும் பொதுமையின் கூறப்பட்டது.

9. பொ-ரை : நீலமேகம் போன்ற நிறமுடையோனாகிய திருமாலும், பொன்னிறமேனியனாகிய பிரமனும், தேடிக் காணொணாதவனும் செம்பொன்பள்ளியில் எழுந்தருளிய கங்கை அணிந்த நிமிர்த்துக் கட்டிய சிவந்த சடைமுடியை உடையவனுமாகிய குற்றமற்ற எம் இறைவனை மனம் உருகித் தியானியாதவர் மேல் உளதாகும் குற்றங்கள் நீங்கா.

கு-ரை : மலரகிதனான இறைவனைத் தியானியாதவர்களின் ஊனம் ஒழியா என்கின்றது. கனகம் அனையான் - பொன் நிறமான பிரமன். ஓராதவர் - மனமுருகித் தியானியாதவர்.

10. பொ-ரை : அழுக்கேறிய உடலினராகிய சமணரும், மண்டை என்னும் உண்கலத்தை ஏந்தித் திரிபவர்களாகிய புத்தரும் பேசக் கூடாதவைகளைப் பேசித் திரிய அன்பர்கள் ''ஒளி பொருந்திய செம்பொன்பள்ளியில் மேவிய ஈசா!'' என்று கூற அவர்களுடைய இடர்கள் பலவும் நில்லா.

கு-ரை : ஈசா என்ன இடர் நில்லா என்கின்றது. மாசார் உடம்பர் - அழுக்கேறிய உடம்பை உடையவர்கள். மண்டை - உண்கலம். பேசா வண்ணம் - பேசக்கூடாதபடி, பேசித்திரிய - வாய்க்கு வந்தவற்றைப் பேசித்திரிய. தேசு - ஒளி.

Koviloor Digital Library

271. நறவார் புகலி ஞான சம்பந்தன்
செறுவார் செம்பொன் பள்ளி மேயானைப்
பெறுமா றிசையாற் பாட லிவைபத்தும்
உறுமா சொல்ல வோங்கி வாழ்வரே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : தேன் நிறைந்த பொழில்களால் சூழப்பட்ட புகலிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன் வயல்கள் சூழ்ந்த செம் பொன் பள்ளி இறைவன் அருளைப் பெறுமாறு பாடிய இப்பதிகப் பாடல்கள் பத்தையும் இசையோடு தமக்குவந்த அளவில் ஓதவல்லவர் ஓங்கி வாழ்வர்.

கு-ரை: செம்பொன்பள்ளியில் மேவிய இறைவனைப் பெறுதற்காக ஞானசம்பந்தன் சொன்ன பாடல் பத்தும் சொல்லுவார் ஓங்கி வாழ்வர். நறவு - தேன். செறுஆர் - வயல்கள் பொருந்திய. உறுமா சொல்ல - உள்ளத்துப் பொருந்தும்படி சொல்ல.

சூதசங்கிதை

காழிநெடு வரையுதித்துக் கருதரிய
சிவஞானக் கதிர்கள் வீசி
வாழிபரம் பொருட்டுருவ னருட்கயிற்றிற்
பிணிப்புண்டு வளரஞ் ஞானப்
பாழிமிகு பொய்ச்சமணக் குருட்டிருள்கெட்
டுடைந்தோடப் பாற்றி நீற்றன்
பாழியதா மரைமலர்த்தி விளங்கியநல்
லிளங்கதிரை யகத்துள் வைப்பாம்.

- தேராஜபிள்ளை.

Koviloor Digital Library

26. திருப்புத்தூர்

பதிக வரலாறு:

பாண்டிநாட்டுப் பதிகள் பலவற்றையும் வணங்கத் திருவுளங்கொண்ட பிள்ளையார் அணியாப்பனூர் அணைந்து பணிந்து பாடியபின் ஏறணிந்த வெல்கொடியார் வீற்றிருந் தருளும் திருப்புத்தூரையடைந்து சிலநாள் வீற்றிருந்தார்கள். அப்போது 'வெங்கள் விம்மு' என்னும் இத்திருப்பதிகத்தை அருளிச் செய்தார்கள்.

பண்: தக்கராகம்

பதிக எண்: 26

திருச்சிற்றம்பலம்

272. வெங்கள் விம்மு வெறியார் பொழிற்சோலை
திங்க ளோடு திளைக்குந் திருப்புத்தூர்க்
கங்கை தங்கு முடியா ரவர்போலும்
எங்க ளுச்சி யுறையு மிறையாரே. 1

273. வேனல் விம்மு வெறியார் பொழிற்சோலைத்
தேனும் வண்டுந் திளைக்குந் திருப்புத்தூர்

1. பொ-ரை : விரும்பத்தக்க தேன் விம்மிச் சுரந்துள்ள, மணம் பொருந்திய சோலைகள் வானளாவ உயர்ந்து, அங்குத் தவழும் திங்களோடு பழகித் திளைக்கும் வளம் உடைய திருப்புத்தூரில் எழுந்தருளிய கங்கை தங்கிய சடைமுடியினராகிய பெருமானார் எங்கள் சிரங்களின்மேல் தங்கும் இறைவர் ஆவார்.

கு-ரை : எங்கள் சிரமேல் தங்கிய இறைவன் திருப்புத்தூர் நாதன் என்கின்றது. வெம் கள் - விரும்பத்தக்கதேன். வெறி - மணம். கள்ளுண்ட வெறியால் சோலை தனக்குத் தகாத திங்களோடு திளைக்கின்றதென்று வேறும் ஒரு பொருள் தோன்ற நின்றது காண்க. உச்சி - தலை.

2. பொ-ரை : தேவர்களின் வேண்டுகோளை ஏற்றுப் பன்றி வடிவமெடுத்த திருமால் உலகை அழிக்கத் தொடங்கிய காலத்து,

Koviloor Digital Library

ஊனமின்றி யுறைவா ரவர்போலும்
ஏன முள்ளு மெயிறும் புனைவாரே. 2

274. பாங்கு நல்ல வரிவண் டிசைபாடத்
தேங்கொள் கொன்றை திளைக்குந் திருப்புத்தூர்
ஓங்கு கோயி லுறைவா ரவர்போலும்
தாங்கு திங்கள் தவழ்புன் சடையாரே. 3

275. நாற விண்ட நறுமா மலர்கவ்வித்
தேறல் வண்டு திளைக்குந் திருப்புத்தூர்

அதனை அடக்கி, அதன் பல்லையும் கொம்பையும் பறித்துத் தன் மார் பில் அணிந்தவர், வேனிற் காலத்தில் வெளிப்படும் மணம் நிறைந் துள்ள பொழில்களிலும் சோலைகளிலும் வாழும் வண்டுகள் தேனை உண்டு திளைத்து ஒலி செய்யும் திருப்புத்தூரில் குறையின்றி உறையும் பெருமானார் ஆவர்.

கு-ரை : இது இறைவன் பன்றியின் முள்ளையும் பல்லையும் புனைபவர் என்கின்றது. வேனல் - வேனிற்காலம். வண்டு தேன் இவை வண்டின் வகைகள். ஊனம் - குறைபாடு. ஏனம் - ஆதிவராகம். ஆதிவராகம் செருக்குற்று உலகத்தை அழிக்கத் தொடங்கிய காலத்துத் தேவர்கள் வேண்டுகோட்கிரங்கி, அதை அடக்கி, அதனுடைய முள்ளையும், பல்லையும் மார்பில் அணிந்தார் என்பது வரலாறு.

3. பொ-ரை : தம்மை அடைக்கலமாக அடைந்த திங்கள் தவழும் செந்நிறச் சடை முடியினை உடைய இறைவர், நல்ல வரிகளை உடைய வண்டுகள் பாங்கரிலிருந்து இசைபாடத் தேன் நிறைந்த கொன்றை மலர் கள் முடிமிசைத் திளைத்து விளங்கத் திருப்புத்தூரில் ஓங்கி உயர்ந்த கோயிலில் எழுந்தருளிய பெருமானார் ஆவார். கொன்றை - திருப்புத்தூர் தல விருட்சம்.

கு-ரை : இது திங்கள் திகழும் சடையார் திருப்புத்தூர் நாதர் என்கின்றது. வரிவண்டு இசைபாட, கொன்றை திளைக்கும் திருப் புத்தூர் எனக் கூட்டுக. பாங்கு - பக்கங்களில்.

4. பொ-ரை : ஆன் ஏற்றுக் கொடியைத் தனதாகக் கொண்ட எம் இறைவர், மணம் வீசுமாறு மலர்ந்த சிறந்த நறுமலர்களைத் தம் வாயால்

Koviloor Digital Library

ஊறல் வாழ்க்கை யுடையா ரவர்போலும்
ஏறு கொண்ட கொடியெம் மிறையாரே. 4

276. இசைவி ளங்கு மெழில்சூழ்ந் தியல்பாகத்
திசைவி ளங்கும் பொழில்சூழ் திருப்புத்தூர்
பசைவி ளங்கப் படித்தா ரவர்போலும்
வசைவி ளங்கும் வடிசேர் நுதலாரே. 5

277. வெண்ணி றத்த விரையோ டலருந்தித்
தெண்ணி றத்த புனல்பாய் திருப்புத்தூர்
ஒண்ணி றத்த வொளியா ரவர்போலும்
வெண்ணி றத்த விடைசேர் கொடியாரே. 6

கவ்வி வண்டுகள் தேனை உண்டு திளைக்கும் திருப்புத்தூரில் பலகாலம் தங்கிய வாழ்க்கையினை உடையவர் ஆவார்.

கு-ரை : நாற - மணம்வீச. விண்ட - மலர்ந்த. வண்டுமலர் கவ்வித் தேறல் திளைக்கும் திருப்புத்தூர் என்க. ஊறல் வாழ்க்கை - ஊறிப்போன வாழ்க்கை.

5. பொ-ரை : கங்கையாகிய பெண் விளங்கும் அழகிய சென்னி யினராகிய இறைவர், புகழால் விளக்கம் பெற்றதும், இயல்பாக அழகு சூழ்ந்து விளங்குவதும், நாற்றிசைகளிலும் பொழில்கள் சூழ்ந்ததுமான திருப்புத்தூரில், தம்மை வழிபடுவார்க்கு அன்பு வளருமாறு பழகும் பெருமானார் ஆவார்.

கு-ரை : இசை - புகழ். பசை - அன்பு. படித்தார் - பழகுபவர். வசை - பெண்; ஈண்டு கங்கை. வடி - அழகு. நுதல் - சென்னி. ''குடுமி களைந்த நுதல்'' என்ற புறப்பகுதியும் இப்பொருளதாதல் ஓர்க.

6. பொ-ரை : வெண்மை நிறமுடைய விடை உருவம் எழுதிய கொடியை உடைய இறைவர், வெள்ளிய நிறமுடையனவாய் மணம் பொருந்திய மலர்களை அடித்துக் கொண்டு தெளிந்த தன்மை உடையதாய்த் தண்ணீர் பாயும் திருப்புத்தூரில் எழுந்தருளிய ஒண்மை பொருந்திய ஒளியை உடைய பெருமானார் ஆவார்.

Koviloor Digital Library

278. நெய்த லாம்பல் கழுநீர் மலர்ந்தெங்கும்
செய்கண் மல்கு சிவனார் திருப்புத்தூர்த்
தையல் பாக மகிழ்ந்தா ரவர்போலும்
மையு ணஞ்ச மருவு மிடற்றாரே. 7

279. கருக்க மெல்லாங் கமழும் பொழிற்சோலைத்
திருக்கொள் செம்மை விழவார் திருப்புத்தூர்
இருக்க வல்ல விறைவ ரவர்போலும்
அரக்க னொல்க விரலா லடர்த்தாரே. 8

280. மருவி யெங்கும் வளரும் மடமஞ்ஞை
தெருவு தோறுந் திளைக்குந் திருப்புத்தூர்ப்

கு-ரை : வெண்ணிறத்த விரையோடு அலர் உந்தி - வெண்மையாகிய நிறமுடையவையாய் மணம் பொருந்திய மலர்களை அடித்துக்கொண்டு, ஒள்நிறத்தஒளியார் - பேரொளிப் பிழம்பானவர்.

7. பொ-ரை : கருமை பொருந்திய நஞ்சு மருவும் மிடற்றினராய இறைவர், நெய்தல், ஆம்பல் செங்கழுநீர் ஆகிய மலர்கள் வயல்கள் எங்கும் மலர்ந்து நிறைந்து விளங்கும் திருப்புத்தூரில் எழுந்தருளிய உமையொரு பாகம் மகிழ்ந்த சிவனாராவார்.

கு-ரை : நீலகண்டராயும் நேரிழைபாகம் மகிழ்ந்தார் என்கின்றது. மைஉண்நஞ்சம் - கரியவிடம்.

8. பொ-ரை : இராவணனாகிய அரக்கனைக் கால்விரலால் தளர அடர்த்தவராகிய பெருமானார், மேகங்களிலும் பரவிக் கமழும் மணமுடைய பொழில்களாலும் சோலைகளாலும் சூழப்பெற்றதும், செல்வம் நிறைந்ததும், செம்மையாளர் வாழ்வதும், திருவிழாக்கள் பல நிகழ்வதுமாய திருப்புத்தூரில் எழுந்தருளியிருக்க வல்லவராய இறைவராவார்.

கு-ரை : இராவணனையழித்த இறைவன் திருப்புத்தூரில் இருப்பவன் என்கின்றது. கருக்கம் - மேகம். அரக்கன் - இராவணன். ஒல்க - வருந்த.

9. பொ-ரை : பிரமனும் திருமாலும் அறியமுடியாத பெரியோனாகிய இறைவன், எங்கும் பொருந்தியனவாய் வளரும் இள

Koviloor Digital Library

பெருகி வாழும் பெருமா னவன்போலும்
பிரமன் மாலு மறியாப் பெரியோனே. 9

281. கூறை போர்க்குந் தொழிலா ரமண்கூறல்
தேறல் வேண்டா தெளிமின் றிருப்புத்தூர்
ஆறு நான்கு மமர்ந்தா ரவர்போலும்
ஏறு கொண்ட கொடியெம் மிறையாரே. 10

282. நல்ல கேள்வி ஞான சம்பந்தன்
செல்வர் சேட ருறையுந் திருப்புத்தூர்ச்

மயில்கள் தெருக்கள் தோறும் உலவிக் களிக்கும் திருப்புத்தூரில் பெருமை பெருகியவனாய் வாழும் பெருமானாவான்.

கு-ரை : பிரமன் மால் அறியாப்பெருமான் திருப்புத்தூரில் பெருகி வாழ்கின்றான் என்கின்றது. மஞ்ஞை - மயில்கள்.

10. பொ-ரை : மேல் ஆடையைப் போர்த்துத் திரிதலைத் தொழிலாகக் கொண்ட பௌத்தர் சமணர் ஆகியவருடைய உரைகளை நம்பாதீர்கள். ஆனேறு எழுதிய கொடியினை உடையவராய்த் திருப்புத்தூரில் நான்கு வேதங்களாகவும், ஆறு அங்கங்களாகவும் விளங்கும் பெருமானாராகிய அவரைத் தெளிமின்.

கு-ரை : இது இடபக்கொடிகொண்ட இறைவர் நான்கு வேதத்தினும் ஆறங்கத்தினும் அமர்ந்திருக்கின்றார் என்கின்றது. கூறை - ஆடை. தேறல்வேண்டா - தெளியவேண்டா. ஆறும் நான்கும் அமர்ந்தார் - வேத அங்கங்கள் ஆறினையும் வேதங்கள் நான்கினையும் விரும்பியவர். ஆறுநான்கும் என்று ஒரு சொல்லாகக்கொண்டு நிரலே நிறுத்தி, அறுபத்துநான்கு கலை ஞானங்களில் அமர்ந்தார் எனவுங் கொள்ளலாம் அன்றி ஆறாறாக அடுக்கப்பட்டு வருகின்ற அகம், அகப்புறம், புறம், புறப்புறம் ஆகிய சமயங்களின் பொருளாய் அமர்ந்திருப்பவர் என்றுமாம்.

11. பொ-ரை : நன்மை தரும் வேதங்களை உணர்ந்த ஞான சம்பந்தன், செல்வரும் உயர்ந்தவருமான சிவபெருமான் உறையும் திருப்புத்தூரை அடைந்து வழிபட்டுச் சொல்லிய பத்துப் பாடல்களை

Koviloor Digital Library

சொல்லல் பாடல் வல்லார் தமக்கென்றும்
அல்லல் தீரு மவல மடையாவே. 11

திருச்சிற்றம்பலம்

யும் வல்லவர்கட்குத் துன்பங்கள் நீங்கும். எக்காலத்தும் அவலம் அவர்களை அடையா.

கு-ரை : இது இப்பாடல் பத்தும் வல்லார்க்கு அல்லல் தீரும் என்கின்றது. நல்லகேள்வி - நல்லகேள்வியால் விளைந்த அறிவு. அன்றிக் கேள்வி என்பதனைச் சுருதி என்பதன் மொழிபெயர்ப்பாகக் கொண்டு வேதம் வல்ல ஞானசம்பந்தன் என்றுமாம். சேடர் - எல்லாம் தத்தம் காரணத்துள் ஒடுங்க அவை தமக்குள் ஒடுங்கத் தாம் ஒன்றினும் ஒடுங்காது, ஒடுங்கியவைகள் மீட்டும் உதிக்க மிச்சமாய் இருப்பவர்; பெருமையையுடையவர் என்றுமாம். அல்லல் - துன்பம். அவலம் - வறுமை.

திருக்கோவலூர்ப் புராணம்

அஞ்ஞானத் துவராடை யமணர்மத முதலான
இஞ்ஞாலத் திழிசமய விருங்கடலி னிடைப்படா
மெய்ஞ்ஞானத் துறுவிக்கும் வியன்காழிக் கவுணியர்கோன்
தஞ்ஞானச் சரண்தொழுவார் சரணெமக்குச் சரணாமே.

- மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

சிவபுண்ணியத் தெளிவு

பிறையணி மௌலியான் பேதை யாளொடுஞ்
சிறையணி புனற்றடத் தீர மேவியே
நிறையமு தருத்தவுண் ணெகிழப் பாடுநான்
மறையவன் மலர்ப்பதம் வணங்கி வாழ்த்துவாம்.

- உமாபதி சிவாசாரியார்.

Koviloor Digital Library

27. திருப்புன்கூர்

பதிக வரலாறு:

திருநின்றியூர், திருநீடுர் இவைகளை வணங்கிக் கொண்டு திருப்புன்கூரையடைந்த பிள்ளையார் ‘முந்தி நின்ற’ என்னும் பதிகத்தைப் பாடியருளினார். இத்தலத்திற்குச் சென்றதும், ஞானசம்பந்தப்பெருமான் நடராஜப்பெருமானை முதற்கண் தரிசித்திருப்பார் போலும். அதனை ஒன்பதாம் திருப்பாட்டில் ‘ஆடவல்ல அடிகள் அவர்போலும்’ என்று குறிப்பிடுகிறார். இதனைச் சேக்கிழார்பெருமான் ‘திருப்புன்கூர் நண்ணி ஆடிய பாதம் இறைஞ்சி அருந்தமிழ் பாடியமர்ந்தார்’ என விளக்கிக் காட்டுகிறார்.

பண்: தக்கராகம்

பதிக எண்: 27

திருச்சிற்றம்பலம்

283. முந்தி நின்ற வினைக ளவைபோகச்
சிந்தி நெஞ்சே சிவனார் திருப்புன்கூர்
அந்த மில்லா வடிக ளவர்போலும்
கந்த மல்கு கமழ்புன் சடையாரே. 1

1. பொ-ரை : நெஞ்சே! பல பிறவிகளிலும் செய்தனவாய சஞ்சித, ஆகாமிய வினைகளுள் பக்குவப்பட்டுப் பிராரத்த வினையாய்ப் புசிப்பிற்கு முற்பட்டு நின்ற வினைகள் பலவும் நீங்க, திருப்புன்கூரில் ஆதி அந்தம் இல்லாத தலைவராய், மணம் நிறைந்து கமழும் செந்நிறச் சடைமுடி உடையவராய் எழுந்தருளிய சிவ பிரானாரைச் சிந்தனை செய் வாயாக.

கு-ரை : இது பழவினையற, நெஞ்சே! திருப்புன்கூர்ச் சிவனாரைச் சிந்தி, என்கிறது.

முந்திநின்ற வினைகள் - நுகர்ச்சிக்குரியன வாகப் பரிபக்குவப் பட்டு நிற்கும் ஆகாமிய சஞ்சித வினைகள். அந்தம் - முடிவு. கந்தம் - மணம்.

Koviloor Digital Library

284. மூவ ராய முதல்வர் முறையாலே
தேவ ரெல்லாம் வணங்குந் திருப்புன்கூர்
ஆவ ரென்னு மடிக ளவர்போலும்
ஏவி னல்லா ரெயின்மூன் றெரித்தாரே. 2

285. பங்க யங்கண் மலரும் பழனத்துச்
செங்க யல்கள் திளைக்குந் திருப்புன்கூர்க்
கங்கை தங்கு சடையா ரவர்போலும்
எங்க ளுச்சி யுறையும் மிறையாரே. 3

286. கரையு லாவு கதிர்மா மணிமுத்தம்
திரையு லாவு வயல்சூழ் திருப்புன்கூர்

2. பொ-ரை : பகைமை பூண்டவராய அசுரர்களின் மூன்று அரண்களைக் கணையொன்றால் எரித்தழித்த இறைவர், பிரமன் மால் உருத்திரன் ஆகிய மூவராயும், அவர்களுக்கு முதல்வராயும், தேவர்கள் எல்லோரும் முறையாக வந்து வணங்குபவராயும் விளங்கும் திருப்புன்கூரில் எழுந்தருளிய அடிகள் ஆவர்.

கு-ரை : இது முப்பெருந் தேவராய், எல்லாத் தேவராலும் வணங்கப்பெறும் இறைவன் திருப்புன்கூர்நாதன் என்கின்றது. மூவர் ஆய முதல்வர் - திருச்சிவபுரப் பதிகத்துக் குறித்தவண்ணம் பிரமன் மால் உருத்திரன் என்ற முத்தேவராயும், அவர்க்கு முதல்வராயும் உள்ளவர். அடிகள் ஆவர் என்னும் அவர் போலும் எனக்கூட்டுக. ஏ - அம்பு. அல்லார் - பகைவர்.

3. பொ-ரை : எங்கள் தலைகளின் மேல் தங்கி விளங்கும் இறைவர், தாமரை மலர்கள் மலரும் வயல்களில் சிவந்த கயல் மீன்கள் திளைத்து மகிழும் திருப்புன்கூரில் எழுந்தருளியுள்ள கங்கை தங்கிய சடை முடியினராகிய சிவபெருமானாராவர்.

கு-ரை : திருப்புன்கூர் நாதனே எங்கள் முடிமீது உறையும் இறைவன் என்கின்றது. பழனம் - வயல். இவர் கங்கை தங்கும் சடையாராதலின் நீர்வளமிகுந்து பழனங்களில் செங்கயல்கள் திளைக்கின்றன என்பதாம்.

4. பொ-ரை : மணத்தால் மேம்பட்ட தாமரைமலர் போலும் சிவந்த திருவடிகளை உடைய இறைவர், ஒளி பொருந்திய சிறந்த

Koviloor Digital Library

உரையி னல்ல பெருமா னவர்போலும்
விரையி னல்ல மலர்ச்சே வடியாரே. 4

287. பவள வண்ணப் பரிசார் திருமேனி
திகழும் வண்ண முறையுந் திருப்புன்கூர்
அழக ரென்னு மடிக ளவர்போலும்
புகழ நின்ற புரிபுன் சடையாரே. 5

288. தெரிந்தி லங்கு கழுநீர் வயற்செந்நெல்
திருந்த நின்ற வயல்சூழ் திருப்புன்கூர்ப்
பொருந்தி நின்ற வடிக ளவர்போலும்
விரிந்தி லங்கு சடைவெண் பிறையாரே. 6

மாணிக்கங்கள் கரைகளில் திகழ்வதும், முத்துக்கள் நீர்த் திரைகளில் உலாவுவதும் ஆகிய வளம்மிக்க வயல்கள் சூழ்ந்த திருப்புன்கூரில் எழுந்தருளிய புகழ்மிக்க நல்ல பெருமானாராவார்.

கு-ரை : இது பெருமான் மணம்நாறும் மலர்ச்சேவடியார் என்கின்றது. கதிர்மாமணி கரையுலாவும், முத்தம் திரை உலாவும் வயல் எனக்கூட்டுக. உரை - புகழ். விரை - மணம்.

5. பொ-ரை : உலகோர் புகழ நிலை பெற்ற, முறுக்கிய சிவந்த சடை முடியை உடைய இறைவர், பவளம் போலும் தமது திருமேனி யின் செவ்வண்ணம் திகழுமாறு திருப்புன்கூரில் உறையும் அழகர் என் னும் அடிகளாவார்.

கு-ரை : இது பவளமேனி யழகரே அனைவராலும் புகழநின்ற பெருமான் என்கின்றது. பரிசு - தன்மை. திகழும்வண்ணம் உறையும் - மிக்கு விளங்கும் வண்ணம் என்றும் உறையும். அழகர் - அழகு பண்பு; அழகர் பண்பி. அம்மையப்பர் ஆதலின் இத்தலத்து அம்மை திருநாமம் சொக்கநாயகி; அழகிய நாயகி. ஆதலால் இவர் அழகர் எனக் குறிப்பிடப்பெற்றார்.

6. பொ-ரை : விரிந்து விளங்கும் சடைமுடியில் வெண்பிறை அணிந்த இறைவர், கண்களுக்குப் புலனாய் அழகோடு திகழும் செங் கழுநீர் மலர்ந்த வயல்களாலும், செந்நெற் கதிர்கள் அழகோடு நிறைந்து

Koviloor Digital Library

289. பாரும் விண்ணும் பரவித் தொழுதேத்தும்
தேர்கொள் வீதி விழவார் திருப்புன்கூர்
ஆர நின்ற வடிக ளவர்போலும்
கூர நின்ற வெயின்மூன் றெரித்தாரே. 7

290. மலைய தனா ருடைய மதின்மூன்றும்
சிலைய தனா லெரித்தார் திருப்புன்கூர்த்
தலைவர் வல்ல வரக்கன் றருக்கினை
மலைய தனா லடர்த்து மகிழ்ந்தாரே. 8

நிற்கும் வயல்களாலும் சூழப்பெற்ற திருப்புன்கூரில் எழுந்தருளியுள்ள அடிகள் ஆவார்.

கு-ரை : அழகன் சடையில் வெண்பிறை யுடையார்போலும் என்கின்றது. கழுநீர் வயல்களும், செந்நெல் வயல்களும் சூழ்ந்த புன்கூர் என்க. பொருந்தி - தமக்கு இதுவே சிறந்த தலம் என அமைந்து.

7. பொ-ரை : கொடியனவாய்த் தோன்றி இடர் விளைத்து நின்ற முப்புரங்களையும் எரித்தழித்த இறைவர், மண்ணக மக்களும் விண்ணகத் தேவரும் பரவித் தொழுதேத்துமாறு தேரோடும் திருவீதிகளை உடையதும், எந்நாளும் திருவிழாக்களால் சிறந்து திகழ்வதுமான திருப்புன்கூரில் பொருந்தி நின்ற அடிகளாவார்.

கு-ரை : தேர்விழாத்திகழும் திருப்புன்கூர் அடிகள் முப்புரம் எரித்த முதல்வன்போலும் என்கின்றது. பார், விண் - ஆகு பெயராக முறையே மக்களையும் தேவரையும் உணர்த்தின. ஆர - பொருந்த. கூரம் - க்ரூரம், கொடுமை.

8. பொ-ரை : வலிமை பொருந்திய இராவணன் செருக்கைப் போக்க, அவனைக் கயிலை மலையாலே அடர்த்துப்பின் அவன் வேண்ட மகிழ்ந்து அருள் வழங்கிய இறைவர், தேவர்களோடு சண்டையிட்டு அவர்களை அழிக்கும் குணம் உடையவராய அசுரர்களின் முப்புரங்களை வில்லால் எரித்தழித்தவராகிய திருப்புன்கூர்த் தலைவர் ஆவார்.

கு-ரை : புரமெரித்த வீரத்தையும், இராவணன் வலியடக்கி யாண்ட கருணையையும் விளக்குகின்றது. மலையதனார் - மலைதற்

Koviloor Digital Library

291. நாட வல்ல மலரான் மாலுமாய்த்
தேட நின்றா ருறையுந் திருப்புன்கூர்
ஆட வல்ல வடிக ளவர்போலும்
பாட லாடல் பயிலும் பரமரே. 9

292. குண்டு முற்றிக் கூறை யின்றியே
பிண்ட முண்ணும் பிராந்தர் சொற்கொளேல்
வண்டு பாட மலரார் திருப்புன்கூர்க்
கண்டு தொழுமின் கபாலி வேடமே. 10

குரியராகிய முப்புராதிகள். மலைதல் - சண்டையிடுதல். மலை - கைலைமலை. அடர்த்து - நெருக்கி. இதனாற் கருணை அறிவிக்கப் பெறுகின்றது.

9. பொ-ரை : பாடல் ஆடல் ஆகிய இரண்டிலும் வல்லவராய் அவற்றைப் பழகும் மேலான இறைவர், எதனையும் ஆராய்ந்தறிதலில் வல்ல நான்முகனும், திருமாலும் தேடி அறிய இயலாதவராய் ஓங்கி நின்றவர். அப்பெருமான் திருப்புன்கூரில் உறையும் ஆடல்வல்ல அடிகள் ஆவார்.

கு-ரை : ஆடவல்ல அடிகளே பாடலாடல் பயிலும் பரமர் போலும் என்கின்றது. நாடவல்ல மலரான் - பிரமனுக்கு நான்கு முகங்களாதலின் ஏனைய தேவர்களைப்போலத் திரும்பித் திரும்பித் தேட வேண்டிய அவசியம் இல்லை என்று நகைச்சுவை தோன்றக் கூறியது. அதிலும் துணையாகத் தன் தந்தையையுஞ் சேர்த்துக் கொண்டு தேடினான் என அச்சுவையை மிகுத்தவாறு.

10. பொ-ரை : கீழாந்தன்மை மிகுந்து ஆடையின்றி வீதிகளில் வந்து பிச்சை கேட்டுப் பெற்று, அவ்வுணவை விழுங்கி வாழும் மயக்க அறிவினராகிய சமணர்கள் கூறும் சொற்களைக் கேளாதீர். தேனுண்ண வந்த வண்டுகள் பாடுமாறு மலர்கள் நிறைந்து விளங்கும் திருப்புன்கூர் சென்று அங்கு விளங்கும் கபாலியாகிய சிவபிரானின் வடிவத்தைக் கண்டு தொழுவீர்களாக.

கு-ரை : மயக்க அறிவினராகிய புறச்சமயத்தார் புன்சொல் கேளாதே 'கபாலியைக் கைதொழுமின்' என்கின்றது. குண்டு அறியாமை, இழிந்த தன்மை கூறையின்றி என்றது திகம்பர சமணரை.

Koviloor Digital Library

293. மாட மல்கு மதில்சூழ் காழிமன்
சேடர் செல்வ ருறையுந் திருப்புன்கூர்
நாட வல்ல ஞான சம்பந்தன்
பாடல் பத்தும் பரவி வாழ்மினே. 11

திருச்சிற்றம்பலம்

பிண்டமுண்ணுதல் - சுவைத்து மென்றுதின்னாது விழுங்குதல். பிராந்தர் - மயக்க அறிவினர்.

11. பொ-ரை : மாடவீடுகளால் நிறையப் பெற்றதும் மதில்கள் சூழ்ந்ததுமான சீகாழிப் பதிக்குத் தலைவனாய், எதையும் நாடி ஆராய்தலில் வல்ல ஞானசம்பந்தன், பெரியோர்களும் செல்வர்களும் வாழும் திருப்புன்கூர் இறைவர்மீது பாடிய பாடல்கள் பத்தையும் பரவி வாழ்வீர்களாக.

கு-ரை : இது இப்பதிகத்தை ஓதின் வாழலாம் என்கின்றது. சேடர்க்கு முன்னுரைத்தாங்கு உரைக்க. பத்தும் பரவி - பத்தாலும் தோத்திரித்து.

திருப்புகழ்

புமியதனிற் ப்ரபுவான
புகலியில்வித் தகர்போல
அமிர்தகவித் தொடைபாட
அடிமைதனக் கருள்வாயே
சமரிலெதிர்த் தசுரர்மாளத்
தனியயில்விட் டருள்வோனே
நமசிவாயப் பொருளானே
ரசதகிரிப் பெருமாளே.

- அருணகிரிநாதர்.

Koviloor Digital Library

28. திருச்சோற்றுத்துறை

பதிக வரலாறு:

திருக்கண்டியூரை வணங்கிய திருஞானசம்பந்தப் பிள்ளையார், வெண்ணீற்றப்பர் சோற்றுத்துறையை வணங்கத் திருவுளங்கொண்டு எழுந்தருளுகின்றபோது, வழிநடையில், 'செப்பநெஞ்சே' என்னுந் திருப்பதிகத்தை அருளிச் செய்தார்கள். இப்பதிகத்தைச் சேக்கிழார் 'ஒப்பில் வண்தமிழ் மாலை' எனச் சிறப்பிக்கின்றார். இப்பதிகத்தில் 'ஒளிவெண்ணீற்றப்பர் உறையும் செல்வம் உடையார்' என இறைவன் திருநாமமாகிய தொலையாச் செல்வர் என்பது தோற்றுவிக்கப்படுகிறது.

பண்: தக்கராகம்

பதிக எண்: 28

திருச்சிற்றம்பலம்

294. செப்ப நெஞ்சே நெறிகொள் சிற்றின்பம்
துப்ப னென்னா தருளே துணையாக
ஒப்ப ரொப்பர் பெருமா னொளிவெண்ணீற்
றப்பர் சோற்றுத் துறைசென் றடைவோமே. 1

1. பொ-ரை : நெஞ்சே, முறையான சிற்றின்பத்தைத் தன் முனைப்போடு ''யான் துய்ப்பேன்'' என்னாது, ''அருளே துணையாக நுகர்வேன்'' என்று கூற, இறைவர் அதனை ஏற்பர். அத்தகைய பெருமானார், ஒளி பொருந்திய திருவெண்ணீறு அணிந்த மேனியராய்த் தலைவராய் விளங்கும், திருச்சோற்றுத் துறையைச் சென்றடைவோம்.

கு-ரை : நெஞ்சே! நெறிகொள் சிற்றின்பம் துப்பன் என்னாது அருளே துணையாகச் செப்ப ஒப்பர் ஒப்பர் என முடிவுசெய்க. நெறிகொள் சிற்றின்பம் - இல்லறத்தானுக்கு ஓதியமுறைப்படி நுகரப்படும் சிற்றின்பம். துப்பன் - நுகர்வோன். பொறிகளான் நுகரப்படும் சிற்றின்பத்தை நுகருங்கால் தன்முனைப்பின்றி அவனருளே துணையாக நுகர்கின்றேன் என்று புத்திபண்ணிச் சொல்ல அவர் நம்சிறுமைகண்டு இகழாது ஒப்புவர் ஒப்புவர் என்றவாறு. 'ஒளிவெண்ணீற்று அப்பர்' என்பது தொலையாச் செல்வர் என்னும் இறைவன் திருநாமத்தை நினைவூட்டியது. தொலையாச் செல்வம் -

Koviloor Digital Library

295. பாலு நெய்யுந் தயிரும் பயின்றாடித்
தோலு நூலுந் துதைந்த வரைமார்பர்
மாலுஞ் சோலை புடைசூழ் மடமஞ்ஞை
ஆலுஞ் சோற்றுத் துறைசென் றடைவோமே. 2

296. செய்யர் செய்ய சடையர் விடையூர்வர்
கைகொள் வேலர் கழலர் கரிகாடர்
தைய லாளொர் பாக மாயவெம்
ஐயர் சோற்றுத் துறைசென் றடைவோமே. 3

297. பிணிகொ ளாக்கை யொழியப் பிறப்புளீர்
துணிகொள் போரார் துளங்கு மழுவாளர்

விபூதி(திருநீறு). ஒப்பர் ஒப்பர் என்பதற்குத் தமக்குத்தாமே ஒப்பு ஆனவர் என்றும் உரைகாண்பர்.

2. பொ-ரை : பாலையும் நெய்யையும் தயிரையும் விரும்பி யாடிப் புலித்தோலும் முப்புரி நூலும் பொருந்திய மலை போன்று விரிந்த மார்பினராய் விளங்கும் சிவபிரான் எழுந்தருளிய, மயக்கும் சோலைகளால் சூழப்பெற்ற, இள மயில்கள் ஆரவாரிக்கும் திருச் சோற்றுத்துறையைச் சென்றடைவோம்.

கு-ரை : பாலும் நெய்யும் தயிரும் ஆடி என்றது பஞ்சகவ் யங்களில் தனித்தனியாக இறைவனுக்கு அபிஷேகிக்கத்தக்கன இம் மூன்றுமே எனக் குறித்தபடி. தோல் - புலித்தோல், மான் தோலுமாம். மாலும் - மயக்கும். ஆலும் - ஒலிக்கும்.

3. பொ-ரை : சிவந்த திருமேனியரும், செம்மை நிறமுடைய சடைமுடியினரும், விடையூர்ந்து வருபவரும், கையில் பற்றிய சூலத் தினரும், வீரக்கழல் அணிந்தவரும், இடுகாட்டில் விளங்குபவரும், உமையம்மையைத் தன்மேனியில் ஒரு கூறாகக் கொண்டவருமான எம் தலைவராய சிவபிரான் எழுந்தருளிய திருச்சோற்றுத்துறையைச் சென் றடைவோம்.

கு-ரை : வேல் - சூலம். கரிகாடர் - சுடுகாட்டில் நடிப்பவர். ஐயர் - தலைவர். கழலர் - வீரக்கழலையுடையவர்.

4. பொ-ரை : நோய்கட்கு இடமான இவ்வுடலுடன் பிறத்தல்

Koviloor Digital Library

மணிகொள் கண்டர் மேய வார்பொழில்
அணிகொள் சோற்றுத் துறைசென் றடைவோமே. 4

298. பிறையு மரவும் புனலுஞ் சடைவைத்து
மறையு மோதி மயான மிடமாக
உறையுஞ் செல்வ முடையார் காவிரி
அறையுஞ் சோற்றுத் துறைசென் றடைவோமே. 5

299. துடிக ளோடு முழவம் விம்மவே
பொடிகள் பூசிப் புறங்கா டரங்காகப்
படிகொள் பாணி பாடல் பயின்றாடும்
அடிகொள் சோற்றுத் துறைசென் றடைவோமே. 6

ஒழியுமாறு இப்பிறப்பைப் பயன்படுத்த எண்ணும் அறிவுடைய வர்களே, துணித்தலைச் செய்வதும், போர் செய்தற்கு உரியதுமான விளங்கும் மழுவாயுதத்தைக் கையில் ஏந்தியவரும், நீலமணி போன்ற கண்டத்தை உடையவருமான, சிவபெருமான் மேவிய நீண்ட பொழில்கள் சூழ்ந்த அழகிய திருச்சோற்றுத்துறையைச் சென்றடைவோமாக.

கு-ரை : பிணிகொள் ஆக்கை - நோயுற்ற உடல். பிறப்புளீர் - நோயுற்ற இவ்வுடல் ஒழிக்க எடுத்த இப்பிறவியைப் பயன்படுத்தும் ஞானிகளே!

5. பொ-ரை : இளம் பிறையையும் பாம்பையும் கங்கையையும் சடையில் அணிந்து, நான்மறைகளை ஓதிக் கொண்டு, சுடுகாட்டைத் தமது இடமாகக் கொண்டு உறையும், வீடு பேறாகிய செல்வத்தை உடைய இறைவரின் காவிரி நீர் ஒலி செய்யும் திருச்சோற்றுத் துறையைச் சென்றடைவோம்.

கு-ரை : அணியல்லாத பாம்பு மதி இவற்றைப் பூண்டு, கரிகாடு இடமாகக்கொண்டும் செல்வமுடையார் என்றது சுவைபடக் கூறியது. அறையும் - மோதும்.

6. பொ-ரை : உடுக்கைகள் பலவற்றோடு முழவங்கள் ஒலிக்கத் தம் மேனி மீது திருநீற்றுப் பொடி பூசி, புறங்காடாகிய சுடுகாட்டை அரங்காகக் கொண்டு, பொருத்தமான தாளச் சதிகளோடு பாடல்கள்

Koviloor Digital Library

300. சாடிக் காலன் மாளத் தலைமாலை
சூடி மிக்குச் சுவண்டாய் வருவார்தாம்
பாடி யாடிப் பரவு வாருள்ளத்
தாடி சோற்றுத் துறைசென் றடைவோமே. 7

301. பெண்ணோர் பாக முடையார் பிறைச்சென்னிக்
கண்ணோர் பாகங் கலந்த நுதலினார்
எண்ணா தரக்க னெடுக்க வூன்றிய
அண்ணல் சோற்றுத் துறைசென் றடைவோமே. 8

பாடி ஆடும் அடிகள் எழுந்தருளிய திருச்சோற்றுத்துறையைச் சென்று அடைவோம்.

கு-ரை : துடி - உடுக்கை. புறங்காடு - சுடுகாடு. அரங்கு - கூத்து மேடை. பாணி - தாளம்.

7. பொ-ரை: காலன் அழியுமாறு அவனைக் காலால் உதைத்துத் தலைமாலைகளை அணிந்து, பொருத்தம் உடையவராய் வருபவரும், பாடி ஆடிப் பரவுவார் உள்ளங்களில் மகிழ்வோடு நடனம் புரிபவரு மான சிவபிரான் எழுந்தருளிய திருச்சோற்றுத்துறையைச் சென்றடை வோம்.

கு-ரை: காலன் மாளச் சாடி என மாறுக. சுவண்டாய் - பொருத் தமாய், பரவுவார் உள்ளத்து ஆடி - தியானிப்பவர் உள்ளத்து ஆடு பவன்.

8. பொ-ரை : ஒருபாகமாக உமையம்மையை உடையவரும், பிறையணிந்த சென்னியரும், தமது திருமேனியில் ஒரு பாகமாக விளங்கும் நெற்றி விழியை உடையவரும், இராவணன் பின்விளையும் தீமையை எண்ணாது கயிலை மலையைப் பெயர்க்க, அவனது முனைப்பை அடக்கக் கால் விரலை ஊன்றிய தலைமைத் தன்மை உடையவருமாகிய சிவபிரானது திருச்சோற்றுத்துறையைச் சென்றடை வோம்.

கு-ரை : பிறைச்சென்னி - பிறையையணிந்த சிரம். எண் ணாது - பின்வருந் தீமையை ஆராயாமல். அண்ணல் - பெருமையிற் சிறந்தவன்.

Koviloor Digital Library

302. தொழுவா ரிருவர் துயர நீங்கவே
அழலா யோங்கி யருள்கள் செய்தவன்
விழவார் மறுகில் விதியான் மிக்கவெம்
எழிலார் சோற்றுத் துறைசென் றடைவோமே. 9

303. கோது சாற்றித் திரிவா ரமண்குண்டர்
ஓது மோத்தை யுணரா தெழுநெஞ்சே
நீதி நின்று நினைவார் வேடமாம்
ஆதி சோற்றுத் துறைசென் றடைவோமே. 10

304. அந்தண் சோற்றுத் துறையெம் மாதியைச்
சிந்தை செய்ம்மி னடியா ராயினீர்

9. பொ-ரை : தம் செருக்கடங்கித் தம்மைத் தொழுத திருமால் பிரமன் ஆகிய இருவர்க்கும், அழலுருவாய் ஓங்கி நின்று அருள்களைச் செய்தவன், விரும்பி உறையும் விழாக்கள் நிகழும் வீதிகளில் வேத விதியோடு வாழும் மக்களை உடைய சோற்றுத்துறையைச் சென் றடைவோம்.

கு-ரை : தொழுவார் இருவர் - தம் செருக்கு அடங்கித்தொழுத அயனும் திருமாலும். மறுகு - வீதி. விதி - வேதவிதி.

10. பொ-ரை : நெஞ்சே! குற்றங்களையே பலகாலும் சொல்லித் திரிபவராகிய சமண் குண்டர்கள் ஓதுகின்ற வேதத்தை அறிய முய லாது, சிவாகம நெறி நின்று, நினைப்பவர் கருதும் திருவுருவோடு வெளிப்பட்டருளும் முதல்வனாகிய சிவபிரானது சோற்றுத்துறையை நாம் சென்றடைவோம்.

கு-ரை : கோது - குற்றம். ஓதும் ஓத்தை - ஓதுகின்ற பிடக வேதத்தை. நீதி நின்று - சிவாகம நெறிக்கண் நின்று. நினைவார் வேடம் ஆம் ஆதி - தியானிப்பவர்கள் தியானித்த உருவிற்சென்று அருளும் முதல்வன்.

11. பொ-ரை : அடியவர்களாக உள்ளவர்களே! அழகு தண்மை ஆகியவற்றோடு விளங்கும் திருச்சோற்றுத்துறையில் எழுந்தருளிய எம் முதல்வனை மனத்தால் தியானியுங்கள். சந்த இசையால்

Koviloor Digital Library

சந்தம் பரவு ஞான சம்பந்தன்
வந்த வாறே புனைதல் வழிபாடே. 11

திருச்சிற்றம்பலம்

ஞானசம்பந்தன் பாடிய இத்திருப்பதிகத்தைத் தமக்கு வந்தவாறு பாடி வழிபடுதலே அவ்விறைவற்கு நாம் செய்யும் வழிபாடாகும்.

கு-ரை : அடியாராகவுள்ளீர்! சோற்றுத்துறை ஆதியைத் தியானியுங்கள்; அதற்குரிய வழிபாடாவது ஞானசம்பந்தன் திருவுளத்து வந்தவாறு அமைந்த இப்பதிகத்தைப் பாடிப் புனைதலே என்பது. வந்த வாறே என்றது, இவை இறைவன் திருவுள்ளத்து நின்று உணர்த்த எழுந்த உரைகள் என்பதை விளக்கியது.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி

ஒளிறு மணிப்பணி நாட்டும் உலகத்தும்உம் பருள்ளும்
வெளிறு படர்ச்சில நிற்பதுண்டே மிண்டி மீன்உகளும்
அளறு வயற்சண்பை நாதன் அமுதப் பதிகமென்னும்
களிறு விடப்புகு மேல்தொண்டர் பாடுங் கவிதைகளே.

கவிக்குத் தகுவன கண்ணுக் கினியன கேட்கில்இன்பம்
செவிக்குத் தகுவன சிந்தைக் குரியன பைந்தரளம்
நவிக்கட் சிறுமியர் முற்றில் முகந்துதஞ் சிற்றில்தொறும்
குவிக்கத் திரைபரக் குங்கொச்சை நாதன் குரைகழலே.

– நம்பியாண்டார் நம்பி

Koviloor Digital Library

திருநறையூர்ச்சித்தீச்சரம்

பதிக வரலாறு:

குடவாயிலை வணங்கிப் பதிகம் பாடிய பிள்ளையார் 'ஊருலாவு' என்னும் நீடுதமிழ்த்தொடை புனைந்துகொண்டே வழிநடந்து திருநறையூரை யடைந்தார்கள். இதில் நறையூர் என்பது தலத்தின் பெயராகவும், சித்தீச்சரம் என்பது கோயிலின் பெயராகவும் குறிக்கப்பெறுகிறது. 'சித்தன் சித்தீச்சரம்' என இறைவன் திருநாமம் சித்தன் எனக் குறிக்கப்பெறுகிறது.

பண்: தக்கராகம்

பதிக எண்: 29

திருச்சிற்றம்பலம்

305. **ஊரு லாவு பலிகொண் டுலகேத்த**
நீரு லாவு நிமிர்புன் சடையண்ணல்
சீரு லாவு மறையோர் நறையூரில்
சேருஞ் சித்தீச் சரஞ்சென் றடைநெஞ்சே. 1

இத்திருப்பதிகம் தம் நெஞ்சை விளித்துக் கூறுவதாக அமைந்துள்ளது.

1. பொ-ரை : நெஞ்சே! ஊர்கள்தோறும் உலாவுவதால் கிடைக்கும் உணவைப் பெற்று, உலகம் பரவக் கங்கை நீரைத் தன் திரு முடியில் ஏற்று, அக்கங்கை நீர் உலாவும் மேல்நோக்கின சிவந்த சடைமுடியினை உடையதலைமைத் தன்மை உடைய சிவபிரான் எழுந்தருளிய, சீருடைய மறையவர் வாழும் நகரான நறையூரில் விளங்கும் சித்தீச்சரத்தைச் சென்றடைவாயாக.

கு-ரை : இப்பதிகம் நெஞ்சை நோக்கிச் சித்தீச்சரம் சென்றடை; சிந்தி; தெளி; என்று அறிவுறுத்தியது.

ஊர் உலாவு பலிகொண்டு - ஊரின்கண் உலாவுதலைச் செய்து பிச்சையேற்று. உலாவு என்பது முதனிலைத் தொழிற்பெயர். தலப் பெயர் நறையூர்; கோயிற்பெயர் சித்தீச்சரம்.

Koviloor Digital Library

306. காடு நாடுங் கலக்கப் பலிநண்ணி
ஓடு கங்கை யொளிர்புன் சடைதாழ
வீடு மாக மறையோர் நறையூரில்
நீடுஞ் சித்தீச் சரமே நினைநெஞ்சே. 2

307. கல்வி யாளர் கனகம் மழன்மேனி
புல்கு கங்கை புரிபுன் சடையானூர்
மல்கு திங்கட் பொழில்சூழ் நறையூரில்
செல்வர் சித்தீச் சரஞ்சென் றடைநெஞ்சே. 3

308. நீட வல்ல நிமிர்புன் சடைதாழ
ஆட வல்ல வடிக ளிடமாகும்

2. பொ-ரை : நெஞ்சே! காட்டின்கண் முனிவர் குடில்களிலும், நாட்டின்கண் இல்லறத்தார் வீடுகளிலும் விரும்பிப் பலியேற்று, ஓடி வரும் கங்கை தங்கிய ஒளிவீசும் சிவந்த சடைகள் தாழ, தம் உடல்களை விடுத்து, முத்திப்பேற்றை அடைய விரும்பும் அந்தணர் வாழும் நறை யூரில், புகழால் நீடிய சித்தீச்சரத்தில் விளங்கும் பெருமானை நினைவா யாக.

கு-ரை : காடும் நாடும் கலக்க - காட்டிடமும், நாடும் தம்முட் கலக்க. ஆகம் வீடும் மறையோர் எனக்கூட்டி வினைவயத்தான் வந்த உடலைவிட்டு முத்தியெய்தும் அந்தணர் எனப் பொருள் கொள்க.

3. பொ-ரை : நெஞ்சமே! பொன்னையும் தீயையும் ஒத்த திருமேனியராய், கங்கை தங்கும் முறுக்கேறிய சிவந்த சடையினை உடையவராய் விளங்கும் சிவபிரானது ஊர், கல்வியாளர் நிறைந்த தாய்,திங்கள் தங்கும் பொழில்கள் சூழ்ந்ததாய் விளங்கும் நறையூ ராகும். அவ்வூரில் செல்வர் வணங்கும் சித்தீச்சரத்தைச் சென்றடை வாயாக.

கு-ரை : கனகம் அழன்மேனி - பொன்னையும் தீயையும் ஒத்த திருமேனி. கல்வியாளர் மல்கும் நறையூர் என இயைக்க.

4. பொ-ரை : நெஞ்சே! மேல்நோக்கிய நீண்டு வளரவல்ல செஞ் சடைகள் தாழுமாறு ஆடுதலில் வல்ல அடிகளாகிய சிவபிரானது இடம் ஆகிய பாடுதலில் வல்ல வண்டுகள் நிறைந்து வாழும் சோலைவளம்

Koviloor Digital Library

பாடல் வண்டு பயிலு நறையூரில்
சேடர் சித்தீச் சரமே தெளிநெஞ்சே. 4

309. உம்ப ராலு முலகின் னவராலும்
தம்பெ ருமைய ளத்தற் கரியானூர்
நண்பு லாவு மறையோர் நறையூரில்
செம்பொன் சித்தீச் சரமே தெளிநெஞ்சே. 5

310. கூரு லாவு படையான் விடையேறி
போரு லாவு மழுவா னனலாடி
பேரு லாவு பெருமா னறையூரில்
சேருஞ் சித்தீச் சரமே யிடமாமே. 6

உடைய நறையூரில் பெரியோர் வணங்கித் துதிக்கும் சித்தீச்சரத்தைத் தெளிவாயாக.

கு-ரை : நீடவல்ல - மிகமேலும் வளரவல்ல. சேடர் - பெருமையுடையவர்.

5. பொ-ரை : நெஞ்சே! தேவர்களாலும், உலகிடை வாழும் மக்களாலும் தனது பெருமைகளை அளவிட்டுக் கூறுவதற்கு அரியவனாகிய சிவபிரானது ஊராய், நட்புத் தன்மையால் மேம்பட்ட மறையவர்கள் வாழும் திருநறையூரில் சிவபிரான் எழுந்தருளிய செம்பொன் மயமான சித்தீச்சரத்தையே தெளிவாயாக.

கு-ரை : உம்பர் - தேவர். உலகின்னவர் - மக்கள். உம்பர்கள் மலத்தான் மறைப்புண்டு இன்பத்துள் மயங்கி இறைவனை மறந்து, தம் பெருமை யொன்றையே நினைத்திருப்பவராதலின் அவர்களால் இவன் பெருமை அளக்கமுடியாதாயிற்று; மக்கள் மலத்தான் கட்டுண்டு ஆன்மபோதமிக்கிருத்தலின் மக்களால் அளக்கமுடியாதாயிற்று.

6. பொ-ரை : கூர்மைமிக்க சூலப்படையை உடையவனாய், விடை மீது ஏறிப் போருக்குப் பயன்படும் மழுவாயுதத்தை ஏந்தி, அனல்மிசை நின்றாடி, ஏழுலகிலும் தன் புகழ் விளங்க நிற்கும் சிவபெருமான் திருநறையூரில் விளங்கும் சித்தீச்சரமே நாம் வழிபடற்குரிய இடமாகும்.

Koviloor Digital Library

311. அன்றி நின்ற வவுணர் புரமெய்த
வென்றி வில்லி விமலன் விரும்புமூர்
மன்றில் வாச மணமார் நறையூரில்
சென்று சித்தீச் சரமே தெளிநெஞ்சே. 7

312. அரக்க னாண்மை யழிய வரைதன்னால்
நெருக்க வூன்றும் விரலான் விரும்புமூர்
பரக்குங் கீர்த்தி யுடையார் நறையூரில்
திருக்கொள் சித்தீச் சரமே தெளிநெஞ்சே. 8

313. ஆழி யானு மலரி னுறைவானும்
ஊழி நாடி யுணரார் திரிந்துமேல்
சூழு நேட வெரியா மொருவன்சீர்
நீழல் சித்தீச் சரமே நினைநெஞ்சே. 9

கு-ரை : கூர் உலாவு படை - கூர்மை மிக்க சூலப்படை. பேர் - புகழ். நறையூரில் சேரும் இடம் சித்தீச்சரம் ஆம் எனக்கூட்டுக.

7. பொ-ரை : நெஞ்சே! தன்னோடு வேறுபட்டு நிற்கும் அவுணர்களின் முப்புரங்களையும் எய்தழித்த வெற்றியோடு கூடிய வில்லை உடைய குற்றமற்றவன் விரும்பும் ஊர் ஆகிய, மணம் நிலைபெற்று வீசும் பொது மன்றங்களை உடைய திருநறையூருக்குச் சென்று, அங்குப் பெருமான் எழுந்தருளிய சித்தீச்சரத்தைத் தெளிந்து வழிபடுக.

கு-ரை : அன்றி - வேறுபட்டு. மன்றில் - பொதுச்சபைகளில்.

8. பொ-ரை : நெஞ்சே! இராவணனது வலிமை கெடுமாறு கயிலை மலையால் ஊன்றி அடர்த்த கால் விரலை உடைய சிவபிரான் விரும்புவது, பரவிய புகழாளர் வாழ்வது ஆகிய திருநறையூரில் விளங்கும் சிவபிரானது சித்தீச்சரத்தைத் தெளிவாயாக.

கு-ரை : பரக்குங் கீர்த்தி - மேலும் மேலும் பரவும் புகழ். திரு - சிவஞானம்.

9. பொ-ரை : நெஞ்சே! சக்கராயுதத்தை உடைய திருமாலும், தாமரை மலர்மேல் உறையும் நான்முகனும், உணராதவனாய், ஓர்

Koviloor Digital Library

314. மெய்யின் மாசர் விரிநுண் டுகிலிலார்
கையி லுண்டு கழறு முரைகொள்ளேல்
உய்ய வேண்டி லிறைவன் னறையூரில்
செய்யுஞ் சித்தீச் சரமே தவமாமே. 10

315. மெய்த்து லாவு மறையோர் நறையூரில்
சித்தன் சித்தீச் சரத்தை யுயர்காழி
அத்தன் பாத மணிஞான சம்பந்தன்
பத்தும் பாடப் பறையும் பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

ஊழிக்காலம் அளவும் திரிந்து சுற்றும் முற்றும் மேலும் கீழுமாய்த் தேட எரியுருவாய் ஓங்கி நின்ற சிவபெருமானது சிறப்புமிக்க இடமாகிய திருநறையூர்ச் சித்தீச்சரத்தை நினைவாய்.

கு-ரை : ஊழி நாடி - ஒருழிக்காலம் தேடி. என்றது நீண்ட காலம் தேடியும் என்று அவர்கள் முயற்சியின் பயனற்ற தன்மையை விளக்கியவாறு. சூழும் - சுற்றிலும். நேட - தேட.

10. பொ-ரை உடம்பின்கண் அழுக்குடையவர்களும், விரித்துக் கட்டும் நுண்ணிய ஆடைகளை அணியாதவர்களும், கைகளில் பலி ஏற்று உண்டு திரிபவர்களுமாகிய சமணர்கள் இடித்துக் கூறும் உரை களைக் கொள்ளாதீர். நீர் இப்பிறப்பில் உய்தி பெற விரும்பினால், சிவபிரான் எழுந்தருளிய திருநறையூரில் செய்தமைத்த சித்தீச்சரத்தைச் சென்று வழிபடுமின். அதுவே சிறந்த தவமாம்.

கு-ரை : மாசர் - அழுக்குடையவர். துகிலிலார் - திகம்பரர். சித்தீச்சரமே தவமாம் செய்யும் எனக்கூட்டுக.

11. பொ-ரை :வாய்மையே பேசி வாழும் மறையவர் வாழும் திருநறையூரின்கண் சித்தன் என்ற திருநாமத்தோடு விளங்கும் சிவ பெருமானது சித்தீச்சரத்தை, மேலான காழி மாநகரில் விளங்கும் சிவ பிரானது திருப்பாதங்களைத் தனது திருமுடிக்கு அணியாகக் கொண்ட ஞானசம்பந்தன் பாடிய இத்திருப்பதிகப் பாடல்கள் பத்தையும் பாடிப் பரவப் பாவங்கள் நீங்கும்.

கு-ரை :மெய்த்து - உண்மையான வாழ்வுடன். உண்மை கூறி

Koviloor Digital Library

என்றுமாம். சித்தன் இத்தலத்து இறைவன் திருநாமம். காழியத்தன் பாதம் அணி ஞானசம்பந்தன் - சீகாழியில் தோணியப்பரது திருவடி ஞானம் பெற்ற சம்பந்தன்.

திருவெண்காட்டுப் புராணம்

இருகுடங்கொண் டொருகுடத்தில் வெண்பொடி பெண்
கொடியரக வெழுவித் தோனைத்
திருவருளாற் பாலருந்தி யேடதனை
யாற்றிலிட்ட தெய்வக் கோனை
அருமறையின் தலைக்கொழுந்தை ஆகமத்தின்
தனிமுதலை அடியார் வாழ்வைப்
பரசமய கோளரியைக் கௌணியர்சூ
ளாமணியைப் பகருவோமே.

- சைவ எல்லப்ப நாவலர்.

திருவாவடுதுறைப் புராணம்

பரசமயர் வயிறெரியத் தமிழ்ப்பதிகம்
தீயிலிட்டுப் பசுமை யாக்கிக்
கரவுடைய பொய்ச்சமணர் கழுவேறப்
பாசுரம்வை கையின்மீ தேற்றிப்
புரவலன்கூ னிமிர்த்தினிய தமிழ்நாட்டைச்
சோணாடு போலச் செய்த
சிரபுரக்கோன் சிற்றடிப்பொற் றாமரைப்போ(து)
எப்போதும் சிரமேற் கொள்வாம்.

- சாமிநாத முனிவர்.

Koviloor Digital Library

30. திருப்புகலி

பண்: தக்கராகம்

பதிக எண்: 30

திருச்சிற்றம்பலம்

316. விதியாய் விளைவாய் விளைவின் பயனாகிக்
கொதியா வருகூற் றையுதைத் தவர்சேரும்
பதியா வதுபங் கயநின் றலரத்தேன்
பொதியார் பொழில்சூழ் புகலிந் நகர்தானே. 1

317. ஒன்னார் புரமூன் றுமெரித் தவொருவன்
மின்னா ரிடையா ளொடுங்கூ டியவேடந்
தன்னா லுறைவா வதுதண் கடல்சூழ்ந்த
பொன்னார் வயற்பூம் புகலிந் நகர்தானே. 2

1. பொ-ரை : மார்க்கண்டேயருக்கு வயது பதினாறு என விதித்த விதியாகவும், அதன்காரணமாக வந்த மரணமாய், அவர் இறை வழி பாடு செய்ததன் காரணமாகத்தானே விதியின் பயனாய் வெளிப்பட்டுச் சினந்துவந்த கூற்றுவனை உதைத்தருளிய சிவபிரான் எழுந்தருளிய தலம், தாமரை மலர்கள் மலர்ந்த நீர்நிலைகளும், தேன்கூடுகள் நிறைந்த பொழில்களும் சூழ்ந்த புகலிநகராகும்.

கு-ரை : இது கூற்றுதைத்தார் பதியாவது புகலிநகர் என்கின்றது. விதியாய் - மார்க்கண்டற்கு வயது பதினாறு என்ற விதியாய். விளை வாய் - அவ்விதியின் விளைவாகிய மரணமாய். விளைவின் பயன் ஆகி - மரணத்தின் பயனாகித் தான் வெளிப்பட்டு. கொதியா - சினந்து. கொதியாவருகூற்றை உதைத்தவர் என்றது, இங்ஙனம் விதியென்னும் நியதியைத் துணைபற்றி வந்த கூற்றுவன் அந்நியதிக்கும் காரணம் இறைவன் என்பதை உணர்ந்துகொள்ள வைத்த பெருங்கருணை.

2. பொ-ரை : பகைவராய் மாறிய அசுரர்களின் முப்புரங் களையும் எரித்தழித்த சிவபிரான் மின்னல் போன்ற இடையினை உடைய உமையம்மையோடு கூடிய திருவுருவத்தோடு எழுந்தருளிய இடம், குளிர்ந்த கடல் ஒருபுறம் சூழ, பொன் போன்ற நெல்மணிகள் நிறைந்த வயல்களை உடைய புகலிநகராகும்.

Koviloor Digital Library

318. வலியின் மதிசெஞ் சடைவைத் தமணாளன்
புலியின் னதள்கொண் டரையார்த் தபுனிதன்
மலியும் பதிமா மறையோர் நிறைந்தீண்டிப்
பொலியும் புனற்பூம் புகலிந் நகர்தானே. 3

319. கயலார் தடங்கண் ணியொடும் மெருதேறி
அயலார் கடையிற் பலிகொண் டவழகன்
இயலா லுறையும் மிடமெண் டிசையோர்க்கும்
புயலார் கடற்பூம் புகலிந் நகர்தானே. 4

கு-ரை : இது திரிபுரம் எரித்த பெருமான் தேவியோடு எழுந்தருளியிருக்கும் இடம் புகலி என்கின்றது. ஒன்னார் - பகைவர். வேடந்தன்னால் - வேடத்தோடு. உறைவாவது - உறையும் இடமாவது புகலி நகர் என்க.

3. பொ-ரை : கலைகளாகிய வலிமை குறைந்த பிறை மதியைச் செஞ்சடைமீது வைத்துள்ள மணாளனும், புலியின் தோலை இடையிற் கட்டிய புனிதனும் ஆகிய சிவபெருமான் விரும்பும் பதி மேம்பட்ட வேதியர் நிறைந்து செறிந்து பொலியும் நீர்வளம் சான்ற அழகிய புகலி நகராகும்.

கு-ரை : இது மதிசூடிய மணாளனாகிய, புலித்தோலரையார்த்த பெருமான் பதி புகலி என்கின்றது. வலியில் மதி - தேய்ந்து வலி குன்றிய பிறைமதி. தளர்ந்தாரைத் தாங்குதல் இறைவனியல்பு என்பது உணர்த்தியவாறு. அதள் - தோல்.

4. பொ-ரை : கயல்மீன் போன்ற பெரிய கண்களை உடைய உமையம்மையோடும் விடைமீது ஏறி, அயலார் இல்லங்களில் பலி கொண்டருளும் அழகனாகிய சிவபிரான் எண்திசையிலுள்ளாரும் செவிசாய்த்து இடி ஓசையைக் கேட்கும் கார் மேகங்கள் தங்கும் கடலை அடுத்துள்ள அழகிய புகலிநகராகும்.

கு-ரை : இடபவாகனத்தில் அம்மையப்பராய், அயலார் மனை வாயிலில் பலிகொள்ளும் இறைவன்பதி புகலி என்கின்றது. கயலார் தடங்கண்ணி - மீனாட்சி. அயலார் - கன்மப்பிரமவாதிகளான தாருகாவனத்து ரிஷிகள். கடை - மனைவாயில். இயலால் - அழகோடு.

Koviloor Digital Library

320. காதார் கனபொற் குழைதோ டதிலங்கத்
தாதார் மலர்தண் சடையே றமுடித்து
நாதா னுறையும் மிடமா வதுநாளும்
போதார் பொழிற்பூம் புகலிந் நகர்தானே. 5

321. வலமார் படைமான் மழுவேந் தியமைந்தன்
கலமார் கடனஞ் சமுதுண் டகருத்தன்
குலமார் பதிகொன் றைகள்பொன் சொரியத்தேன்
புலமார் வயற்பூம் புகலிந் நகர்தானே. 6

5. பொ-ரை : காதுகளில் அணிந்துள்ள கன்விய பொன்னால் இயன்ற குழை, தோடு ஆகியன இலங்க மகரந்தம் மருவிய மலர்களைத் தண்ணிய சடையின்கண் பொருந்தச்சூடி, எல்லா உயிர்கட்கும் நாதனாக விளங்கும் சிவபிரான் உறையுமிடம் நாள்தோறும் புதிய பூக்கள் நிறைந்து விளங்கும் பொழில்கள் சூழ்ந்த புகலிநகராகும்.

கு-ரை : குழையுந் தோடுங் காதிற் கலந்திலங்கச் சடையை ஏறமுடித்தநாதன் உறையும் இடம் புகலி என்கின்றது.

கன பொன்குழை - பொன்னாலாகிய கனவியகுழை. தாதார் மலர் - மகரந்தம் பொருந் திய மலர். ஏறமுடித்து - உயரத் தூக்கிக் கட்டி. நாதன் என்ற சொல் எதுகைநோக்கி நாதான் என நீண்டது. தண்சடை என்றமையால் குழை யணிந்த பாகத்திற்கேற்பக் கங்கையணிந்து தண்ணிய சடையான செம் பகுதிச் சடையை யுணர்த்தியது.

6. பொ-ரை : வெற்றி பொருந்திய சூலப்படை, மான், மழு, ஆகியவற்றை ஏந்திய வலிமையுடையோனும், மரக்கலங்கள் உலாவும் கடலிடைத் தோன்றிய நஞ்சினை அமுதாக உண்டவனும் ஆகிய சிவபிரான், அடியார் குழாத்தோடு உறையும் பதி, கொன்றை மலர்கள் பொன் போன்ற இதழ்களையும் மகரந்தங்களையும் சொரிய, தேன் நிலத்தில் பாயும் வயல்களை உடைய புகலி நகராகும்.

கு-ரை : இது மான் மழுவேந்திய மைந்தன், கடல் நஞ்சமுண்ட தலைவன் பதி புகலி என்கின்றது. வலம் ஆர்படை - வெற்றி பொருந் திய சூலப்படை. கலம் - மரக்கலம். கருத்தன் - தலைவன். குலமார் பதி - மக்கள் கூட்டம் செறிந்த நகரம். புலம் - அறிவு.

Koviloor Digital Library

322. கறுத்தான் கனலான் மதின்மூன் றையும்வேவச்
செறுத்தான் றிகழுங் கடனஞ் சமுதாக
அறுத்தா னயன்றன் சிரமைந் திலுமொன்றைப்
பொறுத்தா னிடம்பூம் புகலிந் நகர்தானே. 7

323. தொழிலான் மிகுதொண் டர்கள்தோத் திரஞ்சொல்ல
எழிலார் வரையா லன்றரக் கனைச்செற்ற
கழலா னுறையும் மிடங்கண் டல்கண்மிண்டிப்
பொழிலான் மலிபூம் புகலிந் நகர்தானே. 8

7. பொ-ரை : மும்மதில்களும் கனலால் வெந்தழியுமாறு சினந்தவனும், கடலிடை விளங்கித் தோன்றிய நஞ்சை அமுதாக உண்டு கண்டத்தில் தரித்தவனும், பிரமனது ஐந்து தலைகளில் ஒன்றை அறுத்து அதனைக் கையில் தாங்கிய சிவபிரான் எழுந்தருளிய இடம் அழகிய புகலி நகராகும்.

கு-ரை : புரம் எரித்து, நஞ்சுண்டு, பிரமன் சிரங்கொய்து வீரம் விளக்கிய தலைவன் பதி புகலி என்கின்றது. இப்பாட்டு அடி தோறும் பொருள்முற்றி வந்துள்ளது.

கறுத்தான் - சினந்தவன். செறுத்தான் - கண்டத்தில் அடக்கியவன். வேவக் கறுத்தான், அமுதாகச் செறுத்தான். ஒன்றையறுத்தான், அதைப் பொறுத்தான் இடம் புகலி என முடிவு செய்க.

8. பொ-ரை : தாம் செய்யும் பணிகளால் மேம்பட்ட தொண்டர்கள் தோத்திரம் சொல்லிப் போற்ற, அழகிய கயிலைமலையால் முன்னொரு காலத்தில் இராவணனைச் செற்ற திருவடிகளை உடைய சிவபிரான் உறையும் இடம், தாழைமரங்கள் செறிந்து விளங்கும் பொழில்கள் சூழ்ந்த புகலி நகராகும்.

கு-ரை : தொண்டர் தோத்திரஞ்சொல்ல இராவணனைச் செற்ற திருவடியையுடைய சிவன்பதி புகலி என்கிறது.

தொழிலால் மிகு தொண்டர்கள் - சரியை, கிரியையாதிகளால் மிக்க அடியார்கள். எழில் - எழுச்சி; அழகுமாம். கண்டல் - தாழை.

Koviloor Digital Library

324. மாண்டார் சுடலைப் பொடிபூ சிமயானத்
தீண்டா நடமா டியவேந் தல்தன்மேனி
நீண்டா னிருவர்க் கெரியா யரவாரம்
பூண்டா னகர்பூம் புகலிந் நகர்தானே. 9

325. உடையார் துகில்போர்த் துழல்வார் சமண்கையர்
அடையா தனசொல் லுவரா தர்களோத்தைக்
கிடையா தவன்றன் னகர்நன் மலிபூகம்
புடையார் தருபூம் புகலிந் நகர்தானே. 10

9. பொ-ரை : இறந்தவர்களை எரிக்கும் சுடலையில் விளையும் சாம்பலை உடலிற் பூசிக் கொண்டு, அம்மயானத்திலேயே தங்கி நடனமாடும் தலைவரும், திருமால் பிரமர் பொருட்டுத் தம் திருமேனியை அழலுருவாக்கி ஓங்கி நின்றவரும் பாம்பை மாலையாகத் தரித்தவருமான சிவபிரானது நகர் அழகிய புகலிப் பதியாகும்.

கு-ரை : சுடலைப் பொடி பூசி, மயானத்தாடி, மாலயனுக்காக அக்கினி மலையாய் நீண்டு, அரவை யாரமாகப் பூண்டு விளங்கும் இறைவன் பதி புகலி என்கின்றது. மாண்டார் - இறந்தவர். பொடிபூசி மயானத்தாடி என்றது எல்லாரும் அந்தம் எய்த, தாம் அந்தம் இல்லாதிருப்பவன் என்பதை விளக்கியது. ஏந்தல் - தலைவன். தன்மேனி இருவர்க்கு எரியா நீண்டான் எனக் கூட்டுக. அரவு ஆரம் பூண்டான் - பாம்பை மார்பில் மாலையாக அணிந்தவன்.

10. பொ-ரை : கீழ் உடையோடு மெல்லிய ஆடையைப் போர்த்துத் திரியும் புத்தரும், சமணர்களும் ஆகிய கீழ்மக்கள் பொருந்தாதவற்றைக் கூறுவார்கள். அக்கீழோரின் ஓத்திற்கு அகப் படாதவன் சிவபிரான். அப்பெருமானது நன்னகர், நன்கு செறிந்த பாக்கு மரச்சோலைகள் சூழ்ந்த புகலிநகராகும்.

கு-ரை : புறச்சமயிகளாகிய சமணர் புத்தர் வேதங்கட்குக் கிடையாத சிவனார்பதி புகலி என்கின்றது. உடையார் துகில் - உடுக்கத்தக்க துகில். போர்த்து - போர்வையாகப் போர்த்து. கையர் - கீழ்மக்கள். அடையாதன சொல்லுவர் - பொருந்தாதவற்றைச் சொல்லுவார்கள். ஆதர்கள் - கீழ்மக்கள். ஓத்து - வேதத்தை; என்றது பிடகம் முதலியவற்றிற்கு. வேற்றுமை மயக்கம். கிடையாதவன் - அகப்படாதவன். பூகம் - பாக்கு மரம்.

Koviloor Digital Library

326. இரைக்கும் புனல்செஞ் சடைவைத் தவெம்மான்றன்
புரைக்கும் பொழிற்பூம் புகலிந் நகர்தன்மேல்
உரைக்குந் தமிழ்ஞான சம்பந் தனொண்மாலை
வரைக்குந் தொழில்வல் லவர்நல் லவர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : ஆரவாரிக்கும் கங்கை நீரைத் தமது சிவந்த சடைமீது வைத்த எம் தலைவனாகிய சிவபிரானின், உயர்ந்த சோலைகளால் சூழப்பட்ட அழகிய புகலிப் பதியைக் குறித்துத் தமிழ் ஞான சம்பந்தன் உரைத்த அழகிய இப்பதிகமாலையைத் தமதாக்கி ஓதும் தொழில் வல்லவர் நல்லவர் ஆவர்.

கு-ரை : இம்மாலை பத்தும் தனக்கே உரியதாக்கவல்லவர் நல்லவராவர் என்கின்றது. புரைக்கும் - உயர்ந்திருக்கும். வரைக்கும் தொழில் - தம்மளவினதாக்கிக் கொள்ளுந் தொழில். எழுதுவிக்கும் தொழில் என்றுமாம்; அளவுபடுத்தி யுரைக்கும் தொழில் எனவுமாம்.

திருமயிலைப் புராணம்

வீழியிதழ் மடந்தைதன்மெய் யத்தியைப்பெண்
ணரசாக்கும் வேந்தை வாவு
மாழிபுடை சூழ்மதுரை யமணிருள்கீண்
டெழுந்தசுட ரவனை யவ்வூர்
வாழிறைவன் வெப்பகல வருளமுதம்
பொழிந்தவியன் மழையை ஞானக்
காழிநகர் மறைவேந்தைக் கவுணியர்தங்
குலக்கொழுந்தைக் கருதி வாழ்வாம்.

– அமிர்தலிங்கத் தம்பிரான்.

Koviloor Digital Library

31. திருக்குரங்கணின்முட்டம்

பதிக வரலாறு:

பிள்ளையார், திருவோத்தூரில் ஆண்பனையைப் பெண் பனையாக்கி, அமணர்களைச் சைவர்களாக்கித் திருமாகறல் என்னும் தலத்தை வணங்கியபின், குரங்கணின் முட்டத்தைச் சேர்ந்தார். அங்கு, ஆதிமுதல்வர் தாளைவணங்கிக் 'குரங்கணில் முட்டம் தொழுநீர்மையர் துன்பமிலரே' எனச் சிறப்பித்து 'விழுநீர் மழுவாள்' என்னும் இப்பதிகத்தை அருளிச் செய்தார்கள்.

பண்: தக்கராகம்

பதிக எண்: 31

திருச்சிற்றம்பலம்

327. விழுநீர் மழுவாட் படையண் ணல்விளங்கும்
கழுநீர் குவளைம் மலரக் கயல்பாயும்
கொழுநீர் வயல்சூழ்ந் தகுரங் கணின்முட்டம்
தொழுநீர் மையர்தீ துறுதுன் பமிலரே. 1

1. பொ-ரை : பெருமைக்குரிய கங்கையை முடிமிசை அணிந்தவரும், மழுவாட்படையைக் கையில் ஏந்தியவரும் ஆகிய சிவபிரான் உறைவது கழுநீர், குவளை ஆகியன மலர்ந்து, கயல்மீன்கள் துள்ளுமாறு விளங்கும் நீர் நிலைகளை உடையதும், செழுமையான வயல்களால் சூழப்பட்டதுமாகிய திருக்குரங்கணில்முட்டம் ஆகும். இத்தலத்தைத் தொழுபவர் தீமையால் வரும் துன்பம் இலராவர்.

கு-ரை : கங்கையையணிந்தவரும், மழுவேந்தியவருமாகிய இறைவன் விளங்கும் இத்தலத்தைத் தொழுபவர் துன்பமிலர் என்கின்றது.

விழுநீர் - பெருமையையுடையநீர், கங்கை. கொழு நீர் - வளமான நீர். தீதுறு துன்பம் - தீமையான்வரும் துன்பம்; பாவ கன்மத்தான்வரும் துன்பம் என்பதாம். தீதுகழுவி ஆட்கொள்ளக் கங்கையையும், துன்பந்துடைக்க மழுப்படையையும் உடைய பெருமானாதலின் துன்பம் இலர் என்றார்.

Koviloor Digital Library

328. விடைசேர் கொடியண் ணல்விளங் குயர்மாடக்
கடைசேர் கருமென் குளத்தோங் கியகாட்டில்
குடையார் புனன்மல் குகுரங் கணின்முட்டம்
உடையா னெனையா ளுடையெந் தைபிரானே. 2

329. சூலப் படையான் விடையான் சுடுநீற்றான்
காலன் றனையா ருயிர்வவ் வியகாலன்
கோலப் பொழில்சூழ்ந் தகுரங் கணின்முட்டத்
தேலங் கமழ்புன் சடையெந் தைபிரானே. 3

2. பொ-ரை : உயர்ந்து விளங்கும் மாடங்களின் கடை வாயிலைச் சேர்ந்துள்ள கரிய மெல்லிய காட்டிடையே அமைந்த குடைந்து ஆடுதற்குரிய நீர் நிலைகள் நிறைந்த குரங்கணில்முட்டத்தை உடையானும் விடைக்கொடி அண்ணலுமாகிய சிவபிரான் என்னை ஆளாக உடைய தலைவன் ஆவான்.

கு-ரை : இது இத்தலமுடைய பெருமானே என்னையாளுடைய பிரான் என்கின்றது. மாடக்கடைசேர் கருமென்குளத்து ஓங்கிய காட்டில் - மாடங்களின் கடைவாயிலைச் சேர்ந்துள்ள கரிய மெல்லிய குளத்தால் சிறந்த கட்டிடங்களிலே. குடையார் புனல் மல்கு - குடைதற்குரிய நீர்நிறைந்த; அணில் முட்டம் என்க.

ஆளுடைபிரான் என்பதால் எனக்கும் அவனுக்கும் உள்ள தொடர்பு, அநாதியேயான ஆண்டான் அடிமைத்ன்மையென அறிவித்தது. எந்தை என்றது ஆதியாயிருந்து, அடித்தும் அணைத்தும் அருள்வழங்கலின். பிரான் என்றது தன்வழிநின்று ஏவல்கொள்ளுந் தலைவனாக இருத்தலின்.

3. பொ-ரை : அழகிய சோலைகளால் சூழப்பெற்ற குரங்கணில் முட்டத்தில் எழுந்தருளிய மணம்கமழும் சடைமுடியை உடையோனாகிய எந்தை பிரான் சூலப்படையையும் விடை ஊர்தியையும் உடையவன். திருவெண்ணீறு பூசியவன். காலனின் உயிரை வவ்வியதால் கால காலன் எனப்படுபவன்.

கு-ரை : இது இத்தலத்திறைவன் சூலப்படையான் விடையான் நீற்றான் காலகாலன் என அடையாளமும், அருளுந்திறமும் அறிவிக்கின்றது. கோலம் - அழகு. ஏலம் - மயிர்ச்சாந்து.

Koviloor Digital Library

330. வாடா விரிகொன் றைவலத் தொருகாதில்
தோடார் குழையா னலபா லனநோக்கி
கூடா தனசெய் தகுரங் கணின்முட்டம்
ஆடா வருவா ரவரன் புடையாரே. 4

331. இறையார் வளையா ளையொர்பா கத்தடக்கிக்
கறையார் மிடற்றான் கரிகீ றியகையான்
குறையார் மதிசூ டிகுரங் கணின்முட்டத்
துறைவா னெமையா ளுடையொண் சுடரானே. 5

4. பொ-ரை : வாடாது விரிந்துள்ள கொன்றை மாலையைச் சூடிய வனும், வலக் காதில் குழையையும் இடக்காதில் தோட்டையும் அணிந் துள்ளவனும், நன்றாக அனைத்துயிர்களையும் காத்தலைத் திருவுளம் கொண்டு தேவர் எவரும் செய்ய முடியாத அரிய செயல்களைச் செய்ப வனுமாகிய குரங்கணில்முட்டத்துள் திருநடனம் புரியும் இறைவன் எல்லோரிடத்தும் அன்புடையவன்.

கு-ரை : இத்தலத்து ஆடிவரும் பெருமானாகிய அவரே அடி யேன் மாட்டு அன்புடையார் என்கின்றது. வாடாவிரி கொன்றை - வாடாத விரிந்த கொன்றை மலர்மாலையையும். தேவர்கட்கே அணிந்த மாலை வாடாது; அங்ஙனமாகத் தேவதேவனாகிய சிவபெருமான் அணிந்த மாலை வாடாமை இயல்பு ஆதலின் இங்ஙனம் கூறப்பட்டது. வலத்துக்குழையும், ஒர்காதில் தோடும் உடையான் எனக்கொள்க. நல்ல பாலனம் நோக்கி - நன்றாகக் காத்தலைத் திருவுளங்கொண்டு. கூடாதன செய்த - வேறுதேவர் எவரும் செய்யக்கூடாத அரிய காரியங்களைச் செய்த. ஆடா வருவார் - திருநடனம்செய்து வருவார்.

5. பொ-ரை : இறையார் வளையாள் என்னும் திருப்பெயர் கொண்ட உமையம்மையை ஒருபாகத்தே கொண்டவனும், நீலகண்ட னும், யானையின் தோலை உரித்துப் போர்த்த கையினனும் ஆகிப் பிறைமதியை முடியில் சூடிக் குரங்கணில் முட்டத்தில் உறையும் இறைவன் எம்மை ஆளாக உடைய ஒண் சுடராவான்.

கு-ரை : சிவனே எம்மை யாளுடைய சோதி வடிவன் என்கின் றது. இறையார்வளையாள் இத்தலத்து அம்மையின் திருநாமம். முன்கையில் வளையல் அணிந்தவள் என்பது பொருள். கரி கீறிய கையான் - யானையையுரித்த கையையுடையவன். குறையார்மதி -

Koviloor Digital Library

332. பலவும் பயனுள் ளனபற் றுமொழிந்தோம்
கலவும் மயில்கா முறுபே டையொடாடிக்
குலவும் பொழில்சூழ்ந் தகுரங் கணின்முட்டம்
நிலவும் பெருமா னடிநித் தல்நினைந்தே. 6

333. மாடார் மலர்க்கொன் றைவளர் சடைவைத்துத்
தோடார் குழைதா னொருகா திலிலங்கக்
கூடார் மதிலெய் துகுரங் கணின்முட்டத்
தாடா ரரவம் மரையார்த் தமர்வானே. 7

இனிக்குறையக்கூடாத அளவு குறைந்த பிறைமதி. ஒண்சுடரான் - ஒள்ளிய சோதிவடிவன்.

6. பொ-ரை : தோகைகளை உடைய ஆண் மயில்கள் தாம் விரும்பும் பெண் மயில்களோடு கூடிக் களித்தாடும் பொழில்களால் சூழப்பட்ட குரங்கணில்முட்டத்தில் உறையும் பெருமான் திருவடிகளை நாள்தோறும் நினைந்து உலகப் பொருள்கள் பலவற்றிலும் இருந்த பற்றொழிந்தோம்.

கு-ரை : இது இறைவனடியை நித்தலும் நினைந்ததன் பயன் உள்ளன பலவற்றிலும் இருந்த பற்றும் ஒழிந்தோம் என்கின்றது. பயன் உள்ளன - பொறிகட்கும் பிறவற்றிற்கும் பயன்படுவனவாகிய தனு கரண புவனபோகங்கள். கலவம் - தோகை. 'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு' என்ற குறட்கருத்து அமைந்திருத்தல் காண்க.

7. பொ-ரை : சிவபிரான் பொன்னையொத்த கொன்றை மலர் மாலையைச் சடைமீது அணிந்து, காதணியாகிய குழை ஒரு காதில் இலங்கத் திரிபுரத்தை எரித்தழித்து, ஆடும் பாம்பை இடையிலே வரிந்துகட்டிக் குரங்கணில்முட்டத்தில் எழுந்தருளியுள்ளான்.

கு-ரை : கொன்றையணிந்து குழையுந்தோடுங் காதில் தாழ, திரிபுரமெரித்த பெருமான் குரங்கணில் முட்டத்து அமர்வான் என இறைவனுடைய மாலை அணி வீரம் இவற்றைக் குறிப்பிக்கின்றது. மாடு ஆர் மலர்க் கொன்றை - பொன்னை ஒத்த நிறமுடைய கொன்றைமலர். கூடார் - பகைவர். ஆடு ஆர் அரவம் - ஆடுதல்லப் பொருந்திய அரவம்.

Koviloor Digital Library

334. மையார் நிறமே னியரக் கர்தங்கோனை
உய்யா வகையா லடர்த்தின் னருள்செய்த
கொய்யார் மலர்சூ டிகுரங் கணின்முட்டம்
கையாற் றொழுவார் வினைகாண் டலரிதே. 8

335. வெறியார் மலர்த்தா மரையா னொடுமாலும்
அறியா தசைந்தேத் தவோரா ரழலாகும்
குறியா னிமிர்ந்தான் றன்குரங் கணின்முட்டம்
நெறியாற் றொழுவார் வினைநிற் ககிலாவே. 9

8. பொ-ரை : கரிய மேனியை உடைய அரக்கர் தலைவனாகிய இராவணனைப் பிழைக்க முடியாதபடி அடர்த்துப் பின் அவனுக்கு இனிய அருளை வழங்கியவனும், அடியவர் கொய்தணிவித்த மலர் மாலைகளுடன் குரங்கணில்முட்டத்தில் எழுந்தருளியுள்ளவனுமாகிய சிவபெருமானைக் கைகளால் தொழுபவர் வினைப்பயன்களைக் காணுதல் இலராவர்.

கு-ரை : இத்தலத்தைத் தொழுவார் வினைகாண்டல் அரிது என்கின்றது.

மையார்மேனி - கரியமேனி. அரக்கன் - இராவணன். உய்யா வகையால் - தப்பாதவண்ணம். கொய் ஆர் மலர் - கொய்தலைப் பொருந்திய மலர். வினை - வினைப்பயனாகிய துன்ப இன்பங்களை.

9. பொ-ரை : மணம் கமழும் தாமரை மலரில் உறையும் நான் முகனும், திருமாலும் அடிமுடி அறிய முடியாது வருந்தி வணங்க அழல் உருவாய் ஓங்கி நின்றருளிய சிவபிரான் விளங்கும் குரங்கணில் முட்டத்தை முறையாக வணங்குவார் வினைகள் இலராவர்.

கு-ரை: இது தொழுவார்வினை நிற்கும் ஆற்றல் இல்லாதன என்கின்றது.

வெறி - மணம். அறியாது அசைந்து - முதற்கண் இறைவன் பெருமையையறியாமல் சோம்பி இருந்து. ஏத்த - பின்னர் அறிந்து துதிக்க. ஓர் ஆர் அழலாகும் குறியான் - ஒப்பற்ற நெருங்குதற்கரிய அழலாகிய திருவுருவையுடையவன். நெறி - ஆகமவிதி.

Koviloor Digital Library

336. கழுவார் துவரா டைகலந் துமெய்போர்க்கும்
வழுவாச் சமண்சாக் கியர்வாக் கவைகொள்ளேல்
குழுமின் சடையண் ணல்குரங் கணின்முட்டத்
தெழில்வெண் பிறையா னடிசேர் வதியல்பே. 10

337. கல்லார் மதிற்கா ழியுண்ஞான சம்பந்தன்
கொல்லார் மழுவேந் திகுரங் கணின்முட்டம்
சொல்லார் தமிழ்மா லைசெவிக் கினிதாக
வல்லார்க் கெளிதாம் பிறவா வகைவீடே. 11

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை : தோய்க்கப்பட்ட துவராடையை உடலிற் போர்த்துத் திரியும் புத்தர், தம்கொள்கையில் வழுவாத சமணர் ஆகியோர் உரைகளைக் கொள்ளாதீர். மின்னல்திரள் போலத் திரண்டு உள்ள சடைமுடியை உடையவனும், அழகிய வெண்பிறையை அணிந்தவனும் ஆகிய குரங்கணில் முட்டத்து இறைவன் திரு வடிகளைச் சென்று வணங்குவதே நம் கடமையாகும்.

கு-ரை : இத்தலத்துள்ள இறைவனடிசேர்வதே இயல்பு என் கின்றது. கழுவார் -உடையைத் தோய்த்து அலசாதவராய், வழுவாச் சமண் - தம் கொள்கையில் வழுவாத சமணர். குழு மின்சடை - கூட்ட மாகிய மின்னலை ஒத்த சடை.

11. பொ-ரை : கருங்கல்லால் இயன்ற மதில்களால் சூழப்பட்ட சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன், கையில் கொல்லனது தொழில் நிறைந்த மழுவாயுதம் ஏந்திய குரங்கணில் முட்டத்து இறைவன்மீது பாடிய சொல்மாலையாகிய இத்திருப்பதிகத்தைச் செவிக்கு இனிதாக ஓதி ஏத்த வல்லார்க்குப் பிறவா நெறியாகிய வீடு எளிதாகும்.

கு-ரை : இப்பதிகத்தைச் செவிக்கினிதாகச் சொல்லவல்லவர் களுக்கு வீடு எளிது என்கின்றது. கல் ஆர் மதில் - மலையை ஒத்த மதில். பிறவாவகை வீடு எளிதாம் எனக் கூட்டுக. கொல்லார்மழு - கொற்றொழில் நிறைந்த மழு (திருக்கோவையார் - 231).

Koviloor Digital Library

32. திருவிடைமருதூர்

பதிக வரலாறு:

திருஞானசம்பந்தப் பிள்ளையார், திருநாகேச்சரத்து இனிதமரும் செங்கனகத் தனிக்குன்றை வணங்கி, நாகநாதப் பெருமானின் பிணிதீர்க்கும் பெருங்கருணையைப் போற்றித் திருவிடைமருதூருக்கு வழிக்கொள்கின்றவர் 'ஓடேகலன்' என்னும் இத்திருப்பதிகத்தையருளிச் செய்தார்கள். போகும் போது அளவிலாப் பெருமகிழ்ச்சி திருவுள்ளத்தெழ 'என்னை யாளுடையபிரான் உறைகின்ற இடைமருது ஈதோ' என்று அமைத்து இன்னிசைப்பதிகம் அருளிக்கொண்டே இடை மருதிற்கு எழுந்தருளினார்கள்.

பண் : தக்கராகம்

பதிக எண்: 32

திருச்சிற்றம்பலம்

338 . ஓடே கலனுண் பதுமூ ரிடுபிச்சை
காடே யிடமா வதுகல் லானிழற்கீழ்
வாடா முலைமங் கையுந்தா னுமகிழ்ந்
தீடா வுறைகின் றவிடை மருதீதோ. 1

1. பொ-ரை : உண்ணும் பாத்திரம் பிரம கபாலமாகும். அவர் உண்ணும் உணவோ ஊர் மக்கள் இடும் பிச்சையாகும், அவர் வாழும் இடமோ இடுகாடாகும். அத்தகைய சிவபிரான் கல்லால மரநிழற்கீழ் நன்முலைநாயகியும் தானுமாய் மகிழ்ந்து பெருமையோடு விளங்கும் திருத்தலமாகிய இடைமருது இதுதானோ?

கு-ரை : ஓடு எடுத்து ஊர்ப்பிச்சை ஏற்றுக் காடிடங்கொள்ளும் பெருமான் பெருமுலைநாயகியோடு எழுந்தருளும் இடைமருதீதோ என்று வினாவுகிறது இப்பதிகம்.

ஓடு - பிரமகபாலம். வாடாமுலை மங்கை என்பது பெரு முலைநாயகி என்னும் அம்மையின் திரு நாமத்தைக் குறித்தது. ஈடா - பெருமையாக.

Koviloor Digital Library

339. தடங்கொண்டதொர்தாமரைப்பொன்முடிதன்மேல்
குடங்கொண் டடியார் குளிர்நீர் சுமந்தாட்டப்
படங்கொண் டதொர்பாம் பரையார்த்த பரமன்
இடங்கொண் டிருந்தான் றனிடை மருதீதோ. 2

340. வெண்கோ வணங்கொண் டொரு வெண்டலையேந்தி
அங்கோல் வளையா ளையொர்பா கமமர்ந்து
பொங்கா வருகா விரிக்கோ லக்கரைமேல்
எங்கோ னுறைகின் றவிடை மருதீதோ. 3

341. அந்தம் மறியா தவருங் கலமுந்திக்
கந்தங் கமழ்கா விரிக்கோ லக்கரைமேல்
வெந்த பொடிப்பூ சியவே தமுதல்வன்
எந்தை யுறைகின்ற விடைமரு தீதோ. 4

2.பொ-ரை : தடாகங்களிற் பறித்த பெரிய தாமரை மலரைச் சூடிய அழகிய திருமுடியில், அடியவர் குடங்களைக் கொண்டு குளிர்ந்த நீரைமுகந்து சுமந்து வந்து அபிடேகிக்குமாறு, படம் எடுத்தாடும் நல்லபாம்பை இடையிலே கட்டிய பரமன் தான் விரும்பிய இடமாகக் கொண்டுறையும் இடைமருது இதுதானோ?

கு-ரை : தடம் - குளம். தாமரைப் பொன்முடி - தாமரை சூடிய அழகிய சிரம்.

3. பொ-ரை : வெண்மையான கோவணத்தை அணிந்து ஒப்பற்ற வெள்ளிய பிரம கபாலத்தைக் கையில் ஏந்தி அழகியதாய்த் திரண்ட வளையல்களை அணிந்த உமாதேவியை ஒருபாகமாக விரும்பி ஏற்று, பொங்கிவரும் காவிரி நதியின் அழகிய கரைமீது எம் தலைவனாயுள்ள சிவபிரான் எழுந்தருளிய இடைமருதூர் இதுதானோ?

கு-ரை : அம் கோல் வளையாளை - அழகிய திரண்ட வளையல் அணிந்த உமாதேவியை. அமர்ந்து - விரும்பி ஏற்று.

4. பொ-ரை : அரிய அணிகலன்களைக் கரையில் வீசி மணம் கமழ்ந்துவரும் காவிரி நதியின் அழகிய கரைமீது திருவெண்ணீறு அணிந்தவனாய், முடிவறியாத வேத முதல்வனாய் விளங்கும் எம்

Koviloor Digital Library

342. வாசங் கமழ்மா மலர்ச்சோ லையில்வண்டே
தேசம் புகுந்தீண் டியொர்செம் மையுடைத்தாய்ப்
பூசம் புகுந்தா டிப்பொலிந் தழகாய
ஈச னுறைகின் றவிடை மருதீதோ. 5

343. வன்புற் றிளநா கமசைத் தழகாக
என்பிற் பலமா லையும்பூண் டெருதேறி
அன்பிற் பிரியா தவளோ டுமுடனாய்
இன்புற் றிருந்தான் றனிடை மருதீதோ. 6

தந்தையாகிய சிவபிரான் உறைகின்ற இடைமருதூர் இதுதானோ?

கு-ரை : அந்தம் அறியாத வேதமுதல்வன் எனக் கூட்டுக. அருங்கலம் உந்தி - அரிய ஆபரணங்களைக் கரையில் வீசி.

5.பொ-ரை : மணம் கமழும் சிறந்த மலர்களை உடைய சோலைகளில் வண்டுகளைக் கொண்டதும், உலக மக்கள் பலரும் கூடிச் செம்மையாளராய்த் தைப்பூசத் திருநாளில் நீராடி வணங்குவதும், பொலிவும் அழகும் உடையவனாய் ஈசன் எழுந்தருளி விளங்குவது மான இடைமருது என்னும் தலம் இதுதானோ?

கு-ரை : வண்டு புகுந்து ஈண்டி செம்மையுடைத்தாய் இருக்க, பூசம்புகுந்து ஆடி அழகாய ஈசன் உறைகின்ற இடைமருது என வினை முடிவுசெய்க.

தேசம் புகுந்து - பல இடங்களிலும் சுற்றி, செம்மை உடைத் தாய் - குரலின் இனிமை படைத்து. இத்தலத்தில் தைப்பூசத் திருநாள் அன்று இறைவன் காவிரியில் தீர்த்தங்கொள்வர்.

6. பொ-ரை : வலிய புற்றுக்களில் வாழும் இளநாகங்களை இடையிலே அழகாகக் கட்டிக் கொண்டு, எலும்பால் இயன்ற மாலைகள் பலவற்றையும் அணிகலன்களாகப் பூண்டு, அன்பிற் பிரியாத உமையம்மையோடும் உடனாய் எருதேறிச் சிவபிரான் இன்புற் றுறையும் இடைமருது என்பது இதுதானோ?

கு-ரை : வல்புற்று இளநாகம் - வலிய புற்றில் வாழும் இள நாகம் அவைகளை அவயவங்களிலே அணியாகக் கட்டி. அன்பில் பிரியாதவள் - பிரியாவிடையாகிய பார்வதி.

Koviloor Digital Library

344. தேக்குந் திமிலும் பலவுஞ் சுமந்துந்திப்
போக்கிப் புறம்பூ சலடிப் பவருமால்
ஆர்க்குந் திரைக்கா விரிக்கோ லக்கரைமேல்
ஏற்க விருந்தான் றனிடை மருதீதோ. 7

345. பூவார் குழலா ரகில்கொண் டுபுகைப்ப
ஓவா தடியா ரடியுள் குளிர்ந்தேத்த
ஆவா வரக்கன் றனையாற் றலழித்த
ஏவார் சிலையான் றனிடை மருதீதோ. 8

7. பொ-ரை : தேக்கு, வேங்கை, பலா ஆகிய மரங்களைச் சுமந்து வந்து இருகரைகளிலும், அம்மரங்களை எடுத்து வீசி, ஆரவாரித்து வரும் அலைகளையுடையதாய காவிரி நதியின் அழகிய கரைமீது சிவபெருமான் பொருந்த உறையும் இடைமருது என்னும் தலம் இதுதானோ?

கு-ரை : திமில் - வேங்கைமரம். பல - பலாமரம். புறம் போக்கி - இம்மரங்களை இருகரைமருங்கும் எடுத்துவீசி.

பூசல் அடிப்ப - கரையுடன் மோத. ஆல் - அசை. ஆர்க்கும் திரை - ஆரவாரிக்கின்ற அலை. ஏற்க - பொருந்த.

8. பொ-ரை : மலர் சூடிய கூந்தலை உடைய மங்கல மகளிர் அகில் தூபம் இட, அடியவர் இடையீடின்றித் திருவடிகளை மனம் குளிர்ந்து ஏத்த, கண்டவர் ஆஆ என இரங்குமாறு இராவணனது ஆற்றலை அழித்த, அம்பு பொருத்தற்கேற்ற மலைவில்லைக் கையில் கொண்ட, சிவபெருமானின் இடைமருது என்னும் த்லம் இதுதானோ?

கு-ரை : இது மகளிரும் அடியாரும் அவரவர்கள் பரிபாகத் திற்கேற்ப வழிபடுகின்றார்கள் என்கின்றது. ஓவாது - இடைவிடாமல். ஆவா; இரக்கக் குறிப்பிடைச்சொல்.

ஏ ஆர் சிலை - பெருக்கத்தோடு கூடிய கைலைமலை. 'ஏபெற்றாகும்' என்பது *தொல்.சொல். உரி.* (பெற்று - பெருக்கம்) 'ஏகல் அடுக்கம்' என்னும் *நற்றிணையும் (116)* காண்க.

Koviloor Digital Library

346. முற்றா ததொர்பான் மதிசூ டுமுதல்வன்
நற்றா மரையா னொடுமால் நயந்தேத்தப
பொற்றோ ளியுந்தா னும்பொலிந் தழகாக
எற்றே யுறைகின் றவிடை மருதீதோ. 9

347. சிறுதே ரருஞ்சில் சமணும் புறங்கூற
நெறியே பலபத் தர்கள்கை தொழுதேத்த
வெறியா வருகா விரிக்கோ லக்கரைமேல்
எறியார் மழுவா ளனிடை மருதீதோ. 10

348. கண்ணார் கமழ்கா ழியுண்ஞா னசம்பந்தன்
எண்ணார் புகழெந் தையிடை மருதின்மேல்

9. பொ-ரை : முற்றாத பால் போன்ற இளம்பிறையை முடிமிசைச் சூடிய முதல்வனாய், நல்ல தாமரை மலர்மேல் உறையும் நான்முகனும், திருமாலும் விரும்பித் தொழ, உமையம்மையும் தானுமாய்ச் சிவபிரான் அழகாகப் பொலிந்து உறைகின்ற இடைமருது என்னும் தலம் இதுதானோ?

கு-ரை : பால்மதி - பால்போல் வெள்ளியபிறை. மால் நயந்து ஏத்த எனப் பிரிக்க. உறைகின்ற இடைமருது ஈதோ எற்றே எனக் கூட்டுக. எற்று - எத்தன்மைத்து; என வியந்து கூறியவாறு.

10. பொ-ரை : சிறுமதியாளராகிய தேரர்களும், சிற்றறிவினராகிய சமணர்களும், புறங்கூறித் திரிய, சிவபக்தர்கள் பலர் முறையாலே கைகளால் தொழுது துதிக்கப் பகைவரைக் கொன்றொழிக்கும் மழுவை ஏந்திய சிவபிரான் எழுந்தருளிய, மணம் கமழ்ந்துவரும் காவிரிநதியின் அழகிய கரைமேல் உள்ள இடைமருது என்னும் தலம் இதுதானோ?

கு-ரை : புறச்சமயிகள் புறங்கூறுகிறார்கள்; பக்தர்கள் கைதொழுது பயன்கொள்ளுகிறார்கள் என்று இறைவனுடைய வேண்டுதல் வேண்டாமையையும், ஆன்மாக்கள் அவர் அவர் பரிபாகத்திற்கேற்பப் பலன் கொள்ளுகிறார்கள் என்பதையும் அறிவித்தபடி. தேரர் - புத்தர். எறியார் மழுவாளன் - எறியுந் தன்மைவாய்ந்த மழுவைத் தாங்கியவன்.

11. பொ-ரை: இடமகன்றதும் மணம் கமழ்வதுமான சீகாழிப் பதியுள் தோன்றிய ஞானசம்பந்தன் எண்ணத்தில் நிறைந்துள்ள புகழை

Koviloor Digital Library

பண்ணோ டிசைபா டியபத் தும்வல்லார்கள்
விண்ணோ ருலகத் தினில்வீற் றிருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

உடைய எம்பெருமானுடைய இடைமருது மீது பண்ணோடியன்ற இசையால் பாடிய பத்துப் பாடல்களையும் வல்லவர்கள் விண்ணோர் உலகில் வீற்றிருக்கும் சிறப்பைப் பெறுவார்கள்.

கு-ரை : கண்ணார் - இடமகன்ற. எண்ணார்புகழ் - எ.ண்ணத்தைப் பொருந்திய புகழ். வீற்றிருப்பார் - பிறதேவர்க்கில்லாத பெருமையோடு இருப்பார்கள்.

திருத்தொண்டர் புராணம்

திருஞானசம்பந்தர் புராணம்

ஓங்குதிருப் பதிகம்ஓ டேகலன்என் றெடுத்தருளித்
தாங்கரிய பெருமகிழ்ச்சி தலைசிறக்குந் தன்மையினால்
ஈங்கெனைஆ ளுடையபிரான் இடைமருதீ தோஎன்று
பாங்குடைய இன்னிசையாற் பாடி எழுந் தருளினார்.

அடியவர்கள் எதிர்கொள்ள எழுந்தருளி அங்கணைந்து
முடிவில்பரம் பொருளானார் முதற்கோயில் முன்இறைஞ்சி
படியில்வலங் கொண்டுதிரு முன்பெய்திப் பார்மீது
நெடிதுபணிந் தெழுந்தன்பு நிறைகண்ணீர் நிரந்திழிய.

பரவுறுசெந் தமிழ்ப்பதிகம் பாடிஅமர்ந் தப்பதியில்
விரவுவார் திருப்பதிகம் பலபாடி வெண்மதியோ(டு)
அரவுசடைக் கணிந்தவர்தந் தாள்போற்றி ஆர்வத்தால்
உரவுதிருத் தொண்டருடன் பணிந்தேத்தி உறையுநாள்.

– சேக்கிழார்.

Koviloor Digital Library

33. திருஅன்பிலாலந்துறை

பதிக வரலாறு:

திருக்கானூரை வணங்கிப் பதிகத்தொண்டு பாலித்துப் போந்த காழிப்பிள்ளையார் அன்பிலாலந்துறைக்கு எழுந்தருளி னார்கள். அங்கே 'முன்னவனைத் தொழுது பதம்நிறை செந் தமிழ்' பாடினார்கள்.

பண்: தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

பதிக எண்: 33

349. **கணைநீ டெரிமா லரவம் வரைவில்லா**
இணையா வெயின்மூன் றுமெரித் தவிறைவர்
பிணைமா மயிலுங் குயில்சேர் மடவன்னம்
அணையும் பொழிலன் பிலாலந் துறையாரே. 1

350. **சடையார் சதுரன் முதிரா மதிசூடி**
விடையார் கொடியொன் றுடையெந் தைவிமலன்

1. பொ-ரை : நீண்டு எரிகின்ற தீயையும் திருமாலையும் அம்பாகக் கொண்டு பூட்டி வாசுகி என்னும் பாம்பை நாணாகக் கட்டிய மேருமலையை வில்லாக வளைத்து முப்புரங்களையும் எரித்த இறைவர், தத்தம் பெடைகளோடுகூடிய பெரிய மயில்களும், குயில் களும் சேர்ந்து வாழும் அன்னங்களும் உறையும் பொழில் சூழ்ந்த அன்பிலாலந்துறையார் ஆவார்.

கு-ரை : இது திரிபுரம் எரித்த இறைவர் ஆலந்துறையார் என அறிவிக்கின்றது. நீடு எரி மால் கணை - மேலோங்கி எழுகின்ற தீயை யும், திருமாலையும் கணையாகவும். அரவம் வரை வில்லா - வாசுகி என்னும் பாம்பை நாணகக் கொண்ட மேருமலையை வில்லாகவும். இணையா - இணைத்து. பிணை - தத்தம் பெடைகளோடு கூடிய.

2. பொ-ரை : சடைமுடிகளோடு கூடிய சதுரப்பாடு உடையவராய் இளம்பிறையை முடிமிசைச் சூடி இடபக்கொடி ஒன்றை உடைய எந்தையாராகிய விமலர், வேதம் பயிலும் இளஞ்சிறார்கள் கூடியிருந்து

Koviloor Digital Library

கிடையா ரொலியோத் தரவத் திசைகிள்ளை
அடையார் பொழிலன் பிலாலந் துறையாரே. 2

351. ஊரும் மரவஞ் சடைமே லுறவைத்துப்
பாரும் பலிகொண் டொலிபா டும்பரமர்
நீருண் கயலும் வயல்வா ளைவராலோ
டாரும் புனலன் பிலாலந் துறையாரே. 3

352. பிறையும் மரவும் முறவைத் தமுடிமேல்
நறையுண் டெழுவன் னியுமன் னுசடையார்
மறையும் பலவே தியரோ தவொலிசென்
றறையும் புனலன் பிலாலந் துறையாரே. 4

ஓதும் வேத ஒலியைக் கேட்டு அவ்வோசையாலேயே அவற்றை இசைக்கின்ற கிளிகள் அடைதல் பொருந்திய சோலைகளால் சூழப் பட்ட அன்பிலாலந்துறை இறைவராவார்.

கு-ரை : இது கிளிகள் வேத இசையைச் சொல்லும் ஆலந்துறை இறைவனே எந்தை விமலன் என்கின்றது. சதுரன் - சாமர்த்திய முடையவன். கிடை ஆர் ஒலி - மாணவர்கள் கூட்டமாயிருந்து ஒலிக்கும் வேத ஒலி. இதனைச் சந்தைகூறுதல் என்ப. ஓத்து அரவத்து இசை கிள்ளை - வேத ஒலியை இசைக்கின்ற கிளி. அடை ஆர் பொழில் - அடைதல் பொருந்திய சோலை.

3. பொ-ரை : ஊர்ந்து செல்லும் பாம்பைச் சடைமுடிமேல் பொருந்த அணிந்து உலகம் முழுதும் சென்று பலியேற்று, இசை பாடி மகிழும் பரமராகிய பெருமானார், நீரின்வழி உணவுண்ணும் கயல் மீன் களை வயல்களிடத்துள்ள வாளை வரால் ஆகிய மீன்கள் உண்ணும் புனல்வளம் மிக்க அன்பிலாலந்துறையாராவார்.

கு-ரை : இது பலிகொள்ளும் பரமர் அன்பிலாலந்துறையார் என்கின்றது. அடியார்களது ஓடும் மனத்தை ஓரிடத்து நிறுத்தி வைப்பதுபோல ஊரும்பாம்பைச் சடைமேல் உறவைத்தார் என்ற நயம் உணர்க.

4. பொ-ரை : பிறைமதி, பாம்பு ஆகியவற்றைப் பகை நீக்கி ஒருங்கே பொருந்த வைத்த முடிமீது, நறுமணத்துடன் தோன்றும் வன்னித் தளிர்களும் மன்னிய சடையினர், வேதியர் பலர் வேதங்களை

Koviloor Digital Library

353 . நீடும் புனற்கங் கையுந்தங் கமுடிமேல்
கூடும் மலையா ளொருபா கமமர்ந்தார்
மாடும் முழவம் மதிரம் மடமாதர்
ஆடும் பதியன் பிலாலந் துறையாரே. 5

354. நீறார் திருமே னியரூ னமிலார்பால்
ஊறார் சுவையா கியவும் பர்பெருமான்
வேறா ரகிலும் மிகுசந் தனமுந்தி
ஆறார் வயலன் பிலாலந் துறையாரே. 6

ஓத அவ்வொலி பல இடங்களிலும் ஒலிக்கும் நீர்வளம்மிக்க அன்பிலாலந்துறை இறைவராவார்.

கு-ரை : இது இத்தலத்திறைவன் பகைநீக்கி ஆளும் பண்பினன் என்கின்றது. உறவைத்த - பகைநீக்கி ஒருங்கே பொருந்த வைத்த. நறை - நல்லமணம். வன்னி - வன்னிப் பத்திரம். வேதியர் மறைபலவும் ஓத அவ்வொலிசென்று அறையும் ஆலந்துறை எனக் கூட்டுக.

5. பொ-ரை : முடிமேல் பெருகிவரும் நீரை உடைய கங்கை நதியையும் தங்குமாறு அணிந்து, ஒருபாகமாகத் தம்மைத் தழுவிய மலைமகளைக் கொண்டுள்ள பெருமானார், பல இடங்களிலும் முழவுகள் ஒலிக்க, இளம் பெண்கள் பலர் நடனங்கள் புரியும் அன்பிலாலந்துறை இறைவராவார்.

கு-ரை : இது அன்பிலாலந்துறை இறைவர், கங்கையை முடி மேல் வைத்து உமையாளை ஒருபாகம் வைத்துளார் என்கின்றது. இவர் போகியாய் இருப்பதற்கேற்ற தலம், முழவம் அதிர மடமாதர் ஆடும் பதியாய்ப் போகபூமியாய் இருப்பதைக் குறித்தவாறு. மாடு - பக்கம்.

6. பொ-ரை : திருநீறு அணிந்த திருமேனியரும், குற்றம் அற்றவர்களின் உள்ளங்களில் பொருந்திய சுவையாக இனிப்பவருமாகிய தேவர் தலைவர், வேறாகப் பெயர்ந்து வரும் அகில் மரங்களையும் உயர்ந்த சந்தன மரங்களையும் அடித்துவரும் ஆற்று நீர் பாயும் வயல்களை உடைய அன்பிலாலந்துறை இறைவர் ஆவார்.

கு-ரை : இது குற்றமே இல்லாத நற்றவர்பால் ஊறுஞ் சுவையாய் விளங்குபவர் என்கின்றது. ஊனம் இல்லார்பால் ஊறு ஆர் சுவை

Koviloor Digital Library

355. செடியார் தலையிற் பலிகொண் டினிதுண்ட
படியார் பரமன் பரமேட் டிதன்சீரைக்
கடியார் மலரும் புனல்தூ விநின்றேத்தும்
அடியார் தொழுமன் பிலாலந் துறையாரே . 7

356. விடத்தார் திகழும் மிடறன் னடமாடி
படத்தா ரரவம் விரவுஞ் சடையாதி
கொடித்தே ரிலங்கைக் குலக்கோன் வரையார
அடர்த்தா ரருளன் பிலாலந் துறையாரே. 8

ஆகிய எனப் பிரிக்க. ஆர் சுவை - அரிய அமுதம். வேறு ஆர் - வேறா கப் பெயர்ந்த.

7. பொ-ரை : முடை நாற்றமுடைய தலையோட்டில் பலியேற்று அதனை இனிதாக உண்டருளும் தன்மையினைக் கொண்ட பரமனாகிய பரம்பொருள், மணம் பொருந்திய மலர்களையும் நீரையும் தூவி நின்று தன்புகழைத் துதிக்கும் அடியவர்களால் தொழப்படும் அன்பிலாலந்துறை இறைவராவார்.

கு-ரை : இது இறைவன் புகழைச் சொல்லி அடியார்கள் வழி படும் ஆலந்துறையார் என்கின்றது. செடி - முடைநாற்றம். செடியார் தலையில் பிச்சை ஏற்று இனிதுண்டார் என்பது இறைவன் வேண்டுதல் வேண்டாமையிலான் என்பதை உணர்த்தியது. படி - தன்மை. அடியார், சீரைத் தூவிநின்று ஏத்தித் தொழும், ஆலந்துறையார் என்க.

8.பொ-ரை : ஆலகால விடக்கறை விளங்கும் கரிய கண்டத் தினரும், நடனமாடியும், படத்தோடு கூடிய அரவம் விரவும் சடை யினை உடைய முதற்கடவுளும், கொடித் தேரைக் கொண்ட இலங் கையர் குலத் தலைவனாகிய இராவணனை மலையின்கீழ் அகப்படுத்தி அடர்த்தவரும் ஆகிய சிவபிரான், அன்பர்கள் அருள் பெறுதற்குரிய இடமாக விளங்கும் அன்பில் ஆலந்துறை என்னும் தலத்தில் எழுந் தருளியுள்ளார்.

கு-ரை : இது நீலகண்டனாய் அரவம் அணிந்து இராவணனை அடர்த்தவன் ஆலந்துறையான் என்கின்றது. விடத்தார் திகழும் மிடறன் - 'கறைமிடறு அணியலும் அணிந்தன்று' என்ற கருத்தை ஒப்புநோக்குக. படத்து ஆர் அரவம் - படம் பொருந்திய பாம்பு. ஆதி - முதல்வனே; அண்மைவிளி.

Koviloor Digital Library

357. வணங்கிம் மலர்மே லயனுந் நெடுமாலும்
பிணங்கி யறிகின் றிலர்மற் றும்பெருமை
சுணங்கும் முகத்தம் முலையா ளொருபாகம்
அணங்குந் நிகழன் பிலாலந் துறையாரே. 9

358. தறியார் துகில்போர்த் துழல்வார் சமண்கையர்
நெறியா வுணரா நிலைக்கே டினர்நித்தல்
வெறியார் மலர்கொண் டடிவீ ழுமவரை
அறிவா ரவரன் பிலாலந் துறையாரே. 10

9. பொ-ரை : தாமரை மலர்மேல் விளங்கும் அயனும் திருமாலும், சிவபிரானின் பெருமையை வணங்கி அறியாது, தம்முட் பிணங்கித் தேடி அறியாதவராயினர். அப்பெருமான், சுணங்கு பொருந்திய முகப்பினை உடைய அழகிய தனத்தவளாய உமையம்மையை ஒருபாகத்தே அணங்காகக் கொண்டுள்ள அன்பிலாலந்துறை இறைவராவார்.

கு-ரை : இது உமையொருபாகர் ஆலந்துறையார் என்கின்றது. வணங்கிமலர்மேல் என்பது சந்தம்நோக்கி மகரம் மிகுந்தது. பிணங்கி உம் பெருமையறிகின்றிலர் எனக் கூட்டுக. மற்று அசை. சுணங்கு முகத்து முலையாளாகிய அணங்கு ஒருபாகம் நிகழ் ஆலந்துறையார் எனக் கூட்டுக. ஒருபாகம் இருந்தும் சுணங்குபூக்கும் முலையாள் என்றது அம்மையின் மாறாத காதலை அறிவித்தவாறு. சுணங்கு பெண்களுக்குண்டாகும் தேமல். அணங்கு - தெய்வப்பெண்.

10. பொ-ரை : தறிபோல ஆடையின்றி உள்ள சமணர்கள், நெய்த ஆடையினை உடலில் போர்த்து உழலும் புத்தர்கள், பரம் பொருளை முறையாக உணராததோடு, நிலையான கேடுகளுக்கு உரியவர்களாய் உள்ளனர். அவர்களைச் சாராது நாள்தோறும் மண மலர்களைச் சூட்டித் தம் திருவடிகளில் வீழ்ந்து தொழும் அடியவர்களை நன்கறிந்தருளும் பெருமானார் அன்பிலாலந்துறை இறைவராவார்.

கு-ரை : இது அன்போடு பூவும் நீரும்கொண்டு அடிபணிவாரை அறிபவர் ஆலந்துறையார் என்கின்றது. தறியார் துகில் - தறியில் நெய்த ஆடை. நெறியா உணரா - முறைமைப்படி உணர்ந்து கொள்ளாத. நிலைக்கேடினர் - கெட்ட நிலையை யுடையவர்கள். வீழுமவர் - விரும்பித் தொழுமடியார்.

Koviloor Digital Library

359. அரவார் புனலன் பிலாலந் துறைதன்மேல்
கரவா தவர்கா ழியுண்ஞா னசம்பந்தன்
பரவார் தமிழ்பத் திசைபா டவல்லார்போய்
விரவா குவர்வா னிடைவீ டெளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : பாம்புகள் வாழும் நீர் வளம் உடைய அன்பில் ஆலந்துறை இறைவர்மேல் வஞ்சனையில்லாத மக்கள் வாழும் சீகாழிப் பதியுள் தோன்றிய ஞானசம்பந்தன் பரவிப்பாடிய இப்பத்துப் பாடல் களையும் இசையோடு பாட வல்லவர் மறுமையில் வானக இன்பங்களுக்கு உரியவர்கள் ஆவர். அவர்களுக்கு வீட்டின்பமும் எளிதாம்.

கு-ரை : இப்பாடல் பத்தினையும் இசையோடு பாடவல்லார் விண்ணின்பத்தை மேவுவர்; அவர்க்கு வீட்டின்பமும் எளிதாம் என்கின்றது. கரவாதவர் காழி - வஞ்சனை இல்லாத தவத்தவர் மேவி யுள்ள காழி. ஆலந்துறை தன்மேல் பரவு ஆர் தமிழ் எனக்கூட்டுக. வானிடை விரவு ஆகுவர் - விண்ணிற்கலப்பர். அரவார் புனல் - பாம்பை ஒத்த புனல் (நெளிந்து விரைந்து வருதல்).

காசி ரகசியம்

திருமடத் தமணர்இட்ட செய்யதீ வழுதிமேனி
உருகிடப் பற்றியந்நின் றொல்லையவ் அமணரேடு
கருகிடப் பற்றியன்னார் வயிற்றுளுங் கலப்பச்செய்த
பொருவரு முத்திச்செல்வர் பொன்னடி சென்னிசேர்ப்பாம்.

- மீனாட்சிசுந்தரம்பிள்ளை.

Koviloor Digital Library

34. சீகாழி

பண்: தக்கராகம்

பதிக எண்: 34

திருச்சிற்றம்பலம்

360. அடலே றமருங் கொடியண்ணல்
மடலார் குழலா ளொடுமன்னுங்
கடலார் புடைசூழ் தருகாழி
தொடர்வா ரவர்தூ நெறியாரே. 1

361. திரையார் புனல்சூ டியசெல்வன்
வரையார் மகளோ டுமகிழ்ந்தான்
கரையார் புனல்சூழ் தருகாழி
நிரையார் மலர்தூ வுமினின்றே. 2

1.பொ-ரை: வலிமை பொருந்திய இடபம் பொறிக்கப்பட்ட கொடியைத்தனதாகக் கொண்ட தலைவனாகிய சிவபிரான், மலர் சூடிய கூந்தலை உடைய உமையம்மையோடு எழுந்தருளியிருப்பதும், கடலால் புடை சூழப்பட்டதுமான சீகாழிப் பதியை இடைவிடாது சென்று வழிபடுபவர் தூய நெறியில் நிற்பவராவர்.

கு-ரை: இது இறைவன் உமையோடு எழுந்தருளியிருக்கும் சீகாழியைப் பரவுவார் தூநெறியார் என்கின்றது.

அடல் ஏறு - வலிமைபொருந்திய இடபம், மடல் - பூ. தொடர்வார் - இடைவிடாது தியானிப்பவர்.

2. பொ-ரை: அலைகளோடு கூடிய கங்கையை முடிமிசைச் சூடிய செல்வனாகிய சிவபிரான் மலைமகளோடு மகிழ்ந்து எழுந்தருளி யிருப்பதும், கரையை உடைய நீர்நிலைகளால் சூழப்பட்டதுமான சீகாழிப் பதியை வரிசையான பூக்களைக் கொண்டு நின்று தூவி வழிபடுமின்.

கு-ரை: காழியை இன்றே மலர்தூவி வணங்குங்கள் என்கின்றது. நிரையார் மலர் - வரிசையான பூக்கள்.

Koviloor Digital Library

362. இடியார் குரலே றுடையெந்தை
துடியா ரிடையா ளொடுதுன்னுங்
கடியார் பொழில்சூழ் தருகாழி
அடியா ரறியா ரவலம்மே. 3

363. ஒளியார் விடமுண் டவொருவன்
அளியார் குழன்மங் கையொடன்பாய்க்
களியார் பொழில்சூழ் தருகாழி
எளிதா மதுகண் டவரின்பே. 4

364. பனியார் மலரார் தருபாதன்
முனிதா னுமையோ டுமுயங்கிக்

3. பொ-ரை: இடியை ஒத்த குரலையுடைய இடபத்தைத் தனது வாகனமாகக் கொண்ட எம் தந்தையாகிய இறைவன், துடி போலும் இடையினை உடைய உமையம்மையோடு எழுந்தருளியிருப்பதும், மணம் பொருந்திய பொழில்களால் சூழப்பட்டதுமான சீகாழிப் பதியை வணங்கும் அடியவர்கள், துன்பத்தை அறியார்கள்.

கு-ரை: இது காழி அடியார் அவலம் அறியார் என்கின்றது. இடியார் குரல் ஏறு - இடியையொத்த குரலுடைய இடபம். துடி - உடுக்கை, எந்தை துன்னும் காழி அடியார் அவலம் அறியார் எனக்கூட்டுக.

4. பொ-ரை: நீலநிற ஒளியோடு கூடிய ஆலகால விடத்தை உண்டருளிய ஒப்பற்றவனாகிய சிவபிரான், வண்டுகள் மணத்தைத் தேடி வந்து நாடும் கூந்தலை உடைய உமையம்மையோடு, அன்புடன் களிக்கும், பொழில்கள் சூழ்ந்த காழிப்பதியைக் கண்டவர்க்கு இன்பம் எளிதாம்.

கு-ரை: இது காழி கண்டவர்க்கு இன்பம் எளிதாம் என்கின்றது. ஒளியார் விடம் - நீலஒளியோடுகூடிய விடம். அளி - வண்டு. ஒருவன் மங்கையொடு அன்பாய்க் களி ஆர் காழி கண்டவர் இன்பம் எளிதாம் என முடிவு செய்க.

5. பொ-ரை: தண்மை பொருந்திய தாமரை மலர் போன்ற திருவடிகளை உடைய சிவபெருமான் உமையம்மையோடு கூடி உலக

Koviloor Digital Library

கனியார் பொழில்சூழ் தருகாழி
இனிதா மதுகண் டவர்டே. 5

365. கொலையார் தருங்கூற் றமுதைத்து
மலையான் மகளோ டுமகிழ்ந்தான்
கலையார் தொழுதேத் தியகாழி
தலையாற் றொழுவார் தலையாரே. 6

366. திருவார் சிலையா லெயிலெய்து
உருவா ருமையோ டுடனானான்
கருவார் பொழில்சூழ் தருகாழி
மருவா தவர்வான் மருவாரே. 7

உயிர்கட்குப் போகத்தைப் புரிந்தருளினும், தான் முனிவனாக விளங்கு வோன். அத்தகையோன் எழுந்தருளியதும் கனிகள் குலுங்கும் பொழில்கள் சூழ்ந்ததுமான சீகாழிப் பதியைச் சென்று கண்டவர்க்குப் பெருமை எளிதாக வந்தமையும்.

கு-ரை: இது காழி கண்டவர் பெருமை எய்துவர் என்கின்றது. பனி - குளிர்மை. பனியார் மலர் - தாமரை மலர். ஆர் தரு - ஒத்த. உமையோடு முயங்கி முனிதான் - ஒருத்தியோடு கூடியிருந்தும் தான் முனிவனாய் இருப்பவன். பாதன் முனி காழி கண்டவர் ஈடு இனிதாம் என முடிக்க.

6. பொ-ரை: கொலைத் தொழில் நிறைந்த எமனை உதைத்து அழித்து மலையரையன் மகளாகிய உமையம்மையோடு மகிழ்ந்து உறைபவனாகிய சிவபெருமான் விரும்புவதும், மெய்ஞ்ஞானியர் தொழுதேத்துவதுமாகிய சீகாழிப் பதியைத் தலையால் வணங்குவார் தலையாயவராவார்.

கு-ரை: இது காழிக்குச் சிரம்பணிவார் மேலானவர் என்கின்றது. கலையார் - கலைஞானிகள்.

7. பொ-ரை: அழகிய வில்லால் மூவெயில்களை எய்தழித்து எழில் தவழும் உமையம்மையோடு உடனாய் விளங்கும் சிவ பெருமான் எழுந்தருளியிருப்பதும், கருநிறம் பொருந்திய சோலை களால் சூழப் பெற்றதுமான சீகாழிப் பதியை அடையாதவர் விண் ணுலக இன்பங்களை அடையாதவராவர்.

Koviloor Digital Library

367. அரக்கன் வலியொல் கவடர்த்து
வரைக்கும் மகளோ டுமகிழ்ந்தான்
சுரக்கும் புனல்சூழ் தருகாழி
நிரக்கும் மலர்தூ வுநினைந்தே. 8

368. இருவர்க் கெரியா கிநிமிர்ந்தான்
உருவிற் பெரியா ளொடுசேருங்
கருநற் பரவை கமழ்காழி
மருவப் பிரியும் வினைமாய்ந்தே. 9

கு-ரை: இது காழியடையார் வான் அடையார் என்கின்றது. திருவார் சிலை - அழகிய வில்; என்றது பொன் வில்லாதலின். உரு - அழகு.

கருவார் பொழில் - கருமையாகிய சோலை. மருவாதவர் - அடையாதவர்.

8. பொ-ரை: இராவணனது வலிமை சுருங்குமாறு அவனைத் தளர்ச்சியெய்த அடர்த்து மலைமகளோடு மகிழ்ந்த சிவபிரான் விளங்குவதும் மேலும் மேலும் பெருகிவரும் நீர் சூழ்ந்ததுமான சீகாழிப் பதியை நினைந்து வரிசையான மலர்களைத் தூவுமின்.

கு-ரை: இது காழிக்கு மலர் தூவுங்கள் என்கின்றது. அரக்கன் வலி அடர்த்து வரைக்குமகளோடு மகிழ்ந்தான் என்பது. அரக்கன் மலையெடுக்க, உமையாள் எய்திய அச்சத்தைப் போக்கியதும், அவன் செய்த தவற்றிற்காக அவள் காணத் தண்டித்தமையும் விளக்கிநின்றது. ஒல்க - சுருங்க. நிரக்கும் - ஒழுங்கான.

9. பொ-ரை: திருமால் பிரமன் ஆகிய இருவர் பொருட்டு எரி உருவாகி நிமிர்ந்த சிவபிரான் அழகிற்சிறந்த பெரியநாயகி அம்மை யோடு எழுந்தருளியிருப்பதும் கரிய நல்ல கடலின் மணம் கமழ்வது மான சீகாழிப் பதியை மனத்தால் நினைய நம் வினைகள் மாய்ந்து பிரியும்.

கு-ரை: இது காழியையடைய வினைகெடும் என்கின்றது. இருவர் - மாலுமயனும். உருவிற் பெரியாள் - பெரியநாயகி என்னும் திருத்தோணிச் சிகரத்திருக்கும் அம்மையார். பரவை - கடல்.

Koviloor Digital Library

369. சமண்சாக் கியர்தா மலர்தூற்ற
அமைந்தா னுமையோ டுடனன்பாய்க்
கமழ்ந்தார் பொழில்சூழ் தருகாழி
சுமந்தார் மலர்தூ வுதல்தொண்டே. 10

370. நலமா கியஞா னசம்பந்தன்
கலமார் கடல்சூழ் தருகாழி
நிலையா கநினைந் தவர்பாடல்
வலரா னவர்வா னடைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை: சமணர்களும் சாக்கியர்களும் புறங்கூற, உமையம்மையோடு ஒருசேர அன்பாய்ச் சிவபிரான் எழுந்தருளியிருப்பதும், மணம் கமழ்ந்து நிறையும் பொழில்கள் சூழ்ந்ததுமான சீகாழிப் பதியைத் தம் மனத்தே தியானித்து, மலர் தூவித் தொழுதலே சிறந்த தொண்டாகும்.

கு-ரை: இது சமண் முதலியோர் அலர் தூற்ற அடியார் மலர் தூவுதல் தொண்டு என்கின்றது. அலர்தூற்ற - பழி சொல்ல. உமையோடு உடன் அன்பாய் அமர்ந்தான் - அம்மையொடு ஒருசேர ஆசனத்து அன்பாய் அமர்ந்தான் என்க. காழி சுமந்தார் - காழியைத் தம் மனத்துத் தியானித்தவர்கள்.

11. பொ-ரை : நன்மையை மக்கட்கு நல்குவதும் மரக்கலங்களை உடைய கடலால் சூழப் பெற்றதுமான சீகாழிப் பதியை உறுதியாக நினைந்தவர்களும், ஞானசம்பந்தரின் பாடல்களில் வல்லவராய் ஓதி வழிபட்டவர்களும் விண்ணக இன்பங்களை அடைவர்.

கு-ரை: காழியைத் தமது நிலைத்த இடமாக நினைந்த பெருமானது பாடலில் வல்லவர்கள் வானடைவர் என முடிக்க.

Koviloor Digital Library

35. திருவீழிமிழலை

பதிக வரலாறு:

பிள்ளையார் எழுந்தருளுவதைத் திருநாவுக்கரசு சுவாமிகளாலும், அடியார்களாலும் அறிந்துகொண்ட திருவீழிமிழலையந்தணர்கள், நிறைகுடம் முதலிய அட்டமங்கலங்களுடன் வரவேற்க, பிள்ளையார் முத்துச் சிவிகையினின்றும் கீழிறங்கி அந்தணரும், அடியாரும் புடைசூழ எழுந்தருள்கின்றார்கள். அப்போது ' அரையார் விரிகோவண ஆடை' என்னும் ஒப்புரைக்க இயலாத இப்பதிகத்தை இசையுடன் ஓதிக்கொண்டே சிவஞானச் செந்தாமரையில் வீற்றிருக்கும் விடையேறும்பிரான் திருக்கோயிலை அடைந்து உச்சிமேற் கரங்குவித்து வணங்கினார்கள்.

பண்: தக்கராகம்

பதிக எண்: 35

திருச்சிற்றம்பலம்

371. அரையார் விரிகோ வணவாடை
நரையார் விடையூர் திநயந்தான்
விரையார் பொழில்வீ ழிம்மிழலை
உரையா லுணர்வா ருயர்வாரே. 1

1. பொ-ரை : இடையிற் கட்டிய விரிந்த கோவண ஆடையையும், வெண்மை நிறம் பொருந்திய விடை ஊர்தியையும் விரும்பி ஏற்றுக் கொண்ட சிவபிரான் உறைவதும், மணம் பொருந்திய பொழில்களால் சூழப்பட்டதுமாகிய திருவீழிமிழலையின் புகழை நூல்களால் உணர்வார் உயர்வடைவர்.

கு-ரை: வீழிமிழலையைத் தியானிப்பவர்கள் உயர்வர் என்கின்றது. கோவண ஆடையையும் ஊர்தியையும் நயந்தான் என முடிக்க. நரை - வெண்மை. உரையால் - வேதாகமங்களில் சொல்லப் பட்ட சொற்களால். விரிகோவணம் - படம் விரியும் பாம்பாகிய கோவணம். ''அற்றம் மறைப்பது முன்பணியே'' ''ஐந்தலைய மாசுணங் கொண்டு அரையார்க்குமே'' என்ற பகுதிகள் இதற்கு ஒப்பு.

Koviloor Digital Library

372. புனைதல் புரிபுன் சடைதன்மேல்
கனைதல் லொருகங் கைகரந்தான்
வினையில் லவர்வீ ழிம்மிழலை
நினைவில் லவர்நெஞ் சமுநெஞ்சே. 2

373. அழவல் லவரா டியும்பாடி
எழவல் லவரெந் தையடிமேல்
விழவல் லவர்வீ ழிம்மிழலை
தொழவல் லவர்நல் லவர்தொண்டே 3

374. உரவம் புரிபுன் சடைதன்மேல்
அரவம் மரையார்த் தவழகன்

2. பொ-ரை : மலரால் அலங்கரிக்கப்பட்ட முறுக்குக்களை உடைய சிவந்த சடைமுடி மீது ஆரவாரித்து வந்த ஒப்பற்ற கங்கை நதியை மறைத்து வைத்துள்ள சிவபிரான் உறையும், தீவினை இல்லாத மக்கள் வாழும் திருவீழிமிழலையை நினையாதவர் நெஞ்சமும் ஒரு நெஞ்சமோ?

கு-ரை : வீழிமிழலையை நினையாதவர் நெஞ்சம் நெஞ்சா என்கின்றது. புனைதல் - முடித்தல், கனைதல் - ஒலித்தல். வினையில்லவர் - இயல்பாகவே வினையில்லாதவர். நெஞ்சத்தின் தொழில் நினையவேண்டியவற்றை நினைவதாயிருக்க, அது செய்யாமையின் நெஞ்சமும் நெஞ்சே என இகழ்ந்து கூறியவாறு.

3. பொ-ரை : அழவல்லவரும், ஆடியும் பாடியும் எழவல்லவரும் எந்தையாகிய இறைவன் திருவடிமேல் விழ வல்லவருமாய் அடியவர் நிறைந்துள்ள திருவீழிமிழலையைத் தொழ வல்லவரே நல்லவர். அவர் தொண்டே நற்றொண்டாம்.

கு-ரை : இது அழுதும், ஆடியும், பாடியும், விழுந்தும் தொழ வல்லவர் தொண்டில் நல்லராம் என்கின்றது. வல்லவர் என்பன நான்கும் அருமைவிளக்கி நின்றன. அடிமேல் விழுதல் - தன்வசமற்று ஆனந்தமேலீட்டால் விழுதல்.

4. பொ-ரை : வலிமையை வெளிப்படுத்தி நிற்கும் சிவந்த சடைமுடி மீதும் இடையிலும், பாம்பை அணிந்தும் கட்டியும் உள்ள அழகனாகிய சிவபிரான் எழுந்தருளியதும், பொழில்கள் விரவிச்

Koviloor Digital Library

விரவும் பொழில்வீ ழிம்மிழலை
பரவும் மடியா ரடியாரே. 4

375. கரிதா கியநஞ் சணிகண்டன்
வரிதா கியவண் டறைகொன்றை
விரிதார் பொழில்வீ ழிம்மிழலை
உரிதா நினைவா ருயர்வாரே. 5

376. சடையார் பிறையான் சரிபூதப்
படையான் கொடிமே லதொர்பைங்கண்
விடையா னுறைவீ ழிம்மிழலை
அடைவா ரடியா ரவர்தாமே. 6

சூழ்ந்ததுமான திருவீழிமிழலையைப் பரவித் துதிக்கும் அடியவரே அடியவராவர்.

கு-ரை : இது வீழிமிழலையைத் தொழும் அடியாரே அடியார் என அடியார் இயல்பை விளக்குகின்றது. உரவம் - வலிமை.

5. பொ-ரை : கரியதாகிய நஞ்சினை உண்டு அதனை அணியாக நிறுத்திய நீலகண்டன் எழுந்தருளியதும், வரிகளை உடைய வண்டுகள் ஒலி செய்யும் கொன்றை மரங்கள் விரிந்த மாலைபோலக் கொத்தாக மலரும் சோலைகளால் சூழப்பெற்றதும் ஆகிய திருவீழிமிழலையைத் தமக்கு உரிய தலமாகக் கருதுவோர் சிறந்த அடியவராவர்.

கு-ரை : இது இத்தலத்தை உரிமையோடு நினைவார் உயர்வார் என்கின்றது. வரிதாகிய வண்டு - வரிகளையுடையதாகிய வண்டு. 'பொறிவரி வண்டினம்' என்பது காண்க. உரியதா என்பது உரிதா எனத் தொகுத்தல் விகாரம்பெற்றது, உரித்து உரிது போலவும், வரித்து வ்ரிது போலவும் என்க.

6. பொ-ரை : சடைமிசைச்சூடிய பிறைமதியை உடையவனும், இயங்கும் பூதப் படைகளை உடையவனும், கொடிமேல் பசிய கண்களை உடைய ஒற்றை விடையேற்றை உடையவனுமாகிய சிவ பெருமான் உறையும் திருவீழிமிழலையை அடைபவர்கள் சிறந்த அடியவர்கள் ஆவர். தாம், ஏ அசைநிலை.

Koviloor Digital Library

377. செறியார் கழலுஞ் சிலம்பார்க்க
நெறியார் குழலா ளொடுநின்றான்
வெறியார் பொழில்வீ ழிம்மிழலை
அறிவா ரவலம் மறியாரே. 7

378. உளையா வலியொல் கவரக்கன்
வளையா விரலூன் றியமைந்தன்
விளையார் வயல்வீ ழிம்மிழலை
அளையா வருவா ரடியாரே. 8

379. மருள்செய் திருவர் மயலாக
அருள்செய் தவனா ரழலாகி

கு-ரை : இது இத்தலத்தை அடைவாரே அடியார் என்கின்றது. சரி - இயங்குகின்ற. பைங்கண் - பசியகண். பசுமை ஈண்டு இளமை குறித்து நின்றது.

7. பொ-ரை : கால்களிற் செறிந்த கழல், சிலம்பு ஆகிய அணிகள் ஆர்க்கச் சுருண்ட கூந்தலை உடைய உமையம்மையோடு நின்றருளும் சிவபிரான் எழுந்தருளியதும் மணம் கமழும் பொழில்களால் சூழப் பெற்றதுமான திருவீழிமிழலையைத் தியானிப்பவர் அவலம் அறியார்.

கு-ரை : இது இத்தலத்தை யறிவார், துன்பம் அறியார் என்கின்றது. செறி - வளை. செறி ஆர் கழலும் சிலம்பு ஆர்க்க என்பதில் எண்ணும்மையை ஏனையவிடத்தும் கூட்டுக. நெறியார் குழல் - சுருண்ட கூந்தல், அறிவார் - தியானிப்பார்கள்.

8. பொ-ரை : மிக வருந்திக் கயிலை மலையைப் பெயர்த்த இராவணனது வலிமை கெடுமாறு தன் காலை வளைத்து விரலால் ஊன்றிய வலிமை வாய்ந்த சிவபிரான் எழுந்தருளியதும், விளைவு மிகுந்த வயல்களை உடையதுமான திருவீழிமிழலையை நினைந்து வருபவர் சிறந்த அடியவராவர்.

கு-ரை : இத்தலத்தை நெருங்குவாரே அடியார் என்கின்றது. உளையா - வருந்தி. அளையா - அளைந்து; பொருந்தி. உளையா வலி - பண்டு வருந்தா வலிமையுமாம்.

9. பொ-ரை : திருமால் பிரமன் ஆகிய இருவரும் அஞ்ஞானத்தினால் அடிமுடிகாணாது மயங்க, அரிய அழலுருவாய் வெளிப்பட்டு

Koviloor Digital Library

வெருள்செய் தவன்வீ ழிம்மிழலை
தெருள்செய் தவர்தீ வினைதேய்வே. 9

380. துளங்குந் நெறியா ரவர்தொன்மை
வளங்கொள் ளன்மின்புல் லமண்டேரை
விளங்கும் பொழில்வீ ழிம்மிழலை
உளங்கொள் பவர்தம் வினையோய்வே. 10

381. நளிர்கா ழியுண்ஞா னசம்பந்தன்
குளிரார் சடையா னடிகூற
மிளிரார் பொழில்வீ ழிம்மிழலை
கிளர்பா டல்வல்லார்க் கிலைகேடே. 11

திருச்சிற்றம்பலம்

நின்று வெருட்டியவனும் பின் அவர்க்கு அருள் செய்தவனுமான சிவபிரான் எழுந்தருளிய திருவீழிமிழலையைச் சிறந்த தலம் என்று தெளிந்தவர்கள் தீவினைகள் தேய்தல் உறும்.

கு-ரை : இத்தலத்தைத் தெளிந்தவர்களது தீவினை தேயும் என்கின்றது. இருவர் மருள்செய்து மயலாக - மாலும் அயனும் அஞ்ஞானத்தால் மயங்க. வெருள்செய்தவன் - வெருட்டியவன். தெருள்செய்தவர் - தெளிந்தவர்கள்.

10. பொ-ரை : தடுமாற்றமுறும் கொள்கைகளை மேற்கொண்டுள்ள அற்பமானவராய அமணர் தேரர் ஆகியோரின் சமயத் தொன்மைச் சிறப்பைக் கருதாதீர். விளங்கும் பொழில்கள் சூழ்ந்த திருவீழிமிழலையை நினைபவர்களின் வினைகள் ஓய்தலுறும்.

கு-ரை : இத்தலத்தைத் தியானிப்பவர்களின் வினை ஓயும் என்கின்றது. துளங்கும் நெறியார் - அளவைக்கும் அநுபவத்திற்கும் நிலைபெறாது அசையும் சமயநெறியை யுடையவர்கள். தேரை: தேரரை என்பதன் சிதைவு.

11. பொ-ரை : குளிர்ந்த காழிப் பதியில் தோன்றிய ஞான சம்பந்தன் தண்மையான சடைமுடியை உடைய சிவபிரானுடைய திருவடிப் பெருமைகளைக் கூறத் தொடங்கி விளக்கமான பொழில்கள்

Koviloor Digital Library

சூழ்ந்த திருவீழிமிழலைப் பெருமான் புகழ்கூறும் இப்பதிகப் பாடல் களை ஓத வல்லவர்கட்குக் கேடு இல்லை.

கு-ரை : இது இப்பாடலை வல்லார்க்குக் கேடு இல்லை எனப்பயன் கூறுகிறது. நளிர் - குளிர்.

திருத்தொண்டர் புராணம்

திருஞானசம்பந்தர் புராணம்

அப்போ தரையார் விரிகோ வணஆடை
ஒப்போ தரும்பதிகத் தோங்கும் இசைபாடி
மெய்ப்போதப் போதமர்ந்தார் தங்கோயில் மேவினார்
கைப்போது சென்னியின்மேற் கொண்டு கவுணியனார்.

- சேக்கிழார்.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி

கழல்கின்ற ஐங்கணை அந்தியும் அன்றிலுங் கால்பரப்பிட்
டழல்கின்ற தென்றலும் வந்திங் கடர்ப்பஅன்றாயிழைக்காச்
சுழல்கின்ற நஞ்சந் தணித்தவன் றன்னைத் தொடர்ந்துபின்போய்
உழல்கின்ற நெஞ்சமிங் கென்னோ இனிஇன் றுறுகின்றதே.

- நம்பியாண்டார் நம்பி.

Koviloor Digital Library

36. திருவையாறு

பதிக வரலாறு:

திருப்பூந்துருத்தியை வணங்கிப் பதிகம்பாடி, அப்பர் சுவாமிகளிடம் விடை பெற்றுக்கொண்டு, காவிரியாற்றைக் கடந்து, திருநெய்த்தானத்து நெய்யாடிய பெருமானைப் போற்றி, திருவையாற்றையடைந்த பிள்ளையார் 'கலையார் மதி' என்னும் இப்பதிகத்தை யருளினார்கள்.

பண்: தக்கராகம்

பதிக எண்: 36

திருச்சிற்றம்பலம்

382. **கலையார் மதியோ டுரநீரும்**
நிலையார் சடையா ரிடமாகும்
மலையா ரமுமா மணிசந்தோ
டலையார் புனல்சே ருமையாறே. 1

383. **மதியொன் றியகொன் றைவடத்தான்**
மதியொன் றவுதைத் தவர்வாழ்வு

1. பொ-ரை : ஒரு கலைப் பிறைமதியோடு வலிய கங்கை நீரும் நிலையாகப் பொருந்திய சடையை உடைய சிவபிரானது இடம், மலையிலிருந்து கொணர்ந்த முத்துக்கள் சிறந்த மணிகள் சந்தனம் ஆகியவற்றை அள்ளி வரும் அலைகளை உடைய காவிரிபாயும் திருவையாறு ஆகும்.

கு-ரை : இப்பதிகப்பாடல் பத்தும் இறைவன் இடம் திருவையாறு என்கின்றது. பாடல்கள்தோறும் இறைவனது மதி, கொன்றை, கங்கை, வன்னி, கொக்கிறகு, தலைமாலை முதலிய அணிவகைகளும் அவர் வீரமும் அறிவிக்கப்பெறுகின்றன. உரநீர் - வலியநீர். மலையாரம் - மலையிற்பிறந்த முத்துக்கள்.

2. பொ-ரை : பிறைமதி பொருந்திய சடையில் கொன்றை மாலையை அணிந்தவனும், தக்க யாகத்தில் வீரபத்திரரை ஏவிச் சந்திரனைக் காலால் பொருந்த உதைத்தவனுமான சிவபெருமான்

Koviloor Digital Library

மதியின் னொடுசேர் கொடிமாடம்
மதியம் பயில்கின் றவையாறே. 2

384. கொக்கின் னிறகின் னொடுவன்னி
புக்க சடையார்க் கிடமாகும்
திக்கின் னிசைதே வர்வணங்கும்
அக்கின் னரையா ரதையாறே. 3

385. சிறைகொண் டபுரம் மவைசிந்தக்
கறைகொண் டவர்கா தல்செய்கோயில்
மறைகொண் டநல்வா னவர்தம்மில்
அறையும் மொலிசே ருமையாறே. 4

வாழுமிடம், மதியோடு சேரும் கொடிகளைக் கொண்டதும் மதி தங்குமாறு உயர்ந்த மாடவீடுகளைஉடையதுமான திருவையாறு ஆகும்.

கு-ரை : நான்கடிகளிலுமுள்ள மதி என்ற சொல் சந்திரனையே குறிப்பதாகும். வடம் - மாலை. மதி ஒன்ற உதைத்தது, தக்கயாகத்தில் தம் திருவடியால் தேய்த்ததை.

3. பொ-ரை : கொக்கிறகு என்னும் மலரோடு வன்னிப் பச்சிலைகளும் பொருந்திய சடைமுடியை உடையவர்க்கு உரிய இடம், எண் திசைகளிலும் வாழும் தேவர்களால் வணங்கப் பெறுபவரும், சங்கு மணிகள் கட்டிய இடையினை உடையவருமான அப்பெருமானின் திருவையாறாகும்.

கு-ரை : கொக்கின் இறகு - கொக்கிறகம்பூ; கொக்கினது இறகுமாம். வன்னி - வன்னியிலை. திக்கின் இசை தேவர் - எட்டுத் திக்கிலும் பொருந்தியிருக்கின்ற தேவர்கள். அக்கு - சங்குமணி.

4. பொ-ரை : சிறகுகளோடு கூடிய முப்புரங்களும் அழியச் சினந்தவராகிய சிவபிரான் விரும்பும் கோயில், மக்கள் கண்களுக்குப் புலனாகாது மறைந்து இயங்கும் நல்ல தேவர்கள் தங்களுக்குள் பேசிக் கொள்ளும் ஒலி நிறைந்துள்ள திருவையாறு ஆகும்.

கு-ரை : சிறைகொண்டபுரம் - சிறகோடு கூடிய முப்புரங்கள். கறைகொண்டவர் - கோபித்தவர். மறைகொண்ட நல் வானவர் -

Koviloor Digital Library

386. உமையா ளொருபா கமதாகச்
சமைவா ரவர்சார் விடமாகும்
அமையா ருடல்சோர் தரமுத்தம்
அமையா வருமந் தணையாறே. 5

387. தலையின் றொடைமா லையணிந்து
கலைகொண் டதொர்கை யினர்சேர்வாம்
நிலைகொண் டமனத் தவர்நித்தம்
மலர்கொண் டுவணங் குமையாறே. 6

388. வரமொன் றியமா மலரோன்றன்
சிரமொன் றையறுத் தவர்சேர்வாம்
வரைநின் றிழிவார் தருபொன்னி
அரவங் கொடுசே ருமையாறே. 7

மக்கள் கண்ணுக்கு மறைந்து வதியும் தேவர்கள். தம்மில் அறையும் ஒலி - தமக்குள் பேசிக்கொள்ளும் ஒலி.

5. பொ-ரை : உமையம்மை ஒருபாகத்தே விளங்கப் பொருந்தியவராகிய சிவபெருமான் சாரும் இடம், மலையிடையே உள்ள மூங்கில்கள் முத்துக்களைச் சொரிய அவை காவிரியாற்றில் பொருந்தி வரும் குளிர்ந்த திருவையாறாகும்.

கு-ரை : சமைவார் - பொருந்தியவர். அமையார் உடல் சோர்தர - மூங்கிலினது உடல் வெடிக்க. அமையா - பொருந்தி.

6. பொ-ரை : தலையோட்டினால் தொகுக்கப்பட்டுள்ள மாலையை அணிந்து மானைக் கையின்கண் கொண்டவராகிய சிவபிரானது இடம், இறைவன் திருவடிக்கண் நிலைத்த மனமுடையவராகிய அடியவர் நாள்தோறும் மலர்கொண்டு தூவி வழிபாடு செய்யும் திருவையாறாகும்.

கு-ரை : கலை - மான். நிலைகொண்ட மனத்தவர் என்றது, இறைவனது திருவடியின் கண் நிலைத்த மனமுடைய அடியார்களை.

7. பொ-ரை : வரங்கள் பல பெற்ற தாமரை மலர்மேல் விளங்கும் பிரமனின் தலைகளில் ஒன்றை அறுத்த சிவபிரானது இடம், மலை

Koviloor Digital Library

389. வரையொன் றதெடுத் தவரக்கன்
சிரமங் கநெரித் தவர்சேர்வாம்
விரையின் மலர்மே தகுபொன்னித்
திரைதன் னொடுசே ருமையாறே. 8

390. சங்கக் கயனு மறியாமைப
பொங்குஞ் சுடரா னவர்கோயில்
கொங்கிற் பொலியும் புனல்கொண்டு
அங்கிக் கெதிர்காட் டுமையாறே. 9

யினின்று இழிந்துபெருகி வரும் காவிரி நதி ஆரவாரித்து வரும் திருவையாறு ஆகும்.

கு-ரை : வரம் ஒன்றிய - வரம் பெற்ற. மேன்மைபொருந்திய என்றுமாம். சேர்வு - இடம். வரைநின்று இழிவார்தரு பொன்னி எனப் பிரிக்க. வார்தரு - ஒழுகுகின்ற. அரவம் - ஒலி, பொன்னி - காவிரி.

8. பொ-ரை : கயிலை மலையைப் பெயர்த்த இராவணனின் சிரங்களும் பிறஅங்கங்களும் சிதறுமாறு நெரித்த சிவபிரான் எழுந்தருளிய இடம். மணம் பொருந்திய மலர்களைக் கொண்டு புண்ணிய நதியாகிய காவிரி அலைகளோடு கூடிப் பாய்ந்து வளம் சேர்க்கும் திருவையாறு ஆகும்.

கு-ரை : விரை - மணம். சிரம் அங்கம் - தலையும் பிற அங்கங்களும்.

9. பொ-ரை: சங்கத்தைக் கையின்கண் கொண்ட திருமாலும் அறியாதவாறு பொங்கி எழும் சுடராகத் தோன்றிய சிவபிரான் உறையும் கோயில், காவிரி, மகரந்தம், தேன் ஆகியன பொலியும் நீரைக் கொண்டு வந்து, அழல் வடிவான இறைவன் திருமுன் அர்க்கியமாகக் காட்டும் திருவையாறாகும்.

கு-ரை : சங்கக்கயன் - சங்கத்தைக் கையிலேயுடைய திருமால். கொங்கு - தேன்.

அங்கிக்கு எதிர்காட்டும்' - காலையில் அக்கினி காரியம் செய்வோர் அர்க்கியம் சமர்ப்பிக்கும்.

Koviloor Digital Library

391. துவரா டையர்தோ லுடையார்கள்
கவர்வாய் மொழிகா தல்செய்யாதே
தவரா சர்கள்தா மரையானோ
டவர்தா மணையந் தணையாறே. 10

392. கலையார் கலிக்கா ழியர்மன்னன்
நலமார் தருஞா னசம்பந்தன்
அலையார் புனல்சூ ழுமையாற்றைச்
சொலுமா லைவல்லார் துயர்வீடே. 11

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை : துவராடை தரித்த புத்தர், ஆடையின்றித் தோலைக் காட்டும் சமணர் ஆகியவரின் மாறுபட்ட வாய்மொழிகளை விரும்பாது, தவத்தால் மேம்பட்டவர்கள், பிரமன் முதலிய தேவர்களோடு வந்தணைந்து வழிபடும் தலம் திருவையாறாகும். அதனைச் சென்று வழிபடுமின்.

கு-ரை : கவர்வு - கபடம். தவராசர்கள் - தவத்தான் மிக்க முனிவர்கள். தாமரையான் என்றது பிரமனை.

11. பொ-ரை : கலைவல்லவர்களின் ஆரவாரம் மிக்க சீகாழிப் பதியில் உள்ளார்க்குத் தலைவனாகிய நன்மை அமைந்த ஞானசம்பந்தன் அலைகளை உடைய காவிரியால் சூழப்பட்ட திருவையாற்றைப் போற்றிப் பாடிய இத்தமிழ் வல்லவர்களின் துயர்கள் நீங்கும்.

கு-ரை : இது ஐயாற்றைப்பற்றிய இம்மாலையைச் சொல்ல வல்லார் துன்பத்தினின்று வீடுபெறுவர் என்கின்றது.

கலை - கலை ஞானங்கள். கலி - ஒலி.

Koviloor Digital Library

37. திருப்பனையூர்

பதிக வரலாறு:

திருவாரூரை வணங்கிவருகின்ற திருஞானசம்பந்தப் பெருமான், யானையையுரித்துப் போர்த்த பெருமான் எழுந்தருளிய திருப்பனையூரை வணங்கி, 'அரவச் சடை' என்னும் வேதப்பொருள் நிறைந்த இசைப்பதிகமாகிய இதனை அருளிச் செய்தார்கள்.

பண்: தக்கராகம்

பதிக எண்: 37

திருச்சிற்றம்பலம்

393. அரவச் சடைமேன் மதிமத்தம்
விரவிப் பொலிகின் றவனூராம்
நிரவிப் பலதொண் டர்கள்நாளும்
பரவிப் பொலியும் பனையூரே. 1

394. எண்ணொான் றிநினைந் தவர்தம்பால்
உண்ணின் றுமகிழ்ந் தவனூராம்
கண்ணின் றெழுசோ லையில்வண்டு
பண்ணின் றொலிசெய் பனையூரே. 2

1. பொ-ரை : சடைமுடிமேல் அரவம், மதி, ஊமத்தம் மலர் ஆகியன கலந்து விளங்குமாறு அணிந்த சிவபெருமானது தலம் தொண்டர்கள் பலரும் கலந்து நாள்தோறும் வணங்கி மகிழ்வுறும் திருப்பனையூராகும்.

கு-ரை : இது, சடைமேல் மதியும் ஊமத்தமும் கலந்து விளங்குகின்ற இறைவனூர் பனையூர் என்கின்றது. மத்தம் - ஊமத்தம். நிரவி - கலந்து. பரவி-வணங்கி.

2. பொ-ரை : மனம் ஒன்றி நினைந்த அடியார்களின் உள்ளத்துள்ளே இருந்து அவர்தம் வழிபாட்டை ஏற்று மகிழ்கின்ற சிவபெருமானது தலம், தேன் பொருந்திய மலர்களோடு உயர்ந்துள்ள சோலைகளில் வண்டுகள் பண்ணொன்றிய ஒலி செய்யும் பனையூராகும்.

Koviloor Digital Library

395. அலரும் மெறிசெஞ் சடைதன்மேல்
மலரும் பிறையொன் றுடையானூர்
சிலரென் றுமிருந் தடிபேணப்
பலரும் பரவும் பனையூரே. 3

396. இடியார் கடனஞ் சமுதுண்டு
பொடியா டியமே னியினானூர்
அடியார் தொழமன் னவரேத்தப்
படியார் பணியும் பனையூரே. 4

கு-ரை : மனம் ஒன்றி நினைக்கும் அடியார்களிடத்து உள்நின்று மகிழும் இறைவனூர் பனையூர் என்கின்றது. எண்-எண்ணம். ஒன்றி-விஷய சுகங்களில் சென்று பற்றாது திருவடியிலேயே பொருந்தி. மகிழ்ந்தவன்-தான்மகிழ, தன்னைச்சார்ந்த ஆன்மாவும் மகிழுமாதலின் மகிழ்வித்தவன் என்னாது மகிழ்ந்தவன் என்றார்; மகிழ்தற்குரிய சுதந்திரமும் ஆன்மாவுக்கு இல்லை என்றபடி. கள் நின்று - தேன் பொருந்தி.

3. பொ-ரை : விளங்கும் எரிபோலச் சிவந்த சடைமுடிமீது வளரும் பிறையொன்றை உடைய சிவபெருமானது ஊர், அடியவர் களில் சிலர் என்றும் இருந்து திருவடிகளைப் பரவிப் பூசனை செய்து போற்றவும், பலர் பலகாலும் வந்து பரவ விளங்கும் திருப்பனை யூராகும்.

கு-ரை : பிறையணிந்த பெருமானூர் பனையூர் என்கின்றது. எறி - அர்ச்சிக்கப்படுகின்ற. மலரும் பிறை - வளரும் பிறை. சிலர் - அணுக்கத்தொண்டர்களாகிய அடியார்கள். பலர் - வழிபடும் அடி யார்கள்.

4. பொ-ரை : கரைகளை மோதுதல் செய்யும் கடலிடைத் தோன்றிய நஞ்சை அமுதாக உண்டு, மேனி மீது திருநீற்றுப் பொடியை நிரம்பப் பூசிய சிவபெருமானது ஊர், அடியவர்கள் தொழ, மன்னவர்கள் ஏத்த உலகில் வாழும் பிற மக்கள் பணியும் திருப்பனை யூராகும்.

கு-ரை : இது, நீறுபூசிய இறைவனூர் பனையூர் என்கின்றது.

Koviloor Digital Library

397. அறையார் கழன்மே லரவாட
இறையார் பலிதேர்ந் தவனூராம்
பொறையார் மிகுசீர் விழமல்கப்
பறையா ரொலிசெய் பனையூரே. 5

398. அணியார் தொழவல் லவரேத்த
மணியார் மிடறொன் றுடையானூர்
தணியார் மலர்கொண் டிருபோதும்
பணிவார் பயிலும் பனையூரே. 6

இடியார் கடல் - கரைகளை மோதுகின்ற கடல். பொடி - விபூதி. படியார் - பூமியிலுள்ள பிறமக்கள்.

5. பொ-ரை : ஒலிக்கின்ற வீரக்கழல் மேல் அரவு ஆட முன் கைகளில் பலியேற்றுத் திரியும் பிட்சாடனராகிய சிவபெருமானது ஊர், மண்ணுலகில் சிறந்த புகழை உடைய திருவிழாக்கள் நிறையப் பறைகளின் ஒலி இடைவிடாது பயிலும் திருப்பனையூராகும்.

கு-ரை : இது பிட்சாடனமூர்த்தியின் ஊர் பனையூர் என்கின்றது. அறை - ஒலி. இறை - முன்கை.

பொறையார் மிகுசீர் விழமல்க - பூமியிற் சிறந்த புகழினையுடைய திருவிழா நிறைய. ''பொறைதரத் திரண்டதாரு'' *இரகுவம்சம் - தசரதன் சாப. 40.*

6. பொ-ரை : தம்மைப் பூசனை செய்து தொழவல்ல அடியவர்கள் அண்மையில் இருப்பவராய், அருகிருந்து ஏத்துமாறு உள்ள நீலமணிபோலும் கண்டத்தை உடைய சிவபெருமானது ஊர், தன்னைப் பணியும் அடியவர் குளிர்ந்த மலர்களைக் கொண்டு இருபோதும் தூவி வழிபடும் இடமான திருப்பனையூராகும்.

கு-ரை : நீலகண்டனது உறைவிடம் பனையூர் என்கின்றது. தொழவல்லவர் அணியார் ஏத்த என மாறுக.

அணியார் - அண்மையில் உள்ளவர்கள். மணி - நீலமணி. தணி ஆர் மலர் கொண்டு - குளிர்ந்த மலரையுங்கொண்டு. 'பூவும் நீரும் கொண்டு' என்பதனை நினைவு கூர்க. தணி - தண்மை.

Koviloor Digital Library

399. அடையா தவர்மூ வெயில்சீறும்
விடையான் விறலார் கரியின்றோல்
உடையா னவனெண் பலபூதப்
படையா னவனூர் பனையூரே. 7

400. இலகும் முடிபத் துடையானை
அலல்கண் டருள்செய் தவெம்மண்ணல்
உலகில் லுயிர்நீர் நிலமற்றும்
பலகண் டவனூர் பனையூரே. 8

401. வரமுன் னிமகிழ்ந் தெழுவீர்காள்
சிரமுன் னடிதா ழவணங்கும்

7. பொ-ரை : தன்னை வணங்காத பகைவர்களான அசுரர்களின் மூன்று அரண்களையும் அழித்த விடையூர்தியனும், வலிய யானையை உரித்து அதன் தோலை மேல் ஆடையாகக் கொண்டவனும் எண்ணற்ற பல பூதப் படைகளை உடையவனுமான சிவபெருமானது ஊர் திருப்பனையூராகும்.

கு-ரை : இது வீரன் மேவும் ஊர் பனையூர் என்கின்றது. அடையாதவர் - பகைவராகிய திரிபுராதிகள்; சீறும் என்ற பெயரெச்சம் விடை உடையானை விசேடித்தது. விறல் - வலிமை.

8. பொ-ரை : விளங்கும் முடி பத்தை உடைய இராவணனை அடர்த்து அவன்படும் அல்லல் கண்டு அவனுக்கு அருள் செய்த எம் அண்ணலும், உலகின்கண் உயிர்கட்கு நீர் நிலம் முதலான பலவற்றையும் படைத்தளித்தவனும் ஆகிய சிவபெருமானது ஊர் திருப் பனையூர்.

கு-ரை : ஐம்பூதங்களையும் ஆக்கிய இறைவனூர் பனையூர் என்கின்றது. அலல் - துன்பம்; அல்லல் என்பதன் திரிபு. மற்றும் பல என்றமையான் நுண்பூதங்களும், தன்மாத்திரைகளும் ஆகிய அனைத்தையுங் கண்டவன்.

9. பொ-ரை : சிவபெருமானிடம் வரங்களைப்பெறுதலை எண்ணி மகிழ்வோடு புறப்பட்டு வரும் அடியவர்களே, அப்பெருமான்

Koviloor Digital Library

பிரமன் னொடுமா லறியாத
பரமன் னுறையும் பனையூரே. 9

402. அழிவல் லமண ரொடுதேரர்
மொழிவல் லனசொல் லியபோதும்
இழிவில் லதொர்செம் மையினானூர்
பழியில் லவர்சேர் பனையூரே. 10

403. பாரார் விடையான் பனையூர்மேல்
சீரார் தமிழ்ஞா னசம்பந்தன்
ஆரா தசொன்மா லைகள்பத்தும்
ஊரூர் நினைவா ருயர்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

திருமுன் தலை தாழ்த்தி வணங்குங்கள்; எளிதில் நல்வரம் பெறலாம். பிரமனும் திருமாலும் அறியாத அப்பரமன் உறையும் ஊர் திருப் பனையூராகும்.

கு-ரை : இது வரம் வேண்டியவர்கள் பனையூரைச் சிரந்தாழ வணங்குங்கள் என்கின்றது. முன்னி - எண்ணி. வணங்கும் - வணங்குங்கள்; செய்யுமென் முற்று.

10. பொ-ரை : அழிதலில் வல்ல அமணர்களும் பௌத்தர்களும் வாய்த்திறனால் புறங்கூறிய போதும் குறைவுறாத செம்மையாள னாகிய சிவபெருமானது ஊர் பழியற்றவர் சேரும் திருப்பனை யூராகும்.

கு-ரை : இது புறச்சமயிகள் பொருந்தாதன சொல்லியபோதும் அவற்றால் இழிவுபடாத இறைவனூர் பனையூர் என்கின்றது. அழிவல் அமணர் - அழிதலில்வல்ல சமணர்கள். தேரர் - புத்தர். மொழி வல்லன - வாய் வன்மையாற் சொல்லும் மொழிகளை. இழிவு - குறைபாடு.

11. பொ-ரை: மண்ணுலகிற் பொருந்தி வாழ்தற்கு ஏற்ற விடை ஊர்தியைக் கொண்ட சிவபெருமானது திருப்பனையூரின் மேல் புகழால் மிக்க தமிழ் ஞானசம்பந்தன் மென்மேலும் விருப்பத்தைத்

Koviloor Digital Library

தருவனவாகப் போற்றிப் பாடிய சொன்மாலைகளான இப்பத்துப் பாடல்களையும் ஒவ்வோரூரிலும் இருந்துகொண்டு நினைவார் உயர்வெய்துவர்.

கு-ரை: பனையூர் மாலை பத்தையும் வல்லவர்கள் உயர்வார் எனப் பயன்கூறுகிறது. பார் - பூமி. ஆராத - கேட்டு அமையாத; அதாவது மேன்மேலும் விருப்பத்தை விளைவிக்கக்கூடிய. ஊர் ஊர் நினைவார் - பொலிகின்றவன் ஊர், மகிழ்ந்தவன் ஊர் என்பன முதலியவாக முடிவனவற்றை நினைவார்.

திருக்குற்றாலப் புராணம்

மதுரேசர் திருநாட்டு வந்தசமண்
கழுவேற மாறாச் சைவம்
சதுரேற மனுநீதி தழைத்தேறத்
திருவேடு தமிழ்சேர் வைகை
யெதிரேறத் தொண்டர்குழா மீடேறப்
பரசமய இருள்விட் டோடக்
கதிரேறு மணிச்சிவிகை யேறினான்
சரணமந்தக் கரணம் சேர்ப்பாம்.

- திரிகூடராசப்பக்கவிராயர்.

மருதவனப் புராணம்

சிவஞானக் கடலருந்திக் கருமைகொடு
திசைகளெங்குந் தெரியமின்னித்
தவரினஞ்சூழ்ந் திடவுலக முணரவிடித்
தமண்கோடை தணப்ப வோங்கு
புவனமதிற் சைவநெடும் பயிர்தழைப்பப்
பரங்கருணைப் பொருப்பின்மீது
கவிமழைகள் சொரிபுறவக் கவுணியக்கொண்
டலைநாளுங் கருத்துள் வைப்பாம்.

- சிவக்கொழுந்து தேசிகர்.

Koviloor Digital Library

38. திருமயிலாடுதுறை

பதிக வரலாறு:

மூவலூரைக் காதலோடு வணங்கி ஏத்தப் போதருகின்ற பிள்ளையார் திருமயிலாடுதுறை என்னும் மாயூரதலத்தை அடைந்தார்கள். அப்போது அவ்வூர் அந்தணர்கள் அடியார் களோடு எதிர்கொள்ள எழுந்தருளி, மானேந்திய பெருமானைத் திருக்கோயிலிற் சென்று வணங்கினார்கள். எல்லையில்லதோர் ஆனந்தம் அடைந்தார்கள். 'கரவின்றி நன்மாமலர்' என்னும் இப்பதிகத்தைத் தெளிந்த இசையோடும் ஓதியருளினார்கள்.

பண்: தக்கராகம்

பதிக எண்: 38

திருச்சிற்றம்பலம்

404. **கரவின் றிநன்மா மலர்கொண்டு**
இரவும் பகலுந் தொழுவார்கள்
சிரமொன் றியசெஞ் சடையான்வாழ்
வரமா மயிலா டுதுறையே. 1

1. பொ-ரை : நெஞ்சிற் கரவின்றி மணம் மிக்க சிறந்த மலர்கள் பலவற்றையும் பறித்துக் கொண்டு வந்து இரவும் பகலும் தொழும் அடியார்களுக்கு, தலைமாலை பொருந்தும் செஞ்சடை உடைய சிவ பெருமான் வாழும் பதியாகிய மயிலாடுதுறை மேம்பட்ட தலமாகும். வள்ளன்மை யுடையான் உகந்தருளும் இடமுமாம்.

கு-ரை : இது மயிலாடுதுறை, இரவும் பகலுந்தொழும் அடியார் கட்குச் சிரம் ஒன்றும் சிவன்வாழும் இடம் என்று அறிவிக்கிறது. கரவு - வஞ்சனை. சிரம் - தலைமாலை.

குருவருள் : வரம் என்ற சொல் வழங்குதலைக் குறிக்கும் இங்குள்ள பெருமான் வள்ளற் பெருமானாகலின் வரம் என்ற சொல்லால் அவ்வள்ளலைக் குறித்துள்ளார். அப்பர், வள்ளல் என்று குறிப்பிட்டுள்ளதும் காண்க. மயிலாடுதுறையரன் அடியார்களுக்கு வள்ளலாக அருள் வழங்குகிறான் என்பது குறிப்பு.

Koviloor Digital Library

405. உரவெங் கரியின் னுரிபோர்த்த
பரமன் னுறையும் பதியென்பர்
குரவஞ் சுரபுன் னையும்வன்னி
மருவும் மயிலா டுதுறையே. 2

406. ஊனத் திருணீங் கிடவேண்டில்
ஞானப் பொருள்கொண் டடிபேணும்
தேனொத் தினியா னமருஞ்சேர்
வானம் மயிலா டுதுறையே. 3

2. பொ-ரை : வலிமை பொருந்திய கொடிய யானையைக் கொன்று அதன் தோலைப் போர்த்த பரமன் உறையும் பதி, குராமரம், சுரபுன்னை வன்னி ஆகிய மரங்கள் செறிந்த திருமயிலாடுதுறை என்னும் திருத்தலமாகும்.

கு-ரை : யானைத்தோல்போர்த்த பரமன் உறையும்பதி மயிலாடுதுறை என்கின்றது. உரம் - வலிமை.

குரவம் - குராமலர். சுரபுன்னை - இது இக்காலத்து நாக லிங்கப்பூ என வழங்குகிறது.

3. பொ-ரை : இப்பிறப்பில் நமக்குள்ள குறைபாடாகிய ஆணவம் என்னும் இருள் நம்மை விட்டு நீங்க வேண்டில், ஞானப் பொருளாய் உள்ள சிவபெருமான் திருவடிகளை வணங்குங்கள். தேனை ஒத்து இனியனாய் விளங்கும் அப்பெருமான் தனக்குச் சேர்வான மயிலாடுதுறையில் விரும்பி உறைகிறான்.

கு-ரை : உயிர்களை அணுவாக்கும் ஆணவமலம் நீங்க வேண்டில் ஞானப்பொருளைத் துணைக்கொண்டு மயிலாடு துறையைப் பேணுங்கள் என்கின்றது.

ஊனத்து இருள் - குறைபாட்டை உண்டாக்கும் மலம். குறைபாடாவது சிவத்தோடொன்றிச் சிவமாகும் ஆன்மாவை மறைத்து அணுவாக்கும் குறைபாடு. தேன் ஒத்து இனியான் - முத்தியில் ஒன்றிய காலத்துத் தேனை ஒத்து இனியவன், ''தேனைப் பாலை யொத் திருப்பன் முத்தியினிற் கலந்தே'' என்றதும் காண்க. அமரும், சேர்வு ஆன. மயிலாடுதுறையை அடிபேணும் எனக் கூட்டுக.

Koviloor Digital Library

407. அஞ்சொண் புலனும் மவைசெற்ற
மஞ்சன் மயிலா டுதுறையை
நெஞ்சொன் றிநினைந் தெழுவார்மேற்
றுஞ்சும் பிணியா யினதானே. 4

408. தணியார் மதிசெஞ் சடையான்றன்
அணியார்ந் தவருக் கருளென்றும்
பிணியா யினதீர்த் தருள்செய்யும்
மணியான் மயிலா டுதுறையே. 5

4. பொ-ரை : ஐம்பொறிகளைப் பற்றும் ஒள்ளிய புலன்களாகிய அவைகளைக் கெடுத்த பெருவீரனாகிய சிவபெருமான் எழுந்தருளிய மயிலாடுதுறையை மனம் ஒன்றி நினைந்து வழிபட எழுவார் மேல் வரும் பிறவி முதலாகிய பிணிகள் அழிந்தொழியும்.

கு-ரை : பொறிவாயிலைந்தவித்த வீரன் மேவிய மயிலாடு துறையை மனமொன்றித் தியானிப்பவர்களின் பிணிகள் அழியும் என் கின்றது. அஞ்சு ஒண்புலனும் - தத்தமக்கேற்ற பொறிகளைக் கவரும் ஒள்ளிய ஐந்து புலன்களையும்.

செற்ற - கெடுத்த. மஞ்சன் - இது மைந்தன் என்பதன் போலி. வலிமையுடையோன் என்பதாம். நினைந்து எழுவார் - துயில்விட்டு எழும்போதே தியானித்து எழுபவர்கள். பிணி - பிறவிப்பிணி.

5. பொ-ரை : குளிர்ந்த பிறைமதியை அணிந்துள்ள சிவந்த சடை முடியை உடையவனாகிய சிவபெருமானை அணுகியவருக்கு என்றும் அருள் உளதாம். பிணி முதலானவற்றைப் போக்கி அருள்புரியும் மணி போன்றவனாய் அப்பெருமான் மயிலாடுதுறையில் உள்ளான்.

கு-ரை : இது மயிலாடுதுறையைச் சேர்ந்தவர்க்கு என்றும் அருள் உளதாம் என்கின்றது. தணியார் மதி - குளிர்ந்தமதி. அணி யார்ந்தவர் - அணுகியவர்.

மணியான் - மணிபோன்றவன். பிணிதீர்ப்பன மணி மந்திரம் ஔஷதம் என்ற மூன்றுமாதலின் அவற்றுள் ஒன்றாய மணிபோன்ற வன் என்றார். பிணியாயின தீர்த்து அருள்செய்யும் மணியான், செஞ்சடையான் தன் மயிலாடுதுறை அணியார்ந்தவர்க்கு என்றும் அருள் (உளதாம்) என முடிக்க.

Koviloor Digital Library

409. தொண்ட ரிசைபா டியுங்கூடிக்
கண்டு துதிசெய் பவனூராம்
பண்டும் பலவே தியரோத
வண்டார் மயிலா டுதுறையே. 6

410. அணங்கோ டொருபா கமமர்ந்து
இணங்கி யருள்செய் தவனூராம்
நுணங்கும் புரிநூ லர்கள்கூடி
வணங்கும் மயிலா டுதுறையே. 7

411. சிரங்கை யினிலேந் தியிரந்த
பரங்கொள் பரமேட் டிவரையால்
அரங்கவ் வரக்கன் வலிசெற்ற
வரங்கொண் மயிலா டுதுறையே. 8

6. பொ-ரை : தொண்டர்களாயுள்ளவர்கள் கூடி இசை பாடியும், தரிசித்தும் துதிக்கும் சிவபெருமானது ஊர் முற்காலத்தும் இக்காலத்தும் வேதியர்கள் வேதங்களை ஓதித் துதிக்க, வண்டுகள் ஒலிக்கும் சோலைகள் சூழ்ந்த மயிலாடுதுறையாகும்.

கு-ரை : தொண்டர்கள் கூடித் துதிபாடும் ஊர் என்கின்றது. துதிசெய்பவன் - துதிசெய்யப்படுமவன். பண்டும் - முன்பும்.

7. பொ-ரை : உமையம்மையை ஒரு பாகமாக விரும்பி ஏற்று வீற்றிருந்து அருள் புரிபவன் ஊர், முப்புரி நூல் துவளும் அந்தணர்கள் கூடி வணங்கும் திருமயிலாடுதுறை ஆகும்.

கு-ரை : இது மயிலம்மையை ஒருபாகங்கொண்டு அருள் செய்த ஊர் என்கின்றது. அணங்கு - மயிலம்மை. இணங்கி - பொருந்தி. நுணங்கும் - துவளும். புரிநூலவர்கள் - முப்புரி நூலை யுடைய அந்தணர்கள்.

8. பொ-ரை : பிரமகபாலத்தைக் கையில் ஏந்திப் ப்லர் இல்லங்களிலும் சென்று இரந்த மேன்மை கொண்டவன் சிவபிரான். கயிலை மலையால் இராவணனை நெரியுமாறு அடர்த்த நன்மை யாள னாகிய அப்பெருமானை அடியவர் வணங்கி நன்மைகளைப் பெறும் தலம் திருமயிலாடுதுறை.

Koviloor Digital Library

412. ஞாலத் தைநுகர்ந் தவன்றானும்
கோலத் தயனும் மறியாத
சீலத் தவனூர் சிலர்கூடி
மாலைத் தீர்மயிலா டுதுறையே. 9

413. நின்றுண் சமணுந் நெடுந்தேரர்
ஒன்றும் மறியா மையுயர்ந்த
வென்றி யருளா னவனூராம்
மன்றன் மயிலா டுதுறையே. 10

414. நயர்கா ழியுண்ஞா னசம்பந்தன்
மயல்தீர் மயிலா டுதுறைமேல்

கு-ரை : இது பிரம கபாலத்தைத்தாங்கி இரந்த பரமேட்டியின் இடம் என்கின்றது. பரம்கொள் பரமேட்டி - மேன்மையைக் கொண்ட சிவன். வரையால் அரங்க - கைலையால் நசுங்க.

9. பொ-ரை : உலகை விழுங்கித் தன் வயிற்றகத்தே வைத்த திருமாலும், அழகிய நான்முகனும் அறியாத தூயவனாகிய சிவபெருமானது ஊர், அடியவர் ஒருங்கு கூடி வழிபட்டுத் தம் அறியாமை நீங்கப் பெறும் சிறப்புடைய திருமயிலாடுதுறை ஆகும்.

கு-ரை : இது அயனும் மாலும் அறியாதவனூர் என்கின்றது. ஞாலத்தை நுகர்ந்தவன் - பூமியைவிழுங்கித் தன் வயிற்றகத்து அடக்கிய மாயன். சீலம் - எளிமை. மால் - மயக்கம்.

10. பொ-ரை : நின்றுண்பவர்களாகிய சமணர்களும் நெடிதுயர்ந்த புத்தர்களும் ஒரு சிறிதும் தன்னை அறியாதவர்களாய் ஒழியத் தான் உயர்ந்த வெற்றி அருள் இவைகளைக் கொண்டுள்ள சிவபெருமானது ஊர் நறுமணம் கமழும் திருமயிலாடுதுறை ஆகும்.

கு-ரை : புறச்சமயத்தார்க்கு அறியொண்ணாதபடி உயர்ந்தோனிடம் இது என்கின்றது. வென்றி அருளான் - வெற்றியை விளைவிக்கும் அருளையுடையவன். மன்றல் - நறுமணம்.

11. பொ-ரை : ஞானத்தினால் மேம்பட்டவர் வாழும் சீகாழிப் பதியுள் வாழும் ஞானசம்பந்தன், தன்னை வழிபடுவாரின் மயக்கத்தைத் தீர்த்தருளும் மயிலாடுதுறை இறைவனைப் பற்றித் திருவருள்

Koviloor Digital Library

செயலா லுரைசெய் தனபத்தும்
உயர்வா மிவையுற் றுணர்வார்க்கே. 11

திருச்சிற்றம்பலம்

உணர்த்தும் செயலால் உரைத்தனவாகிய இத்திருப்பதிகப் பாடல்களாகிய இவை பத்தும் உற்றுணர்வார்க்கு உயர்வைத் தரும்.

கு-ரை : இவைபத்தும் உணர்வார்க்கு உயர்வாம் என்கின்றது. நயர் காழி - நயம் உணர்ந்த பெரியோர்கள் உறைகின்ற காழி. மயல் - மயக்கம். செயலால் - திருவருள் உண்ணின்று செய்தலால்.

திருநல்லூர்ப் பெருமணப் புராணம்

சோணாடு தனக்கெழிலாம் புகலிதனிற்
கவுணியர்பாற் றோன்றிநீடு
கோணாக மணிதருசெஞ் சடைப்பெருமான்
அருண்மேவிக் குவலயத்துள்
மாணாருஞ் சைவநெடுஞ் சுடரேற்றிச்
சமணிருளின் வலிமைநீக்கி
ஆணான பெண்ணையுறு பெண்ணாகச்
செய்தவர்தா ளகத்துள் வைப்போம்.

– சிவக்கொழுந்து தேசிகர்.

மயூராசலப் புராணம்

தழுதழுப்ப அழுமகவு பாலருந்தும்
எனுமொழிக்குச் சான்றேயாகத்
தொழுதகுதந் தையைக்காணா தழுதிரிய
பரசுகத்திற் றொடக்குண் டன்பால்
முழுமலமா யையைநீக்கு ஞானப்பால்
உமையருள முன்னந்தேக்கும்
கழுமலப்பே ரூரின்வரும் பிள்ளையடி
உள்ளிவினைக் கரிசு தீர்ப்பாம்.

– மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

Koviloor Digital Library

39. திருவேட்களம்

பதிக வரலாறு:

ஆனந்தக் கூத்தப்பெருமான் எழுந்தருளியிருக்கின்ற கனகசபையைத் தொழுது, வெளியேபோகின்றவர்கள், திருமுன்னிலையையும், திருவாயிலையும் வணங்கி, திருவீதிகளையும் தொழுது அங்கே இராத்தங்க அஞ்சுவார்களாகத் திருவேட்களத்தை யடைந்தார்கள். அங்கே பாசுபதநாதரைக் கைதொழுது 'அந்தமும் ஆதியுமாகிய' என்னும் இந்தச் சொற்பதிகத்தை அருளிச்செய்து, அத்தலத்தையே தங்குமிடமாகக் கொண்டு தில்லையைத் தரிசித்து வருவாராயினர்.

பண்: தக்கராகம்

பதிக எண்: 39

திருச்சிற்றம்பலம்

415. **அந்தமுமாதியு மாகியவண்ணல்**
ஆரழலங்கை யமர்ந்திலங்க
மந்தமுழவ மியம்ப
மலைமகள் காணநின்றாடிச்
சந்தமிலங்கு நகுதலைகங்கை
தண்மதியம் மயலேததும்ப
வெந்தவெண் ணீறுமெய்பூசும்
வேட்கள நன்னகராரே. 1

1. பொ-ரை : உலகங்களைப் படைப்பவரும், இறுதி செய்பவருமாகிய, தலைமைத் தன்மையுடைய சிவபிரான் பிறரால் பொறுத்தற்கரிய தீ கையின்கண் விளங்க, மெல்லென ஒலிக்கும் முழவம் இயம்ப, மலைமகளாகிய பார்வதிதேவி காணுமாறு திருநடம் புரிந்து, அழகு விளங்கும் கபாலமாலை, கங்கை, தண் பிறை ஆகியன தலையின்கண் விளங்க, வெந்த வெண்ணீறு மெய்யில் பூசியவராய்த் திருவேட்கள நன்னகரில் எழுந்தருளியுள்ளார்.

கு-ரை : வேட்களாநாதர் அழல் அங்கையில் தயங்க, கங்கையும் கபாலமும் மதியமும் விளங்க, மலைமகள் காண நின்றாடுவர் என்கின்றது. அந்தமும் ஆதியும் ஆகிய அண்ணல் - காணப்பட்ட

Koviloor Digital Library

416. சடைதனைத்தாழ்தலு மேறமுடித்துச்
சங்கவெண்டோடு சரிந்திலங்கப்
புடைதனிற் பாரிடஞ்சூழப்
போதருமா றிவர்போல்வார்
உடைதனினால்விரற் கோவணவாடை
யுண்பதுமூரிடு பிச்சைவெள்ளை
விடைதனை யூர்திநயந்தார்
வேட்கள நன்னகராரே. 2

பிரபஞ்சத்திற்கெல்லாம் இறுதிசெய்பவனும், முதலாய் நின்று படைப்பவனும் ஆகிய பெருமையிற் சிறந்தவன். ''அந்தம் ஆதி'' சிவஞான போதம். ஆரழல் - பிறரால் பொறுத்தற்கரிய தீ. மந்த முழவம் - மந்த ஸ்தாயியில் அடிக்கப்பெறுகின்ற மத்தளம். மலைமகள் - உமாதேவி. நோயுண் மருந்து தாயுண்டாங்கு இறைவனது ஆனந்தத்தாண்டவத்தை மலைமகள் கண்டு ஆன்மாக்களின் பக்குவத்திற்கு ஏற்பப் பயன் கொள்ளச் செய்கின்றாள் ஆதலின் உமை காண நின்றாடி என்றார். நகரார் ஆகிய அண்ணல், இலங்க, இயம்ப, ஆடி, ததும்ப, பூசும் என முடிக்க.

குருவருள் : ''வேட்கள நன்னகராரே'' என்பதற்கு ஏற்ப அவ்வருள் வாக்கின்படி இன்று இத்தலம் பல்கலைக்கழகத்துடன் அண்ணாமலை நகராக விளங்குவது காண்க.

2. பொ-ரை : திருவேட்கள நன்னகர் இறைவன், தாழ்ந்து தொங்கும் சடைமுடியை எடுத்துக் கட்டிச் சங்கால் இயன்ற வெள்ளிய தோடு காதிற் சரிந்து விளங்கவும், அருகில் பூதங்கள் சூழ்ந்து வரவும், போதருகின்றவர். அவர்தம் உடையோ நால்விரல் அகலமுடைய கோவண ஆடையாகும். அவர் உண்பதோ ஊரார் இடும் பிச்சையாகும். அவர் விரும்பி ஏறும் ஊர்தியோ வெண்ணிறமுடைய விடையாகும்.

கு-ரை : இறைவன் சடைமுடித்து, சங்ககுண்டலந்தாழ, பூதந்தாழப் போதருவர்; அவருக்கு உடை கோவணம்; உண்பது பிச்சை; ஊர்தி இடபம் என்கின்றது. ஏறமுடித்து - எடுத்துக்கட்டி, சரிந்து - தாழ்ந்து. பாரிடம் - பூதம். போல்வார் - ஒப்பில் போலி. ஊர்தி - வாகனம். கோவணம் நால்விரல் அகல முடையதாயிருத்தல் வேண்டும் என்பது மரபு ஆதலின் நால் விரல் கோவணம் என்றார்.

Koviloor Digital Library

417. பூதமும்பல்கண மும்புடைசூழப்
பூமியும்விண்ணு முடன்பொருந்தச்
சீதமும்வெம்மையு மாகிச்
சீரொடுநின்றவெஞ் செல்வர்
ஓதமுங்கானலுஞ் சூழ்தருவேலை
யுள்ளங்கலந்திசை யாலெழுந்த
வேதமும்வேள்வியு மோவா
வேட்கள நன்னகராரே. 3

418. அரைபுல்குமைந்தலை யாடலரவ
மமையவெண்கோவணத் தோடசைத்து
வரைபுல்குமார்பி லொராமை
வாங்கியணிந் தவர்தாந்
திரைபுல்குதெண்கடல் தண்கழியோதந்
தேனலங்கானலில் வண்டுபண்செய்ய
விரைபுல்குபைம்பொழில் சூழ்ந்த
வேட்கள நன்னகராரே. 4

3. பொ-ரை : கடல்நீர்ப் பெருக்கும் சோலையும் சூழ்ந்ததும், அந்தணர்கள் மனங்கலந்து பாடும் இசையால் எழுந்த வேத ஒலியும், அவர்கள் இயற்றும் வேள்விகளும் இடையறாது நிகழும் இயல்பினதும், ஆகிய திருவேட்கள நன்னகர் இறைவர், பூதங்களும் சிவ கணங்களும் அருகில் சூழ்ந்து விளங்க, விண்ணும் மண்ணும் தம்பால் பொருந்தத் தண்மையும் வெம்மையும் ஆகிப் புகழோடு விளங்கும் எம் செல்வராவார்.

கு-ரை : இது விண்ணும் மண்ணும் கலந்து தட்பமும் வெப்பமுமாகிப் புகழோடு நின்ற செல்வர் வேட்கள நன்னகரார் என்று அறிவிக்கின்றது. உடன்பொருந்த - எங்குமாயிருக்க. உள்ளங்கலந்து இசையால் எழுந்த வேதம் - மனத்தில் நின்று ஊறி இசையோடு எழுந்த வேதம். ஓவா - இடையறாத.

4. பொ-ரை : இடையிற் பொருந்திய ஐந்து தலைகளை யுடைய தாய், ஆடும் பாம்பை வெண்மையான கோவணத்தோடும் பொருந்தக் கட்டி, மலை போன்று அகன்ற மார்பின்கண் ஒப்பற்ற ஆமை ஓட்டை

Koviloor Digital Library

419. பண்ணுறுவண்டறை கொன்றையலங்கல்
பால்புரைநீறுவெண் ணூல்கிடந்த
பெண்ணுறுமார்பினர் பேணார்
மும்மதிலெய்த பெருமான்
கண்ணுறுநெற்றி கலந்தவெண்டிங்கட்
கண்ணியர்விண்ணவர் கைதொழுதேத்தும்
வெண்ணிறமால்விடை யண்ணல்
வேட்கள நன்னகராரே. 5

விரும்பி அணிந்தவராய் விளங்கும் சிவபெருமானார் அலைகளை யுடைய தெளிந்த கடல்நீர் பெருகிவரும் உப்பங்கழிகளை உடையதும், வண்டுகள் இசைபாடும் தேன்பொருந்திய கடற்கரைச் சோலைகளை உடையதும், மணம் கமழும் பைம்பொழில் சூழ்ந்ததுமாகிய திரு வேட்கள நன்னகரில் எழுந்தருளி உள்ளார்.

கு-ரை : அரைபுல்கும் - அரையைத் தழுவிய. அசைத்து - இறுக உடுத்து. வரைபுல்கு - மலையையொத்த. ஆமை - ஆதி கூர்மம். ஓதம் பைம்பொழில் சூழ்ந்த வேட்களம் என்க; என்றது நெய்தலோடு தழுவிய நகர் என அறிவித்தவாறு.

5. பொ-ரை : திருவேட்கள நன்னகர் இறைவர், இசை பாடும் வண்டுகள் சூழ்ந்த கொன்றை மாலையை அணிந்தவராய், பால் போன்ற வெண்ணீறு பூசியவராய், முப்புரி நூலும் உமையம்மையும் பொருந்திய மார்பினராய்ப் பகைவர்களாகிய அசுரர்களின் மும்மதில் களையும் எய்து அழித்த தலைவராய், நெற்றிக் கண்ணராய், பிறைமதிக் கண்ணியராய் விண்ணவர் கைதொழுது ஏத்தும் வெண்மையான பெரிய விடை மீது ஊர்ந்து வருபவராய் விளங்கும் தலைவராவார்.

கு-ரை : இது கொன்றைமாலை, பூணூல் இவற்றையணிந்து உமை ஒருபாதியராகத் திரிபுரமெரித்த பெருமான் இவர் என்கின்றது. பண் உறு வண்டு - இசையை எழுப்புகின்ற வண்டுகள். அறை - ஒலிக் கின்ற. அலங்கல் - மாலை. கண்ணுறு நெற்றி - அக்கினிக்கண் பொருந்திய நெற்றி. வெண்திங்கள் கண்ணியர் - பிறையைத் தலை மாலையாய் அணிந்தவர்; பிறையைக் கண்ணியாகச் சூடுதல் மரபு. ''மாதர்ப் பிறைக்கண்ணியானை'' என்பதை நோக்குக. மால்விடை - பெரிய இடபம்.

Koviloor Digital Library

420. கறிவளர்குன்ற மெடுத்தவன்காதற்
கண்கவரைங்கணை யோனுடலம்
பொறிவள ராரழலுண்ணப்
பொங்கிய பூதபுராணர்
மறிவளரங்கையர் மங்கையொர்பங்கர்
மைஞ்ஞிறமானுரி தோலுடையாடை
வெறிவளர்கொன்றையந் தாரார்
வேட்கள நன்னகராரே. 6

421. மண்பொடிக்கொண்டெரித் தோர்சுடலை
மாமலைவேந்தன் மகள்மகிழ
நுண்பொடிச்சேர நின்றாடி
நொய்யன செய்யலுகந்தார்
கண்பொடிவெண்டலை யோடுகையேந்திக்
காலனைக்காலாற் கடிந்துகந்தார்
வெண்பொடிச் சேர்திருமார்பர்
வேட்கள நன்னகராரே. 7

6. பொ-ரை : திருவேட்கள நன்னகர் இறைவர், மிளகுக் கொடிகள் வளர்ந்து செறிந்த கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்த திருமாலின் அன்பு மகனும், அழகு மிக்கவனும், ஐங்கணை உடையவனுமாகிய மன்மதனின் உடல், பொறி பறக்கும் அரிய அழல் உண்ணும்படி சினந்த பழையோரும், மான் ஏந்திய கரத்தினரும், மங்கை பங்கரும், கருநிறமுடைய யானையின் தோலை உரித்து ஆடையாகப் போர்த்தவரும், மணங்கமழும் கொன்றை மாலையை அணிந்தவருமாவார்.

கு-ரை : இது மன்மதனை எரித்த மங்கைபங்கர் திருத்தலம் இவ்வூர் என்கின்றது. கறி - மிளகு. குன்றம் என்றது கோவர்த்தனம். எடுத்தவன் - கண்ணன். காதல் கண்கவர் ஐங்கணையோன் - மகனாகிய பேரழகனாகிய மன்மதன். ஆர் அழல் உண்ண - தீப்பற்றி எரிய. பொங்கிய - கோபித்த. மறி - மான். மைஞ்ஞிற மான் - கருமான். வெறி - மணம்.

7. பொ-ரை : திருவேட்கள நன்னகர் இறைவர் மண்ணும் பொடியாகுமாறு உலகை அழித்து, ஒப்பற்ற அச்சுடலையில் சிறப்புத்

Koviloor Digital Library

422. ஆழ்தருமால்கட னஞ்சினையுண்டார்
அமுதமமரர்க் கருளிச்
சூழ்தருபாம்பரை யார்த்துச்
சூலமோடொண் மழுவேந்தித்
தாழ்தருபுன்சடை யொன்றினைவாங்கித்
தண்மதியம்மய லேததும்ப
வீழ்தருகங்கை கரந்தார்
வேட்கள நன்னகராரே. 8

தன்மையை உடைய இமவான் மகளாகிய பார்வதி தேவி கண்டு மகிழ, சுடலையின் நுண்பொடிகள் தம் உடலிற் படிய, நின்று ஆடி, அத் திருக்கூத்து வாயிலாக நுட்பமான பஞ்ச கிருத்தியங்கள் செய்தலை உகந்தவரும், கண் பொடிந்து போன வெள்ளிய தலையோட்டினைக் கையில் ஏந்தியவரும், காலனைக் காலால் கடிந்துகந்தவரும் வெள்ளிய திருநீறு சேர்ந்த அழகிய மார்பினரும் ஆவார்.

கு-ரை : உலகத்தைச் சங்கரித்த சுடலையில் மலைமகள் மகிழ ஆடி நுட்பமான செயலைச் செய்பவர் இந்நகரார் என்கின்றது. பொடிக் கொண்டு - பொடித்தன்மையைக் கொள்ள. நுண்பொடிச் சேர - துகள் திருமேனியில் பொருந்த. நொய்யன செய்யல் உகந்தார் - மிகவும் நுட்பமான பஞ்சகிருத்தியங்களைச் செய்யத் திருவுளம் பற்றினார். செய்தார் என்னாது செய்யல் உகந்தார் என்பதில் சிறப்பிருத்தல் நோக்குக. செய்தல் பிரமனாதியர் தொழில். கண்பொடி வெண்தலை - கண் பொடிந்து போனதலை. பொடிதல் - இல்லையாதல்.

8. பொ-ரை : திருவேட்கள நன்னகர் இறைவர், ஆழமான பெரிய கடலிடத்துத் தோன்றிய அமுதத்தைத் தேவர்க்கு அளித்தருளி நஞ்சினைத் தாம் உண்டவரும், சுற்றிக் கொள்ளும் இயல்பினதாய பாம்பினை இடையிற் கட்டி, சூலம், ஒளி பொருந்திய மழு ஆகியவற்றைக் கைகளில் ஏந்தியவரும், உலகையே அழிக்கும் ஆற்றலோடு பெருகி வந்த கங்கை நீரைத் தம் பிறை அயலில் விளங்கத் தலையிலிருந்து தொங்கும் மெல்லிய சடை ஒன்றினை எடுத்து அதன்கண் சுவறுமாறு செய்தவரும் ஆவார்.

கு-ரை : நஞ்சினைத் தாம் உண்டு, அமுதத்தைத் தேவர்க்கருளி, பாம்பு, சூலம், மழு இவற்றைத் தரித்துச் சடையில் கங்கையை மறைத்து வைத்தவர் இவர், என்கின்றது. புன்சடை - மெல்லிய சடை. உயிரைக்

Koviloor Digital Library

423. திருவொளிகாணிய பேதுறுகின்ற
திசைமுகனுந் திசைமேலளந்த
கருவரையேந்திய மாலுங்
கைதொழ நின்றதுமல்லால்
அருவரையொல்க வெடுத்தவரக்க
னாடெழிற்றோள்க ளாழத்தழுந்த
வெருவுறவூன்றிய பெம்மான்
வேட்கள நன்னகராரே. 9

424. அத்தமண்டோய்துவ ரார்அமண்குண்டர்
யாதுமல்லாவுரை யேயுரைத்துப்
பொய்த்தவம் பேசுவதல்லாற்
புறனுரையாதொன்றுங் கொள்ளேல்

கொல்லும் விடத்தைத் தான் உண்டு சாவாமையையளிக்கும் அமு தினைத் தேவர்க்களித்தது இவர் பெருங்கருணையைத் தெரிவிக்கிறது.

9. பொ-ரை : திருவேட்கள நன்னகர் இறைவர், அழகிய பேரொளிப் பிழம்பைக் காணும்பொருட்டு மயங்கிய நான்முகனும், எண்திசைகளையும் அளந்தவனாய்ப் பெரிதான கோவர்த்தன மலை யைக் குடையாக ஏந்திய திருமாலும், அடிமுடி காண இயலாது கை தொழுது நிற்க, கயிலைமலை தளருமாறு அதனை எடுத்த இராவண னின் வெற்றியும் அழகு மிக்க தோள்களும் ஆழத் தழுந்தவும் அவன் அஞ்சி நடுங்கவும் தம் கால் விரலை ஊன்றிய பெருமான் ஆவார்.

கு-ரை : இறைவனுடைய பேர் ஒளித் திருமேனியைக் காண வருந்திய அயனும் மாலும் அறியமுடியாமல் வணங்க நின்றதோடு இராவணனை ஆழத்தழுத்திய பெருமான் இந்நகரார் என அறிவிக் கின்றது. திருவொளி - அழல்தூணின் பேரொளி. திசைமேல் அளந்த - திக்குகள் அனைத்தையுமளந்த. கருவரை - கோவர்த்தனகிரி. அரு வரை - கைலைமலை. ஆடு எழில் தோள் - வெற்றியோடு கூடிய எழுச்சிமிக்க தோள்.

10. பொ-ரை : செந்நிறமான காவி மண் தோய்ந்த ஆடைகளை அணிந்த பௌத்தர்கள், சமண் குண்டர்கள் ஆகியோர் பொருளற்ற வார்த்தைகளை உரைத்துப் பொய்த்தவம் பேசுவதோடு சைவத்தைப் புறனுரைத்துத் திரிவர். அவர்தம் உரை எதனையும் கொள்ளாதீர்.

Koviloor Digital Library

முத்தனவெண்முறு வல்லுமையஞ்ச
மூரிவல்லானையி னீருரிபோர்த்த
வித்தகர்வேத முதல்வர்
வேட்கள நன்னகராரே. 10

425. விண்ணியன்மாடம் விளங்கொளிவீதி
வெண்கொடியெங்கும் விரிந்திலங்க
நண்ணியசீர்வளர் காழி
நற்றமிழ் ஞானசம்பந்தன்
பெண்ணினல்லாளொரு பாகமமர்ந்து
பேணியவேட்கள மேன்மொழிந்த
பண்ணியல்பாடல் வல்லார்கள்
பழியொடு பாவமிலாரே. 11

திருச்சிற்றம்பலம்

முத்துப் போன்ற வெண் முறுவல் உடைய உமையம்மை அஞ்சுமாறு வலிய யானையின் தோலை உரித்துப் போர்த்த வித்தகரும் வேத முதல்வருமாகிய வேட்கள நன்னகர் இறைவரை வணங்குமின்.

கு-ரை : இது யானைத்தோல் போர்த்த வித்தகர் இவ்வூரார் என்கின்றது. அத்தம் மண் - செந்நிறமான மண். ''ஆடுநீரன அத்து மண்களும்'' *சிந்தாமணி. 2418.* யாதும் அல்லா உரை - பொருளற்ற உரை. முறுவல் - பல். மூரி - வலிமை.

11. பொ-ரை : விண்ணுற வோங்கிய மாட வீடுகளையும்; வெண்மையான கொடிகள் எங்கும் விரிந்து விளங்கும் ஒளி தவழும் வீதிகளையும் உடையதும், பொருந்திய சீர்வளர்வதும் ஆகிய சீகாழிப் பதியுள் தோன்றிய நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் பெண்ணில் நல்லவளான நல்ல நாயகியை ஒரு பாகமாக விரும்பி ஏற்று எழுந்தருளியுள்ள திருவேட்களத்து இறைவர்மீது பாடியருளிய பண்பொருந்திய இப்பதிகப் பாடல்களை ஓத வல்லவர் பழி பாவம் இலராவர்.

கு-ரை : இது திருவேட்களப்பதிகத்தை ஓத வல்லவர்கட்குப் பழி பாவம் இல்லை என்கின்றது. புகழுக்கு அடையாளமாக வெண் கொடி எடுத்தல் மரபு. பெண்ணின் நல்லாள்: இது இத்தலத்து அம்மையின் பெயராகிய நல்லநாயகி என்பதை நினைவூட்டுகின்றது.

Koviloor Digital Library

40. திருவாழ்கொளிபுத்தூர்

பதிக வரலாறு:

திரு ஓமாம்புலியூரை வணங்கி எழுந்தருளிய பிள்ளையார் திருவாழ்கொளிபுத்தூரை யடைந்தார்கள்; கார் வளர்கண்டர் தாள் பணிந்தார்கள்; பார்புகழ் பதிகமாகிய 'பொடியுடை' என்னும் இப்பதிகத்தை அருளினார்கள்.

பண்: தக்கராகம்

பதிக எண்: 40

திருச்சிற்றம்பலம்

426. பொடியுடைமார்பினர் போர்விடையேறிப்
பூதகணம் புடைசூழக்
கொடியுடையூர்திரிந் தையங்
கொண்டு பலபலகூறி
வடிவுடைவாணெடுங் கண்ணுமைபாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்க்
கடிகமழ் மாமலரிட்டுக்
கறைமிடற்றானடி காண்போம். 1

1. பொ-ரை : திருநீறு அணிந்த மார்பினராய், வீரம் மிக்க விடை மீது ஏறி, பூத கணங்கள் புடை சூழ்ந்து வர, கொடிகள் கட்டிய ஊர்களில் திரிந்து பற்பல வாசகங்களைக் கூறிப் பலியேற்று, அழகிய வாள் போன்ற நெடிய கண்களையுடைய உமையொரு பாகராகிய சிவபிரானார் எழுந்தருளிய வாழ்கொளிபுத்தூர் சென்று மணம் கமழும் சிறந்த மலர்களால் அருச்சித்து அக்கறைமிடற்றார் திருவடிகளைக் காண்போம்.

கு-ரை : இது பலிகொண்டு உமையொருபாகனாய் எழுந்தருளியிருக்கும் நீலகண்டனது திருவடியை, வாழ்கொளி புத்தூரில் சென்று மலரிட்டு வணங்குவோம் என்கின்றது. ஐயம் - பிச்சை. பிச்சை ஏற்பார் வாகனத்திலேறிப் பலர் புடைசூழச் செல்லுதல் அழகியது என நயந்தோன்றநின்றது. வடிவு - அழகு. புத்தூர் மிடற்றான் அடி மலரிட்டுக் காண்போம் எனக்கூட்டுக.

Koviloor Digital Library

427. அரைகெழுகோவண வாடையின்மேலோர்
ஆடரவம்மசைத் தையம்
புரைகெழுவெண்டலை யேந்திப்
போர்விடை யேறிப்புகழ
வரைகெழுமங்கைய தாகமொர்பாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்
விரைகமழ் மாமலர்தூவி
விரிசடையானடி சேர்வோம். 2

428. பூணெடுநாக மசைத்தனலாடிப்
புன்றலையங்கையி லேந்தி
ஊணிடுபிச்சையூ ரையம்
முண்டியென்று பலகூறி

2. பொ-ரை : இடையில் கட்டிய கோவண ஆடையின்மேல் ஆடும் அரவம் ஒன்றைக் கட்டிக் கொண்டு, துளை பொருந்திய வெண்தலையோட்டைக் கையில், ஏந்திப் பலியேற்று, சினம் பொருந்திய விடை மீது ஏறிப் பலரும் புகழ, இமவான் மகளாகிய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவனாகிய சிவபிரான் எழுந்தருளிய திருவாழ்கொளிபுத்தூர் சென்று, மணம் கமழும் சிறந்த மலர்களைத் தூவி அவ்விரிசடையான் திருவடிகளைச் சேர்வோம்.

கு-ரை : பிரமகபாலத்தில் பிச்சை ஏற்ற பெருமானை மலர் தூவித்தியானிப்போம் என்கின்றது. புரை - ஓட்டை. மங்கையது ஆகம் - உமையின் திருமேனி.

3. பொ-ரை : நெடிய பாம்பை அணிகலனாகப் பூண்டு, அனலைக் கையின்கண் ஏந்தி, ஆடிக்கொண்டும், பிரமனது தலையோட்டை அழகிய கையொன்றில் ஏந்திப் பல ஊர்களிலும் திரிந்து மக்கள் உணவாகத் தரும் பிச்சையைத் தனக்கு உணவாக ஏற்றுப் பற்பலவாறு கூறிக்கொண்டும், வாள் போன்ற நீண்ட கண்களையுடைய உமையம்மையை ஒரு பாகமாக ஏற்று விளங்கும் சிவபிரான் எழுந்தருளிய திருவாழ்கொளிபுத்தூர் சென்று அப்பெருமான் திருவடிகளில் சிறந்த மலர்களைத் தூவித் தலைவ்னாக விளங்கும் அவன் தாள் நிழலைச் சார்வோம்.

Koviloor Digital Library

வாணெடுங்கண்ணுமை மங்கையொர்பாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்த்
தாணெடு மாமலரிட்டுத்
தலைவனதாணிழல் சார்வோம். 3

429. தாரிடுகொன்றையொர் வெண்மதிகங்கை
தாழ்சடை மேலவைசூடி
ஊரிடுபிச்சைகொள் செல்வ
முண்டியென்று பலகூறி
வாரிடுமென்முலை மாதொருபாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்க்
காரிடு மாமலர்தூவிக்
கறைமிடற்றானடி காண்போம். 4

கு-ரை : இது இறைவனுக்கு மலரிட்டு வணங்கி அவன்தாள் நிழலைச் சார்வோம் என்கின்றது. பூண் அசைத்து - ஆபரணமாகக் கட்டி, இடுபிச்சை ஊண் உண்டி ஊர் ஐயம் என்று பலகூறி என்றது பிச்சைதான் உணவு என்பதைப் பலமுறையாகச் சொல்லி. தலைவன தாள் - தலைவனுடைய திருவடிகள். அகரம் ஆறாம் வேற்றுமைப் பன்மை உருபு.

4. பொ-ரை : கொன்றை மாலையையும், வெண்மதியையும், கங்கையையும், தாழ்ந்து தொங்கும் சடைமுடியில் சூடி, ஊர் மக்கள் இடும் பிச்சையை ஏற்றுக்கொண்டு, அதுவே தனக்குச் செல்வம், உணவு என்று பலவாறு கூறிக்கொண்டு கச்சணிந்த மென்மையான தனங்களை உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்ட சிவபிரான் எழுந்தருளிய திருவாழ்கொளிபுத்தூர் சென்று, கார்காலத்தே மலரும் சிறந்த கொன்றை மலர்களைத் தூவிக் கறைமிடற்றானாகிய அப் பெருமான் திருவடிகளைக் காண்போம்.

கு-ரை : கார்காலத்துப் பூவைத் தூவித் திருவடியைத் தரிசிப்போம் என்கின்றது. நமக்கு உணவு ஊர்ப்பிச்சைதான் என்று சொல்லிக்கொண்டு ஒரு பெண்ணை ஒருபாகமாகக் கொண்டிருக்கிறா னென நயச்சுவை காண்க. வார் - கச்சு. கார் இடுமாமலர் - கார் காலத்துப் பூவாகிய கொன்றை.

Koviloor Digital Library

430. கனமலர்க்கொன்றை யலங்கலிலங்கக்
காதிலொர் வெண்குழையோடு
புனமலர்மாலை புனைந்தூர்
புகுதியென்றே பலகூறி
வனமுலைமாமலை மங்கையொர்பாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்
இனமல ரேய்ந்தனதூவி
யெம்பெருமானடி சேர்வோம். 5

431. அளைவளர்நாக மசைத்தனலாடி
யலர்மிசை யந்தணனுச்சிக்
களைதலை யிற்பலிகொள்ளுங்
கருத்தனே கள்வனேயென்னா

5. பொ-ரை : கார்காலத்து மலராகிய கொன்றை மலர்மாலை தன் திருமேனியில் விளங்க, ஒரு காதில் வெண்குழையணிந்து, முல்லை நிலத்து மலர்களால் தொடுக்கப்பெற்ற மாலைகளைச் சூடிப் பல ஊர்களுக்கும் சென்று பற்பல கூறிப் பலியேற்று அழகிய தனங்களை யுடைய மலைமகளாகிய பார்வதியை ஒருபாகமாகக் கொண்ட எம்பிரான் எழுந்தருளிய திருவாழ்கொளிபுத்தூர் சென்று நமக்குக் கிட்டிய இனமான மலர்களைத் தூவி அவன் அடிகளைச் சேர்வோம்.

கு-ரை : இதுவும் அது. கனமலர் - பொன்போலுமலர். அலங்கல் - மாலை. புனமலர் - முல்லைநிலத்துப் பூக்கள். புகுதி - புகுவாய். ஏய்ந்தன - அருச்சிக்கத்தகுந்தன.

6. பொ-ரை : புற்றின்கண் வாழும்பாம்பினை இடையில் கட்டி, சுடுகாட்டில் ஆடி, தாமரை மலர் மேல் உறையும் பிரமனின் உச்சித் தலையைக் கொய்து, அத்தலையோட்டில் பலி கொள்ளும் தலைவனே, நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் கள்வனே, என்று, வளையல் ஒலிக்கும் முன் கையையுடைய பார்வதி தேவியை ஒருபாகமாகக் கொண்ட சிவபெருமான் உறையும் திருவாழ்கொளிபுத்தூர் சென்று, மொட்டவிழ்ந்த நறுமலர்களைத்தூவி அப்பெருமானின் தாளிணை களைச் சார்வோம்.

கு-ரை : கருத்தனே! கள்வனே! என்று மலர்தூவித் தாழ்ந்து

Koviloor Digital Library

வளையொலிமுன்கை மடந்தையொர்பாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்த்
தளையவிழ் மாமலர்தூவித்
தலைவனதாளிணை சார்வோம். 6

432. அடர்செவிவேழத்தி னீருரிபோர்த்து
வழிதலையங்கையி லேந்தி
உடலிடுபிச்சையோ டைய
முண்டியென்று பலகூறி
மடனெடுமாமலர்க் கண்ணியொர்பாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்த்
தடமல ராயினதூவித்
தலைவனதாணிழல் சார்வோம். 7

சார்வோம் என்கின்றது. அளை - புற்று. அலர்மிசை அந்தணன் - பிரமன். உச்சி களை தலையில் - உச்சியிலிருந்து களையப்பட்ட தலையில். தளை - முறுக்கு.

7. பொ-ரை : பரந்த காதுகளையுடைய யானையைக் கொன்று, அதன் உதிரப் பசுமை கெடாத தோலை உரித்துப் போர்த்து, கிள்ளிய பிரமன் தலையோட்டைக் கையில் ஏந்தி, தாருகாவன முனிவர் மகளிர் தம் கைகளால் இட்ட பிச்சையோடு ஐயம், உண்டி, என்று பலகூறப் பலியேற்ற மடப்பம் வாய்ந்த நீண்ட நீல மலர் போன்ற கண்களை யுடைய உமையொரு பாகனாக உள்ள திருவாழ்கொளிபுத்தூர் இறைவனை விரிந்த மலர்கள் பலவற்றால் அருச்சித்து அப்பெருமான் தாள்நிழலைச் சார்வோம்.

கு-ரை : ஐயமும் பிச்சையுமே உண்பவன் என்றுகூறி உமை யோடிருக்குந் தலைவன்தாளை மலர்தூவிச் சார்வோம் என்கின்றது. அடர்செவி - பரந்த காது. அழி தலை - இறந்தார் தலை; என்றது பிரம கபாலம். பிச்சை - இரவலனாகச்சென்று ஏற்பது. ஐயம் - இடுவானாக அழைத்திடுவது. இவ்வேற்றுமை தோன்றவே ஸ்ரீ ஆண்டாள் திருப்பாவையில், ''ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி'' என்றார். ஆத்திசூடியில் ''ஐயம் இட்டுண்'' என்று இடுவார் மேலேற்றிச்சொன்னதும் இக்கருத்து நோக்கி, ''பிச்சைபுகினும் கற்கை நன்றே'' என்பது இதனை வலியுறுத்தல் காண்க. உடலிடு பிச்சை - தன்வசமிழந்து தாருகாவனத்து மாதர் உடலாலிட்ட (பரவசமாகிய)

Koviloor Digital Library

433. உயர்வரையொல்க வெடுத்தவரக்க
னொளிர்கடகக்கை யடர்த்து
அயலிடுபிச்சையோ டைய
மார்தலையென்றடி போற்றி
வயல்விரிநீல நெடுங்கணிபாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்ச்
சயவிரி மாமலர்தூவித்
தாழ்சடையானடி சார்வோம். 8

434. கரியவனான்முகன் கைதொழுதேத்தக்
காணலுஞ்சாரலு மாகா
எரியுருவாகியூ ரைய
மிடுபலியுண்ணியென் றேத்தி

பிச்சை. மாறுபட்ட என்றுமாம். உடனிடு என்றொரு பாடமும் உண்டு. அங்ஙனமாயின் உடனேயிட்ட பிச்சை என்பதாம். பிச்சையிடுவார் இரவலரைக் காக்க வைத்தலாகாது என்பது மரபு. போர்த்து, ஏந்தி, உண்டி என்று கூறி ஆயவன் புத்தூர்த்தலைவன் தாணிழல் தூவிச் சார்வோம் என வினை முடிவு செய்க.

8. பொ-ரை : உயர்ந்த கயிலைமலையை அசையுமாறு பெயர்த்த இராவணனது ஒளி பொருந்திய கடகத்தோடு கூடிய தோள் வலிமையை அடர்த்தவனே என்றும், ஊர் மக்கள் இடும் பிச்சை, ஐயம் ஆகியவற்றை உண்ணும் தலைவனே என்றும், வயலின்கண் தோன்றி மலர்ந்த நீலமலர் போன்ற நீண்ட கண்களையுடைய உமையம்மை பாகனே என்றும் திருவாழ்கொளிபுத்தூர் இறைவனே, என்றும் வெற்றியோடு மலர்ந்த சிறந்த மலர்களைத் தூவி அத்தாழ் சடையான் அடிகளைச் சார்வோம்.

கு-ரை : இதுவுமது. ஒல்க - அசைய. அடர்த்து - நெருக்கி. ஆர்தல் ஐ என்று - உண்டலை உடைய தலைவன். என்று சயவிரி - வெற்றியோடு விரிந்த. அடர்த்து, ஆர்தலையுடையவன் என்று, பாகம் ஆயவன் தாழ்சடையான் அடிமலர்தூவிப் போற்றிச் சார்வோம் எனப்பொருள் முடிக்க.சயவிரிமலர் - வாகை மலர்.

9. பொ-ரை : திருமாலும் நான்முகனும் கைகளால் தொழுதேத்திக் காணவும் சாரவும் இயலாத எரி உரு ஆகியவனே என்றும், பல

Koviloor Digital Library

வரியரவல்குன் மடந்தையொர்பாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்
விரிமல ராயினதூவி
விகிர்தனசேவடி சேர்வோம். 9

435. குண்டமணர்துவர்க் கூறைகண்மெய்யிற்
கொள்கையினார் புறங்கூற
வெண்டலையிற்பலி கொண்டல்
விரும்பினையென்று விளம்பி
வண்டமர்பூங்குழன் மங்கையொர்பாக
மாயவன்வாழ்கொளி புத்தூர்த்
தொண்டர்கண் மாமலர்தூவத்
தோன்றிநின்றானடி சேர்வோம். 10

ஊர்களிலும் திரிந்து ஐயம், பிச்சை ஆகியவற்றை உண்பவனே என்றும் போற்றிப் பொறிகளோடு கூடிய பாம்பின் படம் போன்ற அல்குலை உடைய உமையம்மையை ஒரு பாகமாக உடையவனாகிய வாழ் கொளிபுத்தூர் இறைவனை விரிந்த மலர்களைத் தூவி வழிபட்டு விகிர்தனாகிய அவன் சேவடிகளைச் சேர்வோம்.

கு-ரை : மால் அயன் இருவர்க்கும் அறியலாகாவிகிர்தன் அடி சேர்வோம் என்கின்றது. கரியவன் - திருமால்; கரியவன் சாரலும், நான்முகன் காணலுமாகா எனக் கூட்டுக. எரியுரு - அக்னிமலையின் வடிவு. வரி யரவு - பொறிகளோடு கூடிய பாம்பின் படம். விகிர்தன - சதுரப்பாடுடையவனது.

10. பொ-ரை : கொழுத்த அமணர்களும், துவராடைகள் போர்த்த புத்தர்களும், புறம் பேசுமாறு வெண்மையான தலையோட்டின்கண் பலியேற்றலை விரும்பியவனே என்று புகழ்ந்து போற்றி, வண்டுகள் மொய்க்கும் அழகிய கூந்தலையுடைய உமையம்மையை ஒரு பாகமாக உடையவன் எழுந்தருளிய வாழ்கொளிபுத்தூர் சென்று அடியவர்கள் சிறந்த மலர்களைத் தூவி வழிபட அவர்கட்குக் காட்சி அளிப்பவ னாகிய சிவனடிகளைச் சேர்வோம்.

கு-ரை : அமணர் புறங்கூற, பிச்சையேற்பவன் என்றுகூறி மலர்தூவ நின்றான் அடி சேர்வோம் என்கின்றது. புறச்சமயத்தார்

Koviloor Digital Library

436. கல்லுயர்மாக்கட னின்றுமுழங்குங்
கரைபொரு காழியமூதூர்
நல்லுயர் நான்மறை நாவின்
நற்றமிழ் ஞானசம்பந்தன்
வல்லுயர்சூலமும் வெண்மழுவாளும்
வல்லவன்வாழ்கொளி புத்தூர்ச்
சொல்லியபாடல்கள் வல்லார்
துயர்கெடுதல்லெளி தாமே. 11

திருச்சிற்றம்பலம்

பொருந்தாதன கூறவும், நம்போல்வார்க்கு வெளிப்பட்டு அருள் செய்யும் அண்ணலாதலின் அடிசேர்வோம் என்றார். துவர்க்கூறை - மருதந் துவர் தோய்த்த ஆடை.

11. பொ-ரை : மலைபோல உயர்ந்து வரும் அலைகளை உடைய பெரிய கடல், பெரிய கரையோடு மோதி முழங்கும் காழிப்பழம்பதியில் தோன்றிய, உயர்ந்த நான்மறைகள் ஓதும் நாவினை உடைய நற்றமிழ் ஞானசம்பந்தன், வலிதாக உயர்ந்த சூலம், வெண்மையான மழு, வாள் ஆகியவற்றைப் பயன்படுத்துவதில் வல்லவனாகிய சிவபிரான் விளங்கும் வாழ்கொளிபுத்தூரைப் போற்றிச் சொல்லிய பாடல்களை ஓத வல்லவர் துயர் கெடுதல் எளிதாம்.

கு-ரை : பாடல்வல்லார் துயர்கெடுதல் எளிதாம் என்கின்றது. கல்லுயர் மாக்கடல் - மலைபோலத் திரையுயர்ந்துவரும் கரிய கடல். வல்லுயர் சூலம் - வலிய உயர்ந்த சூலம். துயர்கெடுதல் எளிதாம் என்றது வாதநோய்க்குச் சரபசெந்தூரம் போலப் பிறவித்துயருக்குச் சிறந்த மருந்தாதலின் எளிதாம் என்றவாறு.

திருப்பெருந்துறைப் புராணம்

பாலளவின்னா ளுண்டரன் றொறுவியர்ப பார்த்துவந்த
மாலளவின்னாண்கொள்ள வண்பாலோர் சிறுபோழ்துண்டான்
மேலள வுலகின்றாளை விமலனைக் கண்டுகாட்டி
நூலள ஒருநூல்சொற்ற நோன்மையால் தொழுதுவாழ்வாம்

- மீனாட்சிசுந்தரம்பிள்ளை.

Koviloor Digital Library

41. திருப்பாம்புரம்

பதிக வரலாறு:

ஆக்கூர் தான்தோன்றிமாடத்து இறைவனை வணங்கிப் பதிகம்பாடிப் போற்றி, வழியிலுள்ள பிறதலங்களையும் வணங்கிக் கொண்டு திருமீயச்சூரை அடைந்த பிள்ளையார், அங்கும் அவ்வாறு பணிந்தெழுந்து, திருப்பாம்புரம் சென்று சேர்ந்தார்கள். பாம்புரநாதரைப் பதிக இன்னிசையால் பாடத் திருவுளம்பற்றி, 'சீரணி திகழ்' என்னும் இப் பதிகத்தை யருளிச் செய்தார்கள்.

பண்: தக்கராகம்

பதிக எண்: 41

திருச்சிற்றம்பலம்

437. சீரணிதிகழ்திரு மார்பில்வெண்ணூலர்
திரிபுரமெரிசெய்த செல்வர்
வாரணிவனமுலை மங்கையோர்பங்கர்
மான்மறியேந்திய மைந்தர்
காரணிமணிதிகழ் மிடறுடையண்ணல்
கண்ணுதல் விண்ணவரேத்தும்
பாரணிதிகழ்தரு நான்மறையாளர்
பாம்புர நன்னகராரே. 1

1. பொ-ரை : விண்ணவர் போற்றும் திருப்பாம்புர நன்னகர் இறைவர் சிறந்த அணிகலன்கள் விளங்கும் அழகிய மார்பில் முப்புரி நூல் அணிந்தவர். திரிபுரங்களை எரித்த வீரச் செல்வர். கச்சணிந்த அழகிய தனங்களையுடைய உமையம்மையை ஒரு பாகமாகப் பொருந்திய நீலமணிபோலும் திகழ்கின்ற கண்டத்தையுடைய தலைவர். உலகில் அழகிய புகழோடு விளங்கும் மறைகளை அருளியவர். நெற்றிக்கண்ணர்.

கு-ரை : பாம்புர நன்னகரார் இயல்புகள் இவை என்கின்றது. சீர் அணி திகழ் - புகழ் அழகு இவைகள் விளங்கும் செல்வர் என்றது தம்கையிலிருந்து ஒன்றையும் ஏவாதே, இருந்தநிலையில் இருந்தே

Koviloor Digital Library

438. கொக்கிறகோடு கூவிளமத்தங்
கொன்றையொ டெருக்கணிசடையர்
அக்கினொடாமை பூண்டழகாக
அனலதுவாடுமெம் மடிகள்
மிக்கநல்வேத வேள்வியுளெங்கும்
விண்ணவர்விரைமலர் தூவப்
பக்கம்பல்பூதம் பாடிடவருவார்
பாம்புர நன்னகராரே. 2

439. துன்னலினாடை யுடுத்ததன்மேலோர்
சூறைநல்லரவது சுற்றிப்
பின்னுவார்சடைகள் தாழவிட்டாடிப்
பித்தராய்த்திரியுமெம் பெருமான்

விளைக்கப்பெற்ற வீரச்செல்வத்தையுடையவர். வார் - கச்சு. மான்மறி-மான்குட்டி. கார் அணி மணி திகழ் மிடறு-கரிய அழகிய நீலமணி போலும் மிடறு.

2. பொ-ரை : திருப்பாம்புர நன்னகர் இறைவர், கொக்கிறகு என்னும் மலர், வில்வம், ஊமத்தம்பூ, கொன்றைமலர், எருக்க மலர் ஆகியவற்றை அணிந்த சடைமுடியினர். சங்கு மணிகளோடு ஆமை ஓட்டைப் பூண்டு அழகாக அனலின்கண் ஆடும் எம் தலைவர். மிக்க நல்ல வேதவேள்விகளில் விண்ணோர்கள் மணம் கமழும் மலர்கள் தூவிப் போற்ற அருகில் பூதங்கள் பல பாடவும் வருபவர்.

கு-ரை : இதுஅவருடைய அணிகளை அறிவிக்கின்றது. கொக்கிறகு - ஒருவகைப்பூ; கொக்கின் இறகுமாம், கூவிளம் - வில்வம். மத்தம் - ஊமத்தம்பூ. அக்கு - சங்குமணி. வேதவேள்வி - வைதிக யாகம். விரை - மணம்.

3. பொ-ரை : திருப்பாம்புர நன்னகர் இறைவர் தைத்த கோவண ஆடையை அணிந்துஅதன் மேல் காற்றை உட்கொள்ளும் நல்ல பாம்பு ஒன்றைச் சுற்றிக் கொண்டு பின்னிய நீண்ட சடைகளைத் தாழ விட்டுக் கொண்டு, பித்தராய் ஆடித் திரியும் எமது பெருமான். அவர் மணம் நிறைந்த சிறந்த மலர்களைத் தூவி நாளும் நாம் வழிபட மலையரசன்

Koviloor Digital Library

மன்னுமாமலர்கள் தூவிடநாளும்
மாமலையாட்டியுந் தாமும்
பன்னுநான்மறைகள் பாடிடவருவார்
பாம்புர நன்னகராரே. 3

440. துஞ்சுநாள்துறந்து தோற்றமுமில்லாச்
சுடர்விடுசோதியெம் பெருமான்
நஞ்சுசேர்கண்ட முடையவென்னாதர்
நள்ளிருள்நடஞ்செயுந் நம்பர்
மஞ்சுதோய்சோலை மாமயிலாட
மாடமாளிகைதன்மே லேறிப்
பஞ்சுசேர் மெல்லடிப் பாவையர்பயிலும்
பாம்புர நன்னகராரே. 4

மகளாகிய பார்வதியும், தாமுமாய்ப் புகழ்ந்து போற்றும் நான் மறைகளை அடியவர் பாடிக்கொண்டு வர, நம்முன் காட்சி தருபவர்.

கு-ரை : கோவணமுடுத்துப் பாம்பைச் சுற்றிச் சடைதாழ நின்றாடும் பித்தர்; அன்பர்கள் மலர்தூவி வழிபட உமையும் தானும் வருவார்; அவரே பாம்புரநகரார் என்கின்றது. துன்னலின் ஆடை - கோவண ஆடை. சூறை நல் அரவு - காற்றையுட்கொள்ளும் பாம்பு.

4. பொ-ரை : மேகங்கள் தோயும் சோலைகளில் சிறந்த மயில்கள் ஆடவும், மாடமாளிகைகளில் ஏறி, செம்பஞ்சு தோய்த்த சிவந்த மெல்லிய அடிகளை உடைய பெண்கள் பாடவும், ஆகச் சிறந்து விளங்கும் திருப்பாம்புர நன்னகர் இறைவர், இறக்கும் நாள் இல்லாத வராய், தோற்றமும் இல்லாதவராய், ஒளி பெற்று விளங்கும் சோதி வடிவினராய்த் திகழும் எம் பெருமான், விடம் பொருந்திய கண்டத்தை உடைய எம் தலைவர், நள்ளிருளில் நடனம் புரியும் கடவுளாவார்.

கு-ரை : இறப்பு பிறப்பு இல்லாத சோதியாய், சர்வசங்கார காலத்து நள்ளிருளில் நட்டமாடும் நம்பர் இவர் என்கின்றது.

துஞ்சுநாள் துறந்து - இறக்கும்நாள் இன்றி. நள் இருள் - நடுஇரவு. நம்பர் - நம்பப்படத்தக்கவர். மஞ்சு - மேகம். பஞ்சுசேர் - செம்பஞ்சுக் குழம்பு பூசப்பெற்ற.

Koviloor Digital Library

441. நதியதனயலே நகுதலைமாலை
நாண்மதிசடைமிசை யணிந்து
கதியதுவாகக் காளிமுன்காணக்
கானிடைநடஞ்செய்த கருத்தர்
விதியதுவழுவா வேதியர்வேள்வி
செய்தவரோத்தொலி யோவாப்
பதியதுவாகப் பாவையுந்தாமும்
பாம்புர நன்னகராரே. 5

442. ஓதிநன்குணர்வார்க் குணர்வுடையொருவ
ரொளிதிகழுருவஞ்சே ரொருவர்
மாதினையிடமா வைத்தவெம்வள்ளல்
மான்மறியேந்திய மைந்தர்
ஆதிநீயருளென் றமரர்கள்பணிய
அலைகடல்கடையவன் றெழுந்த
பாதிவெண்பிறைசடை வைத்தவெம்பரமர்
பாம்புர நன்னகராரே. 6

5. பொ-ரை : விதிமுறை வழுவா வேதியர்கள், வேள்விகள் பல செய்தலால், எழும் வேத ஒலி நீங்காதபதிஅது என உமையம்மையும் தாமுமாய்த் திருப்பாம்புர நன்னகரில் விளங்கும் இறைவர், சடைமுடி மீது கங்கையின் அயலே சிரிக்கும் தலைமாலை, பிறை மதி ஆகிய வற்றை அணிந்து நடனத்திற்குரிய சதி அதுவே என்னும்படி காளி முன்னே இருந்து காண இடுகாட்டுள் நடனம் செய்த தலைவர் ஆவார்.

கு-ரை : தலையில் கங்கை, கபாலம், பிறை முதலியன அணிந்து காளியோடு நடனமாடிய நாதர் இவர் என்கின்றது. நதி - கங்கை. நகுதலை - உடலைச் சதம் என்றிருக்கின்ற பிறரைப் பார்த்துச் சிரிக்கின்ற தலை. கதியதுவாக - நடனகதி அதுவாக. கான் - இடுகாடு. ஓத்துஒலி - வேத ஒலி. ஓவா - நீங்காத.

6. பொ-ரை : திருப்பாம்புர நன்னகர் இறைவர், கல்வி கற்றுத் தெளிந்த அறிவுடையோரால் அறியப்படும் ஒருவராவார். ஒளியாக விளங்கும் சோதி உருவினராவார். உமையம்மையை இடப் பாகமாகக் கொண்ட எம் வள்ளலாவார். இளமான் மறியைக் கையில் ஏந்திய மைந்தராவார். திருப்பாற்கடலைக் கடைந்த பொழுது எழுந்த ஆலகால

Koviloor Digital Library

443. மாலினுக்கன்று சக்கரமீந்து
மலரவற்கொருமுக மொழித்து
ஆலின்கீழறமோர் நால்வருக்கருளி
யனலதுவாடுமெம் மடிகள்
காலனைக்காய்ந்து தங்கழலடியாற்
காமனைப்பொடிபட நோக்கிப்
பாலனுக்கருள்கள் செய்தவெம்மடிகள்
பாம்புர நன்னகராரே. 7

விடத்திற்கு அஞ்சிய தேவர்கள் ஆதியாக விளங்கும் தலைவனே, நீ எம்மைக் காத்தருள் என வேண்ட, நஞ்சினை உண்டும், கடலினின் றெழுந்த பிறைமதியைச் சடையிலே வைத்தும் அருள்புரிந்த எம் மேலான தலைவராவார்.

கு-ரை : ஓதியுணர்வார்க்கு ஞானமாக இருக்கும் நாதனாகிய பிறைசூடிய பெருமான் இவர் என்கின்றது. உணர்தல் - கல்வியைத் துணையாகக்கொண்டு கற்றுத் தெளிந்து அறிதல். உணர்வுடை ஒருவன் - உணரத்தக்க ஒப்பற்றவன். ஒளிதிகழ் உருவம் - ஒளியாக விளங்கும் சோதியுருவம். வள்ளல் என்றது சத்தியொடு கூடிய வழியே சிவம் கருணையை மேவி வள்ளன்மை பூணுதலின். ஆதி - முதலுக் கெல்லாம் முதற்பொருளாய் இருப்பவன். கடலில் எழுந்த பொருள்கள் ஆகிய இலக்குமி, விஷம், பிறை, உச்சை சிரவம், கௌத்துவம் முதலிய பொருள்களில் ஒன்றாகிய பிறை.

7. பொ-ரை : திருப்பாம்புர நன்னகர் இறைவர் முன்பு திரு மாலுக்குச் சக்கராயுதம் அளித்தவர். தாமரை மலர் மேல் உறையும் பிரமனது ஐந்தலைகளில் ஒன்றைக் கொய்தவர். சனகாதி நால்வருக்குக் கல்லாலின் கீழிருந்து அறம் அருளியவர். தீயில் நடனமாடுபவர். தமது கழலணிந்த திருவடியால் காலனைக் காய்ந்தவர். காமனைப் பொடிபட நோக்கியவர். உபமன்யு முனிவருக்குப் பாற்கடல் அளித்து அருள்கள் செய்த தலைவர் ஆவார்.

கு-ரை : இது வீரச்செயலை விளக்குகின்றது. சக்கரமீந்தது திருவீழிமிழலையில் நடந்த செய்தி; ஒருமுகம் ஒழித்தது திருக்கண்டி யூர்ச்செய்தி; காலனைக்காய்ந்தது கடவூர்ச்செய்தி; காமனை எரித்தது குறுக்கைச்செய்தி. நால்வர் - சனகாதியர். அறம் - சிவானுபவத் திறம். பாலன் - உபமன்யு.

Koviloor Digital Library

444. விடைத்தவல்லரக்கன் வெற்பினையெடுக்க
மெல்லியதிருவிர லூன்றி
அடர்த்த்வன்றனக்கன் றருள்செய்தவடிக
ளனலதுவாடுமெம் மண்ணல்
மடக்கொடியவர்கள் வருபுனலாட
வந்திழியரிசிலின் கரைமேல்
படப்பையிற்கொணர்ந்து பருமணிசிதறும்
பாம்புர நன்னகராரே. 8

445. கடிபடுகமலத் தயனொடுமாலுங்
காதலோடடிமுடி தேடச்
செடிபடுவினைக டீர்த்தருள்செய்யுந்
தீவணரெம்முடைச் செல்வர்
முடியுடையமரர் முனிகணத்தவர்கள்
முறைமுறையடிபணிந் தேத்தப்
படியதுவாகப் பாவையுந்தாமும்
பாம்புர நன்னகராரே. 9

8. பொ-ரை : இளங்கொடி போன்ற பெண்கள் நீராட வந்து இழியும் அரிசிலாறு தோட்டங்களில் சிதறிக் கிடக்கும் பெரிய மணிகளை அடித்து வந்து கரைமேல் சேர்க்கும் திருப்பாம்புர நன்னகர் இறைவர், செருக்குற்ற வலிய இராவணன் கயிலை மலையைப் பெயர்த்து எடுத்த போது மெல்லிய திருவடி விரல் ஒன்றை ஊன்றி அவனை அடர்த்துப் பின் அவன் பிழையுணர்ந்து வருந்திப் போற்ற அருள் பல செய்த தலைவர் ஆவார்.

கு-ரை : கைலையையசைத்த இராவணனை வலியடக்கிய அடிகள், அரிசிலாற்றங்கரையில் பருமணி சிதறும் பாம்புர நகரார் என்கின்றது. விடைத்த - செருக்குற்ற. அடர்த்து - நெருக்கி. அடர்த்து அருள்செய்த என்றது மறக்கருணையும் அறக்கருணையும் காட்டி ஆட்கொண்டது. அனல் - ஊழித்தீ. அரிசிலின் கரைமேல் (புனல்) மணிசிதறும் நகர் எனப் பொருள் முடிக்க. படப்பை - தோட்டம்.

9. பொ-ரை : முடி சூடிய அமரர்களும் முனிகணத்தவர்களும் முறையாகத் தம் திருவடிகளைப் பணிந்து ஏத்துதற்கு உரிய தகுதி

Koviloor Digital Library

446. குண்டர்சாக்கியருங் குணமிலாதாருங்
குற்றுவிட்டுடுக்கையர் தாமுங்
கண்டவாறுரைத்துக் கானிமிர்த்துண்ணுங்
கையர்தாமுள்ளவா றறியார்
வண்டுசேர்குழலி மலைமகணடுங்க
வாரணமுரிசெய்து போர்த்தார்
பண்டுநாஞ்செய்த பாவங்கள்தீர்ப்பார்
பாம்புர நன்னகராரே. 10

வாய்ந்த இடமாகக் கொண்டு உமையம்மையும் தாமுமாய்த் திருப்பாம்புர நன்னகரில் விளங்கும் இறைவர் மணம் பொருந்திய தாமரை மலர் மேல் விளங்கும் பிரமனும் திருமாலும் அன்போடு அடிமுடி தேடத் தீவண்ணராய்க் கிளைத்த வினைகள் பலவற்றையும் தீர்த்து அருள் செய்பவராய் விளங்கும் எம் செல்வர் ஆவார்.

கு-ரை : அடிமுடிதேடிய அயனுக்கும் மாலுக்கும் அருள்செய்த செல்வர் இவர் என்கின்றது.

கடி - மணம். செடிபடுவினைகள் - தூறாக மண்டிக்கிடக்கும் வினைகள். படி - தகுதி.

10. பொ-ரை : திருப்பாம்புர நன்னகர் இறைவர் குண்டர்களாகிய சமணர்களாலும் புத்தர்களாலும் மிகச் சிறிய ஆடையை அணிந்து, கண்டபடி பேசிக் கொண்டு நின்றுண்ணும் சமணத் துறவியராலும் உள்ளவாறு அறியப் பெறாதவர். வண்டுகள் மொய்க்கும் கூந்தலை உடைய மலைமகளாகிய பார்வதி தேவி நடுங்க யானையை உரித்துப் போர்த்தவர். முற்பிறவிகளில் நாம் செய்த பாவங்களைத் தீர்ப்பவர்.

கு-ரை : புறச்சமயிகட்கு அறியப்பெறாதவர் என்கின்றது. குண்டர் - பருஉடல் படைத்த சமணர்கள். சாக்கியர் - புத்தர். குற்றுவிட்டு உடுக்கையர் - மிகச்சிறிய ஆடையை உடையவர்கள். கானிமிர்த்து உண்ணும் கையர் - நின்றபடியே உண்ணும் கீழ்மக்கள். இவர்களை 'நின்றுண் சமணர்' என்பர்.

வண்டு சேர்குழலி மலைமகள் நடுங்க என்றது அம்மையின் மென்மை அறிவித்தது. வாரணம் - யானை. பண்டு - முன்பு.

Koviloor Digital Library

447. பார்மலிந்தோங்கிப் பருமதில்சூழ்ந்த
பாம்புரநன்னக ராரைக்
கார்மலிந்தழகார் கழனிசூழ்மாடக்
கழுமலமுதுபதிக் கவுணி
நார்மலிந்தோங்கு நான்மறைஞான
சம்பந்தன்செந்தமிழ் வல்லார்
சீர்மலிந்தழகார் செல்வமதோங்கிச்
சிவனடி நண்ணுவர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : உலகில் புகழ் நிறைந்து ஓங்கியதும்பெரிய மதில்களால் சூழப் பெற்றதுமான திருப்பாம்புர நன்னகர் இறைவனை, மழை வளத்தால் சிறந்து அழகியதாய் விளங்கும் வயல்கள் சூழப் பெற்றதும், மாட வீடுகளை உடையதுமான, கழுமலம் என்னும் பழம் பதியில் கவுணியர் கோத்திரத்தில், அன்பிற் சிறந்தவனாய்ப் புகழால் ஓங்கி விளங்கும் நான்மறைவல்ல ஞானசம்பந்தன் போற்றிப் பாடிய இச்செந்தமிழ்ப் பதிகத்தை ஓதவல்லவர், புகழும் அழகும் மிகுந்தவ ராய்ச் செல்வத்தால் சிறந்து வாழ்ந்து முடிவில் சிவனடியை அடைவர்.

கு-ரை : பாம்புரப்பதிகம் வல்லவர் செல்வத்திற் சிறந்து சிவனடி சேர்வர் என்கின்றது. கழனி - வயல். கவுணி - கவுண்டிந்ய கோத்திரத்தவன். நார் - அன்பு. சீர் - புகழ்.

திருநாகைக்காரோணப் புராணம்

இருமுது மாதர் தங்கூ னிருகரங் கொடுமுயன்று
கருதுறத் தீர்த்த தாச ரதியுங்கண் ணனுநாண் கொள்ளக்
குருமதிக் குலத்து வேந்தன் கூனொரு சொல்லாற் றீர்த்த
பொருவருங் காழி ஞான பூரணற் கடிமை செய்வாம்.

- மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

Koviloor Digital Library

42. திருப்பேணுபெருந்துறை

பதிக வரலாறு:

திருஞானசம்பந்தப்பிள்ளையார், திருவீழிமிழலையில் எழுந்தருளியிருக்கின்ற காலத்து, பெருகுபுனல் சூழ்ந்த திருப் பேணு பெருந்துறையை வழிபடத் திருவுளங் கொண்டார்கள். அங்ஙனம் சென்று வழிபட்டகாலத்துப் 'பைம்மா நாகம்' என்னும் இத்திருப்பதிகத்தை யருளிச்செய்தார்கள்.

பண்: தக்கராகம்

பதிக எண்: 42

திருச்சிற்றம்பலம்

448. பைம்மா நாகம் பன்மலர் கொன்றை
பன்றிவெண் கொம்பொன்று பூண்டு
செம்மாந் தையம் பெய்கென்று சொல்லிச்
செய்தொழில் பேணியோர் செல்வர்
அம்மா னோக்கிய வந்தளிர் மேனி
யரிவை யோர் பாக மமர்ந்த
பெம்மா னல்கிய தொல்புக ழாளர்
பேணுபெ ருந்துறை யாரே. 1

1. பொ-ரை : திருப்பேணு பெருந்துறை இறைவர், படம் பொருந் திய பெரிய நாகம், பல மலர்களோடு இணைந்த கொன்றை மலர், வெண்மையான பன்றிக் கொம்பு ஆகியவற்றை அணிந்து செம்மாப்பு உடையவராய்ப் பலர் இல்லங்களுக்கும் சென்று 'ஐயம் இடுக' என்று கேட்டு, ஐயம் இட்ட கடமையாளர்களுக்குச் செல்வமாய் இருப்பவர்; அழகிய மான்விழி போன்ற விழிகளையும், தளிர் போன்ற மேனியை யும் உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்ட தலைவர்; நிலைத்த பழமையான புகழையுடையவர்.

கு-ரை : இது உடம்பெடுத்த பிறவியின் பயனாக, செய்ய வேண்டிய தொழில்களைத் தவறாதுசெய்யும் அடியார்களுக்கு, ஓர் செல்வம் போன்றவர் பேணுபெருந்துறையார் என்கின்றது. பை - படம். பல்மலர் - தும்பை மத்தம் முதலாயின. செம்மாந்து - இறுமாந்து. ஐயம்பெய்க என்று சொல்லி - பிச்சையிடுக என்று கூறி. பிச்சையிடுக

Koviloor Digital Library

449. மூவரு மாகி யிருவரு மாகி
முதல்வனு மாய்நின்ற மூர்த்தி
பாவங்கள் தீர்தர நல்வினை நல்கிப்
பல்கண நின்று பணியச்
சாவம தாகிய மால்வரை கொண்டு
தண்மதிண் மூன்றுமெ ரித்த
தேவர்கள் தேவ ரெம்பெரு மானார்
தீதில்பெ ருந்துறை யாரே. 2

என்பார் இரங்கிய முகத்துடன் தாழ்ந்து சொல்ல வேண்டியிருக்க, இவர் இறுமாந்து சொல்கின்றார் என்றது, ஏலாமல் ஏற்கின்ற இறைமை தோன்ற. கடமை தவறாதவர்க்குச் செல்வத்துட் செல்வமாய் இருக் கின்றார் என்பார், தொழில் பேணியோர்க்குச் செல்வர் என்றார். தமது அருள் வழங்குந் தொழிலைப் பேணியோர் எனலுமாம். அ மான் நோக்கி - அழகிய மான் போன்ற கண்ணையுடையவள். அந்தளிர் மேனி - அழகிய தளிர் போன்ற மேனியை யுடையவள்.

2. பொ-ரை : குற்றமற்ற பேணு பெருந்துறையில் விளங்கும் எம் பெருமானார், அரி அயன் அரன் ஆகிய முத்தொழில் செய்யும் மூவரு மாய், ஒடுங்கிய உலகை மீளத் தோற்றும் சிவன், சக்தி ஆகிய இருவரு மாய், அனைவர்க்கும் தலைவருமாய் நின்ற மூர்த்தி ஆவார். நம் பாவங்கள் தீர நல்வினைகளை அளித்துப் பதினெண் கணங்களும் நின்று பணிய மேரு மலையை வில்லாகக் கொண்டு, மும்மதில்களை யும் எரித்தழித்த தேவதேவராவார்.

கு-ரை : மூவருமாய் இருவருமாய் முதல்வனுமாய் நின்று, பணிவார்கள் பாவங்கள் தீர நல்வினைகளை நல்கி நிற்கும் தேவதேவர் இவர் என்கின்றது. மூவருமாகி - அயன், மால், உருத்திரன் என முத்தொழிலைச் செய்யும் மூவரையும் அதிட்டித்து நின்று அவரவர் தொழிலைத் திறம்பட ஆற்றச்செய்தும், இருவருமாகி - தன்னிடத்து ஒடுங்கிய உலகமாதியவற்றைப் புனருற்பவம் செய்யுங்காலைச் சிவம் சத்தியென்னும் இருவரும் ஆகி. முதல்வனும் ஆகி - இவர்களின் வேறாய்நின்று இயக்கும் பரசிவமுமாகி, வினையோய்ந்து ஆன்மாக் கள் பெத்தநிலையில் நில்லா ஆகையால் தீவினைகள் நீங்கிநிற்கப் பரங்கருணைத் தடங்கடலாகிய பரமன் நல்வினைகளை அவைகள் ஆற்ற அருள்கின்றார் என்பது. சாவம் - வில், வரை - மேருமலை.

Koviloor Digital Library

450. செய்பூங் கொன்றை கூவிள மாலை
சென்னியுட் சேர்புனல் சேர்த்திக்
கொய்பூங் கோதை மாதுமை பாகங்
கூடியோர் பீடுடை வேடர்
கைபோ னான்ற கனிகுலை வாழை
காய்குலை யிற்கமு கீனப்
பெய்பூம் பாளை பாய்ந்திழி தேறல்
பில்குபெ ருந்துறை யாரே. 3

451. நிலனொடு வானும் நீரொடு தீயும்
வாயுவு மாகியோ ரைந்து
புலனொடு வென்று பொய்ம்மைகள் தீர்ந்த
புண்ணியர் வெண்பொடிப் பூசி

3. பொ-ரை : யானையின் கை போன்ற நீண்ட வாழைக் குலையில் பழுத்த பழங்களிலும், காய்த்த குலைகளிலும், கமுக மரங்களின் பூம்பாளைகளில் ஒழுகும் தேன் பாய்ந்து பெருகும் பெருந்துறை இறைவர், கொன்றைப்பூமாலை, கூவிளமாலை அணிந்த தலையில் கங்கையை ஏற்று, பூமாலை சூடிய உமையைத் தம் உடலின் ஒரு பாகமாக்கொண்டு அதனால் ஒப்பற்ற அம்மையப்பர் என்ற பெருமையுடைய உருவினராவர்.

கு-ரை : உமையொருபாகம் வைத்த வேடர் இவர் என்கிறது. செய்மாலை எனக்கூட்டிப் புனையப்பெற்ற மாலை என்க, சென்னி - தலை. கொய் பூங்கோதை - கொய்யப்பட்ட பூவால் இயன்ற மாலை. பீடு உடை வேடர் - பெருமைபெற்ற வேடத்தையுடையவர். கை - யானையின் துதிக்கை. வாழைக்குலைக்கு யானையின் கையை ஒப்பிடுதல் மரபு. தேறல் - தேன். வாழைக்குலையில் கமுகு ஈன என்றது இரண்டும் ஒத்த அளவில் வளர்ந்திருக்கின்றன என்று உணர்த்தியவாறு

4. பொ-ரை : நிலம், வானம், நீர், தீ, காற்று ஆகிய ஐம்பூதங்களின் வடிவாய், ஐந்து புலங்களை வென்றவராய், பொய்ம்மைகள் இல்லாத புண்ணியராய் வாழும் இறைவர், திருவெண்ணீறு அணிந்து நன்மையும் தின்மையும் சிவனாலன்றி வருவதில்லை என்ற நல்லுள்ளங் கொள்பவராய், மல மாசுக்கள் தீர்ந்தவராய் வாழும் அடியவர்கள் நிறைந்த பேணு பெருந்துறையார் ஆவர்.

Koviloor Digital Library

நலனொடு தீங்குந் தானல தின்றி
நன்கெழு சிந்தைய ராகி
மலனொடு மாசு மில்லவர் வாழும்
மல்குபெ ருந்துறை யாரே. 4

452. பணிவா யுள்ள நன்கெழு நாவின்
பத்தர்கள் பத்திமை செய்யத்
துணியார் தங்க ளுள்ளமி லாத
சுமடர்கள் சோதிப் பரியார்
அணியார் நீல மாகிய கண்டர்
அரிசிலு ரிஞ்சுக ரைமேல்
மணிவாய் நீலம் வாய்கமழ் தேறன்
மல்குபெ ருந்துறை யாரே. 5

கு-ரை : பூதங்கள் ஐந்தாய்ப் புலன்வென்ற புண்ணியர் இவர் என்கின்றது. பூதங்கள் ஐந்துமாகி, தன்மாத்திரைகளாகிய ஐம்புலன்களையும் வென்று, பொய்ம்மைநீங்கிய புண்ணியர் பெருந்துறையார் என முடிக்க. அன்றி, புண்ணியராகி பொடி பூசி, இறை சிந்தையராகி மாசில்லாதவர் வாழும் பெருந்துறை எனவும் முடிக்கலாம். இப்பொருளில் நிலனொடு வாயுவுமாகிய ஓர் ஐந்து புலன் - ஐம்பூதங்களும் அவற்றிக்குக் காரணமாகிய தன்மாத்திரைகள் ஐந்தும், பொய்ம்மைகள் தீர்ந்த - அழியுந்தன்மையவாகிய விஷயசுகங்களில் பற்றற்ற, நலனொடு தீங்கும் தானலது இன்றி - நன்மையும் தீமையும் இறைவனையன்றி வேறொன்று இன்று என எண்ணி, ''நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே'' என்ற நினைவு. நன்கெழு சிந்தையராகி - இறைவன் திருப்பாத கமலங்களை நன்றாக இறுகத் தழுவிய மனமுடையராகி, மலன் - ஆணவம். மாசு - மாயையும் கன்மமும்.

5. பொ-ரை : அரிசிலாற்றின் அலைகள் மோதும் கரையில் அமைந்ததும், நீல மணி போலும் நிறம் அமைந்த குவளை மலர்களின் வாயிலிருந்து வெளிப்படும் தேன் கமழ்ந்து நிறைவதுமாகிய பேணு பெருந்துறை இறைவர். பணிவுடைய துதிப்பாடல்கள் பாடும் நன்மை தழுவிய நாவினையுடைய பக்தர்கள் அன்போடு வழிபட எளியர். துணிவற்றவர்களாய்த் தங்கள் மனம் பொருந்தாத அறியாமை உடையவர்களாய் உள்ளவர்கள் பகுத்தறிவதற்கு அரியவர். அழகிய நீல நிறம் பொருந்திய கண்டத்தை உடையவர்.

Koviloor Digital Library

453. எண்ணார் தங்கள் மும்மதிள் வேவ
ஏவலங் காட்டிய வெந்தை
விண்ணோர் சாரத் தன்னருள் செய்த
வித்தகர் வேத முதல்வர்
பண்ணார் பாட லாட லறாத
பசுபதி யீசனோர் பாகம்
பெண்ணா ணாய வார்சடை யண்ணல்
பேணுபெ ருந்துறை யாரே. 6

454. விழையா ருள்ள நன்கெழு நாவில்
வினை கெடவேதமா றங்கம்
பிழையா வண்ணம் பண்ணிய வாற்றாற்
பெரியோ ரேத்தும் பெருமான்

கு-ரை : அன்பர்க்கணியராய், அல்லவர்க்குச் சேயராய் இருப்பவர் இவர் என்கின்றது. பணிவாய் உள்ள - துதிப்பாடல்களைப் பாடிப் பணியும். துணியார் - அன்பர்களைவிட்டு வேறுபடாதவர். துணிதல் - வேறாதல். சுமடர் - அறிவற்றவர்கள்: சோதிப்பு அரியார் - சோதித்தறிதற்கும் அரியவர். சோதித்தல் - அளவைகளால் சோதித்தல். அணி - அழகு. மணி - நீலமணி. நீலம் - நீலப்பூ; தேறல் - தேன்.

6. பொ-ரை : திருப்பேணுபெருந்துறை இறைவர் தம்மை மதியாதவரான, அசுரர்களின் முப்புரங்கள் எரிந்தழியுமாறு வில் வன்மை காட்டிய எந்தையாராவர். தேவர்கள் வழிபட அவர்கட்கு தமது அருளை நல்கிய வித்தகராவர். வேதங்களின் தலைவராவர். இசை நலம் கெழுமிய பாடல்களோடு, ஆடி மகிழும் பசுபதியாய ஈசனும் ஆவர். ஒரு பாகம் பெண்ணுமாய், ஒரு பாகம் ஆணுமாய் விளங்கும் நீண்ட சடைமுடியுடைய தலைவராவர்.

கு-ரை : முப்புரம் எரித்த வீரர்; தேவர்க்கருளிய தேவதேவர்; பெண்ணாணாய பரமர் இவர் என்கின்றது. எண்ணார் - பகைவர். ஏவலம் - அம்பின் வன்மை. வார் சடை - நீண்ட சடை.

7. பொ-ரை : தழைத்த மாமரத்திலிருந்து உதிர்ந்த பழங்களை உருட்டிவரும் தண்ணிய அரிசிலாற்றின் கரையருகே சூழ்ந்து விளங்கும் தளிர்கள் நிறைந்த சோலைகளில் மெல்லிய நடையையுடைய அன்னங்கள்

Koviloor Digital Library

தழையார் மாவின் றாழ்கனி யுந்தித்
தண்ணரி சில்புடை சூழ்ந்து
குழையார் சோலை மென்னடை யன்னங்
கூடுபெ ருந்துறையாரே. 7

455. பொன்னங் கானல் வெண்டிரை சூழ்ந்த
பொருகடல் வேலி யிலங்கை
மன்ன னொல்க மால்வரை யூன்றி
மாமுர ணாகமுந் தோளும்
முன்னவை வாட்டிப் பின்னருள் செய்த
மூவிலை வேலுடை மூர்த்தி
அன்னங் கன்னிப் பேடை யொடாடி
யணவுபெ ருந்துறை யாரே. 8

கூடி விளங்கும் திருப்பேணுபெருந்துறை இறைவர், விருப்பம் பொருந்திய உள்ளத்தோடு நன்மை அமைந்த நாவின்கண் தம் வினை கெட, நான்கு வேதங்களையும் ஆறு அங்கங்களையும் பிழையின்றி முன்னோர் ஓதிவரும் முறையில் பெரியோர் ஓதி ஏத்தும் பெருமானார் ஆவர்.

கு-ரை : கனிந்த உள்ளத்தடியார் வேதமோதி ஏத்தும் பெருமான் இவர் என்கின்றது.

விழை ஆர் உள்ளம் - விரும்புதலைப் பொருந்திய உள்ளத்தோடு. நாவில் வேதம் ஆறங்கம் பிழையாவண்ணம் வினை கெடப் பண்ணிய ஆற்றால் எனக் கூட்டுக. அரிசில் - அரிசிலாறு.

8. பொ-ரை : ஆண் அன்னம் கன்னிமையுடைய பெண் அன்னத்தோடு ஆடியும், கூடியும் மகிழும் பேணு பெருந்துறை இறைவர், அழகிய கடற்கரைச் சோலைகளும், வெண்மையான கடல் அலைகளும் சூழ்ந்துள்ளதும், நாற்புறங்களிலும் கடலையே வேலியாக உடையதுமான இலங்கை மாநகர் மன்னனாகிய இராவணன் தளர்ச்சி அடையுமாறு பெரிய கயிலை மலையைக் கால் விரலால் ஊன்றி, அவனுடைய சிறந்த வலிமையுடைய, மார்பும், தோள்களும் வலிமை குன்றுமாறு செய்து பின் அவனுக்கு அருள்கள் பல செய்த மூவிலை வேலையுடைய மூர்த்தியாவார்.

Koviloor Digital Library

456. புள்வாய் போழ்ந்து மாநிலங் கீண்ட
பொருகடல் வண்ணனும் பூவின்
உள்வா யல்லி மேலுறை வானு
முணர்வரி யானுமை கேள்வன்
முள்வாய் தாளின் தாமரை மொட்டின்
முகமலரக் கயல் பாயக்
கள்வாய் நீலங் கண்மல ரேய்க்குங்
காமர்பெ ருந்துறை யாரே. 9

கு-ரை : உயிர்களின் முனைப்படக்கி ஆட்கொண்டு அருள் வழங்கும் பெருமானிவர் என்கின்றது. பொன் - அழகு.

மன்னன் - இராவணன். இவன் தன் மார்பையும் தோளையுமே நம்பித் தருக்கியிருந்தானாதலின், அவற்றைப் பயனற்றனவாக, இறைவன் காட்டவே, தனது மாட்டாமையையும், தலைவனாற்றலையும் உணர்ந்தான்; சாமம்பாடினான்; இறைவன் அருளினார் என்பது. அணவு - கலக்கின்ற.

9. பொ-ரை : முட்களையுடைய தண்டின்மேல் தாமரை மொட்டு இனிய முகம்போல் மலர, அதன்கண் கயல்மீன் பாயத் தேனையுடைய நீல மலர் கண்மலரை ஒத்துள்ளதால், இயற்கை, மாதர்களின் மலர்ந்த முகங்களைப் போலத் தோற்றந்தரும் பேணுபெருந்துறையில் உள்ள இறைவர், கொக்கு வடிவங் கொண்ட பகாசுரனின் வாயைப் பிளந்தும், நிலவுலகைத் தோண்டியும் விளங்கும் கடல் வண்ணனாகிய திருமாலும், தாமரை மலரின் அக இதழ்கள் மேல் உறையும் நான் முகனும் உணர்ந்து அறிதற்கரியவர்; உமையம்மையின் கணவர்.

கு-ரை : பதவிகளால் மயங்கிய ஆன்மாக்களால் அறியொணாத பெருமான் இவர் என்கின்றது. புள் - கொக்கு. பகாசுரன் என்பவனைக் கிருஷ்ணாவதார காலத்தில் வாயைப்பிளந்து கொன்ற வரலாறு குறிக்கப்பெறுகின்றது.

நிலங்கீண்டது - வராகாவதார வரலாறு. அல்லி - அகவிதழ். தாமரைமொட்டு இன்முகம் மலர - தாமரையரும்பு இனியமுகம்போல மலர, இப்பகுதி தாமரைப் போது முகம்போல மலர, நீலம் கண்ணை ஒக்க, கயல் விழியையொக்க எல்லாமாக மாதர் முகம் போல முற்றும் மகிழ்செய்யும் அழகிய பெருந்துறை என அறிவித்தவாறு.

Koviloor Digital Library

457. குண்டுந் தேருங் கூறைக ளைந்துங்
கூப்பிலர் செப்பில ராகி
மிண்டும் மிண்டர் மிண்டவை கண்டு
மிண்டு செயாது விரும்பும்
தண்டும் பாம்பும் வெண்டலை சூலந்
தாங்கிய தேவர் தலைவர்
வண்டுந் தேனும் வாழ்பொழிற் சோலை
மல்குபெ ருந்துறை யாரே. 10

458. கடையார் மாட நன்கெழு வீதிக்
கழுமல வூரன் கலந்து
நடையா ரின்சொல் ஞானசம் பந்தன்
நல்லபெ ருந்துறை மேய

10. பொ-ரை : இறைவரைக் குண்டர்களாகிய சமணர்களும், தேரர்களாகிய புத்தர்களும் தம் ஆடைகளைக் களைந்தும் பல்வகை விரதங்களை மேற்கொண்டும் கைகூப்பி வணங்காதவர்களாய்த் திருப் பெயர்களைக் கூறாதவர்களாய், வம்பு செய்யும் இயல்பினராய் வீண் தவம் புரிகின்றனர். அவர்களின் மாறான செய்கைகளைக் கண்டு அவற்றை மேற்கொள்ளாது சிவநெறியை விரும்புமின். யோக தண்டம், பாம்பு, தலைமாலை, சூலம் ஆகியவற்றை ஏந்திய தேவர் தலைவராகிய நம் இறைவர், வண்டுகளும், தேனும் நிறைந்து வாழும் பொழில்களும், சோலைகளும் நிறைந்த பேணுபெருந்துறையில் உள்ளார்.

கு-ரை : புத்தர் சமணர் பொய்யுரை கண்டு புந்தி மயங்காது போற்றுங்கள் என அறிவிக்கின்றது. குண்டு - குண்டர். தேர் - தேரர். கூப்பிலர் - வணங்காதவர்களாய். செப்பிலர் - தோத்திரியாதவர்கள் ஆகி. மிண்டர் - வம்பர். மிண்டு - குறும்பு.

11. பொ-ரை : வாயில்களையுடைய மாட வீடுகள் நன்கமைந்த வீதிகளையுடைய கழுமலம் என்னும் ஊரில் தோன்றியவனும், அன் பொடு கலந்து இன்சொல் நடையோடு பாடுபவனுமாகிய ஞான சம்பந்தன் நல்ல பேணுபெருந்துறை மேவிய வலிய சூலப்படையுடைய இறைவன் திருவடிகளைப் பரவிப் போற்றிய இப்பதிகப் பாடல்கள்

Koviloor Digital Library

படையார் சூலம் வல்லவன் பாதம்
பரவிய பத்திவை வல்லார்
உடையா ராகி உள்ளமு மொன்றி
உலகினின் மன்னுவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

பத்தையும் ஓதுபவர், எல்லா நன்மைகளும் உடையவராய் மனம் ஒன்றி உலகில் நிலையான வாழ்வினைப் பெறுவர்.

கு-ரை : இப்பதிகம் வல்லவர் எல்லா வளமும் உடையவராகி மன ஒருமைப்பாட்டுடன் வாழ்வர் என்கின்றது. கடை - வாயில். மன்னுவர் - வினைப்போகத்திற்கு உரிய காலம்வரையில் பூத வுடலோடும், அதற்குப்பின் புகழுடலோடும் நிலைபெறுவர்.

உறையூர்ப் புராணம்

பால்மணக்குஞ் செவ்வாயுந் தேன்மணக்கும்
பங்கயப்பூம் பைந்தா ரோடு
நூல்மணக்குந் திருமார்பு மருண்மணக்கு
மிருவிழியு நூறை யோடு
சேல்மணக்கும் வயற்காழித் திருஞான
சம்பந்தத் தேவ னின்பச்
சால்மணக்கு மலரடியு முள்ளுவாம்
வினையனைத்துந் தள்ளு வாமே.

- மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

மாயூரப் புராணம்

தமரொடு வெள்ள நீந்தத் தவமுயன் றெழுநா ளாற்றி
அமர்கொடுங் கணையொன் றுய்த்து வருந்துமா லவன் போலாது
தமரொடு வெள்ள நீந்த நாவாய்க்கட் டவிழ்த்துத் தாவா
தமரொரு பதிகஞ் செவ்வாய் மலர்ந்தவர்க் கடிமை செய்வாம். -

- தியாகராசப்பக் கவிராயர்.

Koviloor Digital Library

43. திருக்கற்குடி

பதிக வரலாறு:

திருப்பராய்த்துறையை வழிபட்டு வந்தருள்கின்ற காழிப் பிள்ளையார், திருக்கற்குடி மலையை அடைந்தார்கள். அம்மலை மேல் எழுந்தருளியுள்ள கனகக்கொழுந்தை - திரிபுரம் எரித்த வீரரை - விடையாளியைப் போற்றி 'வடந்திகழ்' என்னும் இப்பதிகத்தையருளிச் செய்தார்கள்.

பண்: தக்கராகம்

பதிக எண்: 43

திருச்சிற்றம்பலம்

459. வடந்திகழ் மென்முலை யாளைப்
பாகம தாக மதித்துத்
தடந்திரை சேர்புனன் மாதைத்
தாழ்சடை வைத்த சதுரர்
இடந்திகழ் முப்புரி நூலர்
துன்பமொ டின்பம தெல்லாம்
கடந்தவர் காதலில் வாழுங்
கற்குடி மாமலை யாரே. 1

1. பொ-ரை : திருக்கற்குடி மாமலையை விரும்பி அதன்கண் வாழும் இறைவர், முத்துவடம் விளங்கும் மெல்லிய தனங்களை உடைய உமையம்மையை மதித்து இடப்பாகமாகக் கொண்டு பெரிய அலைகள் வீசும் கங்கை நங்கையைத் தாழ்கின்ற சடைமிசை வைத் துள்ள சதுரப்பாடுடையவர்: திருமேனியின் இடப்பாகத்தே விளங்கும் முப்புரிநூலை அணிந்தவர். இன்ப துன்பங்களைக் கடந்தவர்.

கு-ரை : ஒருமாதை முடியிலும், ஒருமாதைப் பாகத்திலும் வைத்தும், பிரமசாரியாயிருப்பவர் கற்குடியார் என்கின்றது. முப்புரி நூலர் என்றது 'பவன் பிரமசாரியாகும்' என்பதை விளக்க. வினையின் நீங்கிய முதல்வனாதலின், வினைபற்றி நிகழ்வனவாகிய துன்ப இன் பங்கள் அவரைப் பாதியா என்பது விளக்கக் 'கடந்தவர்' என்றார்.

குருவருள் : ''துன்பமொடு இன்பம தெல்லாம் கடந்தவர் காதலில்

Koviloor Digital Library

460. அங்கமொ ராறுடை வேள்வி
யான வருமறை நான்கும்
பங்கமில் பாடலோ டாடல்
பாணி பயின்ற படிறர்
சங்கம தார்குற மாதர்
தங்கையின் மைந்தர்கள் தாவிக்
கங்குலின் மாமதி பற்றுங்
கற்குடி மாமலை யாரே. 2

461. நீரக லந்தரு சென்னி
நீடிய மத்தமும் வைத்துத்
தாரகை யின்னொளி சூழ்ந்த
தண்மதி சூடிய சைவர்

வாழும் கற்குடி மாமலையாரே'' என்ற தொடர் கடவுள் என்ற சொல்லின் பொருளை விளக்குதல் காண்க. கடவுள் என்ற சொல் வேறாய் உடனாய் இருந்து அருள் செய்தலை உணர்த்துவது. கட - கடந்தது. வேறாய் என்பதை உணர்த்துவது. உள் - ஒன்றாய் என்பதை உணர்த்துவது. கடவு என்று பார்க்கும்போது உடனாயிருந்து இயக்குவதைக் காணலாம்.

2. பொ-ரை : சங்கு வளையல்கள் அணிந்த குறப் பெண்களின் கைகளில் விளங்கும் பிள்ளைகள் இரவு நேரத்தில் தாவிப்பெரிய மதியைக் கைகளால் பற்றும் திருக்கற்குடி மாமலை இறைவர் வேள்வி கட்குரிய விதிகளை விளக்கி ஆறு அங்கங்களுடன் கூடிய, அரிய வேதங்கள் நான்காகிய குற்றமற்ற பாடல், ஆடல், தாளச் சதிகள் ஆகியவற்றைப் பழகியவர்.

கு-ரை : வேதம் பாடியும் படிறர் இவர் என்கின்றது. வேள்வி யான அருமறை - யாகவிதிகளை விளக்கும் வேதம். பாணி - கை . ஈண்டு தாளத்தை உணர்த்தியது. படிறர் - பொய்யர். சங்கம் - சங்கு வளையல். கங்குல் - வானம். குறமாதர் கையிலுள்ள பிள்ளைகள் எட்டி மாமதியைப் பற்றுகின்றனர் என்று கற்குடி மலையின் உயரமும் கவினும் உரைத்தவாறு.

3. பொ-ரை : போர் செய்தற்கு ஏற்ற அகலமான மார்பினைக் கொண்டுள்ள வேடர்கள் காடுகளிலிருந்து வெட்டிக் கொணர்ந்து

Koviloor Digital Library

போரக லந்தரு வேடர்
புனத்திடை யிட்ட விறகில்
காரகி லின்புகை விம்முங்
கற்குடி மாமலை யாரே. 3

462. ஒருங்களி நீயிறை வாவென்
றும்பர்க ளோல மிடக்கண்
டிருங்கள மார விடத்தை
யின்னமு துண்ணிய ஈசர்
மருங்களி யார்பிடி வாயில்
வாழ்வெதி ரின்முளை வாரிக்
கருங்களி யானை கொடுக்குங்
கற்குடி மாமலை யாரே. 4

எரிக்கும் விறகுகளில் கரிய அகிலின் புகை மணம் வீசும் திருக்கற்குடி மாமலை இறைவர் பரந்து விரிந்து வந்த கங்கை நீரை உடைய முடி மீது நீண்டு மலர்ந்த ஊமத்தை மலரை அணிந்து விண்மீன்களின் ஒளி சூழ்ந்து விளங்கும் குளிர்ந்த பிறை மதியைச் சூடிய சைவராவர். அம்மலையில் மரமானவை அகிலன்றிப் பிறிதில்லை என்பதாம்.

கு-ரை : கங்கை வைத்த திருமுடிக்கண் மத்தமும் மதியமும் சூடியிருக்கிற சைவர் இவர் என்கின்றது. அகலந்தரும் - பரந்த. தாரகை - நட்சத்திரம். திருமுடிக்கண் வைத்த அப்பிராகிருதமதிக்குத் தாரகைகள் சூழ்தல் இல்லையாயினும் மதி என்ற பொதுமை பற்றியருளிய அடைமொழி. போர் அகலம் தரு வேடர் - பொருதற்கு ஏற்ற மார்பினையுடைய வேடர்கள். வேடர்கள் அகிற்காட்டைக் கொளுத்திப் புனம் செப்பனிடுகின்றார்கள் என்பதாம்.

4. பொ-ரை : மதம் கொண்ட கரிய களிறு அருகில் அன்பு காட்டி வரும் பெண் யானையின் வாயில், பசுமையோடு முளைத்து வரும் மூங்கில் முளைகளை வாரிக்கொடுத்து ஊட்டும் திருக்கற்குடி மாமலை இறைவர், தேவர்கள் பெருமானே, அனைவரையும் ஒருங்கு காத்தளிப் பாயாக என ஓலமிடுவதைக் கேட்டுப் பாற்கடலிடை எழுந்த நஞ்சைத், தமது மிடறு கருமைக்கு இடமாகுமாறு இனிய அமுதமாகக் கருதி உண்டு காத்த ஈசராவார்.

Koviloor Digital Library

463. போர்மலி திண்சிலை கொண்டு
பூதக ணம்புடை சூழப்
பார்மலி வேடுரு வாகிப்
பண்டொரு வர்க்கருள் செய்தார்
ஏர்மலி கேழல் கிளைத்த
வின்னொளி மாமணி எங்கும்
கார்மலி வேடர் குவிக்குங்
கற்குடி மாமலை யாரே. 5

கு-ரை : தேவர்வேண்ட விடத்தைத் திருவமுது செய்தருளிய ஈசர் சிவம் என்கின்றது. இறைவா! நீ ஒருங்கு அளி என்று உம்பர்கள் ஓலம் இட எனக் கூட்டுக. இரும் களம் ஆர - பெரிய கண்டம் நிறைய. உண்ணிய - உண்ட. இது ஒரு அரும் பிரயோகம். உண் என்ற பகுதி அடியாகப் பிறக்கும் இறந்தகாலப் பெயரெச்சம் உண்ட என்பதே. உண்ணிய எனவருதல் மிக அருமை.

அளியார் பிடி வாயில் - அன்பு செறிந்த பெண் யானையின் வாயில். வெதிர் - மூங்கில். வலிய மதக்களிப்போடு கூடிய யானை தானுண்ணாது, பிடியின் வாயில் அமுதம் போன்ற மூங்கில் முளை களை வாரிக்கொடுக்கின்ற கற்குடி நாதர், தேவர்கள் வேண்டத் தாம் விடமுண்டு, அவர்கட்கு அமுதம் அளித்தார் என்ற நயம் காண்க.

5. பொ-ரை : அழகிய பன்றிகள் நிலத்தைக் கிளைத்தலால் வெளிப்பட்ட இனிய ஒளியோடு கூடிய சிறந்த மணிகளைக் கரிய நிற முடைய வேடர்கள் பல இடங்களிலும் குவித்துள்ள திருக்கற்குடி மாமலை இறைவர், போர் செய்யத்தக்க வலிய வில்லைக் கையில் கொண்டு, பூத கணங்கள் புடை சூழ்ந்து வர மண்ணுலகில் தாமொரு வேடர் உருத் தாங்கி, முற்காலத்தில் அருச்சுனருக்கு அருள் செய்தவ ராவார்.

கு-ரை : வேடரான பெருமான் இவர் என்கின்றது. வேட்டுவ உருவானது அருச்சுனற்குப் பாசுபதம் அருளித்தருள் செய்ய, ஒருவர் - அருச்சுனன். ஏர் - அழகு.

கேழல் - பன்றி. கார்மலி வேடர் - கருமை நிறமிகுந்த வேடர்கள். இனம் இனத்தோடு சேரும் என்பதுபோல வேடர் ஆகி வேடரொடு வாழும் மாமலையர் என்ற நயம் ஓர்க.

Koviloor Digital Library

464. உலந்தவ ரென்ப தணிந்தே
ஊரிடு பிச்சைய ராகி
விலங்கல்வில் வெங்கன லாலே
மூவெயில் வேவ முனிந்தார்
நலந்தரு சிந்தைய ராகி
நாமலி மாலையி னாலே
கலந்தவர் காதலில் வாழுங்
கற்குடி மாமலை யாரே. 6

465. மானிட மார்தரு கையர்
மாமழு வாரும் வலத்தர்
ஊனிடை யார்தலை யோட்டி
லுண்கல னாக வுகந்தார்
தேனிடை யார்தரு சந்தின்
திண்சிறை யாற்றினை வித்திக்
கானிடை வேடர் விளைக்குங்
கற்குடி மாமலை யாரே. 7

6. பொ-ரை : நன்மை அமைந்த மனமுடையவராய் நாவினால் புகழும் சொல் மாலைகளாகிய தோத்திரங்களினாலே இறைவன் திருவருளில் கலந்த மெய்யடியார்கள் அன்போடு வாழும் திருக்கற்குடி மாமலை இறைவர், இறந்தவர்களின் எலும்பை அணிந்து, ஊர் மக்கள் இடும் பிச்சையை ஏற்கும் பிட்சாடனராய் மேருமலையாகிய வில் லிடைத் தோன்றிய கொடிய கனலால் முப்புரங்களும் வெந்தழியுமாறு முனிந்தவர்.

கு-ரை : பிட்சாடன மூர்த்தியாய் மூவெயிலை முனிந்தவர் இவர் என்கின்றது. உலந்தவர் - இறந்தவர் என்பது. அணிந்து - எலும்பு களைச்சூடி. விலங்கல் - மேருமலையாகிய வில். நாமலி மாலை - நாவில் மலிந்த தோத்திரப் பாமாலை. நலந்தரு சிந்தை - காமம் வெகுளி மயக்கம் முதலிய மூன்றும் கெட்ட மனம். கலந்தவர் - ஒருமைப் பட்ட வர்கள். மனம் ஒன்றிய முனி புங்கவர்கள் வாழும் கற்குடி மலை என்றதால் யோகியர் இடம் இது என அறிவித்தவாறு.

7. பொ-ரை : தேனடைகள் பொருந்திய சந்தன மரங்களுக் கிடையே வலிய கரைகளைக் கட்டி,தினைகளை விதைத்துக்

Koviloor Digital Library

466. வாளமர் வீர நினைந்த
விராவணன் மாமலை யின்கீழ்த்
தோளமர் வன்றலை குன்றத்
தொல்விர லூன்று துணைவர்
தாளமர் வேய்தலை பற்றித்
தாழ்கரி விட்ட விசைபோய்க்
காளம தார்முகில் கீறுங்
கற்குடி மாமலை யாரே. 8

கானகத்தில் வேடர்கள் தினைப்பயிர் விளைக்கும் திருக்கற்குடி மாமலை இறைவர் மானை இடக் கையிலும், மழுவை வலக் கையிலும் தரித்தவர். ஊன் பொருந்திய தலையோட்டை உண்கலனாக உகந்தவர்.

கு-ரை : மானையும் மழுவையும் ஏந்தி, கபாலத்தை உண் கலமாக உகந்தவர் இவர் என்கின்றது.

சந்து - சந்தனம். வேடர் சந்தன மரத்தின் நடுவில் தினைவித்தி விளைக்கின்றார்கள் என்பது. ஆன்மாக்கள் வினைப்போகம் தடை யாய் இருப்பினும் அவற்றை நீக்கிச் சிவபோகத்தை வித்தி விளைக்கும் புண்ணியபூமி எனக் குறிப்பித்தவாறு.

8. பொ-ரை : அடிமரத்தோடு கூடிய மூங்கிலினது தழையைப் பற்றி வளைத்து உண்ட களிறு, அதனை வேகமாக விடுதலால் அம் மூங்கில், விசையோடு சென்று, கரிய நிறம் பொருந்திய மேகங்களைக் கீறும், திருக்கற்குடி மாமலை இறைவர், வாட்போரில் வல்ல தனது பெருவீரத்தை நினைந்த இராவணனைப் பெருமை பொருந்திய கயிலை மலையின்கீழ் அவன் தோள்களும், வலிய தலைகளும் நெரியுமாறு தமது பழம்புகழ் வாய்ந்த கால் விரலால் ஊன்றிய துணைவராவார்.

கு-ரை : இராவணனை விரல் ஊன்றி அடக்கியவர் இவர் என்கின்றது. வேய் - மூங்கில். தாள் - அடி. கரி - யானை. காளம் - கருமை நிறம். யானை மூங்கிலினது நுனியைப் பற்றிவிட்ட விசையால் கருமுகிலின் வயிறு கீறப்படும் மலை என்றது; திருவருள் துணை யிருப்பின் ஆணவமான படலத்தையும் கீறிக் கருணைமழையைக் காணலாம் எனக் குறிப்பித்தவாறு.

Koviloor Digital Library

467. தண்டமர் தாமரை யானுந்
தாவியிம் மண்ணை யளந்து
கொண்டவ னும்மறி வொண்ணாக்
கொள்கையர் வெள்விடையூர்வர்
வண்டிசை யாயின பாட
நீடிய வார்பொழில் நீழல்
கண்டமர் மாமயி லாடுங்
கற்குடி மாமலை யாரே. 9

468. மூத்துவ ராடையி னாரும்
மூசு கடுப்பொடி யாரும்
நாத்துவர் பொய்ம்மொழி யார்கள்
நயமில ராமதி வைத்தார்
ஏத்துயர் பத்தர்கள் சித்தர்
இறைஞ்ச வவரிட ரெல்லாம்
காத்தவர் காமரு சோலைக்
கற்குடி மாமலை யாரே. 10

9. பொ-ரை : வண்டுகள் இசை பாட, நீண்ட பொழிலின் நீழலைக் கண்டு மகிழும் சிறந்த மயில்கள் ஆடும் திருக்கற்குடி மாமலை இறைவர் குளிர்ந்த தாமரை மலர்மேல் உறையும் நான்முகனாலும் உயர்ந்த இவ்வுலகை அளந்த திருமாலாலும் அறிய ஒண்ணாத இயல்பினர். வெண்ணிறமான விடையை ஊர்ந்து வருபவர்.

கு-ரை : அயனும் மாலும் அறியவொண்ணாதார் இவர் என்கின்றது. வார் பொழில் - நீண்ட சோலை. பொழிலின் நீழலில் வண்டு பாடக்கண்டு மயிலாடும் கற்குடி என்றது திருவடி நிழலில் திளைத்திருக்கும் சிவயோகியர் பரநாத இன்னிசை கேட்டு ஆனந்தக்கூத்தாடுகின்ற இடம் என அறிவித்தவாறு.

10. பொ-ரை : காவியாடையணிந்த புத்தர்களும்,கடுக்காய்ப் பொடியை நிரம்ப உண்ணும் சமணர்களும், நாவிற்கு வெறுப்பை உண்டாக்கும் பொய்ம்மொழி பேசுபவராய் நேயமற்ற அறிவுடையவ ராய் இருப்போராவர். அவர்களை விடுத்துத் தம்மை ஏத்தி வாழ்த்தி உயரும் பக்தர்களும், சித்தர்களும் வணங்க அவர்கட்கு வரும்

Koviloor Digital Library

469. காமரு வார்பொழில் சூழுங்
கற்குடி மாமலை யாரை
நாமரு வண்புகழ்க் காழி
நலந்திகழ் ஞானசம் பந்தன்
பாமரு செந்தமிழ் மாலை
பத்திவை பாடவல் லார்கள்
பூமலி வானவ ரோடும்
பொன்னுல கிற்பொலி வாரே. 11

திருச்சிற்றம்பலம்

இடர்களை அகற்றிக் காத்தவர், அழகிய சோலைகள் சூழ்ந்த திருக்கற் குடி மாமலை இறைவர்.

கு-ரை : சமணரும் புத்தரும் அறியமுடியாத பிறை சூடிய பெருமான் என்கிறது. மூதுவர் ஆடை - முதிர்ந்த காவியாடை. கடு - கடுக்காய்த்துவர். நா துவர் பொய்ம்மொழி - நாக்கிற்குத் துவர்ப்பை உண்டுபண்ணும் பொய்.

11. பொ-ரை : அழகிய நீண்ட பொழில்களால் சூழப்பட்ட திருக்கற்குடி மாமலை இறைவரை, நாவிற் பொருந்திய வண்புகழால் போற்றப்பெறும் சீகாழிப் பதியில் தோன்றிய நன்மையமைந்த ஞானசம்பந்தன் பாடிய செந்தமிழ் மாலையாகிய இத்திருப்பதிகப் பாடல்கள் பத்தையும் ஓத வல்லவர்கள். பொலிவுடன் கூடிய தேவர்களோடும் பொன்னுலகின்கண் பொலிவோராவர்.

கு-ரை : இத்தலத்திறைவனை ஏத்தவல்லவர்கள் தேவராய்த் திகழ்வர் என்கின்றது. காமரு - அழகிய. நாமரு - நாவிற் பொருந்திய.

ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி

வாழ்த்துவ தெம்பர மேயாகும் அந்தத்து வையமுந்நீர்
ஆழ்த்திய காலத்தும் ஆழா ததுஅ்ரன் சேவடியே
ஏத்திய ஞானசம் பந்தற் கிடம்இசைத் தும்பிகொம்பர்க்
காத்திகழ் கேதகம் போதகம் ஈனுங் கழுமலமே.

- நம்பியாண்டார் நம்பி.

Koviloor Digital Library

44. திருப்பாச்சிலாச்சிராமம்

பதிக வரலாறு:

காழிப்பிள்ளையார் திரு அன்பிலாலந்துறை, திருமாந் துறை முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு திருப்பாச்சிலாச் சிராமத்திற்கு எழுந்தருளினார்கள்.

இத்தலம் மழநாட்டைச் சார்ந்தது. அந்நாட்டு மன்னன் கொல்லிமழவன் என்பவன். அவன் மகளுக்கு 'முயலகன்' என்னும் நோயிருந்தது. அது எவ்வாற்றானும் தீருமாறில்லா மையையுணர்ந்த அரசன், தம் மரபின் வழக்கப்படி பாச்சிலாச் சிராமத்திறைவன் திருமுன் கொண்டுவந்து பாடுகிடத்தி வைத்திருந்தான்.

அப்போது ஒருநாள் பிள்ளையார் வருகையைத் திருச் சின்ன ஒலிகேட்டு உணர்ந்தான். எல்லாமரியாதைகள் உடனும் எதிர்கொண்டு அழைத்து வந்தான். திருவடியில் வீழ்ந்து வணங்கினான், திருக்கோயிலுக்கு அழைத்துச்சென்றான். திருக் கோயிலை வலம்வந்த பிள்ளையார், உணர்வு அழிந்து நிலத்தில் சோர்ந்து கிடக்கின்ற இளங்கொடியை ஒத்த கன்னியை இறைவன் திருமுன்பு கண்டார். 'இது என்ன?' என்று மழவனை வினாவி னார். அரசன் அவரடியில்வீழ்ந்து இறைஞ்சி 'இவள் என்மகள்: நெடுநாளாக முயலகன் என்னும் நோயால் வருந்துகின்றாள். தீர்க்கும் உபாயம் தெரியாமல் சிவபெருமான் திருமுன்பு சேர்ப்பித்திருக்கிறேன்' என்று தெரிவித்துக் கொண்டான்,

பிள்ளையார் மனமிரங்கி மாற்றறி வரதரை நோக்கி, பிணி தவிர்க்கும் பெரும்பதிகமாகிய 'துணி வளர் திங்கள்' என்னும் இதனை அருளிச்செய்தார். இறைவனைப் போற்றிநின்றார். மழவன் மகள் கதுமெனப் பிணிநீங்கி எழுந்து தந்தையின் பக்கம் சார்ந்தாள். எல்லாரும் பிள்ளையார் பெருங்கருணைக்கும் பெருமான் திருவருளுக்கும் இலக்கானார்கள். சுவாமிகள் சிலநாள் அங்கு எழுந்தருளியிருந்து திருப்பைஞ்ஞீலியை அடைந்தார்கள்.

Koviloor Digital Library

பண்: தக்கராகம்

பதிக எண்: 44

திருச்சிற்றம்பலம்

470. துணிவளர்திங்கள் துளங்கிவிளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர்கொள்கையர் பாரிடஞ்சூழ
வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர்கோல மெலாஞ்செய்துபாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர்கண்டரோ மங்கையைவாட
மயல்செய்வதோ விவர்மாண்பே. 1

471. கலைபுனைமானுரி தோலுடையாடை
கனல்சுட ராலிவர்கண்கள்
தலையணிசென்னியர் தாரணிமார்பர்
தம்மடிகள் ளிவரென்ன

1. பொ-ரை : முழுமதியினது கீற்றாக விளங்கும் பிறைமதியை விளங்கித் திகழுமாறு அதனைத் தம் ஒளி பொருந்திய சடையினைச் சுற்றிக் கட்டி, பாம்புகளை அணிந்தவராய்ப் பூதங்கள் தம்மைச்சூழ எல்லோரிடமும் சென்று பலியேற்பவராய், அழகிய தோற்றத்துடன் விளங்கும் திருப்பாச்சிலாச்சிராமத்தில் உறைகின்ற நீலமணி போலும் கண்டத்தவராகிய இறைவர், கொல்லி மழவன் மகளாகிய இப் பெண்ணை மயல் செய்வது மாண்பாகுமோ?

கு-ரை : தவறிழைத்த தண்மதியைத் தலையிற்சூடி விடத்தை அமுதுசெய்த பெருமானோ இவள்வாட மயக்குவது என்கின்றார். துணி - கீறு. பணி வளர்கொள் கையர் - பாம்புகள் வளர்வதைக் கொள்ளுகின்ற திருக்கரங்களையுடையவர். பாரிடம் - பூதம். ஆரிடமும் - ஏற்பார் ஏலாதார் என்கின்ற வேறுபாடில்லாமல் எல்லாரிடமும். மங்கை என்றது கொல்லிமழவனது மகளை.

2. பொ-ரை : மான்தோலை இடையில் ஆடையாகப் புனைந்து, கனல், ஞாயிறு, திங்கள் ஆகியன கண்களாக விளங்கத் தலையோடு அணிந்த முடியினராய், மாலை அணிந்த மார்பினராய், உயிர்கட்குத்

Koviloor Digital Library

அலைபுனல்பூம்பொழில் சூழ்ந்தமர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
இலைபுனைவேலரோ வேழையைவாட
விடர்செய்வதோ விவரீடே. 2

472. வெஞ்சுடராடுவர் துஞ்சிருண்மாலை
வேண்டுவர்பூண்பது வெண்ணூல்
நஞ்சடைகண்டர் நெஞ்சிடமாக
நண்ணுவர் நம்மைநயந்து
மஞ்சடைமாளிகை சூழ்தருபாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
செஞ்சுடர்வண்ணரோ பைந்தொடிவர்டச்
சிதைசெய்வதோ விவர்சீரே. 3

தலைவரிவர் என்று சொல்லத் தக்கவராய், நீர்வளம் நிரம்பிய பொழில்கள் சூழ்ந்த பாச்சிலாச்சிராமத்தில் உறைகின்ற இலை வடிவமான வேலை ஏந்திய இறைவர், இம்மழவன் மகளை வாடுமாறு இடர் செய்தல் இவர் பெருமைக்குப் பொருந்துவதாமோ?

கு-ரை : இறைவனது கலை, ஆடை, கண் முதலியன இவை என உணர்த்தி, இவற்றையுடைய இவரோ இவளை இடர் செய்வது என்று வினாவுகின்றது. மானுரி புனைகலை. தோலுடை ஆடை, கனல்சுடர் இவர் கண்கள் என இயைக்க. கலை - மேலாடை. உடை ஆடை - உடுத்தலையுடைய ஆடை. இலை புனை வேலர் - இலைவடிவாகப் புனையப்பெற்ற வேலினையுடையவர். ஏழை - பெண்.

3. பொ-ரை : உலகமெல்லாம் அழிந்தொழியும் ஊழிக் காலத்து இருளில் கொடிய தீயில் நடனம் ஆடுபவரும், தலைமாலை முதலியவற்றை விரும்புபவரும், வெண்ணூல் பூண்பவரும், நஞ்சுடைய கண்டத்தவரும், அன்போடு தம்மை நினைத்த நம்மை விரும்பி நம் நெஞ்சை இடமாகக் கொண்டு எழுந்தருள்பவரும், மேகங்கள் தோயும் மாளிகைகள் சூழ்ந்த திருப்பாச்சிலாச்சிராமத்து எழுந்தருளிய செந்தீவண்ணரும் ஆகிய சிவபெருமான் பைந்தொடி அணிந்த மழவன் மகளாகிய இப்பெண்ணை வருத்துவது இவர் புகழுக்குப் பொருந்துவதோ?

Koviloor Digital Library

473. கனமலர்க்கொன்றை யலங்கலிலங்கக்
கனறரு தூமதிக்கண்ணி
புனமலர்மாலை யணிந்தழகாய
புனிதர்கொ லாமிவரென்ன
வனமலிவண்பொழில் சூழ்தருபாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மனமலிமைந்தரோ மங்கையைவாட
மயல்செய்வதோ விவர்மாண்பே. 4

கு-ரை : உலகமெல்லாந்துஞ்சும் பிரளயகாலத்திருளில் தீயாடுவார், மாலைவேண்டுவார், வெண்ணூல் பூண்பர், நஞ்சடை கண்டர், ஆன்மாக்களாகிய நம்மை எளிவந்த கருணையால் நண்ணுவார் என்கின்றது. துஞ்சு இருள் - அண்டமெல்லாம் இறக்குங்காலமாகிய இருள். இருள் ஆடுவர் என இயைபுபடுத்துக. நெஞ்சிடமாக நம்மை நயந்து நண்ணுவர் எனவும் இயைக்க. ஆன்மாக்கள் தற்போதமிழந்து நம்மை நண்ணட்டும் ஆட்கொள்வோம் என்றிராது, சென்று பயன்படும் கால்போலத்தாமே வலியவந்து அணுகுவர் என்பதாம். மஞ்சு - மேகம். சிதைசெய்வது - வருத்துவது. இவர் சீர் - இவர் புகழ்.

4. பொ-ரை : கார்காலத்தில் மலரும் கொன்றை மலரால் இயன்ற மாலை திருமேனியில் விளங்க, பிரிந்தவர்க்குக் கனலைத் தரும் தூய பிறைமதியைக் கண்ணியாகச் சூடி, வனங்களில் மலர்ந்த மலர்களால் ஆகிய மாலையைச் சூடி, அழகிய புனிதர் என்று சொல்லும்படி எழிலார்ந்த வண்பொழில்கள் சூழ்ந்த திருப்பாச்சிலாச்சிராமத்து அடியவருக்கு, மனநிறைவு தருபவராய் உறையும் சிவபெருமான், இம்மங்கையை வாடும்படி செய்து மயக்குறுத்துவது மாண்பாகுமோ?

கு-ரை : கொன்றைமாலை விளங்க, பிறைக்கண்ணியை யணிந்து அழகாய புனிதர் இவர் என அறிவிக்கின்றது. கனமலர் - கார் காலத்து மலரும் கொன்றைமலர். கனம் - மேகம். தூமதி - ஒருகலைப் பிறையாதலின் களங்கமில்லாத மதி. இறைவன் அணிந்தமையின் தூமதி எனலுமாம். வனம் - அழகு.

இங்ஙனம் பிறர் உற்ற துன்பம் போக்குதற்கு அறிகுறியாகப் பிறையை அணிந்த பெருமான் ஒருபெண் வாட மயல்செய்வது மாண்பாகுமா என்று வினாவியவாறு. கனல் தரு - மதிக்கு அடை.

Koviloor Digital Library

474. மாந்தர்தம்பானறு நெய்மகிழ்ந்தாடி
வளர்சடை மேற்புனல்வைத்து
மோந்தைமுழாக்குழல் தாளமொர்வீணை
முதிரவோர் வாய்மூரிபாடி
ஆந்தைவிழிச்சிறு பூதத்தர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
சாந்தணிமார்பரோ தையலைவாடச்
சதுர்செய்வதோ விவர்சார்வே. 5

475. நீறுமெய்பூசி நிறைசடைதாழ
நெற்றிக்கண் ணாலுற்றுநோக்கி
ஆறதுசூடி யாடரவாட்டி
யைவிரற் கோவணவாடை
பாறருமேனியர் பூதத்தர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
ஏறதுவேறிய ரேழையைவாட
விடர்செய்வதோ விவரீடே. 6

5. பொ-ரை : மண்ணுலகில் அடியவர்கள் ஆட்டும் பால் நறுநெய் ஆகியவற்றை விரும்பியாடி, வளர்ந்த சடைமுடிமேல் கங்கையைச் சூடி, மொந்தை, முழா, குழல், தாளம், வீணை ஆகியன முழங்க வாய் மூரி பாடி ஆந்தை போன்ற விழிகளையுடைய சிறு பூதங்கள் சூழ்ந்த வராய்த் திருப்பாச்சிலாச்சிராமத்து உறைகின்ற சந்தனக் கலவையை அணிந்த மார்பினையுடைய சிவபிரான் இத்தையலை வாடும்படி செய்து இப்பெண்ணிடம் தம் சதுரப்பாட்டைக் காட்டல் ஏற்புடை யதோ?

கு-ரை : அடியார்கள் ஆட்டும் பால், நெய் முதலானவற்றில் ஆடிக் கங்கையைச் சடைமேல்வைத்து மொந்தை முதலான வாத்தியங் கள் முழங்கப்பாடும் பூதகணநாதர் இவர் என்கின்றது. மோந்தை: மொந்தை என்பதன் நீட்டல்விகாரம். முதிர - ஒலிக்க. ஒருமாதைத் தலையில் வைத்த இவரோ இம்மாது வாடச் சதுர்செய்வது என நயந் தோன்ற உரைத்தவாறு.

6. பொ-ரை : திருநீற்றை உடல் முழுதும் பூசியவராய், நிறைந்த சடைகள் தாழ்ந்து விளங்க, தமது நெற்றி விழியால் மறக்கருணை

Koviloor Digital Library

476. பொங்கிளநாகமொ ரேகவடத்தோ
டாமைவெண் ணூல்புனைகொன்றை
கொங்கிளமாலை புனைந்தழகாய
குழகர்கொ லாமிவரென்ன
அங்கிளமங்கையோர் பங்கினர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
சங்கொளிவண்ணரோ தாழ்குழல்வாடச்
சதிர்செய்வதோ விவர்சார்வே. 7

காட்டிப் பாவம் போக்கி, கங்கையைத் தலையில் அணிந்து, ஆடுகின்ற பாம்பைக் கையில் எடுத்து விளையாடிக் கொண்டு, ஐவிரல் அளவுள்ள கோவண ஆடை அணிந்து, பால் போன்ற வெள்ளிய மேனியராய், பூத கணங்கள் தம்மைச் சூழ்ந்தவராய்த் திருபாச்சிலாச்சிராமத்தில் உறைகின்ற விடை ஊர்தியராகிய சிவபிரான் இப்பெண்ணை வாடு மாறு செய்து இவளுக்கு இடர் செய்வது பெருமை தருவது ஒன்றா?

கு-ரை : அருளும் மறமும் உடையவர் இவர் என அறிவிக்கின்றது. நெற்றிக்கண்ணால் உற்றுநோக்கி என்றது மறக்கருணை காட்டிச் சம்ஹரித்தலைச் சொல்லியது.

ஐவிரல் கோவணம் என்பது கோவணத்தினகலம் கூறியது. ஏழை - பெண். ஈடு - பெருமை.

7. பொ-ரை : சினம் பொங்கும் இளநாகத்தைப் பூண்டு, ஒற்றை யாடை அணிந்து, ஆமை ஓட்டையும், வெண்மையான பூணூலையும் அணிந்து, தேன்நிறைந்த புதிய கொன்றை மலர்மாலை அணிந்த அழகிய இளைஞர் இவர் என்று சொல்லும்படி இளநங்கையான உமை யம்மையை ஒருபாகமாக உடைய திருப்பாச்சிலாச்சிராமத்து உறையும் சங்கொளி போல நீறு அணிந்த திருமேனியை உடைய இறைவரோ இத்தாழ்குழலாள் வருந்தச் சாமர்த்தியமான செயல் செய்வது. இது இவர் பெருமைக்குப் பொருத்தப்படுவதோ?

கு-ரை : நாகம், ஆமையோடு, பூணூல், கொன்றைமாலை புனைந்தவர் இவர் என்கின்றது.

ஏகவடம் - ஒற்றைமாலை. குழகர் - இளமையுடையவர். சதிர் - சாமர்த்தியம். இளமங்கையைப் பக்கத்தில் உடைய இவர் இவ்வாறு சதிர்செய்தல் ஆகாது என்பது குறிப்பு.

Koviloor Digital Library

477. ஏவலத்தால்விச யற்கருள்செய்து
இராவண னையீடழித்து
மூவரிலும்முத லாய்நடுவாய
மூர்த்தியை யன்றிமொழியாள்
யாவர்களும்பர வும்மெழிற்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
தேவர்கள்தேவரோ சேயிழைவாடச்
சிதைசெய்வதோ விவர்சேர்வே. 8

478. மேலதுநான்முக னெய்தியதில்லை
கீழது சேவடிதன்னை
நீலதுவண்ணனு மெய்தியதில்லை
யெனவிவர் நின்றதுமல்லால்
ஆலதுமாமதி தோய்பொழிற்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
பாலதுவண்ணரோ பைந்தொடிவாடப்
பழிசெய்வதோ விவர்பண்பே. 9

8. பொ-ரை : அம்பின் வலிமையால் விசயனோடு போரிட்டு வென்று அவனுக்குப் பாசுபதாஸ்திரம் வழங்கி, அருள் செய்தவரும் இராவணன் பெருவீரன் என்ற புகழை அழித்தவரும், மும்மூர்த்தி களுக்கும் தலைவராய் அவர்கட்கு நடுவே நின்று படைத்தல், காத்தல், அழித்தல் தொழிலைப் புரிபவராய் எல்லோராலும் துதிக்கப் பெறும் திருப்பாச்சிலாச்சிராமத்தில் உறையும் மகாதேவராய சிவபிரான் திருப் பெயரையன்றி வேறு வார்த்தைகள் பேசுவதறியாத இப்பெண்ணை வாடச் சிதைவு செய்தல் இவருடைய தொடர்புக்கு அழகிய செயல் ஆகுமோ?

கு-ரை : அண்டினாரைக் காத்து மிண்டினாரை அழிக்கும் பெரு மையர் இவர் என்கின்றது. ஏ வலத்தால் - அம்பின் வலிமையால். ஈடு - வலிமை. 'இராவணன் தன்னை' என்றும் பாடம்.

9. பொ-ரை : மேலே உள்ள திருமுடியை நான்முகன் தேடிக் கண்டான் இல்லை: கீழே உள்ள திருவடியை நீல நிறத்தை உடைய திருமால் தேடி அடைந்ததுமில்லை என்று உலகம் புகழுமாறு ஓங்கி

Koviloor Digital Library

479. நாணொடுகூடிய சாயினரேனு
நகுவ ரவரிருபோதும்
ஊணொடுகூடிய வுட்குநகையா
லுரைக ளவைகொளவேண்டா
ஆணொடுபெண்வடி வாயினர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
பூணெடுமார்பரோ பூங்கொடிவாடப்
புனைசெய்வதோ விவர்பொற்பே. 10

அழலுருவாய் நின்றவரும், பெரிய முழுமதியை ஆலமரங்கள் சென்று தோயும் பொழில்கள் சூழ்ந்த திருப்பாச்சிலாச்சிராமத்து உறையும் பால் வண்ணருமாகிய சிவபிரான் இப்பைந்தொடியாள் வாடுமாறு வஞ் சித்தல் இவர் பண்புக்கு ஏற்ற செயல் ஆகுமோ?

கு-ரை : அயனும் திருமாலும் மேலும் கீழும் அறியாதபடி மயங்கச்செய்த பெருமான் இவர் என்கின்றது.

10. பொ-ரை : நாணத்தொடு கூடிய செயல்களை இழந்து ஆடையின்றித் திரிதலால் எல்லோராலும் பரிகசிக்கத் தக்கவராகிய சமணரும், இருபொழுதும் உண்டு அஞ்சத்தக்க நகையோடு திரியும் புத்தரும், ஆகிய புறச் சமயத்தவர் உரைகளை மெய்யெனக் கொள்ள வேண்டா. அன்பர்கள் வழிபடும் திருப்பாச்சிலாச்சிராமத்தில் மாதொருபாகராய் அணிகலன்கள் பூண்ட திருமார்பினராய் விளங்கும் இறைவர் இப்பூங்கொடியாளை வாடச் செய்து பழிப்புரை கொள்ளல் இவரது அழகுக்கு ஏற்ற செயலா?

கு-ரை : புறச்சமயிகள் புல்லுரை கொள்ளவேண்டா என உலக வர்க்கு அறிவுறுத்திப், பின்னர் ஆணோடு பெண்வடிவானவர் இவர் என்கின்றது.

நாணொடு கூடிய - நாணத்தோடு சேர்ந்த பிறவற்றையும். சாயினரேனும் - இழந்தவர்களாயினும். நகுவர் - பரிகசிக்கத் தக்க வர்கள், ஆதலால் இருவேளை உண்ணுகின்ற அவருடைய அஞ்சத் தக்க சிரிப்பால் அவர்களைக் கொள்ள வேண்டா என முதல் இரண்டடி கட்கும் பொழிப்புரை காண்க. பெண்ணொருபாதியான பெருமான் ஒரு பெண்ணை வாடச் செய்யார் என்பது குறிப்பு.

Koviloor Digital Library

480. அகமலியன்பொடு தொண்டர்வணங்க
வாச்சிரா மத்துறைகின்ற
புகைமலிமாலை புனைந்தழகாய
புனிதர்கொ லாமிவரென்ன
நகைமலிதண்பொழில் சூழ்தருகாழி
நற்றமிழ் ஞானசம்பந்தன்
தகைமலிதண்டமிழ் கொண்டிவையேத்தச்
சாரகி லாவினைதானே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : உள்ளம் நிறைந்த அன்போடு தொண்டர்கள் வழிபட ஆச்சிராமம் என்னும் ஊரில் உறைகின்றவரும், அன்பர் காட்டும் நறுமணப்புகை நிறைந்த மாலைகளைச் சூடியவரும், அழகும் தூய்மையும் உடையவருமான சிவபெருமானை, மலர்ந்த தண் பொழில்கள் சூழ்ந்த சீகாழிப் பதியில் தோன்றிய நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தன் போற்றிப் பாடிய, நோய்தீர்க்கும் மேன்மை மிக்கதும் உள்ளத்தைக் குளிர்விப்பதுமான இத்தமிழ் மாலையால், ஏத்திப் பரவி வழிபடுவோரை வினைகள் சாரா.

கு-ரை : இப்பாடல் பத்தும் வல்லாரை வினைசாரா என்கிறது. அகமலி அன்பு - மனம் நிறைந்த அன்பு. தகைமலி தண் தமிழ் - இன்றைக்கும் ஓதுவாரது நோய் தீர்க்கும் தகுதி வாய்ந்த தமிழ்.

திருஞானசம்பந்தர் புராணம்

அணிகிளர் தாரவன் சொன்ன மாற்றம்
அருளொடுங் கேட்டந் நிலையின் நின்றே
பணிவளர் செஞ்சடைப் பாச்சின் மேய
பரம்பொரு ளாயினா ரைப்ப ணிந்து
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல்செய்வ தோவிவர் மாண்ப தென்று
தணிவில் பிணித விர்க்கும் பதிகத்
தண்டமிழ் பாடினார் சண்பை நாதர்.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

45. திருவாலங்காடு

பதிக வரலாறு:

புகலியாண்டகையார் தக்கோலம் என்னும் திருத்தலத்தை அடைந்து திருஊறலை வணங்கிப் பதிகம்பாடிப் பழையனூர், திருவாலங்காட்டிற்கு அருகே வருகின்றார்கள். அப்போது இத்தலம் எம்மையாளும் அம்மை திருத்தலையாலே நடந்து போற்றும் அம்மையப்பரின் அணிநகரல்லவா? என்ற எண்ணம் உண்டாயிற்று. அதனை மிதிக்க அஞ்சி அடுத்துள்ள ஊரிற்சென்று இரவு பள்ளிகொண்டார்கள்.

இடையாமத்திலே பிள்ளையார் கனவிலே பெருமானும் எழுந்தருளி 'எம்மைப்பாட மறந்தனையோ' என்று அருளிச்செய்தனர். அதனை உணர்ந்த பிள்ளையார் வியந்தெழுந்து கருணையைப் போற்றித் 'துஞ்ச வருவாரும்' என்ற இத்திருப்பதிகத்தை அருளிச்செய்தார்கள். இதில் பழையனூர் நீலிவரலாற்றை முதல் திருப்பாடலிலும், கனவில் வந்தருளிச்செய்ததை முதல் ஏழாந் திருப்பாடல்களிலும் சிறப்பித்திருக்கிறார்கள். இச்செய்தியை மறுநாட்காலையில் எல்லாருக்கும் அறிவித்துத் திருவாலங்காடு சென்று ஆலங்காட்டப்பரை வழிபட்டுத் திருப்பாசூருக்கு வழிக் கொண்டார்கள்.

குருவருள்: இத்திருப்பதிகத்தைப் பண் - தக்கராகம் என்று தொன்று தொட்டு பதிப்பித்து வருகிறார்கள். ஆனால் சேக்கிழார் ''பஞ்சுரமாம் பழையதிறம் கிழமை கொள்ளப்பாடினார் ஞான சம்பந்தர்'' என்பதால் இது பழம் பஞ்சுரப்பண்ணாகும். பழம் பஞ்சுரப் பண் வரிசையில் மூன்றாம் திருமுறையில் இடம் பெறத் தக்கதே முறையாகும். ஓதுவார்கள் இது விவரம் தெரிந்து பழம் பஞ்சுரப் பண்ணாகப் பாடுதல் நலம்.

''துஞ்சவரு வாரென்றே யெடுத்த ஓசைச்
சுருதிமுறை வழுவாமல் தொடுத்த பாடல்,
எஞ்சலிலா வகைமுறையே பழைய னூரார்
இயம்புமொழி காத்தகதை சிறப்பித் தேத்தி,

Koviloor Digital Library

அஞ்சனமா கரியுரித்தார் அருளாம் என்றே
அருளும் வகை திருக்கடைக்காப் பமையச் சாத்திப்,
பஞ்சுரமாம் பழையதிறங் கிழமை கொள்ளப் பாடினார்
பாரெல்லாம் உய்ய வந்தார்.''

என்பது இத்திருப்பதிகம் எழுந்த வரலாற்றைக் குறிக்கும் சேக்கிழார் திருமொழியாகும்.

பண்: தக்கராகம்

பதிக எண்: 45

திருச்சிற்றம்பலம்


481. துஞ்சவருவாருந் தொழுவிப்பாரும்
வழுவிப்போய்
நெஞ்சம்புகுந்தென்னை நினைவிப்பாரு
முனைநட்பாய்
வஞ்சப்படுத்தொருத்தி வாணாள்கொள்ளும்
வகைகேட்
டஞ்சும்பழையனூ ராலங்காட்டெம்
அடிகளே. 1

1. பொ-ரை : உறங்கும்போது கனவிடை வருபவரும், தம்மைத் தொழுமாறு செய்பவரும், முனைப்புக் காலத்து மறைந்து, அன்பு செய்யும் காலத்து என் நெஞ்சம் புகுந்து நின்று, நினையுமாறு செய்பவரும் ஆகிய இறைவர், முற்பிறவியில் நட்பாய் இருப்பதுபோலக் காட்டித் தன்னை வஞ்சனை செய்து கொன்ற கணவனை மறுபிறப்பில் அடைந்து அவனது வாழ்நாளைக் கவர்ந்த பெண்ணின் செயலுக்குத் துணை போன வேளாளர்கள் அஞ்சி உயிர்த்தியாகம் செய்த திருவாலங்காட்டில் உறையும் எம் அடிகளாவார்.

கு-ரை : அடியேனை எல்லாம் செய்விப்பவர் இவர் என்கின்றது. துஞ்சவருவார் - யான் தூங்க என்கனவில் எழுந்தருளுவார். இவன் இறைவன் என்று உணரச்செய்த இறைவனே தொழச் செய்தாலன்றித் தொழும் உரிமையும் ஆன்மாக்களுக்கு இல்லை யாதலின் தொழுவிப்பாரும் என்றார்.

வழுவிப்போய் - உயிர்களுடைய முனைப்புக்காலத்து

Koviloor Digital Library



திருப்பாச்சிலாச்சிராமம்:முயலகனோய் தீர்த்த அற்புதம்

Koviloor Digital Library



Koviloor Digital Library

482. கேடும்பிறவியு மாக்கினாருங்
 கேடிலா
வீடுமாநெறி விளம்பினாரெம்
 விகிர்தனார்
காடுஞ்சுடலையுங் கைக்கொண்டெல்லிக்
 கணப்பேயோ
டாடும்பழையனூ ராலங்காட்டெம்
 அடிகளே. 2

மறைந்து நின்று. முனைநட்பாய் - முன்னமே இருந்த நட்பினை உடையவளைப்போலாகி, ஒருத்தி யென்றது நீலியை. நவஞானி யென்னும் பார்ப்பனியை அவள் கணவன் கொன்றான். அவள் அவனைப் பழிவாங்க எண்ணி மறுபிறவியில் புரிசைகிழார் என்னும் வேளாளர்க்குப் புத்திரியாகப் பிறந்திருந்தாள். தோற்றத்தைக் கண்டு அவளைப் பேயென்று ஊரார் புறக்கணித்தனர், முற்பிறப்பின் கணவனாகிய பார்ப்பான் தரிசனச் செட்டி என்னும் பெயரோடு பிறந்திருந்தான். அவனைக் கண்டதும் இவள் அவன் மனைவிபோல நடித்துப் பழிவாங்கத் தலைப்பட்டபோது அவன் அஞ்சியோடி அவ்வூர் வேளாளர் எழுபதுபேரிடம் அடைக்கலம் புகுந்தான். அவர்கள் பிணை கொடுத்தனர். இருந்தும் இவள் செட்டியை வஞ்சித்துக் கொன்றாள். பிணைகொடுத்த வண்ணம் எழுபது வேளாளரும் தீப்புகுந்து உயிர்துறந்தனர். இதனைக் கேட்ட அயலார் அனைவரும் அஞ்சினர் என்ற தொண்டைமண்டல வரலாறு பின்னிரண்டடிகளிற் குறிக்கப் பெற்றுள்ளது.

2. பொ-ரை : பிறப்பு இறப்புக்களை உயிர்கட்குத் தந்தருளியவரும், அழிவற்ற வீட்டு நெறியை அடைதற்குரிய நெறிகளை உயிர்கட்கு விளம்பியவரும் ஆகிய நம்மின் வேறுபட்ட இயல்பினராகிய சிவபிரான், இடுகாடு சுடலை ஆகியவற்றை இடமாகக் கொண்டு இராப்போதில் பேய்க்கணங்களோடு நடனமாடும் பழையனூரைச் சேர்ந்த திருவாலங்காட்டு எம் அடிகள் ஆவார்.

கு-ரை : தோற்ற நரகங்களைத்தந்த இவரே வீட்டு நெறியையும் விளம்பினார் என்கின்றது. கேடு - அழிவு. கேடிலா - என்றும் அழிதலில்லாத. அந்நெறியை யுணர்த்துதலே இறைவனருளிச் செயல்; நெறிக்கண் சென்று வீடடைதல் ஆன்மாவின் கடன் என்பது காட்டியவாறு. எல்லி - இரவு. கணப்பேய் - கூட்டமாகிய பேய்.

Koviloor Digital Library

483. கந்தங்கமழ்கொன்றைக் கண்ணிசூடிக்
கனலாடி
வெந்தபொடிநீற்றை விளங்கப்பூசும்
விகிர்தனார்
கொந்தண்பொழிற்சோலை யரவிற்றோன்றிக்
கோடல்பூத்
தந்தண்பழையனூ ராலங்காட்டெம்
அடிகளே. 3

484. பாலமதிசென்னி படரச்சூடி
பழியோராக்
காலனுயிர்செற்ற காலனாய
கருத்தனார்
கோலம்பொழிற்சோலைப் பெடையோடாடி
மடமஞ்ஞை
ஆலும்பழையனூ ராலங்காட்டெம்
அடிகளே. 4

3. பொ-ரை : மணம் கமழும் கொன்றை மலர் மாலை சூடிக் கனலிடை நின்று ஆடி சுடுகாட்டில் 'வெந்த சாம்பலை உடல் முழுதும் விளங்கப் பூசும் வேறுபட்ட இயல்பினராகிய சிவபிரான், கொத்துக்கள் நிறைந்த பொழில்களிலும் சோலைகளிலும் பாம்பின் படம் போலக் காந்தள் மலர் மலரும் அழகிய குளிர்ந்த பழையனூரைச் சேர்ந்த திருவாலங்காட்டு எம் அடிகள் ஆவார்.

கு-ரை : கொன்றையணிந்து, கனலாடி நீறுபூசும் நிமலர் இவர் என்கிறது. கண்ணி - திருமுடியிற் சூடப்பெறும் மாலை. கொந்து அண் - கொத்துக்கள் நெருங்கிய. பொழில் - இயற்கையே வளர்ந்த காடு. சோலை - வைத்து வளர்க்கப்பெற்ற பூங்கா. கோடல் - செங்காந்தள். கோடல் அரவில் தோன்றிப் பூத்து எனக்கூட்டுக. செங்காந்தள் பூத்திருப்பது பாம்பு படம் எடுத்ததை ஒக்குமாதலின் இவ்வாறு கூறினார்.

4. பொ-ரை : இளம்பிறையை முடிமீது பொருந்தச் சூடி, தனக்கு வரும் பழியை நினையாத காலனது உயிரைச் செற்ற காலகாலராய இறைவர் அழகிய பொழில்களிலும் சோலைகளிலும் இள மயில்கள்

Koviloor Digital Library

485. ஈர்க்கும்புனல்சூடி யிளவெண்திங்கள்
முதிரவே
பார்க்குமரவம்பூண் டாடிவேடம்
பயின்றாரும்
கார்க்கொள்கொடிமுல்லை குருந்தமேறிக்
கருந்தேன்மொய்த்
தார்க்கும்பழையனூ ராலங்காட்டெம்
அடிகளே. 5

பெண் மயில்களோடு கூடிக் களித்து ஆரவாரிக்கும் பழையனூரைச் சேர்ந்த திருவாலங்காட்டு எம் அடிகள் ஆவார்.

கு-ரை : கால காலனாய கருத்தா இவர் என்கின்றது. பாலமதி - இளம்பிறை. பழியோரா - தனக்கு வரும் பழியை ஆராயாத. பழியாவது சிவனடியாரைப் பிடிக்க முயன்ற தீங்கு. காலன் பிறவற்றின் உயிர்களைப் பறிப்பதும் இறைவன் அருளாணைவழி நின்றே என்பது விளங்கக் காலகாலனாய கருத்தனார் என்றார்.

கோலம் - அழகு. ஆலும் - ஆரவாரிக்கும். இது மயில் ஒலியைக் குறிக்கும் மரபுச் சொல்.

5. பொ-ரை : ஈர்த்துச் செல்லுதலில் வலிய கங்கை நீரை முடி மிசைத் தாங்கி, இளம்பிறையை விழுங்க அதனது வளர்ச்சி பார்த்திருக்கும் பாம்பை அணிகலனாகப் பூண்டு, நடனம் ஆடிப் பல்வேறு வேடங்களில் தோன்றி அருள்புரிபவர், கார்காலத்தே மலரும் முல்லைக் கொடிகள் குருந்த மரங்களில் ஏறிப் படர அம்மலர்களில் உள்ள தேனை உண்ணவரும் கரிய வண்டுகள் மலரை மொய்த்து ஆரவாரிக்கும் பழையனூரைச் சேர்ந்த திருவாலங்காட்டு எம் அடிகள் ஆவார்.

கு-ரை : இளவெண் திங்கள் முதிரும்வரை பார்த்திருக்கும் அரவம் பூண்டாடிய பெருமான் இவர் என்கின்றது.

ஈர்க்கும் - இழுத்துச் செல்லும். திருமுடிக்கண் உள்ள அரவம் உடனிருக்கும் இளம்பிறையை முதிரட்டும்; உண்போம் என்று பார்த்திருக்கின்றது என்பதை விளக்கிய வாறு. கார்க்கொள் - கார் காலத்தைக் கொண்ட. கருந்தேன் - கரிய வண்டு.

Koviloor Digital Library

486. பறையுஞ்சிறுகுழலும் யாழும்பூதம்
பயிற்றவே
மறையும்பலபாடி மயானத்துறையும்
மைந்தனார்
பிறையும்பெரும்புனல்சேர் சடையினாரும்
பேடைவண்
டறையும்பழையனூ ராலங்காட்டெம்
அடிகளே. 6

487. நுணங்குமறைபாடி யாடிவேடம்
பயின்றாரும்
இணங்குமலைமகளோ டிருகூறொன்றா
யிசைந்தாரும்
வணங்குஞ்சிறுத்தொண்டர் வைகலேத்தும்
வாழ்த்துங்கேட்
டணங்கும்பழையனூ ராலங்காட்டெம்
அடிகளே. 7

6. பொ-ரை : பறை, சிறுகுழல் ,யாழ் முதலிய கருவிகளைப் பூதங்கள் ஒலிக்க வேதங்களைப் பாடிக் கொண்டு மயானத்தில் உறையும் மைந்தராய், பிறை, பெருகி வரும் கங்கை ஆகியவற்றை அணிந்த சடை முடியினர் ஆகிய சிவபெருமான் பெடைகளோடு கூடிய ஆண் வண்டுகள் ஒலிக்கும்சோலைகள் சூழ்ந்த பழையனூரைச் சேர்ந்த திருவாலங்காட்டு எம் அடிகள் ஆவார்.

கு-ரை : பறை குழல் யாழ் முதலியவற்றைப் பூதகணம் வாசிக்க, திருவாலங்காட்டுறையும் பெருமானிவர் என்கின்றது. பயிற்ற - தம்முடனுறை பூதங்கள் பலகாற்பழக்க. பேடைவண்டு - பெண் வண்டு. அறையும் - ஒலிக்கும்.

7. பொ-ரை : நுட்பமான ஒலிக் கூறுகளை உடைய வேதங்களைப் பாடிக் கொண்டும் ஆடிக் கொண்டும் பல்வேறு திருவுருவங்களைக் கொள்பவரும், தம்மோடு இணைந்த பார்வதி தேவியுடன் இருவேறு உருவுடைய ஒருருவாக இசைந்தவரும், ஆகிய பெருமானார் தம்மை வணங்கும் அடக்கமுடைய தொண்டர்கள் நாள்தோறும் பாடும்

Koviloor Digital Library

488. கணையும்வரிசிலையு மெரியுங்கூடிக்
கவர்ந்துண்ண
இணையிலெயின்மூன்று மெரித்திட்டாரெம்
மிறைவனார்
பிணையுஞ்சிறுமறியுங் கலையுமெல்லாங்
கங்குல்சேர்ந்
தணையும்பழையனூ ராலங்காட்டெம்
அடிகளே. 8

489. கவிழமலைதரளக் கடகக்கையா
லெடுத்தான்தோள்
பவழநுனைவிரலாற் பையவூன்றிப்
பரிந்தாரும்

வாழ்த்துக்களைக் கேட்டு தெய்வத் தன்மை மிகுந்து தோன்றும் பழையனூரைச் சேர்ந்த திருவாலங்காட்டு எம் அடிகள் ஆவார்.

கு-ரை : உமையொரு கூறனாக, இருவேறுருவின் ஒருபேரியாக் கையனாக எழுந்தருளிய பெருமான் இவர் என்கின்றது. இரு கூறு - சத்தியின்கூறும் சிவத்தின்கூறும் ஆகிய இரண்டு கூறு, வைகல் - நாடோறும். அணங்கும் - தெய்வத்தன்மை மிகும்.

8. பொ-ரை : அம்பு வில் நெருப்பு ஆகியன கூடிக் கவர்ந்து உண்ணுமாறு ஒப்பற்ற முப்புரங்களை எரித்தவராகிய எம் இறைவர், பெண் மான் ஆண்மான் அவற்றின் குட்டிகள் ஆகியன இரவிடைச் சென்றணையும் பழையனூரைச் சேர்ந்த ஆலங்காட்டு எம் அடிகள் ஆவார்.

கு-ரை : முப்புரங்களை வில்லும் அம்பும் தீயும்கூடி எரிக்கச் செய்த இறைவன் இவர் என்கின்றது. இணை - ஒப்பு. பிணை - பெண்மான். மறி - மான்குட்டி. கலை - ஆண்மான். கங்குல் - இரா.

9. பொ-ரை : கயிலை மலை நிலை குலையுமாறு முத்துக்கள் பதித்த வீரக் கடகம் அணிந்த தன் கைகளால் எடுத்த இராவணனின் தோள் வலியைத் தம் பவழம் போன்ற கால்விரல் நுனியால் மெல்ல ஊன்றி அடர்த்துப் பின் அவனுக்கு இரங்கி அருள் புரிந்த சிவபிரானார்

Koviloor Digital Library

தவழுங்கொடிமுல்லை புறவஞ்சேர
நறவம்பூத்
தவிழும்பழையனூ ராலங்காட்டெம்
அடிகளே. 9

490. பகலுமிரவுஞ்சேர் பண்பினாரும்
நண்போரா
திகலுமிருவர்க்கு மெரியாய்த்தோன்றி
நிமிர்ந்தாரும்
புகலும்வழிபாடு வல்லார்க்கென்றுந்
தீயபோய்
அகலும்பழையனூ ராலங்காட்டெம்
அடிகளே. 10

முல்லைக்கொடிகள் முல்லை நிலத்தின்கண் தவழ்ந்து படர நறவக் கொடிகள் மலர்களைப் பூத்து விரிந்து நிற்கும் பழையனூரைச் சேர்ந்த ஆலங்காட்டு எம் அடிகள் ஆவார்.

கு-ரை : இராவணனைப் பையநெரித்த பெருமான் இவர் என்கின்றது. மலை - கயிலை மலை. தரளக்கடகம் கை - முத்துக் கடகம் செறிந்தகை. பவழநுனை விரல் - பவழம் போன்ற நுனியையுடைய விரல். பைய - மெதுவாக. பரிந்தார் - கருணைசெய்தவர். புறவம் - முல்லைநிலம். நறவம் - நறவுமலர்.

10. பொ-ரை : பகல் இரவு போன்ற வெண்மை கருமை நிறங் களைக் கொண்ட நான்முகனும் திருமாலும் தங்களிடையே உள்ள உறவு முறையையும் கருதாது யார் தலைவர் என்பதில் மாறுபட்டு நிற்க அவ்விருவர்க்கும் இடையே எரியுருவாய்த் தோன்றி ஓங்கி நின்ற வரும் ஆகம நூல்கள் புகலும் வழிபாடுகளில் தலை நிற்கும் அடியவர்க் குத் தீயன போக்கி அருள்புரிபவரும் ஆகிய பெருமான் பழையனூர் ஆலங்காட்டு எம் அடிகள் ஆவார்.

கு-ரை : தந்தையும் மகனும் என்ற முறையையும் பாராதே முனிந்த அயனுக்கும் மாலுக்கும் இடையே எரியாய் நிமிர்ந்த பெரு மான் இவர் என்கின்றது. பகலும் இரவும் சேர்பண்பினார். நிறத்தால் வெண்பகலையும், காரிரவையும் ஒத்த பண்பினர். நண்பு - தந்தையும்

Koviloor Digital Library

491. போழம்பலபேசிப் போதுசாற்றித்
திரிவாரும்
வேழம்வருமளவும் வெயிலேதுற்றித்
திரிவாரும்
கேழல்வினைபோகக் கேட்பிப்பாருங்
கேடிலா
ஆழ்வர்பழையனூ ராலங்காட்டெம்
அடிகளே. 11

492. சாந்தங்கமழ்மறுகிற் சண்பைஞான
சம்பந்தன்
ஆந்தண்பழையனூ ராலங்காட்டெம்
மடிகளை

மகனுமான முறையன்பு. இகலும் - மாறுபட்ட. புகலும் - விதிநூல்களாய ஆகமங்களிற் சொல்லப்பெற்ற. உண்ணும்வரை நோய்தடுக்கும் உலகமருந்துகள் போலாது என்றைக்கும் பாவம் அணுகாதவண்ணம் பாதுகாக்கும் அடிகள் என்பதை விளக்குதல் காண்க.

11. பொ-ரை : மாறுபட்ட சொற்களைப் பேசியும், காலத்துக்கு ஏற்றவாறு உண்மையல்லாதவைகளைச் சொல்லியும் திரியும் புறச் சமயத்தவரும், நன்மையல்லாதவற்றை உபதேசங்களாகக் கூறுபவரும், யானைத் தீ வரும் அளவும் வெயிலிடை உண்டு திரியும் மதவாதிகளுமாகிய புறச்சமயிகளைச் சாராது தம்மைச் சார்ந்த அடியவர்களைப் பற்றிய வினைகள் அகலுமாறு அவர்கட்கு உபதேசங்களைப் புரியச் செய்பவராகிய அழிவற்ற ஆளுமையுடையவர் ஆலங்காட்டு எம் அடிகள் ஆவார்.

கு-ரை : போழம் - மாறுபட்ட சொல். போது சாற்றி - காலம் பார்த்துச் சொல்லி. திரிவார் என்றது புறச்சமயிகளை. வேழம் - யானைத்தீ என்னும் நோய். துற்றி - உண்டு. கேழல் வினை - கெழுவுதலையுடைய வினை. போக - கெட. கேழ்பவர் - நன்மை உடையார், கேழ்பு - நன்மை, கேழ் அல் - நன்மை அல்லாத.

12. பொ-ரை : சந்தனம் கமழும் திருவீதிகளை உடைய சண்பைப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன் அழகிய தண்ணிய ஆலங்காட்டு வேந்தனாக விளங்கும் அவ்விறைவன் திருவருளாலே போற்றி

Koviloor Digital Library

வேந்தனருளாலே விரித்தபாட
லிவைவல்லார்
சேர்ந்தவிடமெல்லாந் தீர்த்தமாகச்
சேர்வாரே. 12

திருச்சிற்றம்பலம்

விரித்தோதிய இத்திருப்பதிகப் பாடல்களை வல்லவர்கள் சேர்ந்த இடங்களெல்லாம் புனிதமானவைகளாகப் பொருந்தப் பெறுவர்.

கு-ரை : இறைவனருளால் பாடிய இதை வல்லார் சேர்ந்த இடமெல்லாம் புனிதமாம் எனப் புகல்கின்றது. சாந்தம் - சந்தனம். தீர்த்தமாக - புனிதமாக. சேர்வார் - பொருந்துவார்.

திருத்தொண்டர் புராணம்

திருஞானசம்பந்தர் புராணம்

இம்மையிலே புவியுள்ளோர் யாருங் காண
ஏழுலகும் போற்றிசைப்ப எம்மை ஆளும்
அம்மைதிருத் தலையாலே நடந்து போற்றும்
அம்மையப்பர் திருவாலங் காடாம்என்று
தம்மையுடை யவர் மூதூர் மிதிக்க அஞ்சிச்
சண்பை வரும் சிகாமணியார் சாரச் சென்று
செம்மைநெறி வழுவாத பதியின் மாடோர்
செழும்பதியில் அன்றிரவு பள்ளி சேர்ந்தார்.

மாலையிடை யாமத்துப் பள்ளி கொள்ளும்
மறையவனார் தம்முன்பு கனவில் வந்(து)
ஆலவனத் தமர்ந்தருளும் அப்பர் நம்மை
அயர்த்தனையோ பாடுதற்(கு) என்றருளிச் செய்ய
ஞாலம்இருள் நீங்க வரும் புகலி வேந்தர்
நடுஇடையா மத்தின் இடைத் தொழுது ணர்ந்து
வேலைவிடம் உண்டவர்தங் கருணை போற்றி
மெய்யுருகித் திருப்பதிகம் விளம்ப லுற்றார்.

– சேக்கிழார்.

Koviloor Digital Library

46. திருவதிகைவீரட்டானம்

பதிக வரலாறு:

திருவக்கரை முதலிய பதிகளை வணங்கிய பிள்ளையார், அடியார் கூட்டத்துடன் திருவதிகைக்கு எழுந்தருளுகின்ற காலத்து, சிவபெருமான் தம்திருநடனத்தைப் புலப்படும்படிக் காட்டியருள 'குண்டைக் குறட்பூதம்' என்னும் இத்திருப் பதிகத்தை அருளிச்செய்தார்கள்.

பண்: தக்கராகம்

பதிக எண்: 46

திருச்சிற்றம்பலம்

493. குண்டைக் குறட்பூதங் குழும வனலேந்திக்
கெண்டைப் பிறழ்தெண்ணீர்க் கெடில வடபக்கம்
வண்டு மருள்பாட வளர்பொன் விரிகொன்றை
விண்ட தொடையலா னாடும்வீரட் டானத்தே. 1

494. அரும்புங் குரும்பையு மலைத்த மென்கொங்கைக்
கரும்பின் மொழியாளோ டுடன்கை யனல்வீசிச்

1. பொ-ரை : பருத்த குள்ளமான பூத கணங்கள் தன்னைச் சூழ்ந்து நிற்கக் கையில் அனலை ஏந்தியவனாய், வண்டுகள் மருளிந்தளப் பண் பாட, பொன் போன்று விரிந்து மலர்ந்த கொன்றை மலர் மாலை அணிந்தவனாய்ச் சிவபிரான் கெண்டை மீன்கள் பிறழ்ந்து விளையாடும் தெளிந்த நீரை உடைய கெடில நதியின் வடகரையில் உள்ள திருவதிகை வீரட்டானத்து ஆடுவான்.

கு-ரை : கெடில நதியின் வடபக்கத்து, கொன்றைமாலையணிந்த பெருமான் அனல் ஏந்தி வீரட்டானத்து ஆடும் என்கின்றது. குண்டை - பருத்த. குறள் - குள்ளமான. குழும - கூடியிருக்க. மருள் பாட - மருளிந்தளம் என்னும் பண்ணைப் பாட. இது குறிஞ்சிப்பண்திறம் எட்டனுள் ஒன்று. பொன்விரிகொன்றை - பொன்னிறமாக்விரிந்த கொன்றை. தொடையலான் - மாலையை அணிந்த இறைவன். தொடையலான் ஏந்தி வீரட்டானத்து ஆடும் எனப் பொருத்துக.

2. பொ-ரை : சிவபிரான் தாமரை அரும்பு, குரும்பை ஆகிய வற்றை அழகால் வென்ற மென்மையான தனங்களையும், கரும்பு

Koviloor Digital Library

சுரும்புண் விரிகொன்றைச் சுடர்பொற் சடைதாழ
விரும்பு மதிகையு ளாடும்வீரட் டானத்தே. 2

495. ஆடலழனாக மரைக்கிட் டசைத்தாடப்
பாடன் மறைவல்லான் படுதம் பலிபெயர்வான்
மாட முகட்டின்மேன் மதிதோ யதிகையுள்
வேடம் பலவல்லா னாடும்வீரட் டானத்தே. 3

போன்ற இனிய மொழிகளையும் உடைய உமையம்மையோடு கூடிக் கையில் அனல் ஏந்தி வீசிக் கொண்டு, வண்டுகள் தேனுண்ணும் இதழ் விரிந்த கொன்றை மாலை அணிந்த ஒளி மயமான பொன் போன்ற சடைகள் தாழத் தன்னால் பெரிதும் விரும்பப்படும் அதிகை வீரட் டானத்து ஆடுவான்.

கு-ரை : இறைவர் உமையம்மையாரோடு திருவதிகை வீரட்டா னத்து ஆடுவர் என்கின்றது.

அரும்பு - தாமரையரும்பு. அலைத்த - அழகின்மிகுதியால் வருத்திய. சுரும்பு - ஒருசாதி வண்டு. அதிகை - தலப்பெயர். வீரட் டானம் - கோயிற்பெயர்.

3. பொ-ரை : வென்றியையும் அழல் போலும் கொடிய தன்மை யையும் கொண்ட நாகத்தை இடையில் பொருந்தக் கட்டி ஆடுமாறு செய்து, பாடப்படும் வேதங்களில் வல்லவனாய், 'படுதம்' என்னும் கூத்தினை ஆடிக்கொண்டு, பலி தேடித் திரிபவனாய சிவபிரான் மதி தோய்ந்து செல்லுமாறு உயர்ந்த மாடவீடுகளை உடைய திருவதிகை யிலுள்ள வீரட்டானத்தில் பல்வேறு கோலங்களைக் கொள்ளுதலில் வல்லவனாய் ஆடுவான்.

கு-ரை : நாகம் முதலியவற்றைக் கட்டி, வேடம் பலவல்ல இறை வர் வீரட்டானத்து ஆடுவர் என்கின்றது. ஆடல் அழல் நாகம் - வெற்றி யோடுகூடிய கொடியபாம்பு.

இட்டு - அணியாக இட்டு. படுதம் பலி பெயர்வான் - 'படுதம்' என்னும் கூத்தினை ஆடிக்கொண்டு பலிக்காகத் திரிபவன். வேடம் பலவல்லான் என்றது நினைந்த வடிவை நினைந்த வண்ணம் அடையும் வல்லமை உடையனாதலின்.

Koviloor Digital Library

496. எண்ணா ரெயிலெய்தா னிறைவ னனலேந்தி
மண்ணார் முழவதிர முதிரா மதிசூடிப்
பண்ணார் மறைபாடப் பரம னதிகையுள்
விண்ணோர் பரவநின் றாடும்வீரட் டானத்தே. 4

497. கரிபுன் புறமாய கழிந்தா ரிடுகாட்டில்
திருநின் றொருகையாற் றிருவா மதிகையுள்
எரியேந் தியபெருமா னெரிபுன் சடைதாழ
விரியும் புனல்சூடி யாடும்வீரட் டானத்தே. 5

498. துளங்குஞ் சுடரங்கைத் துதைய விளையாடி
இளங்கொம் பனசாய லுமையோ டிசைபாடி

4. பொ-ரை : பகைவரது திரிபுரங்களை எய்து அழித்த இறைவன் அனலைக் கையில் ஏந்தி மார்ச்சனை இடப்பட்ட முழவு முழங்க இளம் பிறையை முடியில் சூடிப் பண்ணமைப்புடைய வேதங்களை அந்தணர் ஓதத் திருவதிகை வீரட்டானத்தே தேவர்கள் போற்ற நின்று ஆடுவான்.

கு-ரை : பகைவரது திரிபுரத்தை எரித்தருளிய இறைவர் அனலேந்தி, மதிசூடி, மறைபாட அதிகை வீரட்டானத்து ஆடுவர் என்கின்றது. எண்ணார் - பகைவர். மண் - மார்ச்சனை. முதிரா மதி - இளம் பிறை.

5. பொ-ரை : கரிந்த புல்லிய ஊர்ப்புறமாய இறந்தவர்களை எரிக்கும் சுடுகாட்டில், ஒரு திருக்கரத்தில் எரி ஏந்தி ஆடும் பெருமான் திருமகள் நிலைபெற்ற திருவதிகையில் உள்ள வீரட்டானத்தில் எரி போன்று சிவந்த தன் சடைகள் தாழ்ந்து விரிய தலையில் கங்கை சூடி ஆடுவான்.

கு-ரை : எரியேந்திய பெருமான் சடைதாழப் புனல்சூடி இடு காட்டில் ஆடுவார் என்கின்றது. கரி புன்புறம் ஆய - கரிந்த புல்லிய ஊர்ப்புறமாகிய. திரு நின்று - திருமகள் நிலைபெற்று, ஒருகையால் - ஒழிதலால்: அஃதாவது பிற இடங்கட்குச் செல்லுதலை ஒழிதலால். இது திரு அதிகை என்பதற்குப் பொருள் காட்டியவாறு.

6. பொ-ரை : அசைந்து எரியும் அனலை அழகிய கையில் பொருந்த ஏந்தி விளையாடி, இளங்கொம்பு போன்ற உமையம்மை

Koviloor Digital Library

வளங்கொள் புனல்சூழ்ந்த வயலா ரதிகையுள்
விளங்கும் பிறைசூடி யாடும்வீரட் டானத்தே. 6

499. **பாதம் பலரேத்தப் பரமன் பரமேட்டி**
பூதம் புடைசூழப் புலித்தோ லுடையாகக்
கீத முமைபாடக் கெடில வடபக்கம்
வேத முதல்வன்நின் றாடும்வீரட் டானத்தே. 7

500. **கல்லார் வரையரக்கன் றடந்தோள் கவின்வாட**
ஒல்லை யடர்த்தவனுக் கருள்செய் ததிகையுள்
பல்லார் பகுவாய நகுவெண் டலைசூடி
வில்லா லெயிலெய்தா னாடும்வீரட் டானத்தே. 8

யோடு இசை பாடி, வளமை உள்ள புனல் சூழ்ந்த வயல்களை உடைய திருவதிகையில் வீரட்டானத்தே முடிமிசை விளங்கும் பிறைசூடி ஆடுவான்.

கு-ரை : உமையோடு இசைபாடி ஆடுவார் என்கின்றது. துளங்கும் - அசைந்து (எரிகின்ற). துதைய - நெருங்க. சாயல் - மென்மை.

7. பொ-ரை : பரம்பொருளாகிய பரமன் தன் திருவடிகளைப் பலரும் பரவி ஏத்தி வணங்கவும், பூத கணங்கள் புடை சூழவும், புலித் தோலை உடுத்து, உமையம்மை கீதம் பாடக் கெடில நதியின் வட கரையில் வேதமுதல்வனாய் வீரட்டானத்தே ஆடுவான்.

கு-ரை : இது உமையவளே இசைபாட வேதமுதல்வன் ஆடு கிறான் என்கின்றது. பலர் என்றது பாதத்தைத் திருவருளாகவே எண்ணிப்பணியும் சிவஞானியரும், உறுப்பென எண்ணிப்போற்றும் உலக ஞானியரும் ஆகிய பலரையும்.

8. பொ-ரை : கற்கள் பொருந்திய கயிலை மலையை எடுத்த இராவணனின் பெரிய தோள்களின் அழகு வாடுமாறு அடர்த்துப் பின் அவனுக்கு அருள் பல செய்தும், முப்புரங்களை வில்லால் எய்து, அழித்தும், தனது பெருவீரத்தைப் புலப்படுத்திய இறைவன் பற்கள் பொருந்திய பிளந்தவாயை உடைய வெள்ளிய தலைமாலையைச் சூடித்திருவதிகை வீரட்டானத்தே ஆடுவான்.

Koviloor Digital Library

501. நெடியா னான்முகனு நிமிர்ந்தானைக் காண்கிலார்
பொடியாடு மார்பானைப் புரிநூ லுடையானைக்
கடியார் கழுநீலம் மலரும் மதிகையுள்
வெடியார் தலையேந்தி யாடும்வீரட் டானத்தே. 9

502. அரையோ டலர்பிண்டி மருவிக் குண்டிகை
சுரையோ டுடனேந்தி யுடைவிட் டுழல்வார்கள்
உரையோ டுரையொவ்வாதுமையோடுடனாகி
விரைதோ யலர்தாரா னாடும்வீரட் டானத்தே. 10

கு-ரை : இராவணனது தோளழகுகெட அடர்த்து அவனுக்கு அருள்செய்தவர் அதிகையுள் ஆடுகிறார் என்கின்றது. கல்லார் வரை என்றது கயிலையை. கயிலை கல்லில்லாததாயினும் மலையென்ற பொதுமைபற்றிக் கூறியது. கவின் - அழகு. ஒல்லை - விரைவாக: காலந் தாழ்க்க அடர்ப்பின் அவனிறந்தேபடுவான் என்னுங் கருணை யால். பல் ஆர் பகுவாய - பற்கள் பொருந்திய பிளவுபட்ட வாயையு டைய.

9. பொ-ரை : பேருருக்கொண்ட திருமாலும், நான்முகனும் அழ லுருவாய் ஓங்கி நிமிர்ந்தவனை, திருநீறணிந்த மார்பினனை, முப்புரி நூல் அணிந்தவனைக் காண்கிலார்: அப்பெருமான் மணம் கமழும் நீலப்பூக்கள் மலரும் திருவதிகையிலுள்ள வீரட்டானத்தே முடை நாற்றமுடைய தலை ஓட்டைக் கையில் ஏந்தி ஆடுகின்றான்.

கு-ரை : அயனும் மாலும் அறியமுடியாதவர் என்கின்றது. கடி - மணம். கழுநீலம் - நீலப்பூ. வெடி - முடைநாற்றம். நெடியானும் நான் முகனும் நிமிர்ந்தானை, மார்பானை, உடையானை, காண்கிலார்: அவன் அதிகையுள் வீரட்டானத்து ஆடும் என முடிக்க.

10. பொ-ரை : அரச மரத்தையும் தழைத்த அசோக மரத்தையும் புனித மரங்களாகக் கொண்டு குண்டிகையாகச் சுரைக்குடுக்கையை ஏந்தித் திரியும் புத்தர்கள், ஆடையற்றுத் திரியும் சமணர்கள் ஆகியவர் களின் பொருந்தாத வார்த்தைகளைக் கேளாதீர். மணம் கமழும் மாலை அணிந்த சிவபிரான் உமையம்மையோடு உடனாய் அதிகை வீரட்டா னத்தே ஆடுவான். அவனை வணங்குங்கள்.

கு-ரை : அரை - அரச மரம். புத்தர் சமணர் உரைகள் ஒன்றோடு

Koviloor Digital Library

503. ஞாழல் கமழ்காழி யுண்ஞான சம்பந்தன்
வேழம் பொருதெண்ணீ ரதிகைவீரட் டானத்துச்
சூழுங் கழலானைச் சொன்ன தமிழ்மாலை
வாழுந் துணையாக நினைவார் வினையிலரே. 11

திருச்சிற்றம்பலம்

ஒன்று ஒவ்வா என்கின்றது. சுரைக்குடுக்கையை ஏந்தித் திரிபவர் ஆதலின் இங்ஙனம் கூறினார். விரை - மணம்.

11. பொ-ரை : ஞாழற் செடிகளின் மலர்கள் மணம் கமழும் சீகாழியுள் தோன்றிய ஞானசம்பந்தன், நாணல்களால் கரைகள் அரிக்கப் படாமல் காக்கப்படும் தெளிந்த நீர்வளம் உடைய திருவதிகை வீரட்டானத்தில், ஆடும் கழல் அணிந்த அடிகளை உடைய சிவ பிரானைப் போற்றிப் பாடிய இத்தமிழ் மாலையை, வாழ்வுத் துணை யாக நினைபவர் வினையிலராவர்.

கு-ரை : இப்பதிகத்தைத் தமது வாழ்விற்குத் துணையாகக் கொண்டவர்கட்கு வினையில்லை என்கின்றது. ஞாழல் - புலிநகக் கொன்றை. வேழம் - கொறுக்காந் தட்டை. கரை - கரையாமலிருக்க நாணல் இடுவது மரபு.

திருத்தொண்டர் புராணம்

திருஞானசம்பந்தர் புராணம்

ஆதி தேவர்அங் கமர்ந்தவீ ரட்டானஞ்
சென்றணை பவர்முன்னே
பூதம் பாடநின் றாடுவார் திருநடம்
புலப்படும் படிகாட்ட
வேத பாலகர் பணிந்துமெய் யுணர்வுடன்
உருகிய விருப்போடும்
கோதி லாஇசை குலவுகுண் டைக்குறட்
பூதம்என் றெடுத்தேத்தி.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

47. திருச்சிரபுரம்

பண்: பழந்தக்கராகம்

பதிக எண்: 47

திருச்சிற்றம்பலம்

504. பல்லடைந்த வெண்டலையிற்
பலிகொள்வ தன்றியும்போய்
வில்லடைந்த புருவநல்லாண்
மேனியில் வைத்தலென்னே
சொல்லடைந்த தொன்மறையோ
டங்கங் கலைகளெல்லாஞ்
செல்லடைந்த செல்வர்வாழுஞ்
சிரபுர மேயவனே. 1

505. கொல்லைமுல்லை நகையினாளோர்
கூறதுவன் றியும்போய்
அல்லல்வாழ்க்கைப் பலிகொண்டுண்ணு
மாதரவென் னைகொலாஞ்

1. பொ-ரை : பொருள் பொதிந்த சொற்கள் நிரம்பிய பழமையான வேதங்களையும், அவற்றின் அங்கங்களையும், பிற கலைகளையும் கற்றுணர்ந்த செல்வர்கள் வாழும் சிரபுரம் என்னும் சீகாழிப் பதியுள் எழுந்தருளிய இறைவனே! பற்கள் பொருந்திய வெண்மையான தலையில் பல இடங்களுக்கும் போய்ப் பலியேற்பதோடு வில் போன்ற புருவத்தை உடைய உமையம்மையை உன் திருமேனியில் கொண்டுள்ள காரணம் யாதோ?

கு-ரை : வேதம், அங்கம், கலைகள் எல்லாவற்றினும் செல்லும் கலைச்செல்வர்கள் வாழும் சிரபுரமேயவனே! வெண்தலையிற் பலி கொள்வதோடன்றி உமையவளை ஒருபாகத்து வைத்தது என்னே என வினவுகின்றார். வில் அடைந்த புருவம் - வில்லை ஒத்த புருவம். செல் அடைந்த செல்வர் - வேத முதலியவற்றில் செல்லுதலைப்பெற்ற கலைச்செல்வர்கள்.

2. பொ-ரை : சொல்லச் சொல்ல நீண்டு செல்லும் பெருமையாளரும், பழமையான கலைகளைக் கற்று வல்லவர்களுமாகிய அறிஞர்கள்

Koviloor Digital Library

சொல்லநீண்ட பெருமையாளர்
தொல்கலை கற்றுவல்லார்
செல்லநீண்ட செல்வமல்கு
சிரபுர மேயவனே. 2

506. நீரடைந்த சடையின்மேலோர்
நிகழ்மதி யன்றியும்போய்
ஊரடைந்த வேறதேறி யுண்பலி
கொள்வதென்னே
காரடைந்த சோலைசூழ்ந்து
காமரம் வண்டிசைப்பச்
சீரடைந்த செல்வமோங்கு
சிரபுர மேயவனே. 3

வாழ்வதும், வழங்கத் தொலையாத செல்வ வளத்தை உடையதுமான சிரபுரம் மேவிய இறைவனே! முல்லை நிலத்தே தோன்றிய முல்லை யரும்பு போன்ற பற்களை உடைய உமையம்மை ஓர் கூற்றில் விளங் கவும் சென்று அல்லற்படுவோர் ஏற்கும் பலி உணவை ஏற்று உண்ணு தலில் விருப்பம் கொள்வது ஏனோ?

கு-ரை : இதுவும் பெண்பாகராகிய தேவரீர் பலிதேர்வது ஏன் என்கின்றது. கொல்லை - முல்லை நிலம். முல்லை நகை - முல்லை யரும்புபோன்ற பல். நகை: தொழிலாகுபெயர். ஓர் கூறு - ஒரு பங்கில் உள்ளாள். அல்லல் வாழ்க்கைப் பலி - துன்ப வாழ்வாகிய பலி. 'இரத்த லின் இன்னாதது இல்லை' என்ற வள்ளுவர் குறளும் நோக்குக.

3. பொ-ரை : வண்டுகள் சீகாமரம் என்னும் பண்ணைப் பாடி மகிழ்ந்துறைவதும், மேகங்கள் தவழும் சோலைகளால் சூழப்பெற்ற தும், அறநெறியில் விளைந்த செல்வம் பெருகி விளங்குவதுமாகிய சிர புரம் மேவிய இறைவனே! கங்கையை அணிந்த சடைமுடியின் மேல் விளங்கும் பிறைமதி ஒன்றை அணிந்து, பல ஊர்களையும் அடைதற்கு ஏதுவாய ஆனேற்றில் ஏறிச் சென்று, பலரிடமும் பலி கொள்வது ஏனோ?

கு-ரை : மதிசூடிய நீர் பலிகொள்வது ஏன் என்கின்றது. கார் - மேகம். வண்டு காமரம் இசைப்ப என மாறுக. அறவழி ஈட்டப்பெற்ற செல்வமாதலின், சீர் அடைந்த செல்வம் என்றார்.

Koviloor Digital Library

507. கையடைந்த மானினோடு
காரர வன்றியும்போய்
மெய்யடைந்த வேட்கையோடு
மெல்லியல் வைத்தலென்னே
கையடைந்த களைகளாகச்
செங்கழு நீர்மலர்கள்
செய்யடைந்த வயல்கள்சூழ்ந்த
சிரபுர மேயவனே. 4

508. புரமெரித்த பெற்றியோடும்
போர்மத யானைதன்னை
கரமெடுத்துத் தோலுரித்த
காரண மாவதென்னே
மரமுரித்த தோலுடுத்த
மாதவர் தேவரோடுஞ்
சிரமெடுத்த கைகள் கூப்புஞ்
சிரபுர மேயவனே. 5

KOVILOOR ANDAV... LIBRARY, KOVIL... A. No. 16811

4. பொ-ரை : களையெடுப்போர் கைகளில், மிக அதிகமான களைகளாகச் செங்கழுநீர் மலர்கள் வந்தடையும் அழகிய வயல்களால் சூழப்பட்ட சிரபுரம் மேவிய இறைவனே! கைகளில் மான், கரிய பாம்பு ஆகியவற்றைக் கொண்டு உனது திருமேனியில் பெரு விருப்போடு உமையம்மையை இடப்பாகமாகக் கொண்டுள்ளது ஏனோ?

கு-ரை : கையில் மானையும் அரவையும் அணிந்திருப்பதோடு அன்றி, மெல்லியலையும் வைத்திருப்பது ஏன் என்கின்றது. கார் அரவு - கரும்பாம்பு. வேட்கை - பற்றுள்ளம். கையடைந்த களைகள் - பக்கங்களையடைந்த களைகள். செய் அடைந்த வயல்கள் - நேர்த்தி அமைந்த வயல்கள்.

5. பொ-ரை : மரத்தை உரித்ததால் ஆன மரவுரி என்னும் ஆடையை அணிந்த முனிவர்களும் தேவர்களும் கைகளைத் தலை மிசைக் கூப்பி வணங்கும் சிரபுரம் மேவிய இறைவனே! திரிபுரங்களை எரித்தழித்த பெரு வீரத்தோடு போர் செய்ய வந்த மத யானையைக் கையால் தூக்கி அதன் தோலை உரித்துப் போர்த்த, காரணம் யாதோ?

Koviloor Digital Library

509. கண்ணுமூன்று முடையதன்றிக்
கையினில் வெண்மழுவும்
பண்ணுமூன்று வீணையோடு
பாம்புடன் வைத்தலென்னே
எண்ணுமூன்று கனலுமோம்பி
யெழுமையும் விழுமியராய்த்
திண்ணமூன்று வேள்வியாளர்
சிரபுர மேயவனே. 6

510. குறைபடாத வேட்கையோடு
கோல்வளை யாளொருபாற்
பொறைபடாத வின்பமோடு
புணர்தரு மெய்ம்மையென்னே

கு-ரை : திரிபுரம் எரித்த தேவரீர் யானையை உரித்தது ஏன் என்கின்றது. பெற்றி - தன்மை. கரம் எடுத்து - கையால் தூக்கி, மரம் உரித்த தோல் - மரவுரி. தேவரும் முனிவரும் கை தலைமேல் கூப்பி வணங்கும் சிரபுரமேயவன் என்க.

6. பொ-ரை : ஆகவனீயம், காருகபத்தியம், தக்ஷிணாக்கினி என்று எண்ணப்படும் முத்தீயையும் வேட்பதுடன் எழு பிறப்பிலும் தூயவராய் உறுதிப்பாட்டுடன் தேவ யாகம், பிதிர் யாகம், இருடி யாகம் ஆகிய மூன்று வேள்விகளையும் புரியும் அந்தணாளர் வாழும் சிரபுரம் மேவிய இறைவனே; முக்கண்களை உடையவனாய்க் கைகளில் வெண் மழு, பண் மூன்றுடைய வீணை, பாம்பு ஆகியன கொண்டுள்ள காரணம் யாதோ?

கு-ரை : மூன்று கண்ணுடைய முதல்வராகிய தேவரீர் மழு, வீணை, பாம்பு, இவற்றை வைத்தது ஏன் என்கின்றது. பண் மூன்று - பண், திறம், திறத் திறம் என்பன. இறைவன் திருக்கரத்தில் வீணையுண்மை 'எம்மிறை நல்வீணை வாசிக்குமே' என்ற பகுதியாலும் அறிக. எண்ணும் - எண்ணப்படுகின்ற. மூன்று கனல் - ஆகவனீயம், தட்சிணாக்கினி, காருகபத்யம் என்பன. மூன்று வேள்வியாளர் - தேவயஞ்ஞம், பிதிர்யஞ்ஞம், ருஷியஞ்ஞம் என்னும் மூன்று வேள்விகளையும் செய்பவர்கள்.

7. பொ-ரை : சிறிதும் சாயாத மெல்லிய தனங்களை உடைய இள மகளிர் மாளிகைகளின் மேல் இருந்து குற்றமற்ற பாடல்களைப் பாடும்

Koviloor Digital Library

இறைபடாத மென்முலையார்
மாளிகை மேலிருந்து
சிறைபடாத பாடலோங்கு
சிரபுர மேயவனே. 7

511. மலையெடுத்த வாளரக்க
னஞ்சவொ ருவிரலால்
நிலையெடுத்த கொள்கையானே
நின்மல னேநினைவார்
துலையெடுத்த சொற்பயில்வார்
மேதகு வீதிதோறுஞ்
சிலையெடுத்த தோளினானே
சிரபுர மேயவனே. 8

மகிழ்ச்சி மிகுந்துள்ள சிரபுரம் மேவிய இறைவனே, குன்றாத வேட்கை யோடு திரண்ட கை வளைகளை உடைய உமையம்மையை ஒரு பாகமாக அளவற்ற இன்பத்துடன் புணர்தற்குக் காரணம் என்னையோ.

கு-ரை : தேவரீரைக் குறையாக் காதலோடும், பொறுக்கலாற்றாத இன்பத்தோடும் பெரிய பிராட்டி புணர்வதென் என்கின்றது. வேட்கை - பொருளையடையாத காலத்து அதன்கண்ணிகழும் பற்றுள்ளமாதலின் அடைந்தவழி நுகர்ந்தவழிக் குறையுமன்றே அங்ஙனம் குறையாமல் என்பது வலியுறுக்கக் குறைபடாத வேட்கை என்றார். கோல் வளை - திரண்ட வளையல். பொறைபடாத இன்பம் - பொறுக்க முடியாத அளவுகடந்த இன்பம். மெய்ம்மை - தத்துவம். இறைபடாத - சிறிதும் தளராத. சிறை-குற்றம்.

8. பொ-ரை : கயிலை மலையை எடுத்த வாள்வலி உடைய இரா வணன் அஞ்சுமாறு கால் விரல் ஒன்றினால் அடர்த்துத் தன் நிலையை எடுத்துக் காட்டிய செயலைப் புரிந்தவனே, குற்றமற்றவனே, தன்னை நினைவாரும் இருவினையொப்புடன் தோத்திரிக்கும் அன்பர்களும் மேன்மை மிக்க வீதி தொறும் வாழ விசயனுக்காக வில்லைச் சுமந்த தோளினை உடையவனே! சிரபுரம் மேவியவனே!

கொள்கையனே என்று பாடம் இருக்கலாம். நிலை எடுத்த கொள்கை என்னே என்று பொருள் கொள்ளின் ஏனைய திருப்பாடல் களுடன் ஒக்கும்.

Koviloor Digital Library

512. மாலினோடு மலரினானும்
வந்தவர் காணாது
சாலுமஞ்சப் பண்ணிநீண்ட
தத்துவ மேயதென்னே
நாலுவேத மோதலார்கள்
நந்துணை யென்றிறைஞ்சச்
சேலுமேயுங் கழனிசூழ்ந்த
சிரபுர மேயவனே. 9

513. புத்தரோடு சமணர்சொற்கள்
புறனுரை யென்றிருக்கும்
பத்தர்வந்து பணியவைத்த
பான்மைய தென்னைகொலாம்

கு-ரை : இது இறைவனை நின்மலனே! கொள்கையானே! தோளினானே! மேயவனே! என விளிக்கின்றது. அரக்கன் - இராவணன், நிலை யெடுத்த - இறைத்தன்மையின் நிலையை எடுத்துக் காட்டிய; நிலைக்கச்செய்த எனலுமாம். துலையெடுத்த சொல் பயில்வார் - இருவினையொப்போடு கூடிய தோத்திரிக்கும் அன்பர் கள். மேதகு வீதி - மேவுதல் தக்கவீதி. அதாவது அவர்கள் வாழ்கின்ற வீதி. சிலை எடுத்த - வில்லைச் சுமந்த.

9. பொ-ரை : நான்கு வேதங்களையும் ஓதும் அந்தணர்கள் நம் துணைவனே என்று போற்றி இறைஞ்சச் சேல் மீன்கள் மேயும் வயல்கள் சூழ்ந்த சிரபுரம் மேவிய இறைவனே! தாமே பெரியர் என வந்த திரு மாலும் தாமரை மலரில் உறையும் நான்முகனும் இயலாது மிகவும் அஞ்சுமாறு செய்து மிக நீண்ட திருவுருவைக் கொண்டது ஏன்?

கு-ரை : அயனும் மாலுங் காணாதவண்ணம் நீண்டதன் தத்துவம் என்ன என்கின்றது. சாலும் - மிகவும். ஓதலார்கள் - ஓதுதலையுடையவர்கள். சேலு மேயும் கழனி - சேல் மீன்கள் மேயும் வயல். சேலு என்பதில் உகரம் சாரியை.

10. பொ-ரை : மதம் பொருந்திய யானையின் தோலைப் போர்த்து உமையம்மையாருடன் சித்தர்கள் பலரும் பணியச் செல்வச் சிரபுரநகரில் மேவிய இறைவனே! புத்தர்கள் சமணர்கள் ஆகிய

Koviloor Digital Library

மத்தயானை யுரியும்போர்த்து
மங்கையொடும்முடனே
சித்தர்வந்து பணியுஞ்செல்வச்
சிரபுர மேயவனே. 10

514. தெங்குநீண்ட சோலைசூழ்ந்த
சிரபுர மேயவனை
அங்கநீண்ட மறைகள்வல்ல
வணிகொள்சம் பந்தனுரை
பங்கநீங்கப் பாடவல்ல
பத்தர்கள் பாரிதன்மேற்
சங்கமோடு நீடிவாழ்வர்
தன்மையி னாலவரே. 11

திருச்சிற்றம்பலம்

புறச்சமயிகளின் வார்த்தைகள் புறனுரை என்று கருதும் பத்தர் வந்து பணியுமாறு செய்த பான்மையாதோ? உரியும் - உம்மை இசைநிறை.

கு-ரை : புத்தர் சமணராகிய புறச்சமயிகள் வார்த்தை புறம் பானது என்றெண்ணும் அன்பர்கள் வணங்க இருப்பதேன்? என்கின்றது. சித்தர் - யோகநெறியில் நின்று சித்திபெற்றவர்கள்.

11. பொ-ரை : தென்னைகள் நீண்டு வளர்ந்து பயன்தரும் சோலைகள் சூழ்ந்த சிரபுரம் மேவிய இறைவனை ஆறு அங்கங் களுடன் விரிந்துள்ள வேதங்களை அறிந்துணர்ந்த அழகிய ஞானசம் பந்தன் போற்றிப் பாடிய இப்பதிக வாசகங்களைத் தம் குற்றங்கள் நீங்கப் பாடவல்ல பத்தர்கள் இவ்வுலகில் அடியவர் கூட்டங்களோடு வாழும் தன்மையினால் வாழ்நாள் பெருகி வாழ்வர்.

கு-ரை : இப்பதிகத்தைக் குற்றமறப்பாட வல்லார் இவ்வுலகில் சத்சங்கத்தோடு நீடுவாழ்வார் எனப் பயன்கூறுகிறது. அங்கம் நீண்ட மறைகள் - சிக்ஷை முதலிய ஆறு அங்கங்களால் நீண்ட வேதங்கள். பங்கம் - மலமாயாபந்தத்தால் விளைந்த குற்றங்கள். சங்கம் - அடியார் கூட்டம். தன்மையினால் நீடிவாழ்வர் எனக் கொண்டு கூட்டுக.

Koviloor Digital Library

48. திருச்சேய்ஞலூர்

பதிக வரலாறு:

திருப்புறம்பயத்தை வணங்கி எழுந்தருளுகின்ற காழி நாதர் திருச்சேய்ஞலூரை, அணுகுகின்றகாலத்து, அவ்வூர் அந்த ணர்கள் சண்டேசப்பிள்ளையாரே எழுந்தருளியதாக எண்ணி வணங்கி வரவேற்றுப் பாராட்டினர். பிள்ளையார் சண்டேசர் அவதரித்த தலம் ஆகையால் சிவிகையிற் செல்லலாகாதென் றெண்ணித் திருவடிநோவ நடந்து திருக்கோயிலை அடைந்தார். இறைவனை வணங்கினார். 'நூலடைந்த கொள்கை' என்னும் இப்பதிகத்தை அருளிச்செய்தார். முருகன் வழிபட்டதலம் என்பதைக் காட்ட, 'சேயடைந்த சேய்ஞலூர்' என்றும், சண்டேசர் வரலாற்றைத் தெரிவிக்க 'பீரடைந்த பாலதாட்ட' என்றும் தல வரலாற்றுப் பகுதிகளைக் குறிப்பித்தருளுகிறார்கள்.

பண்: பழந்தக்கராகம்

பதிக எண்: 48

திருச்சிற்றம்பலம்

515. நூலடைந்த கொள்கையாலே
நுன்னடி கூடுதற்கு
மாலடைந்த நால்வர்கேட்க
நல்கிய நல்லறத்தை
ஆலடைந்த நீழன்மேவி
யருமறை சொன்னதென்னே
சேலடைந்த தண்கழனிச்
சேய்ஞலூர் மேயவனே. 1

1. பொ-ரை : சேல் மீன்கள் நிறைந்த குளிர்ந்த வயல்களால் சூழப்பட்ட திருச்சேய்ஞலூரில் மேவிய இறைவனே! வேதம் முதலிய நூல்களில் விதிக்கப்பட்ட முறைகளினால் உன் திருவடிகளை அடை தற்கு முயன்றும் அஞ்ஞானம் நீங்காமையால் சனகாதி முனிவர்களா கிய நால்வர் உன்னை அடைந்து உண்மைப் பொருள் கேட்க, அவர்கள் தெளிவு பெறுமாறு கல்லால மரநிழலில் வீற்றிருந்து அருமறை நல்கிய நல்லறத்தை எவ்வாறு அவர்கட்கு உணர்த்தியருளினாய்? கூறுவா யாக.

Koviloor Digital Library

516. நீறடைந்த மேனியின்க
ணேரிழை யாளொருபால்
கூறடைந்த கொள்கையன்றிக்
கோல வளர்சடைமேல்
ஆறடைந்த திங்கள்சூடி
யரவம ணிந்ததென்னே
சேறடைந்த தண்கழனிச்
சேய்ஞலூர் மேயவனே. 2

517. ஊனடைந்த வெண்டலையி
னோடுப லிதிரிந்து
கானடைந்த பேய்களோடு
பூதங்க லந்துடனே

கு-ரை : பலநூல் கற்றும் மயக்கந்தெளியாமையாலே வந்து கேட்ட சனகாதியர் நால்வர்க்கும் உபதேசப்பொருளை உரைத்த தென்னே என வினாவியதாக அமைந்தது இப்பாடலும் பிறவும். நூல் - வேதாகம முதலிய நூற்பிரமாணங்கள். மால் - மயக்கம். நால்வர் - சனகாதியர் நால்வர். அரு மறை - அரிய அநுபூதி நிலையாகிய இரக சியத்தை.

2. பொ-ரை : சேறு மிகுந்த குளிர்ந்த வயல்களால் சூழப்பட்ட திருச்சேய்ஞலூரில் எழுந்தருளிய இறைவனே! திருநீறணிந்த தன் திரு மேனியின்கண் உமையம்மை ஒருபால் விளங்க அழகியதாய் நீண்டு வளர்ந்த சடைமேல் கங்கையையும் தன்னைச் சரணாக அடைந்த திங்களையும் சூடிப் பாம்பையும் அணிந்துள்ள காரணம் யாதோ?

கு-ரை : ஒருபாகமாக உமையைக் கொண்டிருத்தலே யன்றிக் கங்கை முதலியவற்றையும் அணிந்ததென்னே என்கின்றது. கோலம் - அழகு. பெண்ணொருபாதியராக இருந்தும், மற்றொரு பெண்ணாகிய கங்கையையும், காமத்தாற் கலைகுறைந்த மதியையும், போகியாகிய பாம்பையும் அணிதல் ஆகுமா என வினாவியதன் நயம் ஓர்க.

3. பொ-ரை : வண்டுகள் நிறைந்த சோலைகள் செறிந்த திருச் சேய்ஞலூரில் எழுந்தருளிய இறைவனே! ஊன் பொருந்திய வெண்மை யான தலையோட்டைக் கையில் ஏந்தி, உண் பலிக்குத் திரிந்து காட்டில்

Koviloor Digital Library

மானடைந்த நோக்கிகாண
மகிழ்ந்தெரி யாடலென்னே
தேனடைந்த சோலைமல்கு
சேய்ஞலூர் மேயவனே. 3

518. வீணடைந்த மும்மதிலும்
வின்மலை யாவரவின்
நாணடைந்த வெஞ்சரத்தா
னல்லெரி யூட்டலென்னே
பாணடைந்த வண்டுபாடும்
பைம்பொழில் சூழ்ந்தழகார்
சேணடைந்த மாடமல்கு
சேய்ஞலூர் மேயவனே. 4

வாழும் பேய்களோடு பூதகணங்களும் கலந்து சூழ, மான் போன்ற கண்ணை உடைய உமையம்மை காண மகிழ்வோடு இடுகாட்டில் எரி யாடுவது ஏன்?

கு-ரை : பலியேற்று, பேயும் பூதங்களும் புடைசூழ, மலையரசன் மகள் காண எரியாடுதல் ஏன் எனவினவுவதை விளக்குகிறது. கான் - காடு. மான் அடைந்த நோக்கி - மான் பார்வையைக் கற்றுக் கொள்வதற் காக வந்தடைந்த நோக்கினையுடையாளாகிய உமாதேவி.

4. பொ-ரை : பண்ணிசையோடு வண்டுகள் பாடும் பசுமையான பொழில் சூழ்ந்ததும், அழகியதாய் உயர்ந்த மாட வீடுகள் நிறைந்தது மான திருச்சேய்ஞலூரில் எழுந்தருளிய இறைவனே! மும்மதில்களும் வீணடையுமாறு மலையை வில்லாகவும் அரவை அவ்வில்லின் நாணாகவும் கொண்டு கொடிய அம்பால் பெரிய எரியை அம்முப்புரங் களுக்கு ஊட்டியது ஏன்?

கு-ரை : மலை வில்லாக, பாம்பு நாணாகக் கொண்டு முப்புரத் தைத் தீவைத்தது என்னே எனவினாவுகிறது இத்திருப்பாடல். வீண் அடைந்த - பயனற்றுப்போன, நல்லெரி என்றது பூத எரிபோலாது, புண்ணியப் பொருளாகிய சிவபெருமானுடைய சிரிப்பினின்றெழுந்த சிவாக்கினி என்பதைக் குறிப்பித்தது. பாண் - பாட்டு. சேண் - ஆகாயம்.

Koviloor Digital Library

519. பேயடைந்த காடிடமாப்
பேணுவ தன்றியும்போய்
வேயடைந்த தோளியஞ்ச
வேழமுரி த்ததென்னே
வாயடைந்த நான்மறையா
றங்கமோ டைவேள்வித்
தீயடைந்த செங்கையாளர்
சேய்ஞலூர் மேயவனே. 5

520. காடடைந்த வேனமொன்றின்
காரண மாகிவந்து
வேடடைந்த வேடனாகி
விசயனொ டெய்ததென்னே

5. பொ-ரை : வாயினால் ஓதப்பெற்ற நான்மறைகளோடு ஆறு அங்கங்களையும் கற்று, ஐவகை வேள்விகளை இயற்றி, தீப் பொருந்திய சிவந்த கையினராய் விளங்கும் அந்தணர் வாழும் சேய்ஞலூர் மேயவனே! சுடுகாட்டை இடமாகக் கொண்டு ஆடி உகப்பதோடு அன்றியும் சென்று மூங்கில் போன்ற தோளினை உடைய உமையம்மை அஞ்ச யானையை உரித்தது ஏனோ?

கு-ரை : சுடுகாட்டையிடமாகக் கொண்டு ஆடுதலே யன்றி அம்மை யஞ்ச ஆனை உரித்ததென்னே என்கின்றது. பேணுவது - விரும்பியமர்வது. வேய் அடைந்த தோளி - மூங்கிலையொத்த தோள்களையுடைய உமையம்மை. வாயடைந்த - ஓதப்பெறுகின்ற; உண்மை செறிந்த என்றுமாம். ஐவேள்வி - தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான் என்ற ஐவருக்கும் செய்யப்பெறும் வேள்வி. தீ அடைந்த செங்கையாளர் - தீப்பொருந்திய வலக்கரத்தையுடைய அந்தணர்கள்.

6. பொ-ரை : கோடுகளோடு கூடிய பெரிய யானைப் படைகளை உடைய கோச்செங்கட் சோழனுக்கு அருள் செய்தவனும், பெருமை பொருந்திய செல்வர்கள் வாழும் திருச்சேய்ஞலூரில் மேவியவனு மாகிய இறைவனே! வில்லடிபட்டுக் காட்டுள் சென்று பதுங்கிய பன்றி ஒன்றின் காரணமாக, தான் வேடன் உருத்தாங்கி வந்து அருச்சுன னோடு போர் புரிந்தது ஏனோ?

Koviloor Digital Library

கோடடைந்த மால்களிற்றுக்
கோச்செங்க ணாற்கருள்செய்
சேடடைந்த செல்வர்வாழுஞ்
சேய்ஞலூர் மேயவனே. 6

521. பீரடைந்த பாலதாட்டப்
பேணாத வன்றாதை
வேரடைந்து பாய்ந்ததாளை
வேர்த்தடிந் தான்றனக்குத்
தாரடைந்த மாலைசூட்டித்
தலைமைவ குத்ததென்னே
சீரடைந்த கோயின்மல்கு
சேய்ஞலூர் மேயவனே. 7

கு-ரை : பன்றியைத்துரத்திவந்து வேடனாகி விசயனோடு சண்டையிட்டது ஏன் என்கின்றது. ஏனம் - பன்றி. இது விசயன் தவத்தைக் கெடுத்துக் கொல்லவந்த மூகாசுரன் என்னும் பன்றி. இதனைத் திருவுள்ளம் பற்றிய சிவபெருமான் பன்றியைக்கொன்று விசயனைக்காத்தனர் என்பது வரலாறு. கோடு - கொம்பு. மால் - பெரிய; மயக்கமுமாம். கோச்செங்கண்ணான் செய்த கோயில்களில் ஒன்றாதலின் அவற்கு அருள்செய் சேய்ஞலூர் மேயவனே என்றார். சேடு - பெருமை.

7. பொ-ரை : சிறப்புமிக்க மாடக் கோயிலாய் விளங்கும் திருச் சேய்ஞலூரில் விளங்கும் இறைவனே! பசுவின் முலைக்காம்பின் வழிச் சுரந்து நின்ற பாலைச் சண்டீசர் மணலால் தாபித்த இலிங்கத்துக்கு ஆட்டி வழிபட, அதனை விரும்பாது சினந்து பாற்குடத்தை இடறிய தன் தந்தையின் காலைத் தடிந்த சண்டீசரின் பக்தியை மெச்சி உன் தாரையும் மாலையையும் சூட்டி அவரைச் சிவகணங்களின் தலைவர் ஆக்கியது ஏனோ?

கு-ரை : தந்தையின் தாளைவெட்டிய சண்டீசற்கு மாலைசூட்டித் தலைமை தந்ததென்னே என்கின்றது. பீர் - சுரப்பு. பேணாது - அது சிவார்ப்பணம் ஆன அருமைப்பாட்டை அகங்கொள்ளாது. அவன் என்றது விசாரசருமனை. தாதை - எச்சதத்தன். வேர் அடைந்து பாய்ந்த தாளை - வேரூன்றிப் பாற்குடத்தின் மேல் பாய்ந்ததாளை; அதாவது

Koviloor Digital Library

522. மாவடைந்த தேரரக்கன் வலி
தொலை வித்தவன்றன்
நாவடைந்த பாடல்கேட்டு
நயந்தருள் செய்ததென்னே
பூவடைந்த நான்முகன்போற்
பூசுரர் போற்றிசெய்யும்
சேவடைந்த வூர்தியானே
சேய்ஞலூர் மேயவனே. 8

523. காரடைந்த வண்ணனோடு
கனகம னையானும்
பாரடைந்தும் விண்பறந்தும்
பாதமு டிகாணார்

இடறிய காலை என்பதாம். வேர் அடைந்து என்பதற்குச் சினத்தால் வேர்த்து எனலுமாம். வேர்த்தடிந்தான் - நிலையை யறுத்தவன். அடைந்த தார் மாலை சூட்டி - தாம் சூட்டியதாரையும் மாலையையும் சூட்டி.

8. பொ-ரை : தாமரை மலரில் விளங்கும் நான்முகன் போன்ற அந்தணர்கள் போற்றும், விடையை ஊர்தியாகக் கொண்டவனே! திருச்சேய்ஞலூரில் மேவிய இறைவனே! குதிரைகள் பூட்டப்பட்ட தேரை உடைய இராவணனது வலிமையை அழித்து அவன் நாவினால் பாடிய பாடலைக் கேட்டு விரும்பி அவனுக்கு அருள்கள் பல செய்தது ஏனோ?

கு-ரை : இராவணனது வலிதொலைத்து, அவன்பாடல்கேட்டு அருளியதேன் என்கின்றது. இராவணன்தேர் புஷ்பகமாயினும் மா அடைந்ததேர் என்றது தேர் என்ற பொதுமை நோக்கி. மா - குதிரை: வண்டுமாம். பாடல் - சாமகீதம். பூசுரர் - அந்தணர். சே - இடபம்.

9. பொ-ரை : தேர் ஓடும் அழகிய வீதிகளை உடைய திருச்சேய் ஞலூர் மேவிய சிவனே! கருமை நிறம் பொருந்திய திருமால் பொன் வண்ணனாகிய பிரமன் ஆகியோர் உலகங்களை அகழ்ந்தும் பறந்தும் சென்று அடிமுடிகளைக் காணாராய்த் தம் தருக்கொழிந்து பின் அவர்கள் போற்ற அவர்பால் சென்று அருள் செய்தது ஏனோ?

Koviloor Digital Library

சீரடைந்து வந்துபோற்றச்
சென்றருள் செய்ததென்னே
தேரடைந்த மாமறுகிற்
சேய்ஞலூர் மேயவனே. 9

524. மாசடைந்த மேனியாரு
மனந்திரி யாதகஞ்சி
நேசடைந்த வூணினாரு
நேசமிலாததென்னே
வீசடைந்த தோகையாட
விரைகம ழும்பொழில்வாய்த்
தேசடைந்த வண்டுபாடுஞ்
சேய்ஞலூர் மேயவனே. 10

கு-ரை: அயனும் மாலும் பறந்தும் தோண்டியும் காணக் கிடையாத தேவரீர் அவர்கள் திருந்தி வந்தகாலத்து அருள்வழங்கியது ஏன் என்கின்றது.

கார் - கருமைநிறம். கனகம் அனையான் - பொன் நிறமுடைய பிரமன். சீர் அடைந்து - தாம் முதலல்ல 'என்றும் மீளா ஆளாவோம்' என்ற உண்மை உணர்ந்து. மறுகு - வீதி.

10. பொ-ரை : வீசி ஆடுகின்ற தோகைகளை உடைய மயில்கள் ஆடுவதும், மணம் கமழும் பொழில்களில் ஒளி பொருந்திய வண்டுகள் பாடுவதும் செய்யும் திருச்சேய்ஞலூரில் மேவிய இறைவனே! அழுக்கேறிய உடலினரும், மனத்தில் வெறுப்பின்றிக் கஞ்சியை விரும்பி உணவாகக் கொள்வோரும் ஆகிய சமண புத்தர்கள் உன்பால் நேசம் இலாததற்குக் காரணம் யாதோ?

கு-ரை : புத்தரும் சமணரும் தேவரீரிடத்து அன்பு கொள்ளாதது என்னே என்கின்றது.

மாசு - அழுக்கு. நேசடைந்த - அன்புகொண்ட. வீசடைந்த தோகை - வீசியாடுகின்ற மயில். தேசு - ஒளி.

Koviloor Digital Library

525. சேயடைந்த சேய்ஞலூரிற்
செல்வன் சீர்பரவித்
தோயடைந்த வண்வயல்சூழ்
தோணிபு ரத்தலைவன்
சாயடைந்த ஞானமல்கு
சம்பந்தனின்னுரைகள்
வாயடைந்து பாடவல்லார்
வானுல காள்பவரே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : முருகப் பெருமான் வழிபட்ட சிறப்பினதாகிய திருச்சேய்ஞலூரில் விளங்கும் செல்வனாகிய சிவபிரானது புகழைப் போற்றி நீர்வளம் சான்ற, வளமையான வயல்களால் சூழப்பட்ட தோணிபுரத்தின் தலைவனும், நுட்பமான ஞானம் மிக்கவனுமாகிய சம்பந்தனுடைய இன்னுரைகளை வாயினால் பாடி வழிபட வல்லவர் வானுலகு ஆள்வர்.

கு-ரை : நுணுகிய ஞானத்தோடு கூடிய இப்பதிகம் வல்லவர்கள் வானுலகு ஆள்வர் என்கின்றது. சேய் - முருகன். முருகன் சூர பன்மாவைக் கொல்லப் படை எடுத்த காலத்து இத்தலத்தில் தங்கி இறைவனை வழிபட்டார் என்பது *கந்த புராண* வரலாறு ஆதலின் 'சேயடைந்த சேய்ஞலூர்' என்றார். தோயடைந்த - நீர் நிறைந்த. தோயம் என்பது தோய் என ஈறு குறைந்தது. சாய் - நுணுக்கம்.

திருத்தொண்டர் புராணம்

திருஞானசம்பந்தர் புராணம்

வேதியர் சேய்ஞலூர் விமலர் தங்கழல்
காதலிற் பணிந்தவர் கருணைபோற்றுவார்
தாதைதாள் தடிந்தசண் டீசப் பிள்ளையார்
பாதகப் பயன்பெறும் பரிசு பாடினார்.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

49. திருநள்ளாறு

பதிக வரலாறு:

திருத்தருமபுரத்தை வழிபட்டுத் திருநள்ளாறடைந்த காழிவேந்தர் அன்புறுகாதலினால் உள்ளுருகி இறைவனை வணங்கி, பொருவில் திருப்பதிகமாகிய 'போகமார்த்த' என்னுமிதனை எடுத்துப் பாடி, திருக்கடைக்காப்புமிட்டு, திருநீலகண்ட யாழ்ப்பாணரை யாழில்வைத்து வாசிக்கச்செய்து, தாமும்பாடி, எல்லோரையும் மகிழ்வித்தார். இப்பதிகமே சமணர்செய்த அனல்வாதத்தில் வெற்றிகண்ட பச்சைப் பதிகம்.

பண்: பழந்தக்கராகம்

பதிக எண்: 49

திருச்சிற்றம்பலம்

526. போகமார்த்த பூண்முலையாள்
தன்னோடும் பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண்வெள்
ளேற்றண்ணல் பரமேட்டி
ஆகமார்த்த தோலுடையன்
கோவண வாடையின்மேல்
நாகமார்த்த நம்பெருமான்
மேயது நள்ளாறே. 1

1. பொ-ரை : இன்பத்துக்கு நிலைக்களனாயுள்ளனவும் அணிகலன்கள் பொருந்தியனவுமான தனங்களை உடைய உமையம்மையைத் தன்னோடு அழகிய திருமேனியின் இடப் பாகமாக ஒன்றாக இருக்கச் செய்தவனும், பசிய கண்களையும் வெண்மையான நிறத்தையும் உடைய ஆனேற்றைத் தனது ஊர்தியாகக் கொண்ட தலைவனும், மேலானவனும், திருமேனியின் மேல் போர்த்த தோலாடையுடையவனும், இடையிற் கட்டிய கோவண ஆடையின் மேல் நாகத்தைக் கச்சாக அணிந்தவனுமான நம் பெருமான் எழுந்தருளி இருக்கும் தலம் திருநள்ளாறு.

கு-ரை : இப்பதிகம் முழுவதுமே பெருமான் விரும்பியிருக்குமிடம் நள்ளாறு என்கின்றது. ஆர்த்த-நிறைந்த. அம்மையின்

Koviloor Digital Library

527. தோடுடைய காதுடையன்
தோலுடை யன்தொலையாப்
பீடுடைய போர்விடையன்
பெண்ணுமோர் பாலுடையன்
ஏடுடைய மேலுலகோ
டேழ்கட லுஞ்சூழ்ந்த
நாடுடைய நம்பெருமான்
மேயது நள்ளாறே. 2

திருநாமம் போகமார்த்த பூண்முலையாள் என்பது. தன்னோடும் என்றது அம்மையைத் தன்னின் வேறாக இடப்பாகத்துக்கு எழுந்தருளச் செய்தநிலையைக் குறித்தது. பொன் அகலம் பாகம் ஆர்த்த என்பது தன்னோடு ஒரு திருமேனியில் இருக்கும் நிலையைக் குறித்தது. அகலம்-மார்பு. ஆகம்-மார்பு.

குருவருள் : அனல் வாதத்தின்போது ஞானசம்பந்தர் தாம் அருளிய பாடல் தொகுப்பில் கயிறு சார்த்திப் பார்த்தபோது இப் ''போகமார்த்த பூண்முலையாள்'' என்னும் பதிகம் கிடைத்தது. திருமுறையில் கயிறு சார்த்திப் பார்க்கும் மரபை ஞானசம்பந்தரே தொடங்கி வைத்துள்ளதை இதனால் அறியலாம். ''போகமார்த்த பூண்முலையாள்'' என்னும் இத்தொடரால் இன்பதுன்ப அநுபவங்களாகிய போகத்தைத் தன்மார்பகத்தே தேக்கி வைத்து உயிர்களாகிய தம் பிள்ளைகட்குப் பாலாக ஊட்டுகிறாள் அம்மை என்ற குறிப்பும் கிடைக்கிறது. உலகில் தாய்மார்கள் தங்கள் மார்பகத்தே திருவருளால் சுரக்கின்ற தாய்ப்பாலைத் தங்கள் குழந்தைகட்குக் கரவாது கொடுத்து வரவேண்டும் என்பதையும் இது உணர்த்துகிறது. தாய்ப்பாலே குழந்தைகட்குச் சிறந்த உணவு. நோய்த்தடுப்பு மருந்து. தாய்க்கும் சேய்க்கும் நலம் பயப்பது என்பது உணர்க.

2. பொ-ரை : அம்மை பாகத்தே உள்ள இடச் செவியில் தோடணிந்த காதினை உடையவனும் தோலை ஆடையாகக் கொண்டவனும், குன்றாப்புகழ் உடையதும் போர் செய்தலில் வல்லதுமான விடை ஊர்தியனும் மலைமகளை ஒரு பாகமாகக் கொண்டவனும், அடுக்குகளாக அமைந்த மேல் உலகங்களோடு ஏழ்கடலாலும் சூழப்பட்ட நாடு என்னும் இந்நிலவுலகமும் உடையவனுமாகிய, எம்பெருமான் விரும்பிய தலம் திருநள்ளாறு ஆகும்

கு-ரை : தோடுடைய காது - அம்மையின் காது. பீடு - பெருமை.

Koviloor Digital Library

528. ஆன்முறையா லாற்றவெண்ணீ
றாடி யணியிழையோர்
பான்முறையால் வைத்தபாதம்
பத்தர் பணிந்தேத்த
மான்மறியும் வெண்மழுவுஞ்
சூலமும் பற்றியகை
நான்மறையான் நம்பெருமான்
மேயது நள்ளாறே. 3

529. புல்கவல்ல வார்சடைமேற்
பூம்புனல் பெய்தயலே
மல்கவல்ல கொன்றைமாலை
மதியோ டுடன்சூடிப்
பல்கவல்ல தொண்டர்தம்பொற்
பாதநி ழற்சேர
நல்கவல்ல நம்பெருமான்
மேயது நள்ளாறே. 4

ஏடு உடைய மேலுலகு - ஒன்றின்மேல் ஒன்றாக எடுத்தலையுடைய மேலுலகங்கள். இவ்விரண்டடிகளாலும் இறைவனுடைய தனியரசிற்கு உரிய நாட்டுப்பரப்பு சொல்லப்பட்டது.

3. பொ-ரை : பசுவிடமிருந்து முறையாக எடுக்கப்பட்ட திருவெண்ணீற்றை மேனி முழுதும் பூசி அழகிய அணிகலன்களைப் புனைந்த உமையம்மையை ஒரு பாகமாக வைத்துள்ள, தன் திருவடிகளைப் பக்தர்கள் பணிந்து போற்ற, இளமான், வெண்மையான மழு, சூலம் ஆகியவற்றை ஏந்திய கையினனாய் நான்மறைகளையும் அருளிய நம் பெருமான் மேவிய தலம் திருநள்ளாறு ஆகும்.

கு-ரை : ஆன் முறையால்-பசுவினிடமிருந்து விதிப்படி எடுக்கப்பட்ட, ஆற்ற ஆடி எனக் கூட்டுக. ஆற்ற-மிக. அணியிழை - உமாதேவியார்.

4. பொ-ரை : பொருந்திய நீண்ட சடையின் மேல் கங்கையை அணிந்து, அதன் அருகில் கொன்றை மாலையையும் பிறைமதியையும் ஒருசேரச் சூடித் தன்னைச் சார்ந்து வாழும் தொண்டர்கட்குத் தனது

Koviloor Digital Library

530. ஏறுதாங்கி யூர்திபேணி
யேர்கொள் இளமதியம்
ஆறுதாங்குஞ் சென்னிமேலோர்
ஆடர வஞ்சூடி
நீறுதாங்கி நூல்கிடந்த
மார்பினில் நிரைகொன்றை
நாறுதாங்கு நம்பெருமான்
மேயது நள்ளாறே. 5

531. திங்களுச்சி மேல்விளங்குந்
தேவன் இமையோர்கள்
எங்களுச்சி யெம்மிறைவன்
என்றடி யேயிறைஞ்சத்
தங்களுச்சி யால்வணங்குந்
தன்னடி யார்கட்கெல்லாம்
நங்களுச்சி நம்பெருமான்
மேயது நள்ளாறே. 6

திருவடி நிழலைச் சேரும் பேற்றை நல்கும் பெருமான் மேவிய தலம் திருநள்ளாறு ஆகும்.

கு-ரை : புல்கவல்ல-தழுவவல்ல, மல்க-நிறைய. பல்க-இறுக. இது அடியார்களுக்குத் திருவடி நிழலைத் தருகின்றார் என்று பயன் கூறுகின்றது.

5. பொ-ரை : ஆன்ஏற்றைக் கொடியாகத் தாங்கியும் அதனையே ஊர்தியாக விரும்பி ஏற்றும் அழகிய இளம்பிறை கங்கை ஆகியன பொருந்திய சடைமுடியின்மேல் ஆடும் பாம்பைச் சூடியும் திருநீறு பூசிப் பூணூலோடு விளங்கும் மார்பில் கொன்றை மாலையின் மணம் கொண்ட வனுமான நம் பெருமான் மேவிய தலம் திருநள்ளாறு ஆகும்.

கு-ரை : ஏறுதாங்கி-கொடியின்கண் இடபத்தைத் தாங்கி. ஊர்தி பேணி-இடபவாகனத்தின்மீது ஆரோகணித்து. ஏர்-அழகு. நிரைகொன்றை-ஒழுங்கான கொன்றை. நாறு-மணம்.

6. பொ-ரை : திங்கள் திருமுடியின் உச்சி மீது விளங்கும் தேவனாய், தேவர்கள் எங்கள் உச்சியாய் உள்ள எம் பெருமானே!

Koviloor Digital Library

532. வெஞ்சுடர்த்தீ யங்கையேந்தி
விண்கொண் முழவதிர
அஞ்சிடத்தோ ராடல்பாடல்
பேணுவ தன்றியும்போய்ச்
செஞ்சடைக்கோர் திங்கள்சூடித்
திகழ்தரு கண்டத்துள்ளே
நஞ்சடைத்த நம்பெருமான்
மேயது நள்ளாறே. 7

533. சிட்டமார்ந்த மும்மதிலுஞ்
சிலைவரைத் தீயம்பினால்
சுட்டுமாட்டிச் சுண்ணவெண்ணீ
றாடுவ தன்றியும்போய்ப்

என்று அடிபரவவும், தலையால் தன்னை வணங்கும் அடியவர்களும் எங்கள் முடிமீது விளங்கும் நம் பெருமான் என்று போற்றவும் விளங்கும் சிவபிரான் மேவிய தலம் திருநள்ளாறு ஆகும்.

கு-ரை : உச்சி-தலை. எங்கள் உச்சியின்மேல் இருக்கின்றார் எம்மிறைவன் என்று தேவர்கள் வணங்க, தலைவணங்கும் அடியார் களும் நமது உச்சியிலுள்ளான் (எனக்கூற இருக்கும்) நம் பெருமான் மேயது நள்ளாறு என இயைத்துப் பொருள் காண்க.

7. பொ-ரை : கொடிய ஒளி பொருந்திய நெருப்பைக் கையில் ஏந்தி விண்ணளவும் ஒலிக்கும் முழவு முழங்கப் பலரும் அஞ்சும் சுடு காட்டில் ஆடல் பாடலுடன் ஓர் இளம்பிறையைச் சூடி, விளங்கும் கண்டத்தில் நஞ்சினை நிறுத்திய நம் பெருமான் மேவிய தலம் திருநள்ளாறு ஆகும்.

கு-ரை : விண் கொள் முழவு-மேகத்தை யொத்த முழவம்; அல்லது ஆகாயத்தின் தன்மையாகிய சப்தத்தைக்கொண்டிருக்கின்ற முழவுமாம். அஞ்சிடம்-அஞ்சத்தக்க இடமாகிய மயானம்.

8. பொ-ரை : பெருமை மிக்க முப்புரங்களையும் வரை சிலையில் பொருந்திய தீயாகிய அம்பினால் சுட்டு அழித்து, திருவெண்ணீற்றுப் பொடியில் திளைத்து ஆடி, பட்டம் என்னும் அணிகலன் கட்டிய

Koviloor Digital Library

பட்டமார்ந்த சென்னிமேலோர்
பான்ம தியஞ்சூடி
நட்டமாடும் நம்பெருமான்
மேயது நள்ளாறே. 8

534. உண்ணலாகா நஞ்சுகண்டத்
துண்டுடனே யொடுக்கி
அண்ணலாகா வண்ணல்நீழல்
ஆரழல் போலுருவம்
எண்ணலாகா வுள்வினையென்
றெள்க வலித்திருவர்
நண்ணலாகா நம்பெருமான்
மேயது நள்ளாறே. 9

சென்னியின் மேல் பால் போலும் நிறமுடையதொரு பிறைமதியைச் சூடி நடனம் ஆடும் நம் பெருமான் மேவிய தலம் திருநள்ளாறு ஆகும்.

கு-ரை : சிட்டம்-பெருமை. மாட்டி - மாளச்செய்து. தீயில் விறகை மாட்டி என்ற வழக்குண்மையும் அறிக. பட்டம்-நெற்றியில் அணியும் அணி.

9. பொ-ரை : யாராலும் உண்ணமுடியாத நஞ்சினை உண்டு அதனைத் தம் கண்டத்தில் நிறுத்திய வரும், யாராலும் அணுக இயலாத தலைவரும் ஒளி பொருந்திய அழல் போன்ற திருவுருவினரும் அநாதி யாகவே உள்ள வினையால் எண்ண இயலவில்லையே என மனம் வருந்திய திருமால் பிரமர்களால் நணுக முடியாதவருமான நம் பெருமான் மேவிய தலம் திருநள்ளாறு ஆகும்.

கு-ரை : உண்ணலாகா நஞ்சு-எந்தத் தேவராலும் உண்ண முடியாத விஷம். ஒடுக்கி-அதன் வலியைக் கெடுத்து.

அண்ணலாகா-அணுகமுடியாத. உள் வினை எண்ணலாகா என்று எள்க வலித்து இருவர் நண்ணலாகா நம்பெருமான்-அநாதியே பற்றியுள்ள வினையால் உள்ளபடியே உணரமாட்டாது இகழ, வருந்தி அயனாலும் மாலாலும் அணுகமுடியாத பெருமான்.

Koviloor Digital Library

535. மாசுமெய்யர் மண்டைத் தேரர்
குண்டர்கு ணமிலிகள்
பேசும்பேச்சை மெய்யென்றெண்ணி
யந்நெறி செல்லன்மின்
மூசுவண்டார் கொன்றைசூடி
மும்மதி லும் முடனே
நாசஞ்செய்த நம்பெருமான்
மேயது நள்ளாறே. 10

536. தண்புனலும் வெண்பிறையுந்
தாங்கிய தாழ்சடையன்
நண்புநல்லார் மல்குகாழி
ஞானசம் பந்தன்நல்ல
பண்புநள்ளா றேத்துபாடல்
பத்தும் இவைவல்லார்
உண்புநீங்கி வானவரோ
டுலகில் உறைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை : அழுக்கேறிய உடலினராகிய சமணரும், கையில் மண்டை என்னும் உண்கலத்தை ஏந்தித் திரியும் புத்தர்களும் ஆகிய குண்டர்களும் நற்குணம் இல்லாதவர்கள். அவர்கள் பேசும் பேச்சை மெய்யென்று எண்ணி அவர்கள் சமயங்களைச் சாராதீர். வண்டுகள் மொய்த்துப் பொருந்தும் கொன்றை மலர் மாலையைச் சூடி மும்மதில்களையும் ஒருசேர அழித்துத் தேவர்களைக் காத்தருளிய நம் பெருமான் மேவிய திருநள்ளாற்றைச் சென்று வழிபடுமின்.

கு-ரை : புறச்சமயிகள் என்செய்வார்களென, அவர்கட்காக இரங்குகின்றது. பொதியிலான்-பொதியமலையைத் தனக்கு இடமாகக் கொண்டவன். பொதியிலும், திருப்பூவணமும், கயிலையும், அன்பர் உள்ளமும் அவன் உறையுமிடங்கள் என அறிவிக்கப்படுகின்றது.

11. பொ-ரை : நட்புக்கு ஏற்ற நல்லோர் வாழும் சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன், குளிர்ந்த கங்கையையும் வெண்மையான பிறையையும் தாங்கிய தாழ்ந்த சடைமுடியை உடைய சிவபிரான்

Koviloor Digital Library

எழுந்தருளிய, நல்லியல்பு வாய்ந்தோர் வாழும் திருநள்ளாற்றைப் போற்றிப் பாடிய இத்திருப்பதிகப்பாடல்கள் பத்தையும் ஓத வல்லவர் பிராரத்த கன்ம வலிமை குறையப் பெற்று வானவர்களோடு தேவ ருலகில் வாழ்வர்.

கு-ரை : இப்பாடல் பத்தும் வல்லார் இறைவனோடு ஒன்றி இருப்பார் என்கின்றது. பொன்னி நாடன் - காவிரிநாட்டிற் பிறந்தவன். மன்னுசோதி - நிலைபெற்ற சோதி வடிவானவன்.

திருத்தொண்டர் புராணம்

திருஞானசம்பந்தர் புராணம்

உருகியஅன் புறுகாதல் உள்ளுருகி நனைஈரம்
பெற்றாற் போல
மருவுதிரு மேனிஎலாம் முகிழ்த்தெழுந்த மயிர்ப்புளகம்
வளர்க்கு நீராய்
அருவிசொரி திருநயனத் தானந்த வெள்ளம்இழிந்
தலைய நின்று
பொருவில்பதி கம்போக மார்த்தபூண் முலையாள்என்
றெடுத்துப் போற்றி.

யாணரம்பில் ஆரஇயல் இசைகூடப் பாடியே
எண்ணில் கற்பச்
சேணளவு படஓங்குந் திருக்கடைக்காப் புச்சாத்திச்
செங்கண் நாகப்
பூணகலத் தவர்பாதம் போற்றிசைத்துப் புறத்தணைந்து
புவனம் ஏத்தும்
பாணனார் யாழிலிடப் பாலறா வாயர்அருள்
பணித்த போது.

– சேக்கிழார்.

Koviloor Digital Library

50. திருவலிவலம்

பதிக வரலாறு:

திருவாரூர்ப் புற்றிடங்கொண்டபெருமானைச் சேவித்துச் சிலநாள் தங்கியிருந்த திருஞானசம்பந்தப் பிள்ளையார் வள மிகுந்த வலிவலத்தை அடைந்தார்கள். மனத்துணைநாதரை வணங்கி இப்பதிகத்தை அருளிச்செய்தார்கள். இது எந்த யாத்திரையில் என்பது அறியக்கூடவில்லை.

பண்: பழந்தக்கராகம்

பதிக எண்: 50

திருச்சிற்றம்பலம்

537. ஒல்லையாறி யுள்ளமொன்றிக்
கள்ளமொழிந் துவெய்ய
சொல்லையாறித் தூய்மைசெய்து
காமவினை யகற்றி
நல்லவாறே யுன்றனாமம்
நாவில்நவின் றேத்த
வல்லவாறே வந்துநல்காய்
வலிவலமே யவனே. 1

1. பொ-ரை : திருவ்லிவலம் மேவிய இறைவனே! பரபரப்பு அடங்கி, மனம் ஒன்றி, வஞ்சம் வெஞ்சொல் தவிர்ந்து தூய்மையோடு, காமம் முதலிய குற்றங்களைக் கடிந்து, நல்ல முறையில் உன் நாம மாகிய திருவைந்தெழுத்தை என் வல்லமைக்குத் தக்கவாறு நான் ஓதி வழிபடுகின்றேன், வந்து அருள்புரிவாயாக.

கு-ரை : வலிவலம் மேயவனே! மனம் ஒன்றி, வஞ்சம் நீங்கி இனிய கூறி, காமமாதிகடிந்து, உனதுநாமத்தைச் சொல்ல, தேவரீர் வந்து அருளவேண்டும் என்கின்றது. ஒல்லை - வேகம். அதாவது பர பரப்பு. கள்ளம் - வஞ்சனை. வெய்ய சொல் - கொடுஞ்சொல். தூய்மை செய்து - மனத்தைப் பண்படுத்தி. நாமம் - திருவைந்தெழுத்து. வல்ல வாறு - அடியேனுடைய தகுதி ஏற்க வல்லவாறு. இறைவற்கு வல்ல வாறு என்று உரைப்பாரும் உளர்.

Koviloor Digital Library

538. இயங்குகின்ற விரவிதிங்கண்
மற்றுநற் றேவரெல்லாம்
பயங்களாலே பற்றிநின்பாற்
சித்தந்தெளி கின்றிலர்
தயங்குசோதீ சாமவேதா
காமனைக்காய்ந் தவனே
மயங்குகின்றேன் வந்துநல்காய்
வலிவலமே யவனே. 2

539. பெண்டிர்மக்கள் சுற்றமென்னும்
பேதைப்பெருங் கடலை
விண்டுபண்டே வாழமாட்டேன்
வேதனைநோய் நலியக்
கண்டுகண்டே யுன்றனாமங்
காதலிக்கின்ற துள்ளம்
வண்டுகிண்டிப் பாடுஞ்சோலை
வலிவலமே யவனே. 3

2.பொ-ரை : வானவெளியில் இயங்குகின்ற ஞாயிறு, திங்கள் மற்றும் நல்ல தேவர்கள் எல்லோரும் அச்ச மேலீட்டினால் உன்னைப் பரம் பொருள் என்று தம் சித்தம் தெளியாதவராயுள்ளனர். விளங்கும் சோதி வடிவினனே, சாம வேதம் பாடி மகிழ்பவனே, காமனைக் காய்ந் தவனே, எவ்வாறு உன்னைத் தெளிவது என்று யானும் மயங்குகின் றேன். வந்து அருள்புரிவாயாக.

கு-ரை : தேவரெல்லாரும் பயத்தால் பற்றப்பட்டுச் சித்தம் தெளி கிலார்கள்: நானோ மயங்குகின்றேன்: வந்தருள் செய் என்கின்றது. இரவி - சூரியன். திங்கள் - சந்திரன். பயங்களாலே பற்றி - அச்சத்தால் பற்றப்பட்டு.

3. பொ-ரை : வண்டுகள் தேனுண்ணற் பொருட்டு மலர்களைக் கிண்டி இசை பாடும் சோலைகள் சூழ்ந்த திருவலிவலத்துள் மேவிய இறைவனே, மனைவி மக்கள் சுற்றம் முதலான பாசப் பெருங்கடலை இளைய காலத்திலேயே கடந்து வாழ்ந்தேன் அல்லேன். வேதனை. நோய் ஆகியன நலிய உலகியற் பாசங்கள் துன்பம் தருவன என்பதைக்

Koviloor Digital Library

540. மெய்யராகிப் பொய்யைநீக்கி
வேதனையைத் துறந்து
செய்யரானார் சிந்தையானே
தேவர்குலக் கொழுந்தே
நைவனாயே னுன்றனாமம்
நாளும்நவிற் றுகின்றேன்
வையமுன்னே வந்துநல்காய்
வலிவலமே யவனே. 4

கண்டு உன் திருநாமம் சொல்வதொன்றே இன்பமாவது என்பதைக் கண்டு அதனை ஓத உள்ளம் விரும்புகிறது. அருள் புரிவாயாக.

கு-ரை : பெண்டிர் முதலாகிய பாசப் பெருங்கடலில் பற்றி, விட்டுப் பிரிய கில்லாது வருந்துகின்றேன்: உனது நாமத்தைச் சொல்ல உளம் விழைகின்றது என அறிவிக்கின்றார்.

பேதைப்பெருங்கடல் - அறியாமைக் கடல். விண்டு - பிரிந்து. கண்டு கண்டு - இவை துன்பம் உன்நாமம் சொல்வது இன்பம் எனப் பலகாலுங்கண்டு

4. பொ-ரை :பொய்மையை விலக்கி, உண்மையை மேற் கொண்டு பந்த பாசங்களாகிய வேதனைகளைத் துறந்து செம்மையான மனமுடையோராய் வாழும் அன்பர்களின் சிந்தையுள் இருப்பவனே, தேவர்களின் குலக்கொழுந்தே! நான் வருந்தி நிற்கிறேன். உன்றன் திருநாமத்தை நாள்தோறும் ஓதி வருகிறேன். வலிவலம் மேவிய இறைவனே. வையகத்தே பலரும் காண வந்து அருள்புரிவாயாக.

கு-ரை : செம்மனச் செல்வர் சிந்தையுள் இருப்பவனே! அடியேன் அவலத்தால் நைகின்றேன்: வந்து அருள் செய் என்கின்றது. மெய்யராகி எனவே பொய்யை நீக்கி என்பது பெறப்படவும் மீட்டுங் கூறியது வற்புறுத்த. அல்லது மெய்யராகி - தத்துவஞான உணர்ச்சி உடையராய். பொய்யை நீக்கி என்றுமாம்.

வேதனை - ஆசைபற்றி எழும் துன்பம். செய்யர் - செம்மை யான அடியார்கள். நைவன் - வருந்துவேன். வையம் - முன்னே வந்து நல்காய் - இவ்வுலகத்து என்போலியரும் அறிந்துய்யவேண்டி மானைக்காட்டி மானைப் பிடிப்பார்போல் வந்து அருள் செய்வாய்.

Koviloor Digital Library

541. துஞ்சும்போதுந் துற்றும்போதுஞ்
சொல்லுவனுன் றிறமே
தஞ்சமில்லாத் தேவர்வந்துன்
றாளிணைக்கீழ்ப் பணிய
நஞ்சையுண்டாய்க் கென்செய்கேனோ
நாளும்நினைந் தடியேன்
வஞ்சமுண்டென் றஞ்சுகின்றேன்
வலிவலமே யவனே. 5

542. புரிசடையாய் புண்ணியனே
நண்ணலார்மூ வெயிலும்
எரியவெய்தா யெம்பெருமா
னென்றிமையோர் பரவும்
கரியுரியாய் காலகாலா
நீலமணி மிடற்று
வரியரவா வந்துநல்காய்
வலிவலமே யவனே. 6

5. பொ-ரை : திருவலிவலம் மேவிய இறைவனே, உறங்கும் போதும் உண்ணும்போதும் உன்றன் புகழையே சொல்லுவேன். தேவர்கள் வேறு புகலிடம் இல்லாது உன்பால் வந்து உன் தாளிணைகளின் கீழ்ப் பணிய அவர்களைக் காத்தற்பொருட்டு நஞ்சை உண்ட உன் கருணையை நாளும் நினைதலையன்றி வேறு என் செய வல்லேன்? உன் அருள் பெறுதற்குத் தடையாக என்பால் வஞ்சம் உண்டென்று அஞ்சுகின்றேன். அதனைப் போக்கி எனக்கு அருள்.

கு-ரை : உறங்கும்போதும் உண்ணும்போதும் உன்புகழே பேசுகின்றேன்; என்னிடம் வஞ்சம் இருப்பதால் ஏற்பாயோ மாட்டாயோ என அஞ்சுகின்றேன் என்கின்றது. துஞ்சும்போதும் - தூங்கும்போதும். துற்றும்போதும் - உண்ணும்போதும். தஞ்சம் - அடைக்கலத்தானாம்.

6. பொ-ரை : திருவலிவலம் மேவிய இறைவனே, முறுகிய சடையை உடையவனே, புண்ணிய வடிவினனே! பகைவர் தம் முப்புரங்களும் எரியுமாறு அம்பெய்தவனே என்று தேவர்கள்பரவும், யானையின் தோலை அணிந்தவனே, காலனுக்குக் காலனே! நீலமணி

Koviloor Digital Library

543. தாயும்நீயே தந்தைநீயே
சங்கரனே யடியேன்
ஆயும்நின்பா லன்புசெய்வா
னாதரிக்கின் றதுள்ளம்
ஆயமாய காயந்தன்னு
ளைவர்நின்றொன் றலொட்டார்
மாயமேயென் றஞ்சுகின்றேன்
வலிவலமே யவனே. 7

544. நீரொடுங்குஞ் செஞ்சடையாய்
நின்னுடையபொன் மலையை
வேரொடும்பீழ்ந் தேந்தலுற்ற
வேந்தனிரா வணனைத்

போலும் கண்டத்தையும் வரிந்து கட்டப் பெற்ற பாம்பினையும் உடையவனே! என்பால் வந்து அருள்புரிவாயாக.

கு-ரை : புண்ணியனே! காலகாலா! நீலகண்டா! வந்து அருள் செய் என்கின்றது. நண்ணலார் - பகைவர். வரி அரவு - வரிந்து கட்டப் பட்ட பாம்பு.

7. பொ-ரை : திருவலிவலம் மேவிய இறைவனே! சங்கரனே எனக்குத் தாயும் தந்தையும் நீயேயாவாய். அடியேன் உள்ளம் சிவ ஞானிகளால் ஆய்ந்துணரப்படும் நின்பால் அன்பு செய்ய விரும்பு கின்றது. எனக்குப் படைத்தளிக்கப்பட்ட இவ்வுடலிடைப்பொருந்திய ஐம்பொறிகள் உன்னைப் பொருந்தவொட்டாமல் தடுக்கின்றன. இம்மாயத்தைக் கண்டு யான் அஞ்சுகின்றேன். அருள்புரிவாயாக.

கு-ரை :சுற்றமும் மற்றெல்லாமும் நீயே என்கின்றது. ஆயும் - சிவஞானம் கைவரப்பெற்ற ஆன்மாவினால் ஆராயப்படுகின்ற. ஆயம் ஆய - படைக்கப்பெற்ற. ஐவர் - பஞ்சேந்திரியங்கள். ஒன்றல் ஒட்டார் - நின்னோடு பொருந்தவிடார்.

8. பொ-ரை :திருவலிவலம் மேவிய இறைவனே தருக்கி வந்த கங்கை செயல் இழந்து ஒடுங்கிய செஞ்சடையை உடையவனே, உன்னு டைய பொன்மயமான கயிலை மலையை வேரோடும் பிடுங்கி ஏந்தத்

Koviloor Digital Library

தேரொடும்போய் வீழ்ந்தலறத்
திருவிரலா லடர்த்த
வாரொடுங்குங் கொங்கைபங்கா
வலிவலமே யவனே. 8

545. ஆதியாய நான்முகனும்
மாலுமறி வரிய
சோதியானே நீதியில்லேன்
சொல்லுவனின் றிறமே
ஓதிநாளு முன்னையேத்து
மென்னைவினை யவலம்
வாதியாமே வந்துநல்காய்
வலிவலமே யவனே. 9

தொடங்கிய இலங்கை வேந்தன் இராவணனைத் தேரோடும் வீழ்ந்து அலறுமாறு உன் கால் திருவிரலால் அடர்த்தவனே, கச்சு அணிந்த பெருத்த தனங்களை உடைய உமைபங்கனே! வந்து நல்காய்.

கு-ரை : ஆணவத்தால் மிஞ்சிய இராவணனையும் அடக்கி ஆட்கொண்ட அம்மையப்பா! அடியேனை ஆட்கொள்ளவேண்டும் என்கின்றது. நீர் ஒடுங்கும் - தருக்கிவந்த கங்கைதன் வலி ஒடுங்கும். பொன்மலை - அழகிய கயிலைமலை. பீழ்ந்து - பிடுங்கி. வார் ஒடுங்கும் - கச்சு தன்வலியழியும்.

9. பொ-ரை : திருவலிவலம் மேவிய இறைவனே! உலகங்களைப் படைத்துக் காத்தலில் ஆதியானவர்களாகிய நான்முகனும், திருமாலும் அறிதற்கரிய சோதிப் பிழம்பாய்த் தோன்றியவனே! யான் நீதியில்லாதேன் ஆயினும் உன் புகழையே சொல்லுகின்றேன். நாள்தோறும் உன்புகழையே ஓதி உன்னையே ஏத்தும் என்னை வினைகளும் அவற்றின் பயனாய துன்பங்களும் வந்து தாக்காமல் வந்து அருள் புரிவாயாக.

கு-ரை : இடைவிடாது உன்னையே தோத்திரிக்கின்றேன். ஆதலால் அடியேனை அவலவினைகள் அடையாவண்ணம் அருள் செய்க என்கின்றது. வினை அவலம் - வினையும் அதனால்வரும் துன்பமும். வாதியாமே - துன்புறுத்தாதபடி.

Koviloor Digital Library

546. பொதியிலானே பூவணத்தாய்
பொன்றிகழுங் கயிலைப்
பதியிலானே பத்தர்சித்தம்
பற்றுவிடா தவனே
விதியிலாதார் வெஞ்சமணர்
சாக்கியரென் றிவர்கள்
மதியிலாதா ரென்செய்வாரோ
வலிவலமே யவனே. 10

547. வன்னிகொன்றை மத்தஞ்சூடும்
வலிவலமே யவனைப்
பொன்னிநாடன் புகலிவேந்தன்
ஞானசம்பந்தன் சொன்ன
பன்னுபாடல் பத்தும்வல்லார்
மெய்த்தவத்தோர் விரும்பும்
மன்னுசோதி யீசனோடே
மன்னியிருப் பாரே. 11

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை : திருவலிவலம் மேவிய இறைவனே, பொதிய மலையைத் தனக்கு இடமாகக் கொண்டவனே, திருப்பூவணம் என்னும் தலத்தில் உறைபவனே, தன்பால் பக்தி செய்யும் அன்பர்களின் சித்தங்களில் எழுந்தருளி இருப்பவனே, கொடிய சமணர்களும் சாக்கியர்களும் உன்னை அடையும் புண்ணியம் இல்லாதவர்கள். அறிவற்ற அவர்கள் தங்கள் சமய நெறியில் என்ன பயனைக் காண்பார்களோ?.

கு-ரை : புறச்சமயிகள் என்செய்வார்களென, அவர்கட்காக இரங்குகின்றது. பொதியிலான் - பொதியமலையைத் தனக்கு இடமாகக்கொண்டவன். பொதியிலும், திருப்பூவணமும், கயிலையும், அன்பர் உள்ளமும் அவன் உறையுமிடங்கள் என அறிவிக்கப்படுகின்றன.

11. பொ-ரை : வன்னி கொன்றை மலர், ஊமத்தை மலர் ஆகியவற்றைச் சூடும் திருவலிவலம் மேவிய இறைவனைக் காவிரி நாட்டிலுள்ள புகலி என்னும் சீகாழிப் பதிக்கு வேந்தனாய ஞானசம்பந்தன்

Koviloor Digital Library

புகழ்ந்து ஓதியனவும் எக்காலத்தும் ஓதத்தக்கனவும் ஆகிய இத்திருப்பதிகப் பாடல்கள் பத்தையும் ஓத வல்லவர், உண்மைத் தவமுடையோர் விரும்பும் நிலை பெற்ற, சோதி வடிவான ஈசனோடு மன்னியிருப்பர்.

கு-ரை : இப்பாடல் பத்தும் வல்லார் இறைவனோடு ஒன்றி இருப்பார் என்கின்றது. பொன்னி நாடன் - காவிரிநாட்டிற்பிறந்தவன். மன்னு சோதி - நிலைபெற்றசோதி வடிவானவன்.

விளத்தொட்டிப் புராணம்

மருங்கலை யுடுத்த காழி வாவியொண் கரைமே னின்று
பெருங்கலை சிறிதுந் தேராப் பித்தனை யழுத ழைத்தாங்
கருங்கலை யனைத்தும் பெற்ற வாண்டகை யடியே நெஞ்சக்
கருங்கலை யுருக்கி யாட்கொள் கவுணியன் மலர்த்தாள் போற்றி.

- மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

கோயிலூர்ப் புராணம்

அருமறை யேச மென்ற தமையுமென் றுணர்த்தல் போல
வொருமறை யவன்மால் சுட்டி யுணர்தரா வொன்றைச்சுட்டித்
திருமறை யவனுங் காணச் சிறந்ததொரு விரலாற் காட்டும்
பெருமறை முழங்குங் காழிப் பிள்ளைதாள் சென்னி சேர்ப்பாம்.

- மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

ஒழுவிலொடுக்கம்

வேதாக மப்பவுரி வீசுங் களாசநிலை
யாதார வெற்பி லபிடேகம் - போதத்
திருளிலெழு பாநு வெனதொழிவி லின்பக்
கருணைபொழி வானெடுத்த கை.

- கண்ணுடைய வள்ளலார்.

Koviloor Digital Library

51. திருச்சோபுரம்

பதிக வரலாறு:

சம்பந்தர் தமது நான்காம் முறைத் தலயாத்திரையில் தில்லையை வணங்கித் திருத்தினை நகருக்கு எழுந்தருளியிருக்க வேண்டும். அங்கே 'வெங்கணானை' என்னும் இப்பதிகத்தை அருளிச்செய்தார்கள். இவ்வரலாறு பெரியபுராணத்தில் அறியக் கூடவில்லை.

பண்: பழந்தக்கராகம்

பதிக எண்: 51

திருச்சிற்றம்பலம்

548. வெங்கணானை யீருரிவை
போர்த்துவிளங் கும்மொழி
மங்கைபாகம் வைத்துகந்த
மாண்பதுவென் னைகொலாம்
கங்கையோடு திங்கள்சூடிக்
கடிகமழுங் கொன்றைத்
தொங்கலானே தூயநீற்றாய்
சோபுரமே யவனே. 1

1. பொ-ரை : கங்கை திங்கள் ஆகியவற்றை முடிமிசைச் சூடி மணம் கமழும் கொன்றை மலர் மாலையை அணிந்து தூய திருநீறு பூசித் திருச்சோபுரத்தில் விளங்கும் இறைவனே! கொடிய யானையை உரித்து அதன் தோலைப் போர்த்திய, விளக்கமான மொழிகளைப் பேசும் மலைமங்கையை இடப்பாகத்தே கொண்டு மகிழும் உனது செயலின் மாண்பு எத்தகையதோ?.

கு-ரை : சோபுரம் மேயவனே! யானைத்தோல் போர்த்து, ஒரு பாகத்து உமையையும் வைத்துக்கொண்டது என்னவோ என்கின்றது.

வெங்கண் - கொடுமை. ஈர் உரி - கிழிக்கப்பெற்ற தோல்: ஈரமாகிய தோல் என்றுமாம். கடி - மணம். தொங்கல் - மாலை.

Koviloor Digital Library

549. விடையமர்ந்து வெண்மழுவொன்
றேந்திவிரிந் திலங்கு
சடையொடுங்கத் தண்புனலைத்
தாங்கியதென் னைகொலாம்
கடையுயர்ந்த மும்மதிலுங்
காய்ந்தனலுள் எழுந்தத்
தொடைநெகிழ்ந்த வெஞ்சிலையாய்
சோபுரமே யவனே. 2

550. தீயராய வல்லரக்கர்
செந்தழலுள் எழுந்தச்
சாயவெய்து வானவரைத்
தாங்கியதென் னைகொலாம்
பாயும்வெள்ளை யேற்றையேறிப்
பாய்புலித்தோலுடுத்த
தூயவெள்ளை நீற்றினானே
சோபுரமே யவனே. 3

2. பொ-ரை : வாயில்களாற் சிறந்த முப்புரங்களும் அனலுள் அழுந்துமாறு சினத்தோடு அம்பு செலுத்திய கொடிய மலை வில்லை உடையவனே! திருச்சோபுரம் மேவிய இறைவனே! விடைமீது அமர்ந்து வெண்மையான மழு ஒன்றைக் கையில் ஏந்தி விரிந்து விளங்கும் சடையின்கண் ஒடுங்குமாறு குளிர்ந்த நீரைத் தடுத்துத் தாங்கி இருத்தற்குக் காரணம் என்னையோ?.

கு-ரை : முப்புரம் எரியக் கணை தொடுத்த வில்லையுடைய இறைவா, விடையேறி, வெண்மழுவேந்தி, சடையில் கங்கையைத் தாங்கியது என்னையோ என்கின்றது. விடை - இடபம். வெண் மழு என்றது இறைவன் திருக்கரத்திலுள்ள மழு அலங்காரப் பொருளா தலன்றி யாரையும் அழித்தல் இல்லையாதலின். தொடை - அம்பு. நெகிழ்ந்த - செலுத்திய.

3. பொ-ரை : பாய்ந்து செல்லும் வெண்ணிறமான விடையேற்றின் மீது ஏறி, பாயும் புலியினது தோலை உடுத்துத் தூய வெண்ணீற்றை அணிந்துள்ளவனே! திருச்சோபுரம் மேவிய இறைவனே! கொடியவர் களாகிய வலிய அரக்கர் சிவந்த அழலுள் அழுந்துமாறு கணை எய்து

Koviloor Digital Library

551. பல்லிலோடு கையிலேந்திப்
பல்கடையும் பலிதேர்ந்
தல்லல்வாழ்க்கை மேலதான
வாதரவென் னைகொலாம்
வில்லைவென்ற நுண்புருவ
வேனெடுங்கண் ணியொடும்
தொல்லையூழி யாகிநின்றாய்
சோபுரமே யவனே. 4

552. நாற்றமிக்க கொன்றைதுன்று
செஞ்சடைமேன் மதியம்
ஏற்றமாக வைத்துகந்த
காரணமென் னைகொலாம்

தேவர்களை வாழ்வித்தது என்ன காரணம் பற்றியோ?

கு-ரை : இடபத்திலே ஏறி, புலித்தோல் உடுத்த புண்ணியனே! அரக்கரையழித்து, வானவரை வாழ்வித்தது என்னையோ என்கின் றது இறைமைக்குணம் வேண்டுதல் வேண்டாமை இலவாய் இருக்க, சிலரை அழித்து, சிலரை வாழ்விப்பது பொருந்துமோ என்பார்க்குக் காரணம் அருள்வதுபோல, தீயராய வல்லரக்கர் என்று திரிபுராதிகள் தீமைதோன்றக் கூறினார். வானவர் என அடைமொழி இன்றிக் கூறியதும் இரங்கத்தக்கார் என்னும் குறிப்புப்பற்றி.

4. பொ-ரை : வில்லை வென்ற வளைந்த நுண்புருவத்தையும், வேல் போன்ற நீண்ட கண்ணையும் உடைய உமையம்மையோடும், பழமையான பல ஊழிக்காலங்களாக நிற்பவனே! திருச்சோபுரம் மேவிய இறைவனே! பல் இல்லாத மண்டை யோட்டைக் கையிலேந் திப் பலர்இல்லங்களுக்கும் சென்று பலி ஏற்கும் அல்லல் பொருந்திய வாழ்க்கையின்மேல் நீ ஆதரவு காட்டுதற்குக் காரணம் என்னவோ?

கு-ரை : வேல்நெடுங்கண்ணியோடு ஊழி ஊழியாக இருக்கின்ற நீ பிச்சைவாழ்க்கையை விரும்பியது என்னையோ என்கின்றது. பல் இல் ஓடு - பற்கள் உதிர்ந்துபோன மண்டையோடு. கடை - கடை வாயில். அல்லல் வாழ்க்கை - துன்பவாழ்வு.

5. பொ-ரை : வலிமை பொருந்திய காலனை அழியுமாறு உதைத் தருளி, எல்லாப் பொருள்கட்கும் தோற்றமும் ஈறுமாகி நிற்பவனே!

Koviloor Digital Library

ஊற்றமிக்க காலன் றன்னை
யொல்கவுதைத் தருளி
தோற்றமீறு மாகிநின்றாய்
சோபுரமே யவனே. 5

553. கொன்னவின்ற மூவிலைவேற்
கூர்மழுவாட் படையன்
பொன்னைவென்ற கொன்றைமாலை
சூடும்பொற்பென் னைகொலாம்
அன்னமன்ன மென்னடையாள்
பாகமமர்ந் தரைசேர்
துன்னவண்ண ஆடையினாய்
சோபுரமே யவனே. 6

திருச்சோபுரம் மேவிய இறைவனே! மணம் மிக்க கொன்றை மலர்கள் நிறைந்த செஞ்சடையின்மேல் பிறைமதியை அழகு பெற வைத்து மகிழ்தற்குக் காரணம் என்னையோ?

கு-ரை : காலனை உதைத்து உலகத்திற்குத் தோற்றமும் ஈறுமாக இருக்கின்ற தேவரீர், கொன்றை நிறைந்த செஞ்சடைமேல் மதியும் வைத்தது ஏன் என்கின்றது. ஏற்றம் - உயர்வு. உகந்த - மகிழ்ந்த. மகிழ்ச்சிக்குக் காரணம் பலர் சாபத்தால் இளைத்த ஒருவனுக்கு ஏற்றம் அளித்தோமே என்ற மகிழ்ச்சி. ஊற்றம் - வலிமை. தோற்றம் ஈறுமாகி நின்றாய் என்றது, தான் எல்லாவற்றிற்கும் தோற்றமும் ஈறுமாய் ஆவதன்றித் தனக்குத் தோற்றமும் ஈறும் இல்லாதவன் என்பது குறிப்பு. இதனையே மணிவாசகரும் ''ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே'' என்பார்கள்.

6. பொ-ரை : அன்னம் போன்ற மெல்லிய நடையினையுடைய உமையம்மையை ஒரு பாகமாகப் பொருந்தி, இடையில் அழகிய கோவண ஆடையை அணிந்தவனே! திருச்சோபுரம் மேவிய இறைவனே! கொல்லும் தொழில் பொருந்திய மூவிலை வேலையும் தூய மழுவாட் படையையும் உடையவனே! நிறத்தால் பொன்னை வென்ற கொன்றை மாலையை நீ விரும்பிச் சூடுதற்குரிய காரணம் என்னையோ?

கு-ரை : ஒரேமேனியில் பெண்பாதியும் உடையன் ஆதலால்

Koviloor Digital Library

554. குற்றமின்மை யுண்மைநீயென்
றுன்னடியார் பணிவார்
கற்றகேள்வி ஞானமான
காரணமென் னைகொலாம்
வற்றலாமை வாளரவம்
பூண்டயன்வெண் டலையில்
துற்றலான கொள்கையானே
சோபுரமே யவனே. 7

555. விலங்கலொன்று வெஞ்சிலையாக்
கொண்டுவிற லரக்கர்
குலங்கள்வாழு மூரெரித்த
கொள்கையிதென் னைகொலாம்

கோவணமும், பட்டாடையும் உடைய பெருமானே, கொன்றை மாலை சூடுவதென்னை என்கின்றது. கொன் - பெருமை. பொற்பு - அழகு. துன்ன ஆடையினாய், வண்ண ஆடையினாய் எனத் தனித்தனிப் பிரித்துக்கூட்டிக் கோவணமாகிய ஆடையையுடையவனே, நிறம் பொருந்திய ஆடையையுடையவனே என உமையொரு பாதியனாய் இருப்பதற்கேற்பப் பொருள் உரைக்க.

7. பொ-ரை : ஊன் வற்றிய ஆமை ஓட்டையும், ஒளி பொருந்திய பாம்பையும் அணிகலனாகப்பூண்டு, பிரமனின் வெண்மையான தலையோட்டில் பலியேற்று உண்ணும் கொள்கையனே! திருச்சோபுரம் மேவிய இறைவனே! குணமும் குற்றமும் நீயே என்று பணியும் உன் அடியவர்கட்குத் தாங்கள் கற்ற கல்வியும், கேள்வியும் அதனால் விளையும் ஞானமுமாக நீயே விளங்குதற்குக் காரணம் என்னவோ?

கு-ரை: பிரமகபாலத்துப் பிச்சை ஏற்பவனே, குணமும் நீ, குற்றமும் நீ என்று பணியும் அடியார்கட்குக் கல்வியும் கேள்வியும் அதனால் விளங்கும் ஞானமுமாகத் தேவரீர் விளங்குவது என்னையோ என்கின்றது. கற்ற கேள்வி - கேள்வி பயன்படுவது கற்றபின்னாதலின் கற்றதன்பின் கேட்கப்படும் கேள்வி எனக் குறித்தமை காண்க. வற்றலாமை - ஆமை ஒடு. துற்றலான - உண்ணுதலாகிய.

8. பொ-ரை : இலங்கையில் நிலைபெற்று வாழும், வாட்போரில் வல்ல அவுணர் தலைவனாகிய இராவணனைத் தனது அழகிய கால்

Koviloor Digital Library

இலங்கைமன்னு வாளவுணர்
கோனையெழில் விரலால்
துலங்கவூன்றி வைத்துகந்தாய்
சோபுரமே யவனே. 8

556. விடங்கொணாக மால்வரையைச்
சுற்றிவிரி திரைநீர்
கடைந்தநஞ்சை யுண்டுகந்த
காரணமென் னைகொலாம்
இடந்துமண்ணை யுண்டமாலு
மின்மலர்மே லயனும்
தொடர்ந்துமுன்னங் காணமாட்டாச்
சோபுரமே யவனே. 9

விரலால் நடுங்குமாறு ஊன்றிப் பின் அவன் வேண்ட மகிழ்ந்து அருள் புரிந்தவனே! திருச்சோபுரம் மேவிய இறைவனே! மேரு மலையைக் கொடியதொரு வில்லாகக் கொண்டு வலிமை பொருந்திய அரக்கர் குலங்கள் வாழ்கின்ற திரிபுரங்களாகிய ஊர்களை எரித்து அழித்தற்குக் காரணம் என்னவோ?.

கு-ரை : இலங்கை மன்னனை ஒருவிரலால் அடர்த்த நீ, மலையை வில்லாகத் தூக்கித்திரிபுரம் எரித்தது என்னையோ என்கின்றது. விலங்கல் - மேருமலை. அரக்கர் - திரிபுராதிகள்.

9. பொ-ரை : மண்ணுலகை அகழ்ந்து உண்ட திருமாலும், இனிய தாமரை மலர்மேல் விளங்கும் பிரமனும், முற்காலத்தே உன்னைத் தொடர்ந்து அடிமுடி காணமாட்டாராய் நின்றொழியத் திருச்சோ புரத்தில் மேவி விளங்கும் இறைவனே! தேவர்கள் விடத்தையுடைய வாசுகி என்னும் பாம்பை மந்தரம் என்னும் பெரிய மலையைச் சுற்றிக் கட்டி, விரிந்த அலைகளையுடைய கடல்நீரைக் கடைந்தபோது, அத னிடை எழுந்த நஞ்சை உண்டு மகிழ்தற்குக் காரணம் என்னையோ?

கு-ரை : அயனாலும் மாலாலும் அறியப்படாத நீர் விடம் உண்டு மகிழ்ந்த காரணம் என்னை என்கின்றது. நாகம் - வாசுகி என்னும் பாம்பு. மால் வரை - மந்தரமலை. நஞ்சை உண்டு உகந்த - தேவர்கள் அஞ்சிய நஞ்சைத் தாம் உண்டு அவர்களைக் காத்தும், சாவாமைக்கு

Koviloor Digital Library

557. புத்தரோடு புன்சமணர்
பொய்யுரையே யுரைத்துப்
பித்தராகக் கண்டுகந்த
பெற்றிமையென் னைகொலாம்
மத்தயானை யீருரிவை
போர்த்துவளர் சடைமேல்
துத்திநாகஞ் சூடினானே
சோபுரமே யவனே. 10

558. சோலைமிக்க தண்வயல் சூழ்
சோபுரமே யவனைச்
சீலமிக்க தொல்புகழார்
சிரபுரக்கோன் நலத்தான்

ஏதுவாகிய அமுதத்தை அவர்களுக்குக் கொடுத்து அளித்தும் மகிழ்ந்த. இடந்து - தோண்டி.

10. பொ-ரை : மதம் பொருந்திய யானையை உரித்து அதன் தோலைப் போர்த்து, நீண்ட சடையின் மேல் புள்ளிகளையுடைய நாகப் பாம்பைச்சூடியவனே! திருச்சோபுரம் மேவிய இறைவனே! புத்தர் களும், சமணர்களும் பொய்யுரைகளையே பேசிப் பித்தராகத் திரி தலைக் கண்டு நீ மகிழ்தற்குக் காரணம் என்னையோ?.

கு-ரை : புத்தரும் சமணரும் பொய்யுரைத்துப் பித்தராக்கிய தன்மை என்னையோ என்கின்றது. அவர்களுக்கும் ஞானம் அளித்து உயர்த்தவேண்டிய தேவரீர், இங்ஙனம் பித்தராகக் கண்டது அவர் களுக்கு அதற்கேற்ற பரிபாகம் இன்மையாலே என்று உணர வைத்த வாறு. துத்தி - படம்; பொறி.

11. பொ-ரை :சோலைகள் மிகுந்ததும், குளிர்ந்தவயல்களால் சூழப்பட்டதுமான திருச்சோபுரம் மேவிய இறைவனைச் சீலத்தால் மிக்க, பழமையான புகழை உடைய அந்தணர்கள் வாழும் சிரபுரம் என்னும் சீகாழிப் பதியின் தலைவனும், நன்மைகளையே கருதுப வனும், உலகில் மேம்பட்ட தண் தமிழ் பாடியவனுமாகிய ஞான சம்பந்தன் பாடிய அழகுமிக்க இத்தமிழ் மாலையை ஓதவல்லவர் வானுலகை அடைவர்.

Koviloor Digital Library

ஞாலமிக்க தண்டமிழான்
ஞானசம்பந்தன் சொன்ன
கோலமிக்க மாலைவல்லார்
கூடுவர்வா னுலகே. 11

திருச்சிற்றம்பலம்

கு-ரை : இம்மாலை வல்லவர்கள் வானுலகைக் கூடுவர் எனத் திருக்கடைக்காப்பு அருளுகின்றது; கோலம் - அழகு.

காஞ்சிப் புராணம்

பரசமய கோளரியைப் பாலறா வாயனைப்பூம்
பழனஞ் சூழ்ந்த
சிரபுரத்துத் திருஞான சம்பந்தப் பெருமானைத்
தேய மெல்லாம்
குரவையிடத் தமிழ்வேதம் விரித்தருளும் கவுணியர்தங்
குலதீ பத்தை
விரவியெமை யாளுடைய வென்றிமழ விளங்களிற்றை
விரும்பி வாழ்வாம்.

- சிவஞான யோகிகள்.

தனியூர்ப் புராணம்

தண்மைதன் மட்டு மாகத் தாழ்ந்தொரு முனிபா லேற்ற
வண்மைமந் திரத்தாற் பாலை கடந்தமா ணாணங் கொள்ள
உண்மையாய் மலர்ந்து மண்ணுள் ளளவுமற் றொன்றா காம
லெண்மையிற் பாலைநெய்த லியற்றினோன் சரணஞ் சார்வாம்.

- மீனாட்சிசுந்தரம் பிள்ளை.

Koviloor Digital Library

52. திருநெடுங்களம்

பதிக வரலாறு:

திருஎறும்பியூர் முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு ஆளுடைய பிள்ளையார் திருநெடுங்களத்தை அடைந்து வழிபட்டு 'நின்பால் நேசம் செலாவகைத் தடுக்கும் இடும்பை தீர்த்தருள்வாய்' என வேண்டி 'மறையுடையாய்' என்னும் இத்திருப்பதிகத்தை அருளிச்செய்தார்கள்.

பண்: பழந்தக்கராகம்

பதிக எண்: 52

திருச்சிற்றம்பலம்

559. மறையுடையாய் தோலுடையாய்
வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே
யென்றுனைப்பே சினல்லால்
குறையுடையார் குற்றமோராய்
கொள்கையினா லுயர்ந்த
நிறையுடையா ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. 1

1. பொ-ரை : திருநெடுங்களம் மேவிய இறைவனே, வேதங்களைத் தனக்கு உடைமையாகக் கொண்டவனே, தோல் ஆடை உடுத்தவனே, நீண்ட சடை மேல் வளரும் இளம் பிறையைச் சூடியவனே, தலைக்கோலம் உடையவனே, என்று உன்னை வாழ்த்தினாலல்லது குறை உடையவர்களின் குற்றங்களை மனத்துக் கொள்ளாத நீ, மனத்தினால் உன்னையன்றி வேறு தெய்வத்தை நினையாத கொள்கையில் மேம்பட்ட நிறையுடைய அடியவர்களின் இடர்களை நீக்கி அருள்வாயாக.

கு-ரை : மறையுடையாய் என்பது முதலிய சொல்லித் தோத்திரித்தால் அல்லது குறையுடையார் குற்றத்தை ஆராயாத தேவரீர், நிறையுடையார் துன்பத்தையும் களையவேண்டும் என்கின்றது. மறை உடையாய் என்பது முதலியன நிறைந்த மறையையும், அருவருக்கத் தக்க தோலையும், சாபம் ஏற்ற மதியையும் ஒப்பமதிக்கும் பெரி

Koviloor Digital Library

560. கனைத்தெழுந்த வெண்டிரைசூழ்
கடலிடைநஞ் சுதன்னைத்
தினைத்தனையா மிடற்றில்வைத்த
திருந்தியதே வநின்னை
மனத்தகத்தோர் பாடலாடல்
பேணியிராப் பகலும்
நினைத்தெழுவா ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. 2

561. நின்னடியே வழிபடுவான்
நிமலாநினைக் கருத
என்னடியா னுயிரைவவ்வே
லென்றடற்கூற் றுதைத்த
பொன்னடியே பரவிநாளும்
பூவொடுநீர் சுமக்கும்
நின்னடியா ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. 3

யோனே எனப் பின்னர்வரும் ''குறையுடையார் குற்றம் ஓராய்'' என்பதற்கு இயைய அமைந்திருத்தல் காண்க. ஓராய் - ஆராயாதவனே.

2. பொ-ரை : திருநெடுங்களம் மேவிய இறைவனே, ஆரவாரித்து எழுந்த, வெண்மையான அலைகளால் சூழப்பட்ட கடல் நஞ்சினைத் தினையளவாகச் செய்து உண்டு கண்டத்தே நிறுத்திய மேம்பட்ட தேவனே, நின்னை மனத்தகத்தே நிறுவியவர்களின் ஆடல், பாடல்களை விரும்பி, இரவும் பகலும் நின்னையே நினைத்து எழும் அடியவர்களின் இடர்களை நீக்கி அருளுக.

கு-ரை :ஆகாத நஞ்சை அழகிய மிடற்றில் வைத்த பெருமானே! அல்லும் பகலும் தியானிக்கும் அடியார் இடர்களைவாயாக என்கின்றது. கனைத்து - ஒலித்து. தினைத்தனையா - அதன்பெருமை எல்லாவற்றையும் அடக்கித் தினையளவாகச்செய்து. மிடறு - கழுத்து.

3. பொ-ரை : திருநெடுங்களம் மேவிய இறைவனே, குற்றமற்றவனே, நின் திருவடிகளையே வழிபடும் மார்க்கண்டேயன் நின்னையே கருதிச் சரண் புக அவனைக் கொல்லவந்த வலிமை

Koviloor Digital Library

562. மலைபுரிந்த மன்னவன்றன்
மகளையோர்பான் மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கைதங்கு
மவிர்சடையா ரூரா
தலைபுரிந்த பலிமகிழ்வாய்
தலைவநின்றா ணிழற்கீழ்
நிலைபுரிந்தா ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. 4

பொருந்திய கூற்றுவனைச் சினந்து, 'என் அடியவன் உயிரைக் கவராதே' என்று உதைத்தருளிய உன் பொன்னடிகளையே வழிபட்டு, நாள்தோறும் பூவும், நீரும் சுமந்து வழிபடும் உன் அடியவர்களின் இடர்களைக் களைந்தருள்வாயாக.

கு-ரை : காலகாலராகிய நின்னடியையே கருதும் அடியார்கள் இடரைக்களைக என்கின்றது. நிமலா, நின் அடியே வழிபடுவான் நினைக்கருத (நீ) ''என் அடியான் உயிரை வவ்வேல்'' என்று அடல் கூற்று உதைத்த பொன்னடியே பரவி எனக் கூட்டிப் பொருள்காண்க.

சுமக்கும் அடியார் இடர்களையாய் என்றது, இவர்கள் வினை இடையீடாக இருந்ததாயினும் சுமைக்குக் கூலி கொடுப்பார்போல, அடியார்கள் பூவும் நீரும் சுமந்தமைக்காகவாவது நீர் அருள்வழங்க வேண்டும் என்று வற்புறுத்தியது.

4. பொ-ரை : திருநெடுங்களம் மேவிய இறைவனே, இமவான் மகளாகிய பார்வதி தேவியைத் தன் திருமேனியின் ஓர் பாதியாகக் கொண்டு மகிழ்பவனே, அலைகள் வீசும் கங்கை நீரைத் தாங்கிய விரிந்த சடையினையுடைய திருவாரூர் இறைவனே, தலையோட்டை விரும்பி ஏந்தி அதன்கண் பலியேற்று மகிழ்பவனே, தலைவனே, நினது திருவடி நீழற்கீழ் நிற்றலையே விரும்பும் அடியவர்களின் இடர் களைப் போக்கி அருள்வாயாக.

கு-ரை : மலைமகளை யொருபாலும், அலைமகளைத் தலை மேலும் வைத்து மகிழ்ந்த தேவரீர், நின்னடி மறவாத நிலையுடையார் இடரைக்களைக என்கின்றது. புரிந்த - விரும்பிய. நிலைபுரிந்தார் - அநவரத தியானத்தால் நிற்றலையுடையவர்கள்.

Koviloor Digital Library

563. பாங்கினல்லார் படிமஞ்செய்வார்
பாரிடமும் பலிசேர்
தூங்கிநல்லார் பாடலோடு
தொழுகழலே வணங்கித்
தாங்கிநில்லா அன்பினோடுந்
தலைவநின்றா ணிழற்கீழ்
நீங்கிநில்லா ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. 5

564. விருத்தனாகிப் பாலனாகி
வேதமோர்நான் குணர்ந்து
கருத்தனாகிக் கங்கையாளைக்
கமழ்சடைமேற் கரந்தாய்
அருத்தனாய வாதிதேவ
னடியிணையே பரவும்
நிருத்தர்கீத ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. 6

5. பொ-ரை : திருநெடுங்களம் மேவிய இறைவனே, குணங்களால் நல்லவர்களும், தவ வேடம் தாங்கியவர்களும். பாரிடை வாழும் மக்களும் பலருடைய இல்லங்களிலும் பலிதேரும் உனது செயல்களில் மனம் ஒன்றி நல்லோர் பாடும் பாடல்களோடு தொழத்தக்க உன் திருவடிகளை வணங்கிக் கரை கடந்த அன்போடு தலைவனாகிய உனது திருவடி நிழலை நீங்கி நில்லாதவர்களாகிய அடியவர்களின் இடர்களைக் களைந்தருள்வாயாக.

கு-ரை : இடையீடின்றியே திருவடிக்கண் உறைத்து நிற்கும் அன்பர் இடர்களையாய் என்கின்றது. தலைவ, நெடுங்களமேயவனே, நல்லார் செய்வார் நல்லார் பாடலொடு அன்பினோடும் நின் தாள் நிழற்கீழ் நீங்கி நில்லார் இடர்களையாய் எனக் கூட்டிப் பொருள் காண்க. பாங்கின் - குணங்களால். படிமம் - தவவேடம். தூங்கி - மனம் ஒன்றி. தாங்கிநில்லா அன்பினோடும் - தம்மளவில் பொறுக்கலாற்றாது கரைகடந்துவருகின்ற அன்போடும்.

6. பொ-ரை : திருநெடுங்களம் மேவிய இறைவனே, மூத்த வேடந்தாங்கியும், இளமை வடிவங் கொண்டும், வேதங்கள் நான்கை

Koviloor Digital Library

565. கூறுகொண்டாய் மூன்றுமொன்றாக்
கூட்டியோர்வெங் கணையால்
மாறுகொண்டார் புரமெரித்த
மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தமீதென்
றெம்பெருமா னணிந்த
நீறுகொண்டா ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. 7

யும் நன்குணர்ந்த தலைவனாய் கங்கை நங்கையை மணம் கமழும் சடைமிசைக் கரந்துள்ள பெருமானே, கலை ஞானங்கள் மெய்ஞ்ஞானங் களின் பொருளான முதற்கடவுளாய உன் அடி இணைகளைப் பரவி ஆடியும் பாடியும் போற்றும் அடியவர்களின் இடர்களைப் போக்கி யருள்வாயாக.

கு-ரை : விருத்தகுமாரபாலராகிக் கங்கையைச் சடைமேற்கரந்த பெருமானே, நின்னடிபரவும் ஆடல் பாடலையுடைய அடியார்களின் இடரைக் களைவாயாக என்கின்றது. கருத்தனாகி - முழுமுதற் கட வுளாகி. அருத்தன் - பொருளானவன். நிருத்தர் - ஆனந்தத்தால் நிருத்தம் செய்பவர். கீதம் - பாடுபவர்.

7. பொ-ரை : திருநெடுங்களம் மேவிய இறைவனே, உமையம் மையைத் திருமேனியின் ஒரு கூறாகக் கொண்டவனே, அரி, எரி, காற்று ஆகிய மூன்றையும் ஒன்றாகக் கூட்டிய ஒப்பற்ற கொடிய அம்பி னால் வேதவழக்கோடு பகை கொண்ட அசுரர்களின் முப்புரங்களை யும் எரித்தழித்த மன்னவனே, கொடி மீது இடபத்தை இலச்சினையாகக் கொண்டவனே, இதுவே மணம் பொருந்திய சந்தனமாகும் என்று எம்பெருமானே நீ அணிந்துள்ள திருநீற்றை விரும்பி அணியும் அடியவர்களின் இடரை நீக்கியருள்வாயாக.

கு-ரை : திரிபுரம் எரித்த மன்னவனே, விடைக்கொடி உடையவனே, நீறு அணிந்த அடியார்களது இடரைக் களைக என் கின்றது. கூறுகொண்டாய் - உமாதேவியை ஒருபாகத்துக்கொண்ட வனே. மூன்றும் ஒன்றாகக்கூட்டி ஓர் வெங்கணையால் - அரி, எரி, கால் என்ற மூன்றையும் ஒன்றாகக்கூட்டிய ஓர் அம்பினாலே. இதனை ''எரி காற்று அரி கோல்'' என்னும் திருவீழிமிழலைப் பதிகத்தானும் அறிக. (1 - 11 - 6) மாறு - பகை. சாந்தம் - சந்தனம்.

Koviloor Digital Library

566. குன்றினுச்சி மேல்விளங்குங்
கொடிமதில்சூ ழிலங்கை
அன்றிநின்ற வரக்கர்கோனை
யருவரைக்கீ ழடர்த்தாய்
என்றுநல்ல வாய்மொழியா
லேத்தியிராப் பகலும்
நின்றுநைவா ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. 8

567. வேழவெண்கொம் பொசித்தமாலும்
விளங்கியநான் முகனுஞ்
சூழவெங்கு நேடவாங்கோர்
சோதியுளா கிநின்றாய்

8. பொ-ரை : திருநெடுங்களம் மேவிய இறைவனே, மேருமலையின் சிகரங்கள் மூன்றில் ஒன்றாகிய குன்றின்மேல் விளங்குவதும் கொடிகள் கட்டப்பட்ட மதில்களால் சூழப்பட்டதுமான இலங்கை நகர் மன்னனும், உன்னோடு மாறுபட்டுக் கயிலை மலையைப் பெயர்த்தவனுமான அரக்கர் தலைவனாகிய இராவணனை அரிய அம்மலையின் கீழே அடர்த்தவனே! என்றெல்லாம் நல்ல தோத்திரங்களைக் கூறி இரவும் பகலும் உன்னையே ஏத்தி நின்று மனம் நையும் அடியவர்களின் இடர்களைப் போக்கியருளுவாயாக.

கு-ரை : இராவணனை அடர்த்தாய் என்று தோத்திரித்து, இராப்பகலாக உருகித் தொழுகின்ற அடியார்களின் இடரைக் களைவாயாக என்கின்றது. உச்சிமேல் விளங்கும் இலங்கைக் குன்றின் - மேரு மலையில் இருந்து, வாயுதேவனால் பெயர்த்து வீழ்த்தப்பெற்ற மூன்று சிகரங்களுள் ஒன்றாகிய இலங்கைக் குன்றின். அன்றி - கோபித்து; பகைத்து எனலுமாம். வாய் மொழி - தோத்திரம். நைவார் - மனங்கனிவார்.

9. பொ-ரை : திருநெடுங்களம் மேவிய இறைவனே, கஞ்சனால் ஏவப் பட்டுத் தன்னைக் கொல்ல வந்த குவலயாபீடம் என்ற யானையின் கொம்புகளை ஒடித்த திருமாலும், புகழ்பெற்ற நான்முகனும், தங்களைச் சூழ்ந்துள்ள இடமெங்கும் தேடுமாறு இருவருக்கும் இடையே சோதிப் பிழம்பாய்த் தோன்றி நின்றவனே, பன்றியினது

Koviloor Digital Library

கேழல்வெண்கொம் பணிந்தபெம்மான்
கேடிலாப்பொன் னடியின்
நீழல்வாழ்வா ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. 9

568. வெஞ்சொற்றஞ்சொல் லாக்கிநின்ற
வேடமிலாச் சமணும்
தஞ்சமில்லாச் சாக்கியருந்
தத்துவமொன் றறியார்
துஞ்சலில்லா வாய்மொழியால்
தோத்திரநின் னடியே
நெஞ்சில்வைப்பா ரிடர்களையாய்
நெடுங்களமே யவனே. 10

கொம்பை அணிகலனாக அணிந்த பெருமானே, அழிவற்ற உன் பொன் போன்ற திருவடி நீழலில் வாழும் அடியவர்களின் இடர்களைக் களைந்தருள்வாய்.

கு-ரை : அயனும் மாலும் தேடச் சோதியாய்நின்ற பெருமானே! நின் திருவடிக்கீழ்வாழும் அடியாரது இடரைக்களைவாயாக என்கின்றது. வேழம் - குவலயாபீடம் என்னும் யானை. கண்ணன் கஞ்சனால் ஏவப்பட்ட குவலயாபீடம் என்னும் பட்டத்து யானையின் கொம்பை ஒடித்தார் என்பது வரலாறு. நேட - தேட. கேழல் - பன்றி. அடியின்நீழல் வாழ்வார் - திருவடிச்சார்பே சார்பாகக்கொண்டு மற்றொன்றையும் சாராத அடியார்கள்.

10. பொ-ரை : கொடுஞ் சொற்களையே தம் சொற்களாக்கிக் கொண்டு தமது வேடத்திற்குப் பொருந்தாமல் ஒழுகும் சமணரும் நற்சார்பில்லாத புத்தர்களும் சைவசமயம் கூறும் உண்மைப் பொருளை ஒரு சிறிதும் உணராதவர்கள். அவர்களை விடுத்து, திருநெடுங்களம் மேவிய இறைவனே! அழியாப் புகழுடைய வேதங்களோடு, தோத்திரங்களால் நின்னைப் பரவி நின் திருவடிகளை நெஞ்சில் கொண்டு வாழும் அடியவர்களின் இடர்களைப் போக்கியருளுவாயாக.

கு-ரை : சமணரும் புத்தரும் பொருளுண்மை அறியாதவர்கள். ஆதலால் அவர்கள் உரையை விட்டு நின்னடியையே நெஞ்சில்

Koviloor Digital Library

569. நீடவல்ல வார்சடையான்
மேயநெடுங் களத்தைச்
சேடர்வாழு மாமறுகிற்
சிரபுரக்கோன் நலத்தால்
நாடவல்ல பனுவன்மாலை
ஞானசம்பந்தன் சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார்
பாவம்ப றையுமே. 11

திருச்சிற்றம்பலம்

வைப்பாரது இடர்களைவாய் என்கின்றது. வெம் சொல் - கொடுஞ் சொல். சமணர்கள் கொடுஞ்சொல்லையே எப்பொழுதும் பேசி, கொண்டவேடத்திற்குப் பொருந்தாதிருப்பர் எனக் குறிப்பிடப் படுகிறது. தஞ்சம் - நற்சார்பு. சாக்கியர் - புத்தர். த்த்துவம் - பொரு ளுண்மை. துஞ்சல் இல்லா - இறவாத. வாய்மொழி - வேதம்.

11. பொ-ரை : மேலும் மேலும் நீண்டு வளரத்தக்க சடைமுடியை உடைய சிவபிரான் எழுந்தருளிய திருநெடுங்களத்தை, பெரியோர் பலர் வாழும் பெரிய வீதிகளை உடைய சிரபுரம் என்னும் சீகாழிப் பதியின் தலைவனாகிய ஞானசம்பந்தன் போற்றிப் பாடிய, நன்மைப் பொருளால் ஆராய்ந்து உணரத்தக்க இப்பாடல்கள் பத்தையும் பாட வல்லவர்களின் பாவங்கள் விலகும்.

கு-ரை : இப்பாடல் பத்தும் பாடவல்லார் பாவம் பறையும் எனப் பயன்கூறுகிறது. நீட வல்லவார்சடையான் - மேலும் வளரத்தக்க நீண்ட சடையையுடையவன். சேடர் - இளைஞர். ஒவ்வொரு பாடலும் ஒவ்வொருபனுவல்போல் பயன்விளைத்தலின் பனுவல்மாலை எனப்பட்டது.

Koviloor Digital Library

53. திருமுதுகுன்றம்

பதிக வரலாறு:

திருஎருக்கத்தம்புலியூரினின்று எழுந்தருளிய பிள்ளையார் திருமுதுகுன்றத்தை அடைந்தார்கள். திருமுதுகுன்றத்தில் எழுந்தருளியிருந்த நாள்களுள் ஒருநாள் 'தேவராயும் அசுர ராயும்' என்னும் இத்திருப்பதிகத்தை அருளிச்செய்தார்கள். இதனைச் சேக்கிழார் பெருமான்' 'வீழ்ந்த காதலால் பலமுறை விளம்பியே' எனக் குறிப்பிடுகிறார்.

பண்: பழந்தக்கராகம்.

பதிக எண்: 53

திருச்சிற்றம்பலம்

570. தேவராயு மசுரராயுஞ்
சித்தர்செழு மறைசேர்
நாவராயும் நண்ணுபாரும்
விண்ணெரிகால் நீரும்
மேவராய விரைமலரோன்
செங்கண்மால் ஈசனென்னும்
மூவராய முதலொருவன்
மேயதுமு துகுன்றே. 1

1. பொ-ரை : தேவர், அசுரர், சித்தர், செழுமையான வேதங்களை ஓதும் நாவினராகிய அந்தணர், நாம் வாழும் மண், விண், எரி, காற்று, நீர் ஆகிய ஐம்பூதங்கள், மணம் மிக்க தாமரை மலர் மேல் உறையும் நான் முகன், சிவந்த கண்களை உடைய திருமால், உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகள் ஆகிய எல்லாமாகவும் அவர்களின் தலைவராகவும் இருக்கின்ற சிவபிரான் எழுந்தருளியிருப்பது திருமுதுகுன்றத் தல மாகும்.

கு-ரை : இறைவனது முழுமுதற்றன்மையை உணர்த்துகின்றது இது. செழுமறைசேர் நாவர் - அந்தணர். மேவராய - மேவி உள்ள வராகிய. மூவராய முதல் - மூவருமாய் அவர்கள் தலைவருமாய் இருக்கின்ற சிவன்.

Koviloor Digital Library

571. பற்றுமாகி வானுளோர்க்குப்
பல்கதிரோன் மதிபார்
எற்றுநீர்தீக் காலுமேலை
விண்ணியமா னனோடு
மற்றுமாதோர் பல்லுயிராய்
மாலயனும் மறைகள்
முற்றுமாகி வேறுமானான்
மேயதுமு துகுன்றே. 2

572. வாரிமாகம் வைகுதிங்கள்
வாளரவஞ் சூடி
நாரிபாக நயந்துபூமேல்
நான்முகன்றன் தலையில்

குருவருள் : இப்பாடல் இறைவன் எல்லாவற்றிலும் கலந்து ஒன்றாய் இருந்து அருள் செய்யும் திறனைக் குறிக்கிறது.

2. பொ-ரை : தேவர்கட்குப் பற்றுக் கோடாகியும், பல வண்ணக் கதிர்களை உடைய ஞாயிறு, திங்கள் மண், கரையை மோதும் நீர், தீ, காற்று, மேலே உள்ள ஆகாயம், உயிர் ஆகிய அட்ட மூர்த்தங்களாகியும் எல்லா உயிர்களாகியும் திருமால், பிரமன் வேதங்கள் முதலான அனைத்துமாகியும் இவற்றின் வேறானவனும் ஆகிய சிவபிரான் எழுந்தருளியிருக்கும் தலம் திருமுதுகுன்றம் ஆகும்.

கு-ரை : அட்டமூர்த்தி வடிவாயும், பல்லுயிராயும், மால் அயன் மறைகள் எல்லாம் ஆகியும் உள்ளவர்மேவிய முதுகுன்று என்கின்றது. வானுளோர்க்குப் பற்றும் ஆகி - தேவர்களுக்குப் பற்றப்படும் பொருளாகியும். எற்றுநீர் - கரையை மோதுகின்ற நீர். கால் - காற்று. மேலை விண் - மேலதாகிய ஆகாயம். இயமானன் - புருடன். மற்று, மாது, ஓர் இம்மூன்றும் அசை. முற்றும் ஆகி - இவையெல்லாம் ஆகி. வேறும் ஆனான் - இவற்றின் வேறாயும் இருப்பவன்.

3. பொ-ரை : கங்கை, வானகத்தே வைகும் திங்கள், ஒளி பொருந்திய பாம்பு ஆகியவற்றை முடிமிசைச் சூடி உமையம்மையை ஒரு பாகமாக விரும்பி ஏற்று, தாமரை மலரில் உறையும் பிரமனது தலைகளில் ஒன்றைக் கொய்து அத்தலையோட்டில் பலி ஏற்கச் செல்பவனும்,

Koviloor Digital Library

சீரிதாகப் பலிகொள்செல்வன்
செற்றலுந்தோன் றியதோர்
மூரிநாகத் துரிவைபோர்த்தான்
மேயதுமு துகுன்றே. 3

573. பாடுவாருக் கருளுமெந்தை
பனிமுதுபௌ வமுந்நீர்
நீடுபாரு முழுதுமோடி
யண்டர்நிலை கெடலும்
நாடுதானு மூடுமோடி
ஞாலமுநான் முகனும்
ஊடுகாண மூடும்வெள்ளத்
துயர்ந்ததுமு துகுன்றே. 4

தன்னைச் சினந்து வந்த வலிய யானையைக் கொன்று அதன் தோலைப் போர்த்தியவனும் ஆகிய சிவபிரான் எழுந்தருளிய தலம் திருமுது குன்றம்.

கு-ரை : கங்கை மதி முதலியன சூடி, உமையொருபாகனாய், பலி ஏற்றுண்ணும் பரமன் விரும்பும் இடம் முதுகுன்றம் என்கின்றது. வாரி - கங்கை. மாகம் - ஆகாயம். வாள் - ஒளி. நாரி - பெண்; உமை யம்மை. செற்றலும் - கோபித்தலும். மூரிநாகம் - வலிய யானை.

4. பொ-ரை : தன்னைப் பாடிப் பரவுவார்க்கு அருள் செய்யும் எந்தையாகிய சிவபிரான் எழுந்தருளிய தலம், குளிர்ந்த பழமையான கடல் நீண்ட மண் உலகிலும் தேவர் உலகிலும் பரவி, அவர்தம் இருப் பிடங்களை அழித்ததோடு நாடுகளிலும் அவற்றின் இடையிலும் ஓடி, ஞாலத்துள்ளாரும் நான்முகன் முதலிய தேவரும் உயிர் பிழைக்க வழி தேடும்படி, ஊழி வெள்ளமாய்ப் பெருகிய காலத்திலும் அழியாது உயர்ந்து நிற்பதாகிய, திருமுதுகுன்றமாகும்.

கு-ரை : பாடும் அடியார்க்கருளும் எந்தை எழுந்தருளியுள்ளது ஊழிக்காலத்தும் அழியாத முதுகுன்றே என்கின்றது. பனி முது பௌவம் - குளிர்ந்த தொன்மையான கடல். பார் - பூமி, அண்டர் - தேவர். நாடுதானும் ஊடும் ஓடி - நாடுகளிலும், அவற்றின் இடையிலும் பரந்து. ஊடுகாண - இடைவெளி காண. ஊழியிலுயர்ந்த குன்று என்றது.

Koviloor Digital Library

574. வழங்குதிங்கள் வன்னிமத்த
மாசுணமீ சணவிச்
செழுங்கல்வேந்தன் செல்விகாணத்
தேவர்திசை வணங்கத்
தழங்குமொந்தை தக்கைமிக்க
பேய்க்கணம்பூ தஞ்சூழ
முழங்குசெந்தீ யேந்தியாடி
மேயதுமு துகுன்றே. 5

575. சுழிந்தகங்கை தோய்ந்ததிங்கட்
டொல்லராநல் லிதழி
சழிந்தசென்னிச் சைவவேடந்
தான்நினைந் தைம்புலனும்

5. பொ-ரை : வானத்தில் சஞ்சரிக்கும் திங்கள், வன்னியிலை ஊமத்தம் மலர், பாம்பு, ஆகியவற்றைத் திருமுடிமீது நெருக்கமாகச் சூடி, இமவான் மகளாகிய உமையவள் காணத் தேவர்கள் எல்லாத் திசைகளிலும் நின்று வணங்க, மொந்தை, தக்கை, ஆகியன அருகில் ஒலிக்க, பேய்க்கணங்கள் பூதங்கள் சூழ்ந்து விளங்க, முழங்கும் செந்தீயைக் கையில் ஏந்தி ஆடும் சிவபெருமான் மேவிய தலம் திரு முதுகுன்றமாகும்.

கு-ரை : பாம்பு மதி முதலியவற்றைச்சூடிக்கொண்டு மலைமகள் காண இறைவன் ஆடியமர்ந்த இடம் முதுகுன்றம் என்கின்றது. வழங்கு திங்கள் - வானமண்டலத்து ஊடறுத்துச் செல்லும் சந்திரன். வன்னி - வன்னிமரத்து இலை. மாசுணம் - பாம்பு. மீசணவி - சிரத்தின்மேற் கலந்து. செழுங்கல் வேந்தன் - வளப்பமான மலையரசன். தழங்கும் - ஒலிக்கின்ற. மொந்தை - ஒரு முகப்பறை வகைகளில் ஒன்று. தக்கை - இருமுகப்பறை வகையில் ஒன்று; உடுக்கையும் ஆம்.

6. பொ-ரை : சுழிகளோடு கூடிய கங்கை, அதன்கண் தோய்ந்த திங்கள், பழமையான பாம்பு, நல்ல கொன்றை மலர் ஆகியன நெருங் கிய சென்னியை உடைய முக்கண் ஆதியாகிய சிவபிரானுடைய சைவ வேடத்தை விருப்புற்று நினைத்து, ஐம்புலன்களும் மனமும் அழிந்த சிந்தையினராகிய சனகர் முதலிய அந்தணாளர்கட்கு அறம் பொருள்

Koviloor Digital Library

அழிந்தசிந்தை யந்தணாளர்க்
கறம்பொருளின் பம்வீடு
மொழிந்தவாயான் முக்கணாதி
மேயதுமு துகுன்றே. 6

* * * * * * * 7

576. மயங்குமாயம் வல்லராகி
வானினொடு நீரும்
இயங்குவோருக் கிறைவனாய
விராவணன்றோ ணெரித்த

இன்பம் வீடு ஆகியவற்றை உபதேசித்த திருவாயினனாய் எழுந்தருளி யிருப்பது திருமுதுகுன்றம் ஆகும். தாள் நினைத்து, தாள் இணைத்து என்பவும் பாடம்.

கு-ரை : கொன்றை, மதி, கங்கை முதலியன அணிந்த சென்னியோடு அந்தணர்க்கு அருமறைகளை உபதேசித்த இறைவன் மேயது திருமுதுகுன்றம் என்கின்றது. சுழிந்த - சுழிகளோடு கூடிய. தொல் அரா - பழம் பாம்பு. இதழி - கொன்றை. சழிந்த - நெருங்கிக் கிடக்கின்ற. சைவ வேடம் - தாழ்சடை வெண்ணீறு தாழ்வடம் முதலிய முனிவர் வேடத்தோடு. தாள் இணைத்து - கால்களைப் பதுமம் முதலிய ஆசனவகைகள் பொருந்தப் பின்னி. அழிந்த - செயலற்றுப்போன. சென்னி, வாயான், ஆதி மேயது எனக் கூட்டிப் பொருள் காண்க.

குருவருள் : ''சுழிந்த கங்கை தோய்ந்த திங்கள் தொல்அரா நல்லிதழி, சழிந்த சென்னிச் சைவவேடம் தான் நினைந்து ஐம்புலனும் அழிந்த சிந்தை அந்தணாளர்க்கு'' என்ற பாடம் புதுவை பிரெஞ்சு இந்தியக் கலை நிறுவன ஆய்வுப் பதிப்பில் காணப்படுகிறது. இது சிறப்பாய் உள்ளது. 'சைவ வேடம் தாள் நினைந்து' என்பதிலும் சைவ வேடத்தையும் தாளையும் நினைத்து ஐம்புலனும் அழிந்த சிந்தை அந்தணாளர் என்பதும் சிறக்கிறது. தாள் இணைத்து என்பதில் சிறப்புத் தோன்றவில்லை.

7. * * * * * * *

8. பொ-ரை : அறிவை மயங்கச் செய்யும் மாயத்தில் வல்லவராய் வான், நீர் ஆகியவற்றிலும் சஞ்சரிக்கும் இயல்பினராய அரக்கர்

Koviloor Digital Library

புயங்கராக மாநடத்தன்
புணர்முலைமா துமையாள்
முயங்குமார்பன் முனிவரேத்த
மேயதுமு துகுன்றே. 8

577. ஞாலமுண்ட மாலுமற்றை
நான்முகனும் மறியாக்
கோலமண்டர் சிந்தைகொள்ளா
ராயினுங்கொய் மலரால்
ஏலவிண்டை கட்டிநாம
மிசையவெப்போ துமேத்தும்
மூலமுண்ட நீற்றர்வாயான்
மேயதுமு துகுன்றே. 9

களுக்குத் தலைவனாகிய இராவணனின் தோளை நெரித்த வலிமையோடு பாம்பு நடனத்தில் விருப்புடையவனும், செறிந்த தனபாரங்களை உடைய உமையம்மையைத் தழுவிய மார்பினனும் ஆகிய சிவபிரான் முனிவர்கள் ஏத்த எழுந்தருளி விளங்கும் தலம் திருமுதுகுன்றமாகும்.

கு-ரை : மாயம்வல்லராய், வானிலும் நீரிலும் இயங்குகின்ற அரக்கர்களுக்குத் தலைவனாகிய இராவணனை அடக்கிய புஜங்க நடனத்தினராகிய இறைவன் முனிவர்கள் வந்து அடிவணங்க மேயது முதுகுன்றம் என்கின்றது. புயங்கராக மா நடத்தன் - பாம்பு நடனத்தில் விருப்புடையன். புணர் முலை - இணைந்த முலை.

9. பொ-ரை : உலகங்களை உண்ட திருமாலும், நான்முகனும் அறிய முடியாத இறைவனது திருக்கோலத்தைத் தேவர்களும் அறியாதவர் ஆயினர். நாள்தோறும் கொய்த மலர்களைக் கொண்டு இண்டை முதலிய மாலைகள் தொடுத்துத் தன் திருப்பெயரையே எப்போதும் மனம் பொருந்தச் சொல்பவரும், மூலமலத்தை அழிக்கும் திருநீற்றை மெய்யிற் பூசுபவருமாகிய அடியவர்களின் வாயில், நாம மந்திரமாக உறைந்தருளுகின்ற அப்பெருமான் மேவிய தலம் திருமுது குன்றமாகும்.

கு-ரை : அயனும் மாலும் அறியாத வடிவைத் தேவர்கள் மனங் கொள்ள மாட்டாராயினும் ஆணவவலிகெடுத்த அடியார்கள் மலர்

Koviloor Digital Library

578. உறிகொள்கையர் சீவரத்த
ருண்டுழன்மிண் டர்சொல்லை
நெறிகளென்ன நினைவுறாதே
நித்தலுங்கை தொழுமின்
மறிகொள்கையன் வங்கமுந்நீர்ப்
பொங்குவிடத் தையுண்ட
முறிகொண்மேனி மங்கைபங்கன்
மேயதுமு துகுன்றே. 10

579. மொய்த்துவானோர் பல்கணங்கள்
வணங்குமு துகுன்றைப்
பித்தர்வேடம் பெருமையென்னும்
பிரமபுரத் தலைவன்

மாலை கட்டி வழிபடும் இடம் முதுகுன்றம் என்கின்றது. கோலம் - விண்ணும் பாதலமும் ஊடுருவி நின்ற தீப்பிழம்பாகிய வடிவம். ஏல - பொருந்த. நாமம் - திருவைந்தெழுத்து. மூலம் உண்ட நீற்றர் - மூல மல மாகிய ஆணவத்தின் வலிகெடுத்த திருநீற்றினையுடைய அடியவர்கள். வாயான் - வாயில் நாம மந்திரமாக உறைபவன்.

10. பொ-ரை : குண்டிகையை உறியில் கட்டித் தூக்கிய கையின ரும், காவியாடையைத் தரித்தவரும், உண்டு உழல்பவரும் ஆகிய சமண புத்தர்கள் கூறுவனவற்றை நெறிகள் எனக் கருதாது, நாள் தோறும், சென்று வணங்குவீராக. மானை ஏந்திய கையினனும், கப்பல்கள் ஓடும் கடலிடைப் பொங்கி எழுந்த விடத்தை உண்டவனும், தளிர் போலும் மேனியளாகிய உமையம்மையை ஒருகூறாக உடையவனுமாகிய சிவபிரான் மேவியுள்ளது திருமுதுகுன்றமாகும். அத்திருத்தலத்தை வணங்குவீராக.

கு-ரை : சமணர் புத்தர் சொற்களைக் கேளாதீர்கள்; இறைவனை நித்தம் தொழுங்கள்; அவ்விறைவன் மேயது முதுகுன்றே என்கின்றது. உறி - சமணர்கள் குண்டிகை வைத்திருக்கும் கயிற்றுறி. சீவரம் - மஞ்சளாடை. மிண்டர் - உடல் வலிமையுடையவர். வங்க முந்நீர் - கப்ப லோடுங் கடல்; என்றது கடல் என்ற பொதுமைபற்றிவந்த அடை மொழி. முறி - தளிர்.

11. பொ-ரை : தேவர் கணங்கள் பலவும் நிறைந்து செறிந்து வணங்கும் திருமுதுகுன்றத்திறைவனை, பித்தர் போலத் தன் வயம்

Koviloor Digital Library

* * * * * * * 11

திருச்சிற்றம்பலம்

இழந்து திரிவாரின் தவவேடம் பெருமை தருவதாகும் எனக் கருதும் பிரமபுரத்தலைவனான ஞானசம்பந்தன்... ...

கு-ரை : பித்தர் வேடம் பெருமை என்னும் - சிவபோத மிகுதியால் பித்தரைப்போல இருப்பார் வேடம் பெருமைதருவதாகும் என்னும்... ...

சீகாழிப் புராணம்

குழுவேறச் சமண்மூகர் அழலேற
விடுத்ததனைக் கூடற் கோமான்
வழுவேறு முடலேற வுடன்முரணும்
மனமுரணும் மாற்றி அன்னார்
கழுவேற வெண்ணீறும் ஐந்தெழுத்தும்
விரித்துலகைக் கதியி லேற்றி
மழுவேறும் கரத்தான்றன் அருளேறும்
கவுணியர்கோன் மலர்த்தாள் போற்றி.

- சுப்பையாப்பிள்ளை.

திருஆப்பனூர்ப் புராணம்

பெருமுலைப்பால் அகன்பிரமன்
கண்டறியாப் பெருந்தகைமேல்
பொருமுலைப்பான் மெழுகினுளம்
புரைந்துருகத் தமிழ்பாடும்
அருமுலைப்பால் அரும்பனைய
மணிமுறுவல் மலைமகளார்
திருமுலைப்பால் மணங்கமழ்வாய்ச்
செல்வனையாம் பரவுவாம்.

- கந்தசாமிப்புலவர்.

Koviloor Digital Library

54. திருவோத்தூர்

பதிக வரலாறு:

நடுநாட்டுயாத்திரையிலே, சிரபுர வேந்தராகிய பிள்ளையார் திருவண்ணாமலையை வழிபட்டு, திங்கள்முடியார் இனிது அமர்ந்த திருவோத்தூரையடைந்து, இறைவனை வணங்கி எழுந்தருளியிருக்குங்காலத்து, ஒருநாள் அடியார் ஒருவர் வந்து அழுது கொண்டே வணங்கினார். பிள்ளையார் காரணம் என்னை? என்று வினாவ, அவர், ''அடியேன் இறைவனுக்காக வைத்த பனைகளெல்லாம் ஆண்பனைகளாய்க் காயாவாயின. அதனைக் கண்ட சமணர்கள் 'நீர்வைத்தபனைகள் காய்க்குமோ!' என்று ஏளனஞ் செய்தனர்'' என்று விண்ணப்பித்துக் கொண்டார். அதனைக் கேட்ட பிள்ளையார் கோயிலையடைந்து 'பூத்தேர்ந் தாயன' என்னும் இப்பதிகத்தைத் தொடங்கி முடித்து, பதினொராந் திருப்பாட்டில் 'குரும்பை யாண்பனை யீன்குலை ஓத்தூர்' என்று திருக்கடைக்காப்பு அருளியபோது அப்பனைகள் எல்லாம் குலை தள்ளின. அடியார்கள் களித்தனர். வியந்தனர். இதனைக் கண்ட சமணரிற் சிலர் தமது கையில் இருந்த குண்டிகையைத் தகர்த்தெறிந்து இறைவன் கருணையைப் போற்றிச் சைவராயினர். சிலர் அந்நாட்டை விட்டு அஞ்சி ஓடினர். குலையீன்ற ஆண்பனைகள் தமது கால எல்லைவரை வாழ்ந்து பிறவி ஒழிந்து சிவத்தைச் சார்ந்தன.

பண்: பழந்தக்கராகம்

பதிக எண்: 54

திருச்சிற்றம்பலம்

580. **பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி**
ஏத்தா தாரில்லை யெண்ணுங்கால்
ஓத்தூர் மேய வொளிமழு வாளங்கைக்
கூத்தீ ரும்ம குணங்களே. 1

1. பொ-ரை : திருஓத்தூரில் அழகிய கையில் ஒளி பொருந்திய மழுவாகிய வாளை ஏந்தியவராய் எழுந்தருளிய கூத்தரே, ஆராயுமிடத்து பூசைக்குரிய நறுமலர்களைத் தேர்ந்து பறித்தும் ஏனைய உபகரணங்களைச் சேகரித்துக் கொண்டு, உம் குணநலங்களைப் போற்றி பொன் போன்ற திருவடிகளை ஏத்தி, வணங்காதார் இல்லை.

Koviloor Digital Library

581 . இடையீர் போகா விளமுலை யாளையோர்
புடையீ ரேபுள்ளி மானுரி
உடையீ ரேயும்மை யேத்துது மோத்தூர்ச்
சடையீ ரேயும தாளே. 2

582 . உள்வேர் போல நொடிமைமயி னார்திறம்
கொள்வீ ரல்குலோர் கோவணம்
ஒள்வா ழைக்கனி தேன்சொரி யோத்தூர்க்
கள்வீ ரேயும காதலே. 3

கு-ரை : ஒத்தூர் மேயகூத்தரே, பூவேந்தி உம் பொன்னடி போற்றாதார் இல்லை என்கின்றது. பூதேர்ந்து - வண்டு, ஈக்கடி எச்சம், முடக்கு முதலிய குற்றமில்லாத பூக்களை ஆராய்ந்து. ஆயன - பூசைக்கு வேண்டிய உபகரணங்கள்.

2. பொ-ரை : திருஓத்தூரில் சடைமுடியோடு விளங்கும் இறைவரே, ஈர்க்கு இடையில் செல்லாத நெருக்கமான இளமுலைகளை உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவரே, புள்ளிமான் தோலை ஆடையாக உடுத்தியவரே, உம் திருவடிகளை நாங்கள் வணங்குகிறோம்.

கு-ரை : இள முலையுமையாள் பாகரே, மான்தோல் உடையீரே, உம்மை வணங்குகிறோம் என்கின்றது. இடையீர் போகா இள முலை - இரண்டு முலைகளுக்கும் இடையில் ஈர்க்கு நுழையாத இளமுலை. 'ஈர்க்கிடைபோகா இளமுலை' என்ற திருவாசகமும் நோக்குக. புடையீர் - பக்கத்துடையவரே!

3. பொ-ரை : ஒளிசிறந்த வாழைக் கனிகள் தேன் போன்ற சாற்றைச் சொரியும் திருவோத்தூரில் அரையிற் கோவணம் உடுத்திய வராய் விளங்கும் கள்வரே, உம் காதல் மிக நன்று. பொய் பேசும் இயல் பினராய் அடியார்களை நினைப்பவரைப் போலக் காட்டி அவரை ஏற்றுக் கொள்வீர்.

கு-ரை : ஒத்தூர்க் கள்ளரே! உம்முடைய காதல் நன்றா யிருக்கிறது என்கின்றது. உள்வேர் போல-நினைப்பீர்போல. உள்வீர் என்பதும் பாடம். நொடிமையினார்திறம் - பொய்யாகப் பேசுபவ ருடைய தன்மையை. அல்குல் - அரை.

Koviloor Digital Library

583. தோட்டீ ரேதுத்தி யைந்தலை நாகத்தை
ஆட்டீ ரேயடி யார்வினை
ஓட்டீ ரேயும்மை யேத்துது மோத்தூர்
நாட்டீ ரேயரு ணல்குமே. 4

584. குழையார் காதீர் கொடுமழு வாட்படை
உழையாள் வீர்திரு வோத்தூர்
பிழையா வண்ணங்கள் பாடிநின் றாடுவார்
அழையா மேயரு ணல்குமே. 5

585. மிக்கார் வந்து விரும்பிப் பலியிடத்
தக்கார் தம்மக்க ளீரென்
றுட்கா தாருள ரோதிரு வோத்தூர்
நக்கீ ரேயரு ணல்குமே. 6

4.பொ-ரை : செங்காந்தட்பூவை அணிந்தவரே! படப்பொறிகளை உடைய ஐந்து தலை நாகத்தை ஆட்டுபவரே! அடியவர் வினைகளை ஒட்டுபவரே! திருவோத்தூர் நாட்டில் எழுந்தருளியவரே! உம்மைத் துதிக்கின்றோம்; அருள்புரிவீராக.

கு-ரை : உம்மை ஏத்துவோம்; அருளும் என்கின்றது. தோட்டீர் - செங்காந்தள் பூவையணிந்தவரே. துத்தி - படப்பொறி.

5. பொ-ரை : குழையணிந்த காதினை உடையவரே, கொடிய மழு என்னும் வாட்படையை ஒருபாலுள்ள கரத்தில் ஏந்தி ஆள்பவரே, திருவோத்தூரில் பிழை நேராதபடி வண்ணப் பாடல்கள் பல பாடி நின்று ஆடும் அடியார்க்கு அழையாமலே வந்து அருள் நல்குவீராக.

கு-ரை : பாடி, ஆடும் அடியார்களுக்கு அவர்கள் அழையாமலே வந்து அருளும் என்கின்றது. உழை - பக்கம். பிழையா - தவறாதபடி. வண்ணங்கள் - தாஅவண்ணம் முதலிய வண்ணப்பாடல்கள். அழையாமே நல்கல் முதல்வள்ளல் ஆவார் கடமையென்று விண்ணப்பித்தவாறு.

6. பொ-ரை : திருவோத்தூரில் மகிழ்ந்து உறையும் இறைவரே, நீர் பலி கொள்ள வருங்காலத்து, உம் திருமுன் அன்பு மிக்கவராய்

Koviloor Digital Library



திருவோத்தூர்:
''குரும்பை யாண்பனை ஈன்குலை ஒத்தூர்''
-சம்பந்தர்

Koviloor Digital Library



Koviloor Digital Library

586. தாதார் கொன்றை தயங்கு முடியுடை
நாதா வென்று நலம்புகழ்ந்
தோதா தாருள ரோதிரு வோத்தூர்
ஆதீ ரேயரு ணல்குமே. 7

587. என்றா னிம்மலை யென்ற வரக்கனை
வென்றார் போலும் விரலினால்
ஒன்றார் மும்மதி லெய்தவ் னோத்தூர்
என்றார் மேல்வினை யேகுமே. 8

விரும்பி வந்து பலியிடுதற்குத் தம் மக்களுள் மகளிரை அனுப்புதற்கு அஞ்சாத தந்தை தாயர் உளரோ? எவ்வாறேனும் ஆக, அவர் தமக்கு அருள் நல்குவீராக.

கு-ரை : நீர் பலியேற்க வந்தகாலத்து,தம் மக்களுள் உம்முன் வந்து பலியிடத்தக்கவர் யார் என்று அஞ்சாதார் உளரோ; அருள் நல்கும் என்கின்றது. இறைவன்கொண்ட விடவேடத்தில் ஈடுபட்டவர்கள் மயங்கித் தன்வசம் அழிந்தமையின் அவர் அண்மைக்கன் நடந்து வந்து பிச்சைபோடத் தக்கார் யார் என்று அஞ்சாதார் உளரோ என்று கூறியதாம். நக்கீரே -மகிழ்ந்திருப்பவரே.

7. பொ-ரை : திருவோத்தூரில் முதற்பொருளாக விளங்குபவரே! மகரந்தம் பொருந்திய கொன்றை மலர் விளங்கும் திருமுடியை உடைய தலைவரே! என்றழைத்து உமது அழகினைப்புகழ்ந்து ஓதாதவர் உளரோ? அருள் நல்குவீராக.

கு-ரை: கொன்றை விளங்கு முடியுடைநாதா·என்று ஓதார்யார்? அருள் நல்கும் என்கின்றது. தாது - மகரந்தம். ஆதீர் - முதற்பொருளாயுள்ளவரே.

8. பொ-ரை : இக்கயிலைமலை எம்மாத்திரம் என்று கூறிய இராவணனைக் கால்விரலால் வென்றவரும், தம்மோடு மனம் பொருந்தாத திரிபுரத்தசுரர்தம் மும்மதில்களைக் கணையால் எய்து அழித்தவருமாகிய சிவபிரானது திருவோத்தூர் என்று ஊர்ப் பெயரைச் சொன்ன அளவில் சொல்லிய அவர்மேல் உள்ள வினைகள் போகும்.

கு-ரை : ஒத்தூர் என்றார்மேல் உள்ள வினைகெடும் என்

Koviloor Digital Library

588. நன்றா நான்மறை யானொடு மாலுமாய்ச்
சென்றார் போலுந் திசையெலாம்
ஒன்றா யொள்ளெரி யாய்மிக வோத்தூர்
நின்றீ ரேயுமை நேடியே. 9

589. கார மண்கலிங் கத்துவ ராடையர்
தேரர் சொல்லவை தேறன்மின்
ஓரம் பாலெயி லெய்தவ னோத்தூர்ச்
சீர வன்கழல் சேர்மினே. 10

கின்றது. என்தான் - எம்மாத்திரம். ஒன்னார் - பகைவர். என்றார் மேல்வினை ஏகும் என்றும், என்றார்மேல் வினை ஏகும் என்றும் பிரித்துப் பொருள் கொள்ளலாம்.

9. பொ - ரை : திருவோத்தூரில் விளங்கும் இறைவரே! நல்லன செய்யும் நான்கு வேதங்களை ஓதுபவனாகிய பிரமன். திருமால் ஆகியோர் எரியுருவாய் நீர் ஒன்றுபட்டுத் தோன்றவும், அறியாராய் திசையனைத்தும் தேடித் திரிந்து எய்த்தனர் அவர்தம் அறிவுநிலை யாதோ?

கு-ரை : அயனும் மாலும் உம்மைத் தேடித் திசையெல்லாம் சென்றார்போலும் என்று நகைசெய்கின்றது. நன்றாம் நான் மறையான் என்றது நல்லனசெய்யும் நான்மறைகளை ஓதியும் அவன் அறிந்திலன் எனக் குறிப்பித்தபடி. ஒன்றாயும் - பெருஞ்சோதிப்பொருளாயும். நேரில் இருந்தும் காணாது திசையெல்லாந் தேடினர்; அவர்கள் அறிவு இருந்தபடி என்னே என்று நகைசெய்தவாறு.

10. பொ-ரை : கரிய நிறத்தவராகிய சமணர்களும், கலிங்க நாட்டுத்துவர் ஏற்றிய ஆடையை அணிந்த புத்தத் துறவியரும் கூறும் பொய் மொழிகளை நம்பாதீர். முப்புரங்களை ஓரம்பினால் எய்து அழித்தவனாகிய, திருவோத்தூரில் விளங்கும் சிறப்பு மிக்க சிவபிரானின் கழல்களைச் சேர்வீர்களாக.

கு-ரை : ஓரம்பால் எயில் எய்தவன் கழல்சேருங்கள்; புத்தர், சமணர் பொய்யுரை கேளாதீர்கள் என அறிவுறுத்தவாறு. தேரர் - பௌத்தர். கலிங்கத்துவராடையர் - துவர் ஏற்றிய கலிங்கநாட்டு ஆடையையுடைய புத்தர்கள்.

Koviloor Digital Library

590. குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்
அரும்பு கொன்றை யடிகளைப்
பெரும்பு கலியுண் ஞானசம்பந் தன்சொல்
விரும்பு வார்வினை வீடே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : திருவோத்தூரில், ஆண் பனைகள் குரும்பைக் குலைகளை ஈனும் அற்புதத்தைச் செய்தருளிய கொன்றை அரும்பும் சடை முடி உடைய இறைவரைப் பெருமை மிக்க திருப்புகலி என்னும் பெயருடைய சீகாழிப் பதியுள் தோன்றிய ஞானசம்பந்தன் போற்றி யுரைத்த இப்பாமாலையை விரும்பும் அன்பர்களின் வினைகள் அழியும்.

கு-ரை : ஞானசம்பந்தன் சொல்லிய இவை பத்தும் விரும்பு வார்க்கு வினை ஒழியும் என்கின்றது. முதலிரண்டடியிலும் கூறிய கருத்து, பிள்ளையார் பாடல்களைக் கேட்டதும் இறைவன ருளால் ஆண் பனைகள் பெண் பனைகளாகக் குலையீன்றன என்பதாம்.

திருத்தொண்டர் புராணம்

திருஞானசம்பந்தர் புராணம்

விரும்பு மேன்மைத் திருக்கடைக்காப்
பதனில் விமலர் அருளாலே
குரும்பை ஆண்ப னைஈனும்
என்னும் வாய்மை குலவுதலால்
நெருங்கும் ஏற்றுப் பனையெல்லாம்
நிறைந்த குலைக ளாய்க்குரும்பை
அரும்பு பெண்ணை யாகியிடக்
கண்டா ரெல்லாம் அதிசயித்தார்.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

55. திருமாற்பேறு

பதிக வரலாறு:

திருஞானசம்பந்தப் பெருமான், திருக்கச்சிமேற்றளியை வணங்கி எழுந்தருளியிருக்கின்ற காலத்து, ஒரு நாள், பாலி யாற்றுத் தென் கரை வழியாகச் சென்று திருமாற்பேறு என்னுந் தலத்தையடைந்தார்கள், முப்புரம் வென்ற முதல்வரை வணங்கி 'ஊறியார்தரு' என்னும் இப்பதிகத்தை அருளிச்செய்தார்கள். இதனை மொழி மாலை எனச் சிறப்பிப்பர் சேக்கிழார் பெருமான்.

பண்: பழந்தக்கராகம்

பதிக எண்: 55

திருச்சிற்றம்பலம்

591. ஊறி யார்தரு நஞ்சினை யுண்டுமை
நீறு சேர்திரு மேனியர்
சேறு சேர்வயற் றென்றிரு மாற்பேற்றின்
மாறி லாமணி கண்டரே. 1

592. தொடையார் மாமலர் கொண்டிரு போதும்மை
அடைவா ராமடி கள்ளென

1. பொ-ரை : சேற்று வளம் நிறைந்த வயல்கள் சூழ்ந்த அழகிய திருமாற்பேற்றில் ஒப்பற்ற நீலமணி போன்ற கண்டத்தை உடைய இறைவர், கடலிடத்தே ஊறிப் பொருந்திவந்த நஞ்சினை உண்டு உமை யம்மையோடு கூடியவராய்த் திருநீறு பூசிய திருமேனியராய் விளங்குகிறார்.

கு-ரை : நஞ்சத்தையுண்டு, உமையும் நீறும்சேர்ந்த திருமேனியர் மாற்பேறர் என்கின்றது. ஊறி ஆர் தரு நஞ்சு - கடலில் ஊறி வந்த விடம். உமை நீறுசேர் மேனி எனப் பிரிக்க. மாறிலா - தீது செய்யாத; அருளே வழங்குகின்ற, மணிகண்டர் - நீலகண்டர்.

2. பொ-ரை : வாய்க்கால் மடைகளில் நீர் நிறைந்து விளங்கும் நிலையான திருமாற்பேற்றைத் தமது இருப்பிடமாக உடையவரே, உம்மை நினைந்து சிறந்த மாலைகளைத் தொடுத்து ஏந்திய கையின

Koviloor Digital Library

மடையார் நீர்மல்கு மன்னிய மாற்பே
றுடையீ ரேயுமை யுள்கியே. 2

593. பையா ரும்மர வங்கொடு வாட்டிய
கையா னென்று வணங்குவர்
மையார் நஞ்சுண்டு மாற்பேற் றிருக்கின்ற
ஐயா நின்னடி யார்களே. 3

594. சால மாமலர் கொண்டு சரணென்று
மேலை யார்கள் விரும்புவர்
மாலி னார்வழி பாடுசெய் மாற்பேற்று
நீல மார்கண்ட நின்னையே. 4

ராய்க் காலை, மாலை இருபோதும் உம்மைத் தலைவராக எண்ணி அடியவர் அடைகின்றனர்.

கு-ரை : மாற்பேறரே உம்மை எண்ணி அடியார்கள் மாலை முதலியவற்றை ஏந்தி இருபோதும் அடைகின்றார்கள் என்கின்றது. தொடை - மாலை. இருபோதும் - காலையும் மாலையும்.

3. பொ-ரை : கருநிறம் பொருந்திய நஞ்சை உண்டு தேவர்களைக் காத்தருளிய நீலகண்டராய்த் திருமாற்பேற்றில் வீற்றிருக்கின்ற தலைவரே, உம் அடியவர்கள் படம் பொருந்திய பாம்பைப் பிடித்து ஆட்டும் கைகளை உடையவர் என்று உம்மை வணங்குவார்கள்.

கு-ரை : நின்னடியார்கள் நின்னை அரவமாட்டிய கையான் என்று வணங்குவார்கள் என்கின்றது. பை - படம். மை - கருமை.

4. பொ-ரை : திருமால் வழிபாடு செய்து அருள் பெற்றதால் திருமாற்பேறு என வழங்கும் இத்தலத்தில் விளங்கும் நீலநிறம் பொருந்திய கண்டத்தை உடையவரே, நும்மை மேன்மை மிக்க பெரியோர்கள் மிகுதியான நறுமலர்களைக்கொண்டு அர்ச்சித்து உம்மையே சரண் என்று விரும்பி வழிபடுவர்.

கு-ரை : நீலகண்ட, உயர்ந்தோர்கள் மலர்கொண்டு நின்னை வழிபடுவார்கள் என்கின்றது. சால - மிக. மேலையோர்கள் - உயர்ந் தோர்கள் மாலினார் வழிபாடுசெய் மாற்பேறு என்றது இத்தல வரலாற்றுக் குறிப்பு.

Koviloor Digital Library

595. மாறி லாமணி யேயென்று வானவர்
ஏற வேமிக வேத்துவர்
கூற னேகுல வுந்திரு மாற்பேற்றின்
நீற னேயென்று நின்னையே. 5

596. உரையா தாரில்லை யொன்றுநின் றன்மையைப்
பரவா தாரில்லை நாள்களும்
திரையார் பாலியின் றென்கரை மாற்பேற்
றரையா னேயரு ளல்கிடே. 6

* * * * * * * * * 7

597 . அரச ளிக்கு மரக்க னவன்றனை
உரைகெ டுத்தவ னொல்கிட

5. பொ-ரை : உமையம்மையை ஒரு கூற்றாகக் கொண்டவரே, விளங்கும் திருமாற்பேற்றில் வெண்ணீறு பூசி விளங்குபவரே, ஒப்பற்ற மாணிக்கமணியே என்று உம்மையே வானவர் மிகமிக ஏத்தி மகிழ்வர்.

கு-ரை : நின்னைத் தேவர்கள் மாறிலாமணியே என்று ஏத்துவர் என்கின்றது. சில ரத்தினங்களை அணிந்தால் தீமையும் செய்யக் கூடும்; இந்தமணி எத்தகையோர்க்கும் இன்பமே செய்தலின் மாறிலாமணியே என்றார். ஏறவே - மிக. தாமுயர என்றுமாம்.

6. பொ-ரை : அலைகள் பொருந்திய பாலியாற்றின் தென் கரையில் விளங்கும் திருமாற்பேற்றில் விளங்கும் அரசனே, பொருந்திய நின் பெருந்தன்மையை வியந்து உரையாதார் இல்லை. நாள்தோறும் உன் பெருமைகளைப் பரவாதவர் இல்லை. அருள் நல்குவீராக.

கு-ரை : திருமாற்பேற்று அரைசனே, உன்னைப் புகழாதாரும், பரவாதாரும் இல்லை என்கின்றது. இத்தலம் பாலியாற்றுத் தென் கரையது என்பது குறிக்கப்பெறுகின்றது.

7. * * * * * * * * *

8. பொ-ரை : இலங்கை நாட்டை ஆளும் இராவணனின் புகழை மங்கச் செய்து, பின் அவன் பிழை உணர்ந்து வேண்டிய அளவில்

Koviloor Digital Library

வரமி குத்தவெம் மாற்பேற் றடிகளைப்
பரவி டக்கெடும் பாவமே. 8

598. இருவர் தேவருந் தேடித் திரிந்தினி
ஒருவ ராலறி வொண்ணிலன்
மருவு நீள்கழன் மாற்பேற் றடிகளைப்
பரவு வார்வினை பாறுமே. 9

599. தூசு போர்த்துழல் வார்கையிற் றுற்றுணும்
நீசர் தம்முரை கொள்ளெலும்
தேச மல்கிய தென்றிரு மாற்பேற்றின்
ஈச னென்றெடுத் தேத்துமே. 10

அவனுக்கு வரங்கள் பலவற்றையும் மிகுதியாக அளித்தருளிய எமது திரு மாற்பேற்று அடிகளைப் பரவப் பாவம் கெடும்.

கு-ரை : இராவணன் வலிகெடுத்து வரமளித்த இறைவனைப் பரவப் பாவம் கெடும் என்கின்றது, உரை - புகழ். ஒல்கிட - பணிய.

9. பொ-ரை : திருமால் பிரமன் ஆகிய இருவரும் அடிமுடி காணத்தேடித் திரிந்தும் ஒருவராலும் அறிய ஒண்ணாத இயல்பின னாகிய, திருமாற்பேற்றுள் விளங்கும் சிவபிரானுடைய பெருமை விரிந்த திருவடிகளைப் பரவித் துதிப்பார் வினைகள் கெடும்.

கு-ரை : இறைவன் அடிகளைப் பரவுவார் வினைசிதறும் என் கின்றது. தேவர் இருவர் - அயனும் மாலும். இருவர் தேடியும் ஒரு வராலும் அறிய முடியாதவன் என்பது கருத்து.

10. பொ-ரை : ஆடையை மேனிமேற் போர்த்து உழல்வோரும், கைகளில் உணவை ஏற்று உண்ணும் இழிந்தோருமாகிய புத்த, சமணர் களின் உரைகளை மெய்யெனக் கொள்ளாதீர். புகழ் பொருந்திய அழகிய திருமாற்பேற்றுள் விளங்கும் ஈசன் என்று பெருமானைப் புகழ்ந்து போற்றுமின்.

கு-ரை : சமணர் புத்தர் சழக்குரை கொள்ளாதீர்; திருமாற் பேற்றீசன் என்று ஏத்தும் என்கின்றது. தூசு - ஆடை. துற்று - உணவு. நீசர் - இழிந்தவர். கொள்ளெலும் - கொள்ளாதீர்கள்; இது அரு வழக்கு. தேசம் - ஒளி.

Koviloor Digital Library

600. மன்னி மாலொடு சோமன் பணிசெயும்
மன்னு மாற்பேற் றடிகளை
மன்னு காழியுண் ஞானசம் பந்தன்சொல்
பன்ன வேவினை பாறுமே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : திருமாலும் சந்திரனும் தங்கியிருந்து பணி செய்து வழிபட்ட நிலைபேறுடைய திருமாற்பேற்றுள் விளங்கும் இறைவனை நிலைத்த காழி மாநகருள் தோன்றிய ஞானசம்பந்தன் பாடிய இத்திருப்பதிகத்தை ஓதினால் வினைகள் கெடும்.

கு-ரை : இத்தலம் மாலும், மதியும் வணங்கிய தலமாதலின் இத் தலத் திறைவனை வழிபட வினைகள் சிதறும் என்கின்றது. சோமன் - சந்திரன். பன்ன - சொல்ல.

திருக்குடந்தைப் புராணம்

காலமே கருத்தா வென்று கரைபவ ரூம ராகக்
கோலமே பொலியுங் கொங்கிற் கொடும்பனிக் காலத் தீமை
சாலமே வியது ணர்ந்து தவிர்த்துமா தேவன் சீர்த்தி
ஞாலமேல் விரித்த காழி நாடனைப் பாடி வாழ்வாம்.

- மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

மயூரகிரி புராணம்

அம்பிகைதன் முலைப்பாலில் அறிவுகுழைத்(து)
உண்டபிரா னழகார் சோம
விம்பமெனு மலர்முகத்தான் திருமருகல்
வணிகப்பெண் விடந்தீர்த் தாண்டோன்
அம்புகின்ற சைவரெலா மீடேறச்
சமணர்கழு நண்ணச் செய்த
உம்பர்பிரான் திருநீற்றான் சம்பந்தன்
இணையடிக ளுளத்துள் வைப்பாம்.

- வேதாந்த சுப்பிரமணியர்.

Koviloor Digital Library

56. திருப்பாற்றுறை

பதிக வரலாறு:

திருத்தவத்துறையை வணங்கிப் பிறதலங்களையும் வணங்கத் திருவுளம்பற்றிய பிள்ளையுார் திருப்பாற்றுறையை அடைந்தார்கள். அத்தலத்து எழுந்தருளியுள்ள ஏறுயர்த்த பெருமானை வணங்கிக் 'காரார் கொன்றை' என்னும் இப் பதிகத்தை அருளிச் செய்தார்கள். இப்பதிகத்தை அருளுகின்ற காலத்துப் பிள்ளையாரின் திருவுள்ளம் சன்மார்க்க நெறிக்கண் நாயக நாயகித்தன்மையில் ஈடுபடுவதாயிற்று. தலைவியாகிய தன்னுள்ளத்தில் தலைவன் உருவன்றி வேறொன்றும் தோன்றாத நிலையில், ஊடியும் பிரிந்தும் நுகரும் இன்பநிலைகள் தோன்ற இத்திருப் பதிகத்தை அருளிச்செய்தார்.

பண்: பழந்தக்கராகம்

பதிக எண்: 56

திருச்சிற்றம்பலம்

601. காரார் கொன்றை கலந்த முடியினர்
சீரார் சிந்தை செலச்செய்தார்
பாரார் நாளும் பரவிய பாற்றுறை
யாரா ராதி முதல்வரே. 1

1. பொ-ரை : உலக மக்கள் நாள்தோறும் வந்து வழிபட்டுப் போற்றும், ஆத்தி மலர் அணிந்த திருப்பாற்றுறையில் விளங்கும் ஆதி முதல்வராகிய பெருமானார் கார்காலத்தே மலரும் கொன்றை மலர் மாலை சூடிய திருமுடியினராய் அன்பு கனிந்த நம் சிந்தையைத் தம்மிடமே செல்லச் செய்தார்.

கு-ரை : திருஞானசம்பந்தப் பிள்ளையார் தம்மைப் பெண்ணாக்கி, தலைவனாகத் திருப்பாற்றுறைத் திருமூலநாதரைப் பாவித்து ஈடுபட்டு, சிறந்த சிந்தை தம்மிடமே செல்லச் செய்தார் என்கின்றார். கார் ஆர் கொன்றை - கார்காலத்துக் கொன்றை. சிந்தை செலச் செய்தார். அடியார்கள் சிந்தையைத் தம்மிடமே செல்லச்செய்தார். ஆரார் - தெவிட்டாதவர். ஆதிமுதல்வர் என்றது திருமூல நாதர் என்னும் தலத்திறைவர் பெயரைக் குறிப்பது.

Koviloor Digital Library

602. நல்லா ரும்மவர் தீய ரெனப்படும்
சொல்லார் நன்மலர் சூடினார்
பல்லார் வெண்டலைச் செல்வரெம் பாற்றுறை
எல்லா ருந்தொழு மீசரே. 2

603. விண்ணார் திங்கள் விளங்கு நுதலினர்
எண்ணார் வந்தெ னெழில்கொண்டார்
பண்ணார் வண்டினம் பாடல்செய் பாற்றுறை
உண்ணா ணாளு முறைவரே. 3

604. பூவுந் திங்கள் புனைந்த முடியினர்
ஏவி னல்லா ரெயிலெய்தார்

2. பொ-ரை : பற்கள் பொருந்திய வெண்மையான தலை யோட்டை அணிந்தவரும், எல்லாராலும் தொழப்படுபவருமாகிய எம் திருப்பாற்றுறைச் செல்வராகிய ஈசர், நல்லவருக்கு நல்லவராவர். தீயை ஏந்தியதால் தீயர் எனவும் படுவார். அவர் நல்ல மலரைச் சூடியவர்.

கு-ரை : இவர் நல்லவரும் ஆவர்; தீயர் எனவும் சொல்லப் பெறுவர்; ஆயினும் எனது சொன்மலரைச் சூடினார் என்கின்றது. தீயர் - கையில் தீயையுடையவர். சொல் ஆர் நன் மலர் - சொல்லாகிய நிறைந்த நல்லமலர்கள்; என்றது, தலைவி பேசுவன யாவும் அவன் புகழேயாதல் தெரிவித்தது. எல்லாரும் தொழும் - பரிபாகமுடையவர் அஃதில்லாத உலகவர் யாவரும் வணங்கும்.

3. பொ-ரை : இயற்கையில் பண்ணிசை போல முரலும் வண்டினங்கள் பாடும் திருப்பாற்றுறையுள் எக்காலத்தும் உறைபவரும், விண்ணகத்தே தவழும் திங்கள் விளங்கும் திருமுடியினரும் ஆகிய இறைவர் என் இதயத்தில் இருப்பவராய் வந்து என் எழில்நலம் அனைத்தையும் கவர்ந்தார்.

கு-ரை : திருமூலநாதர் ஆராயாதே வந்து என்னழகெல்லாவற்றையும் கவர்ந்தார் என்கின்றது. எண்ணார் - எண்ணத்தில் இருப்பவர். இது உறுப்பு நலனழிதல் என்னும் மெய்ப்பாடு. பாற்றுறையுள் நாள்நாளும் உறைவர் எனப் பிரித்துப் பொருள்காண்க.

4. பொ-ரை : மூழ்கியவருடைய பாவங்களைப் போக்கும் தீர்த்த நலம் உடைய திருப்பாற்றுறையுள் மலர்களையும் பிறைமதியையும்

Koviloor Digital Library

பாவந் தீர்புனன் மல்கிய பாற்றுறை
ஓவென் சிந்தை யொருவரே. 4

605. மாகந் தோய்மதி சூடி மகிழ்ந்தென
தாகம் பொன்னிற மாக்கினார்
பாகம் பெண்ணு முடையவர் பாற்றுறை
நாகம் பூண்ட நயவரே. 5

606. போது பொன்றிகழ் கொன்றை புனைமுடி
நாதர் வந்தெ னலங்கொண்டார்
பாதந் தொண்டர் பரவிய பாற்றுறை
வேத மோதும் விகிர்தரே. 6

புனைந்த திருமுடியினராய்க் கணையொன்றால் பகைவராய் வந்தடைந்த அசுரர்களின் முப்புரங்களை அழித்த இறைவரே என் மனம் பிறவற்றில் செல்லாது ஓவுதல் செய்த ஒருவராவர்.

கு-ரை : அம்பால் அடையார் புரம் எய்த பாற்றுறைநாதனே என் சிந்தைக்கண் உள்ள ஒருவர் என்கின்றது. ஏவின் - அம்பால். அல்லார் - பகைவர். ஓ என்பது வினாப்பொருளின் கண்ணது.

5. பொ-ரை : தம் திருமேனியின் ஒருபாதியாய்ப் பெண்ணைக் கொண்டுள்ளவரும், நாகத்தை அணிகலனாகப் பூண்டவரும் ஆகிய, திருப்பாற்றுறை இறைவர், வானகத்தே தோயும் பிறைமதியை முடியிற் சூடி மகிழ்ந்து வந்து எனது உடலைப் பொன்னிறமான பசலை பூக்கச் செய்தவராவார்.

கு-ரை : ஒருபாதியில் பெண்ணையும் உடைய பெருமான் என்னுடைய மார்பைப் பொன்னிறமாக்கினார் என்று பிரிவால் வருந்திய தலைவி பசந்தமையையறிவிக்கின்றது. மாகம் - ஆகாயம். ஆகம் - மார்பு. நயவர் - நலமுடையவர்.

6. பொ-ரை : தொண்டர்கள் தம் திருவடிகளைப் பரவத் திருப் பாற்றுறையுள் விளங்கும் வேதங்களை அருளிய விகிர்தரும், பொன் போல் திகழும் கொன்றை மலர்களைப் புனைந்த திருமுடியினை உடைய தலைவருமாகிய சிவபிரானாரே என்பால் வந்து என் அழகினைக் கவர்ந்தவராவார்.

Koviloor Digital Library

607. வாடல் வெண்டலை சூடினர் மால்விடை
கோடல் செய்த குறிப்பினார்
பாடல் வண்டினம் பண்செயும் பாற்றுறை
ஆட னாக மசைத்தாரே. 7

608. வெவ்வ மேனிய ராய்வெள்ளை நீற்றினர்
எவ்வஞ் செய்தெ னெழில்கொண்டார்
பவ்வ நஞ்சடை கண்டரெம் பாற்றுறை
மவ்வல் சூடிய மைந்தரே. 8

கு-ரை : கொன்றைபுனைந்த நாதர்வந்து என் நலங்கொண்டார் என்கின்றது.

7. பொ-ரை : பாடல்கள் பலவற்றைப் பாடும் வண்டினங்கள் சிறந்த பண்களை மிழற்றும் திருப்பாற்றுறையுள், ஆடுதலில் வல்ல நாகப்பாம்பைத் திருமேனியில் பல இடங்களிலும் கட்டியுள்ள இறைவர், உலர்ந்த வெள்ளிய தலையோடுகளை மாலையாகச் சூடியவராவர். பெரிய இடபத்தின் மேல் ஏறி வந்து என் அழகைக் கவர்ந்து செல்லும் குறிப்பினர்.

கு-ரை : ஆடும் அரவையணிந்த பாற்றுறைநாதர் விடையேறிப் பிரிதலைக் கருதினார் என்கின்றது. வாடல் வெண்தலை - உலர்ந்த தலை. மால்விடை கோடல்செய்த குறிப்பினார் - பெரிய இடபத்தைக் கொள்ளுதலைச்செய்த குறிப்பினையுடைவர்; என்றது. ஊர்தியாகிய விடையைக் கொள்ளுதல் என்பது. தலைவன் பிரிவு கருதியதாம்.

8. பொ-ரை : கடலிடைத் தோன்றிய நஞ்சடைந்த கண்டரும், முல்லை மலர் சூடிய மைந்தரும் ஆகிய எம் திருப்பாற்றுறை இறைவர் விரும்பத்தக்க திருமேனியராய், வெண்மையான திருவெண்ணீறு அணிந்தவராய் வந்து, என் எழிலைக் கொண்டு பின் பிரிவுத்துன்பம் தந்தவராவர்.

கு-ரை : முல்லைசூடிய இறைவர் பிரிவுத் துன்பத்தை எனக்குப் பெரிதாக்கி எனது அழகைக் கவர்ந்தார் என்கின்றது.

வெவ்வ மேனியர் - வெம்மையோடுகூடிய மேனியை யுடையவர். எவ்வம் செய்து - துன்புறுத்தி. பவ்வம் நஞ்சு - கடல் நஞ்சு. மவ்வல் - முல்லை.

Koviloor Digital Library

609. ஏன மன்னமு மானவ ருக்கெரி
ஆன வண்ணத்தெ மண்ணலார்
பான லம்மலர் விம்மிய பாற்றுறை
வான வெண்பிறை மைந்தரே. 9

610. வெந்த நீற்றினர் வேலினர் நூலினர்
வந்தெ னன்னலம் வௌவினார்
பைந்தண் மாதவி சூழ்தரு பாற்றுறை
மைந்தர் தாமோர் மணாளரே. 10

9. பொ-ரை : நீலோற்பல மலர்கள் நிறைந்த நீர் நிலைகளோடு கூடிய திருப்பாற்றுறையுள் வானகத்தே விளங்கும் வெண்மையான பிறை மதியைச் சூடி எழுந்தருளியுள்ள மைந்தராகிய இறைவர், பன்றியும், அன்னமுமாய் அடிமுடி தேடிய திருமால், பிரமன் ஆகியோருக்கு அழலுருவமாய் ஓங்கி நின்ற அண்ணலார் ஆவார்.

கு-ரை : தீப்பிழம்பாகிய செல்வரே வெண்பிறை அணிந்த மைந்தராக இருக்கின்றார் என்கின்றது. ஏனம் - பன்றி. பானல் - நீலோற்பலம்.

10. பொ-ரை : பசுமையான குளிர்ந்த குருக்கத்திக் கொடிகள் சூழ்ந்துள்ள திருப்பாற்றுறையுள் எழுந்தருளியுள்ள மைந்தராகிய இறைவர், மேனி மீது வெந்த நீறு பூசியவராய், கையில் வேலேந்தியவராய், மார்பில் பூணூல் அணிந்தவராய் வந்து என் அழகினை வவ்விச் சென்றார். அவர் முன்னரே மலைமகளை மணந்த மணாளர் ஆவார்.

கு-ரை : பாற்றுறை மணாளர் என்நலம் வௌவினார் என்கின்றது. இதில் தலைவி தலைவருடைய உள்ளத் தூய்மையைக் காட்டும் வீரத்தை விளக்கும் வேலையும், இதுவரை மணமாகாமையைக் காட்டும் நூலையுங்கண்டு காதலித்தேன், அவர் என்நலத்தை வௌவினார் என்பதுதோன்ற, நீற்றினர் வேலினர் நூலினராய்வந்து என் நலத்தை வௌவினார் என்கின்றார். எம்மணாளர் என்னாது ஓர் மணாளர் என்றது மலைமகளையும் அலைமகளையும் முன்னரே மணந்திருக்கின்றமை குறிப்பிக்க. இப்பதிகத்துள் இராவணனை அடர்த்ததும், புறச்சமயிகளைப் பற்றிய குறிப்பும் கூறாமை, தலைவனும்

Koviloor Digital Library

611. பத்தர் மன்னிய பாற்றுறை மேவிய
பத்து நூறு பெயரனைப்
பத்தன் ஞானசம் பந்தன தின்றமிழ்
பத்தும் பாடிப் பரவுமே. 11

திருச்சிற்றம்பலம்

தலைவியுமாய் இருந்து அநுபவிக்கும் அருள்நெறி முதிர்ச்சியால் என அறிக. வரும் தோணிபுரப் பதிகத்தும் இக்காட்சியைக் காண்க.

11. பொ-ரை : அடியவர்கள் நிறைந்துள்ள திருப்பாற்றுறையுள் எழுந்தருளிய ஆயிரம் திருநாமங்களையுடைய இறைவனை, பக்தனாகிய ஞானசம்பந்தன் போற்றிப் பாடிய இனிய தமிழ்ப் பாடல்களாகிய இப்பத்தையும் பாடிப் பரவுமின்.

கு-ரை : பாற்றுறைநாதரைப்பற்றிய இப்பாடல் பத்தையுஞ் சொல்லிப் பரவுங்கள் என்கின்றது. பத்து நூறு பெயரன் - ஆயிரந் திருநாமத்தையுடையவன்.

திருப்புகழ்

எதிரி லாதபத்தி தனைமேவி
இனிய தாள்நினைப்பை இருபோதும்
இதய வாரிதிக்குள் உறவாகி
எனது ளேசிறக்க அருள்வாயே
கதிர காமவெற்பில் உறைவோனே
கனக மேருஒத்த புயவீரா
மதுர வாணியுற்ற கழலோனே
வழுதி கூன்நிமிர்த்த பெருமாளே.

- அருணகிரிநாதர்.

Koviloor Digital Library

57. திருவேற்காடு

பதிக வரலாறு:

திருக்காளத்தி மலையை வணங்கிக் காளத்தியிற் சில காலம் தங்கியிருந்த காழிப் பிள்ளையார் அடியார் கூட்டத்தோடு காடும் மலையுங் கடந்து, வழியில் பலதலங்களையும் வணங்கிக் கொண்டு, பாலியாற்று வடகரையில் இருக்கும் திருவேற்காட்டை வந்தடைந்தார்கள். அங்குள்ள செழுஞ்சுடர் பொற்கோயிலை அடைந்து பணிந்து, 'ஒள்ளிது உள்ள' என்னும் இப்பதிகத்தை யருளிச் செய்தார்கள்.

பண்: பழந்தக்கராகம்

பதிக எண்: 57

திருச்சிற்றம்பலம்

612. **ஒள்ளி துள்ளக் கதிக்கா மிவனொளி**
வெள்ளி யானுறை வேற்காடு
உள்ளி யாருயர்ந் தாரிவ் வுலகினில்
தெள்ளி யாரவர் தேவரே. 1

613. **ஆட னாக மசைத்தள வில்லதோர்**
வேடங் கொண்டவன் வேற்காடு

1. பொ-ரை : மிகவும் சிறந்த மெய்ப்பொருளை அன்போடு எண்ணினால் அவ்வெண்ணம் நற்கதிக்கு வாயிலாம். அத்தகைய மெய்ப்பொருளாய் வெண்மையான ஒளி வடிவினனாய் திருவேற் காட்டில் எழுந்தருளியுள்ள இவ்விறைவனை நினைந்தவர்கள் இவ் வுலகினில் உயர்ந்தவர் ஆவர். அவனைக் கண்டு தெளிந்த அவர்கள் தேவர்களாவர்.

கு-ரை : மிகவும் உயர்ந்ததை எண்ணின் அது நற்கதிக்கு வாயி லாம்; ஆதலால் வேற்காடு எண்ணியவர்கள் இவ்வுலகில் தேவராவர் என்கின்றது. ஒள்ளிது - உயர்ந்தபொருளை. உள்ள - எண்ண. உள்ளம் - உயிருமாம். உள்ளியார் - எண்ணியவர்கள்.

2. பொ-ரை : ஆடுதற்குரிய பாம்பினை இடையிற் கட்டிய, அளவற்ற பல்வேறு வடிவங்களைக் கொண்டருளிய திருவேற்காட்டு

Koviloor Digital Library

பாடி யும்பணிந் தாரிவ் வுலகினில்
சேட ராகிய செல்வரே. 2

614. பூதம் பாடப் புறங்காட் டிடையாடி
வேத வித்தகன் வேற்காடு
போதுஞ் சாந்தும் புகையுங் கொடுத்தவர்க்
கேத மெய்துத லில்லையே. 3

615. ஆழ்க டலெனக் கங்கைக் ரந்தவன்
வீழ்ச டையினன் வேற்காடு
தாழ்வு டைமனத் தாற்பணிந் தேத்திடப்
பாழ் படும்மவர் பாவமே. 4

இறைவனைப் பாடிப் பணிந்தவர்கள், இவ்வுலகினில் பெருமை பொருந்திய செல்வர்கள் ஆவர்.

கு-ரை : வேற்காடு பணிந்தார் இவ்வுலகில் பெரிய செல்வராவர் என்கின்றது. சேடர் - பெருமையுடையவர்.

3. பொ-ரை : பூதகணங்கள் பாட, சுடுகாட்டின்கண் நடனம் ஆடி, வேதங்களை அருளிய வித்தகனாக விளங்கும் திருவேற்காட்டு இறைவற்கு மலர்களும், சந்தனமும், நறும்புகை தரும் பொருள்களும் கொடுத்தவர்களுக்குத் துன்பங்கள் வருதல் இல்லையாம்.

கு-ரை : வேற்காட்டுநாதரைப் பூவுஞ்சாந்தும் புகையுங் கொண்டு வழிபட்டவர்க்கு ஏதம் எய்தாது என்கின்றது. புறங்காடு - சுடுகாடு. ஆடி - ஆடுபவன்; பெயர்ச்சொல். ஏதம் - துன்பம்.

4. பொ-ரை : ஆழமான கடல் என்று சொல்லத்தக்க கங்கை நதியை மறைத்துக்கொண்ட, விழுது போன்ற சடைமுடியினை உடைய திருவேற்காட்டு இறைவனைப் பணிவான மனத்தோடு வணங்கித் துதிப்பவர்களின் பாவங்கள் அழிந்தொழியும்.

கு-ரை : பணிந்த மனத்தோடு ஏத்த பாவம் அழியும் என்கின்றது. ஆழ்கடல் எனக் கங்கை கரந்தவன் - பல மகாநதிகளைத் தன்னகத்து அடக்கிக்கொள்ளும் கடலைப்போல, கங்கையை அடக்கியவன். வீழ்சடை - விழுதுபோலும் சடை. தாழ்வுடை மனம் - பணிந்த உள்ளம். தாழ்வெனுந் தன்மை (*சித்தியார்*). பாவம் பாழ்படும் - பாவம் பயன் அளியாதொழியும்.

Koviloor Digital Library

616. காட்டி னாலு மயர்த்திடக் காலனை
வீட்டி னானுறை வேற்காடு
பாட்டி னாற்பணிந் தேத்திட வல்லவர்
ஓட்டி னார்வினை யொல்லையே. 5

617. தோலி னாலுடை மேவவல் லான்சுடர்
வேலி னானுறை வேற்காடு
நூலி னாற்பணிந் தேத்திட வல்லவர்
மாலி னார்வினை மாயுமே. 6

618. மல்லன் மும்மதின் மாய்தர வெய்ததோர்
வில்லி னானுறை வேற்காடு

5. பொ-ரை : மார்க்கண்டேயர், சிவனே முழுமுதல்வன் எனக் காட்டினாலும், அதனை உணராது மயங்கி அவர் உயிரைக் கவர வந்த அக்காலனை அழித்த சிவபிரான் உறையும் திருவேற்காட்டைப் பாடல்கள் பாடிப் பணிந்து வழிபட வல்லவர் தம் வினைகளை விரைவில் ஓட்டி யவர் ஆவர்.

கு-ரை : இது பாடிப்பணிந்து ஏத்தவல்லவர் வினை ஓடும் என்கின்றது. காட்டினாலும் அயர்த்திடு அக்காலனை - மார்க்கண்டேயர் பூசித்து, சிவன் முழுமுதல்வன் என்பதைக் காட்டினாலும் அதனை உணராதே மயங்கிய காலனை. வீட்டினான் - அழித்தவன். ஒல்லை - விரைவு. காட்டினானும் என்ற பாடமும் உண்டு.

6. பொ-ரை : தான் கட்டியும் போர்த்தும் உள்ள ஆடைகளைத் தோலினால் அமைந்தனவாகக் கொண்டுள்ள இறைவன் ஒளி பொருந்திய வேலோடு உறையும் திருவேற்காட்டை, ஆகம நூல்களில் விதித்தவாறு வழிபட்டுத் துதிக்க வல்லவர்களாகிய ஆன்மாக்களைப் பற்றிய மயங்கச் செய்யும் வினைகள், மாய்ந்தொழியும்.

கு-ரை : விதிப்படி ஏத்தவல்லவர்க்கு வினைமாயும் என்கின்றது நூலினால் - ஆகம விதிப்படி. மாலினார் வினை - மயங்கிய ஆன்மாக்களினது வினை.

7. பொ-ரை : வளமை பொருந்திய முப்புரங்களும் அழிந்தொழியுமாறு கணை எய்த ஒப்பற்ற மேரு வில்லை ஏந்திய சிவபிரான்

Koviloor Digital Library

சொல்ல வல்ல சுருங்கா மனத்தவர்
செல்ல வல்லவர் தீர்க்கமே. 7

619. மூரல் வெண்மதி சூடுமுடியுடை
வீரன் மேவிய வேற்காடு
வார மாய்வழி பாடுநி னைந்தவர்
சேர்வர் செய்கழல் திண்ணமே. 8

620. பரக்கி னார்படு வெண்டலை யிற்பலி
விரக்கி னானுறை வேற்காட்டூர்
அரக்க னாண்மை யடரப்பட் டானிறை
நெருக்கி னானை நினைமினே. 9

உறையும் திருவேற்காட்டைப் புகழ்ந்து சொல்ல வல்லவர்கள் சுருங்கா மனத்தினராவர். அங்குச் சென்று தரிசிக்க வல்லவர் நீண்ட ஆயுள் பெறுவர்.

கு-ரை : இறைவனை எப்பொழுதும் பேசவல்ல குவியாமனத்து அடியவர்கள் நீடுவாழ்வர் என்கின்றது. தீர்க்கம் - நெடுங்காலம்.

8. பொ-ரை : மிக இளைய வெண்மையான பிறைமதியைச் சூடும் திருமுடியை உடைய வீரனாகிய சிவபிரான் எழுந்தருளியுள்ள திருவேற்காட்டை, அன்போடு வழிபட நினைந்தவர், அப்பெருமானின் சிவந்த திருவடிகளைத் திண்ணமாகச் சேர்வர்.

கு-ரை : அன்போடு வழிபடுவார் அடி அடைவர் என்கின்றது. மூரல்-இளமை. வாரம் - அன்பு.

9. பொ-ரை : பிரமனின் தலையோட்டில் பலியேற்கின்ற சமர்த்த னாகிய சிவபிரான் உறையும் திருவேற்காட்டில் அரக்கன் ஆகிய இராவணனின் ஆண்மையை அடர்த்துக் கால்விரலால் சிறிதே ஊன்றி நெருக்கிய அவனை நினைமின்கள்.

கு-ரை : இராவணனது ஆண்மையை அடர்த்த இறைவனை நினையுங்கள் என்கின்றது. பரக்கினார் - உலகில் தன் படைப்பால் உயிர்களைத் தனு கரண புவன போகங்களோடு பரவச் செய்தவராகிய

Koviloor Digital Library

621. மாறி லாமல ரானொடு மாலவன்
வேற லானுறை வேற்காடு
ஈறி லாமொழி யேமொழி யாவெழில்
கூறி னார்க்கில்லை குற்றமே. 10

622. விண்ட மாம்பொழில் சூழ்திரு வேற்காடு
கண்டு நம்பன் கழல்பேணிச்
சண்பை ஞானசம் பந்தன் செந்தமிழ்
கொண்டு பாடக் குணமாமே. 11

திருச்சிற்றம்பலம்

பிரமனார். விரக்கினான் - சாமர்த்தியமுடையன். விரகினான் என்பது எதுகைநோக்கி விரிந்தது.

10. பொ-ரை : ஒப்பற்ற தாமரை மலர் மேல் உறையும் நான்முகன், திருமால் ஆகியவர்களை வெற்றி கொள்வானாகிய சிவன் உறையும் திருவேற்காட்டு இறைவனைப் பற்றிய மொழியை ஈறிலா மொழியாக, அப்பெருமானுடைய அழகிய நலங்களைக் கூறுபவர்களுக்குக் குற்றமில்லை.

கு-ரை : இறைவனைப்பற்றிய மொழியே ஈறிலாமொழியாக அதனை அழகுபெறக் கூறினார்க்குக் குற்றமில்லை என்கிறது. வேறலான் - வெல்லுதலையுடையான். வேறாகாதவன் எனலுமாம்.

11. பொ-ரை : விரிந்த மலர்களையுடைய மாஞ்சோலைகள் சூழ்ந்த திருவேற்காட்டை அடைந்து, அங்கெழுந்தருளியுள்ள இறைவன் திருவடிகளைப் பரவி, சீகாழிப் பதியுள் தோன்றிய ஞானசம்பந்தன் உரைத்த இப்பதிகச் செந்தமிழ் கொண்டு பாடிப் போற்றுவார்க்கு நன்மைகள் விளையும்.

கு-ரை : திருவேற்காட்டைத் தரிசித்து இறைவன் திருவடியைத் தியானித்து இப்பதிகத்தைப் பாடக் குணமாம் என்கின்றது. விண்ட - மலர்ந்த. சண்பை சீகாழிக்கு மறுபெயர்.

Koviloor Digital Library

58. திருக்கரவீரம்

பதிக வரலாறு:

திருஞானசம்பந்தசுவாமிகள் திருச்சாத்தங்குடி சென்று பெருமானை வணங்கிய பின்பு, திருக்கரவீரத்தையடைந்து நம்பர்தாளை வணங்கி 'அரியும் நம்வினை' என்னும் இத் திருப்பதிகத்தை அருளிச்செய்தார்கள்.

பண்: பழந்தக்கராகம்

பதிக எண்: 58

திருச்சிற்றம்பலம்

623. அரியு நம்வினை யுள்ளன வாசற
வரிகொண் மாமணி போற்கண்டம்
கரிய வன்றிக ழுங்கர வீரத்தெம்
பெரிய வன்கழல் பேணவே. 1

624. தங்கு மோவினை தாழ்சடை மேலவன்
திங்க ளோடுடன் சூடிய
கங்கை யான்றிக ழுங்கர வீரத்தெம்
சங்க ரன்கழல் சாரவே. 2

1. பொ-ரை ; வரிகள் அமைந்த சிறந்தநீலமணிபோலக் கண்டம் கறுத்தவனாய், விளங்கும் திருக்கரவீரத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமானாகிய இறைவன் திருவடிகளைத் துதித்தால் நம் வினைகளாக உள்ளன யாவும் முற்றிலும் கழியும்.

கு-ரை ; கரவீரத்து இறைவன்கழல் பேண வினையுள்ளன எல்லாம் அரியும் என்கின்றது. கழல்பேண நம்வினையுள்ளன அரியும் எனக்கூட்டுக. வரிகொள் மாமணி - நிறங்கொண்ட நீலமணி.

2. பொ-ரை ; தாழ்ந்து தொங்கும் சடைமுடிகளை உடைய உயர்ந்தோனாய் இளம்பிறையோடு கங்கையை உடனாகச் சூடிய, திருக் கரவீரத்தில் விளங்கும் சங்கரன் திருவடிகளை வழிபட்டால் நம்மைப் பற்றிய வினைகள் தங்கா.

Koviloor Digital Library

625. ஏதம் வந்தடை யாவினி நல்லன
பூதம் பல்படை யாக்கிய
காத லான்றிக ழுங்கர வீரத்தெம்
நாதன் பாத நணுகவே. 3

626. பறையு நம்வினை யுள்ளன பாழ்பட
மறையு மாமணி போறக்கண்டம்
கறைய வன்றிக ழுங்கர வீரத்தெம்
இறைய வன்கழ லேத்தவே. 4

627. பண்ணி னார்மறை பாடல னாடலன்
விண்ணி னார்மதி லெய்தமுக்
கண்ணி னானுறை யுங்கர வீரத்தை
நண்ணு வார்வினை நாசமே. 5

கு-ரை : சங்கரன் கழல்சார வினை தங்குமோ என வினாவுகிறது. சங்கரன்-சுகத்தைச் செய்பவன்.

3. பொ-ரை : நல்லனவாகிய பூத கணங்களைப் பல்வகைப் படைகளாக அமைத்துக் கொண்டுள்ள அன்பு வடிவினனும் விளங்கும் திருக்கரவீரத்தில் எழுந்தருளிய எம் நாதனுமான சிவபெருமான் திருவடிகளை அடைவோரைத் துன்பங்கள் வந்தடையமாட்டா.

கு-ரை : கரவீரநாதன் பாதம் நணுக ஏதம் அடையா என்கின்றது. ஏதம்-துன்பம்.

4. பொ-ரை : நீலமணி போலக் கண்டத்தில் கறையுடையவனும், விளங்கும் திருக்கரவீரத்தில் உறையும் எம் இறைவனுமாகிய பெருமான் திருவடிகளை ஏத்த நம் வினைகள் நீங்கும். சஞ்சிதமாக உள்ளவும் மறையும்.

கு-ரை : கழல் ஏத்த வினைபறையும் என்கின்றது. பறையும் என்றதோடமையாது பாழ்பட பறையும் என்றது அதன் வாசனையும் கெடும் என்பதை விளக்க.

5. பொ-ரை : சந்த இசையமைப்புடன் கூடிய வேதங்களைப் பாடியும் ஆடியும் மகிழ்பவரும், வானகத்தில் சஞ்சரித்த மும்மதில்

Koviloor Digital Library

628. நிழலி னார்மதி சூடிய நீள்சடை
அழலி னாரழ லேந்திய
கழலி னாருறை யுங்கர வீரத்தைத்
தொழவல் லார்க்கில்லை துக்கமே. 6

629. வண்டர் மும்மதின் மாய்தர வெய்தவன்
அண்ட னாரழல் போலொளிர்
கண்ட னாருறை யுங்கரவீ ரத்துத்
தொண்டர் மேற்றுயர் தூரமே. 7

களையும் எய்தழித்த மூன்றாம் கண்ணை உடையவரும் ஆகிய சிவபிரானார் எழுந்தருளிய திருக்கரவீரத்தை அடைவார் வினைகள் நாசமாம்.

கு-ரை: கரவீரத்தை நண்ணுவார்வினை நாசமாம் என்கின்றது. பண்ணின் ஆர் மறை-சத்தத்தோடுகூடிய வேதம்.

6. பொ-ரை: ஒளி பொருந்திய பிறைமதியைச்சூடிய நீண்ட சடைமுடியினரும், அழலைக் கையில் ஏந்தியவரும் வீரக்கழலை அணிந்தவரும் ஆகிய சிவபெருமான் எழுந்தருளிய திருக்கரவீரத் தைத் தொழவல்லவர்கட்குத் துக்கம் இல்லை.

கு-ரை: இத்தலத்தைத் தொழுவார்க்குத் துக்கம் இல்லை என்கின்றது. நிழலின் ஆர் மதி-ஒளி நிறைந்த பிறை.

7. பொ-ரை: தீயவர்களாகிய அசுரர்களின் முப்புரங்களும் அழிந்தொழியுமாறு கணை எய்தவரும், அனைத்து உலகங்களின் வடி வாக விளங்குபவரும், விடம் போல ஒளிவிடும் கண்டத்தை உடைய வரும் ஆகிய சிவபிரான் எழுந்தருளியுள்ள திருக்கரவீரத்துத் தொண்டர்களைப் பற்றிய துயரங்கள் தூர விலகும். அழல்-தீப்போன்ற கொடிய விடம்.

கு-ரை: அடியார்மேல் துயரம் தூரமாம் என்கின்றது. வண்டர் - தீயோர்களாகிய முப்புராதிகள். அழல்போல் ஒளிர் கண்டனார் - விடத்தைப் போல் ஒளிவிடுகின்ற கழுத்தையுடையவர். துயர் தூரமே - துன்பம் தூரவிலகும்.

Koviloor Digital Library

630. புனலி லங்கையர் கோன்முடி பத்திறச்
சினவ லாண்மை செகுத்தவன்
கனல வன்னுறை கின்ற கரவீரம்
எனவல் லார்க்கிட ரில்லையே. 8

631. வெள்ளத் தாமரை யானொடு மாலுமாய்த்
தெள்ளத் தீத்திர ளாகிய
கள்ளத் தானுறை யுங்கர வீரத்தை
உள்ளத் தான்வினை யோயுமே. 9

632. செடிய மண்ணொடு சீவரத் தாரவர்
கொடிய வெவ்வுரை கொள்ளேன்மின்
கடிய வன்னுறை கின்ற கரவீரத்
தடிய வர்க்கில்லை யல்லலே. 10

8. பொ-ரை : கடலால் சூழப்பட்ட இலங்கை மக்களின் தலைவனாகிய இராவணனின் தலைகள் பத்தும் நெரியுமாறு செய்து, கோபத்தோடு கூடிய அவனது ஆண்மையை அழித்தவனாய், எரிபோலும் உருவினன் ஆகிய சிவபிரான் எழுந்தருளிய கரவீரம் என்று சொல்ல வல்லார்க்கு இடர் இல்லை.

கு-ரை : கரவீரம் என்பார்க்கு இடர் இல்லை என்கின்றது. புனல் இலங்கை-கடல்சூழ்ந்த இலங்கை. சின வல் ஆண்மை- கோபத்தோடு கூடிய வலிய ஆண்மை. செகுத்தவன்-அழித்தவன்.

9. பொ-ரை : நீரில் தோன்றும் தாமரை மலர் மேல் உறையும் நான்முகனோடு திருமாலும் உண்மையைத் தெளியுமாறு ஒளிப் பிழம்பாகத் தோன்றி அவர்கள் அறியாவாறு கள்ளம் செய்தவனாகிய சிவபிரான் உறையும் திருக்கரவீரத்தை நினைந்து போற்ற வினைகள் நீங்கும்.

கு-ரை : கரவீரத்தைத் தியானிக்க வினைவலி குன்றும் என்கின்றது. வெள்ளத்தாமரையான்-நீரில் இருக்கும் தாமரையானாகிய பிரமன். வெள்ளத்தாமரை என்றது சாதியடை. பிரமனிருக்கும் தாமரை உந்தித்தாமரையாயினும் தாமரையென்ற பொதுமை நோக்கிக் கூறப்பட்டது. தான்;அசை.

10. பொ-ரை : முடைநாற்றம் வீசும் அமணர்களோடு காவியாடை அணிந்து திரியும் புத்தர்கள் ஆகியோர்தம் கொடிய வெம்மையான

Koviloor Digital Library

633. வீடி லான்விளங் குங்கர வீரத்தெம்
சேடன் மேற்கசி வாற்றமிழ்
நாடு ஞானசம் பந்தன சொல்லிவை
பாடு வார்க்கில்லை பாவமே. 11

திருச்சிற்றம்பலம்

உரைகளை மெய்யெனக் கொள்ளாதீர். அனைத்துலகையும் காத்தருள் கின்றவனாகிய சிவபிரான் உறைகின்ற திருக்கரவீரத்து அடியவர்க்கு அல்லல் இல்லை.

கு-ரை : கரவீரத்தடியவர்க்கு அல்லல் இல்லை என்கின்றது. செடி-நாற்றம். அமணொடு என்பது அமண்ணொடு என விரித்தல் விகாரம்பெற்றது. சீவரம் - காவியாடை. கொடிய வெவ்வுரை - நெறி யல்லா நெறிக்கண் செலுத்தலின் கொடிய வெம்மையான உரை யாயிற்று. கடியவன்-காத்தலையுடையவன்.

11. பொ-ரை : அழிவில்லாதவனாக விளங்கும் திருக்கரவீரத்துப் பெரியோன்மேல் அன்புக் கசிவால் தமிழை விரும்பும் ஞானசம்பந்தன் சொல்லிய இத்திருப்பதிகப் பாடல்களாகிய இவற்றைப் பாடுவோர்க் குப் பாவம் இல்லை.

கு-ரை : இது பாடுவார்க்குப் பாவமே இல்லை என்று கீழ்ப்போன திருப்பாடல்களில் தனித்தனியாகக் கூறியவற்றைத் தொகுத்துப் பயனாகக் கூறியது. சேடன்-பெருமையையுடையவன். வீடிலான்- அழிவில்லாதான். கட்டுடையார்க்கே வீடும் உண்டு ஆதலின் இயற்கையிலேயே கட்டிலாத இறைவன் வீடிலாதான் எனப்பட் டான். அழிவில்லாதவன் எனலுமாம்.

பஞ்சாக்கர மாலை

கல்லேன் பிறநூல்கள் காழியர்கோன் பாட்டல்லால்
சொல்லேன் சுரரைத் தொழநினையே - னல்லசிறு
செஞ்சதங்கை கொஞ்சுதண்டைச் சிற்றடிக்கன் பாகவெழுத்
தஞ்சதங்கை யாமலக மாம்.

- கண்ணுடைய வள்ளலார்.

Koviloor Digital Library

59. திருத்தூங்கானைமாடம்

பதிக வரலாறு:

திருமுதுகுன்றத்தை வணங்கிஎழுந்தருளிய பிள்ளையார் பெண்ணாகடத்தை யடைந்தார்கள். அங்கு, வேதவோசை நீங்காத தூங்கானைமாடச் சுடர்க்கொழுந்தை வணங்கி வலங் கொண்டு 'ஒடுங்கும் பிணி பிறவி' என்னும் இப்பதிகத்தை அருளிச் செய்தார்கள்.

இப்பதிகத்தின் சுருக்கமான குறிக்கோள் 'தீங்கு நீங்குவீர் தொழுமின்கள் தூங்கானைமாடம்' என்பது எனச் சேக்கிழார் பெருமான் அருளியுள்ளார்கள்.

பண்: பழந்தக்கராகம்

பதிக எண்: 59

திருச்சிற்றம்பலம்

634. ஒடுங்கும் பிணிபிறவி கேடென்றிவை
யுடைத்தாய வாழ்க்கை யொழியத்தவம்
அடங்கும் மிடங்கருதி நின்றீரெல்லாம்
அடிக ளடிநிழற்கீ ழாளாம்வண்ணம்
கிடங்கும் மதிலுஞ் சுலாவியெங்குங்
கெழுமனைக டோறு மறையின்னொலி
தொடங்குங் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. 1

1. பொ-ரை : வெளிப்படுதற்குரிய காலம் வருந்துணையும் ஒடுங்கியிருக்கும் நோய் இனிவரும் பிறப்புகள், துன்பங்கள் ஆகியனவாய இவைகளை உடைய இவ்வாழ்க்கை நீங்கத்தவம் புரிதற்குரிய இடத்தை விரும்பி நிற்கும் நீவிர் எல்லீரும் அகழும் மதிலும் சூழ்ந்து எல்லா இடங்களிலும் உள்ள வீடுகள்தோறும் வேதங்களின் ஒலிகள் ஒலிக்கும் கடந்தை என்னும் ஊரில் உறையும் அடிகளாகிய சிவபெருமானின் அடிநிழலின்கீழ் அவருக்கு ஆளாகுமாறு அவர் கோயிலாகிய திருத்தூங்கானைமாடம் செல்வீராக.

Koviloor Digital Library

635. பிணிநீர சாதல் பிறத்தலிவை
பிரியப் பிரியாத பேரின்பத்தோ
டணிநீர மேலுலக மெய்தலுறில்
அறிமின் குறைவில்லை யானேறுடை
மணிநீல கண்ட முடையபிரான்
மலைமக ளுந்தானு மகிழ்ந்துவாழும்
துணிநீர்க் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. 2

கு-ரை : தவம் செய்யும் இடத்தைத் தேடுகின்ற மக்களே! தூங்கானைமாடம் தொழுமின்கள் என்கின்றது. நின்றீர் எல்லாம் ஆளாம்வண்ணம் தொழுமின்கள் எனக்கூட்டுக.

ஒடுங்கும் பிணி - தமக்குரிய பருவம் வருந்துணையும் வெளிப்படாதே ஒடுங்கியிருக்கும் நோய். அடங்கும் இடம் - அடங்கி யிருத்தற்குரிய இடம். கிடங்கு - அகழ். சுலாவி - சுற்றி. கெழு மனைகள் - கூடிய வீடுகள்.

கடந்தை - பெண்ணாகடம். இது தலப்பெயர். தூங்கானை மாடம் என்பது கோயிலின் பெயர்.

2. பொ-ரை : பிணிகளின் தன்மையினை உடைய சாதல் பிறத்தல் ஆகியன நீங்க, எக்காலத்தும் நீங்காத பேரின்பத்தோடு கூடிய அழகிய தன்மை வாய்ந்த, மேலுலகங்களை நீவிர் அடைய விரும்பினால், விடையேற்றை ஊர்தியாகவும், கொடியாகவும் உடையவனும், நீலமணி போன்ற கண்டத்தினைக் கொண்டவனும் ஆகிய சிவபிரான் மலைமகளும் தானுமாய் மகிழ்ந்து வாழும், தெளிந்த நீரை உடைய கடந்தையில் ஒளியோடு கூடிய திருத்தூங்கானைமாடக் கோயிலை அறிந்து தொழுவீராக. உங்கட்கு யாதும் குறைவில்லை.

கு-ரை : பிறப்பிறப்பு நீங்கிப் பேரின்பம் உற எண்ணில் இக் கோயிலைத்தொழுங்கள் என்கின்றது.

பிணிநீர் - நோய்த் தன்மையையுடைய. அணிநீர - அழகிய. மணிநீல கண்டம் - அழகிய நீலகண்டத்தையுடைய. பிரான் - வள்ளன்மையுடையவன். துணிநீர் - தெளிந்த நீர்.

Koviloor Digital Library

636. சாநாளும் வாழ்நாளுந் தோற்றமிவை
சலிப்பாய வாழ்க்கை யொழியத்தவம்
ஆமா றறியா தலமந்துநீர்
அயர்ந்துங் குறைவில்லை யானேறுடைப்
பூமா ணலங்க லிலங்குகொன்றை
புனல்பொதிந்த புன்சடையி னானுறையும்
தூமாண் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. 3

637. ஊன்றும் பிணிபிறவி கேடென்றிவை
யுடைத்தாய வாழ்க்கை யொழியத்தவம்
மான்று மனங்கருதி நின்றீரெல்லாம்
மனந்திரிந்து மண்ணின் மயங்காதுநீர்
மூன்று மதிலெய்த மூவாச்சிலை
முதல்வர்க் கிடம்போலு முகில்தோய்கொடி
தோன்றுங் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. 4

3. பொ-ரை : இறக்கும் நாளும், வாழும் நாளும், பிறக்கும் நாளும் ஆகிய இவற்றோடு கூடிய சலிப்பான வாழ்க்கை நீங்கச் செய்யும் தவம் யாதென அறியாது நீவிர் மறந்ததனாலும் யாதும் குறைவில்லை. விடையேற்றை ஊர்தியாகக்கொண்டு மலர்களில் மாட்சிமையுற்று விளங்கும் கொன்றை மாலையும், கங்கையும் தங்கிய சிவந்த சடையினை உடைய சிவபிரான் உறையும் தூய்மையான, மாண்புடைய கடம்பைநகரில் விளங்கும் பெரிய கோயிலாக அமைந்த திருத்தூங்கானை மாடத்தைத் தொழுவீராக. அது ஒன்றே தவத்தின் பயனைத் தரப்போதுமானதாகும்.

கு-ரை : பிறந்து, வாழ்ந்து, இறந்துவரும் இந்தவாழ்க்கையை ஒழிக்கவிரும்புவீர் இக்கோயிலைத் தொழுங்கள் என்கின்றது. சலிப்பு - ஓய்தல். தவம் ஆமாறு - தவம் சித்திக்கும் வண்ணம். அலமந்து - வருந்தி. தூமாண் கடந்தை - தூய்மையான மாட்சிமைபொருந்திய கடந்தை.

4. பொ-ரை : நிலையானநோய், பிறப்பு, இறப்பு, துன்பம் இவற்றை உடைய வாழ்க்கை நீங்கவும், நிலையான வீடு பேற்றைப்

Koviloor Digital Library

638. மயறீர்மை யில்லாத தோற்றம்மிவை
மரணத்தொ டொத்தழியு மாறாதலால்
வியறீர மேலுலக மெய்தலுறின்
மிக்கொன்றும் வேண்டா விமலனிடம்
உயர்தீர வோங்கிய நாமங்களா
லோவாது நாளும் அடிபரவல்செய்
துயர்தீர் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. 5

பெறவும், தவம் செய்ய விரும்பி மயங்கி நிற்கும் நீவிர் எல்லீரும் மனம் வேறுபட்டு உலகில் மயங்காது, திரிபுரங்களை எய்த அழியாத வில்லை ஏந்தியவரும், உலகின் தலைவருமாகிய சிவபிரானது இடமாக விளங்குவதாய், வானளாவிய கொடிகள் தோன்றும் கடந்தை நகரில் உள்ள பெரிய கோயிலாக அமைந்த திருத்தூங்கானை மாடத்தைத் தொழுவீர்களாக.

கு-ரை : இதுவும் அது. பிணியூன்றும் பிறவி - நோய் நிலை பெற்ற பிறப்பு. மான்று - மயங்கி. மூவாச்சிலை - மூப்படையாத வில். முகில் - மேகம்.

5. பொ-ரை : மயக்கம் நீங்காத பிறப்பிறப்புக்கள் அழியும் வழிகள் ஆதலால் அவற்றின் நீங்கி மேலுலகம் எய்த நீவிர் விரும்பினால் பெரிதாய முயற்சி எதுவும் வேண்டா. எளிய வழியாகச் சிவபிரானது இடமாக விளங்குவதும் நம் துயர்களைத் தீர்ப்பதும் ஆகிய கடந்தை நகரில் உள்ள பெரிய கோயிலாகிய திருத்தூங்கானைமாடத்தை அடைந்து அப்பெருமானுடைய மிக உயர்ந்த திருப்பெயர்களைக் கூறி இடைவிடாது அவன் திருவடிகளைத் தொழுவீர்களாக.

கு-ரை : பிறப்பிறப்புக்கள் அழியும் வழிகள்; ஆதலால், அவற்றை நீங்கி மேலுலகம் எய்தலுறின் வேறொன்றும் தேட வேண்டாம்; இறைவன் நாமத்தைச் சொல்லிக்கொண்டு தூங்கானை மாடத்தைத் தொழுங்கள் என்கின்றது.

மயல்தீர்மை - மயக்கம் நீங்கும் உபாயம். ஆறு - வழி. வியல்தீர - பலதிறப்படுதல் நீங்க. உயர்தீர ஓங்கிய நாமம் - உயர்ந்த பெயர். ஓவாது - இடைவிடாது.

Koviloor Digital Library

639. பன்னீர்மை குன்றிச் செவிகேட்பிலா
படர்நோக் கிற்கண் பவளந்நிற
நன்னீர்மை குன்றித் திரைதோலொடு
நரைதோன் றுங்கால நமக்காதன்முன்
பொன்னீர்மை துன்றப் புறந்தோன்றுநற்
புனல்பொதிந்த புன்சடையி னானுறையும்
தொன்னீர்க் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. 6

640. இறையூண் டுகளோ டிடுக்கணெய்தி
யிழிப்பாய வாழ்க்கை யொழியத்தவம்
நிறையூண் நெறிகருதி நின்றீரெல்லா
நீள்கழ லேநாளு நினைமின்சென்னிப்
பிறைசூ ழலங்க லிலங்குகொன்றை
பிணையும் பெருமான் பிரியாதநீர்த்
துறைசூழ் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. 7

6. பொ-ரை : புலன் நுகர்ச்சிக்குரிய பல தன்மைகளும் குறைந்து காதுகள் கேளாமல் கண்களில், சென்று பற்றும் பார்வைகுன்றிப் பவளம் போன்ற உடல்நிறம் குன்றிச் சுருங்கிய தோலோடு நரை தோன்றும் மூப்புக் காலம் நம்மை வந்து அணுகுமுன் பொன் போன்ற நிறம் பொருந்திய கங்கை தங்கிய செஞ்சடையினையுடைய சிவபிரான் உறையும், பழமையான புகழையுடைய கடம்பை நகர்த் தடங்கோயி லாகிய திருத்தூங்கானைமாடத்தைத் தொழுவீர்களாக.

கு-ரை : காது, கண் இவை கெட்டு, தோல் சுருங்கி, நரை தோன்றுவதற்குமுன் தொழுமின் என்கின்றது. பல் நீர்மை குன்றி - புலன் நுகர்ச்சிக்கு ஏற்ற பலதன்மைகளும் குறைந்து. படர்நோக்கின் - படலம் மூடியதால். பவளந்நிற நல்நீர்மை - செவ்வரி பரந்த நல்ல நிலைமை. திரை - திரங்கிய. பொன் நீர்மை துன்ற - பொன்போன்ற தன்மை பொருந்த; புறந்தோன்றும் - உருத்தாங்கிக் காட்சியளிக்கும்.

7. பொ-ரை : குறைந்த உணவோடு பல்வகைத் துன்பங்களையும் எய்தி வருந்தும் இழிந்த வாழ்க்கை நீங்க, தவமாகிய நிறைந்த உணவைப் பெறும் வழியாதென மயங்கி நிற்கும் நீவிர் அனைவீரும்,

Koviloor Digital Library

641. பல்வீழ்ந்து நாத்தளர்ந்து மெய்யில்வாடிப்
பழிப்பாய வாழ்க்கை யொழியத்தவம்
இல்சூ ழிடங்கருதி நின்றீரெல்லா
மிறையே பிரியா தெழுந்துபோதும்
கல்சூ ழரக்கன் கதறச்செய்தான்
காதலியுந் தானுங் கருதிவாழும்
தொல்சீர்க் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. 8

முடியில் பிறை சூடியவரும், கொன்றை மாலை அணிந்தவரும் ஆகிய பெருமான் பிரியாது உறைவதாய், நீர்த்துறைகள் சூழ்ந்த கடந்தை நகரிலுள்ள தடங்கோயிலாகிய தூங்கானைமாடத்தை நாளும் நினைந்து தொழுவீர்களாக.

கு-ரை: புல்லிய உணவுகொண்டு வருந்தும் இழிந்த வாழ்வு ஒழியத் தவமாகிய பேருண்டியை விரும்பியிருக்கின்றவர்களே! இக்கோயிலைத் தொழுமின் என்கின்றது.

இறையூண் - சிற்றுணவு. துகள் - தூளி. இடுக்கண் - துன்பம். தவம் நிறையூண் நெறி - தவமாகிய நிறைந்த உணவைப்பெறுமார்க்கம். அலங்கல் - மாலை. பிணையும் - விரும்பும்.

8. பொ-ரை: பல்வீழ்ந்து பேச்சுத் தளர்ந்து, உடல் வாடிப் பலராலும் பழிக்கப்படும் இவ்வுலக வாழ்க்கை நீங்கத் தவம் புரியும் இடம் யாதெனக் கருதி நிற்கும் நீவிர் அனைவீரும் சிறிதும் காலம் தாழ்த்தாது எழுந்துவருவீர்களாக. கயிலைமலையைப் பெயர்த்த இராவணனைக் கதறுமாறு அடர்த்த சிவபிரான் மலைமகளும் தானுமாய்க் கருதி வாழும் பழமையான புகழையுடைய கடம்பை நகரில் உள்ள பெருங்கோயிலாகிய தூங்கானைமாடத்தைத் தொழுவீர்களாக.

கு-ரை: பல்வீழ்ந்து நாத்தளர்ந்து பழிப்பாய வாழ்க்கை நீங்கத் தவம் புரியும் இடம் தேடுபவர்களே! விரைந்து வாருங்கள்; இக் கோயிலைத் தொழுங்கள் என்கிறது. பழிப்பாய வாழ்க்கை - காளையரான காலத்துக் காமுற்றாரும் இந்நிலையைக் கண்டு ஏளனம் செய்யும் கிழப்பருவத்தது. இறையே - சிறிதும். போதும் - வாருங்கள். கல் - கயிலை. அரக்கன் - இராவணன்.

Koviloor Digital Library

642. நோயும் பிணியு மருந்துயரமு
நுகருடைய வாழ்க்கை யொழியத்தவம்
வாயு மனங்கருதி நின்றீ ரெல்லா
மலர்மிசைய நான்முகனு மண்ணும்விண்ணும்
தாய வடியளந்தான் காணமாட்டாத்
தலைவர்க் கிடம்போலுந் தண்சோலைவிண்
தோயுங் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. 9

643. பகடூர் பசிநலிய நோய்வருதலாற்
பழிப்பாய வாழ்க்கை யொழியத்தவம்
முகடூர் மயிர்கடிந்த செய்கையாரும்
மூடுதுவ ராடையரு நாடிச்சொன்ன
திகடீர்ந்த பொய்ம்மொழிகள் தேறவேண்டா
திருந்திழையுந் தானும் பொருந்திவாழும்
துகடீர் கடந்தைத் தடங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே. 10

9. பொ-ரை : உடலை வருத்தும் நோய்களும், மனத்தை வருத்தும் கவலைகளும் அவற்றால் விளையும் துன்பங்களும் ஆகியவற்றை நுகர்தற்குரிய இவ்வாழ்க்கை நீங்கத் தவம் புரியும் எண்ணத்துடன் நிற்கும் நீவிர் அனைவீரும் தாமரை மலர்மேல் உறையும் நான்முகனும், மண்ணையும், விண்ணையும் அடியால் அளந்த திருமாலும் காண மாட்டாத தலைவனாகிய சிவபிரானுக்குரிய இடமாகிய விண் தோயும் சோலைகளால் சூழப்பட்ட கடந்தை நகரிலுள்ள திருத்தூங்கானை மாடப்பெருங்கோயிலைத் தொழுவீர்களாக.

கு-ரை : இதுவும் அது. நோய் - உடலைப்பற்றியனவாகி வாதபித்த சிலேட்டுமத்தால் விளைவன. பிணி - மனத்தைப் பிணித்து நிற்கும் கவலைகள். அருந்துயரம் - அவற்றால் விளையும் துன்பங்கள். வாயும் - பொருந்தும். தாய - தாவிய.

10. பொ-ரை : பெரும்பசி நலிய, நோய்கள் வருத்துவதால், பழிக்கத்தக்க இவ்வாழ்க்கை நீங்கத் தவம் செய்ய விரும்பும் நீவிர் தலையை முண்டிதமாக்கித் திரிபவரும், உடலைத் துவராடையால்

Koviloor Digital Library

644. மண்ணார் முழவதிரு மாடவீதி
வயற்காழி ஞானசம் பந்தனல்ல
பெண்ணா கடத்துப் பெருங்கோயில்சேர்
பிறையுரிஞ்சுந் தூங்கானை மாடமேயான்
கண்ணார் கழல்பரவு பாடல்பத்துங்
கருத்துணரக் கற்றாருங் கேட்டாரும்போய்
விண்ணோ ருலகத்து மேவிவாழும்
விதியதுவே யாகும் வினைமாயுமே. 11

திருச்சிற்றம்பலம்

போர்த்தவரும் ஆகிய சமண புத்தர்களின் ஞானம் நீங்கிய பொய் மொழிகளைத் தெளியாது இறைவன் இறைவியோடு பொருந்தி வாழும் குற்றமற்ற கடந்தை நகர்த் தடங் கோயிலாகிய திருத்தூங்கானை மாடத்தைத் தொழுவீர்களாக.

கு-ரை : பிறப்பறுக்கப் புறச்சமயத்தார் பொய்ம்மொழிகளைத் தேறவேண்டா: தூங்கானைமாடம் தொழுமின்கள் என்கின்றது. பகடு ஊர் பசி - யானைப்பசி. முகடு - தலையுச்சி, திகழ் தீர்ந்த - விளக்கம் ஒழிந்த. துகள் - குற்றம்.


11. பொ-ரை : மார்ச்சனையோடு கூடிய முழவு ஒலி செய்யும் மாட வீதிகளைக் கொண்டுள்ள வயல்கள் சூழ்ந்த சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தர் பெண்ணாகடத்தில் பெருங்கோயிலாக விளங்கும் வானளாவிய திருத்தூங்கானைமாடத்து இறைவன் திருவடிகளைப் பரவிப் பாடிய பாடல்கள் பத்தையும் கற்றவரும், கேட்டவரும் விண்ணவர் உலகத்தை மேவி வாழ அப்பாடல்களே தவப்பயன்தரும்; வினைகள் மாயும்.

கு-ரை : சுடர்க்கொழுந்துநாதன் கழலைப்பரவும் பாடல் பத்தும் கருத்துணரக் கற்றாரும் கேட்டாரும் தேவராய் வாழ்வர்; வினைகள் மாயும் எனப் பயன் கூறுகின்றது. மண் - மார்ச்சனை.

Koviloor Digital Library





திருவதிகை வீரட்டானம்:
கோயில் உள் விமானம்



திருவேட்களம்:
அருள்மிகு பாசுபதேஸ்வரர் ஆலயம்

Koviloor Digital Library





திருத் தூங்கானைமாடம்:

கோயில் கருப்பக்கிரகம்

கோயில் உட்பார்வை

Koviloor Digital Library

60. திருத்தோணிபுரம்

பண்: பழந்தக்கராகம்

பதிகஎண்: 60

திருச்சிற்றம்பலம்

645. வண்டரங்கப் புனற்கமல
மதுமாந்திப் பெடையினொடும்
ஒண்டரங்க விசைபாடு
மளியரசே யொளிமதியத்
துண்டரங்கப் பூண்மார்பர்
திருத்தோணி புரத்துறையும்
பண்டரங்கர்க் கென்னிலைமை
பரிந்தொருகாற் பகராயே. 1

பிரிவாற்றாத தலைவி வண்டு முதலியவற்றைத் தூதாக அனுப்புவதாக அகப்பொருள் துறையில் இத்திருப்பதிகம் அமைந்துள்ளது.

1. பொ-ரை : வளமையான அலைகளோடு கூடிய நீர் நிலைகளில், மலர்ந்த தாமரை மலர்களின் விளைந்த தேனை வயிறார உண்டு, தன் பெண் வண்டோடு களித்து, சிறந்த அலைபோல மேலும் கீழுமாய் அசையும் நடையில் இசைபாடும் அரச வண்டே! என் மேல் பரிவு கொண்டு, ஒளிபொருந்திய இளம்பிறையை முடியிற் சூடியவரும், எலும்பு மாலைகளை அணிகலனாகப் பூண்ட மார்பினருமாகிய, திருத்தோணிபுரத்தில் பண்டரங்கக் கூத்து ஆடும் பரமரைக் கண்டு, அவரிடம் எனது பிரிவாற்றாத நிலையை ஒரு முறையேனும் பகர்வாயாக.

கு-ரை : பிரிவாற்றாமையால் பேதுறுகின்ற தலைவி, தன் நிலைமையை உணர்த்த வண்டைத் தூதாக அனுப்பக்கருதி, அதனைப் பார்த்து வேண்டுகின்றாள். வண் தரங்கம் - வளப்பமான அலை. தரங்க இசை - அலைபோல் அசைகின்ற இசையின் ஆலத்தி. அளி - வண்டு. மதியத்துண்டர் - பிறைத்துண்டை அணிந்தவர். அங்கப் பூண் - எலும்பாகிய ஆபரணம். பண்டரங்கன் - பண்டரங்கக் கூத்தை ஆடுபவன். பதினொருவகைக் கூத்தினுள் சிவபெருமான் திரிபுரத்தையழித்தபோது வெண்ணீறணிந்து ஆடியகூத்து, தான் ஏவுந்தொழிலுக்கு உடந்தையாய் இருக்க அளி அரசே எனச் சிறப்பித்து அழைத்தாள். பெடையி

Koviloor Digital Library

646. எறிசுறவங் கழிக்கான
லிளங்குருகே யென்பயலை
அறிவுறா தொழிவதுவு
மருவினையேன் பயனன்றே
செறிசிறார் பதமோதுந்
திருத்தோணி புரத்துறையும்
வெறிநிறார் மலர்க்கண்ணி
வேதியர்க்கு விளம்பாயே. 2

னொடும் இசைபாடும் அளி என்றதனால், பிரிவுத்துன்பம் அறியாமை யால், அழைத்து உணர்த்தவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதிலும் மது மாந்தி மயங்கியவர்களுக்கு, காதல் வாழ்க்கையில் களித்து இருப்ப வர்களுக்கு உணர்த்தினாலல்லது தானே உணரும் ஆற்றல் இல்லை என்பதையும் அறிவித்தவாறு. பெடையோடு இருக்கும் அளியை மூன்றாமவளாகிய தான் பார்த்தமையால் உடன் உறைவு இனிக் கூடாது; என் வேண்டுகோளை நிறைவேற்ற வேண்டும் என்ற கடமை யையும் குறிப்பித்தாள். இசைபாடும் அளியாதலின், தோணிபுரநாதரை உன் இசை முதலில் வசப்படுத்த, என்னிலைமையை எடுத்தியம்ப உனக்கு இனியவாய்ப்புக் கிட்டுமென்று உணர்த்தினாள். காதலனோடு களித்திருக்கும் பெடைவண்டு பெண்கள்படும் பிரிவுத் துன்பத்தை நன்கு முன்னர் அறியுமாயினும், அதனைத் தனித்து மற்றொரு தலை வனிடத்து அனுப்புதல் மரபு அன்றாகலின் அளி அரசே என ஆண் வண்டை விளித்தாள். நீ செல்லினும் என்னிலைமை உணர்த்தக் கூடிய அளவிற்கு அவகாசம் இராதென்பாள் பண்டரங்கற்கு என்றாள். கூத்தில் ஈடுபட்டவர்க்குக் கேட்பதற்கு அவகாசம் ஏது? இத்தனை நயங்கள் இப்பாடலில் பொதிந்து ஆன்மாவின் பெண்மைத்தன்மையை மிகுதிப் படுத்தி, இறைவனாகிய தலைவனின் இன்றியமையாமையை உணர்ந்து இடையறாப் பேரன்பாகிற வண்டைத் தூதனுப்புகின்ற நிலை மிக அறிந்து இன்புறுதற்கு உரியது. அளி என்பது அன்பிற்கும் ஒரு பெயராதல் காண்க.

2. பொ-ரை : எதிர்ப்பட்டனவற்றைக் கொல்லும் இயல்பினவா கிய சுறா மீன்கள் நிறைந்த உப்பங் கழிகளை அடுத்துள்ள கடற்கரைச் சோலைகளில் வாழும் இளங்குருகே! என்னுடைய பசலைத் துன் பத்தை நீ அறியாமல் இருப்பதும் நீக்குதற்கரிய என் வினைப்பயன் அன்றோ? அந்தணச் சிறுவர்கள் பலர் கூடி, பத மந்திரங்களை ஓதிப்

Koviloor Digital Library

647. பண்பழனக் கோட்டகத்து
வாட்டமிலாச் செஞ்சூட்டுக்
கண்பகத்தின் வாரணமே
கடுவினையே னுறுபயலை
செண்பகஞ்சேர் பொழில்புடைசூழ்
திருத்தோணி புரத்துறையும்
பண்பனுக்கென் பரிசுரைத்தாற்
பழியாமோ மொழியாயே. 3

பயிலும் திருத்தோணிபுரத்தில் எழுந்தருளியவரும் முடிமீது மணமும் நிறமும் பொருந்திய மலர்க்கண்ணி சூடியவருமான சிவபிரானாருக்கு என் நிலைமையைக் கூறுவாயாக.

கு-ரை :வண்டின் இன்னிசை அங்கு ஓதப்படும் வேத ஒலியில் இறைவன் காதில் வீழாது என்பதை உணர்ந்த தலைவி, தாரை போல் பெருங்குரல் இடும் குருகைத் தூதனுப்ப எண்ணி, என்னுடைய பசலைத் துன்பத்தை நீ அறியாமல் இருப்பதும் என் வினைப்பயன் தான்; ஆயினும் அவர்க்கு நீ சொல்லு என்று தூதனுப்புகின்றாள். சுறவம் - சுறாமீன். கழி - உப்பங்கழி. கானல் - கடற்கரைச் சோலை. குருகு - நாரை. பயலை - பிரிந்த மகளிர்க்கு உண்டாகும் ஒரு நோய். செறி சிறார் - நெருங்கிய சிறுவர்கள். பதம் - பதமந்திரங்கள். வெறி நிற ஆர் மலர் - மணமும் நிறமும் பொருந்திய மலர். நீ இளங்குருகாயிருந்தும் என் நோய் அறியாதது என் வினைப்பயன் என்றாள்.

3. பொ-ரை :பண்படுத்தப்பட்ட வயல்களின் கரைகளில் முளைத்த சம்பங்கோரைகளின் இடையே வாட்டமின்றி மகிழ்வோடு வாழும் சிவந்த உச்சிக் கொண்டையை உடைய கோழியே! சண்பக மரங்கள் நிறைந்த பொழில்களால் சூழப்பட்ட திருத்தோணிபுரத்தில் எழுந்தருளிய இனிய இயல்பினன் ஆகிய இறைவனிடம் மிக்க வினைகளின் பயனாய் அவனைப் பிரிந்து மிகுதியான பசலையால் வருந்தி வாழும் என் நிலைமையை உரைத்தால் உனக்குப் பழி விளையுமோ? மொழிவாயாக.

கு-ரை : இளங்குருகும் இவள் துன்பத்தை அறியாதாகவே, கோழியை விளித்துக் கூறுகிறாள். நற்பண்புடைய நாயகனுக்கு என் தன்மை உரைத்தால் உனக்குப் பழியாவந்துவிடும் என வேண்டுகிறாள். பழனம் - வயல், கோடு - கரை. சூட்டு - உச்சிக் கொண்டை.

Koviloor Digital Library

648. காண்டகைய செங்காலொண்
கழிநாராய் காதலாற்
பூண்டகைய முலைமெலிந்து
பொன்பயந்தா ளென்றுவளர்
சேண்டகைய மணிமாடத்
திருத்தோணி புரத்துறையும்
ஆண்டகையாற் கின்றேசென்
றடியறிய வுணர்த்தாயே. 4

கண்பு அகத்தின் - சம்பங்கோரையின் நடுவில். 'செருந்தியொடு கண்பு அமர்ந்து ஊர்தார்' (*மதுரைக் 122*) என்பதிலும் இப்பொருளதாதல் காண்க. தன் துன்பங்கண்டும் தான் தூதுபோகாமல் இருப்பது வருத்த மறியாமையால் என்று எண்ணிய தலைவி வாட்டமில்லா வாரணமே என்கின்றாள். சம்பங்கோரையின் நடுவில் வாழ்வதால் உனக்கு வருத்தந் தெரியாது; ஆனாலும் நீ ஒரு சேவலாதலின் எம்போலியர் வேண்டுகோளை மொழியத்தான் வேண்டும் என்று வற்புறுத்துகிறாள். அதற்குள், நான்போய்ச் சொல்லுகிறேன் அவர் கேட்பாரோ என்ற ஐயம் வாரணத்திற்கும் உண்டாவதாக எண்ணி, தன் தலைவன் பண்பன் என்று அறிவிக்கின்றாள். அதிலும் சிறப்பாக அவனியல்பு அவன் ஊருக்கும், ஊர் இயல்பு அவனுக்கும் உண்டாகையாலே செண்பகஞ் சேர் பொழில்சூழ் தோணிபுரம் என்ற குறிப்பால், வண்டுமொய்க்காத மலராகிய செண்பகம் சேர்ந்திருப்பதால் வண்டுகள் செல்ல அஞ்சுகின் றன; நீ கோரையின் நடுவில் வாழ்வதால் தோணி அணுகும்போது செல் லும் வாய்ப்பிருக்கிறது என்று எண்ணித்தான் உன்னை அனுப்புகின் றேன் என்கின்றாள்.

4. பொ-ரை : உப்பங்கழியில் வாழும் அழகுமிக்க சிவந்த கால்களை உடைய நாரையே! 'காதல் மிக்கூர்தலால் அணிகலன் களைப் பொருந்திய அழகிய தனங்கள் மெலிந்து பசலை நோய் பூக்கப் பெற்று உன் அடியவள் வருந்துகிறாள்' என்று வானோங்கி வளர்ந் துள்ள அழகிய மாடவீடுகளைக் கொண்டுள்ள திருத்தோணிபுரத்தில் எழுந்தருளியுள்ள ஆண்மக்களில் சிறந்தவராய் விளங்கும் சிவ பிரானை இன்றே சென்று அடைந்து என் மெலிவுக்குரிய காரணத்தை அவர் அறியுமாறு உணர்த்துவாயாக.

கு-ரை : கோழியும் பயன்படாதொழிய, நாரையைப் பார்த்து வேண்டுகிறாள். நாராய்! தோள்மெலிந்து மேனி பசந்தாள் என்று

Koviloor Digital Library

649. பாராரே யெனையொருகாற்
றொழுகின்றேன் பாங்கமைந்த
காராருஞ் செழுநிறத்துப்
பவளக்காற் கபோதகங்காள்
தேராரு நெடுவீதித்
திருத்தோணி புரத்துறையும்
நீராருஞ் சடையாருக்
கென்னிலைமை நிகழ்த்தீரே. 5

இன்றே சென்று உணர்த்து என்கின்றனள். காண்தகைய - அழகுமிக்க. பூண்தகைய - அணிகளால் அழகுபெற்ற. பொன்பயந்தாள் - பயலை பெற்றாள். சேண் - ஆகாயம். அவர் ஆண்டகையாய் இருப்பதால் அவரால் பூணத்தக்க தளராத முலையும் தளர்ந்து, மெலிந்து, மேனி பசந்தது என்று உணர்த்தினால், உடனேவந்து தலையளிசெய்வர் என்று இன்றே சென்று தூதுசொல்லவேண்டிய இன்றியமையாமையை விளக் குகிறாள். நீ சென்றால் பிறர்கண்ணில் படாமல் தங்கி, என்தூதை இரக சியமாய்ச் சொல்லுதற்கேற்ற அவகாசம் கிட்டும்வரைத் தங்குவதற்கு மணிமாடங்கள் இருக்கின்றன; அவரோ திருத்தோணிமலைச் சிகரத் தில் இருக்கிறார் என்று செவ்வி அறிதல் எளிமையும் செப்புகிறாள். இதில் நுகர்ச்சிக்குரிய முலை மெலிந்தால் இனி அவருக்குப் பயன்படு மாறு யாங்ஙனம் என்பதனையும் உணரவைத்தாள். அடி - காரணம்.

5. பொ-ரை : அழகியதாய் அமைந்துள்ள கருமை நிறைந்த செழு மையான நிறத்தினையும் பவளம் போன்ற கால்களையும் உடைய புறாக்களே! உம்மைத் தொழுகின்றேன். வண்டு முதலியவற்றிடம் என் நிலைமை கூறியும் அவை என்னை ஒருமுறையேனும் பாராவாயின. நீவிர் தேரோடும் அகலமான வீதிகளை உடைய திருத்தோணிபுரத்தில் எழுந்தருளிய கங்கை தங்கிய சடையினை உடைய சிவபிரானிடம் சென்று என் பிரிவாற்றாத நிலையைக் கூறுவீர்களாக.

கு-ரை : இங்ஙனம் நாரை முதலானவற்றை இவள் வேண்ட, அவை இவளைத் திரும்பியும் பாராமல் ஒழிய, இன்னது செய்வது என்று தோன்றாத நிலையில், மாடப்புறாக்களை அழைத்துக் கூறுகி றாள். கபோதகங்காள்! உங்களைத் தொழுகின்றேன்; என் தலைவருக்கு என் நிலையை உணர்த்துங்கள் என்கின்றாள். எனை ஒருகால் பாராரே - யான் அழைத்த அளி குருகு முதலியவர்கள் என்னை ஒருமுறையும் பாராரே. அளி முதலியவற்றைப் பாரார் என உயர்திணையாற் கூறி

Koviloor Digital Library

650. சேற்றெழுந்த மலர்க்கமலச்
செஞ்சாலிக் கதிர்வீச
வீற்றிருந்த வன்னங்காள்
விண்ணோடு மண்மறைகள்
தோற்றுவித்த திருத்தோணி
புரத்தீசன் றுளங்காத
கூற்றுதைத்த திருவடியே
கூடுமா கூறீரே. 6

யது, பிரிவால் விளைந்த பேதைமையால் ஆகும். பாங்கு - பக்கத்தில். கார் ஆரும் - கருமைநிறைந்த. கபோதகம் - மாடப்புறா. நீர் - கங்கை. கபோதகங்காள் எனப் பன்மைவாய்பாட்டால் அழைத்தது புறாக்கள் என்றும் இணைபிரியாமல் இருத்தலின். அன்றி, இணைந்து வாழுகின்ற இவைகளும் என் வேண்டுகோளிற்காகப் பிரிந்து, யான் அடையும் துன்பத்தை இவைகள் எய்தல் ஆகாது என்ற இரக்கத்தாலும்ஆம். தலைவனை ''நீர் ஆரும்சடையார்'' என்றதுகங்கையாகிய ஒருத்தி எஞ்ஞான்றும் உடன் உறைவதால் அவருக்குப் பிரிவுத் துன்பம் தெரியாது; நிழலில் இருப்பவனுக்கு வெயிலின் கொடுமை தெரியாதவாறுபோல, என்னிலையைக் கண்டநீங்களே சொல்லும்வன்மையால் அவரைச் செவிமடுக்கச் செய்யவேண்டும் என்று குறிப்பித்தவாறு.

6. பொ-ரை : வளமான சேற்றிடை முளைத்து மலர்ந்த தாமரை மலர்மேல் நெற்பயிர்கள் தம் கதிர்களையே சாமரையாக வீச, அரச போகத்தில் வீற்றிருக்கும் அன்னங்களே! விண்ணுலகம் மண்ணுலகம் ஆகியவற்றையும் நான்கு வேதங்களையும் தோற்றுவித்த திருத்தோணி புரத்தில் உறையும் சிவபிரானாருடைய யாராலும் அசைத்தற்கு இயலாத இயமனை உதைத்தழித்த திருவடிகளை யாம் அடையும் வழிகளைக் கூறுவீர்களாக.

கு-ரை : புறாக்களும் இன்பத்தில் மூழ்கி அசையாதிருக்க, தாமரை ஆசனத்தில் இருபுறமும் செந்நெற்கதிர்களாகிய சாமரைவீச அரசபோகத்தில் இருக்கும் அன்னங்கள் இவள் கண்ணில் பட்டன. இரங்கும் பெருந்தன்மை அற்ற அவைகள் கிடக்கட்டும்; இந்த அரச அன்னமாவது என் குறையை நிறைவேற்றும் என்று எண்ணி அதனை அழைத்தாள். தனக்குப் பிரிவே பெருங்காலனாக இருந்து உயிர்கொள்வதை உணர்த்தினாள். காலகாலன் திருவடியைக் கூடினால் கலக்கமில்லை என்று தெரிவித்துக்கொள்கின்றாள். விண்ணும் மண்ணும்

Koviloor Digital Library

651. முன்றில்வாய் மடற்பெண்ணைக்
குரம்பைவாழ் முயங்குசிறை
அன்றில்காள் பிரிவுறுநோ
யறியாதீர் மிகவல்லீர்
தென்றலார் புகுந்துலவுந்
திருத்தோணி புரத்துறையுங்
கொன்றைவார் சடையார்க்கென்
கூர்பயலை கூறீரே. 7

தோற்று வித்தல் - பொருட் பிரபஞ்சத்தைத் தோற்றுவித்தல். மறையைத் தோற்றுவித்தல் - சொற்பிரபஞ்சத்தைத் தோற்றுவித்தல்.

7. பொ-ரை : வீடுகளின் வாயிற்பகுதியில் மடல்களை உடைய பனைமரங்களில் கட்டிய கூடுகளில் வாழ்ந்து தம் பெடைகளைத் தழுவும் சிறகுகளோடு கூடிய அன்றிற் பறவைகளே! நீவிர் பிரிவுத் துன்பத்தை அறியமாட்டீர் ஆயினும் நேசிப்பதில் மிக வல்லவர்களா யுள்ளீர்கள். தென்றல் காற்று தவழ்ந்து வரும் திருவீதிகளை உடைய திருத்தோணிபுரத்தில் எழுந்தருளிய கொன்றை மாலை அணிந்த சடை முடியினை உடைய சிவபிரானுக்கு என்பால் மிகுந்துள்ள பசலை நோயின் இயல்பை எடுத்துரைப்பீர்களாக.

கு-ரை : அன்னங்களாலும் பயன்பெறாது மயங்கிய தலைவி, பனை மடலில் வாழும் அன்றிலைப் பார்த்துக்கூறுகிறாள். அவள் பார்த்த காலம் பகல் ஆதலின் அன்றில்கள் கூடிக்குலாவிக் கொண்டிருந்தன. ஆதலால் அவற்றை அழைக்கின்ற அவள் உங்களுக்குப் பிரிவுத்துன்பமே தெரியாது; ஆனாலும் மிக வல்லவர்கள்; என் பயலை நோயைக் கூறுங்கள் என்கின்றாள்.

மேலும் ''தென்றலார் புகுந்துலவு'' என இளவேனிற்காலம் வந்தமைகாரணத்தால் தான்படும் துன்பத்தை மிகுத்துக் காட்டுகின்றாள். ''கொன்றைவார் சடையார்க்கு'' என்ற குறிப்பால் என்நோயைக் கூறுகின்ற நீங்கள், அவர்சடைக்கண்ணதாகிய கொன்றை மாலையைப் பெற்றுக் கொண்டு வந்து கொடுத்தால், அது பெற்றாயினும் உய்வேன் என்று, உபாயம் அறிவித்தாள். முன்றில் - வாயில். மடற் பெண்ணை - மட்டைகளோடு கூடிய பனை. குரம்பை - கூடு. முயங்கு சிறை - தழுவியிருக்கின்ற சிறகுகள். கூர் பயலை - மிக்க பசலைநோய்.

Koviloor Digital Library

652. பானாறு மலர்ச்சூதப்
பல்லவங்க ளவைகோதி
ஏனோர்க்கு மினிதாக
மொழியுமெழி லிளங்குயிலே
தேனாரும் பொழில்புடைசூழ்
திருத்தோணி புரத்தமரர்
கோனாரை யென்னிடைக்கே
வரவொருகாற் கூவாயே. 8

653. நற்பதங்கண் மிகவறிவாய்
நானுன்னை வேண்டுகின்றேன்
பொற்பமைந்த வாயலகிற்
பூவைநல்லாய் போற்றுகின்றேன்

8. பொ-ரை : பால்மணம் கமழும் மலர்களைக் கொண்ட மாமரத்தின் தளிர்களைக் கோதி உண்டு, எல்லோர்க்கும் இனிதாகக் கூவும் அழகிய இளமையான குயிலே! தேன் நிறைந்த பொழில்கள் புடைசூழ்ந்து விளங்கும் திருத்தோணிபுரத்தில் எழுந்தருளிய தேவர் தலைவனாகிய சிவபிரான் என்னிடம் வருமாறு ஒருமுறையேனும் கூவுவாயாக.

கு-ரை : பிரிவுநோய் அறியாமையினாலே அன்னங்களும் பேசாமல் இருக்க, குரல் நயம் இன்மையால் அவரும் கேளார் என்ற எண்ணத்தால், அவரை மீட்டும் வற்புறுத்தாது குயிலைப் பார்த்துத் தலைவன்வரக் கூவாய்! என வேண்டுகின்றாள். குயில் மாந்தளிரை உண்டு மிக இனிமையாகக்கூவும் தன்மையது என்று குறிக்கின்றாள். அது அங்குச் சென்று கூவினாலே போதும் அவர் மனம் மாறும் என்று எதிர்நோக்கினளாக, அளிமுதலியவற்றைப் பார்த்துப் பகராய், விளம்பாய் என வேண்டிய அவள், இதனைக் கூவாய் என்று மட்டும் வேண்டுகிறாள். தோணிபுரத்தைப் பொழில்சூழ் தோணிபுரம் என்றது தூது போகின்ற குயிலுக்குத் தங்குமிடம் வசதியாய் உள்ளது என்பதை அறிவிக்க. என் இடைக்கே என்பதில், ஏகாரம் வந்தால் பிரியவிடாது காப்பாற்றும் பொறுப்பும் உன்னுடையதே என்று குறிப்பித்து நிற்கின்றது. சூதப் பல்லவம் - மாந்தளிர்.

9. பொ-ரை : அழகமைந்த வாயாகியஅலகினை உடைய நாகண

Koviloor Digital Library

சொற்பதஞ்சேர் மறையாளர்
திருத்தோணி புரத்துறையும்
விற்பொலிதோள் விகிர்தனுக்கென்
மெய்ப்பயலை விளம்பாயே. 9

654. சிறையாரு மடக்கிளியே
யிங்கேவா தேனொடுபால்
முறையாலே யுணத்தருவன்
மொய்பவளத் தொடுதரளந்
துறையாருங் கடற்றோணி
புரத்தீசன் றுளங்குமிளம்
பிறையாளன் திருநாமம்
எனக்கொருகாற் பேசாயே. 10

வாய்ப் பறவையே! நான் உன்னைத் துதித்துப் போற்றுகிறேன். தலைவனிடம் முறையிடுதற்குரிய செவ்விகளை நீ மிகவும் நன்கறிவாய் ஆதலால், இம்முறையீட்டை உன்பால் தெரிவிக்கிறேன். சொற்களால் அமைந்த பதம் என்னும் இசையமைப்புடைய வேதங்களில்வல்ல மறையவர் வாழும் திருத்தோணிபுரத்தில் எழுந்தருளிய வில்லாற் பொலியும் தோளை உடைய விகிர்தனுக்கு என் உடலில் தோன்றிய பசலை நோயை உரைப்பாயாக.

கு-ரை : குயிலும் வேனிற்காலத்தன்றி, பொழிலிடைத் தலைவர் வரினன்றித் தூதுசெல்லும் தரத்தன அல்ல என்பதை உட்கொண்ட தலைவி, நாகணவாய்ப்புள்ளை வேண்டுகின்றாள். நற்பதங்கள் மிக அறிவாய் - நல்ல சந்தர்ப்பத்தை நன்றாக அறிவாய். பொற்பு - அழகு. சொற்பதம் - சொல்லப்படுகின்ற பதம் என்னும் ஓதும்முறை. தலைவன் தோளும் சாமர்த்தியமுமே தம்மை வசீகரித்தன என்பாள், 'தோள் விகிர்தனுக்கு' என்றாள். தன்னுடைய உள்ளக் காதலை, மெய்ப்பயலை பலர் அறியப் பரப்புதலின், அதனை நீக்கவேண்டியதன் இன்றியமையாமையை எடுத்து இயம்புக என்று குறிப்பித்தாள்.

10. பொ-ரை : அழகிய சிறகுகளை உடைய இளங்கிளியே! என்பால் வருவாயாக. நான் உனக்குத் தேனையும் பாலையும் மாறி மாறி உண்ணத் தருவேன். நீ செறிந்த பவளங்களையும் முத்துக்களையும் கரைகளில் சேர்ப்பிக்கும் கடல் அருகில் உள்ள திருத்தோணிபுரத்தில் உறையும் இளம்பிறை சூடிய பெருமானின் திருநாமத்தை 'ஒரு முறை'

Koviloor Digital Library

655. போர்மிகுத்த வயற்றோணி
புரத்துறையும் புரிசடையெங்
கார்மிகுத்த கறைக்கண்டத்
திறையவனை வண்கமலத்
தார்மிகுத்த வரைமார்பன்
சம்பந்த னுரைசெய்த
சீர்மிகுத்த தமிழ்வல்லார்
சிவலோகஞ் சேர்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

என் செவி குளிரப் பேசுவாயாக.

கு-ரை : இங்ஙனம் சேய்மையிலும் அண்மையிலும் இருக்கின்ற பொருள்களை வேண்டிக்கொள்ள, அவை பயன்படாதொழியவே, தான்வளர்த்த கிளியையே நோக்கி, 'ஒருகால் அவர் பெயரைச் சொல்' என்று வேண்டுகின்றாள். இதுவரை தூதுவேண்டிய அவள் இப்போது கிளியிடம் பெயரை வேண்டுவது, கிளி சென்று தூதுரைத்துத் தலைவரை உடன்படுத்தி அழைத்துவரும் வரையில் பிரிவுத்துன்பம் பொறுக்கமுடியாத அளவு பெரிதாம் என்பதை எண்ணி, தலைவனுடைய பெயரைக் கேட்கின்ற அளவிலாவது துன்பந் தோன்றாது என்ற குறிப்பினளாக இங்ஙனம் வேண்டுகின்றாள். அங்ஙனம் சொல்வதற்குக் கைக்கூலியும் தருவதாக தேனொடுபால் முறையாக உண்ணத் தருவேன் என்கின்றாள்.

11. பொ-ரை : தூற்றாப் பொலிகளை மிகுதியாகக் கொண்ட வயல்கள் சூழ்ந்த திருத்தோணிபுரத்தில் எழுந்தருளிய முறுக்கேறிய சடையினையும் கருமை நிறைந்த விடக்கறை பொருந்திய கழுத்தையும் உடைய சிவபிரானை, வளமையான தாமரை மலர் மாலையைச் சூடிய மலை போன்ற மார்பினனாகிய ஞானசம்பந்தன் போற்றி உரைத்த புகழ் பொருந்திய இத்தமிழ்த் திருப்பதிகத்தை ஓதி நினைய வல்லவர் சிவலோகம் சேர்வர்.

கு-ரை : கழுமலநாதனைப்பற்றிச் சம்பந்தர் அருளிச்செய்த சிறப்பமைந்த இத்தமிழ்வல்லவர்கள் சிவலோகம் சார்வர் எனத் திருக்கடைக்காப்பு அருளுகின்றது. போர் - வைக்கோற்போர். கார் - கருமை. கமலத்தார் மிகுத்த வரை மார்பன் - தாமரை மலர் மாலை

Koviloor Digital Library

யணிந்த மார்பையுடையவன். அந்தணர்க்கு அடையாள மாலை தாமரை யாதலின் இங்ஙனம் கூறினார். பதிகங்கள்தோறும் கூறப் பெறும் இராவணனை அடர்த்த வரலாறு, புத்தர் சமணர்களைப் பற்றிய குறிப்பு இவைகள் இத்திருப்பதிகத்து இல்லாமை ஊன்றி இன்புறுதற் குரியது. சன்மார்க்க நெறியில் தலைவனும் தலைவியுமாக இறைவனும் ஆன் மாவும் ஈடுபடுகிறபோது காதல்வெள்ளத்து ஆழங்காற்படுகின்ற போது, இறைவனுடைய இன்றியமையாத் தன்மை உள்ளத்தைக் கவர்ந்துநின்றபோது இன்ப உணர்ச்சியன்றி வேறு எதுவும் தோன்றாது என்பதற்கு இதுவே ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

திருமலைமுருகன் பிள்ளைத்தமிழ்

அழிந்து புவனம் ஒழிந்திடினும்
அழியாத் தோணி புரத்தின்மறை
யவர்கள் குலத்தி னுதித்தரனோ
டம்மை தோன்றி அளித்தவள்ளச்
செழுந்தண் முலைப்பால் குடித்துமுத்தின்
சிவிகை யேறி மதுரையில்போய்ச்
செழியன் பிணியுஞ் சமணபகையுந்
தேவி துயரும் தீர்த்தருளி
வழிந்து நறுந்தேன் உகுவனபோல்
மதுரங் கனிந்து கடைதுடிக்க
வடித்துத் தெளிந்த செந்தமிழ்த்தே
வாரப் பாடல் சிவன்கேட்க
மொழிந்து சிவந்த கனிவாய்ச்சண்
முகனே முத்தம் தருகவே
முத்துக் குமரா திருமலையின்
முருகா முத்தம் தருகவே.

– மகாவித்துவான் கவிராச பண்டாரத்தையா.

Koviloor Digital Library

61. திருச்செங்காட்டங்குடி

பதிக வரலாறு:

நாகை, கீழ்வேளூர் முதலிய தலங்களை வணங்கிக் கொண்டு பெருகிய ஞானம்பெற்ற பிள்ளையார் எழுந்தருளு கின்றபோது, இச்செய்தியைச் செவியுற்ற சிறுத்தொண்டர் ஓடிப் போய் அழைத்துவந்து திருச்செங்காட்டங்குடியைச் சேர்ப்பித் தார். சிறுத்தொண்டரோடு நட்புக்கொண்டு அங்கு எழுந்தருளி யிருக்கின்றகாலத்துக் கணபதீச்சரம் வழிபடச்சென்றார். கோயிலை வலங்கொண்டார். அரவணிந்தார் அடிக்கீழ் வீழ்ந்து எழுந்து திருமுன் கைகூப்பி நின்று, சிறுத்தொண்டர் தொழ இருந்த பெரு மையைச் சிறப்பித்து 'நறை கொண்ட மலர் தூவி' என்னும் பொங்கியெழும் இசைப்பதிகமாகிய இதனைப் பாடினார்.

பண்: பழந்தக்கராகம்

பதிக எண்: 61

திருச்சிற்றம்பலம்

656. நறைகொண்ட மலர்தூவி
விரையளிப்ப நாடோறும்
முறைகொண்டு நின்றடியார்
முட்டாமே பணிசெய்யச்
சிறைகொண்ட வண்டறையுஞ்
செங்காட்டங் குடியதனுள்
கறைகொண்ட கண்டத்தான்
கணபதீச் சரத்தானே. 1

1. பொ-ரை : அடியவர்கள் நாள்தோறும் விதிப்படி தேன் பொருந்திய நாண்மலர்களைத் தூவி மணம் கமழச் செய்வித்துத் தவறாமல் நின்று பணி செய்து வழிபட, விடக்கறை பொருந்திய கண்டத்தினனாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் கோயில் , சிறகுகளை உடைய வண்டினங்கள் ஒலிக்கும் திருச்செங்காட்டங் குடியில் விளங்கும் கணபதீச்சரமாகும்.

கு-ரை: அடியார் மணந்தரும் பூக்களைத் தூவி வழிபட இறைவன் கணபதீச்சரத்தில் எழுந்தருளியிருக்கின்றான் என்கின்றது. நறை - தேன்.

Koviloor Digital Library

657. வாரேற்ற பறையொலியுஞ்
சங்கொலியும் வந்தியம்ப
ஊரேற்ற செல்வத்தோ
டோங்கியசீர் விழவோவாச்
சீரேற்ற முடைத்தாய
செங்காட்டங் குடியதனுள்
காரேற்ற கொன்றையான்
கணபதீச் சரத்தானே. 2

658. வரந்தையான் சோபுரத்தான்
மந்திரத்தான் தந்திரத்தான்
கிரந்தையான் கோவணத்தான்
கிண்கிணியான் கையதோர்
சிரந்தையான் செங்காட்டங்
குடியான்செஞ் சடைச்சேரும்
கரந்தையான் வெண்ணீற்றான்
கணபதீச் சரத்தானே. 3

விரை - மணம். முறைகொண்டு - விதிப்படி. முட்டாமே - இடைவிடாமல். சிறை - சிறகு. அறையும் - ஒலிக்கும். கறை - விடம்.

2. பொ-ரை : கார்காலத்தே மலரும் கொன்றை மலரை அணிந்த சிவபிரான், வாரால் இழுத்துக் கட்டப்பட்ட பறைகளின் ஒலியும், சங்குகளின் ஒலியும் வந்திசைக்க ஊர் முழுதும் நிறைந்த செல்வ வளங்களோடு பரவிய புகழை உடைய திருவிழாக்கள் இடைவிடாது நிகழும் திருச்செங்காட்டங்குடியில் விளங்கும் கணபதீச்சரம் என்னும் கோயிலில் எழுந்தருளியுள்ளான்.

கு-ரை : பலவகை வாச்சிய ஒலிகள் நீங்காததும் விழவறாததுமாகிய செங்காட்டங்குடிக் கணபதீச்சரத்தான் என்கின்றது. வார் ஏற்ற பறை - வாரால் இழுத்துக் கட்டப்பெற்ற பறை. சீர் ஏற்றம் - புகழின் மிகுதி. கார் - கார்காலம்.

3. பொ-ரை : கணபதீச்சரத்தில் எழுந்தருளியுள்ள இறைவன், வரந்தை, சோபுரம் ஆகிய தலங்களில் எழுந்தருளியிருப்பவன். வேதாகமங்களை அருளிச் செய்தவன். கோவணம் அணிந்தவன். காலிற்

Koviloor Digital Library

659. தொங்கலுங் கமழ்சாந்து
மகிற்புகையுந் தொண்டர்கொண்
டங்கையாற் றொழுதேத்த
வருச்சனைக்கன் றருள்செய்தான்
செங்கயல்பாய் வயலுடுத்த
செங்காட்டடங் குடியதனுள்
கங்கைசேர் வார்சடையான்
கணபதீச் சரத்தானே. 4

கிண்கிணி அணிந்தவன். கையில் உடுக்கை ஒன்றை ஏந்தியவன். சிவந்த சடைமுடிமீது கரந்தை சூடியவன். திருவெண்ணீறு அணிந்தவன். அப்பெருமான் திருச்செங்காட்டங்குடியில் கணபதீச்சரத்தில் எழுந்தருளியுள்ளான்.

கு-ரை : வரந்தை முதலிய பதிகளில் இருப்பவனும், உடுக்கை, கோவணம், கிண்கிணி, கபாலம் இவற்றையுடையவனும் கணபதீச்சரத்தான் என்கின்றது.

வரந்தை, கிரந்தை, சோபுரம், என்பன ஊர்ப் பெயர்கள். மந்திரம் - வேதம். தந்திரம் - ஆகமம்.

கையது ஓர் சிரந்தையான் - கையின் கண்ணதாக ஓர் உடுக்கையை உடையான். சிரந்தை - உடுக்கை. *(பெருந்தொகை - 54.)* கரந்தை - சிவகரந்தை என்ற மணமுள்ள பூண்டு.

4. பொ-ரை : மணம் கமழும் மாலைகளும் சந்தனமும், அகில் புகையும் கொண்டு தொண்டர்கள் தம் அழகிய கைகளால் தொழுது போற்றி வணங்கி அருச்சிக்க அவர்கட்கு உடனே அருள் செய்த பெருமானும் கங்கை தங்கிய நீண்ட சடைமுடியை உடையவனுமாகிய சிவ பிரான், சிவந்த கயல் மீன்கள் பாயும் வளமான வயல்கள் புறமாகச் சூழ்ந்த திருச்செங்காட்டங்குடியில் கணபதீச்சரத்தில் எழுந்தருளியுள் ளான்.

கு-ரை : தொண்டர் அருச்சனைக் கருள்செய்தான் கணபதீச்சரத்தான் என்கின்றது.

தொங்கல் - மாலை.

Koviloor Digital Library

660. பாலினால் நறுநெய்யாற்
பழத்தினாற் பயின்றாட்டி
நூலினான் மணமாலை
கொணர்ந்தடியார் புரிந்தேத்தச்
சேலினார் வயல்புடைசூழ்
செங்காட்டங் குடியதனுள்
காலினாற் கூற்றுதைத்தான்
கணபதீச் சரத்தானே. 5

661. நுண்ணியான் மிகப்பெரியான்
நோவுளார் வாயுளான்
தண்ணியான் வெய்யான்நந்
தலைமேலான் மனத்துளான்
திண்ணியான் செங்காட்டங்
குடியான்செஞ் சடைமதியக்
கண்ணியான் கண்ணுதலான்
கணபதீச் சரத்தானே. 6

5. பொ-ரை : தனது இடத் திருவடியால் இயமனை உதைத்தருளிய இறைவன், அடியவர்கள் ஆகம விதிப்படி பாலினாலும் மணம் கமழும் நெய்யாலும், பழவர்க்கங்களாலும் விரும்பி அபிடேகித்து மணமாலைகளைக் கொண்டு வந்து சூட்டி அன்போடு வழிபடுமாறு சேல்மீன்கள் நிறைந்த வளமான வயல்கள் புடை சூழ்ந்துள்ள திருச்செங்காட்டங்குடியில் கணபதீச்சரத்தில் எழுந்தருளியுள்ளான்.

கு-ரை : அடியார் பாலும் நெய்யுங்கொண்டு அபிடேகித்து மணமாலைகொண்டு வழிபடக் கூற்றுதைத்தான் இவ்வூரான் என்கின்றது. பயின்று - பலகாலும் பழகி. நூலினான் - வேதவிதிப்படி. புரிந்து - விரும்பி.

6. பொ-ரை : திருச்செங்காட்டங்குடியில் கணபதீச்சரத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் நுண்ணியன யாவற்றினும் மிக நுண்ணியன். பருமையானபொருள்கள் யாவற்றிலும் மிகப் பருமையானவன். நோய் முதலியவற்றால் வருந்துவோர் தம் வாயினால் துதிக்கப் பெறுபவன். தண்மையானவன். புறச்சமயிகட்கு வெய்யவன். நமது

Koviloor Digital Library

662. மையினார் மலர்நெடுங்கண்
மலைமகளோர் பாகமாம்
மெய்யினான் பையரவ
மரைக்கசைத்தான் மீன்பிறழச்
செய்யினா ரகன்கழனிச்
செங்காட்டங் குடியதனுட்
கையினார் கூரெரியான்
கணபதீச் சரத்தானே. 7

முடிமீதும் மனத்தின் கண்ணும் உறைபவன். உறுதியானவன். தனது சிவந்த சடைமீது பிறைமதிக் கண்ணியைச் சூடியவன். நெற்றியில் கண்ணுடையவன்.

கு-ரை : நுண்மைக்கு நுண்ணியனாகவும், பருமைக்குப் பரியனாகவும், வருந்துவார் வாயுளானாகவும், தண்ணியனாகவும் வெம்மையனாகவும், மேலும் அகத்தும் இருப்பவனாகவும் விளங்குங் கண்ணுதலான் கணபதீச்சரத்தான் என்கின்றது. 'நுண்ணியான் மிகப் பெரியான்' என்றதும், (*அணோரணீயாந் மஹதோ மஹீயாந்*) என்னும் உபநிடதக் கருத்தும் ஒத்தமை காண்க. தன்னடியடைந்த அடியார்கட்குத் தண்ணியான், புறச்சமயத்தார்க்குவெய்யான், கிரியாவான்களுக்குச் சக்த்திரதளபத்மத்தின் மேலதாகத் தலைமேலான், ஞானிகட்கு மனத்துளான் என்க. கண்ணி - தலையில் சூடப்படும் மாலை.

7. பொ-ரை : கருங்குவளை மலர் போன்ற நீண்ட கண்களை உடைய மலைமகளாகிய பார்வதிதேவியை ஒரு பாகமாகக் கொண்டுள்ள திருமேனியனும், படம் பொருந்திய பாம்பை இடையிலே கட்டியவனும், கையின்கண் மிகுந்துள்ள தீயை ஏந்தியவனுமாகிய சிவபிரான், மீன்கள் விளங்கித் திரியும் வயல்களாலும் அகன்ற கழனிகளாலும் சூழப்பட்ட திருச்செங்காட்டங்குடியில் கணபதீச்சரத்தில் எழுந்தருளியுள்ளான்.

கு-ரை : மலைமகளை ஓர் பாகமாகக் கொண்டவன், கையில் மழுவேந்திய கணபதீச்சரத்தான் என்கின்றது. மையினார் மலர் - நீலமலர். பையரவம் - படத்தோடு கூடிய பாம்பு. மீன் பிறழ் அச் செய்யின் ஆர் அகன் கழனி - மீன்கள் துள்ளுகின்ற அந்த வயலையும், நிறைந்த அகன்ற நீர்நிலைகளையும் (உடைய). செய் - பண்படுத்தப் பெற்ற வயல். கழனி - தானே அமைந்த விளைபுலம்.

Koviloor Digital Library

663. தோடுடையான் குழையுடையா
னரக்கன்றன் றோளடர்த்த
பீடுடையான் போர்விடையான்
பெண்பாக மிகப்பெரியான்
சேடுடையான் செங்காட்டங்
குடியுடையான் சேர்ந்தாடும்
காடுடையா னாடுடையான்
கணபதீச் சரத்தானே. 8

664. ஆனூரா வுழிதருவா
னன்றிருவர் தேர்ந்துணரா
வானூரான் வையகத்தான்
வாழ்த்துவார் மனத்துளான்
தேனூரான் செங்காட்டங்
குடியான்சிற் றம்பலத்தான்
கானூரான் கழுமலத்தான்
கணபதீச் சரத்தானே. 9

8. பொ-ரை : திருச்செங்காட்டங்குடியில் விளங்கும் கணபதீச்சரத்தில் எழுந்தருளியுள்ள இறைவன், ஒரு காதில் தோட்டினை அணிந்தவன். பிறிதொரு காதில் குழை அணிந்தவன். கயிலையைப் பெயர்த்த இராவணனின் தோள்களை நெரித்த பெருமை உடையவன், போரிடும் காளையை உடையவன். பெண்ணை ஒரு பாகமாகக் கொண்டவன். மிகவும் பெரியவன். பெருமைகட்கு உரியவன். பூதகணங்களோடு சேர்ந்தாடும் சுடுகாட்டைத் தனக்குரிய இடமாகக் கொண்டவன். நாடுகள் பலவற்றிலும் கோயில் கொண்டு அருள்புரிபவன்.

கு-ரை : தோடும் குழையும் பீடும் உடைய்வன் என்பது முதலாக அவன் சிறப்பியல்புகள் பலவற்றைச் செப்புகிறது. தோடு சத்தி பாகத்திற்குரியது. குழை சிவத்தின் பாகத்திற்குரியது. அரக்கன் - இராவணன், பீடு - பெருமை.

9. பொ-ரை : விடைமிசை ஏறி அதனை ஊர்ந்து பல இடங்களிலும் திரிபவன். முன்னொரு காலத்தே திருமால் பிரமன் ஆகிய இருவர் அடிமுடிகளைத் தேர்ந்து உணர முடியாதவாறு வானளாவ

Koviloor Digital Library

665. செடிநுகருஞ் சமணர்களுஞ்
சீவரத்த சாக்கியரும்
படிநுகரா தயருழப்பார்க்
கருளாத பண்பினான்
பொடிநுகருஞ் சிறுத்தொண்டர்க்
கருள்செய்யும் பொருட்டாகக்
கடிநகராய் வீற்றிருந்தான்
கணபதீச் சரத்தானே. 10

ஓங்கி நின்றவன். இவ்வுலகில் சிற்றம்பலத்திலும் தேனூரிலும் கானூரிலும் கழுமலத்திலும் விளங்குபவன். அவ்விறைவன் திருச்செங்காட்டங்குடியில் கணபதீச்சரத்தில் எழுந்தருளியுள்ளான்.

கு-ரை : அவன் ஏறுவதுவிடை; இடம் வான், வையகம், வாழ்த்துவார் மனம், தேனூர், கானூர் முதலியன என்கின்றது.

ஆன் ஊரா ஊழி தருவான்-இடபத்தை ஏறிச் சுற்றுவான். இருவர் - அயனும் மாலும். வானூரான் - விண்ணிடமாக ஓங்கி வளர்ந்தவன். இங்ஙனம் புறத்தானே எனினும் வாழ்த்துவார் மனத்தகத்துள்ளான்.

10. பொ-ரை : முடைநாற்றத்தை நுகரும் சமணர்களும், காவியாடை கட்டிய புத்தர்களும் எம்பெருமானுடைய இயல்புகளை அறிந்துணராது துன்புறுபவர்கள். அவர்கட்கு அருள்புரியாத இயல்பினனாகிய சிவபிரான் திருநீற்று மணத்தையே நுகரும் சிறுத்தொண்டர்க்கு அருள்செய்யும் பொருட்டுத் திருச்செங்காட்டங்குடியை விளங்கிய தலமாகக் கொண்டு அங்குள்ள கணபதீச்சரத்தில் எழுந்தருளியுள்ளான்.

கு-ரை : புறச்சமயத்தார்க்கிருளாயிருப்பவன் சிறுத்தொண்ட நாயனார்க்கருள் வழங்க இந்நகரில் எழுந்தருளியிருக்கின்றான் என்கின்றது.

செடி - நாற்றம். சீவரம் - காவியாடை. படி நுகராது - பூமியின்கண் நுகரத்தகுவன நுகராதே, அயர் உழப்பார் - துன்பத்தைத் தாமே தேடிக்கொண்டு வருந்துபவர்கள். பொடி - விபூதி. கடி நகர் - காவல் நகரம்.

Koviloor Digital Library

666. கறையிலங்கு மலர்க்குவளை
கண்காட்டக் கடிபொழிலின்
நறையிலங்கு வயற்காழித்
தமிழ்ஞான சம்பந்தன்
சிறையிலங்கு புனற்படப்பைச்
செங்காட்டங் குடிசேர்த்தும்
மறையிலங்கு தமிழ்வல்லார்
வானுலகத் திருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : கருமை பரவி விளங்கும் மலராகிய குவளை கண்போல் மலர்ந்து விளங்குவதும், மணம் கமழும் சோலைகளிலுள்ள தேனின் மணம் வீசுவதுமான, வயல்களால் சூழப்பட்ட சீகாழிப் பதியில் தோன்றிய தமிழ் வல்ல ஞானசம்பந்தன் கரைகளோடு கூடி நீர் நிறைந்து தோன்றும் வயல்கள் சூழ்ந்த திருச்செங்காட்டங்குடியில் விளங்கும் கணபதீச்சரத்து இறைவர் மீது பாடிய வேதப் பொருள் நிறைந்த இத் திருப்பதிகத் தமிழ் மாலையை ஓதவல்லவர் வானுலகில் வாழ்வர்.

கு-ரை : இத்தலத்துத்தமிழில் வல்லவர்கள் வானுலகத் திருப்பவர் என்கின்றது. கறை இலங்கு மலர் - நீலமலர். நறை - தேன். சிறை - கரை. படப்பை - தோட்டம். மறை இலங்கு தமிழ் - வேதக் கருத்துக்கள் விளங்கும் தமிழ்ப் பாடல்கள். வானுலகத்து இருப்பார் - புண்ணிய லோகந் துய்க்கச் சென்ற தேவர்கள் போலாதுஅயனால் படைக்கப்பட்ட பதினெண் கணத்தவர்களில் ஒருவராக என்றும் இருப்பார்.

ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்

யாரேஎம் போல அருளுடையார் இன்கமலத்
தாரேயுஞ் சென்னித் தமிழ்விரகன் - சீரேயும்
கொச்சை வயன்றன் குரைகழற்கே மெச்சி
அடிமைசெயப் பெற்றேன் அறிந்து.

- நம்பியாண்டார் நம்பி.

Koviloor Digital Library

62. திருக்கோளிலி

பதிக வரலாறு:

மல்லல் நீடிய வலிவலம் வணங்கிப் போதரும் பிள்ளை யார் கோளிலிப் பெரும்பதியை யடைந்து கோளிலிப்பெருமான் குரைகழலைக் கும்பிட்டு ''நாளாய போகாமே'' என்னும் இத் திருப்பதிகத்தைப் பாடினர்.

பண்: பழந்தக்கராகம்

பதிக எண்: 62

திருச்சிற்றம்பலம்

667. நாளாய போகாமே
நஞ்சணியுங் கண்டனுக்கே
ஆளாய வன்புசெய்வோ
மடநெஞ்சே யரனாமம்
கேளாய்நங் கிளைகிளைக்குங்
கேடுபடாத் திறமருளிக்
கோளாய நீக்குமவன்
கோளிலியெம் பெருமானே. 1

1. பொ-ரை : அறியாமையை உடைய மனமே! உலகில் உயிர் வாழும் நாள்கள் பல போவதற்கு முன்னரே நீலகண்டனாய சிவ பிரானுக்கே அடியவராக விளங்கி அவனிடத்து அன்பு செய்வோம். அவ்வரனது திருநாமங்களைப் பலகாலும் கேட்பாயாக. அவ்வாறு கேட்பின் நம் சுற்றத்தினரும் கிளைத்து இனிது வாழ்வர். துன்பங்கள் நம்மைத் தாக்காதவாறு அருள்புரிந்து நம் மனமாறுபாடுகளையும் அவன் தீர்த்து அருள்வான். அவ்விறைவன் திருக்கோளிலி என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ளான்.

கு-ரை : வாழ்நாள் வீணாளாகக் கழியாதவண்ணம், நீலகண்ட னுக்கு ஆளாய் அன்பு செய்வோம்; நமக்கு மட்டுமன்று; நம்சுற்றமுங் கூட நன்மையடையும் உபாயத்தை அருளிச் செய்து கோள்களை நீக்குபவன் கோளிலிப் பெருமான் என்கின்றது. மட நெஞ்சே - அறியாமையையுடைய நெஞ்சமே. கேளாய் - கேட்பாயாக. கிளை கிளைக்கும் - சுற்றம் சுற்றத்திற்குச் சுற்றம் இவைகட்கும். கோள் - மாறுபாடு.

Koviloor Digital Library

668. ஆடரவத் தழகாமை
யணிகேழற் கொம்பார்த்த
தோடரவத் தொருகாதன்
துணைமலர்நற் சேவடிக்கே
பாடரவத் திசைபயின்று
பணிந்தெழுவார் தம்மனத்தில்
கோடரவந் தீர்க்குமவன்
கோளிலியெம் பெருமானே. 2

669. நன்றுநகு நாண்மலரால்
நல்லிருக்கு மந்திரங்கொண்
டொன்றிவழி பாடுசெய
லுற்றவன்ற னோங்குயிர்மேல்
கன்றிவரு காலனுயிர்
கண்டவனுக் கன்றளித்தான்
கொன்றைமலர் பொன்றிகழுங்
கோளிலியெம் பெருமானே. 3

2. பொ-ரை : படம் எடுத்து ஆடும் இயல்புடைய பாம்பை நாணாகக் கொண்டு அதில் அழகிய ஆமை ஓட்டையும் பன்றிக் கொம்பையும் கோத்து அணிந்தவனும், தோடாகப் பாம்பையே கொண்டவனும் ஆகிய சிவபிரானது இரண்டு மலர் போன்ற சிவந்த நல்ல திருவடிகளையே பாடலால் வரும் இசையினால் பாடிப் பழகிப் பணிந்து வணங்குபவர்களின் மனக்கோணலைத் தீர்த்தருள்பவன் திருக்கோளிலி எம்பெருமானாவான்.

கு-ரை : பாம்பாகிய நாணில் ஆமையோட்டையும், பன்றிக் கொம்பையும் கட்டியணிந்த இறைவன் திருவடியில், துதிப்பாக்களைச் சொல்லி எழுவார் மனத்துக் கோணலை நீக்கும் பெருமான் இவர் என்கின்றது. கேழல் - பன்றி. தோடு அரவம் - தோடாக உள்ள பாம்பு. பாடு அரவம் - பாட்டோசை. கோடரவம் - கோணல்.

3. பொ-ரை : அழகிதாக மலர்ந்த புதிய பூக்களைக் கொண்டு இருக்கு வேத மந்திரங்களைக் கூறி மன ஒருமையோடு வழிபாடு செய்த மார்க்கண்டேயனின் உயர்ந்த உயிரைக் கவரச் சினந்து வந்த

Koviloor Digital Library

670. வந்தமண லால்இலிங்கம்
மண்ணியின்கட் பாலாட்டும்
சிந்தைசெய்வோன் றன்கருமந்
தேர்ந்துசிதைப் பான்வருமத்
தந்தைதனைச் சாடுதலுஞ்
சண்டீச னென்றருளிக்
கொந்தணவு மலர்கொடுத்தான்
கோளிலியெம் பெருமானே. 4

இயமனது உயிரைப் போக்கி அம்மார்க்கண்டேயனுக்கு அன்றே என்றும் பதினாறாண்டாக இருக்கும் வரமளித்தவன், பொன் போல் விளங்கும் கொன்றை மலரைச் சூடிய எம் திருக்கோளிலிப் பெருமானாவான்.

கு-ரை : அன்றலர்ந்த புதுப்பூக்களைக்கொண்டு இருக்குவேத மந்திரங்களுடன் பூசைசெய்த மார்க்கண்டன் மேல்வந்த காலனை உதைத்து மார்க்கண்டற்கு உயிர்வழங்கிய இறைவன் இவன் என்கின்றது.

நகுநாண்மலர் - மலர்ந்த புதுப்பூ. ஒன்றி - மன ஒருமைப் பாட்டுடன். கன்றி - கோபித்து. கண்டு - போகக் கண்டு.

4. பொ-ரை : மண்ணியாறு கொண்டுவந்த மணலால் அவ்வாற்றின் கரையில் இலிங்கம் அமைத்து மேய்ச்சலுக்குக் கொண்டு வந்த பசுவின் பாலை அபிடேகித்து வழிபட்ட விசாரசருமனது செயலைக் கண்டு அச்சிவபூசையைச் சிதைக்க முற்பட்ட அவன் தந்தையின் காலை அவன் தடிய,அதனைக் கண்டு அவ்விசாரசருமனுக்குச் சண்டீசப் பதவி அருளித் தான் உண்ட கலத்தொடு சூடிய மலர் மாலைகளைச் சூடிக் கொள்ளும் சிறப்பை அளித்தவன், திருக்கோளிலியில் விளங்கும் எமது பெருமான் ஆவான்.

கு-ரை : மண்ணியாற்றங் கரையில் மணலால் இலிங்கம் தாபித்துப் பாலபிஷேகஞ்செய்த விசாரசருமர் செயலையறிந்து பூசனைக்கு இடையூறுசெய்த தந்தை எச்சதத்தனை ஒறுத்தலும் அவருக்குச் சண்டேசப் பதவியைக் கொடுத்து, சூடிய மாலையும் உண்டகலமும் அருளிச் செய்தவர் இவர் என்கின்றது. சிதைப்பான் - இடற. கொந்து அணவும் மலர் - பூங்கொத்துக்களில் உள்ள மலர்.

Koviloor Digital Library

671. வஞ்சமனத் தஞ்சொடுக்கி
வைகலுநற் பூசனையால்
நஞ்சமுது செய்தருளும்
நம்பியென வேநினையும்
பஞ்சவரிற் பார்த்தனுக்குப்
பாசுபத மீந்துகந்தான்
கொஞ்சுகிளி மஞ்சணவுங்
கோளிலியெம் பெருமானே. 5

672. தாவியவ னுடனிருந்துங்
காணாத தற்பரனை
ஆவிதனி லஞ்சொடுக்கி
யங்கணனென் றாதரிக்கும்
நாவியல்சீர் நமிநந்தி
யடிகளுக்கு நல்குமவன்
கோவியலும் பூவெழுகோற்
கோளிலியெம் பெருமானே. 6

5. பொ-ரை : வஞ்சகமான மனத்தைத் திருத்தி ஐம்பொறிகளை ஒடுக்கி நாள்தோறும் நல்ல பூசையை இயற்றி, நஞ்சினை அமுதாக உண்டருளிய நம்பியே என நினையும் சிவபக்தனும், பாண்டவர் ஐவரில் ஒருவனுமான அருச்சுனனுக்குப் பாசுபதம் என்னும் அத்திரம் வழங்கி மகிழ்ந்தவன், கொஞ்சும் கிளிகள் வானவெளியில் பறக்கும் திருக்கோளிலியில் விளங்கும் எம் பெருமான் ஆவான்.

கு-ரை : பொறிகளை யொடுக்கித் தவஞ்செய்த விஜயனுக்குப் பாசுபதம் தந்த பரமன் இவர் என்கின்றது. அஞ்சு - மெய் வாய் முதலிய பொறிகள் ஐந்து. வைகலும் - தினந்தோறும். பஞ்சவர் - பாண்டவர். பார்த்தன் - அருச்சுனன். மஞ்சு - ஆகாயம்.

6. பொ-ரை : மூவுலகங்களையும் தாவி அளந்த திருமால் தன்னோடு உடனிருந்தும் திருவடிகளைக் காண இயலாதவாறு சிறந்து நின்ற தற்பரனாகிய சிவபிரானை, ஐம்புலன்களையும் ஒடுக்கிக் கருணையாளனாக உயிர்க்குயிராய்க் காதலித்து வழிபடும் நாவால் புகழத்தக்க பெரியவராகிய நமிநந்தி அடிகளுக்கு அருள் புரிந்தவன், தலைமை சான்ற மலர் மரங்களை உடைய திருக்கோளிலியில் விளங்கும் எம் பெருமானாவான்.

Koviloor Digital Library

673. கன்னவிலு மால்வரையான்
கார்திகழு மாமிடற்றான்
சொன்னவிலு மாமறையான்
றோத்திரஞ்செய் வாயினுளான்
மின்னவிலுஞ் செஞ்சடையான்
வெண்பொடியா ணங்கையினில்
கொன்னவிலுஞ் சூலத்தான்
கோளிலியெம் பெருமானே. 7

674. அந்தரத்திற் றேருரு
மரக்கன்மலை யன்றெடுப்பச்
சுந்தரத்தன் றிருவிரலா
லூன்றஅவன் உடல்நெரிந்து


கு-ரை : உலகத்தைத் தாவியளந்த திருமாலும் காணாத தற்பரன், பொறிகளையடக்கி அன்புசெய்த நமிநந்தியடிகளுக்குப் புகழைத்தந்த பெருமான் இவர் என்கின்றது. தாவியவன் - மூவுலகத் தையும் ஈரடியால் தாவியளந்த திருமால். காணாத தற்பரனை - நாயகனாகவும், ஊர்வோனாகவும், ஆண்டானாகவும், மைத்துனனாகவும், கண்டதன்றித் தற்பரன் என்று காணப்படாதவற்றிற்கெல்லாம் மேலானவனை.

7. பொ-ரை : கற்கள் செறிந்த பெரிய கயிலாய மலையில் எழுந்தருளியிருப்பவன். கருமை விளங்கும் பெரிய மிடற்றை உடையவன். புகழ் பொருந்திய வேதங்களை அருளிச் செய்தவன். தன்னைத் தோத்திரிப்பாரின் வாயின்கண் உள்ளவன். மின்னல் போன்ற சிவந்த சடையினை உடையவன். திருவெண்ணீறு அணிந்தவன். அழகிய கையில் கொல்லும் தொழிலில் பழகிய சூலப்படையை ஏந்தியவன். இத்தகையோனாகி விளங்குவோன் திருக்கோளிலியின்கண் விளங்கும் எம்பெருமானாவான்.

கு-ரை : கயிலையையுடையவன், நீலகண்டன்; வேதங்களையுடையவன்; தோத்திரஞ்செய்யும் வாயில் உள்ளவன்; செஞ்சடையான்; வெண்பொடியான்; சூலத்தான் இவன் என்கின்றது. கல் நவிலும் மால்வரை எனப் பிரிக்க. கார் - கருமைநிறம். கொன் - பெருமை.


8. பொ-ரை : ஆகாய வெளியிலே தேரை ஊர்ந்து வரும் இராவணன் கயிலை மலையைப் பெயர்த்த போது அழகிய தனது கால்

Koviloor Digital Library



திருக்கோளிலி: அருள்மிகு தியாகராஜசுவாமி கோயில் (மேல்தளம்)

Koviloor Digital Library



சிதம்பரம்: சிவகங்கை தீர்த்தம்

Koviloor Digital Library

மந்திரத்த மறைபாட
வாளவனுக் கீந்தானும்
கொந்தரத்த மதிச்சென்னிக்
கோளிலியெம் பெருமானே. 8

675. நாணமுடை வேதியனும்
நாரணனும் நண்ணவொணாத்
தாணுவெனை யாளுடையான்
தன்னடியார்க் கன்புடைமை
பாணனிசை பத்திமையாற்
பாடுதலும் பரிந்தளித்தான்
கோணலிளம் பிறைச்சென்னிக்
கோளிலியெம் பெருமானே. 9

விரலால் சிறிதே ஊன்றிய அளவில், அவன் உடல் நெரிந்து, மந்திரமாக விளங்கும் வேத கீதங்களைப் பாடிப் போற்றச் சந்திரஹாசம் என்னும் வாளை ஈந்து அருள் செய்தவன், கொத்துப் போல இரண்டு முனை களை உடைய பிறை மதியைச் சூடிய சடையினனாகிய திருக்கோளிலி எம்பெருமானாவான்.

கு-ரை : வானவூர்தியனாகிய இராவணன் கயிலையை எடுத்த காலத்து விரலூன்றி யடர்த்து அவன் சாமகானஞ்செய்ய அருள் செய்தவன் இவன் என்கின்றது. அந்தரம் - ஆகாயம். சுந்தரம் - அழகு. வாள் - சந்திரஹாசம் என்னும் வாள். உம்மை - இசைநிறை. கொன்தரத்த - கொந்த ரத்த எனத் திரிந்தது. பெருமையுடைய என்பது பொருள்.

9. பொ-ரை : ஐந்து தலைகளில் ஒன்றை இழந்ததால் நாணமுற்ற வேதியனாகிய பிரமனும், திருமாலும் அணுக முடியாத நிலைத்த பொருள் ஆனவனும் என்னை அடிமையாக உடையவனும், தன் அடி யவர்கட்கு அன்பு வடிவானவனும், பாணபத்திரன் பத்திமையோடு பாடப் பரிவோடு அவனுக்கு அருள் புரிந்தவனுமான வளைந்த பிறை மதியைச் சென்னியில் சூடிய சிவபிரான், திருக்கோளிலி எம்பெருமான் ஆவான்.

கு-ரை : அயனும் மாலும் அறியவொண்ணாத் தாணு, பாண

Koviloor Digital Library

676. தடுக்கமருஞ் சமணரொடு
தர்க்கசாத் திரத்தவர்சொல்
இடுக்கண்வரு மொழிகேளா
தீசனையே யேத்துமின்கள்
நடுக்கமிலா வமருலகம்
நண்ணலுமா மண்ணல்கழல்
கொடுக்ககிலா வரங்கொடுக்குங்
கோளிலியெம் பெருமானே. 10

677. நம்பனைநல் லடியார்கள்
நாமுடைமா டென்றிருக்கும்
கொம்பனையாள் பாகனெழிற்
கோளிலியெம் பெருமானை

பத்திரன் அன்போடு பாடுதலும் அருள் சுரந்து பரிசில் பல அளித்தவன் இவன் என்கின்றது. நாணம் உடை வேதியன் - அறிய முடியாமையால் வெட்கமுற்ற பிரமன். தலைபோனமையால் வெட்கிய என்றுமாம். தாணு - நிலைத்தபொருள். பாணன் - பாணபத்திரன். பரிந்து - விரும்பி.

10. பொ-ரை : தடுக்கை உடையாக விரும்பும் சமணரும், தர்க்க சாத்திரங்களில் வல்ல புத்தர்களும் கூறுகின்ற இடுக்கண் வளரும் மொழிகளைக் கேளாது ஈசனையே ஏத்துமின்கள். துளங்காது அமரர் வாழும் வானுலகத்தை அடைதலும் கூடும். அப்பெருமான் திருவடி கள், வேறு யாராலும் தர இயலாத வரங்கள் பலவற்றையும் தரும். அவ்விறைவன் திருக்கோளிலி எம்பெருமான் ஆவான்.

கு-ரை : சமணர்களும் தார்க்கீகர்களும் கூறும் துன்பவார்த்தை களைக் கேளாமல் ஈசனையே ஏத்துங்கள்; வானுலகை அடையலாம்; அவன் கழல் அரிய வரங்களையும் கொடுக்கும் என்கின்றது. தடுக்கு அமரும் - தடுக்கை ஆசனமாக விரும்புகின்ற. தர்க்க சாஸ்திரிகளும் நாஸ்திகர்கள் ஆதலின் அவருரையும் கேளாதீர் என்றார்.

11. பொ-ரை : நல்ல அடியவர்கள் நம்முடைய செல்வம் என நம்பியிருப்பவனாய்ப், பூங்கொம்பு போன்ற அழகிய உமையம்மை யின் கணவனாய், அழகிய திருக்கோளிலியில் விளங்கும் எம் பெரு

Koviloor Digital Library

வம்பமருந் தண்காழிச்
சம்பந்தன் வண்டமிழ்கொண்
டின்பமர வல்லார்கள்
எய்துவர்க ளீசனையே. 11

திருச்சிற்றம்பலம்

மானை, மணம் விரியும் தண்ணிய சீகாழிப் பதியுள் தோன்றிய ஞான சம்பந்தன் பாடிய இத்தமிழ்ப் பதிகத்தால் இன்பம் பொருந்தப் பாட வல்லவர்கள் அப்பெருமானையே அடைவர்.

கு-ரை : நல்ல அடியார்கள் ஒவ்வொருவரும் நம்முடைய செல்வம் என்று நம்பியிருக்கும் கோளிலிப்பெருமானை ஞான சம்பந்தன் அருளிய வண்டமிழ்கொண்டு இன்பங்கொள்ள வல்லவர்கள் ஈசனை எய்துவர் என்கின்றது. கொம்பு அனையாள் - பூங்கொம்பை ஒத்த உமாதேவி. வம்பு - மணம். இன்பு அமர - இன்பத்து இருக்க.

திருக்கழுமல மும்மணிக்கோவை

தாதையொடு வந்த வேதியச் சிறுவன்
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
அன்னா யோவென் றழைப்பமுன் னின்று
ஞானபோ னகத்தருள் அட்டிக் குழைத்த
ஆனாத் திரளை அவன்வயின் அருள
அந்தணன் முனிந்து தந்தா ரியாரென
அவனைக் காட்டுவன் அப்ப வானார்
தோடுடைய செவியன் என்றும்
பீடு டைய பெம்மான் என்றும்
கையிற் சுட்டிக் காட்ட
ஐயநீ வெளிப்பட் டருளினை ஆங்கே.

- பட்டினத்துப் பிள்ளையார்.

Koviloor Digital Library

63. திருப்பிரமபுரம்

குருவருள்: ஞானசம்பந்தர் அவதரித்த சீகாழிப் பதி பன்னிரு திருப் பெயர்களை உடையது. ஆளுடைய பிள்ளையார் அப்பன்னிரு திருப்பெயர்களைத் தனித்தனியே குறிப்பிட்டுப் பதிகங்கள் அருளியிருப்பதோடு, பன்னிரு பெயர்களுக்குப் பன்னிரு திருப்பாடல்களைக் கொண்ட 11 திருப்பதிகங்கள் அருளியுள்ளார். அத்தகைய பதிகங்களில் ஒன்றாய் அப் பெயர்கள் அமைதற்குரிய புராண வரலாற்றுக் குறிப்புக்களுடன் இப்பல்பெயர்ப் பத்து அமைந்துள்ளது. இத்திருப்பதிகத்தில் பிரமபுரம் முதலாக ஒவ்வொரு பாடலிலும் ஒவ்வொரு தலம் வருமாறு பன்னிரு பெயருக்கும் பன்னிரு பாடல்கள் அமைந் துள்ளன.

பல்பெயர்ப்பத்து
பண்: தக்கேசி

பதிக எண்: 63

திருச்சிற்றம்பலம்

678. **எரியார்மழுவொன் றேந்தியங்கை**
யிடுதலை யேகலனா
வரியார்வளையா ரையம்வவ்வாய்
மாநலம் வவ்வுதியே
சரியாநாவின் வேதகீதன்
தாமரை நான்முகத்தன்
பெரியான்பிரமன் பேணியாண்ட
பிரம புரத்தானே. 1

அகத்துறைப் பதிகம் : சீகாழிப் பதியின் பன்னிரு பெயர்களைத் தனித்தனியே ஒவ்வொரு பாடலிலும் குறிக்கும் பல்பெயர்ப் பத்து.

1. பொ-ரை: உச்சரிப்பு தவறாதவாறு நாவினால் வேத கீதங் களைப் பாடுபவனும், தாமரை மலர்மேல் விளங்குவோனும் ஆகிய நான்கு திருமுகங்களை உடைய பெரியவனாகிய பிரமன் விரும்பி வழி பட்டு ஆட்சிபுரிந்த பிரமபுரத்தில் விளங்கும் இறைவனே! எரியும் மழு ஆயுதத்தைக் கையில் ஏந்தி அழகிய கையில் பிரமனது ஐந்து தலைகளில் ஒன்றைக் கொய்து கொண்ட மண்டை ஓட்டையே உண்கல

Koviloor Digital Library

679. பெயலார்சடைக்கோர் திங்கள்சூடிப்
பெய்பலிக் கென்றயலே
கயலார்தடங்க ணஞ்சொனல்லார்
கண்டுயில் வவ்வுதியே
இயலானடாவி யின்பமெய்தி
யிந்திரனாண் மண்மேல்
வியலார்முரச மோங்குசெம்மை
வேணு புரத்தானே. 2

னாகக் கொண்டு வீதிகள்தோறும் பலி ஏற்பது போல் வந்து வரிகளை உடைய வளையல்களை அணிந்த இளம் பெண்கள் தரும் பிச்சையை ஏலாது அவர்களது மிக்க அழகைக் கவர்ந்து செல்கின்றாயே! இது நீதிதானா?

கு-ரை : பிரமபுரத்தானே! ஒருகையில் மழுவையும், ஒருகையில் கபாலத்தையும் ஏந்திக்கொண்டு மகளிரிடம் பிச்சை வாங்காது அவர்கள் அழகை வாங்குகிறீரே ஏன் என்று வினாவுகிறது.

எரியார் மழு - எரிதலைப் பொருந்திய மழு. வரியார் வளையார் - கோடுகளோடு கூடிய வளையலையுடைய முனி பத்தினியர். ஐயம் - பிச்சை. சரியா நாவின் என்பது முதல் பிரமன் என்பதுவரை பிரமனைக் குறிக்கும் தொடர். பிரமன் வழிபட்டதால் பிரமபுரம் எனத் தலத்திற்குப் பெயர் வந்தமை விளக்கியது.

2. பொ-ரை : இந்திரன் விண்ணுலகை இழந்து மண்ணுலகம் வந்து முறைப்படி ஆட்சி நடத்தி மகிழ்வெய்தி வழிபட்டு வாழ்ந்த சிறப்பினதும், பெரிதாய முரசுகள் ஓங்கி ஒலிப்பதும் நீதி நிலை பெற்றதும் ஆகிய வேணுபுரத்தில் எழுந்தருளிய இறைவனே, கங்கை தங்கிய சடைமுடியில் ஒரு திங்களைச் சூடி மகளிர்இடும் பலியை ஏற்பதற்கு என்றே வந்து அதனின் வேறாய் மீன் போன்ற தடங்கண்களையும் அழகிய சொற்களையும் உடைய இளம்பெண்களின் கண்கள் துயில் கொள்வதைக் கவர்ந்து அவர்களை விரக நோய்ப் படுத்தல் நீதியோ?

கு-ரை : வேணுபுரத்தானே! சடையிற் சந்திரனையும் சூடிப் பிச்சைக்கென்று புறப்பட்டு மகளிர் துயிலை வவ்வுவதேன் என்கின்றது.

பெயல் - கங்கை. திங்கள் - பிறை. கயல் ஆர் - கயல் மீனை

Koviloor Digital Library

680. நகலார்தலையும் வெண்பிறையு
நளிர்சடை மாட்டயலே
பகலாப்பலிதேர்ந் தையம்வவ்வாய்
பாய்கலை வவ்வுதியே
அகலாதுறையு மாநிலத்தில்
அயலின்மை யாலமரர்
புகலான்மலிந்த பூம்புகலி
மேவிய புண்ணியனே. 3

ஒத்த. நல்லார் - பெண்கள். கண் துயில் வவ்வுதியே என்றது விரக நோயால் அவர்கள் துயில் துறந்தார்கள் எனக் குறித்தது.

இயலான் நடாவி - முறைப்படி நடத்தி. இந்திரன் ஆள் மண் மேல் - இந்திரன் வந்து மறைந்திருந்தாண்ட மண்ணுலகத்தில். வியல் - அகலம். இந்திரன் மூங்கிலாய் மறைந்திருந்தமையின் வேணுவன மாயிற்று எனக் காரணங் குறித்தது.

3. பொ-ரை : இம்மாநிலத்தில் தம்மை அடைக்கலமாக ஏற்போர் பிறர் இன்மையால் தேவர்கள் தமக்குப் புகலிடமாய் வந்தடைந்த சிறப்பினதும், அவர்கள் அகலாது உறைவதுமாகிய அழகிய புகலி நகரில் மேவிய புண்ணியனே! சிரிக்கும் தலையோட்டையும் வெண் மையான பிறை மதியையும் குளிர்ந்த சடையில் அணிந்து பகற்போதில் பலி ஏற்பது போல் வந்து, மகளிர்தரும் பிச்சைப் பொருள் கொள்ளாது அவர்கட்கு விரகதாபம் அளித்து, அதனால் அவர்கள் அணிந்துள்ள ஆடை முதலியன, நெகிழும்படி செய்து போதல் நீதியோ?

கு-ரை : இவ்வுலகத்தில் அடைக்கலத்தானம் வேறில்லாமை யால் அமரர்கள் வந்து அடைக்கலம் புகுந்த புகலிமேவிய புண்ணி யனே! கலையைக்கவர்ந்ததேன் என்கின்றது.

நகல் - சிரித்தல். பகலாப் பலி - நடுவற்றபிச்சை; பகற் காலத்துப்பலி என்றுமாம். ஐயம் - பிச்சை; பாய் கலை - பரந்த ஆடை.

அயல் இன்மையால் - (அடைக்கலம்) வேறின்மையால். புகல் - அடைக்கலம். புகலி என்பதற்குத் தேவர்களால் அடைக்கலம் புகப் பெற்ற இடம் எனக் காரணம் விளக்கியவாறு.

Koviloor Digital Library

681. சங்கோடிலங்கத் தோடுபெய்து
காதிலொர் தாழ்குழையன்
அங்கோல்வளையா ரையம்வவ்வா
யானலம் வவ்வுதியே
செங்கோனடாவிப் பல்லுயிர்க்குஞ்
செய்வினை மெய்தெரிய
வெங்கோத்தருமன் மேவியாண்ட
வெங்குரு மேயவனே. 4

682. தணிநீர்மதியஞ் சூடிநீடு
தாங்கிய தாழ்சடையன்
பிணிநீர்மடவா ரையம்வவ்வாய்
பெய்கலை வவ்வுதியே

4. பொ-ரை : கொடிய அரசன் எனப்படும் எமதருமராசன் தானும் குருவாகிச் செங்கோல் ஆட்சியை நடத்தித் தான் செய்யும் செயல்கள் நீதிநெறிக்கு உட்பட்டவை என்ற உண்மை எல்லோர்க்கும் தெரியுமாறு செங்கோல் முறைகளை வந்து கற்று அருள் புரிந்து ஆண்ட வெங்குரு என்னும் தலத்தில் எழுந்தருளியவனே! சங்கக் குண்டலத்தோடு விளங்குமாறு தோடணிந்தும் ஒரு காதில் தாழும் குழையணிந்தும் பலி ஏற்பதற்கென்று வந்து அழகிய திரண்ட வளையல்களை அணிந்த இளம் பெண்களின் அழகினைக் கவர்ந்து செல்லல் நீதியோ?

கு-ரை : வெங்குருமேயவனே! தோடும் குழையும் காதிற்பெய்த உமையொருபாதியனாகிய உருவத்தைக்கொண்டு மகளிரிடம் ஐயம் பெறாது நலங்கவர்ந்தது ஏன் என்கின்றது. சங்கோடு இலங்க - சங்க குண்டலத்தோடு விளங்க. அம் கோல் வளையார் - அழகிய திரண்ட வளையலையுடையவர்கள். ஐயம் வவ்வாயால் - பிச்சையை ஏற்காய். நடாவி - நடத்தி. வெங்கோ தருமன் செங்கோல் நடாவிச் செய்வினை பல்லுயிர்க்கும் மெய்தெரிய மேவி ஆண்ட வெங்குரு எனக் கூட்டுக. தருமன் செங்கோல் முறைப்படி பல உயிர்கட்கும் செய்யும் ஆட்சியின் உண்மையை அறிய வெங்குரு எனப் பெயர் பெற்றது எனக் காரணம் விளக்கியது.

5. பொ-ரை : மண்ணுலகம் அழகிய நீருலகம் ஆகி, அனைத்திடங்களும் ஆழமான கடலால் மூழ்கி வருந்தும் அவ்வேளையில், அச்சம்

Koviloor Digital Library

அணிநீருலக மாகியெங்கு
மாழ்கட லாலழுங்கத்
துணிநீர்பணியத் தான்மிதந்த
தோணி புரத்தானே. 5

683. கவர்பூம்புனலுந் தண்மதியுங்
கமழ்சடை மாட்டயலே
அவர்பூம்பலியோ டையம்வவ்வா
யானலம் வவ்வுதியே
அவர்பூணரையர்க் காதியாய
வடன்மன்ன னாண்மண்மேல்
தவர்பூம்பதிக ளெங்குமெங்குந்
தங்கு தராயவனே. 6

தரும் அக்கடல் பணியுமாறு தான் மட்டும் அவ்வூழி வெள்ளத்தில் அழியாது மிதந்த தோணிபுரத்து இறைவனே! தன்னை வந்து பணிந்த மதியைச் சூடி அம்மதியை நெடிது நாள் காத்தருளிய, தாழ்ந்து தொங்கும் சடைமுடியை உடையவனாய், காமநோயால் வருந்தும் மகளிர் பால் சென்று அவர்கள் தரும் பிச்சையை ஏலாது அவர்களின் ஆடைகளை நிலைகுலையச் செய்தல் நீதியாகுமா?

கு-ரை : உலகம் கடலுள் ஆழ்ந்தகாலத்து மிதந்த தோணிபுரத்தானே! மகளிரிடம் ஐயம் ஏற்காது உடுத்த ஆடையை வவ்வியதேன் என்கின்றது. தணிநீர் மதியம் - கீழ்ப்படிந்த தன்மையை உடைய பிறை. பிணிநீர் மடவார் - காமநோய்வாய்ப்பட்ட மாதர்கள். ஐயம் - பிச்சை. பெய்கலை - உடுத்திய ஆடை. உலகம் எங்கும் அணி நீராகிக் கடலால் அழுங்க எனக் கூட்டுக. துணி நீர் பணிய - துணிவுகொண்ட தண்ணீர் கீழ்ப்படிய. தோணிபுரம் என்ற பெயரின் காரணம் விளக்கியது.

6. பொ-ரை : அணிகலன்களை அணிந்த அரசர்களாகிய அவர்க்கெல்லாம் தலைவனாகிய வலிமை பொருந்திய மன்னனாகிய திருமால் வராக அவதாரத்தில் இரண்ய கசிபுவைக் கொன்ற பழி நீங்கப் பூசித்து ஆட்சி செய்த இம்மண்ணுலகில் உள்ளதும், தவமுனிவர்கள் எல்லா இடங்களிலும் தங்கும் சிறப்பினதும், ஆகிய பூந்தராயில் எழுந்தருளியவனே, இம்மண்ணுலகைக் கவர வந்த அழகிய கங்கையையும் தண்ணிய மதியையும் மணம் கமழும் சடைமிசைச் சூடி மகளிர் அருகருகே

Koviloor Digital Library

684. முலையாழ்கெழுவ மொந்தைகொட்ட
முன்கடை மாட்டயலே
நிலையாப்பலிதேர்ந் தையம்வவ்வாய்
நீநலம் வவ்வுதியே
தலையாய்க்கிடந்திவ் வையமெல்லாந்
தன்னதொ ராணைநடாய்ச்
சிலையான்மலிந்த சீர்ச்சிலம்பன்
சிரபுர மேயவனே. 7

இடும் சுவைமிக்க பலியாகிய உணவை ஏலாது அவர்களின் அழகை வவ்வுகின்றாயே; இது நீதியா?

கு-ரை : பூந்தராய்மேவியவனே! பலி வவ்வாயாய் அவர்கள் நலம் வவ்வுதியே என்கின்றது. வவ்வாய் ஆய் நலம் வவ்வுதியே எனப் பிரித்துப் பொருள் கொள்க. பூண் அரையர் அவர்க்கு ஆதியாய அடல் மன்னன் - மன்னர்க்கெல்லாம் முதலாகிய வலிமைமிக்க திருமால். காக்கும் மன்னர்க்கு எல்லாம் தலைவன், காத்தற்றெய்வமாகிய திருமால் என்ற ஒற்றுமைபற்றி உரைக்கப்பெற்றது. திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேன். என்பதும் இந்த இயைபுபற்றியே. ஆதிவராகமான திருமால் இரணியனைக் கொன்ற பழிபோகப் பூக்களைக்கொண்டு பூசித்தமையால் பூந்தராய் என அழைக்கப்பெற்றது எனத் தலப்பெயர்க்காரணம் கூறியவாறு.

7. பொ-ரை : கரவாக அமுதுண்டதால் திருமாலால் வெட்டப் பெற்றுத் தலைமாத்திரமாய் நின்ற வில்வீரனாகிய சிலம்பன் என்னும் இராகு வழிபட்டு இவ்வையகமெல்லாவற்றையும் தன் ஆணைவழி நடத்தி ஆட்சி புரிந்த சிரபுரம் என்னும் நகரில் எழுந்தருளிய இறைவனே! முல்லையாழை மீட்டி மொந்தை என்னும் பறை ஒலிக்கச் சென்று வீட்டின் முன் கடையின் அயலே நின்று உண்பதற்காக அன்றிப் பொய்யாகப் பிச்சை கேட்டு மகளிர் தரும் உணவைக் கொள்ளாது நீ அவர்தம் அழகினைக் கவர்வது நீதியோ?

கு-ரை : சிரபுரமேயவனே! நிலையாப்பிச்சையாக ஐயம் ஏற்காது நலம் வவ்வுதியே என்கின்றது. முலை யாழ் கெழுவ - முல்லை யாழ் சுரம் ஒத்து ஒலிக்க. கெழும் என்பதும் பாடம். நிலையாப்பலி என்றது தாருகாவனத்து முனிவர்களின் ஆணவத்தையடக்க ஏற்றுக் கொண்ட பிச்சையேயன்றி நிலைத்ததன்று என்பது விளக்கிற்று.

Koviloor Digital Library

685. எருதேகொணர்கென் றேறியங்கை
யிடுதலை யேகலனாக்
கருதேர்மடவா ரையம்வவ்வாய்
கண்டுயில் வவ்வுதியே
ஒருதேர்கடாவி யாரமரு
ளொருபது தேர்தொலையப்
பொருதேர்வலவன் மேவியாண்ட
புறவமர் புண்ணியனே. 8

தலையே வடிவாய் (உடல் முதலியன இன்றி) உலகத்தையெல்லாம் தன்னாணையின் நடக்கச்செய்யும் சிலம்பன் என்னும் அசுரன், ராகு என்ற பெயர்தாங்கி வழிபட்ட சிரபுரம் என விளக்கியவாறு. தேவர்களுடன் கலந்து கரவாக அமுதுண்ட சிலம்பன் என்னும் அசுரனை மோகினியான திருமால் சட்டுவத்தால் வெட்ட, தலை மாத்திரமான ராகு இத்தலத்தில் பூசித்தான் என்பது வரலாறு.

8. பொ-ரை : ஒரு தேரைச் செலுத்திய அரிய போரில் பத்துத் தேர்களை அழியுமாறு சண்டையிடும் தேர் வல்லவன் ஆகிய சிபிச் சக்கரவர்த்தி வீற்றிருந்து அரசாண்ட சிறப்பினதும் அவனை வஞ்சித்துப் புறாவின் எடைக்கு எடை தசைகேட்ட பாவம் தீரத் தீக்கடவுள் வழிபட்டதுமான புறவம் என்னும் சீகாழிப் பதியில் விளங்கும் இறைவனே! தனது எருது ஊர்தியைக் கொணர்க என ஆணையிட்டு அதன்மிசை ஏறித் தனது அழகிய கையில் ஏந்திய பிரமகபாலத்தையே உண்கலனாகக் கொண்டு விரும்பும் அழகுடைய மகளிரிடும் பலியைக் கொள்ளாது அவர்களின் உறக்கம் கெடுமாறு விரகதாபம் செய்து வருதல் நீதியோ?

கு-ரை : இதுவும் புறவமர் புண்ணியனே மாதர் துயில் வவ்வியது ஏன் என்கின்றது. ஐயம் ஏற்பார் ஊர்தியேறிச் செல்லார் ஆகவும் எருதைக் கொணர்க, என்று ஆணையிட்டு அதில் ஏறி.

கருதேர் மடவார் - கருவைத்தேரும் மடவார்; காமினிகள். கருது ஏர் மடவார் எனப் பிரித்தலுமாம். ஒருதேரைச் செலுத்தி, பத்துத்தேரை வென்ற தேர்வல்லவனாகிய சிபியாண்ட புறவம் எனப் பெயர்க்காரணத்தைக் குறிப்பாக உணர்த்தியது. சிபியின் தசை எடைக்கு எடைபெற்ற தீக்கடவுளாகிய புறா அப்பாவம் போக வழிபட்ட தலமாதலின் புறவம் என்றாயிற்று என்பது வரலாறு.

Koviloor Digital Library

686. துவர்சேர்கலிங்கப் போர்வையாருந்
தூய்மை யிலாச்சமணுங்
கவர்செய்துழலக் கண்டவண்ணங்
காரிகை வார்குழலார்
அவர்பூம்பலியோ டையம்வவ்வா
யானலம் வவ்வுதியே
தவர்செய்நெடுவேற் சண்டனாளச்
சண்பை யமர்ந்தவனே. 9

687. நிழலான்மலிந்த கொன்றைசூடி
நீறுமெய் பூசிநல்ல
குழலார்மடவா ரையம்வவ்வாய்
கோல்வளை வவ்வுதியே
அழலாயுலகங் கவ்வைதீர
வைந்தலை நீண்முடிய
கழனாகரையன் காவலாகக்
காழி யமர்ந்தவனே. 10

9. பொ-ரை : உடலைத் துளைக்கும் நீண்ட வேலை உடைய இயமனை அடக்கி ஆளச் சண்பையில் எழுந்தருளிய இறைவரே! காவி நிறம் சேர்ந்த ஆடையைப் போர்த்த புத்தரும், தூய்மையற்ற சமணரும் மனம் திரிந்து உழலுமாறு செய்து, பிச்சையேற்கும் கோலத்தவராய் மகளிர் வாழும் இல்லங்களை அடைந்து, நீண்ட கூந்தலை உடைய அம் மகளிர் கண்ட அளவில் மனம் திரிந்து நிற்க, அவர்கள் இட வந்த இனிய உணவாகிய பிச்சையை ஏலாது அவர்தம் அழகினைக் கவர்ந்து செல்கின்றீரே; இது நீதியோ?

கு-ரை : புறச்சமயிகள் மனந்தேராது உழலச்செய்ததுபோல மகளிர் நலத்தையும் கொண்டனையே என்கின்றது. கலிங்கப் போர்வை-கலிங்கநாட்டில் நெய்தபோர்வை. கவர்செய்து-மனந் திரிந்து. காரிகை-அழகு. தவர்செய் நெடுவேல் சண்டன் ஆள- துளைக் கின்ற நீண்ட வேலை ஏந்திய யமனை அடக்கி ஆள. இது மார்க் கண்டேயர்க் காக யமனை உதைத்த வரலாற்றை உட்கொண்டது.

10. பொ-ரை : உலகம் அழலாக வெதும்பி வருத்திய துன்பம் தீருமாறு ஐந்து தலைகளையும் நீண்ட முடியையும் வீரக் கழலையும்

Koviloor Digital Library

688. கட்டார்துழாயன் றாமரையா
னென்றிவர் காண்பரிய
சிட்டார்பலிதேர்ந் தையம்வவ்வாய்
செய்கலை வவ்வுதியே
நட்டார்நடுவே நந்தனாள
நல்வினை யாலுயர்ந்த
கொட்டாறுடுத்த தண்வயல்சூழ்
கொச்சை யமர்ந்தவனே. 11

அணிந்த நாகங்களின் தலைவனாகிய காளிதன் என்னும் பாம்பு காவல் புரிந்த காழிப் பதியில் அமர்ந்த தலைவனே! ஒளி நிறைந்த கொன்றை மலர் மாலையைச் சூடி, திருமேனியில் நீற்றினைப் பூசிக் கொண்டு பிச்சையேற்பவர் போல மகளிர் வாழும் வீதிகளில் சென்று அழகிய கூந்தலினை உடைய மகளிர்தரும் பிச்சையை ஏலாது அவர்களை விரகதாபத்தினால் மெலியச் செய்து அவர்தம் திரண்ட வளையல்களை வவ்வுகின்றீரே; இது நீதியோ?

கு-ரை : காழியமர்ந்தவனே, வளைகவர்ந்தனையே என்கின்றது. கோல்-திரட்சி. அழலாய்-வெதும்பி. கவ்வை-துன்பம். ஐந்தலை நீள்முடிய கழல் நாக அரையன்-ஐந்து தலையோடும் முடியோடும் கூடிய வீரக்கழலை அணிந்த காளிதன் என்னும் பாம்பு.

11. பொ-ரை : ஆற்றின் நடுவே பராசரமுனிவன் மச்சகந்தியைக் கூடிய பழி போகும்படி; அம்முனிவன் செய்த பூசனையால், அம்முனிவர் அடையுமாறு அப்பெண்ணுக்கு மணத்தையும் நல்லொழுக்கத்தையும் அளித்து அம்முனிவனை வாழச் செய்த சிறப்பினதாகிய குளிர்ந்த வயல்களால் சூழப்பட்ட கொச்சைவயம் என்னும் இத்தலத்தில் எழுந்தருளிய இறைவனே! கட்டப்பட்ட துளசி மாலையை அணிந்த திருமால் நான்முகன் என்ற இவர்களாலும் காண்டற்கரிய மேன்மையனாகிய நீ பிச்சை ஏற்கச் சென்று மகளிர் தரும் பலியை ஏலாது அவர் தம் அழகிய ஆடைகளை வவ்வுதல் நீதியோ?

கு-ரை : திருமாலும் பிரமனும் காணுதற்கரிய சிட்டராய்ப் பலி கொள்ளாது கலைகொள்ளக் காரணம் ஏன் என்கின்றது. கட்டு ஆர் துழாயன்-கட்டுதல் பொருந்திய துளசிமாலையையுடைய திருமால். சிட்டார்-ஒழுங்கினையுடையவர். கலை-ஆடை. நட்டாறு என்பது நட்டார் என ஆயிற்று. நந்தன்-பிரமன் மகனாகிய பராசரன். ஆள - மச்சகந்தியைப் பெண்டாள. (அப்பழி போம்படி) நல்வினையால் -

Koviloor Digital Library

689. கடையார்கொடிநன் மாடவீதிக்
கழுமலவூர்க் கவுணி
நடையார்பனுவன் மாலையாக
ஞானசம் பந்தன்நல்ல
படையார்மழுவன் மேன்மொழிந்த
பல்பெயர்ப் பத்தும்வல்லார்க்
கடையாவினைகள் உலகில்நாளும்
அமருல காள்பவரே. 12

திருச்சிற்றம்பலம்

அவன் செய்த பூசையால். கொட்டு ஆறு உடுத்த-மயிர்ச்சாந்து போன்ற மணத்தையும், நல்லொழுக்கத்தையும் பொருந்தச்செய்த. உடுத்த கொச்சை எனக் கூட்டுக. இது கொச்சைவயம் என்றதன் காரணம் உணர்த்தியவாறு.

12. பொ-ரை : வாயில்களிற் பொருந்திய கொடிகளோடு கூடிய மாடவீடுகளை உடைய வீதிகள் சூழ்ந்த கழுமலம் என்னும் சீகாழிப் பதியில் கவுணியர் குலத்தில் தோன்றிய ஞானசம்பந்தன் சந்தநடைகளோடு கூடிய இலக்கிய மாலையாக மழுப்படையை உடைய சீகாழி இறைவர்மேற் பாடிய பல் பெயர்ப்பத்து என்னும் இத்திருப்பதிகத்தை ஓதி வழிபட வல்லவர்களை இவ்வுலகில் துன்புறுத்தும் வினைகள் ஒருநாளும் வந்து அடையா. மறுமையில் அவர்கள் அமரருலகினை ஆள்வர்.

கு-ரை : மேற்கூறிய கழுமலநகரின் பெயராகக் கூறிய பத்தையும் வல்லார்க்கு இவ்வுலகில் தீவினைபொருந்தா; தேவர் உலகினையும் ஆள்வர் எனப் பயன்கூறுகிறது. கடை-வாயில். கவுணி-கவுணிய கோத்திரத்து உதித்தவர். பல்பெயர்ப் பத்தும் - பத்தின் மேலும் பலவாகிய பெயர். அமரர் உலகு அமருலகாயிற்று.

சீகாழி: பல்பெயர்ப் பதிகங்கள்

பதிகம் 63 - எரியார் மழு , 90 - அரனை யுள்குவீர், 117 - காட தணிகலங், 127 - பிரமபுரத் துறை, 128 - ஒருரு வாயினை, 206 - பிரமனூர், 209 - விளங்கியசீர், 210 - பூமகனூர், 325 - சுரருலகு, 368 - வரமதே கொளா, 371 - உற்றுமை சேர்வது.

Koviloor Digital Library

64. திருப்பூவணம்

பதிக வரலாறு:

திருப்புத்தூரை வணங்கிப் பதிகம்பாடி எழுந்தருளும் பிள்ளையார், புற்றில்வாழ் அரவம்பூண்ட பெருமான் எழுந் தருளியுள்ள திருப்பூவணத்தைச் சேர்ந்தார். 'அறையார் புனலும்' என்னும் இப்பதிகத்தை யருளினார்.

பண்: தக்கேசி

பதிக எண்: 64

திருச்சிற்றம்பலம்

690. அறையார்புனலு மாமலரு
மாடரவார் சடைமேல்
குறையார்மதியுஞ் சூடிமாதோர்
கூறுடையா னிடமாம்
முறையார்முடிசேர் தென்னர்சேரர்
சோழர்கள்தாம் வணங்கும்
திறையாரொளிசேர் செம்மையோங்குந்
தென்றிருப் பூவணமே. 1

1. பொ-ரை : ஆரவாரித்து வரும் கங்கையும், ஆத்தி மலரும், ஆடும் பாம்பும் பொருந்திய சடையின் மேல், ஒரு கலையாய்க் குறைந்த பிறை மதியையும் சூடி மாதொர் பாகனாக விளங்கும் சிவ பிரான் எழுந்தருளிய இடம், நீதியோடு கூடியவராய் முடிசூடி ஆளும் பாண்டியர், சேரர், சோழர் ஆகிய மூவேந்தர்களும் வணங்குவதும், வையை ஆற்றின் அலைகள் வீசுவதும், புகழோடு கூடியதும், வயல் வளம் மிக்கதுமாகிய அழகிய திருப்பூவணமாகும்.

கு-ரை : புனலும், ஆத்திமலரும், மதியும் சூடிய உமையொரு பாகன் இடம் பூவணம் என்கின்றது. அறை - பாறை. ஆ - ஆச்சா (ஆத்தி.) குறையார்மதி - பிறைமதி. தென்னர் - பாண்டியர். திறை - கப்பம். செம்மை - ஒழுங்கு.

குருவருள் : 'முறையார் முடிசேர் தென்னர் சேரர் சோழர்கள் தாம் வணங்கும் திறையாரொளி சேர் செம்மை ஓங்கும் தென்திருப்

Koviloor Digital Library

691. மருவார்மதின்மூன் றொன்றவெய்து
மாமலையான் மடந்தை
ஒருபால்பாக மாகச்செய்த
வும்பர்பிரா னவனூர்
கருவார்சாலி யாலைமல்கிக்
கழன்மன்னர் காத்தளித்த
திருவான்மலிந்த சேடர்வாழுந்
தென்றிருப் பூவணமே. 2

692. போரார்மதமா வுரிவைபோர்த்துப்
பொடியணி மேனியனாய்க்
காரார்கடலி னஞ்சமுண்ட
கண்ணுதல் விண்ணவனூர்

பூவணமே' என்ற தொடரால் மூவேந்தரும் பூவணத்தில் ஒருங்கு வணங்கிய குறிப்பு இப்பாடலில் அமைந்துள்ளமையை, கண்டு மகிழலாம்.

2. பொ-ரை : பகைவர்களாகிய திரிபுர அசுரர் மதில்கள் மூன் றையும் ஒருசேர எய்து அழித்தோனும், மலையரையன் மகளாகிய பார்வதி தேவியை ஒருபால் கொண்டு தேவர்கள் தலைவனாக விளங்கு வோனும் ஆகிய சிவபிரானது ஊர்; கருக்கொண்ட நெற்பயிர்கள் கரும்புகள் ஆகியன நிறைந்ததும் வீரக் கழல் புனைந்த மன்னர்கள் காப்பாற்றிக் கொடுத்த செல்வ வளத்தால் சிறந்த மேலானவர்கள் வாழ் வதுமான அழகிய பூவண நகராகும்.

கு-ரை : திரிபுரம் எரித்துத் தேவியை ஒருபாகம் வைத்தவனூர் இது என்கின்றது. மருவார் - பகைவர். உம்பர்பிரான் - தேவதேவன். கருவார் சாலி - கருக்கொண்ட நெல். ஆலை - கரும்பு. திரு - செல்வம். சேடர்-பெருமையுடையவர்.

3. பொ-ரை :போர்ப் பயிற்சியுடைய மதம் பொருந்திய யானை யின் தோலை உரித்துப் போர்த்து, திருநீற்றுப் பொடி அணிந்த மேனிய னாய், கருநிறம் பொருந்திய கடலிடைத் தோன்றிய நஞ்சினை உண்டவ னாய், நுதல் விழி உடையவனாய் விளங்கும் சிவனது ஊர், நிலவுலகை வளம் செய்வதற்கு வந்த வையையாறு வாய்க்கால் வழியே பரப்பிப்

Koviloor Digital Library

பாரார்வைகைப் புனல்வாய்பரப்பிப்
பன்மணி பொன்கொழித்துச்
சீரார்வாரி சேரநின்ற
தென்றிருப் பூவணமே. 3

693. கடியாரலங்கற் கொன்றைசூடிக்
காதிலொர் வார்குழையன்
கொடியார்வெள்ளை யேறுகந்த
கோவணவன் னிடமாம்
படியார்கூடி நீடியோங்கும்
பல்புகழாற் பரவச்
செடியார்வைகை சூழநின்ற
தென்றிருப் பூவணமே. 4

பலவகை மணிகளையும் பொன்னையும் கொழித்து வளம் செய்யும் அழகிய திருப்பூவணமாகும்.

கு-ரை : யானையை யுரித்துப்போர்த்து, பொடியணிந்து, நஞ்சுண்டு விளங்கும் கண்ணுதற் பெருமானூர் இது என்கின்றது.

போர் ஆர் மதமா - சண்டைசெய்யும் மதயானை. உரிவை - தோல். கண் நுதல் - நெற்றிக்கண்ணை யுடையவன். பார் ஆர் - பூமியிற் பொருந்திய. வாய் - வாய்க்கால். வாரி - நீர்.

4. பொ-ரை : மணம் பொருந்திய கொன்றை மலர் மாலையைச் சூடி ஒரு காதில் நீண்ட குழை அணிந்தவனாய், வெண்மையான விடைக் கொடியைத் தனக்குரியதாகக் கொண்டவனாய், கோவணம் அணிந்தவனாய் விளங்கும் சிவபிரானது இடம், நிலவுலக மக்கள் ஒருங்கு கூடி நீண்டு விரிந்த தன் புகழைக் கூறி வணங்கப் புதர்கள் நிறைந்த வைகை யாறு சூழ்ந்துள்ள அழகிய திருப்பூவணமாகும்.

கு-ரை : கொன்றையணிந்து, காதில் குழைவிளங்க இடபக் கொடி ஏந்திய கோவணாண்டி இடம் இது என்கின்றது.

கடி - மணம். அலங்கல் - மாலை. படியார் - பூமியிலுள்ள மக்கள். செடி ஆர் வைகை - புதர் நிறைந்த வைகை.

Koviloor Digital Library

694. கூரார்வாளி சிலையிற்கோத்துக்
கொடிமதில் கூட்டழித்த
போரார்வில்லி மெல்லியலாளோர்
பான்மகிழ்ந் தானிடமாம்
ஆராவன்பிற் றென்னர்சேரர்
சோழர்கள் போற்றிசைப்பத்
தேரார்வீதி மாடநீடுந்
தென்றிருப் பூவணமே. 5

695. நன்றுதீதென் றொன்றிலாத
நான்மறை யோன்கழலே
சென்றுபேணி யேத்தநின்ற
தேவர்பிரா னிடமாம்
குன்றிலொன்றி யோங்கமல்கு
குளிர்பொழில் சூழ்மலர்மேல்
தென்றலொன்றி முன்றிலாருந்
தென்றிருப் பூவணமே. 6

5. பொ-ரை : கூர்மை பொருந்திய அம்பை வில்லில் பூட்டி, கொடிகள் கட்டிப் பறந்த மும்மதில்களின் கூட்டுக்களையும் ஒருசேர அழித்த போர்வல்ல வில் வீரனும், மெல்லியலாகிய உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டு மகிழ்பவனுமாகிய சிவபிரானது இடம், குன்றாத அன்போடு பாண்டியர் சேரர் சோழர் ஆகிய மூவேந்தர்கள் போற்றத் தேரோடும் திருவீதியையும் மாட வீடுகளையும் உடைய அழகிய திருப்பூவணமாகும்.

கு-ரை : திரிபுரம் எரித்த வில்லாளியாய் உமையொரு பாகங் கொண்டானிடம் இது என்கின்றது, சிலை - வில். கூட்டழித்த - ஒருசேர அழித்த. ஆரா அன்பில் - போதும் என்றமையாத அன்பொடு.

6. பொ-ரை : நன்மை தீமை என்பனவற்றுள் ஒன்றும் இல்லாதவனும், நான்கு வேதங்களை அருளியவனும், தேவர்களின் தலைவனுமான சிவபிரான் தன் திருவடிகளை அடைந்து அன்பர்கள் போற்றி அருள் பெறுமாறு நின்ற இடம், பொதிய மலையில் பொருந்தி அங்கு நிறைந்த ஓங்கிய குளிர் பொழில்களில் உள்ள மலர்களிற் படிந்து வந்து தென்றல் முன்றில்களில் தங்கி மகிழ்விக்கும் அழகிய திருப்பூவணமாகும்.

Koviloor Digital Library

696. பைவாயரவ மரையிற்சாத்திப்
பாரிடம் போற்றிசைப்ப
மெய்வாய்மேனி நீறுபூசி
யேறுகந் தானிடமாம்
கைவாழ்வளையார் மைந்தரோடுங்
கலவியி னானெருங்கிச்
செய்வார்தொழிலின் பாடலோவாத்
தென்றிருப் பூவணமே. 7

697. மாடவீதி மன்னிலங்கை
மன்னனை மாண்பழித்துக்
கூடவென்றி வாள்கொடுத்தாள்
கொள்கையி னார்க்கிடமாம்

கு-ரை : நல்லது தீது இரண்டையுங்கடந்த பெருமான், எல்லோரும் ஏத்தநின்ற பெருமான் இடம் இது என்கின்றது. நன்றும் தீதும் வினையான் வருவன ஆதலின் வினையிலியாகிய பெருமானுக்கு அவ்விரண்டும் இல்லையாயிற்று. குன்றில் ஒன்றி - மலைகளிற் பொருந்தி. முன்றில் - முன்வாயிலில்.

7. பொ-ரை : படம் பொருந்திய வாயினை உடைய பாம்பை இடையில் கட்டிக் கொண்டு, பூதகணங்கள் போற்றிப் பாட, மேனி முழுதும் மெய்மை வடிவான திருநீற்றைப் பூசி, விடையேற்றை ஊர்ந்து வரும் சிவபிரானது இடம், கைகளில் வளையல்களை அணிந்துள்ள இளமகளிர் தம் காதலர்களோடு புணர்ச்சி விருப்புடையராய் நெருங்கிச் செய்யப்படும் கலவி பற்றிய பாடல்களின் ஓசை நீங்காத அழகிய திருப்பூவணமாகும்.

கு-ரை : பாம்புடுத்துப் பூதம்போற்ற நீறுபூசி இடபமூர்ந்தவன் இடம் இது என்கின்றது. பை - படம். பாரிடம் - பூதம். கைவாழ் வளையார் - இளைய மகளிர்கள். கலவி - புணர்ச்சி. கலவிக் காலத்து நிகழ்த்தும் காதற்பாட்டு நீங்காத பூவணம் என்க.

8. பொ-ரை : மாடவீதிகள் நிலைபெற்ற இலங்கை மன்னன் இராவணன் பெருவீரன் என்று மக்கள் பாராட்டிய சிறப்பை அழித்து, அவன் பிழை உணர்ந்து பாடி வேண்டிய அளவில் உடன் வெற்றி நல்கும் வாளைக் கொடுத்து ஆளும் அருட்கொள்கையாளனாகிய சிவ

Koviloor Digital Library

பாடலோடு மாடலோங்கிப்
பன்மணி பொன்கொழித்து
ஓடிநீரால் வைகைசூழ
முயர்திருப் பூவணமே. 8

698. பொய்யாவேத நாவினானும்
பூமகள் காதலனும்
கையாற்றொழுது கழல்கள்போற்றக்
கனலெரி யானவனூர்
மையார்பொழிலின் வண்டுபாட
வைகைமணி கொழித்துச்
செய்யார்கமலந் தேனரும்புந்
தென்றிருப் பூவணமே. 9

பிரானுக்குரிய இடம், ஆடல் பாடல்களால் மிக்க சிறப்புடையதும், பல்வகை மணிகளையும் பொன்னையும் அடித்து ஓடிவரும் நீரோடு வைகையாறு சூழ்ந்ததுமான உயர்ந்த திருப்பூவணமாகும்.

கு-ரை : இராவணனை அடக்கி ஆண்டு, வாளும் அருள்செய்த மன்னர்க்கு இடம் பூவணம் என்கின்றது. மாண்பு - சிறப்பு.

9. பொ-ரை : என்றும் பொய்யாகாத வேதங்களை ஓதும் நாவினன் ஆகிய நான்முகனும், மலர்மகள் கணவனாகிய திருமாலும், தம் கைகளால் தன் திருவடிகளைத் தொழுது போற்ற, சிவந்த எரி உருவான சிவபிரானது ஊர், கருநிறம் பொருந்திய சோலைகளில் வண்டுகள் பாடுவதும், வைகை ஆறு மணி கொழித்து வளம் சேர்ப்பதும், சிவந்த தாமரை மலர்களில் தேன் அரும்பி நிற்பதுமான அழகிய திருப்பூவணமாகும்.

கு-ரை : அயனும் மாலும் அறியொண்ணாவகை அழலுருவானவனூர் இது என்கின்றது.

பொய்யா வேதம் - எக்காலத்தும் பொய்யாகாத வேதம். வேதத்தின் நித்யத்துவம் கூறியது. பொழிலில் வண்டு பாடச் செய்களிற் கமலம் தேனரும்பும் என்றது கன்று கத்தச் சுரக்கும் கறவைபோல வண்டுபாடக் கமலம் மலர்ந்து தேன்சுரக்கும் என்பதாம்.

Koviloor Digital Library

699. அலையார்புனலை நீத்தவருந்
தேரருமன்பு செய்யா
நிலையாவண்ண மாயம்வைத்த
நின்மலன் றன்னிடமாம்
மலைபோற்றுன்னி வென்றியோங்கு
மாளிகை சூழ்ந்தயலே
சிலையார்புரிசை பரிசுபண்ணுந்
தென்றிருப் பூவணமே. 10

700. திண்ணார்புரிசை மாடமோங்குந்
தென்றிருப் பூவணத்துப்
பெண்ணார்மேனி யெம்மிறையைப்
பேரிய லின்றமிழால்
நண்ணாருட்கக் காழிமல்கு
ஞானசம்பந்தன் சொன்ன
பண்ணார்பாடல் பத்தும்வல்லார்
பயில்வது வானிடையே. 11

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை : அலைகள் வீசும் நீரில் நீராடாது அதனைத் துறந்த சமணரும் புத்தரும் புண்ணியப் பேறு இன்மையால் அன்பு செய்து வழி பாட்டில் நிலைத்திராது அவர்கட்கு மாயத்தை வைத்த குற்றமற்ற சிவ பிரானுக்குரிய இடம், வெற்றி மிக்க மாளிகைகள் மலைபோல் நெருங்கி அமைய அவற்றைச் சூழ்ந்து கருங்கல்லால் ஆகிய மதில்கள் அழகு செய்யும் அழகிய திருப்பூவணமாகும்.

கு-ரை : புத்தர் சமணர் அன்புசெய்து நிலையாதவண்ணம் அவர்கட்கு மாயையைக்கூட்டிய நின்மலன் இடம் இது என்கின்றது. புனலை நீத்தவர் - நீராடாதே அதனை விலக்கிய சமணர். தேரர் - புத்தர். துன்னி - நெருங்கி. சிலையார் புரிசை - மலையை ஒத்த மதில். பரிசு - அழகு.

11. பொ-ரை : வலிமை பொருந்திய மதில்களும் மாடவீடுகளும் நிறைந்த அழகிய திருப்பூவணத்தில் பெண்ணொரு பாகனாம் திரு மேனியோடு விளங்கும் எம் தலைவனாகிய சிவபிரானைப் பெருமை

Koviloor Digital Library

பொருந்திய இனிய தமிழால் பகைவராய புறச் சமயத்தவர் அஞ்சுமாறு சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன் சொல்லிய இவ்விசைத் தமிழ்ப் பாடல்கள் பத்தினையும் ஓத வல்லவர் வாழ்வது வான் உலகமாகும்.

கு-ரை : இந்தப் பண்ணார் பாடல் வல்லார் வானுலகிற் பயில் வார் என்கின்றது. திண் - வலிமை. நண்ணார் - பகைவர். உட்க - அஞ்ச.

திருஞானசம்பந்தர் புராணம்

பற்றார்தம் புரங்கள்மலைச் சிலையால் செற்ற
 பரமனார் திருப்புத்தூர் பணிந்து போந்து
புற்றாரும் பணிபூண்ட புனித னார்தம்
 பூவணத்தைப் புக்கிறைஞ்சிப் புகழ்ந்து பாடிக்
கற்றார்கள் தொழுதேத்துங் கானப் பேரும்
 கைதொழுது தமிழ்பாடிச் சுழியல் போற்றிக்
குற்றாலங் குறும்பலாக் கும்பிட் டேத்திக்
 கூற்றுதைத்தார் நெல்வேலி குறுகி னாரே.

- சேக்கிழார்.

ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்

அறிவாகி இன்பஞ்செய் தமிழ்வாதில் வென்றந்த
 அமணான வன்குண்டர் கழுவேற முன்கண்ட
செறிமாட வண்சண்பை நகராளி என்தந்தை
 திருஞான சம்பந்தன் அணிநீடு திண்குன்றில்
நெறியால மண்டுன்றி முனைநாள்சி னங்கொண்டு
 நிறைவார் புனந்தின்று மகன்மேல் வருந்துங்கள்
வெறியார் மதந்தங்கு கதவா ரணங்கொன்ற
 வெகுளாத நஞ்சிந்தை விறலான் உளன்பண்டே.

- நம்பியாண்டார் நம்பி.

Koviloor Digital Library

65. காவிரிப்பூம்பட்டினத்துத் திருப்பல்லவனீச்சரம்

பதிக வரலாறு:

திருவலம்புரத்தை வணங்கித் திருச்சாய்க்காடு செல்லத் திருவுளம்பற்றிய பிள்ளையார், வழியில் பல்லவனீச்சரத்தை அடைந்தார். அங்கு எழுந்தருளியுள்ள பன்னகப் பூணினாரைப் பணிந்து போற்றி 'அடையார்தம் புரங்கள் மூன்றும்' என்னும் இப்பதிகத்தை அருளிச்செய்தார்.

பண்: தக்கேசி

பதிக எண்: 65

திருச்சிற்றம்பலம்

701. அடையார்தம் புரங்கண்மூன்று
மாரழலில் லழுந்த
விடையார்மேனி யராய்ச்சீறும்
வித்தகர் மேயவிடங்
கடையார்மாட நீடியெங்கும்
கங்குல் புறந்தடவப்
படையார்புரிசைப் பட்டினஞ்சேர்
பல்லவ னீச்சரமே. 1

1. பொ-ரை : பகைவராய அசுரர்களின் திரிபுரங்கள் தாங்கு தற்கரிய அழலில் அழுந்துமாறு விடைமிசை ஏறிவரும் திருமேனிய ராய்ச் சென்று சினந்த வித்தகராகிய சிவபிரான் மேவிய இடம், வாயில் களோடு கூடிய மாடவீடுகள் எங்கும் உயர்ந்து விளங்குவதும், வான வெளியைத் தடவும் மதில்களால் சூழப்பட்டதும் ஆகிய காவிரிப்பூம் பட்டினத்தைச் சேர்ந்த திருப்பல்லவனீச்சரமாகும்.

கு-ரை : திரிபுரங்கள் தீயிலழுந்தச் சீறும் வித்தகர் இடம் பல்லவ னீச்சரம் என்கின்றது. அடையார் - பகைவர். விடையார் மேனியர் - இடபத்தில் ஆரோகணித்த திருமேனியார். கங்குல் - ஆகாயம். படை- ஆயுதம் பல அடுக்கு.

Koviloor Digital Library

702. எண்ணாரெயில்கண் மூன்றுஞ்சீறு
மெந்தைபிரா னிமையோர்
கண்ணாயுலகங் காக்கநின்ற
கண்ணுதல் நண்ணுமிடம்
மண்ணார்சோலைக் கோலவண்டு
வைகலுந் தேனருந்திப்
பண்ணார்செய்யும் பட்டினத்துப்
பல்லவ னீச்சரமே. 2

703. மங்கையங்கோர் பாகமாக
வாணில வார்சடைமேற்
கங்கையங்கே வாழவைத்த
கள்வ னிருந்தவிடம்
பொங்கயஞ்சேர் புணரியோத
மீதுயர் பொய்கையின்மேற்
பங்கயஞ்சேர் பட்டினத்துப்
பல்லவ னீச்சரமே. 3

2. பொ-ரை : பகைவராய அசுரர்களின் கோட்டைகளாய திரி புரங்களைச் சினந்தழித்த எந்தையாகிய பெருமானும், தேவர்களின் கண்களாய் விளங்குவோனும், இவ்வுலகைக் காக்கின்ற கண்ணுதலும் ஆகிய சிவபிரான் மேவிய இடம், நன்கு அமைக்கப்பட்ட சோலை களில் அழகிய வண்டுகள் நாள்தோறும் தேனுண்டு இசை பாடும் காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரமாகும்.

கு-ரை : முப்புரஞ்சீறிய முதல்வன் தேவர்கட்குக் கண்ணாய் உலகம்காக்கும் கண்ணுதலும் ஆவான்; அவனது இடம் இது என்கின்றது. எண்ணார் - பகைவர். கண்ணுதல் - சிவன். மண் - பூமி. மண்ணுதல் - உண்டாக்குதல். பண் ஆர் செய்யும் - பாடும்.

3. பொ-ரை : உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு ஒளி பொருந்திய பிறை தங்கிய சடையின்மேல் கங்கை நங்கையையும் வாழ வைத்துள்ள கள்வனாகிய சிவபிரான் எழுந்தருளிய இடம், மிக்க ஆழமான கடலினது வெள்ள நீரால் தானும்மேலே உயர்ந்துள்ள நீர் நிலையாகிய பொய்கைகளில் தாமரை மலர்கள் பூத்துள்ள காவிரிப் பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரமாகும்.

Koviloor Digital Library

704. தாரார்கொன்றை பொன்றயங்கச்
சாத்திய மார்பகலம்
நீரார்நீறு சாந்தம்வைத்த
நின்மலன் மன்னுமிடம்
போரார்வேற்கண் மாதர்மைந்தர்
புக்கிசை பாடலினாற்
பாரார்கின்ற பட்டினத்துப்
பல்லவ னீச்சரமே. 4

705. மைசேர்கண்ட ரண்டவாணர்
வானவ ருந்துதிப்ப
மெய்சேர்பொடிய ரடியாரேத்த
மேவி யிருந்தவிடங்

கு-ரை : மங்கை ஓர்பாகத்து இருக்கவும் சடைமேற் கங்கையையும் வைத்த கள்வனிடம் இது என்கிறது. வாள் நிலவு - ஒளி பொருந்திய நிலவு. பொங்கு அயஞ்சேர் புணரி - மிகுந்த பள்ளம் பொருந்திய கடல். அயம் - பள்ளம். 'அயமிழியருவி' என்னுங்கலியிலும் இப் பொருட்டாதல் தெளிக. பங்கயம் - தாமரை.

4. பொ-ரை : மாலையாகக் கட்டிய கொன்றை மலர்கள் பொன் போல் விளங்குமாறு சூட்டியுள்ள மார்பின் பரப்பில், நீரில் குழைத்த சாம்பலைச் சந்தனத்தைப் போலப் பூசியுள்ள குற்றமற்ற சிவபிரான் எழுந்தருளிய இடம், போர் செய்யத் தகுதியான கூரிய வேல் போலும் கண்களையுடைய மாதர்களும் இளைஞர்களும் கூடி இசை பாடுதலால் அதனைக் கேட்க மக்கள் வெள்ளம்போல் திரண்டுள்ள காவிரிப் பூம் பட்டினத்துப் பல்லவனீச்சரமாகும்.

கு-ரை : கொன்றைசாத்திய மார்பில் நீறும் சாந்தும் சாத்திய நிமலனிடம், மாதரும் மைந்தரும் பாடலினால் பூமிக்கண் இன்பம் நுகரும் தலமாகியது இது என்கின்றது. தாரார் கொன்றை - மாலையாகவே பூக்கும் கொன்றை. போரார் வேற்கண்-போரில் பொருந்திய வேல் போலும் கண்.

5. பொ-ரை : கருமை நிறம் பொருந்திய கண்டத்தினை உடையவரும், மண்ணக மக்களும் விண்ணகத் தேவரும் துதிக்க மேனிமிசைத் திருநீறு பூசியவனும் ஆகிய நிமலன், அடியவர் புகழ மேவியிருந்தருளும் இடம், கைகளில் மிகுதியான வளையல்களை அணிந்தபாம்பின் படம்

Koviloor Digital Library

கைசேர்வளையார் விழைவினோடு
காதன்மை யாற்கழலே
பைசேரரவா ரல்குலார்சேர்
பல்லவ னீச்சரமே. 5

706. குழலினோசை வீணைமொந்தை
கொட்ட முழவதிரக்
கழலினோசை யார்க்கவாடுங்
கடவு ளிருந்தவிடஞ்
சுழியிலாருங் கடலிலோதந்
தெண்டிரை மொண்டெறியப்
பழியிலார்கள் பயில்புகாரிற்
பல்லவ னீச்சரமே. 6

போன்ற அல்குலை உடைய இளமகளிர் விழைவோடும் காதலோடும் திருவடிகளை வழிபடச் சேர்கின்ற திருப்பல்லவனீச்சரமாகும்.

கு-ரை : நீலகண்டரும், நீறு பூசியவருமாகிய சிவபெருமான் அடியார்கள் ஏத்த அமர்ந்திருந்த இடம் இத்தலம் என்கின்றது. மை - விடம். மேவி - விரும்பி. கைசேர் வளையாராகிய அல்குலார், ஆசையோடும் காதலோடும் கழலைச்சேரும் பல்லவனீச்சரம் எனக் கூட்டிப் பொருள் காண்க. விழைவு - பற்று. காதல் - பற்றுமுற்றி இன்றியமையாத் தன்மையால் எழுந்த விருப்புள்ளம். பை - படம்.

6. பொ-ரை : குழலோசைக்கு ஏற்ப வீணை, மொந்தை ஆகியன முழங்கவும், முழவு ஒலிக்கவும், காலில் அணிந்துள்ள வீரக்கழல் நடனத்துக்கு ஏற்பச் சதங்கை போல இசைக்கவும் ஆடும் கடவுளாகிய சிவபிரான் எழுந்தருளிய இடம், சுழிகள் பொருந்திய கடலில் காவிரி வெள்ளநீர் தெளிந்த நீரை முகந்து எறியுமாறு விளங்குவதும், பழியற்ற நன்மக்கள் வாழ்வதுமான புகார் நகரிலுள்ள பல்லவனீச்சரமாகும்.

கு-ரை : குழல் முதலிய வாத்தியங்கள் ஒலிக்க ஆடுங்கடவுள் அமர்ந்த இடம் இத்தலம் என்கின்றது.

மொந்தை என்பது ஒருவகைப் பறையாதலின் கொட்ட என்றார். பயில் புகார் - பழகுகின்ற காவிரிப் பூம்பட்டினம்.

Koviloor Digital Library

707. வெந்தலாய வேந்தன்வேள்வி
வேரறச்சாடி விண்ணோர்
வந்தெலாமுன் பேணநின்ற
மைந்தன் மகிழ்ந்தவிடம்
மந்தலாய மல்லிகையும்
புன்னைவளர் குரவின்
பந்தலாரும் பட்டினத்துப்
பல்லவ னீச்சரமே. 7

708. தேரரக்கன் மால்வரையைத்
தெற்றி யெடுக்கவவன்
றாரரக்குந் திண்முடிக
ளூன்றிய சங்கரனூர்
காரரக்குங் கடல்கிளர்ந்த
காலமெலா முணரப்
பாரரக்கம் பயில்புகாரிற்
பல்லவ னீச்சரமே. 8

7. பொ-ரை : தகுதி இல்லாத மிக்க கூட்டத்தை உடைய தக்கன் என்னும் வேந்தன் செய்த வேள்வியை அடியோடு அழித்துத் தேவர்கள் எல்லோரும் வந்து தன்னை விரும்பி வழிபட நின்ற பெருவீரனாகிய சிவபிரானது இடம், மென்மையான மல்லிகை, வளர்ந்து பரவியுள்ள புன்னை குராமரம் ஆகியவற்றில் படர்ந்துள்ள, காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரமாகும்.

கு-ரை : தக்கன் யாகத்தை அழித்துத் தேவரெல்லாரும் வழிபட நின்ற இறைவனது இடம் இத்தலம் என்கின்றது. மந்தல் - மென்மை.

8. பொ-ரை : சிறந்த தேரை உடைய இராவணன் பெருமை மிக்க கயிலை மலையைக் கைகளைப்பின்னி அகழ்ந்து எடுக்க, மாலைகள் அழுத்தும் அவனது திண்ணிய தலைகள் பத்தையும் கால் விரலால் ஊன்றி நெரித்த சங்கரனது ஊர், மேகங்கள் வந்து அழுந்தி முகக்கும் கடல், கிளர்ந்து எழும் காலங்களிலும் அழியாது உணரப்படும் சிறப்பினதும், மக்கள் அக்குமணிமாலை பூண்டு போற்றி வாழும் பெருமையுடையதுமாகிய, புகார் நகரைச் சேர்ந்த பல்லவனீச்சரமாகும்.

Koviloor Digital Library

709. அங்கமாறும் வேதநான்கு
மோதுமய னெடுமால்
தங்கணாலு நேடநின்ற
சங்கரன் றங்குமிடம்
வங்கமாரு முத்தமிப்பி
வார்கட லூடலைப்பப்
பங்கமில்லார் பயில்புகாரிற்
பல்லவ னீச்சரமே. 9

710. உண்டுடுக்கை யின்றியேநின்
றூர்நக வேதிரிவார்
கண்டுடுக்கை மெய்யிற்போர்த்தார்
கண்டறி யாதவிடந்

கு-ரை : இராவணன் முடிகள்நெரியத் தாளூன்றிய சங்கரன் ஊர் இத்தலம் என்கின்றது. தெற்றி எடுக்க - கைகளைப் பின்னி எடுக்க. தார் அரக்கும் - மாலைகள் அழுத்துகின்ற, அரக்குதல் - பதித்தல். கார் அரக்கும் - மேகங்கள் முகக்கும். பாரா அக்கம் பயில் புகார் - மக்கள் உருத்திராக்கங்களைப் பயில்கின்ற காவிரிப்பூம் பட்டினம்.

9. பொ-ரை : ஆறு அங்கங்களையும், நான்கு வேதங்களையும், முறையே ஓதும் பிரமனும், திருமாலும் தம் கண்களால் தேடுமாறு உயர்ந்து நின்ற சங்கரன் தங்கும் இடம், மரக்கலங்களை உடைய கடல் முத்துக்களையும் சங்கங்களையும் அலைக்கரங்களால் அலைத்துத் தருவதும், குற்றமற்றோர் வாழ்வதுமாய புகாரில் அமைந்துள்ள பல்ல வனீச்சரம் ஆகும்.

கு-ரை : வேதனும் நெடுமாலும் கண்ணால் தேடநின்ற பெரு மான் உறையுமிடம் இது என்கின்றது. கண்ணாலும் என்ற உம்மை கருத் தால் தேட வேண்டியதை அவர்கள் அறியாமையால் கண்ணால்தேட, அதற்கும் வெளிப்பட்டு நின்ற இறைவன் என உயர்வைச் சிறப்பித்து நின்றது. வங்கம் - கப்பல்.

10. பொ-ரை : அளவுக்கு மீறி உண்டு ஆடையின்றி ஊரார் சிரிக் கத் திரியும் சமணர்களும், அவர்களைக் கண்டு தாமும் அவ்வாறு திரி யாது ஆடையை மெய்யில் போர்த்து உழலும் புத்தர்களும் கண்டு அறியாத இடம், தண்டு, உடுக்கை, தாளம், தக்கை இவை பொருந்த

Koviloor Digital Library

தண்டுடுக்கை தாளந்தக்கை
சார நடம்பயில்வார்
பண்டிடுக்கண் டீரநல்கும்
பல்லவ னீச்சரமே. 10

711. பத்தரேத்தும் பட்டினத்துப்
பல்லவ னீச்சரத்தெம்
அத்தன்றன்னை யணிகொள்காழி
ஞானசம் பந்தன்சொற்
சித்தஞ்சேரச் செப்புமாந்தர்
தீவினை நோயிலராய்
ஒத்தமைந்த வும்பர்வானி
லுயர்வினொ டோங்குவரே. 11

திருச்சிற்றம்பலம்

நடனம் புரிபவராய், அடியவர் இடுக்கண்களைப் பண்டு முதல் தீர்த்தருளிவரும் பரமனார் எழுந்தருளிய பல்லவனீச்சரமாகும்.

கு-ரை : நிறையத்தின்று ஆடையின்றியே திரியும் சமணரும், ஆடையைப் போர்த்துத் திரியும் புத்தரும் கண்டறியாத இடம் இது என்கின்றது. முன்னிரண்டடியிலுள்ள உடுக்கை என்பது ஆடை என்ற பொருளிலும், மூன்றாமடியில் உள்ள உடுக்கை என்பது வாத்தியம் என்னும் பொருளிலும் வந்துள்ளன. இடுக்கண் - துன்பம்.

11. பொ-ரை : பக்தர்கள் போற்றும் காவிரிப்பூம்பட்டினத்துப் பல்லவனீச்சரத்தில் விளங்கும் எம் தலைவனாகிய இறைவனை அழகிய சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன் பாடிய இப்பதிகச் செழுந்தமிழை மனம் ஒன்றிச் சொல்லி வழிப்டும் மக்கள், தீ வினையும் நோயும் இல்லாதவராய், அமைந்த ஒப்புடையவர் என்று கூறத் தேவர் உலகில் உயர்வோடு ஓங்கி வாழ்வர்.

கு-ரை : ஒத்தமைந்த - தம் இயல்புகளுக்கு ஏற்ப அமைந்த. சம்பந்தன் பல்லவனீச்சரத்துப் பல்லவனநாதரைத் தோத்திரித்த இப் பாடல் பத்தையும் மனம் ஊன்றிச் சொல்லும் மக்கள் தீவினையும் நோயும் இலராய் வானுலகில் வாழ்வார் என்கின்றது.

Koviloor Digital Library

66. திருச்சண்பைநகர்

பண்: தக்கேசி

பதிக எண்: 66

திருச்சிற்றம்பலம்

712. பங்கமேறு மதிசேர்சடையார்
விடையார் பலவேதம்
அங்கமாறு மறைநான்கவையு
மானார் மீனாரும்
வங்கமேவு கடல்வாழ்பரதர்
மனைக்கே நுனைமூக்கின்
சங்கமேறி முத்தமீனுஞ்
சண்பை நகராரே. 1

713. சூதகஞ்சேர் கொங்கையாளோர்
பங்கர் சுடர்க்கமலப்
போதகஞ்சேர் புண்ணியனார்
பூத கணநாதர்

1. பொ-ரை : மீன்கள் நிறைந்ததும், கப்பல்களை உடையதும் ஆன கடலிடையே வாழும் பரதவர்கள் வீட்டு முற்றங்களில் கூரிய மூக்கினை உடைய சங்குகள் முத்துக்களை ஈனுகின்ற கடற்கரை ஊராகிய சண்பை நகரில் மேவிய இறைவர் கலை குறைந்த பிறை மதி சேர்ந்த சடையினர். விடைஊர்தியர், பலவாய் விரிந்த நான்கு வேதங்களாகவும் ஆறு அங்கங்களாகவும் விளங்குபவர்.

கு-ரை : கூன்பிறையணிந்த சடையாரும், விடையாரும், வேதம் அங்கம் ஆனாரும் சண்பைநகரார் என்கின்றது. பங்கம் - கூனல்; குற்றம் என்பாரும் உளர். சிவன்சடை சேரத்தகும் பிறைக்குக் குற்றமின்மை தெளிவு. வங்கம் -தோணி. பரதர் - செம்படவர். நுனை மூக்கின் சங்கம் - கூரிய மூக்கினையுடைய சங்குகள். கடல் வாழ் சங்கு பரதர் மனையேறி முத்தமீனும் என்றது பிறவிக் கடலில் ஆழ்வாரும் வினைநீங்கும் காலம்வரின் சண்பைநகர் சார்ந்து பேரின்பம் எய்துவர் என்று குறிப்பித்தவாறு.

2. பொ-ரை : வானகத்தே திரிந்து வாழும் சாதகப் பறவைகள் உண்ணுமாறு மேன்மை பொருந்திய மேகங்கள் பெய்த மழை நீர்

Koviloor Digital Library

மேதகஞ்சேர் மேகமந்தண்
சோலையில் விண்ணார்ந்த
சாதகஞ்சேர் பாளைநீர்சேர்
சண்பை நகராரே. 2

714. மகரத்தாடு கொடியோனுடலம்
பொடிசெய் தவனுடைய
நிகரொப்பில்லாத் தேவிக்கருள்செய்
நீல கண்டனார்
பகரத்தாரா வன்னம்பகன்றில்
பாதம் பணிந்தேத்தத்
தகரப்புன்னை தாழைப்பொழில்சேர்
சண்பை நகராரே. 3

அழகிய குளிர்ந்த சோலைகளில் விளங்கும் தெங்கு கமுகு இவற்றின் பாளைகளில் சேரும் சண்பை நகர் இறைவர், சூது ஆடு கருவி போன்ற தனபாரங்களை உடைய உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டவர். ஒளி பொருந்திய தாமரை மலரைச் சூடிய புண்ணிய வடிவினர். பூதகணங்களின் தலைவர்.

கு-ரை : உமையொருபாகர், செங்கமலப்போதில் வீற்றிருக்கும் புண்ணியனார் சண்பையார் என்கின்றது. சூதகம் சேர்- சூதாடுங் காயை ஒத்த. பங்கர்-பாகத்தையுடையவர். சுடர் கமலப் போது அகஞ்சேர்- ஒளிவிடுகின்ற செந்தாமரையில் எழுந்தருளியுள்ள. மேதகம் - மேன்மை. விண்ணார்ந்த-மேகநீரையுண்ட. சாதகம் -சாதகப்புள். பாளை நீர்சேர்-தென்னை கமுகு முதலியவற்றின் பாளைகளில் தேன் சேர்ந்த.

3. பொ-ரை : எல்லோரும் புகழத்தாரா அன்னம் அன்றில் முதலிய பறவைகள் தம் திருவடிகளை வணங்கிப் போற்றுமாறு தகரம் புன்னை தாழை முதலிய மரங்களின் பொழில்கள் சூழ்ந்த சண்பை நகரில் விளங்கும் இறைவர், மகர மீன் வடிவு எழுதப்பட்டு ஆடும் கொடியை உடைய மன்மதனது உடலை நீங்குமாறு செய்து, அழகில் தன்னொப்பில்லாத அவனுடைய மனைவி வேண்ட அவள் கண்களுக்கு மட்டும் மன்மதனைப் புலனாகுமாறு அருள் செய்த நீலகண்டர் ஆவார்.

Koviloor Digital Library

715. மொய்வல்லசுரர் தேவர்கடைந்த
முழுநஞ் சதுவுண்ட
தெய்வர்செய்ய வுருவர்கரிய
கண்டர் திகழ்சுத்திக்
கையர்கட்டங் கத்தர்கரியி
னுரியர் காதலாற்
சைவர்பாசு பதர்கள்வணங்குஞ்
சண்பை நகராரே. 4

716. கலமார்கடலுள் விடமுண்டமரர்க்
கமுத மருள்செய்த
குலமார்கயிலைக் குன்றதுடைய
கொல்லை யெருதேறி

கு-ரை : மன்மதனை எரித்து, அவன் மனைவியாகிய இரதிக்கு அருள் செய்தவன் சண்பையான் என்கின்றது. மகரத்து ஆடு கொடியோன் - மகர மீன் எழுதிய வெற்றி பொருந்திய கொடியுடையோன். நிகர் ஒப்பு: ஒருபொருட் பன்மொழி. தேவி என்றது இரதியை. அவளுக்கு மட்டும் மன்மதனை எழுப்பித் தந்ததை உணர்த்துவது. தாரா-சிறுநாரை. பகன்றில்- அன்றில். தகரப்புன்னை-தகரமும் புன்னையும்.

4. பொ-ரை : அன்போடு சைவர்களும் பாசுபதர்களும் வழிபடும் சண்பை நகர் இறைவர். வலிமை செறிந்த அசுரர்களும் தேவர்களும் கடலைக் கடைந்தபோது எழுந்த நஞ்சு முழுவதையும் உண்டருளிய தெய்வமாவார். அவர் சிவந்த திருமேனி உடையவர். கருநிறம் பொருந்திய கண்டத்தினர். சுத்தியைக் கொண்டகையினர். மழுவினர்-யானைத் தோலைப் போர்த்தியவர்.

கு-ரை : நஞ்சமுது செய்த தெய்வர், செய்யர், கண்டங்கரியர், சுத்திக்கையர், மழுப்படையர் சண்பைநகரார் என அடையாளம் அறிவிக்கின்றது. கட்டங்கம்-மழு. சுத்தி - திருநீறு கொடுப்பதற்குத் தலையோட்டினால் இப்பிவடிவமாகச் செய்யப்பட்டது.

5. பொ-ரை: மக்கட்கு நன்மை தரும் மரமாகிய தென்னையிலிருந்து வெண்மை நிறத்தோடு வெளிவரும் மணம் மிக்க பாளை கபடம் மிக்கயானையின் மருப்புப் போலத் தோன்றும் சோலை வளம்

Koviloor Digital Library

நலமார்வெள்ளை நாளிகேரம்
விரியா நறும்பாளை
சலமார்கரியின் மருப்புக்காட்டுஞ்
சண்பை நகராரே. 5

717. மாகரஞ்சே ரத்தியின்றோல்
போர்த்து மெய்ம்மாலான
சூகரஞ்சே ரெயிறுபூண்ட
சோதியன் மேதக்க
ஆகரஞ்சே ரிப்பிமுத்தை
யந்தண் வயலுக்கே
சாகரஞ்சேர் திரைகளுந்துஞ்
சண்பை நகராரே. 6

மிக்க சண்பைநகர் இறைவர் மரக்கலங்கள் நிறைந்த கடலிடையே தோன்றிய விடத்தை உண்டு அமரர்கட்கு அமுதம் அருள் செய்தவர். மலைக் குலங்களில் மேம்பட்ட கயிலை மலைக்கு உரியவர். முல்லை நிலத்து ஆனேற்றை ஊர்ந்து வருபவர்.

கு-ரை : தான் நஞ்சுண்டு அமரர்க்கு அமுதம் அருள் செய்தவர் சண்பையார் என்கின்றது. கொல்லை எருது - முல்லை நிலத்து இடபம். நாளிகேரம் - தென்னை. நாளிகேரம் வெள்ளை விரியா நறும் பாளை கரியின் மருப்புக்காட்டும் எனக்கூட்டுக. கரியின் மருப்பு - யானைக் கொம்பு. சலம் - வஞ்சனை. யானைக்கபடம் என்பது வழக்காதலின் சலமார் யானை என்றார்.

6. பொ-ரை : கடலில் வாழும் சிப்பிகள் தந்த முத்துக்களை அழ கியதாய்க் குளிர்ந்த வயல்களுக்குக் கடல் அலைகள் உந்தி வந்து சேர்க் கும் சண்பை நகர் இறைவன் நீண்ட கையினை உடைய யானையின் தோலை உரித்துப் போர்த்துள்ள திருமேனியில் திருமாலின் பத்து அவதாரங்களில் ஒன்றான பன்றியின் பல்லை அணிகலனாகப் பூண்ட ஒளி வடிவினன்.

கு-ரை : யானைத் தோலைப் போர்த்துப் பன்றிக் கொம்பை அணிந்த சோதியான் சண்பையான் என்கின்றது, மா கரம் - பெரிய கை. அத்தி - யானை. சூகரம் - பன்றி. ஆகரம் - கடல். திரைகள் முத்தை வயலுக்கே உந்தும் சண்பை என்க.

Koviloor Digital Library

* * * * * * * * 7

718. இருளைப்புரையு நிறத்திலரக்கன்
றனையீ டழிவித்து
அருளைச்செய்யு மம்மானேரா
ரந்தண் கந்தத்தின்
மருளைச்சுரும்பு பாடியளக்கர்
வரையார் திரைக்கையாற்
றரளத்தோடு பவளமீனுஞ்
சண்பை நகராரே. 8

719. மண்டான்முழுது முண்டமாலு
மலர்மிசை மேலயனும்
எண்தானறியா வண்ணநின்ற
விறைவன் மறையோதி
தண்டார்குவளைக் கள்ளருந்தித்
தாம்மரைத் தாதின்மேற்
பண்டான்கொண்டு வண்டுபாடுஞ்
சண்பை நகராரே. 9

7. * * * * * * * *

8. பொ-ரை : அழகிய மணத்தோடு மருள் என்னும் பண்ணை வண்டுகள் பாட, கடல் மலை போன்ற அலைக் கைகளால் முத்துக்களை யும் பவளங்களையும் கொணர்ந்து சேர்க்கும் சண்பைநகர் இறைவன் இருள் போன்ற கரிய நிறத்தினன் ஆகிய இராவணனின் வீரத்தை அழித்து அவன் உணர்ந்து வருந்த அருள் செய்த தலைவன்.

கு-ரை : இராவணனை ஈடழித்து, ஈடேற்றும் அம்மான் இவர் என்கின்றது. ஈடு - பெருமை. ஏரார் - அழகிய. மருளைச்சுரும்பு பாடி - மருள் என்னும் பண்ணை வண்டு பாடி. அளக்கர் - கடல். வரை ஆர் திரை - மலையொத்த அலை. தரளம் - முத்து.

9. பொ-ரை : தண்டிலே மலர்ந்த குவளை மலர்களின் தேனை உண்டு தாமரை மலர்களில் நிறைந்துள்ள மகரந்தங்களில் தங்கி வண் டுகள் பண்பாடும் சண்பை நகர் இறைவன் உலகங்கள் முழுவதையும் உண்ட திருமால் தாமரை மலர் மேல் விளங்கும் நான்முகன் ஆகியோர்

Koviloor Digital Library

720. போதியாரும் பிண்டியாரும்
புகழல சொன்னாலும்
நீதியாகக் கொண்டருளு
நிமல னிருநான்கின்
மாதிசித்தர் மாமறையின்
மன்னிய தொன்னூலர்
சாதிகீத வர்த்தமானர்
சண்பை நகராரே. 10

721. வந்தியோடு பூசையல்லாப்
போழ்தின் மறைபேசிச்
சந்திபோதிற் சமாதிசெய்யுஞ்
சண்பை நகர்மேய

மனத்தாலும் அறிய ஒண்ணாதவாறு நின்றவன் வேதங்களை ஓதி வெளிப்படுத்தியவன்.

கு-ரை : மண்ணுண்ட மாலும் மலரோனும் அறியாவண்ணம் நின்ற இறையோன் சண்பைநகரார் என்கின்றது. எண் தான் அறியா - எள்ளளவும் அறியாத. வண்டு குவளைத் தேனை அருந்தித் தாமரை யின் மகரந்தத்தை உண்டு பாடும் சண்பைநகர் என்க.

10. பொ-ரை : அணிமா முதலிய எண்வகைச் சித்திகளில் வல்ல சித்தர், பழமையான நூல்களாகிய வேதப் பொருள்களில் நிலைபெற்று நிற்பவர், சகாரம் முதலாகப் பாடப்படும் பாட்டில் நிலைத்திருப்பவர் ஆகிய சண்பை நகரார், புத்தர்களும் சமணர்களும் புகழ் அல்லவற்றைக் கூறினாலும் அவற்றைப் புகழ் மொழிகளாகக் கொண்டருளும் நிமலர்.

கு-ரை : புறச் சமயிகள் இகழ்ந்து பேசினாலும் அவற்றைப் புகழாகக் கொண்டருளும் சண்பைநகரார் இவர் என்கின்றது. போதி யார் - புத்தர். பிண்டியார் - சமணர். மாதி சித்தர் - அணிமாதி சித்தி களை உடையவர். சாதி கீத வர்த்த மானர் - சகாரம் முதலாகப் பாடப் படுகின்ற பாட்டில் நிலைத்திருப்பவர்.

11. பொ-ரை : அடியவர்கள் வந்தனையோடு பூசை செய்யும் காலங்கள் அல்லாத ஏனைய பொழுதுகளில் வேதப் பொருள்களைப்

Koviloor Digital Library

அந்திவண்ணன் றன்னையழகார்
ஞானசம் பந்தன்சொற்
சிந்தைசெய்து பாடவல்லார்
சிவகதி சேர்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

பேசியும், மூன்று சந்தியா காலங்களிலும் தியானம் சமாதி நிலையில் நின்று வழிபடும் சண்பைநகர்மேய, மாலைக்காலம் போன்ற செம் மேனியனாகிய இறைவனை, ஞானசம்பந்தன் அருளிய அழகிய இப் பதிகப் பொருளை மனத்தில் நிறுத்திப் பாடவல்லவர் சிவகதி சேர்வர்.

கு-ரை: சண்பைநகர்ச் சிவபெருமானைப் பற்றிச் சொன்ன ஞான சம்பந்தனது சொல்லைத் தியானத்தோடு பாடவல்லார்கள் சிவகதி சேர்வர் என்கின்றது. வந்தி - வந்தித்தல். வந்தி - அடியவருடைய வந்தித்தல், முதல் நிலைத் தொழிற்பெயர். மறை - இரகசியம். சந்தி - காலை மாலை. இறைவன் பூசைக்காலமல்லாத காலங்களில் அம்மை யோடு, வேதவிசாரணை செய்து சந்தியா காலங்களில் சமாதி செய்கின் றார் என்ற அநுபவம் அறிவிக்கப்படுகிறது.

திருப்புகழ்

சைவமுதற் குருவாயே
சமணர்களைத் தெறுவோனே
பொய்யர் மனத் தணுகானே
புனிதஅருள் புரிவாயே
கையின்மிசைக் கதிர்வேலா
கடிகமழ்அற் புதலீலா
தெய்வதசற் குருநாதா
திருமதுரைப் பெருமாளே.

- அருணகிரிநாதர்.

Koviloor Digital Library

67. திருப்பழனம்

பதிக வரலாறு:

திருவடகுரங்காடுதுறையில் வாலியார் வழிபட்ட அருமையையமைத்துப் பாடிப்பரவி, பிற தலங்களையும் வழிபட எழுந்தருளிய காழிவேந்தர், முத்தலைச் சூலம் ஏந்திய முதல்வர் எழுந்தருளிய திருப்பழனத்தைச் சேர்ந்தார். கோயிலைக் குறுகி உருகிய மனத்துடன் திருப்பழனநாதரை வணங்கி 'வேத மோதி' என்னும் இப்பதிகத்தை அருளிச் செய்தார். இதனை 'விழைசொற் பதிகம்' என விசேடிப்பர் சேக்கிழார் பெருமானார்.

பண்: தக்கேசி

பதிக எண்: 67

திருச்சிற்றம்பலம்

722. வேதமோதி வெண்ணூல்பூண்டு
வெள்ளை யெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார்
புலியி னுரிதோலார்
நாதாவெனவு நக்காவெனவு
நம்பா வெனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார்
பழன நகராரே. 1

1. பொ-ரை : நாதனே எனவும், நக்கனே நம்பனே எனவும் கூறி நின்று தம் திருவடிகளைப்பரவும் அடியவர்களின் பாவங்களைத் தீர்த் தருளும் திருப்பழனத்து இறைவர் வேதங்களை ஓதிக் கொண்டு மார் பில் வெண்மையான பூணூலையணிந்து கொண்டு வெண்மையான எருதின் மிசை ஏறிப் பூதகணங்கள் புடைசூழப் புலியின் தோலை அணிந்து பொலிவு பெற வருவார்.

கு-ரை : நாதா நக்கா எனத் தோத்திரிப்பவர்களின் பாவந் தீர்ப்பவர் பழனநகரார் என்கின்றது. நக்கன் - நிர்வாணி. நம்பன் - நம்பப்படத்தக்கவன்.

Koviloor Digital Library

723. கண்மேற்கண்ணுஞ் சடைமேற்பிறையு
முடையார் காலனைப்
புண்ணாறுதிர மெதிராறோடப்
பொன்றப் புறந்தாளால்
எண்ணாதுதைத்த வெந்தைபெருமா
னிமவான் மகளோடும்
பண்ணார்களிவண் டறைபூஞ்சோலைப்
பழன நகராரே. 2

724. பிறையும்புனலுஞ் சடைமேலுடையார்
பறைபோல் விழிகட்பேய்
உறையுமயான மிடமாவுடையா
ருலகர் தலைமகன்
அறையுமலர்கொண் டடியார்பரவி
யாடல் பாடல்செய்
பறையுஞ்சங்கும் பலியுமோவாப்
பழன நகராரே. 3

2. பொ-ரை : மது உண்ட வண்டுகள் பண்பாடி ஒலி செய்யும் அழகிய சோலைகள் சூழ்ந்த திருப்பழன நகரில் இமவான் மகளாகிய பார்வதி தேவியோடு எழுந்தருளிய இறைவர் இயல்பாக உள்ள இரண்டு கண்களுக்கு மேலாக நெற்றியில் ஒரு கண்ணையும், சடைமுடிமேல் பிறையையும் உடையவர். காலனை உதைத்து, அவன் உடலில் தோன்றிய புண்களிலிருந்து குருதி வெள்ளம் ஆறாக ஓடுமாறு, அவனை ஒரு பொருளாக மதியாது புறந்தாளால் அவன் அழிய உதைத்த எந்தை பெருமானார் ஆவார்.

கு-ரை : காலனை இரத்த ஆறு பெருக்கெடுத்தோடப் புறந்தாளால் உதைத்த பெருமான் பழனநகரார் என்கின்றது. இதுவும் ஆபத்சகாயர் என்ற இத்தலத்திறைவனுக்கேற்ற செயலாதல் அறிக. கண்மேல் கண் - நெற்றிக்கண். புண்ணார் உதிரம் - புண்ணை வழியாகக்கொண்டு வெளிப்படுகின்ற இரத்தம். பொன்ற - இறக்க. எண்ணாது - அவனை ஒரு பொருளாக மனத்து எண்ணாது.

3. பொ-ரை : அடியவர்கள் உயர்ந்தனவாகப் போற்றப்படும் நறுமலர்களைக் கொண்டுவந்து சாத்தி, பரவி, ஆடல் பாடல்களைச் செய்

Koviloor Digital Library

725. உரமன்னுயர்கோட் டுலறுகூகை
யலறு மயானத்தில்
இரவிற்பூதம் பாடவாடி
யெழிலா ரலர்மேலைப்
பிரமன்றலையி னறவமேற்ற
பெம்மா னெமையாளும்
பரமன்பகவன் பரமேச்சுவரன்
பழன நகராரே. 4

தும் பறை, சங்கு ஆகியவற்றை முழக்கியும், பணிந்தும் இடைவிடாது வ்ழிபடும் திருப்பழனநகர் இறைவர் சடைமேல் பிறையையும், கங்கை யையும் உடையவர். பறை வாய் போன்ற வட்டமான, விழிகளையு டைய பேய்கள்வாழும் மயானத்தைத் தமக்கு இடமாகக்கொண்டவர். அனைத்துலக மக்கட்கும் தலைவர்.

கு-ரை : கங்கையும் பிறையும் சூடியவர், மயானத்துறைபவர் பழனத்தார் என்கின்றது.

அறையும் - ஒலிக்கின்ற. அடியார் பரவி, பாடல்செய் ஓவாப் பழனம் எனக் கூட்டுக.

4. பொ-ரை : திருப்பழன நகர் இறைவர் வலிமை பொருந்திய உயரமான மரக்கிளைகளில் அமர்ந்து ஒலி செய்யும் கூகைகள் அலறும் மயானத்தே நள்ளிருளில் பூதங்கள் பாட ஆடியும் அழகிய தாமரை மலர்மேல் உறையும் பிரமனது தலையோட்டில் பலியேற்றும் திரு விளையாடல் புரியும் பெருமானார் எம்மை ஆளும் பரமர் ஆவார். அவர் பகவன், பரமேச்சுவரன் என்பனவாகிய பெயர்களை உடை யவர்.

கு-ரை : மயானத்துப் பூதம் பாட, நள்ளிருளில் நடமாடுபவர் இந்நாதர் என்கின்றது.

உரம் - வலிமை. உலறு கோட்டு - வற்றிய கிளைகளில். கூகை- கோட்டான். அலர் மேலைப் பிரமன் - தாமரை மலர்மேல் உள்ள பிரமன். நறவம் - கள். தேன்; என்றது உணவு என்னும் பொதுமையில் நின்றது. பரமன் - உயர்ந்தவற்றிற்கெல்லாம் உயர்ந்த வன். பகவன் - ஆறு குணங்களையுடையவன்.

Koviloor Digital Library

726. குலவெஞ்சிலையான் மதின்மூன்றெரித்த
கொல்லே றுடையண்ணல்
கலவமயிலுங் குயிலும்பயிலுங்
கடல்போற் காவேரி
நலமஞ்சுடைய நறுமாங்கனிகள்
குதிகொண் டெதிருந்திப்
பலவின்கனிக டிரைமுன்சேர்க்கும்
பழன நகராரே. 5

727. வீளைக்குரலும் விளிச்சங்கொலியும்
விழலின் னொலியோவா
மூளைத்தலைகொண் டடியாரேத்தப்
பொடியா மதிளெய்தார்
ஈளைப்படுகி லிலையார்தெங்கிற்
குலையார் வாழையின்
பாளைக்கமுகின் பழம்வீழ்சோலைப்
பழன நகராரே. 6

5. பொ-ரை : தோகைகளையுடைய மயில்கள், குயில்கள் வாழ்வதும், கடல்போல் பரந்து விரிந்த காவிரி ஆற்றின் அலைகள் மாங்கனிகளையும், பலாவின் கனிகளையும் ஏந்திக் குதித்து உந்தி வந்து கரையிற் சேர்ப்பதுமாகிய திருப்பழன நகர் இறைவர், உயர்ந்த கொடிய மலை வில்லால் அசுரர்களின் முப்புரங்களையும் எரித்தவர். பகைவரைக் கொல்லும் ஆனேற்றையுடைய அண்ணல் ஆவார்.

கு-ரை : வில்லால் திரிபுரமெரித்த சிவன் பழனத்தான் என்கின்றது. பின்னிரண்டடிகளில் கடல்போன்ற காவிரியின் அலைகள் மாங்கனிகளையும் பலாக்கனிகளையும் எதிர் உந்திச்சேர்க்கும் பழனம் என வளங் கூறப்பெற்றுள்ளது. கடல்போற் காவேரி என்றது வற்றாமையும் பரப்பும்பற்றி. கலவம் - தோகை.

6. பொ-ரை : ஈரத்தன்மையுடைய ஆற்றுப் படுகைகளில் வளர்ந்த பசுமையான மட்டைகளோடு கூடிய தென்னை மரங்களின் குலைகளில் விளைந்த தேங்காயும், வாழை மரத்தில் பழுத்த வாழைப் பழங்களும், பாளைகளையுடைய கமுகமரங்களில் பழுத்த பாக்குப் பழங்களும்

Koviloor Digital Library

728. பொய்யாமொழியார் முறையாலேத்திப்
புகழ்வார் திருமேனி
செய்யார்கரிய மிடற்றார்வெண்ணூல்
சேர்ந்த வகலத்தார்
கையாடலினார் புனலான்மல்கு
சடைமேற் பிறையோடும்
பையாடரவ முடனேவைத்தார்
பழன நகராரே. 7

விழுகின்ற சோலைகளால் சூழப்பட்ட திருப்பழன நகர் இறைவர். அழைக்கும் சீழ்க்கை ஒலியும் அழைக்கும் சங்கொலியும், விழவின் ஆரவாரங்களும் ஓயாத ஊரகத்தே சென்று மூளை பொருந்திய தலை யோட்டில் பலியேற்பவர். அடியவர்கள் போற்றி வாழ்த்த முப்புரங் களையும் அழித்தவராவார்.

கு-ரை : கையில் கபாலங்கொண்டு அடியார்கள் வழிபடநின்ற இறைவன் இந்நகரார் என்கின்றது.

வீளைக்குரல் - அழைக்கும் குரல். மூளைத் தலை கொண்டு - மூளையோடுகூடிய பிரமகபாலத்தைக் கொண்டு. ஈளைப் படுகு - உலராத சேற்றோடு கூடிய ஆற்றுப்படுகை. படுகையில் தென்னை, வாழை, கமுகு இவற்றின் பழம் விழுகின்ற பழனம் என வளங்கூறியது.

7. பொ-ரை : திருப்பழனநகர் இறைவர் பொய் கூறாத அடியவர் களால் முறைப்படி ஏத்திப் புகழப் பெறுவர். சிவந்த திருமேனி உடை யவர். கரிய கண்டம் உடையவர். முப்புரிநூல் அணிந்த மார்பினை உடையவர். கைகளை வீசி ஆடல் புரிபவர். கங்கை சூடிய சடை முடி மீது பிறையையும், படப்பாம்பையும் ஒருசேர வைத்தவர்.

கு-ரை : உண்மை அடியார்களால் வணங்கி வாழ்த்தப்படுமவர் பழனத்தார் என்கின்றது.

பொய்யாமொழியார் - உண்மையே பேசும் அடியார்கள். மிடற்றார் - கழுத்தினையுடையவர். அகலத்தார் - மார்பினையுடை யவர். பை-படம்.

Koviloor Digital Library

729. மஞ்சோங்குயர முடையான்மலையை
மாறா யெடுத்தான்றோள்
அஞ்சோடஞ்சு மாறுநான்கு
மடர வூன்றினார்
நஞ்சார்சுடலைப் பொடிநீறணிந்த
நம்பான் வம்பாரும்
பைந்தாமரைகள் கழனிசூழ்ந்த
பழன நகராரே. 8

730. கடியார்கொன்றைச் சுரும்பின்மாலை
கமழ்புன் சடையார்விண்
முடியாப்படிமூ வடியாலுலக
முழுதுந் தாவிய
நெடியானீடா மரைமேலயனு
நேடிக் காணாத
படியார்பொடியா டகலமுடையார்
பழன நகராரே. 9

8. பொ-ரை : மணம்கமழும் புதிய தாமரை மலர்களையுடைய வயல்களால் சூழப்பட்ட திருப்பழன நகர் இறைவர், வானகத்தே விளங்கும் மேகங்கள் அளவு உயர்ந்த தோற்றம் உடைய இராவணன் தனக்கு எதிராகக் கயிலை மலையைப் பெயர்க்க அவனுடைய இருபது தோள்களும் நெரியுமாறு கால்விரலை ஊன்றியவர். நச்சுத் தன்மை பொருந்திய சுடலையில் எரிந்த சாம்பலை அணிந்த பெருமானாகிய சிவனார் ஆவார்.

கு-ரை : இராவணனுடைய இருபது தோள்களும் வருந்த ஊன்றியவர் இவர் என்கின்றது. மஞ்சோங்கு உயரம் உடையான் - ஆகாயம் அளாவிய உயரம் உடையவன். மாறாய் - விரோதித்து. அஞ்சோடு அஞ்சும் ஆறும் நான்கும் - இருபது. அடர - நெருங்க.

9. பொ-ரை : திருப்பழன நகர் இறைவர் மணங்கமழ்வதும் வண்டுகள் மொய்ப்பதுமான கொன்றை மாலை கமழ்கின்ற சிவந்த சடைமுடியையுடையவர். விண்ணளாவிய திருமுடியோடு இவ் வுலகம் முழுவதையும் மூவடியால் அளந்த நெடியோனாகிய திரு

Koviloor Digital Library

731. கண்டான்கழுவா முன்னேயோடிக்
கலவைக் கஞ்சியை
உண்டாங்கவர்க ளுரைக்குஞ்சிறுசொல்
லோரார் பாராட்ட
வண்டாமரையின் மலர்மேனறவ
மதுவாய் மிகவுண்டு
பண்டான்கெழும வண்டியாழ்செய்யும்
பழன நகராரே. 10

மாலும், நீண்ட தண்டின்மேல் வளர்ந்த தாமரை மலர்மேல் விளங்கும் நான்முகனும் தேடிக் காணமுடியாத தன்மையை யுடையவர். திரு நீற்றுப் பொடியணிந்த மார்பினையுடையவர்.

கு-ரை : உலகத்தை மூவடியால் அளந்த திருமாலும் அயனும் தேடிக்கண்டுபிடிக்கமுடியாத திருநீற்றழகர் இவர் என்கின்றது.

கடி - மணம். சுரும்பு - வண்டு. விண்முடியாப்படி - விண்ணை முடிவாகக் கொண்ட பூமி. நெடியான் - திருவிக்கிரம னாகிய திருமால். நேடி - தேடி. காணாதபடி ஆர் பொடி ஆடு அகல முடையார் எனப் பிரித்து அவர்கள் காணாதவண்ணம் நிறைந்த திருநீற்றோடு அளாவிய மார்பை உடையவர் எனப் பொருள் காண்க.

10. பொ-ரை : வண்டுகள் வளமையான தாமரை மலர்மேல் விளங்கும் தேனாகிய மதுவை வாயால் மிக உண்டு பண்பொருந்த யாழ்போல் ஒலி செய்யும் கழனிகளையுடைய திருப்பழன நகர் இறைவர், கண்களைக் கூடக் கழுவாமல் முந்திச் சென்று கலவைக் கஞ்சியை உண்பவர்களாகிய சமணர்கள் உரைக்கும் சிறு சொல்லைக் கேளாத அடியவர்கள் பாராட்ட விளங்குபவராவார்.

கு-ரை : கண்களைக்கூடக் கழுவாது கஞ்சிகுடிக்கும் புறச்சமயிகளுடைய சிறுசொல்லை ஓராத அடியார்கள் பாராட்ட இருப்பவன் பழனத்தான் என்கின்றது.

கலவைக்கஞ்சி - கலந்த கஞ்சி. வண்டு நறவமது உண்டு பண்கெழும யாழ்செய்யும் பழனம் எனக்கொண்டு கூட்டுக.

Koviloor Digital Library

732. வேய்முத்தோங்கி விரைமுன்பரக்கும்
வேணுபுரந் தன்னுள்
நாவுய்த்தனைய திறலான்மிக்க
ஞான சம்பந்தன்
பேசற்கினிய பாடல்பயிலும்
பெருமான் பழனத்தை
வாயிற்பொலிந்த மாலைப்பத்தும்
வல்லார் நல்லாரே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : மூங்கில் மரங்கள் முத்துக்களோடு ஓங்கி வளர்ந்து மணம் பரப்பும் வேணுபுர நகரில் உள்ள, நாவினால் வல்ல திறன் மிக்க ஞானசம்பந்தன் திருப்பழனப் பெருமான் மீது, பேசற்கினிய பாடல் களாய்த் தன் வாயால் பாடிய இப்பதிகப் பாமாலை பத்தையும், இசையுடன் பாடவல்லவர் நல்லவர் ஆவார்.

கு-ரை : பேசற்கு இனிய இப்பாடல் பத்தையும் வல்லார் நல்லார் என்கின்றது. வேய் முத்து-மூங்கிலில் தோன்றிய முத்து. விரை-மணம்.

திருஞானசம்பந்தர் புராணம்

பழனத்து மேவிய முக்கட்
பரமேட்டி யார்பயில் கோயில்
உழைபுக் கிறைஞ்சிநின் றேத்தி
உருகிய சிந்தைய ராகி
விழைசொற் பதிகம் விளம்பி
விருப்புடன் மேவி அகல்வார்
அழனக்க பங்கய வாவி
ஐயாறு சென்றடை கின்றார்.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

68. திருக்கயிலாயம்

பதிக வரலாறு:

திருக்காளத்தியைத் தொழுது பாடிய காழிப்பிள்ளையார், அதற்கு அப்பால் வடக்கிலும் மேற்கிலும் தமிழ் வழங்கும் நாடின்மையால், காளத்தியிலிருந்தபடியே தேவர் வழிபாடு செய்யும் திருக்கயிலையை நினைந்து 'பொடிகொள் உருவர்' என்னும் இப்பதிகத்தை அருளிச் செய்தார்.

பண்: தக்கேசி

பதிக எண்: 68

திருச்சிற்றம்பலம்

733. பொடிகொளுருவர் புலியினதளர்
புரிநூல் திகழ்மார்பில்
கடிகொள்கொன்றை கலந்தநீற்றர்
கறைசேர் கண்டத்தர்
இடியகுரலா லிரியுமடங்கல்
தொடங்கு முனைச்சாரல்
கடியவிடைமேற் கொடியொன்றுடையார்
கயிலை மலையாரே. 1

1. பொ-ரை : மேகங்களின் இடிக்குரல் கேட்டு அஞ்சிய சிங்கங்கள், நிலைகெட்டு ஓடத்தொடங்கும் சாரலை உடைய கயிலை மலையில் வாழும் இறைவர், திருநீறு பூசிய திருமேனியை உடையவர். புலியின் தோலை உடுத்தவர். முப்புரி நூல் விளங்கும் மார்பில் மணம் கமழும் கொன்றை மாலையோடு திருநீற்றையும் அணிந்தவர். விடக் கறை பொருந்திய கண்டத்தை உடையவர். விரைந்து செல்லும் விடை மீது ஏறி அவ்விடை எழுதிய கொடி ஒன்றையே தம் கொடியாகக் கொண்டவர்.

கு-ரை : கயிலைநாதனின் திருமேனிப்பூச்சு, உடை, ஆடை, அணி, ஊர்தி முதலியவற்றைக் கூறுகின்றது. பொடி - விபூதி. அதள் - தோல். பொடிகொள் உருவர் என்றது திருமேனி முழுதும் பூசப்பட்டதைக் குறித்தது. நீற்றர் என்பது மார்பில் அணிந்ததைக் குறித்தது. கறை - விடம். இடிய குரலால் - இடிக்குரலால். இரியும் - நிலைகெட்டு ஓடுகின்ற. மடங்கல் - சிங்கம். கடிய விடை - வேகமான இடபம்.

Koviloor Digital Library

734. புரிகொள்சடைய ரடியர்க்கெளியார்
கிளிசேர் மொழிமங்கை
தெரியவுருவில் வைத்துகந்த
தேவர் பெருமானார்
பரியகளிற்றை யரவுவிழுங்கி
மழுங்க விருள்கூர்ந்த
கரியமிடற்றர் செய்யமேனிக்
கயிலை மலையாரே. 2

735. மாவினுரிவை மங்கைவெருவ
மூடி முடிதன்மேல்
மேவு மதியு நதியும்வைத்த
விறைவர் கழலுன்னும்
தேவர்தேவர் திரிசூலத்தர்
திரங்கன் முகவன்சேர்
காவும்பொழிலுங் கடுங்கற்சுனைசூழ்
கயிலை மலையாரே. 3

2. பொ-ரை : பெரிய களிற்றி யானையை மலைப்பாம்பு விழுங்கி மறையும் இருள் மிக்க கயிலை மலையில் விடம் உண்ட கரிய கண்ட ராய்ச் சிவந்த திருமேனியராய் விளங்கும் இறைவர் வளைத்துக்கட்டிய சடைமுடியை உடையவர். அடியவர்க்கு எளிமையானவர். கிளி போன்ற மெல்லிய மொழி பேசும் உமை மங்கையைப் பலருக்கும் தெரியுமாறு ஒரு பாகமாகக் கொண்டு மகிழ்ந்த தேவர் தலைவராவார்.

கு-ரை : இதுவும் அது. கிளிசேர்மொழி மங்கை - கிளியை யொத்த மொழியினை உடைய உமாதேவி. தெரிய - விளங்க. பரிய களிற்றை அரவு விழுங்கி மழுங்க இருள்கூர்ந்த கயிலை - பெரிய யானையை மலைப்பாம்பு விழுங்கி மறைய இருள்மிகுந்த கயிலை.

3. பொ-ரை : திரங்கிய தோலை உடைய குரங்குகள் வாழும் காடுகளும் பொழில்களும் மலையிடையே இயற்கையாக அமைந்த சுனைகளும் சூழ்ந்த கயிலைமலைப் பெருமானார் உமையம்மை அஞ்ச யானையின் தோலை உரித்துப் போர்த்திக் கொண்டு முடிமீது பிறை கங்கை ஆகியவற்றைக் கொண்ட இறைவர், தம் திருவடிகளை

Koviloor Digital Library

736. முந்நீர்சூழ்ந்த நஞ்சமுண்ட
முதல்வர் மதனன்றன்
தென்னீருருவ மழியத்திருக்கண்
சிவந்த நுதலினார்
மன்னீமடுவும் படுகல்லறையி
னுழுவை சினங்கொண்டு
கன்னீவரைமே லிரைமுன்றேடுங்
கயிலை மலையாரே. 4

737. ஒன்றும்பலவு மாயவேடத்
தொருவர் கழல்சேர்வார்
நன்றுநினைந்து நாடற்குரியார்
கூடித் திரண்டெங்கும்

நினைந்து போற்றும் தேவர்களின் தேவர். முத்தலைச் சூலத்தை உடையவர்.

கு-ரை : இதுவும் அது. மங்கை வெருவ மாவின் உரிவை மூடி - உமாதேவியார் அஞ்ச யானைத்தோலைப் போர்த்து. கழல் உன்னும் - திருவடியைத் தியானிக்கின்ற. திரங்கல் முகவன் - குரங்குகள்.

4. பொ-ரை : இயற்கையாகத் தோன்றிய மலைக் குகைகளில் வாழும் புலிகள், பசியினால் சினமடைந்து கல்லால் இயன்ற மலை மிசை உணவாதற்குரிய இரைகளையும், அருந்துவதற்கு நிலைபெற்ற நீரையுடைய மடுக்களையும் தேடும் கயிலை மலையில் உறையும் தலைவர், கடலில் பரவித் தோன்றிய நஞ்சினைத் திரட்டி உண்டவர் மன்மதனின் அழகிய உருவம் அழியக் கண் சிவந்த நுதலை உடையவர்.

கு-ரை : தென் நீர் உருவம் - அழகிய நீர்மையோடு கூடிய வடிவம். சிவந்த - கோபத்தாற் சிவந்த. மன்னீர் மடு - நிலைபெற்ற நீரினையுடைய சுனை, கல்லறை - குகை. உழுவை -.புலி.

5. பொ-ரை : இரவில் சிதறித் தனிமைப்பட்ட யானைகள் குளிர்ந்த மலைச் சாரலின் வழிகளில் விரையச் சென்று கன்றும் பிடியுமாய் இணையும் கயிலை மலைக்குரிய இறைவர். ஒருவராக இருந்தே

Koviloor Digital Library

தென்றியிருளிற் றிகைத்தகரிதண்
சாரல் நெறியோடிக்
கன்றும்பிடியு மடிவாரஞ்சேர்
கயிலை மலையாரே. 5

738. தாதார் கொன்றை தயங்குமுடியர்
முயங்கு மடவாளைப்
போதார்பாக மாகவைத்த
புனிதர் பனிமல்கும்
மூதாருலகின் முனிவருடனா
யறநான் கருள்செய்த
காதார்குழையர் வேதத்திரளர்
கயிலை மலையாரே. 6

பற்பல வடிவங்களைக் கொண்ட ஒப்பற்ற பரம்பொருளாவார். தம் திருவடிகளைஅடைய எண்ணும் அடியவர்கள் பேரின்பத்தை அடையும் விருப்போடு நாடுதற்குரியவர்.

கு-ரை : ஒன்றும் பலவும் ஆய வேடத்தார் - ஒன்றாயும் விரிந்து பலவாயும் ஆகிய வேடத்தை உடையவர். கழ்ல் சேர்வார் - திருவடியைத் தியானிப்பவர்கள். நன்று நினைந்து - பேரின்பத்தை விரும்பி. தென்றி - சிதறி. திகைத்த யானை மலைச்சாரல் வழியாக ஓடி, கன்றும் பிடியுமாக அடிவாரத்துச் சேரும் கயிலை என இயற்கை எடுத்துக்காட்டப்பெறுகிறது.

6. பொ-ரை : கயிலைமலை இறைவர், மகரந்தம் நிறைந்த கொன்றைமாலை விளங்கும் முடியினை உடையவர். தம்மைத் தழுவிய உமையம்மையை மென்மையான இடப்பாகமாக ஏற்ற தூயவர். குளிர்ந்த இவ்வுலகின்கண் வயதால் முதிர்ந்த சனகர் முதலிய முனிவர்களுக்கு அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் அருளிச் செய்தவர். வலக் காதில் குழை அணிந்தவர். வேத வடிவாய் விளங்குபவர்.

கு-ரை : தாது - மகரந்தம். போதார் பாகம் - மெல்லிய இடப் பாகம். உலகின் மூதார் முனிவர் - உலகத்தில் மிக வயது முதிர்ந்த முனிவராகிய சனகாதியர்.

Koviloor Digital Library

* * * * * * * * * 7

739. தொடுத்தார் புரமூன் றெரியச்சிலைமே
லெரியொண் பகழியார்
எடுத்தான்திரள்தோள் முடிகள்பத்து
மிடிய விரல்வைத்தார்
கொடுத்தார்படைகள் கொண்டாராளாக்
குறுகிவருங் கூற்றைக்
கடுத்தாங்கவனைக் கழலாலுதைத்தார்
கயிலை மலையாரே. 8

740. ஊணாப்பலிகொண் டுலகிலேற்றா
ரிலகு மணிநாகம்
பூணாணார மாகப்பூண்டார்
புகழு மிருவர்தாம்

7. * * * * * * * * * *

8. பொ-ரை : கயிலைமலை இறைவர் முப்புரங்களை மேரு வில்லை வளைத்து எரியாகிய ஒளி பொருந்திய அம்பைத் தொடுத்து எரித்து அழித்தவர். கயிலை மலையைப் பெயர்த்த இரா வணனின் திரண்ட தோள்கள் பத்துத் தலைகள் ஆகியன நெரியுமாறு கால்விரலை ஊன்றியவர். அவன் பிழையுணர்ந்து வருந்த அவனை அடிமையாக ஏற்று வாள் முதலிய படைகள் கொடுத்தவர். மார்க்கண் டேயனின் உயிரைக் கவர அவன்மேல் நெருங்கி வந்த எமனைச் சினந்து அவனைக் காலால் உதைத்தவர்.

கு-ரை : இராவணனை அடக்கி, வாள் கொடுத்தாண்டார் என்ற வரலாறு காட்டப்படுகிறது. எரிய, சிலைமேல், ஒண்பகழியார் தொடுத் தார் எனக்கூட்டுக.

படை - வாள். ஆளாக்கொண்டார் - அடிமையாக ஆட் கொண்டார். கடுத்து - கோபித்து.

9. பொ-ரை : கயிலை மலை இறைவர் உலகில் மகளிர் இடும் பலியை உணவாகக் கொண்டு அதனை ஏற்றவர். விளங்கும் மணி

Koviloor Digital Library



கயிலாயம்: ''கரி தன்சாரல் நெறியோடிக் கன்றும் பிடியும் அடிவாரம்சேர் கயிலாயம்''

Koviloor Digital Library



திருக்கற்குடி மாமலை

Koviloor Digital Library

பேணாவோடி நேடவெங்கும்
பிறங்கு மெரியாகிக்
காணாவண்ண முயர்ந்தார்போலுங்
கயிலை மலையாரே. 9

741. விருதுபகரும் வெஞ்சொற்சமணர்
வஞ்சச் சாக்கியர்
பொருதுபகரு மொழியைக்கொள்ளார்
புகழ்வார்க் கணியராய்
எருதொன்றுகைத்திங் கிடுவார்தம்பால்
இரந்துண் டிகழ்வார்கள்
கருதும்வண்ண முடையார்போலுங்
கயிலை மலையாரே. 10

களைக் கொண்டுள்ள நாகங்களை அனிகலனாகப் பூண்டவர். எல்லோராலும் புகழப்பெறும் திருமால் பிரமர்கள் அடிமுடி காண விரும்பிச் சென்று தேட எங்கும் விளங்கும் எரியுருவோடு அவர்கள் காணாத வாறு உயர்ந்து நின்றவர்.

கு-ரை : உலகில் பலிஊணாக்கொண்டு ஏற்றார் எனக்கூட்டுக.

பூண் நாண் ஆரமாக - பூணத்தகும் மாலையாக. இருவர் - பிரம விஷ்ணுக்கள்.

10. பொ-ரை : தாம் பெற்ற விருதுகளைப் பலரிடமும் சொல்லிப் பெருமை கொள்ளும் இயல்புடைய கொடுஞ்சொல் பேசும் சமணரும் வஞ்சனையான மனமுடைய சாக்கியரும் பிற சமயத்தவரோடு சண்டை யிட்டுக் கூறும் சொற்களைக் கேளாதவராய், புகழ்ந்து போற்றுவார்க்கு அணிமையானவராய் விடை ஒன்றைச் செலுத்தி உணவிடுவார்பால் இரந்து உண்பவராய் இகழ்பவரும் தம் பெருமையை நினைந்து போற்றும் இயல்பினராய் விளங்குபவர் கயிலைமலை இறைவர்.

கு-ரை : விருது - பட்டங்கள். பொருது - மோதுதல் காரண மாக. எருது ஒன்று உகைத்து - ஓர் இடபத்தில் ஏறிச்செலுத்தி.

Koviloor Digital Library

742. போரார்கடலிற் புனல்சூழ்காழிப்
புகழார் சம்பந்தன்
காரார்மேகங் குடிகொள்சாரற்
கயிலை மலையார்மேல்
தேராவுரைத்த செஞ்சொன்மாலை
செப்பு மடியார்மேல்
வாராபிணிகள் வானோருலகின்
மருவு மனத்தாரே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : கரையோடு போர் செய்யும் கடலினது நீரால் சூழப்பட்ட சீகாழிப் பதியில் தோன்றிய புகழ் பொருந்திய ஞான சம்பந்தன், கரிய மேகங்கள் நிலையாகத் தங்கியுள்ள சாரலை உடைய கயிலைமலை இறைவர்மேல் தெளிந்துரைத்த இச்செஞ்சொல் மாலை யாகிய திருப்பதிகத்தை ஓதும் அடியவர்பால் பிணிகள்வாரா. அவர் கள் வானோர் உலகில் மருவும் மனத்தினராவர்.

கு-ரை : கயிலைமலையாரைச் சொன்ன செஞ்சொல் மாலை வல்லார்மேல் பிணிகள் வாரா; வானோர் உலகத்தில் மருவுவர் என்கின்றது. தேரா - தெளிந்து.

திருஞானசம்பந்தர் புராணம்

அங்கண்வட திசைமேலும் குடக்கின் மேலும்
அருந்தமிழின் வழக்கங்கு நிகழா தாகத்,
திங்கள்புனை முடியார்தந் தானந் தோறும்
சென்றுதமிழ் இசைபாடுஞ் செய்கை போல,
மங்கையுடன் வானவர்கள் போற்றி சைப்ப
வீற்றிருந்தார் வடகயிலை வணங்கிப் பாடிச்,
செங்கமல மலர்வாவித் திருக்கே தாரம்
தொழுதுதிருப் பதிகஇசை திருந்தப் பாடி.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

69. திருவண்ணாமலை

பதிக வரலாறு:

திரு அறையணிநல்லூரை வழிபட்ட புகலிப் பிள்ளையார் தேவரும் முனிவரும் வணங்கும் திருவண்ணாமலையை அன்பர்கள் காட்டக்கண்டார். அண்ணாமலை, சிவனுருவாகக் காட்சி வழங்குதலும், தமது கண்களால் அக்காட்சியைப் பருகி, பெருமானை வழிபட்டு இப்பதிகத்தைப் பாடினார்கள்.

பண்: தக்கேசி

பதிக எண்: 69

திருச்சிற்றம்பலம்

743. **பூவார்மலர்கொண் டடியார்தொழுவார்**
புகழ்வார் வானோர்கள்
மூவார்புரங்க ளெரித்தவன்று
மூவர்க் கருள்செய்தார்
தூமாமழைநின் றதிரவெருவித்
தொறுவின் னிரையோடும்
ஆமாம்பிணைவந் தணையுஞ்சாரல்
அண்ணா மலையாரே. 1

1. பொ-ரை : நீர்த்துளிகளைத் தூவும் கரிய மேகங்கள் வானத்தில் நின்றவாறு இடி முழக்கத்தைச்செய்ய, அதனைக் கேட்டு அஞ்சிய காட்டுப் பசுக்களின் மந்தைகளான வரிசைகள் வந்து ஒருங்கிணையும் அடிவாரத்தை உடைய திருவண்ணாமலை இறைவர், அடியவர்கள் பொலிவுமிக்க நறுமலர்களைத் தூவி வழிபடவும், வானோர்கள் புகழ்ந்து போற்றவும், அழியா வரம் பெற்ற அசுரர்களின் முப்புரங்களை எரித்து அழித்து அவ்வசுரர்களில் மூவர்க்கு அருளையும் வழங்கிய பெருமையுடையவர்.

கு-ரை : அடியார்கள் மலர்கொண்டு அடிவணங்குவார்கள்; தேவர்கள் தோத்திரிப்பார்கள்; இங்ஙனமாகத் திரிபுரம் எரித்த பெருமான் அண்ணாமலையார் ஆவர் என்கின்றது. பூ ஆர் மலர் - போதும் விரிந்த பூவும். மூவார் - அழியாதவர்கள். மூவர் - திரிபுராதிகள். தொறுவின் நிரையோடும் - ஆட்டு மந்தை வரிசை யோடும். ஆமாம் பிணை- காட்டுப்பசுக்கள்.

Koviloor Digital Library

744. மஞ்சைப்போழ்ந்த மதியஞ்சூடும்
வானோர் பெருமானார்
நஞ்சைக்கண்டத் தடக்குமதுவு
நன்மைப் பொருள்போலும்
வெஞ்சொற்பேசும் வேடர்மடவா
ரிதண மதுவேறி
அஞ்சொற்கிளிக ளாயோவென்னும்
அண்ணா மலையாரே. 2

745. ஞானத்திரளாய் நின்றபெருமா
னல்ல வடியார்மேல்
ஊனத்திரளை நீக்குமதுவு
முண்மைப் பொருள்போலும்
ஏனத்திரளோ டினமான்கரடி
யிழியு மிரவின்கண்
ஆனைத்திரள்வந் தணையுஞ்சாரல்
அண்ணா மலையாரே. 3

2. பொ-ரை : குத்து வெட்டு முதலிய கொடிய சொற்களையே பேசும் வேடர்களின் பெண்கள் தினைப்புனங்களில் பரண்மீது ஏறி யிருந்து தினைகவர வரும் அழகிய சொற்களைப் பேசும் கிளிகளை ஆயோ என ஒலியெழுப்பி ஓட்டும் திருவண்ணாமலை இறைவர், மேகங்களைக் கிழித்துச் செல்லும் பிறைமதியை முடியிற்சூடும் வானவர் தலைவர். கடலிடைத் தோன்றிய நஞ்சையுண்டு கண்டத்தில் அடக்கியவர். இச்செயல் உலகத்தை அழியாது காக்கும் நன்மை கருதியதேயாகும்.

கு-ரை : அண்ணாமலையாராகிய பிறை சூடிய பெருமான் நஞ்சையுண்டதும் நன்மைகருதியேயாம் என்கின்றது. மஞ்சு - மேகம். வெஞ்சொல் பேசும் வேடர் - பிடி எறி குத்து கொல்லு என்ற கொடிய சொற்களையே பேசுகிற வேடர்கள். மடவார் - வேட்டுவத்தி. இதணம் - பரண். ஆயோ என்பது கிளி ஓட்டும் ஒலிக் குறிப்பு.

3. பொ-ரை : இராப்போதில் பன்றிகளின் கூட்டமும், மான் இனங்களும், கரடிகளும், ஒருங்கே இறங்கிவரும் மலைச்சாரலில்

Koviloor Digital Library

746. இழைத்தவிடையா ளுமையாள்பங்க
ரிமையோர் பெருமானார்
தழைத்தசடையார் விடையொன்றேறித்
தரியார் புரமெய்தார்
பிழைத்தபிடியைக் காணாதோடிப்
பெருங்கை மதவேழம்
அழைத்துத்திரிந்தங் குறங்குஞ்சாரல்
அண்ணா மலையாரே. 4

யானைகளின் கூட்டமும் வந்தணையும் திருவண்ணாமலை இறைவர், ஞானப் பிழம்பாய் நிற்பவர். நன்மைகளையே கருதும் அடியவர்கள் ஊனுடலோடு பிறக்கும் பிறவிகளை நீக்குபவர். இவ்வருட்செயல் வேதாகம நூல்கள் உணர்த்தும் உண்மைப் பொருளாகும்.

கு-ரை : ஞானப்பிழம்பாய் நிற்கும் அண்ணாமலையார் நல்ல அடியார்மேல் வருங்குற்றங்களை நீக்குவதும் உண்மையே போலும் என்கின்றது.

திரள் - பிழம்பு. ஊனத்திரள் - குறைகளின் குவியல்; உடம்பு என்றுமாம். உண்மைப்பொருள் - சத்தியம் போலும் என்பது ஒப்பில் போலி. ஏனத்திரள் - பன்றிக்கூட்டம். ஆனை - யானை.

4. பொ-ரை : தன்னைவிட்டுப் பிரிந்த பெண் யானையைக் காணாத பெரிய கையை உடைய மதம் பொருந்திய ஆண் யானை, குரல் கொடுத்து அழைத்துத் திரிந்து அலுத்து உறங்கும் சாரலை உடைய திருவண்ணாமலை இறைவர், நூல் போன்று நுண்ணிய இடையினை உடைய உமையம்மையை ஒருபாகமாக உடையவர். விடைமீது ஏறிச் சென்று பகைவரின் முப்புரங்களை எரித்தவர்.

கு-ரை : உமைபங்கர், தேவதேவர், தாழ்சடையார், விடை யேறி, திரிபுரம் எய்தவர் இவர் என்கின்றது.

இழைத்த - நூலிழையின் தன்மையையுடைய, தரியார் - பகைவர். பிழைத்த - தவறிய. பெரிய களிறு தன்னை விட்டுப் பிரிந்த பெண்யானையைக் காணாமல் அழைத்துச் சுற்றி அலுத்துப்போய் உறங்கும் சாரல் என மலையியற்கை கூறியவாறு.

Koviloor Digital Library

747. உருவிற்றிகழு முமையாள்பங்க
ரிமையோர் பெருமானார்
செருவில்லொருகால் வளையவூன்றிச்
செந்தீ யெழுவித்தார்
பருவிற்குறவர் புனத்திற்குவித்த
பருமா மணிமுத்தம்
அருவித்திரளோ டிழியுஞ்சாரல்
அண்ணா மலையாரே. 5

748. எனைத்தோரூழி யடியாரேத்த
விமையோர் பெருமானார்
நினைத்துத்தொழுவார் பாவந்தீர்க்கும்
நிமல ருறைகோயில்
கனைத்தமேதி காணாதாயன்
கைம்மேற் குழலூத
அனைத்துஞ்சென்று திரளுஞ்சாரல்
அண்ணா மலையாரே. 6

5. பொ-ரை : பெரிய வில்லை ஏந்திய குறவர்கள் விளைநில வரப்புக்களில் குவித்து வைத்திருந்த பெரிய முத்துக்களும் மணிகளும் அருவித்திரள்களின் வழியே நிலத்தில் வந்து இழியும் திருவண்ணா மலை இறைவர், உருவத்தால் அழகிய உமையவளை ஒருபாகமாகக் கொண்டவர். இமையவர்கட்குத் தலைவர். பெரிய போர்வில்லை ஒரு காலால் ஊன்றிக்கொண்டு வளைத்துக் கணை எய்து முப்புரங்களும் செந்தீயால் அழிந்து விழுமாறு செய்தவர்.

கு-ரை : ஒரே உருவில் விளங்கும் உமையொருபாகர், வில் வளைத்துத் திரிபுரத்தைச் செந்தீயாட்டியவர் இவர் என்கிறது. செரு - போர். வில் ஒருகால் வளைய ஊன்றி - வில்லினது ஒரு தலையை வளைவதற்காகக் காலிற் பெருவிரலால் ஊன்றி. பரு வில் குறவர் - பருத்த வில்லையுடைய குறவர்கள். குறவர் குவித்த முத்தங்கள் அருவி யோடு இழியும் சாரல் அண்ணாமலை என்க.

6. பொ-ரை : மலைச்சாரலில் புல் மேய்க்கச் சென்ற ஆயன் கனைத்து மேய்ந்த தம் எருமைகளைக் காணாதவனாய்த் தன் கையிலி ருந்த வேய்ங்குழலை ஊத அவ்வளவில் அனைத்தெருமைகளும் வீடு

Koviloor Digital Library

749. வந்தித்திருக்கு மடியார்தங்கள்
வருமேல் வினையோடு
பந்தித்திருந்த பாவந்தீர்க்கும்
பரம னுறைகோயில்
முந்தியெழுந்த முழவினோசை
முதுகல் வரைகண்மேல்
அந்திப்பிறைவந் தணையுஞ்சாரல்
அண்ணா மலையாரே. 7

திரும்பும் விருப்போடு ஒன்று திரளும் அடிவாரத்தை உடைய திரு வண்ணாமலை, அடியவர்கள் தன்னைத் துதிக்க இமையவர் தலைவனாய்ப் பல்லூழிக் காலங்களைக் கண்ட பழையோனாய் விளங்கும் தன்னை நினைத்துத் தொழும் அன்பர்களின் பாவங்களைத் தீர்த்தருளும் நிமலனாய் விளங்கும் அப்பெரியோனின் கோயிலாக விளங்குவது ஆகும்.

கு-ரை : நினைத்துத் தொழுவார் பாவந்தீர்க்கும் நிமலர் உறை கோயில் அண்ணாமலையார் என்கின்றது.

எனைத்து ஓர் ஊழி - எத்தகையதோர் ஊழியிலும், கனைத்த - ஒலித்த. மேதிகளைக் காணாத ஆயன் குழலூத அவைகளெல்லாம் திரளும் சாரல் என்க. மேதி - எருமை.

குருவருள் : ''எனைத்தோ ரூழி அடியார் ஏத்த இமையோர் பெருமானார் நினைத்துத் தொழுவார் பாவம் தீர்க்கும் நிமலர் உறை கோயில்'' என்ற தொடரில் நினைத்தால் முத்தி தரும் தலம் திருவண்ணா மலை என்ற குறிப்பு காணப்படுகிறது. நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் 'அண்ணாமலையார் துணை' என்றே கையெழுத்திடுவர் கடிதங்களில். அதுபற்றி விசாரித்தபொழுது, நினைத்தால் முத்தி தரும் தலம் அண்ணாமலை என்பதால், 'அண்ணாமலையார் துணை' என்று போடு கிறார்கள் என்று ஒரு நகரத்தார், கருப்பன் செட்டியார் என்பவர் குறிப் பிட்டார். இது இப்பாடல் கருத்திற்கு அரணாகவே உள்ளமை காண்க.

7. பொ-ரை : விழா நிகழ்ச்சிகளை முன்னதாக அறிவித்தெழும் முழவின் ஓசை இடையறாது கேட்பதும், பழமையான மலைப் பாறை களுக்கு இடையே அந்திக்காலத்துப் பிறை வந்து அணைவதுமாகிய திருவண்ணாமலையில் விளங்கும் இறைவன் தன்னை வழிபட்டு வேறு

Koviloor Digital Library

750. மறந்தான்கருதி வலியைநினைந்து
மாறா யெடுத்தான்றோள்
நிறந்தான்முரிய நெரியவூன்றி
நிறைய வருள்செய்தார்
திறந்தான்காட்டி யருளாயென்று
தேவ ரவர்வேண்ட
அறந்தான்காட்டி யருளிச்செய்தார்
அண்ணா மலையாரே. 8

நினைவின்றி இருக்கும் அடியவர்களின் ஆகாமிய வினைகளோடு அவர்களைப் பந்தித்திருக்கும் பாவங்களையும் போக்கியருளும் பரம னாவான். அவனது கோயில் திருவண்ணாமலையாகும்.

கு-ரை : தொழும் அடியார்களின் ஆகாமிய சஞ்சித வினை களைத் தீர்க்கும் பரமன் உறை கோயில் அண்ணாமலை என்கின்றது.

வந்தித்து இருக்கும் - வழிபட்டுச் சோகம் பாவனையில் இருக்கும். பந்தித் திருந்த - ஆன்மாவின் அறிவை மறைத்திருந்த. பெரிய பாறைகளில் அந்திப் பிறை அணையும் சாரல் என்பது அண்ணா மலையே பிறை சூடிய பெருமானாகக் காட்சியளிப்பதைக் கருதி.

8. பொ-ரை :தனது வலிமையை வெளிப்படுத்தித் திரிபுர அசுரர் களை அழித்து அருள்புரியுமாறு தேவர்கள் வேண்ட, தீயவரை ஒறுப் பது அறநெறியின் பாற்பட்டதாதலை உணர்த்தும் நிலையில் அசுரர் களை அழித்துத் தேவர்கட்கு அருள்செய்த பெருமானாகிய திரு வண்ணாமலை இறைவன், தன் வலிமையையும், பெற்ற வெற்றிகளை யும் பெரிதாக எண்ணியவனாய்த் தனக்கு மாறாகத் தான் உறையும் கயிலை மலையைப் பெயர்த்தெடுத்த இராவணனின் மார்பு தோள் ஆகியனவற்றை நெரியுமாறு காலை ஊன்றிப் பின் அவ்விராவணன் வேண்ட அவனுக்கு அருள் செய்த மேம்பாடுடையவனாவன்.

கு-ரை : இலங்கை மன்னனது தோள் நெரிய, விரல் ஊன்றிய இறைவன் அண்ணாமலையான் என்கிறது.

மறம் - வீரம். நிறம் - மார்பு. தேவர் திறங்காட்டியருளாய் என்று வேண்ட, அறங்காட்டி அருள் செய் தார் எனமுடிக்க.

Koviloor Digital Library

751.　தேடிக்காணார் திருமால்பிரமன்
　　　றேவர் பெருமானை
　　மூடியோங்கி முதுவேயுகுத்த
　　　முத்தம் பலகொண்டு
　　கூடிக்குறவர் மடவார்குவித்துக்
　　　கொள்ள வம்மினென்
　　றாடிப்பாடி யளக்குஞ்சாரல்
　　　அண்ணா மலையாரே.　9

752.　தட்டையிடுக்கித் தலையைப்பறித்துச்
　　　சமணே நின்றுண்ணும்
　　பிட்டர்சொல்லுக் கொள்ளவேண்டா
　　　பேணித் தொழுமின்கள்
　　வட்டமுலையா ளுமையாள்பங்கர்
　　　மன்னி யுறைகோயில்
　　அட்டமாளித் திரள்வந்தணையும்
　　　அண்ணா மலையாரே.　10

9. பொ-ரை : மலையை மூடி ஓங்கி வளர்ந்த பழமையான மூங்கில் மரங்கள் உகுத்த முத்துக்கள் பலவற்றைக் குறவர்குலப் பெண்கள் ஓரிடத்தே குவித்து வைத்து அவற்றை வாங்கிட வருக என மக்களை அழைத்து ஆடிப்பாடி அவர்களுக்கு அளந்து அளிக்கும் திருவண்ணாமலை இறைவனாகிய தேவர் பெருமானைத் திருமால் பிரமன் ஆகிய இருவர் தேடிக் காணாதவராயினர்.

கு-ரை : மாலும் அயனும் பெருமானைத் தேடிக் காணாரா யிருக்கக் குறத்தியர் மூங்கில் முத்துக்களைக்குவித்து, வாங்கிக்கொள்ள வாருங்கள் என்றழைக்கும் அண்ணாமலை என்கின்றது. வேய் உகுத்த முத்தம் - மூங்கிலில் பிறந்த முத்துக்கள்.

10. பொ-ரை : தடுக்கை அக்குளில் இடுக்கிக் கொண்டு தலை மயிரை ஒன்றொன்றாகப் பறித்த முண்டிதராய் ஆடையின்றி நின்றுண்ணும் சமணர்களாகிய பித்தர்களின் சொற்களைப் பொருளெனக் கொள்ளல் வேண்டா. வட்டமான தனங்களைக் கொண்ட உமையம்மையின் பங்கராய், மலைச்சாரல்களில் சிங்க ஏறுகள் கூட்டமாய்

Koviloor Digital Library

753. அல்லாடரவ மியங்குஞ்சாரல்
அண்ணா மலையாரை
நல்லார்பரவப் படுவான்காழி
ஞான சம்பந்தன்
சொல்லான்மலிந்த பாடலான
பத்து மிவைகற்று
வல்லாரெல்லாம் வானோர்வணங்க
மன்னி வாழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

வந்தணையும் திருவண்ணாமலையில் வீற்றிருந்தருளும் பெருமான் நிலையாக எழுந்தருளி உறையும் கோயிலை விரும்பித் தொழுவீராக.

கு-ரை : சமணர் புத்தர் சொல்லைக் கேளாதே, இறைவனைத் தொழுங்கள்; அவ்விறைவன் உறையுங்கோயில் அண்ணாமலையாகும் என்கின்றது. தட்டு - தடுக்கு. பிட்டர் - பிரட்டர்கள். அட்டம் - குறுக்கு. *தக்க - உரை. 406.*

11. பொ-ரை : இரவு வேளைகளில் படம் எடுத்தாடும் பாம்புகள் இயங்கும் சாரலை உடைய திருவண்ணாமலையில் உறையும் இறைவரை, நல்லவர்களால் போற்றப்படுபவனாகிய, சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன் போற்றிப் பாடிய அருஞ்சொல்லமைப் புக்கள் நிறைந்த இப்பதிகப் பாடல்கள் பத்தையும் கற்று வல்லவர் அனைவரும் வானோர் வணங்க நிலைபெற்று வாழ்வர்.

கு-ரை : அண்ணாமலையாரை ஞானசம்பந்தன் சொன்ன இப்பாடல் வல்லார் தேவர் வணங்க வாழ்வார்கள் என்கின்றது. அல் - இரவு. மன்னி - நிலைபெற்று.

திருஞானசம்பந்தர் புராணம்

ஆதி மூர்த்தி கழல்வணங்கி அங்கண் இனிதின் அமரும்நாள்
பூத நாதர் அவர்தம்மைப் பூவார் மலராற் போற்றிசைத்துக்
காத லாலத் திருமலையிற் சிலநாள் வைகிக் கமழ்கொன்றை
வேத கீதர் திருப்பதிகள் பிறவும் பணியும் விருப்புறுவார் .

- சேக்கிழார்.

Koviloor Digital Library

70. திருவீங்கோய்மலை

பதிக வரலாறு:

திருப்பைஞ்ஞீலியை வணங்கி மண்பரவுந் தமிழ்மாலைகளைப்பாடிப் பிறதலங்களையும் வழிபட் எண்ணிய சண்பை நாடர், திருவீங்கோய்மலையை அடைந்தார். அங்கு, கங்கைச் சடையர் கழல்பணிந்து '' வானத்துயர் தண்'' என்னும் இசைப் பதிகம் பாடினார்.

பண்: தக்கேசி

பதிக எண்: 70

திருச்சிற்றம்பலம்

754. வானத்துயர்தண் மதிதோய்சடைமேன்
மத்த மலர்சூடித்
தேனொத்தனமென் மொழிமான்விழியாள்
தேவி பாகமாக்
கானத்திரவி லெரிகொண்டாடுங்
கடவு ளுலகேத்த
ஏனத்திரள்வந் திழியுஞ்சாரல்
ஈங்கோய் மலையாரே. 1

1. பொ-ரை : வானத்தில் உயர்ந்து விளங்கும் குளிர்ந்த சந்திரன் தோயும் சடைமுடிமேல் ஊமத்தம் மலர்களைச் சூடித் தேன் போன்ற இனிய மொழிகளையும் மான் விழிபோலும் கண்களையுமுடைய உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டு சுடுகாட்டில் இரவில் எரியேந்தி ஆடும் இறைவர் உலக மக்கள் உணர்ந்து போற்றுமாறு பன்றிகள் பலகூடி இறங்கிவரும் சாரலையுடைய திருவீங்கோய்மலையில் எழுந்தருளியுள்ளார்.

கு-ரை : பிறை, மத்தம் இவற்றைச்சூடி, தேவியைப் பாகமாகக் கொண்டு, நள்ளிரவில் நடமாடும் பெருமான் ஈங்கோய் மலையார் என்கின்றது. கான் - சுடுகாடு. ஏனத்திரள் - பன்றியின் கூட்டம்.

Koviloor Digital Library

755. சூலப்படையொன் றேந்தியிரவிற்
சுடுகா டிடமாகக்
கோலச்சடைக டாழக்குழல்யாழ்
மொந்தை கொட்டவே
பாலொத்தனைய மொழியாள்காண
வாடும் பரமனார்
ஏலத்தொடுநல் லிலவங்கமழும்
ஈங்கோய் மலையாரே. 2

756. கண்கொணுதலார் கறைகொண்மிடற்றார்
கரியி னுரிதோலார்
விண்கொண்மதிசேர் சடையார்விடையார்
கொடியார் வெண்ணீறு
பெண்கொள்திருமார் பதனிற்பூசும்
பெம்மா னெமையாள்வார்
எண்குமரியுந் திரியுஞ்சாரல்
ஈங்கோய் மலையாரே. 3

2. பொ-ரை: முத்தலைச் சூலம் ஒன்றைத்தமது படைக்கலனாக ஏந்தி இரவில் சுடுகாட்டை இடமாகக் கொண்டு அழகிய சடைகள் தாழ்ந்து தொங்கவும், குழல் யாழ் மொந்தை ஆகிய இசைக் கருவிகள் முழங்கவும், பால் போன்று இனிய மொழியினை உடைய பார்வதி தேவி காண ஆடும் பரமர் ஏலம் நல்ல இலவங்கம் முதலியன கமழும் திருவீங்கோய்மலையின்கண் எழுந்தருளியுள்ளார்.

கு-ரை: சுடுகாட்டில் குழலும் யாழும் முழவுங் கொட்ட, பாகம் பிரியாள் காண ஆடும் பெருமான் இவர் என்கின்றது.

கோலச்சடை - அழகியசடை. குழல், யாழ், மொந்தையைக் கொட்ட என்றாலும், குழலை ஊத, யாழை வாசிக்க, மொந்தையைக் கொட்ட எனக் கருவிகளுக்கேற்பப் பொருள் கொள்க.

3. பொ-ரை: கண் ஒன்றைக்கொண்ட நுதலினரும், விடக்கறை பொருந்திய கண்டத்தினரும், யானையின் தோலை உரித்துப் போர்த்த வரும், வானில் விளங்கும் மதியைச் சூடிய சடையினரும், விடைக்

Koviloor Digital Library

757. மறையின்னிசையார் நெறிமென்கூந்தன்
மலையான் மகளோடும்
குறைவெண்பிறையும் புனலுந்நிலவுங்
குளிர்புன் சடைதாழப்
பறையுங்குழலுங் கழலுமார்ப்பப்
படுகாட் டெரியாடும்
இறைவர்சிறைவண் டறைபூஞ்சாரல்
ஈங்கோய் மலையாரே. 4

கொடியினரும், ஒருபாகமாக உமையம்மையைக் கொண்டுள்ளவரும் திருவெண்ணீற்றைத் திருமேனியின் மார்பகத்தே பூசுபவரும் ஆகிய எமை ஆள்பவராகிய பெருமான் கரடிகளும், சிங்கங்களும் திரியும் சாரலை உடைய திருவீங்கோய் மலையில் எழுந்தருளியுள்ளார்.

கு-ரை: இறைவருடைய உடையும் அணியும் பூச்சும் இவை என்கின்றது.

நுதல் - நெற்றி. கறை - விடம். மிடறு - கழுத்து. எண்கு - கரடி. அரி - சிங்கம்.

4. பொ-ரை:சிறகுகளையுடைய வண்டுகள் ஒலிக்கும் அழகிய சாரலை உடைய திருவீங்கோய் மலை இறைவர் வேதங்களை இனிய இசையோடு பாடுபவர். வளைவுகளோடு கூடிய மென்மையான கூந்தலையுடைய மலையரையன் மகளாகிய பார்வதி தேவியோடு, கலைகள் குறைந்த வெண்மையான பிறையும் கங்கையும் விளங்கும் குளிர்ந்த மென்மையான சடைகள் தாழ, பறை குழல் இவற்றோடு காலிற் கட்டிய கழலும் ஆரவாரிக்கப் பிணங்களை எரிக்கும் சுடு காட்டுள் எரியேந்தி ஆடுபவராவார்.

கு-ரை: இடுகாட்டில் மலையான் மகளோடு ஆடும் இறைவன் இவர் என்கின்றது.

நெறி மென் கூந்தல் - நெறித்துச் சுருண்ட மெல்லிய கூந்தல். குறை வெண் பிறை - சாபத்தால் குறைந்த வெண்மையான பிறைச்சந்திரன். படுகாடு - சுடுகாடு. சிறை வண்டு - சிறகோடு கூடிய வண்டுகள்.

Koviloor Digital Library

758. நொந்தசுடலைப் பொடிநீறணிவார்
நுதல்சேர் கண்ணினார்
கந்தமலர்கள் பலவுந்நிலவு
கமழ்புன் சடைதாழப்
பந்தண்விரலாள் பாகமாகப்
படுகாட் டெரியாடும்
எந்தம்மடிகள் கடிகொள்சாரல்
ஈங்கோய் மலையாரே. 5

759. நீறாரகல முடையார்நிரையார்
கொன்றை யரவோடும்
ஆறார்சடையா ரயில்வெங்கணையா
லவுணர் புரமூன்றும்
சீறாவெரிசெய் தேவர்பெருமான்
செங்க ணடல்வெள்ளை
ஏறார்கொடியா ருமையாளோடும்
ஈங்கோய் மலையாரே. 6

5. பொ-ரை: நறுமணங்களைக் கொண்டுள்ள சாரலையுடைய திருவீங்கோய்மலை இறைவர், இறந்தார் உடலை எரிக்கும் சுடலையில் விளைந்த சாம்பற் பொடியைத் திருநீறாக அணிந்தவர். நெற்றியைச் சார்ந்துள்ள விழியையுடையவர். மணம் பொருந்திய மலர்கள் பலவும் விளங்கும் மணங்கமழ் செஞ்சடைகள் தாழ்ந்து தொங்கப் பந்து சேரும் கைவிரல்களையுடைய உமையம்மை ஒரு பாகமாக விளங்கச் சுடுகாட்டில் எரியாடுபவர்.

கு-ரை: இதுவும் அது. நொந்த - பதன் அழிந்த. பந்து அண் விரலாள் - பந்து அணுகும் மெல்லிய விரலை உடையாள். கடி கொள் சாரல் - தெய்வமணங்கமழும் சாரல்.

6. பொ-ரை: உமையம்மையோடு திருவீங்கோய்மலையில் எழுந்தருளியுள்ள இறைவர் திருநீறு அணிந்த மார்பினையுடையவர். சரஞ்சரமாக வரிசையாய் மலரும் கொன்றை மாலை பாம்பு கங்கை ஆகியவற்றை அணிந்த சடைமுடியை உடையவர். கூரிய கொடிய கணையால் அசுரர்களின் முப்புரங்களையும் சினந்து எரித்த தேவர்

Koviloor Digital Library

760. வினையாயினதீர்த் தருளேபுரியும்
விகிர்தன் விரிகொன்றை
நனையார்முடிமேன் மதியஞ்சூடு
நம்பான் நலமல்கு
தனையார்கமல மலர்மேலுறைவான்
தலையோ டனலேந்தும்
எனையாளுடையா னுமையாளோடும்
ஈங்கோய் மலையாரே. 7

761. பரக்கும்பெருமை யிலங்கையென்னும்
பதியிற் பொலிவாய
அரக்கர்க்கிறைவன் முடியுந்தோளு
மணியார் விரல்தன்னால்

தலைவர். சிவந்த கண்களையும் வலிமையையும் உடைய வெண்மையான விடையேற்றுக் கொடியினை உடையவர்.

கு-ரை: கொன்றை, அரவு, கங்கை இவற்றைச் சடையில் உடையவரும், திரிபுரங்களை எரித்தவரும் ஈங்கோய்மலையார் என்கின்றது. அகலம் - மார்பு. அயில் - கூர்மை. அடல் - வலிமை.

7. பொ-ரை : உமையம்மையோடு திருவீங்கோய்மலையில் எழுந்தருளி விளங்கும் இறைவர். வினைகளானவற்றைத் தீர்த்து அருளையே வழங்கும் விகிர்தர். விரிந்து தழைத்த கொன்றை அரும்புகள் சூடிய முடிமீது பிறைமதியையும் சூடும் நம்பர். அழகு நிறைந்ததும் தலைமை உடையதுமான தாமரை மலர்மேல் உறையும் பிரமனின் தலையோட்டுடன் அனலையும் ஏந்தி என்னை அடிமையாகக் கொண்டருளுபவர்.

கு-ரை: வினைதீர்க்கும் விகிர்தனாய் என்னை ஆளுடைய பிரான் இவர் என்கின்றது. நனை - அரும்பு. தனையார் கமலம் - தலைமை பொருந்திய தாமரை.

8. பொ-ரை: உமையம்மையாரோடு எழுந்தருளியுள்ள ஈங்கோய்மலை இறைவர், எங்கும் பரவிய பெருமையை உடைய இலங்கை என்னும் நகரில் புகழோடு விளங்கிய அரக்கர்களுக்குத்

Koviloor Digital Library

நெருக்கியடர்த்து நிமலாபோற்றி
யென்று நின்றேத்த
இரக்கம்புரிந்தா ருமையாளோடும்
ஈங்கோய் மலையாரே. 8

762. வரியார்புலியி னுரிதோலுடையான்
மலையான் மகளோடும்
பிரியாதுடனா யாடல்பேணும்
பெம்மான் றிருமேனி
அரியோடயனு மறியாவண்ண
மளவில் பெருமையோ
டெரியாய்நிமிர்ந்த வெங்கள்பெருமான்
ஈங்கோய் மலையாரே. 9

தலைவனாகிய இராவணன் தலைகளையும் தோள்களையும் தமது அழகு பொருந்திய கால் விரலால் நெருக்கி அடர்த்து, பின் அவன் 'நிமலா போற்றி' என்று ஏத்த இரக்கம் காட்டி அருள்புரிந்தவராவார்.

கு-ரை: இராவணனை விரலால் அடர்க்க, அவன் நிமலா போற்றி என வணக்கம் செய்ய, இரக்கங்காட்டிய பெருமான் இவர் என்கின்றது.

பரக்கும் - பரந்த. அணி - காலாழி.

9. பொ-ரை : ஈங்கோய்மலை இறைவர் வரிகளோடு கூடிய புலித்தோலை உடையாகக் கட்டியவர். மலையரையன் மகளாகிய பார்வதி தேவியோடு பிரியாது அவளுடனாக இருந்து ஆடுதலை விரும்பும் தலைமை சான்றவர். தம் திருமேனியின் அடிமுடிகளைத் திருமாலும் நான்முகனும் அறியாதபடி அளவற்ற பெருமை உடையவராய் எரி உருவத்தோடு ஓங்கிநின்ற எங்கள் பெருமான் ஆவர்.

கு-ரை : உமையொருபாதியனாய், அயனும் மாலும் அறியாமல் எரியாய் நிமிர்ந்த பெருமான் இவர் என்கின்றது.

வரி - கோடு. எரியாய் - அக்கினிவடிவான அண்ணா மலையாய்.

Koviloor Digital Library

763. பிண்டியேன்று பெயராநிற்கும்
பிணங்கு சமணரும்
மண்டைகலனாக் கொண்டுதிரியு
மதியில் தேரரும்
உண்டிவயிறா ருரைகள்கொள்ளா
துமையோ டுடனாகி
இண்டைச்சடையா னிமையோர்பெருமான்
ஈங்கோய் மலையாரே. 10

764. விழவாரொலியு முழவுமோவா
வேணு புரந்தன்னுள்
அழலார்வண்ணத் தடிகளருள்சே
ரணிகொள் சம்பந்தன்
எழிலார்சுனையும் பொழிலும்புடைசூழ்
ஈங்கோய்மலையீசன்
கழல்சேர்பாடல் பத்தும்வல்லார்
கவலை களைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை : அருகதேவன் வீற்றிருக்கும் அசோகமரம் என அம் மரத்தின் பெருமை கூறிப்பெயர்ந்து செல்லும் மாறுபட்ட சமயநெறியில் நிற்கும் சமணர்களும், பிச்சை ஏற்கும் மண்டை என்னும் பாத்திரத்தைக் கையில் ஏந்தித் திரியும் அறிவற்ற புத்தரும் உண்டு பருத்த வயிற்றின ராய்க் கூறும் உரைகளைக் கொள்ளாது, உமையம்மையாரோடு உடனாய், இண்டை சூடிய சடைமுடியினனாய், இமையோர் தலைவ னாய், ஈங்கோய் மலையில் எழுந்தருளியுள்ள எம்பெருமானைச் சென்று வழிபடுவீராக.

கு-ரை : சமணரும் புத்தருமாகிய இவர்களின் உரையைக் கொள் ளாத இமையோர் பெருமான் இவர் என்கின்றது. பிண்டி - அசோகந் தளிர். ஏன்று - தாங்கி. மண்டை - பிச்சை ஏற்கும் பாத்திரம். தேரர் - புத்தர். உண்டி வயிறார் - உண்டு பருத்த வயிற்றையுடையவர்கள். இண்டை - திருமுடியிற் சூடப்படும் வட்டமாகக் கட்டப்பெற்ற மாலை.

11. பொ-ரை : திருவிழாக்களின் ஓசையும் முழவின் ஓசையும் நீங்காத வேணுபுரம் என்னும் சீகாழிப் பதியில் அழல் வண்ணனாகிய

Koviloor Digital Library

சிவபிரானின் அருள்சேரப் பெற்ற அழகிய ஞானசம்பந்தன் எழிலார்ந்த சுனையும் பொழிலும் புடைசூழ்ந்து விளங்கும் திருவீங்கோய்மலை ஈசனின் திருவடிகளைப் பரவிய இப்பதிகப் பாடல்கள் பத்தையும் ஓத வல்லவர்கள் கவலைகள் நீங்கப் பெறுவர்.

கு-ரை : சம்பந்தன் சொன்ன ஈங்கோய்மலைப் பாடல் பத்தும் வல்லார் கவலை களைவார் என்கின்றது. வேணுபுரம் என்பது சீகாழிக்கு மறுபெயர். எழில் - அழகு.

திருஞானசம்பந்தர் புராணம்

செங்கட் குறவரைத் தேவர் போற்றும்
திகழ்திரு ஈங்கோய் மலையில் மேவும்,
கங்கைச் சடையார் கழல்ப ணிந்து
கலந்த இசைப்பதி கம்பு னைந்து,
பொங்கர்ப் பொழில்சூழ் மலையும் மற்றும்
புறத்துள்ள தானங்க ளெல்லாம் போற்றிக்,
கொங்கிற் குடபுலஞ் சென்ற ணைந்தார்
கோதில்மெய்ஞ் ஞானக் கொழுந்த னையார்.

- சேக்கிழார்.

திருஈங்கோய்மலை எழுபது

அடியும் முடியும் அரியும் அயனும்
படியும் விசும்பும்பாய்ந் தேறி - நொடியுங்கால்
இன்ன தெனஅறியா ஈங்கோயே ஓங்கார
மன்னதென நின்றான் மலை.

அந்தஇள மாக்குழவி ஆயம் பிரிந்ததற்குக்
கொந்தவிழ்தேன் தோய்த்துக் குறமகளிர் - சந்தின்
இலைவளைக்கை யாற்கொடுக்கும் ஈங்கோயே மேரு
மலைவளைக்கை வில்லி மலை.

- நக்கீர தேவர்.

Koviloor Digital Library

71. திருநறையூர்ச்சித்தீச்சரம்

பதிக வரலாறு:

குடவாயிலில் வணங்கிப் பதிகம்பாடிய பிள்ளையார் 'ஊருலாவு' என்னும் நீடுதமிழ்த்தொடை புனைந்துகொண்டே வழிநடந்து திருநறையூரை யடைந்தார்கள். இதில் நறையூர் என்பது தலத்தின் பெயராகவும், சித்தீச்சரம் என்பது கோயிலின் பெயராகவும் குறிக்கப்படுகிறது. 'சித்தன் சித்தீச்சரம்' என இறைவன் திருநாமம் சித்தன் எனக் குறிக்கப்படுகிறது.

பண்: தக்கேசி

பதிக எண்: 71

திருச்சிற்றம்பலம்

765. **பிறைகொள்சடையர் புலியினுரியர்**
பேழ்வாய் நாகத்தர்
கறைகொள்கண்டர் கபாலமேந்துங்
கையர் கங்காளர்
மறைகொள்கீதம் பாடச்சேடர்
மனையின் மகிழ்வெய்திச்
சிறைகொள்வண்டு தேனார்நறையூர்ச்
சித்தீச் சரத்தாரே. 1

1. பொ-ரை: பெருமை உடைய மறையவர் தங்கள் இல்லங்களில் வேதப்பொருள்களை உள்ளடக்கிய பாடல்களைப் பாட, அதனைக் கேட்டுச் சிறகுகளைக் கொண்ட வண்டுகள் மகிழ்வெய்திப் பாடித் தேனை உண்ணுகின்ற நறையூரில் விளங்கும் சித்தீச்சரத்து இறைவர், பிறைசூடிய சடையர். புலித்தோலை உடுத்தவர். பிளந்த வாயினை உடைய பாம்பினை அணிந்தவர். விடக் கறை பொருந்திய கழுத்தை உடையவர். பிரமனது தலையோட்டை ஏந்திய கையினை உடையவர். எலும்பு மாலை அணிந்தவர்.

கு-ரை: நறையூர்ச் சீத்தீச்சரத்தார் பிறைச்சடையர், புலித்தோலர், அரவார்த்தவர், நீலகண்டர், கபாலி, கங்காளர், என்கின்றது. பேழ் வாய் -பிளந்த வாய். கங்காளம் - முழு எலும்பு. சேடர் - பெருமை யுடை யவர்.

Koviloor Digital Library

766. பொங்கார்சடையர் புனலரனலர்
பூதம் பாடவே
தங்காதலியுந் தாமுமுடனாய்த்
தனியோர் விடையேறிக்
கொங்கார்கொன்றை வன்னிமத்தஞ்
சூடிக் குளிர்பொய்கைச்
செங்காலனமும் பெடையுஞ்சேருஞ்
சித்தீச் சரத்தாரே. 2

767. முடிகொள்சடையர் முளைவெண்மதியர்
மூவா மேனிமேல்
பொடிகொணூலர் புலியினதளர்
புரிபுன் சடைதாழக்
கடிகொள்சோலை வயல்சூழ்மடுவிற்
கயலா ரினம்பாயக்
கொடிகொண்மாடக் குழாமார்நறையூர்ச்
சித்தீச் சரத்தாரே. 3

2. பொ-ரை : தழைத்த சடையினராய், கங்கை அணிந்தவராய், அனல் ஏந்தியவராய், பூதகணங்கள் பாடத் தம் காதலியாகிய உமை யம்மையும் தாமும் உடனாய், ஒப்பற்றதொரு விடைமீது, தேன் பொருந்திய கொன்றை மலர், வன்னியிலை, ஊமத்தை மலர் ஆகிய வற்றைச் சூடிக் கொண்டு குளிர்ந்த பொய்கைகளில் சிவந்த கால்களை உடைய ஆண் அன்னமும் பெண் அன்னமும் கூடிக் களிக்கும் சித்தீச் சரத்தில் எழுந்தருளியுள்ளார்.

கு-ரை : இதுவும் அவர் புனலர், அனலர், விடையேறியவர் என் கின்றது. பொங்கு - வளர்ச்சி. கொங்கு - தேன். இறைவன் தம் காதலி யும் தானும் விடையேறியிருப்பதால், பொய்கைகளில் அன்னங்களும் பெடையோடு சேர்ந்திருக்கின்றன என்று போகியாய் இருந்து உயிர்க் குப் போகத்தை நல்கும் தன்மை விளக்கியவாறு.

3. பொ-ரை : முடியாகச் சடையினை உடையவராய், ஒரு கலை யோடு தோன்றும் வெண்மையான மதியை அணிந்தவராய், மூப்படை யாத தம் திருமேனியின்மேல் திருநீற்றையும் முப்புரி நூலையும் அணிந் தவராய், புலித்தோலை உடுத்தவராய், முறுக்கப்பட்ட சடைகள்

Koviloor Digital Library

768. பின்றாழ்சடைமே னகுவெண்டலையர்
பிரமன் றலையேந்தி
மின்றாழுருவிற் சங்கார்குழைதான்
மிளிரு மொருகாதர்
பொன்றாழ்கொன்றை செருந்திபுன்னை
பொருந்து செண்பகம்
சென்றார்செல்வத் திருவார்நறையூர்ச்
சித்தீச் சரத்தாரே. 4

769. நீரார்முடியர் கறைகொள்கண்டர்
மறைக ணிறைநாவர்
பாரார்புகழாற் பத்தர்சித்தர்
பாடி யாடவே

தாழ்ந்து தொங்க மணம் கமழும் சோலைகளும் வயல்களும் சூழ்ந்த நீர் நிலைகளில் கயல் மீன்களின் இனங்கள் பாய்ந்து விளையாடக் கொடிகள் கட்டிய மாடவீடுகளின் கூட்டங்கள் நிறைந்த நறையூரில் உள்ள சித்தீச்சரத்தில் எழுந்தருளியுள்ளார்.

கு-ரை : இதுவும் அவர் சடைமுடியர், வெண்ணீற்றர், புலித் தோலர் என்கின்றது. மூவா மேனி - மூப்படையாத, என்றும் இளைய திருமேனி. அதளர் - தோலை உடையாக உடையவர்.

4. பொ-ரை : பூசைக்குகந்த பொன் போன்ற கொன்றை, செருந்தி, புன்னை, ஏற்புடையதான செண்பகம் ஆகியன வானுறப் பொருந்தி வளரும் செல்வச் செழுமையுடைய அழகிய நறையூரில் விளங்கும் சித்தீச்சரத்து இறைவர், பின்புறம் தாழ்ந்து தொங்கும் சடைமுடிமேல், விளங்கும் வெண்மையான தலை மாலையை அணிந்தவர். பிரமனது தலையோட்டைக் கையில் ஏந்தி மின்னலைத் தாழச் செய்யும் ஒளி உருவினர். சங்கக் குழையணிந்த காதினை உடையவர்.

கு-ரை : இதுவும் அவர் தலைமாலை அணிந்தவர், கபாலி, சங்கக் குண்டலர் என்கின்றது. சங்கு ஆர் குழை - சங்கினால் இயன்ற காதணி. திருவார் நறையூர் - திருநறையூர்.

5. பொ-ரை : உலகில் பரவிய தமது புகழ் மொழிகளைப் பக்தர்களும் சித்தர்களும் பாடி ஆடத் தேரோடும் வீதிகளில் முழவின்

Koviloor Digital Library

தேரார்வீதி முழவார்விழவி
னொலியுந் திசைசெல்லச்
சீரார்கோலம் பொலியுநறையூர்ச்
சித்தீச் சரத்தாரே. 5

770. நீண்டசடையர் நிரைகொள்கொன்றை
விரைகொண் மலர்மாலை
தூண்டுசுடர்பொன் னொளிகொள்மேனிப்
பவளத் தெழிலார்வந்
தீண்டுமாட மெழிலார்சோலை
யிலங்கு கோபுரம்
தீண்டுமதியந் திகழுநறையூர்ச்
சித்தீச் சரத்தாரே. 6

ஒலி, விழா ஒலியோடு பெருகி எண் திசையும் பரவ, புகழ் பொருந்திய அழகோடு விளங்கும் நறையூர்ச் சித்தீச்சரத்தில் உறையும் இறைவர், கங்கையை அணிந்த சடைமுடியினர். கறை பொருந்திய கண்டத்தை உடையவர். வேதங்கள் நிறைந்த நாவினர்.

கு-ரை: சித்தீச்சரத்தார் கங்கை முடியர், நீலகண்டர், மறைநாவர் என்கின்றது. பாரார் புகழ் - உலகம் முழுவதும் வியாபித்த புகழ்.

6. பொ-ரை : ஒன்றோடு ஒன்று வந்து பொருந்தும் மாட வீடுகளையும், அழகிய சோலைகளையும், மதியைத் தீண்டும் உயரமாக விளங்கிய கோபுரங்களையும் உடைய நறையூரில் உள்ள சித்தீச் சரத்து இறைவர், நீண்ட சடைமுடியை உடையவர். பூச்சரங்களைக் கொண்ட கொன்றையினது மலரால் தொடுத்த மாலையை அணிந்தவர். ஒளி மிகுந்து தோன்றும் பொன்போன்ற ஒளி உருவம் உடையவர். பவளம் போன்ற அழகிய செந்நிறத்தை உடையவர்.

கு-ரை : இதுவும் அது. நிரை கொள் கொன்றை - சரமாகப் பூத்த கொன்றை.

தூண்டு சுடர் - ஒருகாலைக்கொருகால் மிகுந்து தோன்றும் ஒளி. பவளத் தெழிலார் - பவளம் போன்ற அழகினை உடையவர்.

Koviloor Digital Library

771. குழலார்சடையர் கொக்கினிறகர்
கோல நிறமத்தம்
தழலார்மேனித் தவளநீற்றர்
சரிகோ வணக்கீளர்
எழிலார்நாகம் புலியினுடைமே
லிசைத்து விடையேறிக்
கழலார்சிலம்பு புலம்பவருவார்
சித்தீச் சரத்தாரே. 7

772. கரையார்கடல்சூ ழிலங்கைமன்னன்
கயிலை மலைதன்னை
வரையார்தோளா லெடுக்கமுடிகள்
நெரித்து மனமொன்றி
உரையார்கீதம் பாடநல்ல
வுலப்பி லருள்செய்தார்
திரையார்புனல்சூழ் செல்வநறையூர்ச்
சித்தீச் சரத்தாரே. 8

7. பொ-ரை : அழகு பொருந்திய பாம்பினைப் புலித்தோல் ஆடை மேல் பொருந்தக் கட்டிக் கொண்டு விடைமீது ஏறி, கழலும் சிலம்பும் கால்களில் ஒலிக்க வருபவராகிய நறையூர்ச் சித்தீச்சரத்து இறைவர், மாதொரு பாகராதலின் கூந்தலும் சடையும் அமைந்த திருமுடியினர். கொக்கின் இறகை அணிந்தவர். அழகிய நிறம் அமைந்த ஊமத்தம் மலர் சூடித் தழல் போலச் சிவந்த திருமேனியில் வெண்ணிறமான திரு நீற்றை அணிந்தவர்.

கு-ரை : அவர் கூந்தலையும் சடையையும் உடையவர், கொக் கின் இறகை அணிந்தவர், கோவண ஆடையர் என்கின்றது.குழல் - கூந்தல். கோலம் - அழகு. தவளம் - வெண்மை. கீள் - கிழித்த ஆடை. புலம்ப - ஒலிக்க.

8. பொ-ரை : அலைகளோடு கூடிய நீர் நிலைகளால் சூழப்பட்ட செல்வ வளம் மிக்க நறையூரில் விளங்கும் சித்தீச்சரத்துறையும் இறைவர், கரைகளை வந்து பொருந்தும் கடல் நாற்புறமும் சூழ்ந்துள்ள இலங்கை மன்னன் இராவணன், கயிலை மலையை, மலை போன்ற தன் தோளால் பெயர்க்க முற்பட்டபோது, தலைகளைக் கால் விரலால்

Koviloor Digital Library

773. நெடியான்பிரம னேடிக்காணார்
நினைப்பார் மனத்தாராய்
அடியாரவரு மருமாமறையு
மண்டத் தமரரும்
முடியால்வணங்கிக் குணங்களேத்தி
முதல்வா வருளென்னச்
செடியார்செந்நெற் றிகழுநறையூர்ச்
சித்தீச் சரத்தாரே. 9

774. நின்றுண்சமண ரிருந்துண்டேரர்
நீண்ட போர்வையார்
ஒன்றுமுணரா வூமர்வாயி
லுரைகேட் டுழல்வீர்காள்

நெரிக்க, அவன்தன் பிழை உணர்ந்து நல் உரைகளால் இயன்ற பாடல் களைப் பாடிப் போற்ற, அளவிடமுடியாத நல்லருளை வழங்கியவர்.

கு-ரை : இராவணனை அடர்த்து, அவன் சாமகானம் பாட அருள்செய்தவர் இவர் என்கின்றது. வரையார் தோளால் - மலையை யொத்த தோள்களால். உலப்பில் - வற்றாத.

9. பொ-ரை : திருமாலும் பிரமனும் தேடிக் காண இயலாதவராய் விளங்கிய சிவபெருமான் தம்மை நினைப்பவரின் மனத்தில் விளங்கித் தோன்றுபவராய், அடியவர்களும், அரிய புகழ்மிக்க வேதங்களும், மேலுலகில் வாழும் தேவர்களும், தம் முடியால் வணங்கிக் குணங் களைப் போற்றி 'முதல்வா அருள்' என்று வழிபடுமாறு செந்நெற் பயிர்கள் புதர்களாய்ச் செழித்துத் திகழும் திருநறையூர்ச் சித்தீச்சரத்தில் எழுந்தருளியுள்ளார்.

கு-ரை : அடியாரும் அமரரும் 'முதல்வா! அருள்' என்று தோத் திரிக்க, இத்தலத்து எழுந்தருளியிருக்கின்றார் என்கின்றது. நெடியான் - திருமால். நேடி - தேடி. பதவிகளில் இருப்பார் தேடிக்காணாத பெருமான், தியானிப்பவர்கள் மனத்தில் இருக்கின்றார் என எளிமை கூறியவாறு. செடி - புதர்.

10. பொ-ரை : நின்றுண்ணும் சமணர்களும், இருந்துண்ணும் புத்தர்களும் சித்தாந்த சைவச் சிறப்பொன்றையும் அறியாத ஊமர்கள். அவர்கள் தம் வாயால் கூறும் உரைகளைக் கேட்டு உழல் பவரே!

Koviloor Digital Library

கன்றுண்பயப்பா லுண்ணமுலையிற்
கபால மயல்பொழியச்
சென்றுண்டார்ந்து சேருநறையூர்ச்
சித்தீச் சரத்தாரே. 10

775. குயிலார்கோல மாதவிகள்
குளிர்பூஞ் சுரபுன்னை
செயிலார் பொய்கை சேருநறையூர்ச்
சித்தீச் சரத்தாரை
மயிலார்சோலை சூழ்ந்தகாழி
மல்கு சம்பந்தன்
பயில்வார்க்கினிய பாடல்வல்லார்
பாவ நாசமே. 11

திருச்சிற்றம்பலம்

எளிதில் அருள் நல்கும் சிவபிரான், கன்று விருப்போடு உண்ண, முலைக் காம்பில் சுரந்த பால் பாத்திரத்தில் நிறைந்து அயலினும் பொழிவதைக் கண்டு பால் போதுமென மீண்டும் கன்றை அவிழ்த்து விட அக் கன்றுகள் சென்று உண்டு கொட்டிலை அடையும் நறையூர்ச் சித்தீச்சரத்தில் எழுந்தருளி உள்ளார். சென்று தொழுமின்.

கு-ரை : ஒன்றுமறியாத புத்தர் சமணர்களின் உரைகளைக் கேட்டுழலும் மக்களே! இத்தலத்தைச் சேரும் என்கின்றது. கன்று உண் பயப்பால் உண்ண - கன்று உண்ணும் விருப்பால் உண்ண. முலையில் - முலையிலிருந்து. கபாலம் அயல் பொழிய - கறவைப் பாத்திரம் நிறைந்து வழிய. சென்று உண்டு ஆர்ந்து சேரும் - மீளவும் கன்றுபோய் உண்டு நிறைந்து சேரும் என்க.

11. பொ-ரை: குயில்கள் வாழும் அழகிய மாதவிகளும், குளிர்ந்த அழகிய சுரபுன்னைகளும் வயல்களில் நீரைச் செலுத்தும் பொய்கை களும் நிறைந்த நறையூர்ச் சித்தீச்சரத்து இறைவரை மயில்கள் வாழும் சோலைகள் சூழ்ந்த சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன் பயில்பவர்க்கு இனியவாய்ப் போற்றிப்பாடிய இப்பதிகப் பாடல்களை ஓத வல்லவர்களின் பாவம் நாசமாம்.

கு-ரை: இப்பாடல் பாடுவார்க்குப் பாவம் நாசம் ஆம் என் கின்றது. மாதவி - குருக்கத்தி. செயில் - வயலில் இப்பாடல் பயில் வார்க்கு இனிமையாய் இருக்குமென்று இதன் இயல்பு விளக்கியவாறு.

Koviloor Digital Library

72. திருக்குடந்தைக்காரோணம்

பதிக வரலாறு:

உலகத்துயிர்கள் அனைத்தையும் உடம்பொடுகூட்டித் தோற்றுவித்த அந்தணனாகிய பிரமன் வழிபட்டுய்ந்த சீகாழிப் பதிச் செம்மலாகிய திருஞானசம்பந்தப் பிள்ளையார் சிவபுரத்தைத் தொழுது பதிகம்பாடி, அண்மையிலுள்ள விடையேறும் பெருமான் திருவடியையும் போற்றத் திருவுளங் கொண்டு, திருக்குடமூக்கு என்னும் கும்பகோணத் தலத்தை அடைந்தார். அதனையுணர்ந்த அவ்வூர் அந்தணர்கள் வேத ஒலிவிம்ம, மங்கள வாத்தியங்கள் முழங்க, ஊர்ப்புறத்தே வந்து எதிர் கொண்டு அழைத்துச் சென்றார்கள். குடமூக்காலயத்தைக் குறுகினார்கள். பிள்ளையார் 'குடமூக்கை உவந்திருந்த பெருமான் எம்மிறை' என்று பெருகிய இசையாற் பதிகம் பாடினார்கள். பின்னர் குடந்தைக் கீழ்க்கோட்டம் வணங்கிக் கொண்டு குடந்தைக் காரோணம் சென்றார்கள். அங்கே கங்கை முதலாகிய புனித தீர்த்தங்கள் மாமகத்தில் நீராடுவதற்கு வரும் அக்கோயிலை வணங்கினார்கள். மன்மதனை எரித்த பெருமானது மலரடியைக் கண்டார்கள். கண் களித்தார்கள். 'வாரார் கொங்கை' என்னும் பண்ணார்ந்த திருப்பதிகம் பாடினார்கள்.

பண்: தக்கேசி

பதிக எண்: 72

திருச்சிற்றம்பலம்

776. வாரார்கொங்கை மாதோர்பாக
மாக வார்சடை
நீரார்கங்கை திங்கள்சூடி
நெற்றி யொற்றைக்கண்

1. பொ-ரை : திருக்குடமூக்கில் விளங்கும் காரோண்த்தில் கருமை பொருந்திய கண்டத்தராய், எட்டுத் தோள்களோடு விளங்கும் எந்தையாராகிய இறைவர், கச்சணிந்த கொங்கைகளை உடைய பார்வதி தேவியை ஒருபாகமாக் கொண்டு, நீண்ட சடைமிசை நீர் மயமான கங்கை, பிறை ஆகியவற்றைச் சூடி, இயல்பான இருவிழி

Koviloor Digital Library

கூரார்மழுவொன் றேந்தியந்தண்
குழகன் குடமூக்கில்
காரார்கண்டத் தெண்டோளெந்தை
காரோ ணத்தாரே. 1

777. முடியார்மன்னர் மடமான்விழியார்
மூவுலகும் மேத்தும்
படியார்பவள வாயார்பலரும்
பரவிப் பணிந்தேத்தக்
கொடியார்விடையார் மாடவீதிக்
குடந்தைக் குழகாரும்
கடியார்சோலைக் கலவமயிலார்
காரோ ணத்தாரே. 2

களோடு நெற்றியில் ஒற்றைக் கண்ணுடையவராய், கூரிய மழு என்னும் ஓர் ஆயுதத்தை ஏந்தி, அழகிய தண்ணளி செய்யும் குழகராய் விளங்கு கின்றார்.

கு-ரை : குடந்தைக் காரோணத்தார் உமையொரு பாகமாக, சடையில் கங்கையையும் திங்களையும் சூடி, மழுவேந்திய குழகன் ஆவார் என்கின்றது. வார் - கச்சு. குழகன் - இளமை உடையவன்.

2. பொ-ரை : மாட வீதிகளை உடைய குடந்தை என்னும் திருத் தலத்தில் உள்ளதும், மணம் கமழும் சோலைக்ளில் தோகைகளோடு கூடிய மயில்கள் விளங்குவதும் ஆகிய காரோணத்தில், இளமை பொருந்தியவராய் இலங்கும் இறைவர், முடிமன்னர்கள், இளைய மான் போன்ற விழியினை உடைய மகளிர், மேல் கீழ் நடு என்னும் மூவுலக மக்கள், தேவர், முனிகணங்கள், பவளம் போன்ற வாயினை உடைய அரம்பையர் முதலானோர் பலரும் பரவிப் பணிந்து போற்ற விடைக்கொடியோடு விளங்குபவராவார்.

கு-ரை : இவர் முடிமன்னர், மான்விழியார், மூவுலகேத்தும் முதல்வர் என்றது.

கொடியார் விடை - கொடியில் பொருந்திய இடபம். கடியார் சோலை - மணம் பொருந்திய சோலை.

Koviloor Digital Library

778. மலையார்மங்கை பங்கரங்கை
யனலர் மடலாரும்
குலையார்தெங்கு குளிர்கொள்வாழை
யழகார் குடமூக்கில்
முலையாரணிபொன் முளைவெண்ணகையார்
மூவா மதியினார்
கலையார்மொழியார் காதல்செய்யுங்
காரோ ணத்தாரே. 3

779. போதார்புனல்சேர் கந்தமுந்திப்
பொலியவ் வழகாரும்
தாதார்பொழில்சூழ்ந் தெழிலார்புறவி
லந்தண் குடமூக்கில்
மாதார்மங்கை பாகமாக
மனைகள் பலிதேர்வார்
காதார்குழையர் காளகண்டர்
காரோ ணத்தாரே. 4

3. பொ-ரை: மட்டைகளோடும் குலைகளோடும் கூடிய தென்னைகளும் குளிர்ந்த வாழைகளும் சூழ்ந்த அழகமைந்த குடமூக்கு என்னும் திருத்தலத்தில், பொன்னணிகள் விளங்கும் தனங்களையும் மூங்கில் முளை போன்ற வெண்மையான பற்களையும் இளம் பிறை போன்ற நெற்றியையும் இசைக்கலை சேர்ந்த மொழியையும் உடைய மகளிர் பலரால் விரும்பப்படும் காரோணத்து இறைவர் மலை மங்கை பங்கர்; அழகிய கையில் அனல் ஏந்தியவர்.

கு-ரை: உமையொருபாகர், மழுவேந்தியவர் பிறைமதியர் இவர் என்கின்றது. மடல் - மட்டை. முலையார் என்பது முதல் கலை யார் மொழியார் என்பது வரையில் உமாதேவியைக் குறிக்குஞ் சொற றொடர்கள். மூவா மதியினார் - இளம்பிறை போன்ற நெற்றியினை உடையவர்.

4. பொ-ரை : நீர் நிலைகளில் தோன்றும் தாமரை கழுநீர் குவளை முதலிய பூக்களின் வாசனை முற்பட்டுப் பொலிவெய்த, அழகு நிரம்பிய மகரந்தம் நிறைந்த சோலைகளாலும் எழிலார்ந்த காடு

Koviloor Digital Library

780. பூவார்பொய்கை யலர்தாமரைசெங்
கழுநீர் புறவெல்லாம்
தேவார்சிந்தை யந்தணாளர்
சீராலடி போற்றக்
கூவார்குயில்க ளாலுமயில்க
ளின்சொற் கிளிப்பிள்ளை
காவார்பொழில்சூழ்ந் தழகார்குடந்தைக்
காரோ ணத்தாரே. 5

களாலும் சூழப்பெற்றதாய் விளங்கும் அழகிய தண்மையான குட மூக்கில் விளங்கும் காரோணம் எனப் பெயர் பெறும் கோயிலில் எழுந் தருளிய இறைவர், காதல் நிறைந்த உமையம்மை பாகராக மனைகள் தோறும் பலி ஏற்பவர். காதில் குழை அணிந்தவர். காளம் என்னும் நஞ் சினைக் கண்டத்தே கொண்டவர்.

கு-ரை : பலிதேர்வார், குழைக்காதர், காளகண்டர் இவர் என் கின்றது. போது - தாமரை முதலிய பூக்கள். தாது - மகரந்தம். எழில் - அழகு. புறவு - காடு. மாதர் மங்கை - காதல் நிறைந்த உமாதேவி.

5. பொ-ரை: சிவபிரான், தெய்வத்தன்மை நிறைந்த மனத் தினராகிய அந்தணர்கள் அழகிய பொய்கைகளில் பூத்த தாமரை செங் கழுநீர் ஆகியவற்றையும் முல்லை நிலங்களில் பூத்த மல்லிகை முல்லை முதலிய மணமலர்களையும் கொண்டு தனது புகழைக் கூறித் திருவடி களைப் போற்ற, கூவும் குயில்கள் ஆடும் மயில்கள், இன்சொல் பேசும் கிளிப்பிள்ளைகள் ஆகிய பறவைகளை உடையதும், பணியாளர் களால் காக்கப் பெறுவதுமாகிய பொழிலால் சூழப்பெற்ற அழகிய குடந்தைக் காரோணத்தில் எழுந்தருளியுள்ளார்:

கு-ரை: தாமரை செங்கழுநீர் முதலிய பூக்களைக் கொண்டு தெய்வத்தன்மை கொண்ட அந்தணர்கள் அடிபோற்ற இருப்பவர் காரோணத்தார் என்கின்றது. பூவார்பொய்கை - கொட்டி அல்லி தாமரை முதலிய நீர்ப்பூக்கள் நிறைந்த பொய்கை. அவற்றுள் தாமரை யும், கழுநீரும் இறைவன் வழிபாட்டிற்கு ஏற்றன ஆதலின், பின்னர் விதந்து கூறப்பட்டன. புறவு - முல்லை. தே ஆர் சிந்தை - தெய்வத் தன்மை நிறைந்த மனம். சீரால் - இறைவன் புகழால். ஆலும் - அகவும். அந்தணாளர் அடிபோற்றப் பொழில் சூழ்ந்து அழ்கார் காரோணத்தார் என முடிக்க.

Koviloor Digital Library

781. மூப்பூர்நலிய நெதியார்விதியாய்
முன்னே யனல்வாளி
கோப்பார்பார்த்த னிலைகண்டருளுங்
குழகர் குடமூக்கில்
தீர்ப்பாருடலி லடுநோயவலம்
வினைகள் நலியாமைக்
காப்பார்கால னடையாவண்ணங்
காரோ ணத்தாரே. 6

782. ஊனார்தலைகை யேந்தியுலகம்
பலிதேர்ந் துழல்வாழ்க்கை
மானார்தோலார் புலியினுடையார்
கரியின் னுரிபோர்வை

6. பொ-ரை: குடமூக்கிலுள்ள காரோணத்து இறைவர் மூப்பு ஊர்ந்துவந்து நலிய நியதி தத்துவத்தின் வழியே நெறியாய் நின்று நம்மைக் காப்பவர். முற்காலத்தில் அனலையே அம்பாக வில்லில் கோத்து முப்புரங்களை அழித்தவர். அருச்சுனன் செய்த தவத்தின் நிலை கண்டு இரங்கிப் பாசுபதக் கணை வழங்கியருளிய குழகர். நம் உடலை வருத்தும் நோய்கள், நம்மைப் பற்றிய வினைகள், மனத்தை வருத்தும் துன்பங்கள் ஆகியவற்றைத் தீர்ப்பவர். காலன் அடையா வண்ணம் காப்பவர்.

கு-ரை: திரிபுரம் எரித்தகாலத்து அம்பைக்கோப்பவரும் விசயன் நிலைகண்டு அருள் செய்தவருமாகிய குழகரது குடமூக்கில் அடியார்களைக் காலன்குறுகாதவாறு காப்பவர் காரோணத்தார் என்கின்றது. மூப்பு ஊர் நலிய - முதுமை ஊர்ந்து வருத்த. நெதியார் விதியாய் - நியதியின்வழியே நடக்கும் நெறியாய். பார்த்தன் - அருச்சுனன். அடுநோய் - வருத்துகின்ற நோய்கள். அவலம் - துன்பம். மூப்பு ஊர் நலிய, நெதியார் விதியாய் முன்னே கோப்பார், குழகர் குடமூக்கில், வினைகள் நலியாமை உடலில் அடுநோய் அவலம் தீர்ப்பார், காலன் அடையாவண்ணங் காப்பார் காரோணத்தார் எனக் கூட்டுக.

7. பொ-ரை : விளங்கும் குடமூக்கில் உள்ள செல்வவளம் மிக்க காரோணத்து இறைவர், ஊன் பொருந்திய தலையோட்டைக் கையில் ஏந்தி, உலகம் முழுதும் திரிந்து பலி ஏற்று உழலும் வாழ்க்கையர், மான்

Koviloor Digital Library

தேனார்மொழியார் திளைத்தங்காடித்
திகழுங் குடமூக்கில்
கானார்நட்ட முடையார்செல்வக்
காரோ ணத்தாரே. 7

783. வரையார்திரடோண் மதவாளரக்க
னெடுப்ப மலைசேரும்
விரையார்பாத நுதியாலூன்ற
நெரிந்து சிரம்பத்தும்
உரையார்கீதம் பாடக்கேட்டங்
கொளிவாள் கொடுத்தாரும்
கரையார்பொன்னி சூழ்தண்குடந்தைக்
காரோ ணத்தாரே. 8

தோலைப் பூணநூலில் அணிந்தவர். தேனார் மொழி அம்மையோடு குடமூக்கில் கூடி மகிழ்ந்து சுடுகாட்டில் நடனம் புரிபவர்.

கு-ரை: கபாலம் ஏந்திப் பலி ஏற்று உழலும் இறைவன் காரோ ணத்தார் என்கின்றது. மானார் தோலார் - மான்தோலை உடையவர். கரியின் உரிபோர்வை - யானைத்தோலால் ஆகிய போர்வையை உடையவர். திளைத்து - கூடி. தேனார் மொழியாள்என்பது இத்தலத்து அம்மையின் திருநாமம்.

8. பொ-ரை: கரைகளோடு கூடிய காவிரியாற்று நீர் சூழ்ந்த தண்மையான குடந்தை மாநகரில் அமைந்த காரோணத்து இறைவர் மலை போன்ற திரண்ட தோள்களை உடைய மதம் மிக்க வாட்போரில் வல்ல இராவணன் கயிலைமலையைப் பெயர்க்க, அவ்வளவில் தம் மணம் கமழும் திருவடி நுனிவிரலால் அம்மலையில் சேர்த்து ஊன்றி, அவ்விராவணன் தலை பத்தும் நெரித்துப் புகழ்மிக்க சாம கானத்தைப் பாடக் கேட்டு, அப்பொழுதே அவனுக்கு ஒளிபொருந்திய சந்திரஹாசம் என்னும் வாளைக் கொடுத்தவர் ஆவார்.

கு-ரை: இராவணன் கயிலையை எடுக்க, பெருவிரலை ஊன்றி நெரித்த சிரங்கள் பத்திலிருந்தும், சாமகானங்கேட்டு அருள்செய்தவர் இவர் என்கின்றது. சீபாதந்தாங்குவார் இறைவனை இருகையில் அன்போடு கூப்பிடுகிறார்கள்; இவன் மதத்தால் இருக்கிறான்;

Koviloor Digital Library

784. கரியமாலுஞ் செய்யபூமே
லயனுங் கழறிப்போய்
அரியவண்டந் தேடிப்புக்கு
மளக்க வொண்கிலார்
தெரியவரிய தேவர்செல்வந்
திகழுங் குடமூக்கில்
கரியகண்டர் காலகாலர்
காரோ ணத்தாரே. 9

785. நாணாரமணர் நல்லதறியார்
நாளுங் குரத்திகள்
பேணார்தூய்மை மாசுகழியார்
பேசே லவரோடும்
சேணார்மதிதோய் மாடமல்கு
செல்வ நெடுவீதிக்
கோணாகரமொன் றுடையார்குடந்தைக்
காரோ ணத்தாரே. 10

ஆதலால் அடக்குண்டான் என்பார். மதவாள் அரக்கன் என்று உரைத்தார். விரை - மணம். உரையார்கீதம் - புகழ் நிறைந்த சாம கீதம்.

9. பொ-ரை : செல்வம் விளங்கும் குடமூக்கில் உள்ள காரோணத்து இறைவர் கருநிறம் பொருந்திய திருமாலும் சிவந்த தாமரை மலர் மேல் விளங்கும் நான்முகனும் ஒருவரோடு ஒருவர் மாறுபடப் பேசியவராய் அரிய உலகங்கள் அனைத்தும் தேடிச் சென்றும் அடி முடிகளை அளக்க ஒண்ணாதவராய் உயர்ந்து நின்ற பெரியவர். முனைப்புடையவரால் காணுதற்கு அரியவர். கருநிறம் பொருந்திய கண்டத்தினர். கால காலர்.

கு-ரை : அயனும் மாலும் அறியவொண்ணாத காலகாலர் குடமூக்கின் காரோணத்தார் என்கின்றது. கழறி - ஒருவருக்கொருவர் இடித்துப்பேசி.

10. பொ-ரை : சமணர்கள் நாணம் இல்லாதவர்கள். நல்லதை அறியாதவர்கள். நாள்தோறும் பெண்பால் குருமார்களும், தூய்மை பேணாதவர்கள். உடல் மாசை நீராடிப் போக்கிக் கொள்ளாதவர்கள். அவர்

Koviloor Digital Library

786. கருவார்பொழில்சூழ்ந் தழகார்செல்வக்
காரோ ணத்தாரைத்
திருவார்செல்வ மல்குசண்பைத்
திகழுஞ் சம்பந்தன்
உருவார்செஞ்சொன் மாலையிவைபத்
துரைப்பா ருலகத்துக்
கருவாரிடும்பைப் பிறப்பதறுத்துக்
கவலை கழிவாரே. 11

திருச்சிற்றம்பலம்

களோடு பேசவும் செய்யாதீர்கள். வான் அளாவிய மதியினைத் தோயும் மாட வீடுகளைக் கொண்ட செல்வச் செழுமை உடைய வீதிகளோடு கூடிய காரோணமாகிய இருப்பிடத்தை உடையவர் சிவபெருமானார். அவரைச் சென்று வழிபடுவீர்களாக.

கு-ரை : கோணமாகிய இருப்பிடத்தை உடையவர் இவர் என்கின்றது. குரத்திகள் - பெண்பால் துறவிகள் ஆரியாங்கனைகள். தூய்மை பேணார் - பரிசுத்தத்தைப் போற்றாதவர்கள். சேண்- ஆகாயம்.

11. பொ-ரை : அடர்த்தியால் கருநிறம் பெற்ற பொழில்கள் சூழ்ந்த அழகிய செல்வக் காரோணத்து இறைவரைத் தெய்வ நலத்தால் விளைந்த செல்வம் நிறைந்த சண்பை என்னும் சீகாழிப் பதியில் விளங்கும் ஞானசம்பந்தன் பாடிய செஞ்சொல் மாலையாகிய இப்பதிகப் பாடல்கள் பத்தையும் உரைப்பவர், இவ்வுலகில் மீளக் கருவுற்று இடர்ப்படும் பிறப்பினை எய்தாது கவலைகள் நீங்கப் பெறுவர்.

கு-ரை : குடந்தைக் காரோணத்தாரைச் சண்பை ஞானசம்பந்தன் சொன்ன இம்மாலையைச் சொல்பவர்கள் பிறப்பறுத்துக் கவலையிலிருந்து நீங்குவார்கள் என்கின்றது. கருவார் பொழில்- கரிய சோலை. கரு ஆர் இடும்பைப் பிறப்பு - கருப்பையில் படும் துன்பம் நிறைந்த பிறப்பு.

Koviloor Digital Library

73. திருக்கானூர்

பதிக வரலாறு:

திருமழபாடியை வணங்கிப் பதிகம்பாடி அங்கு எழுந் தருளிய பிள்ளையார், திருக்கானூரை அடைந்தார்கள். 'வ்ானார் சோதி' என்னும் இந்த வளமார் பதிகத்தைப்பாடி, வணங்கி னார்கள்.

பண்: தக்கேசி

பதிக எண்: 73

திருச்சிற்றம்பலம்

787. வானார்சோதி மன்னுசென்னி
வன்னி புனங்கொன்றைத்
தேனார்போது தானார்கங்கை
திங்க ளொடுசூடி
மானேர்நோக்கி கண்டங்குவப்ப
மாலை யாடுவார்
கானூர்மேய கண்ணார்நெற்றி
யானூர் செல்வரே. 1

1. பொ-ரை : திருக்கானூரில் மேவிய கண்பொருந்திய நெற்றி யினை உடையவரும், ஆனேற்றை ஊர்ந்து வருபவருமாகிய செல்வர், வானத்தில் ஒளியோடு விளங்கும் சூரிய சந்திரர் போன்ற ஒளி மன்னும் சென்னியில் வன்னி, காடுகளில் பூத்த தேன் பொருந்திய கொன்றை மலர், தானே வந்து தங்கிய கங்கை, திங்கள் ஆகியவற்றைச் சூடி, மான் போன்ற மருண்ட கண்களையுடைய உமையம்மை கண்டு மகிழ மாலைக் காலத்தில் நடனம் புரிபவராவர்.

கு-ரை : கானூர் மேவிய செல்வர், சென்னியிலே வன்னி, கொன்றை, திங்கள், கங்கை சூடி அம்மைகாண ஆடுவார் என்கின்றது.

வானார்சோதி - வானிலுள்ள ஒளிப்பொருளாகிய சூரியனும் சந்திரனும். சென்னி - திருமுடி. வன்னி - வன்னிப் பத்திரம். மானேர் நோக்கி - மானை ஒத்த கண்களையுடைய பார்வதி. ஆன் ஊர் செல்வர் - இடபத்தை ஊர்ந்த செல்வர்.

Koviloor Digital Library

788. நீந்தலாகா வெள்ளமூழ்கு
நீள்சடை தன்மேலோர்
ஏய்ந்தகோணற் பிறையோடரவு
கொன்றை யெழிலாரப்
போந்தமென்சொ லின்பம்பயந்த
மைந்தரவர் போலாம்
காந்தள்விம்மு கானூர்மேய
சாந்த நீற்றாரே. 2

789. சிறையார்வண்டுந் தேனும்விம்மு
செய்ய மலர்க்கொன்றை
மறையார்பாட லாடலோடு
மால்விடை மேல்வருவார்

2. பொ-ரை : காந்தள் செடிகள் தழைத்து வளர்ந்து பூத்து மணம் பரப்பும் கானூரில் மேவிய சந்தனமும் திருநீறும் பூசிய இறைவர், தடுக்க முடியாதபடி பெருகிவந்த கங்கையினது வெள்ளம் மூழ்கி மறைந்துபோன நீண்ட சடைமுடிமேல் பொருந்த வளைந்த பிறை மதியோடு, பாம்பு, கொன்றைமலர் ஆகியன அழகுதர வீதியுலா வந்து அழகிய மென் சொற்களால் இன்பம் தந்த மைந்தர் ஆவார்.

கு-ரை : கானூர்மேவிய செல்வர், கங்கையினையுடைய சடையின் மேல் பிறையும் கொன்றையும் பொருந்த, இன்சொல்லால் இன்பம் பயக்கும் இறைவர்போலாம் என்கின்றது. நீந்தலாகாவெள்ளம் மூழ்கும் நீள் சடை - நீந்தமுடியாத அளவு வேகத்தோடு வந்த கங்கை வெள்ளம் மூழ்கி மறைந்துபோன சடை. ஏய்ந்த - பொருந்திய. போந்த - தன்வாயினின்றும் வந்த. மென்சொல் - மெல்லிய சொற்களால்; என்றது நயந்து பின்னிற்றலால் இன்பந்தந்த தலைவர் என்றவாறு. இது வழிநாட் புணர்ச்சிக்கண் பிரிந்த தலைமகன் காலம் நீட்டிக்க, கவன்ற தலைவி தலைநாளில் மென்சொல்லால் இன்பம் பயந்தமை எண்ணி நைகின்ற நிலையை அறிவிக்கின்றது.

3. பொ-ரை : கருநிறமான சோலைகள் சூழ்ந்த கானூரில் மேவிய பிறை பொருந்திய சடையினராகிய இறைவர், சிறகுகளோடு கூடிய வண்டுகளும் அவற்றால் உண்ணப்பெறும் தேனும் நிறைந்து செவ்விதாக மலர்ந்த கொன்றை மலர்களைச் சூடியவராய் வேதப்

Koviloor Digital Library

இறையார்வந்தெ னில்புகுந்தென்
னெழினல முங்கொண்டார்
கறையார்சோலைக் கானூர்மேய
பிறையார் சடையாரே. 3

790. விண்ணார்திங்கட் கண்ணிவெள்ளை
மாலை யதுசூடித்
தண்ணாரக்கோ டாமைபூண்டு
தழைபுன் சடைதாழ
எண்ணாவந்தெ னில்புகுந்தங்
கெவ்வ நோய்செய்தான்
கண்ணார்சோலைக் கானூர்மேய
விண்ணோர் பெருமானே. 4

பாடல்களைப் பாடி ஆடுபவராய்ப் பெரிய விடைமேல் வருவார். அவ்வாறு வரும் இறைவர் என் இல்லத்தே புகுந்து என் அழகையும் நலத்தையும் கவர்ந்து சென்றார், இதுமுறையோ?.

கு-ரை : கானூர்மேவிய பிறையார், சடையார், விடைமேல் வருவாராய் என் வீட்டில் புகுந்து என் நலத்தைக் கொண்டார் என்று தலைவி அறத்தொடு நிற்பதாக எழுந்தது. சிறை - சிறகு. மறை ஆர் பாடல் - வேதப்பாடல். மால்விடை - பெரிய இடபம். இறையார் - சிவன். எழில்நலம் என்பது எழிலும் நலமும் என உம்மைத் தொகை. கறை யார் சோலை - இருள் சூழ்ந்த சோலை.

4. பொ-ரை : இடம் அகன்ற சோலைகள் சூழ்ந்த திருக்கானூரில் மேவிய விண்ணோர் தலைவராகிய சிவபிரானார் வானகத்தில் பொருந்திய பிறை மதியைக் கண்ணியாகச்சூடி, வெண்ணிறமான மாலையை அணிந்து, குளிர்ந்த என்புமாலை, ஆமையோடு ஆகிய வற்றைப் புனைந்து தழைத்த சிவந்த சடைகள் தொங்க, என்னை அடைய எண்ணி வந்து என் இல்லம் புகுந்து, எனக்கு மிக்க விரக வேதனையைத் தந்து சென்றார். இது முறையோ?

கு-ரை : வீட்டில் கன்னம்வைத்துப் புகுந்த கள்வனின் அடையாளங் கூறுவார்போலத் தலைவி, இல்புகுந்து எவ்வஞ்செய்த தலைவனின் கண்ணி அணி அடையாளங்கள் இவற்றைக் கூறுகின்

Koviloor Digital Library

791. தார்கொள்கொன்றைக் கண்ணியோடுந்
தண் மதியஞ்சூடி
சீர்கொள்பாட லாடலோடு
சேட ராய்வந்து
ஊர்கள்தோறு மையமேற்றென்
னுள்வெந் நோய்செய்தார்
கார்கொள்சோலைக் கானூர்மேய
கறைக்கண் டத்தாரே. 5

792. முளிவெள்ளெலும்பு நீறுநூலு
மூழ்கு மார்பராய்
எளிவந்தார்போ லையமென்றெ
னில்லே புகுந்துள்ளத்

றாள். விண் - ஆகாயம். கண்ணி - தலைமாலை. தண் ஆர் அக்கு - குளிர்ச்சி பொருந்திய எலும்புமாலை. எண்ணாவந்து என் இல் புகுந்து எவ்வ நோய் செய்தான் - யான் அறியாமையால் எண்ணாதிருந்த போதிலும், வலியவந்து இல்லில் புகுந்து கலந்து பிரிந்த மிக்க துன்பத்தைச் செய்தான்; என்றது ஆன்மா தலைவனை, தானே சென்று அடைதற்கும், கலத்தற்கும், பிரிதற்கும் என்றும் சுதந்திரமில்லாதன என்று அறிவித்தவாறு. கண் - இடம்.

5. பொ-ரை : கருநிறம் பொருந்திய சோலைகள் சூழ்ந்த கானூரில் மேவிய கறைக்கண்டர், கொன்றை மலர்களால் இயன்ற கண்ணி தார் ஆகியவற்றை அணிந்தவராய்க் குளிர்ந்த பிறைமதியை முடியில் சூடி, சிறப்புமிக்க ஆடல் பாடல்களோடு பெருமைக்குரியவராய் வந்து ஊர்கள்தோறும் திரிந்து, பலியேற்று, என் மனத்தகத்தே கொடிய விரக வேதனையைத் தந்து சென்றார்.

கு-ரை : பிச்சை ஏற்பார்போல் வந்து என் மனத்திற்குப் பெரு நோய் செய்தார் என்கின்றது. இதுவும் தலைவி கூற்று. தார் - மார்பின் மாலை. கண்ணி - தலையிற்சூடப்படும் மாலை. சேடர் - காதலால் தூது செல்லும் தோழர். உள் - மனம்.

6. பொ-ரை : தேன் பொருந்திய மலரில் கள்ளுண்டு களித்த வண்டுகள் யாழ்போல ஒலி செய்யும் திருக்கானூரில் மேவிய ஒளி

Koviloor Digital Library

தெளிவுநாணுங் கொண்டகள்வர்
தேற லார்பூவில்
களிவண்டியாழ்செய் கானூர்மேய
வொளிவெண் பிறையாரே. 6

793. மூவாவண்ணர் முளைவெண்பிறையர்
முறுவல் செய்திங்கே
பூவார்கொன்றை புனைந்துவந்தார்
பொக்கம் பலபேசிப்
போவார்போல மால்செய்துள்ளம்
புக்க புரிநூலர்
தேவார்சோலைக் கானூர்மேய
தேவ தேவரே. 7

பொருந்திய வெண்பிறையை முடியிற் சூடிய இறைவர், காய்ந்த வெண்மையான எலும்பும் திருநீறும் முப்புரி நூலும் பொருந்திய மார்பினராய் எளிமையாக வந்தவர் போல வந்து, 'ஐயம் இடுக' என்று கூறிக் கொண்டே என் இல்லத்தில் புகுந்து உள்ளத் தெளிவையும் நாணத்தையும் கவர்ந்து சென்ற கள்வர் ஆவார்.

கு-ரை : இதுவும்; பிச்சை என்று சொல்லிக்கொண்டு வீட்டுக்கு வந்து என்னுடைய தெளிவையும் நாணத்தையுங்கொண்ட கள்வர் இவர் என்கின்றது. முளி - காய்ந்த. எளிவந்தார்போல் - இரங்கத் தக்கவர்போல். உள்ளத் தெளிவும் நாணுங்கொண்ட கள்வர் என்றது தன்னுடைய நிறையும் நாணும் அகன்றன என்பதை விளக்கியது. தேறல் - தேன்.

7. பொ-ரை : தெய்வத்தன்மை வாய்ந்த சோலைகள் சூழ்ந்த கானூரில் மேவிய தேவதேவராகிய சிவபிரானார், மூப்பு அடையாத அழகினர். ஒரு கலையோடு முளைத்த வெண்மையான பிறையை அணிந்தவர். அவர் கொன்றை மாலை சூடியவராய்க் காமக் குறிப்புத் தோன்றும் புன்சிரிப்புடன் என் இல்லம் நோக்கி வந்து, பொய் கலந்த வார்த்தைகளைப் பேசிக் கொண்டிருந்து போவாரைப்போல் காட்டி என்னை மயக்கி என் உள்ளத்தில் புக்கொளித்த புரிநூலர் ஆவார்.

கு-ரை : இவர் வரும்போது பிறைசூடி, கொன்றை மாலை யணிந்து, புன்சிரிப்புச் செய்துகொண்டே வந்தார்; பல பொய்யைப்

Koviloor Digital Library

794. தமிழினீர்மை பேசித்தாளம்
வீணை பண்ணிநல்ல
முழவமொந்தை மல்குபாடல்
செய்கை யிடமோவார்
குமிழின்மேனி தந்தகோல
நீர்மை யதுகொண்டார்
கமழுஞ்சோலைக் கானூர்மேய
பவள வண்ணரே. 8

795. அந்தமாதி யயனுமாலு
மார்க்கு மறிவரியான்
சிந்தையுள்ளு நாவின்மேலுஞ்
சென்னியு மன்னினான்

பேசிக் கொண்டே போவார்போல என் மனத்தை மயக்கிப் புகுந்து கொண்டார் என்கின்றது. மூவா வண்ணர் - மூப்படையாத அழகை உடையவர். முறுவல் - காமக்குறிப்புத் தோன்றும் சிரிப்பு. பொக்கம் - பொய். உள்ளம் புக்க புரிநூலர் என்றது புரிநூல் அணிந்ததற்கேலாத செயல் செய்தார் என்னுங்குறிப்பு. தேவு - தெய்வத்தன்மை; தேன் வார் சோலை என்றுமாம்.

8. பொ-ரை : மணம் கமழும் சோலைகள் சூழ்ந்த திருக்கானூரில் மேவிய பவளம் போன்ற நிறத்தினை உடைய பரமர், தமிழ்போன்று இனிக்கும் இனிய வார்த்தைகளைப் பேசி, தாளத்தோடு வீணையை மீட்டி, முழவம் மொந்தை ஆகிய துணைக் கருவிகளுடன் கூடிய பாடல் களைப் பாடி எனது இல்லத்தை அடைந்து, அதனை விட்டுப் பெயரா தவராய் எனக்குக் குமிழம்பூப் போன்ற பசலை நிறத்தை அளித்து என் அழகைக் கொண்டு சென்றார்.

கு-ரை : இவர் பல வாத்தியங்கள் முழங்கப் பாடிக்கொண்டும் இனிமையாகப் பேசிக்கொண்டும் வந்தார்; வந்தவர் இடம் விட்டுப் பெயராராய் என்னுடைய அழகைக் கவர்ந்து கொண்டு குமிழம்பூ நிறத்தைக் கொடுத்துவிட்டார் என்கின்றது. தமிழின் நீர்மை - இனிமை. கோலம் - அழகு. பவளவண்ணரே என்றாள், அவர்மேனியின் நிறத்தில் ஈடுபட்டு.

9. பொ-ரை : மணம் நிறைந்த திருக்கானூரில் எழுந்தருளிய எந் தையாராகிய பெருமானார், அந்தத்தைச் செய்பவரும், யாவர்க்கும்

Koviloor Digital Library

வந்தென்னுள்ளம் புகுந்துமாலை
காலை யாடுவான்
கந்தமல்கு கானூர்மேய
வெந்தை பெம்மானே. 9

796. ஆமையரவோ டேனவெண்கொம்
பக்கு மாலைபூண்
டாமோர்கள்வர் வெள்ளர்போல
வுள்வெந் நோய்செய்தார்
ஓமவேத நான்முகனுங்
கோணா கணையானும்
சேமமாய செல்வர்கானூர்
மேய சேடரே. 10

ஆதியாய் இருப்பவரும் ஆவார். அயன், மால் முதலிய அனைவ ராலும் அறிதற்கரியவர். என் சிந்தையிலும் சென்னியிலும் நாவிலும் நிலைபெற்றிருப்பவர். அத்தகையோர் யான் காண வெளிப்பட்டு வந்து என் உள்ளம் புகுந்து மாலையிலும் காலையிலும் நடனம் புரிந்தருளு கின்றார்.

கு-ரை : அயனுக்கும் மாலுக்கும் அறியப்படாத இறைவன் எனது சிந்தையிலும், நாவிலும், சென்னியிலும் திகழ்கின்றான்; என் மனத்திற் புகுந்து காலையும் மாலையும் உலாவுகின்றான் என்கின்றது. அந்தம் ஆதி - முடிவும் முதலும்.

10. பொ-ரை : வேள்விகள் இயற்றும் முறைகளைக் கூறும் வேதங் களை ஓதும் நான்முகனும், வளைந்த பாம்பணையில் பள்ளி கொள் ளும் திருமாலும் தங்கள் பாதுகாப்புக்குரியவராகக் கருதும் செல்வ ராகிய கானூர் மேவிய பெருமானார், ஆமை, அரவு, பன்றியின் வெண் மையான கொம்பு என்புமாலை ஆகியவற்றைப் பூண்ட ஓர்கள்வராய் வெள்ளை உள்ளம் படைத்தவர் போலக் கருதுமாறு நல்லவர் போல வந்து எனக்கு மன வேதனையைத் தந்தார்.

கு-ரை : 'எலும்பு முதலியவற்றை அணிந்து வெள்ளை உள்ளம் படைத்தவர்போல வந்து கள்வராய் மனவேதனையைத் தந்தார் என் கின்றது. அவர்கொண்ட வேடத்திற்கும் செயலுக்கும் பொருத்த

Koviloor Digital Library

797. கழுதுதுஞ்சுங் கங்குலாடுங்
கானூர் மேயானைப்
பழுதின்ஞான சம்பந்தன்சொற்
பத்தும் பாடியே
தொழுதுபொழுது தோத்திரங்கள்
சொல்லித் துதித்துநின்
றழுதுநக்கு மன்புசெய்வார்
அல்ல லறுப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

மில்லை என்றபடி. ஓமம் - ஆகுதி. கோண் நாகணையான் - வளைந்த பாம்பைப் படுக்கையாகக்கொண்டவன். சேமம் - பாது காப்பு. சேடர்- கடவுள்.

11. பொ-ரை : பேய்களும் தூங்கும் நள்ளிரவில் நடனம் ஆடும் கானூர் மேவிய இறைவனைக் குற்றமற்ற ஞானசம்பந்தன் போற்றிச் சொன்ன சொல்மாலையாகிய இப்பதிகப் பாடல்கள் பத்தையும் பாடித் தொழுது முப்பொழுதும் தோத்திரங்களைச் சொல்லித் துதித்து நின்று அழுதும் சிரித்தும் அன்பு செய்பவர்கள் அல்லலை அறுப்பார்கள்.

கு-ரை : இத்தோத்திரங்களைச் சொல்லித் துதித்து ஆனந்தத் தால் அழுதும் சிரித்தும் நிற்பவர்கள் துன்பம் அறுப்பார் என்கின்றது. கழுது - பேய். பொழுது - முப்பொழுதிலும்.

திருஞானசம்பந்தர் புராணம்

அதன்மருங்கு கடந்தருளால் திருக்கானூர் பணிந்தேத்தி
ஆன்ற சைவ,
முதன்மறையோர் அன்பிலா லந்துறையின் முன்னவனைத்
தொழுது போற்றிப்,
பதநிறைசெந் தமிழ்பாடிச் சடைமுடியார் பயில்பதியும்
பணிந்து பாடி,
மதகரட வரையுரித்தார் வடகரைமாந் துறைஅணைந்தார்
மணிநூல் மார்பர்.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

74. திருப்புறவம்

பண்: தக்கேசி

பதிக எண்: 74

திருச்சிற்றம்பலம்

798. நறவநிறைவண் டறைதார்க்கொன்றை
நயந்து நயனத்தாற்
சுறவஞ்செறிவண் கொடியோனுடலம்
பொடியா விழிசெய்தான்
புறவமுறைவண் பதியாமதியார்
புரமூன் றெரிசெய்த
இறைவன்அறவ னிமையோரேத்த
வுமையோ டிருந்தானே. 1

1. பொ-ரை : தேன் நிறைந்த வண்டுகள் ஒலிக்கும் கொன்றை மாலையை விரும்பிச் சூடி, சுறாமீன் எழுதப்பட்ட கொடியை உடைய, உயிர்கட்கு எல்லாம் இன்ப நலம் தரும் வள்ளன்மை உடைய, மன்மதனைப் பொடியாகுமாறு நெற்றிக்கண்ணால் விழித்து அழித்த, சிவபிரான் உறையும் பதி புறவம் எனப்பெறும் சீகாழியாம். தன்னை மதியாத அசுரர்களின் முப்புரங்களை எரித்தழித்த அவ்விறைவனாகிய அறவன் இமையவர் ஏத்தித் துதிக்க அப்பதியிடை உமையம்மையோடு வீற்றிருந்தருள்கிறான்.

கு-ரை : மகரக்கொடியோனாகிய மன்மதனது உடலத்தைப் பொடி செய்தவரும், திரிபுரம் எரித்தவரும் ஆகிய உமாபதி நகர் புறவம் என்னும் சீகாழியாம் என்கின்றது. நறவம் - தேன். அறை - ஒலிக்கின்ற. நயந்து - விரும்பி. நயனத்தால் - கண்ணால். சுறவம் செறி வண் கொடியோன் - சுறாமீன் எழுதப்பட்ட கொடியை உடையவனாகிய மன் மதன். நயனத்தால் விழித்தலைச் செய்தான் என்க. மதியார் - பகைவர்.

குருவருள் : நறவம் நிறை வண்டறை தார் என்ற பதிகம் ஞானசம்பந்தர் ''தோடுடைய செவியன்'' பாடியபிறகு உடன் கோயிலினுட் சென்று உமாமகேசுரரைத் தரிசித்துப் பாடியது. இரண்டாம் பதிகம் ''மடையில் வாளை'' என்பதாகவே கற்றோரும் மற்றோரும் எண்ணி வருகின்றனர். இது பொருந்தாது என்பதைப் பின்வரும் சேக்கிழார் வாக்கால் தெளியலாம்.

Koviloor Digital Library

799. உரவன்புலியி னுரிதோலாடை
யுடைமேற் படநாகம்
விரவிவிரிபூங் கச்சாவசைத்த
விகிர்த னுகிர்தன்னாற்
பொருவெங்களிறு பிளிறவுரித்துப்
புறவம் பதியாக
இரவும்பகலு மிமையோரேத்த
வுமையோ டிருந்தானே. 2

''அண்ண லணைந்தமை கண்டு தொடர்ந்தெழும் அன்பாலே
மண்மிசை நின்ற மறைச்சிறு போதகம் அன்னாரும்
கண்வழி சென்ற கருத்து விடாது கலந்தேகப்
புண்ணியர் நண்ணிய பூமலி கோயிலி னுட்புக்கார்''

''பொங்கொளி மால்விடை மீது புகுந்தணி பொற்றோணி
தங்கி யிருந்த பெருந்திரு வாழ்வு தலைப்பட்டே
இங்கெனை யாளுடை யான்உமை யோடும் இருந்தான்என்று
அங்கெதிர் நின்று புகன்றனர் ஞானத் தமுதுண்டார்''

இப்பதிகத்துள் பாடல் தோறும் 'இமையோர் ஏத்த உமையோ டிருந்தானே' என்பதால் இதுவே இரண்டாம் பதிகம் என்பதை திரு. சி.கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தம் பெரிய புராண உரைப் பேருரைக் குறிப்பில் அறிவித்துள்ளார். இஃது இத்துறையில் உள்ளார்க்கும் பெருவிருந்தாம்.

2. பொ-ரை : மிக்க வலிமையை உடையவனும், புலியிலினது தோல் ஆடையாகிய உடை மேல், படம் பொருந்திய நாகத்தைக் கச்சாகக் கட்டிய விகிர்தனும், தனது கைவிரல் நகத்தால் போர் செய்யும் கொடிய யானை பிளிற அதன் தோலை உரித்துப் போர்த்தவனுமாகிய இறைவன், புறவம் என்னும் சீகாழியையே தான் உறையும் பதியாகக் கொண்டு அதன்கண் இரவும் பகலும் தேவர்கள் பலரும் வந்து வணங்க உமையம்மையோடு எழுந்தருளியிருக்கின்றான்.

கு-ரை : புலித்தோல் ஆடையின்மேல் நாகத்தைக் கச்சாக உடுத்து, யானையை உரித்துப் போர்த்து, புறவம் பதியாக உமையோடு இருந்தான் என்கின்றது. உரவன் - வன்மை உடையோன்.

Koviloor Digital Library

800. பந்தமுடைய பூதம்பாடப்
பாதஞ் சிலம்பார்க்கக்
கந்தமல்கு குழலிகாணக்
கரிகாட் டெரியாடி
அந்தண்கடல்சூழ்ந் தழகார்புறவம்
பதியா வமர்வெய்தி
எந்தம்பெருமா னிமையோரேத்த
வுமையோ டிருந்தானே. 3

801. நினைவார்நினைய வினியான்பனியார்
மலர்தூய் நித்தலுங்
கனையார்விடையொன் றுடையான்கங்கை
திங்கள் கமழ்கொன்றை
புனைவார்சடையின் முடியான்கடல்சூழ்
புறவம் பதியாக
எனையாளுடையா னிமையோரேத்த
வுமையோ டிருந்தானே. 4

3. பொ-ரை : எம்முடைய தலைவனாகிய இறைவன், உதரபந்தத்தை அணிந்துள்ள பூதங்கள் பாடவும், பாதங்களில் சிலம்புகள் ஒலிக்கவும், மணம் நிறைந்த கூந்தலையுடைய உமையம்மை காணச் சுடுகாட்டில் எரியேந்தி ஆடி, அழகிய குளிர்ந்த கடலால் சூழப்பட்ட எழில்மிக்க புறவம் என்னும் சீகாழியையே இருப்பிடமாகக் கொண்டு, எழுந்தருளி இமையோர்கள் தன்னையேத்த உமையம்மையோடு வீற்றிருந்தருள் கிறான்.

கு-ரை : பூதம் பாட, சிலம்பொலிக்க, உமைகாண இடுகாட்டில் நடமாடி இந்நகரை இடமாகக்கொண்டிருந்தான் என்கின்றது.

பந்தம் உடைய பூதம் - உதரபந்தம் என்னும் அணியையணிந்த பூதம். கந்தம் - மணம். கரிகாடு - இடுகாடு. அமர்வெய்தி - விரும்பியிருந்து.

4. பொ-ரை : என்னை ஆளாக உடைய இறைவன், நாள்தோறும் குளிர்ந்த மலர்களைத் தூவித் தன்னை நினையும் அடியவர்களின்

Koviloor Digital Library

802. செங்கணரவு நகுவெண்டலையு
முகிழ்வெண் டிங்களுந்
தங்குசடையன் விடையனுடையன்
சரிகோ வணவாடை
பொங்குதிரைவண் கடல்சூழ்ந்தழகார்
புறவம் பதியாக
எங்கும்பரவி யிமையோரேத்த
வுமையோ டிருந்தானே. 5

நினைப்பிற்கு இனியவனாய், கனைக்கும் விடை ஒன்றை ஊர்தியாக உடையவனாய், கங்கை, திங்கள், மணங்கமழும் கொன்றை ஆகியவற்றைச் சூடிய அழகிய நீண்ட சடைமுடியை உடையவனாய், கடலால் சூழப்பட்ட புறவம் என்னும் சீகாழிப் பதியை இடமாகக் கொண்டு இமையவர் ஏத்த உமையம்மையோடு வீற்றிருந்தருள் கிறான்.

கு-ரை : என்னை ஆளாக உடையவன் நினைத்தற்கினியனாய் விடையேறி, கங்கை முதலியவற்றைச் சூடி, புறவம்பதியாக உமை யோடு இமையோர் ஏத்த இருந்தான் என்கின்றது.

பனியார் மலர் தூய், நினைவார் நித்தலும் நினைய இனியான் எனக் கூட்டுக. கனை - ஒலி.

5. பொ-ரை : சிவபிரான், சிவந்த கண்களையுடைய பாம்பும், சிரிப்பதுபோல வாய்விண்டு தோன்றும் வெள்ளிய தலையோடும், இளைய வெண்பிறையும் தங்கும் சடைமுடியன். விடை ஊர்தியன். சரியும் கோவண ஆடையை உடையாகக் கொண்டவன். அப்பெருமான் பொங்கி எழும் அலைகளையுடைய வளம் பொருந்திய கடலால் சூழப் பட்ட அழகிய புறவம் என்னும் சீகாழியைத் தனக்குரிய பதியாகக் கொண்டு இமையோர் எங்கும் பரவி நின்று ஏத்த உமையம்மையோடு வீற்றிருந்தருள்கின்றான்.

கு-ரை : அரவு முதலியவற்றை அணிந்து விடையேறி, கோவண முடுத்தி, இந்நகரை இடமாகக்கொண்டு இமையோர் ஏத்த உமையோடு இருந்தான் என்கின்றது.

முகிழ் - இளைய. சரி - தொங்குகின்ற. திரை - அலை.

Koviloor Digital Library

803. பின்னுசடைகள் தாழக்கேழ
லெயிறு பிறழப்போய்
அன்னநடையார் மனைகடோறு
மழகார் பலிதேர்ந்து
புன்னைமடலின் பொழில்சூழ்ந்தழகார்
புறவம் பதியாக
என்னையுடையா னிமையோரேத்த
வுமையோ டிருந்தானே. 6

804. உண்ணற்கரிய நஞ்சையுண்
டொருதோ ழந்தேவர்
விண்ணிற்பொலிய வமுதமளித்த
விடைசேர் கொடியண்ணல்
பண்ணிற்சிறைவண் டறைபூஞ்சோலைப்
புறவம் பதியாக
எண்ணிற்சிறந்த விமையோரேத்த
வுமையோ டிருந்தானே. 7

6. பொ-ரை : என்னை அடிமையாக உடைய இறைவன், முறுக்கி விடப்பட்ட சடைகள் தாழ்ந்து தொங்க மாலையாகக் கோத்தணிந்த பன்றியின் பற்கள் விளங்கச் சென்று, அன்னம் போன்ற நடையினை யுடைய மகளிரின் இல்லங்கள்தோறும் அழகு பொருந்தப் பலியேற்று, புன்னை தாழை முதலியன நிறைந்த பொழிலால் சூழப்பட்ட அழகிய புறவம் என்னும் சீகாழியைத் தனது பதியாகக்கொண்டு உமையம்மை யோடு வீற்றிருந்தருள்கின்றான்.

கு-ரை: என்னையுடையான் சடைதாழ, பன்றிக்கொம்பு மார்பில் விளங்க, பெண்கள் மனைதோறும் சென்று பிச்சை எடுத்துப் புறவம் பதியாக இருந்தான் என்கின்றது. கேழல் எயிறு - பன்றிப் பல்.

7. பொ-ரை : யாராலும் உண்ண முடியாத நஞ்சைத் தான் உண்டு, ஒரு தோழம் என்ற எண்ணிக்கையில் தேவர்கள் விண்ணுலகில் மகிழ்வுற்று வாழ, கடலிடைத் தோன்றிய அமுதை வழங்கிய விடை எழுதிய கொடியையுடைய அண்ணல். சிறகுகளையுடைய வண்டுகள் பண்ணோடு ஒலிக்கும் பூஞ்சோலைகளால் சூழப்பட்ட புறவம் என்னும்

Koviloor Digital Library

805. விண்டானதிர வியனார்கயிலை
வேரோ டெடுத்தான்றன்
றிண்டோளுடலு முடியுநெரியச்
சிறிதே யூன்றிய
புண்டானொழிய வருள்செய்பெருமான்
புறவம் பதியாக
எண்டோளுடையா னிமையோரேத்த
வுமையோ டிருந்தானே. 8

சீகாழியைத் தன் பதியாகக் கொண்டு எண்ணற்ற இமையோர் தன்னை ஏத்தி வணங்க உமையம்மையோடு வீற்றிருந்தருள்கிறான்.

கு-ரை : நஞ்சை உண்டு முப்பத்துமுக்கோடி தேவர்கட்கு அமுது அளித்து வாழவைத்த அண்ணல் இந்நகரை இடமாகக்கொண்டிருந் தான் என்கின்றது. உண்ணற்கரிய - பிறரால் உண்ண முடியாத. ஒரு தோழம் தேவர் - ஒரு பேரெண்ணினையுடைய தேவர்கள், தோழம் பேரெண். 'ஒரு தோழம் தொண்டருளன்' (திருவாசகம்) விண்ணிற் பொலிய - விண்ணுலகை இடமாகக்கொண்டு போகத்தில் மூழ்கி விளங்க. பண்ணில் அறை - பண்ணோடு ஒலிக்கின்ற. எண்ணில் சிறந்த - எண்ணிக்கையில் மிகுந்த.

8. பொ-ரை : எட்டுத் தோள்களையுடைய சிவபிரான் விண் அதிரும்படியாகப் பெரிய கயிலை மலையை வேரோடு பெயர்த்து எடுத்த இராவணனின் வலிமை பொருந்திய தோள்கள், உடல், முடி ஆகியன நெரியுமாறு கால் விரலால் சிறிதே ஊன்றிப் பின் அவன் வருந் திய அளவில் உடலில் தோன்றிய புண்கள் நீங்க அவன் வேண்டும் வரங்கள் பலவற்றைத் தந்த பெருமானாவான். அவ்விறைவன் புறவம் என்னும் சீகாழியைத் தனக்குரிய பதியாகக் கொண்டு இமையோர் ஏத்த உமையம்மையோடு வீற்றிருந்தருள்கிறான்.

கு-ரை : இராவணனை நெரித்த புண் நீங்க, அருள்செய்த பெரு மான் இவன் என்கின்றது.

வியன் ஆர் கயிலை - இடமகன்ற கைலை. சிறிதே ஊன்றிய - மிகச் சிறிதாக ஊன்றிய. புண் - உடற்புண்ணும், உள்ளப்புண்ணும். எண்தோள் உடையான் - எட்டுத் திக்குகளாகிய தோள்களை உடையவன்.

Koviloor Digital Library

806. நெடியானீடா மரைமேலயனும்
நேடிக் காண்கில்லாப்
படியாமேனி யுடையான்பவள
வரைபோற் றிருமார்பிற்
பொடியார்கோல முடையான்கடல்சூழ்
புறவம் பதியாக
இடியார்முழவா ரிமையோரேத்த
வுமையோ டிருந்தானே. 9

807. ஆலும்மயிலின் பீலியமண
ரறிவில் சிறுதேரர்
கோலும்மொழிக ளொழியக்குழுவுந்
தழலு மெழில்வானும்
போலும்வடிவு முடையான்கடல்சூழ்
புறவம் பதியாக
ஏலும்வகையா லிமையோரேத்த
வுமையோ டிருந்தானே. 10

9. பொ-ரை : திருமாலும், நீண்டு வளர்ந்த தாமரை மலர் மேல் உறையும் நான்முகனும் தேடிக் காண இயலாத தன்மையை உடைய திருமேனியன். பவளமலைபோன்ற திருமார்பின்கண் திருநீறு அணிந்த அழகினையுடையவன். அவ்விறைவன், கடல் நீரால் சூழப்பட்டதும் இடி போன்ற முழக்கத்தையுடைய முழா ஒலிப்பதும் ஆகிய புறவம் என்னும் சீகாழியைத் தனக்குரிய பதியாகக் கொண்டு, இமையவர் ஏத்த உமையம்மையோடு வீற்றிருந்தருள்கின்றான்.

கு-ரை : அயனும் மாலும் தேடிக் காணமுடியாத திருமேனியை உடையவன், திருநீற்றழகன் இவன் என்கின்றது. நெடியான் - திருமால். படியாமேனி உடையான் - அடங்காத அழல் உருவாகிய மேனியை உடையவன். பொடி - விபூதி.

10. பொ-ரை : ஆடுகின்ற மயிலின் தோகையைக் கையில் ஏந்திய அமணர்களும், அறிவில் குறைந்த புத்தர்களும், புனைந்து பேசும் மொழிகளைத் தாழுமாறு செய்பவனாய், கூடி எரியும் தழலும், அழகிய வானமும் போன்ற செவ்வண்ணம் உடைய சிவன், கடல் நீர் சூழ்ந்த

Koviloor Digital Library

808. பொன்னார்மாட நீடுஞ்செல்வப்
புறவம் பதியாக
மின்னாரிடையா ளுமையாளோடு
மிருந்த விமலனைத்
தன்னார்வஞ்செய் தமிழின்விரக
னுரைத்த தமிழ்மாலை
பன்னாள்பாடி யாடப்பிரியார்
பரலோ கந்தானே. 11

திருச்சிற்றம்பலம்

புறவம் என்னும் சீகாழியைத் தனது பதியாகக் கொண்டு இமையோர் பொருந்தும் வகையால் போற்ற உமையம்மையோடு வீற்றிருந்தருள் கிறான்.

கு-ரை : புத்தரும் சமணரும் கூறும் மொழிகளைக் கடந்து, விண்ணையும் தீயையும் ஒத்த வடிவமுடையவனாக இருப்பவன் இவன் என்கின்றது. கோலும் மொழிகள் ஒழிய - கோலிச் சொல்லும் மொழிகள் பிறபட. குழுவும் - கூடி எரிகின்ற. ஏலும் வகையால் - பொருந்தும் வகை. ஆலும் மயில் - உயிர் உள் வழி அடை.

11. பொ-ரை: அழகு பொருந்திய உயர்ந்த மாட வீடுகளை உடையதும், செல்வச் செழுமை வாய்ந்ததும் ஆகிய புறவம் என்னும் சீகாழிப் பதியில், மின்னல் போன்ற இடையினையுடைய உமையம்மையாரோடு எழுந்தருளியுள்ள குற்றமற்ற இறைவனைத் தன் அன்பால் தமிழ் விரகனாகிய ஞானசம்பந்தன் போற்றி உரைத்த இத்தமிழ் மாலையைப் பல நாள்களும் பாடி ஆடுவோர், மேலுலகத்தில் பிரியாது உறைவர்.

கு-ரை : புறவம்பதியாக இறைவியோடு இருக்கின்ற விமலனை அன்புசெய்து, தமிழாற்சொன்ன இப்பாடலைப் பாடியாடுவார் பரலோகம் பிரியார் எனப் பயன் கூறுகிறது. ஆர்வம் - அன்பு.

Koviloor Digital Library

75. திருவெங்குரு

பண்: குறிஞ்சி

பதிக எண்: 75

திருச்சிற்றம்பலம்

809. காலைநன்மாமலர் கொண்டடிபரவிக்
கைதெழுமாணியைக் கறுத்தவெங்காலன்
ஓலமதிடமுன் னுயிரொடுமாள
வுதைத்தவனுமையவள் விருப்பனெம்பெருமான்
மாலைவந்தணுக வோதம்வந்துலவி
மறிதிரைசங்கொடு பவளமுனுந்தி
வேலைவந்தணையுஞ் சோலைகள்சூழ்ந்த
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. 1

1. பொ-ரை : வைகறைப் பொழுதில், சிறந்தனவாகிய நல்ல மலர்களைப் பறித்துவந்து சாத்தித் தன் திருவடிகளைப் பரவி, கைகளால் தொழும் மார்க்கண்டேயன் உயிரைக் கவரச் சினந்து வந்த கொடிய காலனை ஓலமிட்டு அலறித் தனக்கு முன்னே உயிரோடு மாளுமாறு உதைத்தருளியவனும், உமையம்மைக்கு விருப்பமான வனும் ஆகிய எம்பெருமான், மாலைக் காலம் வரக் கடல் வெள்ள நீர் வந்து உலவிச் சூழ்ந்து வரும் அலைகளால் சங்கு, பவளம் ஆகிய வற்றை உந்திவந்து கரையிற் சேர்க்கும் சோலைகள் சூழ்ந்த வெங்குரு என்னும் சீகாழியில் மேவி வீற்றிருந்தருள்கின்றான்.

கு-ரை: நாள்தோறும் மலர்கொண்டு அடிபரவும் மார்க் கண்டற்காகக் காலனைக் காய்ந்த பரமன் வெங்குரு என்னும் சீகாழியில் வீற்றிருக்கிறார் என்கின்றது.

மாணி - பிரமசாரியாகிய மார்க்கண்டர். கறுத்த - கோபித்த. மாலைக்காலம் வந்ததும் கடல் ஓதம் பெருகி, சங்கையும் பவளத்தை யும் உந்திக் கடல்சாரும் சோலைகள் சூழ்ந்த காழி என நெய்தல்வளம் கூறப்பெற்றது.

Koviloor Digital Library

810. பெண்ணினைப்பாக மமர்ந்துசெஞ்சடைமேற்
பிறையொடுமரவினை யணிந்தழகாகப்
பண்ணினைப்பாடி யாடிமுன்பலிகொள்
பரமரெம்மடிகளார் பரிசுகள்பேணி
மண்ணினைமூடி வான்முகடேறி
மறிதிரைகடன்முகந் தெடுப்பமற்றுயர்ந்து
விண்ணளவோங்கி வந்திழிகோயில்
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. 2

811. ஓரியல்பில்லா வுருவமதாகி
யொண்டிறல்வேடன துருவதுகொண்டு
காரிகைகாணத் தனஞ்சயன்றன்னைக்
கறுத்தவற்களித்துடன் காதல்செய்பெருமான்
நேரிசையாக வறுபதமுரன்று
நிரைமலர்த்தாதுகண் மூசவிண்டுதிர்ந்து
வேரிகளெங்கும் விம்மியசோலை
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. 3

2. பொ-ரை : உமையம்மையை இடப்பாகமாக விரும்பி ஏற்று, செஞ்டைமேல் பிறை பாம்பு ஆகியவற்றை அணிந்து, பண் வகைகளை அழகாகப் பாடி ஆடியவராய்ச் சென்று, மகளிரிடம் பலியேற்கும் பரமராகிய எம் அடிகளார், ஊழிக் காலத்தில் உலகை மூடி வான்முகடு வரை உயர்ந்து சுருண்டு விழும் அலைகடல் நீரில் மிதந்து உயர்ந்து வான் உற ஓங்கி மீள நிலவுலகிற்கு வந்திழிந்த கோயிலாகிய வெங்குரு என்னும் சீகாழிப் பதியுள், வீற்றிருந்தருள்கிறார்.

கு-ரை : கடல்கொண்டஞான்று உயர்ந்தோங்கிய கோயிலில் உமாதேவியை ஒருபாகத்திருத்தி, பிறைசூடி, பண்ணைப்பாடி, தன் தன்மைகளைப்பேணி வீற்றிருந்தார் என்கின்றது. அமர்ந்து - விரும்பி. பரிசுகள் பேணி - தன் தன்மையவாகிய கருணையைக் காட்டி. கடல் மோதி, ஏறி, முகந்து எடுப்ப, உயர்ந்து, ஓங்கி, இழி கோயிலாகிய வெங்குருவில் வீற்றிருந்தார் என முடிக்க.

3. பொ-ரை :தம் இயல்பிற்குப் பொருத்தமற்ற உருவமாய் மிக்க வலிமையுடைய வேடர் உருத்தாங்கி வந்து உமையம்மை காண அருச்சுனனோடு ஒரு காரணங்காட்டிச் சண்டையிட்டு அவனுக்கு

Koviloor Digital Library

812. வண்டணைகொன்றை வன்னியுமத்த
மருவியகூவிள மெருக்கொடுமிக்க
கொண்டணிசடையர் விடையினர்பூதங்
கொடுகொட்டிகுடமுழாக் கூடியுமுழவப்
பண்டிகழ்வாகப்பாடியொர்வேதம்
பயில்வர்முன்பாய்புனற் கங்கையைச்சடைமேல்
வெண்பிறைசூடி யுமையவளோடும்
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. 4

வேண்டும் பொருள்களை வழங்கி அன்பு செய்த பெருமானாகிய சிவபிரான், வண்டுகள் நேரிசைப் பண்பாடி முரன்று வரிசையாக மலர்ந்த மலர்களின் மகரந்தங்களில் புரள, அதனால் மலர்கள் விரிந்து தேன் உதிருவதால் தேன் எங்கும் விம்மி வழியும் சோலைகள் சூழ்ந்த வெங்குரு என்னும் சீகாழிப்பதியில் வீற்றிருந்தருள்கிறான்.

கு-ரை : உமாதேவிக்காக விசயனைக் கோபித்து அருளுஞ் செய்த பெருமான் இவர் என்கின்றது. ஓர் இயல்பு இல்லா உருவமது ஆகி - ஒருதன்மையும் இல்லாத உருவத்தை மேற்கொண்டு. காரிகை - உமாதேவியார். தனஞ்சயன் - அருச்சுனன். கறுத்து அவற்கு அளித்து எனப்பிரிக்க. நேரிசை: ஒருபண். அறுபதம் - வண்டு. முரன்று - ஒலித்து. தாது கண் மூச - மகரந்தம் கண்ணில் மூட. வேரிகள் - தேன்கள்.

4. பொ-ரை :வண்டுகள் சூழும் கொன்றை மலர், வன்னி இலை, ஊமத்தம் மலர், வில்வம், எருக்கம்பூ ஆகியனவற்றை மிகுதியாகக் கொண்டு அணிந்த சடையினரும், விடை ஊர்தியரும், பூத கணங்கள் கொடுகொட்டி குடமுழா முழவு முதலியவற்றை முழக்கப் பண் விளங்க ஒப்பற்ற வேதங்களைப் பாடிப் பழகியவரும், தமக்கு முன்னே பாய்ந்து வந்த கங்கை வெள்ளத்தை வெண்பிறையோடு சடையில் அணிந்தவரும் ஆகிய சிவபிரானார் உமையம்மையாரோடு வெங்குரு எனப்படும் சீகாழிப் பதியில் வீற்றிருந்தருள்கிறார்.

கு-ரை : கொன்றை முதலியவற்றை அணிந்த சடையராய், குடமுழா முதலியவற்றைப் பூதங்கள் வாசிக்க, இசையோடு வேதத்தைப் பாடுகிறவர் இவர் என்கின்றது. கூவிளம் - வில்வம். கொடுகொட்டி - ஒருவகை வாத்தியம். இது இப்போது கிடுகிட்டி என வழங்குகிறது. பண்திகழ்வாக - ஒரேஸ்வரத்தில்.

Koviloor Digital Library

813. சடையினர்மேனி நீறதுபூசித்
தக்கைகொள்பொக்கண மிட்டுடனாகக்
கடைதொறும்வந்து பலியதுகொண்டு
கண்டவர்மனமவை கவர்ந்தழகாகப்
படையதுவேந்திப் பைங்கயற்கண்ணி
யுமையவள்பாகமு மமர்ந்தருள்செய்து
விடையொடுபூதஞ் சூழ்தரச்சென்று
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. 5

814. கரைபொருகடலிற் றிரையதுமோதக்
கங்குல்வந்தேறிய சங்கமுமிப்பி
உரையுடைமுத்த மணலிடைவைகி
யோங்குவானிருளறத் துரப்பவெண்டிசையும்
புரைமலிவேதம் போற்றுபூசுரர்கள்
புரிந்தவர் நலங்கொளா குதியினினிறைந்த
விரைமலிதூபம் விசும்பினைமறைக்கும்
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. 6

5. பொ-ரை : சடைமுடியினராய்த் திருமேனியில் வெண்ணீறு பூசியவராய், தக்கை என்னும் இசைக் கருவியை வைத்துக் கட்டியுள்ள துணிமூட்டையைத் தோளில் தொங்கவிட்டுக் கொண்டு வீடுகள் தோறும் வந்து பலியேற்று, தம்மைக் கண்ட மகளிரின் மனங்களைக் கவர்ந்து அழகிய கோலத்தோடு மழுப்படையைக் கையில் ஏந்திய வராய் விளங்கும் பெருமானார், பசிய கயல் போன்ற கண்களை உடைய உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டு அமர்ந்து அருள் செய்யும் குறிப்பினராய், விடையூர்தியோடு பூத கணங்கள் சூழ வெங்குரு என்னும் சீகாழிப் பதியில் வந்து வீற்றிருந்தருள்கிறார்.

கு-ரை : வீடுகள்தோறும் வந்து பிச்சை ஏற்று, கண்டவர் மனத்தைக்கவர்ந்து, உமையவளை ஒருபாகத்திருத்தியவர் இவர் என்கின்றது. தக்கைகொள்பொக்கணம் - தக்கை என்னும் வாத்தியத்தை வைத்து மறைத்த துணி மூட்டை. இட்டு - புறத்தோளில் தொங்கவிட்டு.

6. பொ-ரை : கரையை அலைக்கும் கடலின் திரைகள் மோதுதலால் இரவிடைக் கரையில் வந்து ஏறிய சங்குகளும் சிப்பிகளும் முத்துக்களை ஈனப் புகழ்பெற்ற அம்முத்துக்கள் மணல்

Koviloor Digital Library

815. வல்லிநுண்ணிடையா ளுமையவடன்னை
மறுகிடவருமத களிற்றினைமயங்க
ஒல்லையிற்பிடித்தங் குரித்தவள்வெருவல்
கெடுத்தவர்விரிபொழின் மிகுதிருவாலில்
நல்லறமுரைத்து ஞானமோடிருப்ப
நலிந்திடலுற்று வந்தவக்கருப்பு
வில்லியைப்பொடிபட விழித்தவர்விரும்பி
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. 7

இடையே தங்கி ஓங்கிய வானத்தின் இருளை முற்றிலும் துரத்தி ஒளி செய்ய, எண் திசைகளிலும் பரவி நிறைந்த வேதங்களைப் போற்றும் அந்தணர்கள் நன்மை விளைக்கும் வேள்விகளைப் புரிய, அவ் வேள்விகளின் ஆகுதியால் எழும் மணம் மிக்க புகை வானை மறைத்துத் தோன்றும் வெங்குரு என்னும் சீகாழிப்பதியில் பெருமான் உமையம்மையாரோடு வீற்றிருந்தருள்கின்றார்.

கு-ரை: ஓதத்தில் கரையேறிச் சங்குகளும் இப்பிகளும் முத்துக்களை ஈன, அவை இருளை ஓட்ட, அந்தணர்கள் செய்யும் யாகப்புகை ஆகாயத்தை மறைக்கின்ற வெங்குரு என்கின்றது. இருளை ஒளியாக்குவன சங்கும் இப்பியும் ஈன்ற முத்துக்கள். ஒளியான விசும்பை மறைப்பன யாகப்புகை என்பது கருத்து. பூசுரர் - அந்தணர். புரை - உயர்வு.

7. பொ-ரை : கொடி போன்று நுண்ணிய இடையினை உடைய உமையம்மை அஞ்சுமாறு வந்த மதகளிற்றை அது மயங்குமாறு விரைந்து பிடித்து அதனை உரித்து அம்மையின் அச்சத்தைப் போக்கியவரும், விரிந்த பொழிலிடையே அமைந்த அழகிய ஆலமரத்தின் அடியில் அமர்ந்து சனகாதியர்க்கு நல்லறங்களை உரைத்து, யோக நிலையில் ஞானமாத்திரராய் வீற்றிருக்க, திருமால் பிரமர் தம் கடுஞ்சொற்களால் நலிவுற்று மலர்க்கணை தொடுத்து யோக நிலையைக் கலைக்க வந்த கரும்பு வில்லையுடைய காமன் எரிந்து பொடிபடுமாறு விழித்தவரும் ஆகிய சிவபிரானார் விரும்பி வெங்குரு என்னும் சீகாழிப் பதியில் எழுந்தருளியுள்ளார்.

கு-ரை: உமையவள் அஞ்ச, யானையை உரித்து அவள் அச்சத்தைப் போக்கியவரும், ஆலின்கீழ் நால்வருக்கு அறம் உரைத் திருந்தபோது வருத்தவந்த மன்மதனை எரித்தவரும் ஆகிய இறைவன்

Koviloor Digital Library

816. பாங்கிலாவரக்கன் கயிலையன்றெடுப்பப்
பலதலைமுடியொடு தோளவைநெரிய
ஓங்கியவிரலா லூன்றியன்றவற்கே
யொளிதிகழ்வாளது கொடுத்தழகாய
கோங்கொடுசெருந்தி கூவிளமத்தங்
கொன்றையுங்குலாவிய செஞ்சடைச்செல்வர்
வேங்கைபொன்மலரார் விரைதருகோயில்
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. 8

817. ஆறுடைச்சடையெம் மடிகளைக்காண
வரியொடுபிரமனு மளப்பதற்காகிச்
சேறிடைத்திகழ்வா னத்திடைபுக்குஞ்
செலவறத்தவிர்ந்தனரெழிலுடைத்திகழ்வெண்

இந்நகரில் இருந்தார் என்கின்றது. வல்லி - கொடி. மறுகிட - மயங்க. ஒல்லை - விரைவாக. வெருவுதல் - அஞ்சுதல். திரு ஆல் - கல்லால விருட்சம். நலிந்திடலுற்று - வருந்தி. கருப்பு வில்லி - கரும்பை வில் லாக உடைய மன்மதன்.

8. பொ-ரை :நற்குணங்கள் இல்லாத அரக்கனாகிய இராவணன் கயிலை மலையைப் பெயர்த்தெடுத்தபோது அவன் முடிகள் அணிந்த பல தலைகளையும் தோள்களையும் கால்விரலை ஊன்றி நெரித்த வரும், அவன் பிழை உணர்ந்து வருந்திப் பாடிய அளவில் அப் பொழுதே அவனுக்கு ஒளிபொருந்திய வாளை வழங்கியருளியவ ரும், அழகிய கோங்கு, செருந்தி, வில்வம், ஊமத்த மலர், கொன்றை ஆகியன விளங்கும் சிவந்த சடைமுடிச் செல்வரும் ஆகிய சிவபிரா னார் வேங்கை மரங்களின் பொன்போன்ற மலர்களின் மணம் கமழும் வெங்குரு என்னும் சீகாழித் திருக்கோயிலில் வீற்றிருந்தருள்கிறார்.

கு-ரை : இராவணனை அடக்கி அருள்செய்தவர் இவர் என் கின்றது. பாங்கிலா அரக்கன் - குணமில்லாத இராவணன்.

9. பொ-ரை :கங்கை நதியைச் சடையிற் சூடிய எம் தலைவராகிய சிவபிரானாரின் அடிமுடிகளை அளந்து காணுதற்குத் திருமால் பிரமர்கள் சேற்று நிலத்தைப் பன்றியாய் அகழ்ந்து சென்றும், முடி யினைக் காண அன்னமாய்ப் பறந்து சென்றும் தம் செயல் அழிந்தனர்.

Koviloor Digital Library

ணீறுடைக்கோல மேனியர்நெற்றிக்
கண்ணினர்விண்ணவர் கைதொழுதேத்த
வேறெமையாள விரும்பியவிகிர்தர்
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. 9

818. பாடுடைக்குண்டர் சாக்கியர்சமணர்
பயிறருமறவுரை விட்டழகாக
ஏடுடைமலராள் பொருட்டுவன்றக்க
னெல்லையில்வேள்வியைத்தகர்த்தருள்செய்து
காடிடைக்கடிநாய் கலந்துடன்சூழக்
கண்டவர்வெருவுற விளித்துவெய்தாய
வேடுடைக்கோலம் விரும்பியவிகிர்தர்
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரே. 10

அழகு விளங்கும் வெண்ணீறு பூசிய திருமேனியரும், நெற்றிக்கண்ண ரும், விண்ணவர் கைகளால் தொழுது ஏத்த அவர்களை விடுத்து எம்மைச் சிறப்பாக ஆள விரும்பியவரும் ஆகிய அவ்விகிர்தர் வெங் குரு என்னும் சீகாழிப் பதியில் எழுந்தருளியுள்ளார்.

கு-ரை: அயனும் மாலும், விண்ணிலும் மண்ணிலும் தேடச் சென்றும் காணாது போக்கொழிந்தனர்; அத்தகைய நீறுபூசிய மேனி யையுடையவர் இவர் என்கின்றது. சேறு இடைபுக்கும், திகழ்வானத் திடைபுக்கும் எனப் பிரித்துக் கூட்டுக. எழில் - அழகு. விண்ணவர் கைதொழுதேத்த எமை வேறு ஆள விரும்பிய விகிர்தர் - தேவர்கள் வணங்க எம்மை வேறாக ஆட்கொள விரும்பிய இறைவன்; என்றது, தேவர்கள் தம் போகத்திற்கு இடையீடு வாராமைகுறித்து வணங்குவர்; ஆதலால் அவர்க்கு எளிதில் அருள் வழங்காது, எம்மைச் சிறப்பாக வைத்து ஆள்கின்றார் என்ற நயப்பொருள் தோன்ற நின்றது.

10. பொ-ரை: துன்பங்களைத் தாங்குதலே தவத்தின் அடை யாளம் எனக் கருதும் குண்டர்களாகிய சமணர்களும் சாக்கியர்களும் கூறும் அறவுரைகளைக் கருதாது, அழகிய இதழ்களோடு கூடிய தாமரை மலர் போன்றவளாகிய தாட்சாயணியின்பொருட்டு வலிய தக்கன் இயற்றிய அளவிட முடியாத பெரிய வேள்வியை அழித்துப் பின் தக்க னுக்கும் அருள்புரிந்து, காட்டில் காவல் புரியும் நாய்கள் சூழ்ந்து வர வும், கண்டவர் அஞ்சவும், வேடர் பயிலும் சொற்களால் விலங்குகளை

Koviloor Digital Library

819. விண்ணியல்விமானம் விரும்பியபெருமான்
வெங்குருமேவியுள் வீற்றிருந்தாரை
நண்ணியநூலன் ஞானசம்பந்த
னவின்றவிவ்வாய்மொழி நலமிகுபத்தும்
பண்ணியல்பாகப் பத்திமையாலே
பாடியுமாடியும் பயிலவல்லோர்கள்
விண்ணவர்விமானங் கொடுவரவேறி
வியனுலகாண்டுவீற் றிருப்பவர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்

விளித்து வேட்டுவக் கோலத்தை விரும்பி ஏற்ற விகிர்தர் வெங்குரு என்னும் சீகாழிப் பதியில் வீற்றிருந்தருள்கின்றார்.

கு-ரை: புறச்சமயிகளுடைய பொருந்தா உரைக்கு அப்பாற் பட்டுத் தக்கன் யாகத்தைத் தகர்த்து, வேட்டுவ வடிவந் தாங்கிய விகிர் தர் இவர் என்கின்றது. பாடு - துன்பம். பயில்தரும் மற உரை - சொல்லு கின்ற கருணையற்ற வார்த்தைகள். விட்டு - அவ்வுரைகளுக்கு அப்பாற்பட்டு. ஏடு உடை மலராள் - தாட்சாயணியாகிய உமாதேவி. தகர்த்து - அழித்து. விளித்து - அழைத்து.

11. பொ-ரை: வானளாவிய விமானத்தை விரும்பி, வெங்குரு என்னும் சீகாழிப் பதியுள் வீற்றிருந்தருளும் பெருமானைப் பற்றி, அறம் பொருள் இன்பம் வீடு ஆகியவற்றைத் தெரிவிக்கும் நல்ல நூல்களை அறிந்த ஞானசம்பந்தன் அருளிய இவ்வுண்மை மொழிகளாகிய நன்மைகளைத் தரும் இப்பதிகப் பாடல்கள் பத்தையும், பண்ணிசை யோடும் பக்தியோடும் பாடி ஆடிக் கூற வல்லவர்கள், தேவர்கள் விமானம் கொண்டுவர அதன்மிசை ஏறி, அகன்ற அத்தேவருலகை அடைந்து அரசு புரிந்து, அதன்கண் வீற்றிருப்பர்.

கு-ரை: வெங்குருமேவிய பெருமானைச் சொன்ன இந்த நலமிகு பத்துப் பாடல்களையும் பத்தியோடு பாடியும் ஆடியும் பயில வல்லார், விண்ணவர்கள் விமானங்கொண்டுவர அதில் ஏறிச் சென்று விண்ணரசாய் வீற்றிருப்பார் என்கின்றது. விண்ணியல் விமானம் - ஆகாயத்தை அளாவிய விமானம். நண்ணிய நூலன் - தானாகவே அடைந்த வேதத்தை உடையவன். வாய் மொழி - உண்மை உரை. வியனுலகு - அகன்ற உலகம்.

Koviloor Digital Library

76. திருஇலம்பையங்கோட்டூர்

பதிக வரலாறு:

திருமாற்பேற்றை வணங்கிச் சிவபெருமான் திருவருள் பெற்ற சீகாழிச் செம்மலார், திருவல்லம் முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு பாலாற்றுப் பக்கத்தில் வடகரையில் உள்ள தலங்களையும் வணங்கத் திருவுளங்கொண்டு திரு இலம்பையங் கோட்டூரை அடைந்து வணங்கி 'மலையினார் பருப்பதம்' என்னும் இப்பதிகத்தைப் பாடியருளினார்கள்.

பண்: குறிஞ்சி

பதிக எண்: 76

திருச்சிற்றம்பலம்

820. மலையினார்பருப்பதந் துருத்திமாற்பேறு
மாசிலாச்சீர்மறைக் காடுநெய்த்தானம்
நிலையினானெனதுரை தனதுரையாக
நீறணிந்தேறுகந் தேறியநிமலன்
கலையினார்மடப்பிணை துணையொடுந்துயிலக்
கானலம்பெடைபுல்கிக் கணமயிலாலும்
இலையினார்பைம்பொழி லிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. 1

1. பொ-ரை: கயிலாய மலையை இடமாகக் கொண்டுறையும் இறைவன், சீபருப்பதம், துருத்தி, மாற்பேறு, குற்றமற்ற சிறப்புடைய திருமறைக்காடு, நெய்த்தானம் ஆகிய தலங்களில் நிலையாக எழுந் தருளியிருப்பவன். தன் உரைகளை என் உரைகளாக வெளிப்படுத்தி அருள்புரிபவன். திருநீறு அணிந்து ஆனேற்றில் மகிழ்வோடு ஏறி வரும் நிமலன். அத்தகையோன் ஆண்மான்கள் தம் இளைய பெண் மான்களோடு துயில்வதும், சோலைகளில் வாழும் ஆண் மயில்கள் பெடைகளைத் தழுவி அகவுவதுமாய இலைகள் நிறைந்த பசிய பொழில்கள் சூழ்ந்த இலம்பையங்கோட்டூரைத் தனது இருப்பிடமாகக் கொண்டு என் அழகினைக் கவர்ந்து செல்வது முறையோ?

கு-ரை: சீபருப்பத முதலிய தலங்களில் எழுந்தருளியிருப்பவ னாகிய, என்னுடைய உரைகள் எல்லாவற்றையும் தனது வாக்காகக்

Koviloor Digital Library

821. திருமலர்க்கொன்றையா னின்றியூர்மேயான்
றேவர்கடலைமகன் றிருக்கழிப்பாலை
நிருமலனெனதுரை தனதுரையாக
நீறணிந்தேறுகந் தேறியநிமலன்
கருமலர்க்கமழ்சுனை நீண்மலர்க்குவளை
கதிர்முலையிளையவர் மதிமுகத்துலவும்
இருமலர்த்தண்பொய்கை யிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென்னெழில்கொள்வதியல்பே. 2

கொண்டவிடையேறிய விமலன் இலம்பையங்கோட்டூரை இடமாகக் கொண்டு என்னலங்கொள்வதழகா? என்று பிரிவினால் வருந்துந் தலைவியின் நிலையை அனுபவித்துப் பேசுகின்றார்கள் திருஞான சம்பந்தப் பிள்ளையார். துருத்தி - திருத்துருத்தி. திருப்பூந்துருத்தி முதலிய தலங்கள். மாசிலாச்சீர்மறைக்காடு என்றது வேதத்தால் வழிபடப்பெற்றமையானும், கதவந்திறக்கவும் அடைக்கவுமாகப் பாடல்பெற்ற சிறப்புடைமையானும் இவ்வடைமொழி வந்தது. நிலையினான் - பிரியாதே பெயராதே உறைபவன்; நித்யவாஸம் செய்பவன் என்பர் வடநூலார். 'எனதுரை தனதுரையாக' ஆன்ம போதங்கழன்று, சிவபோதத்தில் நிற்பார் சொல்லுவனயாவும் சிவத்துரையேயாதலின் இங்ஙனம் கூறினார். கலையின் ஆர் மடப்பிணை - கலைமானோடுகூடிய இளைய பெண்மான். துணை யொடு - தன் துணையாகிய முற்கூறிய ஆண் மானோடு. கானல் - சோலை. கணமயில் - கூட்டமாகிய ஆண் மயில். ஆலும் - அகவும். இருக்கை - இருப்பிடம். என் எழில் கொள்வது இயல்பே - என்ன ழகைக் கவர்வது இத்தகையீர்க்கு இயல்பாமோ என்றாள். மயிலும், மானும் துணையொடும் பேடையொடும்வதிய, நீர்மட்டும் தனித் திருந்து, காதலித்த அடியாளையும் தனித்திருக்கச்செய்து அழகைக் கவர்வது அழகா? என்று உரைக்கின்றாள். இதனால் சிவத்தோடு இடை யறாமல் இருத்தலாகிய அத்துவித பாவனையிற் பிரிந்து இருக்கின்ற ஆன்மா ஒன்றிய காலத்துண்டாகிய சிவானந்தானுபவத்தாலுண்டான ஒளிகுறைய, அதனை எண்ணி, ஆன்ம நாயகியை வந்தேற்றுக் கொண்ட தேவரீர் இங்ஙனம் இடையறவுபடச் செய்யலாமா என்று வருந்திக் கூறுவதாகிய பேரின்பப் பொருளும் தோன்றுதல் காண்க. இங்ஙனமே ஏனைய திருப்பாடல்கட்கும் கொள்க.

2. பொ-ரை : அழகிய கொன்றை மலர் மாலையை அணிந்தவன். திருநின்றியூரில் எழுந்தருளியிருப்பவன். தேவர்கட்குத் தலைவன்.

Koviloor Digital Library

822. பாலனாம்விருத்தனாம் பசுபதிதானாம்
பண்டுவெங்கூற்றுதைத் தடியவர்க்கருளும்
காலனாமெனதுரை தனதுரையாகக்
கனலெரியங்கையி லேந்தியகடவுள்
நீலமாமலர்ச்சுனை வண்டுபண்செய்ய
நீர்மலர்க்குவளைக டாதுவிண்டோங்கும்
ஏலநாறும்பொழி லிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப் பேணியென்னெழில் கொள்வதியல்பே. 3

திருக்கழிப்பாலையில் குற்றமற்றவனாய் உறைபவன். தன்னுடைய உரைகளை என்னுடைய உரைகளாக வெளிப்படுத்தி அருள் புரிபவன். திருநீறு அணிந்து ஆனேற்றில் மகிழ்வோடு ஏறிவரும் நிமலன். அத்த கையோன் பெரிய தாமரை மலர்களால் மணம் கமழும் சுனைக்ளில் உள்ள நீண்ட குவளை மலர்கள் இளம் பெண்களின் மதி போன்ற முகத் தில் உலவும் பெரிய கண்களை நிகர்க்கும் இலம்பையங் கோட்டூரைத் தனது இருப்பிடமாகக் கொண்டு என் அழகைக் கவர்ந்து செல்லுதல் முறையோ?

கு-ரை : இதுவும் அதுபோலத் தலைவி கூற்று; திருமலர் என்றது மற்றைய மலர்கட்கு இல்லாத பிரணவ வடிவம் இதற்கு இருத்தலின். கருமலர் - கருநெய்தற்பூ. குவளை இளையவர் மதிமுகத்துலவும் - குவளை போன்ற கண்கள் முழுமதிபோன்ற முகத்து உலாவுகின்ற என்பதாம். கதிர்முலை - வளர்முலை. இரு மலர் - பெரியமலர் போன்ற கண்கள்.

3. பொ-ரை : பால வடிவோடும், விருத்த வடிவோடும் வரும் பசுபதி எனப் பெறுபவன். முற்காலத்தில் கொடிய கூற்றுவனை உதைத்து மார்க்கண்டேயருக்கு அருள்புரிந்த் காலகாலன். தன்னுடைய உரைகளை என் உரைகளாக வெளிப்படுத்தியவன். கையில் விளங்கும் எரியை ஏந்திய கடவுள். அத்தகைய இறைவன் நீல நிறம் பொருந்திய சிறந்த மலர்கள் பூக்கும் சுனையில் வண்டுகள் பாட நீரில் பூக்கும் குவளை மலர்கள் மகரந்தம் விண்டு மணம் பரப்புவதும், ஏலமணம் கமழும் பொழில்கள் சூழ்ந்ததுமான இலம்பையங்கோட்டூரைத் தனது இருப்பிடமாகக் கொண்டு அவனைத் தரிசிக்க வந்த என் எழிலைக் கொள்வது முறையோ?

கு-ரை : பாலன், விருத்தன், பசுபதி, காலகாலன், அனலேந்தி எல்லாமவன்; அவன் என் எழில் கொள்வதியல்பே என்கின்றது.

Koviloor Digital Library

823. உளங்கொள்வாருச்சியார் கச்சியேகம்ப
னொற்றியூருறையுமண் ணாமலையண்ணல்
விளம்புவானெனதுரை தனதுரையாக
வெள்ளநீர்விரிசடைத் தாங்கியவிமலன்
குளம்புறக்கலைதுள மலைகளுஞ்சிலம்பக்
கொழுங்கொடியெழுந்தெங்குங் கூவிளங்கொள்ள
இளம்பிறைதவழ்பொழிலிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப் பேணியென் னெழில்கொள்வதியல்பே. 4

வழிபடும் அடியார்கள் பரிபக்குவத்திற்கு ஏற்ப இத்தகைய வடிவங்களைத் தான் விரும்பியவாறு பெறுகின்றான் என்பதாம்.

வண்டுபாடக் குவளைகள் மலர்ந்து ஏல முதலியன நாறும் பொழில்சூழ் கோட்டூர் என்றது, தலைவியின் பிரிவாற்றாமைமிகுக்கும் சாதனங்கள் நிரம்பியுள்ளமை குறித்தவாறு.

4. பொ-ரை: உள்ளத்தில் தியானிப்பவர்களின் முடிமீது விளங்குபவன் கச்சியேகம்பன். ஒற்றியூர், திருவண்ணாமலை ஆகிய தலங்களில் விளங்கும் தலைவன். என்னுடைய உரைகளாகத் தன்னுரைகளை வெளியிடுபவன். கங்கை வெள்ளத்தைத் தனது விரிந்த சடைமிசைத் தாங்கிய விமலன். அத்தகையோன், கலைமான்கள் குளம்புகள் நிலத்தில் பதியுமாறு கால்களை அழுத்தித் துள்ளவும், மலைகள் அவ்விடங்களில் எழும்பும் ஒலிகளை எதிரொலிக்கவும், வளமையான கொடிகள் வளர்ந்த வில்வ மரங்கள் முழுதும் படியவும் அமைந்துள்ள, இளம்பிறை தவழும் வான் அளவிய பொழில்கள் சூழ்ந்த இலம்பையங்கோட்டூரைத் தனது இருப்பிடமாகக் கொண்டு அவனைத் தரிசிக்க வந்த என் எழிலைக் கவர்ந்து கொள்வது நீதியோ!

கு-ரை: தியானிப்பவர்களின் உச்சியிலுள்ள சகஸ்ரகமலத்தில் இருப்பவன் எனபது முதல் கங்கைதாங்கிய விமலன் என்பது வரை கூறப்பெற்ற சிறப்பியல்புடையவன் இவன் என்று கூறி, இத்தகையவன் என் எழில் கொள்ளலாமா என்கின்றாள்.

உளங்கொள்வார் - தியானிப்பவர். கலை குளம்பு உறத்துள - கலைமான் குளம்பு பதியத்துள்ள, சிலம்ப - ஒலிக்க. கூவிளங் கொள்ள - வில்வமரத்தின்மேல் படிய.

Koviloor Digital Library

824. தேனுமாயமுதமாய்த் தெய்வமுந்தானாய்த்
தீயொடுநீருடன் வாயுவாந்தெரியில்
வானுமாமெனதுரை தனதுரையாக
வரியராவரைக்கசைத் துழிதருமைந்தன்
கானமான்வெருவுறக் கருவிரலூகங்
கடுவனோடுகளுமூர் கற்கடுஞ்சாரல்
ஏனமானுழிதரு மிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென் னெழில்கொள்வதியல்பே. 5

5. பொ-ரை : தேன், அமுது ஆகியன போல இனிப்பவனாய், தெய்வம் தானேயானவன். தீ, நீர், வாயு, வான், மண் ஆகிய ஐம்பூத வடிவினன். தன் உரைகளை என் உரைகளாக வெளிப்படுத்தியவன். உடலில் வரிகளை உடைய பாம்பைத் தன் இடையிலே கட்டிக் கொண்டு திரிபவன். மான்கள் அஞ்சும்படி கரிய விரல்களை உடைய பெண் கருங்குரங்கு ஆண் குரங்கோடு காட்டில் உகளும் பாறை களை யுடைய கடுமையான மலைச்சாரலில் பன்றிகளும் காட்டுப் பசுக் களும் திரியும் இலம்பையங்கோட்டூரைத் தன் இருப்பிட்மாகக் கொண்டு தன்னை வழிபட வந்த என் அழகைக் கவர்ந்து கொள்ளல் முறையோ?

கு-ரை : தேன் முதலிய இனிய பொருள்களாய், ஐம்பூதமாய், அராப்பூண்டு அலையும் மைந்தன் என் அழகைக் கொள்வது இயல்பாகுமா என்கிறாள். தேன், இதயத்திற்கு வலிவூட்டி உடல் வளர்க்கும் இனித்த மருந்தாவது. அமுதம், அழியாமை நல்கும் மருந்து. இவையிரண்டும் எடுத்த பிறவிக்கு மட்டுமே இன்பம் அளிப்பன. தெய்வம் எடுத்த எடுக்கப்போகின்ற பிறவிகட்கும், பிறவி யற்ற பேரின்ப நிலைக்கும் இன்பம் அளிப்பது ஆதலால் தேனுமாய், அமுதமாய் என்றருளிய பிள்ளையார் அடுத்து தெய்வ முந்தானாய் என்கிறார்கள்.

தீயொடு ... வானுமாம் என்றதால் பூமி யொழிந்த ஏனைய நாற்பூதங்களைக் குறித்தார்கள். பாரிசேடத்தால் பூமியுங்கொள்க.

கானமான் வெருவுற - காட்டு மான் அஞ்ச. கருவிரல் ஊகம் - கரிய விரலையுடைய பெண் குரங்கு. கடுவன் - ஆண்குரங்கு. உகளும் -தாவும். ஏனம் ஆன் உழிதரும் - பன்றியும் காட்டுப்பசுவும் திரியும்.

Koviloor Digital Library

825. மனமுலாமடியவர்க் கருள்புரிகின்ற
வகையலாற்பலிதிரிந் துண்பிலான்மற்றோர்
தனமிலானெனதுரை தனதுரையாகத்.
தாழ்சடையிளமதி தாங்கியதலைவன்
புனமெலாமருவிக ளிருவிசேர்முத்தம்
பொன்னொடுமணிகொழித் தீண்டிவந்தெங்கும்
இனமெலாமடைகரை யிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென் னெழில்கொள்வதியல்பே. 6

826. நீருளான்றீயுளா னந்தரத்துள்ளா
னினைப்பவர்மனத்துளா னித்தமாவேத்தும்
ஊருளானெனதுரை தனதுரையாக
வொற்றைவெள்ளேறுகந் தேறியவொருவன்

6. பொ-ரை : தங்கள் மனங்களில் இறைவனை உலாவச் செய்யும் அடியவர்க்கு அருள்புரிதற் பொருட்டே பலியேற்றுத் திரிபவனேயன்றி உண்ணும்பொருட்டுப் பலி ஏலாதவன். வீடு பேறாகிய செல்வமன்றி வேறு செல்வம் இல்லாதவன். தன்னுடைய உரைகளை என்னுடைய உரைகளாக வெளிப்படுத்தியவன். தாழ்ந்து தொங்கும் சடைமீது இளம் பிறையைத் தாங்கியுள்ள தலைவன். அத்தகையோன் தினைப்புனங் களில் பாய்ந்து வரும் அருவிகள் அரிந்த தினைத்தாள்களில் ஒதுங்கிய முத்து பொன் மணி முதலியவற்றைக் கொழித்துக் கொண்டு வந்து எல்லா இடங்களிலும் சேர்க்கும் கரைகளோடு கூடிய வயல்களை உடைய இலம்பையங்கோட்டூரைத் தனது இருப்பிடமாகக் கொண்டு என் எழிலைக் கொள்வது முறையோ?

கு-ரை: மனத்தின்கண் இறைவனை உலாவச்செய்கின்ற அடியவற்கு அருளும் வகையன்றி, பிச்சையேற்றுத் தான் உண்ணாத வன்; வேறு செல்வமில்லாதவன்; என்னுரையைத் தன்னுரையாகக் கொண்டு, பிறைமதி தாங்கிய சடையன்; இத்தகைய இறைவன் இந்த நகரை இருக்கையாகக்கொண்டு என் எழில் கொள்ளுவது இயல்பா என்கின்றாள். மனம் உலாம் அடியவர் - இறைவனிடம் மனத்தை உலாவச்செய்கின்ற அடியார்கள். பலி - பிச்சை. இறைவன் தான் பலி ஏற்பதும் தன்பொருட்டன்று அடியார்க்காகவே என்பதாம். இருவி - தினைகொய்ததாள். இனம் எலாம் - இடமாகிய இடங்களில் எல்லாம்.

7. பொ-ரை : நீர், தீ, ஆகாயம் ஆகியவற்றுள் இருப்பவன். நினைப்பவர் மனத்தில் உறைபவன். நாள்தோறும் அடியவர்கள் வந்து

Koviloor Digital Library

பாருளார்பாடலோ டாடலறாத
பண்முரன்றஞ்சிறை வண்டினம்பாடும்
ஏருளார்பைம்பொழி லிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென் னெழில்கொள்வதியல்பே. 7

827. வேருலாமாழ்கடல் வருதிரையிலங்கை
வேந்தனதடக்கைக ளடர்த்தவனுலகில்
ஆருலாமெனதுரை தனதுரையாக
வாகமோரரவணிந் துழிதருமண்ணல்
வாருலாநல்லன மாக்களுஞ்சார
வாரணமுழிதரு மல்லலங்கானல்
ஏருலாம்பொழிலணி யிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென் னெழில்கொள்வதியல்பே. 8

வணங்கும் ஊர்களை இடமாகக் கொண்டவன். தன்னுடைய உரைகளை என்னுடையனவாக வெளிப்படுத்தியவன். தனித்த ஒரு வெள்ளேற்றை உகந்து ஏறி வருபவன். அத்தகையோன், மண்ணக மக்களின் பாடல் ஆடல்கள் இடையறாது நிகழ்வதும், அழகிய சிறகுகளை உடைய வண்டுகள் பண்ணிசை போல ஒலி செய்து பாடும் அழகிய பொழில்கள் சூழ்ந்ததுமான இலம்பையங்கோட்டூரைத் தனது இருப்பிடமாகக் கொண்டு என் எழிலைக் கவர்தல் முறையாகுமோ?

கு-ரை : நீர், தீ, ஆகாயம், நினைப்பவர் மனம், ஊர் இவை இறைவன் வசிக்கும் இடங்கள்; இங்கெல்லாம் உள்ளவன் விடையேறி இவ்வூரை இருக்கையாக்கொண்டு என் எழில் கொள்வதியல்பா என்கின்றாள். அந்தரம் - ஆகாயம். நித்தமா ஏத்தும் - நித்தியவழிபாடு செய்யும். மண்ணவர் பாட்டும் ஆட்டும் இடையறாத பொழில். முரன்று வண்டினம் பாடும் பொழில் எனக் கூட்டுக.

8. பொ-ரை: நிலத்தின் வேர் வரை உலாவுகின்ற ஆழ்ந்த கடலின் அலைகள் தவழ்கின்ற இலங்கை வேந்தனாகிய இராவணனின் நீண்ட கைகள் இருபதையும் நெரித்தவன். உலகின்கண் நிறைந்து விளங்கும் தன்னுடைய உரைகளை என் உரைகளாக வெளிப்படுத்தியவன். தன்னுடைய மார்பில் பெரியதொரு பாம்பினை அணிந்து திரியும் தலைவன். அத்தகையோன், கழுத்தில் வார் கட்டப்பட்ட நல்ல வளர்ப்பு விலங்குகளும், யானைகளும் திரியும் வளமான காடுகளும் அழகிய

Koviloor Digital Library

828. கிளர்மழைதாங்கினா னான்முகமுடையோன்
கீழடிமேன்முடி தேர்ந்தளக்கில்லா
உளமழையெனதுரை தனதுரையாக
வொள்ளழலங்கையி லேந்தியவொருவன்
வளமழையெனக்கழை வளர்துளிசோர
மாசுணமுழிதரு மணியணிமாலை
இளமழைதவழ்பொழி லிலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென் னெழில்கொள்வதியல்பே. 9

பொழில்களும் சூழ்ந்த இலம்பையங்கோட்டூரைத் தனது இருப்பிட மாகக்கொண்டு என் எழிலைக் கவர்தல் முறையோ?

கு-ரை : இராவணனை அடர்த்தவன்; இந்த உலகில் எனதுரை தனதுரையாக, மார்பில் பாம்பணிந்து திரியும் அண்ணல் இவ்வூரை இடமாகக்கொண்டு என் நலங்கவர்தல் இயல்போ என்கிறாள். வேர் உலாம் - பூமியின் அடிவரை உலாவுகின்ற, ஆருலாம் - நிறைதல் மலிந்த. ஆகம் - மார்பு. வாரணம் - யானை. மல்லல் - வளம். ஏர் உலாம்பொழில் - எழுச்சிமிக்க சோலை. நல்லன மாக்கள் - நல்ல விலங்குகள்.

9. பொ-ரை : ஆயர்பாடியை அழித்தற்கெனக் கிளர்ந்தெழுந்த மழையைக் கோவர்த்தனம் என்னும் மலையால் தடுத்த திருமாலும், நான்முகனும், கீழே அகழ்ந்து சென்று அடியையும், மேலே பறந்து சென்று முடியையும் அளந்தறியமுடியாதவாறு அழலுருவாய் ஓங்கி நின்றவன். மனத்தால் அழைத்தற்குரியனவாய் அமைந்த தன்னுடைய உரைகளை என்னுடையவாக வெளிப்படுத்தியவன். அழகிய கையில் ஒளி பொருந்திய அழலை ஏந்திய ஒப்பற்ற தலைவன். அத்தகை யோன், வளமான மழை போல, மூங்கிலில் தேங்கிய பனி நீர், காற்றால் பொழிவதும், மலைப் பாம்புகள் ஊர்வதும், அழகிய மணிகள் மாலை போல நிறைந்து தோன்றுவதும், மேகக் கூட்டங்கள் தவழும் பொழில் சூழ்ந்ததுமான இலம்பையங்கோட்டூரைத் தனது இருப்பிடமாகக் கொண்டு என் எழிலைக் கவர்ந்தான். இது முறையோ?

கு-ரை : மாலும் அயனும் அடிமுடியறியப்பெறாத அழலேந்திய ஒருவன், இவ்வூரை இருக்கையாகக்கொண்டு, இவ்வண்ணம் செய்வதா? என்கின்றாள்.

Koviloor Digital Library

829. உரிஞ்சனகூறைக ளுடம்பினராகி
யுழிதருசமணருஞ் சாக்கியப்பேய்கள்
பெருஞ்செல்வனெனதுரை தனதுரையாகப்
பெய்பலிக்கென்றுழல் பெரியவர்பெருமான்
கருஞ்சினைமுல்லைநன் பொன்னடைவேங்கை
களிமுகவண்டொடு தேனினமுரலும்
இருஞ்சுனைமல்கிய விலம்பையங்கோட்டூ
ரிருக்கையாப்பேணியென் னெழில்கொள்வதியல்பே. 10

கிளர்மழை தாங்கினான் - இந்திரனால் ஏவப்பட்ட மழையைக் கோவர்த்தனகிரியைக் குடையாகத் தூக்கித் தடுத்தவனாகிய திருமால்.

உளம் அழை - மனத்தால் அழைக்கின்ற. மழையைப்போல மூங்கிலிலைமேல் துளிவிழ, மலைப்பாம்பு திரிகின்ற கோட்டூர் என்க. மாசுணம் - மலைப்பாம்பு.

10. பொ-ரை : ஆடைகளை உரிந்துவிட்டாற் போன்ற அம்மண உடம்பினராய்த் திரியும் சமணர்களும், சாக்கியர்களாகிய பேய்களும் அறிய இயலாத பெரிய வைப்பு நிதியாய் விளங்குவோன். தன்னுடைய உரைகளை என் உரைகளாக வெளிப்படுத்தியவன். ஊரார் இடும் பலியை ஏற்பதற்கெனப் பிட்சாடனனாய்த் திரிபவன். பெரியோர் களுக்கெல்லாம் தலைவன். அத்தகையோன், பெரிதான அரும்புகளை உடைய முல்லையும், பொன் போன்று மலரும் வேங்கையும், மகிழ்ச்சி நிறைந்த முகத்தோடு வண்டுகளும், தேனீக்களும் முரலும் பெரிய சுனைகளும், நிறைந்து காணப்படும் இலம்பையங்கோட்டூரைத் தனது இருப்பிடமாகக் கொண்டு, என் எழிலைக் கவர்தல் முறையோ?

கு-ரை : புறச்சமயிகள் பெறுதற்கரிய பெருஞ்செல்வம் போன்ற வன், பலிக்கென்று உழல் பெரியவர் பெருமான், இவ்வூரை இருக்கை யாகப்பேணி என் எழில்கொள்வதியல்பா என்கிறாள்.

உரிஞ்சன கூறைகள் - உரிந்தாற்போன்ற ஆடைகள். உழி தரு - திரிகின்ற. கருஞ்சினை - பெரிய அரும்போடுகூடிய.

பொன் அடை வேங்கை - பொன் போன்ற பூக்களையுடைய வேங்கை. இரும்சுனை - பெரிய நீர்ச்சுனை.

Koviloor Digital Library

830. கந்தனைமலிகனை கடலொலியோதங்
கானலங்கழிவளர் கழுமலமென்னும்
நந்தியாருறைபதி நான்மறைநாவ
னற்றமிழ்க்கின்றுணை ஞானசம்பந்தன்
எந்தையார்வளநக ரிலம்பையங்கோட்டூ
ரிசையொடுகூடிய பத்தும்வல்லார்போய்
வெந்துயர்கெடுகிட விண்ணவரோடும்
வீடுபெற்றிம்மையின் வீடெளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : மணம் நிரம்பியதும், கடல் ஒலியோடு அதன் வெள்ளம் பெருகிக் கடற்கரைச் சோலைகள் உப்பங்கழிகள் ஆகியன நிரம்புவதும் ஆகிய கழுமலம் என்னும் சிவன் உறை பதியாகிய சீகாழியில் தோன்றிய நான்மறை ஓதும் நாவினனும் நற்றமிழ்க்குஇனிய துணையாயிருப்பவனுமாகிய ஞானசம்பந்தன் எந்தையார் உறையும் வளநகராகிய இலம்பையங்கோட்டூரில் வீற்றிருந்தருளும் இறைவன் மீது பாடிய இசையொடும் கூடிய பத்துப் பாடல்களையும் ஓத வல்லவர்கள் தம் கொடிய துயர்கள் ஓடிக்கெட விண்ணவரோடும் வீற்றிருந்து பின் விண்ணிலிருந்து விடுபட்டு வீடு பேற்றையும் இப்பிறப்பு ஒன்றாலேயே எளிதாகப் பெறுவார்கள்.

கு-ரை : இலம்பையங்கோட்டூரைப்பற்றிய இப்பாடல் பத்தையும் இசையொடு ஓதவல்லவர், துன்பநீங்கித் தேவரோடும் உறைந்து, அதினின்றும் விடுதலை பெற்று வீட்டின்பத்தையும் எய்துவர் என்கின்றது. கந்தனை - மணம். நந்தியார் - சிவன். கெடுகிட - கெட.

திருஞானசம்பந்தர் புராணம்

அங்குள்ள பிறபதியில் அரிக்கரியார் கழல்வணங்கிப்
பொங்குபுனற் பால்யாற்றின் புடையில்வட பாலிறைவர்
எங்கும்உறை பதிபணிவார் இலம்பையங்கோட் டூர்இறைஞ்சிச்
செங்கண்விடை உகைத்தவரைத் திருப்பதிகம் பாடினார்.

– சேக்கிழார்.

Koviloor Digital Library

77. திருஅச்சிறுபாக்கம்

பதிக வரலாறு:

திருக்கழுக்குன்றத்தை வணங்கி எழுந்தருளிய பிள்ளையார் என்பு அணியும் பரமன் இனிதே ஆட்சிசெய்யும் அச்சிறுபாக்கம் என்னும் தலத்தை அடைந்தார். அங்கு எழுந்தருளியுள்ள ஆதிமுதல்வரை வணங்கினார். 'அச்சிறுபாக்கமது ஆட்சிகொண்டாரே' என்னும் இறுதியான் முடியும் 'பொன் திரண்டன்ன' என்னும் இப்பதிகத்தைப் பாடினார்.

பண்: குறிஞ்சி

பதிக எண்: 77

திருச்சிற்றம்பலம்

831. பொன்றிரண்டன்ன புரிசடைபுரளப்
பொருகடற்பவளமொ டழனிறம்புரையக்
குன்றிரண்டன்ன தோளுடையகலங்
குலாயவெண்ணூலொடு கொழும்பொடியணிவர்
மின்றிரண்டன்ன நுண்ணிடையரிவை
மெல்லியலாளையோர் பாகமாப்பேணி
அன்றிரண்டுருவ மாயவெம்மடிக
ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. 1

1. பொ-ரை : அச்சிறுபாக்கத்தைத் தான் ஆட்சிபுரியும் இடமாகக் கொண்டுள்ள இறைவர், தமது, முறுக்கேறிய பொன் திரண்டாற் போன்ற சடை, அலைகள் பெருங்கடலில் தோன்றும் பவளக் கொடியையும், தீ வண்ணத்தையும் ஒத்துப் புரள, குன்றுகள் போன்ற இரண்டு தோள்களோடு கூடிய மார்பகத்தில் விளங்கும் வெண்மையான முப்புரி நூலோடு வளமையான திருநீற்றையும் அணிந்து, மின்னல் போன்ற நுண்ணிய இடையினையுடைய மென்மைத் தன்மை வாய்ந்த அரிவையாகிய பார்வதி தேவியை ஒரு பாகமாக விரும்பி ஏற்று, ஒருருவில் ஈருருவாய்த் தோன்றும் அடிகளாவார்.

கு-ரை: அச்சிறுபாக்கத்தை ஆட்சிகொண்ட சிவன், சடை, பவளக்கொடியையும் தீவண்ணத்தையும் ஒத்துப்புரள, மலை திரண்

Koviloor Digital Library

832. தேனினுமினியர் பாலனநீற்றர்
தீங்கரும்பனையர்தந் திருவடிதொழுவார்
ஊனயந்துருக வுவகைகடருவா
ருச்சிமேலுறைபவ ரொன்றலாதூரார்
வானகமிறந்து வையகம்வணங்க
வயங்கொளநிற்பதோர் வடிவினையுடையார்
ஆனையினுரிவை போர்த்தவெம்மடிக
ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. 2

டால் ஒத்த மார்பில், பூணூலும் பொடியும் அணிந்து, உமாதேவியை ஒரு பாகத்துக்கொண்டு, ஆணுருவும் பெண்ணுருவும் வேறாயுள்ள அடிகள் ஆவார் என்கின்றது. குன்று இரண்டு அன்ன தோள் எனவும், அன்று இரண்டுருவம் ஆய எனவும் பிரிக்க. கொழும் பொடி - வளப்பமான விபூதி.

2. பொ-ரை : அச்சிறுபாக்கத்தை, தான் ஆட்சிபுரியும் இடமாகக் கொண்டுள்ள இறைவர், தேனினும் இனியவர். பால் போன்ற நீறணிந்தவர். இனிய கரும்பு போன்றவர். தம் திருவடிகளை மெய்யுருகி வணங்கும் அன்பர்கட்கு உவகைகள் தருபவர். அவர்களின் தலைமேல் விளங்குபவர். இடபவாகனமாகிய ஓர் ஊர்தியிலேயே வருபவர். வானுலகைக் கடந்து மண்ணுலகை அடைந்து அங்குத் தம்மை வழிபடும் அன்பர்கள் நினைக்கும் செயலை வெற்றி பெறச் செய்து நிற்கும் வடிவினை உடையவர். யானையின் தோலைப் போர்த்தியவர். அவர் எம் தலைவராவர்.

கு-ரை: அவர் திருவடி தொழுவார்க்குத் தேனினும் இனியர், கரும்பனையர், உவகைகள் தருவார், விண்ணுலகினைக் கடந்தும், வையகம் வணங்க நிற்பவர் என்கின்றது. தேனினும் இனியர் - எக்காலத்தும் அள்ளூறிநின்று இனிக்கும் பொருளாக இருத்தலின் நாப்புலனோடு ஒன்றியகணத்து இனித்துப் பின் புளிப்பதாய தேனினும் இனியராயினர். பால் அன்ன நீறு - பால் உண்டார்க்குப் பித்தநோய் தணிக்கும்போல நீறு கண்டார்க்கும், பூசினார்க்கும் மலமயக்கம் போக்கலின் இங்ஙனம் கூறினார். தீங்கரும்பனையர் - கரும்பு பருவத்திற்கும் முயற்சிக்கும் ஏற்ப நுகரும் முறையில் இனிப்பைக் கொடுக்கும்; இவரும் ஆன்மாக்களின் பரிபக்குவநிலைக்கு ஏற்ப இனிப்பர். ஊன் நயந்து உருக உவகைகள் தருவார் - சடமாகிய மாயா காரியமாகிய உடல், உயிர் பெறும் இவ்வின்பத்தைப் பெற்றிலமே

Koviloor Digital Library

833. காரிருளுருவ மால்வரைபுரையக்
களிற்றினதுருவுகொண் டரிவைமேலோடி
நீருருமகளை நிமிர்சடைத்தாங்கி
நீறணிந்தேறுகந் தேறியநிமலர்
பேரருளாளர் பிறவியிற்சேரார்
பிணியிலர்கேடிலர் பேய்க்கணஞ்சூழ
ஆரிருண்மாலை யாடுமெம்மடிக
ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. 3

என்று விரும்பி உருக ஆன்மாவிற்கு மகிழ்ச்சியை விளைவிப்பவர். ஒன்று - இடபம். வானகம் இறந்து - போகபூமியாகிய வானகத்துப் பொருந்தலாகாமையின் அவர்களும் போகிகளாயிருத்தலின் பொருந்தமாட்டாமையின் அதனைக்கடந்து.

3. பொ-ரை: அச்சிறுபாக்கத்தைத் தாம் ஆட்சிபுரியும் இடமாகக் கொண்டுள்ள இறைவர், உமையம்மை பெண் யானை வடிவு கொள்ளத் தாம் காரிருளும், பெரிய மலையும் போன்ற களிற்றுயானை வடிவம் தாங்கிச் சென்று அவளோடு கூடியவர். நீர்வடிவமான கங்கையை மேல்நோக்கிய சடைமிசைத் தாங்கியவர். நீறுபூசி விடையேற்றில் மகிழ்ந்து ஏறிவரும் புனிதர். பேரருளாளர். பிறப்பிறப்பிற் சேராதவர். பிணி, கேடு இல்லாதவர். பேய்க்கணங்கள் சூழச் சுடுகாட்டில் முன்மாலை யாமத்தில் நடனம் புரியும் எம் அடிகளாவார்.

கு-ரை: அவர், உமை பெண்யானையின் வடிவங்கொள்ள, ஆண் யானையாய்த் தொடர்ந்து சென்றும், நீர்மகளைச் சடையில் தாங்கியும், விடையேறியும், நீறுபூசியும் விளங்கும் நிமலர், பேரருளாளர், பேய்க்கணம் புடைசூழ நள்ளிருளில் நடமாடுபவர் என்கின்றது.

கார் இருள் உருவம் மால் வரை புரைய - கறுத்த இருட்பிழம்பின் உருவத்தையும், கரியமலையையும் ஒத்த. அரிவை - பெண் யானையாகிய உமாதேவி. இது 'பிடியதன் உரு உமைகொள மிகு கரியது வடிகொடு' நடந்தமையைக் காட்டுவது. நீர் உருமகள் - கங்கையாகிய அழகிய மகள். பிறவியில் சேரார் - இங்ஙனம் நினைத்த வடிவத்தைத் தாமே மேற்கொள்ளுதலன்றி, வினைவயத்தான் வரும் பிறவியில் சேராதவர். ஆர் இருள் மாலை - நிறைந்த இருட் கூட்டம்.

Koviloor Digital Library

834. மைம்மலர்க்கோதை மார்பினரெனவு
மலைமகளவளொடு மருவினரெனவும்
செம்மலர்ப்பிறையுஞ் சிறையணிபுனலுஞ்
சென்னிமேலுடையரெஞ்சென்னிமேலுறைவார்
தம்மலரடியொன் றடியவர்பரவத்
தமிழ்ச்சொலும்வடசொலுந் தாணிழற்சேர
அம்மலர்க்கொன்றை யணிந்தவெம்மடிக
ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. 4

835. விண்ணுலாமதியஞ் சூடினரெனவும்
விரிசடையுள்ளது வெள்ளநீரெனவும்
பண்ணுலாமறைகள் பாடினரெனவும்
பலபுகழல்லது பழியிலரெனவும்

4. பொ-ரை: அச்சிறுபாக்கத்தில் ஆட்சி கொண்டுள்ள இறைவர் குவளை மலர்களால் இயன்ற மாலையைச் சூடிய மார்பினர் எனவும், மலைமகளாகிய பார்வதி தேவியை இடப்பாகமாகக் கொண்டுள்ளவர் எனவும், சிவந்த மலர் போலும் பிறையையும், தேங்கியுள்ள கங்கை நீரையும் தம் சடைமுடி மீது உடையவர் எனவும், எம் சென்னி மேல் உறைபவர் எனவும், தம் மலர் போன்ற திருவடிகளை மனத்தால் ஒன்றி நின்று அடியவர்கள் பரவவும் தமிழ்ச் சொல், வடசொற்களால் இயன்ற தோத்திரங்கள் அவர்தம் திருவடிகளைச் சாரவும் அழகிய கொன்றை மலர் மாலையை அணிந்தவராய் விளங்கும் அடிகள் ஆவார்.

கு-ரை: அவர், அடியவர்கள் மாலை மார்பர் எனவும், மலை மகளை மருவினர் எனவும் கங்கையும் பிறையும் சூடிய சென்னியர் எனவும், எம் சென்னிமேல் உறைவார் எனவும் தோத்திரிக்க, தமிழ்ச் சொல்லும் வடசொல்லும் தம் திருவடியைச்சார இருக்கும் அடிகளாவர் என்கின்றது. மை மலர் - நீல மலர். கோதை - மாலை. செம்மலர்ப் பிறை - சிவந்த மலர்போலும் பிறை. தமிழ்ச் சொல்லும் வடசொல்லும் தாள் நிழல்சேர என்றது ஒலிவடிவாய சொற்கள் யாவும் இறைவனிட மிருந்தே தோன்றியனவாதலின் அடையுமிடமும் அவனடியே யாயிற்று என்பதாம்.

5. பொ-ரை: அச்சிறுபாக்கத்தில் ஆட்சி கொண்டுள்ள இறைவர் வானிலே உலாவும் திங்களைச் சூடியவர் எனவும், அவர்தம் விரிந்த

Koviloor Digital Library

எண்ணலாகாத விமையவர்நாளு
மேத்தரவங்களோ டெழில்பெறநின்ற
அண்ணலானூர்தி யேறுமெம்மடிக
ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. 5

836. நீடிருஞ்சடைமே லிளம்பிறைதுலங்க
நிழறிகழ்மழுவொடு நீறுமெய்பூசித்
தோடொருகாதினிற் பெய்துவெய்தாய
சுடலையிலாடுவர் தோலுடையாகக்
காடரங்காகக் கங்குலும்பகலுங்
கழுதொடுபாரிடங் கைதொழுதேத்த
ஆடரவாட வாடுமெம்மடிக
ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. 6

சடைமுடியில் கங்கை நீர் வெள்ளம் தங்கி உள்ளது எனவும், இசை அமைதியோடு கூடிய நான்கு வேதங்களைப் பாடியவர் எனவும், பலவகையான புகழையே உடையவர் எனவும், பழியே இல்லாதவர் எனவும் எண்ணற்ற தேவர்கள் நாள்தோறும் தம்மை ஏத்த அரவாபரணங்களோடு, மிக்க அழகும் தலைமையும் உடையவராய் ஆனேறு ஏறிவரும் எம் அடிகள் ஆவார்.

கு-ரை : அவர் பிறைசூடினர் எனவும், கங்கை அவர் சடைக் கண்ணதெனவும், மறைபாடினர் எனவும், பழியிலர் எனவும் தேவர்கள் நாளும் ஏத்த இருப்பவர் என்கின்றது. எண்ணலாகாத இமையவர் - தாம் நுகரும் போக உள்ளத்தில் மயங்கி இறைவனைத் தியானிக்காத தேவர்கள். கணக்கற்ற தேவர்கள் என்பாரும் உளர்.

6. பொ-ரை : அச்சிறுபாக்கதில் ஆட்சி கொண்டுள்ள இறைவர் தமது நீண்ட பெரிய சடைமேல் இளம்பிறை விளங்க, ஒளிபொருந்திய மழுவோடு, திருநீற்றை மேனிமேல் பூசி, ஒரு காதில் தோடணிந்து கொடிய சுடலைக் காட்டில் ஆடுபவர். புலித்தோலை உடையாக அணிந்து இரவும், பகலும் பேய்க்கணங்களும், பூதகணங்களும் கைகளால் தொழுதேத்தப் படமெடுத்தாடும் பாம்புகள் தம் மேனிமேல் பொருந்தி ஆடச் சுடுகாட்டைத் தமது அரங்கமாகக் கொண்டு ஆடும் எம் அடிகள் ஆவார்.

கு-ரை: அவர் சடைமேல் பிறைவிளங்க, நீறுபூசி ஒருகாதில்

Koviloor Digital Library

837. ஏறுமொன்றேறி நீறுமெய்பூசி
யிளங்கிளையரிவையொ டொருங்குடனாகிக்
கூறுமொன்றருளிக் கொன்றையந்தாருங்
குளிரிளமதியமுங் கூவிளமலரும்
நாறுமல்லிகையு மெருக்கொடுமுருக்கு
மகிழிளவன்னியு மிவைநலம்பகர
ஆறுமோர்சடைமே லணிந்தவெம்மடிக
ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. 7

838. கச்சுமொள்வாளுங் கட்டியவுடையர்
கதிர்முடிசுடர்விடக் கவரியுங்குடையும்
பிச்சமும்பிறவும் பெண்ணணங்காய
பிறைநுதலவர்தமைப் பெரியவர்பேணப்

தோடணிந்து, பேயும் பூதமும் கைதொழுதேத்த, சுடலையில் ஆடுவர் என்கின்றது. நீடு இரும் சடை - நீண்ட பெரிய சடை. அரங்கு - கூத்தாடு மிடம். கங்குல் - இரவு. கழுது - பேய். பாரிடம் - பூதம்.

7. பொ-ரை : அச்சிறுபாக்கத்தில் ஆட்சிகொண்டுள்ள இறைவர், ஆனேறு ஒன்றில் ஏறித்தம் திருமேனிமேல் நீறுபூசி இளைய கிளி போன்ற அழகிய பார்வதி தேவியாருக்குத் தம் உடலில் ஒரு கூறு அருளி இருவரும் ஒருவராய் இணைந்து திருமுடிமேல் கொன்றை மாலை, குளிர்ந்த இளமதி, வில்வம், பிற நறுமலர்கள் மணங்கமழும் மல்லிகை, எருக்கு, முருக்கு, மகிழ், இளவன்னி இலை ஆகிய இவை மணம் பரப்ப, கங்கையாற்றைச் சடைமேல் அணிந்துள்ள எம் அடிகள் ஆவார்.

கு-ரை : அவர் எருதேறி, நீறுபூசி, பசுங்கிளி ஏந்திய பாவையோடு, கொன்றை, மதியம், வில்வம், மல்லிகை முதலியவற்றைப் புனைந்தவர் என்கின்றது. இளங்கிளை அரிவை - இளைய கிளியை யேந்திய உமாதேவி. கூவிள மலர் - வில்வப்பூ. பத்திரமே யன்றிப் பூவும் சூடப்பெறும் என்பதறிவிக்கப்பட்டது. மகிழ் - மகிழம்பூ.

8. பொ-ரை : அச்சிறுபாக்கத்தில் ஆட்சி கொண்டுள்ள இறைவர் ஒளி பொருந்திய வாளைக் கச்சிலே பொருத்தி இடையில் ஆடையாகக் கட்டியுள்ளவர். ஒளி பொருந்திய முடி சுடர்விடக்கவரி, குடை,

Koviloor Digital Library

பச்சமும்வலியுங் கருதியவரக்கன்
பருவரையெடுத்ததிண் டோள்களையடர்வித்
தச்சமுமருளுங் கொடுத்தவெம்மடிக
ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. 8

839. நோற்றலாரேனும் வேட்டலாரேனு
நுகர்புகர்சாந்தமொ டேந்தியமாலைக்
கூற்றலாரேனு மின்னவாறென்று
மெய்தலாகாததொ ரியல்பினையுடையார்
தோற்றலார்மாலு நான்முகமுடைய
தோன்றலுமடியொடு முடியுறத்தங்கள்
ஆற்றலாற்காணா ராயவெம்மடிக
ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. 9

பீலிக்குஞ்சம் முதலியவற்றோடு பெண்களைக் கவரும் பிறை மதியை முடியிற் சூடி விளங்குபவர். பெருமை உடைய அடியவர் தம்மை விரும்பி வழிபடுமாறு, தம் அன்பு வலிமை ஆகியவற்றைக் கருதித் தன்னைப் பெரியவனாக எண்ணிப் பெரிய கயிலை மலையைப் பெயர்த்தெடுத்த இராவணனின் தோள்களை அடர்த்து அவனுக்குத் தம்பால் அன்பையும் அருளையும் கொடுத்த எம் அடிகள் ஆவார்.

கு-ரை: அவர், இராவணனுக்கு அச்சமும் அருளும் அளித்தவர் என்கின்றது. இராவணனுக்கு வந்த ஏற்றமெல்லாம் கச்சையும் வாளையுங்கட்டி, கவரி குடை பிச்சம் முதலியவற்றைத் தாங்கிய பெண்கள் இவனைப் பெரியவன் என்று பேணியதேயாகும். அதனால் இவனுக்கு அன்பும் வலிமையும் உண்டாயின என்ற கருத்து விளக்கப் படுதல் காண்க. அதனாலேயே ஏமாந்து இறைவன் கயிலையை எடுக்கத் தொடங்கினான் என்பதாம்.

9. பொ-ரை : அச்சிறுபாக்கத்தில் ஆட்சிகொண்டுள்ள இறைவர் தவம் செய்யாராயினும், அன்பு செய்யாராயினும் நுகரத்தக்க உணவு, சந்தனம், கையில் ஏந்திய மாலை இவற்றின் கூறுகளோடு வழிபாடு செய்யாராயினும் இத்தகையவர் என்று அறிய முடியாத தன்மையும் அடைய முடியாத அருமையும் உடைய இயல்பினராய் மாலும் நான்முகனும் பன்றியும் அன்னமுமாய்த் தோன்றி அடியையும் முடியையும் தங்கள் ஆற்றலால் காண இயலாதவாறு உயர்ந்து நின்ற

Koviloor Digital Library

840. வாதுசெய்சமணுஞ் சாக்கியப்பேய்க
ணல்வினைநீக்கிய வல்வினையாளர்
ஓதியுங்கேட்டு முணர்வினையிலாதா
ருள்கலாகாததோ ரியல்பினையுடையார்
வேதமும்வேத நெறிகளுமாகி
விமலவேடத்தொடு கமலமாமதிபோல்
ஆதியுமீறு மாயவெம்மடிக
ளச்சிறுபாக்கம தாட்சிகொண்டாரே. 10

எம்அடிகள் ஆவார். எனவே நோற்பவருக்கும் அன்பு செய்பவருக்கும் வழிபடுவோருக்கும் அவர் எளியர் என்பது கருத்து.

கு-ரை: அவர் தவஞ்செய்யாராயினும் சாந்தும் மாலையுங் கொண்டு தொழாராயினும், என்றைக்கும் இப்படி அடையலாமென்று முயன்றும் அடையமுடியாத தன்மையையுடையவர் இவர் என்கின்றது. நோற்றலார் - தவஞ்செய்யாதவர். வேட்டலார் - யாகஞ் செய்யாதவர்கள். புகர் - உணவு. ஈண்டு - நைவேத்தியம். தோற்றலார் மால் - பிறத்தலையுடைய திருமால்.

10. பொ-ரை : அச்சிறுபாக்கத்தில் ஆட்சி கொண்டுள்ள எம் அடிகள் நல்வினைகளைச் செய்யாது வல்வினைகள் புரிபவரும் ஓதியும் கேட்டும் திருந்தாத உணர்வோடு தர்க்கவாதம் புரிபவருமாகிய சமணர்களும் சாக்கியப் பேய்களும் நினைத்தும் அறிய முடியாத இயல்பினை உடையவர். வேதமும் வேத நெறிகளும் ஆகியவர். தம்மை வழிபடுவார் மலங்களை நீக்கும் வேடம் உடையவர். தாமரை மலரும் திங்களும் போன்ற அழகும், தண்மையும் உடையவர். உலகின் முதலும் முடிவும் ஆனவர்.

கு-ரை :அவர் புறச்சமயிகளுடைய நல்வினையைப் போக்கியவர், படித்துங் கேட்டும் உணர்ச்சியற்றவர்களால் தியானிக்கப்படாதவர், வேதமும் அவைகூறும் நெறிகளுமாகி, மலரகிதரான வேடத்தோடு, ஆதியும் ஈறுமாய அடிகள் இவர் என்கின்றது. வாது செய்சமண் - விதண்டாவாதமே செய்து பொழுதுபோக்கும் சமணர். அவர்களுக்குத் துணை இருப்பது உலகபோகத்திற்குரிய நல்வினை யாதலின் உண்மை உணராது வாதமே செய்து காலம் கழிக்கின்றனர் என்பதாம். ஆதலால் அவர்களுடைய நல்வினையை நீக்கவேண்டியது இவர் அருளித் திறமாயிற்று.

Koviloor Digital Library

841. மைச்செறிகுவளை தவளைவாய்நிறைய
மதுமலர்ப்பொய்கையிற் புதுமலர்கிழியப்
பச்சிறவெறிவயல் வெறிகமழ்காழிப்
பதியவரதிபதி கவுணியர்பெருமான்
கைச்சிறுமறியவன் கழலலாற்பேணாக்
கருத்துடைஞானசம் பந்தனதமிழ்கொண்
டச்சிறுபாக்கத் தடிகளையேத்து
மன்புடையடியவ ரருவினையிலரே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை: கருநிறம் பொருந்திய குவளை மலர்கள் தவளைகளின் வாய் நிறையுமாறு தேனைப் பொழியும் மலர்கள் நிறைந்த பொய்கைகளும், புதுமலர்களின் இதழ்கள் கிழியுமாறு பசிய இறால் மீன்கள் துள்ளி விழும் பொய்கைகளை அடுத்துள்ள வயல்களும் மணம் கமழும் சீகாழிப் பதியினர்க்கு அதிபதியாய் விளங்கும் கவுணியர் குலத் தலைவனும், கையின்கண் சிறிய மானை ஏந்திய சிவன் திருவடிகளையன்றிப் பிறவற்றைக் கருதாத கருத்தினை உடையவனும் ஆகிய ஞானசம்பந்தன் பாடிய இப்பதிகத்தைக் கொண்டு அச்சிறுபாக்கத்து அடிகளை ஏத்தும் அன்புடை அடியவர் நீக்குதற்கரிய வினைகள் இலராவர்.

கு-ரை: இது, இறைவன்திருவடியன்றி வேறொன்றையும் பேணாத ஞானசம்பந்தர் தமிழைக் கொண்டது. இத்தலத்து இறைவனை ஏத்தும் அடியார்கள் வினையிலர் என்கின்றது. குவளைப் பூக்கள் தவளையினுடைய வாய்நிரம்ப மதுவைப் பொழிகின்ற பொய்கை என்க. பச்சு இறவு புதுமலர் கிழிய எறி வயல் - பசிய இறால்மீன் புதுமலர் கிழியத் துள்ளும் வயல். மறி - மான்.

திருஞானசம்பந்தர் புராணம்

ஆதிமுதல் வரைவணங்கி ஆட்சிகொண்டார் எனமொழியும்
கோதில்திருப் பதிகஇசை குலாவியபா டலிற்போற்றி
மாதவத்து முனிவருடன் வணங்கிமகிழ்ந் தின்புற்றுத்
தீதகற்றுஞ் செய்கையினார் சின்னாளங் கமர்ந்தருளி.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

78. திருஇடைச்சுரம்

பதிக வரலாறு:

திருவான்மியூரில் சிலநாள் தங்கியிருந்த புகலிப் பிள்ளையார் பல பதிகளை வணங்கத் திருவுளத்தெண்ணி விடையூரும் வித்தகரின் இடைச்சுரத்தைச் சேர்வுற்றார். அங்கே அடியார்கள் எதிர்கொண்டழைத்துச் சென்றார்கள். கோபுரத்தை வணங்கினார். உட்புகுந்தார். நற்கோயிலை வலங்கொண்டார். இறைவன் திருமுன்பு அடைந்தார். கண்டார். கண்ட பொழுதே அன்புமீதூரக் கை தலைமேற்குவிய, நிலத்திடை நீள்மரம்போல் விழுந்து நமஸ்கரித்து எழுந்து அளவற்ற மகிழ்ச்சியுடன் பெருமான் திருமேனி வண்ணங்கண்டு அதிசயித்தார். ''இடைச் சுரம் மேவிய இவர் வணம் என்னே'' என்று அருந் தமிழ்த் திருப்பதிகமாகிய 'வரிவளரவிரொளி' என்னும் இதனை அருளிச் செய்தார்கள்.

பண்: குறிஞ்சி

பதிக எண்: 78

திருச்சிற்றம்பலம்

842. **வரிவளரவிரொளி யரவரைதாழ**
வார்சடைமுடிமிசை வளர்மதிசூடிக்
கரிவளர்தருகழல் கால்வலனேந்திக்
கனலெரியாடுவர் காடரங்காக
விரிவளர்தருபொழி லிளமயிலால
வெண்ணிறத்தருவிக டிண்ணெனவீழும்
எரிவளரினமணி புனமணிசார
லிடைச்சுரமேவிய விவர்வணமென்னே. 1

1. பொ-ரை : மரங்கள் வளர்ந்த விரிந்த பொழில்களில் இள மயில்கள் ஆடுவதும், வெண்மையான நிறத்துடன் அருவிகள் திண் ணென்ற ஒலிக் குறிப்போடு வீழ்வதும், எரி போன்று ஒளிரும் ஓரினமான மணிகள் காடுகளில் அழகுற விளங்குவதுமாய மலைச் சாரலை உடைய திருஇடைச்சுரத்தில், வரிகளையும் ஒளியையும் உடைய பாம்பை இடையிலே கட்டி, நீண்ட சடைமுடிமீது வளரும் பிறை மதியைச் சூடி யானை உருவம் பொறித்த வீரக் கழலைக்

Koviloor Digital Library

843. ஆற்றையுமேற்றதோ ரவிர்சடையுடைய
ரழகினையருளுவர் குழகலதறியார்
கூற்றுயிர்செகுப்பதோர் கொடுமையையுடையர்
நடுவிருளாடுவர் கொன்றையந்தாரார்
சேற்றயன்மிளிர்வன கயலிளவாளை
செருச்செயவோர்ப்பன செம்முகமந்தி
ஏற்றையொடுழிதரு மெழிறிகழ்சார
லிடைச்சுரமேவிய விவர்வணமென்னே. 2

காலின்கண் வெற்றி பெறச் சூடிச் சுடுகாட்டைத் தமது அரங்காகக் கொண்டு ஆடும் இவ்விறைவரது இயல்பு யாதோ?

கு-ரை: இப்பதிகம், இறைவனுடைய வீரம் முதலிய பல இயல்புகளை எடுத்துக்கூறி, இடைச்சுரம் மேவிய இவர் வண்ணம் என்னே என்று வினாவுவதாக அமைந்துள்ளது.

வரிவளர் அவிர் ஒளி அரவு - வரிகளோடுகூடி விளங்குகின்ற ஒளியினையுடைய பாம்பு. அரைதாழ - திருவரையில் தங்க. கரிவளர் தரு கழல் - அத்தியாளியின் உருவம் எழுதப்பெற்ற வீரக்கழல். இவர் இயல்புகளை எத்துணை அறியினும், அறிந்தவற்றிற்கும் அப்பால் பல இயல்புகள் இருத்தலின் இவர்வண்ணம் என்னே எனச் செயலறவு அருளினாராயிற்று.

2. பொ-ரை: வயல்களில் உள்ள சேற்றில் விளங்கும் கயல் மீன்களும் வாளை மீன்களும் தம்மோடு சண்டையிடுவதைக் கூர்ந்து நோக்கும் சிவந்த முகத்தையுடைய பெண் குரங்கோடு ஆண் குரங்கு கூடித் திரியும் அழகிய மலைச் சாரலை உடைய திருஇடைச்சுரத்தில், கங்கை நதியையும் ஏற்றருளிய விரிந்த சடையை உடையவராய், அழகும் இளமையும் உடையவராய், கூற்றுவன் உயிரை மாய்க்கும் பெருவிரல் உடையவராய், நள்ளிருளில் திருநடம்புரிபவராய், கொன்றை மலர் மாலை சூடியவராய் விளங்கும் இவ்விறைவர்தம் இயல்பு யாதோ?

கு-ரை: ஆறு - கங்கை. குழகு - இளமை. கயல்மீனும் இளவாளைமீனும் போர்செய்ய, அதனைப் பெண் குரங்குகள் கூர்ந்து நோக்குகின்றன. செம்முக மந்தி - பெண் குரங்கு. ஏற்றை - ஆண் குரங்கு.

Koviloor Digital Library

844. கானமுஞ்சுடலையுங் கற்படுநிலனுங்
காதலர்தீதிலர் கனன்மழுவாளர்
வானமுநிலமையு மிருமையுமானர்
வணங்கவுமிணங்கவும் வாழ்த்தவும்படுவார்
நானமும்புகையொளி விரையொடுகமழ
நளிர்பொழிலிளமஞ்ஞை மன்னியபாங்கர்
ஏனமும்பிணையலு மெழிறிகழ்சார
லிடைச்சுரமேவிய விவர்வணமென்னே. 3

845. கடமணிமார்பினர் கடறனிலுறைவார்
காதலர்தீதிலர் கனன்மழுவாளர்
விடமணிமிடறினர் மிளிர்வதோரரவர்
வேறுமோர்சரிதையர் வேடமுமுடையர்
வடமுலையயலன கருங்குருந்தேறி
வாழையின்றீங்கனி வார்ந்துதேனட்டும்
இடைமுலையரிவைய ரெழிறிகழ்சார
லிடைச்சுரமேவிய விவர்வணமென்னே. 4

3. பொ-ரை : தூவி எரிக்கும் புழுகு, சந்தனம், அகில் முதலிய வற்றின் புகையும் அவை எரிதலால் விளங்கும் ஒளியும் மணம் வீசச் செறிந்த பொழில்களிடையே இளமயில்கள் நிறைந்துள்ளதும், அருகில் பன்றிகளும் மானினங்களும் வாழ்வதுமான அழகிய மலைச் சாரலை அடுத்துள்ள திருஇடைச்சுரத்தில் காட்டையும், சுடலையையும், கற்கள் நிரம்பிய மலையிடங்களையும் விரும்புபவரும், தீமை யில்லாதவரும், அழல் போன்ற வெம்மையான மழுவாயுதத்தை ஏந்தியவரும், தீமை யில்லாதவரும், மறுமை இம்மை ஆகிய இருமை இன்பங்களையும் தருபவரும் வணங்குதற்கும் பழகுதற்கும் வாழ்த்துதற்கும் உரிமை யானவருமாகிய இவ்விறைவரின் இயல்பு யாதோ?

கு-ரை : கானம் - காடு. கற்படுநிலன் - மலை. காதலர் - இவற்றை இடமாகக்கொள்ளும் விருப்பினர். வானம் - மறுமை. நிலமை - இம்மை. இருமையும் - இவ்விரண்டின் தன்மையும். நானம் - கஸ்தூரி. ஏனம் - பன்றி. பிணையல் - பெண்மான்.

4. பொ-ரை : அசையும் ஆலமரத்தினருகே விளங்கும் கரிய குருந்த மரங்களில் ஏறி வாழைக் கனிகளின்மீது ஒழுகுமாறு தேன்

Koviloor Digital Library

846. கார்கொண்டகடிகமழ் விரிமலர்க்கொன்றைக்
கண்ணியர்வளர்மதி கதிர்விடக்கங்கை
நீர்கொண்டசடையினர் விடையுயர்கொடியர்
நிழறிகழ்மழுவின ரழறிகழ்நிறத்தர்
சீர்கொண்டமென்சிறை வண்டுபண்செய்யும்
செழும்புனலனையன செங்குலை வாழை
ஏர்கொண்டபலவினொ டெழிறிகழ்சார
லிடைச்சுரமேவிய விவர்வணமென்னே. 5

அடைகளை எடுத்துப் பிழியும், இடங்கொண்டு வளர்ந்த முலைகளை உடைய பெண்கள் வாழும் அழகிய மலைச்சாரலை உடைய திரு இடைச்சுரத்தில், மலைச்சாரல்களில் விளைந்த மணிகளை அணிந்த மார்பினரும் கடலில் உறைபவரும், அன்புடையவரும் தீமையில்லாத வரும், கனலும் மழுவை ஏந்தியவரும் விடத்தை அடக்கிய மணிமிடற் றினரும், பாம்பை அணிகலனாகப் பூண்டவரும் வேறு வேறான ஒழுக்க நெறிகளை உடையவரும் பல்வேறு தோற்றங்களையுடைய வருமாய் எழுந்தருளிய இவ்விறைவரின் இயல்பு யாதோ?

கு-ரை: கடமணி - மலைச்சாரலில் விளைந்த மணி. சரிதை - ஒழுக்கம். வட முலை அயலன - அசையும் ஆலுக்குப் பக்கத்தன வாகிய. கருங்குருந்து - பெரிய குருந்தமரத்தில். வார்ந்து - ஒழுகி. தேன் அட்டும் - தேனை எடுக்கின்ற. இட முலை அரிவையர் - இடங் கொண்டு வளர்ந்த முலையினையுடைய பெண்கள்.

5. பொ-ரை: கார்காலத்தே உண்டான மணம் கமழும் விரிந்த கொன்றை மலர்களால் தொடுக்கப்பட்ட மாலையை அணிந்தவரும், வளரும் பிறைமதி ஒளிவிடக் கங்கை நீரை ஏற்ற சடையினரும், விடை எழுதிய உயர்ந்த கொடியை உடையவரும், ஒளி விளங்கும் மழுப் படையை ஏந்தியவரும், அழல்போலும் சிவந்த நிறத்தினரும் ஆய், சிறப்புமிக்க மெல்லிய இறகுகளை உடைய வண்டுகள் இசை பாடு வதும் வளவிய புனல் போலும் தண்ணிய செவ்வாழைக் குலைகள் அழகுமிக்க பலாக்கனிகளோடு விளங்கி அழகு செய்வதும் ஆகிய சாரலை உடைய இடைச்சுரத்தில் எழுந்தருளியிருக்கும் இவரது தன்மை யாதோ?

கு-ரை: கார்கொண்ட - கார்காலத்து உண்டான. கடி - மணம். வாழைகள் பலாவினோடு அழகைச்செய்கின்ற சாரல் எனக் கூட்டுக.

Koviloor Digital Library

847. தோடணிகுழையினர் சுண்ணவெண்ணீற்றர்
சுடலையினாடுவர் தோலுடையாகப்
பீடுயர்செய்ததோர் பெருமையையுடையர்
பேயுடனாடுவர் பெரியவர்பெருமான்
கோடல்களொழுகுவ முழுகுவதும்பி
குரவமுமரவமு மன்னியபாங்கர்
ஏடவிழ்புதுமலர் கடிகமழ்சார
லிடைச்சுரமேவிய விவர்வணமென்னே. 6

848. கழன்மல்குகாலினர் வேலினர்நூலர்
கவர்தலையரவொடு கண்டியும்பூண்பர்
அழன்மல்குமெரியொடு மணிமழுவேந்தி
யாடுவர்பாடுவ ராரணங்குடையர்

6. பொ-ரை: தோடணிந்த காதினராய்த் திருவெண்ணீறாகிய சுண்ணப் பொடி பூசியவரும், தோலை உடுத்திச் சுடுகாட்டில் நடனம் ஆடுபவரும், பீடு என்னும் சொல் பெருமை உறுமாறு மிக்க பெருமையை உடையவரும் பேய்க் கணங்களோடு ஆடுபவரும், பெரியவர் எனப் போற்றத் தக்கவர்கட்குத் தலைவருமாய்ச் செங் காந்தட் பூக்கள் தேனைச் சொரிய அவற்றின்கண் முழுகும் வண்டுகளை உடையதும் குரவம் கடம்ப மரம் ஆகியன நிறைந்துள்ள சோலைகளில் பூத்த புதுமலர்களின் மணம் வீசப் பெறுவதுமாகிய சாரலை உடைய இடைச்சுரத்தில் எழுந்தருளியுள்ள சிவபிரானது இயல்பு யாதோ?

கு-ரை: குழை - காது. பீடு - பெருமை. கோடல்கள் ஒழுகுவ - செங்காந்தட்பூக்கள் தேனைச் சொரிவன; அதில், தும்பி முழுகுகின்றன. தும்பி - வண்டு.

7. பொ-ரை: வீரக்கழல் அணிந்த திருவடியினரும், கையில் வேலை ஏந்தியவரும், முப்புரிநூல் அணிந்தவரும் ஐந்தாகக் கிளைத்த தலைகளை உடைய பாம்போடு உருத்திராக்க மாலை அணிந் துள்ளவரும், சுவாலைவிட்ட எரியோடு அழகிய மழுவை ஏந்தி ஆடுபவரும், பாடுபவரும், பிறரை வருத்தும் அழகுடையவருமாய்ப் பொழில்களில் நிறைந்து உயர்ந்துள்ள மராமரங்களில் பொருந்திய கிளைகளில் ஆண்பெண் குயில்கள் இணைந்து பாடுவதும் அழகிய

Koviloor Digital Library

பொழின்மல்குநீடிய மரவமுமரவ
மன்னியகவட்டிடைப் புணர்குயிலாலும்
எழின்மல்குசோலையில் வண்டிசைபாடு
மிடைச்சுரமேவிய விவர்வணமென்னே. 7

849. தேங்கமழ்கொன்றையந் திருமலர்புனைவார்
திகழ்தருசடைமிசைத் திங்களுஞ்சூடி
வீந்தவர்சுடலைவெண் ணீறுமெய்பூசி
வேறுமோர்சரிதையர் வேடமுமுடையர்
சாந்தமுமகிலொடு முகில்பொதிந்தலம்பித்
தவழ்கனமணியொடு மிகுபளிங்கிடறி
ஏந்துவெள்ளருவிக ளெழிறிகழ்சார
லிடைச்சுரமேவிய விவர்வணமென்னே. 8

சோலைகளில் வண்டுகள் இசை பாடுவதும் ஆகிய சாரலை உடைய இடைச்சுரத்தில் விளங்கும் சிவபிரானது இயல்பு யாதோ?

கு-ரை: கழல் - வீரக்கழல். வேல் - சூலம். கவர் தலை அரவு - ஐந்தலை நாகம். கண்டி - உருத்திராக்கம். அணங்கு - தெய்வத் தன்மை. மரவம் - மராமரம். கவடு - கிளை.

8. பொ-ரை: தேன் மணம் கமழும் அழகிய கொன்றை மலர் மாலையைச் சூடுபவரும், விளங்கும் சடைமுடியில் பிறை மதியைச் சூடி இறந்தவர்களை எரிக்கும் சுடுகாட்டுச் சாம்பலைத் தம் திருமேனி மீது பூசி, வேறுபடும் புராண வரலாறுகளை உடையவரும் அவ்வாறே வேறுபடும் பல வேடங்களுடன் காட்சி தருபவருமாய், சந்தனம் அகில் ஆகியவற்றின் மணம் பொதிந்து இடித்துப் பொழியும் மழையாள் உருண்டுவரும் பெரிய மணிகளையும் பளிங்குகளையும் அடித்து வருவனவாகிய உயர்ந்த வெண்மையான அருவிகள் விளங்கும் மலைச் சாரலை உடைய இடைச்சுரத்தில் விளங்கும் பெருமானது இயல்பு யாதோ?

கு-ரை: வீந்தவர் - இறந்தவர். சாந்தம் - சந்தனம். கனமணி - கூட்டமாகிய இரத்தினங்கள். ஏந்து - தாங்கிய.

Koviloor Digital Library

850. பலவிலமிடுபலி கையிலொன்றேற்பர்
பலபுகழல்லது பழியிலர்தாமும்
தலையிலங்கவிரொளி நெடுமுடியரக்கன்
றடக்கைகளடர்த்ததோர் தன்மையையுடையர்
மலையிலங்கருவிகண் மணமுழவதிர
மழைதவழிளமஞ்ஞை மல்கியசாரல்
இலையிலவங்கமு மேலமுங்கமழு
மிடைச்சுரமேவிய விவர்வணமென்னே. 9

851. பெருமைகடருக்கியோர் பேதுறுகின்ற
பெருங்கடல்வண்ணனும் பிரமனுமோரா
அருமையரடிநிழல் பரவிநின்றேத்து
மன்புடையடியவர்க் கணியருமாவர்
கருமைகொள்வடிவொடு சுனைவளர்குவளைக்
கயலினம்வயலிள வாளைகளிரிய
எருமைகள்படிதர விளவனமாலு
மிடைச்சுரமேவிய விவர்வணமென்னே. 10

9. பொ-ரை: பலர் இல்லங்களுக்கும் சென்று மகளிர் இடும் உணவைக் கைகளில் ஏற்பவரும், பலவாய் விரிந்த புகழ் அல்லது பழி எதுவும் இல்லாதவரும், விட்டு விளங்கும் ஒளியை உடைய நீண்ட மகுடங்களைத் தரித்த பத்துத் தலைகளையுடைய இராவணனின் நீண்ட கைகளை நெரித்த வலிமையை உடையவருமாய், மலையில் விளங்கும் அருவிகள் மணமுழாப் போல் ஒலியோடு இழிவதும், இள மயில்கள் நிறைந்ததும், மேகங்கள் தவழும் சாரலை உடையதும், இலை களை உடைய இலவங்கம் ஏலம் கமழ்வதுமான திருஇடைச்சுரத்தில் எழுந்தருளிய இப்பெருமானது இயல்பு யாதோ?

கு-ரை : பல இலம் இடு பலி - பல வீடுகளில் இட்ட பிச்சை. தலை இலங்கு நெடு முடி எனக் கூட்டுக. இலை இலவங்கம் - இலைகளோடு கூடிய இலவங்கமரம்.

10. பொ-ரை : பெருமைகளால் செருக்குற்றுப் பேதைமை உறுகின்ற கடல் நிற வண்ணனாகிய திருமாலும் பிரமனும் அறிய முடியாத அருமையை உடையவரும், தம் திருவடி நிழலை நின்று

Koviloor Digital Library

852. மடைச்சுரமறிவன வாளையுங்கயலு
மருவியவயறனில் வருபுனற்காழிச்
சடைச்சுரத்துறைவதோர் பிறையுடையண்ணல்
சரிதைகள்பரவிநின் றுருகுசம்பந்தன்
புடைச்சுரத்தருவரைப் பூக்கமழ்சாரற்
புணர்மடநடையவர் புடையிடையார்ந்த
இடைச்சுரமேத்திய விசையொடுபாட
லிவைசொலவல்லவர் பிணியிலர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்

பரவிப் போற்றும் அன்புடைய அடியவர்கட்கு அணிமையானவரு மாய், சுனைகளில் கரிய நிறவடிவோடு பூத்து வளர்ந்த குவளை மலர்களையும் கயலினங்களையும் உடையதும் வயல்களில் வாளை மீன்களும் கயல் மீன்களும் அஞ்சித் துள்ளுமாறு எருமைகள் படிய அதனைக் கண்டு இளைய அன்னங்கள் ஆரவாரிப்பதுமாகிய திருஇடைச்சுரத்தில் எழுந்தருளிய சிவபிரானாராகிய இவர்தம் இயல்பு யாதோ?

கு-ரை : பெருமைகள் தருக்கி - பெருமைகளால் செருக்குற்று. பேதுறுகின்ற - மயங்கிய. ஓரா அருமையர் - அறியமுடியாத அருமைப்பாட்டினை உடையவர். எருமைகள் குவளை கயலினம் இளவாளைகள் இரிய படிதர இள அன்னம் ஆலும் இடைச்சுரம் எனக் கூட்டுக. இரிய - விலக. படிதர - தோய. ஆலும் - ஒலிக்கும்.

11. பொ-ரை : நீர் மடைகளில் துள்ளுவனவாகிய வாளை மீன்களும் கயல் மீன்களும் வயல்களிடத்து வரும் நீர் வளம் மிக்க காழி நகரில், சடைக்காட்டில் உறையும் பிறை மதியை உடைய சிவபிரானின் வரலாறுகளைப் பரவி உருகும் ஞானசம்பந்தன், அருகருகே வெற்றிடங் களை உடைய மலையின் பூக்கமழ் சாரலில் அழகிய மட நடையினை உடைய மகளிர் பல இடங்களில் தங்கி அழகு செய்வதாகிய இடைச் சுரத்தைப் போற்றிப் பாடிய இப்பதிகப் பாடலை இசையோடு சொல்ல வல்லவர், பிணிகள் இன்றி வாழ்வர்.

கு-ரை : ஞானசம்பந்தன், இடைச்சுரத்தைத் துதித்த பாடலை, இசையோடு சொல்ல வல்லவர் பிணியிலர் என்கின்றது. மடைச் சுரம் - நீர்மடைகளின் வழி. மறிவன - மடங்கித் துள்ளுவன. சடைச்சுரத்து - சடைக்காட்டில்.

Koviloor Digital Library

79. திருக்கழுமலம்

பண்: குறிஞ்சி

பதிக எண்: 79

திருச்சிற்றம்பலம்

853. அயிலுறுபடையினர் விடையினர்முடிமே
லரவமுமதியமும் விரவியவழகர்
மயிலுறுசாயல் வனமுலையொருபான்
மகிழ்பவர்வானிடை முகில்புல்குமிடறர்
பயில்வுறுசரிதைய ரெருதுகந்தேறிப்
பாடியுமாடியும் பலிகொள்வர்வலிசேர்
கயிலையும்பொதியிலு மிடமெனவுடையார்
கழுமலநினையநம் வினைகரிசறுமே. 1

1. பொ-ரை : கூர்மை பொருந்திய சூலப் படையை உடைய வரும், விடை ஊர்தியினரும், முடிமேல் அரவு மதி ஆகியன விரவிய அழகுடையவரும், ஆண்மயில் போலும் கட்புலனாகிய மென்மை யையும், அழகிய தனபாரங்களையும் உடைய உமையம்மையை ஒரு பாலாகக் கொண்டு மகிழ்பவரும், வானகத்தே பொருந்திய மேகம் போன்ற கரிய மிடற்றினரும், எல்லோராலும் போற்றப்படும் புராண வரலாறுகளை உடையவரும், இடபத்தில் மகிழ்ந்தேறிப் பாடியும் ஆடியும் சென்று பலியேற்பவரும், வலிமை சேர்ந்த கயிலை, பொதியில் போன்ற அழகிய மலைகளைத் தம் இடங்களாக உடைய வரும் ஆகிய சிவபெருமான் உறையும் கழுமலத்தை நினைய நம் வினைத் தீமை அறும்.

கு-ரை : இப்பதிகம் இறைவனது கழுமலத்தை நினைய, நமது வினையின் தீமை அறும் என்கின்றது.

அயில் - கூர்மை. மயில் உரு சாயல் - மயில் போன்ற சாயலை உடைய. வனமுலை - இளைய முலையினையுடையாளாகிய உமா தேவி. முகில் புல்கும் மிடறர் - மேகத்தையொத்த கண்டத்தை யுடையவர். கரிசு - தீமை.

Koviloor Digital Library

854. கொண்டலுநீலமும் புரைதிருமிடறர்
கொடுமுடியுறைபவர் படுதலைக்கையர்
பண்டலரயன்சிர மரிந்தவர்பொருந்தும்
படர்சடையடிகளார் பதியதனயலே
வண்டலும்வங்கமுஞ் சங்கமுஞ்சுறவு
மறிகடற்றிரைகொணர்ந் தெற்றியகரைமேற்
கண்டலுங்கைதையு நெய்தலுங்குலவுங்
கழுமலநினையநம் வினைகரிசறுமே. 2

855. எண்ணிடையொன்றின ரிரண்டினருருவ
மெரியிடைமூன்றினர் நான்மறையாளர்
மண்ணிடையைந்தின ராறினரங்கம்
வகுத்தனரேழிசை யெட்டிருங்கலைசேர்

2. பொ-ரை : மேகம் நீல மலர் ஆகியன போன்ற அழகிய மிடற்றை உடையவரும், கயிலைச் சிகரத்தில் உறைபவரும், உயிரற்ற தலையோட்டைக் கையில் ஏந்தியவரும், முற்காலத்தில் தாமரை மலர் மேல் உறையும் பிரமனின் தலைகளில் ஒன்றைக் கொய்தவரும், அழகுறப் பொருந்தும் விரிந்த சடைமுடியை உடையவரும் ஆகிய சிவபிரானதுபதி, பக்கலின் சுருண்டு விழும் கடல் அலைகள் வண்டல் மண், இலவங்கம், சங்குகள் சுறா ஆகியனவற்றைக் கொணர்ந்து வீசும் கரை மேல் நீர்முள்ளி தாழை நெய்தல் ஆகியன பூத்து விளங்கும் கழுமல நகராகும். அதனை நினைய நம் வினைகளின் தீமைகள் நீங்கும்.

கு-ரை : கொண்டல் - மேகம். மேகம் மிடற்றிற்கு உவமை யானது தேவர்களைக் காத்தமையால். நீலம் ஒப்பானது கண்ணுக்கு இனிமையாய் இருத்தலின். படுதலை - கபாலம். வண்டல் - ஒதுக்கிய மண். வங்கம் - தோணி. கண்டல் - நீர்முள்ளி. கைதை - தாழை. நெய்தல் - நெய்தற்பூ.

3. பொ-ரை : எண்ணத்தில் ஒன்றாயிருப்ப்வர், சிவம் சக்தி என உருவத்தால் இரண்டாயிருப்பவர். நெருப்பில் மூன்றாயிருப்பவர். நான்கு மறைகளை அருளியவர். மண்ணிடைச் சுவை ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து தன்மையர். வேதத்தின் ஆறு அங்கங்களாக இருப்பவர். ஏழிசைகளை வகுத்தவர். எண்வகைக் கலைகளில்

Koviloor Digital Library

பண்ணிடையொன்பது முணர்ந்தவர்பத்தர்
பாடிநின்றடிதொழ மதனனைவெகுண்ட
கண்ணிடைக்கனலினர் கருதியகோயில்
கழுமலநினையநம் வினைகரிசறுமே. 3

856. எரியொருகரத்தின ரிமையவர்க்கிறைவ
ரேறுகந்தேறுவர் நீறுமெய்பூசித்
திரிதருமியல்பின ரயலவர்புரங்க
டீயெழவிழித்தனர் வேய்புரைதோளி
வரிதருகண்ணிணை மடவரலஞ்ச
மஞ்சுறநிமிர்ந்ததோர் வடிவொடும்வந்த
கரியுரிமருவிய வடிகளுக்கிடமாங்
கழுமலநினையநம் வினைகரிசறுமே. 4

ஒன்றாய இசைத்துறையில் ஒன்பான் கலையையும் உணர்ந்தவர். பக்தர்கள் பாடி நின்று திருவடிகளை வணங்க வீற்றிருப்பவர். மன்மதனைக் கண்ணிடைத் தோன்றிய கனலால் வெகுண்டவர். அத்தகைய பெருமான் விரும்பி உறையும் கழுமலத்திலுள்ள கோயிலை நினைய நம் வினைகளின் தீமை முற்றிலும் நீங்கும்.

கு-ரை: எண்ணிடை ஒன்றினர் - எண்ணத்தில் அருவாயிருக்கும் பொழுது ஒன்றாய் இருப்பவர். உருவம் இரண்டினர் - சிவமும் சத்தியுமாகி உருவத் திருமேனி கொள்ளுங்காலத்து இரண்டாய் இருப்பவர். எரியிடை மூன்றினர் - நெருப்பில் சத்தமும் ஸ்பரிசமும் உருவமுமாகிய மூன்று தன்மாத்திரைகளாய் இருப்பவர். ஆகவனீயம் முதலிய முத்தீயாய் இருப்பவர் என்றலுமாம். மண்ணிடை ஐந்தினர் - மண்ணில் சத்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம் ஆகிய ஐந்து தன்மாத்திரைகளாய் இருப்பவர். முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்ற ஐந்திணையாய் இருப்பவர் எனலுமாம் ஏழிசை - குரல், கைக்கிளை, துத்தம், இழை, இளி, விளரி, தாரம் என்ற ஏழு. எட்டிருங்கலை - அஷ்டவித்தை.

4. பொ-ரை : ஒருகரத்தில் எரி ஏந்தியவர். தேவர்கட்குத் தலைவர். விடையை விரும்பி ஊர்பவர். திருநீற்றை மெய்யிற் பூசித் திரியும் இயல்பினர். பகைமை பூண்டவர்களாய அசுரர்களின் மூன்று புரங்களும் தீயில் அழியுமாறு விழித்தவர். மூங்கில் போன்ற திரண்ட

Koviloor Digital Library

857. ஊரெதிர்ந்திடுபலி தலைகலனாக
வுண்பவர்விண்பொலிந் திலங்கியவுருவர்
பாரெதிர்ந்தடிதொழ விரைதருமார்பிற்
படவரவாமையக் கணிந்தவர்க்கிடமாம்
நீரெதிர்ந்திழிமணி நித்திலமுத்த
நிரைசுரிசங்கமொ டொண்மணிவரன்றிக்
காரெதிர்ந்தோதம்வன் றிரைகரைக்கெற்றுங்
கழுமலநினையநம் வினைகரிசறுமே. 5

தோள்களையும், வரி பரந்த கண்களையும் உடைய உமையம்மை அஞ்சுமாறு மேகம் திரண்டு நிமிர்ந்து வந்தாற் போன்ற கரிய வடிவோடு தம்பால் வந்த யானையின் தோலை உரித்து அதனை அணிந்தவர். அத்தகைய பெருமானுக்கு இடமாக விளங்கும் கழுமலத்தை நினைய நம் வினைத்தீமை நீங்கும்.

கு-ரை: எரி - மழு. அயலவர் - பகைவர். தீ யெழ விழித்தனர் என முப்புரங்களை விழித்தெரித்ததாகக் கூறப்படுகிறது. வேய் - மூங்கில். வரி - செவ்வரி. மடவரல் - உமாதேவி. மஞ்சு - ஆகாயம். கரியுரி - யானைத்தோல்.

5. பொ-ரை: ஊர்மக்கள் வரவேற்று இடும் பலியைத் தலையோட்டில் ஏற்று உண்பவர். வானத்தில் பொலிவோடு இலங்கும் திருவுருவினர். மண்ணுலக மக்கள் விரும்பி வந்து தம் திருவடிகளை வணங்க மணம் கமழும் மார்பகத்தே படப்பாம்பு ஆமைஓடு உருத்திராக்கம் ஆகியன அணிந்தவர். அவர் தமக்கு இடமாய் உள்ளதால், மேகங்கள் படியும் வெண்மையான வலிய கடல் அலைகள் மிகுதியான நீருடன் இழிந்துவரும் மணிகள், முத்துக்கள், ஒழுங்குற நிறைந்த வளைந்த சங்குகள், ஒளி பொருந்திய பவளமணி ஆகியவற்றைக் கரையில் கொணர்ந்து வீசும் கழுமலத்தை நினைய நம் வினைத் தீமை நீங்கும்.

கு-ரை : ஊர் எதிர்ந்திடு பலி - ஊரவர் இடுகின்ற பிச்சை. கலன் - உண்ணும் பாத்திரம். படஅரவு, ஆமை, அக்கு அணிந்தவர்க்கு இடமாம் எனப்பிரிக்க. அக்கு - உருத்திராக்கம். அக்குமணியுமாம். வன்திரை மணி நித்திலம் முத்தம் சுரிசங்கம் ஒண்மணி வரன்றி கரைக்கு எற்றும் கழுமலம் எனக்கூட்டுக. சுரிசங்கம் - மூக்குச் சுரிந்திருக்கின்ற சங்குகள்.

Koviloor Digital Library

858. முன்னுயிர்த்தோற்றமு மிறுதியுமாகி
முடியுடையமரர்க ளடிபணிந்தேத்தப்
பின்னியசடைமிசைப் பிறைநிறைவித்த
பேரருளாளனார் பேணியகோயில்
பொன்னியனறுமலர் புனலொடுதூபஞ்
சாந்தமுமேந்திய கையினராகிக்
கன்னியர் நாடொறும் வேடமேபரவுங்
கழுமலநினையநம் வினைகரிசறுமே. 6

859. கொலைக்கணித்தாவரு கூற்றுதைசெய்தார்
குரைகழல்பணிந்தவர்க் கருளியபொருளின்
நிலைக்கணித்தாவர நினையவல்லார்தந்
நெடுந்துயர்தவிர்த்தவெந் நிமலருக்கிடமாம்
மலைக்கணித்தாவர வன்றிரைமுரல
மதுவிரிபுன்னைகண் முத்தெனவரும்பக்
கலைக்கணங்கானலி னீழலில்வாழுங்
கழுமலநினையநம் வினைகரிசறுமே. 7

6. பொ-ரை : உயிர்கட்கு முதலில் தோற்றத்தையும் பின்னர் இறுதியையும் வழங்குவோராய், முடியணிந்த தேவர் கணங்கள் தம் திருவடிகளைப் பணிந்து போற்ற, வட்டமாக, முறுக்கிய சடையின் மேல் பிறையைச் சூடிய பெருங் கருணையாளராகிய சிவபிரான் விரும்பிய கோயிலை உடையதும், பொன் போன்ற மணம் பொருந்திய மலர்கள் புனல் தூபம் சந்தனம் முதலியன ஏந்திய கையினராய்க் கன்னியர்கள் நாள்தோறும் வந்து இறைவர் கொண்டருளிய வடிவங் களைப் போற்றி வழிபடுவதுமாய கழுமலத்தை நினைய நம் வினைத் தீமைகள் நீங்கும்.

கு-ரை : முன் - சர்வ சங்காரகாலத்து. உயிர்த்தோற்றமும் இறுதியும் ஆகி - உயிர்களை உடம்போடு புணர்த்துகின்ற பிறப்பும் அவற்றைப்பிரிக்கின்ற இறுதியும் ஆகிய இரண்டிற்கும் காரணமாகி, கன்னியர் மலர் தூபம் சாந்தம் ஏந்திய கையினராகிப் பரவும் கழுமலம் எனக் கூட்டுக.

7. பொ-ரை : மார்க்கண்டேயர் உயிரைக் கொல்லுதற்கு அணித் தாக வந்த கூற்றுவனை உதைத்தவர். ஒலிக்கின்ற கழல் அணிந்த தமது

Koviloor Digital Library

860. புயம்பலவுடையதென் னிலங்கையர்வேந்தன்
பொருவரையெடுத்தவன் பொன்முடிதிண்டோள்
பயம்பலபடவடர்த் தருளியபெருமான்
பரிவொடுமினிதுறை கோயிலதாகும்
வியன்பலவிண்ணினு மண்ணினுமெங்கும்
வேறுவேறுகங்களிற் பெயருளதென்னக்
கயம்பலபடக்கடற் றிரைகரைக்கெற்றுங்
கழுமலநினையநம் வினைகரிசறுமே. 8

திருவடியைப் பணிந்தவர்கட்கு உரியதாக அருளிச் செய்த வீட்டின்ப மாகிய நிலை அணியதாக வரவும் அவர்தம் நெடுந்துயர் போகவும் நினைக்கும் எம் நிமலர். அவர்க்கு இடமாக விளங்குவதும், தோணி மலைக்கு அருகில் வரும் வலிய அலைகள் ஒலிப்பதும், தேன் நிறைந்த புன்னைகள் முத்தென அரும்பவும் கடற்கரைச் சோலைகளின் நீழலில் மானினங்கள் வாழ்வதுமாய கழுமல நகரை நினைய நம் வினைக் குற்றங்கள் நீங்கும்.

கு-ரை: கொலைக்கு அணித்தாவரு கூற்று - கொலையை அணிய தாக்க வருகின்ற யமன். குரை கழல் - ஒலிக்குங் கழல். பணிந்த வர்க்கு அருளிய பொருளின் நிலைக்கு - வணங்கிய அடியார்களுக்கு அருளிச்செய்த வீட்டின்ப மாகிய நிலைக்கு. அணித்தாவர - அணுகி வர. மலைக்கு - தோணிமலைக்கு. வன்திரை அணித் தாவர முரல - வலிய அலைகள் அணுகி வரவும் ஒலிக்கவும். மது - தேன். கலைக் கணம் - மான் கூட்டம். கானல் - கடற்கரைச் சோலை.

8. பொ-ரை: தோள்கள் பலவற்றை உடைய தென்னிலங்கை மன்னனாகிய இராவணன் கயிலை மலையைப் பெயர்க்க அவன் பொன் முடிகளையும், வலிய தோள்களையும் அச்சம் பல உண்டாகு மாறு அடர்த்தருளிய பெருமான் விருப்போடு மகிழ்ந்துறையும் கோயிலை உடையதும் அகன்ற விண்ணுலகிலும் மண்ணுலகிலும் வேறுவேறு யுகங்களில் வேறுவேறு பெயர்களுடையதாய் விளங்கு வதும் நீர்த்துளி பலவாகத் தோன்ற கடல் அலைகள் தொடர்ந்து வந்து கரையில் வீசுவதுமாய கழுமலத்தை நினைய நம் வினைகளின் தீமைகள் நீங்கும்.

கு-ரை : புயம் பல உடைய - இருபது தோள்களை உடைய. பயம் பலபட - பல வகையில் அச்சப்பட. பரிவொடும் - விருப்பத் தோடும். வியன் பல விண்ணினும் - அகன்ற பலவாகிய ஆகாயத்தி

Koviloor Digital Library

861. விலங்கலொன்றேந்திவன் மழைதடுத்தோனும்
வெறிகமழ்தாமரை யோனுமென்றிவர்தம்
பலங்களானேடியு மறிவரிதாய
பரிசினன்மருவிநின் றினிதுறைகோயில்
மலங்கிவன்றிரைவரை யெனப்பரந்தெங்கு
மறிகடலோங்கிவெள் ளிப்பியுஞ்சுமந்து
கலங்கடன்சரக்கொடு நிரக்கவந்தேறுங்
கழுமலநினையநம் வினைகரிசறுமே. 9

862. ஆம்பலதவமுயன் றறவுரைசொல்லு
மறிவிலாச்சமணருந் தேரருங்கணிசேர்
நோம்பலதவமறி யாதவர்நொடிந்த
மூதுரைகொள்கிலா முதல்வர்தம்மேனிச்

னும். வேறு வேறு உகங்களில் பெயர் உளது என்ன - ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு பெயரை உடையதென்று. கயம் - யானை. நீர் எனினும் ஆம்.

9. பொ-ரை : கோவர்த்தனத்தைக் குடையாகக் கவித்துக் கொடிய மழையைத் தடுத்த திருமாலும், மணம்கமழ் தாமரையில் தோன்றிய பிரமனும் ஆகிய இவர்கள் தம் வலிமையினால் தேடியும் அறிய முடியாத தன்மையனாகிய சிவபெருமான், விரும்பி வந்து மகிழ்வாக உறையும் கோயில், வெள்ளிய அலைகள் ஒன்றோடொன்று கலந்து மலைகளைப் போலப் பரவி எங்கும் கரையில் மோதி மீளும் கடலில் பெருமிதத்துடன் கப்பல்கள் தம் சரக்கொடு வெள்ளிய முத்துச் சிப்பிகளையும் சுமந்து கரையை நோக்கி வரும் கழுமலமாகும் அதனை நினைய நும்வினைத் தீமை நீங்கும்.

கு-ரை : விலங்கல் - கோவர்த்தன கிரி. தம் பலங்களால் - தமது உடற்பலத்தால். மலங்கி - கலங்கி. வரையென - மலையைப் போல. கலங்கள் தன்சரக்கொடு நிரக்க - கப்பல்கள் தன்னிடத்து ஏற்றப் பட்டுள்ள சரக்கோடு வரிசையாக.

10. பொ-ரை: இயன்ற பலவகையான தவங்களை மேற்கொண்டு பிறர்க்கு அறவுரை கூறும் அறிவற்ற சமணரும் புத்தரும், எண்ணத்தக்க வருத்தத்தைத் தரும் தவம் பலவற்றை அறியாதவராய்க் கூறும் பழமொழிகளை ஏற்று அருளாத தலைவர், தம் மேனி மீது திருநீற்றைப் பூசிக் கொண்டு வெண்டலையை உண்கலனாக் கொண்டு மகளிர் இடும்

Koviloor Digital Library

சாம்பலும்பூசிவெண் டலைகலனாகத்
தையலாரிடுபலி வையகத்தேற்றுக்
காம்பனதோளியொ டினிதுறைகோயில்
கழுமலநினையநம் வினைகரிசறுமே. 10

863. கலிகெழுபாரிடை யூரெனவுளதாங்
கழுமலம்விரும்பிய கோயில்கொண்டவர்மேல்
வலிகெழுமனமிக வைத்தவன்மறைசேர்
வருங்கலைஞானசம் பந்தனதமிழின்
ஒலிகெழுமாலையென் றுரைசெய்தபத்து
முண்மையினானினைந் தேத்தவல்லார்மேல்
மெலிகெழுதுயரடை யாவினைசிந்தும்
விண்ணவராற்றலின் மிகப்பெறுவாரே. 11

திருச்சிற்றம்பலம்

பலியை உலகில் ஏற்று மூங்கில் போலும் தோள்களை உடைய உமையம்மையோடு இனிதாக உறையும் கோயிலை உடைய கழுமலத்தை நினைய நம் வினைக்குற்றம் தீரும்.

கு-ரை : ஆம்பலதவம் முயன்று - ஆகிய பலவிதமான தவங் களைச் செய்து. தேரர் - புத்தர். கணிசேர் - எண்ணத் தக்க. நோம் பல தவம் - துன்பத்தைத் தரும் பல தவங்களை. அறியாதவர் - அறியாதவர் களாய். நொடிந்த - சொன்ன. தையலார் - பெண்கள். காம்பு அன தோளியொடு - மூங்கிலையொத்த தோளையுடைய உமாதேவியொடு.

11. பொ-ரை : ஆரவாரம் மிக்க உலகில் ஊர் எனப் போற்ற விளங்கும் கழுமலத்தை விரும்பிக் கோயில் கொண்டுள்ள இறை வரிடம் உறுதியோடு தன் மனத்தை வைத்தவனும், வேதங்களிலும் கலைகளிலும் வல்லவனுமாகிய ஞானசம்பந்தன், இசையோடு பாடிய மாலையாகிய இப்பதிகப் பாடல்கள் பத்தையும், உண்மையோடு நினைந்து ஏத்த வல்லவரை, மெலிவைத் தரும் துன்பங்கள் சாரா. வினைகள் நீங்கும், விண்ணவரினும் மேம்பட்ட ஆற்றலை அவர்கள் பெறுவார்கள்.

கு-ரை : கலி கெழு பார் - ஒலிமிக்க உலகம். வலி கெழு மனம் - உறுதியான மனம். ஒலிகெழு மாலை - இசையோடு கூடிய மாலை. மெலி கெழு துயர் - மெலிவைச் சேர்க்கும் துன்பம்.

Koviloor Digital Library

80. கோயில்

பதிக வரலாறு:

சீகாழியினின்றும் புகலிவேந்தர், அடியார்களும், திருநீல கண்ட யாழ்ப்பாணரும் சிவபாத இருதயரும் உடன்வரத் தில்லை செல்லத் திருவுளங்கொண்டார்கள்.

அவர்கள் அனைவரும் கொள்ளிடத்தைக் கடந்தார்கள். தில்லையின் தெற்குவீதியணுகினார்கள்.

தில்லை வாழந்தணர்கள் சிரபுரப் பிள்ளையாரை எதிர் கொண்டு அழைக்க, நகரை அலங்கரித்து மங்கள வாத்தியங்கள் முழங்க ஊர்ப்புறத்தே வந்து, அழைத்துச் சென்றனர்.

பிள்ளையார் திருவீதியைத் தொழுதனர். எழுநிலைக் கோபுரத்தையும் வணங்கினர். திருமுன்றில் திருமாளிகையை யும் வலம்வந்து வணங்கிக் கொண்டு உட்புகுந்து திருவணுக்கன் திருவாயிலை அடைந்தார்கள். சிந்தையில் ஆர்வம் பெருகிற்று. கண்கள் ஆனந்த பாஷ்பம் பொழிந்தன. செங்கை சிர மீது ஏறிக் குவிந்தது. இவ்வாறு உருகிய அன்பினராய் உட்புகுந்தார்.

இறைவன் தமக்களித்த சிவஞானமேயான திருவம் பலத்தையும், அந்த ஞானத்தால் விளைந்த ஆனந்தமாகிய கூத்தப் பெருமானையும் கண்ணாரக்கண்டு கும்பிட்டார்.

ஆனந்தக் கூத்தருக்கு உரிமையான தனிச் சிறப்பினை யுடைய தில்லை வாழந்தணரை முன் வைத்து ''கற்றாங் கெரி யோம்பி'' என்னும் இப்பதிகத்தை ஏழிசையும் ஓங்க எடுத்தார்.

திருக்கடைக்காப்பும் முடித்து, ஊனையும் உயிரையும் உருக்கும் ஒப்பற்ற கூத்தை வெட்ட வெளியிற் கண்டு திளைத்து, சிவானந்தப் பேறமுதுண்ட பிள்ளையார் ஆனந்தமேலீட்டால் அழுதார்.

Koviloor Digital Library

பண்: குறிஞ்சி

பதிக எண்: 80

திருச்சிற்றம்பலம்

864. கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கண் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே. 1

865. பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட் டெரியோம்புஞ்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
பிறப்பில் பெருமானைப் பின்றாழ் சடையானை
மறப்பி லார்கண்டீர் மைய றீர்வாரே. 2

1. பொ-ரை: வேதம் முதலிய நூல்களைக் கற்று அவற்றின்கண் ஓதிய நெறியிலே நின்று, வேள்விகளைச் செய்து, இவ்வுலகில் வறுமையை வாராமல் ஒழிக்கும் அந்தணர்கள் வாழும் தில்லையி லுள்ள சிற்றம் பலத்தில் எழுந்தருளியவனும் இளமையான வெள்ளிய பிறை மதியைச் சூடியவனும் ஆகிய முதல்வனது திருவடிகளைப் பற்றுக்கோடாகக் கொண்டு வாழ்பவர்களைப் பாவம் பற்றா.

கு-ரை: இப்பாடல் சிற்றம்பலநாதன் திருவடியே பற்றுக் கோடாகக் கொண்டவர்களைப் பாவம் பற்றாது என்கின்றது. கற்று - வேதம் முதலியவற்றை ஓதி. ஆங்கு எரி யோம்பி - அந்நெறியிலேயே நின்று வேள்வியைச் செய்து. கலி - பாவம். பற்றா - பற்றுக்கோடாக.

2. பொ-ரை: பல இடங்களிலும் வேள்விச் சாலைகளை அமைத்து, ஆன்ம போதத்தைக் கொன்று, எரியோம்பும் சிறப்புடைய அந்தணர்கள் வாழும் தில்லையில் உள்ள சிற்றம்பலத்தில் எழுந்தருளி யுள்ளவனும், தாயின் வயிற்றில் தங்கிப் பிறத்தல் இல்லாதவனும், பின் புறம் தாழ்ந்து தொங்கும் சடாபாரம் உடையவனும் ஆகிய பெரு மானை மறவாதவர் மயக்க உணர்வு நீங்கப் பெறுவர்.

கு-ரை: சிற்றம்பலநாதரை மறவாதவர்களே மலமயக்கம் தீர்வார்கள் என்கின்றது. பறப்பை - வேள்விச்சாலை. பசு வேட்டு - ஆன்மபோதத்தைக் கொன்று. எரி ஓம்பும் - சிவாக்கினியை வளர்க் கும். சிறப்பர் - சிறப்பினை உடைய தில்லை வாழ் அந்தணர்கள்.

Koviloor Digital Library

866. மையா ரொண்கண்ணார் மாட நெடுவீதிக்
கையாற் பந்தோச்சுங் கழிசூழ் தில்லையுட்
பொய்யா மறைபாடல் புரிந்தா னுலகேத்தச்
செய்யா னுறைகோயில் சிற்றம் பலந்தானே. 3

867. நிறைவெண் கொடிமாட நெற்றி நேர்தீண்டப்
பிறைவந் திறைதாக்கும் பேரம் பலந்தில்லைச்
சிறைவண் டறையோவாச் சிற்றம் பலமேய
இறைவன் கழலேத்து மின்ப மின்பமே. 4

868. செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற

3. பொ-ரை : மைதீட்டப் பெற்ற ஒளி பொருந்திய கண்களை உடைய பெண்கள், நீண்ட வீதிகளிலுள்ள மாட வீதிகளில் தம் கைகளால் பந்தோச்சி விளையாடும் அழகுடையதும், உப்பங்கழிகள் சூழ்ந்தது மான தில்லையுள், என்றும் பொய்யாத வேதப் பாடல்களை விரும்பும் சிவந்த திருமேனியை உடைய சிவபிரான், உலக மக்கள் தன்னை ஏத்த உறையும் கோயிலை உடையது சிற்றம்பலமாகும்.

கு-ரை: வேதத்தை விரும்பிய சிவபெருமான் உலகேத்த உறை யுங் கோயில் சிற்றம்பலம் என்கின்றது. மையார் ஒண் கண்ணார் - மை பூசிய ஒளிபொருந்திய கண்ணை உடைய பெண்கள். பொய்யா மறை - என்றும் பொய்யாத வேதம். புரிந்தான் - விரும்பியவன்.

4. பொ-ரை : மாடவீடுகளில் நிறைந்துள்ள வெண்மையான கொடிகள் வானத்திலுள்ள பிறையின் நெற்றியை நேரே தீண்டுமாறு வந்து சிறிதே தாக்கும் தில்லைப் பதியில் சிறகுகளை உடைய வண்டு கள் எப்போதும் ஒலிக்கும் பேரம்பலத்தை அடுத்துள்ள சிற்றம்பலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் திருவடிகளைப் பரவுவதே இன்பம் ஆகும்.

கு-ரை : சிற்றம்பலநாதன் சேவடியை ஏத்தும் இன்பமே இன்பம் என்கின்றது. கொடிவந்து பிறை இறைதாக்கும் பேரம்பலம் எனக் கூட்டுக. அறை - ஒலி.

5. பொ-ரை: செல்வ வளம்மிக்க பெரிய மாடவீடுகள் வானளாவ ஓங்கி உயர்ந்து அழகிய மதியினைத் தோயப் பல்வகை அழகு நலன்

Koviloor Digital Library

செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே. 5

869. வருமாந் தளிர்மேனி மாதோர் பாகமாந்
திருமாந் தில்லையுட் சிற்றம் பலமேய
கருமா னுரியாடைக் கறைசேர் கண்டத்தெம்
பெருமான் கழலல்லாற் பேணா துள்ளமே. 6

870. அலையார் புனல்சூடி யாகத் தொருபாகம்
மலையான் மகளோடு மகிழ்ந்தா னுலகேத்தச்
சிலையா லெயிலெய்தான் சிற்றம் பலந்தன்னைத்
தலையால் வணங்குவார் தலையா னார்களே. 7

களும் உயர்ந்து விளங்கிவருவதும், ஞானச் செல்வர்கள் பலர் வாழ்வதுமாகிய தில்லையிலுள்ள சிற்றம்பலத்தில் எழுந்தருளியுள்ள, வீடுபேறாகிய செல்வத்திற்குரிய பெருமான் திருவடிகளை வாழ்த்தும் செல்வமே, ஒருவருக்குச் செல்வமாம்.

கு-ரை : சிற்றம்பலத்தெழுந்தருளியிருக்கின்ற செல்வன் கழலை ஏத்தும் இன்பமே இன்பம் என்கின்றது. சேண் - ஆகாயம்.

6. பொ-ரை : புதிதாக மரத்தின்கண் இருந்து வெளிவரும் மாந்தளிர் போன்ற மேனியளாகிய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு, திருமகள் விளங்கும் தில்லை மாநகருள் சிற்றம்பலத்தின் கண் எழுந்தருளியவரும், யானைத் தோலை உரித்து ஆடையாகப் போர்த்தவரும் நீலமணி போன்ற கண்டத்தை உடையவருமாகிய எம் பெருமான் திருவடிகளை அல்லது என் உள்ளம் வேறொன்றையுமே விரும்பாது.

கு-ரை : சிற்றம்பலத்து எழுந்தருளியுள்ள பெருமான் திருவடியல்லது என்னுள்ளம் வேறொன்றையும் பேணாது என்கின்றது. திருமாந்தில்லை - திருமகளோடு கூடிய பெரிய தில்லை.

7. பொ-ரை : அலைகள் வீசும் கங்கை நதியை முடியிற்சூடித் தன் திருமேனியில் ஒருபாகமாக மலையரையன் மகளாகிய பார்வதி தேவியோடு மகிழ்ந்திருப்பவனும் உலகம் போற்ற மேருமலையாகிய வில்லால் முப்புரங்களை எய்து அழித்தவனும் ஆகிய சிற்றம்பலத்துப்

Koviloor Digital Library

871. கூர்வா ளரக்கன்றன் வலியைக் குறைவித்துச்
சீரா லேமல்கு சிற்றம் பலமேய
நீரார் சடையானை நித்த லேத்துவார்
தீரா நோயெல்லாந் தீர்த லிண்ணமே. 8

872. கோணா கணையானுங் குளிர்தா மரையானுங்
காணார் கழலேத்தக் கனலா யோங்கினான்
சேணார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேத்த
மாணா நோயெல்லாம் வாளா மாயுமே. 9

பெருமானைத் தலைதாழ்த்தி வணங்குவார் தலைமைத் தன்மையோடு விளங்குவார்.

கு-ரை : சிற்றம்பலத்தைத் தலையால் வணங்குபவர்களே தலையானவர்கள் என்கின்றது. சிலை - மேருமலையாகிய வில்.

8. பொ-ரை : கூரிய வாளை உடைய அரக்கனாகிய இராவணனின் வலிமையை அழித்துச் சிறந்த புகழ் மல்கிய சிற்றம்பலத்தின்கண் எழுந்தருளிய கங்கையைத் தரித்த சடையினை உடைய இறைவனை நாள்தோறும் ஏத்துபவருக்குத் தீராத நோய்கள் எல்லாம் தீர்தல் திண்ணம்.

கு-ரை : சிற்றம்பலநாதனை நாள்தோறும் ஏத்துவார் தீராத நோயெல்லாம் தீர்வர் என்கின்றது. கூர்வாள் அரக்கன் என்றது இராவணனை.

9. பொ-ரை : வளைந்து சுற்றிய பாம்பணையில் பள்ளிகொள்ளும் திருமாலும், குளிர்ந்த தாமரை மேல் விளங்கும் நான்முகனும், அடிமுடிகளைக் காணாதவராய்த் தன் திருவடிகளைப் பரவ, அழல் வடிவில் ஓங்கி நின்றவனும், உயர்ந்தோர் பலர் வாழும் தில்லைப் பதியுள் சிற்றம்பலத்தின்கண் எழுந்தருளியவனுமாகிய பெருமானைப் போற்ற, நோய்களில் மாட்சிமை உள்ள கொடிய நோய்கள் எல்லாமும் பயன்தாராது கழியும்.

கு-ரை : சிற்றம்பலத்தைத் துதிக்க, பெரியநோயெல்லாம் மாயும் என்கின்றது. கோண் நாகணையான் - வளைந்த நாகத்தை அணையாகக்கொண்ட திருமால். சேணார் - தேவர்கள். மாணா நோய் - மாட்சிமைதராத நோய்கள்.

Koviloor Digital Library

873. பட்டைத் துவராடைப் படிமங் கொண்டாடும்
முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதே
சிட்டர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
நட்டப் பெருமானை நாளுந் தொழுவோமே. 10

874. ஞாலத் துயர்காழி ஞான சம்பந்தன்
சீலத் தார்கொள்கைச் சிற்றம் பலமேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை
கோலத் தாற்பாட வல்லார் நல்லாரே. 11

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை : மரப்பட்டையின் சாயம் ஏற்றிய ஆடையை உடுத்த புத்தரும் நோன்புகள் பலவற்றை மேற்கொண்டு திரியும் சமணர்களும் மொழியும் அறியாமையோடு கூடிய உரைகளைக் கேளாது ஒழுக்கத்தால் மேம்பட்டவர் வாழும் தில்லையில் சிற்றம்பலத்தில் எழுந்தருளிய நடராசப் பெருமானை நாள்தோறும் நாம் தொழுவோம்.

கு-ரை : புறச்சமயிகள் புல்லுரையைக் கேளாது சிற்றம்பல நாதன் திருவடியைத் தினம் தொழுவோம் என்கிறது. பட்டைத் துவர் - மரப்பட்டையிலிருந்து தயாரிக்கப்படும் காவி. படிமம் - நோன்பு. முட்டைக் கட்டுரை - அறியாமையோடு கூடிய சொல். சிட்டர், ஆசாரசீலர். நட்டம் - நடம்.

11. பொ-ரை : உலகில் உயர்ந்து விளங்கும் சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன், ஒழுக்க சீலர்களாலே புனிதமாகக் கொண்டு போற்றப் பெறும் தில்லைச் சிற்றம்பலத்தே எழுந்தருளிய, சூலப்படை யுடைய பெருமான் மீது பாடிய, இத்தமிழ் மாலையாகிய திருப் பதிகத்தை, அழகுறப் பாட வல்லவர் நல்லவர் ஆவர்.

கு-ரை : திருஞானசம்பந்தர் திருச்சிற்றம்பலநாதனைப் பற்றிச் சொன்ன தமிழ் மாலையைப் பாடவல்லவர்கள், நல்லவர் ஆவர் என்கின்றது. சீலத்தார் கொள்கைச் சிற்றம்பலம் - ஒழுக்கம் உடையவர் களால் கொள்ளப்படுகின்ற சிற்றம்பலம். கோலத்தால் - அழகால்.

Koviloor Digital Library

81. சீகாழி

பண்:குறிஞ்சி

பதிக எண்: 81

திருச்சிற்றம்பலம்

875. நல்லார் தீமேவுந் தொழிலார் நால்வேதஞ்
சொல்லார் கேண்மையார் சுடர்பொற் கழலேத்த
வில்லாற் புரஞ்செற்றான் மேவும் பதிபோலுங்
கல்லார் மதில்சூழ்ந்த காழிந் நகர்தானே. 1

876. துளிவண் டேன்பாயு மிதழி தூமத்தந்
தெளிவெண் டிங்கண்மா சுணநீர் திகழ்சென்னி
ஒளிவெண் டலைமாலை யுகந்தா னூர்போலுங்
களிவண் டியாழ்செய்யுங் காழிந் நகர்தானே. 2

1. பொ-ரை : நல்லவர்களும், நாள்தோறும் வேள்விகளைச் செய்பவர்களும், நான்கு வேதங்களை ஓதுபவர்களும், அன்புடையவர்களும் ஆகிய அந்தணர்கள், ஒளி பொருந்திய அழகிய தன் திருவடிகளைப் போற்ற, மேருவில்லால் முப்புரங்களை அழித்த சிவபெருமான் எழுந்தருளிய தலம், மலை போன்ற மதில்களால் சூழப்பட்ட சீகாழி நகராகும்.

கு-ரை : வேதம் ஓதி வேள்விசெய்யும் அந்தணர்கள் திருவடியைத் தொழ, வில்லால் புரமெரித்த பெருமானிடம் காழி நகரம் என்கின்றது. தீ மேவும் தொழிலார் - யாகத்தீயை விரும்பும் தொழிலையுடைய அந்தணர். நால்வேதம் சொல்லார் - நான்கு வேதங்களாகிய சொல்லையுடையவர்கள். கல்லார் மதில் - மலையையொத்த மதில்.

2. பொ-ரை : வளமான தேன் துளிபாயும் கொன்றை மலர், தூய ஊமத்தம் மலர், தெளிந்த வெண்மையான பிறை மதி, பாம்பு, கங்கை ஆகியன விளங்கும் சென்னிக்கண், ஒளி பொருந்திய வெள்ளிய தலைமாலையை விரும்பிச் சூடிய சிவபிரானது ஊர், கள்ளுண்டு களித்த வண்டுகள், யாழ்போல ஒலிக்கும், சீகாழி நகராகும்.

கு-ரை : கொன்றை, பிறை, பாம்பு, ஊமத்தம் இவற்றை விரும்பிய இறைவனிடம் இது என்கின்றது. வண் தேன் துளி பாயும் இதழி என மாறுக. இதழி - கொன்றை. மாசுணம் - பாம்பு.

Koviloor Digital Library

877. ஆலக் கோலத்தி னஞ்சுண் டமுதத்தைச்
சாலத் தேவர்க்கீந் தளித்தான் றன்மையாற்
பாலற் காய்நன்றும் பரிந்து பாதத்தாற்
காலற் காய்ந்தானூர் காழிந் நகர்தானே. 3

* * * * * * * * * * 4, 5, 6, 7

878. இரவிற் றிரிவோர்கட் கிறைதோ ளிணைபத்தும்
நிரவிக் கரவாளை நேர்ந்தா னிடம்போலும்
பரவித் திரிவோர்க்கும் பானீறணிவோர்க்குங்
கரவிற் றடக்கையார் காழிந் நகர்தானே. 8

3. பொ-ரை : பாற்கடலில் தோன்றிய ஆலகாலம் எனப்படும் அழகிய நஞ்சினை உண்டு, அமுதம் முழுவதையும் தேவர்களுக்கு ஈந்தருளிய தன்மையை உடையவனாய் மார்க்கண்டேயன் பொருட்டுத் தன் பாதத்தால் காலனை உதைத்த சிவபிரானது ஊர், சீகாழி நகராகும்.

கு-ரை : ஆலகால விஷத்தை உண்டு அமுதத்தைத் தேவர்க்கு அளித்தவனும், காலனைக் காய்ந்தவனும் ஆகிய காவலன் ஊர், காழி என்கின்றது. ஆலக்கோலத்தின் நஞ்சு - ஆலகாலவிஷம். சால - மிக. பாலற்கு - மார்க்கண்டேயற்கு. பரிந்து - கருணை கூர்ந்து. அளித் தான் - உயிர் கொடுத்தான்.

4, 5, 6, 7. * * * * * * * * * *

8. பொ-ரை : இரவில் திரியும் நிசாசரராகிய அசுரர்களுக்குத் தலைவனாகிய இராவணனின் இருபது தோள்களையும் நெரித்து, பின் அவன் வருந்திய அளவில் கைகளில் ஏந்தும் வாள் வழங்கிய சிவ பிரானது இடம், இறைவனைப் பரவித் திரியும் அடியவர்கட்கும், பால் போன்ற திருநீற்றை அணிபவர்கட்கும், ஒளியாமல் வழங்கும் நீண்ட கைகளையுடைய, வள்ளன்மை மிக்க அடியார் வாழும், சீகாழிப் பதியாகும்.

கு-ரை : இராவணற்கு வாள் அருளிச் செய்தவன் இடம் காழி நகரம் என்கின்றது. இரவில் திரிவோர் - அசுரர்கள்; நிசாசரர் என்பதன் மொழிபெயர்ப்பு. நிரவி - ஒழுங்குபடுத்தி. கரவாள் - கைவாள். கரவு இல் தடக்கையார் - ஒளியாமல் வழங்கும் கையையுடையவர்.

Koviloor Digital Library

879. மாலும் பிரமனு மறியா மாட்சியான்
றோலும் புரிநூலுந் துதைந்த வரைமார்பன்
ஏலும் பதிபோலு மிரந்தோர்க் கெந்நாளுங்
காலம் பகராதார் காழிந் நகர்தானே. 9

880. தங்கை யிடவுண்பார் தாழ்சீ வரத்தார்கள்
பெங்கை யுணராதே பேணித் தொழுமின்கள்
மங்கை யொருபாக மகிழ்ந்தான் மலர்ச்சென்னிக்
கங்கை தரித்தானூர் காழிந் நகர்தானே. 10

9. பொ-ரை : திருமால், பிரமன் ஆகியோர் அறிய முடியாத மாட்சிமையை உடையவனும், மான்தோலும், முப்புரி நூலும் பொருந்திய மலை போன்ற மார்பினனும் ஆகிய சிவபிரான் எழுந்தருளும் பதி, தம்பால் இரந்தவர்களுக்கு எந்நாளும் பிறிதொரு நாளையோ, நேரத்தையோ குறிக்காது உடனே பொருள் வழங்கும் செல்வர்கள் வாழ்கின்ற சீகாழி நகராகும்.

கு-ரை : அயனும் மாலும் அறியாதவனும், பூணூல் அணிந்தவனுமாகிய இறைவன் பதி காழிநகர் என்கின்றது.

இரந்தோர்க்கு எந்நாளும் காலம் பகராதார் - யாசிப்பவர்களுக்கு எப்பொழுதும் இதுகாலமல்ல, இதுகாலமல்ல, என்று சொல்லாது எப்பொழுதும் கொடுப்பவர்கள்.

10. பொ-ரை : உணவளிப்போர் தங்கள் கைகளிலே தர, அதனை வாங்கி உண்ணும் சமணர்களும் தாழ்ந்த சீவரம் என்னும் கல்லாடையை உடுத்திய புத்தர்களும் ஆகியவர்களின் தீயொழுக்கத்தை மனத்துக் கொள்ளாமல், உமையம்மையை ஒரு பாகமாக மகிழ்ந்து ஏற்றவனும், மலரணிந்த சென்னியில் கங்கையைத் தரித் தவனுமாகிய சிவபெருமான் எழுந்தருளிய காழி நகரைப் பேணித் தொழுவீர்களாக.

கு-ரை : புத்தர் சமணர்களுடைய தீயொழுக்கத்தைச் சிந்தியாமல் காழிநகரைத் தொழுமின்கள் என்கின்றது.

தம்கையிட உண்பார் - கையில் பிச்சையிட ஏற்று உண்பவர்கள். சீவரத்தார்கள் - காவியாடை உடுத்தியவர்கள். பெங்கை - தீயொழுக்கம்.

Koviloor Digital Library

881. வாசங் கமழ்காழி மதிசெஞ் சடைவைத்த
ஈசன் னகர்தன்னை யிணையில் சம்பந்தன்
பேசுந் தமிழ்வல்லோர் பெருநீ ருலகத்துப்
பாசந் தனையற்றுப் பழியில் புகழாரே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : பிறைமதியைச் செஞ்சடையில் வைத்த சிவ பிரானது மணங்கமழ்கின்ற சீகாழிப் பதியாகிய நகரை, ஒப்பற்ற ஞானசம்பந்தன் போற்றிப் பேசிய இத்திருப்பதிகத் தமிழில் வல்லவர்கள் கடல் சூழ்ந்த இவ்வுலகில் பாசங்களை நீக்கிப் பழியற்ற புகழோடு வாழ்வர்.

கு-ரை : காழிநகரைப்பற்றிச் சம்பந்தன் சொன்ன இத்தமிழை வல்லவர்கள் கடல் புடைசூழ்ந்த உலகத்துப் பாசம் நீங்கிப் பழியற்றுப் புகழுடையராய் வாழ்வர் எனப் பயன் கூறுகிறது. பெருநீர் - கடல்.

திருப்புகழ்

சமயபத்தி விருதாத்தனை நினையாதே
சரணபத்ம சிவார்ச்சனை தனைநாடி
அமையசற்குரு சாத்திர மொழிநூலால்
அருளெனக் கினிமேற்றுணை தருவாயே
உமைமுலைத் தருபாற்கொடு அருள்கூறி
உரியமெய்த் தவமாக்கிநல் உபதேசத்
தமிழ்தனைக்கரை காட்டிய திறலோனே
சமணரைக்கழு வேற்றிய பெருமாளே.

- அருணகிரி நாதர்.

நால்வர் நான்மணி மாலை

இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல் கண்டு
முலைசுரந்த வன்னையோ முன்னின் - னிலைவிளம்பக்
கொங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தா
விங்குயர்ந்தா ளார்சொல் லெனக்கு.

- சிவப்பிரகாச சுவாமிகள்.

Koviloor Digital Library

82. திருவீழிமிழலை

பதிக வரலாறு:

திரும்பாம்புரம் என்னும் தலத்தை வணங்கிக் கொண்டு பிள்ளையார் திருவீழிமிழலைக்கு அப்பருடன் எழுந்தருள அந்தணர்கள் எதிர்கொண்டழைத்தார்கள். பிள்ளையார் சிவிகையினின்றிழிந்து அந்தணர்கள் புடைசூழ விண்ணிழிந்த கோயிலை வலங்கொண்டார். வியந்தார். கீழேவிழுந்து வணங்கினார். உள்ளத்தில் உணர்ச்சி பொங்கி வழிந்தது. இசை ஆயிற்று. ''இரும்பொன் மலைவில்லா'' என்றெடுத்துச் சந்த இசைத் தமிழைச் சாற்றி மணவாளப் பெருமானது திருவடிக்கீழ் ஆனந்த வெள்ளத்தாடினார்.

பண்: குறிஞ்சி

பதிக எண்: 82

திருச்சிற்றம்பலம்

882. இரும்பொன் மலைவில்லா வெரியம் பாநாணில்
திரிந்த புரமூன்றுஞ் செற்றா னுறைகோயில்
தெரிந்த வடியார்கள் சென்ற திசைதோறும்
விரும்பி யெதிர்கொள்வார் வீழி மிழலையே. 1

1.பொ-ரை : பெரிய பொன்மயமான மேருமலையை வில்லாக வளைத்து, அனலை அம்பாக அவ்வில் நாணில் பூட்டி வானில் திரிந்து கொண்டிருந்த முப்புரங்களையும் அழித்தவனாகிய சிவபிரான் உறையும் கோயில், கற்றுணர்ந்த அடியவர்கள் செல்லும் திசைகளில் எல்லாம் விரும்பி அவர்களை எதிர்கொள்ளும் மக்கள் வாழும் திருவீழிமிழலை ஆகும்.

கு-ரை : மேருமலையை வில்லாகவும், அங்கியை அம்பாகவும் கொண்டு திரிபுரமெரித்த சிவன் உறையுங்கோயில் திருவீழிமிழலை என்கின்றது. தெரிந்த அடியார்கள் சென்ற திசை தோறும் விரும்பி எதிர்கொள்வார் என்றது, ஞானசம்பந்தப்பெருமான் எழுந்தருளிய போது எதிர்கொண்டதைத் திருவுள்ளத்து எண்ணி எழுந்த உரை போலும்.

Koviloor Digital Library

883. வாதைப் படுகின்ற வானோர் துயர்தீர
ஓதக் கடனஞ்சை யுண்டா னுறைகோயில்
கீதத் திசையோடுங் கேள்விக் கிடையோடும்
வேதத் தொலியோவா வீழி மிழலையே. 2

884. பயிலும் மறையாளன் றலையிற் பலிகொண்டு
துயிலும் பொழுதாடுஞ் சோதி யுறைகோயில்
மயிலும் மடமானும் மதியும் மிளவேயும்
வெயிலும் பொலிமாதர் வீழி மிழலையே. 3

2. பொ-ரை : துன்புறும் தேவர்களின் துயர்தீர, வெள்ள நீரொடு கூடிய கடலின்கண் எழுந்த நஞ்சினை உண்ட சிவபிரான் உறையும் கோயில், இசையமைப்போடு கூடியதும் சுருதி என்பதற்கேற்ப ஒருவர் ஓதக்கேட்டு ஓதப்பட்டு வருவதும் ஆகிய வேத பாராயணத்தின் ஒலி நீங்காமல் ஒலிக்கின்ற திருவீழிமிழலை ஆகும்.

கு-ரை : துன்புறுகின்ற தேவர்கள் துயர் தீர நஞ்சுண்டநாதன் கோயில் வீழிமிழலை என்கின்றது.

வாதை - துன்பம். கேள்விக் கிடை- வேதத்தை ஓதும் மாணவர் கூட்டம்.

3. பொ-ரை : வேதங்களை ஓதிய பிரமனின், தலையோட்டில் பலியேற்று அனைவரும் துயிலும் நள்ளிரவில் ஆடும் ஒளிவடிவின னாகிய சிவபிரான் உறையும் கோயில், மயில், மடப்பம் பொருந்திய மான், மதி, இள மூங்கில், வெயில் ஆகியனவற்றைப் போன்று கண்ணுக்கு இனிய மென்மையும், மருளும் விழி, முகம், தோள்கள், உடல்ஒளி இவற்றால் பொலியும் மகளிர் வாழும் திருவீழிமிழலை யாகும்.

கு-ரை : பிரமகபாலத்தில் பிச்சை ஏற்று, எல்லாம் துயிலும் நள்ளிரவில் நட்டமாடும் பெருமான் கோயில் வீழிமிழலை என்கின்றது.

இந்நகரத்து மாதர் மயிலையும் மானையும் மதியையும் மூங்கிலையும் வெயிலையும் போல் விளங்குகின்றார்கள்; சாயலால் மயில், பார்வை யால் மான், நுதலழகால் மதி, தோளால் மூங்கில், கற்பால் வெயில் எனக் கொள்க.

Koviloor Digital Library

885. இரவன் பகலோனு மெச்சத் திமையோரை
நிரவிட் டருள்செய்த நிமலன் னுறைகோயில்
குரவஞ் சுரபுன்னை குளிர்கோங் கிளவேங்கை
விரவும் பொழிலந்தண் வீழி மிழலையே. 4

886. கண்ணிற் கனலாலே காமன் பொடியாகப்
பெண்ணுக் கருள்செய்த பெருமா னுறைகோயில்
மண்ணிற் பெருவேள்வி வளர்தீப் புகைநாளும்
விண்ணிற் புயல்காட்டும் வீழி மிழலையே. 5

887. மாலா யிரங்கொண்டு மலர்க்கண் ணிடவாழி
ஏலா வலயத்தோ டீந்தா னுறைகோயில்

4. பொ-ரை : தக்கன் செய்த யாகத்தில் சந்திரன், சூரியன் ஏனைய தேவர்கள் ஆகியோரை, வீரபத்திரரை அனுப்பித் தண்டம் செய்து செம்மைப்படுத்தி அருள்செய்த சிவபிரான் உறையும் கோயில் குரா, சுரபுன்னை, குளிர்ந்த கோங்கு, இளவேங்கை ஆகியன விரவிய பொழில்கள் சூழ்ந்த அழகிய தட்பமுடைய வீழிமிழலையாகும்.

கு-ரை : தக்கயாகத்தில் சூரியன் சந்திரன் முதலான தேவர்களைச் செப்பஞ்செய்து அருள்செய்த நிமலன் கோயில் இது என்கின்றது. இரவன் - சந்திரன். பகலோன் - சூரியன். எச்சத்து - யாகத்தில். நிரவிட்டு - செப்பஞ்செய்து.

5. பொ-ரை : நெற்றி விழியில் தோன்றிய கனலால் காமனைப் பொடி செய்து, இரதிதேவிவேண்ட அவள் கண்களுக்கு மட்டும் புல னாகுமாறு அருள் செய்த பெருமான் உறையும் கோயில் மண்ணில் செய்யும் பெரிய வேள்விகளில் வளரும் தீப்புகை நாள்தோறும் விண் ணகத்தே மழை மேகங்களை உருவாக்கும் திருவீழிமிழலை யாகும்.

கு-ரை : மன்மதன் எரிய விழித்து, இரதிக்கு அருள்செய்த பெருமான் கோயில் இது என்கின்றது. பெண் - இரதி. உமையெனப் பொருள்கொண்டு இடப்பாகத்தை அருளிய எனப் பொருள் உரைப்பாரும் உளர். பூமியில் செய்யப்படும் யாகப் புகை, வானத்தில் மேகத்தை வளர்க்கும் என்ற கருத்தைப் பின்னிரண்டடிகளில் காண்க.

6. பொ-ரை : திருமால் ஆயிரம் தாமரைப் பூக்களைக் கொண்டு அருச்சித்தபோது ஒன்று குறையக் கண்டு, தன், மலர் போன்ற கண்ணை

Koviloor Digital Library

சேலா கியபொய்கைச் செழுநீர்க் கமலங்கள்
மேலா லெரிகாட்டும் வீழி மிழலையே. 6

888. மதியால் வழிபட்டான் வாணாள் கொடுபோவான்
கொதியா வருகூற்றைக் குமைத்தா னுறைகோயில்
நெதியான் மிகுசெல்வர் நித்த நியமங்கள்
விதியா னிற்கின்றார் வீழி மிழலையே. 7

889. எடுத்தான் றருக்கினை யிழித்தான் விரலூன்றிக்
கொடுத்தான் வாளாளாக் கொண்டா னுறைகோயில்
படித்தார் மறைவேள்வி பயின்றார் பாவத்தை
விடுத்தார் மிகவாழும் வீழி மிழலையே. 8

இடந்து சாத்திய அளவில் பிறர் சுமக்கலாற்றாத சக்கராயுதம் ஆகிய ஆழியை அவனுக்கு ஈந்தருளிய பெருமான் உறையும் கோயில், சேல்மீன்கள் பொருந்திய செழுநீர்ப் பொய்கைகளில் முளைத்த தாமரை மலர்கள் தீப்பிழப்பு போலக் காணப்படும் திருவீழிமிழலையாகும்.

கு-ரை : திருமால் ஆயிரம் பூவோடு கண்கொண்டு வழிபாடு செய்யச் சக்கரம் ஈந்த பெருமான் கோயில் இது என்கின்றது. இவ் வரலாறு இத்தலத்தில் நிகழ்ந்தது. ஏலாவலயம் - சுமக்கலாற்றாத சக்கரம். கமலங்கள் எரிகாட்டும் - செந்தாமரை தீப்பிழம்பைப் போல விளங்கும்.

7.பொ-ரை : மெய்யறிவால் தன்னை வழிபட்ட மார்க்கண்டேய னின் வாழ்நாளைக் கையகப் படுத்தச் சினந்து வந்த கூற்றுவனை அழித்த சிவபிரானது கோயில், நிதியால் மிகுந்த செல்வர்கள் நாள் தோறும் செய்யும் நியமங்களை விதிப்படி செய்து வாழும் திருவீழி மிழலையாகும்.

கு-ரை : காலகாலன் கோயில் இது என்கின்றது. மதியால் வழிபட்டான் - அறிவோடு வழிபட்ட மார்க்கண்டன். கொதியா - கோபித்து. குமைத்தான் - உரு அழியச் செய்தவன். நெதியான் மிகு செல்வர் - தியானத்தால் மிக்க செல்வர். நியமங்கள் - யோக உறுப்புகள் எட்டனுள் ஒன்றாகிய நியமம்.

8. பொ-ரை : கயிலை மலையைப் பெயர்த்தெடுத்த இராவண னின் செருக்கினைத் தன் கால்விரலை ஊன்றி அழித்தவனும், பின்

Koviloor Digital Library

890. கிடந்தா னிருந்தானுங் கீழ்மேல் காணாது
தொடர்ந்தாங் கவரேத்தச் சுடரா யவன்கோயில்
படந்தாங் கரவல்குற் பவளத் துவர்வாய்மேல்
விடந்தாங் கியகண்ணார் வீழி மிழலையே. 9

891. சிக்கார் துவராடைச் சிறுதட் டுடையாரும்
நக்காங் கலர்தூற்றுந் நம்பா னுறைகோயில்
தக்கார் மறைவேள்வித் தலையா யுலகுக்கு
மிக்கா ரவர்வாழும் வீழி மிழலையே. 10

அவன் பிழையுணர்ந்து வேண்ட, வாள் முதலியன கொடுத்து, அவனை அடிமையாக ஏற்றுக் கொண்டருளியவனுமாகிய சிவபிரான் உறையும் கோயில், வேதங்களைப் பயின்றவர்களும், வேள்விகள் பலவற்றைச் செய்பவர்களும், பாவங்களை விட்டவர்களுமாகிய அந்தணர்கள் மிகுதியாக வாழும், திருவீழிமிழலையாகும்.

கு-ரை: இராவணனது தருக்கினை அழித்து வாள்கொடுத்து ஆளாகக்கொண்ட இறைவன் கோயில் இது என்கின்றது, மறை படித் தார், வேள்வி பயின்றார் என மாறிக் கூட்டுக. வேதம் ஓதி வேள்வி இடைவிடாது செய்து பாபத்தை விட்டவர்கள் வாழ்கின்ற மிழலை என்க.

9. பொ-ரை: பாம்பணையில் துயிலும் திருமாலும், தாமரை மலரில் உறையும் நான்முகனும் அடிமுடிகளைக் காணாது திரும்பித் தொடர்ந்து ஏத்த அழலுருவாய் நின்ற சிவபிரானது கோயில். அரவின் படம் போன்ற அல்குலையும், பவளம் போன்ற வாயினையும் விடம் பொருந்திய கண்களையும் உடைய மகளிர் மிகுதியாக வாழும் திருவீழிமிழலையாகும்.

கு-ரை : மாலும் அயனும் அறியாவண்ணம் அழல் உருவானான் இடம் இது என்கின்றது. கிடந்தான் - பாம்பணையில் பள்ளி கொள்ளும் திருமால். இருந்தான் - பூமேல் இருந்த பிரமன். சுடராயவன் - தீ உருவானவன். அரவுபோன்ற அல்குலையும், வாயின் மேல் விஷத்தை யும் தாங்கிய கண்ணார் என்றது பாம்பு ஓரிடமும் விடம் ஓரிடமும் இருக்கின்றதென்னும் வியப்புத் தோன்றக் கூறியது.

10. பொ-ரை : சிக்குப் பிடித்த காவி உடையையும் சிறிய ஓலைத் தடுக்குக்களையும் உடைய புத்தரும் சமணர்களும் ஏளனம் செய்து

Koviloor Digital Library

892. மேனின் றிழிகோயில் வீழி மிழலையுள்
ஏனத் தெயிற்றானை யெழிலார் பொழிற்காழி
ஞானத் துயர்கின்ற நலங்கொள் சம்பந்தன்
வாய்மைத் திவைசொல்ல வல்லோர் நல்லோரே. 11

திருச்சிற்றம்பலம்

சிரித்துப் பழிதூற்றும் நம் இறைவர் தங்கும் கோயில், தக்கவராய், வேதவேள்விகள் செய்வதில் தலையாயவராய், உலகில் மேம்பட்டவராய் விளங்கும் மறையவர் வாழும் வீழிமிழலை ஆகும்.

கு-ரை: புறச்சமயிகள் புறம்பழிக்கும் நமதிறைவன் கோயில் இது என்கின்றது. சிக்கு ஆர் துவர் ஆடை - சிக்கு நாறும் காவியுடை. தட்டு உடை - ஓலைத்தடுக்காகிய உடை, நக்கு - சிரித்து. அலர் தூற்றும்- பழிதூற்றும். தக்காராய், வேதவேள்வியில் தலையானவராய், உலகுக்கே மிக்கவர்கள் வாழுகின்ற வீழிமிழலை என்க.

11.பொ-ரை: விண்ணிலிருந்து இழிந்து வந்துள்ள வீழிமிழலைக் கோயிலில், பன்றிப்பல் சூடியவனாய் எழுந்தருளி விளங்கும் சிவபிரானை, அழகிய பொழில்கள் சூழ்ந்த காழிப் பதியில் தோன்றிய ஞானத்தால் மேம்பட்ட அழகிய ஞானசம்பந்தன், உண்மையை உடையவனாய் ஓதிய இப்பதிகத்தைச் சொல்ல வல்லவர் நல்லவர் ஆவர்.

கு-ரை: வீழிநாதனைக் காழி ஞானசம்பந்தன் சொன்ன இப்பாடல் பாடவல்லார் நல்லார் என்கின்றது. மேல்நின்று இழி கோயில் - விண்ணிழிகோயில். இது இத்தலத்துச்சிறப்புக்களுள் ஒன்று. ஏனத்து எயிற்றானை - பன்றிக்கொம்பை அணிந்தானை. வாய்மைத்து இவை - உண்மையை உடையனவாகிய இவற்றை.

திருஞானசம்பந்தர் புராணம்

நிறைகுடந் தூபந்தீபம் நீடநிரைத் தேந்தி
நறைமலர்ப் பொற்சுண்ணம் நறும்பொரியுந் தூவி
மறையொலிபோய் வானளப்ப மாமுரசம் ஆர்ப்ப
இறைவர்திரு மைந்தர்தமை எதிர்கொள்வர வேற்றார்.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

83. திருஅம்பர்மாகாளம்

பதிக வரலாறு:

திருநாவுக்கரசு சுவாமிகளோடும் அடியார்கள் புடை சூழத் திருமாகாளத்தை வணங்கிப் பதிக இன்னிசை பாடிய பிள்ளையார் திருஅம்பர்மாகாளத்தைச் சேர்ந்தார்கள். 'அடை யார் புரம்' என்னும் இப்பதிகத்தை அருளிச்செய்தார்கள்.

பண்: குறிஞ்சி

பதிக எண்: 83

திருச்சிற்றம்பலம்

893. அடையார் புரமூன்று மனல்வாய் விழவெய்து
மடையார் புனலம்பர் மாகா ளம்மேய
விடையார் கொடியெந்தை வெள்ளைப் பிறைசூடும்
சடையான் கழலேத்தச் சாரா வினைதானே. 1

894. தேனார் மதமத்தந் திங்கள் புனல்சூடி
வானார் பொழிலம்பர் மாகா ளம்மேய
ஊனார் தலைதன்னிற் பலிகொண் டுழல்வாழ்க்கை
ஆனான் கழலேத்த வல்ல லடையாவே. 2

1. பொ-ரை: பகைவராகிய அசுரர்களின் மூன்று கோட்டைகளும் அனலிடைப்பட்டு அழியுமாறு கணை எய்தவனும், நீரைத் தேக்கும் மடைகளையுடைய புனல் வளம் நிறைந்த அம்பர் மாகாளத்தில் எழுந்தருளிய விடை எழுதிய கொடியை உடைய எம் தந்தையும், வெண்மையான பிறை மதியை அணிந்த சடையினனும் ஆகிய பெருமான் திருவடிகளை ஏத்துவாரை வினைகள் சாரா.

கு-ரை: இப்பதிகத்தால் அம்பர்மாகாளத்தெழுந்தருளிய இறை வனுடைய திருவடியை ஏத்தவல்லவர்க்கு வினை சாரா, தவம் சாரும், இன்பம் எய்தும் என்பது அறிவிக்கப்படுகின்றது. அடையார் - பகைவர். என்றது திரிபுராதிகள். மடை - வாய்க்கால் மடை.

2. பொ-ரை: தேன் பொருந்திய செழுமையான ஊமத்தம் மலர், பிறைமதி, கங்கை ஆகியவற்றை முடியில் சூடி, வானளாவிய பொழில்

Koviloor Digital Library

895. திரையார் புனலோடு செல்வ மதிசூடி
விரையார் பொழிலம்பர் மாகா ளம்மேய
நரையார் விடையூரு நம்பான் கழனாளும்
உரையா தவர்கண்மே லொழியா வூனம்மே. 3

896. கொந்தண் பொழிற்சோலைக் கோல வரிவண்டு
மந்தம் மலியம்பர் மாகா ளம்மேய
கந்தங் கமழ்கொன்றை கமழ்புன்சடை வைத்த
எந்தை கழலேத்த விடர்வந் தடையாவே. 4

சூழ்ந்த அம்பர் மாகாளத்தில் எழுந்தருளிய ஊன் பொருந்திய தலையோட்டில் பலியேற்றுத் திரியும் வாழ்க்கையை மேற்கொண்ட பெருமான் திருவடிகளைப் போற்றத் துன்பங்கள் நம்மை அடையா.

கு-ரை: ஊனார் தலை - பிரமகபாலம். ஆனான் - இடபத்தை யுடையவன். அல்லல் - துன்பம்.

3. பொ-ரை: அலைகள் பொருந்திய கங்கை நதியோடு, கண்டாரை மகிழ்விக்கும் சிறப்பு வாய்ந்த பிறைமதியை முடியில் சூடி, மணம் கமழும் பொழில் சூழ்ந்த அம்பர் மாகாளத்தில் எழுந்தருளிய வெண்மையான விடையை ஊர்ந்து வரும் சிவபிரான் திருவடிப் புகழை நாள்தோறும் உரையாதவர்கள் பால் பழிபாவங்கள் நீங்கா.

கு-ரை: திரை - அலை. மேனி குறைதலாகிய வறுமையும் இறைவனைச் சார்ந்து கழிந்தமையின் செல்வமதியாயிற்று. விரை - மணம். நரை - வெண்மை. ஊனம் - பழி. இப்பாடல் எதிர்மறை முகத் தான் வற்புறுத்தியது.

4. பொ-ரை: பூங்கொத்துக்கள் நிறைந்த பொழில்களிலும் சோலை களிலும் அழகிய வரி வண்டுகள் பாடும் மந்தச் சுருதி இசை நிறைந்து விளங்கும் இயற்கை எழில் வாய்ந்த அம்பர் மாகாளத்தில் எழுந் தருளிய, மணம் கமழும் கொன்றை மலர்களை இயல்பாக மணம் வீசும் தனது சிவந்த சடைமிசை வைத்துள்ள எம் தந்தையாகிய சிவபிரானின் திருவடிகளை ஏத்தினால் இடர்கள் நம்மை வந்தடைய மாட்டா.

கு-ரை: கொந்து அண் பொழில் - கொத்துக்கள் நிறைந்த நந்தவனம். கோலம் - அழகு. மந்தம் - தென்றற்காற்று.

Koviloor Digital Library

897. அணியார் மலைமங்கை யாகம் பாகமாய்
மணியார் புனலம்பர் மாகா ளம்மேய
துணியா ருடையினான் றுதைபொற் கழனாளும்
பணியா தவர்தம்மேற் பறையா பாவம்மே. 5

898. பண்டாழ் கடனஞ்சை யுண்டு களிமாந்தி
வண்டார் பொழிலம்பர் மாகா ளம்மேய
விண்டார் புரம்வேவ மேருச் சிலையாகக்
கொண்டான் கழலேத்தக் குறுகா குற்றம்மே. 6

5. பொ-ரை : அழகு பொருந்திய மலைமங்கையாகிய பார்வதி தேவியைத் தனது உடலின் இடப்பாகமாய்க் கொண்டவனாய் மணிகளோடு கூடிய புனல் வளம் உடைய அம்பர் மாகாளத்தில் எழுந்தருளிய, துணிக்கப்பட்ட கோவண உடையினன் ஆகிய சிவபெருமானின் பொன்னிறம் துதைந்த திருவடிகளை நாள்தோறும் பணியாதவரைப் பாவம் நீங்கா.

கு-ரை : அணி - அழகு. ஆகம் - உடல், மணியார் புனல் - முத்துக்களோடு கூடிய தண்ணீர். துணி ஆர் உடை - துணிக்கப்பெற்ற கோவண உடை. பணியாதவர்மேல் பாவம் பறையா என இதுவும் எதிர்மறை முகத்தான் விளக்கியது.

6. பொ-ரை : முற்காலத்தில் ஆழ்ந்த கடலிடைத் தோன்றிய நஞ்சினை உண்டு, களிப்புற்று வண்டுகள் மொய்க்கும் சோலைகள் சூழ்ந்த அம்பர்மாகாளத்தில் எழுந்தருளியிருப்பவனும், பகைவராகிய அசுரர்களின் முப்புரங்களும் வெந்தழியுமாறு மேருமலையை வில்லாகக் கொண்டருளியவனுமான சிவபெருமான், திருவடிகளைப் போற்ற, குற்றங்கள் நம்மைக் குறுகா.

கு-ரை : பண்டு ஆழ் கடல் நஞ்சை எனப்பிரிக்க. அமுதமுண்டு களிப்பது இயல்பாயினும், இவர், நஞ்சையுண்டு களித்தார் என்றது மிக நயமான பகுதி. அமுதுண்டு களிப்பார் அறிவு மயங்குவார். நஞ்சை உண்டு இவர் களித்த களிப்பு இத்துணைத் தேவர்க்கும் இன்பம் செய்தோமே என்றதால் விளைந்தது. களிமாந்தி - களிப்பையடைந்து. விண்டார் - பகைவர். இது இத்தலவரலாறு. இத் தலத்திறைவன் பெயர் காளகண்டேசுவரர் என்பதுங் காண்க.

Koviloor Digital Library

899. மிளிரும் மரவோடு வெள்ளைப் பிறைசூடி
வளரும் பொழிலம்பர் மாகா ளம்மேய
கிளரும் சடையண்ணல் கேடில் கழலேத்தத்
தளரும் முறுநோய்கள் சாருந் தவந்தானே. 7

900. கொலையார் மழுவோடு கோலச் சிலையேந்தி
மலையார் புனலம்பர் மாகா ளம்மேய
இலையார் திரிசூலப் படையான் கழனாளும்
நிலையா நினைவார்மே னில்லா வினைதானே. 8

901. சிறையார் வரிவண்டு தேனுண் டிசைபாட
மறையார் நிறையம்பர் மாகா ளம்மேய

7. பொ-ரை: விளங்குகின்ற பாம்போடு வெள்ளை நிறமுடைய பிறையை முடியிற்சூடி, வளர்கின்ற பொழில்கள் சூழ்ந்த அம்பர் மாகாளத்தில் எழுந்தருளியிருக்கும், விளங்குகின்ற சடைமுடியை உடைய தலைமையாளனாகிய சிவபிரானுடைய குற்றமற்ற திருவடி களை ஏத்தினால், மிக்க நோய்கள் தளர்வுறும்; தவம் நம்மை வந்து அடையும்.

கு-ரை: மிளிரும் அரவு - விளங்குகின்ற பாம்பு. அரவுக்கு விளக்கம் அடியார்கள் அன்போடு அடைக்கலமாக நோக்கும் இறைவ னுடைய திருவடி, கரம், கழுத்து, முடி, செவி, இவற்றிலெல்லாம் அணி யாக இருந்து அடியார்கள் மனத்தைக் கவர்தல், கேடில்கழல் - அழிந்து படாத்திருவடி. உறுநோய்கள் தளரும், தவம் சாரும் என முடிக்க.

8. பொ-ரை: கொல்லும் தொழிலில் வல்ல மழுவாயுதத்தோடு, அழகிய வில்லையும் கையில் ஏந்தி, கரையோடு மோதும் நீர் நிரம்பிய அம்பர் மாகாளத்தில் எழுந்தருளியிருக்கும், இலை வடிவமான முத்தலைச் சூலத்தைப் படையாகக் கொண்ட சிவபெருமான் திருவடி களை நாள்தோறும் நிலையாக நினைவார்பால் வினைகள் சாரா.

கு-ரை: கொலை ஆர்மழு என்றது படைக்கலம் என்ற பொது மை பற்றி வந்த அடை; இறைவன் மழு யாரையும் கொலை செய்தல் இல்லையாதலின். கோலச் சிலை - அழகுக்காகத் தரிக்கப்பட்டவில்.

9. பொ-ரை: சிறகுகளை உடைய வரி வண்டுகள் தேனுண்டு இசைபாட, வேதம் ஓதும் அந்தணர் நிறைந்த அம்பர் மாகாளத்தில்

Koviloor Digital Library

நறையார் மலரானும் மாலும் காண்ஃபொண்ணா
இறையான் கழலேத்த வெய்தும் மின்பம்மே. 9

902. மாசூர் வடிவின்னார் மண்டை யுணல்கொள்வார்
கூசா துரைக்குஞ்சொற் கொள்கை குணமல்ல
வாசார் பொழிலம்பர் மாகா ளம்மேய
ஈசா வென்பார்கட் கில்லை யிடர்தானே. 10

903. வெரிநீர் கொளவோங்கும் வேணு புரந்தன்னுள்
திருமா மறைஞான சம்பந் தனசேணார்
பெருமான் மலியம்பர் மாகா ளம்பேணி
உருகா வுரைசெய்வா ருயர்வா னடைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

எழுந்தருளியிருப்பவனும், தேன் நிறைந்த தாமரை மலரில் வீற்றிருக்கும் நான்முகனும் திருமாலும் காண ஒண்ணாத தலைமையாளனுமாய சிவபிரான் திருவடிகளை ஏத்தினால் இன்பம் கிடைக்கும்.

கு-ரை : மறையார் - அந்தணர். நறை - தேன். இறையான் சிவபெருமான்.

10. பொ-ரை : அழுக்கடைந்த மேனியரும், துன்ப வடிவினராகி, மண்டை என்னும் பாத்திரத்தில் உணவு கொள்பவருமாய புத்தரும், சமணரும் மனம் கூசாமல் கூறும் பொய்யுரைகளை ஏற்றுக் கொள்ளல் நன்மை தாராது. மணம் கமழும் பொழில் சூழ்ந்த அம்பர் மாகாளத்தில் எழுந்தருளியுள்ள ஈசனே என்று கூறுபவர்கட்கு இடர் வாராது.

கு-ரை : மாசூர்வடிவு - அழுக்கடைந்த மேனி. இன்னார் - துன்பமுடையவர்கள். மண்டை - வாயகன்ற உண்ணும் பாத்திரம். கூசாது உரைக்கும் சொல் - பொய் என்றறிந்தும் மனமும் வாயும் கூசாமல் உரைக்குஞ்சொல். வாசு ஆர் பொழில் - நீர் நிறைந்த பொழில்; வெட்டி வேரும் ஆம். வாசு - நீர் (*பெருங்கதை. 1. 53. 77*)

11. பொ-ரை : அஞ்சத்தக்க ஊழி வெள்ளம். உலகத்தை மூட, அவ்வெள்ளத்தே ஓங்கிமேல் மிதந்த வேணுபுரம் என்னும் சீகாழிப் பதியுள் தோன்றிய அழகியனவும் சிறந்தனவுமான வேதங்களில் வல்ல

Koviloor Digital Library

ஞானசம்பந்தனுடைய இத்திருப்பதிகப் பாடல்களை, விண்ணோர் தலைவனாகிய சிவபிரான் எழுந்தருளியுள்ள அம்பர் மாகாளத்தை விரும்பித் தொழுது உருகி உரை செய்பவர் உயர்ந்த வானோர் உலகத்தை அடைவார்கள்.

கு-ரை : வெரி நீர் - தேனாகிய நீர். வேரி என்பது வெரி எனத் திரிந்து நின்றது. சேணார் பெருமான் - விண்ணவர் தலைவனாகிய சிவபெருமான்.

திருஞானசம்பந்தர் புராணம்

அம்பர் மாநகர் அணைந்துமா காளத்தில்
அண்ணலார் அமர்கின்ற
செம்பொன் மாமதிற் கோயிலை வலங்கொண்டு
திருமுன்பு பணிந்தேத்தி
வம்பு லாமலர் தூவிமுன் பரவியே
வண்டமி ழிசைமாலை
உம்பர் வாழநஞ் சுண்டவர் தமைப்பணிந்
துருகும்அன் பொடுதாழ்ந்தார்.

தாழ்ந்து நாவினுக் கரசுடன் தம்பிரான்
கோயில் முன் புறமெய்திச்
சூழ்ந்த தொண்டரோ டப்பதி யமர்பவர்
சுரநதி முடிமீது
வீழ்ந்த வேணியர் தமைப்பெருங் காலங்கள்
விருப்பினாற் கும்பிட்டு
வாழ்ந்தி ருந்தனர் காழியார் வாழவந்
தருளிய மறைவேந்தர்.

– சேக்கிழார்.

Koviloor Digital Library

84. திருநாகைக்காரோணம்

பதிக வரலாறு:

திருச்சாத்தமங்கையில் திருநீலநக்க நாயனார் திருமாளிகையில் தங்கி வழிபட்டுத் திருப்பதிகம்பாடி எழுந்தருளியிருந்த பிள்ளையார், பிற பதிகளையும் வழிபடத் திருவுளம்பற்றி, அடியார் கூட்டங்களோடு நாகப்பட்டினத்தை யடைந்தார்கள். திருநாகைக் காரோணத்தைக் கைதொழுது கலந்த ஓசைச் சொற்றமிழ் மாலையாகிய 'புனையும் விரி கொன்றை' என்னும் இப் பதிகத்தைப்பாடிச் சிலநாள் தங்கியிருந்தார்கள்.

பண்: குறிஞ்சி

பதிக எண்: 84

திருச்சிற்றம்பலம்

904. புனையும் விரிகொன்றைக் கடவுள் புனல்பாய
நனையுஞ் சடைமேலோர் நகுவெண் டலைசூடி
வினையில் லடியார்கள் விதியால் வழிபட்டுக்
கனையுங் கடனாகைக் காரோ ணத்தானே. 1

1. **பொ-ரை :** விரிந்த கொன்றை மலர் மாலையைப் புனையும் கடவுளாய சிவபிரான், கங்கை நீரைத் தாங்கியதால் நனைந்துள்ள சடையின்மேல், வாய் விரித்துச் சிரிப்பது போன்ற வெள்ளியதொரு தலைமாலையைச் சூடி, வினை நீங்கிய அடியவர்கள் விதிப்படி வழிபடச் செறிந்துள்ள கடற்கரையை அடுத்த நாகைக் காரோணத்தில் எழுந்தருளியுள்ளார்.

கு-ரை : வினைநீங்கிய அடியார்கள் விதிப்படி வழிபட்டுச் செறியும் கடனாகைக் காரோணத்தானே சிரமாலையணிந்தவன் என்கின்றது.

புனையும் - அழகுசெய்யும். கடவுள்புனல் - தேவ கங்கை. வினையில் அடியார்கள் - வினை ஒய்ந்த அடியார்கள். கனையும் - செறியும்.

Koviloor Digital Library

905. பெண்ணா ணெனநின்ற பெம்மான் பிறைச்சென்னி
அண்ணா மலைநாட னாரூ ருறையம்மான்
மண்ணார் முழவோவா மாடந் நெடுவீதிக்
கண்ணார் கடனாகைக் காரோ ணத்தானே. 2

906. பாரோர் தொழவிண்ணோர் பணியம் மதின்மூன்றும்
ஆரா ரழலூட்டி யடியார்க் கருள்செய்தான்
தேரார் விழவோவாச் செல்வன் றிரைசூழ்ந்த
காரார் கடனாகைக் காரோ ணத்தானே. 3

2. பொ-ரை: பெண்ணும் ஆணுமாய் ஒருருவில் விளங்கும் பெருமானும், பிறை சூடிய சென்னியனாய் அண்ணாமலை ஆரூர் ஆகிய ஊர்களில் எழுந்தருளிய தலைவனும் ஆகிய சிவபிரான் மார்ச் சனை பொருந்திய முழவின் ஒலி இடைவிடாமல் கேட்கும், மாட வீடு களுடன் கூடிய நெடிய வீதிகளை உடைய அகன்ற இடப் பரப்புடைய கடலையடுத்த நாகைக் காரோணத்தில் எழுந்தருளி யுள்ளான்.

கு-ரை: சிவமும் சத்தியுமாக நின்றவன், அண்ணாமலையான், ஆரூருறைவான் காரோணத்தானே என்கின்றது. திருமாலின் தருக் கொழித்த தலங்கள் மூன்றினையும் சேர்த்துக்கூறியருளினார். திரு வாரூரில் வில்நாணைச் செல்லாக அரித்து நிமிர்த்தித் திருமால் சிரத்தை யிடறினார்; திருவண்ணாமலையில் தீமலையாய் நின்று செருக்கடக்கி னார்; நாகையிலும் தியாகர் திருவுருவில் இருந்து திருமாலின் தியானவஸ்துவானார் என்பதுமாம். மண் - மார்ச்சனை என்னும் மண். கண் - இடம்.

3. பொ-ரை: மண்ணக மக்கள் தொழவும், விண்ணவர் பணிய வும் அனைவர்க்கும் நெருங்குதற்கரிய அழலை ஊட்டி அழித்து அடிய வர்க்கு அருள் செய்து, தேரோட்டமாகிய சிறப்பு விழா இடைவிடாது நிகழும் சிறப்பினை ஏற்றருளும் செல்வன் ஆகிய சிவபெருமான், அலைகள் நிரம்பிய, மேகங்கள் பொருந்திய கடலின் கரையில் விளங்கும் நாகைக் காரோணம் என்னும் தலத்தில் எழுந்தருளி யுள்ளான்.

கு-ரை: திரிபுரம் எரித்த செயல் விண்ணவர் மண்ணவர் அடியார் எல்லாரும் மகிழுஞ் செயலாயிற்று என்பது உணர்த்துகின்றது. ஆரார் - பகைவர். காரார்கடல் - கரியகடல்.

Koviloor Digital Library

907. மொழிசூழ் மறைபாடி முதிருஞ் சடைதன்மேல்
அழிசூழ் புனலேற்ற வண்ணல் லணியாய
பழிசூழ் விலராய பத்தர் பணிந்தேத்தக்
கழிசூழ் கடனாகைக் காரோ ணத்தானே. 4

908. ஆணும் பெண்ணுமா யடியார்க் கருணல்கிச்
சேணின் றவர்க்கின்னஞ் சிந்தை செயவல்லான்
பேணி வழிபாடு பிரியா தெழுந்தொண்டர்
காணுங் கடனாகைக் காரோ ணத்தானே. 5

4. பொ-ரை : பொருள் பொதிந்த சொற்கள் நிரம்பிய வேதங்களைப் பாடிக் கொண்டு, முதிர்ந்த தன் சடைமுடி மேல் உலகை அழிக்க எண்ணி வந்த கங்கை நதியை ஏற்றருளிய தலைவனாகிய சிவபெருமான், அழகிய செயல்களோடு பழி பாவங்களை மனத்திலும் கருதாதவர்களாகிய அடியவர்கள் பணிந்து போற்ற உப்பங்கழிகள் சூழ்ந்த கடற்கரையை அடுத்துள்ள நாகைக் காரோணத்தில் எழுந்தருளியுள்ளான்.

கு-ரை : பழியொடு பொருந்தாத பத்தர்தொழும் நாகை என்கின்றது. மொழிசூழ்மறை - மந்திரமொழியாகச் சூழும் வேதம். அழிசூழ்புனல் - அழித்தலையெண்ணி மிடுக்கொடு வந்த கங்கை. பழிசூழ்வு இலராய - பழிசூழாத. பழியும் சூழ்ச்சியும் இலராய என்றுமாம்.

5. பொ-ரை : ஆணும் பெண்ணுமான வடிவோடு காட்சி தந்து, அடியவர்களுக்கு அருள் வழங்கி, வானுலகில் வாழும் தேவர்கட்கு மேலும் அருள் புரிய விரும்பும் மனத்தை உடையனாய் விளங்கும் சிவபிரான் அன்புடன் வழிபாடு செய்து பிரியாது வாழும் தொண்டர்கள் காணும் வண்ணம் கடற்கரையில் விளங்கும் நாகைக் காரோணத்தில் எழுந்தருளியுள்ளான்.

கு-ரை : அடியார்க்கு அருள்செய்து, விலகிநின்றவருக்கும் திருவுளம் பாலித்துத் தியானிக்கும் செம்மனச் செல்வர் தரிசிக்க நின்றவன் இவன் என்கின்றது. சிவம் சத்தியாக நின்றாலல்லது அருளல் நிகழாமையின் 'ஆணும் பெண்ணுமாய் அருள் நல்கி' என்றார். சேண் நின்றவர் - தூரத்தே நின்றவர்; தேவருமாம். இன்னம் சிந்தைசெய வல்லான் - மேலும் திருவருள் உள்ளத்தைப் புரிய வல்லவன். காணும் - அநவரததரிசனம் செய்யும்.

Koviloor Digital Library

909. ஏனத் தெயிறோடும் மரவ மெய்பூண்டு
வானத் திளந்திங்கள் வளருஞ் சடையண்ணல்
ஞானத் துரைவல்லார் நாளும் பணிந்தேத்தக்
கானற் கடனாகைக் காரோ ணத்தானே. 6

910. அரையா ரழனாக மக்கோ டசைத்திட்டு
விரையார் வரைமார்பின் வெண்ணீ றணியண்ணல்
வரையார் வனபோல வளரும் வங்கங்கள்
கரையார் கடனாகைக் காரோ ணத்தானே. 7

6. பொ-ரை : பன்றியின் பல், பாம்பு ஆகியவற்றை மெய்யிற் பூண்டு, வானகத்தே இயங்கும் இளம்பிறை தங்கும் சடைமுடியை உடைய தலைமையாளனாகிய சிவபெருமான், மெய்யறிவு மயமான சொற்களைப் பேசவல்ல அடியவர்கள் நாள்தோறும் பணிந்து போற்றச் சோலைகள் சூழ்ந்த கடற்கரையை அடுத்துள்ள நாகைக்காரோணத்தில் எழுந்தருளியுள்ளான்.

கு-ரை : ஞானிகள் பணிய இருப்பான் இவன் என்கின்றது. ஏனத்து எயிறு - பன்றிக்கொம்பு. அரவம் - பாம்பு. ஞானத்து உரைவல்லார் - சிவஞானத்தோடு செறிந்து இறைவன் புகழையே பேசவல்லவர்கள். கானல் - கடற்கரைச் சோலை.

7. பொ-ரை : இடையில் அழல்போலும் கொடிய நாகத்தைச் சங்கு மணிகளோடு இணைத்துக் கட்டிக் கொண்டு, மணம் கமழும் மலை போன்ற மார்பில் திருவெண்ணீறு அணிந்துள்ள தலைமையாளனாகிய சிவபெருமான், மலைகள் மிதந்து வருவன போலக் கப்பல்கள் கரையைச் சாரும் கடலை அடுத்துள்ள நாகைக் காரோணத்தில் எழுந்தருளியுள்ளான்.

கு-ரை : சங்குமணியைச் சர்ப்பத்தோடு அணிந்தவன் இவன் என்கின்றது. அரை ஆர் அழல் நாகம் - இடுப்பில் பொருந்திய தீயைப்போல் கொடிய விடப்பாம்பு.

அக்கோடு - சங்குமணியோடு. அசைத்திட்டு - கட்டி. விரை - மணம். வரை ஆர்வன போல - மலைகள் நிறைந்திருப்பனபோல. வங்கங்கள் - தோணிகள். வங்கங்கள் வரையார்வனபோல வளரும் கரை எனக் கூட்டுக.

Koviloor Digital Library

911. வலங்கொள் புகழ்பேணி வரையா லுயர்திண்டோள்
இலங்கைக் கிறைவாட வடர்த்தங் கருள்செய்தான்
பலங்கொள் புகழ்மண்ணிற் பத்தர் பணிந்தேத்தக்
கலங்கொள் கடனாகைக் காரோ ணத்தானே. 8

912. திருமா லடிவீழத் திசைநான் முகனேத்தப்
பெருமா னெனநின்ற பெம்மான் பிறைச்சென்னிச்
செருமால் விடையூருஞ் செல்வன் றிரைசூழ்ந்த
கருமால் கடனாகைக் காரோ ணத்தானே. 9

8. பொ-ரை : மேலும் மேலும் வெற்றிகளால் பெற்ற புகழால் தருக்கி, மலை போன்று உயர்ந்த திண்ணிய தோளால் கயிலை மலையை எடுத்த இராவணனை வாடுமாறு அடர்த்துப்பின் அவனுக்கு அருள்செய்த சிவபிரான், வாழ்வின் பயனாகக் கொள்ளத் தக்க புகழை உடையவர்களாகிய அடியவர்கள் மண்ணுலகில் தன்னைப் பணிந்து ஏத்த மரக்கலங்கள் பொருந்திய கடற்கரையை அடுத்து விளங்கும் நாகைக்காரோணத்தில் எழுந்தருளியுள்ளான்.

கு-ரை : தன் புகழை நம்பி வளர்ந்த தோளையுடைய இராவணன் வாட அடர்த்து, அருள் செய்தவர் இவர் என்கின்றது.

வலங் கொள் புகழ் என்றது கொடை முதலியவற்றாலும் புகழ் வருமாதலின் அவற்றினின்றும் பிரிக்க. கலம் - மரக்கலம்.

9. பொ-ரை : திருமால் தன் திருவடியில் விழுந்து வணங்கவும், நான்முகன் ஏத்தவும், தானே முழுமுதற் பரம்பொருள் என உணர்ந்து அழலுருவாய் ஓங்கி நின்ற பெருமானும், பிறை மதியை முடியிற்சூடிப் பகைவரை எதிர்க்க வல்ல விடையேற்றை ஊர்ந்து வரும் செல்வனும் ஆகிய சிவபெருமான், அலைகளால் சூழப்பட்ட கரிய பெரிய கடற்கரையில் விளங்கும் நாகைக் காரோணத்தில் எழுந்தருளி யுள்ளான்.

கு-ரை : அயன் மால் இவர்கள் பெருமானே என ஏத்தநின்றவர், விடையூருஞ்செல்வர், இவர் என்கின்றது.

செரு மால் விடை - சண்டைசெய்யும் பெரிய இடபம். கரு மால் கடல் - கரிய பெரிய கடல்.

Koviloor Digital Library

913. நல்லா ரறஞ்சொல்லப் பொல்லார் புறங்கூற
அல்லா ரலர்தூற்ற வடியார்க் கருள்செய்வான்
பல்லார் தலைமாலை யணிவான் பணிந்தேத்தக்
கல்லார் கடனாகைக் காரோ ணத்தானே. 10

914. கரையார் கடனாகைக் காரோ ணம்மேய
நரையார் விடையானை நவிலுஞ் சம்பந்தன்
உரையார் தமிழ்மாலை பாடும் மவரெல்லாம்
கரையா வுருவாகிக் கலிவா னடைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை : நல்லவர்கள் அறநெறிகளைப் போதிக்கவும், பொல்லாதவர்களாகிய சமணர்கள் புறங்கூறவும், நல்லவரல்லாத புத்தர்கள் பழி தூற்றவும், தன் அடியவர்க்கு அருள்புரியும் இயல்பினன் ஆகிய இறைவன் சுடுகாட்டில் கிடக்கும் பலர் தலையோடுகளை மாலைகளாகக் கோத்து அணிந்தவனாய்ப் பலரும் பணிந்து ஏத்த, கல் என்னும் ஒலியோடு கூடிய கடற்கரையில் விளங்கும் நாகைக் காரோணத்தில் எழுந்தருளியுள்ளான்.

கு-ரை : நல்லவர்கள் அறம் சொல்ல, தீயோர் புறங்கூற, அயலார் பழிசொல்ல, அடியார்க்கு அருள்செய்பவன் காரோணத்தான் என்கின்றது. பல் ஆர் தலை - பல்லோடுகூடிய தலை. கல் ஆர் கடல் - கல் என்னும் ஒலியோடு கூடிய கடல்.

11. பொ-ரை : இடைவிடாது ஒலி செய்யும் கடலின் கரையில் விளங்கும் நாகைக் காரோணத்தில் எழுந்தருளிய வெண்மை நிறம் பொருந்திய விடை ஊர்தியைக் கொண்டுள்ள இறைவனை ஞான சம்பந்தன் பரவிப் போற்றிய புகழ்பொருந்திய இத்தமிழ் மாலையைப் பாடிப் பரவுபவர் அனைவரும் அழியாத வடிவத்தோடு ஆரவா்ரம் மிக்க வானுலகை அடைவார்கள்.

கு-ரை : காரோணநாதனை ஞானசம்பந்தன் சொன்ன தமிழ் மாலையாகிய இவற்றைப் பாடுவார் அழியாவடிவோடு வான் அடைவார்கள் என்கின்றது. கரையார் கடல் - ஒலிக்கின்ற கடல். நரை - வெண்மை. உரை - புகழ். கரையா உருவாகி - அழியாத வடிவத் தோடு. கலி - ஒசை.

Koviloor Digital Library

85. திருநல்லம்

பதிக வரலாறு:

வைகல் மாடக்கோயிலை வணங்கிப்போந்த பிள்ளையார் திருநல்லத்தை நணுகினார்கள். அங்கு எழுந்தருளியுள்ள நீடு மாமணியின் சேவடிகளை வணங்கி, இனிய தமிழாகிய 'கல்லால் நிழன்மேய' என்னும் பதிகத்தை அருளிச்செய்தார்.

பண்: குறிஞ்சி

பதிக எண்: 85

திருச்சிற்றம்பலம்

915. **கல்லா னிழன்மேய கறைசேர் கண்டாவென்**
றெல்லா மொழியாலு மிமையோர் தொழுதேத்த
வில்லா லரண்மூன்றும் வெந்து விழவெய்த
நல்லா னமையாள்வா னல்ல நகரானே. 1

916. **தக்கன் பெருவேள்வி தன்னி லமரரைத்**
துக்கம் பலசெய்து சுடர்பொற் சடைதாழக்
கொக்கின் னிறகோடு குளிர்வெண் பிறைசூடும்
நக்கன் னமையாள்வா னல்ல நகரானே. 2

1. பொ-ரை : இமையவர்கள் கல்லால மர நிழலில் எழுந்தருளிய கறை பொருந்திய கண்டத்தை உடையவனே என்று தமக்குத் தெரிந்த அனைத்து மொழிகளாலும் தோத்திரம் செய்து தொழுது ஏத்த, மேரு வில்லால் அசுரர்தம் மூன்று அரண்களும் வெந்து விழுமாறு செய்தருளிய பெரியவனாகிய சிவபிரான் நம்மையாட்கொள்ளுதற் பொருட்டு நல்லம் என்னும் நகரில் எழுந்தருளியுள்ளான்.

கு-ரை : உபதேச குருமூர்த்தியாயிருந்த நீலகண்டா என்று தேவர்கள் தோத்திரிக்கத் திரிபுரம் எரித்த பெருமான் நமையாட் கொள்ளுவதற்காகத் திருநல்லம் என்னும் திருப்பதியில் எழுந்தருளி யிருக்கின்றார் என்கின்றது. கறை - விஷம். எல்லா மொழியாலும் - தமக்குத் தெரிந்த மொழிகள் எல்லாவற்றாலும்.

2. பொ-ரை : தன்னை இகழ்ந்து தக்கன் செய்த பெரிய வேள் விக்குச் சென்ற அமரர்களை, அவ்வேள்விக் களத்திலேயே பலவகை

Koviloor Digital Library

917. அந்தி மதியோடு மரவச் சடைதாழ
முந்தி யனலேந்தி முதுகாட் டெரியாடி
சிந்தித் தெழவல்லார் தீரா வினைதீர்க்கும்
நந்தி நமையாள்வா னல்ல நகரானே. 3

918. குளிரும் மதிசூடிக் கொன்றைச் சடைதாழ
மிளிரும் மரவோடு வெண்ணூ றிகழ்மார்பில்
தளிருந் திருமேனித் தையல் பாகமாய்
நளிரும் வயல்சூழ்ந்த நல்ல நகரானே. 4

யான துக்கங்களை அடையச் செய்தவனும், ஒளிவிடும் பொன்போன்ற சடைகள் தாழ்ந்து தொங்கக் கொக்கின் இறகோடு குளிர்ந்த வெண்மை யான பிறையைச் சூடியிருப்பவனும் திகம்பரனுமாய இறைவன் நம்மை ஆளுதற்பொருட்டு நல்லம் என்னும் நகரில் எழுந்தருளியுள்ளான்.

கு-ரை : தக்கயாகத்தில் தேவர்களைத் துக்கப்படச்செய்த பெருமான் இவர் என்கின்றது. நக்கன் - நக்நன். இது நிர்வாணி என்னும் பொருளது.

3. பொ-ரை : மாலைக் காலத்தில் தோன்றும் பிறை மதியோடு பாம்பையும் அணிந்த சடைமுடி தாழ்ந்து தொங்க, முற்பட்ட ஊழிக் காலத்தில் கையில் அனலேந்திப் பழமையான சுடுகாட்டகத்தே எரியில் நின்றாடித் தன்னைச் சிந்தித்தே எச்செயலையும் தொடங்கும் அன்பர்களின் தீராத வினைகள் எல்லாவற்றையும் தீர்த்தருளும் நந்தியாகிய சிவபெருமான், நம்மை ஆட்கொண்டருளுதற் பொருட்டு நல்லம் என்னும் நகரில் எழுந்தருளியுள்ளான்.

கு-ரை : தியானிப்பவர்களுடைய தீராவினை நீக்குவார் இவர் என்கின்றது. முந்தி - ஊழித் தொடக்கத்தில். தீராவினை - இறைவன் திருவருளால் அன்றி வேறொன்றாலும் தீராத வினை. நந்தி - சிவபெருமான்.

4. பொ-ரை : குளிர்ந்த பிறை மதியைச் சூடி, கொன்றை மலர்களை அணிந்துள்ள சடைகள் தாழ்ந்து தொங்க, விளங்கும் பாம்போடு பூணநூல் திகழும் மார்பினனாய்த் தளிர் போன்ற திருமேனியை உடைய உமையம்மையை ஒருபாகமாகக் கொண்ட சிவபிரான் குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த நல்லம் என்னும் நகரில் எழுந்தருளி யுள்ளான்.

Koviloor Digital Library

919. மணியார் திகழ்கண்டம் முடையான் மலர்மல்கு
பிணிவார் சடையெந்தை பெருமான் கழல்பேணித்
துணிவார் மலர்கொண்டு தொண்டர் தொழுதேத்த
நணியா னமையாள்வா னல்ல நகரானே. 5

920. வாசம் மலர்மல்கு மலையான் மகளோடும்
பூசுஞ் சுடுநீறு புனைந்தான் விரிகொன்றை
ஈசன் னெனவுள்கி யெழுவார் வினைகட்கு
நாசன் னமையாள்வா னல்ல நகரானே. 6

கு-ரை : உமையொருபாகன் இவன் என்கின்றது. மிளிரும் - விளங்குகின்ற. தளிரும்திகழ் மேனி - தளிரைப்போல் விளங்குகின்ற மேனி. நளிரும் வயல் - குளிர்ந்த வயல்.

5. பொ-ரை : நீல மணி போன்ற விளங்கிய கண்டத்தினை உடையவனும்,மலர்கள் நிறைந்த வளைத்துக் கட்டப்பட்ட நீண்ட சடைமுடியினனும், எமக்குத் தந்தையானவனும் ஆகிய பெருமான் மனத் துணிவோடு மலர் கொண்டு தன் திருவடிகளை விரும்பித் தொழு தேத்தவும் நம்மை ஆட்கொண்டருளவும் நண்ணிய நிலையினனாய் நல்லம் நகரில் எழுந்தருளியுள்ளான்.

கு-ரை : மலர்கொண்டு கழல்பேணி, தொண்டர்கள் தொழுது ஏத்த அவர்களுக்கு அண்மையில் இருப்பவன் இவன் என்கின்றது. மணி - நீலமணி. பிணிவார் சடை - கட்டிய நீண்ட சடை. நணியான் - நணுகியவன். துணிவார் தொண்டர் - மனத்துணிவினை உடைய தொண்டர்.

6. பொ-ரை : மணம் கமழ்கின்ற மலர்களைச் சூடிய மலையரையன் மகளாகிய பார்வதி தேவியோடும், பூசத்தக்கதாய்ச் சுட்டெடுத்த திருநீறு அணிந்தவனாய், இதழ் விரிந்த கொன்றை மாலையைப் புனைந்தவனாய், ஈசன் எனத் தன்னை நினைந்தேத்துபவர்களின் வினைகளைப் பொடி செய்பவனாய், விளங்கும் இறைவன், நம்மை ஆட்கொண்டருள நல்லம் என்னும் நகரில் எழுந்தருளியுள்ளான்.

கு-ரை : உமாதேவியோடு நீறணிந்து கொன்றை சூடிய ஈசன் எனத் தியானிப்பார்க்கு வினைநாசம் செய்பவன் இவன் என்கின்றது. உள்கி - நினைத்து.

Koviloor Digital Library

921. அங்கோல் வளைமங்கை காண வனலேந்திக்
கொங்கார் நறுங்கொன்றை சூடிக் குழகாக
வெங்கா டிடமாக வெந்தீ விளையாடும்
நங்கோ னமையாள்வா னல்ல நகரானே. 7

922. பெண்ணார் திருமேனிப் பெருமான் பிறைமல்கு
கண்ணார் நுதலினான் கயிலை கருத்தினால்
எண்ணா தெடுத்தானை யிறையே விரலூன்றி
நண்ணார் புரமெய்தா னல்ல நகரானே. 8

923. நாகத் தணையானு நளிர்மா மலரானும்
போகத் தியல்பினாற் பொலிய வழகாகும்

7. பொ-ரை : அழகிய திரண்ட வளையல்களை அணிந்த உமையம்மை காணக் கையில் அன்ல் ஏந்தி, தேன் நிறைந்த மணமுடைய கொன்றை மலர்மாலை சூடி, இளமைக் கோலத்தில் சுடுகாட்டை அரங்காகக் கொண்டு எரியாடும் நம் தலைவனாகிய சிவபிரான், நம்மை ஆட்கொள்ளுதற் பொருட்டு நல்லம் என்னும் நகரில் எழுந்தருளியுள்ளான்.

கு-ரை : உமையம்மைகாணக் கொன்றைசூடி, ஊழிக்காலத்தில் நடனம் புரிபவர் இவர் என்கின்றது. அம் கோல் வளை - அழகிய திரண்ட வளையல். கொங்கு - மணம் நிறைந்த தேன். குழகாக - இளமையாக.

8. பொ-ரை : உமையம்மையைத் திருமேனியின் ஒரு கூற்றிலே கொண்டுள்ள பெருமானும், பிறை மதியை முடியில் சூடிக் கண் பொருந்திய நுதலினனாய் விளங்குவோனும், இறைவனது வரம்பிலாற்றலை மனத்தால் எண்ணாது கயிலை மலையை எடுத்த இராவணனைச் சிறிதே விரலூன்றி அடர்த்தவனும், பகைவர்தம் முப் புரங்களை எய்தழித்தவனுமாகிய சிவபிரான், நம்மை ஆட்கொண்டருள, நல்லம் என்னும் நகரில் எழுந்தருளியுள்ளான்.

கு-ரை : இராவணனை விரலால் ஊன்றித் திரிபுரம் எரித்தவர் இவர் என்கின்றது. எண்ணாது - பின்வருகின்ற தீங்கை முன் ஆராயாது. இறையே - சிறிது. நண்ணார் - பகைவர்.

9. பொ-ரை : பாம்பணையில் துயிலும் திருமாலும், தண்ணிய, தாமரை மலர்மேல் எழுந்தருளியுள்ள நான்முகனும், திருமகள்

Koviloor Digital Library

ஆகத் தவளோடு மமர்ந்தங் கழகாரும்
நாகம் மரையார்த்தா னல்ல நகரானே. 9

924. குறியில் சமணோடு குண்டர் வண்டேரர்
அறிவில் லுரைகேட்டங் கவமே கழியாதே
பொறிகொள் ளரவார்த்தான் பொல்லா வினைதீர்க்கும்
நறைகொள் பொழில்சூழ்ந்த நல்ல நகரானே. 10

925. நலமார் மறையோர்வாழ் நல்ல நகர்மேய
கொலைசேர் மழுவானைக் கொச்சை யமர்ந்தோங்கு
தலமார் தமிழ்ஞான சம்பந் தன்சொன்ன
கலைக ளிவைவல்லார் கவலை கழிவாரே. 11

திருச்சிற்றம்பலம்

கலைமகளிரோடு போகம் பொருந்தி வாழ, தானும் மலை மகளோடு கூடிப் போகியாய் இருந்து அருள் செய்த, அழகு பொருந்திய பாம்பை இடையில் அரைநாணாகக் கட்டிக் கொண்டிருப்பவன் ஆகிய சிவ பிரான், நம்மை ஆள நல்லம் என்னும் நகரிடை எழுந்தருளியுள்ளான்.

கு-ரை : நாகத்தணையான் - திருமால். திருமாலை இச்சொல் லால் குறித்தது, அணையிருந்தும் அணையிலேயே அருகில் அலர் மகள் இருந்தும், மாலுக்குப் போகம் கூடவேண்டுமாயின் இறைவன் போகியாய் இருந்தால் அல்லது பயனில்லை என்பதைக் காட்ட. மாமலரான் என்பதும் அங்ஙனமே.

10. பொ-ரை : குறிக்கோள் இல்லாத சமணர்களும் புத்தரும் கூறும் அறிவற்ற சொற்களைக் கேட்டு நாள்களைப் பயனற்றனவாய்ப் போக்காதீர், புள்ளிகளோடு கூடிய பாம்பினை இடையிற் கட்டிய பரமன், நம் பொல்லா வினைகளைத் தீர்க்கும் நிலையில் தேன் நிறைந்த பொழில்கள் சூழ்ந்த நல்லம் என்னும் நகரிடை எழுந்தருளியுள்ளான்.

கு-ரை : இது பொல்லா வினையைப் போக்குவார் இவர் என் கின்றது. குறி இல் சமண் - குறிக்கோளற்ற சமணர். குண்டர் - அறிவிலி கள். தேரர் - புத்தர். அவமே - வீணாக, பொறி - படப்பொறி. நறை - தேன்.

11. பொ-ரை : நன்மைகள் நிறைந்த வேதங்களை ஓதும் அந்த ணர்கள் வாழும் நல்லம் நகரில் எழுந்தருளிய, கொல்லும் தொழில்

Koviloor Digital Library

வல்ல மழுவைக் கையில் ஏந்திய சிவபிரானை, கொச்சை வயம் என்னும் புகழுடைய தலத்தில் வாழ்ந்த தமிழ் ஞானசம்பந்தன், போற்றிப் பாடிய கலை நலம் வாய்ந்த இத்திருப்பதிகத்தை ஓத வல்லவர், கவலைகள் நீங்கப் பெறுவர்.

கு-ரை : நல்ல நகரானை ஞானசம்பந்தன் சொன்ன கலைகளாகிய இவைகளை வல்லவர்கள் கவலை கழிவார் என்கின்றது. கொச்சை - சீகாழி. இப்பதிகத்தைக் கலைகள் எனச் சிறப்பித்தமை காண்க.

திருஞானசம்பந்தர் புராணம்

நிலவு மாளிகைத் திருநல்லம் நீடுமா மணிய
இலகு சேவடி இறைஞ்சிஇன் தமிழ்கொடு துதித்துப்
பலவும் ஈசர்தம் திருப்பதி பணிந்துசெல் பவர்தாம்
அலைபு னல்திரு வழுந்தூர்மா டக்கோயில் அடைந்தார்.

- சேக்கிழார்.

நால்வர் நான்மணிமாலை

இடுகாட்டுண் மாத ரெலும்பிற் புரண்மால்
சுடுகாட்டு ளாடுவாற் சுட்டி - னொடுகாட்டுஞ்
சம்பந்தா வென்புநின்பால் தந்தாக்கிக் கொண்டிலனென்
கும்பந்தா மென்னுமுலைக் கொம்பு.

- சிவப்பிரகாச சுவாமிகள்.

Koviloor Digital Library

86. திருநல்லூர்

பதிக வரலாறு:

திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருப்பாலைத் துறையை வணங்கிக்கொண்டு திருநல்லூரை யடைந்தார்கள். அங்கிருந்த அந்தணர்கள் மங்கள வாத்தியங்களுடன் எதிர் கொண்டு அழைத்தனர். பிள்ளையார் சிவிகையில் ஆரோ கணித்த வண்ணமே சென்றார். கோயிலை அணுகியதும் சிவிகையினின்றும் கீழிறங்கி, அந்தணர் கூட்டம் முன்செல்ல, அடியார் கூட்டம் இரு மருங்கும் வர, திருக்கோயிலையடைந் தார். கோபுரத்தைக்கண்டு வணங்கினார். கோயிலை வலம் வந் தார். அப்போது ஆனந்த பாஷ்பம் அருவிபோற்பொழிய இறை வனைத் தொழுது பரவு சொற்பதிகமாகிய ''கொட்டும்பறை'' என்னும் இதனை அருளிச் செய்தார்.

பண்: குறிஞ்சி

பதிக எண்: 86

திருச்சிற்றம்பலம்

926. கொட்டும் பறைசீராற் குழும வனலேந்தி
நட்டம் பயின்றாடு நல்லூர்ப் பெருமானை
முட்டின் றிருபோது முனியா தெழுந்தன்பு
பட்ட மனத்தார்க ளறியார் பாவமே. 1

1. பொ-ரை : பறை கொட்டும் சீருக்கு ஏற்பப் பூதகணங்கள் முதலியன சூழக் கையின்கண் அனலேந்தி விருப்போடு நடனம் ஆடும் நல்லூர்ப் பெருமானைக் காலை மாலை இருபொழுதும் தவறாமல் வெறுப்பின்றி எழுச்சியோடு வணங்கி அன்பு பூண்ட மனத்தார்களைப் பாவம் அணுகாது.

கு-ரை : பறை கொட்டுஞ் சீருக்கு ஏற்ப அனலேந்தியாடும் நல் லூர்ப்பெருமானை, காலை மாலை யிருவேளைகளிலும் அன்பு செய்யு மனத்தவர்கள் பாவமறியார் என்கின்றது. சீரால் - சதிக்கு ஏற்ப சீரால் ஆடும் எனக் கூட்டுக. முட்டின்று - இடையீடு இல்லாமல். அன்புபட்ட- அன்பொடு பொருந்திய.

Koviloor Digital Library

927. ஏறி லெருதேறு மெழிலா யிழையோடும்
வேறும் முடனுமாம் விகிர்த ரவரென்ன
நாறும் மலர்ப்பொய்கை நல்லூர்ப் பெருமானைக்
கூறும் மடியார்கட் கடையா குற்றமே. 2

928. சூடு மிளந்திங்கட் சுடர்பொற் சடைதாழ
ஓடுண் கலனாக வூரு ரிடுபிச்சை
நாடுந் நெறியானை நல்லூர்ப் பெருமானைப்
பாடும் மடியார்கட் கடையா பாவமே. 3

2. பொ-ரை : ஊர்தியாக எருது ஒன்றிலேயே ஏறுபவனும், அழகிய உமையம்மையோடு ஒன்றாகவும் வேறாகவும் விளங்கும் தன்மையை உடையவனுமாகிய சிவபெருமான், அன்பர்கள் எண்ணுமாறு மணங்கமழும் மலர்ப் பொய்கை சூழ்ந்த நல்லூரில் விளங்குகின்றான். அப்பெருமான் புகழைக் கூறும் அடியவர்களைக் குற்றங்கள் அடையா.

கு-ரை : அம்மையொடு உடனாயும் வேறாயும் இருக்கும் பெருமானாகிய, நல்லூர் இறைவனைத் தோத்திரிப்பார்க்குக் குற்றம் அடையா என்கின்றது.

ஏறில் எருது ஏறும் விகிர்தர் எனக் கூட்டிப் பொருள்கொள்க. எருதன்றி வேறொன்றிலும் அவர்க்கு விருப்பில்லை என்றவாறு. எழில் - அழகு. வேறாதல் - அம்மையை இடப்பாகத்துக் கொண்டிருத்தல். உடனாதல் - தன்மேனியில் ஒருபங்காய்க் கொண்டு அர்த்த நாரீச்சுரராக இருத்தல். இதுவும் உருவில் வேறுபட்டுத் தோன்றுதலின் சத்தியைத் தன்னுளடக்கியிருக்கும் நிலை கூறிற்றுமாம்.

3. பொ-ரை : இளம்பிறை, முடியிற்சூடி, ஒளி விடுகின்ற பொன் போன்ற சடைகள் தாழ, தலையோட்டையே உண்கலனாகக் கொண்டு, ஒவ்வோர் ஊரிலும் மகளிர் இடும் பிச்சையை நாடிச் செல்லும் அறநெறியாளனாகிய நல்லூர்ப் பெருமானைப் பாடும் அடியவர்களைப் பாவங்கள் அடையா.

கு-ரை : ஊரிடு பிச்சையை நாடும் முறையையுடைய நல்லூர்ப் பெருமானைப் பாடுகின்ற அடியவர்களைப் பாவம் அடையா என்கின்றது. சுடர் பொன் சடை - ஒளிவிடுகின்ற பொன் போலும் திருச்சடை.

Koviloor Digital Library

929. நீத்த நெறியானை நீங்காத் தவத்தானை
நாத்த நெறியானை நல்லூர்ப் பெருமானைக்
காத்த நெறியானைக் கைகூப் பித்தொழு
தேத்து மடியார்கட் கில்லை யிடர்தானே. 4

930. ஆகத் துமைகேள்வ னரவச் சடைதாழ
நாகம் மசைத்தானை நல்லூர்ப் பெருமானைத்
தாகம் புகுந்தண்மித் தாள்கள் தொழுந்தொண்டர்
போக மனத்தராய்ப் புகழத் திரிவாரே. 5

4. பொ-ரை : உலகியல் நெறி முறைகளைத் தான் பின்பற்றாது நீத்தவனும், நீங்காத தவத்தை உடையவனும், கட்டுப்பாடுகளுடைய நெறிகளை வகுத்து அளித்தவனும், அந்நெறி நிற்பாரைக் காத்தருள் பவனும் ஆகிய நல்லூர்ப் பெருமானைக் கைகுவித்துத் தொழுதேத்தும் அடியவர்கட்கு இடரில்லை.

கு-ரை : இவனைக் கைதொழுதேத்துவார்கட்கு இடர் இல்லை என்கின்றது.

நீத்த நெறியானை - விடுபட்ட நெறிகளையுடையவனை. நெறி என்பன யாவும் மலமாயாபந்தங்களாற் கட்டப் பெற்ற எம் போலியர்க்கே ஆதலின், அவையற்ற இறைவன், விடுபட்ட ஆசார சீலங் களை உடையவனாயினன். நாத்த நெறியானை என்பதில் ஞாத்தநெறி நாத்த நெறியாயிற்று. ஞாத்த - கட்டப்பட்ட; எமக்கு ஒழுங்குகளைக் கட்டிக் கொடுத்தவனை என்பது பொருள்.

5. பொ-ரை : தனது திருமேனியில், கூறாகக் கொண்டுள்ள உமையம்மையின் கணவனும் பாம்பணிந்த சடைகள் தாழ்ந்து தொங்க, இடையில் பாம்பைக் கச்சாகக் கட்டியவனும் ஆகிய நல்லூர்ப் பெரு மானை, வேட்கை மிக்கவராய் அணுகி அவன் திருவடிகளைத் தொழும் தொண்டர்கள் இன்பம் பொருந்திய மனத்தவராய்ப் பலரும் புகழ உல கில் வாழ்வர்.

கு-ரை : சிவனைச் சேரவேண்டும் என்ற தாகம் எடுத்து அணு குந் தொண்டர்கள் போகம் நிறைந்த மனத்தராக உலகம் புகழத் திரிவார் கள் என்கின்றது. ஆகம் - மேனி. தாகம் புகுந்து - வேட்கைமிக்கு. அண்மி - அணுகி.

Koviloor Digital Library

931. கொல்லுங் களியானை யுரிபோர்த் துமையஞ்ச
நல்ல நெறியானை நல்லூர்ப் பெருமானைச்
செல்லு நெறியானைச் சேர்ந்தா ரிடர்தீரச்
சொல்லு மடியார்க ளறியார் துக்கமே. 6

932. எங்கள் பெருமானை யிமையோர் தொழுதேத்தும்
நங்கள் பெருமானை நல்லூர் பிரிவில்லாத்
தங்கை தலைக்கேற்றி யாளென் றடிநீழல்
தங்கு மனத்தார்கள் தடுமாற் றறுப்பாரே. 7

933. காம னெழில்வாட்டிக் கடல்சூ ழிலங்கைக்கோன்
நாம மிறுத்தானை நல்லூர்ப் பெருமானை

6. பொ-ரை : தன்னைக் கொல்ல வந்த மதம் பொருந்திய யானையை, உமையம்மை அஞ்சுமாறு கொன்று, அதன் தோலைப் போர்த்த நல்ல நெறியாளனாய், நல்லூர்ப் பெருமானாய், எல்லோரும் அடையத்தக்க முத்திநெறியாளனாய் விளங்கும் சிவபிரானை அடைந்து, தங்களது அரிய துன்பங்கள் தீருமாறு புகழ்ந்து போற்றும் அடியவர்கள், துக்கம் அறியார்.

கு-ரை : மக்களடையும் நெறியாகவுள்ள நல்லூர்ப் பெருமானைச் சொல்லும் அடியார்கள் துக்கம் அறியார் என்கின்றது. உரி - தோல். செல்லுநெறி - அடையத்தகும் நெறியாகிய முத்தி. சேர்ந்தார் - தியானித்தவர்கள்.

7. பொ-ரை : எங்கள் தலைவனும், தேவர்களால் தொழுது போற்றப்படும் நம் பெருமானும், நல்லூரில் பிரிவின்றி எழுந்தருளி யிருக்கும் தலைவனுமாய இறைவனை அடைந்து, தம் கைகளை உச்சி மேல் குவித்து, நாங்கள் உனக்கு அடிமை என்று கூறி, அவனது திருவடி நீழலில் ஒன்றி வாழும் மனத்தவர்கள் தடுமாற்றம் இலராவர்.

கு-ரை : சிரமேற் கைகுவித்து, திருமுன்நின்று 'அடியேன்மீளா ஆளாவேன்' என்று திருவடி நீழலில் தங்கும் மனத்தார்கள் தடுமாற்றம் அறுப்பார்கள் என்கின்றது.

8. பொ-ரை : மன்மதனது உருவ அழகை அழித்துக் கடல் சூழ்ந்த இலங்கை மன்னனாகிய இராவணனது புகழைக் கெடுத்து, விளங்கும் நல்லூரில் எழுந்தருளிய பெருமானை, பாதுகாப்புக் கொண்ட மனத்

Koviloor Digital Library

ஏம மனத்தாரா யிகழா தெழுந்தொண்டர்
தீப மனத்தார்க ளறியார் தீயவே. 8

934. வண்ண மலரானும் வைய மளந்தானும்
நண்ண லரியானை நல்லூர்ப் பெருமானைத்
தண்ண மலர்தூவித் தாள்க டொழுதேத்த
எண்ணு மடியார்கட் கில்லை யிடுக்கணே. 9

935. பிச்சக் குடைநீழற் சமணர் சாக்கியர்
நிச்ச மலர்தூற்ற நின்ற பெருமானை
நச்சு மிடற்றானை நல்லூர்ப் பெருமானை
எச்சு மடியார்கட் கில்லை யிடர்தானே. 10

தவர்களாய் இகழாது அவனைக் காண எழும் தொண்டர்கள், தீபம் போன்ற ஞானஒளி நிலைத்த மனம் உடையவராவர். தீயனவற்றை அவர்கள் அறியார்.

கு-ரை : இராவணனது புகழைக் கெடுத்த பெருமானாகிய நல்லூர்ப் பெருமானைப் புகழுந் தொண்டர், ஒளிமனத்தர்களாய் தீயன அறியார் என்கின்றது. காமன் - மன்மதன். எழில் - எழுச்சி; தருக்கு. நாமம் - புகழ். ஏம மனத்தார் - பாதுகாப்புற்ற மனத்தவர்கள். தீப மனத்தார் - எழுதிய தீபம்போல நிலைத்த மனத்தடியார்கள்.

9. பொ-ரை : செந்தாமரையில் விளங்கும் பிரமனும், உலகை அளந்த திருமாலும், நண்ணுதற்கு அரியவனாய் விளங்கும் நல்லூர்ப் பெருமானை, குளிர்ந்த மலர்களைத்தூவி, அவன் திருவடிகளைத் தொழுது வணங்க எண்ணும் அடியவர்களுக்கு, இடுக்கண் இல்லை.

கு-ரை : அயனும் மாலும் அணுகவும் அரிய பெருமான் திருவடியை மலர்தூவி வணங்கும் அடியார்கட்கு என்றும் துன்பமில்லை என்கின்றது. வண்ணமலரான் - செந்தாமரையில் உள்ள பிரமன். வையம் அளந்தான் - உலகளந்த பெருமாள். தொழுது ஏத்தவும் வேண்டாம் - எண்ணினாற்போதும் இடுக்கண் இல்லை என்று எளிமை கூறியவாறு.

10. பொ-ரை : மயிற்பீலியாலாகிய குடை நீழலில் திரியும் சமணர்களும், புத்தர்களும் நாள்தோறும் பழி தூற்றுமாறு நின்ற பெருமானாய், நஞ்சு பொருந்திய கண்டத்தை உடைய நல்லூர்ப்

Koviloor Digital Library

936. தண்ணம் புனற்காழி ஞான சம்பந்தன்
நண்ணும் புனல்வேலி நல்லூர்ப் பெருமானை
வண்ணம் புனைமாலை வைக லேத்துவார்
விண்ணுந் நிலனுமாய் விளங்கும் புகழாரே. 11

திருச்சிற்றம்பலம்

பெருமானாய் விளங்கும் சிவபிரானை, ஏத்தும் அடியவர்களுக்கு இடரில்லை.

கு-ரை : அமணரும் புத்தரும் அலர் தூற்ற நின்ற பெருமானைப் புகழும் அடியார்கட்கு இடர் இல்லை என்கின்றது. பிச்சக்குடை - மயிற் பீலியாலாகிய குடை. நிச்சம் - நாடோறும். அலர் - பழிச் சொல். நச்சு மிடற்றானை - விஷம்பொருந்திய கழுத்தையுடையவனை. எச்சும் - ஏச்சும். ஏத்தும் என்பதன் மரூஉ.

11. பொ-ரை : குளிர்ந்த நீரால் சூழப்பட்ட சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன், பொருந்திய நீரை வேலியாக உடைய நல்லூரில் விளங்கும் பெருமான் இயல்புகளைப் புனைந்து பாடிய இத்திருப்பதிகத்தை நாள்தோறும் சொல்லித் துதிப்பவர் விண்ணும் மண்ணும் விளங்கும் புகழாளர் ஆவர்.

கு-ரை : ஞானசம்பந்தன், நல்லூர்ப்பெருமானைச் சொன்ன புகழ்மாலையை நாளும் ஏத்துவார் விண்ணும் நிலனுமாக விளங்கும் புகழார் என்கின்றது. தண்ணம்புனல்: அம் சாரியை. புனல் வேலி - நீரை வேலியாகவுடைய. வண்ணம்புனை மாலை - இறையியல்புகளை எடுத்துச் சேர்த்துச் சொன்ன மாலை. வைகல் - நாடோறும்.

திருஞானசம்பந்தர் புராணம்

வெள்ளிமால் வரையைநேர் விரிசுடர்க் கோயிலைப்
பிள்ளையார் வலம்வரும் பொழுதினிற் பெருகுநீர்
வெள்ளஆ னந்தமெய் பொழியமேல் ஏறிநீர்
துள்ளுவார் சடையரைத் தொழுதுமுன் பரவுவார்.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

87. திருவடுகூர்

பதிக வரலாறு:

சண்பைவேந்தர் திருப்பாதிரிப்புலியூரை வணங்கிப் பதிகம்பாடித் திருவடுகூரையடைந்தார். இறைவனை வணங்கி, 'சுடுகூர் எரிமாலை' என்னும் இப்பதிகத்தை அருளிச்செய்தார்.

பண்: குறிஞ்சி

பதிக எண்: 87

திருச்சிற்றம்பலம்

937. சுடுகூ ரெரிமாலை யணிவர் சுடர்வேலர்
கொடுகூர் மழுவாளொன் றுடையார் விடையூர்வர்
கடுகூர் பசிகாமங் கவலை பிணியில்லார்
வடுகூர் புனல்சூழ்ந்த வடுகூ ரடிகளே. 1

938. பாலுந் நறுநெய்யுந் தயிரும் பயின்றாடி
ஏலுஞ் சுடுநீறு மென்பு மொளிமல்கக்
கோலம் பொழிற்சோலைக் கூடி மடவன்னம்
ஆலும் வடுகூரி லாடும் மடிகளே. 2

1. பொ-ரை : சுடும் தன்மை மிக்க தீப மாலையை அணிபவரும், ஒளி பொருந்திய சூலத்தினரும், கொடிய மழுவாயுதம் ஒன்றைக் கையில் உடையவரும், விடையை ஊர்ந்து வருபவரும், நீர் வளம் மிக்க வடுகூர் இறைவர் ஆவார். மிக்க பசி காமம் கவலை பிணி ஆகியன இல்லாதவரும் ஆவர்.

கு-ரை : தீயணிவர், சுடர்வேலர். மழுவுடையர், பசி காமம் கவலை பிணி முதலியன இல்லாதவர் வடுகூரடிகள் என்கின்றது. கூர் எரிமாலை - மிக்க தீவரிசையை. வேல் - சூலம். கொடுகுஊர் - கொடுமை மிக்க ஊர். கடுகுஊர் - விரைந்து ஊரும்.

2. பொ-ரை : பால், நறுமணம் மிக்க நெய், தயிர் ஆகியவற்றை விரும்பி ஆடி, பொருந்துவதான வெண்ணீறு, என்புமாலை ஆகிய வற்றை ஒளி மல்க அணிந்து அழகிய பொழில்களிலும் சோலைகளிலும்

Koviloor Digital Library

939. சூடு மிளந்திங்கட் சுடர்பொற் சடைதன்மேல்
ஓடுங் களியானை யுரிபோர்த் துமையஞ்ச
ஏடு மலர்மோந்தங் கெழிலார் வரிவண்டு
பாடும் வடுகூரி லாடும் மடிகளே. 3

940. துவரும் புரிசையுந் துதைந்த மணிமாடம்
கவர வெரியோட்டிக் கடிய மதிலெய்தார்
கவரு மணிகொல்லைக் கடிய முலைநல்லார்
பவரும் வடுகூரி லாடும் மடிகளே. 4

வாழும் அன்னங்கள் கூடி ஆரவாரிக்கும் வடுகூரில் நம் அடிகளாகிய இறைவர் மகிழ்வோடு ஆடுகின்றார்.

கு-ரை : பால்,நெய், தயிர், இவற்றை ஆடி, நீறும் எலும்பும் ஒளி நிரம்பச்சூடி, நடஞ்செய்வர் இவர் என்கின்றது. பயின்று - பலகாலும் விரும்பி. ஏலும் - பொருந்தும். கோலம் - அழகு. ஆலும் - ஒலிக்கும்.

3. பொ-ரை : ஒளி பொருந்திய பொன் போன்ற சடைமுடிமேல் இளந்திங்களைச் சூடி, மதம் கொண்டு தன்பால் ஓடி வந்த யானையை, உமையம்மை அஞ்சக் கொன்று, அதன் தோலைப் போர்த்து, அழகு பொருந்திய வரி வண்டுகள் இதழ்களோடு கூடிய மலர்களை முகர்ந்து தேனுண்டு பாடும் வடுகூரில், அடிகள் நடனம் ஆடுவர்.

கு-ரை : சடையின்மேல் இளம்பிறையைச் சூடுவர்;உமையாள் அஞ்ச யானையை உரித்துப் போர்த்துக் கொண்டு ஆடுவர் வடுகூர்நாதர் என்கின்றது. மலர் ஏடு - பூவிதழ். மோந்து - முகர்ந்து, எழிலார் - அழகுமிக்க.

4. பொ-ரை : செந்நிறமும், மதிலும் செறிந்த அழகிய மாடங்களை அழிக்குமாறு தீயைச் செலுத்தி அம்மதில்கள் அழியுமாறு அம்பு எய்த சிவபெருமானார், காவல் பொருந்திய முலையாராகிய பெண் கொடிகள் முல்லைநிலத்தில் கைகளால் இரத்தினங்களைப் பொறுக்கி எடுக்கும் வடுகூரில் நடம்பயிலும் அடிகளாவர்.

கு-ரை : திரிபுரம் எரியச்செய்தார் வடுகூரிலாடும் அடிகள் என்கின்றது. துவரும் புரிசையும் துதைந்த மணிமாடம் - காவியூட்டி மதில்கள் செறிந்த அழகிய மாடங்கள். ஓட்டி - பரப்பி. கடிய மதில் -

Koviloor Digital Library

941. துணியா ருடையாடை துன்னி யரைதன்மேல்
தணியா வழனாகந் தரியா வகைவைத்தார்
பணியா ரடியார்கள் பலரும் பயின்றேத்த
அணியார் வடுகூரி லாடும் மடிகளே. 5

942. தளருங் கொடியன்னா டன்னோ டுடனாகிக்
கிளரு மரவார்த்துக் கிளரு முடிமேலோர்
வளரும் பிறைசூடி வரிவண் டிசைபாட
ஒளிரும் வடுகூரி லாடும் மடிகளே. 6

காவலோடுகூடிய முப்புரங்கள். மணிகவரும் கொல்லை கடிய முலை நல்லார் பவரும் - இரத்தினங்களைக் கவரும் முல்லைநிலத்தில் உள்ள காவல் பொருந்திய முலையோடு கூடிய பெண்களாகிய கொடிகளோடு கூடிய.

5. பொ-ரை : துணிக்கப் பெற்றதாகிய கோவண ஆடையை இடையிலே தரித்து அதன்மேல் தீப்போன்ற விட வெம்மை தணியாத நாகத்தை அழகுறத் தரித்தவராகிய அடிகள் அடியவர் பலரும் பணிந்து பரவி வாழ்த்த அழகிய வடுகூரில் ஆடியருள்கின்றார்.

கு-ரை : கோவணமுடுத்து அதன்மேல் அழகாக நாகம் வைத்தவர், அடியார்கள் பலரும் வணங்கும் வடுகூரில் ஆடும் அடிகள் என்கின்றது. துணி - கிழிக்கப்பெற்ற கோவணம். துன்னி - பொருந்தி. தணியா அழல் நாகம் - தணியாத கோபத்தோடு கூடிய பாம்பு. பணி ஆர் அடியார்கள் - பணிதலைப் பொருந்திய அடியார்கள்.

6. பொ-ரை : சுமை பொறுக்காது தள்ளாடும் கொடி போன்றவளாகிய உமையம்மையோடு கூடி, விளங்கும் பாம்பினை இடையிலே கட்டிக் கொண்டு விளக்கம் பொருந்திய முடிமேல் வளரும் பிறைமதி ஒன்றைச் சூடி, வரிகள் பொருந்திய வண்டுகள் இசைபாட பலராலும் நன்கறியப்பட்ட வடுகூரில் அடிகளாகிய பெருமான் ஆடியருள்கின்றார்.

கு-ரை : உமாதேவியோடு உடனாகி, அரவு பிறை இவற்றை அணிந்து வடுகூர் அடிகள் ஆடுவர் என்கின்றது. தளரும் கொடி அன்னாள் - சுமை பொறுக்காது தள்ளாடும் கொடியை ஒத்த உமாதேவி. அரவு - பாம்பு. கிளரும் - விளங்கும். ஒளிரும் - பிரகாசிக்கும்.

Koviloor Digital Library

943. நெடியர் சிறிதாய நிரம்பா மதிசூடும்
முடியர் விடையூர்வர் கொடியர் மொழிகொள்ளார்
கடிய தொழிற்காலன் மடிய வுதைகொண்ட
அடியர் வடுகூரி லாடும் மடிகளே. 7

944. பிறையு நெடுநீரும் பிரியா முடியினார்
மறையும் பலபாடி மயானத் துறைவாரும்
பறையு மதிர்குழலும் போலப் பலவண்டாங்
கறையும் வடுகூரி லாடும் மடிகளே. 8

945. சந்தம் மலர்வேய்ந்த சடையின் னிடைவிம்மு
கந்தம் மிகுதிங்கட் சிந்து கதிர்மாலை

7. பொ-ரை : வடுகூரில் ஆடும் அடிகள் பேருருவம் கொள்பவர். சிறிதான கலைநிரம்பாத பிறை மதியைச் சூடும் முடியை உடையவர். விடையை ஊர்ந்து வருபவர். கொடியவர் மொழிகளை ஏற்றுக் கொள்ளாதவர். கொல்லும் தொழிலைச் செய்யும் காலன் மடியுமாறு உதைத் தருளிய திருவடியினர்.

கு-ரை : நெடியர், சிறுமதிசூடும் முடியர், விடையூர்வர், கொடியர் மொழிகொள்ளாதவர், காலனையுதைத்த அடியவர் வடுகூரில் ஆடும் அடிகள் என்கின்றது. நிரம்பா மதி - இளம்பிறை. கடிய தொழில் - கொடுந்தொழில்.

8.பொ-ரை : அதிர்கின்ற பறையும் வேய்ங்குழலும் போலப் பல வண்டுகள் ஒலிக்கும் சோலைகளை உடைய வடுகூரில் ஆடும் அடிகள், இளம் பிறை, பெருகிய கங்கை நீர் ஆகியன பிரியாத திருமுடியை உடையவர். வேதங்களில் உள்ள சந்தங்கள் பலவற்றையும் பாடிக் கொண்டு இடுகாட்டில் உறைபவர்.

கு-ரை : கங்கையும் பிறையும் பிரியா முடியாரும், வேதம் பல பாடி மயானத்துறைவாரும் வடுகூரில் ஆடும் அடிகள் என்கின்றது. நெடுநீர் - கங்கை. பறையும் குழலும் போலப் பல வண்டு ஆங்கு அறையும் எனப் பிரிக்க.

9. பொ-ரை : அழகு தண்மை ஆகியவற்றை உடைய வடுகூரில் ஆடும் அடிகள் அழகிய மலர்கள் வேய்ந்த சடையின்கண் பெருகி எழும் மணம் மிகும் பிறை மதி வெளியிடும் கிரணங்களை உடைய

Koviloor Digital Library

வந்து நயந்தெம்மை நன்று மருள்செய்வார்
அந்தண் வடுகூரி லாடும் மடிகளே. 9

946. திருமா லடிவீழத் திசைநான் முகனாய
பெருமா னுணர்கில்லாப்பெருமா னெடுமுடிசேர்
செருமால் விடையூருஞ் செம்மான் றிசைவில்லா
அருமா வடுகூரி லாடும் மடிகளே. 10

947. படிநோன் பவையாவர் பழியில் புகழான
கடிநா ணிகழ் சோலை கமழும் வடுகூரைப்
படியா னசிந்தை மொழியார் சம்பந்தன்
அடிஞா னம்வல்லா ரடிசேர் வார்களே. 11

திருச்சிற்றம்பலம்

மாலைநேரத்தில் வந்து விரும்பி எமக்கு நன்றாக அருள் செய்வார்.

கு-ரை : மலர் புனைந்த சடைக்காட்டில் இருப்பதால் மணம் பெற்ற மதி சிந்துகின்ற கதிர்களோடு வந்து நயந்து எமக்கு நன்மையை அருளுவர் வடுகூரிலழகர் என்கின்றது. சந்தம் - அழகு. கதிர்மாலை - கிரணவரிசை. நயந்து - இனியன பலகூறி, நன்றும் அருள்செய்வார் - நன்றாக அருளுவர். நன்றும் மருள் செய்வார் - நன்றாக மயக்குவர் என்றுமாம்.

10. பொ-ரை : எட்டுத் திசைகளிலும் ஒளி பரவுமாறு அரிய பெரிய வடுகூரில் நடனம் ஆடும் அடிகள், திருமால் தம் அடியை விரும்பித் தோண்டிச் செல்லவும், திசைக்கு ஒரு முகமாக நான்கு திருமுகங்களைக் கொண்ட பிரமனாகிய தலைவனும் அறிய முடியாத பெரிய முடியினை உடைய இறைவர், போர் செய்யத் தக்க விடைமீது எழுந்தருளிவரும் சிவந்த நிறத்தினர்.

கு-ரை : அயனும் மாலும் அறியவொண்ணாப் பெருமான் மாலாகிய இடபமூரும் செம்மான் வடுகூர் அடிகள் என்கின்றது. செரு மால் - பொருகின்ற பெரிய; திருமாலாகிய என்றுமாம். திசைவில்லா அரு மா வடுகூரில் - திசைகளில் எல்லாம் ஒளியைச் செய்கின்ற அரிய பெரிய வடுகூரில்.

11.பொ-ரை : இவ்வுலகில் கூறப்படும் நோன்புகள் பலவற்றுக்கும் உரியவராய் விளங்கும் சிவபிரான் எழுந்தருளியதும்,

Koviloor Digital Library

குற்றமற்ற புகழோடு கூடிய மணம் கமழும் சோலைகளால் மணம் பெறுவதுமான வடுகூரில் மேவிய இறைவன் திருவடிகளில் படிந்த மனத்தோடு ஞானசம்பந்தன் பாடிய இப்பதிகத் தமிழை ஓதி, அடிசேர் ஞானம் பெற்றார், திருவடிப்பேறு பெறுவர்.

கு-ரை : இவ்வுலகத்துள்ள நோன்பெல்லாம் ஆய இறைவன் எழுந்தருளியுள்ள வடுகூரைப் பாடிய திருவடிஞானத்தால் வந்த இத் திருப்பாடல்களை வல்லார், திருவடிசேர்முத்தியை எய்துவார்கள். படி- பூமி. படியான சிந்தை - படிதலான மனம். அடி ஞானம் - சிவஞானம்; அடிசேர்வார் - அடிசேரும் முத்தியாகிய சாயுச்சிய முத்தியை அடை வார்கள்.

திருஞானசம்பந்தர் புராணம்

கன்னி மாவனங் காப்பென இருந்தவர்
கழலிணை பணிந்தங்கு,
முன்ன மாமுடக் கான்முயற் கருள்செய்த
வண்ணமும் மொழிந்தேத்தி,
மன்னு வார்பொழில் திருவடு கூரினை
வந்தெய்தி வணங்கிப்போய்ப்,
பின்னு வார்சடை யார்திரு வக்கரை
பிள்ளையார் அணைவுற்றார்.

- சேக்கிழார்.

நால்வர் நான்மணிமாலை

தேனே றலர்சூடிச் சில்பலிக்கென் றூர்திரியும்
ஆனேறி யாண்டுப்பெற றான்கொனீ – தானேறும்
வெள்ளைமணி யென்று வினாவுவோம் வாங்கியவப்
பிள்ளையையாங் காணப் பெறின்.

- சிவப்பிரகாச சுவாமிகள்.

Koviloor Digital Library

88. திருஆப்பனூர்

பதிக வரலாறு:

திருப்பரங்குன்றை வணங்கியபின் திருஞானசம்பந்தப் பிள்ளையார் ஆப்பனூரை அணைந்து வணங்கி 'முற்றுஞ் சடை முடி' என்னும் இப்பதிகத்தை அருளிச் செய்தார்கள்.

பண்: குறிஞ்சி

பதிக எண்: 88

திருச்சிற்றம்பலம்

948. முற்றுஞ் சடைமுடிமேன் முதிரா விளம்பிறையன்
ஒற்றைப் படவரவ மதுகொண் டரைக்கணிந்தான்
செற்றமில் சீரானைத் திருவாப்ப னூரானைப்
பற்று மனமுடையார் வினைபற் றறுப்பாரே. 1

949. குரவங் கமழ்குழலாள் குடிகொண்டு நின்றுவிண்ணோர்
விரவுந் திருமேனி விளங்கும் வளையெயிற்றின்
அரவ மணிந்தானை யணியாப்ப னூரானைப்
பரவு மனமுடையார் வினைபற் றறுப்பாரே. 2

1. பொ-ரை : முடியைச் சூழ்ந்துள்ள சடையின்மேல் வளராத இளம் பிறையைச் சூடியவனும், ஒருதலைப் படத்தோடு கூடிய பாம்பை இடையில் கட்டியுள்ளவனும், வெறுத்தற்கியலாத புகழானும் ஆகிய திருஆப்பனூர் இறைவனைப் பற்றும் உள்ளமுடையோர் வினைத் தொடர்ச்சி நீங்கப் பெறுவர்.

கு-ரை : இப்பதிகம் ஆப்பனூரானைப் பணிவார், பரவுவார், புகழ்வார், வினைப்பற்றறுப்பார் என்கின்றது. 'முற்றும் சடை முதிரா இளம்பிறை' என்பதில் பொருள்முரண் உள்ளது. செற்றம் - கோபம்.

2. பொ-ரை : குராமலர் மணம் கமழும் கூந்தலையுடைய உமை யம்மை விளங்கும் திருமேனியோடு தேவர்கள் கூடி வணங்கத் திருஆப்பனூரில் விளங்கும் சிவபிரானைப் பரவும் மனம் உடையவர் வினைத் தொடர்ச்சி நீங்கப் பெறுவர்.

கு-ரை : குரவம் கமழ்குழலாள் - குராமலர் மணக்கும் கூந்தலை

Koviloor Digital Library

950. முருகு விரிகுழலார் மனங்கொ ளநங்கனைமுன்
பெரிது முனிந்துகந்தான் பெருமான் பெருங்காட்டின்
அரவ மணிந்தானை யணியாப்ப னூரானைப்
பரவு மனமுடையார் வினைபற் றறுப்பாரே. 3

951. பிணியும் பிறப்பறுப்பான் பெருமான் பெருங்காட்டில்
துணியி னுடைதாழச் சுடரேந்தி யாடுவான்
அணியும் புனலானை யணியாப்ப னூரானைப்
பணியு மனமுடையார் வினைபற் றறுப்பாரே. 4

952. தகர மணியருவித் தடமால் வரைசிலையா
நகர மொருமூன்று நலங்குன்ற வென்றுகந்தான்

யுடைய உமாதேவி. விரவுதல் - கலந்து பணியும். வளை எயிறு - வளைந்த விஷப்பல். பரவுதல் - தோத்திரித்தல்.

3. பொ-ரை : மணம் கமழும் கூந்தலை உடைய மகளிரால் நினைக்கப் பெறும் காமனை, முற்காலத்தில் பெரிதும் சினந்து, பின் அவனுக்கு வாழ்வு தந்த பெருமானும், பெரிய காட்டகத்தே வாழும் அரவத்தை அணிந்தவனும், அழகிய ஆப்பனூரில் எழுந்தருளியவனு மாகிய இறைவனைப் பரவும் மனம் உடையவர் வினைத் தொடர்ச்சி நீங்கப் பெறுவர்.

கு-ரை : முருகு விரி குழலாள் - மணம் வீசும் கூந்தலையுடைய பெண்கள். அநங்கன் - மன்மதன்.

4. பொ-ரை : உடலைப் பற்றிய நோய்களையும் உயிரைப் பற்றிய பிறவி நோயையும் அறுத்தருளும் பெருமானும், சுடுகாட்டகத்தே கோவண ஆடையோடு அழலேந்தி ஆடுபவனும், கங்கையை முடியில் அணிந்தவனும் ஆகிய அழகிய ஆப்பனூர் இறைவனைப் பணியும் மனம் உடையவர் வினைத் தொடர்ச்சி நீங்கப் பெறுவர்.

கு-ரை : பிணியும் பிறப்பும் அறுப்பான் என உம்மை விரிக்க. துணியின் உடை - கீண்ட கோவண உடை.

5. பொ-ரை : தகரம் எனப்படும் மணப் பொருளும் மணிகளும் கலந்து விழும் அருவிகளை உடைய மிகப் பெரிய மலையை, வில்லாக

Koviloor Digital Library

அகர முதலானை யணியாப்ப னூரானைப்
பகரு மனமுடையார் வினைபற் றறுப்பாரே. 5

953. ஓடுந் திரிபுரங்க ளுடனே யுலந்தவியக்
காட திடமாகக் கனல்கொண்டு நின்றிரவில்
ஆடுந் தொழிலானை யணியாப்ப னூரானைப்
பாடு மனமுடையார் வினைபற் றறுப்பாரே. 6

954. இயலும் விடையேறி யெரிகொண் மழுவீசிக்
கயலி னிணைக்கண்ணா ளொருபாற் கலந்தாட
இயலு மிசையானை யெழிலாப்ப னூரானைப்
பயிலு மனமுடையார் வினைபற் றறுப்பாரே. 7

வளைத்து, அசுரர்களின் நகரங்களாக விளங்கிய முப்புரங்களும் பொடி படச் செய்து மகிழ்ந்தவனும், எல்லா எழுத்துக்களிலும் கலந்து நிற்கும் அகரம் போல எப்பொருள்களிலும் கலந்து நிற்பவனும், அழகிய ஆப்ப னூரில் எழுந்தருளியிருப்பவனுமாகிய சிவபிரான் புகழைக் கூறும் மனம் உடையவர்கள் வினை மாசுகளினின்று நீங்கப் பெறுவர்.

கு-ரை : தகரம் அணியருவி - தகர மரத்தை அணிந்த அருவி என்றுமாம். நகரம் ஒரு மூன்று - முப்புரம். அகரமுதலானை என்பது 'அகரமுதல எழுத்தெல்லாம்' என்ற குறட்கருத்து.

6. பொ-ரை : பறந்து திரியும் முப்புரங்களையும் ஒரு நொடியில் அழித்து, பொடிபடச் செய்து, சுடுகாட்டைத் தனது இடமாகக் கொண்டு, கனல் ஏந்தி நின்று ,இரவில் திருநடனம் புரிவதைத் தொழிலாகக் கொண்டவனும், அழகிய ஆப்பனூரில் விளங்குபவனுமாகிய இறைவனைப் பாடும் மனம் உடையவர் வினைத் தொடர்ச்சி நீங்கப் பெறுவர்.

கு-ரை : உலந்து - வற்றி.

7. பொ-ரை : மனம் போல் இயங்கும் விடைமிசை ஏறி, எரிதலைக் கொண்ட மழுவைச் சுழற்றிக் கொண்டு, கயல் போன்ற இரு விழிகளைக் கொண்ட உமையம்மை திருமேனியின் ஒருபால் இணைந்து மகிழ, இசை பாடி மகிழ்பவனாய் அழகிய ஆப்பனூரில் எழுந்தருளியுள்ள இறைவனைப் பாடுவதைத் தம் இயல்பாகக் கொண்ட மனம் உடையவர், வினை மாசு தீர்வர்.

கு-ரை : இயலும் விடை - மனம்போலியங்கும் இடபம்.

Koviloor Digital Library

955. கருக்கு மணிமிடறன் கதநாகக் கச்சையினான்
உருக்கு மடியவரை யொளிவெண் பிறைசூடி
அரக்கன் றிறலழித்தா னணியாப்ப னூரானைப்
பருக்கு மனமுடையார் வினைபற் றறுப்பாரே. 8

956. கண்ணன் கடிக்கமல மலர்மே லினிதுறையும்
அண்ணற் களப்பரிதாய் நின்றங் கடியார்மேல்
எண்ணில் வினைகளைவா னெழிலாப்ப னூரானைப்
பண்ணின் னிசைபகர்வார் வினைபற் றறுப்பாரே. 9

957. செய்ய கலிங்கத்தார் சிறுதட் டுடையார்கள்
பொய்யர் புறங்கூறப் புரிந்த வடியாரை
ஐய மகற்றுவா னணியாப்ப னூரானைப்
பைய நினைந்தெழுவார் வினைபற் றறுப்பாரே. 10

8. பொ-ரை : கரிதான நீலமணி போன்ற கண்டத்தை உடைய வனும், சினம் பொருந்திய பாம்பைக் கச்சையாக அணிந்தவனும், அடி யவர்களை மனம் உருகச் செய்பவனும், ஒளிபொருந்திய வெண் பிறையைச் சூடியவனும், இராவணனின் வலிமையை அழித்தவனும் ஆகிய அழகிய ஆப்பனூரில் எழுந்தருளிய இறைவனை, சுவைக்கும் மனம் உடையவர் வினை மாசு நீங்கப் பெறுவர்.

கு-ரை : கருக்கும் மணி மிடறன் - மேலும் கருக்கும் நீலமணி போலும் கழுத்தினையுடையவன். கதநாகம் - சினத்தோடுகூடிய பாம்பு. அரக்கன் - இராவணன். திறல் - வலி. பருக்கும் - பருகும் என் பதன் விரித்தல் விகாரம். குடிக்கும் என்பது பொருள்.

9. பொ-ரை : திருமால், மணம் பொருந்திய தாமரை மலர் மேல் இனிதாய் உறையும் பிரமன் ஆகியோரால், அளத்தற்கரியவனாய் நின் றவனும், அடியவர் மேல் வரும் எண்ணற்ற வினைகள் பலவற்றையும் களைபவனும் ஆகிய அழகிய ஆப்பனூரில் விளங்கும் இறைவனைப் பண் பொருந்த இசை பாடிப் போற்றுவார் வினை மாசு நீங்கப் பெறுவர்.

கு-ரை : கடிக்கமலம் - மணம் உள்ள தாமரை. அண்ணல் என்றது பிரமனை.

10. பொ-ரை : சிவந்த காவி ஆடை உடுத்த புத்தர்களும், சிறு தடுக்கை ஆடையாக உடுத்துக் கொண்டு திரியும் சமணர்களும் பொய்

Koviloor Digital Library

958. அந்தண் புனல்வைகை யணியாப்ப னூர்மேய
சந்த மலர்க்கொன்றை சடைமே லுடையானை
நந்தி யடிபரவு நலஞான சம்பந்தன்
சந்த மிவைவல்லார் தடுமாற் றறுப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

பேசிப் புறம் பேச, தன்னை விரும்பிய அடியவர்களின் விபரீத ஞானத்தைப் போக்கி, மெய்யுணர்வு நல்கும் அழகிய ஆப்பனூரில் விளங்கும் இறைவனை மெல்ல உள்குவார்களின் வினை மாசுகள் நீங்கும்.

கு-ரை : செய்ய கலிங்கத்தார் - சிவந்த காவியாடையார். சிறு தட்டு - சிறு தடுக்கு. புரிந்த - விரும்பிய. ஐயம் அகற்றுவான் - சந்தேக ஞானத்தை விலக்குபவன்.

11. பொ-ரை : அழகிய குளிர்ந்த நீர் நிறைந்த வைகைக் கரையில் விளங்கும் அழகிய ஆப்பனூரில் எழுந்தருளிய அழகிய கொன்றை மலர் மாலையைச் சடைமேல் அணிந்துள்ள இறைவனை, சிவன் திருவடிகளையே பரவும் நல்ல ஞானசம்பந்தன் பாடிய சந்த இசை யோடு கூடிய இத்திருப்பதிகப் பாடல்களை ஓதவல்லவர் நிலையான மெய்யறிவு பெறுவார்கள்.

கு-ரை : நந்தி - சிவபெருமான். சந்தம் - சந்தத்தோடுகூடிய திருப்பாடல்.

திருஞானசம்பந்தர் புராணம்

ஆறணிந்தார் தமைவணங்கி அங்குப் போற்றி
அணி ஆப்ப னூரணைந்து பணிந்து பாடி
நீறணிந்த செல்வர்பதி பிறவுஞ் சேர்ந்து
நிலவுதிருப் பதிகங்கள் நிகழப் பாடிச்
சேறணிந்த வயற்பழனக் கழனி சூழ்ந்த
சிரபுரத்து வந்தருளுஞ் செல்வர் செங்கண்
ஏறணிந்த வெல்கொடியார் திருப்புத் தூரை
எய்தி இறைஞ் சிச்சிலநாள் இருந்தா ரன்றே.

– சேக்கிழார்.

Koviloor Digital Library

89. திருஎருக்கத்தம்புலியூர்

பதிக வரலாறு:

பொன்னம்பலந் தொழுது போந்த புகலிப்பிள்ளையார் திருமுன்பு சென்று, திருநீலகண்ட யாழ்ப்பாணர், 'அடியேன் பதி முதலியவற்றையும் வணங்கிப் போதல்வேண்டும்' என்று விண்ணப்பிக்க, பிள்ளையார் அங்ஙனமே தந்தையார் பரிசனங் கள், பாணர் மதங்கசூளாமணியார் இவர்களுடன் நிவாநதியின் கரைவழியே, மேற்றிசையிற்போய்த் திரு எருக்கத்தம்புலியூரை அடைந்தார்.

அப்போது பாணனார் இது 'அடியேன் பதி' என விண்ணப்பித்துக்கொள்ள, புகலிவேந்தர் பெரிதும் விருப்புற்று எழுந்தருளினார். திருக்கோயிலுக்குச் சென்று வழிபட்டுப் ''படையார் தரு'' என்னும் இப்பதிகத்தை அருளிச்செய்தார்.

பண்: குறிஞ்சி

பதிக எண்: 89

திருச்சிற்றம்பலம்

959. படையார் தருபூதப் பகடா ருரிபோர்வை
உடையா னுமையோடு முடனா யிடுகங்கைச்
சடையா னெருக்கத்தம் புலியூர்த் தகுகோயில்
விடையா னடியேத்த மேவா வினைதானே. 1

1. பொ-ரை : படைகளாக அமைந்த பூத கணங்களை உடையவனும், யானையின் தோலைப் போர்வையாகக் கொண்டவனும், உமையம்மையோடு உடனாய் விளங்குபவனும், வந்து பொருந்திய கங்கையை ஏற்ற சடையை உடையவனும் ஆகிய எருக்கத்தம்புலியூரில் விளங்கும் தகுதி வாய்ந்த கோயிலில் எழுந்தருளிய விடை ஏற்றை உடைய பெருமான் திருவடிகளை ஏத்துவாரை, வினைகள் வந்து சாரா.

கு-ரை : பகடு ஆர் உரி - யானையின் தோல். மேவா - தம் வலிமையைக்காட்டா.

Koviloor Digital Library

960. இலையார் தருசூலப் படையெம் பெருமானாய்
நிலையார் மதின்மூன்று நீறாய் விழவெய்த
சிலையா னெருக்கத்தம் புலியூர்த் திகழ்கோயில்
கலையா னடியேத்தக் கருதா வினைதானே. 2

961. விண்ணோர் பெருமானே விகிர்தா விடையூர்தீ
பெண்ணா ணலியாகும் பித்தா பிறைசூடீ
எண்ணா ரெருக்கத்தம் புலியூ ருறைகின்ற
அண்ணா வெனவல்லார்க் கடையா வினைதானே. 3

962. அரையார் தருநாக மணிவா னலர்மாலை
விரையார் தருகொன்றை யுடையான் விடையேறி

2. பொ-ரை: இலை வடிவமாக அமைந்த சூலப்படையை உடையவனும், எம் பெருமானும், நிலைபெற்ற முப்புரங்களையும் நீறாய்ப் பொடிபடுமாறு கணை எய்த வில்லை உடையவனும், எருக்கத்தம்புலியூரில் விளங்கும் கோயிலில் மேவியிருப்பவனும் ஆகிய கலைகளின் வடிவான சிவபிரானின் திருவடிகளை ஏத்தி வாழ்த்துவோரை, வினைகள் கருதா.

கு-ரை: இலையார்தரு சூலப்படை - இலைவடிவாகச் செய்யப் பெற்ற சூலப்படை. நிலையார் - அழிந்துபடுந்தன்மையரான திரி புராதிகள்.

3. பொ-ரை: விண்ணவர் தலைவனே, வேறுபட்ட வடிவும் பண்பும் உடையவனே, விடைமீது ஏறிவருபவனே! பெண், ஆண், அலி என்னும் திணை பால் பாகுபாடுகளைக் கடந்துள்ளவனே, பித்தனே, பிறை சூடியவனே, எல்லோராலும் எண்ணத்தகும் எருக்கத்தம் புலியூரில் உறைகின்ற தலைவனே என்றுரைத்துப் போற்ற வல்லவரை, வினைகள் அடையா.

கு-ரை: பெண் ஆண் அலியாகும் - பால் பாகுபாட்டையும் திணைப்பாகுபாட்டையும் கடந்தவன் என்பது கருத்து. 'பித்தா பிறை சூடீ' இத்தொடரே சுந்தரர் வாக்கில் தோன்றுவது. எண் ஆர் - எண் ணுதல் பொருந்திய.

4. பொ-ரை: இடையிலே பாம்பைப் பொருந்துமாறு அணிந் துள்ளவனும், மணம் கமழும் கொன்றை மலர் மாலையை அணிந்துள்ள

Koviloor Digital Library

வரையா னெருக்கத்தம் புலியூர் மகிழ்கின்ற
திரையார் சடையானைச் சேரத் திருவாமே. 4

963. வீறார் முலையாளைப் பாக மிகவைத்துச்
சீறா வருகாலன் சினத்தை யழிவித்தான்
ஏறா னெருக்கத்தம் புலியூ ரிறையானை
வேறா நினைவாரை விரும்பா வினைதானே. 5

964. நகுவெண் டலையேந்தி நானாவிதம் பாடிப்
புகுவா னயம்பெய்யப் புலித்தோல் பியற்கிட்டுத்
தகுவா னெருக்கத்தம் புலியூர்த் தகைந்தங்கே
தொகுவான் கழலேத்தத் தொடரா வினைதானே. 6

வனும், விடைமீது ஏறி வருபவனும், கயிலை மலையைத் தனக்குரிய இடமாகக் கொண்டவனும், எருக்கத்தம்புலியூரில் மகிழ்ந்து உறை பவனும் ஆகிய அலைகள் வீசும் கங்கை நதியை, சடைமிசைத் தரித்த சிவபிரானைச் சேர்வோர்க்குச் செல்வங்கள் வந்து சேரும்.

கு-ரை : விரை - மணம். வரையான் - கைலைமலையை யுடையவன். திரையார் சடையான் - கங்கையணிந்த சடையான். திரை ஆகு பெயராய்க் கங்கையை உணர்த்திற்று.

5. பொ-ரை : வேறொன்றற்கில்லா அழகினை உடைய தனங்களைக் கொண்ட உமையம்மையை, இடப்பாகமாக சிறப்புடன் வைத்துக் கொண்டருளியவனும், சீறி வந்த காலனின் சினம் அடங்கச் செய்தவனும், இடப ஊர்தியை உடையவனும், எருக்கத்தம்புலியூரில் எழுந்தருளியுள்ள இறைவனும் ஆகிய சிவபிரானைத் தனித்திருந்து தியானிப் பவரை வினைகள் விரும்பா.

கு-ரை : வீறு - தனிப்பெருமை. வேறொன்றற்கு இல்லாத அழகு என்பர் நச்சினார்க்கினியர். அழித்தான் என்னாது அழிவித்தான் என்றது காலன் தானேயுணர்ந்து அடங்கச்செய்த தன்மையால். வேறா நினைவாரை - தனியேயிருந்து தியானிப்பவர்களை.

6. பொ-ரை : சிரிக்கும் வெள்ளிய தலையோட்டைக் கையில் ஏந்திப் பலவிதமாகப் பாடிக் கொண்டு மகளிர் இடும் பிச்சையை ஏற்கப் புகுபவனாய்ப் புலித்தோலைத் தோளில் இட்டுக்கொண்டு தகுதி

Koviloor Digital Library

✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ 7

965. ஆவா வெனவரக்க னலற வடர்த்திட்டுத்
தேவா வெனவருளார் செல்வங் கொடுத்திட்ட
கோவே யெருக்கத்தம் புலியூர் மிகுகோயில்
தேவே யெனவல்லல் தீர்தல் திடமாமே. 8

966. மறையா னெடுமால்காண் பரியான் மழுவேந்தி
நிறையா மதிசூடி நிகழ்முத் தின்தொத்தே
இறையா னெருக்கத்தம் புலியூ ரிடங்கொண்ட
கறையார் மிடற்றானைக் கருதக் கெடும்வினையே. 9

வாய்ந் தவனாய் எருக்கத்தம்புலியூரில் தங்கி அங்கே நிலைத்திருப்பவ னாகிய இறைவன் கழல்களை ஏத்த வினைகள் தொடரா.

கு-ரை : நானாவிதம் பாடி - பலவகையான பண்களைப் பாடி. அயம் பெய்யப் புகுவான் - பிச்சையை மகளிர் பெய்யப் புகுவான். ஐயம் அயம் எனப் போலியாயிற்று. பியற்கு - பிடரிக்கு.

7. ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱

8. பொ-ரை : ஆ ஆ என்ற இரக்கக் குறிப்போடு இராவணன் அலறுமாறு அவனை அடர்த்து, பின் தேவா என அவன் வேண்ட அருள் நிறைந்த செல்வங்கள் பலவற்றை வழங்கியருளிய தலைவனே, எருக்கத்தம்புலியூரில் விளங்கும் சிறப்புமிக்க கோயிலில் எழுந் தருளும் தேவனே என்று போற்ற, நம் அல்லல்கள் தீர்தல் உறுதியாகும்.

கு-ரை : ஆ ஆ - இரக்கக்குறிப்பு. தேவா என - அவனே, தேவா என்று வேண்ட.

9. பொ-ரை : வேதங்களை ஓதும் நான்முகனும், நெடுமாலும் காணுதற்கு அரியவனே, மழுவைக் கையில் ஏந்தியவனே, கலை நிறை யாத பிறை மதியைச் சூடியவனே, முத்துக்களின் கொத்துப் போன்ற இறையோனே என்று போற்றி, எருக்கத்தம்புலியூரை இடமாகக் கொண்ட கறைமிடற்று அண்ணலை நினைந்தால், வினை கெடும்.

கு-ரை : மறையான் - பிரமன். நிறையாமதி - இளம்பிறை. முத்தின் தொத்தே - முத்தின் கொத்தே.

Koviloor Digital Library

967. புத்த ரருகர்தம் பொய்கள் புறம்போக்கிச்
சுத்தி தரித்துறையுஞ் சோதி யுமையோடும்
நித்த னெருக்கத்தம் புலியூர் நிகழ்வாய
அத்த னறவன்றன் னடியே யடைவோமே. 10

968. ஏரா ரெருக்கத்தம் புலியூ ருறைவானைச்
சீரார் திகழ்காழித் திருவார் சம்பந்தன்
ஆரா வருந்தமிழ் மாலையிவை வல்லார்
பாரா ரவரேத்தப் பதிவா னுறைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை : புத்தர் சமணர் ஆகியோர்தம் பொய்யுரைகளை விலக்கித் தூய்மையைத் தழுவி விளங்கும் ஒளி வடிவினனாய், உமை யம்மையாருடன் நித்தம் மணாளனாக விளங்குவோனாய், எருக்கத் தம்புலியூரில் விளங்கிக் கொண்டிருக்கும் அறவடிவினனாகிய தலைவன் அடிகளை, நாம் அடைவோம்.

கு-ரை : சுத்தி தரித்து - தூய்மையைப் பொருந்தி. அத்தன் - தலைவன்.

11. பொ-ரை : அழகிய எருக்கத்தம்புலியூரில் விளங்கும் இறைவனை, சீர்மிகு காழிப்பதியில் தோன்றிய திருவார் சம்பந்தன் அருளிய சுவை குன்றாத அருந்தமிழ் மாலையாகிய இத்திருப்பதிகப் பாடல்களை ஓதுபவர்கள் உலகவர் ஏத்த வானகம் எய்துவர்.

கு-ரை : ஏர் - எழுச்சி. ஆரா அருந்தமிழ் - உணர்ந்தது போதும் என்றமையாத மிக இனிய தமிழ்.

திருஞானசம்பந்தர் புராணம்

ஐயர் நீர்அவ தரித்திட இப்பதி அளவில்மா தவம்முன்பு
செய்த வாறெனச் சிறப்புரைத் தருளிஅச் செழும்பதி இடம்கொண்ட
மைகொள் கண்டர்தங் கோயிலி னுட்புக்கு வலங்கொண்டு வணங்கிப்பார்
உய்யவந்தவர் செழுந்தமிழ்ப் பதிகம்அங் கிசையுடன் உரைசெய்தார்.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

90. திருப்பிரமபுரம்

பதிக வரலாறு:

இத்திருப்பதிகம் சீகாழியின் பன்னிருபெயர்களைக் குறிப்பிட்டு அருளிச் செய்யப்பட்டுள்ளது.

திருவிருக்குக்குறள்
பண்: குறிஞ்சி

பதிக எண்: 90

திருச்சிற்றம்பலம்

969. அரனை யுள்குவீர், பிரம னூருளெம்
பரனையே மனம், பரவி யுய்ம்மினே. 1

970. காண வுள்குவீர், வேணு நற்புரத்
தாணு வின்கழல், பேணி யுய்ம்மினே. 2

971. நாத னென்பிர்காள், காத லொண்புகல்
ஆதி பாதமே, ஓதியுய்ம்மினே. 3

1. பொ-ரை: சிவபிரானைச் சிந்தித்துப் போற்ற விரும்பும் அன்பர்களே, பிரமனூரில் விளங்கும் பரனையே மனத்தால் பரவிப் போற்றி உய்வீர்களாக.

கு-ரை: சிவபெருமானைச் சிந்திப்பவர்களே, பிரமபுரத்தில் உள்ள பரமனைப் பரவி உய்யுங்கள் என்கின்றது.

2. பொ-ரை: சிவபிரானைக் கண்டு தொழ எண்ணும் அன்பர்களே, வேணுபுரத்தில் விளங்கும் தாணுவின் திருவடிகளைப் பேணி உய்வீர்களாக.

கு-ரை: காண உள்குவீர் - தரிசிக்க எண்ணுபவர்களே. வேணுபுரம் - சீகாழி. தாணு - சிவபெருமான்.

3. பொ-ரை: சிவபெருமானை எம் தலைவன் எனக் கூறும் அன்பர்களே! அன்போடு ஒளி விளங்கும் புகலிப் பதியில் விளங்கும் ஆதியின் திருவடிப் பெருமைகளை ஓதி உய்வீர்களாக.

Koviloor Digital Library

972. அங்க மாதுசேர், பங்க மாயவன்
வெங்குரு மன்னும், எங்க ளீசனே. 4

973. வாணி லாச்சடைத், தோணி வண்புரத்
தாணி நற்பொனைக், காணு மின்களே. 5

974. பாந்த ளார்சடைப், பூந்த ராய்மன்னும்
ஏந்து கொங்கையாள், வேந்த னென்பரே. 6

975. கரிய கண்டனைச், சிரபு ரத்துளெம்
அரசை நாடொறும், பரவி யுய்ம்மினே. 7

கு-ரை: நாதன் என்பிர்காள் - என் தலைவன் என்பவர்களே. புகல் ஆதி - சீகாழியிலுள்ள முதல்வன்.

4. பொ-ரை: அருள் வழங்கும் குறிப்போடு உமை யம்மையைத் தனது திருமேனியின் ஒரு பாகமாகக் கொண்டுள்ளவன், வெங்குருவில் நிலையாக உள்ள எங்கள் ஈசன் ஆவான்.

கு-ரை: அங்கம் - மேனி. பங்கம் - பாதி. வெங்குரு - சீகாழி.

5. பொ-ரை: ஒளி பொருந்திய, பிறைமதி பொருந்திய சடைமுடி உடையவனாய்த் தோணிபுரத்தில் விளங்கும் ஆணிப் பொன் போன்ற இறைவனைக் கண்டு தொழுவீர்களாக.

கு-ரை: வாள் நிலாச் சடை - ஒளிபொருந்திய நிலாவை யணிந்த சடை. ஆணிநற்பொனை - மாற்றுயர்ந்த பொன்போன்றவனை. தோணிபுரம் - சீகாழி.

6. பொ-ரை: பாம்பு பொருந்திய சடைமுடியோடு பூந்தராயில் விளங்கும் பெருமானை, ஏந்திய தனபாரங்களை உடைய உமை யம்மையின் கணவன் என்று கூறுவார்கள்.

கு-ரை: பாந்தள் - பாம்பு. பூந்தராய் - சீகாழி.

7. பொ-ரை: கருமை பொருந்திய கண்டத்தை உடையவனாய்ச், சிரபுரத்துள் எழுந்தருளிய அரசனை நாள்தோறும் பரவி உய்வீர்களாக.

கு-ரை: சிரபுரம் - சீகாழி.

Koviloor Digital Library

976. நறவ மார்பொழிற், புறவ நற்பதி
இறைவ னாமமே, மறவ னெஞ்சமே. 8

977. தென்றி லரக்கனைக், குன்றிற் சண்பைமன்
அன்று நெரித்தவா, நின்று நினைமினே. 9

978. அயனு மாலுமாய், முயலுங் காழியான்
பெயல்வை யெய்திநின், றியலு முள்ளமே. 10

979. தேர ரமணரைச், சேர்வில் கொச்சைமன்
நேரில் கழனினைந், தோரு முள்ளமே. 11

8. பொ-ரை : தேன் பொருந்திய சோலைகளை உடைய புறவ மாகிய நல்ல ஊரில் எழுந்தருளிய இறைவன் திருநாமங்களை, நெஞ்சமே! நீ மறவாதே.

கு-ரை : நறவம் - தேன். புறவநற்பதி - சீகாழி. மறவல் நெஞ்சமே எனப் பிரிக்க.

9. பொ-ரை : தென் திசையிலுள்ள இலங்கை மன்னனாம் இராவணனாகிய அரக்கனைச் சண்பை மன்னனாகிய சிவபிரான் கயிலை மலையிடைப்படுத்து அன்று நெரித்த வரலாற்றை நின்று நினைத்துப் போற்றுவீர்களாக.

கு-ரை : தென்றில் அரக்கன் - தென்திசையில் உள்ள அரக்கன். குன்றில் - கயிலைமலையில். சண்பை - சீகாழி. அன்று - கயிலையைத் தூக்கிய காலத்து. நெரித்தவா - இராவணனை நெரித்தவாற்றை.

10. பொ-ரை : பிரமனும் திருமாலும் அடிமுடி தேடி முயலும் பரம்பொருளாகிய சீகாழிப் பதியில் விளங்கும் இறைவனது கருணைப் பொழிவைச் சார்ந்து நின்று நினைக்கும் என் உள்ளம்.

கு-ரை : முயலும் - தேடமுயற்சி செய்யும். காழி - சீகாழி.

11. பொ-ரை : புத்தர் சமணர் ஆகியோரை அணுகாத, கொச்சை வயத்து மன்னனாகிய சிவபிரானின் ஒப்பற்ற திருவடிகளை நினைந்து தியானிக்கும் என் உள்ளம்.

கு-ரை : கொச்சை - சீகாழி. நேரில் கழல் - ஒப்பற்ற திருவடி.

Koviloor Digital Library

980. தொழும னத்தவர், கழும லத்துறை
பழுதில் சம்பந்தன், மொழிகள் பத்துமே. 12

திருச்சிற்றம்பலம்

ஓரும் - தியானிக்கும்.

12. பொ-ரை : கழுமலத்தில் உறையும் குற்றமற்ற ஞான சம்பந்தன் அருளிய மொழிகளாகிய, இத்திருப்பதிகப் பாடல்களை ஓதி, பெருமானைத் தொழும் மனத்தவர் ஆகுக.

கு-ரை : பழுது - குற்றம். கழுமலம் - சீகாழி.

திருவிசைப்பா

எம்பந்த வல்வினைநோய்
தீர்த்திட் டெமையாளும்
சம்பந்தன் காழியர்கோன்
றன்னையும் ஆட்கொண்டருளி
அம்புந்து கண்ணாளுந்
தானும்அணி தில்லைச்
செம்பொன்செய் அம்பலமே
சேர்ந்திருக்கை யாயிற்றே.

- பூந்துருத்தி நம்பிகாட நம்பி.

Koviloor Digital Library

91. திருவாரூர்

பதிக வரவாறு:

செல்வத் தியாகேசர் சேவடி தொழவேண்டும் என்ற அன்புவெள்ளம் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் உள்ளத்துப் பெருகி வழிகின்றது. அப்பர் பெருமானும் ஆரூர்த் தியாகேசப் பெருமானின் ஆதிரைநாளின் திருவோலக்கச் சிறப்பை எடுத்து விளக்கினார்கள். அதனால் அன்புவெள்ளம் உடைப்பெடுத்து ஓடுகின்றது. ஆரூர்க்கு வழிக்கொண்டு வருகின்றார்கள். கனிந்த சிந்தை கவிதைகளாக வெளிப்படுகின்றது. 'பாடலனான்மறை' என்ற பதிகமாகின்றது. விற்குடி முதலியவற்றை வணங்கிக்கொண்டு திருவாரூர் திருமதிற்புறத்து அணுகுகின்றபோது சிவிகையினின்றும் இறங்கித் தலத்தையும் சிவமாகக்கண்டு, செங்கை நிறைய மலர்களையேந்தித் தூவுகின்றவர்கள் திருவிருக்குக்குறளாகிய இதனைத் தமிழ்நாடுய்ய அருளிச் செய்கின்றார்கள்.

திருவிருக்குக்குறள்
பண்: குறிஞ்சி

பதிக எண்: 91

திருச்சிற்றம்பலம்

981. சித்தந் தெளிவீர்காள், அத்த னாரூரைப்
பத்தி மலர்தூவ, முத்தி யாகுமே. 1

1. பொ-ரை: சித்தம் மாசு நீங்கித் தெளிவடைய விரும்புகின்றவர்களே, அனைவர்க்கும் தலைவனாய் ஆரூரில் எழுந்தருளியிருக்கும் பெருமானைப் பக்தியோடு மலர் தூவி வாழ்த்துங்கள். சித்தத் தெளிவோடு முக்தி கிடைக்கும்.

கு-ரை: திருவிருக்குக்குறள் என்பது, வீடு காதலிப்பவரால் விரும்பப்பெறும் பாடல். இரண்டு சீர்களான் யாக்கப்பெற்ற இருக்கு மந்திரம் போன்ற பாடல் . வேதங்களுள் இருக்கு, மந்திர வடிவாக உள்ளது. அதுபோல இப்பதிகமும் மந்திர வடிவாக உள்ளது எனலும் ஆம். மந்திரம் சொற்சுருக்கமுடையது; எண்ணுவார் எண்ணத்தை ஈடேற்றவல்லது. அதுபோல இதுவும் அமைந்திருப்பது காண்க.

Koviloor Digital Library

982. பிறவி யறுப்பீர்காள், அறவ னாரூரை
மறவா தேத்துமின், துறவி யாகுமே. 2

அநாதியே ஆன்மாவைப்பற்றி நிற்கும் பாசத்தால் இரு வினைக் கீடாகக் கருவயிற் பிண்டமாய் வளர்ந்து பிறந்து, பரிபாகமுற்ற வினைகள் துன்ப இன்பங்களை யூட்டுகின்ற காலத்து வருந்தி மகிழ்ந்து, அலைகின்ற ஒழியாத் துன்பத்தினின்றும் உய்திவேண்டும் உத்தமர்களையழைத்து, அன்போடு மலர் தூவுங்கள்; கைகளால் தொழுங்கள்; எடுத்து வாழ்த்துங்கள்; உங்களுடைய பற்றறும், வினைகள் விண்டுபோம்; இன்பமுத்தி எய்தலாம் எனப் பயனும், வழியும் வகுப்பன இப் பத்துப்பாடல்களும்.

இம் முதற்பாட்டு முத்தி எய்தலாம் என்பதனைத் தெரிவித்து, அதற்கு உபாயம் உணர்த்துகின்றது.

சித்தம் தெளிவீர்காள் - மலமறைப்பாற் கலக்குண்ட சித்தந் தெளிய விரும்புபவர்களே. அத்தன் - அனைவர்க்குந் தலைவன். தியாகேசப் பெருமான் எழுந்தருளியுள்ள ஆரூரைப் பத்தியோடு மலர் தூவி வழிபடுங்கள் முத்தியாகும் என்பது போந்த பொருள். தெளிவீர் காள் என்று எதிர்காலத்தாற் கூறியது மலர் தூவல் முதலிய கிரியைத் தொண்டுகள் சித்தந்தெளிதற்கு ஏதுவென்பது தெரித்தற்கு; 'கிரியை யென மருவும் யாவையும் ஞானங் கிடைத்தற்கு நிமித்தம்' என்பது ஞானசாத்திரமாகலின். மலர் தூவ என்றது இறைவனும், ஞானா சாரியனும் எழுந்தருளியுள்ள இடங்களை மலர் தூவி வழிபடல் மரபு என்பதை விளக்கி நிற்கின்றது. முத்தியாகும் என முத்தியை வினை முதலாகக் கூறியருளியது திருவருட்பதிவு உற்றகாலத்துத் தாமே வந்தெய்துவதோர் சிவானந்தமாதலின்.

2. பொ-ரை: பிறப்பினை அறுத்துக் கொள்ள விரும்புபவர் களே, அறவடிவினனாகத் திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் இறைவனை மறவாது ஏத்துங்கள் பிறப்பிற்குக் காரணமான ஆசைகள் நீங்கித் துறவு நிலை எய்தலாம்.

கு-ரை: முத்தியாதற்குப் பிறவி இடையூறாதலின் அப்பிறப்பு, பாவத்தைப் பற்றி வருவதொன்றாதலின், பாவமோ பற்றுள்ளங் காரணமாக எழுவதாகலின், காரியமாகிய பிறப்பினையறுக்க விரும்புவார்க்குத் துறவியாதலே சிறந்த உபாயம் என்பதை உணர்த்து கின்றது இப்பாட்டு.

Koviloor Digital Library

983. துன்பந் துடைப்பீர்காள், அன்ப னணியாரூர்
நன்பொன் மலர்தூவ, இன்ப மாகுமே. 3

984. உய்ய லுறுவீர்காள், ஐய னாரூரைக்
கையி னாற்றொழ, நையும் வினைதானே. 4

அறவன் - தருமவடிவன். மறவாது ஏத்துமின் - நினைப்பின்றி நினைத்து வழிபடுங்கள். நெஞ்சொடு படாத செயலும் உண்டன்றே! அங்ஙனன்றிப் புத்திபூர்வமாக வழிபடுங்கள். துறவியாகும் - பிறவிக்கு ஏதுவாகிய பற்றுள்ளங்கழியும் என்பதாம். மறங்கடிய அறவனாலன்றி யாகாது என்பது உணரக்கிடக்கின்றது. துறவி - துறவு. வி, தொழில் விகுதி.

3. பொ-ரை : துன்பங்களைத் துடைத்துக் கொள்ள விரும்பு கின்றவர்களே, அழகிய ஆரூரில் எழுந்தருளிய அன்பு வடிவான இறைவனை நல்ல பொலிவுடைய மலர்களைத் தூவி வழிபடுங்கள். துன்பம் நீங்குவதோடு இன்பம் உளதாம்.

கு-ரை : பிறந்தார் உறுவது பெருகிய துன்பமாதலின் அதனைத் துடைக்க வேண்டும் என்பதும், அதற்கு உபாயம் மலர் தூவலே என்பதும் உணர்த்துகின்றது இப் பாடல்.

அன்பன் - சிவன். அன்பனணி யாரூர் - அன்பனால் அழகு பெறும் ஆரூர். பொன்மலர் தூவ என்பது செம்பொன்னும் வெண் பொன்னுமாகிய இரண்டாலும் பூக்கள் செய்து அவற்றை முல்லை மலரோடு கலந்து தூவுதல் மரபு. இன்பம் ஆகும் - துன்பநீக்கத்திற்குத் தொழுத உங்கட்கு இன்பமும் ஆகும் என்பதாம். இன்பம் என்றது இம்மையின்பத்தையும் நிரதிசயா நந்தப் பேரின்பத்தையும்.

4. பொ-ரை : உலக வாழ்க்கையிலிருந்து கடைத்தேற விரும்பு கின்றவர்களே, ஆரூரில் எழுந்தருளிய தலைவனாகிய இறைவனைக் கைகளைக் கூப்பி வணங்குங்கள். உங்கள் வினைகள் மெலிவடையும். உய்தி பெறலாம்.

கு-ரை : இப்பாடல், துன்பந் துடைத்து உய்தியை விரும்புவீரா யின் கைகளால் தொழுங்கள் என்றருளிச் செய்கின்றது.

ஐயன் - தலைவன். வினை தானே நையும் என்றது தொழு

Koviloor Digital Library

985. பிண்ட மறுப்பீர்காள், அண்ட னாரூரைக்
கண்டு மலர்தூவ, விண்டு வினைபோமே. 5

986. பாச மறுப்பீர்காள், ஈச னணியாரூர்
வாச மலர்தூவ. நேச மாகுமே. 6

வாரிடம் இருப்புக்கொள்ள இடமின்மையால் வல்வினைகள் மெலிந்துபோம் என்பதாம். வினை உண்டாலன்றிக் கழியாதாகலின் நையும் என்றார்.

5. பொ-ரை : மீண்டும் பிறவா நிலையைப் பெற விரும்புகின்றவர்களே, ஆரூரில் எழுந்தருளிய அனைத்துலக நாயகனாகிய இறைவனைச் சென்று கண்டு மலர் தூவி வழிபடுங்கள். பிறப்புக்குக் காரணமான வினைகள் விண்டுபோம். பிறவா நிலை எய்தலாம்.

கு-ரை : கீழைத்திருப்பாட்டு பிராரத்தவினை நைந்துபோம் என்றது; இத் திருப்பாட்டு வரக்கடவ வினைகளும் விண்டுபோம் என்கின்றது.

பிண்டம் - கருவில் உறுப்பு நிரம்பாதிருக்கும் தசைத்திரள். 'சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும்' என்பது புறநானூறு. பிண்டம் அறுப்பீர்காள் - மீண்டும் விளையும் கருவிடைப் பிண்ட நிலையை அறுப்பவர்களே! அண்டன் ஆரூர் என்றது தேவலோகத்தில் எழுந்தருளியிருந்ததை மனங்கொண்டு கூறியது. அண்டன் - தேவன். வினை விண்டுபோம் - வினைகள் மீண்டும் அங்குரியாதவாறு கெடும். நெல் வாய்விண்டது என்பதுபோல.

6. பொ-ரை : உயிரோடு பிணைந்துள்ள பாசம் அகல வேண்டுமென விரும்புகின்றவர்களே, அழகிய ஆரூரில் எழுந்தருளியுள்ள ஈசனை மணம் பொருந்திய மலர்களைத் தூவி வழிபடுங்கள். உம்பால் அவனது நேசம் உளதாகும். பாசம் அகலும்.

கு-ரை : கீழைத்திருப்பாட்டு வினை நீக்கங் கூறியது. அவ்வினையோடு ஒருங்கு எண்ணப் பெறுவதாய், அநாதியே பந்தித்துள்ள பாசமுங் கெடும்; இறைவன் நேசமாகும் என்று சொல்கிறது இப்பாட்டு. பாசம் - ஆணவம். கட்டி நிற்பதாகலின் அதனையறுக்கவேண்டுமாயிற்று. ஆன்ம அறிவைப் பந்தித்து அடக்கி நிற்றலின் பாசம் எனப் பெற்றது. நேசமாகுமே என்பதையுற்று நோக்குகின்ற எம்போலியர்க்கு,

Koviloor Digital Library

987. வெய்ய வினைதீர, ஐய னணியாரூர்
செய்ய மலர்தூவ, வைய முமதாமே. 7

988. அரக்க னாண்மையை, நெருக்கி னானாரூர்
கரத்தி னாற்றொழத், திருத்த மாகுமே. 8

பாசமறுத்த நம்பியாரூரர்க்குத் தோழரானதுபோல நமக்கும் நேசமாவர் என்ற நினைப்பு உண்டாகும். அன்பு முதிரும் என்றுமாம்.

7. பொ-ரை : கொடிய வினைகள் தீர வேண்டுமென விரும்பு கின்றவர்களே, அழகிய ஆரூரில் எழுந்தருளிய அனைத் துயிர்க்கும் தலைவனாகிய இறைவனைச் செம்மையான மலர்களைத் தூவி வழி படுங்கள். உலகம் உம்முடையதாகும்.

கு-ரை : இருவகை வினையும் தீரவேண்டும் என்றும், தீர்ந்தால் உலகமுழுதும் உடைமையாம் என்றும் உணர்த்துகிறது இப்பாடல். வெய்ய வினை - விரும்பத்தக்க நல்வினையும் கொடிய தீவினையும். இரண்டும் பொன் விலங்கும் இருப்பு விலங்கும் போலத் தளைத்து நிற்பவாகலின் நல்வினையும் தீரவேண்டுவதாயிற்று. செய்ய மலர் - சிவந்த மலர். வையம் உமதாம் - எலிமாவலியாகி வையமுழு தாண்டாற்போல உமதாம் என்பதாம். விளி முதற்பாட்டிலிருந்து கொள்ளப் பெறும்.

8. பொ-ரை : அரக்கர் தலைவனாகிய இராவணனின் ஆற்றலைக் கால்விரல் ஒன்றால் நெருக்கி அடர்த்து அழித்து ஆரூரில் எழுந்தருளிய இறைவனைக் கைகளால் தொழுவீர்களாக. உமது மனக்கோணல் நீங்கும், திருத்தம் பெறலாம்.

கு-ரை : செய்யமலர் தூவி,வையந்தமதாய காலத்து உண்டாகிய தருக்கையும் களைந்து திருத்தம் நல்குவர் தியாகேசராதலின் அவர்தலத்தைக் கையினாற்றொழ வேண்டும் என்கின்றது இப்பாடல்.

அரக்கன் - சிவபூசையை விதிமுறையியற்றி ஆட்சியும் படையும் பெற்ற இராவணன். ஆண்மை - திருவருட்பதிவு இன்மை யால் தன்முனைப்பால் எழுந்த வன்மை. நெருக்கினான் - அடர்த்த வன். திருத்தம் - தூய்மை. திருத்தமாகும் - கோணல் நீங்கும் என்றுமாம். அரக்கன் தருக்கழித்த இறைவனது ஆரூர் தொழத் திருத்தமாம் என்க.

Koviloor Digital Library

989. துள்ளு மிருவர்க்கும், வள்ள லாரூரை
உள்ளு மவர்தம்மேல், விள்ளும் வினைதானே. 9

990. கடுக்கொள் சீவரை, அடக்கி னானாரூர்
எடுத்து வாழ்த்துவார், விடுப்பர் வேட்கையே. 10

9. பொ-ரை : செருக்குற்றுத் துள்ளிய திருமால் பிரமரின் செருக்கு அடக்கி அருள் செய்த, ஆரூரில் எழுந்தருளிய வள்ளற் பெருமானை மனத்தால் நினைத்து வழிபட வல்லவர்களின் வினைகள் நீங்கும்.

கு-ரை : அருள்பெற்றுச் சிறிது திருந்திப் பதவிகளின் நிற்பாரும், பதவிமோகத்தான் மயங்குவாராயினும், அவர்கள் மிகைநோக்காதே, அதுதான் ஆன்மவியல்பு என்று திருவுளங்கொண்டு அருள்செய்யும் கருணையாளன் எழுந்தருளியுள்ள ஆரூரை நினைக்க வேண்டும் என்றும், நினைத்தால் ஆகாமிய சஞ்சித வினைகள் அழியும் என்றும் அறிவிக்கின்றது இப்பாடல். துள்ளும் இருவர் - அதிகாரம்பெற்ற சகலான்மாக்களாதலின் மலமுனைப்பால் தாம் பெரியர் எனத் துள்ளுகின்ற பிரம விஷ்ணுக்கள். வள்ளல் - அவர்களுடைய மிகுதி கண்டும் நகையாது வழங்குபவர். உள்ளுதல் - தியானித்தல். மேல் வினை விள்ளும் எனவும் கூட்டலாம்.

10. பொ-ரை : கடுக்காயைத் தின்று துவர் ஆடை போர்த்துத் திரியும் சமண புத்தர்களை அடக்கியவனாகிய ஆரூர் இறைவனே பரம் பொருள் எனச் சிறப்பித்து வாழ்த்துவார், வேட்கை என்னும் ஆசையை விடுப்பர்.

கு-ரை : அதிகாரமலத்தான் துள்ளுவாரையும் ஆட்கொள்ளும் இறைவன், ஏனைய விஷத்தன்மை பொருந்திய ஆன்மாக்களையும் அடக்கியாளுவர் என்ற கருணையின் மேன்மையைக் காட்டுகின்றது இச்செய்யுள்.

கடுக்கொள் சீவர் - கடுப்பொடியைக் கொள்ளும் சமணராகிய ஆன்மாக்கள். அடக்கினார் - அத்தன்மை கெடுமாறு அடக்கியவர். எடுத்து வாழ்த்துவார் - உள்ளத்துட்கிடந்த உணர்ச்சி வெள்ளம் உரை யிறந்து வருதலின் கேட்டாரும் தம்போலுய்ய உரக்க வாழ்த்துபவர். வேட்கை விடுப்பர் - உரையினைச் செவிகேட்க, கேட்டதனைச் சித்தம் தியானிக்க, அதனால் மனம் ஒடுங்குதலின் பற்றுள்ளத்தைவிடுவர் என்பதாம்.

Koviloor Digital Library

991. சீரூர் சம்பந்தன், ஆரூ ரைச்சொன்ன
பாரூர் பாடலார், பேரா ரின்பமே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : சிறப்புப் பொருந்திய ஞானசம்பந்தன் ஆரூர் இறைவன்மீது பாடிய உலகம் முழுதும் பரவிய பாடல்களைப் பாடி வழிபட வல்லவர் இன்பத்தினின்று நீங்கார்.

கு-ரை : முத்தியாகுமே என முதற்பாட்டில் அருளியவர்கள் அதற்கிடையூறான பிறவி வினை பாசம் இவைகளையும், இவைகளை நீக்கும் உபாயங்களையும், நீங்கியார் எய்தும் பயனையும் முறையே கூறினார்கள். இத்தகைய பாடல்கள் பத்தையும் பயில்வாரும் அத்தகைய இன்பத்தை எய்துவர்; பேரார்; நிலையாவரெனத் திருக்கடைக்காப்புச் செய்தருள்கின்றார்கள். சீர் ஊர் - சீகாழி. பாரூர் பாடல் - உலகமுழுதும் பரவிப் பண்படுத்தும் பாடல். இன்பம் பேரார் - பெற்ற இன்பத்தினின்றும் மீளார். பேராவின்பப் பெருவாழ்வெய்துவர் என்பதாம். கீழ்ப்பாடல்களும் ஆரூரை மலர்தூவ அடையும் பயனை ஐந்துபாடல்களும், தொழுவார் எய்தும் பயனை இரண்டு பாடல்களும், வாழ்த்துவார் எய்தும் பய்னை இரண்டு பாடல்களும், பாடற்பயனை ஒருபாடலும் உணர்த்துகின்றன.

நால்வர் நான்மணி மாலை

மகிழ்ச்சி மிகவுண்டு போலுமெதிர் வந்து
புகழ்ச்சியோடு நீபாடும் போது - நெகிழ்ச்சிமலர்ச்
சந்தையினும் வண்டிரையுந் தண்புகலிச் சம்பந்தா
தந்தையினும் பால்கொடுத்த தாய்க்கு.

பயனாகும் நல்லாண் பனைக்குவிடத் திற்கு
மயிலாகும் நோய்க்கு மருந்தாம் - உயிராகுஞ்
சிந்துமெலும் பிற்குச் சிரபுரத்து நாவலன்சம்
பந்த னியம்புதிருப் பாட்டு.

- சிவப்பிரகாச சுவாமிகள்.

Koviloor Digital Library

92. திருவீழிமிழலை

பதிக வரலாறு:

திருஞானசம்பந்த சுவாமிகள் திருநாவுக்கரசு நாயனாரோடு திருவீழிமிழலையில் வீற்றிருந்தபோது பெரும்பஞ்சம் உண்டாக, அப்பசியால் உயிர்கள் வாடின. அடியார்களும் வருந்தினர். அதுகண்ட நாயன்மார்கள் 'கண்ணுதலான் திருநீற்றுச் சார்பினோர்க்கும் கவலை வருமோ' எனத் திருவுளத்து எண்ணித் துயின்றனர். அன்று இரவு இறைவன் கனவில் தோன்றி, 'கால மாறுதலினால் நீங்கள் கவல்வீரல்லீர்; எனினும் உங்கள் அடியார்களின் வாட்டத்தைத் தீர்க்கும் பொருட்டுப் பஞ்சம் நீங்கும்வரை பீடத்தின் கிழக்குப் பகுதியிலும் மேற்குப் பகுதியிலுமாகப் படிக்காசு ஒவ்வொன்று அளிக்கின்றோம்' என்று அருள் செய்தனர். விடியலில் இருவரும் சென்று அவ்வாறே இருக்கக் கண்டு எடுத்து வந்து அடியார்கட்கு அமுதளித்தனர். வாகீசர் திருமடத்தில் காலம் தாழ்க்காது அமுதூட்டப் பெறுதலையும் தமதுகாசு வட்டம் கொடுத்து மாற்றப் பெறுதலையும் அறிந்த சிவஞானப்பிள்ளையார் திருக்கோயிலுக்குச் சென்று 'வாசி தீரவே' என்னும் இப்பதிகத்தை அருளிச்செய்து வாசியில்லாக் காசு பெற்று, சிவனடியார்களுக்கு நேரத்தோடு திருவமுதளித்து எழுந்தருளியிருந்தனர். சில நாள்களில் பஞ்சம் நீங்கிற்று.

திருவிருக்குக்குறள்
பண்: குறிஞ்சி

பதிக எண்: 92

திருச்சிற்றம்பலம்

992. வாசி தீரவே, காசு நல்குவீர்
மாசின் மிழலையீர், ஏச லில்லையே. 1

1. பொ-ரை : குற்றம் அற்ற வீழிமிழலையில் எழுந்தருளியுள்ள இறைவரே, அடியேனுக்கு வழங்கியருளும் காசில் உள்ள உயர்வு தாழ்வு நீங்குமாறு செய்து அக்காசினை நல்குக. அதனால் உமக்குப் பழிப்பு இல்லை.

கு-ரை : வாசி -உயர்வு தாழ்வு. (வட்டமாகக் கழிக்கும் பணம்.) மாசு - குற்றம். ஏசல் - நிந்தனை.

Koviloor Digital Library



திருவாரூர் பூங்கோயில்: நீலோத்பலாம்பாள்

Koviloor Digital Library



திருவீழிமிழலை:
திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும்
படிக்காசு பெற்றது

Koviloor Digital Library

993. இறைவ ராயினீர், மறைகொண் மிழலையீர்
கறைகொள் காசினை, முறைமை நல்குமே. 2

994. செய்ய மேனியீர், மெய்கொண் மிழலையீர்
பைகொ ளரவினீர், உய்ய நல்குமே. 3

995. நீறு பூசினீர், ஏற தேறினீர்
கூறு மிழலையீர், பேறு மருளுமே. 4

996. காமன் வேவவோர், தூமக் கண்ணினீர்
நாம மிழலையீர், சேம நல்குமே. 5

2. பொ-ரை: எல்லோருக்கும் இறைவராக விளங்கும் பெருமானீரே, வேதங்களின் ஒலி நிறைந்த திருவீழிமிழலையில் எழுந்தருளியிருப்பவரே, கறை படிந்ததாக அளிக்கப்படும் காசில் உள்ள அக்கறையை நீக்கி முறையாக அளித்தருளுக.

கு-ரை: இறைவர் ஆயினீர் என இயற்கையே இறைவரை, ஆயினீர் என ஆக்கம்கொடுத்துக் கூறினார், முறைப்படி வேற்றுமையறக் கொடுக்காமையால். கறைகொள் காசு - அழுக்குப் படிந்த காசு; நாள்படச் சேமித்துவைத்த காசு என்பது கருத்து.

3.பொ-ரை : சிவந்த திருமேனியை உடையவரே, மெய்ம்மையாளர் வாழும் திருவீழிமிழலையில் எழுந்தருளியிருப்பவரே, படம் எடுக்கும் பாம்பை அணிகலனாகப் பூண்டுள்ளவரே, அடியேங்கள் உய்யுமாறு வாசியில்லாததாகக் காசு அருளுக.

கு-ரை : மெய் - உண்மைத்தன்மை. பை - படம்.

4. பொ-ரை: திருவெண்ணீற்றை அணிந்தவரே, ஆனேற்றில் ஏறி வருபவரே, பலராலும் புகழப்பெறும் திருவீழிமிழலையில் எழுந்தருளியவரே, காசு அருளுவதோடு எமக்கு முத்திப் பேறும் அருளுவீராக.

கு-ரை: பேறும் அருளும் - காசுகொடுத்ததோடமையோம்; வீடு பேற்றையும் கொடும் என்பதாம்.

5. பொ-ரை: காமனை எரிந்து அழியுமாறு செய்த புகை பொருந்திய அழல் விழியை உடையவரே! புகழ் பொருந்திய திருவீழி

Koviloor Digital Library

997. பிணிகொள் சடையினீர், மணிகொண் மிடறினீர்
அணிகொண் மிழலையீர், பணிகொண் டருளுமே. 6

998. மங்கை பங்கினீர், துங்க மிழலையீர்
கங்கை முடியினீர், சங்கை தவிர்மினே. 7

999. அரக்க னெரிதர, இரக்க மெய்தினீர்
பரக்கு மிழலையீர், கரக்கை தவிர்மினே. 8

மிழலையில் எழுந்தருளியவரே! எமக்குச் சேமத்தை அருளுவீராக.

கு-ரை : தூமக்கண் - புகையோடுகூடிய தீக்கண். நாமம் - புகழ். சேமம் - பாதுகாவல். க்ஷேமம் என்பதன் திரிபுமாம்.

6. பொ-ரை : கட்டப்பட்ட சடையை உடையவரே, நீலமணி போன்ற கண்டத்தை உடையவரே, அழகு பொருந்திய திருவீழி மிழலையில் எழுந்தருளியிருப்பவரே, எம்மைப் பணி கொண்டு அருளுவீராக.

கு-ரை : பிணிகொள்சடையினீர் - கட்டிய சடையையுடைய வரே. மணி - நீலமணி. பணி - ஏவல்.

7.பொ-ரை : உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவரே, உயர்வுடைய திருவீழிமிழலையில் உறைபவரே, கங்கை சூடிய திரு முடியை உடையவரே, எங்களது ஐயுறவைப் போக்கியருளுக.

கு-ரை : பங்கு - ஒருபகுதி. துங்கம் - உயர்வு. சங்கை - சந்தேகம். தேவரீரிடம் வேற்றுமை சிறிதும் இல்லையாகவும் நாங்கள் சந்தேகிக்கிறோம்; வாசிதீர அளித்து அதனைப்போக்கியருளும்.

8. பொ-ரை : இராவணன் கயிலை மலையின் கீழ் அகப்பட்டு நெரிய இரக்கம் காட்டியருளியவரே, எங்கும் பரவிய புகழ் உடைய திருவீழிமிழலையில் உறைபவரே, எமக்கு அளிக்கும் காசில் உள்ள குறையைப் போக்கியருளுக.

கு-ரை : அரக்கன் - இராவணன். பரக்கும் - எங்கும் புகழ் பரவிய. கரக்கை - வஞ்சகம்.

Koviloor Digital Library

1000. அயனு மாலுமாய், முயலு முடியினீர்
இயலு மிழலையீர், பயனு மருளுமே. 9

1001. பறிகொள் தலையினார், அறிவ தறிகிலார்
வெறிகொள் மிழலையீர், பிறிவ தரியதே. 10

1002. காழி மாநகர், வாழி சம்பந்தன்
வீழி மிழலைமேல், தாழு மொழிகளே. 11

திருச்சிற்றம்பலம்

9. பொ-ரை : நான்முகனும் திருமாலும் அடிமுடி காண முயலும் பேருருவம் கொண்டருளியவரே, எல்லோரும் எளிதில் வழிபட இயலுமாறு திருவீழிமிழலையில் எழுந்தருளியவரே, எமக்கு வீட்டின் பத்தையும் அருளுவீராக.

கு-ரை : பயன் - வீட்டின்பம்.

10. பொ-ரை : ஒன்றொன்றாக மயிர் பறித்த தலையினை உடைய சமணர்கள் அறிய வேண்டுபவராகிய உம்மை அறியாது வாழ்கின்றனர். மணம் கமழும் திருவீழிமிழலையில் உறைபவரே, அடியேங்கள் உம்மைப் பிரிந்து வாழ்தல் இயலாது.

கு-ரை : பறிகொள்தலையினார் - மயிர்பறித்த தலையையுடைய சமணர். அறிவது அறியவேண்டிய உண்மை ஞானங்களை. வெறி - மணம்.

11. பொ-ரை : இத்திருப்பதிகம் சீகாழிப் பதியாகிய பெரிய நகருள் தோன்றி வாழும் ஞானசம்பந்தன் திருவீழிமிழலை இறைவர் மேல் தாழ்ந்து பணிந்து போற்றிய மொழிகளைக் கொண்டதாகும்.

கு-ரை : வீழிமிழலைமேல் தாழும் மொழிகளே வல்லார் எல்லா நன்மையும் எய்துவர் எனச் செயப்படுபொருளும், வினையும் வருவித்து முடிக்க.

Koviloor Digital Library

93. திருமுதுகுன்றம்

பதிக வரலாறு:

12 - ஆம் பதிகம் பார்க்க.

திருவிருக்குக்குறள்
பண்: குறிஞ்சி

பதிக எண்: 93

திருச்சிற்றம்பலம்

1003. நின்று மலர்தூவி, இன்று முதுகுன்றை
நன்று மேத்துவீர்க், கென்று மின்பமே. 1

1004. அத்தன் முதுகுன்றைப், பத்தி யாகிநீர்
நித்த மேத்துவீர்க், குய்த்தல் செல்வமே. 2

1005. ஐயன் முதுகுன்றைப், பொய்கள் கெடநின்று
கைகள் கூப்புவீர், வைய முமதாமே. 3

1. பொ-ரை : இன்றே திருமுதுகுன்றம் சென்று, அங்குள்ள இறைவரை மலரால் அருச்சித்து நின்று நல்லமுறையில் துதிப்பீராயின் உமக்கு எக்காலத்தும் இன்பம் உளதாம்.

கு-ரை : இன்றைக்கே முதுகுன்றை மலர்தூவி ஏத்தும் உங்களுக்கு என்றைக்கும் இன்பமாம் என்கின்றது. ஒருநாள் வழிபாட்டிற்கு நிலைத்த இன்பம் வரும் என்கின்றது.

2. பொ-ரை : நீர் திருமுதுகுன்றத்துத் தலைவனாய் விளங்கும் இறைவன்மீது பக்தி செலுத்தி நாள்தோறும் வழிபட்டு வருவீராயின் உமக்குச் செல்வம் பெருகும்.

கு-ரை : உய்த்தல் செல்வமே - பொருந்துதல் செல்வமே யாகும் என்றது பொருள் பெருகும் என்பதாம்.

3. பொ-ரை : திருமுதுகுன்றத்துள் விளங்கும் தலைவனாகிய சிவபிரானை நீர் பலவகையான பொய்கள் இன்றி மெய்மையோடு நின்று கைகளைக் கூப்பி வழிபடுவீர்களாயின் உலகம் உம்முடைய தாகும்.

Koviloor Digital Library

1006. ஈசன் முதுகுன்றை, நேச மாகிநீர்
வாச மலர்தூவப், பாச வினைபோமே. 4

1007. மணியார் முதுகுன்றைப், பணிவா ரவர்கண்டீர்
பிணியா யினகெட்டுத், தணிவா ருலகிலே. 5

1008. மொய்யார் முதுகுன்றில், ஐயா வெனவல்லார்
பொய்யா ரிரவோர்க்குச், செய்யா ளணியாளே. 6

1009. விடையான் முதுகுன்றை, இடையா தேத்துவார்
படையா யினசூழ, உடையா ருலகமே. 7

கு-ரை : ஐயன் - தலைவன். பொய்யில்லாதவருக்கு உலகமே உரிமையாம் என்பதை விளக்கியவாறு.

4. பொ-ரை : திருமுதுகுன்றத்து ஈசனை நீர் அன்போடு மணம் பொருந்திய மலர்களால் அருச்சித்துவரின் உம் பாசங்களும் அவற்றால் விளைந்த வினைகளும் நீங்கும்.

கு-ரை : நேசமாகி- அன்பாகி. பாசவினை - பாசமும் வினை யும்.

5. பொ-ரை : அழகிய திருமுதுகுன்றத்து இறைவரைப் பணிபவர்கள், பிணிகளிலிருந்து விடுபட்டு உலகில் அமைதியோடு வாழ்வார்கள்.

கு-ரை : மணி - அழகு, முத்துமாம். தணிவார் - அமைதி உறுவார்கள்.

6. பொ-ரை : அன்பர்கள் நெருங்கித் திரண்டுள்ள திருமுதுகுன்றத்து இறைவனை, நீர், ஐயா என அன்போடு அழைத்துத் துதிக்க வல்லீர்களாயின் இரப்பவர்க்கு இல்லை என்னாத நிலையில் திருமகள் நிறை செல்வத்தோடு உமக்கு அணியள் ஆவாள்.

கு-ரை : மொய் - நெருக்கம். ஐயா! எனத் தோத்திரிக்க வல்லவராய் இரவலர்க்கு இல்லை என்று பொய்யும் சொல்லாதவர்களுக்குச் செய்யவள் அணியள் ஆவாள் என்றவாறு.

7. பொ-ரை : திருமுதுகுன்றத்து விடை ஊர்தியை உடைய சிவபிரானை இடையீடுபடாது ஏத்துகின்றவர்; படைகள் பல சூழ உலகத்தை ஆட்சிசெய்யும் உயர்வை உடையவராவர்.

Koviloor Digital Library

1010. பத்துத் தலையோனைக், கத்த விரலூன்றும்
அத்தன் முதுகுன்றை, மொய்த்துப் பணிமினே. 8

1011. இருவ ரறியாத, ஒருவன் முதுகுன்றை
உருகி நினைவார்கள், பெருகி நிகழ்வோரே. 9

1012. தேர ரமணரும், சேரும் வகையில்லான்
நேரில் முதுகுன்றை, நீர்நின் றுள்குமே. 10

1013. நின்று முதுகுன்றை, நன்று சம்பந்தன்
ஒன்று முரைவல்லார், என்று முயர்வோரே. 11

திருச்சிற்றம்பலம்

கு-ரை : இடையாது - இடையீடு படாது. உலகம் உடையார் - சக்கரவர்த்தியாவர்.

8. பொ-ரை : பத்துத் தலைகளை உடைய இராவணனை அவன் கதறி அழுமாறு கால் விரலை ஊன்றி அடர்த்த திருமுதுகுன்றத்துத் தலைவனாகிய சிவபிரானை நெருங்கிச் சென்று பணிவீராக.

கு-ரை : மொய்த்து - நெருங்கி.

9. பொ-ரை : திருமால் பிரமர்களாகிய இருவரும் அறியவொண்ணாத திருமுதுகுன்றத்தில் விளங்கும் பெருமானை மனம் உருகி நினைப்பவர் பெருக்கத்தோடு வாழ்வர்.

கு-ரை : இருவர் - அயனும் மாலும்.

10. பொ-ரை : புத்தர் சமணர் ஆகியோர்க்குத் தன்னை வந்தடையும் புண்ணியத்தை அளிக்காத சிவபெருமானுடைய திருமுதுகுன்றத் தை வாய்ப்பு நேரின் நீர் நின்று உள்குவீராக.

கு-ரை : உள்கும் - தியானியுங்கள்.

11. பொ-ரை : திருமுதுகுன்றம் சென்று நின்று பெருமை உடையவனாகிய ஞானசம்பந்தன் ஒன்றி உரைத்த இப்பதிகப் பாடல்களை ஓத வல்லவர் எக்காலத்தும் உயர்வு பெறுவர்.

கு-ரை : ஒன்றும் உரை - அவன் தான் என வேறின்றி ஒன்றிய உரை.

Koviloor Digital Library

94. திருவாலவாய்

பதிக வரலாறு:

குலச்சிறையார் எதிர்கொள்ள எழுந்தருளிய திருஞான சம்பந்த சுவாமிகள் ''இதுதான் திருவாலவாய்'' என உடன் வரும் அடியார்கள் காட்டக்கண்டு கரங்குவித்தருளிப் பதிகம் பாடித் திருக்கோயிலை அடைந்தார்கள். ஆலவாயண்ணலை ஆராத அன்பினுடன் வழிபட்டுப் புளகம் மெய்யெலாம் போர்ப்ப, கண்ணீர்வாரத் திருமுன்னின்று ''நீலமாமிடற்றாலவாயினான்'' என்னும் மூலமாகிய திருவிருக்குக்குறளை மொழிந்தார்கள் . அடியார்களோடும் சிவானந்த வாரிதியில் திளைத்தார்கள்.

திருவிருக்குக்குறள்
பண் - குறிஞ்சி

பதிக எண்: 94

திருச்சிற்றம்பலம்

1014. நீல மாமிடற், றால வாயிலான்
பால தாயினார், ஞால மாள்வரே. 1

1015. ஞால மேழுமாம், ஆல வாயிலார்
சீல மேசொலீர், காலன் வீடவே. 2

1. பொ-ரை : நீலநிறம் பொருந்திய கண்டத்தினை உடைய திரு ஆலவாய் இறைவனைச் சென்று தொழுது மனத்தால் அவன் அருகில் இருப்பதாக உணர்பவர்கள், இவ்வுலகை ஆள்வர்.

கு-ரை : பாலது ஆயினார் - சாமீப்பயம் அடைந்தவர்கள்.

2. பொ-ரை : எமபயம் இன்றி வாழ, ஏழுலகங்களிலும் எழுந்தருளியிருக்கும் ஆலவாய் இறைவனது மெய்ப்புகழையே உரையால் போற்றி வருவீர்களாக.

கு-ரை : ஞாலம் ஏழுமாம் ஆலவாயில் - உலகேழும் உளதாதற்குக் காரணமாகிய துவாதசாந்தப் பெருவெளியாகிய ஆலவாயில். சீலம் - குணங்கள். வீட - அழிய.

Koviloor Digital Library

1016. ஆல நீழலார், ஆல வாயிலார்
கால காலனார், பால தாமினே. 3

1017. அந்த மில்புகழ், எந்தை யாலவாய்
பந்தி யார்கழல், சிந்தை செய்ம்மினே. 4

1018. ஆட லேற்றினான், கூட லாலவாய்
பாடி யேமனம், நாடி வாழ்மினே. 5

1019. அண்ண லாலவாய், நண்ணி னான்றனை
எண்ணி யேதொழத், திண்ண மின்பமே. 6

3. பொ-ரை : கல்லால மர நிழலில் வீற்றிருப்பவரும், காலனுக்குக் காலனாய் அவனை அழித்தருளிய பெருவீரரும் ஆகிய ஆலவாய் இறைவரை மனத்தால் அணுகியிருப்பீர்களாக.

கு-ரை : ஆலநீழலார் - வடவால விருட்சத்தின் நிழலில் இருப்பவர்.

4. பொ-ரை : ஆலவாய்க் கோயிலிலுள்ள எந்தையாகிய சிவ பெருமானுடைய அழிவில்லாத புகழுக்கு இருப்பிடமான திருவடிகளை மனங்கொள்ளுங்கள்.

கு-ரை : அந்தமில்புகழ் - எல்லையற்ற புகழ். பந்தியார் - இடமாகக்கொண்டவர்; பாசங்களால் கட்டுண்ணாதவர் என்றுமாம்.

5. பொ-ரை : வெற்றியோடு கூடிய ஆனேற்றினானது நான்மாடக்கூடல் என்னும் ஆலவாயின் புகழைப் பாடி மனத்தால் அவ்விறைவனையே நாடி வாழ்வீர்களாக.

கு-ரை : ஆடல் ஏறு - வெற்றியோடு கூடிய இடபம். நாடி - விரும்பி.

6.பொ-ரை : தலைமையாளனும் ஆலவாய் என்னும் மதுரைப் பதியின் கோயிலைப் பொருந்தியிருப்பவனுமாகிய சோமசுந்தரப் பெருமானையே எண்ணித் தொழுதுவரின் இன்பம் பெறுவது திண்ணமாகும்.

கு-ரை : எண்ணி - தியானித்து. திண்ணம் - உறுதி.

Koviloor Digital Library

1020. அம்பொ னாலவாய், நம்ப னார்கழல்
நம்பி வாழ்பவர், துன்பம் வீடுமே. 7

1021. அரக்க னார்வலி, நெருக்க னாலவாய்
உரைக்கு முள்ளத்தார்க், கிரக்க முண்மையே. 8

1022. அருவ னாலவாய், மருவி னான்றனை
இருவ ரேத்தநின், றுருவ மோங்குமே. 9

1023. ஆர நாகமாம், சீர னாலவாய்த்
தேர மண்செற்ற, வீர னென்பரே. 10

7. பொ-ரை : அழகிய பொன்மயமான ஆலவாய்த் திருக்கோயிலில் விளங்கும் இறைவனுடைய திருவடிகளே நமக்குச் சார்வாகும் என நம்பி வாழ்பவரின் துன்பம் நீங்கும்.

கு-ரை : நம்பனார் கழல் நம்பி - இதுவே எமக்கு இம்மையும் மறுமையும் இன்பமும் வீடும் என்று உறுதி கொண்டு.

8. பொ-ரை : அரக்கனாகிய பெருவலிபடைத்த இராவணனைக் கால் விரலால் நெரித்தருளிய ஆலவாய் அரன் புகழை உரைக்கும் உள்ளத்தார்க்கு அவனது கருணை உளதாகும்.

கு-ரை : நெருக்கன் - நெருக்கியவன்.

9. பொ-ரை : அருவனாய் விளங்கும் இறைவன் திருவாலவாயில் திருமால் பிரமர் ஆகிய இருவர் போற்றும் உருவனாய் மருவி ஓங்கி நிற்கின்றான்.

கு-ரை : அருவன் - அருவமானவன். இருவர் - அயனும் மாலும்.

10. பொ-ரை : பாம்பாகிய ஆரத்தை அணிந்தவனாய், ஆலவாயில் பெரும் புகழாளனாய் விளங்கும் இறைவன், புத்தரையும் சமணரையும் அழித்த பெருவீரன் ஆவான் என்று அடியவர்கள் அவனைப் புகழ்ந்து போற்றுவார்கள்.

கு-ரை : ஆரம் - மாலை. சீரன் - புகழுடையவன். தேரர் - புத்தர். அமண் - அமணர்.

Koviloor Digital Library

1024. அடிக ளாலவாய்ப், படிகொள் சம்பந்தன்
முடிவி லின்றமிழ், செடிக ணீக்குமே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : ஆலவாயில் எழுந்தருளிய அடிகளாகிய இறைவனது திருவருளில் தோய்ந்த ஞானசம்பந்தனின் அழிவற்ற இனிய இத்தமிழ் மாலை நமக்கு வரும் வினைகளைப் போக்குவதாகும்.

கு-ரை : செடிகள் - வினைகள்.

திருஞானசம்பந்தர் புராணம்

சென்றகா லத்தின் பழுதிலாத் திறமும்
இனிஎதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனால்
எற்றைக்குந் திருவரு ளுடையேம்
நன்றியில் நெறியில் அழுந்திய நாடும்
நற்றமிழ் வேந்தனும் உய்ந்து
வென்றிகொள் திருநீற் றொளியினில் விளங்கும்
மேன்மையும் படைத்தனம் என்பார்.

ஆளும் அங்கணர் ஆலவாய் அமர்ந்தினி திருந்த
காள கண்டரைக் கண்களின் பயன்பெறக் கண்டு
நீள வந்தெழும் அன்பினால் பணிந்தெழ நிறையார்
மீள வும்பல முறைநில முறவிழுந் தெழுவார்.

நீல மாமிடற் றாலவா யான்என நிலவும்
மூல மாகிய திருவிருக் குக்குறள் மொழிந்து
சீல மாதவத் திருத்தொண்டர் தம்மொடுந் திளைத்தார்
சாலு மேன்மையில் தலைச்சங்கப் புலவனார் தம்முன்.

– சேக்கிழார்.

Koviloor Digital Library

95. திருவிடைமருதூர்

பதிக வரலாறு:

32 -ஆம் பதிகம் பார்க்க.

திருவிருக்குக்குறள்
பண் – குறிஞ்சி

பதிக எண்: 95

திருச்சிற்றம்பலம்

1025. தோடொர் காதினன், பாடு மறையினன்
காடு பேணிநின், றாடு மருதனே. 1

1026. கருதார் புரமெய்வர், எருதே யினிதூர்வர்
மருதே யிடமாகும், விருதாம் வினைதீர்ப்பே. 2

1027. எண்ணு மடியார்கள், அண்ணன் மருதரைப்
பண்ணின் மொழிசொல்ல, விண்ணுந் தமதாமே. 3

1. பொ-ரை : திருவிடைமருதூர் இறைவன் தோட்டை, இடத் திருச்செவியில் அணிந்தவனாய் நான்கு வேதங்களைப் பாடுபவனாய், சுடுகாட்டை விரும்பி அதன்கண் நின்று ஆடுகின்றவனாவான்.

கு-ரை : பேணி - விரும்பி.

2. பொ-ரை : தம்மைக் கருதாதவராகிய அசுரர்களின் முப்புரங்களை எய்து அழித்தவரும், எருதை வாகனமாகக் கொண்டு இனிதாக ஊர்பவரும் ஆகிய இறைவர்க்குத் திருவிடை மருதூரே விரும்பி உறையும் இடமாகும். அவரைத் தொழுதால் புகழ் சேரும். வினைகள் தீர்தலை உடையனவாகும்.

கு-ரை : கருதார் - பகைவர். விருது ஆம் - பெருமை உளதாம். வினை தீர்ப்பு ஆம் - வினைகள் தீர்தலை உடையனவாம்.

3. பொ-ரை : மனத்தால் எண்ணி வழிபடும் அன்பர்கள் தலைமையாளராய் விளங்கும் மருதவாணரைப் பண்ணிசையோடு அவர்தம் புகழைப் போற்ற, விண்ணுலகமும் அவர்கள் வசமாகும்.

Koviloor Digital Library

1028. விரியார் சடைமேனி, எரியார் மருதரைத்
தரியா தேத்துவார், பெரியா ருலகிலே. 4

1029. பந்த விடையேறும், எந்தை மருதரைச்
சிந்தை செய்பவர், புந்தி நல்லரே. 5

1030. கழலுஞ் சிலம்பார்க்கும், எழிலார் மருதரைத்
தொழலே பேணுவார்க், குழலும் வினைபோமே. 6

1031. பிறையார் சடையண்ணல், மறையார் மருதரை
நிறையால் நினைபவர், குறையா ரின்பமே. 7

கு-ரை : அண்ணல் - பெருமையிற் சிறந்தவர். பண்ணின் மொழி - தோத்திரங்கள்.

4. பொ-ரை : விரிந்த சடைமுடியை உடையவரும், எரிபோன்ற சிவந்த மேனியருமாகிய மருதவாணரைத் தாமதியாது துதிப்பவர் உலகில் பெரியவர் எனப் போற்றப்படுவர்.

கு-ரை : எரி - மழு. தரியாது - தாமதியாது.

5. பொ-ரை : கட்டுத்தறியில் கட்டத்தக்க விடையை ஊர்ந்து வரும் எந்தையாராகிய மருதவாணரை மனத்தால் தியானிப்பவர்கள் அறிவால் மேம்பட்டவராவர்.

கு-ரை : பந்தவிடை - கட்டோடு கூடிய இடபம்.

6. பொ-ரை : ஒரு காலில் கழலும், பிறிதொரு காலில் சிலம்பும் ஒலிக்கும் உமைபாகராகிய அழகிய மருதவாணரை விரும்பித் தொழுவதை நியமமாகக் கொண்டவர்க்கு வருத்துதற்கு உரிய வினைகள் துன்புறுத்தா; அகலும்.

கு-ரை : கழலும் சிலம்பும் ஆர்க்கும் - ஒருகால் கழலும், ஒருகால் சிலம்பும் ஒலிக்கும். உழலும் வினை - வருத்தும் வினைகள்.

7. பொ-ரை : பிறை பொருந்திய சடைமுடியினை உடைய தலைமையாளரான வேதங்களை அருளிய மருதவாணரை நிறைந்த மனத்தால் நினைப்பவர் இன்பம் குறையப் பெறார்.

கு-ரை : நிறையால் - நிறைவோடு.

Koviloor Digital Library

1032. எடுத்தான் புயந்தன்னை, அடுத்தார் மருதரைத்
தொடுத்தார் மலர்சூட்ட, விடுத்தார் வேட்கையே. 8

1033. இருவர்க் கெரியாய, உருவ மருதரைப்
பரவி யேத்துவார், மருவி வாழ்வரே. 9

1034. நின்றுண் சமண்தேரர், என்று மருதரை
அன்றி யுரைசொல்ல, நன்று மொழியாரே. 10

1035. கருது சம்பந்தன், மருத ரடிபாடிப்
பெரிதுந் தமிழ்சொல்லப், பொருத வினைபோமே. 11

திருச்சிற்றம்பலம்

8. பொ-ரை : கயிலை மலையை எடுத்த இராவணனின் தோள்களை நெரித்த மருதவாணருக்குச் சூட்டுவதற்கு மலர் தொடுத்தவர்கள், பிறவிக்குக் காரணமான ஆசையை விடுத்தவர்களாவர்.

கு-ரை : எடுத்தான் - கைலையைத் தூக்கிய இராவணன், வேட்கை - பொருள்கள்மேல் தோன்றும் பற்றுள்ளம்.

9. பொ-ரை : திருமால் பிரமர் அடிமுடி அறிய முடியாதவாறு எரி உருவமாய் நின்ற மருதவாணரைப் புகழ்ந்து ஏத்தித் துதிப்பவர் எல்லா நலன்களோடும் மருவி வாழும் வாழ்க்கையைப் பெறுவர்.

கு-ரை : இருவர்க்கு - அயனுக்கும் மாலுக்கும். மருவி - எல்லாவற்றொடும் பொருந்தி.

10. பொ-ரை : நின்றுண்ணும் சமணரும், புத்தரும் எக்காலத்தும் இடைமருது இறைவனாகிய சிவபெருமானை மாறுபட்ட உரைகளால் கூறுவதால் அவர் எக்காலத்தும் நல்லனவே கூறார்.

கு-ரை : சமணரும் புத்தரும் என்றைக்கும் மருதப்பெருமானை அன்றிப் பிறவற்றைப் பேசுவதால் நல்லதைச் சொல்லமாட்டார்கள்.

11.பொ-ரை : இறைவன் திருவருளையே கருதும் ஞானசம்பந்தன் மருதவாணரின் திருவடிகளைப் பெரிதும் போற்றிப் பாடிய இத் தமிழ் மாலையை ஓதுபவர்க்குத் துன்புறுத்திய வினைகள் போகும்.

கு-ரை : பொருதவினை - இதுவரையில் வருத்திவந்த வினை.

Koviloor Digital Library

96. திருஅன்னியூர்

பதிக வரலாறு:

வெங்குருவேந்தர் திருக்குறுக்கைப் பதியை வணங்கி, அன்னியூரை அடைந்தார்கள். அங்கு எழுந்தருளியுள்ள ஆபத்சகாயநாதர் அடியிணைபோற்றி ''மன்னியூரிறை'' என்னும் இப்பதிகத்தை அருளிச்செய்தார்.

திருவிருக்குக்குறள்
பண்: குறிஞ்சி

பதிக எண்: 96

திருச்சிற்றம்பலம்

1036. மன்னி யூரிறை, சென்னி யார்பிறை
அன்னி யூரமர், மன்னு சோதியே. 1

1037. பழகுந் தொண்டர்வம், அழக னன்னியூர்க்
குழகன் சேவடி, தொழுது வாழ்மினே. 2

1038. நீதி பேணுவீர், ஆதி யன்னியூர்ச்
சோதி நாமமே, ஓதி யுய்ம்மினே. 3

1. பொ-ரை : திருஅன்னியூரில் எழுந்தருளிய நிலைபெற்ற ஒளி வடிவினனாகிய சிவன், பிறை சூடிய திருமுடியோடு பல தலங்களிலும் எழுந்தருளியிருந்து, ஆங்காங்குள்ள மக்கட்குத் தலைவனாய் விளங்குபவன்.

கு-ரை : சென்னி - தலை. சோதிமன்னி ஊர் இறை என முடிக்க.

2. பொ-ரை : இறைவன்பால் மனம் ஒன்றிப் பழகும் தொண்டர்களே வாருங்கள். அன்னியூரில் அழகனாகவும் இளமைத் தன்மை உடையவனாகவும் எழுந்தருளியுள்ள சிவபிரானின் செம்மையான திருவடிகளைத் தொழுது வாழ்வீர்களாக.

கு-ரை : வம் - வாருங்கள். குழகன் - இளையவன்.

3. பொ-ரை : நீதியைப் போற்றி அதன்படி வாழ்கின்றவர்களே,

Koviloor Digital Library

1039. பத்த ராயினீர், அத்த ரன்னியூர்
சித்தர் தாள் தொழ, முத்த ராவரே. 4

1040. நிறைவு வேண்டுவீர், அறவ னன்னியூர்
மறையு ளான்கழற், குறவு செய்ம்மினே. 5

1041. இன்பம் வேண்டுவீர், அன்ப னன்னியூர்
நன்பொ னென்னுமின், உம்பராகவே. 6

1042. அந்த ணாளர்தம், தந்தை யன்னியூர்
எந்தை யேயெனப், பந்த நீங்குமே. 7

அன்னியூரில் விளங்கும் ஒளி வடிவினனாகிய சிவபிரான் திருநாமங்களையே ஓதிஉய்வீர்களாக.

4. பொ-ரை : இறைவனிடம் பத்திமை பூண்டவர்களே, தலைமையாளனாய் அன்னியூரில் விளங்கும் ஞானவடிவினனின் திருவடிகளைத் தொழுதலால் வினை மாசுகளிலிருந்து விடுபட்டவராவீர்.

5. பொ-ரை : மனநிறைவுடன் வாழ விரும்புகின்றவர்களே, அறவடிவினனாய் நான்கு வேதங்களிலும் பரம்பொருளாகக் கூறப்பட்டுள்ள அன்னியூர்ப் பெருமான் திருவடிகளுக்கு அன்பு செய்து அவனோடு உறவு கொள்வீர்களாக.

கு-ரை : நிறைவு வேண்டுவீர் - குறைவிலா நிறைவாக விரும்புகின்றவர்களே. அறவன் - அறவடிவானவன்.

6. பொ-ரை : உலக வாழ்க்கையில் இன்பங்களை எய்த விரும்பும் அடியவர்களே, அன்பனாக விளங்கும் அன்னியூர் இறைவனை நல்ல பொன்னே என்று கூறுமின், தேவர்களாகலாம்.

கு-ரை : உம்பராக - தேவர்களாக. நன்பொன் என்னுமின் - நல்ல பொன் என்று சொல்லுங்கள்.

7. பொ-ரை : அந்தணர்களின் தந்தையாக விளங்கும் அன்னியூர் இறைவனை எந்தையே என அழைக்க மலமாயைகள் நீங்கும்.

கு-ரை : பந்தம் - மலமாயையால் விளைந்த கட்டு.

Koviloor Digital Library

1043. தூர்த்த னைச்செற்ற, தீர்த்த னன்னியூர்
ஆத்த மாவடைந், தேத்தி வாழ்மினே. 8

1044. இருவர் நாடிய, அரவ னன்னியூர்
பரவு வார்விண்ணுக், கொருவ ராவரே. 9

1045. குண்டர் தேரருக்கு, அண்ட னன்னியூர்த்
தொண்டு ளார்வினை, விண்டு போகுமே. 10

1046. பூந்த ராய்ப்பந்தன், ஆய்ந்த பாடலால்
வேந்த னன்னியூர், சேர்ந்து வாழ்மினே. 11

திருச்சிற்றம்பலம்

8. பொ-ரை : காமாந்தகனாகிய இராவணனைத் தண்டித்த புனித னாகிய அன்னியூர் இறைவனை அடைந்து அன்புக்குரியவனாக அவனைப் போற்றி வாழுங்கள்.

கு-ரை : தூர்த்தன் - காமியாகிய இராவணன். தீர்த்தன் - பரிசுத் தமானவன். ஆத்தமா - அன்போடு. ஆப்தமாக என்பதன் சிதைவு.

9. பொ-ரை : திருமால் பிரமர்களால் அடிமுடி தேடப்பட்ட அரவை அணிகலனாகப் பூண்ட அன்னியூர் இறைவனைப் பரவித் துதிப்பவர் தேவருலகில் இந்திரராவர்.

கு-ரை : விண்ணுக்கு ஒருவராவர் - இந்திரனாவர்.

10. பொ-ரை : சமணர்களாலும் புத்தர்களாலும் அணுக முடியாதவனாகிய அன்னியூர் இறைவனுக்குத் தொண்டு செய்பவர் களின் வினைகள் விண்டு போகும்.

கு-ரை : அண்டன் - அண்டமுடியாதவன், வினை விண்டு போகும் - நெல் வாய் விண்டதுபோல வினை முளைக்குந் தன்மை யழியும்.

11. பொ-ரை : பூந்தராய் என்னும் சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன் ஆய்ந்து சொல்லிய பாடல்களைப் பாடி அன்னியூர் வேந்தனாகிய சிவபிரானைச் சேர்ந்து வாழ்வீர்களாக.

கு-ரை : பந்தன் - ஞானசம்பந்தன் என்பதன் முதற்குறை. பூந்த ராய் - சீகாழி.

Koviloor Digital Library

97. திருப்புறவம்

பண்: குறிஞ்சி

பதிக எண்: 97

திருச்சிற்றம்பலம்

1047. எய்யாவென்றித் தானவரூர்மூன்
றெரிசெய்த
மையார்கண்டன் மாதுமைவைகுந்
திருமேனிச்
செய்யான் வெண்ணீறணிவான் றிகழ்பொற்
பதிபோலும்
பொய்யாநாவி னந்தணர்வாழும்
புறவம்மே. 1

1048. மாதொருபாலு மாலொருபாலும்
மகிழ்கின்ற
நாதனென்றேத்து நம்பரன்வைகுந்
நகர்போலும்

1. பொ-ரை : பொய் கூறாத நாவினை உடைய அந்தணர்கள் வாழும் திருப்புறவம் என்னும் சீகாழிப்பதி, இளையாத வெற்றியை உடைய அசுரர்களின் முப்புரங்களை எரித்த நீலகண்டன், உமையம்மையை ஒருகூறாகக் கொண்டு எழுந்தருளும், செய்ய திருமேனியனாய் வெண்ணீறு அணிந்தவனாய் விளங்கும் அழகிய பதியாகும்.

கு-ரை : புறவம் திரிபுரம் எரித்த நீலகண்டர்பதிபோலும் என்கின்றது. எய்யா வென்றி - இளையாத வெற்றியையுடைய. தானவர் - அசுரர்கள். மை - விடம். பொய்யாநாவின் அந்த்ணர் - பொய்யே சொல்லாத நாவினை உடைய அந்தணர். அவர்கள் கூறும் உரை, தவறாத நா என்றுமாம்.

2. பொ-ரை : குருக்கத்தியில் மேவிய வண்டுகள் இசைபாடவும் மயில்கள் ஆடவும், அவற்றிற்குப் பரிசிலாகப் புன்னை மரங்கள் விரிந்த மலர்களின் மகரந்தங்களைப் பொன்னாக அளிக்கும் இயற்கை

Koviloor Digital Library

மாதவிமேய வண்டிசைபாட
மயிலாடப்
போதலர்செம்பொன் புன்னைகொடுக்கும்
புறவம்மே. 2

1049. வற்றாநதியும் மதியும் பொதியுஞ்
சடைமேலே
புற்றாரரவின் படமாடவுமிப்
புவனிக்கோர்
பற்றாயிடுமின் பலியென்றடைவார்
பதிபோலும்
பொற்றாமரையின் பொய்கைநிலாவும்
புறவம்மே. 3

வளம் சான்ற புறவம் என்னும் பதி, உமையம்மையை ஒரு பாகமாகவும் திருமாலை ஒரு பாகமாகவும் கொண்டு மகிழ்கின்ற நம் மேலான தலைவன் வைகும் நகராகும்.

கு-ரை : ஒருபாதி உமையும் ஒருபாதி மாலுமாக இருக்கும் நாதன் நகர் புறவம் என்கின்றது. மாதவி மேய வண்டு - குருக்கத்தியில் மேவிய வண்டுகள். புன்னை போதலர் செம்பொன் கொடுக்கும் புறவம் - புன்னைமரங்கள் போதாய் இருந்து அலர்ந்து மகரந்தங்களாய செம்பொன்னைக் கொடுக்கும் புறவம்; இதனால் மரங்களும் வள்ளன்மை செய்யும் நகரம் என்றறிவித்தவாறு.

3. பொ-ரை : என்றும் நீர் வற்றாத கங்கையும், பிறையும் பொருந்திய சடையின்மேல் புற்றை இடமாகக் கொண்ட பாம்பு படத்துடன் ஆட, இவ்வுலகிற்கு ஒரு பற்றுக்கோடாகி, எனக்குப் பலி இடுமின் என்று பல ஊர்களுக்கும் செல்லும் சிவபிரானது பதி, அழகிய தாமரைகள் மலர்ந்துள்ள பொய்கை விளங்கும் புறவம் என்னும் பதியாகும்.

கு-ரை : இவ்வுலகத்திற்கு ஒருபற்றுக்கோடாக இருக்க எமக்குப் பலியிடுங்கள் என்றுவரும் இறைவன்பதி புறவம் என்கின்றது.

வற்றா நதி - கங்கை. பொற்றாமரையின் பொய்கை நிலாவும் - பொற்றாமரையைப்போல பிரமதீர்த்தம் விளங்குகின்ற.

Koviloor Digital Library

1050. துன்னார்புரமும் பிரமன்சிரமுந்
துணிசெய்து
மின்னார்சடைமே லரவும்மதியும்
விளையாடப்
பன்னாளிடுமின் பலியென்றடைவார்
பதிபோலும்
பொன்னார்புரிநூ லந்தணர்வாழும்
புறவம்மே. 4

1051. தேவாவரனே சரணென்றிமையோர்
திசைதோறுங்
காவாயென்று வந்தடையக்கார்
விடமுண்டு
பாவார்மறையும் பயில்வோருறையும்
பதிபோலும்
பூவார்கோலச் சோலைசுலாவும்
புறவம்மே. 5

4. பொ-ரை : பகைவர்களாகிய திரிபுர அசுரர்களின் முப்புரங்களையும், பிரமனின் தலைகளில் ஒன்றையும் அழித்து, மின்னல் போல் ஒளி விடும் சடைமுடி மேல் பாம்பும் மதியும் பகை நீங்கி விளையாடுமாறு சூடிப் பல நாள்களும் சென்று பலியிடுமின் என்று கூறித் திரிவானாகிய சிவபிரானது பதி, பொன்னாலியன்ற முப்புரி நூலை அணிந்த அந்தணர்கள் வாழும் புறவமாகும்.

கு-ரை : திரிபுரத்தையும் பிரமன் சிரத்தையும் அழித்து, சடைமேல் பாம்பும் மதியும் விளையாட, பலியிடுங்கள் என்று வருவார் பதி புறவம் என்கின்றது. பொன் ஆர் புரிநூல் - பொன்னாலாகிய பூநூல்.

5. பொ-ரை : பாற்கடலைக் கடைந்தபோது எழுந்த விடத்தின் கொடுமை தாங்காது, தேவர்கள் திசைதோறும் சூழ்ந்து நின்று 'தேவனே! அரனே! உனக்கு அடைக்கலம் எங்களைக் காவாய்' எனச் சரண் அடைய, அக்கடலில் தோன்றிய கரிய விடத்தை உண்டு, பாடல்களாக அமைந்த வேதங்களைப் பயிலும் சிவபெருமான் வாழும் பதி, மலர்கள் நிறைந்த அழகிய சோலைகள் சூழ்ந்த புறவம் என்னும் பதியாகும்.

Koviloor Digital Library

1052. கற்றறிவெய்திக் காமன்முன்னாகும்
முகவெல்லாம்
அற்றரனேநின் னடிசரணென்னு
மடியோர்க்குப்
பற்றதுவாய பாசுபதன்சேர்
பதியென்பர்
பொற்றிகழ்மாடத் தொளிகள் நிலாவும்
புறவம்மே. 6

1053. எண்டிசையோரஞ் சிடுவகைகார்சேர்
வரையென்னக்
கொண்டெழுகோல முகில்போற்பெரிய
கரிதன்னைப்
பண்டுரிசெய்தோன் பாவனைசெய்யும்
பதியென்பர்
புண்டரிகத்தோன் போன்மறையோர்சேர்
புறவம்மே. 7

கு-ரை : தேவர்கள் 'தேவதேவா! அடைக்கலம்' என்று அரற்ற விடம் உண்டவர் பதி இது என்கின்றது. சரண் - அடைக்கலம். கார் விடம்- கரிய விஷம். பா ஆர் மறை - பாக்களோடு கூடிய வேதம்.

6. பொ-ரை : மெய்ந்நூல்களைக் கற்று, அதனால் நல்லறிவும் பெற்று, காமனாகிய மன்மதனின் குறிப்பினால் ஆகும் காமவிருப்ப மெல்லாம் அற்று, 'அரனே! நின் திருவடிகளே சரண்' என்று கூறும் அடியவர்கட்குப் பற்றுக்கோடாய்ப் பாசுபதன் எழுந்தருளிய பதி, பொன் நிறைந்து விளங்கும் மாடவீடுகளின் ஒளி சூழ்ந்த புறவம் என்னும் பதியாகும் என்பர்.

கு-ரை : கற்றறிந்து, காமனுக்கும் முன்னோனாயிருக்கும் முக ஒளியெல்லாம் கெட்டு, அரனே அடைக்கலமென்னும் அடியவருக்குப் பற்றாய பரன் சேர் பதி புறவம் என்கின்றது. முகவு - முகவொளி.

7. பொ-ரை : எண்திசையில் உள்ளாரும் அஞ்சிடுமாறு கரிய மலைபோலவும், நீரை முகந்து கொண்டெழுந்த அழகிய கரிய மேகம் போலவும் வந்த பெரிய களிற்று யானையை முற்காலத்தில் கொன்று அதன் தோலை உரித்துப் போர்த்த சிவபிரான் விரும்பியிருக்கும் பதி,

Koviloor Digital Library

1054. பரக்குந்தொல்சீர்த் தேவர்கள்சேனைப்
பௌவத்தைத்
துரக்குஞ்செந்தீப் போலமர்செய்யுந்
தொழின்மேவும்
அரக்கன்றிண்டோ ளழிவித்தானக்
காலத்திற்
புரக்கும்வேந்தன் சேர்தருமூதூர்
புறவம்மே. 8

1055. மீத்திகழண்டந் தந்தயனோடு
மிகுமாலும்
மூர்த்தியை நாடிக் காணவொணாது
முயல்விட்டாங்

தாமரை மலர் மேல் உறையும் நான்முகன் போல வேதங்களில் வல்ல அந்தணர்கள் வாழும் புறவமாகும்.

கு-ரை : திசையெல்லாம் நடுங்கவந்த யானையை உரித்துப் போர்த்தவன் பதி புறவம் என்கின்றது. கார் சேர் வரை - கருமை சேர்ந்த மலை. கோலமுகில்போல் - அழகிய மேகத்தைப்போல. பாவனை செய்யும் - விரும்பியிருக்கும். புண்டரிகத்தோன் - பிரமன்.

8. பொ-ரை : எங்கும் பரவிய பழமையான புகழை உடைய தேவர்களின் கடல் போன்ற படையை, ஊழித் தீப் போன்று அழிக்கும் தொழிலில் வல்ல இராவணனின் வலிய தோள் வலியை அக்காலத்தில் அழித்தருளி, அனைத்து உலகங்களையும் புரந்தருளும் வேந்தனாக விளங்கும் சிவபிரான் எழுந்தருளிய பழமையான ஊர் புறவமாகும்.

கு-ரை : தேவர்களின் சேனைக்கடலை ஓட்டும் ஊழித் தீயைப் போல, சண்டைசெய்யும் இராவணனது தோள்வலியை வாட்டியவனது பதி புறவம் என்கிறது. பௌவம் - கடல். துரக்கும் - ஓட்டும் .

9. பொ-ரை : மேலானதாக விளங்கும் உலகங்களைப் படைத்த பிரமனும், புகழால் மேம்பட்ட திருமாலும் அழலுருவாய் வெளிப்பட்ட சிவமூர்த்தியின் அடிமுடிகளைக்காண இயலாது தமது முயற்சியைக் கைவிட்டு ஏத்த, அவர்கட்குக் காட்சி தந்தருளிய சிவபிரானது இடம், மலர்கள் நிறைந்த சோலைகளில் தென்றல் வந்து உலாவும் புறவமாகும்.

Koviloor Digital Library

கேத்தவெளிப்பா டெய்தியவன்ற
னிடமென்பர்
பூத்திகழ்சோலைத் தென்றலுலாவும்
புறவம்மே. 9

1056. வையகநீர்தீ வாயுவும்விண்ணும்
முதலானான்
மெய்யலதேர ருண்டிலையென்றே
நின்றேதங்
கையினிலுண்போர் காணவொணாதான்
நகரென்பர்
பொய்யகமில்லாப் பூசுரர்வாழும்
புறவம்மே. 10

1057. பொன்னியன்மாடப் புரிசைநிலாவும்
புறவத்து
மன்னியவீசன் சேவடிநாளும்
பணிகின்ற

கு-ரை : அயனும் மாலும் அறியாத பெருமான் இடம் புறவம் என்கிறது. மூர்த்தியை - உருவங்கொண்ட இறைவனை.

10. பொ-ரை : மண், நீர், தீ, காற்று, விண் ஆகிய ஐம்பூதங்களில் நிறைந்து, அவற்றின் முதலாக விளங்கும் இறைவனாய், உண்மையல் லாதவற்றைப் பேசி உண்டு இல்லை என்ற உரைகளால் அத்தி நாத்தி எனக் கூறிக் கொண்டு தம் கைகளில் உணவேற்று உண்போராய சமணரும், புத்தரும் காண ஒண்ணாத சிவபிரானின் நகர், நெஞ்சிலும் பொய்யறியாத பூசுரர் வாழும் புறவமாகும்.

கு-ரை : ஐம்பெரும் பூதமானவனும் புறச்சமயிகளால் பொருந்த ஒண்ணாதவனுமாகிய இறைவன் நகரம் புறவம் என்கின்றது. வையகம் - மண். உண்டு இலை என்று - அஸ்தி நாஸ்தி கூறி. பூசுரர் - அந்தணர்.

11. பொ-ரை : பொன்னால் இயன்ற மாடங்களின் மதில்கள் சூழ்ந்த, புறவம் என்னும் பதியில் நிலைபெற்று விளங்கும் சிவபிரானின் சேவடிகளை, நாள்தோறும் பணிந்து, சீவபோதம் அற்றுச் சிவபோதம்

Koviloor Digital Library

தன்னியல்பில்லாச் சண்பையர்கோன்சீர்ச்
சம்பந்தன்
இன்னிசையீரைந் தேத்தவல்லோர்கட்
கிடர்போமே. 11

திருச்சிற்றம்பலம்

உடையவனாய்ப் போற்றும் சண்பையர் தலைவனாகிய புகழ்மிக்க ஞானசம்பந்தன், இன்னிசையோடு பாடிய இப்பதிகப் பாடல்கள் பத்தையும் பாடி ஏத்தவல்லவர்கட்கு, இடர் போகும்.

கு-ரை : புறவத்து ஈசனை, இப்பதிகம் சொல்லி ஏத்த வல்லாருக்கு இடர்போம் என்கின்றது. தன்னியல்பில்லாச் சண்பையர் கோன் - சீவபோதமற்ற திருஞானசம்பந்தர்.

நால்வர் நான்மணி மாலை

கொள்ளைகொள்ள வீடுதவிக் கூற்றைப் பிடர்பிடித்துத்
தள்ளுந் திருஞான சம்பந்தா - வெள்ளமிடும்
ஏடேறப் பால்குறைந்த தென்றழுவ ரேகழுவின்
காடேறப் புக்கவரு கர்.

வானும் புகழ்புகலி மன்னன் றொடர்பொன்று
தேனுந் திதழியோன் சீரேடு - தானுங்
கரியாய் மொழியுங் கரியாய் விடாம
லெரியா ரழல்வீழ்ந் தெழுந்து.

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடையை - மறுத்தார்சம்
பந்தன் சிவிகை பரித்தார் திரிகுவர்மற்
றுந்துஞ் சிவிகையினை யூர்ந்து.

- சிவப்பிரகாச சுவாமிகள்.

Koviloor Digital Library

98. திருச்சிராப்பள்ளி

பதிக வரலாறு:

ஞானசம்பந்தர் மூக்கீச்சரம் பணிந்து, திருச்சிராப்பள்ளிச் சிலம்பணைந்தார். அங்கே இறைவனை வணங்கி மெய்ம் மகிழ்ந்து மனங்குளிர ''நன்றுடையானை'' என்னும் சொற்றமிழ் மாலை வேய்ந்து போற்றினார்கள்.

பண்: குறிஞ்சி

பதிக எண்: 98

திருச்சிற்றம்பலம்

1058. நன்றுடையானைத் தீயதிலானை
நரைவெள்ளே
றொன்றுடையானை யுமையொருபாக
முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச்
சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங்
குளிரும்மே. 1

1. பொ-ரை : நன்மைகளையே தனக்கு உடைமையாகக் கொண்டவனை, தீயது ஒன்றேனும் இல்லாதவனை, மிக வெண்மையான ஆனேற்றைத் தனக்கு ஊர்தியாகக் கொண்டவனை, பார்வதியை ஒரு பாகமாக உடையவனை, அவனது அருளாலன்றிச் சென்றடைய முடியாத வீடு பேறாகிய செல்வத்தை உடையவனை, சிராப்பள்ளிக் குன்றில் எழுந்தருளியுள்ளவனைப் போற்ற என் உள்ளம் குளிரும்.

கு-ரை : சிராப்பள்ளி நாதரைச் சொல்ல என்னுள்ளம் குளிரும் என்கின்றார். நன்றுடையான், தீயதில்லான் இவையிரண்டும் இத் தலத்துத் தீர்த்தங்கள்.

நரைவெள்ளேறு - மிக வெள்ளிய இடபம். சென்றடையாத திரு - நல்வினைப்போகம் காரணமாக ஆன்மாக்களுக்கு வருவது போல வந்து அடையாத இயற்கையேயானதிரு.

Koviloor Digital Library

1059. கைம்மகவேந்திக் கடுவனொடூடிக்
கழைபாய்வான்
செம்முகமந்தி கருவரையேறுஞ்
சிராப்பள்ளி
வெம்முகவேழத் தீருரிபோர்த்த
விகிர்தாநீ
பைம்முகநாகம் மதியுடன்வைத்தல்
பழியன்றே. 2

1060. மந்தம்முழவம் மழலைததும்ப
வரைநீழல்
செந்தண்புனமுஞ் சுனையுஞ்சூழ்ந்த
சிராப்பள்ளிச்

2. பொ-ரை : சிவந்த முகம் உடைய பெண் குரங்கு தனது ஆண் குரங்கோடு ஊடல் கொண்டு மூங்கில் புதரில் பாய்ந்து தன் உயிரை மாய்த்துக் கொள்ளுதற்காகத் தனது குட்டியையும் ஏந்திக் கொண்டு கரிய மலை மீது ஏறும் சிராப்பள்ளியில் எழுந்தருளியவனும் கொடிய முகத்தோடு கூடிய யானையின் தோலைப் போர்த்துள்ள விகிர்தனும் ஆகிய நீ படத்தோடு கூடிய முகத்தினை உடைய நாகப்பாம்பை அதன் பகைப்பொருளாகிய பிறை மதியுடன் முடிமிசை அணிந்திருத்தல் பழிதரும் செயல் அன்றோ?

கு-ரை : பெண்குரங்கு ஆண்குரங்கோடு ஊடி, குட்டியையும் தூக்கிக் கொண்டு மூங்கிலில் பாய்வதற்காக மலைமிசையேறும் சிராப்பள்ளிநாதா! நாகத்தையும் மதியையும் உடனாகவைத்தல் உனக்குப் பழியாகுமல்லவா?. கைம்மகவு - கைக்குழந்தை. கடுவன் - ஆண்குரங்கு. கழை - மூங்கில். செம்முக மந்தி - சிவந்த முகத்தோடு கூடிய பெண்குரங்கு. பெண்குரங்கின் முகம் சிவப்பாயிருக்குமென்ற குரங்கின் இயற்கையையும் ஈண்டு எண்ணுக. வெம்முக வேழம் - கொடுந்தன்மையுடைய யானை.

3. பொ - ரை : மந்த சுருதியினை உடைய முழவு மழலை போல ஒலி செய்ய, மலை அடிவாரத்தில் செவ்விய தண்ணிய தோட்டங்களை யும் சுனைகளையும் கொண்டுள்ள சிராப்பள்ளியில் எழுந்தருளிய அழகிய மலர்களைச் சடைமேற் சூடியவரும், விடையேற்றை ஊர்ந்து

Koviloor Digital Library

சந்தம்மலர்கள் சடைமேலுடையார்
விடையூரும்
எந்தம்மடிக ளடியார்க்கல்ல
லில்லையே. 3

1061. துறைமல்குசாரற் சுனைமல்குநீலத்
திடைவைகிச்
சிறைமல்குவண்டுந் தும்பியும்பாடுஞ்
சிராப்பள்ளிக்
கறைமல்குகண்டன் கனலெரியாடுங்
கடவுள்ளெம்
பிறைமல்குசென்னி யுடையவனெங்கள்
பெருமானே. 4

வருபவரும் ஆகிய எம் தலைவராகிய செல்வரை வணங்கும் அடியார்களுக்கு அல்லல் இல்லை.

கு-ரை : சிராப்பள்ளிநாதனின் அடியார்க்கு அல்லல் இல்லை என்கிறது. மந்தம் முழவம் - மந்தஸ்தாயியில் அடிக்கப்படும் முழவம். மழலை - பொருள் விளங்காத ஒலி.

4. பொ-ரை : பலவாகிய வழிகளைக் கொண்டுள்ள மலை யடிவாரத்தில் விளங்கும் சுனைகளில் நெருங்கிப் பூத்த நீல மலர்களில் தங்கிச் சிறகுகளை உடைய வண்டுகளும் தும்பியும் இசைபாடும் சிராப் பள்ளியில் எங்கள் பெருமானாகிய சிவபிரான் கறை பொருந்திய கண்டத்தை உடையவனாய்க் கனலும் எரியைக் கையில் ஏந்தி ஆடும் எம் கடவுளாய்ப் பிறை பொருந்திய சென்னியை உடையவனாய் விளங்கியருள்கின்றான்.

கு-ரை : நீலகண்டன், எரியாடுங்கடவுள், பிறைச்சென்னியன் எங்கள் கடவுள் என்கின்றது.

வண்டும் தும்பியும் நீலப்பூவில் தங்கிப் பாடும் என்ற சுனையியற்கை முதல் இரண்டடிகளில் குறிக்கப் பெறுகிறது. கறை - விடம்.

Koviloor Digital Library

1062. கொலைவரையாத கொள்கையர்தங்கண்
மதின்மூன்றும்
சிலைவரையாகச் செற்றனரேனுஞ்
சிராப்பள்ளித்
தலைவரை நாளுந் தலைவரல்லாமை
யுரைப்பீர்காள்
நிலவரைநீல முண்டதும்வெள்ளை
நிறமாமே. 5

1063. வெய்யதண்சாரல் விரிநிறவேங்கைத்
தண்போது
செய்யபொன்சேருஞ் சிராப்பள்ளிமேய
செல்வனார்
தையலொர்பாக மகிழ்வர்நஞ்சுண்பர்
தலையோட்டில்
ஐயமுங்கொள்வ ராரிவர்செய்கை
யறிவாரே. 6

5. பொ-ரை : கொல்லும் தொழிலைக் கைவிடாத கொள்கை யினராகிய அவுணர்கள் மும்மதில்களையும் மேரு மலையை வில்லாகக் கொண்டு அழித்தவராயினும் சிராப்பள்ளியின் தலைவ ராகிய அப்பெருமானாரைத் தலைவரல்லர் என்று நாள் தோறும் கூறிவரும் புறச் சமயிகளே! நிலவுலகில் நீலம் உண்ட துகிலின் நிறத்தை, வெண்மை நிறமாக மாற்றல் இயலாதது போல நீவிர் கொண்ட கொள்கையையும் மாற்றுதல் இயலுவதொன்றோ?

கு-ரை : சிவபெருமான் முழுமுதற் கடவுளல்லர் என்பார்க்கு உண்மை உணர்த்துவது இப்பாடல். கொலைவரையாத கொள்கையர்- கொலையை நீக்காத கொள்கையினை உடைய திரிபுராதிகள். நிலவரை நீலம் - நிலவுலகில் நீலநிறம் ஊட்டப்பட்ட துணி. வெள்ளை நிறம் ஆமே - வெண்மை நிறம் உடையதாதல் கூடுமா? நீலநிறத்துக்கு மட்டும் உரிய பண்பு இது. அதுபோல நீவர் கொண்ட கொள் கையையும் மாற்றல் இயலாது. *(பழமொழி - 168.)*

6. பொ-ரை : எல்லோராலும் விரும்பத்தக்க குளிர்ந்த மலைச்சார லில் விரிந்த தண்ணிய பொன்னிறமான வேங்கை மலர்கள்

Koviloor Digital Library

1064. வேயுயர்சாரற் கருவிரலூகம்
விளையாடும்
சேயுயர்கோயிற் சிராப்பள்ளிமேய
செல்வனார்
பேயுயர் கொள்ளி கைவிளக்காகப்
பெருமானார்
தீயுகந்தாடல் திருக்குறிப்பாயிற்
றாகாதே. 7

சிவந்த பொன் போன்ற நிறத்தனவாய் உதிரும் சிராப்பள்ளி மலையில் வீற்றிருக்கும் செல்வராகிய சிவபிரான் உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு மகிழ்வர். நஞ்சினை உண்பர். தலையோட்டில் பலி ஏற்பர். வேறுபட்ட இவர்தம் செயல்களின் உண்மையை யார் அறியவல்லார்.

கு-ரை : சிராப்பள்ளிமேவிய செல்வர் பெண்ணொரு பாக மாகுவர், ஆகாதநஞ்சை அருந்துவர், பிரமகபாலத்தில் பிச்சையும் எடுப்பர், இவர் செயல்கள் ஒன்றோடொன்று ஒத்திருந்தனவல்ல என்ற படி.

வெய்ய - கொடிய; விரும்பத்தக்க என்றுமாம். வேங்கைப்பூ பொன் சேரும் சிராப்பள்ளி என்றது, வேங்கை மலர்கள் பொன் போன்ற நிறத்தனவாய் நிலத்தைச்சேரும் மலை என்க. ஐயம் - பிச்சை.

7. பொ-ரை : கரிய விரல்களை உடைய கருங்குரங்குகள் விளை யாடும் மூங்கில் மரங்கள் உயர்ந்து வளர்ந்துள்ள சாரலை உடைய சிராப்பள்ளியில் நெடிதாக உயர்ந்துள்ள கோயிலில் மேவிய செல்வராகிய பெருமானார் பேய்கள் உயர்த்திப் பிடித்த கொள்ளிகளைக் கைவிளக்காகக் கொண்டு, சுடுகாட்டில் எரியும் தீயில் மகிழ்ந்து நடனம் ஆடும் திருக்குறிப்பு யாதோ? அஃது அவரை அடைய விரும்பும் மகளிர்க்குப் புலனாகாததாக உள்ளதே.

கு-ரை : தாயுமானவர், பேயின் கையிலுள்ள கொள்ளியைக் கை விளக்காகக் கொண்டு ஆடுதல் திருவுளக் குறிப்பாயின் அது ஆகாது என்கின்றது. வேய் - மூங்கில். கருவிரலூகம் - கருங்குரங்கு. சேய் - தூரம். கைவிளக்கு - சிறியவிளக்கு.

Koviloor Digital Library

1065. மலைமல்குதோளன் வலிகெடவூன்றி
மலரோன்றன்
தலைகலனாகப் பலிதிரிந்துண்பர்
பழியோரார்
சொலவலவேதஞ் சொலவலகீதஞ்
சொல்லுங்கால்
சிலவலபோலுஞ் சிராப்பள்ளிச்சேடர்
செய்கையே. 8

1066. அரப்பள்ளியானு மலருறைவானு
மறியாமைக்
கரப்புள்ளிநாடிக் கண்டிலரேனுங்
கல்சூழ்ந்த
சிரப்பள்ளிமேய வார்சடைச்செல்வர்
மனைதோறும்
இரப்புள்ளீரும்மை யேதிலர்கண்டா
லிகழாரே. 9

8. பொ-ரை : மலைபோன்ற திண்மை நிரம்பிய தோள்களை உடைய இராவணனின் வலிமை கெடுமாறு ஊன்றி அழித்துத் தாமரை மலர் மேல் உறைபவனாகிய பிரமனது தலையோட்டை உண்கலனாகக் கொண்டு திரிந்து அவ்வோட்டில் பலியேற்று உண்ணுவதால் தமக்குப் பழி வருமே என்று நினையாதவராய், இசையோடு ஓதத் தக்க வேதங் களையும் கீதங்களையும் அன்பர்கள் ஓதுமிடத்துச் சில பிழைபட்டன என்றாலும் அவற்றையும் ஏற்று மகிழ்பவர் சிராப்பள்ளி மேவிய பெருமைக்குரிய சிவனார். இவர்தம் செய்கைகளின் உட்பொருள் யாதோ?

கு-ரை : தலையே கலனாகப் பலி ஏற்றுண்பார்; சொல்லவல்ல வேதத்தையும் பாடலையும் சொன்னால் சிராப்பள்ளியார் செய்கை சில அல்லாதன போலும் என்கின்றது. மல்கும் - நிறைந்த, வேதங்களையும். பாடல்களையும் சொன்னால் அவற்றில் சில அல்லாதன என்பதை அவர் செய்கைகளிலிருந்து அறிகிறோம் என்பது கருத்து.

9. பொ-ரை : பாம்பணையில் பள்ளி கொள்ளும் திருமாலும், தாமரை மலர்மேல் உறையும் பிரமனும் அறியாதவாறு அடிமுடி கரந்து

Koviloor Digital Library

1067. நாணாதுடைநீத் தோர்களுங்கஞ்சி
நாட்காலை
ஊணாப்பகலுண் டோதுவோர்க
ளுரைக்குஞ்சொல்
பேணாதுறுசீர் பெறுதுமென்பீரெம்
பெருமானார்
சேணார்கோயில் சிராப்பள்ளிசென்று
சேர்மினே. 10

உயர்ந்து நின்றதை அவர்கள் தேடிக் கண்டிலர் என்ற பெருமை உமக்கு உளதாயினும் மலையகத்துள்ள சிராப்பள்ளியில் எழுந்தருளிய நீண்ட சடையினை உடைய செல்வராகிய சிவபிரானே நீர் வீடுகள் தோறும் சென்று இரப்பதைக் கருதுகின்றீர். அயலவர் கண்டால் இதனை இகழாரோ?

கு-ரை : அயனும் மாலும் உம்மைக் காணாவிட்டாலும் நீர் மனைதொறும் பிச்சைக்குப் புறப்படாதீர்; உம்மை யாவரும் இகழார்கள் என்கிறது.

அரப்பள்ளியான் - பாம்பைப் படுக்கையாகக்கொண்ட திருமால். கரப்பு உள்ளி - இறைவன் மறைந்திருப்பதை எண்ணி. நாடி - தேடி, ஏதிலர் - அயலார்.

10. பொ-ரை : நாணாது உடையின்றித் திரியும் திகம்பர சமணரும், காலையிலும் நண்பகலிலும் கஞ்சியை மட்டும் உணவாக உண்டு வாழும் புத்தரும் கூறும் பழிப்புரைகளைக் கருதாது நாம் சிறப்படைய வேண்டுமென்று விரும்பும் நீர் எம்பெருமான் உறையும் வானளாவிய கோயிலை உடைய சிராப்பள்ளியைச் சென்று அடைவீர்களாக.

கு-ரை : புத்தரும் சமணரும் உரைக்கும் சொல்லைப் பேணாது பெருஞ்சிறப்பெய்த விரும்புபவர்களே! சிராப்பள்ளி சேர்மின் என்கின்றது.

நாணாது - வெட்கப்படாமல். கஞ்சியை விடியலுண வாகவும், பகலிலும் உண்டு ஓதுபவர்கள் புத்தர்கள். பேணாது - போற்றாது. உறுசீர் - மிக்கபுகழ். சேணார் கோயில் - ஆகாயமளாவிய கோயில்.

Koviloor Digital Library

1068. தேனயம்பாடுஞ் சிராப்பள்ளியானைத்
திரைசூழ்ந்த
கானல்சங்கேறுங் கழுமலவூரிற்
கவுணியன்
ஞானசம்பந்த னலமிகுபாட
லிவைவல்லார்
வானசம்பந்தத் தவரொடுமன்னி
வாழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

11.பொ-ரை : தேனுண்ணும் வண்டுகள் இனிய இசைபாடும் சிராப்பள்ளியில் விளங்கும் இறைவனை, அலைகளிற் பொருந்திவந்த சங்குகள் சோலைகளில் ஏறி உலாவும் கடலை அடுத்துள்ள கழுமல ஊரில் கவுணியர் கோத்திரத்தில் தோன்றிய ஞானசம்பந்தன் பாடிப் போற்றிய, நன்மைகள் மிக்க இப்பதிகப் பாடல்களை ஓதவல்லவர் வானுலகிற் சம்பந்தமுடையவராகத் தேவர்களோடு நிலைபெற்று வாழ்வர்.

கு-ரை : சிராப்பள்ளியானைத் துதித்த ஞானசம்பந்தன் பாடலிவை வல்லார் தேவரொடு சேர்ந்து வாழ்வர் என்கின்றது. தேன் - வண்டு. கானல் - கடற்கரைச்சோலை. வானசம்பந்தத்தவர் - வானுலகிற் சம்பந்தமுடைய தேவர்கள்.

திருஞானசம்பந்தர் புராணம்

செம்மணி வாரி அருவிதூங்கும்
சிராப்பள்ளி மேய செழுஞ்சுடரைக்
கைம்மலை ஈருரி போர்வைசாத்துங்
கண்ணுத லாரைக் கழல்பணிந்து
மெய்ம்மகிழ் வெய்தி உளங்குளிர
விளங்கிய சொற்றமிழ் மாலைவேய்ந்து
மைம்மலர் கண்டர்தம் ஆனைக்காவை
வணங்கும் விருப்பொடு வந்தணைந்தார்.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

99. திருக்குற்றாலம்

பதிக வரலாறு:

சண்பைகாவலர் திருச்சுழியலை வணங்கிப் பின்னர் குற்றாலத்தை அடைந்து குற்றாலநாதர் குரைகழல்போற்றி 'வம்பார் குன்றம்' என்னும் இப்பதிகத்தை அருளிச்செய்தார்.

பண்: குறிஞ்சி

பதிக எண்:99

திருச்சிற்றம்பலம்

1069. வம்பார்குன்றம் நீடுயர்சாரல்
வளர்வேங்கைக்
கொம்பார்சோலைக் கோலவண்டியாழ்செய்
குற்றாலம்
அம்பானெய்யோ டாடலமர்ந்தா
னலர்கொன்றை
நம்பான்மேய நன்னகர்போலும்
நமரங்காள். 1

1. பொ -ரை : நம்மவர்களே! காணுந்தோறும் புதுமையைப் பயக்கும் குன்றங்களையும், நீண்டுயர்ந்த மலைச்சாரலையும், அழகிய வண்டுகள் யாழ் போல் ஒலிக்கும் வளர்ந்த வேங்கை மரங்களின் கிளைகள் அடர்ந்த சோலைகளையும் உடைய குற்றாலம், இனிய பால் நெய் ஆகியவற்றோடு நீராடலை விரும்புபவனாய் விரிந்த கொன்றை மலர்களைச் சூடிய நம்பனாகிய சிவபெருமான் எழுந்தருளிய நன்னகராகும்.

கு-ரை : திருக்குற்றாலம், பால்நெய்யாடிய பரமன் உறை கோயில் என்கின்றது. வம்பு - புதுமை. வம்பார்குன்றம் - பலமுறை கண்டார்க்கும் புதுமையையே பொருந்தும் மலை. நீடு உயர் சாரல் - காலத்தானும் இடத்தானும் நீடிக்கும் சாரல். கோல வண்டு - அழகிய வண்டு. பால் நெய்யோடு - பால் நெய் இவற்றோடு. அம் ஆடல் அமர்ந்தான் - நீராடலை விரும்பியவன். நமரங்காள் - நம்மவர்களே!

Koviloor Digital Library

1070. பொடிகள்பூசித் தொண்டர்பின்செல்லப்
புகழ்விம்மக்
கொடிகளோடுந் நாள்விழமல்கு
குற்றாலம்
கடிகொள்கொன்றை கூவிளமாலை
காதல்செய்
அடிகண்மேய நன்னகர்போலும்
மடியீர்காள். 2

1071. செல்வமல்கு செண்பகம்வேங்கை
சென்றேறிக்
கொல்லைமுல்லை மெல்லரும்பீனுங்
குற்றாலம்
வில்லினொல்க மும்மதிலெய்து
வினைபோக
நல்கும்நம்பா னன்னகர்போலுந்
நமரங்காள். 3

2. பொ-ரை : அடியவர்களே! திருநீறு பூசித் தொண்டர்கள் பின்னே வரவும், புகழ் சிறக்கவும், கொடிகளை ஏந்தியவர்களாய் அன்பர்கள் முன்னால் செல்லவும், நாள்தோறும் விழாக்கள் நிகழும் நகர் குற்றாலமாகும். இவ்வூர் மணம் கமழும் கொன்றை வில்வமாலை ஆகியவற்றை விரும்பும் அடிகளாகிய சிவபிரானார் எழுந்தருளிய நன்னகராகும்.

கு-ரை : நீறணிந்து தொண்டர்கள் பின்செல்ல, நாள்விழா நிறைந்த குற்றாலம், கொன்றையையும் கூவிளத்தையும் விரும்பிய அடிகள் நகர் என்கின்றது. பொடி - விபூதி.

3. பொ-ரை : நம்மவர்களே! செல்வம் நிறைந்ததும், செண்பகம் வேங்கை ஆகிய மரங்களில் தாவிப் படர்ந்து முல்லைக் கொடி அரும்புகளை ஈனுவதும் ஆகிய குற்றாலம், வில்லின் நாண் அசைய அதன்கண் தொடுத்த கணையை விடுத்து மும்மதில்களையும் எய்து அழித்துத் தன்னை வழிபடும் அன்பர்களின் வினை மாசுகள் தீர அருள் புரியும் சிவபிரான் எழுந்தருளியுள்ள நன்னகராகும்.

Koviloor Digital Library

1072. பக்கம்வாழைப் பாய்கனியோடு
பலவின்தேன்
கொக்கின்கோட்டுப் பைங்கனிதூங்குங்
குற்றாலம்
அக்கும்பாம்பு மாமையும்பூண்டோ
ரனலேந்தும்
நக்கன்மேய நன்னகர்போலும்
நமரங்காள். 4

1073. மலையார்சாரன் மகவுடன்வந்த
மடமந்தி
குலையார்வாழைத் தீங்கனிமாந்துங்
குற்றாலம்
இலையார்சூல மேந்தியகையா
னெயிலெய்த
சிலையான்மேய நன்னகர்போலுஞ்
சிறுதொண்டீர். 5

கு-ரை : முல்லை, செண்பகம், வேங்கை இவற்றின்மீதேறி அரும்பீனும் குற்றாலமே திரிபுரம் எய்து அவர்கள் பாவம் தொலைத்து அருள்வழங்கும் இறைவன் நகர் என்கின்றது. கொல்லை - காடு.

4. பொ-ரை : மலையின் பக்கங்களில் எல்லாம் முளைத்த வாழை மரத்தின் கனிகளோடு தேன் ஒழுகும் பலாவின் பழங்களும் மாமரக் கிளைகளில் பழுத்த புத்தம் புதிய நறுங்கனிகளும் ஆய முக்கனிகளும் அவ்வம்மரங்களில் தொங்கும் குற்றால நகர், என்புமாலை, பாம்பு, ஆமை ஆகியவற்றைப் பூண்டு கையில் அனலை ஏந்தி விளங்கும் சிவபிரான் மேவிய நன்னகராகும்.

கு-ரை : பக்கங்களில் வாழைக்கனியோடு பலாப்பழத்தேனும், மாம்பழமும் தொங்கும் குற்றாலம், அக்குமணிமுதலியவற்றையணிந்த நக்கன் நகர் என்கின்றது. பாய்கனி - பரவிய பழம். கொக்கு - மா. நக்கன் - நக்நன் - ஆடையில்லாதவன்.

5. பொ-ரை : இறைவனுக்குக் கைத்தொண்டு புரியுமவர்களே! தன் குட்டிகளோடு மலையின் சாரலுக்கு வந்த மடமந்தி வாழை மரக் குலைகளில் பழுத்த இனிய கனிகளை வயிறு புடைக்கத் தின்னும்

Koviloor Digital Library

1074. மைம்மாநீலக் கண்ணியர்சாரன்
மணிவாரிக்
கொய்ம்மாவேன லுண்கிளியோப்புங்
குற்றாலம்
கைம்மாவேழத் தீருரிபோர்த்த
கடவுள்ளெம்
பெம்மான்மேய நன்னகர்போலும்
பெரியீர்காள். 6

1075. நீலநெய்தல் தண்சுனைசூழ்ந்த
நீள்சோலைக்
கோலமஞ்ஞை பேடையொடாடுங்
குற்றாலம்

குற்றாலம், இலை வடிவமான சூலத்தை ஏந்திய கையினனும், மும் மதில்களையும் எய்து அழித்த வில்லாளனும் ஆகிய சிவபிரான் எழுந்தருளியுள்ள நன்னகராகும்.

கு-ரை : குட்டியுடன் வந்த தாய்க்குரங்கு வாழைப்பழத்தை உண்ணும் குற்றாலம், திரிபுரம் எரித்த சிவபெருமான் மேய நகர் என்கின்றது. மாந்தும் - தின்னும்.

6. பொ-ரை : பெரியீரே! மிகக் கரிய பெரிய நீலமலர் போன்ற கண்களை உடைய குறமகளிர், மலைச்சாரல்களில் விளைந்த தினைப் புனங்களில் கொய்யத்தக்க பருவத்திலுள்ள பெரிய தினைக்கதிர்களை உண்ண வரும் கிளிகளை அங்குள்ள மணிகளை வாரி வீசியோட்டும் குற்றாலம், கைம்மா எனப்பெறும் யானையின் தோலைப் போர்த்த கடவுளும் எம் தலைவனுமாகிய சிவபிரான் எழுந்தருளியுள்ள நன்னகராகும்.

கு-ரை : நீலமலர் போலுங் கண்ணையுடைய குறத்தியர் மாணிக்கத்தைக் கொண்டு கிளியோட்டுங் குற்றாலம், யானையுரி போர்த்த நாதன் நகர் என்கின்றது. மை மா நீலம் - மிகக்கரிய நீலமலர். கொய் மா ஏனல் - கொய்யும் பருவத்திலுள்ள பெரிய தினை. ஒப்பும் - ஓட்டும். கைம்மாவேழம் - கையையுடைய விலங்காகிய யானை.

7. பொ-ரை : தொழுது வணங்கும் அடியவர்களே! நீலமலரும் நெய்தல் மலரும் பூத்த தண்ணியவான சுனைகள் சூழ்ந்ததும், நீண்டு

Koviloor Digital Library

காலன்றன்னைக் காலாற்காய்ந்த
கடவுள்ளெம்
சூலபாணி நன்னகர்போலுந்
தொழுவீர்காள். 7

1076. போதும்பொன்னு முந்தியருவி
புடைசூழக்
கூதன்மாரி நுண்துளிதூங்குங்
குற்றாலம்
மூதூரிலங்கை முட்டியகோனை
முறைசெய்த
நாதன்மேய நன்னகர்போலுந்
நமரங்காள். 8

வளர்ந்துள்ள சோலைகளில் அழகிய ஆண் மயில்கள் தத்தம் பெண் மயில்களோடு களித்தாடுவதுமாகிய குற்றாலம், காலனைக் காலால் கடிந்த கடவுளும் சூலத்தைக் கையில் ஏந்தியவனுமாகிய எம் சிவ பிரான் எழுந்தருளியுள்ள நன்னகராகும்.

கு-ரை : சுனைசூழ்ந்த சோலையிலே மயில் பெடையோடு விளையாடும் குற்றாலம், காலகாலனாகிய சூலபாணியின் நகர் என்கின்றது.

கோல மஞ்ஞை - அழகிய மயில்.

8. பொ-ரை : நம்மவர்களே! அருவிகள் மலர்களையும் பொன்னையும் உந்திவந்து இரு புறங்களிலும் குளிர்ந்த மழை போல் நுண்மையான துளிகளை உதிர்க்கும் குற்றாலம், தன் தகுதிக்கு மேலே செயற்பட்ட இலங்கை நகரின் புகழ் பெருக்கி ஆளும் அரசனாகிய இராவணனைத் தண்டித்த சிவபிரான் எழுந்தருளிய நல்ல நகராகும்.

கு-ரை : பூக்களையும் பொன்னையும் உந்தி அருவி புடைசூழ நுண்துளி வீசுங் குற்றாலம், இலங்கைநாதனையடக்கிய இறைவன் நகர் என்கின்றது.

மீதூர் எனவும் பாடம். கூதல் மாரி - குளிர்ந்த மழை.

Koviloor Digital Library

1077. அரவின்வாயின் முள்ளெயிறேய்ப்ப
வரும்பீன்று
குரவம்பாவை முருகமர்சோலைக்
குற்றாலம்
பிரமன்னோடு மாலறியாத
பெருமையெம்
பரமன்மேய நன்னகர்போலும்
பணிவீர்காள். 9

1078. பெருந்தண்சாரல் வாழ்சிறைவண்டு
பெடைபுல்கிக்
குருந்தம்மேறிச் செவ்வழிபாடுங்
குற்றாலம்
இருந்துண்டேரு நின்றுண்சமணு
மெடுத்தார்ப்ப
அருந்தண்மேய நன்னகர்போலு
மடியீர்காள். 10

9. பொ-ரை : பணியும் தொண்டர்களே! பாம்பின் வாயில் அமைந்த வளைந்த கூரிய பற்களை ஒப்ப அரும்பீன்று குரவ மரங்கள் பூத்துள்ள பாவை போன்ற மலர்களின் மணம் தங்கியுள்ள குற்றாலம், பிரமன் மால் அறியாப் பெரியோனாகிய எம் பரமன் மேவியுள்ள நன்னகராகும்.

கு-ரை : குரவம்பாவை பாம்பின் பல்லைப்போல் அரும்பீன்று மணங்கமழும் சோலை சூழ்ந்த குற்றாலம், அயனும் மாலும் அறியாத பரமன் நகர் என்கின்றது. முள் எயிறு - முள் போன்ற பல்.

10. பொ-ரை : அடியவர்களே! பெரிய தண்ணிய மலைச்சாரலில் வாழ்கின்ற சிறகுகளை உடைய வண்டு தன் பெண் வண்டை விரும்பிக் கூடி குருந்த மரத்தில் ஏறிச் செவ்வழிப் பண்பாடும் குற்றாலம், இருந் துண்ணும் புத்தர்களும், நின்று உண்ணும் சமணர்களும் புறங்கூற அரிய தண்ணியோனாகிய சிவபிரான் எழுந்தருளிய நன்னகராகும்.

கு-ரை : வண்டு பெண் வண்டைப் புணர்ந்து செவ்வழிப் பண்ணைப் பாடும் குற்றாலம், தண்ணிய இறைவன் மேய நகர்

Koviloor Digital Library

1079. மாடவீதி வருபுனற்காழி
யார்மன்னன்
கோடலீன்று கொழுமுனைகூம்புங்
குற்றாலம்
நாடவல்ல நற்றமிழ்ஞான
சம்பந்தன்
பாடல்பத்தும் பாடநம்பாவம்
பறையுமே. 11

திருச்சிற்றம்பலம்

என்கின்றது. எடுத்து ஆர்ப்ப அருந்தண்மேய - சமணர் புத்தர்கள் எடுத்து நுகர்தற்கரிய தண்மையான இறைவன் மேவிய. தண் - தண்மை; பண்பு தண்மையையுடைய இறைவனைக் காட்டி நின்றது.

11. பொ-ரை : மாடவீதிகளையுடையதும் ஆற்று நீர்வளம் மிக்கதுமான சீகாழிப் பதிக்கு மன்னனும் பலராலும் நாட வல்லவனுமான நற்றமிழ் ஞானசம்பந்தன் செங்காந்தள் மலர்களை ஈன்று அவற்றின் கொழுவிய முனையால் கை குவிக்கும் குற்றாலத்து இறைவர் மேல் பாடிய பாடல்கள் பத்தையும் பாடப் பாவம் நீங்கும்.

கு-ரை : குற்றாலத்தைப்பற்றி ஞானசம்பந்தன் சொன்ன பாடல் பத்தும் வல்லார் பாவம் பறையும் என்கின்றது. கோடல் - செங்காந்தள். கொழுமுனை கூம்பும் - கொழுமையான சிகரம் கூம்பியுள்ள.

சோணசைலமாலை

கூம்புறு கரமும் மலர்ந்திடு முகமும்
கொண்டுநின் றனைவலம் புரிவோர்
மேம்படு சரண மலர்ப்பொடி மேனி
மேற்படிற் பவம்பொடி படுமே
பூம்பொழிற் புகலிக் கிறைவனா னிலஞ்சேர்ப்
புண்ணியத் தலங்களி னடைந்து
தாம்புனை பதிகந் தொறும்புகழ் சோண
சைலனே கைலைநா யகனே.

- சிவப்பிரகாச சுவாமிகள்.

Koviloor Digital Library

100. திருப்பரங்குன்றம்

பதிக வரலாறு:

மதுரையை வழிபட்டுப் பிற தலங்களையும் வழிபடத் திருவுளங் கொண்டருளியபோது நெடுமாறனும், மங்கையர்க் கரசியாரும், குலச்சிறையாரும் மனங்கவல, பிள்ளையார் 'நீங்கள் கவலாதொழிவீர்களாக; உங்களைப் பிரியாதவண்ணம் இந்நாட்டுப் பிறபதிகளையும் தரிசிக்க எண்ணினோம்' என்றார். அவர்கள் மகிழ்ந்து உடன்போத, திருப்பரங்குன்றையடைந்து ஆறணிந்தார் அடிகளைப் போற்றி ''நீடலர் சோதி'' என்னும் இப்பதிகத்தை அருளிச் செய்தார்கள்.

பண்: குறிஞ்சி

பதிக எண்: 100

திருச்சிற்றம்பலம்

1080. நீடலர்சோதி வெண்பிறையோடு
நிரைகொன்றை
சூடலனந்திச் சுடரெரியேந்திச்
சுடுகானில்
ஆடலனஞ்சொ லணியிழையாளை
யொருபாகம்
பாடலன்மேய நன்னகர்போலும்
பரங்குன்றே. 1

1. பொ-ரை : நீண்டு விரிந்த ஒளிக்கதிர்களை உடைய வெண் பிறையோடு வரிசையாகத் தொடுத்த கொன்றை மாலையைச் சூடுதலை உடையவன். அந்திப் போதில் ஒளியோடு கூடிய எரியை ஏந்திச் சுடுகாட்டில் ஆடுபவன். அழகிய சொற்களைப் பேசும் அணிகலன் களோடு கூடிய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு பாடுபவன். அத்தகைய பெருமானது நல்லநகர் பரங்குன்று.

கு-ரை : பிறை, கொன்றை இவைகளைச் சூடியவனும், எரி யேந்தியும், இடுகாட்டில் நட்டமாடுபவனும், உமாதேவியாரை ஒரு பாகம் வைத்து ஆடுபவனும் ஆகிய இறைவன் எழுந்தருளியுள்ள

Koviloor Digital Library

1081. அங்கமொராறும் மருமறைநான்கும்
மருள்செய்து
பொங்குவெண்ணூலும் பொடியணிமார்பிற்
பொலிவித்துத்
திங்களும்பாம்புந் திகழ்சடைவைத்தோர்
தேன்மொழி
பங்கினன்மேய நன்னகர்போலும்
பரங்குன்றே. 2

1082. நீரிடங்கொண்ட நிமிர்சடைதன்மே
னிரைகொன்றை
சீரிடங்கொண்ட வெம்மிறைபோலுஞ்
சேய்தாய
ஓருடம்புள்ளே யுமையொருபாக
முடனாகிப்
பாரிடம்பாட வினிதுறைகோயில்
பரங்குன்றே. 3

நகரம் திருப்பரங்குன்றம் என்கின்றது. சூடலன் - சூடுதலையுடையவன். அம் சொல் அணியிழையாளை எனப் பிரிக்க.

2. பொ-ரை : நான்கு வேதங்களையும் ஆறு அங்கங்களையும் அருளிச் செய்து, திருநீறு அணிந்த மார்பில் அழகுமிக்க வெண்ணூலைப் பொலிவுற அணிந்து, பிறை பாம்பு ஆகியவற்றை விளங்கும் சடைமீது சூடித் தேன் போன்ற மொழியினளாகிய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவனாய்ச் சிவபிரான் விளங்கும் நன்னகர் திருப்பரங்குன்றம்.

கு-ரை : வேதம் அங்கம் இவைகளை யருளிச் செய்து, பூணுநூல் நீறணிந்த மார்பில் விளங்க, பாம்பும் மதியும் சென்னியிற் சூடிய உமையொருபாகன் நகர் இது என்கின்றது. பொங்கும் வெண்ணூல் - அழகுமிகும் பூணுநூல்.

3. பொ-ரை : கங்கை சூடிய நிமிர்ந்த சடைமுடிமேல் வரிசையாகத் தொடுத்த கொன்றை மாலையைச் சிறப்புற அணிந்துள்ள எம் இறைவன் மிக உயர்ந்துள்ள தனது திருமேனியின் ஒரு பாகமாகக்

Koviloor Digital Library

1083. வளர்பூங்கோங்க மாதவியோடு
மல்லிகைக்
குளிர்பூஞ்சாரல் வண்டறைசோலைப்
பரங்குன்றம்
தளிர்போன்மேனித் தையனல்லாளோ
டொருபாகம்
நளிர்பூங்கொன்றை சூடினன்மேய
நகர்தானே. 4

1084. பொன்னியல்கொன்றை பொறிகிளர்நாகம்
புரிசடைத்
துன்னியசோதி யாகியவீசன்
றொன்மறை

கொண்டுள்ள உமையம்மையோடும் உடனாய்ப் பூதகணங்கள் பாட இனிதாக உறையும் கோயில் திருப்பரங்குன்றம்.

கு-ரை : கங்கை சூடிய திருச்சடையில் கொன்றையையணிந்த எம்மிறைவன் உறைகோயில் பரங்குன்றுபோலும் என்கின்றது. நீர் - கங்கை. நிரை கொன்றை - மாலையாகப் பூக்கும் கொன்றை. பாரிடம்- பூதம்.

4. பொ-ரை : வளர்ந்துள்ள கோங்கு முதலிய மரங்களும், மணம் தரும் மாதவி முதலிய செடிகளும், மல்லிகை முதலிய கொடிகளும் நிறைந்துள்ள வண்டுகள் முரலும் சோலைகள் சூழ்ந்த சாரலை உடைய திருப்பரங்குன்றம், ஒரு பாகமாகிய தளிர் போன்ற மேனியளாகிய தையல் நல்லாளோடு பொருந்திக் கொத்தாகச் செறிந்த பூக்களைக் கொண்ட கொன்றை மலர் மாலையை அணிந்தவனாகிய சிவபிரானது நகராகும்.

கு-ரை : கோங்கம் மாதவி மல்லிகை இவைகள் செறிந்த சாரலையுடைய பரங்குன்றம், பெண்ணொருபாகன் பேணிய நகராம் என்கின்றது. இவன் போகியாதற்கேற்பக் குன்றமும் மல்லிகை முதலிய மணந்தரும் பூக்கள் மலிந்துள்ளமையும், புணர்ச்சி நலமிகும் சாரலோடு கூடியமையும் குறிக்கப் பெற்றன.

5. பொ-ரை : பொன் போன்ற கொன்றை மலர், பொறிகள் விளங்கும் பாம்பு ஆகியவற்றை அணிந்துள்ள முறுக்கேறிய சடைமுடியோடு

Koviloor Digital Library

பன்னியபாட லாடலன்மேய
பரங்குன்றை
உன்னியசிந்தை யுடையவர்க்கில்லை
யுறுநோயே. 5

1085. கடைநெடுமாடக் கடியரண்மூன்றுங்
கனன்மூழ்கத்
தொடைநவில்கின்ற வில்லினனந்திச்
சுடுகானில்
புடைநவில்பூதம் பாடநின்றாடும்
பொருசூலப்
படைநவில்வான்ற னன்னகர்போலும்
பரங்குன்றே. 6

பொருந்திய ஒளி வடிவினனாகிய ஈசனும், பழமையான வேதங்களில் அமைந்துள்ள பாடல்களைப் பாடி ஆடுபவனுமாகிய சிவபிரான் எழுந்தருளிய திருப்பரங்குன்றை எண்ணிய சிந்தை உடையவர்க்கு மிக்க நோய்கள் எவையும் இல்லை.

கு-ரை : சோதி வடிவாகிய ஈசனும் வேதம் அருளிச் செய்தவனும் ஆகிய நட்டமாடியின் பரங்குன்றைத் தியானிப்பவர் கட்கு நோயில்லை என்கின்றது. பொறி - படப்பொறி. உன்னிய - தியானித்த. உறுநோய் - மிக்கநோய்.

6. பொ-ரை : வாயிலை உடைய காவல் பொருந்திய அசுரர்களின் மூன்று கோட்டைகளும் கனலில் மூழ்குமாறு அம்பினை எய்த வில்லினனும், அந்திக் காலத்தில் சுடுகாட்டில் அருகில் தன்னொடு பழகிய பூத கணங்கள் பாட நின்றாடுபவனும் போர்க் கருவியாகிய சூலப்படையை ஏந்தியவனுமாகிய சிவபிரானது நன்னகர் திருப்பரங்குன்றம்.

கு-ரை : திரிபுரம் எரிய அம்புதொடுத்த வில்லினனும், பூதம் பாட இடுகாட்டில் நடமாடும் சூலபாணியுமாகிய இறைவன் நகர் பரங்குன்று என்கின்றது.

கடி அரண் - காவலோடு கூடிய அரண். தொடை - அம்பு. புடை - பக்கம். நவில்வான் - விரும்பியவன்.

Koviloor Digital Library

1086. அயிலுடைவேலோ ரனல்புல்குகையி
னம்பொன்றால்
எயில்படவெய்த வெம்மிறைமேய
விடம்போலும்
மயில்பெடைபுல்கி மாநடமாடும்
வளர்சோலைப்
பயில்பெடைவண்டு பாடலறாத
பரங்குன்றே. 7

1087. மைத்தகுமேனி வாளரக்கன்றன்
மகுடங்கள்
பத்தினதிண்டோ ளிருபதுஞ்செற்றான்
பரங்குன்றைச்
சித்தமதொன்றிச் செய்கழலுன்னிச்
சிவனென்று
நித்தலுமேத்தத் தொல்வினை நம்மேல்
நில்லாவே. 8

7. பொ-ரை : கூரிய வேற்படையை உடையவனும், அனல் தழுவிய கை அம்பு ஒன்றால் மூவெயில்களை எய்து அழித்தவனும் ஆகிய எம் இறைவன் மேவிய இடம், ஆண் மயில்கள் பெண் மயில் களைத் தழுவிச் சிறந்த வகையில் நடனம் ஆடும் வளர்ந்த சோலைகளில் பெண் வண்டுகளோடு கூடிய ஆண் வண்டுகள் இடையறாது இசை பாடும் சிறப்புடைய திருப்பரங்குன்றாகும்.

கு-ரை : எறியம்பு ஒன்றால் எயில் எய்த இறைவன் எழுந் தருளியுள்ள இடம் பரங்குன்று என்கின்றது. அயில் - கூர்மை. பட - அழிய. ஆண்மயில் தன்னுடைய பெடையைத் தழுவிக் கொண்டு நட மாடும் சோலையிலே, பெடையோடு கூடிய வண்டுகள் பாடுகின்றன என்பதால் இன்பமயமாதல் எடுத்துக் காட்டப்பெற்றது.

8. பொ-ரை : மை எனத்தக்க கரிய மேனியனாகிய வாட் போரில் வல்ல இராவணனின் மகுடம் பொருந்திய பத்துத் தலைகளையும் இருபது தோள்களையும் அடர்த்த சிவபிரான் எழுந்தருளிய திருப்பரங்குன்றை ஒன்றிய மனத்துடன் அங்குள்ள பெருமானின்

Koviloor Digital Library

1088. முந்தியிவ்வையந் தாவியமாலு
மொய்யொளி
உந்தியில்வந்திங் கருமறையீந்த
வுரவோனும்
சிந்தையினாலுந் தெரிவரிதாகித்
திகழ்சோதி
பந்தியலங்கை மங்கையொர்பங்கன்
பரங்குன்றே. 9

1089. குண்டாய்முற்றுந் திரிவார்கூறை
மெய்போர்த்து
மிண்டாய்மிண்டர் பேசியபேச்சு
மெய்யல்ல

சேவடிகளைச் சிந்தித்துச் சிவனே என்று நித்தலும் ஏத்தித் துதிக்க, வினைகள் நம் மேல் நில்லா.

கு-ரை : பரங்குன்றைச் சிவபெருமானே என்றெண்ணி மனம் ஒன்றி நாள்தோறும் வழிபட நமது வினைகள் அழியும் என்கின்றது. மைத்தகுமேனி வாள் அரக்கன் - கரியமேனியை உடைய கொடிய அரக்கன்; என்றது இராவணனை.

9. பொ-ரை : மாவலியிடம் மூன்றடி மண் கேட்டு அவன் தந்த அளவில் முந்திக் கொண்டு இவ்வுலகை ஓரடியால் அளந்ததுடன் வானுலகங்களையும் ஓரடியால் அளந்த திருமாலும், அத் திருமாலின் ஒளி நிறைந்த உந்திக் கமலத்தில் தோன்றி அரிய மறைகளை ஓதும் நான்முகனும் மனத்தாலும் அறிய முடியாதவாறு பேரொளிப் பிழம்பாய் நின்ற சோதி வடிவினனும், விளையாடும் பந்து தங்கிய அழகிய கையை உடைய மங்கையை ஒரு பாகமாகக் கொண்டவனும் ஆகிய சிவபிரான் எழுந்தருளிய தலம் திருப்பரங்குன்று.

கு-ரை : அயனும் மாலும் மனத்தாலும் அறியமுடியாத சோதி வடிவாகிய இறைவனது பரங்குன்று இது என்கின்றது. உந்தி - கொப்பூழ். உரவோன் - அறிஞன்; என்றது பிரமனை. பந்து இயல் அங்கை - மங்கைக்கு அடை.

10. பொ-ரை : பருத்த உடலினராய் எங்கும் திரியும் சமணரும், ஆடையை உடலிற் போர்த்துத் திரியும் புத்தரும் தர்க்க வாதத்துடன்

Koviloor Digital Library

பண்டாலீழன் மேவியவீசன்
பரங்குன்றைத்
தொண்டாலேத்தத் தொல்வினை நம்மேல்
நில்லாவே. 10

1090. தடமலிபொய்கைச் சண்பைமன்ஞான
சம்பந்தன்
படமலிநாக மரைக்கசைத்தான்றன்
பரங்குன்றைத்
தொடைமலிபாடல் பத்தும்வல்லார்தந்
துயர்போகி
விடமலிகண்ட னருள்பெறுந்தன்மை
மிக்கோரே. 11

திருச்சிற்றம்பலம்

மிடுக்காய்ப் பேசும் பேச்சுக்கள் எவையும் உண்மையல்ல. முற்காலத்தில் கல்லால மர நிழலில் வீற்றிருந்து அறம் நால்வர்க்கருளிய ஈசனது பரங்குன்றைத் தொண்டு செய்து ஏத்தினால் நம் தொல்வினை நம்மேல் நில்லாது கழியும்.

கு-ரை : புத்தரும் சமணரும் கூறுவன மெய்யில்லாதன; ஆதலால் பரங்குன்று ஈசன் பாதத்தைப் பணி செய்து தொழவே பழவினை பறக்கும் என்கின்றது. குண்டாய் - பருத்த உடலராய். மிண்டர் - வழக்குரைப்பார். பண்டு ஆல் நீழல் மேவிய எனப்பிரிக்க.

11. பொ-ரை : பரப்புமிக்க பொய்கையை உடைய சண்பை என்னும் சீகாழிப் பதியின் மன்னனாகிய ஞானசம்பந்தன் படத்தோடு கூடிய பாம்பை இடையில் கட்டிய பரங்குன்றிறைவர் மீது பாடிய தொடை நயம் மிக்க பாடல்கள் பத்தையும் ஓதி வழிபட வல்லவர் தம் துன்பம் நீங்கி விடமுண்ட கண்டனாகிய சிவபிரானின் அருள்பெறும் தகுதியில் மேம்பட்டவராவர்.

கு-ரை : ஞானசம்பந்தன் சொன்ன பரங்குன்றப் பாடல் பத்தும் வல்லவர் தம்முடைய துன்பம் எல்லாம் தொலைந்து நீலகண்டனது அருளைப் பெறும் தகுதி உடையோராவர்.

Koviloor Digital Library

101. திருக்கண்ணார்கோயில்

பதிக வரலாறு:

சீகாழியைவிட்டுத் தாதையார் முதலியவர்கள் உடன் போத அடியார்கள் வாழ்த்தொலி எடுத்துவரத் திருஞான சம்பந்தப் பிள்ளையார் திருக்கண்ணார்கோயிலை அடைந்தார். அங்கு எழுந்தருளியுள்ள பிஞ்ஞகனை, ''தண்ணார் திங்கள்'' என்னும் திருப்பதிகத்தால் தோத்திரித்தார்.

பண்: குறிஞ்சி

பதிக எண்: 101

திருச்சிற்றம்பலம்

1091. தண்ணார்திங்கட் பொங்கரவந்தாழ்
புனல்சூடிப்
பெண்ணாணாய பேரருளாளன்
பிரியாத
கண்ணார் கோயில் கைதொழுவோர்கட்
கிடர்பாவம்
நண்ணாவாகுந் நல்வினையாய
நணுகும்மே. 1

1. பொ-ரை : குளிர்ந்த திங்கள், சினம் மிக்க பாம்பு, ஆகாயத்திலிருந்து தாழ்ந்துவந்த கங்கை ஆகியவற்றை முடியில் சூடி, பெண்ணும் ஆணுமாய கோலத்தில் விளங்கும் பெருங்கருணையாளனாகிய சிவபிரான் பிரியாமல் எழுந்தருளியிருக்கும் திருக்கண்ணார் கோயிலைக் கைகளால் தொழுது வணங்குவாரைத் துன்பங்களும் பாவங்களும் நண்ணா. நல்வினைகளும் அவற்றின் பயனான இன்பங்களும் நண்ணும்.

கு-ரை : திங்களும் பாம்பும் கங்கையும் சிரத்தில் அணிந்து பெண்ணுமாய் ஆணுமாயிருக்கின்ற பேருளாளனது கண்ணார் கோயிலைக் கைதொழுவார்களுக்கு இடரும் பாவமும் இல்லை; நல்வினை நணுகும் என்கின்றது. தண்ணார் திங்கள் - குளிர்ந்த மதி. இடர் பாவம் - துன்பமும் அதற்குக் காரணமாகிய பாவங்களும்.

Koviloor Digital Library

1092. கந்தமர்சந்துங் காரகிலுந்தண்
கதிர்முத்தும்
வந்தமர்தெண்ணீர் மண்ணிவளஞ்சேர்
வயன்மண்டிக்
கொந்தலர்சோலைக் கோகிலமாடக்
குளிர்வண்டு
செந்திசைபாடுஞ் சீர்திகழ்கண்ணார்
கோயிலே. 2

1093. பல்லியல்பாணிப் பாரிடமேத்தப்
படுகானின்
எல்லிநடஞ்செய் யீசனெம்மான்றன்
னிடமென்பர்
கொல்லையின்முல்லை மல்லிகைமௌவற்
கொடிபின்னிக்
கல்லியலிஞ்சி மஞ்சமர்கண்ணார்
கோயிலே. 3

2. பொ-ரை : மணம் பொருந்திய சந்தனம், கரிய அகில், குளிர்ந்த ஒளி பொருந்திய முத்து ஆகியன பொருந்தியதாய் வரும் தெளிந்த நீரையுடைய மண்ணியாற்றால் வளம் பெறும் வயல்களால் சூழப் பட்டு, கொத்துக்களாக விரிந்த மலர்களை உடைய சோலைகளில் குயில்கள் ஆடச் செவிகளைக் குளிர்விக்கும் வண்டுகள் செவ்வழிப் பண் பாடும் சீரோடு திகழ்வது, சிவபிரானது திருக்கண்ணார் கோயிலாகும்.

கு-ரை : மண்ணியாறு வளம்படுக்கின்ற வயல்கள் நிறைந்து சோலையிலே குயில் ஆட வண்டுபாடுங் கண்ணார்கோயில் இது என்கின்றது. கந்து அமர் சந்து - மணம் பொருந்திய சந்தனம். கந்து - கந்தம். கார் அகில் - வயிரமாய் இருக்கும் கறுத்த அகில். கோகிலம் - குயில். செந்திசை - செவ்வழிப்பண்.

3. பொ-ரை : பலவாக இயலும் தாளங்களை இசைத்துப் பூத கணங்கள் ஏத்த, பிணங்கள் இடப்படும் சுடுகாட்டில் நள்ளிராப்போதில் திருநடம்புரியும் ஈசனாகிய எம்பெருமானது இடம், காடுகளில் முல் லையும், மல்லிகையும் காட்டு மல்லிகையோடு பின்னி விளங்குவதும்,

Koviloor Digital Library

1094. தருவளர்கானந் தங்கியதுங்கப்
பெருவேழம்
மருவளர்கோதை யஞ்சவுரித்து
மறைநால்வர்க்
குருவளரால நீழலமர்ந்தீங்
குரைசெய்தார்
கருவளர்கண்ணார் கோயிலடைந்தோர்
கற்றோரே. 4

கல்லால் இயன்ற வானளாவிய மதில்களில் மேகங்கள் அமர்ந் திருப்பதுமாகிய கண்ணார்கோயில் என்னும் தலமாகும் என்பர்.

கு-ரை : பூதம் ஏத்த இரவில் நடஞ்செயும் ஈசன் இடம் இது என்பர். பல்லியல் பாணி - பலவாகிய இயல்பினையுடைய பாட்டு.

எல்லி - இரவு. கொல்லை - முல்லைநிலம். மௌவல் - காட்டுமல்லிகை. கல்லியல் இஞ்சி - கல்லால் இயன்ற மதில். மஞ்சு - மேகம்.

4. பொ-ரை : மரங்கள் செழித்து வளர்ந்துள்ள காட்டில் வாழ்ந்த உயர்ந்த பெரிய யானையை, மணம் பொருந்திய மலர் மாலையை அணிந்துள்ள உமையம்மை அஞ்சுமாறு உரித்தவரும், அடர்ந்த பசுமை நிறம் பொருந்தி உயர்ந்து வளர்ந்துள்ள கல்லால மர நிழலில் அமர்ந்து வேதங்களின் உட்பொருளைச் சனகாதி முனிவர்க்கு இவ்வுலகத்தே உரை செய்து உணர்த்தியவருமாகிய சிவபெருமான் கரு வறையில் தங்கியிருக்கின்ற கோயிலை அடைந்தவர்கள் முழுமையான கல்வியறிவின் பயனை அடைந்தோராவர்.

கு-ரை : உமையாள் அஞ்ச காட்டானையை உரித்துப் போர்த்தி யும் சனகாதியர்க்கு உபதேசித்தும் அமர்ந்த பெருமானது கண்ணார் கோயிலையடைந்தவர்கள் கற்றவர்கள் என்கின்றது.

துங்கம் - உயர்ச்சி. வேழம் - யானை. மருவளர்கோதை - மணம்மிக்க மாலை போல்வாளாகிய உமாதேவி. நால்வர்க்கு - சனகாதியர்களுக்கு. உரு வளர் ஆலம் - தெய்வத்தன்மையாகிய அச்சம் வளர்கின்ற ஆலமரம். உரு - வடிவமுமாம்.

Koviloor Digital Library

1095. மறுமாணுருவாய் மற்றிணையின்றி
வானோரைச்
செறுமாவலிபாற் சென்றுலகெல்லா
மளவிட்ட
குறுமாணுருவன் றற்குறியாகக்
கொண்டாடும்
கறுமாகண்டன் மேயதுகண்ணார்
கோயிலே. 5

1096. விண்ணவருக்காய் வேலையுணஞ்சம்
விருப்பாக
உண்ணவனைத்தே வர்க்கமுதீந்தெவ்
வுலகிற்கும்

5. பொ-ரை : வஞ்சகம் பொருந்திய மனத்தோடு பெரிய உருவம் உடையவனாய், தனக்கு ஒப்பார் இல்லாதவனாய், தேவர்களைத் துன் புறுத்திய மாவலி என்ற அரக்கர் குல மன்னனிடம் சென்று அவனிடம் மூன்றடி மண் கேட்டு எல்லா உலகங்களையும் தனக்கே உரியவாய் அளவிட்டு அளந்த குள்ளமான பிரமசாரிய வடிவுடைய வாமனன், சிவபெருமானது வடிவாகத் தாபித்து வழிபட, அவனுக்கு அருள் செய்த நீல மறுப் பொருந்திய கண்டனாகிய சிவபிரான் மேவிய ஊர், கண்ணார் கோயிலாகும்.

கு-ரை : மாவலியை வென்ற குறளனாகிய திருமால் வழிபட்ட இறைவன் எழுந்தருளியுள்ள இடம் கண்ணார்கோயில் என்கின்றது. மறு மாண் உருவாய் - குற்றம் பொருந்திய பெரிய வடிவமாய். செறும்- வருத்துகின்ற. குறுமாண் உருவன் - குறுகிய பிரமசாரி வடிவத்தை எடுத்த திருமால். தற்குறியாக - சிவபெருமானின் அடையாளமாக. கறுமா கண்டன் - கறுத்த பெரிய கழுத்தினை உடையவன். இத்தலத் திற்குப் பக்கத்தில் குறுமாணகுடி என்ற கிராமமும் இருப்பது அறிஞர் கள் அறிந்து இன்புறுதற்குரியது.

6: பொ-ரை : விண்ணவர்களைக் காத்தற் பொருட்டுக் கடலுள் தோன்றிய நஞ்சினை விருப்போடு உண்டவனை, தேவர்களுக்கு அமு தம் அளித்து எவ்வுலகிற்கும் பற்றுக்கோடாய் விளங்குபவனை, விளக் கமான கண்ணார் கோயிலுள் விளங்கும் கனி போல்பவனை நண்ணி

Koviloor Digital Library

கண்ணவனைக்கண் ணார்திகழ்கோயிற்
கனிதன்னை
நண்ணவல்லோர்கட் கில்லைநமன்பால்
நடலையே. 6

1097. முன்னொருகாலத் திந்திரனுற்ற
முனிசாபம்
பின்னொருநாளவ் விண்ணவரேத்தப்
பெயர்வெய்தித்
தன்னருளாற்கண் ணாயிரமீந்தோன்
சார்பென்பர்
கன்னியர்நாளுந் துன்னமர்கண்ணார்
கோயிலே. 7

வழிபட வல்லவர்கட்கு, நமனால் வரும் துன்பங்கள் இல்லை.

கு-ரை : தேவர்களுக்காக விஷத்தை விரும்பி உண்டவனை, அவர்களுக்கு அமுதம் அளித்து, எல்லா உலகிற்குங் கண்ணானவனை, கண்ணார்கோயில் கனியை அடையவல்லவர்க்கு எமன் பால் இன்னல் இல்லை என்கின்றது.

வேலை - கடல். உண்ணவன் - உண்டவன். நடலை - துன்பம்.

7. பொ-ரை : முன்னொரு காலத்தில் கௌதம முனிவரால் விளைந்த சாபத்தால் உடல் எங்கும் பெண் குறிகளோடு வருந்தித் தன்னை வழிபட்ட இந்திரனுக்குப் பின்னொரு நாளில் தேவர்கள் புகழ்ந்து போற்றுமாறு தண்ணருளோடு அச்சாபத்தைப் போக்கி அவற்றை ஆயிரம் கண்களாகத் தோன்றுமாறு அருள் செய்த சிவ பிரான் எழுந்தருளிய இடம், கன்னியர்கள் நாள்தோறும் கூடி வந்து வழிபடும் தலமாகிய கண்ணார் கோயில் என்பர்.

கு-ரை : கௌதம முனிவரால் இந்திரன் அடைந்த சாபத்தைத் தேவர்கள் வேண்டிக்கொள்ளப் போக்கி ஆயிரங்கண் அளித்த கடவுள் இடம் இது என்பர். இத்தலத்து வரலாற்றைக் குறிப்பது இது. சார்பு - இடம். துன் அமர் - நெருங்கியிருக்கின்ற.

Koviloor Digital Library

1098. பெருக்கெண்ணாத பேதையரக்கன்
வரைக்கீழால்
நெருக்குண்ணாத்தன் னீள்கழனெஞ்சில்
நினைந்தேத்த
முருக்குண்ணாதோர் மொய்கதிர்வாள்தேர்
முன்னீந்த
திருக்கண்ணாரென் பார்சிவலோகஞ்
சேர்வாரே. 8

1099. செங்கமலப்போ திற்றிகழ்செல்வன்
றிருமாலும்
அங்கமலக்கண் ணோக்கரும்வண்ணத்
தழலானான்
தங்கமலக்கண் ணார்திகழ்கோயில்
தமதுள்ளம்
அங்கமலத்தோ டேத்திடவண்டத்
தமர்வாரே. 9

8. பொ-ரை : அன்போடு வழிபட்டால் ஆக்கம் பெறலாம் என்று எண்ணாத அறிவிலியாகிய இராவணன் கயிலையைப் பெயர்த்த போது அதன்கீழ் அகப்பட்டு நெருக்குண்டு நல்லறிவு பெற்று விரிந்த புகழை உடைய தன் திருவடிகளை அவன் நெஞ்சினால் நினைந்து போற்றிய அளவில் அவனுக்கு அழிக்கமுடியாத, ஒளியினை உடைய வாளையும் தேரையும் முற்காலத்தில் வழங்கியருளிய சிவபிரான் வீற்றிருக்கும் தலமாகிய திருக்கண்ணார் கோயில் என்று கூறுவார் சிவலோகம் சேர்வர்.

கு-ரை : இராவணன் கைலையின் கீழ் நெருக்குண்ணாதபடி திருவடியிலிருந்து தோத்திரிக்க, வாளும் தேருங் கொடுத்த இறைவன் எழுந்தருளியுள்ள இடத்தைப் பரவுவார் சிவலோகம் சேர்வார் என்கின்றது. பெருக்கு - ஆக்கம். பேதை - அறிவிலி. வரை - கைலைமலை. நெருக்குண்ணா - நெருக்குண்டு என்றுமாம்.

9. பொ-ரை : செந்தாமரைப் போதில் வீற்றிருக்கும் பிரமனும் திருமாலும் அழகிய தங்கள் கமலம் போன்ற கண்களால் நோக்கிக்

Koviloor Digital Library

1100. தாறிடுபெண்ணைத் தட்டுடையாருந்
தாமுண்ணும்
சோறுடையார்சொற்றேறன்மின்வெண்ணூல்
சேர்மார்பன்
ஏறுடையன்பர னென்பணிவானீள்
சடைமேலோர்
ஆறுடையண்ணல் சேர்வதுகண்ணார்
கோயிலே. 10

காணுதற்கரிய அழலுருவாய் நின்ற பெருமான் தன் கருணை நிறைந்த கமலக் கண்களோடு வீற்றிருக்கும் தலமாகிய கண்ணார் கோயிலை அடைந்து அங்குத் தம் உள்ளத்தில் மலம் நீங்கப் பெற்றவராய் ஏத்திடுவோர் வானுலகில் இனிது உறைபவராவர்.

கு-ரை : அயனும் மாலும் கண்ணால் நோக்க முடியாதவண்ணம் தீயுருவான சிவன் திகழும் கண்ணார்கோயிலை வணங்குவார் அமரர் உலகத்து இருப்பார் என்கின்றது.

அங்கு அம் மலக்கண் நோக்கரும் வண்ணத்து - அவ்விடத்து அழகிய ஊனக் கண்ணால் நோக்க முடியாதவண்ணம். தங்கு அமலக் கண்ணார் கோயில் அங்கு அமலத்தோடு ஏத்திட - அவ்விடத்து மலரகிதராய்த் துதிக்க.

10. பொ-ரை : குலைகளை ஈனும் பனை மரத்தின் ஓலைகளால் வேயப்பட்ட தடுக்கை உடையாக உடுத்தித் திரியும் சமணரும், தாம் உண்ணும் சோற்றையே பெரிதெனக் கருதும் புத்தரும் கூறும் அறிவுரைகளைக் கேளாதீர். வெண்மையான பூநூல் அணிந்த மார்பினனும், ஆனேற்றை ஊர்தியாக உடையவனும், மேலானவனும், என்பு மாலை அணிபவனும், நீண்ட சடைமுடி மேல் கங்கையை அணிந்துள்ளவனுமாகிய தலைமைத் தன்மை உடைய சிவபிரான் எழுந்தருளி விளங்கும் தலம் கண்ணார் கோயிலாகும். அதனைச் சென்று தொழுமின்.

கு-ரை : பனந்தடுக்கை உடுத்திய புத்தரும் சமணரும் சொல்லுகின்ற சொற்களைத் தெளியாதீர்கள்; சிவன் சேர்வது கண்ணார் கோயிலே என்கின்றது. தாறு இடு பெண்ணை - குலை தள்ளும் பெண் பனை. தட்டு - தடுக்கு.

Koviloor Digital Library

1101. காமருகண்ணார் கோயிலுளானைக்
கடல்சூழ்ந்த
பூமருசோலைப் பொன்னியன்மாடப்
புகலிக்கோன்
நாமருதொன்மைத் தன்மையுண்ஞான
சம்பந்தன்
பாமருபாடல் பத்தும்வல்லார்மேற்
பழிபோமே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : அழகிய திருக்கண்ணார் கோயில் என்னும் தலத்துள் விளங்கும் சிவபெருமானை, கடல் ஒரு புடைசூழ்ந்ததும், பூக்கள் நிறைந்த சோலைகளை உடையதும் அழகியதாய் அமைந்த மாட வீடுகளைக் கொண்டதுமான புகலிப் பதியின் தலைவனும், பழமையான இறை புகழை, நாவினால் மருவிப் போற்றுபவனும் ஆகிய ஞான சம்பந்தன் பாடிப் பரவிய ஓசையோடு திகழும் இப்பதிகப் பாடல்கள் பத்தினாலும் போற்றி வழிபட வல்லவர்கள், தம் மேல் வரும் பழிகள் நீங்கப் பெறுவர்.

கு-ரை : கண்ணார் கோயிலைப்பற்றி ஞானசம்பந்தன் சொல்லிய பாடல் பத்தையும் வல்லார் மேல் பழி போம் என்கின்றது. காமரு- அழகிய. பாமரு பாடல் - பரந்துபட்டுச் செல்லும் ஓசை மருவிய பாடல்.

திருஞானசம்பந்தர் புராணம்

திருமறைச் சண்பைய ராளி சிவனார் திருக்கண் ணார்கோயில்
பெருவிருப் பால்அணைந் தேத்திப் பிஞ்ஞகர் கோயில் பிறவும்
உருகிய அன்பால் இறைஞ்சி உயர்தமிழ் மாலைகொண் டேத்தி
வருபுனற் பொன்னி வடபால் குடதிசை நோக்கி வருவார்.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

102. சீகாழி

பண்: குறிஞ்சி

பதிக எண்: 102

திருச்சிற்றம்பலம்

1102. உரவார்கலையின் கவிதைப்புலவர்க்
கொருநாளுங்
கரவாவண்கைக் கற்றவர்சேருங்
கலிக்காழி
அரவாரரையா வவுணர்புரமூன்
றெரிசெய்த
சரவாவென்பார் தத்துவஞானத்
தலையாரே. 1

1103. மொய்சேர்வண்டுண் மும்மதநால்வாய்
முரண்வேழக்
கைபோல்வாழை காய்குலையீனுங்
கலிக்காழி

1. பொ-ரை : ஞானம் நிறைந்த கலை உணர்வோடு, கவிதைகள் பாடும் புலவர்களுக்கு ஒரு நாளும் கரவாத வள்ளன்மை மிக்க கைகளை உடைய கற்றவர்கள் வாழும் ஒலி மிக்க காழி மாநகரில் விளங் கும் பாம்பை இடையில் அணிந்துள்ள பரமனே! அசுரர்களின் முப் புரங்களையும் எரித்த அம்பை ஏந்தியவனே! என்று போற்றுபவர், தத்துவ ஞானத்தில் தலையானவராவர்.

கு-ரை : கவிவாணர்க்கு ஒருநாளும் கரவாதபடி வழங்குங் கற்றவர்சேரும் காழியரசே! திரிபுரம் எரித்த செல்வா என்பவர்களே தத்துவஞானத்தில் தலையானவர்கள் என்கின்றது. உரவு - ஞானம். கரவா - மறைக்காத. கலி - ஒலி. அரவு ஆர் அரையா எனப்பிரிக்க. சரவா - அம்பை உடையவனே.

2. பொ-ரை : சூழ்ந்து மொய்த்தலை உடைய வண்டுகள் தங்கி உண்ணும் மும்மதங்களையும், தொங்குகின்ற வாயையும், முரண்படு தலையும் உடைய களிற்று யானையின் கை போல வாழை மரங்கள்

Koviloor Digital Library

மைசேர்கண்டத் தெண்டோண்முக்கண்
மறையோனே
ஐயாவென்பார்க் கல்லல்களான
வடையாவே. 2

1104. இளகக்கமலத் தீன்களியங்கும்
கழிசூழக்
களகப்புரிசைக் கவினார்சாருங்
கலிக்காழி
அளகத்திருநன் னுதலிபங்கா
வரனேயென்
றுளகப்பாடு மடியார்க்குறுநோ
யடையாவே. 3

காய்களை ஈனும் ஒலி நிறைந்த காழிப் பதியில், நீலகண்டனாய் எட்டுத் தோள்களையும் மூன்று கண்களையும் உடையவனாய் விளங்கும் மறையோனே! தலைவனே! என்பவர்களை அல்லல்கள் அடையா.

கு-ரை : காழிமறையோனே ஐயா என்பவர்களுக்கு அல்லல்கள் அடையா என்கின்றது, யானையின் கையைப்போல வாழைக்குலை ஈனும் காழி என வளம் உரைத்தவாறு. மும்மதம் - கபோலம், கரடம், கோசம் என்ற மூன்றிடத்திலும் பொருந்திய மதம். நால் வாய் - தொங்குகின்ற வாய். மை - விடம்.

3. பொ-ரை : முறுக்கவிழ்ந்த தாமரை மலர்கள் பிலிற்றிய தேன் ஓடுகின்ற கழிகள் சூழப் பெற்றதும், சுண்ணாம்பினால் இயன்ற அழகு பொருந்திய மதில்களை உடையதுமான, ஆரவாரம் மிக்க காழிப் பதியில் அழகிய கூந்தலையும் நல்ல நெற்றியையும் உடைய உமையம்மையின் கணவனே, அரனே! என்று மனம் உருகிப் பாடும் அடியவர்களை மிக்க துன்பங்கள் எவையும் அடையா.

கு-ரை : காழியில் எழுந்தருளியிருக்கின்ற உமையொரு பாகனை அரனே என்று மனம் இளகப் பாடுகின்ற அடியார்கட்குத் துன்பம்சேரா என்கிறது. இளகக் கமலத்து ஈன் கள் இயங்கும் கழி - முறுக்கவிழ தாமரையிலிருந்து உண்டான கள் ஓடுகின்ற கழி. களகப்புரிசை - சுண்ணாம்புச்சாந்து பூசப்பெற்ற மதில். கவின் - அழகு.

Koviloor Digital Library

1105. எண்ணார்முத்த மீன்றுமரகதம்
போறகாய்த்துக்
கண்ணார்கமுகு பவளம்பழுக்குங்
கலிக்காழிப்
பெண்ணோர்பாகா பித்தாபிரானே
யென்பார்க்கு
நண்ணாவினைகள் நாடொறுமின்பம்
நணுகும்மே. 4

1106. மழையார்சாரற் செம்புனல்வந்தங்
கடிவருடக்
கழையார்கரும்பு கண்வளர்சோலைக்
கலிக்காழி
உழையார்கரவா வுமையாள்கணவா
வொளிர்சங்கக்
குழையாவென்று கூறவல்லார்கள்
குணவோரே. 5

அளகம் - கூந்தல். நல்நுதலி - நல்ல நெற்றியை யுடையாளாகிய பார்வதி. உள் அகப்பாடும் - மனம் பொருந்தப் பாடுகின்ற.

4. பொ-ரை : அழகிய கமுக மரங்கள், எண்ணத்தில் நிறையும் அழகிய முத்துக்களைப் போல அரும்பி மரகதம் போலக் காய்த்துப் பவளம் போலப் பழுக்கும் ஆரவாரம் மிக்க காழிப் பதியில் விளங்கும் பெண்ணோர் பாகனே! பித்தனே! பிரானே! என்பவர்களை வினைகள் நண்ணா. நாள்தோறும் அவர்கட்கு இன்பங்கள் வந்து சேரும்.

கு-ரை : காழியின்கண்ணுள்ள பெண்ணொருபாகனே பித்தா என்பார்க்கு வினைகள் நண்ணா, இன்பம் நணுகும் என்கின்றது. எண்ணார் முத்தம் - எண்ணுதற்கரிய முத்தம். கமுகு முத்தம் போல அரும்பி, மரகதம்போல் காய்த்து, பவளம்போல் கனியும் காழி என வளங்கூறியது.

5. பொ-ரை : மேகங்கள் தங்கிய குடதிசை மலைச் சாரல்களி லிருந்து சிவந்த நிறமுடைய தண்ணீர் வந்து அடிகளை வருட, அதனால்

Koviloor Digital Library

1107. குறியார்திரைகள் வரைகணின்றுங்
கோட்டாறு
கறியார்கழிசம் பிரசங்கொடுக்குங்
கலிக்காழி
வெறியார்கொன்றைச் சடையாவிடையா
வென்பாரை
அறியாவினைக ளருநோய்பாவம்
மடையாவே. 6

மூங்கில் போன்று பருத்த கரும்புகளில் கணுக்கள் வளரும் சோலைகளை உடைய ஒலிமிக்க சீகாழிப் பதியில் எழுந்தருளிய மானேந்திய கையனே, உமையம்மையின் கணவனே! ஒளி பொருந்திய சங்கக் குழையை அணிந்தவனே என்று கூறிப் போற்ற வல்லவர்கள் குணம் மிக்கவராவர்.

கு-ரை : மான் ஏந்தி, மங்கை கணவா, சங்கக் குழையா எனக் கூறவல்லவர்கள் குணமுடையராவர் என்கின்றது. மலைச்சாரலில் மழைபெய்து, செந்நீர் வந்து அடிவருட கரும்பு தூங்கும் சோலைக் காழி என வளங்கூறிற்று. கழையார் கரும்பு - கரும்பினுள் ஒருசாதி. மூங்கிலை ஒத்த வளமான கரும்பெனினும் ஆம். உழை - மான். கரவா - கையை உடையவனே.

6. பொ-ரை : தாள ஒலிக் குறிப்போடு கூடிய அலைகளை உடைய, மலைகளிலிருந்து வரும் அருவிகள் இரு கரைகளுக்கும் உள்ளடங்கிய ஆறாக அடித்துக் கொண்டு வரும் மிளகின் கொடித் தண்டுகளின் சுவையைத் தன் தண்ணீருக்கு வழங்கும். ஆரவாரம் மிக்க காழிப் பதியில் எழுந்தருளிய மணம் கமழும் கொன்றை மலர் மாலையை அணிந்த சடையினனே! விடையை ஊர்ந்து வருபவனே! என்று கூறுபவரை வினைகள் அறியாது அகலும். அவர்களை அரிய நோய்கள் பாவங்கள் அடைய மாட்டா.

கு-ரை : கொன்றைச் சடையா, விடையா என்பாரை வினைகள் அறியவேமாட்டா; நோய்களும் பாவங்களும் அடையா என்கின்றது. மலைகளிலிருந்து குறித்தலை உடைய அலைகளோடு கூடிய கரையையுடைய ஆறுகள், மிளகில் இருந்து கழிக்கப்பட்ட சம்பிரசத்தைக் கொடுக்கும் என காழிச் சிறப்பு தெரிவித்தது. வெறி - மணம்.சம்பு - தண்டு இரசம் - சுவை.

Koviloor Digital Library

* * * * * * * * * * 7

1108. உலங்கொள்சங்கத் தார்கலியோதத்
துதையுண்டு
கலங்கள் வந்து கார்வயலேறுங்
கலிக்காழி
இலங்கைமன்னன் றன்னையிடர்கண்
டருள்செய்த
சலங்கொள்சென்னி மன்னாவென்னத்
தவமாமே. 8

1109. ஆவிக்கமலத் தன்னமியங்குங்
கழிசூழக்
காவிக்கண்ணார் மங்கலமோவாக்
கலிக்காழிப்
பூவிற்றோன்றும் புத்தேளொடுமா
லவன்றானும்
மேவிப்பரவு மரசேயென்ன
வினைபோமே. 9

7\. * * * * * * * * * * *

8. பொ-ரை : வலிய சங்குகளை உடைய கடலினது வெள்ளத்தால் மோதப்பட்டுத் தோணிகள் வந்து கரிய வயலின்கண் சேரும் ஒலி மிக்க சீகாழியில் எழுந்தருளிய, இலங்கை மன்னன் இராவணனை முதலில் துன்புறுத்திப்பின் அருள் செய்த, கங்கை சூடிய திருமுடியினை உடைய மன்னவனே! என்று சிவபிரானைப் போற்றத்தவம் கைகூடும்.

கு-ரை : இலங்கை மன்னர்க்கு அருள்செய்த அரசே! என்று சொல்லத் தவம் உண்டாம் என்கின்றது. ஓதத்தால் உந்தப்பட்டு மரக் கலங்கள் வயலைச் சாரும் காழி என்க. ஆர்கலி - கடல். கலங்கள் - தோணிகள். சலம் - கங்கை.

9. பொ-ரை : ஓடைகளில் உள்ள தாமரை மலர்களில் வாழும் அன்னங்கள் நடமாடும் உப்பங்கழிகள் சூழ்ந்திருப்பதும், நீலமலர் போன்ற கண்களை உடைய மகளிரது மங்கல ஒலி ஓவாது கேட்பது

Koviloor Digital Library

1110. மலையார்மாட நீடுயரிஞ்சி
மஞ்சாருங்
கலையார்மதியஞ் சேர்தருமந்தண்
கலிக்காழித்
தலைவாசமணர் சாக்கியர்க்கென்று
மறிவொண்ணா
நிலையாயென்னத் தொல்வினையாய
நில்லாவே. 10

1111. வடிகொள்வாவிச் செங்கழுநீரிற்
கொங்காடிக்
கடிகொள்தென்றல் முன்றினில்வைகுங்
கலிக்காழி

மாகிய செழிப்புமிக்க சீகாழியில் தாமரை மலர் மேல் உறையும் பிரமனும் திருமாலும் வந்துபரவும் அரசனாக விளங்கும் பெருமானே என்று சொல்ல நம் வினைகள் போகும்.

கு-ரை : அயனும் மாலும் வணங்கும் அரசே என்று சொல்ல வினைபோம் என்கின்றது. பொய்கைகளிலுள்ள தாமரைகளில் அன்னம் நடமாடுகின்ற உப்பங்கழிகளைச் சுற்றிலும் மகளிர் மங்கல ஒலி நீங்காத காழி என்க. ஆவி - வாவி. காவிக்கண்ணார் - நீலமலர் போலும் கண்ணையுடைய பெண்கள். பூவில்தோன்றும் புத்தேள் - பிரமன். மேவி - விரும்பி

10. பொ-ரை : மலை போலுயர்ந்த மாட வீடுகளின், மேகங்கள் தவழும் நீண்டுயர்ந்த மதில்களில் கலைகள் நிறைந்த மதி வந்து தங்கும் அழகிய குளிர்ந்த ஒலிமிக்க காழிப் பதியின் தலைவனே! சமண புத்தர்களால் என்றும் அறிய ஒண்ணாத நிலையினனே! என்று போற்ற நம் தொல்வினைகள் நில்லா.

கு-ரை : காழித்தலைவா, புறச்சமயிகளால் அறியப்படாதவனே என்று சொல்ல, பழவினை நில்லா என்கின்றது. மலையார் மாடம் - மலையையொத்த மாடங்கள். நீடு உயர் இஞ்சி - நீண்ட உயர்ந்த மதில். மஞ்சு - மேகம்.

11. பொ-ரை : தேன் மணங் கொண்ட வாவியில் மலர்ந்த செங்கழு நீர்ப் பூவின் மகரந்தங்களில் படிந்து அவற்றின் மணத்தைக்

Koviloor Digital Library

அடிகள்தம்மை யந்தமின்ஞான
சம்பந்தன்
படிகொள்பாடல் வல்லவர் தம்மேற்
பழிபோமே. 11

திருச்சிற்றம்பலம்

கொண்ட தென்றல், முன்றிலில் வந்து உலாவும் ஒலிமிக்க காழிப் பதியில் வீற்றிருக்கும் அடிகளை, முடிவற்ற புகழை உடைய ஞான சம்பந்தன் இவ்வுலகிடைப் போற்றிப் பாடிய பாடல்களை வல்லவர்கள் மேல் வரும் பழிகள் போகும்.

கு-ரை : ஞானசம்பந்தன் காழி அடிகளைப் பாடிய பாடல் வல்லவர் பழி நீங்கும் என்கின்றது. தென்றல் செங்கழுநீர்ப் பூவில் அளைந்து முன்றிலில் உலாவும் காழி என்க. வடி - மா. கொங்கு - தேன். கடி கொள் - மணத்தைக் கொள்ளுகின்ற. படிகொள் பாடல் - ஒப்பினைக்கொண்ட பாடல்.

நால்வர் நான்மணி மாலை

வல்லார் பிறப்பறுப்பர் வண்மை நலங்கல்வி
நல்லா தரவின்ப ஞானங்க - ளெல்லாந்
திருஞான சம்பந்தன் சேவடியே யென்னு
மொருஞான சம்பந்த முற்று.

- சிவப்பிரகாச சுவாமிகள்.

திருவருணைக் கலம்பகம்

ஆரும் விரும்பிய கல்விமேல் ஆசை உமக்குள தாயிடின்
பாருற வென்பொரு பாவையாப் பாடிய பாவலர் போலவே
நீரும் அருந்தமிழ் செப்பிடும் நீர்மைய றிந்திவ ணேகுவீர்
மேருநெ டுஞ்சிலை யத்தனார் வீறரு ணாபுரி வெற்பரே.

- சைவ எல்லப்ப நாவலர்.

Koviloor Digital Library

103. திருக்கழுக்குன்றம்

பதிக வரலாறு:

திருவிடைச்சுரத்தை வணங்கியபின் சண்பைகாவலர் திருத்தொண்டர்களுடன், வண்டுகள் செந்துருத்திப்பண்ணைப் பாடும் திருக்கழுக்குன்றத்தையடைந்தார். அவ்வூரடியார்கள் சுவாமிகளை எதிர்கொள்ள, சிவிகையினின்றும் இறங்கி, திருமலையை வலங்கொண்டு செஞ்சடைப் பெருமானைச் சிந்தை களிகூர வணங்கினார். ஒருகாலைக்கொருகால் பெருகி யெழுங்காதலினால் வணங்கிக் 'காதல்செய் கோயில் கழுக் குன்று' என்று பதிகக்கருத்தை வைத்துத் 'தோடுடையான்' என்னும் இப்பதிகத்தை அருளிச்செய்தார்.

பண்: குறிஞ்சி

பதிக எண்: 103

திருச்சிற்றம்பலம்

1112. தோடுடையானொரு காதிற்றூய
குழைதாழ
ஏடுடையான் றலைகலனாக
விரந்துண்ணும்
நாடுடையா னள்ளிருளேம
நடமாடும்
காடுடையான் காதல்செய்கோயில்
கழுக்குன்றே. 1

1. பொ-ரை : ஒரு காதில் தோடும் பிறிதொரு காதில் தூய குழையும் தாழ்ந்து தொங்கத், தாமரை மலரில் தங்கும் பிரமனின் தலையோட்டை உண்கலனாகக் கொண்டு இரந்துண்ணும் நாடுகளை உடையவன். நள்ளிருள் யாமத்தில் மகிழ்வோடு சுடுகாட்டில் நடனம் ஆடுபவன். அத்தகையோன் விரும்பி உறையும் கோயில் திருக்கழுக் குன்றமாகும்.

கு-ரை : ஒருகாதில் தோடுடையான், ஒருகாதில் குழைதாழ மலரும் அணிந்தவன், கபாலத்தில் இரந்துண்ணும் நாட்டை

Koviloor Digital Library

1113. கேணவல்லான் கேழல்வெண்கொம்பு
குறளாமை
பூணவல்லான் புரிசடைமேலொர்
புனல்கொன்றை
பேணவல்லான் பெண்மகள்தன்னை
யொருபாகம்
காணவல்லான் காதல்செய்கோயில்
கழுக்குன்றே. 2

1114. தேனகத்தார் வண்டதுவுண்ட
திகழ்கொன்றை
தானகத்தார் தண்மதிசூடித்
தலைமேலோர்

யுடையவன், நள்ளிருளில் நடமாடுதற்குரிய காட்டையுடையவன். அத்தகைய இறைவன் காதலிக்கும் இடம் கழுக்குன்று என்கின்றது. ஏடு - மலர். நள்ளிருள் - நடு இராத்திரி. ஏமம் - யாமம்.

2. பொ-ரை : திருமாலாகிய பன்றியினது வெண்மையான கொம்பை அகழ்ந்து அணிய வல்லவன். வாமனனாக அவதரித்த திருமாலின் கூர்மாவதார ஆமையோட்டினை அணிகலனாகக் கோத்துப் பூண வல்லவன். முறுக்கிய சடைமுடிமேல் ஒப்பற்ற கங்கை, கொன்றை மாலை ஆகியவற்றை விரும்பி அணிபவன். பெண்ணின் நல்லவளான உமையம்மையைத் தன் திருமேனியின் ஒரு பாகமாகக் காணுமாறு செய்தருளியவன். அத்தகையோன் காதல் செய்யும் கோயில் திருக்கழுக்குன்றமாகும்.

கு-ரை : பன்றிக்கொம்பைக் கேணவல்லவனும், ஆமையோட்டைப் பூணவல்லவனும், கொன்றைமாலையணிபவனும், உமையை யொருபாகம் உடையவனும் ஆகிய இறைவன் கோயில் கழுக்குன்று என்கின்றது. கேண - சிதைக்க. கேழல் - பன்றி. குறள் ஆமை - சிறிய ஆமை. ஈண்டு அதன் ஓட்டினைக் குறிக்கின்றது.

3. பொ-ரை : தேனை அகத்தே இருந்து வண்டுகள் உண்ட, விளங்கிய கொன்றை மாலையைச் சூடிய தலையில் மதியைச் சூடி, வானகத்தவரும், வையகத்தவரும் தொழுதேத்தும் வண்ணம் சுடு காட்டைத் தனக்கு இடமாகக் கொண்ட இறைவன் விரும்பி உறையும் கோயில் திருக்கழுக்குன்றம்.

Koviloor Digital Library

வானகத்தார் வையகத்தார்கள்
தொழுதேத்தும்
கானகத்தான் காதல்செய்கோயில்
கழுக்குன்றே. 3

1115. துணையல்செய்தான் றூயவண்டியாழ்செய்
சுடர்க்கொன்றை
பிணையல்செய்தான் பெண்ணினல்லாளை
யொருபாகம்
இணையல்செய்யா விலங்கெயின்மூன்று
மெரியுண்ணக்
கணையல்செய்தான் காதல்செய்கோயில்
கழுக்குன்றே. 4

கு-ரை : கொன்றையையும், மதியையும் அணிந்து விண்ணவரும் மண்ணவரும் துதிக்கநின்ற இறைவன் இடம் இது என்கின்றது. தேன் அகத்து ஆர் வண்டு - தேனைப் பூவினகத்தில் இருந்து உண்ணும் வண்டு.

கொன்றை தான் நக தார் தண்மதிசூடி - கொன்றை மலர, அம்மாலையைத் தண் பிறையோடு சூடி. கானகத்தான் - காட்டில் உறைபவன்.

4. பொ-ரை : வண்டுகள் யாழ்போல் ஒலித்து மொய்க்கும் தூய ஒளி நிறைந்த கொன்றை மாலையை அணிந்தவனும், பெண்ணின் நல்லவளான உமையம்மையைக்கூடி அவளைத்தன் உடலில் ஒரு பாகமாகப் பிணைத்திருப்பவனும், தன்னோடு இணைந்து வாராத புரங்கள் மூன்றையும் எரி உண்ணுமாறு கணையை விடுத்தவனுமாகிய சிவபிரான் காதல் செய்யும் கோயில், கழுக்குன்றம் ஆகும்.

கு-ரை : கொன்றையணிந்து, உமையை ஒருபாகத்துவைத்து, திரிபுரமெரித்த இறைவன் இடம் இது என்கின்றது.

துணையல் - இரண்டிரண்டாகச் சேர்த்துக் கட்டும் மாலை. பிணையல் - புணர்தல். இணையல் - நட்புக்கொள்ளல். கணையல் செய்தான் - அம்பெய்தான். நான்கு அடிகளிலும் அல் சாரியை.

Koviloor Digital Library

1116. பையுடைய பாம்பொடுநீறு
பயில்கின்ற
மெய்யுடையான் வெண்பிறைசூடி
விரிகொன்றை
மையுடைய மாமிடற்றண்ணன்
மறிசேர்ந்த
கையுடையான் காதல்செய்கோயில்
கழுக்குன்றே. 5

1117. வெள்ளமெல்லாம் விரிசடைமேலோர்
விரிகொன்றை
கொள்ளவல்லான் குரைகழலேத்துஞ்
சிறுத்தொண்டர்
உள்ளமெல்லா முள்கிநின்றாங்கே
யுடனாடும்
கள்ளம்வல்லான் காதல்செய்கோயில்
கழுக்குன்றே. 6

5. பொ-ரை : நச்சுப் பையையுடைய பாம்போடு திருநீறு அணிந்த திருமேனியை உடையவனும், வெண்பிறையையும், விரிந்த கொன்றையையும் முடியில் சூடியவனும், விடம் பொருந்திய மிடற்றினை உடைய தலைமையாளனும், மானேந்திய கையை உடையவனுமாகிய சிவபிரான் விரும்பி உறையும் கோயில் கழுக்குன்றம் ஆகும்.

கு-ரை : அரவும் திருநீறும் பழகும் திருமேனியுடையவனும், பிறை கொன்றை இவற்றையணிந்த நீலகண்டனும், மானேந்திய கையையுடையவனும் ஆகிய சிவபெருமான் இடம் கழுக்குன்று என்கின்றது. பை - படம். மை - விடம்.

6. பொ-ரை : விரிந்த சடைமுடியின்மேல் வெள்ளமாகப் பெருகி வந்த கங்கையின் அனைத்து நீரையும் விரிந்த கொன்றை மாலையோடு சூடியிருப்பவனும், தனது ஒலிக்கின்ற கழல் அணிந்த திருவடிகளை ஏத்தித் துதிக்கும் சிறிய தொண்டர்களின் உள்ளமெல்லாம் நிறைந்து, அவர்கள் தியானித்து நின்று ஆடத் தானும் உடன் ஆடும் கள்ளம் வல்லவனுமாகிய, சிவபிரான் காதல் செய்யும் கோயில் கழுக்குன்றம் ஆகும்.

Koviloor Digital Library

* * * * * * * * * * 7

1118. ஆதல்செய்தா னரக்கர்தங்கோனை
யருவரையின்
நோதல்செய்தா னொடிவரையின்கண்
விரலூன்றிப்
பேர்தல்செய்தான் பெண்மகள்தன்னோ
டொருபாகம்
காதல்செய்தான் காதல்செய்கோயில்
கழுக்குன்றே. 8

1119. இடந்தபெம்மா னேனமதாயு
மனமாயும்
தொடர்ந்தபெம்மான் றூமதிசூடி
வரையார்தம்

கு-ரை : விரிசடைமேல் கங்கையையும் கொன்றையையும் சூட வல்லவனும், அடிபணியும் அடியார் உள்ளங்களில் எல்லாம் உடனாய்நின்று ஆடும் கள்ளனுமாகிய பெருமான் காதலிக்கும் கோயில் கழுக்குன்று என்கின்றது. வெள்ளம் - கங்கை. குரை கழல் - ஒலிக்கும் வீரக்கழல். உள்கி - எண்ணி.

7. * * * * * * * * * *

8. பொ-ரை : அரக்கர் கோனை அரிய கயிலை மலையின்கீழ் அகப்படுத்தி, நொடிப்பொழுதில் கால் விரலை ஊன்றி, அவனை நோதல் செய்தவனும், பிறகு அவனுக்கு ஆக்கம் வழங்கியவனும், பெண்மகளாகிய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு காதல் செய்தவனுமாகிய சிவபிரான் காதல் செய்யும் கோயில் கழுக்குன்றம் ஆகும்.

கு-ரை : கைலையைத் தூக்கிய இராவணனை அழியச் செய்தவனும், உமையை ஒருபாகத்திருத்திக் காதல் செய்தவனும் ஆகிய இறைவன் இடம் இது என்கின்றது. நொடிவரை - நொடிப்பொழுது.

9. பொ-ரை : அடிமுடி காணப் பன்றி உருவோடு நிலத்தை அகழ்ந்து சென்ற திருமாலும், அன்னமாய்ப் பறந்து சென்ற நான்

Koviloor Digital Library

மடந்தைபெம்மான் வார்கழலோச்சிக்
காலனைக்
கடந்தபெம்மான் காதல்செய்கோயில்
கழுக்குன்றே. 9

1120. தேயநின்றான் றிரிபுரங்கங்கை
சடைமேலே
பாயநின்றான் பலர்புகழ்ந்தேத்த
வுலகெல்லாம்
சாயநின்றான் வன்சமண்குண்டர்
சாக்கீயர்
காயநின்றான் காதல்செய்கோயில்
கழுக்குன்றே. 10

முகனும், தொடர்ந்த பெருமானாய், தூய மதியை முடியிற் சூடியவன், மலைமகளின் தலைவன், வார்கழலணிந்த திருவடியை உயர்த்திக் காலனைக் காய்ந்தவன் ஆகிய சிவபிரான் காதல் செய்யும் கோயில் கழுக்குன்றம் ஆகும்.

கு-ரை : திருமால் பன்றியாய்த் தோண்டிக் காணவும், பிரமன் அன்னமாய்ப் பறந்து தொடரவும் நின்ற பெருமான், காலனைக் கடந்த பெருமான் காதல்செய்த இடம் இது என்கின்றது. இடந்த - தோண்டிய. ஏனம் - பன்றி. கடந்த - வென்ற.

10. பொ-ரை : முப்புரங்களை அழியுமாறு செய்தவனும், பெருகி வந்த கங்கை தன் சடை மேல் பாய நின்றவனும், பலரும் புகழ்ந்து போற்ற உலகனைத்தும் ஊழி இறுதியில் அழியுமாறு நின்றவனும், வலிய சமண் குண்டர்களும், புத்தர்களும் கெடுமாறு நின்றவனும் ஆகிய சிவபிரான் காதல் செய்யும் கோயில் கழுக்குன்றமாகும்.

கு-ரை : திரிபுரம் தேயவும், கங்கை சடைமேலே பாயவும் நின்ற பெருமான், புறச்சமயிகள் காயநின்றவன் காதல் செய்யுமிடம் கழுக்குன்று என்கின்றது.

தேய - அழிய. சாய - கெட. சாக்கியர் என்பது சந்த நோக்கி நீண்டது.

Koviloor Digital Library

1121. கண்ணுதலான் காதல்செய்கோயில்
கழுக்குன்றை
நண்ணியசீர் ஞானசம்பந்தன்
றமிழ்மாலை
பண்ணியல்பாற் பாடியபத்து
மிவைவல்லார்
புண்ணியராய் விண்ணவரோடும்
புகுவாரே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : நெற்றியில் கண்ணுடையவனாகிய சிவபிரான் காதல் செய்யும் கோயிலாகிய திருக்கழுக்குன்றத்தைப் புகழ் பொருந்திய ஞானசம்பந்தன் பண் அமைதியோடு பாடிய தமிழ் மாலையாகிய பத்துப் பாடல்களையும் பாடிப் போற்றுபவர் புண்ணியராய்த் தேவர்களோடு வானுலகம் புகுவர்.

கு-ரை : ஞானசம்பந்தன் பாடிய கழுக்குன்றப் பதிகத்தைப் பண்ணியல்பால் பாடிய பத்தும் வல்லவர் புண்ணியராய்த் தேவரோடு உடன் உறைவர் என்கின்றது.

திருஞானசம்பந்தர் புராணம்

சென்றணையும் பொழுதின்கண் திருத்தொண்டர் எதிர்கொள்ளப்
பொன்றிகழும் மணிச்சிவிகை இழிந்தருளி உடன்போந்து
மன்றல்விரி நறுஞ்சோலைத் திருமலையை வலங்கொண்டு
மின்றயங்குஞ் சடையாரை விருப்பினுடன் பணிகின்றார்.

திருக்கழுக்குன் றத்தமர்ந்த செங்கனகத் தனிக்குன்றைப்
பெருக்கவளர் காதலினால் பணிந்தெழுந்து பேராத
கருத்தினுடன் காதல்செயுங் கோயில்கழுக் குன்றென்று
திருப்பதிகம் புனைந்தருளிச் சிந்தைநிறை மகிழ்வுற்றார்.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

104. திருப்புகலி

பண்: வியாழக்குறிஞ்சி

பதிக எண்: 104

திருச்சிற்றம்பலம்

1122. ஆட லரவசைத்தா னருமாமறை தான்விரித்தான் கொன்றை
சூடிய செஞ்சடையான் சுடுகா டமர்ந்தபிரான்
ஏடவிழ் மாமலையா ளொருபாக மமர்ந்தடியா ரேத்த
ஆடிய வெம்மிறையூர் புகலிப் பதியாமே. 1

1123. ஏல மலிகுழலா ரிசைபாடி யெழுந்தருளாற் சென்று
சோலை மலிசுனையிற் குடைந்தாடித் துதிசெய்ய
ஆலை மலிபுகைபோ யண்டர்வானத்தை மூடிநின்று நல்ல
மாலை யதுசெய்யும் புகலிப் பதியாமே. 2

1. பொ-ரை: படம் எடுத்து ஆடும் பாம்பினை இடையில் கட்டியவனும், அரிய பெரிய வேதங்களை அருளிச் செய்தவனும், கொன்றை மலர் மாலையைச் சூடிய செஞ்சடை முடியை உடையவனும், சுடுகாட்டைத் தனது இருப்பிடமாகக் கொண்டு உறைபவனும், இதழ் அவிழும் மலர்கள் பூத்த பெரிய இமய மலை அரசனின் புதல்வியாகிய பார்வதி தேவியை ஒரு பாகமாக விரும்பி ஏற்று அடியவர் போற்ற நடனம் ஆடியவனும் ஆகிய எம் இறைவனது ஊர் புகலிப் பதியாகும்.

கு-ரை: அரவணிந்து, வேதம் விரித்து, கொன்றை சூடி, சுடு காட்டில் அமர்ந்த பிரான் உமையொரு பாகத்திருக்க ஆடிய இறைவன் ஊர் புகலிப்பதியாம் என்கின்றது. அசைத்தான் - கட்டியவன். ஏடு - இதழ். புகலி - சீகாழி.

2. பொ-ரை: மயிர்ச் சாந்தணிந்த கூந்தலினை உடைய மகளிர் காலையில் எழுந்து இசை பாடிக் கொண்டு இறையருள் பெறும் வேட்கையோடு சென்று சோலையின்கண் விளங்கும் சுனையில் துளைந்து நீராடித் துதி செய்ய, கரும்பு ஆலைகளில் நிறைந்தெழுந்த புகை சென்று தேவர்கள் உறையும் வானகத்தை மூடி நின்று காலையை நல்ல மாலைப் போதாகச் செய்வது புகலிப் பதியாம். மகளிர் நீராடித் துதி செய்ய விளங்குவது புகலிப் பதி என முடிவு காண்க.

Koviloor Digital Library

1124. ஆறணி செஞ்சடையா னழகார்புர மூன்றுமன்று வேவ
நீறணி யாகவைத்த நிமிர்புன்சடை யெம்மிறைவன்
பாறணி வெண்டலையிற் பகலேபலி யென்றுவந்து நின்ற
வேறணி கோலத்தினான் விரும்பும் புகலியதே. 3

1125. வெள்ள மதுசடைமேற் கரந்தான் விரவார்புரங்கண் மூன்றுங்
கொள்ள வெரிமடுத்தான் குறைவின்றி யுறைகோயில்
அள்ளல் விளைகழனி யழகார்விரைத் தாமரைமே லன்னம்
புள்ளினம் வைகியெழும் புகலிப் பதிதானே. 4

கு-ரை: மகளிர் விடியலில் இசைபாடிக்கொண்டே எழுந்து சுனையில் நீராடித் தோத்திரிக்க, ஆலைப்புகைபோய் ஆகாயத்தை மறைத்து மாலைக்காலத்தைச் செய்யும் புகலி என்கின்றது. ஏலம் - மயிர்ச்சாந்து. அண்டர் - தேவர்.

3.பொ-ரை: கங்கை சூடிய செஞ்சடையினை உடையவனும், அழகமைந்த முப்புரங்களைத் தீயால் வேவச் செய்தவனும், திரு நீற்றைத் தன் திருமேனியில் அழகாகப் பூசியவனும், மேல்நோக்கிய சிவந்த சடையை உடைய எம் இறைவனும், பருந்து சூழும் வெள்ளிய தலையோட்டை ஏந்திப் பகலில் பலி இடுக என்று வந்து நிற்பவனும் வேறுபாடு உடையனவாய்ப் புனையப் பெற்ற கோலத்தினனும் ஆகிய சிவபிரான் விரும்பும் தலம் புகலியாகும்.

கு-ரை: திரிபுரம்வேவ, திருநீற்றை அணியாகப்பூசிய இறைவன் விரும்பும் இடம் புகலி என்கின்றது. அணியாக - ஆபரணமாக. பாறு - பருந்து.

4. பொ-ரை: பெருகி வந்த கங்கை வெள்ளத்தைச் சடைமேல் கரந்தவனும், பகைவர்களாகிய அசுரர்களின் புரங்கள் மூன்றையும் எரி மடுத்தவனும் ஆகிய சிவபிரான் குறைவிலா நிறைவோடு உறையும் கோயில், சேறு நிறைந்த வயல்களில் முளைத்த அழகிய மணங்கமழும் தாமரை மலர்கள் மேல் அன்னமும் பிற பறவைகளும் வந்து தங்கிச் செல்லும் புகலிப் பகுதியாகும்.

கு-ரை: கங்கையைச் சடையிற்கரந்தவன் திரிபுரம் தீமடுத்தவன் உறையும்கோயில் புகலிப்பதி என்கின்றது. விரவார் - பகைவர். அள்ளல் - சேறு. தாமரைமேல் அன்னமும் பறவைக் கூட்டங்களும் தங்கி எழும் புகலி என்க.

Koviloor Digital Library

1126. சூடு மதிச்சடைமேற் சுரும்பார்மலர்க் கொன்றைதுன்ற நட்டம்
ஆடு மமரர்பிரா னழகாருமை யோடுமுடன்
வேடு படநடந்த விகிர்தன் குணம்பரவித் தொண்டர்
பாட வினிதுறையும் புகலிப் பதியாமே. 5

1127. மைந்தணி சோலையின்வாய் மதுப்பாய்வரிவண்டினங்கள்
[வந்து
நந்திசை பாடநடம் பயில்கின்ற நம்பனிடம்
அந்திசெய் மந்திரத்தா லடியார்கள் பரவியெழ விரும்பும்
புந்திசெய் நான்மறையோர் புகலிப் பதிதானே. 6

5. பொ-ரை: மதி சூடிய சடையின் மீது வண்டுகள் மொய்க்கும் கொன்றை மலர்களைப் பொருந்துமாறு அணிந்து நடனம் ஆடும் தேவர் பிரானும், அழகிய உமையம்மையோடு உடனாய் வேட்டுவக் கோலத்தோடு தோன்றி அருச்சுனற்கு அருள்புரிய நடந்த வேறுபாடு டையவனும் ஆகிய சிவபிரானின் குணங்களைப் போற்றித் தொண்டர்கள் பாட அப்பெருமான் இனிதுறையும் பதி புகலியாகும்.

கு-ரை: மதிசூடிய சடைமேல் கொன்றை நெருங்க நடனம் ஆடும் பெருமானும், உமையோடும் வேடனாகி நடந்த இறைவனும் ஆகிய இவர் புகழைத் தொண்டர்கள் புகழ்ந்துபாட இனிதுறையும் பதி புகலியாம் என்கின்றது.

6. பொ-ரை: இளமை குன்றாத மரங்களை உடைய அழகிய சோலையின்கண் மலர்ந்த பூக்களின் தேனில் பரவிய வரி வண்டுகள் வந்து வளரும் இசையைப் பாட நடம் பயிலும் பெருமானது இடம், அந்திக் காலங்களில் செய்யும் சந்தியாவந்தன மந்திரங்களால் அடியார்களாய்ப் போற்றுவதற்கு நான்கு வேதங்களிலும் வல்ல அந்தணர் விருப்போடு தமது புந்தியில் நினைக்கும் புகலிப் பதியாகும்.

கு-ரை: சோலையில் வண்டினங்கள் இசைபாட நடம்புரியும் நம்பன் இடம் புகலி என்கின்றது.

மைந்து - இளமை. நந்து இசை - வளரும் இசைகளை. அந்திசெய் மந்திரம் - சந்தியா மந்திரம். பரவி - வணங்கி. அந்தி - காலை அந்தி, நண்பகல் அந்தி, மாலை அந்தி என்பன.

Koviloor Digital Library

1128. மங்கையோர் கூறுகந்த மழுவாளன் வார்சடைமேற் றிங்கள்
கங்கை தனைக்கரந்த கறைக்கண்டன் கருதுமிடஞ்
செங்கயல் வார்கழனி திகழும் புகலிதனைச் சென்றுதம்
அங்கையி னாற்றொழுவா ரவலம் மறியாரே. 7

1129. வில்லிய நுண்ணிடையா ளுமையாள் விருப்பனவ னண்ணும்
நல்லிட மென்றறியா னலியும் விறலரக்கன்
பல்லொடு தோணெரிய விரலூன்றிப் பாடலுமே கைவாள்
ஒல்லை யருள்புரிந்தா னுறையும் புகலியதே. 8

7. பொ-ரை: உமையம்மையைத் தனது திருமேனியில் ஒரு பாகமாகக் கொண்டு மகிழ்பவனும், மழுவாயுதத்தைக் கையில் ஏந்தியவனும், நீண்ட சடைமேல் திங்களையும் கங்கையையும் அணிந்தவனும், விடக் கறை பொருந்திய மிடற்றினனும் ஆகிய சிவபிரான் கருதி உறையும் இடமாகிய சிவந்த கயல் மீன்கள் திகழும் நீண்ட வயல்களோடு விளங்கும் திருப்புகலிக்குச் சென்று தம் அழகிய கைகளைக் குவித்து வணங்குபவர் துன்பங்கள் நீங்கப் பெறுவர்.

கு-ரை: உமாதேவியை ஒருபால் விரும்பிய மழுவாளனும், கங்கையைச் சடைமேல் மறைத்து வைத்த நீலகண்டனுமாகிய இறைவன் விரும்பிய புகலியைத் தொழுவார்கள் துன்பம் அறியார்கள் என்கின்றது. அவலம் - துன்பம்.

8. பொ-ரை: ஒளி பொருந்திய நுண்ணிய இடையினை உடைய உமையவளிடம் பெருவிருப்பினனாகிய சிவபிரான் எழுந்தருளிய மேம்பட்ட இடம் என்று கருதாது கயிலை மலையைப் பெயர்த்தெடுத்த வலிய அரக்கனாகிய இராவணனின் பற்களும் தோள்களும் நெரியுமாறு கால்விரலை ஊன்றி அடர்த்த அளவில் அவன் தன்னைப் புகழ்ந்து பாடக் கேட்டுக் கையில் ஏந்திப் போர் செய்யும் வாளை விரைந்து அருள்புரிந்தவனாகிய சிவபிரான் உறையுமிடம் திருப்புகலியாகும்.

கு-ரை: இறைவன் உமாதேவியோடு எழுந்தருளியிருக்கின்ற இடம் இது என்று அறியாதவனாய்த் தூக்கிய இராவணனை அடர்த்து அருள் புரிந்தான் உறையும் இடம் புகலி என்கின்றது. வில்லிய - ஒளிபொருந்திய, பாடலும் - சாமவேதத்தைப் பாடலும். ஒல்லை - விரைவு.

Koviloor Digital Library

1130. தாதலர் தாமரைமே லயனுந் திருமாலுந் தேடி
ஓதியுங் காண்பரிய வுமைகோ னுறையுமிடம்
மாதவி வான்வகுள மலர்ந்தெங்கும் விரைதோய வாய்ந்த
போதலர் சோலைகள்சூழ் புகலிப் பதிதானே. 9

1131. வெந்துவர் மேனியினார் விரிகோவண நீத்தார் சொல்லும்
அந்தர ஞானமெல்லா மவையோர் பொருளென்னேல்
வந்தெதி ரும்புரமூன் றெரித்தா னுறைகோயில் வாய்ந்த
புந்தியி னார்பயிலும் புகலிப் பதிதானே. 10

9. பொ-ரை: மகரந்தம் விரிந்த தாமரை மலர் மேல் உறையும் பிரமனும் திருமாலும் தேடியும் புகழ்ந்தும் காண்டற்கு அரியவனாய் நின்ற உமை மணவாளனாம் சிவன் உறையுமிடம் , மாதவி, வானளாவ உயர்ந்த மகிழம்ரம் ஆகியன மலர்ந்து எங்கும் மணம் பரப்புமாறு பொருந்திய மலர் விரிந்த சோலைகள் சூழ்ந்த புகலிப் பதியாகும்.

கு-ரை: அயனும் மாலும் தேடியும், ஓதியும் காணுதற்கரிய உமாபதி உறையும் இடம் புகலி என்கின்றது.

தாது - மகரந்தம். மாதவி - குருக்கத்தி. வகுளம் - மகிழ்.

10. பொ-ரை: கொடிய மருதத் துவராடை உடுத்த மேனியின ராகிய புத்தர்களும் விரிந்த கோவணம் உடுப்பதையும் துறந்த திகம்பர சமணரும் சொல்லும் அழிவுதரும் ஞானங்களாகிய அவற்றை ஒரு பொருளாகக் கொள்ளாதீர். தம்மை வந்தெதிர்த்த திரிபுரங்களை எரித்தவனாகிய சிவபிரான் உறையும் கோயில், பொருந்திய அறிவு உடையவர் வாழும் புகலிப் பதியாகும். அதனைச் சென்று தொழுமின்.

கு-ரை: புத்தரும் சமணரும் கூறும் ஞானத்தை ஒரு பொரு ளாகக்கொள்ளேல்; திரிபுரம் எரித்தான் உறையும் கோயில் புகலியாம் என்கின்றது.

வெம் துவர் - கொடிய துவராடை. கோவணம் நீத்தார் - கோவணத்தையும் துறந்தவர்கள். அந்தர ஞானம் - இடையீடு உற்ற ஞானம்.

Koviloor Digital Library

1132. வேதமோர் கீதமுணர் வாணர்தொழு தேத்த மிகுவாசப்
போதனைப் போன்மறையோர் பயிலும் புகலிதன்னுள்
நாதனை ஞானமிகு சம்பந்தன் றமிழ்மாலை நாவில்
ஓதவல் லாருலகி லுறுநோய் களைவாரே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை: வேத கீதங்களை உணர்ந்து வாழ்பவர் தொழுது ஏத்தவும், மிக்க மணமுடைய தாமரை மலர் மேல் உறையும் நான் முகனைப் போல விளங்கும் மறையவர் போற்றவும், விளங்கும் புகலியுள் உறையும் சிவபிரானை ஞானம் மிகும் சம்பந்தன் பாடிய இத்தமிழ் மாலையை நாவினால் ஓதி வழிபட வல்லவர் மேம்பட்ட பிறவிப் பிணியை நீக்கிவிடுவர்.

கு-ரை: வேதகீதம் உணர்ந்தவர்களாய்ப் பிரமனைப் போன்ற பிராமணர்கள் வாழ்கின்ற புகலியில் இருக்கும் சிவபெருமானைக் குறித்து, ஞானசம்பந்தன் சொன்ன மாலை ஓதவல்லார் நோய் நீங்குவார்கள் என்கின்றது. உணர்வாணர் - உணர்தலால் வாழ்பவர். வாசப் போதனை - வாசனை பொருந்திய தாமரைப் பூவில் இருக்கின்ற பிரமனை. உறுநோய் - மிக்க நோய்.

சோணசைலமாலை

இழையெனத் தளர்சிற் றிடையுணா முலையாள்
எனக்குவண் புகலிவேந் தயின்ற
கழுமணிப் பசும்பொற் குலவுபாற் கிண்ணம்
கழுவுநீர் வார்ப்பதற் குரையாய்
முழையிடைக் கதிர்மா மணிவிளக் கேற்றி
முசுக்கலை பிணாவொடும் அசோகத்
தழையிடைத் தழுவி உறங்குறும் சோண
சைலனே கைலைநா யகனே.

- சிவப்பிரகாச சுவாமிகள்.

Koviloor Digital Library

105. திருவாரூர்

பதிக வரலாறு:

அப்பரடிகளால் ஆதிரைத் திருநாள் மகிமையைக் கேட்டுத் திருவாரூருக்கு எழுந்தருள்கின்ற திருஞானசம்பந்தப் பிள்ளையார், சலந்தரனை வென்ற தலமாகிய விற்குடியை வணங்கிக்கொண்டு, அடியார்கள் புடைசூழ வருகின்றவர்கள், இப்பதிகத்தைப் பாடிக்கொண்டே எழுந்தருள்கின்றார்கள்.

பண்: வியாழக்குறிஞ்சி

பதிக எண்: 105

திருச்சிற்றம்பலம்

1133. பாடல னான்மறையன் படிபட்ட
கோலத்தன் றிங்கள்
சூடலன் மூவிலைய
சூலம் வலனேந்திக்
கூடலர் மூவெயிலும்மெரியுண்ணக்
கூரெரிகொண் டெல்லி
ஆடல னாதிரையன்
ஆரூ ரமர்ந்தானே. 1

1. பொ-ரை : திருவாரூரின்கண் எழுந்தருளிய இறைவன் பாடப்படும் நான்கு வேதங்களை அருளியவன். ஒப்பற்ற தோற்றத்தை உடையவன். திங்களை முடியிற் சூடியவன். இலை வடிவமான முத்தலைச் சூலத்தை வலக் கரத்தே ஏந்தித் தன் பகைவராக இருந்த அசுரர்களின் முப்புரங்களையும் எரியுண்ணச் செய்தவன். மிக்க எரியைக் கையில் ஏந்தி நள்ளிரவில் நடம் புரிபவன். திருவாதிரை நாளை உகந்தவன்.

கு-ரை : இப்பாட்டு, தியாகேசப் பெருமானது உரை, கோலம், அணி, வீரம் முதலியவற்றை விளக்கியருளுகிறது. பாடலன் நான் மறையன் - பாடப்பெறுகின்ற நான்கு வேதங்களையுடையவன். அன் தவிர்வழிவந்த சாரியை. அன்றிப் பாடலன் நான் மறையன் எனப் பிரித்துத் தோத்திரத் தமிழ் பாடல்களையும் நான்மறைகளையும்

Koviloor Digital Library

1134. சோலையில் வண்டினங்கள் சுரும்போ
டிசைமுரலச் சூழ்ந்த
ஆலையின் வெம்புகைபோய்
முகில்தோயும் ஆரூரில்
பாலொடு நெய்தயிரும் பயின்றாடும்
பரமேட்டி பாதம்
காலையு மாலையும்போய்ப்
பணிதல் கருமமே. 2

உடையன் எனலுமாம். படிபட்ட கோலத்தன். எஞ்ஞான்றும் எவ்வகையிலும் ஒப்பில்லையாம்படியுயர்ந்த திருமேனியழகினை யுடையான். சூடலன் - சூடுதலையுடையவன். கூடலர் - பகைவர்; திரிபுராரிகள். கூர் எரி - மிக்க எரி. எல்லி - இரவு. ஆதிரையன் என்பது அப்பர் அடிகள் தெரிவித்த சிறப்பு திருவுள்ளத்து நிற்றலான் எழுந்தது. ஆரூரமர்ந்தான், பாடலன் முதல் ஆதிரையன் என்பது இறுதியாகக் கூட்டி முடிவு காண்க.

2. பொ-ரை : சோலைகளில் வண்டுகளும், சுரும்புகளும் இசை முரலவும், சூழ்ந்துள்ள கரும்பாலைகளில் தோன்றும் விரும்பத்தக்க புகை மேல் நோக்கிச் சென்று வானத்திலுள்ள முகில்களில் தோய்வதுமான திருவாரூரில் பால், நெய், தயிர் ஆகியவற்றை விரும்பி ஆடும் மேலான இறைவன் திருவடிகளைக் காலை மாலை ஆகிய இரு போதுகளிலும் சென்று பணிவது நாம் செய்யத்தக்க கருமமாகும்.

கு-ரை : இப்பாட்டு இறைவனை இருபோதும் வணங்கல் கடமையென்றறிவிக்கின்றது. வண்டினங்கள் சுரும்போடிசைமுரல - வண்டின்சாதி நான்கில் வண்டும் சுரும்பும் தம்மினத்தோடு மாறி யொலிக்க. வண்டுஞ் சுரும்பும் இசை முரல ஆலையின் வெம்புகை வானத்து முகில்தோயும் ஆரூர் என்றது பரமேட்டி பாதம் பணிவார் மங்கள வாத்தியம் ஒலிக்க இன்பவுலகடைவார் இது உறுதி என்ற உள்ளுறை தோன்றநிற்கின்றது.

கருமம் - கடமை. பயின்று - விரும்பி. பாலொடு நெய் தயிரும் எனப் பஞ்சகவ்வியத்துள் மூன்றே கூறினார்கள்; இறைவன் ஆடுதற்குரியன இவையேயாதலின். கோசல கோமயம் நீக்கி மோரும் வெண்ணையும் கொள்வார் இனம்பற்றி அவ்விரண்டும் கொள்க.

Koviloor Digital Library

1135. உள்ளமோ ரிச்சையினா லுகந்தேத்தித்
தொழுமின்றொண்டீர் மெய்யே
கள்ள மொழிந்திடுமின்
கரவா திருபொழுதும்
வெள்ளமோர் வார்சடைமேற்கரந்திட்ட
வெள்ளேற் றான்மேய
அள்ள லகன்கழனி
ஆரூர் அடைவோமே. 3

3. பொ-ரை : தொண்டர்களே! நீவிர் உள்ளத்தால் ஆராய்ந்தறிந்த விருப்போடு மகிழ்ந்து போற்றித் தொழுவீர்களாக. மறைக்காமல் உண்மையாகவே உம் நெஞ்சத்திலுள்ள கள்ளங்களை ஒழிப்பீர்களாக! காலை மாலை இருபோதுகளிலும் கங்கை வெள்ளத்தை ஒப்பற்ற நீண்ட தன் சடைமேல் மறையும்படி செய்தவனும், வெண்மையான ஆனேற்றை உடையவனுமான சிவபிரான் எழுந்தருளிய சேற்று வளம் மிக்க அகன்ற வயல்களால் சூழப்பெற்ற திருவாரூரை வழிபடுதற் பொருட்டு நாம் செல்வோம்.

கு-ரை : சென்ற திருப்பாட்டில் பணிதல் கருமமே எனப் படர்க்கையாக உணர்த்தியவர்கள் இத்திருப்பாட்டில் தன்மையில் வைத்து இருபொழுதும் அடைவோம் என்கின்றார்கள்.

உள்ளமோர் இச்சையினால் - மனத்தான் ஓர்ந்து இதுவே உறுதியெனக் கடைப்பிடிக்கப்பெற்ற இச்சையால்; அன்றி மந்ததர பக்குவர்க்காயின், ஏதோ ஒரு விருப்பத்தால் மகிழ்ந்து எனக் கொள்க. ஓர்: அசையுமாம். வெள்ளம் ஓர் வார்சடைமேல் கரந்திட்ட - வானுல கன்றித் தரணி தனக்கிடமாதல் தகாது எனத் தருக்கிவந்த கங்கையை ஒரு சடைக்கும் காணாது என்னும்படித் தருக்கடக்கி, இருக்குமிடமும் தெரியாதபடி மறைத்த. கரந்திட்ட என்றது - மறைத்தவன் வேண்டும் போது வெளிப்படுத்தும் வன்மையும் உடையவன் என்பதுதோன்ற நின்றது.

வெள்ளேற்றான் - அறவடிவான வெள்ளிய இடபமுடை யவன். தருக்கடக்கியதோடன்றித் தண்ணருளும் வழங்க இருக்கின் றான் என்பது சிந்தை கொள்ளக் கரந்திட்ட என்பதனையடுத்து வெள்ளேற்றான் என்பதனைத் தெரித்தார்கள்.

Koviloor Digital Library

1136. வெந்துறு வெண்மழுவாட் படையான்
மணிமிடற்றா னரையின்
ஐந்தலை யாடரவ
மசைத்தா னணியாரூர்ப்
பைந்தளிர்க் கொன்றையந்தார்ப் பரமன்
னடிபரவப் பாவம்
நைந்தறும் வந்தணையும்
நாடொறும் நல்லனவே. 4

4. பொ-ரை: அடியவர்களின் வினைகளை வெந்தறுமாறு செய்யும் வெண்மையான மழுவாளைக் கையில் ஏந்தியவனும், நீல மணி போன்ற கண்டத்தை உடையவனும், இடையில் ஐந்து தலை யுடையதாய் ஆடும் பாம்பினைக் கட்டியவனும், அழகிய திருவாரூரில் பசுந்தளிர்களோடு கட்டிய கொன்றை மாலையை அணிந்தவனுமாகிய பரமனுடைய அடிகளைப் பரவ நம் பாவங்கள் நைந்து இல்லை யாகும். நாள்தோறும் நமக்கு நல்லனவே வந்தணையும்.

கு-ரை: கீழைத்திருப்பாட்டில் தொண்டர்க்கு உகந்தேத்தப் பணித்த பிள்ளையார், இத்திருப்பாட்டில் அடைந்தார் அல்லல்களைய ஆயுதந்தாங்கி இருக்கின்றார் என்பதையும், அடைந்தாரைப் பாது காத்த அடையாளமாகக் கண்டத்துக் கறையுடையர் என்பதையும் விளக்குகின்றார்கள்.

வெந்துறு வெண்மழு - அடியார்கள் வினை வெந்து போதற்குக் காரணமாகிய கறையற்ற மழு. மழுவும், வாளும் அடைந் தாரைக் காக்க ஏந்திய ஆயுதங்கள்.

மணிமிடற்றான் - நீலகண்டன்; இது கலங்கிய தேவரைக் காத்த அடையாளம். அடியார்களுடைய ஐம்பொறிகளையும் தத்தம் புலன் களில் செல்லவிடாது தடுத்தாட் கொள்ளும் தன்மையைப்போல, ஆடுந்தன்மை வாய்ந்த ஐந்தலைப் பாம்பைச் சேட்டியாதே திருவரை யில் இறுகக் கட்டினான் என்பது.

பாவம் நைந்தறும் - தீவினைகள் நைந்து இல்லையாம். அடிபரவுவார் சிந்தை தீவினையை மிகுவிக்காமையின் நல்லனவே வரும் என்பதாம்.

Koviloor Digital Library

1137. வீடு பிறப்பெளிதா மதனை
வினவுதிரேல் வெய்ய
காடிட மாகநின்று
கனலேந்திக் கைவீசி
ஆடு மவிர்சடையா னவன்மேய
வாரூரைச் சென்று
பாடுதல் கைதொழுதல்
பணிதல் கருமமே. 5

1138. கங்கையோர் வார்சடைமேற் கரந்தான்
கிளிமழலைக் கேடில்
மங்கையோர் கூறுடையான்
மறையான் மழுவேந்தும்
அங்கையி னானடியே பரவி
யவன்மேய வாரூர்
தங்கையி னாற்றொழுவார்
தடுமாற் றறுப்பாரே. 6

5. பொ-ரை : வீடு பேற்றை அடைதல் நமக்கு எளிதாகும். அதற்குரிய வழிகளை நீர் கேட்பீராயின் கூறுகிறேன். கொடிய சுடுகாட்டைத் தனக்குரிய இடமாகக் கொண்டு கனலை ஏந்திக் கைகளை வீசிக்கொண்டு ஆடுகின்ற விளங்கிய சடைமுடியை உடையவனாகிய சிவபிரான் எழுந்தருளிய திருவாரூரை அடைந்து பாடுதல், கைகளால் தொழுதல், பணிதல் ஆகியனவற்றைச் செய்தலே அதற்குரிய வழி களாகும்.

கு-ரை : முற்கூறியவாறு வினைகளும் நைந்து நல்லன வந்து அடைந்தவிடத்து வீடடைதல் எளிதாம் என்கின்றது இத்திருப்பாடல். வீடு பிறப்பு - வீட்டின்கண் பிறத்தல்; என்றது வீடடைதல் என்னுமள விற்று. அதனை - உபாயத்தை. வெய்ய காட்டை இடமாகக் கொண்டு, வெய்ய கனலைக் கையேந்தி ஆடுவானாதலின், பாடுவார் தன்மை நோக்காது, கரும நோக்கிக் கருணை செய்வான் என்பதாம்.

6. பொ-ரை : கங்கையை ஒப்பற்ற தனது நீண்ட சடை முடி மேல் கரந்தவனும், கிளி போன்ற மழலை மொழி பேசும் கேடில்லாத உமை மங்கையை ஒரு பாகமாக உடையவனும், மழுவாயுதத்தை அழகிய

Koviloor Digital Library

1139. நீறணி மேனியனாய் நிரம்பா
மதிசூடி நீண்ட
ஆறணி வார்சடையான்
ஆரூ ர் இனிதமர்ந்தான்
சேறணி மாமலர்மேற் பிரமன்
சிரமரிந்த செங்கண்
ஏறணி வெல்கொடியா
னவனெம் பெருமானே. 7

கையில் ஏந்தியவனும் ஆகிய இறைவன் திருவடிகளையே பரவி அவன் எழுந்தருளிய திருவாரூரைத் தம் கைகளால் தொழுபவர் தடுமாற்றங்கள் தவிர்வர்.

கு-ரை: இவ்வண்ணம் கடமைகளை விடாது செய்தவர் வீடு எய்துவார் ஆதலின், பிறவிக்கடலில் வினைச்சுழலில் தடுமாறார் என இப்பாடல் தெரிவிக்கின்றது. கிளி மழலை மங்கை - கிளி போன்ற மழலைச் சொல்லினையுடைய உமாதேவி. கங்கை கரந்தான், மங்கையோர் கூறுடையான் என்றது தருக்கி வந்த தாழ்குழலை மறைத்தடக்கி, அநுக்கிரக சக்தியைத் தன் இடப்பாகமாகக் கொண்டு இருக்கின்ற அருமைப்பாடு அறிவிக்கின்றது. மறையான் - விதிமுறை யானும் விலக்குமுறையானும் அறிவுறுக்கும் ஆணை மொழியாகிய வேதங்களையுடையவன். பரவித் தொழுவார் தடுமாற்று - துணிவு பெறாத தொல்லை.

7. பொ-ரை: திருநீறு அணிந்த திருமேனியனாய்த் திருமுடியில் இளம்பிறையைச் சூடி, கங்கை விளங்கும் அழகிய நீண்ட சடைமுடியை உடையவனாய், திருவாரூரின் கண் மகிழ்வோடு எழுந்தருளி விளங்குபவனும், சேற்றின்கண் அழகியதாய்த் தோன்றி மலர்ந்த தாமரை மலர்மேல் விளங்கும் பிரமனது சிரங்களில் ஒன்றைக் கொய்த, சிவந்த கண்களை உடைய விடையேற்றை வெற்றிக் கொடியாகக் கொண்டவனுமாகிய சிவபெருமானே எம் தலைவ னாவான்.

கு-ரை: இங்ஙனம், ஆன்மாக்களின் தடுமாற்றறுப்பவரே தலைவர்; அவருடைய திருமேனியமைப்பும் இடமும் இத்தகைய என்பன முதலியவற்றை இப்பாடலில் அறிவிக்கின்றார். நிரம்பாமதி - இறைவன் முடியிலிருந்தும் நிரம்பாத பிள்ளைமதி. நிரம்பா மதிசூடி,

Koviloor Digital Library

* * * * * * * * * * 8

1140. வல்லியந் தோலுடையான் வளர்திங்கட்
கண்ணியினான் வாய்த்த
நல்லிய னான்முகத்தோன்
றலையின் னறவேற்றான்
அல்லியங் கோதைதன்னை யாகத்
தமர்ந்தருளி யாரூர்ப்
புல்லிய புண்ணியனைத்
தொழுவாரும் புண்ணியரே. 9

நீண்ட ஆறு அணிசடையன் என்றது குறைப் பொருளையும், நிறைப்பொருளையும் ஒப்ப நோக்குவான் என்பது விளக்கிற்று. சேறணி மாமலர் - சேற்றிற் பிறந்து அழகு செய்யும் தாமரை. சேறணி மாமலர்மேற் பிரமன் என, பிரமன் உந்தியந் தாமரையிலிருந்தும் கூறியது, தாமரை என்ற பொதுமை நோக்கி. 'புற்றில்வாளரவன்' (திருக்கோவை) என்று மணிவாசகர் கூறியருளியது போல. பிரமன் சிரமரிந்த செங்கண் ஏறணி வெல்கொடியான் என்றது மகன்றலையறுக்கவும் ஒரு கரத்துக் கொடியாக இருந்த இடபவடிவினனாகிய திருமால், பார்த்துக்கொண்டே யிருப்பதைத் தவிரத் தவிர்க்க முடியாத வண்ணம் தலைமைபடைத்தவன்; அவனே எம் தலைவன் எனத் தலைவனின் தனிச்சிறப்பினை விளக்கியவாறு.

8. * * * * * * * *

9. பொ-ரை : வலிய புலியினது தோலை உடுத்தவனும், வளர்தற்குரிய பிறைமதியைக் கண்ணியாகச் சூடியவனும், நல்லியல்புகள் வாய்ந்த பிரமனது தலையில் பலியேற்று உண்பவனும், அல்லியங் கோதை என்ற பெயருடைய அம்மையைத் தனது திருமேனியின் ஒரு பாகமாகக் கொண்டவனும் ஆகிய திருவாரூரில் விளங்கும் புண்ணியனைத் தொழுபவர்களும் புண்ணியராவர்.

கு-ரை : அத்தலைவன், அடைவார் எளிதில் அடைந்துய்ய அல்லியங் கோதையுடன் அருள்மூர்த்தியாய் ஆரூரில் அமர்ந்திருக்கின்றான் என இப்பாடலில் இடம் குறிக்கின்றார். வல்லியம் - புலி. நல்லியல் வாய்த்த நான்முகத்தோன் - தான் பிரமம் என்ற தன்மையொழிந்து தலைவனையுணர்தலாகிய நல்லியல்பு வாய்க்கப் பெற்ற

Koviloor Digital Library

1141. செந்துவ ராடையினா ருடைவிட்டு
நின்றுழல்வார் சொன்ன
இந்திர ஞாலமொழிந்
தின்புற வேண்டுதிரேல்
அந்தர மூவெயிலும் அரணம்
மெரியூட்டி யாரூர்த்
தந்திர மாவுடையா
னவனெந் தலைமையனே. 10

பிரமன். நல்லியல் வாய்க்கப்பெற்றமையாலேயே கபாலம் இறைவன் கரத்து ஏற்குங் கலமாக விளங்கிற்று. நறவு - அமுதம். விஷ்ணு மார்பிலுள்ளது. அல்லியங்கோதை - பூங்கோயில் பக்கத்துக் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் நீலோத்பலாம்பிகை. ஆகம் - திருமேனி.

10. பொ-ரை : செந்துவர் ஊட்டப்பட்ட ஆடையை உடுத்தவரும், ஆடையின்றித் திகம்பரராய்த் திரிபவரும் ஆகிய புத்த சமணர்கள் கூறிய மாயப் பேச்சுக்களைக் கேளாது விடுத்து, இன்புற்று வாழ விரும்புவீராயின் வானத்தில் திரியும் மூவெயில்களாகிய கோட்டைகளை எரியூட்டி அழித்தவனும் திருவாரூரைத் தனக்கு நிலையான இடமாகக் கொண்டவனுமாகிய சிவபிரானே எம் தலைவன் என்று வழிபடுவீர்களாக.

கு-ரை : புண்ணியனைத் தொழும் புண்ணியம் பெற்றநீங்கள், புறச்சமயிகள் கூறும் இந்திரஞாலம் நீங்கி, இன்பம் பெற வேண்டின், ஆரூருடையானைத் தலைவனாக அறியுங்கள் என்று அறிவித்தருள்கின்றார்.

செந்துவர் ஆடை - காவியாடை. சைன சந்நியாசிகளில் காவியாடையுடுத்தியவரும், திகம்பர சந்நியாசிகளும் என இருவகையார். இந்திரஞாலம் - இந்திரஞாலமான மாயப்பேச்சுக்கள். அந்தரம் - ஆகாயம். அரணம் - கோட்டை. ஆரூர் தம் திரமாவுடையான் - ஆரூரைத் தமது நிலைக்களனாகக் கொண்டவன். திரம் ஸ்திரம் என்பதன் திரிபு. சிவபூஜா துரந்தரர்களாகிய திரிபுராதிகள் தம் நிலை கெட்டது புத்தாவதாரங்கொண்ட திருமாலின் இந்திர ஜாலப் பேச்சால். திருமால் உபதேசம் மனத்தைக் கெடுத்தமையும், அதனால் அசுரர்கள் அழிந்தமையும் ஆகிய வரலாற்றை நினைப்பூட்டுவது இப்பகுதி.

Koviloor Digital Library

1142. நல்ல புனற்புகலித் தமிழ்ஞான
சம்பந்தன் நல்ல
அல்லி மலர்க்கழனி
ஆரூர் அமர்ந்தானை
வல்லதோ ரிச்சையினால் வழிபாடிவை
பத்தும் வாய்க்கச்
சொல்லுதல் கேட்டல்வல்லார்
துன்பந் துடைப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : தூயதான நீர்வளத்தை உடைய புகலியில் தோன்றிய தமிழ் ஞானசம்பந்தன் அக இதழ்களையுடைய நல்ல தாமரை முதலிய மலர்கள் பூத்த கழனிகளால் சூழப்பட்ட திருவாரூரில் எழுந்தருளிய இறைவனைத் தனக்கியன்ற வல்லமையால் அன்போடு பாடிய வழிபாட்டுப் பாடல்களாகிய இப்பதிகத்தைப் பொருந்தச் சொல்லுதல் கேட்டல் வல்லவர்கள் துன்பம் துடைப்பவர்களாவர்.

கு-ரை : அத்தகைய தலைவனாகிய ஆரூரமர்ந்தானை மனங் கொண்ட மகிழ்ச்சியால் எழுந்த பாடல்கள் பத்தினையும் பாடுவாரும் கேட்பாரும் துன்ப நீக்கம் பெறுவர் என்றுணர்த்துகிறது திருக்கடைக் காப்பாகிய இறுதிப் பாடல். நல்லபுனல் - கழுமலவள நதி. வழிபாடு பத்தும் - இப்பத்துப் பாடல்களுமே வழிபாடு ஆகும் என்பதாம். வாய்க்கச் சொல்லுதல் கேட்டல் - சொல்லும் வாயும், கேட்கும் செவியும், இவற்றை இயக்கும் உள்ளமும் பிறவழி போகாது பொருந்தச் சொல்லுதலும், கேட்டலும். துன்பந் துடைப்பார் - ஈரந் துடைத்தார் என்பது போலத் துன்பம் இருந்த சுவடுந் தெரியாதபடித் துடைப்பார் என்பதாம்.

ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை

மாதவத்தோர் வாழவும் வையகத்தோர் உய்யவும்
மேதக்க வானோர் வியப்பவும் - ஆதியாம்
வென்றிக் கலிகெடவும் வேதத் தொலிமிகவும்
ஒன்றிச் சிவனடியார் ஓங்கவும் - துன்றிய
பன்னு தமிழ்ப்பதினா றாயிர நற்பனுவல்
மன்னு புவியவர்க்கு வாய்ப்பவும் - முன்னிய
சிந்தனையாற் சீரார் கவுணியர்க்கோர் சேயென்ன
வந்தங் கவதரித்த வள்ளல். *- நம்பியாண்டார் நம்பி.*

Koviloor Digital Library

106. திருவூறல்

பதிக வரலாறு:

தக்கோலத்தை வணங்கி, தமிழ்மாலை சாத்திய ஆளுடைய பிள்ளையார் திருவூறலை அடைந்தார். அங்கு எழுந்தருளியுள்ள, இறைவனைப் பலமுறை வணங்கி, ''மாறிலவுணர் அரணம்'' என்னும் பழுதில் செந்தமிழ்ப்பாமாலை பாடினார்.

பண்: வியாழக்குறிஞ்சி

பதிக எண்: 106

திருச்சிற்றம்பலம்

1143. மாறி லவுணரரணம் மவைமாயவோர்
வெங்கணையா லன்று
நீறெழ வெய்தவெங்கள்
நிமல னிடம்வினவில்
தேற லிரும்பொழிலுந் திகழ்செங்கயல்
பாய்வயலுஞ் சூழ்ந்த
ஊற லமர்ந்தபிரா
னொலியார்கழ லுள்குதுமே. 1

1. பொ-ரை : தமக்கு ஒப்பாரில்லாத வலிய அவுணர்களின் அரணங்களாக விளங்கிய முப்புரங்களை மறையுமாறு முற்காலத்தில் ஒரு வெங்கணையால் நீறுபடச் செய்தழித்த எங்கள் நிமலன் ஆகிய சிவபிரான் எழுந்தருளியுள்ள இடம், யாதென வினவில், தேன் நிறைந்த பெரிய பொழில்களும், விளங்கிய செங்கயல்கள் பாயும் வயல்களும், சூழ்ந்துள்ள திருவூறலாகும். அப்பெருமானுடைய ஒலிக்கின்ற கழலணிந்த திருவடிகளை நாம் தியானிப்போம்.

கு-ரை : திரிபுரம் எரித்த சிவபெருமான் இடம்யாதென்று வினாவினால், அது திருஊறலாம்; அங்கு எழுந்தருளியுள்ள இறைவன் கழலைத் தியானிப்போம் என்கின்றது. அரணம் - கோட்டை. தேறல் - தேன்.

Koviloor Digital Library

1144. மத்த மதக்கரியை மலையான்மக
ளஞ்சவன்று கையால்
மெத்த வுரித்தவெங்கள்
விமலன் விரும்புமிடம்
தொத்தல ரும்பொழில்சூழ் வயல்சேர்ந்தொளிர்
நீலநாளுந் நயனம்
ஒத்தல ருங்கழனித்
திருவூறலை யுள்குதுமே. 2

1145. ஏன மருப்பினொடு மெழிலாமையும்
பூண்டழகார் நன்றும்
கானமர் மான்மறிக்கைக்
கடவுள் கருதுமிடம்
வான மதிதடவும் வளர்சோலைகள்
சூழ்ந்தழகார் நம்மை
ஊன மறுத்தபிரான்
றிருவூறலை யுள்குதுமே. 3

2. பொ-ரை : மதம் பொருந்திய பெரிய தலையையுடைய யானையை மலைமகள் அஞ்ச, முற்காலத்தில் தன் கைகளால் மெல்ல உரித்த எங்கள் விமலனாகிய சிவபெருமான் விரும்பும் இடம் யாதென வினவில், பூங்கொத்துக்கள் விரிந்துள்ள பொழில்கள் சூழ்ந்ததும், வயல்களில் நாள்தோறும் முளைத்து விளங்கிய நீல மலர்கள் மங்கை யரின் கண்களையொத்து மலரும் வயல்வளங்களை உடையதுமான திருவூறலாகும். அத்தலத்தை நாம் நாள்தோறும் நினைவோமாக.

கு-ரை : யானையை உரித்த இறைவன் விரும்பும் இடம் ஊறல்; அதனை உள்குவோம் என்கின்றது. மெத்த - மிக. தொத்து - கொத்து. நயனம் - கண்.

3. பொ-ரை : பன்றிக் கொம்புகளோடு ஆமையோட்டையும் அணிகலனாக அழகுறப் பூண்டு, நல்ல காட்டில் வாழும் மான்கன்றைத் தன் கையில் ஏந்தியுள்ள கடவுளாகிய சிவபெருமான் விரும்புமிடம், வானத்தின் கண் உள்ள மதி தோயுமாறு வளர்ந்துள்ள சோலைகளால் அழகுறச் சூழப்பட்டு நமது பிறவிப் பிணியைப் போக்க வல்லவனாய்ச்

Koviloor Digital Library

1146. நெய்யணி மூவிலைவே னிறைவெண்மழு
வும்மனலு மன்று
கையணி கொள்கையினான்
கடவுள் ளிடம்வினவில்
மையணி கண்மடவார் பலர்வந்
திறைஞ்சமன்னி நம்மை
உய்யும் வகைபுரிந்தான்
றிருவூறலை யுள்குதுமே. 4

1147. எண்டிசை யோர்மகிழ வெழின்மாலையும்
போனகமும் பண்டு
சண்டி தொழவளித்தான்
அவன்றாழு மிடம்வினவில்

சிவபிரான் எழுந்தருளிய திருவூறலாகும். அதனை நாம் நாள்தோறும் நினைவோமாக.

கு-ரை : பன்றிக் கொம்பு, ஆமையோடு இவற்றை அணிந்து மான் ஏந்திய கடவுள் இடம் ஊறல்; அதனைத் தியானிப்போம் என்கின்றது. ஏனம் - பன்றி. எழில் - அழகு. மான்மறி - மான்குட்டி. ஊனம் - குறை.

4. பொ-ரை : நெய் பூசப்பெற்ற மூவிலை வேல், ஒளிநிறைந்த வெண்மழு, அனல் ஆகியவற்றைத் தன் கைகளில் அணியும் கோட்பாட்டினை உடைய கடவுள் விரும்பும் இடம் யாதென வினவுவீராயின், மை பூசப் பெற்ற கண்களையுடைய மடவார் பலர் வந்து வழி பட நிலையாகத் தங்கி, நாம் உய்யும் வகையில் எழுந்தருளி அருள்புரியும் திருவூறலாகும். அத்தலத்தை நாம் நாள்தோறும் நினைவோமாக.

கு-ரை : திரிசூலம், மழு, அனல் இவற்றைக் கையில் ஏந்திய கடவுள் இடம் திரு ஊறல் என்கின்றது. நெய்யணி - நெய் பூசப்பெற்ற. ஆயுதங்கள் துருப்பிடிக்காவாறு நெய் பூசிவைத்தல் மரபு. உய்யும் வகை - துன்பத்தினின்று ஈடேறும் வகை.

5. பொ-ரை : எட்டுத் திசைகளில் உள்ளாரும் கண்டு மகிழுமாறு தன்னைத் தொழுத சண்டீசர்க்கு அழகிய மாலை, உணவு முதலிய

Koviloor Digital Library

கொண்டல்கள் தங்குபொழிற் குளிர்பொய்கைகள்
சூழ்ந்து நஞ்சை
உண்டபி ரானமருந்
திருவூறலை யுள்குதுமே. 5

* * * * * * * * * 6,7

1148. கறுத்த மனத்தினொடுங் கடுங்காலன்வந்
தெய்துதலுங் கலங்கி
மறுக்குறு மாணிக்கருள
மகிழ்ந்தா னிடம்வினவில்
செறுத்தெழு வாளரக்கன் சிரந்தோளு
மெய்யுந்நெரிய வன்று
ஒறுத்தருள் செய்தபிரான்
றிருவூறலை யுள்குதுமே. 8

வற்றை முற்காலத்தே அளித்தருளியவனும், கடலில் தோன்றிய நஞ்சினை உண்டு தேவர்களைக் காத்தவனுமாகிய சிவபிரான் விரும்பி உறையும் இடம் யாதென வினவில், மேகங்கள் தங்கும் பொழில்களும், குளிர்ந்த பொய்கைகளும் சூழ்ந்து விளங்கும் திருவூறலாகும். அதனை நாம் நாள்தோறும் நினைவோமாக.

கு-ரை : தான் சாத்திய மாலையும் உண்ட உணவும், சண்டேசுரர்க்கு அருள் செய்தவன் இடம் திரு ஊறல் என்கின்றது போனகம் - உணவு. சண்டி - சண்டேசுவரர். கொண்டல்கள் - மேகங்கள்.

6, 7. * * * * * * * * *

8. பொ-ரை : சினம் பொருந்திய மனத்தோடு கூடிய கொடிய காலன் தம் வாழ்நாளைக் கவர வந்து அடைதலைக் கண்டு கலங்கி மயங்கிய மார்க்கண்டேயனுக்கு அருள் புரிந்தவனும், தன்னை மதியாது சினந்து வந்த வாள்வல்ல இராவணனின் தலை, தோள், உடல் ஆகியன வற்றை முற்காலத்தில் நெரித்து அருள் செய்தவனுமாகிய சிவ பிரான் விரும்பி உறையும் இடம் யாதென வினவில் திருவூறலாகும். அதனை நாம் நாள்தோறும் நினைவோமாக.

Koviloor Digital Library

1149. நீரின் மிசைத்துயின்றோ னிறைநான்
முகனுமறியா தன்று
தேரும் வகை நிமிர்ந்தான்
அவன்சேரு மிடம்வினவில்
பாரின் மிசையடியார் பலர்வந்
திறைஞ்சமகிழ்ந் தாகம்
ஊரு மரவசைத்தான்
றிருவூறலை யுள்குதுமே. 9

1150. பொன்னியல் சீவரத்தார் புளித்தட்டையர்
மோட்டமணர் குண்டர்
என்னு மிவர்க்கருளா
வீசனிடம் வினவில்
தென்னென வண்டினங்கள் செறியார்பொழில்
சூழ்ந்தழகார் தன்னை
உன்ன வினைகெடுப்பான்
றிருவூறலை யுள்குதுமே. 10

கு-ரை : மார்க்கண்டேயற்கு அருள்செய்த இறைவன் இடம் திருஊறல் என்கின்றது. கறுத்த - கோபித்த. மறுக்குறும் - மயங்கிய. மாணி - பிரமசாரியாகிய மார்க்கண்டன். செறுத்து - கோபித்து. அரக்கன் என்றது இராவணனை. ஒறுத்து - தண்டித்து.

9. பொ-ரை : கடல்நீரின் மேல் துயில் கொள்வோனாகிய திருமாலும் ஞானத்தினால் நிறைவுபெற்ற நான்முகனும் அறிய முடியாமல் தேடி ஆராயுமாறு நிமிர்ந்து நின்றவனும், மண்ணுலகில் அடியவர் பலரும் வந்து வணங்க மகிழ்ந்து ஊரும் பாம்பினை இடையில் கட்டியவனும் ஆகிய சிவபிரான் எழுந்தருளிய இடம் யாதென வினவில் திருவூறலாகும். அதனை நாமும் உள்குவோமாக.

கு-ரை : அயனும் மாலும் அறியாதவண்ணம் அக்கினி மலையாய் நிமிர்ந்தவன் இடம் திரு ஊறல் என்கின்றது. நீரின் மிசைத் துயின்றோன் - திருமால். தேரும் வகை - ஆராயும் வகை.

10. பொ-ரை : பொன்போன்ற மஞ்சட் காவியுடை அணிந்த புத்தர்கள், புளிப்பேறிய காடியைத் தட்டில் இட்டு உண்பவர்கள் ஆகிய

Koviloor Digital Library

1151. கோட லிரும்புறவிற் கொடிமாடக்
கொச்சையர்மன் மெச்ச
ஓடு புனல்சடைமேற்
கரந்தான் றிருவூறல்
நாட லரும்புகழான் மிகுஞானசம்
பந்தன்சொன்ன நல்ல
பாடல்கள் பத்தும்வல்லார்
பரலோகத் திருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

அறியாமையை உடைய சமண் குண்டர்கள் என்னும் இவர்கட்கு அருள் புரியாதவனும், தன்னை நினைவார்களின் வினைகளைக் கெடுப்பவனும் ஆகிய சிவபிரான் எழுந்தருளிய இடம் யாதென வினவில் வண்டு இனங்கள் தென்னென்ற ஓசையோடு செறிந்த பொழில்கள் சூழ்ந்த அழகிய திருவூறலாகும். அதனை நாமும் நினைவோமாக.

கு-ரை : புத்தருக்கும் சமணருக்கும் அருள்செய்த ஈசன் இடம் திரு ஊறல் என்கின்றது. பொன்னியல் சீவரத்தார் - பொன் போன்ற நிறத்தினையுடைய உடை அணிந்தவர்கள். புளித்தட்டையர் - புளித்த நீரோடு கூடிய பழஞ்சோற்றைத் தட்டில் இட்டு உண்பவர், தென் என: ஒலிக்குறிப்பு, தன்னை உன்ன வினைகெடுப்பான் - தன்னைத் தியா னிப்பவர்களின் இரு வினையைக் கெடுப்பவன்.

11. பொ-ரை : செங்காந்தட் செடிகள் நிறைந்த பெரிய புதர்கள் விளங்குவதும் கொடிகள் கட்டிய மாட வீடுகளைக் கொண்டதுமான கொச்சையம்பதிக்குத் தலைவனும், பெருகிவரும் கங்கையைச் சடைமிசைக் கரந்தவனுமாகிய சிவபிரானது திருவூறலைப் பற்றி நாடற் கரிய புகழால் மிக்க ஞானசம்பந்தன் பாடிய இப்பதிகப் பாடல்கள் பத்தையும் வல்லவர் பரலோகத்திருப்பர்.

கு-ரை : திருஊறலைப் பற்றிய பாடல் பத்தையும் வல்லவர் பரலோகத்து இருப்பார் என்கின்றது. கோடல் - செங்காந்தள். இரும் புறவில் - பெரிய காடுகளை உடைய. நாடல் அரும் - பிறரால் தேடற்கரிய.

Koviloor Digital Library

107. திருக்கொடிமாடச்செங்குன்றூர்

பதிக வரலாறு:

திருவீங்கோய்மலையை வழிபட்ட சிவஞானப் பிள்ளையார் திருக்கொடிமாடச் செங்குன்றூரை அடைந்தார். அந்நகரில், வாழ்கின்ற மக்களும் சிவனடியார்களும், மகரதோரணம் முதலியவற்றால் நகரை அலங்கரித்து, வாத்தியமுழங்க, எதிர் கொண்டழைத்தனர். சினவிடையார் திருக்கோயிலுக்கு வர வேண்டினர். அங்ஙனமே ஆளுடைய பிள்ளையார் எழுந்தருளி, நம்பர் அவர் திருமுன்பு தாழ்ந்தெழுந்து நலஞ்சிறக்க மண்ணவரும் விண்ணவரும் போற்ற இன்னிசை வண்டமிழாகிய ''வெந்த வெண்ணீறு'' என்னும் இப்பதிகத்தை அருளினார். இத்திருப்பதிகத்தின் பல பாடல்கள் இத்தலத்தில் பெருமான் அர்த்தநாரீசுரராக விளங்குதலைக் குறிக்கின்றன.

பண்: வியாழக்குறிஞ்சி

பதிக எண்: 107

திருச்சிற்றம்பலம்

1152. வெந்தவெண் ணீறணிந்து விரிநூல்
திகழ்மார்பில் நல்ல
பந்தண வும்விரலா
ளொருபாக மமர்ந்தருளிக்
கொந்தண வும்பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் நின்ற
அந்தண னைத்தொழுவார்
அவல மறுப்பாரே. 1

1. பொ-ரை : விரிக்கப் பெற்ற பூணநூல் திகழும் திருமார்பினனாய், நன்றாக வெந்த திருவெண்ணீற்றை அணிந்து, பந்து பொருந்திய கைவிரல்களை உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு, பூங்கொத்துக்கள் நிறைந்த பொழில் சூழ்ந்த கொடிமாடச் செங்குன்றூரில் எழுந்தருளிய அழகிய தண்ணளியை உடைய சிவபெருமானைத் தொழுவார் துன்பங்கள் நீங்கப் பெறுவர்.

Koviloor Digital Library

1153. அலைமலி தண்புனலோ டரவஞ்
சடைக்கணிந் தாகம்
மலைமகள் கூறுடையான்
மலையா ரிளவாழைக்
குலைமலி தண்பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் நின்ற
தலைமக னைத்தொழுவார்
தடுமாற் றறுப்பாரே. 2

1154. பாலன நீறுபுனை திகழ்மார்பிற்
பல்வளைக்கை நல்ல
ஏல மலர்க்குழலா
ளொருபாக மமர்ந்தருளிக்
கோல மலர்ப்பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் மல்கும்
நீலநன் மாமிடற்றான்
கழலேத்தல் நீதியே. 3

கு-ரை : பூணுநூல் திகழ்கின்ற திருமார்பில் வெண்ணீறணிந்து உமையொருபாகமாகக் கொடிமாடச் செங்குன்றூரில் நின்ற அந்தணனைத் தொழுவார் அவலம் அறுப்பார் என்கின்றது. அணவும் - கலக்கும். கொந்து - கொத்து.

2. பொ-ரை : அலைகள் நிறைந்த குளிர்ந்த கங்கை நதியோடு பாம்பினையும், சடையின்கண் அணிந்து, தனது திருமேனியில் மலைமகளை ஓர் பாகமாகக் கொண்டுள்ளவனும், மலையின்கண் வளரும் குலைகள் நிறைந்துள்ள இளவாழை மரங்களை உடைய குளிர்ந்த பொழில்கள் சூழ்ந்து விளங்கும் கொடிமாடச் செங்குன்றூரில் எழுந்தருளிய தலைவனுமாகிய சிவபிரானைத் தொழுவார் தடுமாற்றம் தவிர்வர்.

கு-ரை : கங்கை, பாம்பு இவற்றைச் சடைக்கணிந்து மலைமகள் கூறுடையனாக எழுந்தருளியிருக்கின்ற செங்குன்றூர்த் தலைவனைத் தொழுவார் தடுமாற்றம் தகர்ப்பர் என்கின்றது. அரவம் - பாம்பு.

3. பொ - ரை : பால் போன்று வெள்ளிய திருநீற்றைப் புனைந்து விளங்கிய மார்பினோடு பல்வகை வளையல்களையும் பாங்குறப் புனைந்த கையினளாய், மணம் கமழும் நறுமலர்களைச் சூடிய கூந்த

Koviloor Digital Library

1155. வாருறு கொங்கைநல்ல மடவாள்
திகழ்மார்பி னண்ணும்
காருறு கொன்றையொடுங்
கதநாகம் பூண்டருளிச்
சீருறு மந்தணர்வாழ் கொடிமாடச்
செங்குன்றூர் நின்ற
நீருறு செஞ்சடையான்
கழலேத்தல் நீதியே. 4

1156. பொன்றிக ழாமையொடு புரிநூல்
திகழ்மார்பி னல்ல
பன்றியின் கொம்பணிந்து
பணைத்தோளியோர் பாகமாகக்

லினளாகிய உமையம்மை ஒரு பாகமாக அமைந்த கோலத்தோடு அழகிய மலர்கள் பூத்த பொழில்கள் சூழ்ந்த கொடிமாடச் செங் குன்றூரில் எழுந்தருளிய நீல நன்மாமிடற்றானின் கழலணிந்த திருவடி களை ஏத்துதலே நீதியாகும்.

கு-ரை : நீறுபூசிய திருமேனியோடு மலைமகள் ஒருபாகமாக எழுந்தருளிய செங்குன்றூர் நீலகண்டன் திருவடியைத் தொழுதலே நீதி என்கின்றது. ஏலம் - மயிர்ச்சாந்து. நீலநன்மாமிடற்றான் - நீலகண்டன். நன்மிடறு என்றது தேவர்க்கு நன்மை செய்தலின்.

4. பொ-ரை : கச்சணிந்த தனங்களை உடைய அழகிய உமையம் மை விளங்கும் திருமார்பின்கண் கார்காலத்தே மலரும் கொன்றை மலர் மாலையோடு சினம் பொருந்திய பாம்பை அணிகலனாகப் பூண்டு சிறப்புப் பொருந்திய அந்தணர்கள் வாழும் கொடிமாடச் செங்குன் றூரில் எழுந்தருளிய கங்கையணிந்த செஞ்சடையனாய் விளங்கும் சிவ பிரானின் கழலணிந்த திருவடிகளை ஏத்துதல் நீதியாகும்.

கு-ரை : உமாதேவி விளங்குகின்ற, திருமார்பில் கொன்றை மாலையையும் பாம்பு அணியையும் பூண்டு வீற்றிருக்கும் செங்குன்றூர் நாதன் சேவடியைத் துதித்தல் நீதியாம் என்கின்றது. வார் - கச்சு. கதம் - கோபம். சீர் - புகழ்.

5. பொ-ரை : திருமகள் விளங்கும் திருமாலாகிய ஆமையினது ஓட்டினோடு முப்புரிநூல் திகழும் மார்பின்கண் நல்ல பன்றியின்

Koviloor Digital Library

குன்றன மாளிகைசூழ் கொடிமாடச்
செங்குன்றூர் வானில்
மின்றிகழ் செஞ்சடையான்
கழலேத்தல் மெய்ப்பொருளே. 5

1157. ஓங்கிய மூவிலைநற் சூல
மொருகையன் சென்னி
தாங்கிய கங்கையொடு
மதியஞ் சடைக்கணிந்து
கோங்கண வும்பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் வாய்ந்த
பாங்கன தாள்தொழுவார்
வினையாய பற்றறுமே. 6

கொம்புகளையும் அணிந்து மூங்கில் போன்ற தோளினளாகிய உமையம்மை ஒரு பாகமாக விளங்கக் குன்றுகள் போன்ற மாளிகைகள் சூழ்ந்த கொடிமாடச் செங்குன்றூரில் வானில் திகழும் மின்னல் போன்று விளங்கும் செஞ்சடையானின் கழலணிந்த திருவடிகளை ஏத்துதலே மெய்ப் பொருளாகும்.

கு-ரை : ஆமையோடும் பூணூலும் விளங்கும் மார்பில், பன்றிக் கொம்பையும் அணிந்த மாதொருபாதியனான செங்குன்றூர் நாதன் கழலேத்துதலே மெய்ப்பொருள் என்கின்றது. பொன் திகழ் ஆமை ஓடு - திருமகள் விளங்குகின்ற திருமாலாகிய ஆமையின் ஓடு. பணை - மூங்கில்.

6. பொ-ரை : மேம்பட்ட மூவிலை வடிவான நல்ல சூலத்தை ஒரு கையில் ஏந்தியவனாய்த் திருமுடியில் தடுத்த கங்கையோடு, பிறையையும் சடையின்கண் அணிந்து, தேன் பொருந்திய பொழில்கள் சூழ்ந்த கொடிமாடச் செங்குன்றூரில் பொருந்திய தோழனாய் விளங்கும் சிவபெருமானின் திருவடிகளைத் தொழுபவர்களின் வினைகள் வேர்ப்பற்றோடு நீங்கும்.

கு-ரை : சூலமேந்திய கையனும், கங்கையும் மதியமும் சூடியவனும் ஆகிய செங்குன்றூர் நாதன் தாள் தொழுவாரது வினைப்பற்று நீங்கும் என்கின்றது. ஓங்கிய - சிறந்த. கோங்கு அணவும் - கோங்க

Koviloor Digital Library

1158. நீடலர் கொன்றையொடு நிமிர்புன்
சடைதாழ வெள்ளை
வாட லுடைதலையிற்
பலிகொள்ளும் வாழ்க்கையனாய்க்
கோடல் வளம்புறவிற் கொடிமாடச்
செங்குன்றூர் நின்ற
சேடன தாள்தொழுவார்
வினையாய தேயுமே. 7

1159. மத்தநன் மாமலரும் மதியும்வளர்
கொன்றையுடன் துன்று
தொத்தலர் செஞ்சடைமேல்
துதைய வுடன்சூடிக்
கொத்தலர் தண்பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் மேய
தத்துவ னைத்தொழுவார்
தடுமாற் றறுப்பாரே. 8

மரங்கள் கலந்த. பாங்கன தாள் - தோழமை பூண்ட இறைவனுடைய தாள்கள்.

7. பொ-ரை : கொத்தாக நீண்டு மலர்கின்ற கொன்றை மலர்களோடு நிமிர்ந்து தோன்றும் சிவந்த சடைகள் தாழ்ந்து தொங்க, வெண்மையான புலால் நீங்கிய தலையோட்டில் பலி ஏற்றுண்ணும் வாழ்க்கையனாய், வெண்காந்தள் மலர்ந்த புதர்களை உடைய வளமான முல்லை நிலங்களால் சூழப்பட்ட கொடிமாடச் செங்குன்றூரில் எழுந்தருளிய பெருமை உடையோனின் திருவடிகளைத் தொழுபவர்களின் வினைகள் தேய்ந்தொழியும்.

கு-ரை : கொன்றை மாலையோடு சடைதாழ, உலர்ந்த தலையிற் பலிகொள்ளும் செங்குன்றூர்நாதன் தாள் தொழுவாரது வினைதேயும் என்கின்றது. நீடு அலர் கொன்றை - மாலையாக நீண்டு மலர்கின்ற கொன்றை. வாடல் - உலர்தல். கோடல் - செங்காந்தள். சேடன் - பெருமையுடையவன்.

8. பொ-ரை : செஞ்சடைமீது நல்ல ஊமத்த மலரையும் இளமதியையும் கொத்தாக அலரும் கொன்றை மலருடன் ஒருசேர

Koviloor Digital Library

1160. செம்பொனின் மேனியனாம் பிரமன்றிரு
மாலுந்தேட நின்ற
அம்பவ ளத்திரள்போ
லொளியாய வாதிபிரான்
கொம்பண வும்பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் மேய
நம்பன தாடொழுவார்
வினையாய நாசமே. 9

1161. போதியர் பிண்டியரென் றிவர்கள்
புறங்கூறும் பொய்ந்நூல்
ஓதிய கட்டுரைகேட்
டுழல்வீர் வரிக்குயில்கள்

நெருங்கச் சூடிப் பூங்கொத்துக்கள் அலரும் தண்ணிய பொழில் சூழ்ந்த கொடிமாடச் செங்குன்றூரில் எழுந்தருளிய தத்துவனைத் தொழுவார் தடுமாற்றங்கள் இலராவர்.

கு-ரை : ஊமத்தம் பூவும், பிறையும், கொன்றையும் செஞ்சடை மேற்சூடிய தத்துவனைத் தொழுவார் தடுமாற்றம் அறுப்பார் என்கின்றது. துன்று - நெருங்கிய. தொத்து - கொத்து. துதைய - செறிய. தத்துவன் - மெய்ப்பொருளானவன்.

9. பொ-ரை : சிவந்த பொன்போன்ற மேனியினன் ஆகிய பிரமனும் திருமாலும் தேடுமாறு பவளத் திரள் போல ஒளி வடிவினனாய் ஓங்கிநின்ற மூல காரணனும், கொம்புகளாகக் கிளைத்து நெருங்கிய மரங்கள் நிறைந்த பொழில் சூழ்ந்த கொடிமாடச் செங்குன்றூரில் எழுந்தருளியவனுமாகிய சிவபிரானின் திருவடிகளைத் தொழுபவர்களின் வினைகள் நாசமாகும்.

கு-ரை : அயனும் மாலும் தேடச் செம்பவளத்திரள்போல தீவடிவாய ஆதிப்பிரானது தாள் தொழுவார் வினைகள் யாவும் நாசமாம் என்கின்றது. கொம்பு அணவும் பொழில் - கொம்புகள் செறிந்த சோலை. நம்பன் - சிவன்.

10. பொ-ரை : போதி மரத்தை வழிபடும் புத்தர், அசோக மரத்தை வழிபடும் சமணர் ஆகியோர் பொய்ந்நூல்களை மேற்கோள்களாகக்

Koviloor Digital Library

கோதிய தண்பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் நின்ற
வேதிய னைத்தொழநும்
வினையான வீடுமே. 10

1162. அலைமலி தண்புனல்சூழ்ந் தழகார்
புகலிந்நகர் பேணும்
தலைமக னாகிநின்ற
தமிழ்ஞான சம்பந்தன்
கொலைமலி மூவிலையான் கொடிமாடச்
செங்குன்றூ ரேத்தும்
நலமலி பாடல்வல்லார்
வினையான நாசமே. 11

திருச்சிற்றம்பலம்.

காட்டிக் கூறும் புனைந்துரைகளைக் கேட்டு அவற்றை மெய்யெனக் கருதி உழல்பவர்களே!, இசை பாடும் குயில்கள் கோதிய தளிர்களோடு கூடிய தண்பொழில் சூழ்ந்த கொடிமாடச் செங்குன்றூரில் எழுந்தருளிய வேதம் விரித்த சிவபிரானைத் தொழுமின்; நம் வினைகள் யாவும் அழியும்.

கு-ரை : புத்தர் சமணர் இவர்களுடைய புறவுரை கேட்டு உழலுகின்றமக்களே! செங்குன்றூர் வேதியனைத்தொழ உங்கள் வினையாயின அழியும் என்கின்றது.

போதியர் - புத்தர். பிண்டியர் - சைனர். கட்டுரை - கட்டிச் சொன்ன பொய்யுரை. கோதிய - மூக்காற்கோதி யுண்ட. வேதியன் - வேதங்களை அருளிச்செய்தவன். வீடும் - அழியும்.

11. பொ-ரை : அலைகள் மிகுந்த குளிர்ந்த நீரால் சூழப்பட்ட அழகிய புகலி நகரை விரும்பும் தலைமகனாகிய தமிழ் ஞானசம்பந்தன், கொல்லும் தொழிலில் வல்ல மூன்று இலை வடிவான சூலத்தைக் கையில் ஏந்தியவனாய சிவபிரான் எழுந்தருளிய கொடிமாடச் செங்குன்றூரைப் போற்றிப் பாடிய, நலம் மிக்க, இப்பதிகப் பாடல்களை ஓத, வல்லவர்களின் வினைகள் நாசமாகும்.

Koviloor Digital Library

கு-ரை : ஞானசம்பந்தப் பெருமான் செங்குன்றூர் நாதரை ஏத்திய நலமிகுந்த பாடல் வல்லார் வினைகள் நாசமாம் எனப்பயன் கூறுகின்றது. புகலி - சீகாழி. கொலைமலிமூவிலையான் - கொலைபுரியும் முத்தலைச் சூலம் ஏந்தியவன்.

திருஞானசம்பந்தர் புராணம்

அப்பாலைக் குடபுலத்தில் ஆறணிந்தார் அமர்கோயில்
எப்பாலுஞ் சென்றேத்தித் திருநணா வினை இறைஞ்சிப்
பைப்பாந்தள் புனைந்தவரைப் பரவிப்பண் டமர்கின்ற
வைப்பான செங்குன் றூர் வந்தணைந்து வைகினார்.

- சேக்கிழார்.

ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்

அலையார்ந்த கடலுலகத் தருந்திசைதோ றங்கங்கே
நிலையார்ந்த பலபதிகம் நெறிமனிதர்க் கினிதியற்றி
ஈங்கருளி எம்போல்வார்க் கிடர்கெடுத்தல் காரணமாய்
ஓங்குபுகழ்ச் சண்பையெனும் ஒண்பதியுள் உதித்தனையே.

செஞ்சடைவெண் மதி அணிந்த சிவன் எந்தை திருவருளால்
வஞ்சியன நுண்ணிடையாள் மலையரையன் மடப்பாவை
நற்கண்ணி அளவிறந்த ஞானத்தை அமிர்தாக்கிப்
பொற்கிண்ணத் தருள்புரிந்த போனகமுன் நுகர்ந்தனையே.

தோடணிகா தினனென்றுந் தொல்லமரர்க் கெஞ்ஞான்றும்
தேடரிய பராபரனைச் செழுமறையின் அகன்பொருளை
அந்திச்செம் மேனியனை அடையாளம் பலசொல்லி
உந்தைக்குக் காண அரன் உவனாமென் றுரைத்தனையே.

- நம்பியாண்டார் நம்பி.

Koviloor Digital Library

108. திருப்பாதாளீச்சரம்

பதிக வரலாறு:

பிள்ளையார் பொன்னி வளந்தரு நாடாகிய சோழ நாட்டில் திருக்களரை வழிபட்டு, பாதாளீச்சரத்தை அடைந்து, கண்டங் கறையணிந்தார் கழலைப் போற்றினார். ''மின்னியல் செஞ்சடைமேல்'' என்னும் திருப்பதிகத்தை அருளிச் செய்தார்.

பண்: வியாழக்குறிஞ்சி

பதிக எண்: 108

திருச்சிற்றம்பலம்

1163. மின்னியல் செஞ்சடைமேல் விளங்கும்மதி
மத்தமொடு நல்ல
பொன்னியல் கொன்றையினான்
புனல்சூடிப் பொற்பமரும்
அன்ன மனநடையா ளொருபாகத்
தமர்ந்தருளி நாளும்
பன்னிய பாடலினா
னுறைகோயில் பாதாளே. 1

1. பொ-ரை : மின்னல் போன்ற செஞ்சடைமேல் விளங்கும் மதி, ஊமத்தமலர் பொன் போன்ற நல்ல கொன்றை ஆகியவற்றோடு கங்கையையும் சூடி, அழகு விளங்கும் அன்னம் போன்ற நடையினளாகிய உமையம்மை ஒரு பாகமாக விளங்க, நாள்தோறும் வேத கீதங்களைப் பாடியவனாய்ச் சிவபெருமான் உறையும் கோயில் பாதாளீச்சரமாகும்.

கு-ரை : இப்பதிகம் முழுதும் செஞ்சடைமேல், பிறை, ஊமத்தம், கொன்றை இவற்றையணிந்தவனும், கங்கையணிந்து உமையையொரு பாகத் திருந்தருளச் செய்தவனும் ஆகிய இறைவன் உறைகோயில் திருப்பாதாளீச்சரம் என்கின்றது. ஒவ்வொரு பாடலிலும் தலத்தின் திருப்பெயருக்கேற்பப் பாம்பணிந்தமை பேசப்படுதல் காண்க. விளங்கும்மதி - இறைவன் திருமுடிமேல் இருத்தலின் விளக்கம்பெற்ற பிறை. 'அன்னம் அனநடையாள்' அன்ன என்பது அன எனல் தொகுத்தல் விகாரம்.

Koviloor Digital Library

1164. நீடலர் கொன்றையொடு நிரம்பா
மதிசூடி வெள்ளைத்
தோடமர் காதினல்ல குழையான்
சுடுநீற்றான்
ஆடர வம்பெருக வனலேந்திக்
கைவீசி வேதம்
பாடலி னாலினியா
னுறைகோயில் பாதாளே. 2

1165. நாகமும் வான்மதியுந் நலமல்கு
செஞ்சடையான் சாமம்
போகநல் வில்வரையாற்
புரமூன்றெரித்துகந்தான்
தோகைநன் மாமயில்போல்
வளர்சாயற் றூமொழியைக் கூடப்
பாகமும் வைத்துகந்தா
னுறைகோயில் பாதாளே. 3

2. பொ-ரை : கொத்தாக நீண்டு அலர்கின்ற கொன்றையோடு கலைநிறையாத இளம் பிறையை முடியில் சூடி, ஒரு காதில் வெள்ளைத் தோட்டுடன் மறு காதில் நல்ல குழையையுடையவனாய் விளங்கு வோனும், சுட்ட திருநீற்றை மெய்யில் பூசியவனும், ஆடும் பாம்பு அணிகலனாகப் பெருகித் தோன்ற அனல் ஏந்திக் கைவீசி வேதப் பாடல்களைப் பாடுதலில் இனியனாய் விளங்குவோனும் ஆகிய சிவபெருமான் உறையும் கோயில் திருப்பாதாளீச்சரமாகும்.

கு-ரை : நிரம்பாமதி - குறைப்பிறை. வெள்ளைத்தோடு - முத்துத் தோடு. குழை - காதணியாகிய குண்டலம்.

3. பொ-ரை : பாம்பு, வானில் விளங்கும் மதி ஆகியனவற்றைச் சூடிய அழகுமிக்க செஞ்சடையை உடையவனும், உரிய காலம் கழிய நல்ல மேருவில்லால் முப்புரங்களை எரித்துகந்தவனும், தோகையை உடைய நல்ல ஆண்மயில் போன்று வளர்கின்ற கட்புலனாய மென் மையை உடைய தூய மொழி பேசும் உமையம்மையைத் தன்னோடு உடனாக இடப்பாகமாகக் கொண்டு மகிழ்ந்தவனும் ஆகிய சிவபிரான் மகிழ்ந்துறையும் கோயில் பாதாளீச்சரமாகும்.

Koviloor Digital Library

1166. அங்கமு நான்மறையும் அருள்செய்
தழகார்ந்த வஞ்சொல்
மங்கையோர் கூறுடையான்
மறையோ னுறைகோயில்
செங்கய னின்றுகளுஞ் செறுவிற்
றிகழ்கின்ற சோதிப்
பங்கய நின்றலரும்
வயல்சூழ்ந்த பாதாளே. 4

1167. பேய்பல வுந்நிலவப் பெருங்காடரங்
காகவுன்னி நின்று
தீயொடு மான்மறியும்
மழுவுந் திகழ்வித்துத்
தேய்பிறை யும்மரவும் பொலிகொன்றைச்
சடைதன்மேற் சேரப்
பாய்புன லும்முடையா
னுறைகோயில் பாதாளே. 5

கு-ரை : வான்மதி - வானிலுள்ள பிறை. சாமம் போக - உரிய காலங்கழிய. தோகை மா மயில் - ஆண்மயில்.

4. பொ-ரை : ஆறு அங்கங்களையும் நான்கு வேதங்களையும் அருளிச் செய்தவனும், அழகிய இனிய சொற்களைப் பேசும் உமை நங்கையை ஒரு பாகமாக உடையவனும், வேதங்களைப் பாடி மகிழ் பவனுமாகிய சிவபிரான் உறையும் கோயில் செங்கயல் மீன்கள் புரளும் வயல்களில் விளங்கும் ஒளியினால் தாமரைகள் எழுந்து மலரும் வயல்கள் சூழ்ந்த பாதாளீச்சரமாகும்.

கு-ரை : செங்கயல்மீன்கள் புரளும் வயலில் தாமரை மலரும் பாதாளம் என்கின்றது, செறு - வயல்.

5. பொ-ரை : பேய்கள் பலவும் உடன் சூழ, சுடுகாட்டை அரங்காக எண்ணி நின்று, தீ, மான்கன்று மழு ஆகியவற்றைக் கைகளில் விளங்குவித்து, தேய்ந்த பிறையும் பாம்பும் விளங்கிய கொன்றை மலரும் உடைய தன் சடைமேல் பாய்ந்து வரும் கங்கையையும் உடையவனாகிய சிவபிரான் உறையும் கோயில் பாதாளீச்சரமாகும்.

Koviloor Digital Library

1168. கண்ணமர் நெற்றியினான் கமழ்கொன்றைச்
சடைதன்மே னன்று
விண்ணியன் மாமதியும்
முடன்வைத் தவன்விரும்பும்
பெண்ணமர் மேனியினான் பெருங்கா
டரங்காக வர்டும்
பண்ணியல் பாடலினா
னுறைகோயில் பாதாளே. 6

1169. விண்டலர் மத்தமொடு மிளிரும்மிள
நாகம்வன் னிதிகழ்
வண்டலர் கொன்றைநகு
மதிபுல்கு வார்சடையான்

கு-ரை : பேய்கள் உடன்விளங்க, இடுகாட்டை நாடகமேடை யாக எண்ணி, மான், மழு முதலியன தாங்கி ஆடும் பெருமான் உறை விடம் பாதாளீச்சரம் என்கின்றது. உன்னிநின்று, திகழ்வித்து, சேர உடையான் உறைகோயில் பாதாள் எனக்கூட்டுக.

6. பொ-ரை : கண் பொருந்திய நெற்றியை உடையவனும், சடை முடி மீது மணம் கமழும் கொன்றை மலரோடு, அழகு பொருந்த வானின்கண் உலாவும் சிறந்த பிறைமதியையும் உடனாக வைத்த வனும், தன்னால் விரும்பப் பெற்ற உமை மங்கை பொருந்திய திரு மேனியனும், சுடுகாட்டை அரங்காகக் கொண்டு பண்ணொடு கூடிய பாடல்களுடன் ஆடுபவனுமாகிய சிவபிரான் உறையும் கோயில் பாதாளீச்சரமாகும்.

கு-ரை : கண்ணமர்நெற்றி - கண்ணோடு விளங்குகின்ற நெற்றியை யுடையவன்.

நன்று விண் இயல் மாமதி - நன்றாக விண்ணில் இயங்குகின்ற பெரிய பிறைச்சந்திரன்.

7. பொ-ரை : தளையவிழ்ந்து மலர்ந்த ஊமத்த மலரோடு, புரண்டு கொண்டிருக்கும் இளநாகம், வன்னிஇலை, வண்டுகளால் மலர்த்தப் பெறும் கொன்றை, பிறைமதி ஆகியன பொருந்திய நீண்ட சடை

Koviloor Digital Library

விண்டவர் தம்புரமூன் றெரிசெய்துரை
வேதநான் கும்மவை
பண்டிசை பாடலினா
னுறைகோயில் பாதாளே. 7

1170. மல்கிய நுண்ணிடையா ளுமைநங்கை
மறுகவன்று கையால்
தொல்லை மலையெடுத்த
வரக்கன்றலை தோணெரித்தான்
கொல்லை விடையுகந்தான் குளிர்திங்கள்
சடைக் கணிந்தோன்
பல்லிசை பாடலினா
னுறைகோயில் பாதாளே. 8

உடையவனும், பகைவரான அசுரர்களின் முப்புரங்களையும் எரித்த வனும், நான்கு வேதங்களையும் உரைத்தலோடு அவற்றைப் பண்டைய இசை மரபோடு பாடி மகிழ்பவனுமான சிவபிரான் உறையும் கோயில் பாதாளீச்சரமாகும்.

கு-ரை : விண்டு - முறுக்கவிழ்ந்து. வன்னி - வன்னியிலை. நகும் - மலரும். விண்டவர் - பகைவர்.

8. பொ-ரை : செறிந்த நுண்மையான இடையினை உடைய உமை யம்மை அஞ்ச அன்று கையால் பழமையான கயிலை மலையைப் பெயர்த்த இராவணனின் தலைகளையும் தோள்களையும் நெரித்த வனும், முல்லை நிலத் தெய்வமான திருமாலாகிய விடையை உகந்தவ னும், குளிர்ந்த திங்களைச் சடையின்கண் அணிந்தவனும் பல்வகை யான இசைப் பாடல்களைப் பாடுபவனும் ஆகிய சிவபிரான் உறையும் கோயில் பாதாளீச்சரமாகும்.

கு-ரை : இராவணன் தோள் நெரித்தது; இறைவற்கு எழுந்த சீற்றம் காரணம் அன்று; உமாதேவி நடுங்க, அந்நடுக்கந்தீரவே விரலூன்றி மலையை நிலைக்கச்செய்தார்; அது இராவணற்கு இன்னலாயிற்று என்ற கருத்து ஓர்க. கொல்லைவிடை - முல்லை நிலத்து இடபம்.

Koviloor Digital Library

1171. தாமரை மேலயனும் மரியுந்தம
தாள்வினையாற் றேடிக்
காமனை வீடுவித்தான்
கழல்காண்பில ராயகன்றார்
பூமரு வுங்குழலா ளுமைநங்கை
பொருந்தியிட்ட நல்ல
பாமரு வுங்குணத்தா
னுறைகோயில் பாதாளே. 9

1172. காலையி லுண்பவருஞ் சமண்கையருங்
கட்டுரை விட்டன்
றால விடநுகர்ந்தா னவன்
றன்னடி யேபரவி

9. பொ-ரை : மன்மதனை எரித்த சிவபிரான் திருவடிகளைத் தாமரை மலரின்மேல் எழுந்தருளிய அயனும், திருமாலும் தமது முயற்சியால் தேடிக்காண இயலாது நீங்கினர். மலர்கள் சூடிய கூந்தலை உடைய உமைநங்கை ஒரு பாகமாகப் பொருந்தியவனும் வேதப் பாடல்களைப் பாடும் நல்ல குணத்தினனும் ஆகிய அப்பெருமான் உறையும் கோயில் பாதாளீச்சரமாகும். அங்குச் சென்றால் அவன் கழலடி காணலாம் என்பது குறிப்பெச்சம்.

கு-ரை : ஆள்வினையால் - முயற்சியால். செயலற்ற தன்மையில் சிந்திக்கவேண்டிய சிவத்தைச் செய்வினையாற் காணமுற்பட்ட அறிவீனத்தை விளக்கியவாறு. காமனை வீடுவித்தான் கழல் - காமனை எரித்த பெருமான் திருவடி. காமனும் தருக்கி வருவானாயினும் அவன் காண இருந்தமையும் அயனும் மாலும் காணாதிருந்தமைக்கும் ஏது ஒன்று உண்டு. இவர்கள் தாம் பெரியர் என்னுந் தருக்கால் முனைத்து வந்தவர்கள்; காமன் தேவகாரியம் என்றும், இந்திரன் சாபத்தால் இறப்பதைக் காட்டிலும்; சிவன் கோபத்தால் இறப்பதுமேல் என்றும் வந்தவன்; ஆதலால் இவனுக்குக் கட்புலனானார் என்பது சிந்தனைக் குரியது.

10. பொ-ரை : காலையில் சோறுண்ணும் புத்தரும், சமண சமயக் கீழ்மக்களும் கூறும் மெய்போன்ற பொய்யுரைகளை விடுத்து, ஆல கால விடமுண்டு அமரர்களைக் காத்தவனும் மாலைக் காலத்தில்

Koviloor Digital Library

மாலையில் வண்டினங்கண் மதுவுண்
டிசைமுரல வாய்த்த
பாலையாழ்ப் பாட்டுகந்தா
னுறைகோயில் பாதாளே. 10

1173. பன்மலர் வைகுபொழில் புடைசூழ்ந்த
பாதாளைச் சேரப்
பொன்னியன் மாடமல்கு
புகலிந்நகர் மன்னன்
தன்னொளி மிக்குயர்ந்த தமிழ்ஞான
சம்பந்தன் சொன்ன
இன்னிசை பத்தும்வல்லா
ரெழில்வானத் திருப்பாரே. 11

திருச்சிற்றம்பலம்

வண்டினங்கள் மதுவுண்டு இசை முரல ஏற்புடையதான பாலைப் பண்ணையாழில் பாடக் கேட்டு மகிழ்பவனும் ஆகிய சிவபிரான் உறையும் கோயில் பாதாளீச்சரமாகும்.

கு-ரை : பாலை யாழ்ப் பாட்டு உகந்தான் - பாலைப்பண்ணில் விருப்புடையான்.

11. பொ-ரை : பலவகையான மலர்களும் பூத்துள்ள பொழில் புடை சூழ்ந்த பாதாளீச்சரத்தைச் சென்று தரிசிக்குமாறு, பொன்னால் இயன்ற மாட வீடுகள் நிறைந்த புகலி நகர் மன்னனும், தன்புகழ் உலகெங்கும் பரவி விளங்குமாறு உயர்ந்தவனுமாகிய தமிழ் ஞானசம்பந்தன் பாடிய இன்னிசை பொருந்திய இப்பதிகப் பாடல்கள் பத்தையும் வல்லவர் அழகிய வானுலகின்கண் இருப்பர்.

கு-ரை : இப்பதிகம் வல்லார் தேவராய் வானத்திருப்பார் என்கின்றது.

Koviloor Digital Library

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR A. No. 16811

109. திருச்சிரபுரம்

பண்: வியாழக்குறிஞ்சி

பதிக எண்: 109

திருச்சிற்றம்பலம்

1174. வாருறு வனமுலை மங்கைபங்கன்
நீருறு சடைமுடி நிமலனிடங்
காருறு கடிபொழில் சூழ்ந்தழகார்
சீருறு வளவயற் சிரபுரமே. 1

1175. அங்கமொ டருமறை யருள்புரிந்தான்
திங்களொ டரவணி திகழ்முடியன்
மங்கையொ டினிதுறை வளநகரஞ்
செங்கயன் மிளிர்வயற் சிரபுரமே. 2

1. பொ-ரை : கச்சணிந்த அழகிய தனபாரங்களை உடைய உமையம்மையின் கணவனும், கங்கையை அணிந்த சடைமுடியை உடைய நிமலனுமாகிய சிவபிரான் விரும்பி உறையும் இடம், மேகங்கள் தோயுமாறு வானளாவிய மணம் கமழும் பொழில் சூழ்ந்த அழகிய சிறப்புப் பொருந்திய வளமையான வயல்களை உடைய சிரபுரம் ஆகும்.

கு-ரை : இப்பதிகம் பெரியநாயகியுடன் எழுந்தருளியிருக்கும் பெருமான் நகரம் சிரபுரமாகிய சீகாழி என்கின்றது. வார் - கச்சு.

2. பொ-ரை : ஆறங்கங்களோடு அரிய வேதங்கள் நான்கையும் அருளிச் செய்தவனும், திங்கள் பாம்பு ஆகியவற்றை அணிந்து விளங்கிய முடியினனும் ஆகிய சிவபெருமான் உமைமங்கையோடு மகிழ்வாக உறையும் வளமையான நகரம் செங்கயல்கள் துள்ளி விளையாடும் வயல்கள் சூழ்ந்த சிரபுரம் ஆகும்.

கு-ரை : அருமறை - எக்காலத்தும் உணரும் அருமைப் பாட்டினையுடைய வேதம்.

Koviloor Digital Library

1176. பரிந்தவன் பன்முடி யமரர்க்காகித்
திரிந்தவர் புரமவை தீயின்வேவ
வரிந்தவெஞ் சிலைபிடித் தடுசரத்தைத்
தெரிந்தவன் வளநகர் சிரபுரமே. 3

1177. நீறணி மேனிய னீண்மதியோ
டாறணி சடையின னணியிழையோர்
கூறணிந் தினிதுறை குளிர்நகரஞ்
சேறணி வளவயற் சிரபுரமே. 4

1178. அருந்திற லவுணர்க ளரணழியச்
சரந்துரந் தெரிசெய்த சங்கரனூர்
குருந்தொடு கொடிவிடு மாதவிகள்
திருந்திய புறவணி சிரபுரமே. 5

3. பொ-ரை : பல்வகையான முடிகளைச் சூடிய அமரர்களிடம் மிக்க பரிவுடையவனாகி வானவெளியில் திரிந்த அவுணர்களின் முப்புரங்களும் தீயில் வேகுமாறு வரிந்து கட்டிய கொடிய வில்லைப் பிடித்துக் கொல்லும் அம்பினை ஆராய்ந்து தொடுத்த பெருமானது வள நகர் சிரபுரமாகும்.

கு-ரை : பரிந்தவன் - அன்புகூர்ந்தவன். வரிந்த - கட்டிய. அடு சரத்தை - கொல்லும் பாணத்தை. தெரிந்தவன் - ஆராய்ந்தவன்.

4. பொ-ரை : திருநீறு அணிந்த திருமேனியை உடையவனும், வளைவாக நீண்ட பிறை மதியோடு கங்கையை அணிந்த சடையினை உடையவனும் ஆகிய சிவபிரான், அழகிய அணிகலன்களைப் பூண்ட உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு இனிதாக உறையும் குளிர்ந்த நகரம் சேற்றால் அழகிய வளமான வயல்கள் சூழ்ந்த சிரபுர மாகும்.

கு-ரை : அணியிழை - அணிந்த இழையினையுடையாளாகிய உமை.

5. பொ-ரை : வெல்லுதற்கரிய வலிமையினையுடைய அசுரர்களின் முப்புரங்களும் அழியுமாறு கணையைத் தொடுத்து எரித்த சங்கரனாகிய சிவபெருமானது ஊர், குருந்தமரம் கொடிகளாகப்

Koviloor Digital Library

1179. கலையவன் மறையவன் காற்றொடுதீ
மலையவன் விண்ணொடு மண்ணுமவன்
கொலையவன் கொடிமதில் கூட்டழித்த
சிலையவன் வளநகர் சிரபுரமே. 6

1180. வானமர் மதியொடு மத்தஞ்சூடித்
தானவர் புரமெய்த சைவனிடங்
கானமர் மடமயில் பெடைபயிலுந்
தேனமர் பொழிலணி சிரபுரமே. 7

1181. மறுத்தவர் திரிபுர மாய்ந்தழியக்
கறுத்தவன் காரரக் கன்முடிதோள்

படரும் மாதவி எனும் குருக்கத்தி ஆகியன நிறைந்த அழகிய புதர் களால் சூழப் பட்ட சிரபுரம் என்னும் நகரமாகும்.

கு-ரை : அருந்திறல் - பிறரால் வெல்லுதற்கு அரிய வலிமை. சரம் துரந்து - அம்பைச் செலுத்தி. சங்கரன் - சுகத்தைச் செய்பவன். குருந்து - குருந்தமரம். மாதவி - குருக்கத்தி, புறவு - காடு.

6. பொ-ரை : கலைகளாக விளங்குபவனும், வேதங்களை அருளியவனும் காற்று, தீ, மலை, விண், மண் முதலியனவாகத் திகழ்பவனும் கொடிகள் கட்டப்பெற்ற அசுரர்களின் முப்புரங்களை அவற்றின் மதில்களோடு கூட்டாக அழித்த மேருவில் ஏந்திய கொலையாளனும் ஆகிய சிவபெருமானது வளநகர் சிரபுரமாகும்.

கு-ரை : கலையவன் - கல்வியினால் எய்தும் பயனாகிய ஞானம் ஆயவன், மதில் அழித்த கொலையவன் எனக்கூட்டுக.

7. பொ-ரை : வானத்தில் உலவும் பிறை மதியையும், ஊமத்த மலரையும் முடியிற் சூடி, அசுரர்களின் முப்புரங்களை எய்தழித்த சைவன் இடம், காடுகளில் வாழும் இள ஆண் மயில்கள் பெண் மயில் களோடு கூடி மகிழ்வதும் இனிமை நிறைந்து விளங்குவதுமான சிரபுர மாகும்.

கு-ரை : தானவர் - அசுரர். கான் - காடு.

8. பொ-ரை : தன்னோடு உடன்பாடு இல்லாது மாறுபட்டு ஒழுகிய அசுரர்களின் முப்புரங்களும் கெட்டு அழியுமாறு சினந்தவனும்,

Koviloor Digital Library

இறுத்தவ னிருஞ்சினக் காலனைமுன்
செறுத்தவன் வளநகர் சிரபுரமே. 8

1182. வண்ணநன் மலருறை மறையவனுங்
கண்ணனுங் கழல்தொழக் கனலுருவாய்
விண்ணுற வோங்கிய விமலனிடம்
திண்ணநன் மதிலணி சிரபுரமே. 9

1183. வெற்றரை யுழல்பவர் விரிதுகிலார்
கற்றில ரறவுரை புறனுரைக்கப்
பற்றலர் திரிபுர மூன்றும்வேவச்
செற்றவன் வளநகர் சிரபுரமே. 10

கரிய அரக்கனாகிய இராவணனின் தலை தோள் ஆகியவற்றை நெரித்தவனும், மிக்க சினம் உடைய இயமனை அழித்தவனுமான சிவ பிரானது வளநகர் சிரபுரமாகும்.

கு-ரை : மறுத்தவர் - பகைவர். கறுத்தவன் - சினந்தவன்.

9. பொ-ரை : செவ்வண்ணமுடைய நல்ல தாமரை மலர் மேல் உறையும் நான்முகனும், திருமாலும் தன் திருவடிகளைத் தொழுது நிற்குமாறு கனல் உருவாய் விண்ணுற ஓங்கி நின்ற விமலனாகிய சிவபிரானது இடம் உறுதியான நல்ல மதில்களால் அழகுறும் சிரபுர வளநகராகும்.

கு-ரை : வண்ணநன்மலர் - தாமரைமலர். திண்ணநன்மதில் - உறுதியாகிய மதில்.

10. பொ-ரை : ஆடையில்லாத இடையோடு திரிந்துழல்வோரும், விரித்த ஆடையைப் போர்வையாகப் போர்த்தியுள்ளவரும், மெய் நூல்களைக் கல்லாதவரும் ஆகிய சமண பௌத்தர்கள் அறவுரை என்ற பெயரில் புறம்பான உரைகளைக் கூறக்கேட்டு அவற்றைப் பொருட் படுத்தாதவனாய்ப் பகைவராகிய அவுணர்களின் முப்புரங்களும் தீயில் வேகுமாறு அழித்தருளிய சிவபிரான் எழுந்தருளிய வளநகர் சிரபுரமாகும்.

Koviloor Digital Library

1184. அருமறை ஞானசம் பந்தனந்தண்
சிரபுர நகருறை சிவனடியைப்
பரவிய செந்தமிழ் பத்தும்வல்லார்
திருவொடு புகழ்மல்கு தேசினரே. 11

திருச்சிற்றம்பலம்

கு-ரை : வெற்று அரை உழல்பவர் - ஆடையில்லாத இடையோடு திரிகின்றவர்கள். அறவுரை கற்றிலர் எனமாறுக. புறன் உரைக்க - பொருந்தாத புறம்பான உரைகளைச் சொல்ல. பற்றலர் - பகைவர்.

11. பொ-ரை : அரிய மறைகளை ஓதாது உணர்ந்த ஞான சம்பந்தன் அழகிய தண்ணளியை உடைய சிரபுர நகரில் எழுந்தருளிய சிவபெருமான் திருவடிகளைப் பரவிப் போற்றிய இப்பதிகச் செந்தமிழ் பத்தையும் ஓத வல்லவர் செல்வத்துடன் புகழ் நிறைந்து ஒளியுடன் திகழ்வர்.

கு-ரை : தேசினர் - ஒளியையுடையவர்கள்.

திருஞானசம்பந்தரின் செந்தமிழ்ப் பாடல்

புனலில் ஏடெதிர் செல்லெனச் செல்லுமே
புத்த னார்தலை தத்தெனத் தத்துமே
கனலில் ஏடிடப் பச்சென் றிருக்குமே
கதவு மாமறைக் காட்டில் அடைக்குமே
பனையில் ஆண்பனை பெண்பனை யாகுமே
பழைய என்புபொற் பாவைய தாகுமே
சினவரா விடம் தீர்கெனத் தீருமே
செய்ய சம்பந்தன் செந்தமிழ்ப் பாடலே.

– தனிப்பாடல்.

Koviloor Digital Library

110. திருவிடைமருதூர்

பதிக வரலாறு:

32-ஆம் பதிகம் பார்க்க.

பண்: வியாழக்குறிஞ்சி

பதிக எண்: 110

திருச்சிற்றம்பலம்

1185. மருந்தவன் வானவர் தானவர்க்கும்
பெருந்தகை பிறவினொ டிறவுமானான்
அருந்தவ முனிவரொ டால்நிழற்கீழ்
இருந்தவன் வளநக ரிடைமருதே. 1

1186. தோற்றவன் கேடவன் றுணைமுலையாள்
கூற்றவன் கொல்புலித் தோலசைத்த

1. பொ-ரை : பிறவி நோய் தீர்க்கும் மருந்தாக விளங்குபவனும், தேவர்கட்கும் அசுரர்கட்கும் தலைவனாய் விளங்குபவனும், உயிர்களின் பிறப்பு இறப்பிற்குக் காரணமானவனும், அரிய தவம் உடைய சனகாதி முனிவர்களோடு கல்லால மர நிழலில் எழுந்தருளியிருந்து அறம் உரைத்தருளியவனுமான சிவபிரானது வளநகர் இடைமருதாகும்.

கு-ரை : இப்பதிகம் முழுதும் இறைவன் திருநகர் இடைமருதே என்கின்றது. மருந்தவன் - மருந்துபோல்பவன். மருந்து, நோய் நீக்கவும், நோய் வாராமல் தடுக்கவும், உடலைவளர்க்கவும் உண்ணப்படுமாறு போல இறைவனும் அநாதியே பந்தித்த மலப்பிணியினீக்கவும் , வினை ஏறாமல் காக்கவும், கைவந்த சிவஞானங் கழன்றுபோம்வண்ணம் வாசனை தாக்காமல் வளர்க்கவும் உபகாரப்படுதலின் மருந்தவன் என்றருளினார். அமுதமாயினான் எனலுமாம். தானவர் - அசுரர். பிறவு இறவு - பிறப்பு , இறப்பு. 'வு' விகுதிபெற்ற தொழிற்பெயர்; மிக அருமையான பிரயோகம். முனிவரோடு ஆலநிழல் கீழ் இருந்தவன் எனப்பிரிக்க.

2. பொ-ரை : உயிர்களின் தோற்றத்திற்கும் கேட்டிற்கும் காரணமானவனும், இணையான தனங்களை உடைய உமையம்மையை ஒரு

Koviloor Digital Library

நீற்றவ னிறைபுன னீள்சடைமேல்
ஏற்றவன் வளநக ரிடைமருதே. 2

1187. படையுடை மழுவினன் பால்வெண்ணீற்றன்
நடைநவி லேற்றினான் ஞாலமெல்லாம்
உடைதலை யிடுபலி கொண்டுழல்வான்
இடைமரு தினிதுறை யெம்மிறையே. 3

1188. பணைமுலை யுமையொரு பங்கனொன்னார்
துணைமதின் மூன்றையுஞ் சுடரின்மூழ்கக்
கணைதுரந் தடுதிறற் காலற்செற்ற
இணையிலி வளநக ரிடைமருதே. 4

கூறாகக் கொண்டவனும், கொல்லும் தொழிலில் வல்ல புலியினது தோலை இடையில் கட்டியவனும், மெய்யெலாம் திருநீறு அணிந்த வனும், பெருகிவந்த கங்கையை நீண்ட சடைமுடிமேல் ஏற்று உலகைக் காத்தவனுமான சிவபிரானது வளநகர் இடைமருதாகும்.

கு-ரை : தோற்றவன் - பிறப்பையருளியவன் . கேடவன் - அழித்தவன் . கூற்றவன் - பாகமதுடையான்.

3. பொ-ரை : மழுவைத் தனக்குரிய ஆயுதமாகக் கொண்டவனும், பால் போன்று வெள்ளிய திருநீற்றை மேனிமேல் பூசியவனும், இனிய நடையைப் பழகுகின்ற விடை ஏற்றை உடையவனும், உடைந்த தலை யோட்டில் பலி கொண்டு உலகெலாம் திரிந்துழல்பவனும் ஆகிய எம் தலைவனாகிய சிவபெருமான் இனிது உறையும் நகர் இடைமருதாகும்.

கு-ரை : நடைநவில் - நடைபழகுகின்ற. உடைதலை - உடைந்த கபாலம்.

4. பொ-ரை : பருத்த தனங்களை உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவனும், பகைவராகிய அசுரர்கட்குத் துணையாக இருந்த மூன்று அரணங்களையும் தீயில் மூழ்கி அழியுமாறு கணையைச் செலுத்தி அழித்தவனும், காலனைச் செற்ற ஒப்பிலியும் ஆகிய சிவ பெருமானது வளநகர் இடைமருது ஆகும்.

Koviloor Digital Library

1189. பொழிலவன் புயலவன் புயலியக்கும்
தொழிலவன் றுயரவன் துயரகற்றும்
கழலவன் கரியுரி போர்த்துகந்த
எழிலவன் வளநக ரிடைமருதே. 5

1190. நிறையவன் புனலொடு மதியும்வைத்த
பொறையவன் புகழவன் புகழநின்ற
மறையவன் மறிகட னஞ்சையுண்ட
இறையவன் வளநக ரிடைமருதே. 6

கு-ரை : பணைமுலை - பருத்தமுலை. ஒன்னார் - பகைவர். துணைமதிள் - திரிபுராதிகள் செய்யும் தீமைக்கெல்லாம் அரணா யிருந்து துணைபுரிந்த மதிள். கணை - அம்பு. அடுதிறல் - கொல்லும் வன்மை.

5. பொ-ரை : ஏழ் உலகங்களாக இருப்பவனும், மேகங்களாகவும் அவற்றை இயக்கி மழையைப் பெய்விக்கும் தொழிலைப் புரிவோனாக இருப்பவனும், துன்பங்களைத் தருபவனாகவும் அவற்றைப் போக்கும் கழலணிந்த திருவடிகளை உடையவனாக விளங்குபவனும், யானை யின் தோலைப் போர்த்து மகிழ்ந்த அழகனாக விளங்குபவனும் ஆகிய சிவபெருமானது வளநகர் இடைமருதாகும்.

கு-ரை : புயலவன் - மேகமாயுள்ளவன். புயலவனாய், அதனை யியக்கும் தொழிலவனாய், துயரவனாய், துயரை அகற்றும் கழலவ னாய், என்பன பொருளாயும், அதனையியக்கும் கருத்தனாயும் இருப் பவன் இறைவனே என்பதை விளக்கிற்று. 'கரியுரிபோர்த்துகந்த எழில வன் என்றது' செய்ய திருமேனிமேல் கரிய தோலைப் போர்த்தியதும் அழகாயிற்று என்பதாம்.

6. பொ-ரை : குறைவற்ற நிறைவாக விளங்குபவனும், கங்கை யோடு திங்களைத் திருமுடியில் வைத்துச் சுமக்கும் சுமையை உடைய வனும், புகழ் வடிவினனாக விளங்குபவனும், எல்லோராலும் புகழப் படும் வேதங்களாக விளங்குபவனும், சுருண்டு விழும் அலைகளை உடைய கடலின்கண் தோன்றிய நஞ்சினை உண்ட தலைவனும் ஆகிய சிவபிரானது வளநகர் இடைமருதாகும்.

கு-ரை : பொறையவன் - சுமையையுடையவன்.

Koviloor Digital Library

1191. நனிவளர் மதியொடு நாகம்வைத்த
பனிமலர்க் கொன்றையம் படர்சடையன்
முனிவரொ டமரர்கண் முறைவணங்க
இனிதுறை வளநக ரிடைமருதே. 7

1192. தருக்கின வரக்கன தாளுந்தோளும்
நெரித்தவ னெடுங்கைமா மதகரியன்
றுரித்தவ னொன்னலர் புரங்கண்மூன்றும்
எரித்தவன் வளநக ரிடைமருதே. 8

1193. பெரியவன் பெண்ணினொ டாணுமானான்
வரியர வணைமறி கடற்றுயின்ற

7. பொ-ரை : நாள்தோறும் ஒரு கலையாக நன்றாக வளர்தற்குரிய பிறை மதியோடு பாம்பையும் உடனாக வைத்துள்ளவனும் குளிர்ந்த கொன்றை மலர்மாலை சூடிய விரிந்த சடைமுடியை உடையவனும் ஆகிய சிவபிரான் முனிவர்களும் தேவர்களும் முறையாக வணங்க இனிதாக உறையும் வளநகர் இடைமருதாகும்.

கு-ரை : பனிமலர் - குளிர்ந்தமலர், முனிவர் முன்னும், தேவர் பின்னுமாக வணங்குதல் முறையாதலின் முறை வணங்க என்றார். முனிவர்கள் வணக்கம்; உலகம் உய்யவந்த நிஷ்காமிய வணக்கம்; தேவர்கள் வணக்கம்; அசுரர் அழியத் தாம் வாழ வேண்டும் என்னும் காமிய வணக்கம்; ஆதலின் அவர்கள் முன்னும் தேவர்கள் பின்னும் முறையே வணங்க என்றது.

8. பொ-ரை : செருக்குற்ற அரக்கனாகிய இராவணனின் தாள் களையும், தோள்களையும் நெரித்தவனும், நீண்ட கையை உடைய பெரிய மத யானையை அக்காலத்தில் உரித்துப் போர்த்தவனும், பகை வர்களாகிய அசுரர்களின் புரங்கள் மூன்றையும் எரித்தவனும் ஆகிய சிவபெருமானது வளநகர் இடைமருதாகும்.

கு-ரை : அரக்கன் - இராவணன். ஒன்னலர் - பகைவர்.

9. பொ-ரை : எல்லோரினும் பெரியவனும், பெண் ஆண் வடிவாக விளங்குபவனும், வயிற்றிடையே கீற்றுக்களாகிய கோடுகளை உடைய பாம்பணைமேல் கடலிடையே துயிலும் கரியவனாகிய

Koviloor Digital Library

கரியவ னலரவன் காண்பரிய
எரியவன் வளநக ரிடைமருதே . 9

1194. சிந்தையில் சமணொடு தேரர்சொன்ன
புந்தியி லுரையவை பொருள்கொளாதே
அந்தண ரோத்தினொ டரவமோவா
எந்தைதன் வளநக ரிடைமருதே. 10

1195. இலைமலி பொழிலிடை மருதிறையை
நலமிகு ஞானசம்பந்தன்சொன்ன
பலமிகு தமிழிவை பத்தும்வல்லார்
உலகுறு புகழினொ டோங்குவரே. 11

திருச்சிற்றம்பலம்

திருமால் தாமரை மலர்மேல் உறையும் நான்முகன் ஆகியோர் காணுதற்கரிய எரியுருவாய் ஓங்கி நின்றவனும் ஆகிய சிவபெருமானது வளநகர் இடைமருதாகும்.

கு-ரை : அரவணை - ஆதிசேடனாகிய படுக்கை . கரியவன் - திருமால். அலரவன் - பிரமன்.

10. பொ-ரை : சிந்திக்கும் திறனற்ற சமணர்களும், புத்தர்களும் கூறிய அறிவற்ற உரைகளைப் பொருளுடைய உரைகளாகக் கொள்ளாதீர். அந்தணர்களின் வேத ஒலியோடு விழவொலி நீங்காத வளநகர் ஆகிய இடைமருது எந்தையாகிய சிவபிரான் உறையும் இடமாகும் என்று அறிந்து சென்று வழிபடுமின்.

கு-ரை : சிந்தை இல் சமண் - சிந்தனை என்பதொன்றற்ற சமணர். தேரர் - புத்தர். புந்தி இல் உரை - புத்தியற்ற வார்த்தை. ஓத்து - வேதம். அரவம் - ஒலி.

11. பொ-ரை : இலைகள் நிறைந்த பொழில்கள் சூழ்ந்த இடைமருதில் உறையும் சிவபிரானை, அருள்நலம் மிகுந்த ஞானசம்பந்தன் போற்றிப் பாடிய பயன்மிகு தமிழ்ப் பாடல்களாலியன்ற இப்பதிகப் பாடல்கள் பத்தையும் ஓதி வழிபட வல்லவர் உலகில் நிறைந்து விளங்கும் புகழ்கள் அனைத்தையும் பெற்று ஓங்கி வாழ்வர்.

Koviloor Digital Library

கு-ரை : இடைமருதூர்ப் பதிகமாகிய இப்பத்தையும் வல்லவர், உலகிற் புகழோடு ஓங்கி வாழ்வர் என்கின்றது. பலமிகு தமிழ் - பயன் மிகுந்த தமிழ். தெய்வபலமிகுந்த தமிழ் என்றுமாம். புகழ் இம்மைப் பயனே என்பார் உலகு உறு புகழ் என்று அருளினர். நலம் - திரு வருட்டிறம்.

திருப்புகழ்

கறுவி மைக்கணிட் டினித ழைத்தியற்
கவிசொ லிச்சிரித்து உறவாடிக்
களவு வித்தையிட்டு உளம் உருக்கிமுற்
கருதி வைத்தவைப் பவைசேரத்

தறுக ணிற்பறித் திருக ழுத்துறத்
தழுவி நெக்குநெக் குயிர்சோரச்
சயன மெத்தையிற் செயல ழிக்குமித்
தருணி கட்ககப் படலாமோ

பிறவி யைத்தணித் தருளு நிட்களப்
பிரம சிற்சுகக் கடல்மூழ்கும்
பெருமு னித்திரட் பரவு செய்ப்பதிப்
ப்ரபல கொச்சையிற் சதுர்வேதச்

சிறுவ நிற்கருட் கவிகை நித்திலச்
சிவிகை யைக்கொடுத் தருள்ஈசன்
செகத லத்தினிற் புகழ்ப டைத்த மெய்த்
திருவ ரத்துறைப் பெருமாளே.

- அருணகிரிநாதர்.

Koviloor Digital Library

111. திருக்கடைமுடி

பண்: வியாழக்குறிஞ்சி

பதிக எண்: 111

திருச்சிற்றம்பலம்

1196. அருத்தனை யறவனை யமுதனைநீர்
விருத்தனைப் பாலனை வினவுதிரேல்
ஒருத்தனை யல்லதிங் குலகமேத்தும்
கருத்தவன் வளநகர் கடைமுடியே. 1

1197. திரைபொரு திருமுடி திங்கள்விம்மும்
அரைபொரு புலியத ளடிகளிடம்
திரையொடு நுரைபொரு தெண்சுனைநீர்
கரைபொரு வளநகர் கடைமுடியே. 2

1. பொ-ரை : வேதப் பொருளாய் விளங்குபவனும், அறவடிவின னும், அமுதம்போல இனியவனும், மூத்தவனும், இளையோனும், உலக மக்கள் பலராலும் இவ்வொருவனையன்றித் துணையில்லை என்று கருதி வழிபடும் முடிந்த பொருளாயுள்ளவனும், ஆகிய பெரு மான் எவ்விடத்தான் என நீர் வினவுவீராயின் அவன் எழுந்தருளிய வளநகர் கடைமுடி என்னும் தலமாகும். சென்று வழிபடுவீராக.

கு-ரை: நீர் பொருளாயுள்ளவனும், அறவடிவானவனும், அமு தனுமாகிய இறைவன் இடம் வினவுவீராயின், அது கடைமுடி என்கின் றது. அருத்தன் - பொருள்வடிவானவன். விருத்தன் - மூத்தவன். அருத் தனை......உலகம் ஏத்தும் ஒருத்தனை வினவுதிரேல் கருத்தவன் அல் லது வளநகர் கடைமுடியே எனக் கூட்டுக. இதன் கருத்து அத்தகைய ஒருவனை வினவுதிராயின் அவன் தியானிப்பார் கருத்தினை இட மாகக் கொண்டவன். அன்றியும், கடைமுடியும் இடமாக்கியவன் என்பதாம்.

2. பொ-ரை : ஒளியால் விம்மித் தோன்றும் பிறைமதி, அலைகள் ஒன்றோடு ஒன்று மோதும் கங்கை ஆகியவற்றை உடைய திருமுடியை உடையவரும், இடையில் புலித்தோலைப் பொருந்த அணிந்தவருமா கிய அடிகள் எழுந்தருளிய இடம், அலைகளோடு நுரைகள் பொருந் திய தெளிந்த சுனைநீர் கரைகளில் வந்து மோதும் வளநகராகிய கடை முடியாகும்.

Koviloor Digital Library

1198. ஆலிள மதியினொ டரவுகங்கை
கோலவெண் ணீற்றனைத் தொழுதிறைஞ்சி
ஏலநன் மலரொடு விரைகமழும்
காலன வளநகர் கடைமுடியே. 3

1199. கொய்யணி நறுமலர்க் கொன்றையந்தார்
மையணி மிடறுடை மறையவனூர்
பையணி யரவொடு மான்மழுவாள்
கையணி பவனிடங் கடைமுடியே. 4

கு-ரை: கங்கையையும் பிறையையும் அணிந்த திருமுடியையும், புலித்தோலை உடுத்த அரையையும் உடைய அடிகளிடம் கடைமுடி என்கின்றது. திரை - அலை. ஆகுபெயரால் கங்கையை உணர்த்தியது. அதள் - தோல்.

3. பொ-ரை: கல்லால மர நீழலில் இளமதி அரவு கங்கை ஆகியன சூடிய சடைமுடியுடனும், அழகிய திருவெண்ணீற்றுடனும் , நறுமலர் ஆகியனவற்றால் மணம் பொருத்தமாகக் கமழும் திருவடிகளை உடையவனாக விளங்கும் இறைவனைத் தொழுது இறைஞ்சுதற்குரிய வளநகராக விளங்குவது கடைமுடியாகும்.

கு-ரை: இளம்பிறை முதலியவற்றையுடைய இறைவனைத் தொழ, மலர்மணங்கமழும் திருவடியையுடையவன் நகர் கடைமுடி (அடைவோம்) என்கின்றது. இறைஞ்சி என்ற செய்து என் வினையெச்சத்தைச் செயவென் எச்சமாக மாற்றுக . இறைஞ்சக் கமழும் காலன நகர் எனமுடிக்க.

4. பொ-ரை : கொய்யப் பெற்ற அழகிய மணம் கமழும் கொன்றை மலர்மாலை அணிந்தவனாய் விடம் பொருந்திய கண்டத்தை உடையவனாய், படம் பொருந்திய பாம்பையும், மான் மழு வாள் ஆகியவற்றையும் கையின்கண் அணிந்தவனாய் விளங்கும் மறை முதல்வனது ஊர் கடைமுடியாகும்.

கு-ரை: கொன்றையையணிந்த நீலகண்டனும், அரவையும் , மானையும், மழுவையும் கையில் அணிந்தவனும் ஆகிய இறைவன் இடம் கடைமுடி என்கின்றது. கொய் - கொய்யப்பெற்ற. மை - விடம். பை - படம்.

Koviloor Digital Library

1200. மறையவ னுலகவன் மாயமவன்
பிறையவன் புனலவ னனலுமவன்
இறையவ னெனவுல கேத்துங்கண்டம்
கறையவன் வளநகர் கடைமுடியே. 5

1201. படவர வேரல்குற் பல்வளைக்கை
மடவர லாளையொர் பாகம்வைத்துக்
குடதிசை மதியது சூடுசென்னிக்
கடவுள்தன் வளநகர் கடைமுடியே. 6

5. பொ-ரை : வேதங்களை அருளியவனும், அனைத்துலகங்களும் ஆகியவனும், மாயை வடிவினனும், சடைமுடியில் பிறை கங்கை ஆகியவற்றை அணிந்தவனும், கையில் அனல் ஏந்தியவனும் உலக மக்கள் இறைவன் எனப் போற்றும் நீல கண்டனுமான சிவபிரானது வளநகர் கடைமுடியாகும்.

கு-ரை : 'எல்லாமாயிருப்பவன் இறையவன்' என உலகேத்துங் கண்டங்கரியவன் இடம் கடைமுடி என்கின்றது.

மறையவன் - ஒலி வடிவானவன். உலகவன் - பொருட் பிரபஞ்சவடிவானவன். மாயம் அவன் - இவ்விரண்டிற்கும் அடியாகிய சுத்தமும் அசுத்தமும் ஆன மாயையும் அவன். இறையவன் - எல்லா உயிர்களிலும் உள்ளும் புறமுந் தங்குதலையுடையவன். கறை - விடம்.

6. பொ-ரை : அரவின் படம் போன்ற அழகிய அல்குலையும் பலவகையினவான வளையல்களை அணிந்த கைகளையும் உடைய உமை யம்மையை ஒரு பாகமாக வைத்து, மேற்குத் திசையில் தோன்றும் பிறை மதியைச் சூடிய சடைமுடியினனாய் விளங்கும் கடவுளின் வளநகர் கடைமுடியாகும்.

கு-ரை : உமாதேவியை யொருபாகம் வைத்து, பிறையைச் சூடும் முடியையுடைய கடவுள்நகர் இது என்கின்றது.

பட அரவு ஏர் - அரவின் படத்தையொத்த. மடவரலாள் - உமாதேவி. குட திசைமதி - இளம்பிறை. பிறை மேற்கின்கண்ணே தோன்றுமாதலின் இங்ஙனம் கூறினார்.

Koviloor Digital Library

1202. பொடிபுல்கு மார்பினிற் புரிபுல்குநூல்
அடிபுல்கு பைங்கழ லடிகளிடம்
கொடிபுல்கு மலரொடு குளிர்சுனைநீர்
கடிபுல்கு வளநகர் கடைமுடியே. 7

1203. நோதல்செய் தரக்கனை நோக்கழியச்
சாதல்செய் தவனடி சரணெனலும்
ஆதர வருள்செய்த வடிகளவர்
காதல்செய் வளநகர் கடைமுடியே. 8

1204. அடிமுடி காண்கில ரோரிருவர்
புடைபுல்கி யருளென்று போற்றிசைப்பச்

7. பொ-ரை : திருநீறு அணிந்த மார்பின்கண் முறுக்கேறிய பூணூலை அணிந்தவராய், திருவடிகளில் பொருந்திய அழகிய கழல்களை உடையவராய் விளங்கும் அடிகள் இடம் கொடிகளில் பூத்த மலர்களோடு குளிர்ந்த சுனை நீரின் மணம் கமழும் வளநகராகிய கடைமுடியாகும்.

கு-ரை : மார்பிற்பூணூலையும், திருவடியிற்கழலையும் பூண்ட அடிகளிடம் இது என்கின்றது. பொடி - விபூதி. கொடிபுல்கு மலர் - முல்லைக்கொடியில் பொருந்தியுள்ள மலர். கடி - காவல்.

8. பொ-ரை : இராவணனைத் துன்புறுமாறு செய்து, அவன் மீது முதலில் கருணை நோக்கம் செய்யாமல் வலிமை காட்டிப்பின் அவன் திருவடியே சரண் எனக் கூறிய அளவில் அவனுக்கு ஆதரவு காட்டி அருள் செய்த அடிகளாகிய சிவபிரானார் விரும்பும் வளநகர் கடைமுடியாகும்.

கு-ரை : இராவணன் வலியடக்கி யாட்கொண்ட இறைவன் இடம் இது என்கின்றது. நோதல்செய்து - வருத்தி. நோக்கு அழிய - திருவருட்பார்வைகெட, சாதல்செய்தவன் - அழிந்து பட்டவனாகிய இராவணன்.

9. பொ-ரை : அடிமுடி காணாதவராகிய திருமால் பிரமர் அருகிற்சென்று அருள்புரிக எனப் போற்றி செய்து வழிபடுமாறு, சடைமிசையே கங்கையை அணிந்த சதுரப்பாடுடைய சிவபிரானது இடமாக

Koviloor Digital Library

சடையிடைப் புனல்வைத்த சதுரனிடம்
கடைமுடியதனயல் காவிரியே. 9

1205. மண்ணுதல் பறித்தலு மாயமிவை
எண்ணிய காலவை யின்பமல்ல
ஒண்ணுத லுமையையொர் பாகம்வைத்த
கண்ணுதல் வளநகர் கடைமுடியே. 10

1206. பொன்றிகழ் காவிரிப் பொருபுனல்சீர்
சென்றடை கடைமுடிச் சிவனடியை
நன்றுணர் ஞானசம் பந்தன்சொன்ன
இன்றமி ழிவைசொல வின்பமாமே. 11

திருச்சிற்றம்பலம்

விளங்குவது காவிரியின் அயலிலே உள்ள கடைமுடியாகும்.

கு-ரை : அடிமுடியறியாத அயனும் மாலும் அருள் என்று போற்றிசைப்ப, கங்கைசூடிய பெருமானிடம் இது என்கின்றது. புடைபுல்கி - அணுகி.

10. பொ-ரை : நீரிற் பல கால் மூழ்கலும் மயிர் பறித்தலும் ஆகிய புத்த சமண விரத ஒழுக்கங்கள் பொய்யானவை; ஆராயுமிடத்து இவை இன்பம் தாரா. ஒளி பொருந்திய நுதலினளாகிய உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டுள்ள கண்ணுதலோனின் வளநகர் கடைமுடியாகும்.

கு-ரை : முழுகுதலும், மயிர்பறித்தலும் ஆகிய இந்த விரத ஒழுக்கங்கள் யாவும் வெறும் மாயம்; எண்ணும்பொழுது இவை இன்பமாகா; உமாதேவியைப் பாகம்வைத்த பெருமானது இடம் இது என்கின்றது. ஒள்நுதல் - ஒளிபொருந்திய நெற்றி.

11.பொ-ரை : பொன்துகள் திகழும் காவிரியாற்றின் அலைகளின் நீர் முறையாகச் சென்று அடையும் கடைமுடியில் விளங்கும் சிவபிரான் திருவடிப் பெருமைகளை நன்குணர்ந்த ஞானசம்பந்தன் சொன்ன இனிய தமிழாகிய இத்திருப்பதிகப் பாடல்களை ஓதி வழிபட இன்பம் ஆகும்.

Koviloor Digital Library

கு-ரை : காவிரியின் நீர்வளம்மிகுந்த கடைமுடியின்கண் எழுந்தருளியுள்ள சிவனடியைப்பற்றித் திருஞானசம்பந்தன் சொன்ன இனிய தமிழைச்சொல்ல இன்பமாம் என்கின்றது. பொருபுனல் - கரையை மோதுகின்ற நீர். பொன்திகழ் காவிரி - பொன்னியெனப் பெயர் தாங்கித் திகழ்கின்ற காவிரி. பொன் - அழகுமாம். சீர் சென்றடை சிவன் எனக் கூட்டுக. உரைப்பார் உரைக்கும் புகழ்களை உடையான் இவனென உணராதே உரைப்பினும், சென்றடைவது சிவனையே என்பதாம். சீர் சென்றடை கடைமுடி எனலுமாம்.

திருப்புகழ்

தினமணி சார்ங்க பாணி யெனமதிள் நீண்டு சால
தினகரன் ஏய்ந்த மாளி கையிலாரஞ்
செழுமணி சேர்ந்தபீடி கையிலிசை வாய்ந்த பாடல்
வயிரியர் சேர்ந்து பாட இருபாலும்

இனவளை பூண்கை யார்க வரியிட வேய்ந்து மாலை
புழுககில் சாந்துபூசி அரசாகி
இனிதிறு மாந்து வாழும் இருவினை நீண்ட காயம்
ஒருபிடி சாம்பலாகி விடலாமோ

வனசரர் ஏங்க வானமுகடுற ஓங்கி ஆசை
மயிலொடு பாங்கி மார்க ளருகாக
மயிலொடு மான்கள் சூழ வளவரி வேங்கையாகி
மலைமிசை தோன்று மாய வடிவோனே

கனசமண் மூங்கர் கோடி கழுமிசை தூங்கநீறு
கருணைகொள் பாண்டிநாடு பெறவேதக்
கவிதரு காந்த பாலகழுமல பூந்த ராய
கவுணியர் வேந்த தேவர் பெருமாளே.

- அருணகிரிநாதர்.

Koviloor Digital Library

112. திருச்சிவபுரம்

பதிக வரலாறு:

21-ஆம் பதிகம் பார்க்க.

பண்: வியாழக்குறிஞ்சி

பதிக எண்: 112

திருச்சிற்றம்பலம்

1207. **இன்குர லிசைகெழும் யாழ்முரலத்**
தன்கர மருவிய சதுரனகர்
பொன்கரை பொருபழங் காவிரியின்
தென்கரை மருவிய சிவபுரமே. 1

1208. **அன்றடற் காலனைப் பாலனுக்காய்ப்**
பொன்றிட வுதைசெய்த புனிதனகர்
வென்றிகொ ளெயிற்றுவெண் பன்றிமுன்னாள்
சென்றடி வீழ்தரு சிவபுரமே. 2

1. பொ-ரை : இனிய ஒலியும் இசையும் பொருந்திய யாழ் முரலுமாறு தனது கரத்தின்கண்ணே அதனை ஏந்தி விளங்கும் சதுரனது நகர், அழகிய கரையினை மோதும் பழமையான காவிரியாற்றின் தெங்கரையில் விளங்கும் சிவபுரமாகும்.

கு-ரை : யாழேந்திய கரத்தன் நகர் சிவபுரம் என்கின்றது. முரல - ஒலிக்க.

2. பொ-ரை : முற்காலத்தில் மார்க்கண்டேயன் பொருட்டு வலிய காலனைக் காலால் அழியுமாறு உதைத்தருளிய புனிதனது நகர், தனது கோரைப் பல்லால் வெற்றி பெறும் வெள்ளைப் பன்றியாகத் திருவவதாரம் கொண்ட திருமால், முற்காலத்தில் வந்து திருவடியைப் பணிந்து வழிபாடு செய்த தலமாகிய சிவபுரமாகும். (திருமால் வெண்ணிறப் பன் றியாக்த் திரு அவதாரம் செய்த செய்தி தேவாரத்திலேயே உள்ளது. *திவ்வியப் பிரபந்தத்தில்* இல்லை.)

கு-ரை : மார்க்கண்டற்காகக் காலனையுதைத்தவன் நகர் இது

Koviloor Digital Library

1209. மலைமகண் மறுகிட மதகரியைக்
கொலைமல்க வுரிசெய்த குழகனகர்
அலைமல்கு மரிசிலி னதனயலே
சிலைமல்கு மதிளணி சிவபுரமே. 3

1210. மண்புன லனலொடு மாருதமும்
விண்புனை மருவிய விகிர்தனகர்
பண்புனை குரல்வழி வண்டுகிண்டிச்
செண்பக மலர்பொழிற் சிவபுரமே. 4

1211. வீறுநன் குடையவள் மேனிபாகம்
கூறுநன் குடையவன் குளிர்நகர்தான்

என்கின்றது. அடல் - வலிமை. பொன்றிட - அழிய. எயிறு - கொம்பு. வெண்பன்றி - திருமாலாகிய சுவேதவராகம். இது இத்தலவரவாற்றுக்குறிப்பை அருளியது.

3. பொ-ரை : மலைமகளாகிய பார்வதி தேவி அஞ்சுமாறு மதம் பொருந்திய யானையைக் கொன்று, அதன் தோலை உரித்துப் போர்த்த குழகனது நகர், அலைகள் நிரம்பிய அரிசிலாற்றின் கரையருகே விளங்குவதும் மலை போன்ற மதில்களை உடையதுமான சிவபுரமாகும்.

கு-ரை : மலைமகள் அஞ்ச யானையையுரித்த இறைவன் நகர் இது என்கின்றது. மறுகிட - கலங்க. உரிசெய்த - உரித்த. குழகன் - இளமையையுடையவன். சிலை மல்கும் - மலைபோல விளங்கும்.

4. பொ-ரை : மண், புனல், அனல், காற்று, ஆகாயம் என்னும் ஐம்பூதங்களாய்ப் பொருந்தி விளங்கும் விகிர்தனது நகர், பண் பொருந்திய குரலோடு வண்டுகள் சூழ்ந்து கிளர மலரும் செண்பகப் பூக்களோடு கூடிய பொழில்கள் சூழ்ந்த சிவபுரமாகும்.

கு-ரை : ஐம்பூதமுமாகிய விகிர்தனகர் இதுவாம் என்கின்றது. மாருதம் - காற்று. பண்புனை குரல் - பண்ணைச்செய்கின்ற குரல்.

5. பொ-ரை : அழகால் தனிப் பெருமை பெற்ற உமையம்மையைத் தன் திருமேனியின் ஒரு பாகமாக உடையவனாகிய சிவ பிரானது

Koviloor Digital Library

நாறுநன் குரவிரி வண்டுகிண்டித்
தேறலுண் டெழுதரு சிவபுரமே. 5

1212. மாறெதிர் வருதிரி புரமெரித்து
நீறது வாக்கிய நிமலனகர்
நாறுடை நடுபவ ருழவரொடும்
சேறுடை வயலணி சிவபுரமே. 6

1213. ஆவிலைந் தமர்ந்தவ னரிவையொடு
மேவிநன் கிருந்ததொர் வியனகர்தான்
பூவில்வண் டமர்தரு பொய்கையன்னச்
சேவல்தன் பெடைபுல்கு சிவபுரமே. 7

குளிர்ந்த நகரம், மணம் வீசும் நல்ல குராமலரை வண்டுகள் கிண்டித் தேனை உண்டு மகிழ்ந்து எழும் பொழில் சூழ்ந்த சிவபுரமாகும்.

கு-ரை : உமாதேவியை ஒருபாகங்கொண்டவன் நகர் இதுவாம் என்கின்றது. வீறு - தனிப்பெருமை. நாறு நல்குரவிரி - மணம் வீசுகின்ற நல்லகுராமலர்; விரி - மலர்; முதனிலைத் தொழிலாகு பெயர். தேறல் - தேன்.

6. பொ-ரை : பகைமை உணர்வோடு மாறுபட்டுத் தன்னை எதிர்த்துவந்த அசுரர்களின் திரிபுரங்களை எரித்து நீறாக்கிய நிமலனது நகர், உழவர்களோடு நாற்றுநடும் மகளிர் பலரைக் கொண்ட சேற்று வளம் மிக்க வயல்களால் அழகு பெறுவதாகிய சிவபுரமாகும்.

கு-ரை : திரிபுரங்களை நீறாக்கிய நிமலன் நகர் இதுவாம் என்கின்றது. மாறு - பகையாக. நாறு - நாற்று.

7. பொ-ரை : பசுவிடம் உண்டாகும் பால், தயிர் முதலிய ஐந்து பொருள்களை விரும்புபவனாகிய சிவபிரான் உமையம்மையோடு கூடி மகிழ்வுடன் இருக்கின்ற பெரிய நகர், தேனுண்ண வண்டுகள் மொய்க்கும் மலர்களை உடைய பொய்கைகளில் அன்னச் சேவல் தன் பெண் அன்னத்தைத் தழுவி மகிழும் அழகுடைய சிவபுரமாகும்.

கு-ரை : ஆனைந்தாடும் பரமன் அம்மையோடும் எழுந்தருளி

Koviloor Digital Library

1214. எழின்மலை யெடுத்தவல் லிராவணன்றன்
முழுவலி யடக்கிய முதல்வனகர்
விழவினி லெடுத்தவெண் கொடிமிடைந்து
செழுமுகி லடுக்கும்வண் சிவபுரமே. 8

1215. சங்கள வியகையன் சதுர்முகனும்
அங்கள வறிவரி யவனகர்தான்
கங்குலும் பறவைகள் கமுகுதொறும்
செங்கனி நுகர்தரு சிவபுரமே. 9

இருந்த இடமாம் என்கின்றது. ஆவில் ஐந்து - பஞ்சகவ்யம். அரிவை - உமாதேவி. பூவில் வண்டு கண்ணயர்ந்திருக்கும் பொய்கையிலே, அன்னச்சேவல் தன் பெடையைப்புல்லும் சிவபுரம் என்பதாம்.

8. பொ-ரை : அழகிய கயிலை மலையைப் பெயர்த்தெடுத்த வலிய இராவணனின் முழுமையான வல்லமையை அடக்கிய முதல்வ னாகிய சிவபிரானது நகர், விழாக் காலங்களில் எடுக்கப்பட்ட வெண் மையான கொடிகள் நிறைந்து கரிய மேகங்களை நெருங்கிச் செறியும் வளமையான சிவபுரமாகும்.

கு-ரை : இராவணனின் வலியடக்கிய முதல்வன்நகர் இது என் கின்றது. எழில்மலை - அழகியகைலை. உற்சவத்தில் உயர்த்திய கொடி கள் மேகத்தையணுகும் சிவபுரம் என விழாச் சிறப்பும், கொடியின் உய ரமும் உரைத்தவாறு.

9. பொ-ரை : சங்கேந்திய கையினனாகிய திருமாலும் நான்முக னும் முற்காலத்தில் அடிமுடி தேடி அளந்தறியப் பெறாத சிவபிரானது நகர், இரவிலும் பறவைகள், கமுக மரங்கள் தோறும் தங்கிச் செங்க னிகளை நுகரும் வளம் மிக்க சிவபுரமாகும்.

கு-ரை : அயனும்மாலும் அறியப்பெறாதவன் நகர் இதுவாம் என்கின்றது. சங்கு அளவியகையன் - பாஞ்சசன்யம் என்னும் சங்கு கலந்த கையையுடையவன்.

அளவு - உயரமும், ஆழமும் ஆகிய புற அளவு. இரவிலுங் கூடப் பறவைகள் கமுகுதோறும் பழநுகரும் நகர் என்று இருபோதும் பறவைக்கு உபகாரப்படுவது உரைக்கப்பெற்றது.

Koviloor Digital Library

1216. மண்டையிற் குண்டிகை மாசுதரும்
மிண்டரை விலக்கிய விமலனகர்
பண்டமர் தருபழங் காவிரியின்
தெண்டிரை பொருதெழு சிவபுரமே. 10

1217. சிவனுறை தருசிவ புரநகரைக்
கவுணியர் குலபதி காழியர்கோன்
தவமல்கு தமிழிவை சொல்லவல்லார்
நவமொடு சிவகதி நண்ணுவரே. 11

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை : உண்கலன் குண்டிகை ஆகியனவற்றை ஏந்திய வராய், மாசேறிய உடலினராய்த் தருக்கொடு திரியும் சமணர்களை வெறுக்கும் சிவபிரானது நகர், பழமையான காலந்தொட்டே ஓடி வந்து வளம் சேர்க்கும் பழங்காவிரியின் அலைகள் வந்து பொருந்தும் சிவபுர மாகும்.

கு-ரை : புறச்சமயிகளை விலக்கிய விமலன் நகரிதுவாம் என் கின்றது. மண்டை - உண்கலம். மாசு - அழுக்கு. பண்டு அமர் தரு பழங்காவிரி - முன்னமே வளந்தரும் பழங்காவிரி எனப் பழமைக்கு எல்லை கூறியவாறு.

11. பொ-ரை : சிவபெருமான் எழுந்தருளிய சிவபுர நகரைப் போற்றிக் கவுணியர் குலபதியாகிய காழியர் தலைவன் ஞானசம்பந்தன் பாடிய தவத்தைத் தருவனவாகிய இப்பதிகத் தமிழை ஓத வல்லவர் புதுமைகள் பலவும் பெற்று முடிவில் சிவகதி சேர்வர்.

கு-ரை : சிவபுரத்தைக் காழிநாதன் கூறிய பாடலைச் சொல்ல வல்லவர் சிவகதி சேர்வர் எனப் பயன் கூறியது. நவம் - புதுமை.

Koviloor Digital Library

113. திருவல்லம்

பதிக வரலாறு:

திருமாற்பேறு உடையவர்தம் திருவருள் பெற்றுத் திருவல்லத்தையடைந்த சிவஞானச் செம்மலார், அங்குள்ள பெருமானுக்கு ''எரித்தவன் முப்புரம்'' என்னும் திருப்பதிகப் பெரும் பிணையலை அணிவித்தார்.

பண்: வியாழக்குறிஞ்சி

பதிக எண்: 113

திருச்சிற்றம்பலம்

1218. எரித்தவன் முப்புர மெரியின்மூழ்கத்
தரித்தவன் கங்கையைத் தாழ்சடைமேல்
விரித்தவன் வேதங்கள் வேறுவேறு
தெரித்தவ னுறைவிடந் திருவல்லமே. 1

1219. தாயவ னுலகுக்குத் தன்னொப்பிலாத்
தூயவன் றூமதி சூடியெல்லாம்
ஆயவ னமரர்க்கு முனிவர்கட்கும்
சேயவ னுறைவிடந் திருவல்லமே. 2

1.பொ-ரை : அவுணர்களின் முப்புரங்களையும் எரியில் மூழ்குமாறு செய்து அழித்தவனும், தாழ்ந்து தொங்கும் சடைமுடிமீது கங்கையைத் தரித்தவனும், வேதங்களை அருளிச் செய்தவனும், அவற்றின் பொருள்களை ஆறு அங்கங்களுடன் தெளியச் செய்தவனும் ஆகிய சிவபிரான் உறையும் இடம் திருவல்லமாகும்.

கு-ரை : முப்புரம் எரித்தவன். சடையிற் கங்கையைத் தரித்தவன். வேதங்களை விரித்தவன். வேறு வேறு தெரித்தவன் இடம் திருவல்லம் என்கின்றது. விரித்தவன் - பரப்பியவன். தெரித்தவன் - பொருளுணர்த்தியவன்.

2.பொ-ரை : உலக உயிர்கட்குத் தாய் போன்றவனும், தனக்கு யாரையும் உவமை சொல்ல முடியாத தூயவனும், தூய மதியை முடியில் சூடியவனும், எல்லாப் பொருள்களுமாக ஆனவனும், போகிகள்

Koviloor Digital Library

1220. பார்த்தவன் காமனைப் பண்பழியப்
போர்த்தவன் போதகத் தின்னுரிவை
ஆர்த்தவன் நான்முகன் றலையையன்று
சேர்த்தவ னுறைவிடந் திருவல்லமே. 3

1221. கொய்தவம் மலரடி கூடுவார்தம்
மைதவழ் திருமகள் வணங்கவைத்துப்
பெய்தவன் பெருமழை யுலகமுய்யச்
செய்தவ னுறைவிடந் திருவல்லமே. 4

ஆன அமரர், மானசீலரான முனிவர் முதலானோர்க்குச் சேயவனும் ஆன சிவபிரானது உறைவிடம் திருவல்லமாகும்.

கு-ரை : உலகுக்குத் தாயானவன், ஒப்பில்லாத் தூயவன், தேவர்கட்கும் முனிவர்கட்கும் சேயவன் திருத்தலம் திருவல்லம் என்கின்றது. அமரர் முனிவர் இருவரும் போகிகளாயும், மனனசீலர்களாயும் இருத்தலின் அவர்களுக்குச் சேயவனானான் என்று அருளினர். இவர்களுக்குச் சேயவன் எனவே ஞானிகட்கு மிக அண்ணியன் என்பதாம்.

3. பொ-ரை : மன்மதனின் அழகு கெடுமாறு நெற்றி விழியால் பார்த்து அவனை எரித்தவனும், யானையின் தோலை உரித்துப் போர்த்தவனும், தன்முனைப்போடு ஆரவாரித்த பிரமனின் ஐந்து தலைகளில் ஒன்றைக் கொய்து அத்தலையினது ஓட்டைக் கையில் உண்கலன் ஆகச் சேர்த்துள்ளவனும் ஆகிய சிவபிரானது உறைவிடம் திருவல்லமாகும்.

கு-ரை : காமனை யெரித்தவன், யானையையுரித்தவன், பிரமனைச் சிரங்கொய்தவன் இடம் இது என்கின்றது.

பண்பு - அழகு. போதகம் - யானைக்கன்று. உரிவை - தோல். ஆர்த்தவன் - ஆரவாரம் செய்த பிரமன்.

4. பொ-ரை : அன்பர்களால் கொய்து அணியப்பெற்ற அழகிய மலர் பொருந்திய திருவடிகளைச் சேர்பவர்களைப் பலரிடத்தும் மாறி மாறிச் செல்லும் இயல்பினளாகிய திருமகளை வணங்குமாறு செய்விப்பவனும், பெருமழை பெய்வித்து உலகை உய்யுமாறு செய்பவனுமாய சிவபிரானது உறைவிடம் திருவல்லமாகும்.

Koviloor Digital Library

1222. சார்ந்தவர்க் கின்பங்கள் தழைக்கும்வண்ணம்
நேர்ந்தவ னேரிழை யோடுங்கூடித்
தேர்ந்தவர் தேடுவார் தேடச்செய்தே
சேர்ந்தவ னுறைவிடந் திருவல்லமே. 5

1223. பதைத்தெழு காலனைப் பாதமொன்றால்
உதைத்தெழு மாமுனிக் குண்மைநின்று
விதிர்த்தெழு தக்கன்றன் வேள்வியன்று
சிதைத்தவ னுறைவிடந் திருவல்லமே. 6

கு-ரை : தம் அடியை வணங்குவாரைத் திருமகள் வணங்க வைத்து, உலகம் உய்யப் பெருமழை பெய்யச் செய்தவன் உறைவிடம் வல்லம் என்கின்றது. கொய்த அம் மலரடி - கொய்த அழகிய மலரை யணிந்த திருவடி. கூடுவார்தம்மை - தியானிப்பவர்களை. தவழ் திரு மகள் - நிலையாமல் தவழ்ந்துகொண்டேயிருக்கின்ற இலட்சுமியை.

5. பொ-ரை : தன்னைச் சார்ந்தவர்கட்கு இன்பங்கள் தழைக்கு மாறு நேரிய அணிகலன்களைப் பூண்டுள்ள உமையம்மையாரோடு அருள் வழங்க இசைந்துள்ளவனும் தன்னைச் சேர்ந்த சிவஞானி யர்க்கும் பிறவாறு தேடுபவர்க்கும் அவர்களைத் தேடுமாறு செய்து அவர்கட்கு உள்ளிருந்து அருள் செய்பவனுமாகிய சிவபெருமானது உறைவிடம் திருவல்லமாகும்.

கு-ரை : சார்ந்தவர்க்கு இன்பநல்கி, பார்வதியோடும் இருப்ப வனும், தெளிந்தாரும் தேடுவாரும் தேடச்செய்தே அவர்களிடம் சேர்ந் திருப்பவனும் ஆகிய சிவன் இடம் இது என்கின்றது. சார்ந்தவர்க்கு - திருவடியே சரண் என்று சார்ந்த ஞானிகட்கு. நேர்ந்தவன் - திருவுளம் பற்றியவன்; தேர்ந்த ஞானியரையும் தேடச்செய்து அவர்கட்குப் பாலி னெய்போலவும் தேடுவாரைத் தேடச்செய்து விறகின் தீப்போலவும் தோன்றி நிற்பவன்.

6. பொ-ரை : சினந்து வந்த எமனை இடக் காலால் உதைத்துத் தன்னை வணங்கி எழுந்த மார்க்கண்டேயனுக்கு உண்மைப் பொரு ளாய் எதிர்நின்று அருள் செய்தவனும், விதிர்த்தெழு கோபத்தால் பட படத்துத் திட்டமிட்டுச் செயற்பட்ட தக்கனது வேள்வியை முற்காலத் தில் சிதைத்தவனும் ஆகிய சிவபிரானது இடம் திருவல்லமாகும்.

Koviloor Digital Library

* * * * * * * * * * 7

1224. இகழ்ந்தரு வரையினை யெடுக்கலுற்றாங்
ககழ்ந்தவல் லரக்கனை யடர்த்தபாதம்
நிகழ்ந்தவர் நேடுவார் நேடச்செய்தே
திகழ்ந்தவ னுறைவிடந் திருவல்லமே. 8

1225. பெரியவன் சிறியவர் சிந்தைசெய்ய
அரியவ னருமறை யங்கமானான்
கரியவ னான்முகன் காணவொண்ணாத்
தெரியவன் வளநகர் திருவல்லமே. 9

கு-ரை : காலனை உதைத்தும், மார்க்கண்டர்க்கு உண்மைப் பொருளாய் எதிர்நின்றும், தக்கன் யாகத்தினைத் தகர்த்தும் நின்ற இறைவன் இடம் இது என்கின்றது. மாமுனி - மார்க்கண்டர். விதிர்த்து - நடுங்கி.

7. * * * * * * * *

8. பொ-ரை : இகழ்ந்து அரிய கயிலை மலையை எடுத்து அப்புறப்படுத்தற் பொருட்டு அகழ்ந்த வலிய இராவணனை அடர்த்த திருவடியை உடையவனும், அத்திருவடியையே நிகழ் பொருளாகக் கொண்ட அன்பர்கள் தேடி வருந்திய அளவில் அவர்கள் உள்ளத்திலேயே திகழ்ந்து விளங்குபவனும் ஆகிய சிவபிரான் உறையுமிடம் திருவல்லமாகும்.

கு-ரை : இராவணன் வலியடக்கிய பாதத்தைத் தேடுவார் தேடச்செய்தே எமக்கு எளிமையாகத் திகழ்ந்தவன் நகர் இது என்கின்றது. இகழ்ந்து அருவரையினை - இது என் வலிக்கு எம் மாத்திரம் என்று இகழ்ந்து அரிய கயிலையை. நிகழ்ந்தவர் - பாதத்தை நிகழ்பொருளாகக் கண்டவர்கள். நேடுவார் - தேடுபவர்கள்.

9. பொ-ரை : எல்லேர்ரினும் பெரியவனும், அறிவிற் சிறியவர்கள் சிந்தித்து உணர்தற்கு அரியவனும், அரிய வேதங்களும் அவற்றின் அங்கங்களும் ஆனவனும், திருமால் பிரமர்கள் காண ஒண்ணாதவனாய் அன்பிற் சிறந்தார்க்குத் தெரிய நிற்பவனும் ஆன சிவபிரானது வளநகர் திருவல்லமாகும்.

Koviloor Digital Library

1226. அன்றிய வமணர்கள் சாக்கியர்கள்
குன்றிய வறவுரை கூறாவண்ணம்
வென்றவன் புலனைந்தும் விளங்கவெங்கும்
சென்றவ னுறைவிடந் திருவல்லமே. 10

1227. கற்றவர் திருவல்லங் கண்டுசென்று
நற்றமிழ் ஞானசம் பந்தன்சொன்ன
குற்றமில் செந்தமிழ் கூறவல்லார்
பற்றுவ ரீசன்பொற் பாதங்களே. 11

திருச்சிற்றம்பலம்

கு-ரை : பெரியவன், சிறியவர்கள் தியானித்தற்கு அரியவன், வேதமும் அங்கமும் ஆனான், அயனும் மாலுங்காண ஒண்ணாத தெரியவன்நகர் இது என்கின்றது. தெரியவன் - தெரியநிற்பவன். முனைப் படங்கிய முத்தான்மாக்களுக்கு விளங்கி நிற்பவன் என்பதாம்.

10. பொ-ரை : கொள்கைகளால் மாறுபட்ட சமணர்களும் புத்தர்களும் அறம் குன்றிய உரைகளைக் கூறாவாறு, ஐம்புலன் களையும் வென்றவனும், எங்கும் விளங்கித் தோன்றுபவனும் ஆகிய சிவபிரான் உறைவிடம் திருவல்லமாகும்.

கு-ரை : சமணரும், புத்தரும் அறமிலா உரை பேசாவண்ணம் ஐம்புலன்களையும் வென்றவன் நகர் வல்லம் என்கின்றது. அன்றிய - மாறுபட்ட. அறம் குன்றிய உரை என மாறுக.

11. பொ-ரை : கற்றவர்கள் வாழும் திருவல்லத்தைத் தரிசித்துச் சென்று நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தன் பாடிய குற்றமற்ற இச்செந் தமிழ்ப் பதிகத்தைக் கூற வல்லவர்கள் சிவபிரானுடைய அழகிய திரு வடிகளை அடைவர்.

கு-ரை : ஞானசம்பந்தப் பெருமான் திருவல்லத்தைக் கண்டு சொன்ன குற்றம் இல் செந்தமிழ்ப் பாடலாகிய இவற்றைக் கூறவல்லவர் ஈசன் பாதங்களைப் பற்றுவர் என்கின்றது. கண்டு சென்று சொன்ன என் பதால் இப்பதிகம் திருவல்லத்தை வழிபட்டுப்போன பின்பு சிவா னந்தானுபவம் சிந்தையில் நிறைய ஆக்கப்பெற்றதாகும் என்பது அறியப்பெறும்.

Koviloor Digital Library

114. திருமாற்பேறு

பதிக வரலாறு:

55 - ஆம் பதிகம் பார்க்க.

பண்: வியாழக்குறிஞ்சி

பதிக எண்: 114

திருச்சிற்றம்பலம்

1228. குருந்தவன் குருகவன் கூர்மையவன்
பெருந்தகை பெண்ணவ னாணுமவன்
கருந்தட மலர்க்கண்ணி காதல்செய்யும்
மருந்தவன் வளநகர் மாற்பேறே. 1

1229. பாறணி வெண்டலை கையிலேந்தி
வேறணி பலிகொளும் வேட்கையனாய்
நீறணிந் துமையொரு பாகம்வைத்த
மாறிலி வளநகர் மாற்பேறே. 2

1. பொ-ரை : குருத்தாக, தளிராக, மொட்டு, காய் ஆதியனவாக விளங்குபவனும், பெருந்தகையாய்ப் பெண் ஆண் வடிவோடு விளங்குபவனும், தடாகத்தில் பூக்கும் கருநீல மலர் போன்ற கண்களை உடைய உமையம்மையால் விரும்பப்படுபவனும், அரிய மருந்தாய் விளங்குபவனும் ஆகிய சிவபெருமானது வளநகர் மாற்பேறு.

கு-ரை : இப்பதிகம், மருந்தாய், மாறிலியாய், உமாபதியாய், கயிலாய பதியாய். காலகாலனாய், முனிவரும் தேவரும் மக்களும் ஒருசேர வணங்கத்தகும் எளிமையனாய் மாதுடையனாய், பிறை முதலிய சூடியவனாய், எந்தையாய் இருப்பவன் நகர் மாற்பேறு என்கின்றது. குருந்தவன் - குருந்தமரத்தடியிற் குருவானவன். இவ்வுரை மாணிக்கவாசகர் காலத்துக்கு ஞானசம்பந்தப் பெருமான் பின்னவராயிற்கொள்ளலாம். குருந்து - குருத்து எனலும் ஆம். குருகவன் - வயிர வகையில் ஒன்றானவன். மருந்து - அமுதம்.

2. பொ-ரை : பருந்தால் நெருங்கப்பட்ட புலால் நீங்கிய அழகிய வெள்ளிய தலையோட்டைக் கையில் ஏந்தி, உலகியலில் வேறுபட்ட அழகுடன் சென்று பலியேற்கும் வேட்கையனாய் மேனி முழுதும்

Koviloor Digital Library

1230. கருவுடை யாருல கங்கள்வேவச்
செருவிடை யேறியுஞ் சென்றுநின்று
உருவிடை யாளுமை யாளுந்தானும்
மருவிய வளநகர் மாற்பேறே. 3

1231. தலையவன் றலையணி மாலைபூண்டு
கொலைநவில் கூற்றினைக் கொன்றுகந்தான்
கலைநவின் றான்கயி லாயமென்னும்
மலையவன் வளநகர் மாற்பேறே. 4

1232. துறையவன் றொழிலவன் றொல்லுயிர்க்கும்
பிறையணி சடைமுடிப் பெண்ணொர்பாகன்

நீறுபூசி உமையம்மையை ஒருபாகமாக வைத்துள்ளவனும், தனக்கு ஒப்பு இல்லாதவனும் ஆகிய சிவபிரானது வளநகர், மாற்பேறு.

கு-ரை : பாறு - பருந்து. மாறிலி - மாறுபாடில்லாதவன்.

3. பொ-ரை : பிறப்புடைய ஆன்மாக்களுக்குப் படைக்கப் பட்ட உலகங்களை ஊழிக் காலத்தில் அழியுமாறு செய்பவனும், போரில் வல்ல விடைமீது ஏறிவருபவனும் ஆகிய சிவபிரான் மணம் புரிந்த அழகிய இடையினை உடைய உமையாளும் தானுமாய்ச் சென்று நின்று பொருந்தி விளங்கும் வளநகர் மாற்பேறாகும்.

கு-ரை : கருவுடையார் உலகங்கள் வேவ பிறப்புடைய ஆன்மாக்களின் போக நுகர்ச்சிக்காகப் படைக்கப்பெற்ற உலகங்கள் அழிய. உரு - அழகிய.

4. பொ-ரை : எல்லோரினும் மேம்பட்டவனும், அழகிய தலை மாலையைப் பூண்டு உயிரைக் கொல்லும் விருப்பொடுவந்த கூற்று வனைக் கொன்று மகிழ்ந்தவனும், பல கலைகளையும் உலகிற்கு அருளியவனும், கயிலாய மலையாளனுமாகிய சிவபிரானது வளநகர் மாற்பேறாகும்.

கு-ரை : தலையணிமாலை - கபாலமாலை. நவில் - விரும்பும்.

5. பொ-ரை : பல்வேறு நெறிகளாய் விளங்குபவனும், பழமை யாக வரும் உயிர்களின் பொருட்டு ஐந்தொழில்களைப் புரிபவனும்,

Koviloor Digital Library

கறையணி மிடற்றண்ணல் காலற்செற்ற
மறையவன் வளநகர் மாற்பேறே. 5

1233. பெண்ணினல் லாளையோர் பாகம்வைத்துக்
கண்ணினாற் காமனைக் காய்ந்தவன்றன்
விண்ணவர் தானவர் முனிவரொடு
மண்ணவர் வணங்குநன் மாற்பேறே. 6

* * * * * * * * * * 7

1234. தீதிலா மலையெடுத் தவ்வரக்கன்
நீதியால் வேதகீ தங்கள்பாட
ஆதியா னாகிய வண்ணலெங்கள்
மாதிதன் வளநகர் மாற்பேறே. 8

பிறையணிந்த சடைமுடியனும், உமை நங்கையை ஒருபாகமாகக் கொண்டவனும், விடக்கறை பொருந்திய மிடற்றினை உடைய தலைமையாளனும், காலனைச் செற்றுகந்த மறையவனுமான சிவபிரானது வளநகர், மாற்பேறாகும்.

கு-ரை : துறையவன் - பல நெறிகளாய் இருப்பவன். தொழிலவன் - ஐந்து தொழிலையுடையவன். கறை - விடம்.

6. பொ-ரை : பெண்களிற் பேரழகினளாகிய உமையம்மையை ஒரு பாகமாக வைத்திருந்தும் தனது நெற்றிக் கண்ணால் காமனை நீறாக்கி அழித்தவனும், தேவர்கள், அசுரர்கள் முனிவர்கள், மண்ணுலக மக்கள் ஆகியோரால் வணங்கப் பெறுபவனுமாய சிவபிரானது வளநகர், மாற்பேறாகும்.

கு-ரை : உமையையொருபாகம் வைத்தும் மன்மதனைக் கண்ணாற் காய்ந்தவன் என்பதில் நயம்ஓர்க. விண்ணவர் முதலானோர் ஒப்ப வணங்கத்தகும் எளிமையில் இருப்பவன் என இறைவனுடைய ஒப்பநோக்கும் பேரருள் உரைக்கப்பட்டது.

7. * * * * * * * * *

8. பொ-ரை : குற்றமற்ற கயிலை மலையைப் பெயர்த்த அரக்கனாகிய இராவணனை முதலில் கால்விரலால் அடர்த்துப் பின்

Koviloor Digital Library

1235. செய்யதண் டாமரைக் கண்ணனொடும்
கொய்யணி நறுமலர் மேலயனும்
ஐயனன் சேவடி யதனையுள்க
மையல்செய் வளநகர் மாற்பேறே. 9

1236. குளித்துணா வமணர்குண் டாக்கரென்றும்
களித்துநன் கழலடி காணலுறார்
முளைத்தவெண் மதியினொ டரவஞ்சென்னி
வளைத்தவன் வளநகர் மாற்பேறே. 10

அவன் பிழை உணர்ந்து முறையோடு வேத கீதங்களைப் பாட அருள்புரிந்த ஆதியானாகிய அண்ணலும் மாதினை இடப்பாகமாக உடைய எங்கள் தலைவனுமாய சிவபிரானது வளநகர், மாற்பேறாகும்.

கு-ரை : மாதி - மாதினையுடையவன்.

9. பொ-ரை : சிவந்த தண் தாமரை மலர் போன்ற கண்களை உடைய திருமாலும், கொய்து அணியத்தக்க தாமரை மலர்மேல் விளங்கும் பிரமனும், தலைவனாகிய சிவபிரானின் சேவடிகளை விருப்போடு நினைந்து வழிபட அருள்புரியும் சிவபிரான் எழுந்தருளிய வளநகர், மாற்பேறாகும்.

கு-ரை : ஐயன் நன்சேவடி - தலைவனுடைய நல்ல சேவடியை. மையல் - விருப்பம்.

10. பொ-ரை : குளித்துப்பின் உண்ணாத இயல்பினராகிய அமணர்களும், பருத்த உடலினராகிய புத்தர்களும், களிப்போடு சிவபிரான் திருவடிகளைக் காணப் பெறார். ஒரு கலைப் பிறையாக முளைத்த வெள்ளிய பிறை மதியையும் பாம்பையும் முடிமீது சூடியவனாகிய சிவபிரானது வளநகர், மாற்பேறாகும்.

கு-ரை : 'கூழாயினுங் குளித்துக் குடி' என்பது உலக வாய்மொழியாகவும் குளித்து உண்ணாத அமணர்கள் என அவர்கள் இயல்பு கூறியது.

குண்டு ஆக்கர் - பரு உடலராகிய புத்தர்.

Koviloor Digital Library

1237. அந்தமின் ஞானசம் பந்தன்சொன்ன
செந்திசை பாடல்செய் மாற்பேற்றைச்
சந்தமின் றமிழ்கள்கொண் டேத்தவல்லார்
எந்தைதன் கழலடி யெய்துவரே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : ஞானசம்பந்தன் செவ்விய இசையால் பாடிப் போற்றிய மாற்பேற்றைத் தரிசித்துச் சந்த இசையோடு கூடிய அழிவற்ற இனிய இத்திருப்பதிகப் பாடல்களைக் கொண்டு ஏத்தி வழிபட வல்லவர் எந்தையாகிய சிவபிரானின் கழலணிந்த திருவடிகளை எய்துவர்.

கு-ரை : அந்தம் இல் - அழிவற்ற. சந்தம் இன் தமிழ் - இசையோடு கூடிய இனிய தமிழ். இப்பதிகம் பாடினவர்க்குப் பயன் திருவடிப்பேறு எனச் சொல்லப்படுகின்றது. செந்து இசை பாடல் - செவ்விய இசையையுடைய பாடல். து - சாரியை.

திருக்களிற்றுப்படியார்

ஓடம் சிவிகை யுலவாக் கிழியடைக்கப்
பாடல் பனைதாளம் பாலைநெய்தல் - ஏடெதிர்வெப்(பு)
என்புக்கு உயிர்கொடுத்தல் ஈங்கிவைதாம் ஓங்குபுகழ்த்
தென்புகலி வேந்தன் செயல்.

- உய்யவந்ததேவ நாயனார்.

திருஞானசம்பந்தர் புராணம்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்குங்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

115. திருஇராமனதீச்சரம்

பதிக வரலாறு:

திருப்பனையூரை வணங்கிவருகின்ற சிரபுரச்செல்வர் திருஇராமனதீச்சரத்தை அடைந்து ''சங்கொளிர்'' என்னும் இப்பதிகத்தையருளிச்செய்தார்.

பண்: வியாழக்குறிஞ்சி

பதிக எண்: 115

திருச்சிற்றம்பலம்

1238. சங்கொளிர் முன்கையர் தம்மிடையே
அங்கிடு பலிகொளு மவன்கோபப்
பொங்கர வாடலோன் புவனியோங்க
எங்கும னிராமன தீச்சரமே. 1

1239. சந்தநன் மலரணி தாழ்சடையன்
தந்தம தத்தவன் றாதையோதான்
அந்தமில் பாடலோ னழகனல்ல
எந்தவ னிராமன தீச்சரமே. 2

1. பொ-ரை : சங்கு வளையல்கள் அணிந்த முன்கைகளை உடைய முனி பன்னியர் வாழும் வீதிகளிடையே சென்று அங்கு அவர்கள் இடும் பலியை மகிழ்வோடு கொள்பவனும், சினம் பொங்கும் அரவைப் பிடித்து ஆட்டுபவனும், உலக மக்கள் உயர்வுபெற எங்கும் நிறைந்திருப்பவனுமாகிய சிவபிரானது தலம் இராமனதீச்சரம்.

கு-ரை : முனிபன்னியர் இடும்பலியை ஏற்பவனும், அரவு அணிந்தவனும், உலகமெலாம் உயர எங்கும் மன்னியிருப்பவனும் ஆகிய சிவனிடம் இராமனதீச்சரம் என்கின்றது. சங்கு - வளையல். அங்கு - அசை. புவனி - பூமி.

2. பொ-ரை : அழகிய நல்ல மலர்களை அணிந்து தாழ்ந்து தொங்கும் சடையினை உடையவனும், தந்தத்தையும் மதத்தையும் உடைய விநாயகப் பெருமானின் தந்தையும், முடிவற்ற இசைப்பாடல் களைப் பாடுபவனும், அழகனும், எங்கள் தவப்பேறாய் விளங்கும் நல்லவனுமாய சிவபிரானது தலம், இராமனதீச்சரம்.

Koviloor Digital Library

1240. தழைமயி லேறவன் றாதையோதான்
மழைபொழி சடையவன் மன்னுகாதில்
குழையது விலங்கிய கோலமார்பின்
இழையவ னிராமன தீச்சரமே. 3

1241. சத்தியு ளாதியோர் தையல்பங்கன்
முத்திய தாகிய மூர்த்தியோதான்
அத்திய கையினி லழகுசூலம்
வைத்தவ னிராமன தீச்சரமே. 4

கு-ரை : தாழ்சடையன், விநாயகப்பெருமான் தாதை, பாடலன், அழகன் நகர் இது என்கின்றது. சந்தம் - அழகு. தந்தமதத்தவன் - தந்தத்தையும் மதத்தையும் உடைய விநாயகப்பெருமான். அந்தம் இல் - எல்லையில்லாத.

3. பொ-ரை : தழைத்த பீலியோடு கூடிய மயில்மீது ஏறிவரும் முருகனது தந்தையும். உலகிற்கு நீர்வளந்தரும் கங்கை பாயும் சடையினை உடையவனும், காதில் நிலைபெற்று விளங்கும் குழையை அணிந்தவனும், அழகிய மார்பில் குறுக்காக முப்புரிநூல் அணிந்தவனு மாகிய சிவபிரானது தலம் இராமனதீச்சரம்.

கு-ரை : முருகன் தாதை, மார்பில் பூணூலன் நகர் இதுவே என்கின்றது. தழை மயில் - பீலியோடு கூடிய மயில். ஏறவன் - ஏறுதலையுடையவன். மழை - நீர்த்துளி. குழை - காதணி. கோலம் - அழகு. இழை - பூணூல்; ஆபரணமும் ஆம்.

4. பொ-ரை : சத்திகளில் முதல்வியாக விளங்கும் உமையம் மையை ஒரு பாகமாகக் கொண்டவனும், உயிர்கட்கு முத்திப்பேறாக விளங்கும் கடவுளும், தீயேந்திய கையில் அழகிய சூலத்தைத் தாங்கிய வனுமாகிய சிவபிரானது தலம் இராமனதீச்சரம்.

கு-ரை : ஆதி சத்தியின் தலைவன், முத்திதரு முதல்வன் நகர் இது என்கின்றது.

அத்தியகையினில் அழகு சூலம் வைத்தவன் - சங்கார கிருத்தியஞ்செய்யும் தீயேந்திய திருக்கரத்தில் அழகுக்காகச் சூலத்தை ஏந்தியவன். இதன் நயம் ஓர்க.

Koviloor Digital Library

1242. தாழ்ந்தகு ழற்சடை முடியதன்மேல்
தோய்ந்த விளம்பிறை துலங்குசென்னிப்
பாய்ந்தகங் கையொடு படவரவம்
ஏய்ந்தவ னிராமன தீச்சரமே. 5

1243. சரிகுழ லிலங்கிய தையல்காணும்
பெரியவன் காளிதன் பெரியகூத்தை
அரியவ னாடலோ னங்கையேந்தும்
எரியவ னிராமன தீச்சரமே. 6

1244. மாறிலா மாதொரு பங்கன்மேனி
நீறது வாடலோ னீள்சடைமேல்
ஆறது சூடுவா னழகன்விடை
ஏறவ னிராமன தீச்சரமே. 7

5. பொ-ரை : தலையில், தாழ்ந்த கூந்தலால் இயன்ற சடை முடியின்மேல், அழகு தோய்ந்த இளம்பிறை, பாய்ந்துவரும் கங்கை, படம் பொருந்திய அரவம் ஆகியவற்றைச் சூடிய சிவபிரானது தலம் இராமனதீச்சரம்.

கு-ரை : பிறையணிந்த சென்னியோடு கங்கை பாம்பு அணிந்தவன் நகர் இது என்கின்றது. ஏய்ந்தவன் - பொருந்தியவன்.

6. பொ-ரை : பிடரியின்மேல் விளங்கும் சுருண்ட கூந்தலின ளாகிய உமையம்மை அருகிலிருந்து காணும் பெரியவனும், காளியின் பெரிய கூத்தோடு போட்டியிட்டு அவளால் அறிதற்கு அரியவனாய், நடனமாடுபவனும், அழகிய கையில் எரி ஏந்தி விளங்குபவனுமாகிய சிவபிரானது தலம் இராமனதீச்சரம்.

கு-ரை : பராசக்தி காணும் பெரியவன், காளியின் கூத்திற்கு அரியவன், ஆனந்தக் கூத்தன் நகர் இது என்கின்றது. சரிகுழல் - பிடரிமீது சரிந்த கூந்தல். இத்தலத்து இறைவிநாமம் சரியார் குழலி.

7. பொ-ரை : தனக்கு ஒப்பாரில்லாத அழகிய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவனும், திருமேனியில் திருநீற்றை அணிந்த வனும், நீண்ட சடைமுடியின்மேல் கங்கையைச் சூடியவனும் அழக னும், விடையின்மேல் ஏறி வருபவனுமாகிய சிவபிரானது தலம் இராமனதீச்சரம்.

Koviloor Digital Library

1245. தடவரை யரக்கனைத் தலைநெரித்தோன்
படவர வாட்டிய படர்சடையன்
நடமது வாடலா னான்மறைக்கும்
இடமவ னிராமன தீச்சரமே. 8

1246 தனமணி தையல்தன் பாகன்றன்னை
அனமணி யயனணி முடியுங்காணான்
பனமணி வரவரி பாதங்காணான்
இனமணி யிராமன தீச்சரமே. 9

கு-ரை : மாதொருபங்கன், நீறாடி, ஆறுசூடி, அழகன் நகர் இது என்கின்றது. மாறு இலா மாது - அபின்னையாகிய பராசக்தி. நீறு அது ஆடலோன் - நீறாடியவன்.

8. பொ-ரை : பெரிய கயிலை மலையால் இராவணனின் தலையை நெரித்தவனும், படம் பொருந்திய பாம்பை ஆட்டி மகிழ்ப வனும், விரிந்த சடைமுடியை உடையவனும், நடனம் புரிபவனும், நான்கு வேதங்கட்கும் இடமாக விளங்குபவனும் ஆகிய சிவபிரானது தலம் இராமனதீச்சரம்.

கு-ரை : இராவணனை நெரித்தவன், அரவாட்டிய சடையன், நடனம் ஆடுதலையுடையவன் நகர் இது என்கின்றது. நான்மறைக்கும் இடம் அவன் - வேதங்கள் நான்கிற்கும் இடம் ஆயவன்.

9. பொ-ரை : அழகிய தனபாரங்களையுடைய உமையம்மையின் கேள்வனும், அன்னமாகத் தன்னை மாற்றிக் கொண்டு, அழகிய முடியைக் காணாது திரும்பிய நான்முகன், திருவடியைக் காணாத, படங்களில் மணிகளையுடைய ஆதிசேடனாகிய அணையில் துயிலும் திருமால் ஆகியோர் வணங்க அருள் புரிந்தவனுமாகிய சிவபிரானது தலம் பல்வகையான மணிக்குவைகளையுடைய இராமனதீச்சரம் ஆகும்.

கு-ரை : உமைபாகனை அயன்முடிகாணான், அரிஅடிகாணான். அத்தகைய இறைவன் நகர் இது என்கின்றது. அனம் அணிஅயன் - அன்னமாகத் தன்னைப்புனைந்து கொண்டபிரமன். பன மணி வரவு அரி - படங்களில் மணிகளையுடைய ஆதிசேடன் மேல் வருதலை யுடைய மால். பண என்பது எதுகை நோக்கிப் பன என ஆயிற்று.

Koviloor Digital Library

1247. தறிபோலாஞ் சமணர்சாக் கியர்சொற்கொளேல்
அறிவோரா னாம மறிந்துரைமின்
மறிகையோன் றன்முடி மணியார்கங்கை
எறிபவ னிராமன தீச்சரமே. 10

1248. தேன்மலர்க் கொன்றையோன்
* * * * * * * * 11

திருச்சிற்றம்பலம்

நான்கு தலைகளையுடைய பிரமன் ஒரு முடியைக் காணாமையும், ஏன மாய் நான்கு கால்களையுடைய திருமால் இணையடி காணாமையும் வியப்பு என நயம் தோன்ற நின்றது.

10. பொ-ரை : மரத்தால் இயன்ற தடிபோன்ற அறிவற்ற சமண புத்தருடைய சொற்களைக் கேளாதீர். மெய்ஞ்ஞானியர்கள் வாயினால் இறைவன் திருப்பெயரை அறிந்து சொல்வீர்களாக. அப்பெருமான் மான் இளங்கன்றை ஏந்திய கையனாய்த் தனது முடியில், மணிகளோடு கூடிய கங்கை நதி அலை, மோதுபவனாய், இராமனதீச்சரத்தில் எழுந் தருளியுள்ளான். சென்று வழிபடுக.

கு-ரை : அறிவால் அறியப்பெறாதவன், மான்கையன், கங்கையன்நகர் இது என்கின்றது. தறி - கம்பம். அறிவு - பசு, பாச ஞானம். பாசஞானத்தாலும் படர் பசுஞானத்தாலும் ஈசனையறிய வொண்ணாது ஆதலின் இங்ஙனம் கூறினார். மறி - மான்குட்டி.

11. பொ-ரை : தேன் பொருந்திய கொன்றை மாலையைச் சூடியவன்.

கு-ரை : * * * * * * * * *

Koviloor Digital Library

116. பொது

பதிக வரலாறு:

கொடிமாடச் செங்குன்றூரில் சிவஞானச் செம்மலார், அடியார்களுடன் தங்கியிருந்தகாலத்துப் பனிக்காலம் வந்து விட்டது. அதனால் அடியார்கள் நளிர்சுரத்தினால் வருந்தி னார்கள். பிள்ளையாரிடம் விண்ணப்பம் செய்து கொண்டனர். 'இந்த நளிர்சுரம் வருதல் இந்நாட்டிற்கு இயல்பாயினும் நமக்கு இந்தநோய் எய்தப்பெறா. நீலகண்டமே எந்நாளும் அடியார் இடர்தீர்க்கும் அருந்துணை' என்று எண்ணி ''அவ்வினைக் கிவ் வினை'' என்னும் திருப்பதிகத்தைத் தொடங்கி, ஒவ்வொரு திருப் பாடல் இறுதியிலும் ''செய்வினை தீண்டா திருநீல கண்டம்'' என ஆணைவைத்து அருளிச்செய்தார்கள். உடனே அடியார் களுக்குமட்டுமன்றி அந்நாட்டிலேயே சுர நோய் தொலைந்தது.

திருநீலகண்டம்
பண்: வியாழக்குறிஞ்சி

பதிக எண்: 116

திருச்சிற்றம்பலம்

1249. அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு
மஃ்தறிவீர்
உய்வினை நாடா திருப்பது முந்தமக்
கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும்
நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு
நீலகண்டம். 1

1. பொ-ரை : 'நாம் முற்பிறவிகளிற் செய்த வினைகளுக்கேற் பவே, இப்பிறவியில் வினைகளைச் செய்து அவற்றாலாய பயன்களை நுகர்கிறோம்' என்று சொல்லப் பெறுவதை நீங்கள் அறிவீர்கள். இவற்றிலிருந்து விடுதிபெறும் வழியை நீவிர் தேடாதிருப்பது உமக்குக் குறையன்றோ? நாம் அனைவரும் சிவபிரானுக்கு அடியவர்கள் ஆவோம். அவ்விறைவனை நோக்கிச் சரியை, கிரியை முதலான

Koviloor Digital Library

1250. காவினை யிட்டுங் குளம்பல தொட்டுங்
கனிமனத்தால்
ஏவினை யாலெயின் மூன்றெரித் தீரென்
றிருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றுதும்
நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு
நீலகண்டம். 2

சிவப்பணிகளைச் செய்து அவ்விறைவன் கழலைப் போற்றுவோம். அவ்வாறு செய்யின் நாம் செய்த பழவினைகள் நம்மை வந்து அணுகா. இது திருநீலகண்டத்தின் மேல் ஆணை.

கு-ரை: நாம் முன்முன் பிறவிகளில் ஈட்டிய தீவினைகட்கு ஏற்ப இப்பிறவியில் பிராரத்தம் வந்தூட்ட இத்துன்பம் அநுபவிக்கிறோம் என்று சொல்லும் அடியார்களைப் பார்த்து நீங்கள் உய்வைத் தேடாதிருப்பது ஊனமல்லவா? கைத்தொண்டு செய்து கழலைப் போற்றுவோம்; நாம் செய்தவினை நம்மைத் தீண்டா; திருநீலகண்டம் என்கின்றது.

அவ்வினைக்கு - முன்னைய வினைக்கு. இவ்வினை - இப் போது சுரநோயால் வருந்தும் இவ்வினை. உய்வினை - தீரும் உபாயத்தை. கைவினை - கிரியைகளாகிய சிவப்பணி.

2. **பொ-ரை:** நாம் சிவனுக்கு அடியவர்கள் ஆவோம் அல்லமோ? நந்தவனம் சோலை முதலியவற்றை வளர்த்தும் குளங்கள் பல தோண்டியும் நல்லறங்கள் பலவற்றைச் செய்து, கனிந்த மனத்தோடு 'கணையொன்றால் முப்புரங்களை எரித்தவனே' என்று காலை மாலை இருபொழுதும் பூக்களைக் கொய்து வந்து அணிவித்துச் சிவபிரானுடைய மலர்போலும் திருவடிகளைப் போற்றுவோம். அவ்வாறு செய்யின் கொடிய பழவினைகள் நம்மைத் தீண்டமாட்டா. இது திருநீலகண்டத்தின்மேல் ஆணை.

கு-ரை: திரிபுரம் எரித்த பெருமானே! நந்தவனம் வைத்தும், குளந்தோண்டியும், பூவெடுத்துக்கட்டி அணிவித்தும் போற்றுவோம்; ஆதலால் தீவினை எம்மைவந்து தீண்டப்பெறா திருநீல கண்டம் என் கின்றது. கா - சோலை. தொட்டும் - தோண்டியும். ஏ வினையால் - அம்பின் தொழிலால்.

Koviloor Digital Library

1251. முலைத்தட மூழ்கிய போகங் களுமற்
றெவையுமெல்லாம்
விலைத்தலை யாவணங் கொண்டெமை யாண்ட
விரிசடையீர்
இலைத்தலைச் சூலமுந் தண்டு மழுவு
மிவையுடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு
நீலகண்டம். 3

1252. விண்ணுல காள்கின்ற விச்சா தரர்களும்
வேதியரும்
புண்ணிய ரென்றிரு போதுந் தொழப்படும்
புண்ணியரே

3. பொ-ரை: நாம் சிவனுக்கு அடியவர்கள் ஆவோம் அல்லமோ? அவ்விறைவனை நோக்கி மகளிர் இன்பத்தில் திளைத்து மகிழ்தல் முதலான உலக நுகர்வுகள் எல்லாம் நம்மை விலையாகக் கொண்டு, அலைக்காதவாறு சிவபெருமானாரை 'எம்மை ஆட் கொண்டருளிய விரிந்த சடையை உடையவரே' முத்தலைச் சூலம், தண்டாயுதம், மழு முதலியவற்றைப் படைக்கலங்களாக உடையவரே! எனப் போற்று வோமாயின், பழைய தீவினைகள் ஆரவாரித்து வந்து நம்மைத் தீண்ட மாட்டா. இது திருநீலகண்டத்தின்மேல் ஆணை.

கு-ரை: போகங்கள் எம்மைப் பற்றாவண்ணம் தடுத்தாண்ட பெருந்தகையீர்! சூலம் மழு இவற்றையுடையீர்! எம்மை வினை தீண்டப்பெறா என்கின்றது. விலைத்து அலையாவண்ணம்; அடி யேனை விலகச்செய்து அலையாவண்ணம்; விலையாகக் கொண்டு எனலுமாம். சிலைத்து - ஒலித்து. விலைத்தலை ஆவணம் செய்து என்றுமாம்.

4. பொ-ரை: நாம் சிவனுக்கு அடியவர்கள் ஆவோம் அல்லமோ? அவ்விறைவனை நோக்கி, விண்ணுலகை ஆளுகின்ற வித்யாதரர்களும், வேதியர்களும் 'புண்ணிய வடிவமானவர்' என்று காலை மாலை இருபோதும் துதித்துத் தொழப்படும் புண்ணியரே. இமையாத முக்கண்களை உடையவரே! உம் திருவடிகளைப் புகலாக அடைந்தோம் எனப் போற்றுவோமாயின் பழையதான வலிய

Koviloor Digital Library

கண்ணிமை யாதன மூன்றுடை யீருங்
கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெ றாதிரு
நீலகண்டம். 4

1253. மற்றிணை யில்லா மலைதிரண் டன்னதிண்
டோளுடையீர்
கிற்றெமை யாட்கொண்டு கேளா தொழிவதுந்
தன்மைகொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்துந் திருவடி
யேயடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு
நீலகண்டம். 5

தீவினைகள் நம்மை வந்து தீண்டமாட்டா. இது திருநீலகண்டத்தின் மேல் ஆணை.

கு-ரை: வேதியரும் வித்தியாதரர்களும் புண்ணியர் என்று தொழும் புண்ணியரே! உம் கழல் அடைந்தோம்; திண்ணிய தீவினை தீண்டப்பெறா என்கின்றது . திண்ணியதீவினை தீண்டப்பெறா என்றது இதுவரை நுகர்ந்த அளவிலேயே அமைவதாக, திருவருள் நோக்கத் தால் அவை மென்மையாயின ஆதலின் இங்ஙனம் கூறினார்.

5. பொ-ரை: நாம் சிவனுக்கு அடியவர்கள் ஆவோம் அல்லமோ? அப்பெருமானை நோக்கி ஒப்பற்ற மலைபோல் திரண்ட திண்மையான தோள்களை உடையவரே!. எம்மைப் பெருவலிமை கொண்டு ஆட்கொண்டும் சிறிதேனும் எம்குறையைக் கேளா தொழிவது உமது பெருமைக்கு ஏற்புடையதாமோ?. இல்லற வாழ்க் கைக்குச் சொல்லப்படும் எல்லாத் துணைகளையும் விடுத்து உம் திருவடிகளையே சரணாக அடைந்தோம் எனப் போற்றுவோமாயின், நாம் முற்பிறவிகளில் செய்த தீவினைகள் பெருவலிமை கொண்டு வருத்தி நம்மை வந்து அடையமாட்டா. இது திருநீலகண்டத்தின் மேல் ஆணை.

கு-ரை: ஒப்பற்ற மலைபோல் திரண்ட தோளுடையீர்! எம்மையாட்கொண்டும் எம்குறையைக் கேளாதொழிவது பெருமை யோ? எல்லாத் துணையையும் விட்டு உமது திருவடி யடைந்தோம்

Koviloor Digital Library

1254. மறக்கு மனத்தினை மாற்றியெம் மாவியை
வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் றிருந்தடிக் கீழ்ப்பிழை
யாதவண்ணம்
பறித்த மலர்கொடு வந்துமை யேத்தும்
பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு
நீலகண்டம். 6

ஆதலால் எம்மைத் தீவினை தீண்டப்பெறா. திரு நீலகண்டம் ஆணை என்கின்றது. மற்று - வேறு. இணை - ஒப்பு. கிற்று - வலிபடைத்து. சொல்துணைவாழ்க்கை - சொல்லப்படுகிற துணைகள் பலவற்றோடும் கூடிய வாழ்க்கை. செற்று - வருத்தி. எமது வினைகளை வெருட்டும் வலியுடையீர் என்று குறிக்க இணையில்லா மலை திரண்டன்ன தோளுடையீர் என்று குறிப்பித்தது. எமக்கும் தேவரீர்க்கும் உள்ள தொடர்பு ஆட்கொள்ளப்பட்டதால் உண்டான ஆண்டானும் அடிமையு மான தொடர்பு அங்ஙனமிருந்தும் எமது குறையை நீரேயறிந்து நீக்க வேண்டியிருக்க, சொல்லியும் கேளாது ஒழிவதும் தன்மையோ என்றார். துணையென்று சொல்லப்படுகின்ற வாழ்க்கைகளைத் துறந்து உம் திருவடியடைந்தோம் என்றது அகப்பற்றும் புறப்பற்றும் விட்டு உம்மைப்பற்றினோம் என்றது. தீவினை செற்றுத்தீண்டப்பெறா என்றது தீவினைகள் தீண்டுபவற்றைத் தடுத்தலாகாது ஆயினும் அவை வலியிழந்தனவாகத் தீண்டா என்று விளக்கியவாறு. கிற்று - கற்றல் பொருந்திய.

6. பொ-ரை: நாம் சிவனுக்கு அடியவர்கள் ஆவோம் அல்லமோ? அவ்விறைவனை நோக்கி மறக்கும் இயல்பை உடைய நம் மனத்தை மாற்றி மலமறைப்பால் தடுமாறும் உயிரை வற்புறுத்திப் பிறப்பற்ற பெருமானாகிய அச்சிவபெருமானுடைய அழகிய திருவடியின் கீழ் தவறாதவாறு மனத்தை நிறுத்தி அப்பொழுது பறித்த மலர்களைக் கொண்டு பூசித்து ‘ உம்மை ஏத்தும் பணியை உடைய அடியவர் நாங்கள்’ எனக் கூறி வழிபட்டுவரின் சிறப்பற்ற தீய பழவினைகள் நம்மைத் தீண்ட மாட்டா. இது திருநீலகண்டத்தின் மேல் ஆணை.

கு-ரை: எம்மோடு ஒன்றி வராமல் மறுக்கும் தன்மைவாய்ந்த மனத்தையும் மாற்றி, உயிரை வற்புறுத்தித்தேவரீர் திருவடிக்குப் பிழை ஏற்படாதவண்ணம் மலர்கொண்டேத்தும் அடியேங்களைச் சிறப்பு

Koviloor Digital Library

✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ 7

1255. கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்துங்
கழலடிக்கே
உருகி மலர்கொடு வந்துமை யேத்துதும்
நாமடியோம்
செருவி லரக்கனைச் சீரி லடர்த்தருள்
செய்தவரே
திருவிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு
நீலகண்டம். 8

இல்லாத இத்தீவினைகள் தீண்டப்பெறா திருநீல கண்டம் என்கின்றது. மனத்திற்கு இயற்கை, பற்றியதை விட்டுப் பின் வேறொன்றைப் பற்றி, அதன் மயமாய், பற்றியதையும் மறந்துவிடுதல். அந்த நிலையை மாற்றி என்றார். வற்புறுத்தி - திருவடியையே பற்றிவிடாது நிற்றலின் வினை யின் வழிநின்று மலமறைப்பால் தடுமாறும் ஆன்மாவை வற்புறுத்தி. சிறப்பில் இத்தீவினை - சிறப்பற்ற இந்தத்தீவினை.

7. ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱ ✱

8. பொ-ரை : நாம் சிவனுக்கு அடியவர்கள் ஆவோம் அல்லமோ! பிறவியை அறுத்து உலக வாழ்க்கையை வெறுத்து அவன் திருவடிக்கண் நல்லமலர்களைக் கொண்டு அருச்சித்துப் போற்றித் ‘தன்னை எதிர்ப்பாரில்லாத வலிய இராவணனைப் பலரும் போற்ற அடர்த்துப்பின் அருள் செய்த பெருமானே!’ என உருகிப் போற்றுவோ மாயின் சிவனடிவழுத்தும் செல்வத்தைப் போக்கும் இந்தப் பழைய தீவினைகள் நம்மை வந்து தீண்டமாட்டா. இது திருநீலகண்டத்தின் மேல் ஆணை.

கழலடிக்கே - கே - ஏழன் உருபு. திருவிலித் தீவினை - சிவஞானச் செல்வத்தை இல்லதாக்கும் தீவினை.

கு-ரை : பிறவியை அறுத்து உலகவாழ்க்கையை வெறுத்து உம் திருவடியை உருகிவழிபடும் எம்மைத் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம் என்கின்றது. கரு - பிறவிமுதல். செரு இல் அரக்கன் - போரில்லாத இராவணன். திக்குவிஜயம்பண்ணிப் போரில்லாமையால் தருக்கிக் கயிலையை எடுத்தானாதலின் இங்ஙனம் கூறினார். திரு இல் - சிவனடி வழிபடும் செல்வத்தையில்லாத.

Koviloor Digital Library

1256. நாற்ற மலர்மிசை நான்முக னாரணன்
வாதுசெய்து
தோற்ற முடைய வடியு முடியுந்
தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றுந் தொழுது வணங்குதும்
நாமடியோம்
சீற்றம தாம்வினை தீண்டப்பெ றாதிரு
நீலகண்டம். 9

1257. சாக்கியப் பட்டுஞ் சமணுரு வாகி
யுடையொழிந்தும்
பாக்கிய மின்றி யிருதலைப் போகமும்
பற்றும்விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடை யீரடி
போற்றுகின்றோம்
தீக்குழித் தீவினை தீண்டப்பெ றாதிரு
நீலகண்டம். 10

9. பொ-ரை : நாம் சிவபிரானுக்கு அடியவர்கள் ஆவோம் அல்லமோ? அப்பெருமானை நோக்கி, மணங்கமழும் தாமரை மலர்மேல் விளங்கும் நான்முகனும், திருமாலும் தங்களுக்குள் யார் பெரியவர் என வாது செய்தபோது, அவர்கட்கு எதிரே கட்புலனாகத் தோன்றி, அவர்களால் அடியும் முடியும் அறியப்பெறாத் தன்மையை உடையவரே!, என்று அழைத்து, நாம் காணத்தோன்றுதலையும் செய்யும் அவ்விறைவனை நாம் தொழுது வணங்குவோம். அவ்வாறு வழி படின், சினந்துவரும் பழவினைகள் நம்மைத் தீண்டமாட்டா. இது திரு நீலகண்டத்தின்மேல் ஆணை.

கு-ரை : மலர்மேலயனும் திருமாலும் தங்களுக்குள் வாது செய்து, அடியும் முடியும் அறியப்படாத தன்மையை யுடையவரே! காணப்பெறினும் பெறுவீர், உம்மைத் தொழுது வணங்குவோம்; சீற்ற மாகிய வினை எம்மைத் தீண்டப்பெறா; திருநீலகண்டம் என்கின்றது. நாற்றம் - மணம். தோற்றமுடைய - கட்புலனாகிய. சீற்றம் - கோபம்.

10. பொ-ரை : நாம் சிவபிரானுக்கு அடியவர்கள் ஆவோம் அல்லமோ? சிலர் புத்த மதத்தைச் சார்ந்தும், சமண சமயத்தைச் சார்ந்து

Koviloor Digital Library

1258. பிறந்த பிறவியிற் பேணியெஞ் செல்வன்
கழலடைவான்
இறந்த பிறவியுண் டாகி லிமையவர்
கோனடிக்கண்
திறம்பயின் ஞானசம் பந்தன செந்தமிழ்
பத்தும்வல்லார்
நிறைந்த வுலகினில் வானவர் கோனொடுங்
கூடுவரே. 11

திருச்சிற்றம்பலம்

ஆடையின்றித் திரிந்தும் சிவபிரானை வணங்கும் பாக்கியமின்றி இம்மை மறுமை இன்பங்களையும் அவற்றைப் பெறும் பற்றையும் விட்டுப் பயனற்றவராயினர். நாம் அவ்விறைவனை நோக்கிக் கொன்றை மலர் மணக்கும் சடையை உடையவரே! உம் திரு வடிகளைப் போற்றுகின்றோம் எனக் கூறிச் செயற்படின் தீக்குழி போலக் கனலும் பழைய தீவினைகள் நம்மைத் தீண்ட மாட்டா. இது திருநீலகண்டத்தின்மேல் ஆணை.

கு-ரை : சாக்கியராயும் சமணராகியும் இருமையின்பமும் ஒழிந்தார்கள்; நாங்கள் நும் திருவடி போற்றுகின்றோம்; எம்மை வினை தீண்டப்பெறா என்கின்றது. இருதலைப் போகம் - இம்மை மறுமை யின்பம். தீக்குழித் தீவினை - தீக்குழியினைப் போலக் கனலுவதாகிய தீவினை.

11. பொ-ரை : மக்கட் பிறப்பெடுத்த இப்பிறவியிலேயே சிவ பிரான் திருவடிகளை விரும்பி வழிபடின் முத்திப்பேறு அடையலாம். மீண்டும் பழவினைகளால் பிறப்பு உளதாயின், தேவர்களின் தலைவ னாகிய சிவபிரான் திருவடிகளின் பெருமைகளை அறிந்த ஞானசம்பந் தன் அருளிய இத்திருப்பதிகச் செந்தமிழ்ப் பாடல்கள் பத்தையும் ஓத வல்லவர்களாயின், அவர்கள் இமையவர்கள் நிறைந்த வானுலகில் அவ்வானவர் கோனொடும் கூடி மகிழும் பதவியைப் பெற்று இன்புறுவர்.

கு-ரை : எமது இறைவன் கழலடையப் பிறந்த இப்பிறவியில் சிவபெருமான் திருவடியைப்பேணி, மீட்டும் பிறவியுளதாயின், இம்மொழி பத்தும் வல்லார்கள் வானவர்கோனொடுங் கூடுவர் என்கின்றது. அடைவான் பேணி, வல்லார், பிறவியுண்டாகில் கோனொடுங் கூடுவர் என முடிக்க.

Koviloor Digital Library

117. திருப்பிரமபுரம்

பதிக வரலாறு:

வாக்கின்மன்னரை வழியனுப்பியபின் காழித்திருஞான சம்பந்தப் பிள்ளையார் மீண்டும் சீகாழியிற் புகுந்து, வேதவடி வாகிய திருத்தோணியில் வீற்றிருந்த விண்ணவர் பெருமானைப் பாடிப்பணிந்து, அங்கு எழுந்தருளியிருக்கின்ற நாளில், செந் தமிழ்ப் பாமாலையின் விகற்பங்களாகிய மொழிமாற்று, மாலை மாற்று, திருவியமகம், ஏகபாதம், இருக்குக்குறள், எழுகூற் றிருக்கை முதலானவற்றை அருளிச்செய்து, திருப்பாணனாரும் இசைவடிவான மதங்கசூளாமணியாரும் இப்பதிகங்களை ஏழிசைபற்றிப்பாடச் சீகாழியில் எழுந்தருளியிருந்தார்கள்.

மொழிமாற்று
பண்: வியாழக்குறிஞ்சி

பதிக எண்: 117

திருச்சிற்றம்பலம்

1259. காட தணிகலங் காரர வம்பதி
காலதனில்
தோட தணிகுவர் சுந்தரக் காதினிற்
றூச்சிலம்பர்
வேட தணிவர் விசயற் குருவம்
வில்லுங்கொடுப்பர்
பீட தணிமணி மாடப் பிரம
புரத்தரரே. 1

1. பொ-ரை : பெருமைபெற்ற மணிகள் இழைத்த மாட வீடுகளை உடைய பிரமபுரத்து அரனார் இடுகாட்டைப் பதியாகக் கொள்வர். கரிய அரவினை அணிகலனாகப் பூண்டவர். கால்களில் தூய சிலம்பை அணிந்தவர் . அழகிய காதில் தோடணிந்தவர். வேட்டுவ உருவம் தாங்கி அருச்சுனனுக்குப் பாசுபதக் கணை அருளியவர்.

கு-ரை : மொழிமாற்று என்பது பொருள்கோள்வகையுள் ஒன்று. பொருளுக்கு ஏற்பச் சொல்லைப் பிரித்து முன்பின் கூட்டிக் கொள்வது.

Koviloor Digital Library

1260. கற்றைச் சடையது கங்கண முன்கையிற்
றிங்கள்கங்கை
பற்றித்து முப்புரம் பார்படைத் தோன்றலை
சுட்டதுபண்
டெற்றித்துப் பாம்பை யணிந்தது கூற்றை
யெழில்விளங்கும்
வெற்றிச் சிலைமதில் வேணு புரத்தெங்கள்
வேதியரே . 2

1261. கூவிளங் கையது பேரி சடைமுடிக்
கூட்டத்தது
தூவிளங் கும்பொடிப் பூண்டது பூசிற்றுத்
துத்திநாகம்

பிரமபுரத்தவர் காட்டைப் பதியாகக்கொள்ளுவர்; அரவத்தை அணிவர்; அழகிய காதில் தோடு அணிவர்; காலில் சிலம்பணிவர்; வேடுருவந்தாங்கி விசயற்குப் பாசுபதாஸ்திரம் அளிப்பர் என்கின்றது. காடது பதி, அணிகலம் காரரவம், காலதனில் தூச்சிலம்பர், சுந்தரக் காதினில் தோடது அணிகுவர் எனப் பிரித்துக் கூட்டுக. பீடம் - மேடை.

2. பொ-ரை : கருங்கல்லால் அழகு விளங்குவதாய் அமைக்கப் பட்ட வெற்றித் திருமதில் சூழ விளங்கும் வேணுபுரத்துள் உறையும் எங்கள் வேதியராகிய இறைவர் கற்றையான சடையின்கண் திங்களை யும் கங்கையையும் கொண்டவர் . முன்கையில் பாம்பைக் கங்கணமாக அணிந்தவர். கையில் உலகைப் படைத்த பிரமனது தலையோட்டை உண்கலமாகப் பற்றியிருப்பவர். முப்புரங்களைச் சுட்டெரித்தவர். முற்காலத்தில் மார்க்கண்டேயர் பொருட்டு எமனை உதைத்தவர். பாம்பை அணிகலனாகப் பூண்டவர்.

கு-ரை : வேணுபுரத்து வேதியரின் சடையது திங்களும் கங்கையும்; முன்கையிற் கங்கணமாக அணிந்தது பாம்பு; கையில் பற்றியது பிரமன் தலை; சுட்டது முப்புரம் என்கின்றது. பண்டு கூற்றை எற்றித்து என மொழிமாற்றிக் காண்க . பற்றித்து எற்றித்து என்பன பற்றிற்று எற்றிற்று என்பதன் மரூஉ. எற்றித்து - உதைத்து.

3. பொ-ரை : இனிய பூக்களை உடைய இளஞ்சோலைகளால் சூழப்பட்ட புகலியுள் மேவிய புண்ணியராகிய இறைவர், அடர்த்தி

Koviloor Digital Library

ஏவிளங் குந்நுத லாளையும் பாக
முரித்தனரின்
பூவிளஞ் சோலைப் புகலியுண் மேவிய
புண்ணியரே. 3

1262. உரித்தது பாம்பை யுடன்மிசை யிட்டதோ
ரொண்களிற்றை
எரித்ததொ ராமையை யின்புறப் பூண்டது
முப்புரத்தைச்
செருத்தது சூலத்தை யேந்திற்றுத் தக்கனை
வேள்விபன்னூல்
விரித்தவர் வாழ்தரு வெங்குரு வில்வீற்
றிருந்தவரே. 4

யான சடைமுடியில் வில்வம் அணிந்தவர். கையில் பேரி என்னும் தோற் பறையை உடையவர். தூய்மையோடு விளங்கும் திருநீற்றுப் பொடியைப் பூசியவர். படப் பொறிகளோடு கூடிய நாகத்தைப் பூண் டவர். அம்பொடு கூடிய வில் போன்று வளைந்த நெற்றியை உடைய உமையம்மையை ஒரு பாகத்தே கொண்டவர். ஆனையை உரித்தவர்.

கு-ரை : கூவிளம் சடைமுடிக் கூட்டத்தது; பேரி கையது; தூவிளங்கும் பொடி பூசிற்று; துத்திநாகம் பூண்டது என மொழிமாற்றிப் பொருள் கொள்க. கூவிளம் - வில்வம். பேரி - உடுக்கை. தூ - தூய்மை. பொடி - விபூதி. துத்தி - படப்பொறி. ஏவிளங்குநுதல் - வில்போல் விளங்கும் நெற்றியையுடையாள் என்றது உமாதேவியை. ஏ என்றது ஆகுபெயராக வில்லை உணர்த்திற்று. உரித்தனர் - தோலைத் தனி யாக உரித்துப் பூண்டனர். புகலி - சீகாழி.

4. பொ-ரை : பல நூல்களைக் கற்றுணர்ந்து விரித்துரைக்கும் புலவர்கள் வாழும் வெங்குருவில் வீற்றிருக்கும் இறைவர் ஒப்பற்ற சிறந்த களிற்றை உரித்தவர். பாம்பைத் தம் திருமேனிமேல் அணிந்தவர். முப்புரங்களை எரித்தவர். ஆமையோட்டை மகிழ்வுறப் பூண்டவர். தக்கனை வேள்வியில் வெகுண்டவர். சூலத்தைக் கையில் ஏந்தியவர்.

கு-ரை : பாம்பை உடல்மிசையிட்டது; ஓர் ஒண் களிற்றை

Koviloor Digital Library

1263. கொட்டுவ ரக்கரை யார்ப்பது தக்கை
குறுந்தாளன
விட்டுவர் பூதங் கலப்பில ரின்புக
ழென்புலவின்
மட்டுவ ருந்தழல் சூடுவர் மத்தமு
மேந்துவர்வான்
தொட்டுவ ருங்கொடித் தோணி புரத்துறை
சுந்தரரே. 5

1264. சாத்துவர் பாசந் தடக்கையி லேந்துவர்
கோவணந்தங்
கூத்தவர் கச்சுக் குலவிநின் றாடுவர்
கொக்கிறகும்

உரித்து; ஆமையை இன்புறப் பூண்டது; முப்புரத்தை எரித்தது; சூலத்தை ஏந்திற்று; தக்கனை வேள்வி செருத்தது எனக்கூட்டுக. களிறு - யானை. செருத்தது - வருத்தியது. பன்னூல்விரித்தவர் - பல நூல்களையும் விரித்துணர்ந்த அந்தணர்.

5. பொ-ரை : வானைத் தொடுமாறு உயர்ந்துள்ள கொடிகளைக் கொண்ட தோணிபுரச் சுந்தரராகிய இறைவர் தக்கை என்னும் வாத்தியத்தைக் கொட்டுபவர். இடையிலே சங்கு மணிகளைக் கட்டியவர். குறுகிய தாளை உடைய பூதகணங்களைக் கலத்தல் இல்லாதவர். இனிய புகழை ஈட்டுபவர். எலும்பையும், உலவுகின்ற இனிய தேன்மணம் வெளிப்படும் ஊமத்தம் பூவையும் சூடுபவர். தீயை ஏந்துபவர். ஈட்டுவர் - இட்டுவர் என எதுகை நோக்கிக் குறுகிற்று.

கு-ரை : வான்தொட்டு வருங் கொடித் தோணி புரத்துறை சுந்தரர் மத்தம் சூடுவர்; அக்கு அரையார்ப்பது; தக்கை கொட்டுவர்; குறுந் தாளன பூதம் இன்புகழ் விட்டுவர்; என்பு கலப்பிலர்; உலவின்மட்டு வருந்தழல் ஏந்துவர் எனக்கூட்டிப் பொருள்காண்க. அக்கு - சங்கு மணி. தக்கை-ஒரு வாத்தியம். உலவின் மட்டு வருந்தழல் - உலகத்தையழிக்குமளவு வரும் காலாக்கினி.

6. பொ-ரை : தவமுனிவர்கள் பூக்களைத் தூவி, கைகளால் தொழும் பூந்தராய் என்ற தலத்தில் எழுந்தருளிய புண்ணிய வடிவினர், கோவணம் உடுத்தவர். நீண்ட கையில் பாசத்தை ஏந்தியவர். தமக்கே

Koviloor Digital Library

பேர்த்தவர் பல்படை பேயவை சூடுவர்
பேரெழிலார்
பூத்தவர் கைதொழு பூந்தராய் மேவிய
புண்ணியரே. 6

1265. காலது கங்கை கற்றைச் சடையுள்ளாற்
கழல்சிலம்பு
மாலது வேந்தன் மழுவது பாகம்
வளர்கொழுங்கோட்
டாலது வூர்வ ரடலேற் றிருப்ப
ரணிமணிநீர்ச்
சேலது கண்ணியொர் பங்கர் சிரபுர
மேயவரே. 7

உரித்தான கூத்தினை உடையவர். கச்சணிந்து ஆடுபவர். கொக்கிறகு சூடுபவர் . பல்வகைப் படைகளாகிய பேய்க் கணங்களை அடி பெயர்த்து ஆடல் செய்தவர். மிக்க அழகுடையவர்.

கு-ரை : தவர் பூ கைதொழு பூந்தராய் மேவிய புண்ணியர் பாசம் தடக்கையில் ஏந்துவர்; கோவணம் சாத்துவர்; தம்கூத்தவர்; கச்சு குலவி நின்று ஆடுவர்; கொக்கிறகும் சூடுவர்; பல்படைபேய் பேர்த்தவர்; பேர் எழிலார் எனக்கூட்டுக . கச்சு குலவி நின்று ஆடுவர் - அரையில் கச்சு விளங்க நின்றாடுவர். குலவி: குலவ எனத்திரிக்க. பேர்த்தவர் - அடி பெயர்த்தாடல் செய்தவர்.

7. பொ-ரை : அழகிய நீலமணியின் நிறத்தையும் சேல்மீன் போன்ற பிறழ்ச்சியையும் கொண்ட கண்களை உடைய உமையம்மை யை ஒரு பாகமாகக் கொண்டவரும் சிரபுரத்தில் எழுந்தருளியவரும் ஆகிய சிவபிரான், கழலையும் சிலம்பையும் காலில் சூடியவர். கற்றைச் சடையில் கங்கையை உடையவர். திருமாலைப் பாகமாகக் கொண் டவர். மழுவை ஏந்தியவர். கொழுமையான கிளைகளைக் கொண்ட ஆலமரத்தின் கீழ் இருப்பவர். அடல் ஏற்றினை ஊர்பவர்.

கு-ரை : அணிமணி நீர்ச் சேலது கண்ணி ஓர் பங்கர் சிரபுரம் மேயவர் காலது கழல் சிலம்பு, கற்றைச்சடை உள்ளர்ல் கங்கை, மாலது பாகம், ஏந்தல் மழுவது, வளர் கொழுங் கோட்டு ஆலது இருப்பர்,

Koviloor Digital Library

1266. நெருப்புரு வெள்விடை மேனிய ரேறுவர்
நெற்றியின்கண்
மருப்புறு வன்கண்ணர் தாதையைக் காட்டுவர்
மாமுருகன்
விருப்புறு பாம்புக்கு மெய்த்தந்தை யார்விறன்
மாதவர்வாழ்
பொருப்புறு மாளிகைத் தென்புற வத்தணி
புண்ணியரே. 8

1267. இலங்கைத் தலைவனை யேந்திற் றிறுத்த
திரலையின்னாள்
கலங்கிய கூற்றுயிர் பெற்றது மாணி
குமைபெற்றது

அடல் ஏறு ஊர்வர் என மொழிமாற்றுக . கோடு - மேருமலைத் தென் சிகரம். ஆலது, சேலது, என்பனவற்றுள் அது பகுதிப்பொருள் விகுதி.

8. பொ-ரை : வீரர்களாகிய மிக்க தவத்தினை உடைய தவமுனிவர்கள் வாழ்வதும் மலை போன்ற மாளிகைகளை உடையது மான அழகிய புறவ நகருக்கு அணிசேர்க்கும் புண்ணியராகிய இறைவர் நெருப்புப் போலச் சிவந்த மேனியை உடையவர். வெண்மை யான விடைமீது ஏறி வருபவர். நெற்றியின் கண், விழி உடையவர். தந்தத்தை உடையவராகிய விநாயகருக்குத் தந்தையாராவார். பாம்புக்குத் தம் மெய்யில் இடம் தந்து அதனைச் சூடுபவர். சிறப்புக் குரிய முருகனுக்கு உகப்பான தந்தையார் ஆவார்.

கு-ரை : விறல் மாதவர்வாழ் பொருப்புறு மாளிகைத் தென் புறவத்து அணி புண்ணியர், நெருப்புரு மேனியர், வெள்விடை ஏறுவர், நெற்றியின் கண்ணர், மருப்புருவன் தாதை, மா முருகன் விருப்புறு தந்தையார், பாம்புக்கு மெய்(யைக்) காட்டுவர் எனக் கூட்டுக. மருப்பு உருவன் - கொம்பினையுடைய விநாயகப்பெருமான், தாதையை என்பதிலுள்ள ஐகாரத்தைப் பிரித்து மெய் என்பதனோடு கூட்டி மெய்யை எனப் பொருள் கொள்க. இது உருபு பிரித்துக் கூட்டடல்.

9. பொ-ரை : நீர் நிறைந்து விளங்கும் வயல்களை உடைய சண்பைப் பதியில் எழுந்தருளிய இறைவர் இலங்கைத் தலைவனாகிய இராவணனை நெரித்தவர். மானைக் கையில் ஏந்தியவர். கலக்கத்

Koviloor Digital Library

கலங்கிளர் மொந்தையி னாடுவர் கொட்டுவர்
காட்டகத்துச்
சலங்கிளர் வாழ்வயற் சண்பையுண் மேவிய
தத்துவரே. 9

1268. அடியிணை கண்டிலன் றாமரை யோன்மான்
முடிகண்டிலன்
கொடியணி யும்புலி யேறுகந் தேறுவர்
தோலுடுப்பர்
பிடியணி யுந்நடை யாள்வெற் பிருப்பதோர்
கூறுடையர்
கடியணி யும்பொழிற் காழியுண் மேய
கறைக்கண்டரே. 10

தோடு வந்த கூற்றுவனைக் குமைத்தவர். வாழ்நாள் முடிவுற்ற மார்க் கண்டேயருக்கு உயிர் கொடுத்துப் புது வாழ்வருளியவர். வாத்தியமாக இலங்கும் மொந்தை என்ற தோற்கருவியைக் கொட்டுபவர். இடு காட்டின்கண் ஆடுபவர்.

கு-ரை : சலம் கிளர் வாழ் வயல் சண்பையில் மேவிய தத்துவர் இலங்கைத் தலைவனை இறுத்தது; இரலை ஏந்திற்று; கலங்கிய கூற்று குமை பெற்றது; இல் நாள் மாணி உயிர்பெற்றது; கலங்கிளர் மொந்தை யின் கொட்டுவர்; காட்டகத்து ஆடுவர் எனக்கூட்டுக : இரலை - மான். இல் நாள் மாணி - வாழ்நாள் உலந்த மார்க்கண்டன், குமை பெற்றது - அளிந்தழிந்தது.

10. பொ-ரை : மணம் பொருந்திய பொழில்கள் சூழ்ந்த சீகாழிப் பதியுள் விளங்கும் கறைக் கண்டராகிய சிவபெருமானின் அடி இணை களைத் திருமால் கண்டிலன். தாமரை மலரில் எழுந்தருளியுள்ள பிரமன் முடியைக் கண்டிலன். அவ்விறைவன் கொடிமிசை இலச்சினையாக வுள்ள ஏற்றினை உகந்து ஏறுவர். புலித்தோலை உடுத்தவர். பிடி போன்ற அழகிய நடையினை உடைய உமையம்மையை ஒரு கூறாகக் கொண்டவர். அவர் இருப்பதோ கயிலை மலையாகும்.

கு-ரை : கடி அணியும் பொழில் காழியுள் மேய கறைக் கண்டர் அடியிணை மால் கண்டிலன்; தாமரையோன் முடி கண்டிலன்; கொடி

Koviloor Digital Library

1269. கையது வெண்குழை காதது சூல
மமணர் புத்தர்
எய்துவர் தம்மை யடியவ ரெய்தாரொ
ரேனக்கொம்பு
மெய்திகழ் கோவணம் பூண்ப துடுப்பது
மேதகைய
கொய்தலர் பூம்பொழிற் கொச்சையுண் மேவிய
கொற்றவரே. 11

1270. கல்லுயர் கழுமல விஞ்சியுண் மேவிய
கடவுடன்னை
நல்லுரை ஞானசம் பந்தன்ஞா னத்தமிழ்
நன்குணரச்

யணியும் ஏறு உகந்து ஏறுவர்; புலித்தோல் உடுப்பர்; பிடியணியும் நடையாள் கூறுடையர்; வெற்பு இருப்பது எனக் கூட்டுக. கடி - மணம். கொடியணியும் - கொடியை யலங்கரிக்கும், பிடி அணியும் நடையாள் - பெண் யானையை யொத்த நடையினையுடைய பார்வதி. வெற்பு - கைலை.

11. பொ-ரை : சிறந்தனவாய்க் கொய்யக் கொய்ய மலர்வனவாய அழகிய பொழில்கள் சூழ்ந்த கொச்சையுள் எழுந்தருளிய கொற்ற வராகிய சிவபிரான் கையில் சூலமும் காதில் வெண்குழையும் கொண் டவர். அப்பெருமானை அமணர் புத்தர் எய்தார். அடியவர் எய்துவர். பன்றியின் கொம்பை அவர் திருமேனிமேல் விளங்கப் பூண்பவர், கோவணம் உடுத்தவர்.

கு-ரை : கொய்து அலர் பூம்பொழில் மேதகைய கொச்சையுள் மேவிய கொற்றவர் கையது சூலம்: காதது வெண்குழை; அமணர் புத்தர் தம்மை எய்தார்; அடியவர் எய்துவர்; ஓர் ஏனக்கொம்பு மெய்திகழ் பூண்பது; கோவணம் உடுப்பது எனக்கூட்டுக.

12. பொ-ரை : உயர்ந்த மதில்களை உடைய கழுமலக் கோயிலுள் விளங்கும் கடவுளை நல்லுரைகளால் ஞானசம்பந்தன் பாடிய ஞானத் தமிழை நன்குணர்ந்து சொல்லவும் கேட்கவும் வல்லவர் பழமையான தேவர்களோடும் அமருலகம் சென்று சிவலோகத்தைப் பெறுவர்.

Koviloor Digital Library

சொல்லிடல் கேட்டல்வல் லோர்தொல்லை வானவர்
தங்களொடும்
செல்குவர் சீரரு ளாற்பெற லாஞ்சிவ
லோகமதே. 12

திருச்சிற்றம்பலம்

கு-ரை : கழுமலநகர்க் கடவுளை ஞானசம்பந்தன் சொன்ன ஞானத்தமிழ் நல்லுரைகளைச் சொல்லவும் கேட்கவும் வல்லார் தேவரோடு சிவலோகம் பெறுவர் என்கின்றது. புண்ணியஞ் செய்து தேவராய்ப் பதவியில் நிற்பாரை விலக்கத் தொல்லை வானவர் என்றருளினார்.

இப்பதிகம் கட்டளைக் கலித்துறையாதலின் இப்பாடல் முதலடி, 'கல்லுயர் இஞ்சிக் கழுமலம் மேய கடவுடன்னை' என்றிருந்து சிதைந்திருக்கலாம் என்பர் தி.வே.கோ.

திருத்தொண்டர் புராண சாரம்

காழிநகர்ச் சிவபாத விதயர் தந்த
கவுணியர்கோன் அழுதுமையாள் கருந்தி யூட்டும்
ஏழிசையி னமுதுண்டு தாளம் வாங்கி
இலங்கியநித் திலச்சிவிகை யிசைய ஏறி
வாழுமுய லகன்அகற்றிப் பந்தரேய்ந்து
வளர்கிழிபெற்று அரவின்விட மருகல் தீர்த்து
வீழிநகர்க் காசெய்தி மறைக்கதவம் பிணித்து
மீனவன்மே னியின்வெப்பு விடுவித் தாரே.

ஆரெரியிட்டு எடுத்தவே டவைமுன் னேற்றி
ஆற்றிலிடும் ஏடெதிர்போ யணைய வேற்றி
ஓரமணர் ஒழியாமே கழுவி லேற்றி
ஓதுதிருப் பதிகத்தால் ஓட மேற்றிக்
காருதவும் இடிபுத்தன் றலையில் ஏற்றிக்
காயாத பனையின்முது கனிக ளேற்றி
ஈரமிலா அங்கமுயி ரெய்த வேற்றி
இலங்குபெரு மணத்தரனை யெய்தி னாரே.

- உமாபதி சிவாசாரியார்.

Koviloor Digital Library

118. திருப்பருப்பதம்

பதிக வரலாறு:

கூற்றுதைத்தார் வீற்றிருக்கும் திருக்கோகரணம் பாடி எழுந்தருளிய பிள்ளையார் திருப்பருப்பதத்தை அடைந்து 'சுடு மணி யுமிழ் நாகம்' என்னும் இத்திருப்பதிகத்தைப் பாடிப் பர்வத நாயகரைப் பரவினர்.

பண்: வியாழக்குறிஞ்சி

பதிக எண்: 118

திருச்சிற்றம்பலம்

1271. **சுடுமணி யுமிழ்நாகஞ்**
சூழ்தர வரைக்கசைத்தான்
இடுமணி யெழிலானை
யேறல னெருதேறி
விடமணி மிடறுடையான்
மேவிய நெடுங்கோட்டுப்
படுமணி விடுசுடரார்
பருப்பதம் பரவுதுமே. 1

1. பொ-ரை : மிக்க ஒளியைத் தரும் மாணிக்க மணியை உமிழும் பாம்பை இடையில் பொருந்தக் கட்டியவனும், இரு புறங்களிலும் மணி கள் தொங்கவிடப்பட்ட அழகிய யானையை ஊர்தியாகக் கொண்டு அதன்மிசை ஏறாது ஆனேற்றில் ஏறி வருபவனும், நஞ்சணிந்த மிடறு டையவனும் ஆகிய சிவபெருமான் எழுந்தருளிய நீண்ட சிகரங்களை உடையதும் ஆங்காங்கே தோன்றும் மணிகள் உமிழ்கின்ற ஒளியினை உடையதுமான திருப்பருப்பதத்தை நாம் பரவுவோம்.

கு-ரை : திருவரையில் நாகத்தைக் கட்டியவர்; யானையேறாது ஆனேறு ஏறியவர்; நீலகண்டர் எழுந்தருளிய சீபருப்பதத்தைப் பரவு வோம் என்கின்றது.

சுடுமணி - ஒளிவிடுகின்ற மாணிக்கம். அசைத்தான் - கட்டியவன். இடுமணி எழில் ஆனை - இரு மருங்கும் இடப்பெற்ற மணிகளையுடைய யானையை.

Koviloor Digital Library

1272. நோய்புல்கு தோறிரைய
நரைவரு நுகருடம்பில்
நீபுல்கு தோற்றமெல்லா
நினையுள்கு மடநெஞ்சே
வாய்புல்கு தோத்திரத்தால்
வலஞ்செய்து தலைவணங்கிப்
பாய்புலித் தோலுடையான்
பருப்பதம் பரவுதுமே. 2

1273. துனியுறு துயர்தீரத்
தோன்றியோர் நல்வினையால்
இனியுறு பயனாத
லிரண்டுற மனம்வையேல்
கனியுறு மரமேறிக்
கருமுசுக் கழையுகளும்
பனியுறு கதிர்மதியான்
பருப்பதம்பரவுதுமே. 3

2. பொ-ரை : அறியாமையுள் மூழ்கித் திளைக்கும் நெஞ்சே! நீ போக நுகர்ச்சிக்குரிய இவ்வுடம்பில் இளமை முதல் மாறிவரும் தோற்ற மெல்லாவற்றையும், நோய்கள் தழுவும் தோல் சுருங்கி நரை தோன்றும் நிலையையும், நினைந்து சிந்திப்பாயாக. மூப்பு வருமுன் வாய் நிறைந்த தோத்திரங்களைப் பாடி, வலம் வந்து, தலையால் வணங்கிப் பாயும் புலியின் தோலை உடுத்த பெருமான் எழுந்தருளிய திருப்பருப் பதத்தைப் பரவுவோம்; வருக.

கு-ரை : நெஞ்சே! தோல் திரங்கி, நரைத்துப் போகும் உனது தோற்றம் எல்லாவற்றையும் கொஞ்சம் நினைத்துப்பார், வாய் நிறைந்த தோத்திரத்தால் வலஞ்செய்து வணங்கிச் சீபருப்பதத்தைப் பரவுவோம் வா என்கின்றது. புல்கு - தழுவிய. திரைய - சுருங்க. நினை உள்கு - நினைத்துப்பார் சிந்தித்துப்பார். புல்கு - நிறைந்த.

3. பொ-ரை : நெஞ்சே! வருத்தத்தைத் தரும் பிறவித் துயர்தீரத் தோன்றிய நீ, நல் வினைகள் செய்து அப்புண்ணியத்தால் தேவர் உலக இன்பங்களை நுகர்தல், வீடு பேறாகிய விழுமிய பயனை எய்துதல்

Koviloor Digital Library

1274. கொங்கணி நறுங்கொன்றைத்
தொங்கலன் குளிர்சடையான்
எங்கணோ யகலநின்றா
னெனவரு ளீசனிடம்
ஐங்கணை வரிசிலையா
னநங்கனை யழகழித்த
பைங்கண்வெள் ளேறுடையான்
பருப்பதம் பரவுதுமே. 4

ஆகிய இரண்டிலும் பற்றுக் கொள்ளாதே. கரிய குரங்குகள் கனி நிறைந்த மரத்தில் ஏறி அதனை விடுத்து மூங்கில் மரங்களில் தாவி உக ளும், குளிர்ந்த ஒளியோடு கூடிய பிறைமதியைச் சூடிய சிவபெரு மானின் திருப்பருப்பதத்தை வணங்குவோம்; வருக. மனிதமனம் ஒன்றை விட்டு ஒன்று பற்றும் நிலையை இப்பாடலின் வருணனை தெரி விக்கிறது.

கு-ரை : பிறவித் துன்பம் நீங்கப் பிறந்த நீ, செய்த நல்வினை யால் எய்தப்போகும் இன்பப் பிறவியை எண்ணி இரண்டுபட்ட மனம் எய்தாதே; திருமலையைப் பரவுவோம் வா என்கின்றது.

துனி - வருத்தம். கோடிசெல்வம் பெற முயன்றார் பிடி செல்வம் பெற்றுமகிழார்கள். அதுபோல நீ பேரின்பம் பெறப் பிறந்து புண்ணிய வசத்தால் வரும் தேவலோக இன்பம் முதலியவற்றைச் சிந்தியாதே உறுதியாக இரு என்பதாம். முசு - குரங்கு.

4. பொ-ரை : தேன் நிறைந்ததாய் மணம் கமழும் கொன்றை மலர்மாலையைச் சூடியவன், குளிர்ந்த சடைமுடியை உடையவன், எங்கள் துன்பங்களைப் போக்க எழுந்தருளியவன் என்று அடியவர் போற்ற அவர்கட்கு அருள்புரியும் ஈசனது இடம், ஐவகை மலர்களை யும் வரிந்த கரும்பு வில்லையும் உடைய மன்மதனின் அழகினை அழித்து அவனை எரித்துப் பசிய கண்களை உடைய வெள்ளேற்றை உடையவனாய் அப்பெருமான் எழுந்தருளிய பதி திருப்பருப்பதம். அதனைப் பரவுவோம்.

கு-ரை : எங்கள் பிறவிநோய் போக்க அருள் செய்யும் ஈசன் இடம் திருமலை என்கின்றது. கொங்கு - தேன். தொங்கலன் - மாலை யையுடையவன். அநங்கன் - மன்மதன்.

Koviloor Digital Library

1275. துறைபல சுனைமூழ்கித்
தூமலர் சுமந்தோடி
மறையொலி வாய்மொழியால்
வானவர் மகிழ்ந்தேத்தச்
சிறையொலி கிளிபயிலுந்
தேனின மொலியோவாப்
பறைபடு விளங்கருவிப்
பருப்பதம் பரவுதுமே. 5

1276. சீர்கெழு சிறப்போவாச்
செய்தவ நெறிவேண்டில்
ஏர்கெழு மடநெஞ்சே
யிரண்டுற மனம்வையேல்
கார்கெழு நறுங்கொன்றைக்
கடவுள திடம்வகையால்
பார்கெழு புகழோவாப்
பருப்பதம் பரவுதுமே. 6

5. பொ-ரை : கிளிகள் சிறகுகளால் எழுப்பும் ஓசையோடு வாயால் எழுப்பும் மெல்லிய அழைப்பொலியும், வண்டுகளின் ஒலியும் நீங்காததாய்ப் பறை போல ஒலிக்கும் அருவிகளை உடையதாய் விளங்குவதும், தேவர்கள் துறைகள் பலவற்றை உடைய சுனைகளில் மூழ்கித் தூய மலர்களைச் சுமந்து விரைந்து வந்து வேத கீதங்களைத் தம் வாய்மொழியாக ஓதி மகிழ்வோடு வழிபடுமாறு சிவபெருமான் விளங்குவதுமாகிய திருப்பருப்பதத்தைப் பரவுவோம்.

கு-ரை. : வானவர்கள் சுனைநீராடித் தொழும் பருப்பதம் பரவுதும் என்கின்றது. சிறை - சிறகுகள். தேனினம் - வண்டுக்கூட்டம். பறைபடும் - முழவுபோல ஒலிக்கும்.

6. பொ-ரை : அழகிய மடநெஞ்சே! பெருமை மிக்க சிறப்புக்கள் அகலாததாய் நாம் மேற்கொள்ளத்தக்க தவநெறியை நீ பின்பற்ற விரும்புவாயாயின், வேண்டுமா வேண்டாவா என இரண்டுபட எண்ணாமல் உறுதியாக ஒன்றை நினைந்து நெறியின் பயனாய் விளங்கும், கார்காலத்தே மலரும் மணம் மிக்க கொன்றை மலர்மாலை சூடிய

Koviloor Digital Library

1277. புடைபுல்கு படர்கமலம்
புகையொடு விரைகமழத்
தொடைபுல்கு நறுமாலை
திருமுடி மிசையேற
விடைபுல்கு கொடியேந்தி
வெந்தவெண் ணீறணிவான்
படைபுல்கு மழுவாளன்
பருப்பதம் பரவுதுமே. 7

1278. நினைப்பெனு நெடுங்கிணற்றை
நின்றுநின் றயராதே
மனத்தினை வலித்தொழிந்தே
னவலம்வந் தடையாமைக்

வனாய் எழுந்தருளியுள்ள அக்கடவுளது இடமாய் உலகிற் புகழ்மிக்க தலமாய் விளங்கும் திருப்பருப்பதத்தைப் பரவுவோம்.

கு-ரை : நெஞ்சே! சிறப்பகலாத செய்தவம் வேண்டில் இரண்டுபட எண்ணாதே; புகழ் நீங்காப் பொருப்பைப் பரவுதும் என்கின்றது. ஏர் - எழுச்சி.

7. பொ-ரை : ஓடைகளின் புறத்தே நிறைந்து வளர்ந்த விரிந்த தாமரை மலர்கள் அந்தணர் வேட்கும் யாகப் புகையோடு மணம் கமழுமாறு தொடுக்கப் பெற்ற நறுமாலை திருமுடியின்மேல் விளங்க, விடைக் கொடியைக் கையில் ஏந்தி, மேனியில் திருவெண்ணீறு அணிந்து மழுப்படை ஏந்தியவனாய் விளங்கும் சிவபெருமானது பருப்பதத்தை நாம் பரவுவோம்.

கு-ரை : விடைக்கொடியை ஏந்தி நீறணியும் நிமலன் பருப் பதம் பரவுதும் என்கின்றது. புடை - பக்கம். புகை - யாகப்புகை. விரை - மணம். தொடைபுல்கு - தொடுத்தலைப் பொருந்திய. விடை - இடபம்.

8. பொ-ரை : நினைப்பு என்னும் ஆழமான கிணற்றின் அருகில் இடையறாது நின்று சோர்வுபடாமல், மனம் என்னும் கயிற்றைப் பற்றி இழுத்து, எண்ணங்கள் ஈடேறாமல் அயர்வுற்றேன். ஆதலின் இதனைக் கூறுகின்றேன். துன்பங்கள் நம்மை அடையா வண்ணம் காத்துக்

Koviloor Digital Library

கனைத்தெழு திரள்கங்கை
கமழ்சடைக் கரந்தான்றன்
பனைத்திரள் பாயருவிப்
பருப்பதம் பரவுதுமே. 8

1279. மருவிய வல்வினைநோ
யவலம்வந் தடையாமல்
திருவுரு வமர்ந்தானுந்
திசைமுக முடையானும்
இருவரு மறியாமை
யெழுந்ததோரெரிநடுவே
பருவரை யுறநிமிர்ந்தான்
பருப்பதம் பரவுதுமே. 9

கொள்ளுவதற்கு இதுவே வழி. ஆரவாரித்து எழுந்த பரந்துபட்ட வெள்ளமாக வந்த கங்கை நீரைத் தனது மணம் கமழும் சடையிலே தாங்கி மறையச் செய்தவன் ஆகிய சிவபிரானது பனைமரம் போல உருண்டு திரண்டு ஒழுகும் அருவி நீரை உடைய திருப்பருப்பதத்தை நாம் பரவுவோம்.

கு-ரை : நினைப்பாகிய கிணற்றைப் பார்த்து நின்று நின்று மயங்காமல், மனத்தை வலிய அடிப்படுத்தினேன்; ஆதலால் அவலம் அடையா வண்ணம் பருப்பதம் பரவுதும் என்கின்றது. அயராது - மயங்காமல். வலித்து - இழுத்து. நினைப்பை ஆழமான கிணறாகவும், மனத்தைக் கயிறாகவும் உருவகித்தார்; இது மனத்தினை வலித்து என்பதனால் உணரப்பெறுகின்றது.

9. பொ-ரை : பலபிறவிகள் காரணமாக நம்மைத் தொடரும் வலிய வினைகளின் பயனாகிய துன்பங்கள் நம்மை வந்து அடை யாமல் இருக்கத் திருமகளைத் தன் மார்பில் கொண்ட திருமால், நான் முகன் ஆகிய இருவரும் அறியமுடியாதவாறு எழுந்த எரியின் நடுவே பெரிய மலையாய் ஓங்கி நின்ற சிவபிரான் எழுந்தருளிய திருப்பருப் பதத்தை நாம் வணங்குவோம்.

கு-ரை : அயனும் மாலும் அறியாவண்ணம் எரிநடுவே மலை யாய் எழுந்தானது பருப்பதம் பரவுதும் என்கின்றது. வல்வினை

Koviloor Digital Library

1280. சடங்கொண்ட சாத்திரத்தார்
சாக்கியர் சமண்குண்டர்
மடங்கொண்ட விரும்பியராய்
மயங்கியோர் பேய்த்தேர்ப்பின்
குடங்கொண்டு நீர்க்குச்செல்வார்
போதுமின் குஞ்சரத்தின்
படங்கொண்ட போர்வையினான்
பருப்பதம் பரவுதுமே. 10

1281. வெண்செநெல் விளைகழனி
விழவொலி கழுமலத்தான்
பண்செலப் பலபாட
லிசைமுரல் பருப்பதத்தை

நோய் - பரிபாகமுற்ற வினையால் வரும் துன்பம், அவலம் - அதனால் விளைந்த செயலறிவு. திரு உரு அமர்ந்தான் - திருமகளைத் தன் மார்பில் வைத்த திருமால், பருவரை உற - பெரியமலையைப் போல.

10. பொ-ரை : அறியாமை வயப்பட்ட சாத்திரங்களை ஓதும் புத்தர்களும், சமணராகிய இழிந்தோரும் குண்டர்களும் கூறும் மடமையை விரும்பியவராய் மயங்கியோர் சிலர், கானல் நீரை முகக்கக் குடத்தை எடுத்துச் செல்வார் போன்றவராவர். அவ்வாறு சென்றவர் செல்லட்டும். யானைத் தோலைப் போர்வையாகப் போர்த்த சிவபிரான் எழுந்தருளிய திருப்பருப்பதத்தை நாம் சென்று பரவுவோம்.

கு-ரை : சமணர் புத்தர்கட்குப்பின் பேய்த்தேர்முன் குடங்கொண்டு தண்ணீர்க்குப் போவார்போல போவார்போக, யானையுரிபோர்த்த இறைவன் பருப்பதம் பரவுதும் என்கின்றது. சடம் - அறியாமை. மடம் - அறியாமை. பேய்த்தேர் - கானல்நீர். குஞ்சரத்தின் படம் - யானைத்தோலாகிய ஆடை.

11. பொ-ரை : வெண்ணெல், செந்நெல் ஆகிய இருவகை நெற்பயிர்களும் விளைவுதரும் வயல்களையுடையதும் விழாக்களின் ஆரவாரம் மிகுந்து தோன்றுவதுமாகிய கழுமலத்தில் அவதரித்தவனாய்ப் பண்ணோடு பொருந்திய பாடல்கள் பலவற்றால் இசைபாடி இறைவனைப் பரவிவரும் ஞானசம்பந்தன், திருப்பருப்பதத்தை நல்ல

Koviloor Digital Library

நன்சொலி னாற்பரவு
ஞானசம் பந்தனல்ல
ஒண்சொலி னிவைமாலை
யுருவெணத் தவமாமே. 11

திருச்சிற்றம்பலம்

சொற்கள் அமைந்த பாடலால் பாடிய ஒளி பொருந்திய இத் திருப்பதிகப் பாமாலையைப் பலகாலும் எண்ணிப் பரவ, அதுவே தவமாகிப் பயன்தரும்.

கு-ரை : சீபருப்பதத்தைத் திருஞானசம்பந்தர் சொன்ன இம் மாலையை உருவெண்ணத்தவமாம் என்கின்றது. வெண் செந்நெல்: உம்மைத்தொகை. எண்ண என்பது எண எனத் தொகுத்தல் விகாரம் பெற்றது.

திருஞானசம்பந்தர் புராணம்

கூற்றுதைத்தோர் மகிழ்ந்தகோ கரணம் பாடிக்
குலவுதிருப் பருப்பதத்தின் கொள்கை பாடி
ஏற்றின்மிசை வருவார்இந் திரன்றன் நீல
பருப்பதமும் பாடிமற் றிறைவர் தானம்
போற்றியசொன் மலர்மாலை பிறவும் பாடிப்
புகலியர்தம் பெருந்தகையார் புனித மாகும்
நீற்றின் அணி கோலத்துத் தொண்டர் சூழ
நெடிதுமகிழ்ந் தப்பதியில் நிலவு கின்றார்.

- சேக்கிழார்.

ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை

அரியோடு நான்முகத்தோன் ஆதிசுரர்க் கெல்லாம்
தெரியாமை செந்தழலாய் நின்ற - ஒருவன்சீர்
தன்தலையின் மேல்தரித்த சம்பந்தன் தாளிணைகள்
என்தலையின் மேலிருக்க என்று.

- நம்பியாண்டார் நம்பி.

Koviloor Digital Library

119. திருக்கள்ளில்

பண்: வியாழக்குறிஞ்சி

பதிக எண்: 119

திருச்சிற்றம்பலம்

1282. முள்ளின்மேன் முதுகூகை முரலுஞ் சோலை
வெள்ளின்மேல் விடுகூறைக் கொடி விளைந்த
கள்ளின்மே யவண்ணல் கழல்க ணாளும்
உள்ளுமே லுயர்வெய்த லொரு தலையே. 1

1283. ஆடலான் பாடலா னரவங்கள் பூண்டான்
ஓடலாற் கலனில்லா னுறை பதியால்
காடலாற் கருதாத கள்ளின் மேயான்
பாடெலாம் பெரியார்கள் பரசு வாரே. 2

1. பொ-ரை : முள்ளுடைய மரங்களின்மேல் இருந்து முதிய கூகைகள் ஒலிக்கும் சோலைகள் சூழ்ந்ததும், விளமரங்களின்மேல் படர்ந்த கூறைக் கொடிகள் விளைந்து தோன்றுவதுமாய கள்ளில் என்னும் இத்தலத்தில் எழுந்தருளிய சிவபிரான் திருவடிகளை நாள்தோறும் நினைவோமானால் உயர்வெய்துதல் உறுதியாகும்.

கு-ரை : கள்ளில் மேவிய கடவுளின் கழல்களைத் தியானிக்க உயர்வெய்தல் துணிவு என்கின்றது. முள்ளின்மேல் - முள் மரத்தின்மேல். வெள்ளில்மேல் - விளாவின்மேல். உள்ளுமேல் - தியானிக்குமாயின். ஒருதலை - துணிவு.

2. பொ-ரை : ஆடல் பாடல்களில் வல்லவனும், பாம்புகள் பலவற்றை அணிந்தவனும், தலையோட்டையன்றி வேறு உண்கலன் இல்லாதவனும், சுடுகாட்டைத் தவிர வேறோர் இடத்தைத் தனது இடமாகக் கொள்ளாதவனும் ஆகிய சிவபிரான், பெரியோர்கள் அருகிலிருந்து அவன் புகழைப் பரவக் கள்ளில் என்னும் தலத்தைத் தான் உறையும் பதியாகக் கொண்டுள்ளான்.

கு-ரை : ஆடல்பாடல் உடையவன் உறைபதி கள்ளில், அதன்கண் மேயானுடைய பெருமைகளைப் பெரியார்கள் பேசுவார்கள் என்கின்றது. அரவம் - பாம்பு. கலன் - உண்கலன். பாடு - பெருமை.

Koviloor Digital Library

1284. எண்ணார்மும் மதிலெய்த விமையா முக்கண்
பண்ணார்நான் மறைபாடும் பரம யோகி
கண்ணார்நீ றணிமார்பன் கள்ளின் மேயான்
பெண்ணாணாம் பெருமானெம் பிஞ்ஞ கனே. 3

1285. பிறைபெற்ற சடையண்ணல் பெடைவண் டாலும்
நறைபெற்ற விரிகொன்றைத் தார்ந யந்த
கறைபெற்ற மிடற்றண்ணல் கள்ளின் மேயான்
நிறைபெற்ற வடியார்கள் நெஞ்சு ளானே. 4

1286. விரையாலு மலராலும் விழுமை குன்றா
உரையாலு மெதிர்கொள்ள வூரா ரம்மாக்

3. பொ-ரை : பகைவர்களாகிய அசுரர்களின் மும்மதில்களை எய்து அழித்தவனும், இமையாத மூன்று கண்களை உடையவனும் இசையமைப்போடு கூடிய நான்மறைகளைப் பாடி மகிழும் மேலான யோகியும், கண்களைக் கவரும் வண்ணம் திருநீறு அணிந்த மார் பினனும், பெண் ஆண் என இருபாலாகக் கருதும் உமைபாகனும் ஆகிய பெருமான், கள்ளில் என்னும் இத்தலத்தில் எழுந்தருளி யுள்ளான்.

கு-ரை : திரிபுரம் எரித்த பரமயோகி கள்ளில் மேயவன்; அவனே பெண் ஆண் ஆனான் என்கின்றது. எண்ணார் - பகைவர். கண் - அழகு. பிஞ்ஞகன் - அழகிய சிவன் (தலைக்கோலமுடையவன்).

4. பொ-ரை : பிறை சூடிய சடையை உடைய அண்ணலும், பெண்வண்டுகளோடு ஆண் வண்டுகள் கூடி ஒலிக்கும் தேன் நிறைந்த விரிந்த கொன்றை மாலையை விரும்பிச் சூடிய, விடக்கறை பொருந்திய கண்டத்தை உடையவனும், மனநிறைவு பெற்ற அடியவர்களின் நெஞ் சங்களில் நிறைந்து நிற்பவனுமாகிய சிவபிரான், கள்ளில் என்னும் இத் தலத்தே எழுந்தருளியுள்ளான்.

கு-ரை : கள்ளில் மேயான் என்நெஞ்சுளான் என்கின்றது. ஆலும் - ஒலிக்கும். நறை - தேன். கறை - விடம். நிறைபெற்ற அடி யார்கள் - மனநிறைவுற்ற அடியார்கள்.

5. பொ-ரை : இடையில் வெண்ணிறமான கோவணத்தை உடுத்த சிவபிரான் மணம் கமழும் ஐவகை மணப் பொருள்களாலும் மலர்

Koviloor Digital Library

கரையார்பொன் புனல்வேலிக் கள்ளின் மேயான்
அரையார்வெண் கோவணத்த வண்ணல் தானே. 5

1287. நலனாய பலிகொள்கை நம்பா னல்ல
வலனாய மழுவாளும் வேலும் வல்லான்
கலனாய தலையோட்டான் கள்ளின் மேயான்
மலனாய தீர்த்தெய்து மாதவத் தோர்க்கே. 6

1288. பொடியார்மெய் பூசினும் புறவி னறவம்
குடியாவூர் திரியினும் கூப்பி டினும்

களாலும் சீர்மை குன்றாத புகழுரைகளாலும் ஊர் மக்கள் எதிர்கொள்ள, அழகியவும் பெரியவுமான கரைகளை உடைய பொன்னி நதியின் கிளையாறு சூழ்ந்துள்ள கள்ளில் என்னும் இத்தலத்தே எழுந்தருளி யுள்ளான்.

கு-ரை : கள்ளில் மேயான் மணப்பொருள்களாலும், மலராலும் தோத்திரப் பாக்களாலும் ஊரார் எதிர்கொள்ளும் அண்ணலாக இருக் கின்றான் என்கின்றது. விரை - மணம். எண்வகை விரைகள் சங்க இலக் கியங்களிற் கூறப்பெற்றுள்ளன. விழுமை - பெருமை. உரை - புகழ்.

6. பொ-ரை : மக்கட்கு நன்மைகள் உண்டாகத் தான் பலி யேற்கும் கொள்கையனாகிய நம்பனும், அழகிய வெற்றியைத் தரும் மழு வாள் வேல் ஆகியவற்றில் வல்லவனும், உண்கலனாகிய தலை யோட்டை உடையவனும் ஆகிய சிவபிரான், தன்னை எய்தும் மாதவத் தோர்க்கு மும்மலங்களைத் தீர்த்து அருள்பவனாய்க் கள்ளில் என்னும் இத்தலத்தில் எழுந்தருளியுள்ளான்.

கு-ரை : கள்ளில் மேயான் மாதவத்தோர்க்கு மூலமலத்தைத் தீர்த்து அவரைப் பொருந்துவன் என்கின்றது. நலன் ஆயபலி - இடு வார்க்கு நன்மையமைத்த பிச்சை. வலன் ஆய மழுவாளும் வேலும் வல்லான் - வெற்றியைத் தருவதாய மழுமுதலிய படைகளை வல் லவன். மலன் ஆய தீர்த்து - மலங்களைப்போக்கி, தீர்த்து என்பது உப சார வழக்கு. வலியை வாட்டி என்பது கருத்து.

7. பொ-ரை : மணம் கமழும் அழகிய பொழில்களும் சோலை களும் சூழந்த கள்ளிலில் எழுந்தருளிய இறைவன் அடியவர்கள் திரு நீற்றுப் பொடியை உடலில் பூசினும், சோலைகளில் எடுத்த தேனை

Koviloor Digital Library

கடியார்பூம் பொழிற்சோலைக் கள்ளின் மேயான்
அடியார்பண் பிகழ்வார்க ளாதர் களே. 7

1289. திருநீல மலரொண்கண் டேவி பாகம்
புரிநூலுந் திருநீறும் புல்கு மார்பில்
கருநீல மலர்விம்மு கள்ளி லென்றும்
பெருநீல மிடற்றண்ணல் பேணு வதே. 8

1290. வரியாய மலரானும் வையந் தன்னை
உரிதாய வளந்தானு முள்ளு தற்கங்
கரியானு மரிதாய கள்ளின் மேயான்
பெரியானென் றறிவார்கள் பேசு வாரே. 9

உண்டு திரியினும் பலவாறு பிதற்றினும் அவர்கள் மனம் இறைவன் திருவருளிலேயே அழுந்தியிருக்குமாதலின் அடியவர்களின் குணம் செயல்களை இகழ்பவர்கள் அறியாதவர்களாவர்.

கு-ரை : கள்ளில் மேயான் அடியார்கள் நீறணியினும், தேனைக் குடித்து ஊர்திரியினும், கூப்பிடினும் அவர்களை இகழ்வார்கள் கீழ் மக்கள் என்கின்றது. 'எத்தொழிலைச் செய்தாலும், ஏதவத்தைப் பட்டாலும் முத்தர் மனம் மோனத்தே' இருக்குமாதலின் அவர்களை யிகழ் வார் ஆதர் என்றவாறு.

8. பொ-ரை : அழகிய நீலமலர் போன்ற ஒளி பொருந்திய கண் களை உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு, முப்புரி நூலும் திருநீறும் பொருந்திய மார்பினனாய் விளங்கும் கரிய மிடற்று அண்ணலாகிய சிவபிரான் என்றும் விரும்புவது கருநீலமலர்கள் மிகுந்து பூத்துள்ள கள்ளில் என்னும் தலமாகும்.

கு-ரை : கள்ளிலே இறைவன் என்றும் பேணுவது என்கின்றது. பேணுவது - விரும்புவது.

9. பொ-ரை : சிவந்த வரிகளைக் கொண்ட தாமரை மலர்மேல் உறையும் பிரமனும், உலகங்களைத் தனக்கு உரியதாகுமாறு அளந்த திருமாலும், நினைத்தற்கும் அரியவனாய் விளங்கும் பெரியோனாகிய இறைவன், அரியதலமாய் விளங்கும் கள்ளிலில் எழுந்தருளி உள்ளான். அறிந்தவர்கள் அவனையே பெரியோன் எனப் போற்றிப் புகழ்வர்.

Koviloor Digital Library

1291. ஆச்சியப் பேய்களோ டமணர் குண்டர்
பேச்சிவை நெறியல்ல பேணு மின்கள்
மாச்செய்த வளவயன் மல்கு கள்ளில்
தீச்செய்த சடையண்ணல் திருந்த டியே. 10

1292. திகைநான்கும் புகழ்காழிச் செல்வ மல்கு
பகல்போலும் பேரொளியான் பந்த னல்ல
முகைமேவு முதிர்சடையன் கள்ளி லேத்தப்
புகழோடும் பேரின்பம் புகுது மன்றே. 11

திருச்சிற்றம்பலம்

கு-ரை : 'கள்ளின் மேயான் பெரியான்' என்று அறிவார்கள் இவ னைப் பற்றிப் புகழ்வார்கள் என்கின்றது. அறியாத ஒன்று பேசவா ராதாகலின் பெரியான் என்று அறிவார்களே பேசுவர் என்றார்கள். வரி - செவ்வரி. வையந்தன்னை உரிய ஆய அளந்தான் - உலகத்தை உரித்தாக்க அளந்த திருமால்.

10. பொ-ரை : பரிகசிக்கத்தக்க பேய்கள் போன்றவர்களாகிய அமணர்களும், புத்தர்களும், கூறும் உரைகள் உண்மையான நெறி களை மக்கட்கு உணர்த்தாதவை. எனவே அவர்தம் உரைகளைக் கேளாது விடுத்து, பெருமைக்குரிய வள வயல்கள் நிறைந்த கள்ளிலில் விளங்கும் தீத்திரள் போன்ற சடைமுடியை உடைய சிவபிரானுடைய அழகிய திருவடிகளையே பேணுவீர்களாக.

கு-ரை : புறச்சமயிகள் பேச்சு நெறியற்றன; கள்ளில் இறைவன் திருவடியைச் சிந்தியுங்கள் என்கின்றது. ஆச்சியப்பேய்கள் - பரிகசிக்கத்தக்க பேய்கள். ஆச்சியம் ஹாஸ்யம் என்பதன் திரிபு. மா - பெருமை.

11. பொ-ரை : நாற்றிசை மக்களாலும் புகழப்பெறும் சீகாழிப் பதி யில் செல்வவளம் நிறைந்த பகல் போன்ற பேரொளியினனாகிய ஞான சம்பந்தன், நறுமணம் கமழும் மலர் அரும்புகள் நிறைந்த, முதிர்ந்த சடை முடி உடையவனாகிய சிவபிரானது கள்ளிலைப் போற்றிப் பாடிய இத் திருப்பதிகத்தைப் பாடி ஏத்தினால், புகழோடு பேரின்பம் அடையலாம்.

கு-ரை : நாற்றிசையும் புகழ்பெற்ற ஞானசம்பந்த சுவாமிகள் பதி கத்தைக்கொண்டு கள்ளில் ஏத்தப் புகழோடு பேரின்பமும் பொருந்தும் என்கின்றது. திகை - திசை. பகல் - சூரியன். பந்தன் - நாம ஏகதேசம்.

Koviloor Digital Library

120. திருவையாறு

திருவிராகம்

பண்: வியாழக்குறிஞ்சி

பதிக எண்: 120

திருச்சிற்றம்பலம்

1293. பணிந்தவ ரருவினை பற்றறுத் தருள்செயத்
துணிந்தவன் தோலொடு நூல்துதை மார்பினில்
பிணிந்தவ னரவொடு பேரெழி லாமைகொண்
டணிந்தவன் வளநக ரந்தணை யாறே. 1

1294. கீர்த்திமிக் கவனகர் கிளரொளி யுடனடப்
பார்த்தவன் பனிமதி படர்சடை வைத்துப்
போர்த்தவன் கரியுரி புலியத ளரவரை
ஆர்த்தவன் வளநக ரந்தணை யாறே. 2

1. பொ-ரை : தன்னை வணங்கும் அடியவர்களின் நீக்குதற்கரிய வினைகளை அடியோடு அழித்து அவர்கட்கு அருள் வழங்கத் துணிந் திருப்பவனும், மார்பின்கண் மான்தோலோடு விளங்கும் முப்புரி நூல் அணிந்தவனும், பாம்போடு பெரிய அழகிய ஆமை ஓட்டைப் பூண்ட வனும், ஆகிய சிவபிரானது வளநகர் அழகிய குளிர்ந்த ஐயாறாகும்.

கு-ரை : அடியார்களுடைய அருவினைகளை யறுத்து அருள் செய்யத்துணிந்தவன்; தோல் சேர்ந்த நூல் செறிந்த மார்பினை யுடையவன்; அரவோடு ஆமை ஓட்டைப் பிணித்தவன் வளநகர் ஐயாறு என்கின்றது. பணிந்தவர் - தாழ்வெனும் தன்மையோடு அடி பணிந்த அடியார்கள். அருவினை - திருவருளன்றி வேறொன்றாலும் நீக்குதற்கரியவினை. பிணித்தவன் எனற்பாலது எதுகை நோக்கி பிணிந்தவன் என மெலிந்தது.

2. பொ-ரை : புகழ்மிக்கவனும், பகைவர்களாகிய அவுணர்களின் முப்புரங்களைப் பேரொளி தோன்ற எரியுமாறு அழிந்தொழிய நெற்றி விழியால் பார்த்தவனும், குளிர்ந்த திங்களை விரிந்த சடைமுடிமீது வைத்துள்ளவனும், யானையின் தோலை உரித்துப் போர்த்தவனும்,

Koviloor Digital Library

1295. வரிந்தவெஞ் சிலைபிடித் தவுணர்தம் வளநகர்
எரிந்தற வெய்தவ னெழில்திகழ் மலர்மேல்
இருந்தவன் சிரமது விமையவர் குறைகொள
அரிந்தவன் வளநக ரந்தணை யாறே. 3

1296. வாய்ந்தவல் லவுணர்தம் வளநக ரெரியிடை
மாய்ந்தற வெய்தவன் வளர்பிறை விரிபுனல்
தோய்ந்தெழு சடையினன் தொன்மறை யாறங்கம்
ஆய்ந்தவன் வளநக ரந்தணை யாறே. 4

புலித்தோலைப் பாம்போடு இடையில் கட்டியவனும் ஆகிய சிவ பிரானது வளநகர் அழகிய குளிர்ந்த ஐயாறாகும்.

கு-ரை : திரிபுரம் எரித்தவன், யானையையுரித்துப் போர்த்தியவன், புலித்தோல் பாம்பு இவற்றை அரையிற் கட்டியவன் நகர் ஐயாறு என்கின்றது. கீர்த்தி மிக்கவன் நகர் - திரிபுரம். திரிபுராதிகளுக்கு உண்டான கீர்த்தி அவர்கள் அழிவிற்குக் காரணமாயிற்று எனக் குறித்தவாறு, அடப் பார்த்தவன் - அழிய விழித்தவன். திரிபுரத்தை விழித்தெரித்ததாக ஒரு வரலாறு தேவாரத்துப் பல இடங்களிலும் வருதல் காண்க. அதள் - தோல். ஆர்த்தவன் - கட்டியவன்.

3. பொ-ரை : இருமுனைகளும் இழுத்துக் கட்டப்பட்ட கொடிய வில்லைப் பிடித்து, அசுரர்களின் வளமையான முப்புரங்கள் எரிந்து அழியுமாறு கணை எய்தவனும், தேவர்கள் வேண்ட அழகிய தாமரை மலர்மேல் எழுந்தருளிய பிரமன் தலைகளில் ஒன்றைக் கொய்தவனுமாகிய சிவபிரானது வளநகர் அழகும் தண்மையும் உடைய ஐயாறாகும்.

கு-ரை : வில்லேந்தி அவுணர் முப்புரங்களும் எரிய எய்தவனும், பிரமனுடைய சிரத்தைத் தேவர்கள் வேண்ட அரிந்தவனும் ஆகிய இறைவன் நகர் இது என்கின்றது. வரிந்த - கணுக்கள் தோறும் கட்டப்பெற்ற. பிரமன் சிரங்கொய்தது தம்மைப்போல ஐந்தலை படைத்திருந்தமையால் அன்று; தேவர்கள் வேண்டிக் கொள்ள அவர்கள் மீது வைத்த கருணையினாலேயே என்பது விளக்கியவாறு.

4. பொ-ரை : வலிமை வாய்ந்த அவுணர்களின் வளமையான முப்புரங்களும் தீயிடை அழிந்தொழியுமாறு கணை எய்தவனும்,

Koviloor Digital Library

1297. வானமர் மதிபுல்கு சடையிடை யரவொடு
தேனமர் கொன்றையன் திகழ்தரு மார்பினன்
மானன மென்விழி மங்கையொர் பாகமும்
ஆனவன் வளநக ரந்தணை யாறே. 5

1298. முன்பனை முனிவரோ டமரர்க ளடிதொழும்
இன்பனை யிணையில விறைவனை யெழில்திகழ்
என்பொனை யேதமில் வேதியர் தாந்தொழும்
அன்பன வளநக ரந்தணை யாறே. 6

வளரத்தக்க பிறை, பரந்து விரிந்து வந்த கங்கை ஆகியன தோய்ந் தெழும் சடையினனும், பழமையான நான்கு வேதங்கள் ஆறு அங்கங் கள் ஆகியவற்றை நன்கு ஆய்வு செய்தருளியவனும் ஆகிய சிவ பிரானது நகர் அழகும் தண்மையும் உடைய திருவையாறாகும்.

கு-ரை : திரிபுரம் எரித்தவன், பிறையும் நீரும் பொருந்திய சடை யினன், வேதம் அங்கம் இவற்றை யாய்ந்தவன் நகர் ஐயாறு என்கின் றது. வாய்ந்த - வரங்களின் வன்மைவாய்ந்த. ஆய்ந்தவன் - ஆராயப் பெற்றவன் . வேதங்களை ஆயவேண்டிய இன்றியமையாமை இறை வற்கின்றாதலின் வேதங்களால் ஆராயப் பெற்றவன் என்பதே பொருந் துவதாம்.

5. பொ-ரை : வானின்கண் விளங்கும் பிறைமதி பொருந்திய சடையின்மேல் பாம்பையும், தேன் நிறைந்த கொன்றையையும் அணிந்தவனும், விளங்கும் மார்பினை உடையவனும், மான்போன்ற மென்மையான விழிகளை உடைய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டவனுமாகிய சிவபிரானது நகர் அழகும் தண்மையும் உடைய திருவையாறாகும்.

கு-ரை : பிறையணிந்த சடையில் பாம்பையும் கொன்றையை யும் சூடியவன், விளங்கும் மார்பினையுடையவன், உமையொரு பாதியன் வளநகர் ஐயாறு என்கின்றது. வானமர் மதி என்றது மதியென்ற பொதுமைநோக்கி. ஓர் பாகம் ஆனவன் என்பதற்கு இடப்பாகம் கொண்டவன் என்றுரைப்பினும் அமையும்.

6. பொ-ரை : வலிமையுடையவனும் முனிவர்களும் அமரர் களும் தொழும் திருவடிகளை உடைய இன்ப வடிவினனும், ஒப்பற்ற

Koviloor Digital Library

1299. வன்றிற லவுணர்தம் வளநக ரெரியிடை
வெந்தற வெய்தவன் விளங்கிய மார்பினில்
பந்தமர் மெல்விரல் பாகம தாகிதன்
அந்தமில் வளநக ரந்தணை யாறே. 7

1300. விடைத்தவல் லரக்கனல் வெற்பினை யெடுத்தலும்
அடித்தலத் தாலிறை யூன்றிமற் றவனது
முடித்தலை தோளவை நெரிதர முறைமுறை
அடர்த்தவன் வளநக ரந்தணை யாறே. 8

முதல்வனும், அழகு விளங்கும் என் பொன்னாக இருப்பவனும், குற்றமற்ற வேதியர்களால் தொழப்பெறும் அன்பனும் ஆகிய சிவபிரானது வளநகர் அழகும் தண்மையும் உடைய ஐயாறாகும்.

கு-ரை : வலியுடையனை, முனிவரும் தேவரும் வணங்கும் இன்ப வடிவனை, என் பொன்போன்றவனை, அந்தணர் வணங்கும் அன்பனை உரிமையாக உடைய தலம் ஐயாறு என்கின்றது. முன்பு - வலிமை. இணையில இறைவனை - ஒப்பற்ற முதல்வனை. எழில் - அழகு. அன்பன - அன்பனுடையதான.

7. பொ-ரை : பெருவலி படைத்த அவுணர்களின் வளமையான முப்புர நகர்களும் தீயிடையே வெந்தழியுமாறு கணை எய்தவனும், விளங்கிய மார்பகத்தே பந்தணை மெல் விரலியாகிய உமையம்மையைப் பாகமாகக் கொண்டவனும் ஆகிய சிவபிரானது அழிவற்ற வளநகர் அழகும் தண்மையுமுடைய ஐயாறாகும்.

கு-ரை : திரிபுரங்கள் தீயிடை வேவ எய்தவன், பந்தணை விரலியைப் பாகங்கொண்டவன் வளநகர் ஐயாறு என்கின்றது. அந்தம் இல் - அழிவில்லாத.

8. பொ-ரை : செருக்கோடு வந்த வலிய இராவணன் நல்ல கயிலை மலையைப் பெயர்த்த அளவில் தனது அடித்தலத்தால் சிறிது ஊன்றி, அவ்விராவணனின் முடிகள் அணிந்த தலைகள், தோள்கள் ஆகியவற்றை முறையே நெரித்தருளிய சிவபிரானது வளநகர் அழகும் தண்மையும் உடைய ஐயாறாகும்.

கு-ரை : இராவணனை அடித்தலத்தால் அடர்த்தவன் நகர்

Koviloor Digital Library

1301. விண்ணவர் தம்மொடு வெங்கதி ரோனல்
எண்ணிலி தேவர்க ளிந்திரன் வழிபடக்
கண்ணனும் பிரமனும் காண்பரி தாகிய
அண்ணல்தன் வளநக ரந்தணை யாறே. 9

1302. மருளுடை மனத்துவன் சமணர்கண் மாசறா
இருளுடை யிணைத்துவர்ப் போர்வையி னார்களும்
தெருளுடை மனத்தவர் தேறுமின் திண்ணமா
அருளுடை யடிகள்தம் அந்தணை யாறே. 10

ஐயாறு என்கின்றது. விடைத்த - செருக்கிய. நல்வெற்பு - கயிலை. இறை - சிறிது. இறையூன்றியது கருணையின் மிகுதியால்.

9. பொ-ரை : வானகத்தே வாழ்வார் தம்மோடு, சூரியன், அக்கினி, எண்ணற்ற தேவர்கள், இந்திரன் முதலானோர் வழிபட, திருமால் பிரமர்கள் காணுதற்கு அரியவனாய் நின்ற தலைவனாகிய சிவபிரானது வளநகர், அழகும் தண்மையும் உடைய ஐயாறாகும். வெங்கதிரோன் அனல் என்று பாடம் ஓதுவாரும் உளர்.

கு-ரை : இந்திரன், அக்கினி, எண்ணற்ற தேவர்கள், இவர்கள் வழிபட, திருமாலும் பிரமனும் காண்டற்கரிய கடவுள் நகர் ஐயாறு என்கின்றது. அண்ணல் - பெருமையிற் சிறந்தவன்.

10. பொ-ரை : தெளிந்த மனத்தினை உடையவர்களே! மருட்சியை உடைய மனத்தவர்களாகிய வலிய சமணர்களும், குற்றம் நீங்காத இரண்டு துவர்நிறஆடைகளைப் பூண்ட புத்தர்களும் கூறுவனவற்றைத் தெளியாது சிவபிரானை உறுதியாகத் தெளிவீர்களாக. கருணையாளனாக விளங்கும் சிவபிரானது இடம் அழகும் தண்மையும் உடைய ஐயாறாகும்.

கு-ரை : மருண்ட மனத்துச் சமணர்கள் முதலாயினார்களிடம் பொருந்தாது, தெளிந்த மனத்தவர்களே! உறுதியாகத் தெளிவுறுங்கள்; அருள் உடைய அடிகள் இடம் ஐயாறே என்கின்றது.

மருள், இருள் - அறியாமை. இணை துவர் போர்வையினார் - இரண்டான காவிப் போர்வையுடையவர்கள்.

Koviloor Digital Library

1303. நலமலி ஞானசம் பந்தன தின்றமிழ்
அலைமலி புனல்மல்கு மந்தணை யாற்றினைக்
கலைமலி தமிழிவை கற்றுவல் லார்மிக
நலமலி புகழ்மிகு நன்மையர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : அலைகள் வீசும் ஆறு குளம் முதலிய நீர் நிலைகளால் சூழப்பட்ட ஐயாற்று இறைவனை, நன்மைகள் நிறைந்த ஞானசம்பந்தன் போற்றிப் பாடிய இன்தமிழால் இயன்ற கலைநலம் நிறைந்த இத்திருப்பதிகத்தைக் கற்று வல்லவராயினார் நன்மை மிக்க புகழாகிய நலத்தைப் பெறுவர்.

கு-ரை : ஐயாற்றைப்பற்றித் திருஞானசம்பந்தர் சொல்லிய கலைமலிதமிழிவை வல்லார் புகழ்மிகுந்த நன்மையர் ஆவர் எனப் பயன் கூறுகின்றது.

திருஞானசம்பந்தர் புராணம்

மாடநிரை மணிவீதித் திருவையாற் றினில்வாழு
மல்கு தொண்டர்
நாடுய்யப் புகலிவரு ஞானபோ னகர்வந்து
நண்ணினார் என்
றாடலொடு பாடல்அறா அணிமூதூர் அடைய அலங்
காரஞ் செய்து
நீடுமனக் களிப்பினொடும் எதிர்கொள்ள நித்திலயா
னத்து நீங்கி.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

121. திருவிடைமருதூர்

பதிக வரலாறு:

திருநாகேச்சரத்தை வணங்கிப் பதிகம்பாடித் தொழுது, இடைமருதுக்கு எழுந்தருளிய பிள்ளையாரை, அடியார்கள் எதிர் கொண்டு அழைத்தனர். பிள்ளையார் முதலில் பரம் பொருளா னார் முதற்கோயிலைச் சென்று வழிபட்டனர். தமது கண்களில் ஆனந்தபாஷ்பம் வழிய அவனிமீது விழுந்தெழுந்து, 'நடைமரு திரிபுரம்' முதலிய பல பதிகங்களை அருளிச் செய்தனர்.

திருவிராகம்
பண்: வியாழக்குறிஞ்சி

பதிக எண்: 121

திருச்சிற்றம்பலம்

1304. நடைமரு திரிபுர
மெரியுண நகைசெய்த
படைமரு தழலெழ
மழுவல பகவன்
புடைமரு திளமுகில்
வளமமர் பொதுளிய
இடைமரு தடையநம்
மிடர்கெட லெளிதே. 1

1. பொ-ரை : இயங்குதலைப் பொருந்திய திரிபுரங்களை எரி யுண்ணுமாறு சிரித்தருளித் தனது படைக்கலத்தால் தீ எழும்படி செய்த ருளிய வெற்றி மழுவேந்திய பகவனாகிய சிவபிரான் எழுந்தருளி யதும் அருகில் வளர்ந்துள்ள மருத மரங்களில் இளமேகங்கள் தவழ்ந்து மழை வளத்தை நிரம்பத் தருவதுமான திருஇடைமருதூரை அடைந் தால் நம் இடர்கெடல் எளிதாகும்.

கு-ரை : திரிபுரம் தீயெழச் சிரித்த மழுவேந்தியவனது இடை மருது அடைய நம் இடர் கெடல் எளிது என்கின்றது. நடை மரு திரி புரம் - இயங்குதலை மருவிய முப்புரம். படை மரு தழல்எழ - படைக் கலமாகப் பொருந்தித் தீயெழ. புடைமருது - பக்கங்களிலுள்ள மருத மரங்கள். பொதுளிய - செறிந்த.

Koviloor Digital Library

1305. மழைநுழை மதியமொ
டழிதலை மடமஞ்ஞை
கழைநுழை புனல்பெய்த
கமழ்சடை முடியன்
குழைநுழை திகழ்செவி
யழகொடு மிளிர்வதொர்
இழைநுழை புரியண
லிடமிடை மருதே. 2

1306. அருமைய னெளிமைய
னழல்விட மிடறினன்
கருமையி னொளிபெறு
கமழ்சடை முடியன்
பெருமையன் சிறுமையன்
பிணைபெணொ டொருமையின்
இருமையு முடையயண
லிடமிடை மருதே. 3

2. பொ-ரை: மேகங்களிடையே நுழைந்து செல்லும் பிறை மதியோடு தசை வற்றிய தலையோடு ஆகியவற்றையும், மடமயில்கள் மூங்கிலிடையே நுழைந்து செல்லும் மலையில் தோன்றிய தேவ கங்கை நதியையும்; கமழுமாறு சடைமுடியில் சூடியவனும், குழை நுழைந்து விளங்கும் செவியழகோடு இழையாகத் திரண்ட முப்புரிநூலை விரும்பி அணிபவனுமாகிய அண்ணல் எழுந்தருளிய இடம் திரு விடைமருதூராகும்.

கு-ரை: மதியத்தையும் கபாலத்தையும் கங்கையையும் தாங்கிய சடையன்; குழைக்காதோடு விளங்கும் பூணூலையணிந்த அண்ணல் இடம் இது என்கின்றது. மழை நுழை மதியம் - மேகத்தினூடே நுழை யும்பிறை. அழிதலை - தசைநார் அழிந்த பிரமகபாலம். மடமஞ்ஞை கழை நுழை புனல் - இளைய மயில்கள் மூங்கிலிடையே நுழைகின்ற தேவகங்கை. இழை நுழைபுரி அணல் - இழையாகத் திரண்ட முப் புரிநூலை அணிந்த பெருமையிற் சிறந்தவன்.

3. பொ-ரை: அன்பில்லாதவர்க்கு அரியவனும், அன்புடை அடியவர்க்கு எளியவனும், அழலும் தன்மையுடைய விடத்தை உண்டு

Koviloor Digital Library

1307. பொரிபடு முதுகுற
முளிகளி புடைபுல்கு
நரிவளர் சுடலையு
ணடமென நவில்வோன்
வரிவளர் குளிர்மதி
யொளிபெற மிளிர்வதொர்
எரிவளர் சடையண
லிடமிடை மருதே. 4

நிறுத்திய கண்டத்தினனும், பெரியனவற்றுக்கெல்லாம் பெரியவனும், சிறியன யாவற்றினும் சிறியவனும், தன்னோடு பிணைந்துள்ள உமை யம்மையோடு ஒருருவில் இருவடிவாய்த் தோன்றுபவனுமாகிய சிவ பிரானுக்குரிய இடம் திருவிடைமருதூர் ஆகும்.

கு-ரை: அரியனாக, எளியனாக, நீலகண்டனாக, சடை முடியனாக, ஒருருவிலேயே சிவமும் சக்தியுமாகிய ஈருருவத் தையுடையவனாக இருக்கும் அண்ணல் இடம் இடைமருது என் கின்றது. அருமையன் - அணுகியடிவணங்காத புறச்சமயிகட்கும், ஆணவ பரிபாகமுறாத பதவிமோகமுடையார்க்கும் அரியன். எளிமை யன் - அடியார்க்கு எளியன். பெருமையன் - பெரியவற்றிற்கு எல்லாம் பெரிய பெருமையுடையவன். சிறுமையன் - சிறியவற்றிற்கெல்லாம் சிறியவன். பிணை பெண்ணொடு - பிணைந்துள்ள உமாதேவியோடு. ஒருமையின் - ஒரு திருமேனியிலேயே. இருமையும் உடைய - சிவமும் சத்தியுமாகிய இரண்டன் தன்மையும் உடைய.

4. பொ-ரை: நன்கு காய்ந்து பொரிந்த முதுகினை உடைய நரிகள் களிப்போடு அருகில் மிகுந்து தோன்ற, சுடலைக் காட்டில் நடம் நவில்பவனும், கோடாகத் தோன்றிப் பின்வளரும் குளிர்ந்த பிறைமதியை ஒளிபெற அணிந்த எரிபோன்று வளரும் சடைமுடியை உடையவனும் ஆகிய தலைமையாளனாகிய சிவபிரானது இடம் இடைமருதாகும்.

கு-ரை: இடுகாட்டுள் நடமாடுவோன், மதி புனைந்த சடை யண்ணல் இடம் இது என்கின்றது. பொரி படு முதுகு உற முளி களி புடை புல்கு நரி - பொரிந்த முதுகிற் பொருந்தக் காய்ந்த களிப்போடு கூடிய நரி. வரி - கோட்டு அளவாக. அதாவது கீற்றாக.

Koviloor Digital Library

1308. வருநல மயிலன
மடநடை மலைமகள்
பெருநல முலையிணை
பிணைசெய்த பெருமான்
செருநல மதிலெய்த
சிவனுறை செழுநகர்
இருநல புகழ்மல்கு
மிடமிடை மருதே. 5

1309. கலையுடை விரிதுகில்
கமழ்குழ லகில்புகை
மலையுடை மடமகள்
தனையிட முடையோன்
விலையுடை யணிகல
னிலனென மழுவினோ
டிலையுடை படையவ
னிடமிடை மருதே. 6

5. பொ-ரை: அழகோடு அசைந்து வரும் மயில் போன்ற மட நடையினளாகிய மலையரையன் மகளும், பெரு நல முலையாள் என்ற திருப்பெயருடையவளுமாகிய அம்மையின் இருதன பாரங்களைக் கூடியவனும், போர் செய்தற்குரிய தகுதியோடு விளங்கிய அவுணர் களின் மும்மதில்களை எய்தழித்தவனும் ஆகிய சிவபிரான் உறையும் இடமாகிய செழுமையான நகர் விரிந்த புகழால் நிறைந்த திரு இடைமருதூர் ஆகும்.

கு-ரை: பெருநலமுலையம்மையோடு கூடிய பெருமான் நகர் இடைமருது என்கின்றது. வருநல மயில் அன மட நடை மலைமகள் - வருகின்ற மயிலன்ன சாயலையும் அன்னம் போன்ற மடநடையையும் உடைய மலைமகள். பெருநலமுலையாள் இத்தலத்து இறைவியின் திரு நாமம். செருநலமதில் - போர்நலம் வாய்ந்த முப்புரம்.

6. பொ-ரை: மேகலை சூழ்ந்த விரிந்த ஆடையுடன் அகிற் புகையின் மணம் கமழும் கூந்தலை உடைய மலையரையனின் மட மகளாகிய பார்வதி தேவியை இடப்பாகமாக உடையவனும் விலை

Koviloor Digital Library

1310. வளமென வளர்வன
வரிமுரல் பறவைகள்
இளமண லணைகரை
யிசைசெயு மிடைமரு
துளமென நினைபவ
ரொலிகழ லிணையடி
குளமண லுறமூழ்கி
வழிபடல் குணமே. 7

மதிப்புடைய அணிகலன்கள் எவையும் இல்லாதவன் என்னுமாறு என்பு முதலியன பூண்டு மழு இலைவடிவான சூலம் இவற்றைப் படைக்கலனாகக் கொண்டவனுமாகிய சிவபிரானது இடம் இடைமருதாகும்.

கு-ரை: உமாதேவியை இடப்பாகம் உடையோன், மழு சூலம் இவற்றையுடையவன் இடம் இது என்கின்றது. துகிலையும், அகில் புகை கமழ் குழலையும் உடைய மடமகள் எனக் கூட்டுக.

விலையுடை அணிகலன் இலன் என - விலைமதிப்புடைய உயர்ந்த ஆபரணங்கள் இல்லாதவன் என. இலையுடை படையவன் - இலைவடிவாகிய சூலப்படையை உடையவன்.

7. பொ-ரை: இது வளமான இடமாகும் என வளர்வனவாகிய வரிப் பாடல்களைப் பாடும் வண்டுகள் இளமணல் அணைந்த கரையில் தங்கி முரலும் இடைமருதை மனமார நினைபவர் அந்நகரை அடைந்து ஆங்குள்ள தீர்த்தத்தில் நன்கு மூழ்கி ஒலிக்கின்ற கழலணிந்த மருத வாணனை வழிபடுதலைப் பண்பாகக் கொள்க.

கு-ரை: வண்டுகள் இசைமுரலும் இடைமருதுறைபவனிணை யடியைக் குளத்தில் மூழ்கி வழிபடல் குணமாம் என்கின்றது.

வளம் என வளர்வன - இது வளமான இடம் என்று வளர்வன வாகிய. வரி முரல் பறவைகள் - வரிகளோடு ஒலிக்கின்ற வண்டுகள். மனம் நினைத்த பொருள் வடிவாக அமையும் இயல்பிற்றாதலின் 'இடைமருது உளமென நினைபவர்' என்றார். குளம் அணல் உற மூழ்கி - குளத்தில் கழுத்தளவிருந்து மூழ்கி. அணல் - தாடி.

Koviloor Digital Library

1311. மறையவ னுலகவன்
மதியவன் மதிபுல்கு
துறையவ னெனவல
வடியவர் துயரிலர்
கறையவன் மிடறது
கனல்செய்த கமழ்சடை
இறையவ னுறைதரு
மிடமிடை மருதே. 8

1312. மருதிடை நடவிய
மணிவணர் பிரமரும்
இருதுடை யகலமொ
டிகலின ரினதெனக்
கருதிட லரியதொ
ருருவொடு பெரியதொர்
எருதுடை யடிகள்தம்
இடமிடை மருதே. 9

8. பொ-ரை: வேதங்களை அருளியவனும் அனைத்துலகங்களாய் விளங்குபவனும், திங்களாகத் திகழ்பவனும், அறிவொடுபட்ட கலைத்துறைகளாக விளங்குபவனும் சிவபிரானேயாவன் என்று போற்ற வல்ல அடியவர் துயரிலராவர். மிடற்றிற் கறையுடையவனும் கனல்போல் விளங்கும் சடையினனும் எல்லோர்க்கும் தலைவனும் ஆய அப்பெருமான் உறையும் இடம் இடைமருதாகும்.

கு-ரை: வேதியன், உலகெலாமாயவ்ன் எனறெல்லாம் சொல்ல வல்ல அடியவர்கள் துயரிலர் என்கின்றது. செந்தீக் கொழுந்துபோலச் சுடர்விடும் சடையவன் என்க. மிடறது கறையவன் என மாறிக் கூட்டுக.

9. பொ-ரை: மருதமரங்களின் இடையே கட்டிய உரலோடு தவழ்ந்த நீலமணிபோன்ற நிறத்தை உடைய திருமாலும், பிரமனும் மிக்க பெருமையுடையவர் யார் எனத் தம்முள் மாறுபட்டவராய் நிற்க அவர்கள் இன்னதெனக் கருதற்கரிய பெரிய ஒளி உருவோடு தோன்றிய பெரிய விடையூர்தியனாகிய சிவபிரானது இடம் இடைமருதாகும்.

Koviloor Digital Library

1313. துவருறு விரிதுகி
லுடையரு மமணரும்
அவருறு சிறுசொலை
நயவன்மி னிடுமணல்
கவருறு புனலிடை
மருதுகை தொழுதெழும்
அவருறு வினைகெட
லணுகுதல் குணமே. 10

1314. தடமலி புகலியர்
தமிழ்கெழு விரகினன்
இடமலி பொழிலிடை
மருதினை யிசைசெய்த

கு-ரை: திருமாலும் பிரமனும் மாறுபட இன்னதென அறிய முடியா வடிவத்தோடு எழுந்த பெருமானிடம் இது என்கின்றது. மருதிடை நடவிய மணிவணர் - மருதமரங்களினிடையே கட்டிய உரலோடு புகுந்த கண்ணன். இனது எனக் கருதிடல் அரியது - இன்னது என்னக் கருதமுடியாத. எருது - இடபம்.

10. பொ-ரை: துவர் ஏற்றிய விரிந்த ஆடையினை உடுத்தும் போர்த்தும் திரியும் புத்தரும் சமணரும் கூறும் சிறு சொல்லை விரும்பாதீர். காவிரி பல கிளைகளாகப் பிரிந்து செல்லும் வாய்க்கால்களை உடைய இடைமருதைக் கைகளால் தொழுபவர்க்கு வினைகள் கெடுதலும் நல்ல குணங்கள் உண்டாதலும் கூடும்.

கு-ரை: புறச்சமயிகள் பேச்சை விரும்பாதீர்கள்; இடை மருதினைக் கைதொழும்; அவர்களின் வினை கேட்டையணுகுதல் குணம் என்கின்றது. துவர் உறு உடையர் - புத்தர்.

11. பொ-ரை: நீர்நிலைகள் பலவற்றை உடைய புகலிப் பதியில் தோன்றியவனும், தமிழ் விரகனுமாகிய ஞானசம்பந்தன் விரிந்த பொழில்களால் சூழப்பட்ட இடைமருதீசனை இசையால் பரவிய சொல்லோவியமாகிய இத்திருப்பதிகத் தமிழைப் பாடிப் பரவ வல்லவர்தம் வினைகள் கெட்டொழிய அவர்கள் புகழோடும் விளங்கும் ஒளியோடும் திகழ்பவராவர்.

Koviloor Digital Library

படமலி தமிழிவை
பரவவல் லவர்வினை
கெடமலி புகழொடு
கிளரொளி யினரே. 11

திருச்சிற்றம்பலம்

கு-ரை: தமிழ் விரகினனாய ஞானசம்பந்தப் பெருமான், இடைமருதைப் பற்றி இயம்பிய தமிழை வல்லவர் வினைகெடப் புகழொடு ஒளியுமிக விளங்குவர் என்கின்றது. படம் மலி தமிழ் - பட மெடுத்தாற்போலச் சிறந்த தமிழ். கிளர் - மிகுகின்ற.

திருஞானசம்பந்தர் புராணம்

ஓங்குதிருப் பதிகம்ஓ டேகலன் என் றெடுத்தருளித்
தாங்கரிய பெருமகிழ்ச்சி தலைசிறக்குந் தன்மையினால்
ஈங்கெனைஆ ளுடையபிரான் இடைமருதீ தோ என்று
பாங்குடைய இன்னிசையாற் பாடிஎழுந் தருளினார்.

அடியவர்கள் எதிர்கொள்ள எழுந்தருளி அங்கணைந்து
முடிவில்பரம் பொருளானார் முதற்கோயில் முன்இறைஞ்சிப்
படியில்வலங் கொண்டுதிரு முன்பெய்திப் பார்மீது
நெடிதுபணிந் தெழுந்தன்பு நிறைகண்ணீர் நிரந்திழிய.

பரவுறுசெந் தமிழ்ப்பதிகம் பாடிஅமர்ந் தப்பதியில்
விரவுவார் திருப்பதிகம் பலபாடி வெண்மதியோ(டு)
அரவுசடைக் கணிந்தவர்தந் தாள்போற்றி ஆர்வத்தால்
உரவுதிருத் தொண்டருடன் பணிந்தேத்தி உறையுநாள்.

– சேக்கிழார்.

Koviloor Digital Library

122. திருவிடைமருதூர்

திருவிராகம்
பண்: வியாழக்குறிஞ்சி

பதிக எண்: 122

திருச்சிற்றம்பலம்

1315. விரிதரு புலியுரி விரவிய வரையினர்
திரிதரு மெயிலவை புனைகணை யினிலெய்த
எரிதரு சடையின ரிடைமரு தடைவுனல்
புரிதரு மனனவர் புகழ்மிக வுளதே. 1

1316. மறிதிரை படுகடல் விடமடை மிடறினர்
எறிதிரை கரைபொரு மிடைமரு தெனுமவர்
செறிதிரை நரையொடு செலவில ருலகினில்
பிறிதிரை பெறுமுடல் பெறுகுவ தரிதே. 2

1. பொ-ரை: விரிந்த புலித்தோலை ஆடையாக உடுத்த இடையினரும், வானகத்தில் திரிந்து இடர் செய்த முப்புரங்களை ஆற்றல் பலவும் அமைந்த கணையால் எய்தழித்தவரும் எரிபோன்ற சிவந்த சடையினருமாகிய சிவபிரானார் உறையும் இடைமருதை அடைய எண்ணும் மனம் உடையவர்க்குப் புகழ் மிக உளதாகும்.

கு-ரை: புலித்தோலரையினராகிய இறைவனது திருஇடைமருதினை அடைய விரும்பிய மனத்தவர்க்குப் புகழ் மிகவுளது என்கின்றது. திரிதரும் எயில் - திரிபுரம்.

2. பொ-ரை: சுருண்டு விழும் அலைகள் உண்டாகும் கடலிடைத் தோன்றிய விடம் சேர்ந்த மிடற்றினர் உறைவதும், காவிரியாற்று அலைகள் கரைகளைப் பொருவதுமான இடைமருது ஏன்னும் தலத்தின் பெயரைச் சொல்லுவோர் உடலிடை அலைபோலத் தோன்றும் தோலின் சுருக்கம், மயிரின் நரை ஆகியன நீங்குவர். மீண்டும் இவ்வுலகில் உணவு உண்ணும் உடலோடு கூடிய பிறவியை எய்தார்.

கு-ரை: நீலகண்டர் எழுந்தருளிய இடைமருது என்று கூறுபவர் நரைதிரை எய்தார்; மீட்டும் இவ்வுடலையும் எய்தார் என்கின்றது.

Koviloor Digital Library

1317. சலசல சொரிபுனல் சடையினர் மலைமகள்
நிலவிய வுடலினர் நிறைமறை மொழியினர்
இலரென விடுபலி யவரிடை மருதினை
வலமிட வுடனலி விலதுள வினையே. 3

1318. விடையினர் வெளியதொர் தலைகல னெனநனி
கடைகடை தொறுபலி யிடுகென முடுகுவர்
இடைவிட லரியவ ரிடைமரு தெனுநகர்
உடையவ ரடியிணை தொழுவதெம் முயர்வே. 4

பிறிது இரை பெறும் உடல் பெறுகுவது அரிது. வேறு உணவைஉட்கொளும் இந்த அன்னமயகோசத்தை அடைவது அரிது; பிறவியில்லை என்பதாம்.

3. பொ-ரை: சலசல என்னும் ஒலிக்குறிப்போடு சொரியும் கங்கை ஆற்றைச் சடைமிசை அணிந்தவரும், மலைமகளை ஒருபாகமாகக் கொண்ட உடலினரும், நிறைவான வேதங்களை மொழிபவரும், உணவின்மையால் பசியோடுள்ளார் என மகளிர் இடும் பலியை ஏற்பவருமான சிவபிரான் உறையும் இடைமருதை வலம்வருபவர்க்கு வினைகளால் ஆகும் உடல் நலிவு இல்லையாம்.

கு-ரை: இடைமருதை வலம்வர வினைகளால் உடல் நலிவு இல்லையாம் என்கின்றது. புனல் - கங்கை. நிலவிய - விளங்கிய. உளவினையால் உடல் நலிவு இலது என இயைக்க.

4. பொ-ரை: விடையூர்தியை உடையவரும், வெண்மையான தலையோட்டை உண்கலன் எனக் கொண்டு பலகாலும் வீடுகள்தோறும் சென்று பலி இடுக என விரைந்து செல்பவரும், ஒருமுறை அன்பு செய்யின் விடுதற்கு அரியவரும், இடைமருது என்னும் நகரை உடையவரும் ஆகிய சிவபிரான் திருவடிகளைத் தொழுவதே எமக்கு உயர்வைத் தரும்.

கு-ரை: இடைமருதினை உடையவர் அடியிணை தொழுவது எம்முயர்வுக்கு வழியாம் என்கின்றது. வெளியது ஓர் தலை - பிரம கபாலம். கலன் - உண்கலன். முடுகுவர் - விரைவர். இடைவிடல் அரியவர் - ஆன்மாக்களால் இடைவிடாமல் எண்ணுதற்குரியவர் என்பது கருத்து.

Koviloor Digital Library

1319. உரையரு முருவின ருணர்வரு வகையினர்
அரைபொரு புலியத ளுடையின ரதன்மிசை
இரைமரு மரவின ரிடைமரு தெனவுளம்
உரைகள துடையவர் புகழ்மிக வுளதே. 5

1320. ஒழுகிய புனன்மதி யரவமொ டுறைதரும்
அழகிய முடியுடை யடிகள தறைகழல்
எழிலின ருறையிடை மருதினை மலர்கொடு
தொழுதல்செய் தெழுமவர் துயருற லிலரே. 6

1321. கலைமலி விரலினர் கடியதொர் மழுவொடும்
நிலையினர் சலமக ளுலவிய சடையினர்

5. பொ-ரை: சொல்லுதற்கரிய அழகரும், உணர்வதற்கரிய தன்மையரும், இடையில் பொருந்திய புலித்தோல் ஆடையினரும் அதன்மேல் இரையை விழுங்கும் பாம்பைக் கச்சையாகக் கட்டியவரும் ஆகிய சிவபிரானது இடைமருதைப் பலகாலும் புகழ்ந்து போற்று வார்க்கு மிகுதியான புகழ் உளதாகும்.

கு-ரை: சொல்லுதற்கரிய உருவினரும், உணர்தற்கரிய தன்மை களை உடையவரும், புலித்தோலாடையினரும் ஆன இறைவனது இடைமருதென நினைக்கவும் பேசவும் வல்லவர்கட்குப் புகழ் மிக உளதாம் என்கின்றது. இரை மரும் அரவினர் - உணவை உட் கொள்ளும் பாம்பினையுடையவர். உளம் உடைய்வர், உரைகளது உடையவர்(க்குப்) புகழ் உளது என முடிக்க.

6. பொ-ரை: வழிந்தொழுகும் கங்கை நதி, இளம்பிறை, பாம்பு ஆகியன உறையும் அழகிய சடைமுடியை உடையவரும், ஒலிக்கின்ற வீரக்கழலை அணிந்துள்ள அழகரும் ஆகிய அடிகளது இடைமருதை அடைந்து மலர் கொண்டு போற்றித் தொழுது எழுவார் துன்புறுதல் இலராவர்.

கு-ரை: இடைமருதை மலர்கொண்டு தொழுவார் துயருறுதல் இலர் என்கின்றது. அடிகளது இடைமருது, அறைகழல் எழிலினர் உறையிடைமருது எனத் தனித்தனி இயைக்க.

7. பொ-ரை: வீணையை மீட்டி இன்னிசைக் கலையை எழுப்பும் விரலை உடையவரும், கொடிய மழுவாயுதத்தோடு விளங்கும் நிலை

Koviloor Digital Library

மலைமகண் முலையிணை மருவிய வடிவினர்
இலைமலி படையவ ரிடமிடை மருதே. 7

1322. செருவடை யிலவல செயல்செயத் திறலொடும்
அருவரை யினிலொரு பதுமுடி நெரிதர
இருவகை விரனிறி யவரிடை மருதது
பரவுவ ரருவினை யொருவுதல் பெரிதே. 8

1323. அரியொடு மலரவ னெனவிவ ரடிமுடி
தெரிவகை யரியவர் திருவடி தொழுதெழ

யினரும், கங்கை உலாவும் சடைமுடியினரும் மலைமகளின் முலைத் தழும்பு பொருந்திய வடிவினரும், இலைவடிவான சூலத்தை ஏந்திய வருமாய சிவபிரானார் இடம் இடைமருதாகும்.

கு-ரை : கங்கையுலாவிய சடையையும், உமாதேவியார் முலைத் தழும்பு சேர்ந்த வடிவினையும் உடையவர் இடம் இடைமருது என்கின்றது. வீணைவாயிலாக இசைக்கலையை வெளிப்படுத்துதலின் கலை மலி விரலினர் எனக் கூறப்பெற்றார்.

8. பொ-ரை: போரில் முறையற்ற செயல்களைச் செய்யும் இராவணன் தன்னிடமும் அவ்வாறு திறலோடும் செய்தலைக் கண்டு அரிய கயிலைமலையின்கீழ் அகப்படுத்தி அவனுடைய பத்துத் தலைகளும் நெரியுமாறு சினம் கருணை ஆகிய இருவகைக் குறிப்போடு கால் விரலை ஊன்றியவராகிய சிவபிரானது இடைமருதைப் பரவுவார் அருவினைகள் பெரிதும் நீங்கும்.

கு-ரை : இடைமருதைப் பரவுவார்வினை நீங்குதல் பெரிதாமோ என்கின்றது. செருவு அடையில வல செயல் செய் அத்திறலொடும் - போரில் முறையற்ற வலிய செயல்களைச் செய்யும் அத்தகைய வலிமையோடும். இருவகை விரல் நிறியவர் - அவன் வலிமையும் முடியும் ஆகிய இரண்டும் நெரியும்படியான இருவகைத் திருவுள்ளக்குறிப் போடு விரலை ஊன்றியவர். அதாவது அவன் அழியப்படாது அடங்க வேண்டும் என்ற திருவுள்ளக்குறிப்புடன் என்பது கருத்து.

9. பொ-ரை : திருமால் பிரமர்களாகிய இருவரும் அடிமுடி காண முயன்றபோது அவர்கட்கு அரியவராய்த் தோன்றி அவர்கள் தம்மைத் தொழுது எழுந்தபோது அழலுருவாய்க் காட்சி தந்த சிவபிரானாரது

Koviloor Digital Library

எரிதரு முருவர்த மிடைமரு தடைவுறல்
புரிதரு மனனவர் புகழ்மிக வுளதே. 9

1324. குடைமயி லினதழை மருவிய வுருவினர்
உடைமரு துவரினர் பலசொல வுறவிலை
அடைமரு திருவினர் தொழுதெழு கழலவர்
இடைமரு தெனமன நினைவது மெழிலே. 10

1325. பொருகட லடைதரு புகலியர் தமிழொடு
விரகினன் விரிதரு பொழிலிடை மருதினைப்
பரவிய வொருபது பயிலவல் லவரிடர்
விரவிலர் வினையொடு வியனுல குறவே. 11

திருச்சிற்றம்பலம்

இடைமருதினை அடைய விரும்புவார்க்குப் புகழ் மிக உளதாகும்.

கு-ரை: இடைமருதை எய்த வேண்டும் என்ற சித்தம் உடையார்க்குப் புகழ் உண்டாம் என்கின்றது. தெரிவகை - ஆராய்ந்து அறிவதற்கு

10. பொ-ரை: குடையையும் மயிற்பீலியையும் கையில் ஏந்திய வடிவினை உடைய சமணர்களும், மருதந்துவர் ஏற்றிய ஆடையை உடுத்த புத்தர்களும் பலவாறு கூற அவர்களோடு நமக்கு உறவில்லை என ஒதுக்கிச் செல்வங்கள் யாவும் தம்மை வந்தடைந்தவராய் விளங்கும் அடியவர்களால் தொழப் பெறும் திருவடிகளை உடைய சிவபிரானது இடைமருது என மனத்தால் நினைவது அழகைத் தரும்.

கு-ரை: புறச்சமயிகள் பலபேச அவற்றோடு நமக்கு உறவே யில்லை என்று அடைகின்ற சில புண்ணியசீலர்கள் வணங்குகின்ற திருவடியையுடையார் இடைமருது என எண்ணுவதே அழகு என்கின்றது. குடை மயிலினதழை மருவிய உருவினர் - குடையையும் மயிற் பீலியையும் தழுவிய வடிவத்தையுடையவர்களாகிய சமணர்கள். துவர் - காவி. பல சொல என்றது அவற்றின் பொருளற்ற தன்மையை யும் பொருந்தாக்கோளையும் புலப்படுக்க.

11. பொ-ரை: கரையைப் பொரும் கடலை அணித்தாக உடைய புகலிப் பதியில் தோன்றியவனும், தமிழ் விரகனுமாகிய ஞான சம்பந்தன் விரிந்த பொழில்களால் சூழப்பட்ட இடைமருதில் விளங்கும்

Koviloor Digital Library

பெருமானைப் பரவிய இத்திருப்பதிகத்தின் பத்துப் பாடல்களையும் பயில வல்லவர் வினைகளும் இடர்களும் இலராவர். அகன்ற வீட்டுலகம் அவர்கட்குச் சொந்தமாகும்.

கு-ரை : திருஞானசம்பந்தப்பெருமான் இடைமருதைப் பரவிய இப்பாடல் பத்தும் பயிலவல்லார் வினையும் இலர்; அவற்றால் வரும் துன்பமும் இலர் எனப் பயன் விளக்கிற்று. வியன் உலகு - அகன்ற சுவர்க்க பூமி.

திருத்தொண்டர் திருவந்தாதி

வையம் மகிழயாம் வாழ அமணர் வலிதொலைய
ஐயன் பிரம புரத்தாற் கம்மென் குதலைச்செவ்வாய்
பைய மிழற்றும் பருவத்துப் பாடப் பருப்பதத்தின்
தையல் அருள்பெற் றனன்என்பர் ஞானசம்பந்தனையே.

பந்தார் விரலியர் வேள்செங்கட் சோழன் முருகன்நல்ல
சந்தார் அகலத்து நீலநக் கன்பெயர் தான்மொழிந்து
கொந்தார் சடையர் பதிகத்தில் இட்டடி யேன் கொடுத்த
அந்தாதி கொண்ட பிரான்அருட் காழியர் கொற்றவனே.

- நம்பியாண்டார் நம்பி.

ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்

கோலப் புலமணி சுந்தர மாளிகைக் குந்தளவா
ரேலப் பொழிலணி சண்பையர் கோனை இருங்கடல்சூழ்
ஞாலத் தணிபுகழ் ஞானசம் பந்தனை நற்றமிழே
போலப் பலபுன் கவிகொண்டு சேவடி போற்றுவனே.

- நம்பியாண்டார் நம்பி.

Koviloor Digital Library

123. திருவலிவலம்

பதிக வரலாறு:

திருவாரூரை யடைந்த பிள்ளையார் புற்றிடங்கொண்ட புனிதரை வழிபட்டு, பற்றும் அன்பொடு பணிந்து இசைப்பதிகங்கள் பாடி, அடியார் கூட்டத்தோடும் அங்கிருந்தும் புறப்பட்டு, வளம்நிறைந்த வலிவலத்தை யடைந்து, மனத்துணை நாதரை வழிபட்டனர். 'பூவியல் புரிகுழல்' என்னும் இப்பதிகத்தை யருளிச் செய்தனர்,

திருவிராகம்
பண்: வியாழக்குறிஞ்சி

பதிக எண்: 123

திருச்சிற்றம்பலம்

1326. **பூவியல் புரிகுழல் வரிசிலை நிகர்நுதல்**
ஏவியல் கணைபிணை யெதிர்விழி உமையவள்
மேவிய திருவுரு வுடையவன் விரைமலர்
மாவியல் பொழில்வலி வலமுறை யிறையே. 1

1. பொ-ரை : மணம் கமழும் மலர்களையும், அவற்றில் தேனுண்ணும் வண்டுகளையும், உடைய பொழில் சூழ்ந்த வலிவலத்தில் உறையும் இறைவன், மலர்கள் அணிந்த சுருண்ட கூந்தலையும், வரிந்து கட்டப்பெற்ற வில்போன்ற நுதலையும், செலுத்துதற்கு உரிய கணை, மான் ஆகியன போன்ற கண்களையும் பெற்றுடைய உமையம்மை யோடு கூடிய திருமேனியை உடையவன்.

கு-ரை : உமாதேவி விரும்பி எழுந்தருளிய திருமேனியுடையவன், வலிவலம் உறை இறைவன் ஆவான் என்கின்றது. பூ இயல் புரிகுழல் - பூக்களையணிந்த பின்னப்பெற்ற கூந்தலையும், வரி சிலை நிகர் நுதல் - கட்டுக்களோடு கூடிய வில்லை யொத்த நெற்றியையும் உடைய உமையவள் எனத் தனித்தனிகொண்டு இயைக்க. ஏவு இயல் கணை - செலுத்தப்பெற்ற பாணம். இதனைக்கண்ணுக்கு ஒப்பாக்கியது சென்று தைத்திடும் இயல்பு பற்றி. பிணை - பெண்மான்நோக்கு. ஆகுபெயர்; இதனைக் கூறியது மருட்சிபற்றி. மா இயல் பொழில் - மாமரங்கள் செறிந்த சோலை. வண்டு நிறைந்த சோலையுமாம்.

Koviloor Digital Library

1327. இட்டம தமர்பொடி யிசைதலி னசைபெறு
பட்டவிர் பவளநன் மணியென வணிபெறு
விட்டொளிர் திருவுரு வுடையவன் விரைமலர்
மட்டமர் பொழில்வலி வலமுறை யிறையே. 2

1328. உருமலி கடல்கடை வுழியுல கமருயிர்
வெருவுறு வகையெழு விடம்வெளி மலையணி
கருமணி நிகர்கள முடையவன் மிடைதரு
மருவலி பொழில்வலி வலமுறை யிறையே. 3

2. பொ-ரை : மணம் கமழ்கின்ற மலர்கள் தேனோடு விளங்கும் பொழில் சூழ்ந்த வலிவலத்தில் உறையும் இறைவன், விருப்பத்தோடு அணியப் பெற்ற திருநீறு பொருந்தி இருத்தலின் பட்டோடு விளங்கும் பவளமணி போல் ஒளிவிடுகின்ற அழகிய ஒளி வீசும் திருமேனியை உடையவனாகத் தோன்றுகின்றான்.

கு-ரை : செம்மேனியில் திருநீறு அணியப் பெற்றமையால் பட்டோடு விளங்குகின்ற பவளமணிபோல ஒளிவிடுகின்ற திருவுரு வுடையவர் இந்நகர் இறை என்கின்றது. இட்டம் - விருப்பம். நசை - விருப்பம். பட்டு அவிர் பவள நன்மணி என - பட்டோடு விளங்கு கின்ற பவழமணி யென்றுசொல்ல.

3. பொ-ரை : மிகுதியான மணம் நிறைந்து விளங்கும் பொழில் சூழ்ந்த வலிவலத்தில் உறையும் இறைவன், தேவர்கள் அஞ்சத்தக்க கடலைக் கடைந்தபோது உலகில் உள்ள அனைத்துயிர்களும் அஞ்சத் தக்க வகையில் எழுந்த விடத்தை உண்டு, திருநீறு சண்ணித்த திருமேனி வெள்ளி மலை போல விளங்க அதனிடை நீலமணி பதித்தாற்போல் கரிய கண்டம் உடையவனாய் விளங்குபவன் ஆவான்.

கு-ரை : பாற்கடலைக் கடைந்தகாலத்து, உலகத்து உயிர்கள் யாவும் அஞ்சும்படித் தோன்றிய விடத்தை அமுதுசெய்தமையால் வெள்ளிமலையணிந்த நீலமணியை ஒத்த கழுத்தையுடையவன் இந் நகர் இறை என்கின்றது.

வெள்ளிமலை நீறுதோய்ந்த இறைவன் திருமேனிக்கும், நீலமணி அவன் கழுத்தில் விளங்கும் கறைக்கும் உவமை. மிடைதரு - நெருங்கிய. மரு - மணம்.

Koviloor Digital Library

1329. அனனிகர் சடையழ லவியுற வெனவரு
புனனிகழ் வதுமதி நனைபொறி யரவமும்
எனநினை வொடுவரு மிதுமெல முடிமிசை
மனமுடை யவர்வலி வலமுறை யிறையே. 4

1330. பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே. 5

4. பொ-ரை : வலிவலம் உறை இறைவன், அனல் போன்ற சடையழலை அவிப்பதற்கென வருவது போன்ற கங்கையையும், பிறையையும், பூ மொட்டுப் போன்ற படப்புள்ளிகளை உடைய பாம்பையும் முடிமிசை உடையவன் என்னும் நினைவோடு வரும் மனமுடைய அடியவர் வாழும் சிறப்பினை உடையது வலிவலமாகும்.

கு-ரை : முடிமீது மனமுடையவர் வலிவலமுறை இறைவர் என்கின்றது. அதற்குரிய ஏது கங்கையோ செந்தழல்போன்ற சடையின் தீயை அவிக்க வருவதுபோலப் பெருகிக்கொண்டிருக்கிறது. அக்கங்கையில் நனைந்த அரவமும் நம்மால் விழுங்கத்தக்க மதி என நினைவொடும் வருகின்றது. ஆதலால் இவை தருக்கும் பகையுமாறித் தத்தம் எல்லையில் ஒடுங்க இறைவன் எப்போதும் தலைமேற் சிந்தையராக இருக்கின்றார் என்ற நயந்தோன்றக் கூறியது, அனல் நிகர் சடை அழல் அவியுற - நெருப்பை ஒத்த சடையின் தீயானது தணிய. நனை பொறி அரவம் - நனைந்த படப்புள்ளிகளோடு கூடிய பாம்பு. நனை - கூரிய என்றுமாம்.

5. பொ-ரை : மிகுதியாக வழங்கும் கொடையே தமக்கு அழகைத் தரும் என நினையும் வள்ளற் பெருமக்கள் வாழும் வலிவலத்தில் உறையும் இறைவன், உமையம்மை பெண் யானை வடிவு கொள்ள, தான் ஆண் யானையின் வடிவு கொண்டு தன் திருவடியை வணங்கும் அடியவர்களின் இடர்களைக் கடியக் கணபதியைத் தோற்றுவித்தருளினான்.

கு-ரை : உமாதேவி பெண்யானையின் வடிவுகொள்ள, ஆண் யானையின் வடிவத்தைத் தாம்கொண்டு விநாயகப் பெருமான் அவதரிக்கத் திருவுள்ளம்பற்றிய இறைவன் வலிவலநகரான் என்கின்றது. பிடி - பெண்யானை. கரி - ஆண்யானை. வடிகொடு - வடிவத்தைக்

Koviloor Digital Library

1331. தரைமுத லுலகினி லுயிர்புணர் தகைமிக
விரைமலி குழலுமை யொடுவிர வதுசெய்து
நரைதிரை கெடுதகை யதுவரு ளினனெழில்
வரைதிகழ் மதில்வலி வலமுறை யிறையே. 6

1332. நலிதரு தரைவர நடைவரு மிடையவர்
பொலிதரு மடவர லியர்மனை யதுபுகு
பலிகொள வருபவ னெழின்மிகு தொழில்வளர்
வலிவரு மதில்வலி வலமுறை யிறையே. 7

கொண்டு. கடி கணபதி - தெய்வத்தன்மையுடைய விநாயகப் பெரு மான். கொடைவடிவினர் - வள்ளற் பெருமக்கள்.

6. பொ-ரை : அழகிய மலைபோலத் திகழும் மதில் சூழ்ந்த வலி வலத்தில் உறையும் இறைவன், மண் முதலிய அனைத்து அண்டங் களிலும் வாழும் உயிர்கள் ஆணும் பெண்ணுமாய்க் கூடிப் போகம் நுகருமாறு மணம் மிக்க கூந்தலை உடைய உமையம்மையோடு கூடியவனாய் விளங்கித் தன்னை வழிபடும் அடியவர்க்கு நரை தோலின் சுருக்கம் என்பன கெடுமாறு செய்து என்றும் இளமையோடு இருக்க அருள்புரிபவனாவான்.

கு-ரை : பிருதிவியண்டம் முதலான பல்வேறு அண்டங்களில் வாழும் உயிர்கள் யாவும் போகம் நுகரத் தாம் போகியாயிருந்து உமா தேவியோடு பொருந்துகின்ற இறைவன் இவன் என்கின்றது. சென்ற திருப்பாடலில் உமை பெண்யானையாக, இவர் ஆண்யானை யானார் என்ற வரலாற்றுக்கு ஏது கூறி ஐயம் அகற்றியது. புணர்தகை - புணர்ச்சியை எய்துவதற்காக. விரை - மணம். விரவது - கலத்தலை. தன்னை வழிபடுகின்ற அடியார்களுக்கு நரை திரை முதலியனகெட, என்றும் இளமையோடிருக்க அருளினன் என்பதாம்.

7. பொ-ரை : அழகுமிக்கக் கவின் கலை முதலான தொழில்கள் வளரும் வலிமை மிக்க மதில்களால் சூழப்பட்ட வலிவலத்தில் உறை யும் இறைவன், மண்ணை மிதிப்பதற்கே அஞ்சும் மென்மையான பாதங்களையும், அசையும் இடையினையும் உடைய அழகிய தாரு காவன மகளிர் உறையும் மனைகள் தோறும் சென்று புகுந்து பலி ஏற்கப் பிட்சாடனனாய் வருபவன்.

கு-ரை : பூமியை மிதிப்பதற்கு அஞ்சும் மெல்லிய பாதமுடைய

Koviloor Digital Library

1333. இரவண னிருபது கரமெழின் மலைதனின்
இரவண நினைதர வவன்முடி பொடிசெய்து
இரவண மமர்பெய ரருளின னகநெதி
இரவண நிகர்வலி வலமுறை யிறையே. 8

1334. தேனமர் தருமல ரணைபவன் வலிமிகும்
ஏனம தாய்நில மகழரி யடிமுடி
தானணை யாவுரு வுடையவன் மிடைகொடி
வானணை மதில்வலி வலமுறை யிறையே. 9

முனிபன்னியர் வீடுகள்தோறும் சென்று பலியேற்க வருபவன் வலி வலம் உறை இறை என்கின்றது. தரை வர நலிதரும் நடை வரும் இடை யவர் எனக்கொண்டு கூட்டுக. மடவரலியர் - பெண்கள்.

8. பொ-ரை : தன்னை வழிபட்டு இரக்கும் தன்மையாளர்களாகிய அடியவர்கட்குத் தன் மனத்தில் தோன்றும் கருணையாகிய நிதியை வழங்கும் வலிவலத்தில் உறையும் இறைவன், இராவணனின் இருபது கரங்களையும் அவனுடைய பத்துத் தலைகளையும் அழகிய கயிலை மலையின்கீழ் அகப்படுத்திப் பொடி செய்து பின் அவன் இரந்து வேண்டி நினைத்த அளவில் அவனுக்கு வேண்டுவ்ன அளித்து இரா வணன் என்ற பெயரையும் அருளியவன்.

கு-ரை : இராவணன் செருக்கடங்க, விரல் நுதியை யூன்றி அவன் இரக்க, மீட்டும் அருள் செய்தவன் இவன் என்கின்றது. இரவ ணன் - இராவணன்; எதுகை நோக்கி இடைகுறுகிற்று. இராவண்ணம் - இருக்காத வண்ணம். இரவணம் அமர் - அவன் அழுதலைப் பொருந்த. இரவு அண்ண நிகர் இறை - அடியார்கள் தத்தம் குறைகளைச் சொல்லியாசிக்க அருளும் இறைவன்.

9. பொ-ரை : வானத்தைச் சென்றடையுமாறு நெருக்கமாகக் கட்டப்பட்ட கொடிகளைக் கொண்ட மதில்களால் சூழப்பட்ட வலி வலத்தில் உறையும் இறைவன், தேன் நிறைந்த தாமரை மலர்மேல் உறையும் நான்முகன், வலிமைமிக்க பன்றியுருவினனாய் நிலத்தை அகழும் திருமால் ஆகியோர் முடியையும் அடியையும் காண முடியாத வாறு ஓங்கி உயர்ந்த திருவுருவை உடையவன்.

கு-ரை : அயனும் மாலும் அறியாத வடிவுடையான் வலிவல நாதன் என்கின்றது. ஏனம் - பன்றி. மிடை - நெருங்கிய.

Koviloor Digital Library

1335. இலைமலி தரமிகு துவருடை யவர்களும்
நிலைமையி லுணலுடை யவர்களு நினைவது
தொலைவலி நெடுமறை தொடர்வகை யுருவினன்
மலைமலி மதில்வலி வலமுறை யிறையே. 10

1336. மன்னிய வலிவல நகருறை யிறைவனை
இன்னியல் கழுமல நகரிறை யெழின்மறை
தன்னியல் கலைவல தமிழ்விர கனதுரை
உன்னிய வொருபது முயர்பொருள் தருமே. 11

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை : மலை போன்ற மதில்களால் சூழப்பட்ட வலிவலத்தில் உறையும் இறைவன், மிகுதியான மருதந்துவர் இலைகளால் பிழியப்பட்ட மிக்க துவர்நிறம் உடைய ஆடைகளை அணிந்த புத்தர்களும் நின்றுண்ணும் இயல்பினர்களாகிய சமணர்களும் நினைப்பதை அழித்துப் பொருட்டன்மையால் வலியவான பெருமை மிக்க வேதங்கள் தன்னைத் தொடருமாறு செய்தருளும் உருவினை உடையவனாய் உள்ளான்.

கு-ரை : சமணர் புத்தர்களுடைய நினைப்புத்தொலைய, வேதம் தேடும் வடிவினன் வலிவலநாதன் என்கின்றது. இலை மலிதர மிகு துவர் உடையவர்கள் - வாயில் வெற்றிலை மிக, காவியுடுத்த புத்தர்கள். நிலைமையில் உணலுடையவர்கள் - நின்றபடியே விழுங்கும் தேரர்கள்.

11. பொ-ரை : நிலைபேறுடைய வலிவல நகரில் உறையும் இறைவன்மீது இனிமையான இயல்பினை உடைய கழுமல நகருக்குத் தலைவனும் அழகிய வேதங்களையும் கலைகளையும் ஓதாமல் தானே உணர்ந்த தமிழ் விரகனுமாகிய ஞானசம்பந்தன் எண்ணிஉரைத்த இத் திருப்பதிகப் பாடல்கள் பத்தும் உயர்வான வீடு பேறாகிய செல்வத்தை அளிக்கும்.

கு-ரை : வலிவல நாதனைக் கழுமலநாதனாகிய ஞான சம்பந்தன் சொல்லிய இந்தப் பத்து உரைகளும் உயர்ந்த பொருளைத் தரும் என்கின்றது. எழில்மறை தன்னியல் கலைவல தமிழ்விரகன் - அழகிய வேதத்தையும், கலைகளையும் ஓதாதே தன்னியலாலேயே திருவருள் துணைகொண்டு உணர்ந்த தமிழ் விரகன். உன்னிய - எண்ணிச் சொன்ன. உயர்பொருள் - வீடு.

Koviloor Digital Library

124. திருவீழிமிழலை

திருவிராகம்
பண்: வியாழக்குறிஞ்சி

பதிக எண்: 124

திருச்சிற்றம்பலம்

1337. அலர்மகண் மலிதர வவனியி னிகழ்பவர்
மலர்மலி குழலுமை தனையிட மகிழ்பவர்
நலமலி யுருவுடை யவர்நகர் மிகுபுகழ்
நிலமலி மிழலையை நினையவ லவரே. 1

1338. இருநில மிதன்மிசை யெழில்பெறு முருவினர்
கருமலி தருமிகு புவிமுத லுலகினில்
இருளறு மதியின ரிமையவர் தொழுதெழு
நிருபமன் மிழலையை நினையவ லவரே. 2

1. பொ-ரை : மலர் நிறைந்த கூந்தலை உடைய உமையம்மையை இடப்பாகமாகக் கொண்டு மகிழ்பவரும், அழகிய திருமேனியை உடையவரும் ஆகிய சிவபிரானது நிலவுலகத்தே நிறைந்த புகழை உடைய மிழலை நகரை நினைய வல்லவர் திருமகளின் கருணையால் செல்வம் நிறையப் பெற்று உலகில் வாழ்வர்.

கு-ரை : திருவீழிமிழலையை நினையவல்லவரே சீதேவி சிறக்க இப்பூமியில் வாழ்பவராவர் என்கின்றது. அலர்மகள் - லஷ்மி. அவனி - பூமி. இடம் - இடப்பாகம். நலம் - அழகு. உமைதனை இடம் மகிழ்பவர் உருவுடையவர் நகராகிய வீழிமிழலையை நினைபவர் அலர் மகள் மலிதர அவனியில் நிகழ்பவர் எனக்கூட்டிப் பொருள் காண்க.

2. பொ-ரை : எண்ணற்ற உயிரினங்கள் வாழும் மண் முதலிய அனைத்துலகங்களிலும் இருளைப் போக்கும் மதி போல ஒளியும் தண்ணளியும் செய்பவரும், தேவர்களால் தொழப் பெறும் தன்னொப் பார் இல்லாதவரும் ஆகிய சிவபிரானது மிழலையை நினைப்பவர்கள் பரந்து விரிந்த இவ்வுலகில் அழகிய உருவோடு விளங்குபவர் ஆவர்.

கு-ரை : மண்முதலாகிய அண்டத்தில் மயக்கமலமற்ற உண்மை ஞானிகளும் தேவர்களும் தொழும் உவமனிலியாகிய இறைவன்

Koviloor Digital Library

1339. கலைமக டலைமக னிவனென வருபவர்
அலைமலி தருபுன லரவொடு நகுதலை
இலைமலி யிதழியு மிசைதரு சடையினர்
நிலைமலி மிழலையை நினையவ லவரே. 3

1340. மாடமர் சனமகிழ் தருமன முடையவர்
காடமர் கழுதுக ளவைமுழ வொடுமிசை
பாடலி னவில்பவர் மிகுதரு முலகினில்
நீடமர் மிழலையை நினையவ லவரே.
4

மிழலையை நினைய வல்லவர்களே இவ்வுலகத்து அழகான உருவுடையவர்கள் என்கின்றது. எழில் - அழகு. கரு மலிதரு மிகு புவி - பிறவி மிக்க இப்பூமி. இருள் - ஆணவம். நிருபமன் - உவமம் இல்லாதவர். ஒப்பிலி என்பதாம்.

3. பொ-ரை : அலைகள் நிறைந்த கங்கை நதி, பாம்பு, தலை யோடு, வில்வஇலை, மிக்க கொன்றை ஆகியன பொருந்திய சடை முடியினனாகிய சிவபிரான் உறையும் நிலைபேறு உடைய திருவீழி மிழலையை நினைய வல்லவர் கலைமகளின் தலைவன் இவன் என்னும் ஒவ்வொருவரும் சொல்லத்தக்க தகுதியை உடையவராய்க் கல்வி நலம் வாய்க்கப் பெறுவர்.

கு-ரை : மிழலையை நினைவார் கலைமகள் கணவனாவார் என்கின்றது. நகுதலை - கபாலம். இலைமலி இதழி - இலைகளோடு நிறைந்த கொன்றை. இலை - இதழுமாம்; நிலை - நிலைபேறு; அழியாமை.

4. பொ-ரை : இடுகாட்டில் வாழும் பேய்கள் ஒலிக்க முழவு முதலிய கருவிகள் ஒலிக்க இசைபாடி நடம் நவில்பவனாகிய சிவபிரான் இனிதாக எழுந்தருளியதும் இவ்வுலகிடைப் பெருமை யோடு நீண்ட காலமாக விளங்குவதுமாகிய திருவீழிமிழலையை நினைய வல்லவர்கள் அருகில் விரும்பி உறையும் சுற்றத்தினர் மகிழும் மனம் உடையவ ராவர்.

கு-ரை : பேயோடாடும் பெம்மான், இவ்வுலகில் இனிதமரும் மிழலையை நினைபவர் சுற்றம் மகிழ இருப்பர் என்கின்றது. மாடு - பக்கம். மாடமர்சனம் - சுற்றம். காடு - சுடுகாடு. கழுது - பேய்.

Koviloor Digital Library

1341. புகழ்மகள் துணையினர் புரிகுழ லுமைதனை
இகழ்வுசெய் தவனுடை யெழின்மறை வழிவளர்
முகமது சிதைதர முனிவுசெய் தவன்மிகு
நிகழ்தரு மிழலையை நினையவ லவரே. 5

1342. அன்றின ரரியென வருபவ ரரிதினில்
ஒன்றிய திரிபுர மொருநொடி யினிலெரி
சென்றுகொள் வகைசிறு முறுவல்கொ டொளிபெற
நின்றவன் மிழலையை நினையவ லவரே. 6

1343. கரம்பயில் கொடையினர் கடிமல ரயனதொர்
சிரம்பயில் வறவெறி சிவனுறை செழுநகர்

5. பொ-ரை : சுருண்ட கூந்தலை உடைய உமையம்மையை இகழ்ந்த தக்கனுடைய அழகிய வேத நெறிகளை ஓதி வளர்க்கும் தலையைச் சினந்து சிதைத்தருளியவனாகிய சிவபிரானது புகழ் பொருந்திய திரு வீழிமிழலையை நினைய வல்லவர் புகழ்மகளைப் பொருந்துவர்.

கு-ரை : உமாதேவிவ்ய இகழ்ந்த பிரமனது சிரத்தைக் கொய்த சிவபெருமான் எழுந்தருளிய இத்தலத்தை நினையவல்லவர் கீர்த்தி மாதைப் பொருந்துவர் என்கின்றது. இகழ்வு செய்தவன் உடை எழில் மறைவழி வளர் முகம் - இகழ்ந்த பிரமனது அழகிய வேதநெறி வளரும் முகத்தை; என்றது வேதஞ்சொல்லும் வாயையுடைய தலையை என்பதாம்.

6. பொ-ரை : தவம் செய்து அரிதாகப் பெற்ற ஒன்று பட்ட முப் புரங்களைத் தேவர்கள் வேண்டுகோட்படி ஒருநொடிப் பொழுதில் எரி உண்ணுமாறு சிறுமுறுவல் செய்து புகழ் பெற்றவனாகிய சிவபிரானது திருவீழிமிழலையைநினைய வல்லவர் பகைவர்கட்குச் சிங்க ஏறு போன்ற வன்மை உடையவராவர்.

கு-ரை: திரிபுரம் எரித்த சிவபெருமானுடைய இந்நகரை நினைய வல்லவர் பகைவர்களாகிய யானைகட்குச் சிங்கம் போல்பவர் என் கின்றது. அன்றினர் - பகைவர். அரி - சிங்கம். சிறுமுறுவல் - புன்னகை.

7. பொ-ரை : மணங்கமழும் தாமரை மலர்மேல் உறையும் பிரமனுடைய தலைகளில் ஒன்றை அவனது உடலில் பொருந்தா

Koviloor Digital Library

வரம்பயில் கலைபல மறைமுறை யறநெறி
நிரம்பினர் மிழலையை நினையவ லவரே. 7

1344. ஒருக்கிய வுணர்வினொ டொளிநெறி செலுமவர்
அரக்கனன் மணிமுடி யொருபது மிருப்து
கரக்கன நெரிதர மலரடி விரல்கொடு
நெருக்கினன் மிழலையை நினையவ லவரே. 8

1345. அடியவர் குழுமிட வவனியி னிகழ்பவர்
கடிமல ரயனரி கருதரு வகைதழல்
வடிவுரு வியல்பினொ டுலகுக ணிறைதரு
நெடியவன் மிழலையை நினையவ லவரே. 9

வண்ணம் கொய்த சிவபிரான் உறையும் செழுமையான நகராய். மேன்மை மிக்க கலைகள் பலவற்றோடு வேத விதிகளையும், அற நெறிகளையும் அறிந்தவர்கள் நிரம்பிய திருவீழிமிழலையை நினைய வல்லவர் தம் கைகளால் பலகாலும் கொடுக்கும் வள்ளன்மையோடு கூடிய உள்ளத்தைப் பெறுவர்.

கு-ரை : மிழலை நினைவார் வள்ளலாவார் என்கிறது. கரம் பயில் கொடையினர் - கை பலகாலும் பயின்ற வள்ளன்மையையுடையவராவர். கடிமலர் - மணமுள்ளமலர். பயில்வு அற எறி சிவன் எனப் பிரிக்க. வரம் - மேன்மை.

8. பொ-ரை : இராவணனுடைய மணிமுடி தரித்த பத்துத் தலைகளும், இருபது கரங்களும் நெரியுமாறு த்ன்மலர் போன்ற திருவடியின் விரலைக் கொண்டு நெரித்தருளியவனாகிய சிவபிரானது திருவீழிமிழலையை நினைய வல்லவர் ஒன்றுபட்ட உணர்வோடு ஒளி நெறியாகிய ஞானமார்க்கத்தில் செல்லுபவராவர்.

கு-ரை : மிழலையை நினைவார் ஒன்றுபட்ட உணர்வோடு ஞானமார்க்கத்தை நாடுவர் என்கின்றது. ஒருக்கிய - ஒன்றுபட்ட. ஒளிநெறி - சிவஞானமார்க்கம். கரக்கனம் - கைகளாகிய கூட்டம்.

9. பொ-ரை : மணம் மிக்க தாமரை மலர்மேல் விளங்கும் பிரமனும், திருமாலும் நினைதற்கு அரிய வகையில் தழல் வடிவோடு எல்லா உலகங்களிலும் நிறைந்தருளிய பெரியோனாகிய சிவபிரானது

Koviloor Digital Library

1346. மன்மத னெனவொளி பெறுமவர் மருதமர்
வன்மலர் துவருடை யவர்களு மதியிலர்
துன்மதி யமணர்க டொடர்வரு மிகுபுகழ்
நின்மலன் மிழலையை நினையவ லவரே. 10

1347. நித்திலன் மிழலையை நிகரிலி புகலியுள்
வித்தக மறைமலி தமிழ்விர கனமொழி
பத்தியில் வருவன பத்திவை பயில்வொடு
கற்றுவல் லவருல கினிலடி யவரே. 11

திருச்சிற்றம்பலம்

திருவீழிமிழலையை நினைய வல்லவர்கள், அடியவர் பலர் தம்மைச் சூழ இவ்வுலகில் இனிது வாழ்வர்.

கு-ரை : இந்நகரை நினைவார் அடியார் கூட்டத்தோடு அவனியில் நிகழ்பவர் என்கின்றது. குழுமிட - கூட. கருதருவகை - தியானிக்க முடியாதவண்ணம். உலகுகள் நிறைதரு நெடியவன் என்றது திருமாலும் நெடியவனாயினும் அவன் நின்ற இடமும் காலமும் நீங்க ஏனைய இடத்தும் எக்காலத்தும் நிறைந்தான் அல்லன்; சிவன் என்றும் எங்கும் பேரொளியாய் நிறைந்தான் என்பது விளக்க வந்தது.

10. பொ-ரை : மருதத்தினது வலிய மலரால் துவர் ஏற்றிய காவி ஆடையை உடுத்த புத்தர்களும் அறிவற்றவர். சமணர்களும் துன்மதியாளர்கள். இவர்கள் இருவராலும் அறிதற்கு அரிய மிக்க புகழினை உடைய நின்மலனாகிய சிவபிரானின் மிழலையை நினைப்பவர்கள் மன்மதன் போன்ற அழகினைப் பெறுவார்கள்.

கு-ரை : புத்தர்கள் மதியிலிகள்; சமணர்களோ துன்மதிகள்; இந்த இருவகையாராலும் தொடர்பரிய புகழுடைய இறைவன் மிழலையை நினையவல்லவர் மன்மதன்போல அழகு பெறுவர் என்கின்றது. மருது அமர் வன்மலர் துவர் உடையவர் - மருத மலரால் ஊட்டிய காவியாடையை யுடையவர்கள்.

11. பொ-ரை : முத்துப் போன்றவனாகிய சிவபிரானது திருவீழி மிழலையை ஒப்பற்ற புகலிப் பதியில் வாழும் சதுரப்பாடுகளோடு வேதங்களிலும் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் வல்லவன் ஆகிய ஞானசம்பந்தனது பத்தியால் விளைந்த இப்பதிகப் பாடல்கள்

Koviloor Digital Library

பத்தையும் பயின்று கற்று வல்லவர் உலகினில் சிறந்த அடியவராய் விளங்குவர்.

கு-ரை: அன்பால் விளைந்த இப்பாடல்கள் பத்தையும் வல்லவர் உலகில் சிறந்த அடியாராவர் என்கின்றது. நித்திலன் - முத்துப் போன்றவன். பத்தியில் வருவன என்பது பிறப்பால் விளைந்தன அன்று; அன்பால் வருவன என்றதாம். அடியவராதலைக்காட்டிலும் சிறந்த பேறு இல்லாமையால் ஒவ்வொரு பாடல்தோறும் ஒவ்வொரு பயன் கூறிவந்த சுவாமிகள் இப்பதிகப் பயனாக அடியராவார் என்றார்கள்; இதனைக் காட்டிலும் சிறந்த பேறு இல்லை என்பதனைத் தெரிவிக்க.

அழகிய மாமுலையம்மை பிள்ளைத்தமிழ்

அட்டதிக் கினும் உலகில் இடுசராசரம் மெலிந்து
ஆருயிர் பதைப்ப வாடி
அங்கமே சோர்ந்திடும் வறுமை வந்திடும் காலம்
அவ்வினை வளர் கன்னலின்
கட்டுதீம் பால்கொழுங் கனிசெந்நெலன்னங்
களிப்பினொடு தொண்டர் உண்ணக்
கண்காட்சி பெறுபேட்டை கட்டிய நவ நிதியமும்
கணக்கில்பல சரக்கும் நிறையச்
செட்டியப்பார்என்று பேர் கொண்டு விற்பதிற்
சேர்வட்ட வாசி பார்த்துத்
தினமும் இப் படிஉனது கணவன் விற்பனை செயச்
செய்து திகழ் சம்பந்தர் சொற்
சட்டமிகும் அப்பர் சொற்பாடல் கொண்டருள் செல்வி
சப்பாணி கொட்டியருளே
தங்கப்படிக்காசு பங்கிட்டு வைத்தகிளி
சப்பாணி கொட்டியருளே.

Koviloor Digital Library

125. திருச்சிவபுரம்

பதிக வரலாறு:

21 - ஆம் பதிகம் பார்க்க.

திருவிராகம்
பண்: வியாழக்குறிஞ்சி

பதிக எண்: 125

திருச்சிற்றம்பலம்

1348. கலைமலி யகலல்கு லரிவைத னுருவினன்
முலைமலி தருதிரு வுருவம துடையவன்
சிலைமலி மதில்பொதி சிவபுர நகர்தொழ
இலைநலி வினையிரு மையுமிடர் கெடுமே. 1

1349. படரொளி சடையினன் விடையினன் மதிலவை
சுடரெரி கொளுவிய சிவனவ னுறைபதி
திடலிடு புனல்வயல் சிவபுர மடையநம்
இடர்கெடு முயர்கதி பெறுவது திடனே. 2

1. பொ-ரை : மேகலை பொருந்திய அகன்ற அல்குலை உடைய உமையம்மை இடப்பாகமாகப் பொருந்திய திருவுருவினனும், அதனால் ஒரு கூற்றில் நகில் தோன்றும் திருவுருவை உடையவனும் ஆகிய சிவபிரான் எழுந்தருளிய கருங்கற்களால் இயன்ற மதில்களால் பொதியப் பட்டுள்ள சிவபுர நகரைத் தொழுதால் நம்மை நலியும் வினைகள் இல்லை. இருமையிலும் இடர் கெடும்.

கு-ரை : தனது திருமேனியிலேயே உமையையும் உடையவன்; அதனால் ஒருபாகத்தை முலைவிளங்கும் உருவமுடையவன்; அவனது சிவபுரநகரைத் தொழ வருத்தும்வினை இல்லை; இருமையும் இடர்கெடும் என்கின்றது. கலை - ஆடை, அரிவை - உமாதேவி. நலி வினை இலை இடர் இருமையும் கெடும் எனக் கூட்டுக.

2. பொ-ரை : ஒளி விரிந்த சடையினனும், விடை ஊர்தியனும் அசுரர்களின் மும்மதில்களை விளங்கும் எரி கொள்ளுமாறு செய் தழித்தவனுமாகிய சிவன் உறையும் பதி ஆகிய, இடையிடையே

Koviloor Digital Library

1350. வரைதிரி தரவர வகடழ லெழவரு
நுரைதரு கடல்விட நுகர்பவ னெழில்திகழ்
திரைபொரு புனலரி சிலதடை சிவபுரம்
உரைதரு மடியவ ருயர்கதி யினரே. 3

1351. துணிவுடை யவர்சுடு பொடியின ருடலடு
பிணியடை விலர்பிற வியுமற விசிறுவர்
தணிவுடை யவர்பயில் சிவபுர மருவிய
மணிமிட றனதடி யிணைதொழு மவரே. 4

திடலைக் கொண்ட நீர் சூழ்ந்த வயல்களை உடைய சிவபுரத்தை அடைந்து தொழுதால் நம் இடர் கெடும். உயர்கதி பெறுவது உறுதி.

கு-ரை : ஒளிபொருந்திய சடையினன்; இடபத்தையுடையுவன்; திரிபுரமெரித்த வீரன் உறைபதி சிவபுரம்; அதனையடைய நம் துன்பம் தொலையும்; உயர்கதி பெறுவது உறுதி என்கின்றது. திடல் - மேடு.

3. பொ-ரை : மந்தரமலை மத்தாகச் சுழல அதில் கயிறாகச் சுற்றிய வாசுகி என்னும் பாம்பின் வயிற்றிலிருந்து அழலாகத் தோன்றி, நுரையுடன் வெளிப்பட்ட விடம், கடலில் பொருந்த, ஆலகாலம் என்னும் அந்நஞ்சினை உண்டவனுடைய, அழகு விளங்கக் கரையில் மோதும் நீர் நிறைந்த அரிசிலாற்றங்கரையில் விளங்கும் சிவபுரத்தின் பெயரைக் கூறுபவர் உயர் கதிகளைப் பெறுவர்.

கு-ரை : மந்தர மலை சுற்ற, வாசுகியின் உடல் அழலெழ வந்த நுரையோடு கூடிய விடத்தை நுகர்ந்தவனது சிவபுரத்தைப் புகழ்பவர் உயர்கதியினர் என்கின்றது. வரை - மந்தரமலை. வரை திரிதர அரவு அகடு அழல் எழ வரு நுரை தரு கடல் விடம் நுகர்பவன் எனவும், எழில் திகழ் திரைபொரு புனல் அரிசிலது அடை சிவபுரம் எனவும் பிரித்துப் பொருள் கொள்க.

4. பொ-ரை : அடக்கமுடைய மக்கள் வாழும் சிவபுரத்தில் எழுந்தருளிய நீலமணிபோலும் மிடற்றினை உடைய சிவபிரானுடைய திருவடிகளை வணங்குவோர் துணிபுடையவராவர். திருநீறு பூசும் அடியவர் ஆவர். உடலை வருத்தும் பிணிகளை அடையார். பிறவியும் நீங்கப் பெறுவர்.

கு-ரை : அடங்கிய மனத்து அடியவர்கள் பயில்கின்ற சிவபுரஞ்

Koviloor Digital Library

1352. மறையவன் மதியவன் மலையவ னிலையவன்
நிறையவ னுமையவண் மகிழ்நட நவில்பவன்
இறையவ னிமையவர் பணிகொடு சிவபுரம்
உறைவென வுடையவ னெமையுடை யவனே. 5

1353. முதிர்சடை யிளமதி நதிப்புனல் பதிவுசெய்
ததிர்கழ லொலிசெய வருநட நவில்பவன்
எதிர்பவர் புரமெய்த விணையிலி யணைபதி
சதிர்பெறு முளமுடை யவர்சிவ புரமே. 6

சேர்ந்த நீலகண்டப் பெருமானது திருவடியைத் தொழுபவர்கள் துணிவு டையர்; நீற்றினர்; பிணியிலர்; பிறவியும் அறப்பெறுவர் என்கின்றது. உடல் அடு பிணி - உடலில் வருத்துகின்ற நோய். விசிறுவர் - வீசுவர். தணிவு - பணிவு. மணி - நீலம்.

5. பொ-ரை : தேவர்கள் செய்யும் பணிவிடைகளை ஏற்றுச் சிவ புரத்தைத் தனது உறைவிடமாகக் கொண்டவனும் எம்மை அடிமை யாகக் கொண்டவனுமாகிய சிவபிரான் வேதங்களை அருளியவன். பிறை சூடியவன். கயிலை மலையைத் தனது இடமாகக் கொண்டவன். நிலைபேறு உடையவன். எங்கும் நிறைந்தவன். உமையம்மை கண்டு மகிழும் நடனத்தைப் புரிபவன். எல்லோர்க்கும் தலைவன்.

கு-ரை : சிவபுரம் உறைபவன் எம்மையும் ஆளாக உடையவன் என்கின்றது. நிலை - அழியாமை. உறைவு - உறையும் இடம்.

6. பொ-ரை : முதிர்ந்த சடையின்மீது இளம்பிறை, கங்கை நதி ஆகியவற்றைப் பொருந்த அணிந்து, காலில் அசையும் கழல்கள் ஒலிக்குமாறு அரிய நடனம் புரிபவனும், தன்னை எதிர்த்த அசுரர்களின் முப்புரங்களை எய்தழித்த ஒப்பற்றவனும் ஆகிய சிவபிரான் எழுந்தருளிய தலம், திறமையான மனம் உடைய அடியவர் வாழும் சிவபுரமாகும்.

கு-ரை : முதிர் சடையிலே மதியையும் கங்கையையும் பதியச் செய்து நடம் செய்பவன்; திரிபுரம் எரித்த சிவன்; அவன் உறைபதி சிவ புரம் என்கின்றது. எதிர்பவர் - பகைவர். இணையிலி - ஒப்பற்றவன். சதிர் - சாமார்த்தியம்.

Koviloor Digital Library

1354. வடிவுடை மலைமகள் சலமக ளுடனமர்
பொடிபடு முழையதள் பொலிதிரு வுருவினன்
செடிபடு பலிதிரி சிவனுறை சிவபுரம்
அடைதரு மடியவ ரருவினை யிலரே. 7

1355. கரமிரு பதுமுடி யொருபது முடையவன்
உரநெரி தரவரை யடர்வுசெய் தவனுறை
பரனென வடியவர் பணிதரு சிவபுர
நகரது புகுதனம் முயர்கதி யதுவே. 8

1356. அன்றிய லுருவுகொ ளரியய னெனுமவர்
சென்றள விடலரி யவனுறை சிவபுரம்

7. பொ-ரை : அழகிய வடிவினைக் கொண்ட மலைமகள் நீர் மகளாகிய கங்கை ஆகியோருடன் புள்ளி பொருந்திய மானினது தோல் விளங்கும் அழகிய உருவத்தைக் கொண்டவனும், தீ நாற்றம் வீசும் மண்டையோட்டில் பிச்சையை ஏற்றுத் திரிபவனுமாகிய சிவ பிரான் உறையும் சிவபுரத்தை அடையும் அடியவர் நீங்குதற்கரிய வினைகள் இலராவர்.

கு-ரை : மலைமகளும் அலைமகளும் உடனுறையும் உருவுடை யன்; பலிக்குத்திரிபவன் உறைபதி சிவபுரம்; அதனையடைபவர் வினையிலராவர் என்கின்றது. சலமகள் - கங்கை. உழை அதள் - மான் தோல். செடி படு பலி - முடைநாற்றம் கமழும் பிச்சை. செடி - ஆகு பெயராய்த் தலைஓட்டைக் குறித்தது.

8. பொ-ரை : இருபது கைகளையும், பத்துத் தலைகளையும் உடையவனாகிய இராவணனின் மார்பு நெரியுமாறு கயிலை மலை யால் அடர்த்தருளிய சிவபிரான் உறைவதும், மேலான பரம் பொருள் இவனேயாவான் என அடியவர் வழிபாடு செய்வதும் ஆகிய சிவ புரத்தை அடைதல் நமக்கு உயர் கதியைத் தரும்.

கு-ரை : சிவபுரம் புகுதலே நமக்கு உயர்கதியாம் என்கின்றது. உரம் - மார்பு. அடர்வு - நெருக்குதல். சிவபுரநகர் அது புகுதல் நம் உயர் கதியதுவே எனப்பிரிக்க.

9. பொ-ரை : தங்கள் செயலுக்கு மாறுபட்ட தன்மையொடு கூடிய பன்றி அன்னம் ஆகிய வடிவங்களைக் கொண்ட திருமால் பிரமன் ஆகி

Koviloor Digital Library

என்றிரு பொழுதுமுன் வழிபடு மவர்துயர்
ஒன்றிலர் புகழொடு முடையரிவ் வுலகே. 9

1357. புத்தரொ டமணர்க ளறவுரை புறவுரை
வித்தக மொழிகில விடையுடை யடிகடம்
இத்தவ முயல்வுறி லிறைவன சிவபுரம்
மெய்த்தக வழிபடல் விழுமிய குணமே. 10

1358. புந்தியர் மறைநவில் புகலிமன் ஞானசம்
பந்தன தமிழ்கொடு சிவபுர நகருறை

யோர் சென்று அளவிடுதற்கு அரியவனாய் ஓங்கி நின்ற சிவபிரான் உறையும் சிவபுரம் என்று இருபொழுதுகளிலும் நினைத்து வழிபடும் அடியவர் ஒரு துன்பமும் இலராவர். இவ்வுலகில் புகழோடும் பொருந்தி வாழ்வர்.

கு-ரை : சிவபுரத்தை இருவேளையிலும் வழிபடுவார் துன்பஞ் சேரார்; இவ்வுலகிற் புகழொடும் பொருந்துவர் என்கின்றது. அன்று இயல் உருவு - கோபித்த இயல்பினையுடைய வடிவம், சென்று அள விடல் அரியவன் உறை சிவபுரம் எனப்பிரிக்க.

10. பொ-ரை : புத்தர்களும் சமணர்களும் கூறுவன அற வுரைக்குப் புறம்பான உரைகளாகும், அவை அறிவுடைமைக்கு ஏற்ப மொழியாதவை. அவற்றை விடுத்து விடையூர்தியை உடைய தலைவனாகிய சிவபிரானை நோக்கிச் செய்யும் இத்தவத்தைச் செய் யும் முயற்சியை மேற்கொள்வீராயின் அவ்விறைவனது சிவபுரத்தைச் சென்றடைந்து வழிபடுதல் சிறந்த குணங்களை உங்கட்குத் தரும்.

கு-ரை : புறச் சமயிகளுடைய புறவுரைகள் வித்தகம் ஒழியா; ஆதலால் சிவபுரத்தைத் தொழுதல் உங்கட்குச் சிறந்த குணமாம் என் கின்றது. அவர்களது அறவுரையாகத் தோன்றுவன யாவும் புறம்பான உரைகளாம்; அதுவேயும் அன்றிச் சதுரப்பாடு உடையனவும் அல்ல. மெய்த்தக - உண்மையாக.

11. பொ-ரை : அறிவுடையவர்கள் ஓதும் வேதங்களை ஓதி உணர்ந்த புகலி மன்னனாகிய ஞானசம்பந்தன் தமிழைக் கொண்டு சிவபுர நகரில் உறையும் எந்தையைப் போற்றி உரை செய்த இவ்விசை

Koviloor Digital Library

எந்தையை யுரைசெய்த விசைமொழி பவர்வினை
சிந்திமு னுறவுயர் கதிபெறு வர்களே. 11

திருச்சிற்றம்பலம்

மாலையை ஓதி வழிபடுபவர் வினைகள் முற்பட்டு நீங்க உயர்கதி பெறுவார்கள்.

கு-ரை : திருஞானசம்பந்தப் பெருமான் சிவபுர நகருறை எந்தையைச் சொன்ன இப்பதிகத்தை இசையோடு மொழிபவர்கள் வினையைக் கெடுத்து உயர்கதி அடைவார்கள் என்கின்றது. புந்தியர் - புத்தியையுடையவர்கள். சிந்தி - கெடுத்து.

ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்

கொடிநீடு விடையுடைய பெருமானை அடிபரவு
குணமேதை கவுணியர்கள் குலதீப சுபசரிதன்
அடியேன திடர்முழுதும் அறவீசு தமிழ்விரகன்
அணியான புகலிநக ரணையான கனைகடலின்
முடிநீடு பெருவலைகொ டலையூடு புகுவன்நுமர்
முறையேவு பணிபுரிவ னணிதோணி புனைவனைவை
படியாரு நிகரரிய வரியாரு மதர்நயனி
பணைவார்மென் முலைநுளையர் மடமாது னருள்பெறினே.

பெறுபயன் மிகப்புவியு ளருளுவன பிற்றைமுறை
பெருநெறி அளிப்பனபல் பிறவியை ஒழிச்சுவன
உறுதுய ரழிப்பனமுன் உமைதிரு வருட்பெருக
உடையன நதிப்புனலி னெதிர்பஃறி உய்த்தனபுன்
நறுமுறு குறைச்சமணை நிரைகழு நிறுத்தியன
நனிகத வடைத்தனது னருவிடம் அகற்றியன
துறுபொழில் மதிற்புறவ முதுபதிமன் ஒப்பரிய
தொழில்பல மிகுத்ததமிழ் விரகன் கவித்தொகையே.

– நம்பியாண்டார் நம்பி.

Koviloor Digital Library

126. திருக்கழுமலம்

பதிக வரலாறு:

(117 - ஆம் பதிகம் பார்க்க)

திருத்தாளச்சதி
பண்: வியாழக்குறிஞ்சி

பதிக எண்: 126

திருச்சிற்றம்பலம்

1359. பந்தத்தால் வந்தெப்பால் பயின்றுநின்ற வும்பரப்
பாலேசேர்வா யேனோர்கான் பயில்கண முனிவர்களுஞ்
சிந்தித்தே வந்திப்பச் சிலம்பின்மங்கை தன்னொடுஞ்
சேர்வார்நாணா ணீள்கயிலைத் திகழ்தரு பரிசதெலாஞ்
சந்தித்தே யிந்தப்பார் சனங்கணின்று தங்கணாற்
றாமேகாணா வாழ்வாரத் தகவுசெய்த வனதிடங்
கந்தத்தா லெண்டிக்குங் கமழ்ந்திலங்கு சந்தனக்
காடார்பூவார் சீர்மேவுங் கழுமல வளநகரே. 1

1. பொ-ரை: வினைவயத்தால் மண்ணுலகம் வந்து எல்லா இடங்களிலும் பொருந்தி அவ்விடங்களே தமக்கு இருப்பிடமாய் வாழும் தேவர்களும், மற்றவர்களாகிய கானகங்களில் வாழும் முனிவர்களும், மனத்தால் சிந்தித்து வழிபட்டு உய்தி பெறுமாறு, மலையரையன் மகளாகிய பார்வதி தேவியாரோடு சேர்ந்தவராய், நாளும் நாளும் நீண்டுயர்ந்த கயிலைமலையில் விளங்கும் திருவோலக்கச் சிறப்புக்கள் எல்லாவற்றையும் இந்த உலகில் வாழும் மக்கள் தங்கள் கண்களால் தாமே கண்டு வாழ்பவராகப் பெருங் கருணையோடு காட்சி நல்குபவனது இடம் எட்டுத் திசைகளிலும் மணம் கமழ்ந்து விளங்கும் மலர்களோடு கூடிய சந்தன மரக்காடுகள் சிறந்து வளர்ந்து செழிக்கும் கழுமல நகராகும்.

கு-ரை: தேவர்களும் முனிவர்களும் தியானிக்க உமையோடு பொருந்தி, கைலையில் எழுந்தருளியிருக்கின்ற காட்சியை இந்த மண்ணுலகத்தவர்களும் தம் கண்ணாலே கண்டு வாழ அருளியவனது இடம் கழுமலவளநகர் என்கின்றது. பந்தத்தால் வந்து எப்பால் பயின்று நின்ற உம்பர் என்றது ஆணவமலக் கட்டினால் வந்து எவ்விடத்தும்

Koviloor Digital Library

1360. பிச்சைக்கே யிச்சித்துப் பிசைந்தணிந்தவெண்பொடிப்
பீடார்நீடார் மாடாரும் பிறைநுத லரிவையொடும்
உச்சத்தா னச்சிப்போ றொடர்ந்தடர்ந்த வெங்கணே
றூராவூரா நீள்வீதிப் பயில்வொடு மொலிசெயிசை
வச்சத்தா னச்சுச்சேர் வடங்கொள்கொங்கை மங்கைமார்
வாராநேரே மாலாகும் வசிவல வவனதிடங்
கச்சத்தான் மெச்சிப்பூக் கலந்திலங்கு வண்டினங்
காரார்காரார் நீள்சோலைக் கழுமல வளநகரே. 2

உறைகின்ற தேவர்கள் வினையால் பந்திக்கப்பெற்ற இந்திரன் பிரமன் முதலியோர் கழுமலம் வந்து பூசித்தமைபோல்வன. அப்பாலே சேர்வாய் ஏனோர் - அப்பாலும் அடிசேர்ந்தார்களாய சிவஞானிகள். புறம்பான நெறிகளிற் சேர்ந்த பிறர் என்றுமாம். கான் பயில் கண முனிவர்கள் - காட்டுறை வாழ்க்கையையுடைய கூட்டமான முனிவர்கள். சிலம்பு - மலை. ஈண்டு இமயம். நாள்நாள் நீள் கயிலைத் திகழ்தரு பரிசது எலாம் - நாள்தோறும் திருக்கயிலையில் வீற்றிருக்கும் திருவோலக்கச் சிறப்பெல்லாவற்றையும். பார் - பூமி. தாமே காணா - தாங்களே கண்டு; என்றது அவ்வளவு எளிமை காட்டி நின்றது. கந்தம் - மணம்.

2. பொ-ரை : பிச்சை ஏற்பதை விரும்பி நீரில் குழைத்தணிந்த வெண்பொடியினராய்ப் பெருமை பொருந்தியவரும் புகழால் விரிந்தவருமாய், அருகில் விளங்கும் பிறை போன்ற நெற்றியின ளாகிய உமையம்மையோடு உச்சிப்போதினை விரும்பித் தன்னை எதிர்ப்பவரைத் தொடர்ந்து கொல்லும் தறுகண்மையை உடைய விடையேற்றின் மீதமர்ந்து, ஊர்ந்து ஊர்ந்து நீண்ட தெருக்களில் விருப்பத்தோடு பாடுவதால், நச்சுதலுக்குரியனவும் முத்துவடங்கள் அணிந்தனவுமாகிய கொங்கைகளை உடைய மகளிர் அவ்விசையைக் கேட்டு வந்து தமக்கு முன்னே விரக மயக்கம் கொள்ளுமாறு வசீகரிக் கும் வன்மை பொருந்திய சிவபிரானது இடம். மேலைக் காற்றினால் அல்லது ஒற்றுமையோடு பூக்களைக் கலந்து விளங்கும் வண்டினங் களோடு கருமை நிறம் பொருந்திய மேகங்கள் தவழும் நீண்ட சோலை களை உடைய கழுமல வளநகராகும்.

கு-ரை : பிச்சையை விரும்பி, நீரிற்குழைத்த நீற்றையணிந்து. உமாதேவியோடும் உச்சிப்போதில் விடையேறி, வீதியில் பாடிச் செல்லும் தமது இசையைக் கேட்ட மகளிர் மால் கொள்ளச் செய்பவ

Koviloor Digital Library

1361. திங்கட்கே தும்பைக்கே திகழ்ந்திலங்கு மத்தையின்
சேரேசேரே நீராகச் செறிதரு சுரநதியோ
டங்கைச்சேர் வின்றிக்கே யடைந்துடைந்த வெண்டலைப்
பாலேமேலே மாலேயப் படர்வுறு மவனிறகும்
பொங்கப்பேர் நஞ்சைச்சேர் புயங்கமங்கள் கொன்றையின்
போதார்தாரே தாமேவிப் புரிதரு சடையனிடங்
கங்கைக்கே யும்பொற்பார் கலந்துவந்த பொன்னியின்
காலேவாரா மேலேபாய் கழுமல வளநகரே. 3

னது இடம் கழுமலம் என்கின்றது. பீடு - பெருமை. நீடு ஆர் - புகழான் நீடுதலைப் பொருந்தும். மாடு ஆரும் - இடப்பக்கத்து இருக்கும். உச்சத்தான் நச்சி - உச்சிப் போதினனாக விரும்பி. போல்: அசை. ஊரா - ஊர்ந்து. ஊர் ஆம் நீள் வீதி - ஊரின் கண்ணதாகிய நீண்ட திரு வீதியில். ஒலிசெய் இசை வச்சத்தால் - பாடலை வைத்ததால், மங்கை மார் - முனிபன்னியர். வாரா - வந்து. மாலாகும் - மயக்கமுறும் வண்ணம். வசிவலஅவன் - வசீகரிக்கும் வன்மை யுடையவன். கார் ஆர் கார் ஆர் - கருமை நிறம் பொருந்திய மேகங்கள் படிந்த.

3. பொ-ரை : திங்கள், தும்பை, விளங்கித் தோன்றும் ஊமத்த மலர் ஆகியவற்றைச் சேர்த்துச் செறிந்த நீராகிய கங்கை நதி, அழகிய கையில் விளங்குவதையன்றி உடைந்த கபாலம், முடிகாண மயக்க உணர்வுடையனாய் மேலே பறந்து சென்ற பிரமனாகிய அன்னத்தின் இறகு, நஞ்சு பொங்கும் பாம்பு, கொன்றை மாலை ஆகியவற்றை அணிந்து, வளைத்துக் கட்டிய சடையை உடைய சிவபிரானது இடம்; கங்கைக்கு நிகரான அழகோடு கலந்து வந்த பொன்னி நதியின் வாய்க்கால்கள் பாய்ந்து வளஞ் சேர்க்கும் கழுமல வளநகராகும்.

கு-ரை : பிறை, தும்பை, ஊமத்தை இவைகள் சேர்ந்து சேர்ந்து, தேவகங்கையோடு, திருக்கரத்திற்சேராதே திருமுடியிற் சூடப்பெற்ற உடைந்த கபாலத்தின்பக்கல், அன்னத்தின் இறகையும், பாம்பையும், கொன்றை மாலையையும் அணிந்த புரிசடைப் பெருமானிடம் கழுமலம் என்கின்றது. திங்கட்கு தும்பைக்கு என்ற நான்கன் உருபுகள் ஏழாம் வேற்றுமைப் பொருளில் வந்தன. திங்களிலும் தும்பையிலும் ஊமத்தத்திலும் சேர்ந்து சேர்ந்து புனலாகப் பொருந்திய சுரநதி எனப் பொருள் முடிபு காண்க. மேலே மால் ஏயப் படர்வுறும் அவன் இறகும் - மேலே மயக்கம் பொருந்தப் பறந்து செல்லும் மகாசூரனுடைய இறகும். புயங்கமங்கள் - பாம்புகள். தார் - மாலை. கங்கைக்கு ஏயும் பொற்பு

Koviloor Digital Library

1362. அண்டத்தா லெண்டிக்கு மமைந்தடங்கு மண்டலத்
தாறேவேறே வானாள்வா ரவரவ ரிடமதெலாம்
மண்டிப்போய் வென்றிப்போர் மலைந்தலைந்த வும்பரு
மாறேலாதார் தாமேவும் வலிமிகு புரமெரிய
முண்டத்தே வெந்திட்டே முடிந்திடிந்த விஞ்சிசூழ்
மூவாமூதூர் மூதூரா முனிவுசெய்த வனதிடங்
கண்டிட்டே செஞ்சொற்சேர் கவின்சிறந்த மந்திரக்
காலேயோவா தார்மேவுங் கழுமல வளநகரே. 4

ஆர் கலந்து வந்த பொன்னி - கங்கைக்குப் பொருந்திய புனிதமாகிய அழகைப் பொருந்திக் கலந்து ஒழுகும் காவிரி. கால் - வாய்க்கால்.

4. பொ-ரை : இம்மண்ணுலகில் இருந்துகொண்டே எண் திசைகளையும் உள்ளடக்கிய அனைத்துலகங்களுக்கும் சென்று வெற்றி கொண்டு வான் உலகை ஆளும் தேவர்களையும் நெருங்கிச் சென்று வெற்றிப்போர் செய்து, அத்தேவர்களாலும் எதிர்க்க இயலாதவர் களாய் விளங்கிய அவுணர்களின் வலிமை மிக்க முப்புரங்களைத் தன் நெற்றி விழியால் வெந்து முடியுமாறு செய்து அவ் இஞ்சி சூழ்ந்த அழியாத பழமையான மூன்று ஊர்களும் முதுமை உடையவாய் அழியுமாறு சினந்த சிவபிரானது இடம், செஞ்சொற்களைக் கண்டு தேர்ந்து தொகுத்த அழகிய மந்திரங்களை மூச்சுக் காற்றாகக் கொண்டு உருவேற்றி வருவோர் வாழும் கழுமலமாகிய வளநகராகும்.

கு-ரை : இம்மண்ணுலகிலிருந்து, வானாள்வார் இடம் எல்லாம் போய்ச் சண்டைசெய்த தேவர்களும் மாறு ஏற்றுப் பொருதலாகாத திரிபுராதிகள் மேவிய முப்புரம் எரிய நெற்றிக் கண்ணால் எரித்து, மூதூர் மூதூராகா வண்ணம் முடிவு செய்தவன் இடம் கழுமலம் என்கின்றது. அண்டத்தால் எண்திக்கும் அமைந்து அடங்கும் மண் தலத்து ஆறே - இவ்வண்டத்தில் எட்டுத் திக்கும் பொருந்தி அடங்கிய பூமியின் வழியாக. வேறேவான் ஆள்வாரது இடம் எலாம் - தனித்த தேவர்களிடம் எல்லாவற்றையும். மண்டிப்போய் - நெருங்கிச்சென்று. உம்பரும் மாறு ஏலாதார் - தேவர்களாலும் எதிர்க்க இயலாத அசுரர் கள். வலிமிகுபுரம் - வரபலமிக்க முப்புரம். முண்டத்தே வெந்திட்டே முடிந்து இடிந்த - நெற்றியால் வெந்து அழிந்து இடிந்த. முண்டம் ஆகுபெயராக நெற்றிக்கண்ணையுணர்த்தியது. இஞ்சி - மதிள். மூவா மூதூர் மூதூரா முனிவு செய்தவனது இடம் - மூப்பையடையாத

Koviloor Digital Library

1363. திக்கிற்றே வற்றற்றே திகழ்ந்திலங்கு மண்டலச்
சீறார்வீறார் போரார்தா ரகனுட லவனெதிரே
புக்கிட்டே வெட்டிட்டே புகைந்தெழுந்த சண்டத்தீப்
போலேபூநீர் தீகான்மீப் புணர்தரு முயிர்கடிறஞ்
சொக்கத்தே நிர்த்தத்தே தொடர்ந்தமங்கை செங்கதத்
தோடேயாமே மாலோகத் துயர்களை பவனதிடங்
கைக்கப்பேர் யுக்கத்தே கனன்றுமிண்டு தண்டலைக்
காடேயோடா வூரேசேர் கழுமல வளநகரே. 5

தொன்மையான நகர் இன்றும் தொன்மையானதாகா வண்ணம் கோபித்தவனது இடம். செஞ்சொல் - நேரே பொருள் பயக்கும் சொல்.

5. பொ-ரை : எட்டுத் திசைகளுக்கும் காவலர்களாகிய தெய்வங்கள் அங்கங்கே இருந்து காவல் செய்து விளங்கும் இம் மண்ணுலகைச் சீறி அழித்தற்கு வந்த வலிய போர் வல்ல தாருகன் உடலை அவன் எதிரிலேயே புகுந்து வெட்டி வீழ்த்தி, புதைந்தெழுந்து வந்த ஊழித் தீப் போலத் தோன்றி மண் நீர் தீ கால் விண் ஆகிய ஐம்பூத வடிவாய் விளங்கும் இவ்வுலகில் வாழும் உயிர்களை அழிக்கச் சிவந்த கோபத்தோடு சொக்கநிருத்தத்தில் நடனமாடி வந்த காளியின் கோபத்தை அவளோடு எதிர் நடனம் ஆடி வென்று பெரிதான இவ்வுலக உயிர்களின் துயரைக் களைந்தவன் ஆகிய சிவபிரானது இடம் பலரும் வெறுக்கக் கனன்று வந்த பேரூழிக் காலத்தும் செறிந்த சோலைகளாகிய காடுகளோடு அழியாத ஊராக விளங்கும் கழுமல வளநகராகும்.

கு-ரை : திக்குப்பாலகர்கள் அங்கங்கே விளங்க, இவ்வுலகத்துச் சீறி வந்த தாரகன் உடலை அவனெதிரிலேயே வெட்டி, விளைந்த ஊழித்தீயைப் போன்ற காளியின் கோபமானது ஐம்பூதச் சேர்க்கையாலான உலகத்துற்ற உயிர்களுக்குப் பொருந்தாதபடி உலகத்துயரைக் களைபவனது இடம் கழுமலநகர் என்கின்றது.

திக்கில் தேவு அற்று அற்றே திகழ்ந்திலங்கு மண்டலம் - திக்குப் பாலகர்கள் அங்கங்கே அத்தன்மையோடு விளங்குகின்ற உலகம். சீறு ஆர் - கோபித்தலைப் பொருந்திய. சீறு ஆர் முதலியவற்றைத் தனித் தனி தாரகனோடு ஒட்டுக. வீறு - தனித்திருத்தல். சண்டத்தீப் போலத் தொடர்ந்த மங்கையினது எனக்கூட்டுக. உயிர்கள் திறம் ஏயாமே துயர் களைபவன் என இயைக்க. சொக்கத்தே: சொக்கம் என்ற நிருத்தம். நிர்த்தத்தே தொடர்ந்த மங்கை - சொக்க நிருத்தத்தில் தோற்றுத்

Koviloor Digital Library

1364. செற்றிட்டே வெற்றிச்சேர் திகழ்ந்ததும்பி மொய்ம்புறுஞ்
சேரேவாரா நீள்கோதைத் தெரியிழை பிடியதுவாய்
ஒற்றைச்சேர் முற்றற்கொம் புடைத்தடக்கை முக்கண்மிக்
கோவாதேபாய் மாதானத் துறுபுகர் முகவிறையைப்
பெற்றிட்டே மற்றிப்பார் பெருத்துமிக்க துக்கமும்
பேராநோய்தா மேயாமைப் பிரிவுசெய்த வனதிடங்
கற்றிட்டே யெட்டெட்டுக் கலைத்துறைக் கரைச்செலக்
காணாதாரே சேராமெய்க் கழுமல வளநகரே. 6

தொடர்ந்த காளி. செம்கதத்தோடு ஏயாமே - சிவந்த கோபத்தோடு பொருந்தாதபடி. கைக்க - வெறுக்க. பேர்யுக்கத்தே கனன்றும் - பெரிய ஊழித்தீயில் கனன்றும். மிண்டு தண்டலைக் காடே ஓடா - அழியாது மிண்டிய குளிர்ந்த காடுகள் அகலாத. இது நெருப் பூழியிலும் நிலைத்தநகரம் என்பதறிவித்தது.

6. பொ-ரை : சலந்தரன், திரிபுரத்தசுரர் முதலானவர்களைக் கொன்று வெற்றி பெற்று விளங்கும் வலிமை பொருந்திய ஆண் யானை வடிவு கொண்ட தன்னைச் சேர்தற் பொருட்டு வரும் நீண்ட மலர்மாலை அணிந்த உமையம்மை பெண் யானை வடிவு கொண்டு வந்து கூட முற்றிய ஒரு கொம்பையும் நீண்ட கையையும் மூன்று கண்களையும், இடைவிடாது மிகுந்து பொழியும் மதநீரையும் புள்ளிகளோடு கூடிய முகத்தையும் உடைய விநாயகனைப் பெற்றெடுத்து இவ்வுலகில் வாழும் மக்கட்குப் பெரிய துன்பங்களும் நோய்களும் வந்து பொருந்தாதவாறு செய்து காத்தருளிய சிவபிரானது இடம், அறுபத்து நான்கு கலைகளையும் முற்றக் கற்றுக் கரை கண்டு அவற்றின் வழி ஒழுகுவோர் சேர்ந்துறைவதும், அவ்வாறு ஒழுகாதார் அடைய முடியாததுமாகிய கழுமல வளநகராகும்.

கு-ரை : உமாதேவி பெண் யானையின் வடிவாய், அசுரர் களைக் கொன்று வெற்றி சேர்ந்த ஆண் யானையினது தோள்களைச் சேர்ந்து ஒற்றைக் கொம்புடைய யானைமுகக் கடவுளைப் பெற்று இவ்வுலகம் துன்பம் எய்தாவகை பிரிவு செய்தவனது இடம் கழுமல வள நகர் என்கின்றது.

செற்றிட்டே வெற்றிச்சேர் திகழ்ந்த தும்பி - சலந்தரன், திரிபுராதிகள் முதலிய அசுரர்களைக் கொன்று வெற்றியடைந்து விளங்கிய ஆண்யானையினது. மொய்ம்புறும் சேரே வாரா -

Koviloor Digital Library

1365.பத்திப்பேர் வித்திட்டே பரந்தவைம் புலன்கள்வாய்ப்
பாலேபோகா மேகாவாப் பகையறும் வகைநினையா
முத்திக்கே விக்கத்தே முடிக்குமுக் குணங்கள்வாய்
மூடாவூடா நாலந்தக் கரணமு மொருநெறியாய்ச்
சித்திக்கே யுய்த்திட்டுத் திகழ்ந்தமெய்ப் பரம்பொருள்
சேர்வார்தாமே தானாகச் செயுமவ னுறையுமிடங்
கத்திட்டோர் சட்டங்கங் கலந்திலங்கு நற்பொருள்
காலேயோவா தார்மேவுங் கழுமல வளநகரே. 7

தோளைப் பொருந்தும் புணர்ச்சியில் வந்து, நீள் கோதைத் தெரியிழை - நீண்ட மாலையணிந்த உமாதேவியார். பிடியது வாய் - பெண்யானையின் வடிவாய். ஒற்றைச்சேர் முற்றல் கொம்புடைத் தடக்கை - ஒற்றையாகச் சேர்ந்த முற்றிய கொம்பினையுடைய துதிக்கையையும், மிக்கு ஓவாதேபாய் மாதானத்து உறு புகர் முக இறையைப் பெற்றிட்டு - மிகுந்து இடைவிடாது பாய்கின்ற பெரிய மதநீரோடு கூடிய யானைமுகக்கடவுளைப் பெற்று. இப்பார் பெருத்து மிக்க துக்கமும் - இவ்வுலகம் மிகப் பெரிய துக்கத்தையும். பேரா நோய் தாம் ஏயாமை - நீங்காத நோயையும் பொருந்தாதபடி. எட்டெட்டுக் கலைத்துறை கரை செலக் கற்றிட்டு - அறுபத்துநான்கு கலைகளையும் முடிவுபோகக் கற்று. காணாதார் - கரை காணாதார். சேரா - அடையாத.

7. பொ-ரை : அன்பாகிய விதையை ஊன்றி, பரந்துபட்ட சுவை முதலிய ஐம்புலன்கள் வழி ஒழுகாது தம்மைக் காத்துக் காமம் முதலிய பகைகளைக் கடிந்து முத்திக்கு இடையூறாகும் முக்குணங்களின்வழி ஒழுகாது அந்தக்கரணங்கள் நான்கையும் ஒரு நெறிப்படுத்திச் சிந்தனையில் செலுத்தி விளங்கும், மெய்ப்பரம்பொருளாகிய தன்னையே எண்ணுபவர்களைத் தானாகச் செய்யும் சிவபெருமான் உறையும் இடம், ஆறு அங்கங்களையும் கற்றுணர்ந்தோர் தம்மோடு கலந்து விளங்கும் சிவபரம் பொருளின் திருவடிகளை இடைவிடாது தியானித்து வாழும் கழுமல வளநகராகும்.

கு-ரை : அன்பாகிற விதையை இட்டு, புலன்வழி பொருந்தாது, பகையாறையும் கடிந்து, முத்திக்கு இடையூறாகிய சாத்விக இராஜஸ தாமஸங்களாகிய மூன்று குணங்கள் மூடாதபடி அந்தக்கரணம் ஒரு நெறிப்பட சிந்திக்க, மெய்ப்பொருளையே தியானிக்கின்ற சிவ ஞானிகளைச் சிவமாகவே செய்யும் சிவன் உறையும் இடம் கழுமலவளநகர் என்கின்றது.

Koviloor Digital Library

1366. செம்பைச்சே ரிஞ்சிச்சூழ் செறிந்திலங்கு பைம்பொழிற்
சேரேவாரா வாரீசத் திரையெறி நகரிறைவன்
இம்பர்க்கே தஞ்செய்திட் டிருந்தரன் பயின்றவெற்
பேரார்பூநே ரோர்பாதத் தெழில்விர லவணிறுவிட்
டம்பொற்பூண் வென்றித்தோ ளழிந்துவந்த னஞ்செய்தாற்
காரார்கூர்வாள் வாணாளன் றருள்புரி புவனதிடங்
கம்பத்தார் தும்பித்திண் கவுட்சொரிந்த மும்மதக்
காரார்சேறார் மாவீதிக் கழுமல வளநகரே. 8

பரந்த ஐம்புலன்கள் வாய்ப்பாலே போகாமேகாவா - எங்கும் பரவியுள்ள சுவை முதலாகிய ஐம்புலன்களிடம் சென்று பற்றாதபடி காத்து, பகை அறும்வகை நினையா - காமமாதிய உட்பகை ஆறையும் நீங்கும்வகை நினைத்து. முத்திக்கே விக்கத்தே முடிக்கும் முக்குணங்கள் வாய்மூடாவூடா - முத்திக்கு இடையூறாக முடிக்கும் முக் குணங்களின் வழியை மூடிப் பிணங்கி. நால் அந்தக்கரணமும் ஒரு நெறியாய்ச் சித்திக்கே உய்த்திட்டு - மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் அந்தக் கரணங்கள் நான்கையும் ஒருநெறிப்படுத்திச் சிந்தனையில் செலுத்தி. திகழ்ந்த மெய்ப்பொருள் சேர்வார் - விளங்கிய சிவபரம்பொருளைத் தியானிப்பவர்கள். தாமே தானாகச்செயுமவன் - அவர்களனைவரையும் சிவமாகச் செய்யும் இறைவன். சட்டங்கம் கத்திட்டோர் கலந்திலங்கும் காலே ஓவாதார் - ஆறு வேதாங்கங்களை யும் ஓதியுணர்ந்தோர்கள் ஒன்றி விளங்கும் சிவமாய நற்பொருளின் திருவடியை இடைவிடாது தியானிப்பவர்கள்.

8. பொ-ரை : செம்பினால் இயன்ற மதில்களால் சூழப்பெற்றுச் செறிந்து விளங்குவதும், பசுமையான பொழில்கள் சேர்ந்ததும், நீண்ட கடல்களின் அலைகளால் மோதப் பெறுவதுமாகிய இலங்காபுரி நகருக்கு இறைவனாகிய இராவணன், இவ்வுலக மக்கட்குத் துன்பங்கள் செய்து வாழ்ந்ததோடு சிவபிரான் உறையும் கயிலை மலையைப் பெயர்க்க முற்பட்டபோது அழகிய மலர் போன்ற ஓர் திருவடி விரல் ஒன்றை ஊன்றி அழகிய பொன்னணிகலன்கள் பூண்ட அவனது வெற்றி நிறைந்த தோள் வலிமையை அழித்து அவன் பிழை உணர்ந்து வந்தனம் செய்த அளவில் அவனுக்கு அரிய கூரிய வாளையும் நீண்ட வாழ்நாளையும் அப்பொழுதே அருள் புரிந்தருளிய சிவபெருமானது இடம்; கம்பங்களில் கட்டிய யானைகளின் வலிய கன்னங்கள் முதலியன பொழிந்த மும்மதங்களால் நிலம் கரிய சேறாகும் வீதிகளை உடைய கழுமலநகராகும்.

Koviloor Digital Library

1367. பன்றிக்கோ லங்கொண்டிப் படித்தடம் பயின்றிடப்
பானாமாறா னாமேயப் பறவையி னுருவுகொள
ஒன்றிட்டே யம்புச்சே ருயர்ந்தபங் கயத்தவ
னோதானோதா னஃதுணரா துருவின தடிமுடியுஞ்
சென்றிட்டே வந்திப்பத் திருக்களங்கொள் பைங்கணின்
றேசால்வேறோ ராகாரந் தெரிவுசெய் தவனதிடங்
கன்றுக்கே முன்றிற்கே கலந்திலந் நிறைக்கவுங்
காலேவாரா மேலேபாய் கழுமல வளநகரே. 9

கு-ரை : செம்பினால் இயன்ற மதில் சூழந்த, மிகச் செறிவாக விளங்கும் பசிய பொழில் சேர்ந்து வரும் கடற்றிரைவந்து மோதும் நகருக்குத் தலைவனாகிய இராவணன், இவ்வுலக மக்களுக்குத் துன்பம் விளைத்ததோடுமட்டுமின்றி. சிவனுறையும் கைலையையும் எடுத் தலைச்செய்ய, மலர்போன்ற திருவடியின் விரல் ஒன்றால் ஊன்றி, பொன்னணிகள் பூண்ட தோளை நெரியச் செய்து, அவன் வணங்க வாளும் வாழ்நாளும் அருள்செய்தவனது இடம் கழுமலம் என்கின்றது. செம்பைச் சேர் இஞ்சி - செப்புத் தகடு வேய்ந்த முகட்டினையுடைய மதில். வாரிசம் - கடல். இம்பர் - இவ்வுலகத்தவர். ஏர் ஆர் - எழுச்சியை அடையச் செய்து; அதாவது எடுக்க என்ப தாகும். வந்தனம் செய்தாற்கு ஆர் ஆர் கூர்வாள் வாழ்நாள் அன்று அருள்புரிபவன் எனப் பிரிக்க. கம்பத்து ஆர் தும்பி திண் கவுள் சொரிந்த மும்மதக் கார் ஆர் சேறு ஆர் மாவீதி - கம்பத்திற்கட்டிய யானையினது திண்ணிய கன்னத்தினின்று சொரிந்த மும்மதத்தாலாகிய கரிய சேறு பொருந்திய பெரிய வீதி.

9. பொ-ரை : திருமால் பன்றி உருவம் எடுத்து இவ்வுலகைப் பிளந்து சென்று பாதாளம் வரைத் தேடியும், நீரில் தோன்றிய தாமரை மலரில் உறையும் நான்முகன் வேதங்களை ஓதுபவனாக இருந்தும் அதன் உண்மைப் பொருளை உணராது அன்னப்பறவை வடிவம் எடுத்து வான வெளியில் பறந்து சென்று தேடியும் தம் எதிரே தோன்றிய வடிவினது அடிமுடிகளைக் காணாது அயர்த்துச் சென்று வழிபட அவர்களின் பசுமையான கண்களுக்கு அழகிய நீலகண்டத்தோடு தனது வல்லமையால் வேறோர் வடிவம் தெரியச் செய்தவனது இடம் ஆன் கன்றுகள் முன்றிலில் நிறைந்து கலந்து நின்று இல்லத்தை நிறைக்கவும் வாய்க்கால்கள் வந்து மேல் ஏறிப் பாயவும் வளத்தால் நிறைந்து விளங்கும் கழுமல வளநகராகும்.

Koviloor Digital Library

1368. தட்டிட்டே முட்டிக்கைத் தடுக்கிடுக்கி நின்றுணாத்
தாமேபேணா தேநாளுஞ் சமணொடு உழல்பவரும்
இட்டத்தா லத்தந்தா னிதன்றதென்று நின்றவர்க்
கேயாமேவா யேதுச்சொல் லிலைமலி மருதம்பூப்
புட்டத்தே யட்டிட்டுப் புதைக்குமெய்க்கொள் புத்தரும்
போல்வார்தாமோ ராமேபோய்ப் புணர்வுசெய் தவனதிடங்
கட்டிக்கால் வெட்டித்தீங் கரும்புதந்த பைம்புனற்
காலேவாரா மேலேபாய் கழுமல வளநகரே. 10

கு-ரை : திருமால் பன்றியுருவெடுத்துப் பூமியைத் தோண்டியும், பங்கயத்தவன் அன்னமாய்ப் பறந்தும் அடிமுடி தேடியும் அறியாதே வணங்க, அக்கினிப்பிழம்பாகிய வேறோர் வடிவம் காட்டிய இறைவனிடம் கழுமலம் என்கின்றது. மால் தான் பன்றிக்கோலம் கொண்டு, இப் படித்தடம் பயின்று இடப்பான் ஆம் அம்புசேர் உயர்ந்த பங்கயத்தவனோ தான் மேய பறவையின் உருவுகொள ஒன்றிட்டு உருவினது அடிமுடியும் அஃது உணராது சென்றிட்டே வந்திப்ப, திருக்களம்கொள் பைங்கண் நின்று ஏசால், வேறு ஓர் ஆகாரம் தெரிவு செய்தவனிடம் எனப் பிரித்துக் கூட்டிப் பொருள்கொள்க. படித்தடம் - பூமி. இடப்பானாம் - தோண்டுவானாம். மால் - திருமால். தான்மேய பறவை - தான் ஊர்தியாக விரும்பிய பறவை. அம்பு - நீர். தான் ஓதான் - தான் வேதங்களை ஓதியவனாக இருந்தும் அடிமுடியும் உணராது எனக் கூட்டுக. ஏசால் - வல்லமையால். ஆகாரம் - வடிவம். முன்றிற்கே கன்றுக்கே கலந்து இல்லம் நிறைக்கவும் - முன்றிலில் கன்று கலந்து வீட்டை வளத்தால் நிறைக்கவும், காலே வாரா மேலே பாய் - வாய்க்கால் வந்து மேலேறிப் பாயும் கழுமலம் என்க.

10. பொ-ரை: தட்டைக் கையில் ஏந்தி வளைந்த கையில் தடுக்கை இடுக்கி நின்று உண்டு ஆடைகளால் தம்மைப் பேணாது நாள்தோறும் வருந்தித் திரியும் சமணர்களும், தம் விருப்பப்படி கேட்பவர்க்குத் தெளிவு ஏற்படாதவாறு பொருள் இது அன்று அதுதான் என்று வாய்க்கு வந்தபடி காரணம் கூறுபவரும், இலைகள் நெருங்கிய மருதமரத்தின் பூவை அரைத்துப் பின்புறத்தே பூசிச் சாயமூட்டிய ஆடையைத் தம் உடலின் பின்பாகத்தே சுற்றிக்கொண்டு உடலை மறைப்போரும் ஆகிய புத்தர்களும் போல்பவர் கண்டறியாதவாறு சென்று எழுந்தருளியுள்ள சிவபிரானது இடம் வெல்லக்கட்டிகளைத் தரும் இனிய கரும்பை வெட்டியதால் அக்கரும்பு தந்த இனிய சாறு வாய்க்கால் வழியே வந்து மேல் ஏறிப் பாயும் வளமுடைய கழுமல வளநகராகும்.

Koviloor Digital Library

1369. கஞ்சத்தே னுண்டிட்டே களித்துவண்டு சண்பகக்
கானேதேனே போராருங் கழுமல நகரிறையைத்
தஞ்சைச்சார் சண்பைக்கோன் சமைத்தநற் கலைத்துறை
தாமேபோல்வார் தேனேரார் தமிழ்விர கனமொழிகள்
எஞ்சத்தேய் வின்றிக்கே யிமைத்திசைத்த மைத்தகொண்
டேழேயேழே நாலேமூன் றியலிசை யிசையியல்பா
வஞ்சத்தேய் வின்றிக்கே மனங்கொளப் பயிற்றுவோர்
மார்பேசேர்வாள் வானோர்சீர் மதிநுதன் மடவரலே. 11

திருச்சிற்றம்பலம்

கு-ரை: சமணரும் புத்தரும் போல்வார் தம்மை அறியா வண்ணம் மறைப்பித்த இறைவனிடம் இது என்கின்றது. தட்டு இட்டே, முட்டிக்கை தடுக்கு இடுக்கி நின்று உணா தாமே பேணாதே நாளும் சமணொடும் உழல்பவரும் - மண்டையை ஏந்தி கைமுட்டியில் தடுக்கை இடுக்கிக்கொண்டு, நின்றுகொண்டு உண்டு, தாம் ஒன்றையும் பேணாதவர்கள்போல நாளும் சமண் கொள்கையோடு சுற்றுபவர் களும், இட்டத்தால் அத்தம் தான் இது அன்று அது என்று நின்றவர்க்கு ஏயாமே வாய் ஏது சொல் - விருப்பப்படி பொருள் இது அன்று அதுதான் என்று கேட்பவர்க்குப் பொருந்தாமல் வாயில் வந்தபடி காரணம் சொல்லும் (புத்தர்). இலை மலி மருதம்பூப் புட்டத்தே அட்டு இட்டு புதைக்கும் மெய் கொள் புத்தர் - மருதமரப் பூவை அரைத்து பின்பக்கத்துப் பூசி உடலை மறைக்கும் புத்தர்கள். ஓராமே - ஆராயாமல். புணர்வு - சூழ்ச்சி. கால் வெட்டி கட்டித் தீங்கரும்பு தந்த பைம்புனல் காலேவாரா மேலேயாய் - அடியை வெட்டிக் கட்டி இனிய கரும்புகள் தந்த சுவைநீர் கால்வழி வந்து மேலேறிப்பாயும் நகர் என்க.

11. பொ-ரை : தாமரை மலரிலுள்ள தேனைக் குடித்துக் களித்த வண்டுகள் சண்பக மரச்சோலைகளில் உள்ள தேன் வண்டுகளோடு போரிடும் கழுமல வளநகர் இறைவனைத் தஞ்சமாகச் சார்ந்துள்ள சண்பை நகர்த் தலைவனும் தமிழ் விரகனுமாகிய ஞானசம்பந்தன் குறைவின்றிப் பாடியமைத்த தேனுக்கு நிகரான இப்பதிகப் பாடல்களை நல்ல கலைகளில் துறைபோய்த் தமக்குத் தாமே நிகராய் இருபத்தொரு பண்முறையினால் இயல்பாக வஞ்சனையின்றி மனம் பொருந்தப் பாடுபவர்களின் மார்பினில் தேவர்களால் போற்றப் பெறும் சிறப்புமிக்க பிறை போன்ற நெற்றியினை உடைய திருமகள் சேர்வாள்.

Koviloor Digital Library

கு-ரை : கழுமல நகரிறையைத் திருஞானசம்பந்தன் சொன்ன மொழிகளை இசையோடு குறையின்றி மனங்கொளப் பயிற்றுவோர் மார்பைத் திருமகள் சேர்வாள் எனப் பயன்கூறியது. கஞ்சத்தேன் உண்டிட்டு - தாமரையிலுள்ள தேனைக் குடித்து. சண்பகக் கானே தேனே போராரும் - சண்பகக் காட்டிலுள்ள வண்டோடு பொரும். தஞ்சை சார் - அடைக்கலமாகச் சாருகின்ற. தேன் நேர் ஆர் தமிழ் விரகன மொழிகள் - தேனுக்கு ஒப்பான தமிழ் விரகருடைய சொற்கள். எஞ்ச தேய்வு இன்றி - குறைவின்றி. ஏழே ஏழே நாலே மூன்று இயல் இசை இசை இயல்பா - இருபத்தொரு பண் முறையால். வானோர் சீர் மதி நுதல் மடவரல் - தேவர்களது சிறப்போடுகூடிய மதிபோன்ற நெற்றியினையுடைய திருமகள்.

திருமுறை கண்ட புராணம்

சேடர்மலி காழிநகர் வேந்தர் தாமும்
தேவர்புகழ் திருத்தோணிச் சிவனார் பங்கின்
பீடுடைய உமைமுலைப்பால் அருளால் உண்டு
பிஞ்ஞகனைச் சினவிடைமேற் பெருகக் கண்டு
தோடுடைய செவியன் முதல் கல்லூர் என்னுந்
தொடைமுடிவாப் பரசமயத் தொகைகள் மாளப்
பாடினார் பதிகங்கள் பாவில் ஒன்றாம்
பதினாறா யிரம்உளதாப் பகரும் அன்றே.

அரும்மறையைச் சிச்சிலிபண்டு அருந்தத்தேடும்
அதுபோல்அன் றிதுஎன்றும் உளதாம் உண்மைப்
பரபதமும் தற்பரமும் பரனே அன்றிப்
பலரில்லை என்றெழுதும் பனுவல் பாரின்
எரியினிடை வேவாதுஆற் றெதிரே ஓடும்
என்புக்கும் உயிர்கொடுக்கும் இடுநஞ்சாற்றும்
கரியைவளை விக்கும்கல் மிதக்கப் பண்ணும்
கராம்மதலை கரையில்உறக் காற்றும் காணே.

- உமாபதி சிவாசாரியார்.

Koviloor Digital Library

127. திருப்பிரமபுரம்

பதிக வரலாறு:

(117- ஆம் பதிகம் பார்க்க)

ஏகபாதம்
பண்: வியாழக்குறிஞ்சி

பதிக எண்: 127

திருச்சிற்றம்பலம்

1370. பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான். 1

1371. விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன்
விண்டலர் பொழிலணி வேணு புரத்தரன். 2

இப்பதிகத்துக்குப் பழைய உரையில் அளித்துள்ள குறிப்புரையே விளக்கமாக இருத்தலால் பொழிப்புரை எழுதப்பெறவில்லை.

1. கு-ரை : ஞானாகாசமாகிய பராசத்தியான பரிபூரணத்தை மிகுதியாக வியந்து அந்தப் பராசத்திக்கு அதீதமாகிய சுகமே வடிவாய் முதல் நடு இறுதி காணப்படாத வஸ்து எந்தப் பெரியோன். மேல்நிலமாகிய ஆகாசத்தின்கண்ணே யோடா நின்ற கங்காதேவியை விரும்பித் திருமுடியிலே வைத்தவன், எம்மை நீங்காத நிலைமையை யுடைய எமது உயிர். பிரமரூபத்திலே எண்ணப்பட்ட என்னை முத்தியிலேவிடுகைக்கு அமையாத விருப்பமுள்ளவனாய் என்னை ஒக்கவந்தவன். பிரமபுரம் என்கின்ற சீகாழிப்பதியிலே வீற்றிராநின்ற கர்த்தாவானவன் என்னுடைய சுவாமி. பெரியோனும் எனக்கு உயிரானவனும் என்னை யொக்கவந்தவனும் சீகாழிப்பதியில் வீற்றிருக்கும் கடவுள் எனக் கூட்டிப் பொருள் கொள்க.

2. கு-ரை : அஷ்டகுல பர்வதங்களும் ஒலிசிறந்த தரிசு மணி யாகவும், அகில லோகங்களையும் உள்ளே அகப்படுத்தும் தன்மைய

Koviloor Digital Library

1372. புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே
புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே
புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே
புண்ட ரிகத்தவன் மேவிய புகலியே. 3

1373. விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்

வாயும், பெரிதாயும் உள்ள திருச்சிலம்பினைத் தரித்துள்ளவன். நூபுரம் எனற்பாலது நுபுரம் எனக் குறுகிநின்றது. விஷ்ணுவின் புறனுரை யாகிய சிவதூஷணத்தை அரசமரத்தினீழலில் அவனுடன் இருந்து விரும்பியுள்ள முப்புரங்களைச் சங்கரித் துள்ளவன். அண்ணி எனற் பாலது அணி என இடைக்குறையாய் நின்றது. தேவர்கள் கற்பகப் பூஞ்சோலை மலர்களால் அர்ச்சிக்கப் படுகின்ற தேவேந்திரனுடைய. ஏணு எனற்பாலது ஏனு என நீண்டது. புரந்தரன் எனற்பாலது புரத்தரன் என வலித்துநின்றது. இதழ்கள் விண்டு மலர்கின்ற சோலை சூழ்ந்த சீகாழிப்பதிக்குக் கர்த்தாவாயுள்ளவன். தேவேந்திரன் மூங்கில் வழியாகவந்து பூசித்ததால் வேணுபுரம் என்னும் பெயர்பெற்றது. சிலம்பினைத் தரித்துள்ளவரும், முப்புரத்தை எரித்தவரும், தேவேந்திர னுடைய சோலைசூழ்ந்த வேணுபுரத்தில் வீற்றிருக்கும் இறைவர் எனக் கூட்டி உரைத்துக் கொள்க.

3. கு-ரை : இதயகமலத்திலிருந்து இடையறாத ஆனந்தம் பொழியப்பட்டு என்னை மலபோதத்தில் தள்ளாமல் எனக்கு அடைக்கலப் பொருளாயுள்ளவன். ஆன்மாக்களுக்கு இரக்ஷையாக முண்டம்போலிருந்த திருநீற்றை அணியப்பட்ட மிக்க கருணை யானவனே யான்பாடும் பாடலை உவந்துள்ளவன். புலிக்காலும் புலிக்கையும் பெற்றுள்ள வியாக்கிரபாத முனிவருக்கு ஞானானந்த மாகிய நாடகத்தைக் கனகசபையிலே ஆடல்செய்யும் பரத வித்தை யைக் கற்றுள்ளான். வியம் எனற்பாலது விய எனக் கடைகுறைந்து நின்றது. கீழ்ச்சொன்ன லீலைகளெல்லாம் செய்கின்ற சிவன் தனது இச்சையால் பொருந்தியிருக்கும் ஊர் பிரமா பூசித்த புகலி என்னும் திருப்பதி.

4. கு-ரை : கன்று குணிலாக எறிந்து விளவின் கனியைக் கொண்ட நாரணனைப் பிரகாசஞ்செய்யப்பட்டு நின்மலமாயிருந் துள்ள தனது பெரிய திருமேனியிலே ஒன்று பாதியாக வைத்துள்ளான்

Koviloor Digital Library

விளங்கொளி திகழ்தரு வெங்குரு மேவினன்
விளங்கொளி திகழ்தரு வெங்குரு மே்வினன். 4

1374. சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன்
சுடர்மணி மாளிகைத் தோணி புரத்தவன். 5

என்க. தீ எனற்பாலது தி எனக் குறுகிநின்றது. கழுதரு எனற்பாலது கழ்தரு என நின்றது. மாறுபாடாய்க் கதறப்பட்ட புத்தனது தலையிலே அக்கினியைச் சொரிந்து மிக்க பயத்தோடும் விழுகின்ற இடியை விழும்படி ஏவிப் புத்தரைவேரறுத்தானும் தானேயன்றியானன் றாகும். தீ எனற்பாலது தி எனவும், காழ்தரு எனற்பாலது கழ்தரு எனவும், ஏங்கு எனற்பாலது எங்கு எனவும் குறுகிநின்றன. தனது பரி பூரணத்திலே தன்னையிழந்து இரண்டாய் விசுவமுருகித் தான் விஷமாகத் தூஷணப்பட்டு நிற்கின்ற எனக்கும் குருமூர்த்தியாய் வந்து என் பிறவியை ஒழித்துத் தனது பேரின்பமாகிய பரிபூரணத்திலே எனது அடிமை குலையாமல் இரண்டறவைத்தவன். கீழ்ச்சொல்லிப் போந்த செய்திகளெல்லாமுடையன் எத்தன்மையனோ என்னில் எங்கும் பிரகாசியாநின்ற கீர்த்தியினால் சிறக்கப்பட்டுள்ள இயமனால் பூசிக்கப்பட்ட வெங்குரு என்னும் திருப்பதியை விரும்பியுள்ளான். வெங்குரு என்பதும் சீகாழி.

5. கு-ரை : சுடுநிலமாகிய மயானத்தை நடமாடும் இடமாகக் கொண்டும், முப்புரங்களையும் நகைசெய்து சுடப்பட்ட வெற்றிப் போரையுடைய தும்பைமாலைக் கடவுள். சூடார் எனற்பாலது சுடர் எனவும், ஈமம் எனற்பாலது இம் எனவும் குறுகி நின்றன. துரோணம் எனற்பாலது தோணி என மருவிற்று. என் உச்சிக்குச் சூடாமணியுமாய் என்மேல்வைத்த மாலினையுடையனுமாய் யாகத்தின் கண் வந்த யானையை வடிவொழித்துப் போர்க்கும் தன்மையை உடையவன். சூடாமணி எனற்பாலது சுடர்மணி எனவும், மாலி எனற்பாலது மாளி எனவும், தோல் எனற்பாலது தோள் எனவும் நின்றன. மாலை யுடையவன் - மாலி. தோல் - யானை. சூரியனுடைய களங்கத்தைக் கழுவப்பட்ட சமுத்திரம் போன்ற செனனக்கடலிலே கீழ்ப்பட்டழுந்திக் கெடாநின்ற ஆன்மாக்களுக்குக் கைப்பற்றிக் கரையேறும் தெப்பமாகப் பிரணவம் என்கிற மந்திரத்தை அவரது செவியின் கண்ணே உண்டாக்கா நின்றவன். மண்ணி என்பது மணி என இடை குறைந்து

Koviloor Digital Library

1375. பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி
பூசுரர் சேர்பூந்த ராயவன் பொன்னடி. 6

1376. செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில்
செருக்குவாய்ப் புடையான் சிரபுர மென்னில். 7

நின்றது. புரந்தவன் எனற்பாலது புரத்தவன் என வலித்தல் விகார மாயிற்று. விளக்கத்தையுடைய நவரத்தினங்களாலே அலங்கரிக்கப் பட்ட மாளிகை சூழ்ந்த திருத்தோணிபுரத்திலே வீற்றிருக்கும் சிவன் இத்தன்மையன்.

6. கு-ரை : பூமியிலுள்ளாரையும் தேவகணங்களாய் உள்ளா ரையும் தனது நாபிக் கமலத்திலே தோற்றுவிக்கப்பட்ட பிர்மா விஷ்ணு வினது போதத்திலே கண்ணாடியும் நிழலும் போலப் பிரதிவிம்பியா நின்றவன். ஆடி என்பது அடி எனக் குறுகிநின்றது. மலத்திரயங்களைக் கழுவப்பட்ட சிவஞானிகள் கூட்டம் பொலிவுபெறத்தக்க வனப்பையு டைய ஆனந்தநிருத்தம் செய்தருள்பவன். சர்வாங்கமும் உத்தூளனம் பண்ணின மார்பை உடைய சிவஞானி களும், புண்ணியபாவக்கட்டை யரிந்து விசுவத்தைத் தள்ளப்பட்ட சிறப்பையுடையருமாயிராநின்றவர் களுக்கு மிகுதியான மூலமாயுள்ளவன். உந்தராய் என்பது, ஊந்தரா யென நீண்டது. மறுவிலா மறையோர் வாழ்கின்ற திருப்பூந்தராய் என்னும் திருப்பதியின்கண் வீற்றிராநின்ற சிவனது அழகிய திருவடித் தாமரை என்னை ஆண்டிடுவதாக, பூந்தராய் என்பது சீகாழி.

7. கு-ரை : தனது திருவடிப்பிரசாதமில்லாதார்க்கு மல மயக்கத் தின் மேலீட்டைக்கெடாத சிவனுக்கு விசுவாதீதமான இருப்பிடம் எனது சைதன்னியமே. சத்தாதிகளஞ்சும் சேரப்பட்ட உலகத்தைத் தன் வாயினிடமாகவுடைய விஷ்ணுவின் களேபரத்தைத் திருமேனி யிலே தரித்துள்ளான். சேர் எனற்பாலது செர் எனவும், சீர் எனற்பாலது சிர் எனவும் குறுகிநின்றன. ஆத்தும விகாரமாகிய கர்மத்தினாலே இந் திரியங்களுக்கு விடயமாகிய சுவர்க்கத்திலிச்சை யுடையானுக்கு அந்தச் சுவர்க்கம் மெய்யாக விசேடித்திருக்குமன்றே. இந்திரிய வன்மையாகிய யுத்தத்துக்கு இளையாமல் அந்த இந்திரியமாகிய

Koviloor Digital Library

1377. பொன்னடி மாதர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதர் சேர்புற வத்தவன். 8

1378. தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான்
தசமுக னெரிதர வூன்று சண்பையான். 9

பாணங்கள் தனது அறிவுக்குள் தைக்கப்படான். ஒருகால் சிரபுரம் என்று சொன்ன விடத்துப் பஞ்சேந்திரியங்களையும் அவியப்பொருது சிவனுடைய திருவடியிலே அடையாநிற்பன் என்பதாம்.

8. கு-ரை : பொலிவினையுடைய மாயாநிருத்தம் புரிகின்ற பத்திரகாளியும் பூதபசாசும் பொருந்திய மயானமே திருக்கோயிலாக உள்ளவன். சுத்தமான வழியைத் தரப்பட்ட மகாரிஷிகள் திரண்டு தவம் பண்ணாநிற்கும் ஆரணியத்தில் தனித்துத் தவம் புரியாநிற்கும் தபோத னன். அழகிய ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ள இலக்குமியை யொத்த இருடிபத்தினிகள் பிச்சையிடவந்து அணையுமிடத்துத் தனக் குள்ள நிருவாணத்தை அவர்களுக்குக் கொடுத்தவன். பொன்னாற் செய்யப்பட்ட பாடக நூபுராதிகளைப் பாதங்களிலே யணிந்துள்ள கன்னியர் திரண்டு விளையாடும் புறவம் என்னும் திருப்பதியில் வாழ்கின்ற சிவன். புறவம் என்பதும் சீகாழி.

9. கு-ரை : ஆத்துமாக்களிடத்துக் கருணைபிறக்கும் இடமாயுள் ளவன். அக்கினி வீசப்பட்டுத் திருவரையிலே அழுந்தச் சாத்தியுள்ள விரிந்த படத்தினையுடைய பாம்பை அரைஞாணாகவுடையான். எல்லாம் இறந்து அந்தமாயுள்ள சிவஞானிகள் குழாத்துக்கு நேரிதாகிய சூனியமாயுள்ள பொருளைத் தோற்றுவித்துள்ளானுமாய்ப் புலியினது ஊன்பொருந்திய தோலாடையைத் திருவரையிலே விரித்துடுத்தவன். நேரி எனற்பாலது நெரி எனக் குறுகிநின்றது. தரக்கு எனற்பாலது தர எனக் குறைந்தது. தூசு எனற்பாலது துசு எனக் குறுகிநின்றது. பாயான் எனற்பாலது பையானெனக்குறுகிப் போலியாயிற்று. ஆத்தும விகாரமான அகங்காரம் போம்படி என்னறிவில் எதிர்ப்பட்டவன் கயிலாயமலையைத் திருவுள்ளத்தடைத்து எழுந்தருளியிருந்து ஆத்துமாக்களை இரக்ஷியாநின்ற விசேஷத்தையுடையவனென்

Koviloor Digital Library

1379. காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே
காழி யானய னுள்ளவா காண்பரே. 10

1380. கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே
கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே
கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே
கொச்சையண் ணலைக்கூட கிலாருடன் மூடரே. 11

றேத்தும் சட்சமயங்களுக்கும் அவரவர்கொண்ட பயனாயுள்ளவன். நேரி எனற்பாலது நெரி எனக் குறுகிநின்றது. பத்துத்தலையுள்ள இராவணன் முரியும்படி திருவிரலாலடர்த்தவன் யாரென்னில், சண்பை என்னும் திருப்பதியிலே வீற்றிருக்கும் கடவுள்.

10. கு-ரை : நிலைபெற்றுநின்ற நின்மலமாகிய சித்தத்தையுடைய பத்தரிடத்துச் சத்தியப்பொருள் விளையும்பொருட்டு ஞானநாட்டத்திலே அவர்களைக் கடாக்ஷிக்கின்றவன். திருமிடற்றில் களங்கமுடையானது கருணையை நினைத்து ஞானநாட்டத்தையுடைய சிவஞானிகள் சிவனுக்கிச்சை தன்னடியார்க்கே ஆங்காரத்தைத் தடுக்குமதே பணியெனத் தமதறிவிலே கருதாநிற்பர். விஷ்ணுவும் பிர்மாவும், திருமுடியும் திருவடியும் காணும் பொருட்டு வராகமும் அன்னமுமாகக் கருதி வடிவுகொண்டார். ஐயோ! உள்ளபடி கருதிச் சிவனைப்பெறாமல் அவர்கருதியதேது எனில், அன்னியமே கண்டனர். கண் எனற்பாலது காண் என நீண்டது. என்பொருட்டால் காழி என்னும் திருப்பதியைப் படைத்தானை, என் ஐயனை, எனது ஆசையை, கீழ்ச் சொன்ன இருவர்களும் தாங்கள் தேடும் தேட்டப் பிரிவில் மயக்கத்திலே தேட்டமழித்துத் தோன்றா நிற்பவனைத் தேடி மறத்தலொழிந்து எவ்வாறு காண்பர்.

11. கு-ரை : ஆணவமலத்தோடு கூடியுள்ள மயக்கத்துடன் மாறுபட்டோர்கள் மாயாதனுவாலும் மந்திரதனுவாலும் மறைக்கப் படார்கள். மூடார் எனற்பாலது மூடர் எனக் குறுகிநின்றது. புலால் நாற்றத்தைப் பொருந்திய அழுக்குமெய்யைப் பொய்யென்று மனங் கொள்ளமாட்டாமல் அதுவே தமது நிலைபெற்றவுருவாக நினைத்துத் துவராடையாலே உடம்பைச் சூழப்பட்ட பௌத்தரும், பேதைத் தன்மையையுடைய மச்சியகந்தியினுடைய நலத்தைக் கொள்ளும்

Koviloor Digital Library

1381. கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை. 12

திருச்சிற்றம்பலம்

பொருட்டு அவளது சரீரம் எல்லாம் சுகந்தமொய்க்கும்படி அவளு டனே பொருந்திய பராசரனாகிய மகாவிருடிவந்து சிவனைப் பொருந்தி அருச்சிக்கப்படுதலால். பராசரமுனிவரால் பூசிக்கப்பட்டு அவன்பெயரால் பெயர்பெற்றுள்ள கொச்சை நகரம் என்னும் திருப்பதி யிலே எழுந்தருளியிராநின்ற தலைமையோனை உள்ளபடி தரிசனம் பண்ணி வழிபடமாட்டார்களது நினைவு எவ்வாறிருக்கும் என்னில், மழைக்காலிருளும் வெளிதென இருண்ட மயக்கத்தை யுடைய ஆணவ போதமாயிருக்கும்.

12. கு-ரை : மிகுதிப்பட்ட தோஷமாயுள்ள சுக்கில சுரோணித மாகிய இருவகை நீரின்கண்ணே சிரமுதலாகிய அவயவமாகத் தோன்றிப் பூமியின்கண் செனித்துப் பரிணமித்துப் பின்பு தேய்ந்து மரிக்கின்ற சென்மத்தையும் பரிணமித்தல் - வேறுபடுதல். கீழ்ச் சொல்லிப்போந்த சென்மத்தையும் கழுவி மலத்திரயங்களையும் கழுவாநிற்கும். தனது பாதியாகிய திருவருளினாலே என்னை அகப்படுத்திக் கவளிகரித்துக் கொண்டு அந்த அருள்வழியாக என திடத்தில் இடையறாமல் வாழும் தன்னை எனக்குத்தந்த அடிமை குலையாமல் எக்கண்ணும் விட்டு விளங்கும் கர்த்தர். பாதி எனற்பாலது பதி எனக் குறுகி நின்றது. மாயா மயக்கத்தின்கண்ணே மயங்கி பெத்த முத்தி இரண்டும் தெரியாமல் திண்டாடப்பட்ட மலபோதர்க்கு அமுதம் போன்று அரிதாயுள்ளவனுமாய் விட்டு விளங்கப்படாநின்ற பொன் னுருவையுடையவனாய்ச் சிருஷ்டிக்குக் கர்த்தாவாகிய பிரமனது சிரக்கபாலத்திலே பிச்சைகொண்டு நுகரும் கருணை யாளனே! திருக்கழுமலம் என்னும் மூவாப் பழங்கிழமைப் பன்னிரு பெயர்பெற்ற அனாதிமூலமாகிய பதியிடத்துக் கவுணிய கோத்திரத்திலே தோன்றப் பட்ட யான் நிவேதிக்கப்படும் காட்டாகிய இப்பாடலைக் கீழ்ச்சொன்ன வற்றிலும் மலத்திரயங்களிலும் அழுந்தாநின்ற ஒருத்தராகிலும் பல ராகிலும் உரை செய்வார் உயர்ந்தாரேயாதலால் இப்பாடலை இடை விடாமல் உரைசெய்வீராக. காட்டு என்பது கட்டு எனக் குறுகிநின்றது.

Koviloor Digital Library

128. திருப்பிரமபுரம்

பதிக வரலாறு:

(117 - ஆம் பதிகம் பார்க்க)

திருவெழுகூற்றிருக்கை

பண்:வியாழக்குறிஞ்சி

பதிக எண்: 128

திருச்சிற்றம்பலம்

1382. ஒருரு வாயினை மானாங் காரத்
தீரியல் பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய விருசுட ரும்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை
இருவரோ டொருவ னாகி நின்றனை.

இப்பதிகத்துக்குப் பழைய உரையில் அளித்துள்ள குறிப்புரையே முதலிலும், அதைத்தொடர்ந்து பொழிப்புரையும் எழுதப் பெற்றுளது.

கு-ரை: ஒருருவாயினை- என்றது, எல்லாத் தத்துவங் களையுங் கடந்து வாக்குமனாதிகளுக்கு எட்டாமலிருந்துள்ள தற்சுரு பந்தான் பஞ்சகிர்த்தியங்களையும் நிகழ்த்தவேண்டி நினது இச்சையால் எடுத்துக்கொண்டிருக்கும் திருமேனியை (எ-று)

மானாங்காரத்தீரியல்பாய் - என்றது. மானென்பது - சத்தி - ஆங்காரத்தீரியல்பாய் - தற்சத்தியைக் கொண்டு சர்வானுக் கிரகமான பஞ்சகிர்த்தியங்களை நடத்தவேண்டிச் சத்தி சிவமாகிய இரண்டு உருவாயினை எ - று.

ஒரு - என்றது. அந்தச் சத்தியுடனே கூடி யொன்றாகி நின்றனை எ - று.

விண்முதல் பூதலம் ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும் படைத்தளித்தழிப்ப மும்மூர்த்திகளாயினை - என்றது. ஆகாச முதலாகப் பூமியீறாகவுள்ள பஞ்சபூதங்களையும் சந்திராதித்தர்களையும் தேவர்களையும் மற்றுமுள்ள ஆத்மாக்களையும் படைக்கைக்கும், காக்கைக்கும், அழிக்கைக்கும், பிர்மா விஷ்ணு உருத்திரன் என்கின்ற திரிமூர்த்திகளுமாயினை எ - று.

இருவரோடு ஒருவனாகி நின்றனை - என்றது. பிரமாவையும்

Koviloor Digital Library

ஓரா னீழ லொண்கழ லிரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்ட மூன்றாகக் கோட்டினை
இருநதி யரவமோ டொருமதி சூடினை
ஒருதா ளீரயின் மூவிலைச் சூலம்
நாற்கான் மான்மறி யைந்தலை யரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்
திருகோட் டொருகரி யீடழித் துரித்தனை

விஷ்ணுவையும் வலத்தினும் இடத்தினும் அடக்கிக் கொண்டு ஏகமாய்த் திரிமூர்த்தியாகி நின்றனை எ - று.

ஓரால்நீழலொண்கழல் இரண்டும் முப்பொழுது ஏத்திய நால்வர்க்கு ஒளி நெறிகாட்டினை - என்றது. விருக்ஷங்களுக்கு எல்லாந் தலைமையாய் இருப்பதொரு வடவிருக்ஷத்தின் நீழலிலே எழுந்தருளி யிருந்து நின்னழகிய ஸ்ரீ பாதங்களை உதயம் மத்தியானம் அத்தமனம் என்கின்ற மூன்றுகாலமும் தோத்திரம் செய்யாநின்ற அகஸ்தியன் புலத்தியன் சனகன் சனற் குமாரன் என்னும் நால்வகை இருடிகளுக்கும் தற்சுருபமான திருமேனியைக் காட்டி அருளினை எ - று.

நாட்டம் மூன்றாகக் கோட்டினை - என்றது. பிர்மா முதலா யிருந்துள்ள ஆத்மாக்கள் ரூபமென்னும் புலனாலே சர்வ பதார்த்தங் களையும் காணாதபடியாலே சந்திராதித்தர்களையும் அக்கினியையும் மூன்று கண்ணாகக் கொண்டருளி அந்தகாரமான இருளை ஓட்டினை எ - று.

இருநதி அரவமோடு ஒரு மதி சூடினை - என்றது. பெரிதாகிய கங்கையையும் ஒப்பில்லாத பாம்பினையும் ஒருகாலத்தினும் முதிராத பிறைக்கண்ணியையும் சூடியருளினை எ - று.

ஒருதாள் ஈரயின் மூவிலைச்சூலம் நாற்கான் மான்மறி ஐந்தலை அரவம் ஏந்தினை - என்றது. பிரணவமாயிருந்துள்ள ஒரு காம்பினையும், ஈருகின்ற கூர்மையினையும், பிர்மா விஷ்ணுருத்திர னென்கின்ற மூன்று இலையினையும் உடையதொரு சூலத்தினையும், இருக்கு - யசுர் - சாமம் - அதர்வணம் என்கின்ற நாலு வேதங்களையும் நாலுகாலாயிருந்துள்ள ஒரு மான் கன்றினையும், ஸ்ரீ பஞ்சாக்ஷரங் களையும், அஞ்சு தலையாகவுடையதொரு மகாநாகத்தினையும் அஸ்தங்களிலே தரித்தருளினை எ - று.

Koviloor Digital Library

ஒருதனு விருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானில மஞ்சக்
கொன்று தலத்துற வவுணரை யறுத்தனை
ஐம்புல னாலா மந்தக் கரணம்
முக்குண மிருவளி யொருங்கிய வானோர்
ஏத்த நின்றனை யொருங்கிய மனத்தோ
டிருபிறப் போர்ந்து முப்பொழுது குறைமுடித்து
நான்மறை யோதி யைவகை வேள்வி
அமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை

காய்ந்த நால்வாய் மும்மதத்து இருகோட்டு ஒருகரி ஈடு அழித்து உரித்தனை - என்றது தன்னிழலைக் காயத்தக்க கோபத்தினையும் தொங்கும் வாயினையும் இரண்டு கொம்பினையும் உடையதொரு ஒப்பில்லாத ஆனையினுடைய பெலங்களையெல்லாம் கெடுத்து உரித்துப் போர்த்தனை எ - று.

ஒரு தனு இருகால் வளைய வாங்கி முப்புரத்தோடு நால்நிலம் அஞ்சக் கொன்று தலத்துறு அவுணரை அறுத்தனை - என்றது, ஒப்பில்லாத பொன்மலையாகிய வில்லை இருதலையும் வளைய வாங்கி அஸ்திரத்தைத் தொடுத்து, மூன்றுபுராதிகளாகிய அவுணரை அறுத்தனை எ - று.

ஐம்புலம் நாலாம் அந்தக்கரணம் முக்குணம் இருவளி ஒருங்கிய வானோர் ஏத்த நின்றனை - என்றது. சத்த - பரிச - ரூப - ரச - கந்தம் எனப்பட்ட ஐம்புலங்களையும், மனம் - புத்தி - யாங்கார - சித்தம் என்கின்ற அந்தக்கரணங்கள் நான்கினையும், ராசத - தாமத - சாத்துவிகம் என்கின்ற மூன்று குணங்களையும், பிராணன் - அபானன் என்கின்ற இரண்டு வாயுவையும், மூலாதாரத்திலே ஒடுக்கிக்கொண்டு ஏகாக்ரசித்தராயிருந்துள்ள தேவர்கள் ஏத்த நின்றனை எ - று.

ஒருங்கிய மனத்தோடு இருபிறப்பு ஓர்ந்து முப்பொழுது குறைமுடித்து நான்மறை ஓதி ஐவகை வேள்வியமைத்து ஆறங்க முதலெழுத்தோதி வரன்முறை பயின்றெழு வான்றனைவளர்க்கும் பிரமபுரம் பேணினை - என்றது, ஆகாரம் - நித்திரை - பயம் - மைதுனம் இவற்றில் செல்லும் மனத்தைப் பரமேசுவரனுடைய ஸ்ரீ

Koviloor Digital Library

அறுபத முரலும் வேணுபுரம் விரும்பினை 25
இகலிய மைந்துணர் புகலி யமர்ந்தனை

பாதங்களிலே யொருக்கி முன்பு தாம் மாதாவின் உதரத்திலே பிறந்த பிறப்பும், உபநயனத்தின் பின்பு உண்டான பிறப்புமாகிய இரண்டையும் விசாரித்து மூன்று சந்தியும், செபதர்ப்பண - அனுட்டான - ஓமங்களையுமுடித்து, இருக்கு யசுர் சாமம் அதர்வணம் என்கின்ற நாலு வேதங்களையும் ஓதி, சிவபூசை - குருபூசை - மகேசுரபூசை - பிராமண போசனம் - அதிதிபுசிப்பு என்கின்ற ஐந்து வேள்வியும் முடித்து, ஓதல் - ஓதுவித்தல் - வேட்டல். வேட்பித்தல் - ஈதல் - ஏற்றல் என்னும் ஆறங்கங்களையும் நடத்தி இவைகளுக்கு முதலாயிருந் துள்ள பிரணவத்தையும் உச்சரித்துத் தேவலோகத்திலுள்ள தேவர் களுக்கும் அவிகொடுத்து மழையைப் பெய்விக்கும் பிராமணராலே பூசிக்கப்பட்ட பிரமபுரமே திருப்பதியாக எழுந்தருளியிருந்தனை என்றவாறு - ஆறங்கமாவன மந்திரம் - வியாகரணம் - நிகண்டு - சந்தோபிசிதம் - நிருத்தம் - சோதிடம் என இவ்வாறு வழங்கப்படு கின்ற முறையொன்று.

அறுபதமுரலும் வேணுபுரம் விரும்பினை - என்றது. அறு காலுடைய வண்டுகளிசைபாடும் பொழில்சூழ்ந்த வேணுபுரம் என்பதே திருப்பதியாக எழுந்தருளினை என்றவாறு - வேணுபுரம் என்பதற்குக் காரணம்: வேணு என்பானொரு இந்திரனுடன் கெசமுகன் என்பா னொரு அசுரன் வந்து யுத்தம்பண்ண அவனுடனே பொருது அப செயப்பட்டுப் பிரமபுரமென்னு முன் சொன்ன பதியிலேவந்து பரமேசு வரன் திருவடிகளிலே ‘தம்பிரானே! அடியேனுக்கு அமைத்தருளின சுவர்க்கலோகத்தைக் கசமுகன் சங்கரிக்க, அவனுடன் யுத்தம்பண்ணி அபசெயப்பட்டுப் போந்தேன்’ என்று விண்ணப்பஞ்செய்து பூசிக்கை யாலே தம்பிரானும் கணேசுரனைத் திருவுளத்தடைத்து ‘வாராய் கணேசுரனே! கசமுகன் வரப்பிரசாதமுடையவன்; ஒருவராலு மவனைச் செயிக்கப்போகாது; நீயும் அவன் வடிவாகச் சென்று உன் வலக் கொம்பை முறித்தெறிந்து அவனைக்கொன்று வேணு என்கின்ற இந்திரனைச் சுவர்க்கலோகத்திலே குடிபுகவிட்டுவா’ என்று திருவுளம் பற்றக் கணேசுரனும் அவன்வடிவாகச்சென்று தன் வலக்கொம்பை முறித்தெறிந்து அவனையுங்கொன்று வேணு என்கின்ற இந்திரனையும் சுவர்க்கலோகத்திலே குடிபுகவிட உண்டானது என்க.

இகலியமைந்துணர் புகலி அமர்ந்தனை - என்றது. தேவர்கள் முன்பு புகலிடமென்று புகுதலால் திருப்புகலி என்பதே திருப்பதியாக எழுந்தருளி இருந்தனை என்றவாறு - தேவலோகமான அமராபதி

Koviloor Digital Library

பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமூ வுலகும் புதையமேன் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையா விருநிதி
வாய்ந்த பூந்தரா யேய்ந்தனை 30

யைச் சூரபத்மா என்பானொரு அசுரன் வந்து சங்காரம் பண்ண அவனுடனே தேவேந்திரன் முதலாயுள்ளார் பொருது அபசெயப்பட்டு யுத்தத்தையொழிந்து இனி நமக்குப் பரமேசுவரன் ஸ்ரீ பாதமொழிய புகலிடமில்லை என்று வேணுபுரத்திலே வந்து பரமேசுவரனைத் தெண்டம்பண்ணி அவனாலுண்டான நலிகையை விண்ணப்பஞ் செய்து எங்களை ரக்ஷித்தருள வேண்டும் என்னப் பரமேசுவரனும் சுப்பிரமணியரைத் திருவுளத்து அடைத்து 'வாராய் சுப்பிரமணியனே! நீ ஆறுமுகமும் பன்னிரண்டு கையுமாகப் போய்ச் சூரபத்மாவையும் செயித்துத் தேவலோகத்திலே தேவர்களையும் குடிபுகுத விட்டுவா' என வருகை காரணம்.

பொங்கு நாற்கடல் சூழ் வெங்குரு விளங்கினை - என்றது. மிகவும் கோபிக்கப்பட்ட கடல்சூழ்ந்த வெங்குரு என்றதே திருப்பதியாக எழுந்தருளியிருந்தனை என்றவாறு. - லோகங்களுக் கெல்லாம் தேவகுருவாகிய பிரகஸ்பதிபகவான் என்னையொழிந்து கர்த்தாவுண்டோ என்று மனோகெர்வஞ் சொல்லுகையாலே பரமேசு வரனும் இவன் மகா கெர்வியாயிருந்தான் இவனுடைய கெர்வத்தை அடக்கவேண்டுமென்று திருவுளத்தடைத்தருளித் தேவர்க்குக் குருவாகிய அதிகாரத்தை மாற்றியருளப் பயப்பட்டுப் புகலி என்கின்ற திருப்பதியிலே போய்ப்பரமேசுவரனைத் தெண்டம்பண்ணி அடியேன் செய்த அபராதங்களைப் பொறுத்தருளி அடியேனை ரக்ஷித்தருள வேண்டும் என்று விண்ணப்பஞ்செய்யத், தம்பிரானும் நீ மகா வேகியாயிருந்தாய் என்று திருவுள்ளமாய் முன்புபோல் தேவர் களுக்குக் குருவாகிய அதிகாரத்தையும் கொடுத்த காரணத்தால் வெங்குரு என்கின்ற பெயருண்டாயது.

பாணி மூவுலகும் புதைய மேல்மிதந்த தோணிபுரத்து உறைந்தனை - என்றது. பாணி என்கின்ற சலம் பிரளயமாய்ப் பூமி அந்தரம் சுவர்க்கம் மூன்று லோகங்களையும் புதைப்ப அதைச் சங்காரம் பண்ணியருளி அதின்மேலே தோணிபோல மிதந்த வெங்குருவாகிய தோணிபுரம் என்றதே திருப்பதியாக எழுந்தருளி யிருந்தனை எ - று.

தொலையா இருநிதிவாய்ந்த பூந்தராயேய்ந்தனை - என்றது.

Koviloor Digital Library

வரபுர மொன்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை யெடுத்த விருதிற லரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை

வேண்டினார் வேண்டியது கொடுத்துத் தொலைவறச் சங்கநிதி பத்மநிதி என்று சொல்லப்பட்ட இரண்டு நிதிகளும் பூவும் தராயும் பூசிக்கையாலே திருப்பூந்தரா யென்னப்பட்ட திருப்பதியிலே எழுந்தருளியிருந்தனை எ - று. ஒருகாலத்துத் தொலையாத வரத்தைப் பெறுவது காரணமாகத் திருத்தோணிபுரத்திலே வந்து தம்பிரானைப் பூசித்தளவில் 'உங்களுக்கு வேண்டுவதென்' என்று கேட்டருள, 'தம்பிரானே! அடியோங்களுக்கு எல்லாக் காலங்களுந்தொலையாமல் கொடுக்கத் தக்க வரத்தைப் பிரசாதித்தருள வேண்டும்' என்று விண்ணப்பஞ் செய்ய, அவ்வாறே தொலையாதவரத்தையும் கொடுத் தருளி மகாசங் காரத்தினுந் தம்முடைய ஸ்ரீ அஸ்தங்களிலே தரித்தருளும் வரப்பிரசாதமுங் கொடுத்தருளினதால் பூந்தராய் எனப் பெயருண் டாயது.

வரபுரமொன்றுணர் சிரபுரத்துறைந்தனை - என்றது. வரத்தைத் தருவதான புரமென்றுணரத்தக்க சிரபுரமென்பதே திருப்பதியாக எழுந்தருளியிருந்தனை எ - று. தேவர்களும் பிர்ம விஷ்ணுக்களுமாகக்கூடி அமிர்தத்தை யுண்டாக்கித் தேவர்களை இருத்தி விஷ்ணு பகவான் அமிர்தம் படைத்துக்கொண்டு வருகிற வேளையில் ராகு கேது என்கிற இரண்டு பாம்புங்கூடிக் கரந்திருந்து அமிர்தபானம் பண்ணுவதாக இருப்பதுகண்டு விஷ்ணுபகவான் அமிர்தம் படைத்துவருகின்ற சட்டுவத்தைக் கொண்டு தலையற வெட்டுகையால் உடலிழந்து நாகமிரண்டும் நம்முடல் தரக்கடவான் பரமேசுவர னொழிய வேறேயில்லை என்று திருப்பூந்தராயிலேவந்து பரமேசுவரனைநோக்கி இரண்டு சிரங்களும் பூசித்ததால் சிரபுரம் என்று பெயருண்டாயது.

ஒருமலை எடுத்த இருதிறலரக்கன் விறல்கெடுத்தருளினை - என்றது. பெருமையுள்ள கயிலாயம் என்னும் பேரையுடைத்தாய் உனக்கே ஆலயமாயிருப்பதொரு வெள்ளிமலையை எடுத்த பெரிய புசபலங்கொண்ட இராவணனுடைய கர்வத்தைக் கெடுத்தருளினை எ - று.

புறவம் புரிந்தனை - என்றது. பிரசாபதி என்கின்ற பிர்மரிஷி கௌதமரிஷியைநோக்கி நீ ஸ்திரீபோகத்தைக் கைவிடாமலிருக்கிறவனல்லவோ என்று தூஷணிக்கையாலே கவுதமரிஷியும் பிரசாபதி பகவானைப் பார்த்து ''நீ புறா என்னும் ஒரு பக்ஷியாய் நரமாமிசம் புசிப்பாயாக'' என்று சபிக்கப் பிரசாபதியும் ஒரு புறாவாய்ப் போய்ப்

Koviloor Digital Library

முந்நீர்த் துயின்றோ னான்முக னறியாப்
பண்பொடு நின்றனை சண்பை யமர்ந்தனை 35

பலவிடத்தினும் நரமாமிசம் புசிக்கையிலே, ஒரு நாள் மாமிசந்தேடிச் சோழவம்சத்திலே ஒரு ராசா தினசரிதனாயிருக்கிறவிடத்திலே இந்தப் புறாவாகிய ரிஷியும் போய் ராசாவைப்பார்த்து ''எனக்கு அதிக தாகமாயிருக்கின்றது சற்று நரமாமிசம் இடவல்லையோ'' என்ன ராசாவும் ''உனக்கு எவ்வளவு மாமிசம் வேண்டும்'' எனப் புறாவும், உன்சரீரத்திலே ஒன்று பாதி தரவேண்டும் என்று ராசாவும் தன்சரீரத்திலேயொன்று பாதி அரிந்திடப் புறாவுக்கு நிறையப் போதாமல் சர்வமாமிசத்தையும் அரிந்திட்டு ராசாவும் சோர்ந்துவிழ இந்தப் புறாவாகிய பக்ஷியும் தமக்குத் தன் சரீரத்தை அரிந்திட்டுப் பிழைப்பித்த ராசா சரீரம்பெறும்படி எங்ஙனே என்று விசாரிக்கு மளவில் பரமேசுவரனொழிய வேறில்லை என்று சிரபுரத்திலேவந்து பரமேசுவரனை நோக்கி அர்ச்சிக்கப் பரமேசுவரனும் திருவுளத் தடைத்தருளத் ''தம்பிரானே அடியேன் தாகந்தீரத் தன் சரீரத்தை அரிந்திட்ட ராசாவுக்கு முன்போல உடலும் பிரசாதித்து அடியேனுக் கும் இந்தச் சாபதோஷம் நீக்கவேண்டும்'' என்று விண்ணப்பஞ்செய்ய, ராசாவுக்குச் சரீரமும் கொடுத்துப் புறாவுக்கு வேண்டும் வரப்பிரசாதங் களையும் பிரசாதித்துச் சாபதோஷமும் மாற்றியருளிப் புறாவும் பூசிக்கையாலே புறவம் என்கின்றதே திருப்பதியாக எழுந்தருளி இருந்தனை எ - று.

முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப் பண்பொடு நின்றனை - என்றது. ஆற்றுநீர் வேற்றுநீர் ஊற்றுநீர் என்று சொல்லப்பட்ட முந்நீராகிய சமுத்திரத்திலே துயிலாநின்ற நாராயண னும் நான்முகத்தினையுடைய பிர்மாவும் அடியும் முடியும் தேடற்கு அரிதாய் நின்ற பண்பினையுடையையாய் எழுந்தருளியிருந்தனை எ - று.

சண்பை அமர்ந்தனை - என்றது. துர்வாச மகரிஷி யாசிர மத்தே கிருஷ்ணாவதாரத்திலுள்ள கோபாலப் பிள்ளைகளெல்லா மிந்த ரிஷியை அசங்கதித்துத் தங்களிலே ஒருவனைக் கர்ப்பிணியாகப் பாவித்துச்சென்று அவள் பெறுவது ஆணோ பெண்ணோ என்று அந்த ரிஷியைக் கேட்கையாலே அவர் கோபித்து இவள் பெறுவது ஆணுமல்ல பெண்ணுமல்ல உங்கள் வமிசத்தாரையெல்லாஞ் சங்கரிக் கைக்கு ஒரு இருப்புலக்கை பிறக்கக்கடவதென்று சபிக்கையாலே அவன் வயிற்றிலிருந்து ஒரு இருப்புலக்கைவிழ அந்தச் சேதியைக்

Koviloor Digital Library

ஐயுறு மமணரு மறுவகைத் தேரரும்
ஊழியு முணராக் காழி யமர்ந்தனை

கிருஷ்ணன்கேட்டுத் துர்வாச மகரிஷி சாபங் கேவலமல்ல என்று அந்த இருப்புலக்கையைப் பொடியாக அராவி அந்தப் பொடியைச் சமுத்திரத்திலே போட, அராவுதலுக்குப் பிடிபடாத ஒரு வேப்பம் விதைப் பிரமாணமுள்ள இரும்பை ஒரு மீன் விழுங்கி ஒரு வலைக் காரன்கையிலே அகப்பட்டது. அதன் வயிற்றில்கிடந்த இரும்பைத் தன் அம்புத் தலையிலே வைத்தான். மற்றுஞ் சமுத்திரத்திற்போட்ட இரும்புப் பொடிகளெல்லாம் அலையுடனே வந்து கரைசேர்ந்து சண்பையாக முளைத்துக் கதிராய் நின்றவிடத்திலே கோபால குமாரர்கள் விளையாடி வருவோமென்று இரண்டு வகையாகப் பிரிந்து சென்று அந்தச் சண்பைக்கதிரைப் பிடுங்கி எறிந்துகொண்டு அதனாலே பட்டுவிழுந்தார்கள். இதைக் கிருஷ்ணன் கேட்டு இதனாலே நமக்கு மரணமாயிருக்குமென்று விசாரித்து ஆலின்மேலே ஒரு இலையிலே யோகாசனமாக ஒரு பாதத்தை மடித்து ஒரு பாதத்தைத் தூக்கி அமர்ந்திருக்கிற சமயத்திலே அந்த மீன்வேடன் பக்ஷி சாலங் களைத்தேடி வருகிறபோது தூக்கிய பாதத்தை ஒரு செம்பருந்து இருக்கிறதாகப்பாவித்து அம்பைத் தொடுத்தெய்யக் கிருஷ்ணனும் பட்டுப் பரமபதத்தை அடைந்தான். இந்தச் சாபதோஷம் துர்வாச மகரிஷியைச்சென்று நலிகையாலே இந்தத் தோஷத்தை நீக்கப் பரமேசுவரனை நோக்கி அர்ச்சிக்கப் பரமேசுவரனும் திருவுளத் தடைத்தருள ரிஷியும் தெண்டம்பண்ணித் 'தம்பிரானே! அடியே னுடைய சாபத்தாலே கிருஷ்ணனுடைய வமிசத்திலுள்ள கோபால ரெல்லாருஞ் சண்பைக் கதிர்களால் சங்காரப்படுகையாலே அந்தத் தோஷம் அடியேனைவந்து நலியாதபடி திருவுளத்தடைத்தருளி ரக்ஷிக்கவேண்டும்' என்று விண்ணப்பஞ்செய்யத் துர்வாச மகரிஷிக்குச் சண்பை சாபத்தினாலுள்ள தோஷத்தை நீக்கிச் சண்பைமுனி என்கின்ற நாமத்தையும் தரித்தருளிச் சண்பை என்கின்றதே திருப்பதியாக எழுந்தருளி யிருந்தனை எ - று.

ஐயுறும் அமணரும் அறுவகைத்தேரரும் ஊழியும் உணராக் காழியமர்ந்தனை - என்றது, வேதாகம புராண சாத்திரங்களிலுள்ள பலத்தை இல்லை என்று ஐயமுற்றிருக்கின்ற அமணரும் கைப்புப் - புளிப்புக் - கார்ப்பு - உவர்ப்பு - துவர்ப்புத் - தித்திப்பு என்கின்ற அறுவகை ரசங்களையும் உச்சிக்கு முன்னே புசிக்கின்றதே பொரு ளென்றிருக்கின்ற புத்தரும் ,ஊழிக்காலத்தும் அறியாமல், மிகவும் காளிதமான விஷத்தையுடைய காளி என்கின்ற நாகம் பூசிக்கையாலே சீகாழி என்கின்றதே திருப்பதியாக எழுந்தருளியிருந்தனை எ - று.

Koviloor Digital Library

எச்சனே ழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறு பதமு மைந்தமர் கல்வியும்
மறைமுத னான்கும் 40
மூன்று காலமுந் தோன்ற நின்றனை

எச்சன் ஏழிசையோன் கொச்சையை மெச்சினை - என்றது. குரல் - துத்தம் - கைக்கிளை - உழை - இளி - விளரி - தாரம் என்பது ஏழிசை. - குரலாவது - சங்கத்தொனி, துத்தமாவது - ஆண்மீன்பிளிறு, கைக்கிளையாவது - குதிரையின்குரல். உழையாவது - மானின்குரல், இளியாவது - மயிலின்குரல், விளரியாவது - கடலோசை, தாரமாவது - காடையின்குரல் என்னும் நாதங்களையும் மெச்சினை, மகத்தான இருடிகள் எல்லாரினும் விருத்தராயுள்ள பராசரப் பிரமரிஷியானவர் மற்ற ரிஷிகளெல்லாரையும் நோக்கி நீங்கள் சமுசாரிகளொழிய விரதத்தை அனுஷ்டிப்பாரில்லையென்று அவர்களைத் தூஷிக்க அவர்களும் ''நீ மச்சகந்தியைப் புணர்ந்து மச்சகந்தமும் உன்னைப்பற்றி,விடாமல் அனுபவிப்பா''யென்று சபிக்கையாலே அந்தச் சாபத்தின்படி போய் மச்சகந்தியைப் புணர்ந்து அந்தத் துர்க்கந்தம் இவரைப் பற்றி ஒரு யோசனை தூரம் துர்க்கந்தித்த படியாலே இது போக்கவல்லார் பரமேசுவரனையொழிய இல்லை என்று சீகாழியிலே வந்து பரமேசுவரனை அர்ச்சிக்கப் பரமேசுவரன் ''உனக்கு வேண்டியது என்ன என்று கேட்க'' 'தம்பிரானே! அடியேனைப் பற்றின துர்க்கந்தத்தைவிடுவிக்க வேண்டும்' என்று விண்ணப்பஞ்செய்ய, தம்பிரானும் 'இவனென்ன கொச்சை முனியோ' என்று திருவுளமாய் இவன்மேற்பற்றின துர்க்கந்தத்தையும் போக்கிச் சுகந்தத்தையும் பிரசாதித்தருளிக் கொச்சை என்கின்ற சந்தான நாமத்தையுந் தரித்தருளிக் கொச்சை என்கின்றதே திருப்பதியாக எழுந்தருளி யிருந்தனை எ - று.

ஆறு பதமும் ஐந்தமர் கல்வியும் மறைமுதல் நான்கும் மூன்றுகாலமும் தோன்ற நின்றனை - என்றது. பிரத்தி - பிரத்தியா காரம் - துல்லியம் - துல்லியாதீதம் - வித்தை - அவித்தை என்கின்ற ஆறுபதங்களும், ஆசு - மதுரம் - சித்திரம் - வித்தாரம் - விரையம் என்கின்ற ஐந்தும், இருக்கு - யசுர் - சாமம் - அதர்வணம் என்கின்ற நாலுவேதங்களும், செல்காலம் - வருங்காலம் - நிகழ்காலம் என்கின்ற மூன்றுகாலமும் தோன்றாநின்ற திரிமூர்த்தியாயினை எ - று.

இருமையின் ஒருமையின் - என்றது. சத்திசிவங்களா யிருந்துள்ள இரண்டும் ஒன்றாய் அர்த்தநாரீசுவரவடிவமாய் இருந்துள்ளதை எ - று.

Koviloor Digital Library

இருமையி னொருமையு மொருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணிய னறியும் 45
அனைய தன்மையை யாதலி னின்னை
நினைய வல்லவ ரில்லைநீ ணிலத்தே.

திருச்சிற்றம்பலம்

ஒருமையின் பெருமை - என்றது. தானே ஒரு எல்லை யில்லாத சிவமாயிருந்துள்ளதை எ - று.

மறுவிலாமறையோர் கழுமலமுதுபதிக் கவுணியன் கட்டுரை கழுமலமுதுபதிக் கவுணியன் அறியும் - என்றது. மறுவற்ற பிர்ம வமிசத்தில் தோன்றித் தீக்கைகளாலே மலத்தைக் கழுவப்பட்ட கவுணியர் கோத்திரத்திலே வந்த சீகாழிப்பிள்ளை கட்டுரையை விரும்பிக் கழுமலம் என்கின்ற முதுபதியிலே எழுந்தருளினை. கம் என்கின்ற பிரமசிரசிலே உண்கின்றவனே அறியும் எ - று.

அனைய தன்மையை யாதலின் - என்றது. அத்தன்மையாகிய இயல்பினையுடையையாதலின் எ - று.

நின்னை நினைய வல்லவர் இல்லை நீணிலத்தே - என்றது. நின்னை நினைக்க வல்லார்களுக்குப் பிறப்பு இல்லை என்றவாறு.

பொ-ரை : சொரூப நிலையில் விளங்கும் பரசிவம் ஆகிய நீ உனது இச்சையால் ஐந்தொழில்களை நிகழ்த்த வேண்டி எடுத்துக் கொண்ட ஒருருவமாகிய திருமேனியை உடையை ஆயினை,

உன் சக்தியைக் கொண்டு அவ் ஐந்தொழில்களை நடத்தும் திருவுளக் குறிப்போடு சத்தி சிவம் என்னும் இரு உருவாயினை,

விண் முதலிய பூதங்களையும் சந்திர சூரியர்களையும் தேவர்கள் மக்கள் முதலியோரையும் படைத்துக் காத்து அழிக்க அயன் அரி அரன் என்னும் மும்மூர்த்திகள் ஆயினை,

பிரமன் திருமால் ஆகிய இருவரையும் வலத்திலும் இடத்தி லும் அடக்கி ஏக மூர்த்தியாக நின்றாய்,

Koviloor Digital Library

ஒப்பற்ற கல்லால மர நிழலில் உனது இரண்டு திருவடிகளை முப்பொழுதும் ஏத்திய சனகர், சனந்தனர் முதலிய நால்வர்க்கு ஒளி நெறியைக் காட்டினாய்,

சூரியன் சந்திரன் அக்கினி ஆகியோரை மூன்று கண்களாகக் கொண்டு உலகை விழுங்கிய பேரிருளை ஓட்டினாய்,

கங்கையையும் பாம்பையும் பிறைமதியையும் முடிமிசைச் சூடினாய்,

ஒரு தாளையும் ஈருகின்ற கூர்மையையும் முத்தலைகளையும் உடைய சூலத்தையும் நான்கு கால்களையும் உடைய மான் கன்று, ஐந்து தலை அரவம் ஆகியவற்றையும் ஏந்தினாய்,

சினந்து வந்த, தொங்கும் வாயையும் இரு கோடுகளையும் கொண்ட ஒப்பற்ற யானையை அதன் வலி குன்றுமாறு அழித்து அதன் தோலை உரித்துப் போர்த்தாய்,

ஒப்பற்ற வில்லின் இருதலையும் வளையுமாறு செய்து கணை தொடுத்து முப்புரத்தசுரர்களை இவ்வுலகம் அஞ்சுமாறு கொன்று தரையில் அவர்கள் இறந்துகிடக்குமாறு அழித்தாய்.

ஐம்புலன்கள் நான்கு அந்தக் கரணங்கள், முக்குணங்கள் இரு வாயுக்கள் ஆகியவற்றை ஒடுக்கியவர்களாய தேவர்கள் ஏத்த நின்றாய்,

ஒருமித்த மனத்தோடு, இரு பிறப்பினையும் உணர்ந்து முச்சந்திகளிலும் செய்யத் தக்க கடன்களை ஆற்றி நான்மறைகளை ஓதி ஐவகை வேள்விகளையும் செய்து ஆறு அங்கங்களையும் ஓதி பிரணவத்தை உச்சரித்து தேவர்களுக்கு அவி கொடுத்து மழை பெய்விக்கும் அந்தணர் வாழும் பிரமபுரத்தை விரும்பினாய்,

ஆறுகால்களை உடைய வண்டுகள் இசைபாடும் பொழில் சூழ்ந்த வேணுபுரத்தை விரும்பினாய்,

தேவர்கள் புகலிடம் என்று கருதி வாழ்ந்த புகலியை விரும்பினாய். நீர் மிகுந்த கடல் சூழ்ந்த வெங்குரு என்னும் தலத்தை விரும்பினாய். மூவுலகும் நீரில் அழுந்தவும் தான் அழுந்தாது மிதந்த தோணிபுரத்தில் தங்கினாய். வழங்கக் குறையாத செல்வ வளம் மிக்க

Koviloor Digital Library

பூந்தராயில் எழுந்தருளினாய். வரந்தருவதான சிரபுரத்தில் உறைந் தாய்,

ஒப்பற்ற கயிலை மலையைப் பெயர்த்த பெருந்திறல் படைத்த இராவணனின் வலிமையை அழித்தாய். புறவம் என்னும் தலத்தை விரும்பினாய், கடலிடைத் துயிலும் திருமால் நான்முகன் ஆகியோர் அறிய முடியாத பண்பினை உடையாய். சண்பையை விரும்பினாய். ஐயுறும் சமணரும் அறுவகையான பிரிவுகளை உடைய புத்தரும் ஊழிக்காலம் வரை உணராது வாழ்நாளைப் பாழ் போக்கக் காழிப் பதியில் எழுந்தருளியுள்ளாய்.

வேள்வி செய்வோனாகிய ஏழிசையோன் வழிபட்ட கொச்சை வயத்தை விரும்பி வாழ்கின்றாய்,

ஆறு பதங்கள், ஐந்து வகைக் கல்வி, நால் வேதம், மூன்று, காலம், ஆகியன தோன்ற நிற்கும் மூர்த்தியாயினாய்,

சத்தி சிவம் ஆகிய இரண்டும் ஒருருவமாய் விளங்கும் தன்மையையும் இவ்விரண்டு நிலையில் சிவமாய் ஒன்றாய் இலங்கும் தன்மையையும் உணர்ந்த குற்றமற்ற அந்தணாளர் வாழும் கழுமலம் என்னும் பழம்பதியில் தோன்றிய கவுணியன்குடித் தோன்றலாகிய ஞானசம்பந்தன் கட்டுரையை விரும்பிப் பிரமன் மண்டையோட்டில் உண்ணும் பெருமானே அறிவான். அத்தன்மையை் உடைய நின்னை உள்ளவாறு அறிவார், நீண்ட இவ்வுலகிடை இனிப் பிறத்தல் இலர்.

குருவருள் : ஞானசம்பந்தர் அருளிய சித்திரக் கவிகளுள் ஒன்றாகிய திருவெழுகூற்றிருக்கை ஒன்றை மட்டுமே பாராயணம் புரிவோர், அவர் அருளிய தேவாரத் திருப்பதிகங்கள் அனைத்தையும் ஓதிய பயனைப் பெறுவர் என்பது மரபு.

சிவபாத இருதயர், திருஞானசம்பந்தர் ஓதிவரும் திருப் பதிகங்களை நாள்தோறும் பாராயணம் செய்வதை நியமமாகக் கொண்டிருந்தார். பதிகம் பெருகப் பெருகப் பாராயணம் செய்வதில் தம் தந்தையார் இடர்ப்படுதலைக் கண்ட திருஞானசம்பந்தர் இத் திருவெழுகூற்றிருக்கையை அருளி இதனை ஓதி வந்தாலே அனைத்துத் திருப்பதிகங்களையும் ஓதிய பயனைப் பெறலாம் எனக் கூறினார் என்பர்.

Koviloor Digital Library

129. திருக்கழுமலம்

பண்: மேகராகக்குறிஞ்சி

பதிக எண்: 129

திருச்சிற்றம்பலம்

1383. சேவுயருந் திண்கொடியான் றிருவடியே
சரணென்று சிறந்தவன்பால்
நாவியலு மங்கையொடு நான்முகன்றான்
வழிபட்ட நலங்கொள்கோயில்
வாவிதொறும் வண்கமல முகங்காட்டச்
செங்குமுதம் வாய்கள்காட்டக்
காவியிருங் கருங்குவளை கருநெய்தல்
கண்காட்டுங் கழுமலமே. 1

1384. பெருந்தடங்கண் செந்துவர்வாய்ப் பீடுடைய
மலைச்செல்வி பிரியாமேனி
அருந்தகைய சுண்ணவெண்ணீ றலங்கரித்தா
னமரர்தொழ வமருங்கோயில்

1. பொ-ரை : விடை வடிவம் எழுதி உயர்த்திய வலிமையான கொடியை உடைய சிவபிரானின் திருவடிகளே நமக்குச் சரண் என்று நாவின்கண் பொருந்திய கலைமகளோடு வந்து நான்முகன் சிறந்த அன்போடு வழிபட்ட அழகிய கோயில்; வாவிகள்தோறும் மலரும் வளவிய தாமரை மலர்கள் மகளிர்தம் முகங்களையும் செங்கழுநீர் மலர்கள் வாய்களையும், காவி மலர்கள், கருங்குவளை மலர்கள், கரிய நெய்தல் மலர்கள் ஆகியன கண்களையும் போலத் தோன்றி மலரும் கழுமலத்தின்கண் விளங்குவதாகும்.

கு-ரை : 'விடையுயர்த்த பெருமான் திருவடியே சரண்' என்று பிரமன் வழிபட்ட கோயில், நீர்ப்பூக்கள் நேரிழையார் அவயவங் களைக் காட்டும் கழுமலம் என்கின்றது. சே - இடபம். நா இயலும் மங்கை - சரஸ்வதி.

2. பொ-ரை : அகன்ற விழிகளையும், பவளம் போலச் சிவந்த வாயையும் உடைய பெருமை மிக்க மலைமகளாகிய உமையம்மை பிரியாத திருமேனியில், அருமையான திருவெண்ணீற்றுப் பொடியை

Koviloor Digital Library

தருந்தடக்கை முத்தழலோர் மனைகள்தொறு
மிறைவனது தன்மைபாடிக்
கருந்தடங்கண் ணார்கழல்பந் தம்மானைப்
பாட்டயருங் கழுமலமே. 2

1385. அலங்கன்மலி வானவருந் தானவரு
மலைகடலைக் கடையப்பூதங்
கலங்கவெழு கடுவிடமுண் டிருண்டமணி
கண்டத்தோன் கருதுங்கோயில்
விலங்கலமர் புயன்மறந்து மீன்சனிபுக்
கூன்சலிக்குங் காலத்தானுங்
கலங்கலிலா மனப்பெருவண் கையுடைய
மெய்யர்வாழ் கழுமலமே. 3

அழகுறப் பூசிய சிவபிரான் தேவர்கள் தன்னை வணங்க எழுந்தருளியுள்ள திருக்கோயில், வள்ளன்மையோடு விளங்கும் நீண்ட கைகளை உடைய முத்தீ வேட்கும் அந்தணர்களின் வீடுகள்தோறும் கரியவான பெரிய கண்களை உடைய மகளிர் இறைவனுடைய இயல்புகளைக் கூறிக்கொண்டு கழற்சிக்காய் அம்மானை பந்து ஆகியன ஆடி மகிழும் கழுமல நகரின் கண் உள்ளது.

கு-ரை : பெரியநாயகி பிரியாத மேனியில் திருநீற்றால் அலங்கரித்தான் கோயில் இது என்கின்றது. துவர் - பவளம். பீடு - பெருமை. தரும் தடக்கை - வழங்கும் விசாலமான கை. முத்தழலோர் - முத்தழல் ஓம்பும் அந்தணர். அந்தணர் வீட்டில் மகளிர் இறைவன் புகழைப்பாடி அம்மானை பந்து கழங்கு ஆடுகின்றார்கள் என்பதாம்.

3. பொ-ரை : மலர்மாலை அணிந்த தேவர்களும் அசுரர்களும் கூடி அலைகள் பொருந்திய திருப்பாற்கடலைக் கடைந்தபோது பூதங்களும் கலங்குமாறு எழுந்த கொடிய நஞ்சை, அவர்களைக் காத்தற்பொருட்டுத் தான் உண்டு. கரிய மணி போன்ற மிடற்றினன் ஆகிய சிவபிரான் தனது உறைவிடம் என்று மகிழ்வோடு நினையும் கோயில்; மலைகள் மீது தங்கி மழை பொழியும் மேகங்கள் மழை பொழிவதை மறத்தற்குரியதான மகர ராசியில் சனி புகுந்து உணவு கிடைக்காமல் மக்கள் உடல் இளைக்கும் பஞ்ச காலத்திலும் மனம் கலங்காது பெரிய வள்ளன்மையோடு மக்களைக் காக்கும் உண்மை யாளர் வாழும் கழுமலத்தின்கண் உள்ளது.

Koviloor Digital Library

1386. பாரிதனை நலிந்தமரர் பயமெய்தச்
சயமெய்தும் பரிசுவெம்மைப்
போரிசையும் புரமூன்றும் பொன்றவொரு
சிலைவளைத்தோன் பொருந்துங்கோயில்
வாரிசைமென் முலைமடவார் மாளிகையின்
சூளிகைமேன் மகப்பாராட்டக்
காரிசையும் விசும்பியங்குங் கணங்கேட்டு
மகிழ்வெய்துங் கழுமலமே. 4

1387. ஊர்கின்ற வரவமொளி விடுதிங்க
ளொடுவன்னி மத்தமன்னும்
நீர்நின்ற கங்கை நகு வெண்டலைசேர்
செஞ்சடையா னிகழுங் கோயில்

கு-ரை : தேவரும் அசுரரும் பாற்கடலைக் கடைய எழுந்த விடத்தை உண்டு கறுத்தகண்டன் உறைகோயில் இது என்கின்றது. அலங்கல் - மாலை. விலங்கல் - மலை. புயல் - மேகம். மீன் சனி புக்கு - மகர ராசியில் சனி புகுந்து. ஊன் சலிக்கும் காலத்தானும் - உடல் வாடிய காலத்திலும். பஞ்சகாலத்தும் கலங்காத வள்ளல்கள் வாழும் நகர் என்க.

4. பொ-ரை : மண்ணுலக மக்களை வருத்தியும், தேவர்களை அஞ்சுமாறு செய்தும், வெற்றி பெறும் இயல்பினராய்க் கொடிய போரை நிகழ்த்தும் அவுணர்களின் முப்புரங்களும் அழிய ஒப்பற்ற வில்லை வளைத்த சிவபிரான் உறையும் கோயில்; கச்சணிந்த மென்மையான தனங்களை உடைய மகளிர் மாடவீடுகளின் உச்சியில் நின்று தம் குழந்தைகளைப் பாடிப் பாராட்டும் இசையை மேகங்கள் உலாவும் வானவெளியில் உலாவும் கந்தருவர்கள் கேட்டு மகிழும் கழுமல நகரில் உள்ளதாகும்.

கு-ரை : உலகை வருத்தி, தேவர் அஞ்ச, வெல்லும் வகை வில்லை வளைத்து புரம் எரித்த இறைவன் கோயில் இது என்கின்றது. பார் - பூமி. நலிந்து - வருத்தி. வார் - கச்சு. சூளிகை - உச்சி. மகளிர் மாளிகையின்மேல் குழந்தைகளைத் தாலாட்ட அதனைத் தேவர் கேட்டு மகிழும் கழுமலம் என்க.

5. பொ-ரை : ஊர்ந்து செல்லும் அரவு. ஒளிவிடும் திங்கள், வன்னி, ஊமத்த மலர், நீர்வடிவான கங்கை, நகும் வெண்டலை

Koviloor Digital Library

ஏர்தங்கி மலர்நிலவி யிசைவெள்ளி
மலையென்ன நிலவிநின்ற
கார்வண்டின் கணங்களாற் கவின்பெருகு
சுதைமாடக் கழுமலமே. 5

1388. தருஞ்சரதந் தந்தருளென் றடிநினைந்து
தழலணைந்து தவங்கள்செய்த
பெருஞ்சதுரர் பெயலர்க்கும் பீடார்தோ
ழமையளித்த பெருமான்கோயில்
அரிந்தவய லரவிந்த மதுவுகுப்ப
வதுகுடித்துக் களித்துவாளை
கருஞ்சகட மிளகவள்ர் கரும்பிரிய
வகம்பாயுங் கழுமலமே. 6

ஆகியன சேர்ந்த செஞ்சடையை உடைய சிவபிரான் எழுந்தருளியுள்ள கோயில்; அழகு பொருந்திய வெள்ளி மலைகள் போல விளங்கி நிற்பனவும் மலர்களால் அலங்கரிக்கப்பெற்று அவற்றை மொய்க்கும் கரிய வண்டுகளின் கணங்களால் சூழப்பெற்றுக் கவின்மிகுவனவுமாய வெண்மையான சுதையால் அமைந்த மாட வீடுகள் நிறைந்த கழுமல நகரில் உள்ளது.

கு-ரை : அரவம், மதி, வன்னி, ஊமத்தம், கங்கை, கபாலம் இவை பொருந்திய செஞ்சடையான் கோயில் கழுமலம் என்கின்றது. ஏர் - அழகு.

6. பொ-ரை : மெஞ்ஞானியர்க்குத் தரும் உண்மை ஞானத்தை எங்கட்கும் தந்தருள் என்று திருவடிகளை நினைந்து, தீ நடுவில் நின்று தவம் செய்யும் பெரிய சதுரப்பாடு உடையவர்கட்கும் மழை நீரில் நின்று தவமியற்றுபவர்கட்கும் பெருமை மிக்க தோழமையை வழங்கியருளும் சிவபிரான் உறையும் கோயில்; நெல்லறுவடை செய்த வயலில் முளைத்த தாமரை மலர்கள் தேனைச் சொரிய, அதனைக் குடித்துக் களித்த வாளை மீன்கள் வயற்கரைகளில் நிற்கும் பெரிய வண்டிகள் நிலைபெயரவும் கரும்புகள் ஒடியவும் துள்ளிப்பாயும் கழுமல வளநகரில் உள்ளதாகும்.

கு-ரை : அருளுக என்று அடிநினைந்து, தீ நடுவில் தவஞ்

Koviloor Digital Library

1389. புவிமுதலைம் பூதமாய்ப் புலனைந்தாய்
நிலனைந்தாய்க் கரண நான்காய்
அவையவைசேர் பயனுருவா யல்லவுரு
வாய்நின்றா னமருங்கோயில்
தவமுயல்வோர் மலர்பறிப்பத் தாழவிடு
கொம்புதைப்பக் கொக்கின்காய்கள்
கவணெறிகற் போற்சுனையிற் கரைசேரப்
புள்ளிரியுங் கழுமலமே. 7

செய்யும் சதுரர்க்கும், தோழமை தந்த பெருமான் கோயில் இது என்கின்றது. சரதம் - துணிவு. பீடு - பெருமை. அரிந்தவயல் - அறுத்த வயலிலே. அரவிந்தம் - தாமரை. வாளைமீன் தாமரைத் தேனைக் குடித்துப் பெரிய வண்டி இளக, கருப்பங்காடு விலகப் பாயும் கழுமலம் என்க.

7. பொ-ரை : மண், புனல் முதலிய பூதங்கள் ஐந்து. சுவை ஒளி முதலிய புலன்கள் ஐந்து. அவற்றுக்கு இடமாகிய மெய், வாய் முதலிய பொறிகள் ஐந்து. வாக்கு பாதம் முதலிய செய் கருவிகள் ஐந்து. மனம் புத்தி முதலிய உட்கருவிகள் நான்கு ஆகிய ஆன்ம தத்துவங்களாகவும் அவற்றின் பயனாகவும், உருவமாகவும் அருவமாகவும் நிற்கின்ற சிவபிரான் எழுந்தருளிய கோயில், தவம் செய்ய முயல்வோர் இறைவனை அருச்சிக்க மரங்களில் பூத்த மலர்களைப் பறித்துக் கொண்டு விடுத்த கொம்புகள் நிமிர்ந்து தாக்குதலால் மாமரத்தில் காய்த்த காய்கள் விண்டு கவணிலிருந்து வீசப்பட்ட கல்போல சுனைகளில் வீழ ஆங்குறைந்த பறவைகள் அஞ்சி அகலும் வளமான கழுமல வளநகரில் உள்ளதாகும்.

கு-ரை : ஐம்பூதமாய், ஐம்புலனாய், ஐம்பொறியாய், நாற்கரணமாய், அவற்றின்பயனாய், உருவாய், அருவாய் நின்றான் அமரும் கோயில் இது என்கின்றது. நிலன் ஐந்து - புலன்கள் தோன்றுதற்கு இடமாய ஐம்பொறிகள். கரணம் நான்கு - மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன. அவை அவை சேர்பயன் உருவாய் - பூத முதலியவற்றைச் சேர்ந்தபயனே வடிவாய்; என்றது பூதப்பயனாய சுவை முதலியதன் மாத்திரை ஐந்தும், புலனைந்தின் பயனாய பொறியின்பம் ஐந்தும், நிலனைந்தின் பயனாய புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் என்ற ஒழுக்கம் ஐந்தும், கரணம் நான்கின் பயனாய நினைத்தலும் புத்தி பண்ணலும் சிந்தித்தலும் இது செய்வேன் என அகங்கரித்து எழுதலுமாகிய நான்கும் கொள்ளப்பெறும். அல்ல

Koviloor Digital Library

1390. அடல்வந்த வானவரை யழித்துலகு
தெழித்துழலு மரக்கர்கோமான்
மிடல்வந்த விருபதுதோ ணெரியவிரற்
பணிகொண்டோன் மேவுங்கோயில்
நடவந்த வுழவரிது நடவொணா
வகைபரலாய்த் தென்றுதுன்று
கடல்வந்த சங்கீன்ற முத்துவயற்
கரைகுவிக்குங் கழுமலமே. 8

1391. பூமகள்தன் கோனயனும் புள்ளினொடு
கேழலுரு வாகிப்புக்கிட்
டாமளவுஞ் சென்றுமுடி யடிகாணா
வகைநின்றா னமருங்கோயில்

வுருவாய் - இவையல்லாத அருவாய ஞானமாய். பூப்பறிப்போர் விட்ட பூங்கொம்புகள் சென்று தாக்க மாங்காய்கள் கவண்கல்லைப் போலச் சுனைக் கரையில் விழப் பறவைகள் அஞ்சியகலும் நகர் என்க.

8. பொ-ரை : வலிமை பொருந்திய தேவர்கள் பலரை அழித்து உலகை அச்சுறுத்தித் திரிந்த அரக்கர் தலைவனாகிய இராவணனின் வலிமைமிக்க இருபது தோள்களையும் கால் விரலால் நெரிய ஊன்றி அவனைப் பணிகொண்ட சிவபிரான் எழுந்தருளியுள்ள கோயிலை உடையது, நாற்று நடவந்த உழவர்கள் இவை நாற்று நடுவதற்கு இடையூறாய்ப் பரற்கற்கள் போலத் தோன்றுகின்றனவே என்று கூறுமாறு கடலின்கண் இருந்துவந்த சங்குகள் முத்துக்களை வயல்களில் ஈன்று குவிக்கும் கழுமலமாகும்.

கு-ரை : தேவர்களை அழித்து உலகை வருத்தி உழலும் இராவணனது இருபது தோள்களும் நெரிய விரலூன்றிய சிவ பெருமான் உறையுங் கோயில் நாற்று நடவந்த உழவர்கள் பருக்கைக் கல்லாக இருக்கிறதென்று எண்ணி முத்துக்களை வரப்பில் குவிக்கும் கழுமலம் என்கின்றது. அடல் - வலிமையோடு. ஒழித்து - கொன்று. மிடல் - வலிமை. பரல் ஆய்த்து - பருக்கைக் கல்லாயிற்று. துன்று - நெருங்கிய. இது நெய்தலோடு தழீஇய மருதம் என்பதை விளக்கிற்று.

9. பொ-ரை : திருமகளின் கேள்வனாகிய திருமாலும், நான் முகனும் பன்றி உருவம் எடுத்தும், அன்னப்பறவை வடிவ மெடுத்தும்,

Koviloor Digital Library

பாமருவுங் கலைப்புலவோர் பன்மலர்கள்
கொண்டணிந்து பரிசினாலே
காமனைகள் பூரித்துக் களிகூர்ந்து
நின்றேத்துங் கழுமலமே. 9

1392. குணமின்றிப் புத்தர்களும் பொய்த்தவத்தை
மெய்த்தவமாய் நின்றுகையில்
உணன்மருவுஞ் சமணர்களு முணராத
வகைநின்றா னுறையுங்கோயில்
மணமருவும் வதுவையொலி விழவினொலி
யிவையிசைய மண்மேற்றேவர்
கணமருவு மறையினொலி கீழ்ப்படுக்க
மேற்படுக்குங் கழுமலமே. 10

தேடப் புகுந்து தம்மால் ஆமளவும் சென்று அடிமுடி காணாதவராய்த் தோற்று நிற்க, அழலுருவாய் ஓங்கி நின்ற சிவபிரான் எழுந்தருளிய கோயிலையுடையது, பல்வகைப் பாக்களில் அமைந்துள்ள அருங்கலைகளை அறிந்த புலவர்கள் பல மலர்களைக் கொண்டு அருச்சித்து முறையோடு விருப்பங்கள் நிறைவேறக்கண்டு களிகூர்ந்து போற்றும் கழுமல நகராகும்.

கு-ரை : பிரமனும் திருமாலும் அன்னமாயும், பன்றியாயும் அடிமுடிகாணப் பெறாதான் அமருங் கோயில் புலவர்கள் பூக்கொண்டு அணிந்து இஷ்டத்தை நிறைவேற்ற வழிபாடு செய்யும் கழுமலம் என்கின்றது. பூ மகள் தன் கோன் - இலக்குமி நாயகனாகிய திருமால். புள் - பறவையாகிய அன்னம். கேழல் - பன்றி. ஆம் அளவும் - ஆணவத்தால் விளைந்த தற்போதம் கெடுமளவும். காமனை - விருப்பம்.

10. பொ-ரை : நற்குணங்கள் இல்லாத புத்தர்களும், பொய்த் தவத்தை மெய்த்தவமாய் எண்ணிக் கையில் உணவேற்று உண்டு வாழும் சமணர்களும், அறிய முடியாதவாறு நின்ற சிவபிரான் உறையும் கோயிலை உடையது, ஆடவர் பெண்டிரை மணக்கும் திருமணத்தில் எழும் ஆரவாரமும், திருவிழாக்களின் ஓசையும், பூசுரர்களாகிய அந்தணர்கள் ஓதும் வேத ஒலியை அடங்குமாறு செய்து மிகுந்து ஒலிக்கும் கழுமல நகராகும்.

Koviloor Digital Library

1393. கற்றவர்கள் பணிந்தேத்துங் கழுமலத்து
ளீசன்றன் கழன்மேனல்லோர்
நற்றுணையாம் பெருந்தன்மை ஞானசம்
பந்தன்றா னயந்துசொன்ன
சொற்றுணையோ ரைந்தினொடைந் திவைவல்லார்
தூமலராள் துணைவராகி
முற்றுலக மதுவாண்டு முக்கணா
னடிசேர முயல்கின்றாரே. 11

திருச்சிற்றம்பலம்

கு-ரை : குணமில்லாமல் புத்தர்களும், பொய்த் தவத்தை மெய்த்தவமாக்காட்டி யொழுகும் சமணர்களும், உணராதவகை நின்றான் கோயில், திருமணவொலியும், விழவொலியும் தம்முட் கலக்க, பூவுலகில் தேவர்கள் கூட்டம் சேருங்கால் உளதாகும் வேதவொலி அடங்க, அவை மேற்பட ஒலிக்கும் கழுமலம் என்கின்றது. வதுவை - தாலிகட்டுங் கல்யாணம்.

11. பொ-ரை : கற்றவர்களாலே பணிந்து வழிபடப்பெறும் கழுமலத்துள் விளங்கும் இறைவருடைய திருவடிகளின் மேல், நல்லோர்க்கு நற்றுணையாகும் பெருந்தன்மையையுடைய ஞானசம்பந்தன் விரும்பிப் போற்றிப் பாடிய, ஓதுவார்களுக்குத் துணையாய் அமைந்த சொற்களையுடைய இப்பதிகப் பாடல்கள் பத்தையும் வல்லவர், திருமகள் கேள்வராய் இவ்வுலகம் முழுவதையும் அரசாண்டு சிவனடி கூடும் முயற்சியைச் செய்கின்றவராவர்.

கு-ரை : கழுமலத்தீசன் திருவடிமேல், கற்றவர் நற்றுணையாகிய ஞானசம்பந்தன் சொன்ன திருப்பாடல் பத்தும் வல்லார் திருமகள் கணவராகி உலகமுழுதாண்டு சிவபெருமான் திருவடி சேர முயல்கின்றார் என்கின்றது. சொல்துணை - ஓதுவார்க்குத் துணையான சொல்.

Koviloor Digital Library

130. திருவையாறு

பதிக வரலாறு:

திருப்பழனத்தில் எழுந்தருளியிருக்கின்ற முக்கட் பரமேட்டியைத் தொழுது, அங்கிருந்து, பிள்ளையார் ஐயாறு சென்றடைந்தார்கள். ஐயாற்று அடியார்கள் அனைவரும் 'சிவ ஞானத் தெள்ளமுது உண்ட திருஞான சம்பந்தப் பிள்ளையார் எழுந்தருளினர்' என்று ஊரை அலங்கரித்தனர். மனக்களிப் போடு எதிர்கொண்டு அழைத்தனர். நந்தி அருள் பெற்ற நன்னக ராகிய ஐயாற்றை முதற்கண் வணங்கிப் புலனைந்தும் நிலை கலங்குமிடத்து அஞ்சல் என்பார்தம் ஐயாறு என்று சிறப்பிக்கும் இப்பதிகத்தைப் பாடியருளினர். இதனைச் சேக்கிழார் பெருமான் 'புந்திநிறை செந்தமிழின் சந்த இசை' என வாயாரப் போற்று வார்கள்.

பண்: மேகராகக்குறிஞ்சி

பதிக எண்: 130

திருச்சிற்றம்பலம்

1394. புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக வஞ்சேலென்
றருள்செய்வா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே. 1

1. பொ-ரை : ஐம்புலன்களும் தத்தம் பொறிகளை விட்டு வழிமாறி அறிவழிந்து, கபம் மேற்பட மனம் சுழன்று வருந்தும் இறுதிக் காலத்து, 'அஞ்சேல்' என்றுரைத்து அருள் செய்பவனாகிய சிவபிரான் அமரும் கோயிலை உடையது, நடனக்கலையில் வெற்றியுற்ற பெண்கள் நடனம் ஆட, அவ்வாடலுக்கேற்ற கூத்தொலிகளை எழுப்பும் முழவுகள் அதிர, அவற்றைக் கண்டு அஞ்சிய சிலமந்திகள் வானத்தில்

Koviloor Digital Library

1395. விடலேறு படநாக மரைக்கசைத்து
வெற்பரையன் பாவையோடும்
அடலேறொன் றதுவேறி யஞ்சொலீர்
பலியென்னு மடிகள்கோயில்
கடலேறித் திரைமோதிக் காவிரியி
னுடன்வந்து கங்குல்வைகித்
திடலேறிச் சுரிசங்கஞ் செழுமுத்தங்
கீன்றலைக்குந் திருவையாறே. 2

கேட்கும் இடியோசை என்றஞ்சி மனம் சுழன்று மரங்களில் ஏறி மேகங்களைப் பார்க்கும் திருவையாறாகும்.

கு-ரை : ஐம்புலன்களும் தத்தம் பொறிகளை விட்டு வழிமாறி அறிவழிந்து கபம் மேலிட்டு வருந்துங்காலத்து அபயப் பிரதானம் செய்பவன் கோயில், வலம்வரும் பெண்கள் நடனம் செய்ய, அதற்குப் பக்கவாத்தியமாக முழவு அதிர, அவ்வொலியை மேகத்திடியோசை யென மயங்கி, மந்திகள் மரம் ஏறி முகில் பார்க்கும் ஐயாறு என்கின்றது. ஐ - கபம் . அலமந்து - சுழன்று. முகில் - மேகம்.

2. பொ-ரை : கொல்லுதலாகிய குற்றம் பொருந்திய படத்தினை யுடைய நாகத்தை இடையிற் கட்டி, மலையரையன் மகளாகிய பார்வதி தேவியோடு வலிமை பொருந்திய விடையேற்றின் மேல் ஏறி, அழகிய சொற்களைப் பேசும் மகளிரே! பிச்சையிடுங்கள் என்று கேட்டுச் சென்ற சிவபிரானது கோயிலையுடையது, வளைந்த மூக்கினையுடைய கடற் சங்குகள் கடலினின்றும் அலை வழியாக அதில் பாயும் காவிரியோடு வந்து இரவின்கண் திடலில் ஏறித் தங்கிச் செழுமையான முத்துக்களை ஈன்று சஞ்சரிக்கும் திருவையாறாகும்.

கு-ரை : பாம்பைத் திருவரையிற்கட்டி, மலையரசன் மகளோடும் விடையேறி, அம்மா பிச்சையிடுங்கள் என்னும் அடிகள் கோயில், கடற்சங்கம் காவிரியோடு மேல் ஏறி வந்து முத்தம் ஈன்றலைக்கும் ஐயாறு என்கின்றது.

விடல் - வலிமை. வீடல் என்பதன் விகாரம் எனக்கொள்ளினும் அமையும். அஞ்சொலீர் - அழகிய சொற்களை யுடையவர்களே. கங்குல் - இரவு. திடல் - மேடு. சுரி சங்கம் - சுரிந்த மூக்கினையுடைய சங்குகள்.

Koviloor Digital Library

1396. கங்காளர் கயிலாய மலையாளர்
கானப்பே ராளர்மங்கை
பங்காளர் திரிசூலப் படையாளர்
விடையாளர் பயிலுங்கோயில்
கொங்காளப் பொழினுழைந்து கூர்வாயா
லிறகுலர்த்திக் கூதனீங்கிச்
செங்கானல் வெண்குருகு பைங்கான
லிரைதேருந் திருவையாறே. 3

1397. ஊன்பாயு முடைதலைகொண் டூருரின்
பலிக்குழல்வா ருமையாள்பங்கர்
தான்பாயும் விடையேறுஞ் சங்கரனார்
தழலுருவர் தங்குங்கோயில்

3. பொ-ரை : சிறந்த பிரமன், திருமால் ஆகியோரின் முழு எலும்புக்கூட்டை அணிந்தவரும், கயிலாய மலையில் உறைபவரும், கானப்பேர் என்னும் தலத்தில் எழுந்தருளியவரும், மங்கை பங்கரும் முத்தலைச் சூலப்படை ஏந்தியவரும், விடை ஊர்தியை உடையவரும் ஆகிய சிவபிரானார் எழுந்தருளிய கோயிலை உடையது, சிவந்த கால்களையுடைய வெண்ணிறக் குருகுகள் தேன் நிறைந்த சோலைகளில் நுழைந்து கூரிய தம் அலகுகளால் தம் இறகுகளைக் கோதிக் குளிர் நீங்கிப் பசுமையான சோலைகளில் தமக்கு வேண்டும் இரைகளைத் தேடும் திருவையாறாகும்.

கு-ரை : கங்காளர் மங்கைபங்காளர் பயிலுங் கோயில், வெண்குருகு பொழிலில் நுழைந்து அலகால் சிறகைக் கோதி, உலர்த்தி, குளிர்நீங்கி இரைதேடும் ஐயாறு என்கின்றது. கொங்கு ஆள் அப்பொழில் - தேன் நிறைந்த அச்சோலை. கூதல் - குளிர். செங்கால் நல் வெண் குருகு எனப் பிரிக்க. கானல் - கடற்கரைச் சோலை. இது திணைமயக்கம் கூறியது.

4. பொ-ரை : புலால் பொருந்தியதாய், முடை நாற்றமுடைத்தாய் உள்ள தலையோட்டைக் கையில் ஏந்தி, ஊர்கள்தோறும் பலியேற்று உழல்பவரும், உமை பாகரும், பாய்ந்து செல்லும் விடையேற்றை உடையவரும், நன்மைகளைச் செய்வதால் சங்கரன் என்ற பெயரை உடையவரும், தழல் உருவினருமாகிய சிவபிரான் எழுந்தருளிய கோயிலையுடையது, மான் துள்ளித் திரிய, வயலருகே உள்ள

Koviloor Digital Library

மான்பாய வயலருகே மரமேறி
மந்திபாய் மடுக்கள்தோறும்
தேன்பாய மீன்பாயச் செழுங்கமல
மொட்டலருந் திருவையாறே. 4

1398. நீரோடு கூவிளமு நிலாமதியும்
வெள்ளெருக்கு நிறைந்தகொன்றைத்
தாரோடு தண்கரந்தை சடைக்கணிந்த
தத்துவனார் தங்குங்கோயில்
காரோடி விசும்பளந்து கடிநாறும்
பொழிலணைந்த கமழ்தார்வீதித்
தேரோடு மரங்கேறிச் சேயிழையார்
நடம்பயிலுந் திருவையாறே. 5

மரங்களில் ஏறி மந்திகள் பாய்வதால் மடுக்களில் தேன் பாய, அதனால் மீன்கள் துள்ளவும் செழுமையான தாமரை மொட்டுக்கள் அலரவும், விளங்குவதாகிய திருவையாறாகும்.

கு-ரை : பிரமகபாலத்தை ஏந்தி ஊர்தோறும் பலிக்கு உழல்வா ராகிய தழல் உருவர் தங்கும் கோயில், மான்பாய, வயலருகேயுள்ள மரத்தில் ஏறி மந்திகள் மடுக்கள் தோறும் பாய்வதால் தேன் பாய, மீன்பாய, தாமரைகள் மலரும் ஐயாறு என்கின்றது. மான்: முல்லைக் கருப்பொருள்.

5. பொ-ரை : கங்கைநதி, வில்வம், பிறைமதி, வெள்ளெருக்கு, கொன்றை மலர் நிறைந்த மாலை, குளிர்ந்த கரந்தை ஆகியவற்றைச் சடையின்கண் அணிந்த தத்துவனாகிய சிவபிரான் தங்கியுள்ள கோயிலையுடையது, மேகமண்டலம் வரை உயர்ந்து சென்று வானத்தை அளந்து மணம் பரப்பும் பொழில்கள் சூழ்ந்ததும், மணம் வீசும் வீடுகளை உடைய தேரோடும் வீதிகளில் அரங்குகளில் ஏறி அணிகலன்கள் புனைந்த இளம் பெண்கள் நடனம் ஆடுவதுமாகிய திருவையாறாகும்.

கு-ரை : கங்கையோடு வில்வம் எருக்கம்பூ முதலியவற்றைச் சடையிலணிந்த தத்துவனார் தங்குங் கோயில், மேகமண்டலத்தை யளாவி, விண்ணையளந்த பொழில்கள் சேர்ந்துள்ள தேரோடும் வீதியிலே உள்ள அரங்குகளில் மகளிர் நடமாடும் ஐயாறு என்கின்றது. கூவிளம் - வில்வம். கார் ஓடி - மேகம் பரந்து.

Koviloor Digital Library

1399. வேந்தாகி விண்ணவர்க்கு மண்ணவர்க்கு
நெறிகாட்டும் விகிர்தனாகிப்
பூந்தாம நறுங்கொன்றை சடைக்கணிந்த
புண்ணியனார் நண்ணுங்கோயில்
காந்தார மிசையமைத்துக் காரிகையார்
பண்பாடக் கவினார்வீதித்
தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே. 6

1400. நின்றுலா நெடுவிசும்பு நெருக்கிவரு
புரமூன்று நீள்வாயம்பு
சென்றுலாம் படிதொட்ட சிலையாளி
மலையாளி சேருங்கோயில்

6. பொ-ரை : அனைத்துலகங்களுக்கும் வேந்தனாய், விண்ணவர்களுக்கும், மண்ணவர்களுக்கும் வழி காட்டும் வள்ளலாய், மணங்கமழும் கொன்றை மாலையைச் சடையின்மிசை அணிந்தவனாய் புண்ணிய வடிவினனாய் விளங்கும் சிவபிரான் எழுந்தருளிய கோயிலையுடையது, மகளிர் காந்தாரப் பண்ணமைத்து இசைபாட அழகிய வீதிகளில் அமைந்த அரங்கங்களில் ஏறி அணிகலன்கள் பூண்ட இளம் பெண்கள் தேம், தாம் என்ற ஒலிக் குறிப்போடு நடனம் ஆடும் திருவையாறாகும்.

கு-ரை : அரசாகி, வழிகாட்டும் வள்ளலாகிய பூங்கொன்றை சடைக்கணிந்த புண்ணியர் கோயில் காந்தாரப்பண்ணமைத்து மகளிர் இசைபாட, சேயிழையார் சிலர் அரங்கேறி நடமாடும் ஐயாறு என்கின்றது. தாமம் - மாலை.

7. பொ-ரை : நீண்ட வானவெளியில் நின்று உலவி, தேவர்கள் வாழ்விடங்களை அழித்துவந்த முப்புரங்களையும், நீண்ட கூரிய அம்பு சென்று உலவும்படி கணை தொடுத்த வில்லாளியும், கயிலைமலை ஆளியுமாகிய சிவபிரான் சேர்ந்துறையும் கோயிலையுடையது, சிறுமலைகளில் குயில்கள் கூவவும், செழுமையான தேன் நிறைந்த மலர்களைத் தீண்டி மணம் மிகுந்து வருவதாகிய தென்றல் காற்று அடிவருடவும், அவற்றால் செழுமையான கரும்புகள் கண் வளரும் வளமுடைய திருவையாறாகும்.

Koviloor Digital Library

குன்றெலாங் குயில்கூவக் கொழும்பிரச
மலர்பாய்ந்து வாசமல்கு
தென்றலா ரடிவருடச் செழுங்கரும்பு
கண்வளருந் திருவையாறே. 7

1401. அஞ்சாதே கயிலாய மலையெடுத்த
வரக்கர்கோன் றலைகள்பத்தும்
மஞ்சாடு தோணெரிய வடர்த்தவனுக்
கருள்புரிந்த மைந்தர்கோயில்
இஞ்சாய லிளந்தெங்கின் பழம்வீழ
விளமேதி யிரிந்தங்கோடிச்
செஞ்சாலிக் கதிருழக்கிச் செழுங்கமல
வயல்படியுந் திருவையாறே. 8

கு-ரை : வானவீதியில் நெருங்கிவரும் முப்புரங்களையும் அம்புதைக்கும் வண்ணம் வளைத்த வில்லாளி, மலையில் குயில் கூவத் தேன்பாய்ந்து மணம் நிறைந்த தென்றற்காற்று அடிவருடக் கரும்பு தூங்கும் ஐயாறு என்கின்றது. பிரசம் - தேன். இதனால் தென்றற் காற்றின் சௌரப்யம், மாந்தியம் என்ற இருகுணங்களும் கூறப்பட்டன. கண் வளரும் - கணுக்கள் வளரும் என்றுமாம்.

8. பொ-ரை : அஞ்சாமல் கயிலை மலையை எடுத்த அரக்கர் தலைவனாகிய இராவணனின் தலைகள் பத்தையும் வலிமை பொருந் திய அவன் தோள்களோடு நெரியுமாறு அடர்த்துப் பின் அவனுக்கு அருள் புரிந்த சிவபிரான் எழுந்தருளிய கோயிலை உடையது. இனிய தோற்றத்தையுடைய இளந்தென்னையில் காய்த்த நெற்று விழ, அதனைக் கண்டு அஞ்சிய எருமை இளங்கன்று அஞ்சி ஓடி செந்நெற் கதிர்களைக் காலால் மிதித்துச் செழுமையான தாமரைகள் களையாகப் பூத்த வயல்களில் படியும் திருவையாறாகும்.

கு-ரை : சிறிதும் அஞ்சாது கயிலையைத் தூக்கிய இராவணன் தலைகள் பத்தையும் நெரித்து அவனுக்கு அருள்செய்த மைந்தர் கோயில், தேங்காய் நெற்று வீழ, எருமைக்கன்று பயந்தோடி நெல் வயலை மிதித்துத் தாமரை முளைத்திருக்கின்ற வயலிலே படியும் ஐயாறு என்கின்றது. மஞ்சு - வலிமை. மைந்து என்பதன் திரிபு. இன் சாயல் - இனிய நிழல். இஞ்சாயல் என ஆயிற்று எதுகைநோக்கி. இளமேதி - ஈனாக்கன்றாகிய எருமை. செஞ்சாலி - செந்நெல்.

Koviloor Digital Library

1402. மேலோடி விசும்பணவி வியனிலத்தை
மிகவகழ்ந்து மிக்குநாடும்
மாலோடு நான்முகனு மறியாத
வகைநின்றான் மன்னுங்கோயில்
கோலோடக் கோல்வளையார் கூத்தாடக்
குவிமுலையார் முகத்திநின்று
சேலோடச் சிலையாடச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே. 9

1403. குண்டாடு குற்றுடுக்கைச் சமணரொடு
சாக்கியருங் குணமொன்றில்லா
மிண்டாடு மிண்டருரை கேளாதே
யாளாமின் மேவித்தொண்டீர்
எண்டோளர் முக்கண்ண ரெம்மீச
ரிறைவரினி தமருங்கோயில்
செண்டாடு புனற்பொன்னிச் செழுமணிகள்
வந்தலைக்குந் திருவையாறே . 10

9. பொ-ரை : அன்னமாய் மேலே பறந்து சென்று வானத்தைக் கலந்தும், அகன்ற நிலத்தை ஆழமாக அகழ்ந்தும் முயற்சியோடு தேடிய நான்முகன், திருமால் ஆகியோர் அறிய முடியாதவாறு ஓங்கி நின்ற சிவபிரான் உறையும் கோயிலையுடையது, கூத்தர்கள் கையில் வைத்து ஆட்டும் அபிநயக் கோலுடன் திரண்ட வளையல்களை அணிந்த மகளிர் கூத்தாட, திரண்ட தனங்களையுடைய அச்சேயிழையார் முகத்தில் கண்களாகிய சேல் மீன்கள் பிறழவும், வில் போன்ற புருவங்கள் மேலும் கீழும் செல்லவும், நடனமாடும் திருவையாறாகும்.

கு-ரை : மேலே பறந்தும் நிலத்தைத் தோண்டியும் தேடிய அயனும் மாலும் அறியாதவண்ணம் அழலுருவானான் அமருங் கோயில், ஐயாறு என்கின்றது. அணவி - கலந்து. கோல் - கூத்தர் கையிற் கொள்ளும் அவிநயக்கோல். கோல் வளை - திரண்டவளை.

10. பொ-ரை : இழிசெயல்களில் ஈடுபடுவோராய்ச் சிறிய ஆடையினராய்த் திரியும் சமணர்களும், சாக்கியர்களும் கூறும் நன்மை பயவாத சொற்களையும், வஞ்சனை பொருந்திய உரைகளையும், கேளாமல், தொண்டர்களே! நீவிர் சிவபிரானை அடைந்து அவருக்கு

Koviloor Digital Library

1404. அன்னமலி பொழில்புடைசூ ழையாற்றெம்
பெருமானை யந்தண்காழி
மன்னியசீர் மறைநாவன் வளர்ஞான
சம்பந்தன் மருவுபாடல்
இன்னிசையா லிவைபத்து மிசையுங்கா
லீசனடி யேத்துவார்கள்
தன்னிசையோ டமருலகிற் றவநெறிசென்
றெய்துவார் தாழாதன்றே. 11

திருச்சிற்றம்பலம்

ஆட்படுவீர்களாக . எட்டுத் தோள்களையும், முக்குணங்களையும் உடைய எம் ஈசனாகிய இறைவன் இனிதாக எழுந்தருளியிருக்கும் கோயிலையுடையது, பூக்களைச் செண்டுகள் போல் உருட்டி ஆட்டிக் கொண்டு வரும் நீர் நிறைந்த காவிரி செழுமையான மணிகளைக் கரையில் கொண்டு வந்து சேர்க்கும் திருவையாறு என்னும் தலமாகும்.

கு-ரை : தொண்டர்களே! புறச் சமயிகளின் மொழிகளைக் கேளாதே ஆட்படுங்கள்; எம் இறைவர் அமருங்கோயில் காவிரி மணி களைக் கொணர்ந்து எற்றும் திருவையாறு என்கின்றது. குற்றுடுக்கை - சிற்றாடை. மிண்டு - குறும்பான உரை . மேவி - விரும்பி. செண்டு - பூ உருண்டை.

11. பொ-ரை : அன்னப் பறவைகள் நிறைந்த பொழில்கள் புடை சூழ்ந்து விளங்கும் திருவையாற்றுப் பெருமானை, அழகிய தண்மை யான சீகாழிப் பதியில் வாழும் சிறப்பு மிக்க, வேதங்கள் பயிலும் நாவினன் ஆகிய புகழ் வளரும் ஞானசம்பந்தன் போற்றிப் பாடிய பாடல்களாகிய இத்திருப்பதிகப் பாடல்கள் பத்தையும் ஓதி, ஈசனடியை ஏத்துபவர்கள் புகழோடு தவநெறியின் பயனாக விளங்கும் அமரர் உலகத்தைத் தாழாமல் பெறுவர்.

கு-ரை : ஐயாற்றெம்பெருமானைச் சம்பந்த சுவாமிகள் பாடல்களால் தோத்திரிப்பவர்கள் புகழோடு தேவருலகிற் செல்வார் கள் என்கின்றது. இசையோடு அமர் உலகு - தேவருலகு. தாழாது - தாமதியாது.

Koviloor Digital Library

131. திருமுதுகுன்றம்

பதிக வரலாறு:

12 -ஆம் பதிகம் பார்க்க.

பண்: மேகராகக்குறிஞ்சி

பதிக எண்: 131

திருச்சிற்றம்பலம்

1405. மெய்த்தாறு சுவையுமே ழிசையுமெண்
குணங்களும் விரும்புநால்வே
தத்தாலு மறிவொண்ணா நடைதெளியப்
பளிங்கேபோ லரிவைபாகம்
ஒத்தாறு சமயங்கட் கொருதலைவன்
கருதுமூ ருலவுதெண்ணீர்
முத்தாறு வெதிருதிர நித்திலம்வா
ரிக்கொழிக்கு முதுகுன்றமே. 1

1. பொ-ரை : மெய்யினால் அறியத்தக்கதாகிய ஆறு சுவைகள் ஏழிசைகள், எண் குணங்கள், எல்லோராலும் விரும்பப் பெறும் நான்கு வேதங்கள் ஆகியவற்றால் அறிய ஒண்ணாதவனும், அன்போடு நடத்தலால் தெளியப் பெறுபவனும், பளிங்கு போன்றவனும், உமை யம்மையை ஒரு பாகமாக உடையவனும், ஆறு சமயங்களாலும் மாறுபாடின்றி ஏற்றுக் கொள்ளப் பெறும் ஒரே தலைவனும் ஆகிய சிவபிரான் விரும்பும் ஊர், தெளிந்த நீர் நிறைந்த மணிமுத்தாறு மலையின்கண் உள்ள மூங்கில்கள் உதிர்க்கும் முத்துக்களை வாரிக் கொணர்ந்து கரையிற் கொழிக்கும் திருமுதுகுன்றமாகும்.

கு-ரை : சுவைகளும், இசையும், எண்குணங்களும், வேதமும் அறியவொண்ணாத தலைவன், அகச்சமயமாறுக்கும் ஒரே தலைவன் திருவுளங்கொண்ட ஊர், மணிமுத்தாறு மூங்கில் உதிர்த்த முத்துக் களைக் கொழிக்கும் திருமுதுகுன்றமே என்கின்றது. மெய்த்து ஆறு சுவை - உடற்கண்ணதாகிய உப்பு, புளிப்பு, கார்ப்பு, கைப்பு, தித்திப்பு, துவர்ப்பு என்னும் ஆறுசுவைகள். சுவை , இசை, வேதம் முதலியன மாயா காரியங்கள் ஆதலின் அவற்றால் அறியப்பெறாதவன் ஆயினன்

Koviloor Digital Library

1406. வேரிமிகு குழலியொடு வேடுவனாய்
வெங்கானில் விசயன்மேவு
போரின்மிகு பொறையளந்து பாசுபதம்
புரிந்தளித்த புராணர்கோயில்
காரின்மலி கடிபொழில்கள் கனிகள்பல
மலருதிர்த்துக் கயமுயங்கி
மூரிவளங் கிளர்தென்றல் திருமுன்றிற்
புகுந்துலவு முதுகுன்றமே. 2

1407. தக்கனது பெருவேள்விச் சந்திரனிந்
திரனெச்ச னருக்கனங்கி
மிக்கவிதா தாவினொடும் விதிவழியே
தண்டித்த விமலர்கோயில்

இறைவன். பளிங்கே போல் - வெண்பளிங்கு போல், ''சுத்த ஸ்படிக சங்காசம்'' என்று இறைவனுக்கு நிறம் கூறுகிறது சிவாகமம். வெதிர் - மூங்கில்.

2. பொ-ரை : தேன் மணம் மிகும் கூந்தலையுடைய உமையம்மை யோடு வேட்டுவ உருவந்தாங்கி அருச்சுனன் தவம் புரியும் கொடிய கானகத்திற்குச் சென்று அவனோடு போர் உடற்றி அவன் பொறு மையை அளந்து அவனுக்குப் பாசுபதக் கணையை விரும்பி அளித்த பழையோனாகிய சிவபிரான் உறையும் கோயில், மழையால் செழித்த மணமுடைய சோலைகளில் கனிகளையும் பல மலர்களையும் உதிர்த்து, நீர் நிலைகளைப் பொருந்தி வலிய வளமுடைய தென்றல் காற்று அழகிய வீடுகள் தோறும் புகுந்து உலவும் திருமுதுகுன்றமாகும்.

கு-ரை : விசயனது பொறுமையளந்து பாசுபதம் அருளிய பரமன் கோயில், தென்றற்காற்று பொழிலில் கனியுதிர்த்து, மலர்சிந்தி, முன்றிலில் உலாவும் முதுகுன்றம் என்கின்றது. வேரி - தேன். மலர் உதிர்த்து என்றது தென்றலின் மணமுடைமையையும், கயம் முயங்கி என்பது குளிர்மையையும் உணர்த்தின. கயம் - குளம். மூரி - வலிமை.

3. பொ-ரை : தக்கன் செய்த பெருவேள்வியில் சந்திரன், இந்திரன், எச்சன், சூரியன், அனலோன், பிரமன், முதலியவர்களை வீர பத்திரனைக் கொண்டு தண்டித்த விமலனாகிய சிவபெருமான்

Koviloor Digital Library

கொக்கினிய கொழும்வருக்கை கதலிகமு
குயர்தெங்கின் குலைகொள்சோலை
முக்கனியின் சாறொழுகிச் சேறுலரா
நீள்வயல்சூழ் முதுகுன்றமே. 3

1408. வெம்மைமிகு புரவாணர் மிகைசெய்ய
விறலழிந்து விண்ணுளோர்கள்
செம்மலரோ னிந்திரன்மால் சென்றிரப்பத்
தேவர்களே தேரதாக
மைம்மருவு மேருவிலு மாசுணநா
ணரியெரிகால் வாளியாக
மும்மதிலு நொடியளவிற் பொடிசெய்த
முதல்வனிட முதுகுன்றமே. 4

உறையும் கோயில், இனிய மாங்கனிகள், வளமான பலாக்கனிகள், வாழைக் கனிகள் ஆகிய முக்கனிகளின் சாறு ஒழுகிச் சேறு உலராத நீண்ட வயல்களும் குலைகளையுடைய கமுகு, தென்னை ஆகிய மரங்கள் நிறைந்த சோலைகளும் சூழ்ந்த திருமுதுகுன்றமாகும்.

கு-ரை : சிவத்துரோகியான தக்கன் யாகத்திற்குச் சென்ற குற்றத்திற்காகச் சந்திரன் முதலியோரை முறைப்படி தண்டித்த இறைவன் கோயில், முக்கனியின் சாறொழுகிச் சேறுலரா வயல்சூழ்ந்த முதுகுன்றம் என்கின்றது. எச்சன் - யாகபுருஷன். அருக்கன் - சூரியன். அங்கி - அக்கினி. விதாதா - பிரமன். கொக்கு - மாமரம். வருக்கை - பலா. கதலி - வாழை.

4. பொ-ரை : கொடுமை மிகுந்து முப்புரங்களில் வாழும் அவுணர்கள் தீங்கு செய்ய அதனால் தங்கள் வலிமை அழிந்து தேவர் களும், பிரமனும், இந்திரனும், திருமாலும் சென்று தங்களைக் காத்தரு ளுமாறு வேண்ட, தேவர்களைத் தேராகவும், மேகங்கள் தவழும் உயர்ச்சியையுடைய மேருமலையை வில்லாகவும், வாசுகி என்னும் பாம்பை நாணாகவும், திருமால், அனலோன், வாயுவாகிய முத்தேவர் களையும் அம்பாகவும் கொண்டு அவுணர்களின் மும்மதில்களையும் ஒரு நொடிப் பொழுதில் பொடி செய்த தலைவனாகிய சிவபிரானது இடம், திருமுதுகுன்றமாகும்.

கு-ரை : முப்புராதிகள் தீங்கு செய்ய, தேவர்கள் வேண்டு

Koviloor Digital Library

1409. இழைமேவு கலையல்கு லேந்திழையா
ளொருபாலா யொருபாலெள்கா
துழைமேவு முரியுடுத்த வொருவனிருப்
பிடமென்ப ரும்பரோங்கு
கழைமேவு மடமந்தி மழைகண்டு
மகவினொடும் புகவொண்கல்லின்
முழைமேவு மால்யானை யிரைதேரும்
வளர்சாரன் முதுகுன்றமே. 5

1410. நகையார்வெண் டலைமாலை முடிக்கணிந்த
நாதனிடம் நன்முத்தாறு
வகையாரும் வரைப்பண்டங் கொண்டிரண்டு
கரையருகு மறியமோதித்

கோளின் வண்ணம், அவர்களைத் தேர் முதலிய சாதனங்களாகக் கொண்டு எரித்த முதல்வனிடம் முதுகுன்றம் என்கின்றது. விறல் - வலிமை. மாசுணம் - வாசுகியென்னும் பாம்பு. அரி, எரி, கால் வாளியாக - திருமாலும், அங்கியும், காற்றுமாகிய முத்தேவர்களும் அம்பாக.

5. பொ-ரை : மேகலை என்னும் அணிகலன் பொருந்திய அல்குலையும், அழகிய முத்துவடம் முதலியன அணிந்த மேனியை யும் உடையவளாகிய உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு தனக்குரியதான ஒரு பாகத்தே மான்தோலை இகழாது உடுத்த ஒப்பற்றவனாகிய சிவபிரானது இருப்பிடம், ஊரின் நடுவே உயர்ந்த மூங்கில்மேல் ஏறி அமர்ந்த மடமந்தி, மழை வருதலைக் கண்டு அஞ்சித் தன் குட்டியோடும் ஒலி சிறந்த மலைக்குகைகளில் ஒடுங்குவதும், பெரிய யானைகள் இரை தேர்ந்து திரிவதும் நிகழும் நீண்ட சாரலை யுடைய திருமுதுகுன்றமாகும்.

கு-ரை : ஒருபால் உமை விளங்க. ஒருபால் மான்தோலையுடுத் திய ஒருவன் இருப்பிடம் மந்தி மழையைக் கண்டு குட்டியோடு குகையையடைய, யானை இரைதேடும் முதுகுன்றம் என்கின்றது. இழை - அணி. எள்காது - இகழாது. உழை மேவும் உரி - மானினது தோல். கழை - மூங்கில். மந்தி - பெண் குரங்கு. முழை - குகை.

6. பொ-ரை : சிரித்தலைப் பொருந்திய வெண்மையான தலை மாலையை முடியில் அணிந்துள்ள நாதனாகிய சிவபிரானது இடம்,

Koviloor Digital Library

தகையாரும் வரம்பிடறிச் சாலிகழு
நீர்குவளை சாயப்பாய்ந்து
முகையார்செந் தாமரைகண் முகமலர
வயல்தழுவு முதுகுன்றமே. 6

1411. அறங்கிளரு நால்வேத மாலின்கீ
ழிருந்தருளி யமரர்வேண்ட
நிறங்கிளர்செந் தாமரையோன் சிரமைந்தி
னொன்றறுத்த நிமலர்கோயில்
திறங்கொண்மணித் தரளங்கள் வரத்திரண்டங்
கெழிற்குறவர் சிறுமிமார்கள்
முறங்களினாற் கொழித்துமணி செலவிலக்கி
முத்துலைப்பெய் முதுகுன்றமே. 7

நல்ல மணிமுத்தாறு வகை வகையான மலைபடு பொருள்களைக் கொண்டு நெல், கழுநீர், குவளை ஆகியன சாயுமாறு பாய்ந்து வந்து, தாமரை மொட்டுக்கள் முகம் மலரும்படி வயலைச் சென்றடையும் திருமுதுகுன்றமாகும்.

கு-ரை : தலைமாலையணிந்த தலைவனிடம், மணிமுத்தாறு மலைப்பண்டங்களைக் கொண்டு இருகரையிலும் எடுத்து எறிந்து கரையை யுடைத்துக்கொண்டு, நெல்லும் கழுநீரும் குவளையும் சாயப்பாய்ந்து, தாமரை மலர வயலைத் தழுவும் முதுகுன்றம் என்கின்றது. நகை - பல். வரைப்பண்டம் - மலைபடுதிரவியம்.

7. பொ-ரை : அறநெறி விளங்கித் தோன்றும் நான்கு வேதங்களை ஆலின்கீழ் இருந்து சனகாதியர்க்கு அருளி, தேவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கி, செந்நிறம் விளங்கும் தாமரையில் எழுந்தருளிய பிரமனின் ஐந்து தலைகளில் ஒன்றைக் கொய்த நிமலனாகிய சிவபிரானது கோயில், முற்றிய மாணிக்கங்கள். முத்துக்கள் ஆகியன ஆற்றில் வருதலைக் கண்டு அழகிய குறவர் குடிப் பெண்கள் திரண்டு சென்று அவற்றை முறங்களால் வாரி மணிகளை விலக்கிப் புடைத்து முத்துக்களை அரிசியாக உலையில் பெய்து சிற்றில் இழைத்து விளையாடி மகிழும் திருமுதுகுன்றமாகும்.

கு-ரை : ஆலின் கீழிருந்து சனகாதியர்க்கு வேதப்பொருளை

Koviloor Digital Library

1412. கதிரொளிய நெடுமுடிபத் துடையகட
லிலங்கையர்கோன் கண்ணும்வாயும்
பிதிரொளிய கனல்பிறங்கப் பெருங்கயிலை
மலையைநிலை பெயர்த்தஞான்று
மதிலளகைக் கிறைமுரல மலரடியொன்
றூன்றிமறை பாடவாங்கே
முதிரொளிய சுடர்நெடுவாண் முன்னீந்தான்
வாய்ந்தபதி முதுகுன்றமே. 8

1413. பூவார்பொற் றவிசின்மிசை யிருந்தவனும்
பூந்துழாய் புனைந்தமாலும்
ஓவாது கழுகேன மாயுயர்ந்தாழ்ந்
துறநாடி யுண்மைகாணாத்

அருளிச்செய்து, தேவர் வேண்டுகோட்கிரங்கிப் பிரமன் சிரங்கொய்த நிமலர் கோயில், குறச்சிறுமியர் முறத்தால் முத்தைக் கொழித்துச் சிற்றுலையிற் கொட்டும் முதுகுன்றம் என்கின்றது. தரளம் - முத்து. மணி - மாணிக்கங்கள்.

8. பொ-ரை : கதிரவன் போன்ற ஒளியுடைய நீண்ட மகுடங் களைச் சூடிய பத்துத் தலைகளையுடைய இராவணன் கண்களும், வாயும், ஒளிபரவும் தீ வெளிப்படச் சினங்கொண்டு பெரிய கயிலாய மலையை நிலைபெயர்த்த காலத்து, மதில்கள் சூழ்ந்த அளகாபுரிக்கு இறைவனாகிய குபேரன் மகிழுமாறு, மலர்போன்ற தன் திருவடி ஒன்றை ஊன்றி அவ் இராவணனைத் தண்டித்துப் பின் அவன் மறை பாடித் துதித்த அளவில் அவனுக்கு மிக்க ஒளியுள்ள நீண்ட வாளை முற்படத் தந்த சிவபிரான் எழுந்தருளிய பதி திருமுதுகுன்றமாகும்.

கு-ரை : இராவணனுக்கு மறக்கருணையும் அறக்கருணையும் காட்டியாட்கொண்டவனிடம் முதுகுன்றம் என்கின்றது. அளகைக்கு இறை முரல - குபேரன் தன் பகைவனாகிப் புஷ்பக விமானத்தைக் கவர்ந்த இராவணன் ஒழிந்தான் என்று மகிழ்ச்சி ஒலிக்க.

9. பொ-ரை : தாமரை மலராகிய அழகிய தவிசின்மிசை விளங் கும் பிரமனும், அழகிய துளசிமாலை அணிந்த திருமாலும், அன்னமாக வும், பன்றியாகவும் உருமாறி வானில் பறந்தும், நிலத்தை அகழ்ந்தும் இடைவிடாது தேடியும் உண்மை காண இயலாத தெய்வ ஒளி

Koviloor Digital Library

தேவாருந் திருவுருவன் சேருமலை
செழுநிலத்தை மூடவந்த
மூவாத முழங்கொலிநீர் கீழ்தாழ
மேலுயர்ந்த முதுகுன்றமே. 9

1414. மேனியிற்சீ வரத்தாரும் விரிதருதட்
டுடையாரும் விரவலாகா
ஊனிகளா யுள்ளார்சொற் கொள்ளாது
முள்ளுணர்ந்தங் குய்மின்றொண்டீர்
ஞானிகளா யுள்ளார்க ணான்மறையை
முழுதுணர்ந்தைம் புலன்கள்செற்று
மோனிகளாய் முனிச்செல்வர் தனித்திருந்து
தவம்புரியு முதுகுன்றமே. 10

பொருந்திய திருவுருவை உடையவனாகிய சிவபிரான் எழுந்தருளிய மலை, ஊழிக் காலத்து உலகத்தை மூடுமாறு முழங்கி வந்த கடல்நீர் கீழ்ப்படத் தான் மேல் உயர்ந்து தோன்றும் திருமுதுகுன்றமாகும்.

கு-ரை : அயனும், மாலும் ஆழ்ந்தும் உயர்ந்தும் தேடியும் அறியமுடியாத இறைவனிடம், ஊழியில் உயர்ந்த முதுகுன்றம் என்கின்றது. தவிசு - ஆசனம். துழாய் - துளசி. ஓவாது - இடைவிடாது. கழுகு - பறவையின் பொதுப் பெயராய் அன்னத்தை யுணர்த்தியது. ஏனம் - பன்றி.

10. பொ-ரை : உடம்பில் துவராடை புனைந்த புத்த மதத்தினரும், விரிந்த ஓலைத் தடுக்கை உடையாகப் பூண்ட சமணர்களும், நட்புச் செய்து கோடற்கு ஏலாதவராய்த் தங்கள் உடலை வளர்த்தலையே குறிக்கோளாக உடைய ஊனிகளாவர். அவர்கள் சொற்களைக் கேளாது ஞானிகளாக உள்ளவர்களும், நான்மறைகளை உணர்ந்தவர்களும், ஐம்புலன்களை வென்ற மௌனிகளும், முனிவர்களாகிய செல்வர்களும், தனித்திருந்து தவம் புரியும் திருமுதுகுன்றை உள்ளத்தால் உணர்ந்து, தொண்டர்களே! உய்வீர்களாக.

கு-ரை : தொண்டர்களே! புத்தரும் சமணருமாகிய ஊனிகளின் சொற்கொள்ளாது உள்ளுணர்ந்து உய்யுங்கள்! ஞானிகள் வேதத்தை யுணர்ந்து ஐம்புலன்களையும் அடக்கி, மோனிகளாய்த் தனித்திருந்து தவம் புரியும் இடம் முதுகுன்றம் என்கின்றது. ஞானி - அறிவை வளர்ப்பவன். ஊனி - உடம்பை வளர்ப்பவன்.

Koviloor Digital Library

1415. முழங்கொலிநீர் முத்தாறு வலஞ்செய்யு
முதுகுன்றத் திறையைமுவாப்
பழங்கிழமைப் பன்னிருபேர் படைத்துடைய
கழுமலமே பதியாக்கொண்டு
தழங்கெரிமூன் றோம்புதொழிற் றமிழ்ஞான
சம்பந்தன் சமைத்தபாடல்
வழங்குமிசை கூடும்வகை பாடுமவர்
நீடுலக மாள்வர்தாமே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : ஆரவாரத்தோடு நிறைந்துவரும் மணிமுத்தாறு வலஞ்செய்து இறைஞ்சும் திருமுதுகுன்றத்து இறைவனை, முதுமையுறாததாய்ப் பழமையாகவே பன்னிரு பெயர்களைக் கொண்டுள்ள கழுமலப் பதியில் முத்தீ வேட்கும் தொழிலையுடைய தமிழ் ஞானசம்பந்தன் இயற்றிய இப்பதிகப் பாடல்களைப் பொருந்தும் இசையோடு இயன்ற அளவில் பாடி வழிபடுபவர் உலகத்தை நெடுங்காலம் ஆள்வர்.

கு-ரை : முதுகுன்றநாதனைப் பன்னிருநாமம் படைத்த பழம் பதியாகிய காழியை யிடமாகக்கொண்ட, தழலோம்பு தொழிலுடைய தமிழ் ஞானசம்பந்தன் அமைத்த பாடல்களை, இசை கூடும் வகை பாடுபவர்கள் உலகத்தை நெடுங்காலம் ஆள்வர் என்கின்றது. தழங்கு - ஒலிக்கின்ற. எரிமூன்று - ஆகவனீயம், காருகபத்யம், தக்ஷிணாக்கினி என்பன.

திருஞானசம்பந்தர் புராணம்

வான நாயகர் திருமுது குன்றினை
வழிபட வலங்கொள்வார்
தூந றுந்தமிழ்ச் சொல்லிருக் குக்குறட்
டுணைமலர் மொழிந் தேத்தி
ஞான போனகர் நம்பர்தங் கோயிலை
நண்ணிஅங் குள்புக்குத்
தேன லம்புதண் கொன்றையார் சேவடி
திளைத்தஅன் பொடு தாழ்ந்தார்.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

132. திருவீழிமிழலை

பதிக வரலாறு:

(11 - ஆம் பதிகம் பார்க்க)

பண்: மேகராகக்குறிஞ்சி

பதிக எண்: 132

திருச்சிற்றம்பலம்

1416. ஏரிசையும் வடவாலின் கீழிருந்தங்
கீரிருவர்க் கிரங்கிநின்று
நேரியநான் மறைப்பொருளை யுரைத்தொளிசேர்
நெறியளித்தோ னின்றகோயில்
பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும்
பயின்றோது மோசைகேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள்
பொருட்சொல்லு மிழலையாமே. 1

1. பொ-ரை: அழகிய வடவால மரத்தின்கீழ் வீற்றிருந்து சனகாதி முனிவர்களுக்குக் கருணையோடு நேரிய நால்வேதங்களின் உண்மைப் பொருளை உரைத்து அவர்கட்குச் சிவஞானநெறி காட்டியருளிய சிவபிரானது கோயில், நிலவுலகில் வாழும் வேதப் புலவர்கள் பல நாள்களும் தம்மிடம் பயிலும் மாணவர்களுக்கு வேதம் பயிற்றுவிப்பதைக் கேட்டுத் தேன் நிறைந்த பொழில்களில் வாழும் கிளிகள் நாள்தோறும் வேதங்களுக்குப் பொருள் சொல்லும் சிறப்பினதாய திருவீழிமிழலை ஆகும்.

கு-ரை: வடவாலமரத்தின்கீழ் நால்வர்க்கு அறம் உரைத்து ஒளிநெறியளித்த இறைவன்கோயில், பண்டிதர்கள் பலகாற் பயிலும் ஓசையைக்கேட்டு, கிளிகள் வேதப்பொருள் சொல்லும் திருவீழி மிழலையாம் என்கின்றது. ஏர் - அழகு. எழுச்சியுமாம். ஈரிருவர் - சனகர் முதலிய தேவமுனிவர் நால்வர். ''நேரிய நான் மறைப்பொருள்'' எனவே இங்ஙனம் இறைவன்முன் உணராத பரம்பரையினர் தற்போத முனைப்பால் நேர்மையற்ற பொருளுங்கொள்வர் என்பது அமைந்து கிடந்தது. ஒளிசேர் நெறி - சிவஞான நெறி. வேரி - தேன்.

Koviloor Digital Library

1417. பொறியரவ மதுசுற்றிப் பொருப்பேமத்
தாகப்புத் தேளிர்கூடி
மறிகடலைக் கடைந்திட்ட விடமுண்ட
கண்டத்தோன் மன்னுங்கோயில்
செறியிதழ்த்தா மரைத்தவிசிற் றிகழ்ந்தோங்கு
மிலைக்குடைக்கீழ்ச் செய்யார் செந்நெல்
வெறிகதிர்ச்சா மரையிரட்ட விளவன்னம்
வீற்றிருக்கும் மிழலையாமே. 2

1418. எழுந்துலகை நலிந்துழலு மவுணர்கடம்
புரமூன்று மெழிற்கணாடி
உழுந்துருளு மளவையினொள் ளெரிகொளவெஞ்
சிலைவளைத்தோ னுறையுங்கோயில்

2. பொ-ரை : தேவர்கள் அனைவரும் கூடி மந்தரமலையை மத்தாக நாட்டி உடலில் புள்ளிகளை உடைய வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகச் சுற்றிச் சுருண்டு விழும் அலைகளை உடைய கடலைக் கடைந்த காலத்து எழுந்த நஞ்சினை உண்ட கண்டத்தை உடையவனாகிய சிவபிரான் உறையும் கோயில், செறிந்த இதழ்களை உடைய தாமரை மலராகிய இருக்கையில் விளங்கும், தாமரை இலையாகிய குடையின்கீழ் உள்ள இள அன்னம், வயலில் விளையும் செந்நெற் கதிர்களாகிய சாமரம் வீச வீற்றிருக்கும் திருவீழிமிழலை யாகும்.

கு-ரை : வாசுகியை கடைகயிறாகச் சுற்றி, மந்தரமே மத்தாக, தேவர்கள் கூடி பாற்கடலைக் கடைந்தகாலத்து எழுந்த விடத்தை உண்ட கண்டன் மன்னுங்கோயில், தாமரையாசனத்தில் இலை குடையாக, செந்நெற்கற்றை சாமரையாக, இள அன்னம் வீற்றிருக்கும் மிழலையாம் என்கின்றது. பொறியரவம் - படப்பொறிகளோடு கூடிய வாசுகியென்னும் பாம்பு. மறி கடல் - அலைகள் மறிகின்ற கடல். செய் - வயல். வெறி - மணம்.

3. பொ-ரை : வானத்திற் பறந்து திரிந்து உலக மக்களை நலிவு செய்து உழன்ற அசுரர்களின் முப்புரங்களையும் அழகிய கண்ணாடியில், உளுந்து உருளக்கூடிய கால அளவிற்குள் ஒளி பொருந்திய தீப்பற்றி எரியுமாறு கொடிய வில்லை வளைத்தவனாகிய சிவபிரான் உறையும் கோயில், செழுமையான முத்துக்கள் மகளிரின் பற்களையும்,

Koviloor Digital Library

கொழுந்தரளம் நகைகாட்டக் கோகநகம்
முகங்காட்டக் குதித்துநீர்மேல்
விழுந்தகயல் விழிகாட்ட விற்பவளம்
வாய்காட்டும் மிழலையாமே. 3

1419. உரைசேரு மெண்பத்து நான்குநூ
றாயிரமாம் யோனிபேதம்
நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிரா
யங்கங்கே நின்றான்கோயில்
வரைசேரு முகின்முழவ மயில்கள்பல
நடமாட வண்டுபாட
விரைசேர்பொன் னிதழிதர மென்காந்தள்
கையேற்கு மிழலையாமே. 4

தாமரைகள் முகங்களையும் துள்ளிக்குதித்து நீர்மேல் விழும் கயல்கள் கண்களையும், ஒளி பொருந்திய பவளங்கள் வாய்களையும் காட்டும் திருவீழிமிழலை யாகும்.

கு-ரை : உலகை வருத்தும் அவுணர்தம் புரத்தைக் கண்ணாடியில் உழுந்துருளும் காலத்தில் எரித்த இறைவன்கோயில், முத்து, மகளிர் பல்காட்ட, தாமரை, முகங்காட்ட, துள்ளுங்கயல், விழிகாட்ட, பவளம் வாய்காட்டும் வீழிமிழலையாம் என்கின்றது. நலிந்து - வருத்தி. உழுந்து உருளும் அளவை - ஓர் உளுந்து உருளக்கூடிய காலச் சிறுமையில். தரளம் - முத்து. கோகநகம் - தாமரை. வில் - ஒளி.

4. பொ-ரை : நூல்களில் உரைக்கப் பெறும் எண்பத்துநான்கு லட்சம் பிறப்பு வேறுபாடுகளையும் முறையாகப் படைத்து, அவ்வவற்றின் உயிர்கட்கு உயிராய் அங்கங்கே விளங்கி நிற்போனாகிய சிவபிரான் உறையும் கோயில், மலைகளில் தங்கியுள்ள மேகங்கள் எழுந்து வந்து முழவுபோல ஒலிக்க, ஆண்மயில்கள் பல நடனமாட, வண்டுகள் பாட, பரிசிலாகக் கொன்றை மரங்கள் மணம் பொருந்திய மலர் இதழ்களாகிய பொன்னைத் தர மெல்லிய காந்தள் மலர்கள் கை போல விரிந்து அதனை ஏற்கும் திருவீழிமிழலையாகும்.

கு-ரை : எண்பத்து நான்கு லட்சம் யோனிபேதங்களையும் படைத்து, அவற்றின் உயிர்க்குயிராக நிற்கும் இறைவன் கோயில்,

Koviloor Digital Library

1420. காணுமா றரியபெரு மானாகிக்
காலமாய்க் குணங்கண்மூன்றாய்ப்
பேணுமூன் றுருவாகிப் பேருலகம்
படைத்தளிக்கும் பெருமான்கோயில்
தாணுவாய் நின்றபர தத்துவனை
யுத்தமனை யிறைஞ்சீரென்று
வேணுவார் கொடிவிண்ணோர் தமைவிளிப்ப
போலோங்கு மிழலையாமே. 5

முகிலாகிய முழவம் ஒலிக்க, மயில் நடமாட, வண்டு பாட, கொன்றைமரம் பொற்பரிசில் வழங்க, காந்தள் கையேற்று வாங்கும் மிழலையாம் என்கின்றது. உரைசேரும் - நூல்களில் உரைக்கப் பெறுகின்ற. முகில் - மேகம். விரை - மணம். இதழி கொன்றை.

5. பொ-ரை : காண்டற்கரிய கடவுளாய், மூன்று காலங்களாய், மூன்று குணங்களாய் எல்லோராலும் போற்றப் பெறும் அரி, அயன், அரன் ஆகிய மும்மூர்த்திகளாய், பெரிதாகிய இவ்வுலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களைப் புரியும் சிவபிரான் உறையும் கோயில், மூங்கில்களிற் கட்டிய நெடிய கொடிகள் நிலை பேறு உடையவனாய் நிற்கும் மேலான சிவபிரானாகிய, உத்தமனை, வந்து வழிபடுவீர்களாக என்று தேவர்களை அழைப்பன போல, அசைந்து ஓங்கி விளங்கும் திருவீழிமிழலையாகும். மூன்று உருவுக்கு ஏற்ப அழித்தல் வருவிக்கப்பட்டது.

கு-ரை : காணுதற்கரிய கடவுளாகி, காலம் குணம் இவையுமாகி, எல்லாரானும் போற்றப்பெறும் பிரம விஷ்ணு ருத்ரனாகி, பெரிய உலகத்தைப் படைத்தும் அளிக்கும் பெருமான்கோயில், இறைவனை வணங்குங்கள் என்று கொடிகள் தேவரையழைக்கும் வீழிமிழலை என்கின்றது. காலமாய் - இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்ற மூன்று காலமாய்; என்றது எல்லாவற்றையும் அடக்கித் தம் எல்லைக்குள் இன்பத்துன்பங்களை எய்தி நடக்கச்செய்தலின். குணங்கள் மூன்றாய் - சாத்துவிகம் முதலிய குணங்கள் மூன்றாய். பேணும் - போற்றப் பெறுகின்ற. படைத்து அளித்து எனவே அழித்தலாகிய இவர்தொழில் சொல்லாமலே பெறப்பட்டது. தாணு - நிலைத்த பொருள். தூண் வடிவு என்றுமாம். வேணுவார்கொடி - மூங்கிற்றண்டில் கோக்கப்பெற்ற நீளமான கொடிகள். விண்ணோர்கள் போகத்தால் மோகித்து மறந் திருத்தலின் கொடிகள் நினைவூட்டி அழைக்க வேண்டியதாயிற்று.

Koviloor Digital Library

1421. அகனமர்ந்த வன்பினரா யறுபகைசெற்
றைம்புலனு மடக்கிஞானம்
புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத்
துள்ளிருக்கும் புராணர்கோயில்
தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குளவர்க்
கந்திகழச் சலசத்தீயுள்
மிகவுடைய புன்குமலர்ப் பொரியட்ட
மணஞ்செய்யு மிழலையாமே. 6

1412. ஆறாடு சடைமுடிய னனலாடு
மலர்க்கைய னிமயப்பாவை
கூறாடு திருவுருவன் கூத்தாடுங்
குணமுடையோன் குளிருங்கோயில்

6. பொ-ரை : உள்ளத்தில் பொருந்திய அன்புடையவராய், காமம் முதலிய அறுபகைகளையும் கடிந்து, சுவை ஒளி முதலிய ஐம்புலங்களை அடக்கிச் சிவஞானத்தில் திளைத்திருப்பவர்களாகிய துறவிகளின் இதயத் தாமரையில் எழுந்தருளி விளங்கும் பழையோனாகிய சிவபிரான் உறையும் கோயில், மணிகளும் சங்கினங்களும் விளங்கும் தூயதான நீர் நிலைகளில் முளைத்த தாமரை மலராகிய தீயில் மிகுதியாக வளர்ந்த புன்க மரங்கள் பொரி போல மலர்களைத் தூவி, திருமண நிகழ்ச்சியை நினைவுறுத்திக் கொண்டிருப்பதாகிய திருவீழிமிழலை யாகும்.

கு-ரை : உள்ளன்புடையாராக அரிஷட்வர்க்கங்களை அழித்து, ஐம்புலன்களையும் அடக்கிய சிவஞானச் சேர்க்கையுடையோர்களின் இதயத் தாமரையில் எழுந்தருளியிருக்கும் இறைவன் கோயில் அழகிய இடத்தில் சங்குகளாகிற சுற்றம்விளங்க தாமரையாகிய தீயில் புன்கம் பொரிதூவி மணங்களைச் செய்யும்மிழலை என்கின்றது. உள்ளப் புண்டரிகம் - இதயதாமரை. தகவு - தகுதி. நீர் மணித்தலத்து - நீரோட்டத்தோடு கூடிய இரத்தினங்கள் அழுத்தப்பெற்ற இடத்து. சங்கு உள வர்க்கம் திகழ - சங்குகளாகிய உள்ளசுற்றம் விளங்க. சலசத்தீயில் - தாமரைப் பூவாகிய தீயில். மலர்ந்த தாமரையைத் தீக்கு ஒப்பிடுவது மரபு.

7. பொ-ரை : கங்கையணிந்த சடைமுடியை உடையவனும், மலர் போன்ற கரத்தில் அனலை ஏந்தியவனும், இமவான் மகளாகிய

Koviloor Digital Library

சேறாடு செங்கழுநீர்த் தாதாடி
மதுவுண்டு சிவந்தவண்டு
வேறாய வுருவாகிச் செவ்வழிநற்
பண்பாடும் மிழலையாமே. 7

1423. கருப்பமிகு முடலடர்த்துக் காலூன்றிக்
கைமறித்துக் கயிலையென்னும்
பொருப்பெடுக்க லுறுமரக்கன் பொன்முடிதோள்
நெரித்தவிரற் புனிதர்கோயில்
தருப்பமிகு சலந்தரன்ற னுடல்தடிந்த
சக்கரத்தை வேண்டியீண்டு
விருப்பொடுமால் வழிபாடு செய்யவிழி
விமானஞ்சேர் மிழலையாமே. 8

பார்வதிதேவி தன் ஒரு கூறாக விளங்கத் திகழும் திருமேனியை உடையவனும், கூத்தாடும் குணமுடையவனும், ஆகிய சிவபிரான் மனங் குளிர்ந்து எழுந்தருளியிருக்கும் கோயில், சேற்றில் முளைத்த செங்கழுநீர் மலர்களின் மகரந்தங்களில் படிந்து தேனையுண்டு, தன் இயல்பான நிறம் மாறிச் சிவந்த நிறம் உடையதாய்த் தோன்றும் வண்டு செவ்வழிப் பண்ணைப் பாடிக் களிக்கும் திருவீழிமிழலையாகும்.

கு-ரை : ஆறுசேர் முடியன், அனல்சேர் கையன், உமையொரு கூறன். கூத்தன்கோயில், செங்கழுநீர்ப்பூவின் மகரந்தத்தில் ஆடி, தேன்குடித்துச் சிவந்த வண்டு வேற்றுவடிவுகொண்டு செவ்வழிப் பண்ணைப்பாடும் மிழலையாம் என்கின்றது. தாது - மகரந்தம்.

8. பொ-ரை : கர்வம் மிகுந்த உடலை வருத்தி நெருங்கிச் சென்று காலை ஊன்றிக் கைகளை வளைத்துக் கயிலை என்னும் மலையைப் பெயர்த்தெடுக்க முற்பட்ட அரக்கனாகிய இராவணனின் பொன்முடி தரித்த தலைகளையும் தோள்களையும் நெரித்து அடர்த்த கால் விரலையுடைய தூயவராகிய சிவபிரானார் உறையும் கோயில், செருக்கு மிக்க சலந்தரன் என்னும் அவுணனது உடலைத் தடிந்த சக்கராயுதத்தைப் பெற விரும்பிப் பெருவிருப்போடு இவ்வுலகில் திருமால் வழிபாடு செய்ததும், வானிலிருந்து இழிந்த விமானத்தை உடையதுமாகிய திருவீழிமிழலையாகும்.

Koviloor Digital Library

1424. செந்தளிர்மா மலரோனுந் திருமாலும்
ஏனமோ டன்னமாகி
அந்தமடி காணாதே யவரேத்த
வெளிப்பட்டோ னமருங்கோயில்
புந்தியினான் மறைவழியே புற்பரப்பி
நெய்சமிதை கையிற்கொண்டு
வெந்தழலின் வேட்டுலகின் மிகவளிப்போர்
சேருமூர் மிழலையாமே. 9

கு-ரை : கயிலையை எடுக்கலுற்ற இராவணனை நெரித்த விரலையுடைய பெருமான்கோயில், சலந்தரன் உடலையழித்த சக்கரத்தைத் திருமால் வழிபட்டுப்பெற்ற திருவீழிமிழலை என்கின்றது.

கருப்பமிகும் உடல் - கருவம் மிகுந்த உடல் என்றது அப்பிரா கிருதமான கயிலையைத்தீண்டும் உரிமையுங் கூட, பிராகிருத மேனி தாங்கிய இவற்கில்லை என்பது, உணர்த்தியவாறு.

தருப்பம் - செருக்கு; மால் வழிபாடு செய்த வரலாறு இத் தலத்து நிகழ்ச்சி. இழிவிமானம் - விண்ணிழி விமானம். இது இத் தலத்து விமானம்.

9.பொ-ரை : சிவந்த இதழ்களையுடைய பெரிய தாமரை மலரின்மேல் உறையும் பிரமனும், திருமாலும் அன்னமாகியும் பன்றியாகியும் முடியடிகளைக் காணாது தம் செருக்கழிந்து வழிபட அவர்கட்குக் காட்சி அளித்தோனாகிய சிவபிரான் அமரும் கோயில், தாங்கள் பெற்ற அறிவால் வேத விதிப்படி தருப்பைப் புற்களைப் பரப்பி நெய், சமித்து ஆகியவற்றைக் கையில் கொண்டு அழல் வளர்த்து வேள்வி செய்து உலகைக் காப்பவர்களாகிய அந்தணர்கள் சேரும் ஊராகிய திருவீழிமிழலையாகும்.

கு-ரை : அயனும் மாலும், அன்னமும் ஏனமுமாகித் தேடியறிய முடியாது வணங்க வெளிபட்ட இறைவன்கோயில், வேதவிதிப்படி தருப்பையைப்பரப்பி, நெய் சமித்து இவைகளைக்கொண்டு வேள்வி செய்து, உலகைக்காக்கும் அந்தணர் வாழும் மிழலையாம் என்கின்றது. அந்தம் - முடி. புந்தியினா - அறிவால். வேட்டு - வேள்வி செய்து.

Koviloor Digital Library

1425. எண்ணிறந்த வமணர்களு மிழிதொழில்சேர்
சாக்கியரு மென்றுந்தன்னை
நண்ணரிய வகைமயக்கித் தன்னடியார்க்
கருள்புரியு நாதன்கோயில்
பண்ணமரு மென்மொழியார் பாலகரைப்
பாராட்டு மோசைகேட்டு
விண்ணவர்கள் வியப்பெய்தி விமானத்தோ
டும்மிழியும் மிழலையாமே. 10

1426. மின்னியலு மணிமாட மிடைவீழி
மிழலையான் விரையார்பாதம்
சென்னிமிசைக் கொண்டொழுகுஞ் சிரபுரக்கோன்
செழுமறைகள் பயிலுநாவன்
பன்னியசீர் மிகுஞான சம்பந்தன்
பரிந்துரைத்த பத்துமேத்தி
இன்னிசையாற் பாடவல்லா ரிருநிலத்தி
லீசனெனு மியல்பினோரே. 11

திருச்சிற்றம்பலம்

10. பொ-ரை : எண்ணற்ற சமணர்களும், இழிதொழில் புரியும் சாக்கியர்களும், எக்காலத்தும் தன்னை நெருங்க இயலாதவாறு அவர்கள் அறிவை மயக்கித் தன் அடியவர்களுக்கு அருள் புரியும் சிவபிரான் எழுந்தருளிய கோயில், பண்ணிசை போலும் மென்மொழி பேசும் மகளிர் தாங்கள் பெற்ற புதல்வர்களைப் பாராட்டும் தாலாட்டு ஓசை கேட்டு வியந்து, தேவர்கள் விமானங்களோடு வந்து இறங்கும் திருவீழிமிழலையாகும்.

கு-ரை : புத்தரும் சமணரும் தம்மை அறியாவகையாக அவர்களை மயக்கித் தன் அடியார்க்கு அருள்புரியும் நாதன்கோயில், பண்மொழிப் பாவைமார்கள் பாலகரைப் பாராட்டும் ஓசை கேட்டு விண்ணவர்கள் விமானத்தோடு வந்திறங்கும் வீழிமிழலை என்கின்றது.

11. பொ-ரை : மின்னல் போலும் ஒளியுடைய மணிகள் இழைத்த மாட வீடுகள் செறிந்த திருவீழிமிழலை இறைவனின் மணம் கமழ்கின்ற

Koviloor Digital Library

திருவடிகளைச் சென்னிமிசைக் கொண்டு ஒழுகும் இயல்புடைய சிரபுர நகரின் தலைவனும், செழுமறை பயின்ற நாவினனும் பலர் போற்றும் சிறப்பு மிக்கவனுமாகிய ஞானசம்பந்தன் அன்பு கொண்டு பாடிய இப்பதிகப் பாடல்கள் பத்தையும் போற்றி இன்னிசையோடு பாட வல்லவர்கள் பெரிதான இந்நிலவுலகில் ஈசன் என்று போற்றும் இயல்புடையோராவர்.

கு-ரை : வீழிநாதன் திருவடியைச் சிரமேற்கொண்டு ஒழுகும் திருஞானசம்பந்தர் பரிந்துரைத்த பாடல் வல்லார் பெரியபூமியில் ஈசன் எனும் இயல்புடையோர் ஆவர் என்கின்றது. பரிந்து - அன்புகொண்டு.

திருஞானசம்பந்தர் புராணம்

ஊழி முடிவில் உயர்ந்த வெள்ளத்
தோங்கிய காழி உயர் பதியில்
வாழி மறையவர் தாங்கள் எல்லாம்
வந்து மருங்கணைந்தார்கள் என்ன
வீழி மிழலையின் வேதி யர்கள்
கேட்டுமெய்ஞ் ஞானமுண் டாரை முன்னா
ஏழிசை சூழ்மறை எய்த ஓதி
எதிர் கொள் முறைமையிற் கொண்டு புக்கார்.

சிரபுரத் தந்தணர் சென்ற பின்னைத்
திருவீழி மேவிய செல்வர் பாதம்
பரவுதல் செய்து பணிந்து நாளும்
பண்பின் வழாத் திருத் தொண்டர் சூழ
உரவுத் தமிழ்த்தொடை மாலை சாத்தி
ஓங்கிய நாவுக்கரச ரோடும்
விரவிப் பெருகிய நண்பு கூர
மேவி இனிதங் குறையுநாளில்.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

133. திருக்கச்சியேகம்பம்

பதிக வரலாறு:

(சந்தர்ப்பம் தெரியவில்லை.)

பண்: மேகராகக் குறிஞ்சி

பதிக எண்: 133

திருச்சிற்றம்பலம்

1427. வெந்தவெண் பொடிப்பூசு மார்பின்விரி
நூலொருபால் பொருந்தக்
கந்தமல்கு குழலியோடுங் கடிபொழிற்
கச்சி தன்னுள்
அந்தமில் குணத்தா ரவர்போற்ற
வணங்கினொ டாடல்புரி
எந்தை மேவிய வேகம்பந்
தொழுதேத்த விடர்கெடுமே. 1

1. பொ-ரை : அனலிடை நன்றாக வெந்த வெண்மையான திருநீற்றைப் பூசியுள்ள மார்பின்கண் விரிந்த பூணூல் ஒருபால் விளங்கித் தோன்ற, மணங்கமழும் கூந்தலினையுடைய உமையம்மையோடும், விளங்கும் பொழில்களால் சூழப்பட்ட கச்சி என்னும் தலத்துள் எல்லையற்ற குணங்களையுடைய அடியவர்கள் போற்ற நடனம் செய்யும் எந்தையாகிய சிவபெருமான் எழுந்தருளிய ஏகம்பம் என்னும் திருக்கோயிலைத் தொழுது போற்ற நம் இடர் கெடும்.

கு-ரை : திருநீறு பூசிய திருமார்பிற் பூணூல் கிடந்திலங்க, உமாதேவியோடு எழுந்தருளிய கச்சியுள் எல்லையற்ற குணங்களையுடைய அடியார்கள் போற்ற எந்தை மேவிய ஏகம்பம் தொழுதேத்த இடர்கெடும் என்கின்றது.

அந்தம் - முடிவு. அணங்கினொடு - பார்வதியோடு.

Koviloor Digital Library

1428. வரந்திகழு மவுணர் மாநகர்மூன்
றுடன்மாய்ந் தவியச்
சரந்துரந் தெரிசெய்த தாழ்சடைச்
சங்கரன் மேயவிடம்
குருந்த மல்லிகை கோங்குமா
தவிநல்ல குராமரவம்
திருந்துபைம் பொழிற்கச்சி யேகம்பஞ்
சேர விடர்கெடுமே. 2

1429. வண்ணவெண் பொடிப்பூசு மார்பின்
வரியர வம்புனைந்து
பெண்ணமர்ந் தெரியாடல் பேணிய
பிஞ்ஞகன் மேயவிடம்
விண்ணமர் நெடுமாட மோங்கி
விளங்கிய கச்சிதன்னுள்
திண்ணமாம் பொழில்சூழ்ந்த வேகம்பஞ்
சேர விடர்கெடுமே. 3

2. பொ-ரை : வரம்பெற்ற அவுணர்களின் பெருநகராக விளங்கிய முப்புரங்களும் ஒருசேர மாய்ந்து கெடுமாறு கணை எய்து எரித்தழித்த, தாழ்ந்து தொங்கும் சடைகளையுடைய சங்கரன் எழுந்தருளிய இடமாகிய, குருந்தம், மல்லிகை, கோங்கு, மாதவி, நல்லகுரா, கடம்ப மரம் ஆகியனவற்றால் சிறந்து விளங்கும் பசுமையான பொழில் சூழ்ந்த கச்சிமாநகரிலுள்ள திருஏகம்பத்தை அடைந்து தொழ, நம் இடர் கெடும்.

கு-ரை : திரிபுரம் எரியச் சரம்விட்ட சங்கரன் மேவிய இடமாகிய பொழில் சூழ்ந்த ஏகம்பம்சேர, இடர்கெடும் என்கின்றது. துரந்து - செலுத்தி. மாதவி - குருக்கத்தி. மரவம் - வெண்கடம்பு.

3. பொ-ரை : வெண்மைநிறம் அமைந்த திருநீறு பூசிய மார்பின்கண் உடலில் வரிகளையுடைய பாம்பை அணிந்து, உமையம்மையை விரும்பியேற்று, சுடுகாட்டில் எரியாடல் புரியும் தலைக் கோலம் உடையவனாகிய சிவபிரான் மேவிய இடமாகிய விண்ணளாவிய நீண்ட மாட வீடுகள் ஓங்கி விளங்குவதும், என்றும் நிலை பெற்ற பொழில்களால் சூழப்பட்டதுமாகிய கச்சிமாநகரில் உள்ளதுமாகிய திருஏகம்பத்தைச் சென்று வணங்க நம் இடர் கெடும்.

Koviloor Digital Library

1430. தோலுநூ லுந்துதைந்த வரைமார்பிற்
சுடலைவெண் ணீறணிந்து
காலன்மாள் வுறக்காலாற் காய்ந்த
கடவுள் கருதுமிடம்
மாலைவெண் மதிதோயு மாமதிற்
கச்சி மாநகருள்
ஏலநாறிய சோலைசூ ழேகம்ப
மேத்த விடர்கெடுமே. 4

1431. தோடணிம் மலர்க்கொன்றை சேர்சடைத்
தூமதி யம்புனைந்து
பாடனான் மறையாகப் பல்கணப்
பேய்க ளவைசூழ

கு-ரை : திருநீறணிந்த மார்பில் அரவம் அணிந்து, பெண்ணை ஒருபால் விரும்பி, எரிக்கண் திருநடனத்தை விரும்பிய பிஞ்ஞகன் இடம், விண்ணளாவிய மாடமோங்கிய கச்சியுள் ஏகம்பம் ஆம்; அதனைச்சேர இடர்கெடும் என்கின்றது. பிஞ்ஞகன் - மயிற்பீலியை யுடையான்.

4. பொ-ரை : மான்தோலும் பூணூலும் பொருந்திய மலை போன்ற மார்பின்கண் சுடலையில் எடுத்த வெண்மையான திருநீற்றை அணிந்து மார்க்கண்டேயர்க்காகக் காலன் மாயும்படி காலால் அவனை உதைத்தருளிய கடவுளாகிய சிவபிரான் விரும்புமிடமாகிய, மாலைக் காலத்தில் தோன்றும் வெண்மையான மதி தோயுமாறு உயர்ந்த பெரிய மதில்களை உடைய பெரிய காஞ்சிபுர நகரில் மணம் வீசும் சோலைகளால் சூழப்பட்ட ஏகம்பம் என்னும் திருக்கோயிலை ஏத்த, நம் இடர் கெடும்.

கு-ரை : கரு மான் தோலும் பூணூலும் நெருங்கிய மார்பில் நீறணிந்து காலனைக் காய்ந்த கடவுள் கருதுமிடம், கச்சியுள் ஏகம்பம்; அதனை ஏத்த இடர்கெடும் என்கின்றது.

5. பொ-ரை : அழகிய இதழ்களோடு கூடிய கொன்றை மலர் மாலை சூடிய சடையின்மேல் தூய பிறை மதியை அணிந்து நான் மறைகளைப் பாடல்களாகக் கொண்டு பேய்க் கணங்கள் பல சூழப், புலால் வற்றிய வெண்தலையோட்டையும், அனலையும் கையிலேந்தி

Koviloor Digital Library

வாடல்வெண் டலையோ டனலேந்தி
மகிழ்ந்துட னாடல்புரி
சேடர்சேர் கலிக்கச்சி யேகம்பஞ்
சேர விடர்கெடுமே. 5

1432. சாகம்பொன் வரையாகத் தானவர்
மும்மதில் சாயவெய்து
ஆகம்பெண் ணொருபாக மாக
வரவொடு நூலணிந்து
மாகந்தோய் மணிமாட மாமதிற்
கச்சி மாநகருள்
ஏகம்பத் துறையீசன் சேவடி
யேத்த விடர்கெடுமே. 6

மகிழ்வோடு உமையம்மையுடன் ஆடல் புரிகின்ற பெரியோனாகிய சிவபிரான் எழுந்தருளிய ஆரவாரமுடைய கச்சியில் விளங்கும் திருஏகம்பத்தை நினைக்க, நம் இடர் கெடும்.

கு-ரை : இதழோடு கூடிய அழகிய கொன்றைமலரை அணிந்த சடையிலே பிறைமதியைச் சூடி, நான்மறை பாடலாக, பேய்க்கணம் புடைசூழ, அனலேந்தி ஆடும் பெரியோன் சேரும் இடம் கச்சியுள் ஏகம்பம் என்கின்றது. சேடர் - உலகம் அழியத் தான் எஞ்சி நிற்பவர். சேர - தியானிக்க.

6. பொ-ரை : மேரு மலையை வில்லாகக் கொண்டு அசுரர்களின் முப்புரங்களை அழியுமாறு கணைதொடுத்துத் தன் திருமேனியில் உமையம்மையை ஒரு பாகமாகக் கொண்டு மார்பில் பாம்பையும், முப்புரி நூலையும் அணிந்து விண்ணளாவிய அழகிய மாடங்களை யும், பெரிய மதிலையும் உடைய கச்சிமாநகரில் விளங்கும் திருஏகம் பத்தில் உறையும் ஈசன் திருவடிகளை ஏத்த நம் இடர் கெடும்.

கு-ரை : மேருமலை வில்லாக முப்புரம் எரித்து, உடலில் ஒருபாகம் பெண்ணாக ஏற்று, அரவையும் நூலையும் அணிந்து கச்சியேகம்பத்துள் அமர்ந்த ஈசன் திருவடி ஏத்த இடர்கெடும் என்கின்றது. சாகம் - வில். சாபம் எதுகை நோக்கிச் சாகம் ஆயிற்று, தானவர் - அசுரர். ஆகம் - உடல். மாகம் - ஆகாயம்.

Koviloor Digital Library

* * * * * * * * * 7

1433. வாணிலா மதிபுல்கு செஞ்சடை
வாளர வம்மணிந்து
நாணிடத் தினில்வாழ்க்கை பேணி
நகுதலையிற் பலிதேர்ந்
தேணிலா வரக்கன்ற னீண்முடி
பத்து மிறுத்தவனூர்
சேணுலாம் பொழிற்கச்சி யேகம்பஞ்
சேர விடர்கெடுமே. 8

1434. பிரமனுந் திருமாலுங் கைதொழப்
பேரழ லாயபெம்மான்
அரவஞ் சேர்சடை யந்தண
ணணங்கினொ டமருமிடம்

7. * * * * * * * * *

8. பொ-ரை : ஒளி விளங்கும் பிறைமதி பொருந்திய செஞ்சடையில் ஒளி பொருந்திய பாம்பினை அணிந்து இடப்பாகத்தே நாணோடு கூடியவளாகிய இல்வாழ்க்கைக்குரிய உமையம்மையை விரும்பி யேற்றுச் சிரிக்கும் தலையோட்டில் பலியேற்று, மன உறுதி படைத்தவனாகிய இராவணனின் நீண்ட முடிகள் பத்தையும் நெரித்தவனாகிய சிவபிரானது, வானளாவிய பொழில்களையுடைய கச்சிமா நகரிலுள்ள திருஏகம்பத்தை அடைந்து தொழ நம் இடர் கெடும்.

கு-ரை : பிறையணிந்த செஞ்சடையில் அரவத்தையும் அணிந்து, இடப்பாகத்து நாணோடு கூடிய இல்வாழ்க்கைக்குரிய உமாதேவியை வைத்து, மண்டையோட்டில் பிச்சை யேற்று, இராவணன் சிரம் பத்தும் இறுத்தவனூர் கச்சி ஏகம்பம் என்கின்றது. வாள் நிலா - ஒளிபொருந்திய நிலா. புல்கு - தழுவிய. இல்வாழ்க்கை - மனையில் வாழ்தலையுடையாளாகிய உமாதேவி; தொழிலாகுபெயர். ஏண் - உறுதி. சேண் - ஆகாயம்.

9. பொ-ரை : பிரமனும், திருமாலும் தம் கைகளால் தொழுது வணங்கப் பெரிய அனலுருவாகி நின்ற பெருமானும், பாம்பணிந்த

Koviloor Digital Library

கரவில்வண் கையினார்கள் வாழ்கலிக்
கச்சி மாநகருள்
மரவஞ்சூழ் பொழிலேகம் பந்தொழ
வல்வினை மாய்ந்தறுமே. 9

1435. குண்டுபட் டமணா யவரொடுங்
கூறைதம் மெய்போர்க்கும்
மிண்டர் கட்டிய கட்டுரை
யவைகொண்டு விரும்பேன்மின்
விண்டவர் புரமூன்றும் வெங்கணை
யொன்றினா லவியக்
கண்டவன் கலிக்கச்சி யேகம்பங்
காண விடர்கெடுமே. 10

சடையை யுடைய அந்தணனும் ஆகிய சிவபிரான் தன் தேவியோடு அமரும் இடமாகிய, வஞ்சகம் இல்லாத வள்ளன்மை பொருந்திய கையினை உடையவர்கள் வாழ்கின்ற ஆரவாரமுடைய கச்சி மாநகரில் குங்கும மரங்கள் பொருந்திய சோலைகளால் சூழப்பட்டு விளங்கும் திருஏகம்பத்தைத் தொழ நம் வல்வினைகள் மாய்ந்து கெடும்.

கு-ரை : அயனும் மாலும் அடிவணங்க அழல்வண்ணமாகிய பெருமான் உமாதேவியோடு உறையுமிடம், வள்ளல்கள் வாழ்கின்ற கச்சியில் ஏகம்பமாம்; அதனைத்தொழ வல்வினையறும் என்கின்றது. கரவு - உள்ளதை மறைக்கும் வஞ்சம். மரவம் - மல்லிகை,

10. பொ-ரை : பருமையான உடலோடு ஆடையின்றித் திரியும் சமணர்களோடு ஆடையைத் தம் உடலில் போர்த்து வலியவராய்த் திரியும் புத்தர்களும் புனைந்து கூறும் உரைகளைப் பொரு ளுரையாகக் கருதி விரும்பாதீர்கள். பகைவர்களாகிய அவுணர்களின் மூன்று புரங்களையும் கொடிய கணை ஒன்றை எய்து எரித்தழித் தவனாகிய சிவபிரான் எழுந்தருளிய கச்சியின்கண் உள்ள திரு ஏகம் பத்தைச் சென்று காண, நம் இடர் கெடும்.

கு-ரை : புறச்சமயிகள் கூறும் கட்டுரைகளை நம்பாதீர்கள்; அவை அவர்கள் கட்டிய கட்டுக்கள்; பகைவரது முப்புரங்களும் ஓரம்பினால் உடையச்செய்தவனூர் கச்சி ஏகம்பம் என்கின்றது. குண்டுபட்டு - உடல்பருத்து. கூறை - ஆடை. விண்டவர் - பகைவர்.

Koviloor Digital Library

1436. ஏரினார் பொழில்சூழ்ந்த கச்சி
யேகம்ப மேயவனைக்
காரினார் மணிமாட மோங்கு
கழுமல நன்னகருள்
பாரினார் தமிழ்ஞான சம்பந்தன்
பரவிய பத்தும்வல்லார்
சீரினார் புகழோங்கி விண்ணவ
ரோடுஞ் சேர்பவரே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : அழகு நிறைந்த பொழில்கள் சூழ்ந்த கச்சியேகம்பத்துள் விளங்கும் இறைவனை மேகங்கள் தவழும் அழகிய மாடங்கள் ஓங்கும் கழுமல நன்னகருள் தோன்றிய தமிழ்வல்ல ஞானசம்பந்தன் பரவிப் போற்றிய பத்துப் பாடல்களையும் ஓத வல்லவர் இவ்வுலகின்கண் சிறந்த புகழால் ஓங்கி விளங்கிப் பின் விண்ணவர்களோடும் சேர்ந்து வாழும் நிலையைப் பெறுவர்.

கு-ரை : இப்பதிகம் வல்லவர்கள் புகழ் ஓங்கித் தேவர்களோடும் சேர்வர் என்கின்றது. ஏரின் ஆர் பொழில் - அழகு நிறைந்த சோலை. காரின் ஆர் - மேகங்கள் கவிந்த.

திருஞானசம்பந்தர் புராணம்

செம்பொன்மலைக் கொடிதழுவக் குழைந்தருளுந் திருமேனிக்
கம்பரைவந் தெதிர்வணங்குங் கவுணியர்தங் காவலனார்
பம்புதுளிக் கண்ணருவி பாய்ந்துமயிர்ப் புளகம்வரத்
தம்பெருகு மனக்காதல் தள்ளநில மிசைத்தாழ்ந்தார்.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

134. திருப்பறியலூர்வீரட்டம்

பதிக வரலாறு:

திருச்செம்பொன்பள்ளி திருவிளநகர் முதலிய தலங்களை வணங்கிக்கொண்டு, பிள்ளையார் பரமர்தம் திருப்பறியலூரைப் பரவி, இப்பதிகத்தை அருளிச்செய்தார்கள்.

பண்: மேகராகக்குறிஞ்சி

பதிக எண்: 134

திருச்சிற்றம்பலம்

1437. கருத்தன் கடவுள் கனலேந் தியாடும்
நிருத்தன் சடைமே னிரம்பா மதியன்
திருத்த முடையார் திருப்பறி யலூரில்
விருத்த னெனத்தகும் வீரட்டத் தானே. 1

1438. மருந்த னமுதன் மயானத்துண் மைந்தன்
பெருந்தண் புனற்சென்னி வைத்த பெருமான்
திருந்து மறையோர் திருப்பறி யலூரில்
விரிந்த மலர்ச்சோலை வீரட்டத் தானே. 2

1.பொ-ரை : திருந்திய மனமுடையவர்கள் வாழும் திருப்பறியலூரில் தொன்மையானவனாய் விளங்கும் வீரட்டானத்து இறைவன் அனைத்துலகங்களுக்கும் தலைவனும், கடவுளுமாக இருப்பவன். கையில் கனலேந்தி நடனம் புரிபவன். சடைமுடி மீது இளம்பிறை அணிந்தவன்.

கு-ரை : இப்பதிகம் முழுவதும் எல்லாவுயிர்கட்கும் கருத்தனாய், கடவுளாய், விருத்தனாய் இருப்பவன் திருப்பறியலூர் வீரட்டத்தான் என இறைவனியல்பு அறிவிக்கின்றது. திருத்தம் உடையார் - பிழையொடு பொருந்தாதே திருந்திய மனமுடைய அடியார். விருத்தன் - தொன்மையானவன்.

2. பொ-ரை : ஒழுக்கத்திற் சிறந்த அந்தணர்கள் வாழும் விரிந்த மலர்ச் சோலைகளையுடைய திருப்பறியலூரில் விளங்கும் வீரட்டானத்து இறைவன், பிணி தீர்க்கும் மருந்தாவான். உயிர் காக்கும்

Koviloor Digital Library

1439. குளிர்ந்தார் சடையன் கொடுஞ்சிலை விற்காமன்
விளிந்தா னடங்க வீந்தெய்தச் செற்றான்
தெளிந்தார் மறையோர் திருப்பறி யலூரில்
மிளிர்ந்தார் மலர்ச்சோலை வீரட்டத் தானே. 3

1440. பிறப்பாதி யில்லான் பிறப்பார் பிறப்புச்
செறப்பாதி யந்தஞ் செலச்செய்யுந் தேசன்
சிறப்பா டுடையார் திருப்பறி யலூரில்
விறற்பா ரிடஞ்சூழ வீரட்டத் தானே. 4

அமுதமாவான். மயானத்துள் நின்றாடும் வலியோனாவான். மிகப் பெரியதாகப் பரந்து வந்த குளிர்ந்த கங்கையைத் தன் சென்னியில் தாங்கி வைத்துள்ள பெருமானாவான்.

கு-ரை : மருந்தன் - பிணி தீர்க்கும் மருந்தானவன்.

3. பொ-ரை : அறிவில் தெளிந்த மறையோர்கள் வாழும் மலர்ச்சோலைகளால் சூழப்பட்ட திருப்பறியலூரில் விளங்கும் வீரட்டானத்து இறைவன் குளிர்ந்த சடைமுடியை உடையவன். கொடிய வில்லை வளைத்து மலர்க்கணை தொடுத்த மன்மதனை எரித்து இறக்கு மாறு செய்து, இரதி தேவி வேண்ட அவனைத் தோற்றுவித்தவன்.

கு-ரை : கொடுஞ்சிலை - வளைந்த வில். விளிந்தான் - இறந்தான். வீந்து எய்த - இறந்து பின்னரும் வர. செற்றான் - கொன்றவன்.

4. பொ-ரை : சிறப்புடையவர்கள் வாழ்கின்ற திருப்பறியலூரில் வலிமை பொருந்திய பூதகணங்கள் தன்னைச் சூழ விளங்கும் வீரட்டானத்து இறைவன், பிறப்பும் இறப்பும் இல்லாதவன். இவ்வுலகில் பிறவி எடுக்கும் உயிர்கள் அடையும் பிறப்புக்கும், சிறப்புக்கும் முதலும் முடிவும் காணச் செய்யும் ஒளி வடிவினன்.

கு-ரை : பிறப்பாதி எனவே இறப்புமில்லான் என்பதுணர்த்தியவாறு. பிறப்பார் பிறப்பு செறப்பு ஆதி அந்தம் செலச் செய்யுந் தேசன் - பிறவியெடுக்கும் உயிர்கள் எய்தும் பிறப்பிற்கும் சிறப்பிற்கும் முதலும் முடிவும் அடையச்செய்யும் ஒளிவடிவானவன். சிறப்பாடு - சிறப்பு. பாடு தொழிற்பெயர் விகுதி. விறல் பாரிடம் - வலிய பூதகணம்.

Koviloor Digital Library

1441. கரிந்தா ரிடுகாட்டி லாடுங்க பாலி
புரிந்தார் படுதம் புறங்காட்டி லாடும்
தெரிந்தார் மறையோர் திருப்பறிய லூரில்
விரிந்தார் மலர்ச்சோலை வீரட்டத் தானே. 5

1442. அரவுற்ற நாணா வனலம்ப தாகச்
செருவுற் றவர்புரந் தீயெழச் செற்றான்
தெருவிற் கொடிசூழ் திருப்பறி யலூரில்
வெருவுற் றவர்தொழும் வீரட்டத் தானே. 6

1443. நரையார் விடையா னலங்கொள் பெருமான்
அரையா ரரவம் மழகா வசைத்தான்
திரையார் புனல்சூழ் திருப்பறி யலூரில்
விரையார் மலர்ச்சோலை வீரட்டத் தானே. 7

5. பொ-ரை : நான்கு வேதங்களையும் ஆராய்ந்தறிந்த மறையவர்கள் வாழும் விரிந்த மலர்ச்சோலைகளையுடைய திருப்பறியலூரில் விளங்கும் வீரட்டானத்து இறைவர், இறந்தவர்களைக் கரிந்தவர்களாக எரிக்கும் சுடுகாட்டில் ஆடும் கபாலி.

கு-ரை : கரிந்தார் - இறந்தவர். புரிந்தார் - வினைகளைப் புரிந்தவர். படுதம் - கூத்துவகை. அக்கூத்தினைச் சுடுகாட்டில் விரும்பி ஆடுபவன். புறங்காடு - சுடுகாடு. தெரிந்து ஆர் மறையோர் - ஆராய்ந்தறிந்த அந்தணர்.

6. பொ-ரை : தெருக்களில் நடப்பட்ட கொடிகளால் சூழப்பெற்ற திருப்பறியலூரில், பிறவிப் பிணிக்கு அஞ்சுபவர்களால் தொழப்படும் வீரட்டானத்து இறைவன், வாசுகி என்னும் பாம்பை மேருவில்லில் நாணாக இணைத்து அனலை அம்பாகக் கொண்டு தன்னோடு போரிட்டவரின் முப்புரங்களைத் தீ எழுமாறு செய்து அழித்தவன் .

கு-ரை : அரவு உற்ற நாணா(க) அனல் அம்பு அது ஆக செரு உற்றவர் புரம் தீ எழச் செற்றான் எனப்பிரிக்க. செரு - போர். வெருவுற்றவர் - அஞ்சியவர்.

7. பொ-ரை : அலைகளையுடைய நீர்க்கால்களால் சூழப்பட்டதும், மணம் பொருந்திய மலர்ச் சோலைகளை உடையதுமான திருப்

Koviloor Digital Library

1444. வளைக்கும் மெயிற்றின் னரக்கன் வரைக்கீழ்
இளைக்கும் படிதா னிருந்தேழை யன்னம்
திளைக்கும் படுகர்த் திருப்பறி யலூரில்
விளைக்கும் வயல்சூழ்ந்த வீரட்டத் தானே . 8

1445. விளங்கொண் மலர்மே லயனோத வண்ணன்
துளங்கும் மனத்தார் தொழத்தழ லாய்நின்றான்
இளம்கொம் பனாளோ டிணைந்தும் பிணைந்தும்
விளங்குந் திருப்பறியல் வீரட்டத் தானே. 9

பறியலூர் வீரட்டத்தில் விளங்கும் இறைவன், வெண்மை நிறம் பொருந்திய விடையேற்றை உடையவன். நன்மைகளைக் கொண்டுள்ள தலைவன், இடையில் பாம்பினைக் கச்சாக அழகுறக் கட்டியவன்.

கு-ரை : நரை - வெண்மை.

8. பொ-ரை : பெண் அன்னங்கள் ஆண் அன்னங்களோடு கூடித்திளைக்கும் ஆழமான மடுக்களை உடையதும், மிகுதியான நெல் விளைவைத் தரும் வயல்களால் சூழப்பட்டதுமான திருப்பறியலூர் வீரட்டானத்து இறைவன், வளைந்த பற்களையுடைய இராவணனைக் கயிலைமலையின்கண் அகப்படுத்தி அவனை வலிமை குன்றியவனாகும்படி கால்விரலால் அடர்த்து எழுந்தருளி இருப்பவனாவான்.

கு-ரை : வளைக்கும் எயிறு - கோரப்பல். அரக்கன் என்றது இராவணனை. ஏழை அன்னம் திளைக்கும் படுகர் - பெண்ணன்னம் புணரும் ஆற்றுப்படுகர்.

9. பொ-ரை : இளைய பூங்கொம்பு போன்றவளாகிய உமையம்மையோடு இணைந்தும், இடப்பாகமாக அவ்வம்மையைக் கொண்டும் விளங்குபவனாகிய திருப்பறியல்வீரட்டத்து இறைவன், ஒளி விளங்கும் தாமரை மலர்மேல் உறையும் பிரமனும் கடல்வண்ணனாகிய திருமாலும் அச்சத்தால் நடுங்கிய மனத்தை யுடையவராய்த் தன்னைத் தொழத் தழல் உருவாய் நின்றவனாவான்.

கு-ரை : விளங்கு ஒண்மலர் - விளங்குகின்ற ஒளிபொருந்திய தாமரைமலர். ஓதவண்ணன் - கடல்வண்ணனாகிய திருமால். துளங்கும் - நடுங்கும். மனத்தார் என்றது அயனையும் மாலையும்.

Koviloor Digital Library

1446. சடையன் பிறையன் சமண்சாக் கியரோ
டடையன் பிலாதா னடியார் பெருமான்
உடையன் புலியி னுரிதோ லரைமேல்
விடையன் றிருப்பறியல் வீரட்டத் தானே. 10

1447. நறுநீ ருகுங்காழி ஞானசம் பந்தன்
வெறிநீர்த் திருப்பறியல் வீரட்டத் தானைப்
பொறிநீ டரவன் புனைபாடல் வல்லார்க்
கறுநீ டவல மறும்பிறப் புத்தானே. 11

திருச்சிற்றம்பலம்

இணைந்து - ஒரு திருமேனிக்கண்ணே ஒன்றாய். பிணைந்து - இடப்பாகத்து உடனாய்க்கூடி.

10. பொ-ரை : திருப்பறியல் வீரட்டத்தில் உறையும் இறைவன், சடையில் பிறை அணிந்தவன். சமணர், புத்தர் ஆகியோர்க்கு அருள்புரிதற்கு உரிய அன்பிலாதவன் . புலியின் தோலை இடைமேல் ஆடையாக உடுத்தவன். விடையேற்றினை உடையவன்.

கு-ரை : சமண் சாக்கியரோடு அடைதற்கு அன்பிலாதான் என்க. பெருமான் - பெருமகன் என்பதன் திரிபு. புலியின் உரிதோல் அரைமேல் உடையன் எனக்கூட்டுக.

11. பொ-ரை : நல்ல நீர் பாயும் சீகாழிப் பதியில் தோன்றிய ஞானசம்பந்தன், மணங்கமழும் நீர்வளமுடைய திருப்பறியல் வீரட்டானத்து உறையும் புள்ளிகளையுடைய நீண்ட பாம்பினை அணிந்த இறைவனைப் புனைந்து போற்றிய இப்பதிகப் பாடல்களை வல்லவர்கட்குப் பெரிய துன்பங்களும் பிறப்பும் நீங்கும்.

கு-ரை : நறுநீர் - நல்லநீர். வெறிநீர் - மணம்பொருந்திய தேன். நீடவல மறும்பிறப்பு அறும் எனக்கூட்டுக.

Koviloor Digital Library

135. திருப்பராய்த்துறை

பதிக வரலாறு:

திருக்கருவூர் ஆனிலையைப் போற்றி, திருஞான சம்பந்தப் பிள்ளையார் திருப்பராய்த்துறையை யடைந்தார்கள். அங்கே நெற்றித் தனிக்கண்ணர் கோயிலை நண்ணிக் கும்பிட்டுக் கோதில் தமிழ்ச்சொல் மாலையாகிய ‘நீறு சேர்வதொர்’ என்னும் இப்பதிகத்தை அருளிச் செய்தார்கள்.

பண்: மேகராகக்குறிஞ்சி

பதிக எண்: 135

திருச்சிற்றம்பலம்

1448. நீறுசேர்வதொர் மேனியர்நேரிழை
கூறுசேர்வதொர் கோலமாய்ப்
பாறுசேர்தலைக் கையர்பராய்த்துறை
ஆறுசேர்சடை யண்ணலே. 1

1449. கந்தமாமலர்க் கொன்றைகமழ்சடை
வந்தபூம்புனல் வைத்தவர்
பைந்தண்மாதவி சூழ்ந்தபராய்த்துறை
அந்தமில்ல வடிகளே. 2

1. பொ-ரை : திருப்பராய்த்துறையில், கங்கையை அணிந்த சடையினராய் விளங்கும் இறைவர், திருநீறு அணிந்த திருமேனியை உடையவர். அணிகலன்கள் பல புனைந்த உமையம்மையை ஒரு பாக மாகக் கொண்ட கோலத்தினர். பருந்துகள் தொடரத் தக்கதாய்ப் புலால் நாற்றம் கூடிய பிரமனது தலையோட்டைக் கையில் கொண்டவர்.

கு-ரை : இப்பதிகம், திருப்பராய்த்துறைசேர் அண்ணல் நீறணிந்தவர், நேரிழைவைத்தவர், கொன்றையணிந்தவர், வேதர், வேதம் விரித்தவர் என அவரது பல இயல்புகளை எடுத்து விளக்குவது. கூறு - மேனியில் ஒருபாதி. பாறு - பருந்து.

2. பொ-ரை : பசுமையான குளிர்ந்த குருக்கத்திக் கொடிகள் சூழ்ந்த திருப்பராய்த்துறையில் விளங்கும் அழிவற்றவராகிய

Koviloor Digital Library

1450. வேதர்வேதமெல் லாமுறையால்விரித்
தோதநின்ற வொருவனார்
பாதிபெண்ணுரு வாவர்பராய்த்துறை
ஆதியாய வடிகளே. 3

1451. தோலுந்தம்மரை யாடைசுடர்விடு
நூலுந்தாமணி மார்பினர்
பாலுநெய்பயின் றாடுபராய்த்துறை
ஆலநீழ லடிகளே. 4

1452. விரவிநீறுமெய் பூசுவர்மேனிமேல்
இரவினின்றெரி யாடுவர்

இறைவர், மணங்கமழும் சிறந்த மலர்களும், கொன்றையும் மணக்கும் சடைமுடியின்மேல் பெருக்கெடுத்து வந்த கங்கை நதியை வைத்துள்ளவர்.

கு-ரை : அந்தமில்ல அடிகள் - தாம் எல்லாவற்றிற்கும் அந்த மாதலேயன்றித் தமக்கு அந்தம் இல்லாத அடிகள்.

3. பொ-ரை : திருப்பராய்த்துறையில் எல்லா உலகங்களுக்கும் ஆதியாக விளங்குபவராய் எழுந்தருளியுள்ள இறைவர், வேதங்களை அருளிச் செய்தவர். எல்லா வேதங்களையும் முறையாக விரித்துப் பொருள் விளக்கம் அருளிய ஒப்பற்றவர். தம் திருமேனியில் பாதிப் பெண்ணுருவாக விளங்குபவர்.

கு-ரை : முறையால் விரித்து - இன்னவேதத்தின்பின் இன்னது என முறைப்படி விரித்து.

4. பொ-ரை : திருப்பராய்த்துறையில் ஆலநீழலில் எழுந்தருளிப் பால், நெய் முதலியவற்றை விரும்பி ஆடும் இறைவர், புலித்தோலைத் தம் இடையிலே ஆடையாக உடுத்தவர். ஒளி பொருந்திய பூணூல் அணிந்த மார்பினை உடையவர்.

கு-ரை : தோல் - புலித்தோல்.

5. பொ-ரை : திருப்பராய்த்துறையில் பாம்பை இடையில் கட்டியவராய் விளங்கும் பரமர், திருநீற்றைத் தம் மேனிமேல் விரவப்

Koviloor Digital Library

பரவினாரவர் வேதம்பராய்த்துறை
அரவமார்த்த வடிகளே. 5

1453. மறையுமோதுவர் மான்மறிக்கையினர்
கறைகொள்கண்ட முடையவர்
பறையுஞ்சங்கு மொலிசெய்பராய்த்துறை
அறையநின்ற வடிகளே. 6

1454. விடையுமேறுவர் வெண்பொடிப்பூசுவர்
சடையிற்கங்கை தரித்தவர்
படைகொள்வெண்மழு வாளர்பராய்த்துறை
அடையநின்ற வடிகளே. 7

1455. தருக்கின்மிக்க தசக்கிரிவன்றனை
நெருக்கினார்விர லொன்றினால்

பூசியவர். நள்ளிரவில் சுடுகாட்டுள் நின்று எரி ஆடுபவர். வேதங்களால் பரவப் பெற்றவர்.

கு-ரை : அவர் வேதம் பரவினார் - அவர் வேதங்களாற் பரவப் பெற்றவர்.

6. பொ-ரை : பறை, சங்கு முதலியன முழங்கும் திருவிழாக்கள் நிகழும் திருப்பராய்த்துறையில் எல்லோரும் புகழ்ந்து போற்ற எழுந்தருளிய இறைவர், வேதங்களை ஓதுபவர். மான் கன்றைக் கையின்கண் உடையவர், விடக்கறை கொண்ட கண்டத்தையுடையவர்.

கு-ரை : மறி - குட்டி. கறை - விடம்.

7. பொ-ரை : திருப்பராய்த்துறையிற் பொருந்தி விளங்கும் இறைவர், விடையேற்றினை ஊர்ந்து வருபவர். வெண்மையான திருநீற்றைப் பூசுபவர். சடையின்மேல் கங்கையைத் தரித்தவர். வெண்மையான மழுவைப் படைக்கருவியாகக் கொண்டவர்.

கு-ரை : அடைய - எங்குமாய்; பொருந்த என்றும் ஆம்.

8. பொ-ரை : திருப்பராய்த்துறையில் எழுந்தருளிய இறைவர், வலிமைமிக்க பத்துத் தலைகளை உடைய இராவணனைத் தம் கால்

Koviloor Digital Library

பருக்கினாரவர் போலும்பராய்த்துறை
அருக்கன்றன்னை யடிகளே. 8

1456. நாற்றமாமல ரானொடுமாலுமாய்த்
தோற்றமும்மறி யாதவர்
பாற்றினார்வினை யானபராய்த்துறை
ஆற்றன்மிக்க வடிகளே. 9

1457. திருவிலிச்சில தேரமணாதர்கள்
உருவிலாவுரை கொள்ளேலும்
பருவிலாலெயி லெய்துபராய்த்துறை
மருவினான்றனை வாழ்த்துமே. 10

விரல் ஒன்றினால் நெரித்தவர். தக்கன் வேள்வியில் கதிரவனின் பற்களைத் தகர்த்தவர்.

கு-ரை : தசக்கிரிவன் - இராவணன்.

9. பொ-ரை : திருப்பராய்த்துறையில் ஆற்றல் மிக்கவராய் விளங்கும் அடிகள், மணம் பொருந்திய தாமரை மலரில் விளங்கும் பிரமன், திருமால் ஆகியோரால் அடிமுடி அறியப் பெறாத தோற்றத்தினை உடையவர். தம்மை வழிபடுபவர்களின் வினைகளைப் போக்குபவர்.

கு-ரை : நாற்றம் - மணம். பாற்றினார் - சிதற அடித்தார்.

10. பொ-ரை : புண்ணியமில்லாத சிலராகிய புத்தர்களும், சமணர்களாகிய, கீழ்மக்களும், கூறும் பொருளற்ற அறவுரைகளைக் கேளாதீர். பெரிய மேருமலையாகிய வில்லால் முப்புரங்களை எய்தழித்து உலகைக் காத்துத் திருப்பராய்த்துறையில் எழுந்தருளி யிருக்கும் இறைவனை வாழ்த்துவீர்களாக.

கு-ரை : திரு - சிவஞானம். தேரர் - புத்த சமயத்தினர். ஆதர் - கீழ்மக்கள். பரு வில் - (மலையாகிய) பெருத்த வில். எயில் - திரிபுரம். வாழ்த்தும் - வாழ்த்துங்கள்.

Koviloor Digital Library



திருத்தருமபுரம்: அருள்மிகு யாழ்மூரிநாதர்

Koviloor Digital Library



திருப்புகலூர்: அப்பரும் சம்பந்தரும்

Koviloor Digital Library

1458. செல்வமல்கிய செல்வர்பராய்த்துறைச்
செல்வர்மேற்சிதை யாதன
செல்வன்ஞானசம் பந்தனசெந்தமிழ்
செல்வமாமிவை செப்பவே. 11

திருச்சிற்றம்பலம்

11. பொ-ரை : பொருட் செல்வங்களால் நிறைந்து விளங்கும் சிவஞானச் செல்வர்கள் வாழும் திருப்பராய்த்துறையில் எழுந்தருளிய, வீடுபேறாகிய செல்வத்தையுடைய, இறைவன்மீது, அருட்செல்வனாக விளங்கும் ஞானசம்பந்தன் அருளிய, அழிவற்ற இச்செந்தமிழ்ப் பாடல்களை ஓதினால், ஓதின அவர்கட்கு எல்லாச் செல்வங்களும் உண்டாகும்.

கு-ரை : சிதையாதன செந்தமிழ் இவை செப்பச் செல்வமாம் எனக்கூட்டுக.

திருஞானசம்பந்தர் புராணம்

பன்னெடுங் குன்றும் படர்பெருங் கானும் பலபதியும்
அந்நிலைத் தானங்கள் ஆயின எல்லாம் அமர்ந்திறைஞ்சி
மன்னு புகலியில் வைதிக வாய்மை மறையவனார்
பொன்னியல் வேணிப் புனிதர் பராய்த்துறை யுட்புகுந்தார்.

நீடும் பராய்த்துறை நெற்றித் தனிக்கண்ணர் கோயில்நண்ணிக்
கூடுங் கருத்தொடு கும்பிட்டுக் கோதில் தமிழ்ச்சொன் மாலை
பாடுங் கவுணியர் கண்பனி மாரி பரந்திழியச்
சூடுங் கரதலத் தஞ்சலி கோலித் தொழுதுநின்றார்.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

136. திருத்தருமபுரம்

பதிக வரலாறு:

திருவேட்டக்குடியை வணங்கிய ஆளுடைய பிள்ளையார் திருத்தருமபுரத்தை அடைந்தபோது, திருநீலகண்ட யாழ்ப் பாணரது தாய்வழிச்சுற்றத்தார் அனைவரும் அவரை எதிர் கொண்டு வணங்கினார்கள்.

பாணனார், 'சுவாமிகள் திருப்பாடல்களை யாழிலிட்டு வாசிக்கும் புண்ணியப்பேறு பொருந்தினேன்' என்று புகன்றார். அவர்கள், ''நீர் யாழில் இட்டு வாசிப்பதால் தான் அப்பாடலின் சிறப்பு உலகத்தில் பரவுவதாயிற்று'' என்றார்கள். இதனைக் கேட்ட பாணர் மனம் நடுநடுங்கி அவர்கள் உண்மை உணர்ந்து உய்யவேண்டும் என்ற திருவுள்ளத்தால் சம்பந்த சுவாமிகளின் திருவடியை வணங்கி 'யாழில் அடங்காத திருப்பதிகம் ஒன்று அருளிச் செய்யவேண்டும்' என்றுகேட்டுக் கொண்டார்.

பிள்ளையார் மக்களது கண்டத்திலும் யாழிலும் இசை நூலில் சொல்லப்பட்ட எல்லாமுயற்சியிலும் அடங்காத ''மாதர் மடப்பிடி'' என்னும் இப்பதிகத்தை அருளிச்செய்தார். பாணர் இதனை யாழிலிட்டு வாசிக்கத் தொடங்கி முடியாமை கண்டு, மனம் உளைந்து, ''இக்கருவியன்றோ இவர்களுக்கு இத்தகைய எண்ணத்தை அளித்து என்னையும் ஈடழித்தது'' என, அதனை உடைக்கப்புக்கார்.

பிள்ளையார் அதனைத்தடுத்து 'ஐயரே! சிவசக்தியின் திருவிளையாட்டெல்லாம் இக்கருவியில் அமையுமோ? முடிந்த அளவு முயறலே முறை' என்று அமைதிகூறி, யாழை அவர் கையில் தந்தார். அதனால் இப் பதிகம் யாழ் மூரியாயிற்று. (மூரி - வலிமை. யாழ்மூரி யாழைக் காட்டிலும் இசைவன்மை வாய்ந்தது என்பது பொருள்).

Koviloor Digital Library

பண்: யாழ்மூரி

பதிக எண்: 136

திருச்சிற்றம்பலம்

1459. மாதர்ம டப்பிடியும் மட வன்னமு மன்னதோர்
நடை யுடைம் மலைமக டுணையென மகிழ்வர்
பூதவி னப்படைநின் றிசைபாடவு மாடுவ
ரவர்படர் சடைந்நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னை தயங் கும லர்ச்சிறைவண்டறை
யெழில் பொழில் குயில் பயில்தருமபு ரம்பதியே. 1

1.பொ-ரை : விரும்பத்தக்க இளம்பிடியையும், இள அன்னத்தை யும் போன்ற நடையினை உடையவளாகிய பார்வதி தேவியைத் தம் துணைவியாகக் கொண்டு மகிழ்பவரும், பூதப்படைகள் நின்று இசை பாட ஆடுபவரும், விரிந்த சடைகளையுடைய நீண்ட முடிமீது கங்கை யை அணிந்தவரும் வேதங்களையும், ஏழிசைகளையும் பாடுபவரும் ஆகிய இறைவர்தம் இடமாக விளங்குவது ஆழ்ந்த கடலின் வெண்மை யான அலைகள் ஆரவாரித்து நுரைகளோடு கரையைப் பொருது விளங்கவும், அதன் அயலில் புன்னை மரங்களில் பூத்த மகரந்தம் பொருந்திய மலர்களில் வண்டுகள் ஒலிக்கவும். அழகிய பொழில் களில் குயில்கள் பாடவும் விளங்கும் திருத்தருமபுரம் என்னும் நக ராகும்.

கு-ரை: மலைமகளைத் துணையாகக்கொண்டு மகிழ்ந்தவரும், பூதப்படை இசைபாட ஆடுபவரும், கங்கைச் சடையரும், வேதத்தை யும் இசையையும் பாடுபவரும் ஆகிய இறைவர் இடம் தருமபுரம் என் கின்றது.

பிடி - பெண் யானை. உமாதேவியின் பெருமித நடைக்குப் பெண்யானையும், நடையின் மென்மைக்கு அன்னமும் உவமமா யிற்று. தருமபுரம் நெய்தனிலச் சார்புடையதாதலின் புன்னை கூறப் பட்டது.

Koviloor Digital Library

1460. பொங்குந டைப்புகலில் விடை யாமவ ரூர்திவெண்
பொடி யணி தடங் கொண்மார் புபூணநூல் புரள
மங்குலி டைத்தவழும் மதி சூடுவ ராடுவர்
வளங் கிளர் புனலர வம்வைகிய சடையர்
சங்குக டற்றிரையா லுதை யுண்டுச ரிந்திரிந்
தொசிந் தசைந் திசைந் துசே ரும்வெண்மணற் குவைமேல்
தங்குக திர்ம்மணிநித் தில மெல்லிரு ளொல்கநின்
றிலங் கொளிந் நலங் கெழிற் றருமபு ரம்பதியே. 2

1461. விண்ணுறு மால்வரைபோல் விடை யேறுவ ராறுசூ
டுவர் விரி சுரியொளி கொடோடுநின் றிலங்கக்
கண்ணுற நின்றொளிருங் கதிர் வெண்மதிக் கண்ணியர்
கழிந் தவ ரிழிந் திடும் முடைதலை கலனாப்

2.பொ-ரை : சினம் பொங்கிய நடையினைஉடையதாய், உவமை சொல்லுதற்கு வேறொன்று இல்லாததாய் விளங்கும் விடையை ஊர்தியாகக் கொண்டவரும், திருநீறு அணிந்த அகன்ற மார்பின்கண் பூணூல் புரள வானத்தில் தவழும் பிறைமதியைச் சூடி ஆடுபவரும், வளமைகளைத் தருவதாகிய கங்கை, அரவம் ஆகியன தங்கிய சடையினருமாகிய சிவபிரானாரது இடம், கடல் அலைகளால் அலைக்கப் பெற்ற சங்குகள் சரிந்து இரிந்து, ஒசிந்து, அசைந்து, இசைந்து வெண்மணற் குவியலின் மேல் ஏறித் தங்கி ஈனும் ஒளி பொருந்திய முத்துமணிகளால் மெல்லிய இருள் விலகி ஒளி சிறந்து தோன்றும் அழகிய திருத்தருமபுரமாகிய நகரமாகும்.

கு-ரை : ஊர்தி விடையாம் நீறணிந்தமார்பில் பூணுநூல் புரள மதிசூடுவர், ஆடுவர், கங்கையும் அரவும் தங்கிய சடையர் பதி தரும புரம் என்கின்றது. பொங்கிய நடையோடு, வேறு அடைக்கலத் தான மில்லாத விடையாம் அவர் வாகனம் என்பதாம். மங்குல் - ஆகாயம். சங்கு கடல் அலையால் மோதப்பெற்று மணற் குவியல்மேல் தங்கிய தால் 'ஈனப்பெற்ற முத்துக்கள் இருளோட்டி விளங்கும் நலங்கெழும் தருமபுரம்' என்க. சங்கு சரிந்து இரிந்து ஒசிந்து அசைந்து இசைந்து சேரும் மணல் எனக்கூட்டுக. இது மணல்மேட்டின்மேல் சங்கு ஏறிய அருமைப்பாட்டை அறிவிக்கின்றது.

3. பொ-ரை : வானளாவிய பெரிய மலை போன்ற விடையின் மேல் ஏறி வருபவரும், கங்கையை அணிந்தவரும், விரிந்து சுருண்டு

Koviloor Digital Library

பெண்ணுற நின்றவர் தம் முரு வம்மயன் மாறொழவ்
வரி வையைப் பிணைந் திணைந் தணைந்ததும் பிரியார்
தண்ணிதழ் முல்லையொடெண் ணிதழ் மௌவன்ம ருங்கலர்
கருங் கழிந் நெருங் குநற் றருமபு ரம்பதியே. 3

1462. வாருறு மென்முலைநன் னுத லேழையொ டாடுவர்
வளங் கிளர் விளங் குதிங் கள்வைகிய சடையர்
காருற நின்றலரும் மலர்க் கொன்றையங் கண்ணியர்
கடுவ் விடை கொடி வெடி கொள்காடுறை பதியர்
பாருற விண்ணுலகம் பர வப்படு வோரவர்
படு தலைப் பலி கொளல் பரிபவந் நினையார்
தாருறு நல்லரவம் மலர் துன்னிய தாதுதிர்
தழை பொழின் மழைந் நுழை தருமபு ரம்பதியே. 4

ஒளிதரும் தோடு விளங்கக் கண்ணைக் கவரும் ஒளிதரும் பிறைமதியாகிய கண்ணியை முடியிற் சூடியவரும் , முடை நாறும் தலையோட்டை உண்கலனாகக் கொண்டவரும், உமையம்மையைக் கூடிப் பிணைந்து இணைந்து அணைத்துத் தம் திருமேனியில் ஒரு பாதியாகக் கொண்டவரும், தமது உருவத்தை அயனும் மாலும் தொழ நின்றவருமாகிய சிவபிரானாரது இடம், குளிர்ந்த இதழ்களையுடைய முல்லை மலர்களோடு எட்டு இதழ்களையுடைய காட்டு மல்லிகை மலர்கள் மலர்ந்து மணம் வீசுவதும், கரிய உப்பங்கழிகள் நிறைந்ததுமாகிய திருத்தருமபுரம் என்னும் ந்ன்னகராகும்.

கு-ரை : விண்ணளாவிய மலைபோன்ற விடையை ஊர்தியாக ஏறுவர்; கங்கையைச் சூடுவர்; தோடு விளங்க, பிறைக்கண்ணி சூடுவர்; பிரமகபாலத்தை உண்கலனாகக் கொண்டு, பெண் பாதியாக நின்றவர்; தம் வடிவத்தை அயனும் மாலும் தொழ நின்றவர். இவர் பதி தருமபுரம் என்கின்றது. மால்வரை - பெரிய மலை. கண்ணியர் - தலைமாலையையுடையவர். கழிந்தவர் - இறந்தவர். மௌவல் - மல்லிகை. மல்லிகைக்கு எட்டிதழ் உண்மை உணர்த்தப் பெறுகின்றது.

4. பொ-ரை : கச்சணிந்த மென்மையான தனங்களையுடைய உமையம்மையோடு கூடி நடனம் ஆடுபவரும், உலகிற்கு வளம் சேர்க்கும் நிலவொளியைத் தரும் மதி சூடிய சடையினரும், கார்காலத்தே மலரும் கொன்றை மாலையைச் சூடியவரும், விரைந்து செல்லும்

Koviloor Digital Library

1463. நேரும வர்க்குணரப் புகி லில்லைநெ டுஞ்சடைக்
கடும் புனல் படர்ந் திடம் படுவ்வதொர் நிலையர்
பேரும வர்க்கெனையா யிர முன்னைப்பி றப்பிறப்
பிலா தவ ருடற் றடர்த் தபெற்றியா ரறிவார்
ஆரம வர்க்கழல்வா யதொர் நாகம ழஃகுறவ்
வெழுஃ கொழும் மலர் கொள்பொன் னிதழிநல் லலங்கல்
தாரம வர்க்கிமவான் மக ளூர்வது போர்விடை
கடிபடு செடி பொழிற் றருமபு ரம்பதியே. 5

விடையைக் கொடியாகக் கொண்டவரும், அச்சந்தரும் சுடுகாட்டைத் தமக்குரிய இடமாகக் கொண்டவரும், மண்ணுலகத்தினர், விண்ணுலகத்தினர்களால் போற்றப்படுபவரும், அவமானம் எனக் கருதாது அழிந்துபட்ட தலையோட்டில் பலிகொள்பவரும், பாம்பை மாலையாக அணிந்தவரும் ஆகிய சிவபிரானார் எழுந்தருளிய பதி, மகரந்தங்களை உதிர்க்கும் மலர்கள் நிறைந்த, தழைகள் செறிந்த, மேகங்கள் தவழும் பொழில்கள் சூழ்ந்த திருத்தருமபுரம் என்னும் நகரமாகும்.

கு-ரை : பெண்ணொடு ஆடுவர், பிறை விளங்கு சடையர், கொன்றைமாலை அணிந்தவர். விடைக்கொடி யேந்தி இடுகாட்டைப் பதியாக்கொண்டவர். விண்ணும் மண்ணும் துதிக்கப்படுபவர். மண்டையோட்டில் பிச்சையேற்றலை அவமானமாகக் கருதாதவர். இவர் பதி தருமபுரம் என்கின்றது. வார் - கச்சு. பதி - இடம். பரிபவம் - அவமானம்.

5. பொ-ரை : ஆராயுமிடத்து அவருக்கு உவமையாகச் சொல்லத் தக்கவர் யாரும் இல்லை. கடிதாக வந்த கங்கைக்குத் தம் நீண்ட சடையை இடமாகக் கொடுத்த நிலையினர் அவர். அவருக்குப் பெயர்களோ பல ஆயிரம். முன்தொட்டு அவருக்குப் பிறப்பு இறப்பு இல்லை. தம்மை எதிர்த்தவர்களோடு சினந்து அவர்களைக் கொன்ற அவரது பெருவலியை யார் அறிவார்? தீயின் தன்மையுடைய நஞ்சினைக் கொண்ட நாகம் அவருக்கு ஆரம். செழுமையான பொன்போன்ற கொன்றை மலர், அவருக்கு மாலையாகும். இமவான் மகளாகிய பார்வதி அவருக்கு மனைவி. அவர் ஊர்ந்து செல்வது போர்ப் பயிற்சி உடைய இடபம். அவர் தங்கியுள்ள இடம் மணம் பொருந்திய ஒளிகளையுடைய பொழில்களால் சூழப்பட்ட தருமபுரம் என்னும் பதியாகும்.

Koviloor Digital Library

1464. கூழையங் கோதைகுலா யவ டம்பிணை புல்கமல்
குமென் முலைப் பொறி கொள்பொற் கொடியிடைத் துவர்வாய்
மாழையொண் கண்மடவா ளையொர் பாகம கிழ்ந்தவர்
வலம் மலிபடை விடை கொடிகொடும் மழுவ்வாள்
யாழையும் மெள்கிடவே ழிசை வண்டுமு ரன்றினந்
துவன் றிமென் சிறஃகறை யுறந்நறவ்வி ரியுந்நல்
தாழையு ஞாழலுந்நீ டிய கானலி னள்ளலி
சைபுள்ளினந் துயில் பயி றருமபு ரம்பதியே. 6

கு-ரை : அவருக்கு ஒப்பு ஆராயப்புகில் யாரும் இல்லை. கங்கை புகுந்தும் இடம்படும் சடையையுடையவர். அவர்க்குப் பேரும் ஆயிரம். பிறப்பு இறப்பு இல்லாதவர். இவரது மாறுபட்ட பகைவரைக் கொல்லும் வெற்றியை அறிவார் யார்? அவர்க்கு ஆரம் பாம்பு. அழகுற எழுந்த கொழுமலராகிய கொன்றையே மாலை. மனைவி மலை மகள். வாகனம் இடபம். தருமபுரம் பதி என்கின்றது. நேர் - ஒப்பு. இதழி - கொன்றை. அலங்கல் - மாலை. தாரம் - மனைவி. கடி - மணம்.

6. பொ-ரை : மலர்மாலை சூடிய கூந்தலையும், தன் கணவரால் தழுவப்பெறும் மெல்லிய தனங்களையும், தேமல்களோடு கூடிய மேனியினையும், கொடி போன்ற இடையையும், பவளம் போன்ற வாயையும், மாவடு போன்ற ஒளி விளங்கும் கண்களையும் உடைய உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டு மகிழ்ந்தவரும், வெற்றியைத் தரும் படைக்கலனாக மழுவாளைக் கொண்டவரும் விடையைக் கொடியாகக் கொண்டவரும் ஆகிய சிவபிரான் உறையும் பதி, யாழிசையையும் வெல்லுமாறு வண்டுகள் ஏழிசை முரன்று மெல்லிய சிறகுகளால் ஒலித்துச் சூழும் தேன்நிறைந்த நல்ல தாழை மரங்களும், புலிநகக் கொன்றையும் நிறைந்த கடற்கரைச் சோலைகளிலுள்ள சேற்று நிலங்களில் இசைபாடும் பறவையினங்கள் துயில்கொள்ளும் தலமாகிய தருமபுரமாகும்.

கு-ரை : உமையாளை ஓர் பாகம் மகிழ்ந்தவர்; அவர்க்குப் படைமழுவும் வாளும்; கொடி விடை; பதி தருமபுரம் என்கின்றது.

கூழை - கூந்தல். துவர் வாய் - சிவந்தவாய். மாழை - மாவடு, படை கொடு மழு வாள் எனவும் விடை கொடி எனவும் இயைக்க.

Koviloor Digital Library

1465. தேமரு வார்குழலன் னந டைப்பெடை மான்விழித்
திருந் திழை பொருந் துமே னிசெங்கதிர் விரியத்
தூமரு செஞ்சடையிற் றுதை வெண்மதி துன்றுகொன்
றைதொல்புனல் சிரங் கரந் துரித்ததோ லுடையார்
காமரு தண்கழிநீ டிய கானல கண்டகங்
கடல் லடை கழி யிழி யமுண்டகத் தயலே
தாமரை சேர்குவளைப் படு கிற்கழு நீர்மலர்
வெறி கமழ் செறிவ் வயற் றருமபு ரம்பதியே. 7

எள்கிட - இகழ. நற - மணம். ஞாழல் - புலிநகக் கொன்றை. அள்ளல் - சேறு.

7. பொ-ரை : இனிமையும், மணமும் பொருந்திய நீண்ட கூந்தல், அன்னம் போன்ற நடை, பெண்மான் போன்ற விழி இவற்றை உடையவளும் திருத்தம் பெற்ற அணிகலன்கள் பூண்டவளும் ஆகிய உமையம்மை ஒருபாலாகப் பொருந்திய மேனியனும், செவ்வொளி விரியும் தூய செஞ்சடையில் வெண்மையான பிறைமதி, நிறைந்த கொன்றை மலர் பழமையான கங்கை நீர், தலைமாலை ஆகியவற்றை மறைத்துச் சூடி, உரித்து உடுத்த தோல்களை உடையாகக் கொண்டவனும் ஆகிய இறைவனது பதி அழகிய குளிர்ந்த உப்பங்கழிகளை அடுத்துள்ள கடற்கரைச் சோலைகளில் தாழை மரங்களும்,கடலினிடத்திருந்து பெருகிவரும் உப்பங்கழிகளிடத்து நீர்முள்ளிகளும், நீர் நிலைகளில் தாமரை, குவளை, செங்கழுநீர் ஆகியவற்றின் மலர்களும் மணம் வீசுவதும், வயல்கள் செறிந்ததுமாகிய தருமபுரமாகும்.

கு-ரை : உமையுடன்கூடிய மேனி ஒளி விரிய, செஞ்சடையில் மதி கொன்றை கங்கை சிரம் இவற்றை மறைத்து, தோலையுடுத்தவரான இறைவன் பதி தருமபுரம் என்கின்றது.

தேமரு - மணம் பொருந்திய, குழலையும், நடையையும், விழியையும் உடைய திருந்திழை என்க.

துதை - செறிந்த. கரந்து - மறைய அணிந்து. கானல கண்டகம் - கடற்கரைச் சோலையிலுள்ள தாழை. முண்டகம் - கடல் முள்ளி. படுகு - மடு.

Koviloor Digital Library

1466. தூவண நீறகலம் பொலி யவ்விரை புல்கமல்
குமென் மலர் வரை புரை திரள்புயம் மணிவர்
கோவண மும்முழையின் னத ளும்முடை யாடையர்
கொலைம் மலி படை யொர்சூ லமேந்திய குழகர்
பாவண மாவலறத் தலை பத்துடை யவ்வரக்
கனவ் வலி யொர்கவ் வைசெய் தருள்புரி தலைவர்
தாவண வேறுடையெம் மடி கட்கிடம் வன்றடங்
கடல் லிடுந் தடங் கரைத் தருமபு ரம்பதியே. 8

1467. வார்மலி மென்முலைமா தொரு பாகம தாகுவர்
வளங் கிளர் மதி யர வம்வைகிய சடையர்
கூர்மலி சூலமும்வெண் மழு வும்மவர் வெல்படை
குனி சிலைதனிம் மலை யதேந்திய குழகர்

8. பொ-ரை : தூய வெண்ணிறம் பொருந்திய திருநீறு மார்பின் கண் விளங்க, மலை போலத் திரண்ட தோள்களில் மணம் நிறைந்து செறிந்த மென்மையான மலர்மாலையை அணிவர். கோவணத்தையும் மான் தோலையும் ஆடைகளாக உடையவர். கொல்லும் தொழிலில் வல்ல ஆயுதமாக ஓர் சூலத்தை ஏந்திய இளையர். பத்துத் தலைகளை உடைய அரக்கனாகிய இராவணன், பாடல்கள் பாடி அலறுமாறு அவ னது வலிமையைச் செற்றுப் பின் அருள் புரிந்த தலைவர். தாவிச் செல் லும் இயல்புடைய ஆனேற்றைத் தம் ஊர்தியாகக் கொண்டவர். அவ் அடிகட்கு இடம், வலிய பெரிய கடலின் அலைகள் சேர்ந்த பெரிய மணற்கரையில் விளங்கும் தருமபுரம் என்னும் பதியாகும்.

கு-ரை : வெண்ணிறத் திருநீறு மார்பில் விளங்க, மணம் பொருந்திய மலரைப் புயத்து அணிவர்; கோவணமும், மான் தோலும் உடுப்பவர் ; சூலமேந்திய இளையர்; இராவணற்குத் துன்பஞ் செய்து, பின் அருளும்செய் தலைவர்; தாவும் நிறம் பொருந்திய இடபத்தை யுடைய எம்மடிகட்கு இடம் தருமபுரம் என்கின்றது. அகலம் - மார்பு, உழை - மான். அதள் - தோல். அரக்கன் வலி ஓர் கவ்வை செய்து (அவன்) பாவண்ணமா அலற அருள்புரி தலைவர் எனக்கூட்டுக. பாவண்ணமா - சாமகீதமாக. கவ்வை - துன்பம். தா வண்ண ஏறு - தாவிச்செல்லும் நிறம் பொருந்திய இடபம்.

9. பொ-ரை : கச்சணிந்த மென்மையான தனங்களை உடைய உமையம்மையை ஒருபாகமாகக் கொண்டவர். பிறைமதி, பாம்பு

Koviloor Digital Library

ஆர்மலி யாழிகொள்செல் வனு மல்லிகொ டாமரைம்
மிசை யவன் னடிம் முடி யளவுதா மறியார்
தார்மலி கொன்றையலங் கலு கந்தவர் தங்கிடந்
தடங் கடல் லிடுந் திரைத் தருமபு ரம்பதியே. 9

1468. புத்தர்க டத்துவர்மொய்த் துறி புல்கிய கையர்பொய்ம்
மொழிந் தழி வில்பெற் றியுற் றநற்றவர் புலவோர்
பத்தர்க ளத்தவமெய்ப் பயனாக வுகந்தவர்
நிகழ்ந் தவர் சிவந் தவர் சுடலைப்பொடி யணிவர்
முத்தன வெண்ணகையொண் மலை மாதுமை பொன்னணி
புணர்ம் முலை யிணை துணை யணைவதும் பிரியார்
தத்தரு வித்திரளுந் திய மால்கட லோதம்வந்
தடர்ந் திடுந் தடம்பொழிற் றருமபு ரம்பதியே. 10

ஆகியவை தங்கும் சடையினர். கூரிய சூலமும், வெண்ணிறமான மழுவும் அவர் வெற்றி கொள்ளுதற்குரிய படைக்கலங்களாகும். ஒப்பற்ற மேரு மலையை வளைத்து வில்லாக ஏந்திய இளைஞர். ஆரக்கால் பொருந்திய சக்கராயுதத்தைக் கொண்ட திருமாலும், அகஇதழ்களை உடைய தாமரை மலரில் உறையும் பிரமனும் தம்முடைய அடிமுடிகளின் அளவுகளைத் தாம் அறியாவாறு அயரும்படி செய்தவர் அவர். கொத்தாகப் பூக்கும் கொன்றை மலரால் தொடுத்த மாலையை விரும்புபவர். அப்பெருமானார் தங்கியுள்ள இடம், பெரிய கடலின் அலைகள் வந்து தழுவிச் செல்லும் தருமபுரம் என்னும் பதியாகும்.

கு-ரை : மென்முலை மாதை ஓர் பாகங்கொண்டவர்; மதியும் அரவும் வைகிய சடையர்; மழுவும் சூலமும் அவர் படை; அவர் வில் மலை; அயனாலும் மாலாலும் அறியமுடியாதவர்; கொன்றை மாலையை விரும்பியவர்; இவர் தங்குமிடம் தருமபுரம் என்கின்றது. தனி மலை - ஒப்பற்ற மேருமலை. ஆர் மலி ஆழி - ஆரக்கால் நிறைந்த சக்கரம். ஆழிகொள் செல்வன் - திருமால். அல்லி - அகவிதழ். தார்மலி கொன்றை - மாலையாகப் பூக்கும் கொன்றை. அலங்கல் - மாலை.

10. பொ-ரை : புத்தர்களாகிய தத்துவாதிகளும், உறிகளை ஏந்திய கையினராய்த் திரியும் சமணர்களும் கூறும் பொய் மொழிகளினின்று நீங்கிய நல்ல தவத்தை உடையவர்களும், புலவர்கள் பக்தர்கள் ஆகியோரின் தவத்தை மெய்ப் பயனாக உகந்தவரும், அன்புக்கு

Koviloor Digital Library

1469. பொன்னெடு நன்மணிமா ளிகை சூழ்விழ வம்மலி
பொரூஉம் புன றிரூஉ வமர் புகல்லியென் றுலகில்
தன்னொடு நேர்பிறவில் பதி ஞானசம் பந்தனஃ
துசெந் தமிழ்த் தடங் கடற் றருமபுரம் பதியைப்
பின்னெடு வார்சடையிற் பிறை யும்மர வும்முடை
யவன் பிணை துணை கழல் கள்பேணுத லுரியார்
இன்னொடு நன்னுலகெய் துவ ரெய்திய போகமும்
முறு வர்கள் ளிடர் பிணி துயரணைவ் விலரே. 11

திருச்சிற்றம்பலம்

நெகிழ்பவரும், வன்புக்குச் சினப்பவரும் சுடலைப் பொடி அணிபவரும், முத்துப் போன்ற வெண்மையான பற்களை உடைய ஒளி பொருந்திய மலை மாதாகிய பார்வதி தேவியாரின் ஒன்றோடு ஒன்று செறிந்த தனங்கள் இரண்டையும் துணையாகக் கொண்டு அவற்றைப் பிரியாதவரும் ஆகிய சிவபிரானாரது பதி, தவழும் அலைகளை உடைய பெரிய கடலின் ஓதநீர் வந்து பொருந்தும் தருமபுரம் ஆகும்.

கு-ரை: புத்தரும் சமணரும் கூறும் பொய்யினின்றும் நீங்கி, அழிவில்லாத் தன்மைபெற்ற புலவர்கள் பத்தர்கள் தவத்தை மெய்ப்பயனாக உகந்தவரும், சுடலைப்பொடி யணிபவரும், உமையைக் கூடி, பிரிதலைச் செய்யாதவரும் ஆகிய இறைவன் பதி தருமபுரம் என்கின்றது. கட துவர் மொய்த்து - கடுவிதையால் உண்டாக்கப் பெற்ற துவர் நெருங்கி. உறி புல்கிய கையர் - உறி தூக்கிய கையை யுடைய சமணர். உகந்தவர் - மகிழ்ந்தவர். தத்து அருவி - தாவிக் குதிக்கின்ற அருவி. மால்கடல் - பெரிய கடல். கருங்கடலுமாம்.

11. பொ-ரை : பொன்னால் இயன்ற நெடிய நல்ல மணிகள் இழைத்த மாளிகைகள் சூழ்ந்ததும், திருவிழாக்கள் மலிந்ததும், கரைகளை மோதும் நிறைந்த நீர்வளம் உடையதும், திருமகள் உறைவதுமான புகலி என்னும், தனக்கு உவமை சொல்ல இயலாத பதியின் மன்னனாகிய ஞானசம்பந்தனுடைய பரந்து விரிந்து கடல் போன்ற செந்தமிழாகிய பாமாலைகளால், ஒன்றோடு ஒன்று பின்னி நீண்டுள்ள சடைமுடியில் பிறையையும் பாம்பையும் அணிந்துள்ளவனாகிய சிவபிரானுடைய பிணைந்துள்ள இரண்டு திருவடிகளையும் போற்றி அன்பு செய்பவர், இனிய பெரிய நல்லுலகை எய்துவர், அடையத் தக்கனவாய போகங்களையும் பெறுவர். இடர் செய்யும் பிணி துயர் முதலியன நீங்கி என்றும் இன்பம் உறுவர்.

Koviloor Digital Library

கு-ரை : ஞானசம்பந்தப் பெருமான் செந்தமிழால் திருத் தருமபுரப் பதியில் எழுந்தருளியிருக்கின்ற இறைவன் கழல்களைப் பேணுதல் உரியார் நல்லுலகம் எய்துவர்; போகம் பெறுவர்; இடரும் பிணியும் எய்தப்பெறார் என்கின்றது. விழவம் மலீ - விழாக்கள் நிறைந்த, பொருஉ புனல் - கரையை மோதுகின்ற நீர். திரு திருஉ ஆயிற்றுச் சந்தம் நோக்கி, புகல்லி - புகலி; விரித்தல் விகாரம். தன்னொடு நேர்பிற இல் பதி - தனக்குச் சமம் வேறில்லாத நகரம்; என்றது சீகாழியை, பேணுதல் - தியானித்தல். இப்பதிகத்தைச் சொல்லி இறைவனைத் தியானிப்பவர்கள் நல்லுலகம் எய்துவர்; போகம் பெறுவர்; அவர்களைப் பிணியும் துயரும் பொருந்தா; என்றும் இன்பம் பெறுவர்.

திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்

முதல் திருமுறை

மூலமும் - உரையும் நிறைவுற்றது.

திருஞானசம்பந்தர் புராணம்

வண்புகலி வேதியனார் மாதர்மடப் பிடிஎடுத்து
வனப்பிற் பாடிப்
பண்பயிலுந் திருக்கடைக்காப் புச்சாத்த அணைந்துபெரும்
பாண னார்தாம்
நண்புடையாழ்க் கருவியினில் முன்பு போல் கைக்கொண்டு
நடத்தப் புக்கார்(கு)
எண்பெருகும் அப்பதிகத் திசைநரம்பில் இடஅடங்கிற்
றில்லை அன்றே.

சிந்தையால் அளவுபடா இசைப்பெருமை செயலளவில்
எய்து மோ? நீர்
இந்தயா ழினைக்கொண்டே இறைவர்திருப் பதிகஇசை
இதனில் எய்த,
வந்தவா றேபாடி வாசிப்பீர் எனக்கொடுப்பப்
புகலிமன்னர்
தந்தயா ழினைத்தொழுது கைக்கொண்டு பெரும்பாணர்
தலைமேற் கொண்டார்.

- சேக்கிழார்.

Koviloor Digital Library

முதல் திருமுறை

பாட்டு முதற்குறிப்பகராதி

பாடல்	பாடல் எண்
அ	
அகமலியன்பொ	480
அகனமர்ந்தவன்	1421
அங்கமாதுசேர்	972
அங்கமாறும்வேத	709
அங்கமுநான்மறை	1166
அங்கமும்வேதமு	55
அங்கமொடரு	1175
அங்கமொராறு	460
அங்கமொராறும்	1081
அங்கோல்வளை	921
அசைவுறுதவ	224
அச்சமிலர்	186
அஞ்சாதேகயிலாய	1401
அஞ்சொண்புல	407
அடர்செவிவேழ	432
அடலேறமருங்	360
அடல்வந்தவானவரை	1390
அடல்மலிபடை	225
அடிகளாலவாய்	1024
அடிமுடிகாண்கில	1204
அடியவர் குழுமிட	1345
அடியிணைகண்டி	1268
அடையாதவர்	399
அடையார்தம்புர	701
அடையார்புர	893
அடைவாகியவடி	133
அணங்கோடொரு	410
அணிபெறுவடமர	210
அணிமலர்மகடலை	236
அணியார் தொழ	398
அணியார்மலை	897
அண்டத்தாலெண்	1362
அண்ணலாலவாய்	1019
அத்தமண்டோய்து	424
அத்தன்முதுகுன்றை	1004
அந்தணாளர்தம்	1042
அந்தண்சோற்றுத்	304
அந்தண்புனல்	958
அந்தமாதியயனு	795
அந்தமின்ஞான	1237
அந்தமில்புகழ்	1017
அந்தமுமாதியுந்நான்	62
அந்தமுமாதியுமாகிய	415
அந்தம்மறியாதவரு	341
அந்தரத்திற்றேரு	674
அந்திமதியோடு	917
அமைவனதுவரி	204
அம்பொனாலவாய்	1020
அயனுமாலுமாய் (பிரம)	978
அயனுமாலுமாய் (வீழி)	1000
அயனொடுமெழிலமர்	214
அயிலுடைவேலோ	1086
அயிலுறுபடையினர்	853
அரக்கனாண்மையழிய	312
அரக்கனாண்மையை	988
அரக்கன்வலி	367
அரக்கனார்வலி	1021
அரக்கனெரிதர	999
அரசளிக்குமரக்கன்	597
அரப்பள்ளியானு	1066
அரவச்சடைமேன்	393
அரவார்புனலன்பிலா	359

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
அரவின்வாயின்	1077
அரவுற்றநாணா ன்	1442
அரனுறைதரு	213
அரனையுள்குவீர்	969
அரியுநம்வினை	623
அரியொடுமலர	1323
அருகரொடு	128
அருத்தனை	1196
அருநெறிய	11
அருந்திறலவு	1178
அருமறைஞான	1184
அருமையன் எளி	1306
அரும்புங்குரும்	494
அருவனாலவாய்	1022
அரைகெழுகோ	427
அரைபுல்குமைந்	418
அரையாரழனாக	910
அரையார்தரு	962
அரையார்விரி	371
அரையோடலர்	502
அலங்கன்மலி	1385
அலரும்மெறி	395
அலர்மகண்மலி	1337
அலைமலிதண்புனலோ	1153
அலைமலிதண்புனல்சூழ்	1162
அலையார்புனலை	699
அலையார்புனல்சூடி	870
அல்லாடரவமிய	753
அவ்வினைக்கிவ்வினை	1249
அழவல்லவராடி	373
அழிவல்லமண	402
அளைவளர்நாக	431
அறங்கிளருநால்	1411
அறையார்கடலிலங்கை	159
அறையார்கழலந்த	123
அறையார்கழன்மேலர	397
அறையார்புனலு	690
அறையார்புனலோடகி	266
அறையும்மரிகுர	149
அனனிகர்சடை	1329
அன்புடையானை	75
அன்றடற்காலனை	1208
அன்றிநின்றவவு	311
அன்றியலுருவு	1356
அன்றியவமணர்	1226
அன்றினரரியென	1342
அன்னமலிபொழில்	1404

ஆ

பாடல்	பாடல் எண்
ஆகத்துமைகேள்வ	930
ஆசியாரமொழி	32
ஆச்சியப்பேயக்	1291
ஆடரவத்தழ	668
ஆடலரவசைத்தான்	1122
ஆடலழனாக	495
ஆடலான்பாட	1283
ஆடலேற்றினான்	1018
ஆடனாக	613
ஆணும்பெண்ணுமா	908
ஆதல்செய்தானர க்	1118
ஆதியாயநான்	545
ஆமையரவோ	796
ஆம்பலதவமு	862
ஆயாதனசம	112
ஆரநாகமாம்	1023
ஆலக்கோலத்	877
ஆலநீழலார்	1016
ஆலிளமதியினொ	1198
ஆலும் மயிலின்	807
ஆவாவெனவர	965
ஆவிக்கமலத்தன்ன	1109
ஆவிலைந்தமர்ந்த	1213
ஆழியானுமலரி	313

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்	பாடல்	பாடல் எண்
ஆழ்கடலெனக்	615	இலகும்முடி	400
ஆழ்தருமால்கட	422	இலங்கைத்தலை	1267
ஆறணிசெஞ்சடை	1124	இலங்கைமன்னன்முடி	170
ஆறாடுசடைமுடி	1422	இலங்கையர்வேந்	41
ஆறுடைச்சடை	817	இலங்கையிராவண	72
ஆற்றலுடைய	258	இலைமருதேயழ	63
ஆற்றையுமேற்ற	843	இலைமலிதர	1335
ஆனூராவுழி	664	இலைமலிபொழி	1195
ஆன்முறையாலாற்ற	528	இலையார்தரு	960
		இழைத்தவிடை	746
இ		இழைமேவு	1409
		இழைவளர்	230
இகழுருவொடு	215	இளகக்கமலத்	1104
இகழ்ந்தருவரை	1224	இறையார்வளை	331
இசைவிளங்குமெ	276	இறையூண்டு	640
இடந்தபெம்மா	1119	இறைவராயி	993
இடியார்கடனஞ்	396	இன்குரலிசை	1207
இடியார்குரலேறு	362	இன்பம்வேண்	1041
இடையீர்போகா	581		
இட்டமதமர்பொடி	1327	**ஈ**	
இந்தணையுஞ்	80		
இயங்குகின்ற	538	ஈசன்முதுகுன்	1006
இயலாடிய	127	ஈர்க்கும்புனல்	485
இயலும்விடை	954	ஈறாய்முதலொன்	109
இயல்வழிதாவிது	237		
இரவணனிருபது	1333	**உ**	
இரவன்பகலோ	885		
இரவிற்றிரிவோர்	878	உடையார்துகில்	325
இருநிலமிதன்	1338	உண்டுடுக்கையின்	710
இருநிலனது	234	உண்ணலாகா	534
இரும்பொன்மலை	882	உண்ணற்கரிய	804
இருவரறியாத	1011	உண்ணாமுலை	97
இருவர்க்கெரியாகி	368	உதிரும்மயிர்	100
இருவர்க்கெரியாய	1033	உமையாளொரு	386
இருவர்தேவருந்	598	உம்பராலு	309
இருவர்நாடிய	1044	உயர்வரை	433
இருளைப்புரை	718	உய்யலுறு	984
இரைக்கும்புனல்	326	உரமன்னுயர்	725

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
உரவம்புரிபுன்	374
உரவன்புலி	799
உரவார்கலை	1102
உரவெங்கரி	405
உரிஞ்சனகூறை	829
உரித்ததுபா	1262
உருமலிகட	1328
உருவிற்றிகழு	747
உரைசேரு	1419
உரையரு	1319
உரையாதா	596
உளங்கொள்	1108
உலந்தவரெ	464
உலங்கொள்வா	823
உளையாவலி	378
உள்வேர்போல	582
உள்ளமோ	1135
உறிகொள்	578
ஊ	
ஊணாப்பலி	740
ஊரும்மரவஞ்	351
ஊருலாவுபலி	305
ஊரெதிர்ந்திடு	857
ஊர்கின்ற	1387
ஊறியார்தரு	591
ஊனடைந்த	517
ஊனத்திருணீ	406
ஊனார்தலை	782
ஊனியன்ற	28
ஊன்பாயு	1397
ஊன்றும்பிணி	637
எ	
எங்கள்பெரு	932
எடுத்தவரக்க	257
எடுத்தான்புய	1032
எடுத்தான்றரு	889
எண்டிசையா	86
எண்டிசையோரஞ்	1053
எண்டிசையோர்மகிழ	1147
எண்ணாரெயிலெய்	496
எண்ணாரெயில்	702
எண்ணார்தங்க	453
எண்ணார்தரு	134
எண்ணார்மும்	1284
எண்ணார்முத்த	1105
எண்ணிடை	855
எண்ணிறந்த	1425
எண்ணுமடி	1027
எண்ணொன்றி	394
எந்தையென்	251
எய்யாவென்றி	1047
எரித்தவன்	1218
எரியார்மழு	678
எரியொருகர	856
எருதேகொணர்	685
எழின்மலை	1214
எழுந்துலகை	1418
எறிசுறவங்	646
எறியார்கடல்	246
எனைத்தோரு	748
என்றானிம்மலை	587
ஏ	
ஏதம்வந்த	625
ஏராரெருக்கத்	968
ஏரிசையும்	1416
ஏரினார்பொழி	1436
ஏலமலிகுழ	1123
ஏவலத்தால்	477
ஏவார்சிலை	124
ஏறார்தரு	131
ஏறிலெரு	927

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
ஏறுதாங்கியூ	530
ஏறுமொன்	837
ஏனத்தெயி	909
ஏனமருப்பினொடு	1145
ஏனமன்ன	609
ஐ	
ஐயனொய்யன்	25
ஐயன்முது	1005
ஒ	
ஒடுங்கும்பிணி	634
ஒண்டுவரார்	53
ஒருக்கியவுணர்	1344
ஒருங்களிநீ	462
ஒருமைபெண்மை	5
ஒல்லையாறியு	537
ஒழுகியபுனன்	1320
ஒளியார்விட	363
ஒளிறூபுலி	104
ஒள்ளிதுள்ள	612
ஒற்றையேற	26
ஒன்றும்பல	737
ஒன்னார்புர	317
ஓ	
ஓங்கியமூவி	1157
ஓடுந்திரிபுர	953
ஓடேகலனு	338
ஓதிநன்குண	442
ஓரியல்பில்லா	811
ஓருருவாயினை	1382
க	
கங்காளர்கயிலாய	1396
கங்கையோர்வார்	1138

பாடல்	பாடல் எண்
கச்சுமொள்	838
கஞ்சத்தேனுண்	1369
கடந்தாங்கிய	89
கடமணி	845
கடலினஞ்ச	30
கடலென	202
கடிபடுகமல	445
கடியாரலங்	693
கடியார்கொன்	730
கடுக்கொள்சீ	990
கடைநெடு	1085
கடையார்கொ	689
கடையார்மாட	458
கட்டார்	688
கணைநீடெரி	349
கணையும்வரி	488
கண்கொணு	756
கண்டான்கழு	731
கண்ணமர்	1168
கண்ணன்கடிக்	956
கண்ணார்கமழ்	348
கண்ணிறைந்த	29
கண்ணிற்கன	886
கண்ணுதலான்	1121
கண்ணுமூன்று	509
கண்மேற்கண்	723
கதமிகுகரு	223
கதிமலிகளி	232
கதிரொளி	1412
கந்தங்கமழ்	483
கந்தமர்சந்து	1092
கந்தமாமலர்	1449
கந்தனைமலி	830
கயலார்தட	319
கரத்தான்	114
கரமிருபது	1355
கரமுதலிய	229
கரம்பயில்	1343

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
கரவின்றி	404
கரிகாலன	103
கரிதாகிய	375
கரிந்தாரிடு	1441
கரிபுன்புற	497
கரியகண்டனை	975
கரியமாலுஞ்	784
கரியவனான்	434
கருக்கமெல்	279
கருக்குமணி	955
கருதார்புர	1026
கருதுசம்ப	1035
கருத்தன்கடவுள்	1437
கருப்பமிகு	1423
கருவார்பொழி	786
கருவுடையா	1230
கருவைக்கழி	1255
கரைபொரு	814
கரையார்கடல்	772
கரையார்கடனா	914
கரையுலாவு	286
கலமார் கடலுள்	716
கலிகெழு	863
கலைபுனை	471
கலைமகட	1339
கலைமலியக	1348
கலைமலிவிர	1321
கலையவன்	1179
கலையார்கலி	392
கலையார்மதி	382
கலையுடை	1309
கல்லார்மதிற்	337
கல்லார்வரை	500
கல்லானிழற்	113
கல்லானிழன்மே	915
கல்லுயர்கழு	1270
கல்லுயர்மாக்	436
கல்வியாளர்	307
கவர்பூம்	683
கவிழமலை	489
கழலினோசை	17
கழலுஞ்சிலம்	1030
கழன்மல்குகா	848
கழன்மல்குபந்	35
கழுதுதுஞ்சுங்	797
கழுமலமுது	1381
கழுவார்துவ	336
கறிவளர்குன்	420
கறுத்தமனத்	1148
கறுத்தான்	322
கறைமலி	233
கறையார்மிட	165
கறையிலங்குமலர்	666
கற்றவர்கள்	1393
கற்றவர்திரு	1227
கற்றறிவெய்	1052
கற்றாங்கெரி	864
கற்றைச்சடை	1260
கனமலர்க்கொன்றைய (வாழ்கொளிபுத்தூர்)	430
கனமலர்க்கொன்றைய (பாச்சிலாச்சிராமம்)	473
கனைத்தெழுந்த	560
கன்னவிலு	673
கன்னியராடல்	36
கா	
காடடைந்த	520
காடதணி	1259
காடுநாடுங்	306
காட்டினாலு	616
காணவுள்	970
காணுமாறரி	1420
காண்டகைய	648
காதார்கன	320

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்	பாடல்	பாடல் எண்
காதிலங்கு	13	குண்டாடுகுற்	1403
காமருகண்	1101	குண்டாய்	1089
காமருவார்	469	குண்டுந்	457
காமனெரிப்	40	குண்டுபட்டமண்	1435
காமனெழில்	933	குண்டுமுற்றி	292
காமன்வேவ	996	குண்டைக்கு	493
காரடைந்த	523	குயிலார்கோல	775
காரமண்	589	குரவங்கமழ்குழலாள்	949
காரார்கொன்றை	601	குரவங்கமழ்நறு	130
காரார்வண்ண	269	குருந்தவன்	1228
காரார்வயல்	260	குரும்பையாண்	590
காரிருளுரு	833	குலவெஞ்சிலை	726
கார்கொண்ட	846	குழலார்சடை	771
காலதுகங்கை	1265	குழலினோசை	706
காலைநன்	809	குழலின்னி	189
காலையிலுண்	1172	குழையார்	584
காவினையிட்டும்	1250	குளித்துணா	1236
காழிமாநகர்	1002	குளிரும்மதி	918
காழியானய	1379	குளிர்ந்தார்	1439
கானமுஞ்சுட	844	குறிகலந்த	12
		குறியார்திரை	1107
கி		குறியில்சம	924
		குறைபடாத	510
கிடந்தானி	890	குற்றமறுத்தார்	81
கிளர்மழை	828	குற்றமின்மை	554
		குன்றம்மது	194
கீ		குன்றினுச்சி	566
கீர்த்திமிக்க	1294	**கூ**	
கு		கூரார்வாளி	694
		கூருலாவு	310
குடைமயிலி	1324	கூர்வாளர	871
குணமறிவு	226	கூவிளங்கை	1261
குணமின்றிப்	1392	கூழையங்	1464
குண்டமணர்	435	கூறுகொண்டா	565
குண்டர்சா	446	கூறைபோர்க்கு	281
குண்டர்தேரரு	1045		

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
கூனற்பிறை	151
கே	
கேடும்பிறவி	482
கேணவல்லான்	1113
கை	
கைம்மகவே	1059
கைம்மாமத	146
கையடைந்த	507
கையதுவெண்	1269
கொ	
கொக்கிறகோடு	438
கொக்கின்னிற	384
கொங்கணி	1274
கொங்குசெரு	255
கொச்சையண்ணல்	1380
கொடியார்நெடு	184
கொட்டும்பறை	926
கொட்டுவரக்க	1263
கொண்டலு	854
கொந்தண்பொழிற்	896
கொய்தவம்மல	1221
கொய்யணிநறு	1199
கொலைக்கணித்	859
கொலையார்தரு	365
கொலையார்மழு	900
கொலைவரை	1062
கொல்லுங்	931
கொல்லைமுல்லை	505
கொல்லைவிடை	256
கொழுமலரு	203
கொன்னவின்ற	553
கோ	
கோடலிரும்புறவில்	1151
கோணாகணை	872
கோதுசாற்றி	303
கோலம்முடி	160
கோவண	71
ச	
சங்கக்கயனு	390
சங்களவிய	1215
சங்கொளியி	39
சங்கொளிர்	1238
சங்கோடி	681
சடங்கொண்ட	1280
சடைதனைத்	416
சடைமுயங்	7
சடையன்	1446
சடையார்	357
சடையார்பிறை	376
சடையார்புன	108
சடையினர்மே	813
சத்தியுளாதி	1241
சந்தநன்	1239
சந்தம்மலர்	945
சந்தளறேறு	38
சமண்சாக்	369
சரிகுழலில	1243
சலசலசந்த	48
சலசலசொரி	1317
சனம்வெரு	235
சா	
சாகம்பொன்	1432
சாக்கியப்பட்	1257
சாடிக்காலன்	300
சாத்துவர்	1264
சாநாளும்	636
சாந்தங்கம	492

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
சார்ந்தவர்க்	1222
சாலமாமலர்	594
சி	
சிக்கார்	891
சிட்டமார்ந்த	533
சித்தந்தெளி	981
சிந்தையில்	1194
சிரங்கையி	411
சிலைதனை	228
சிவனுறை	1217
சிறுதேரரு	347
சிறைகொண்ட	385
சிறையாரு	654
சிறையார்வண்	789
சிறையார்வரி	901
சினமலிகரி	216
சினமலியறு	221
சீ	
சீரணிதி	437
சீரூர்	991
சீர்கெழு	1276
சீலம்மிகு	176
சு	
சுடர்மணிமா	1374
சுடுகூரெரி	937
சுடுநீறமணி	155
சுடுமணி	1271
சுரர்மாத	122
சுருதிகள்	222
சுழிந்தகங்	575
சூ	
சூடுமதி	1126
சூடுமிளந்திங்கட் (நல்லூர்)	928
சூடுமிளந்திங்கட் (வடுகூர்)	939
சூதகஞ்சேர்	713
சூலப்படையான்	329
சூலப்படையொன்	755
சூலம்படை	185
செ	
செங்கணர	802
செங்கமலப்	1099
செடிநுகருஞ்	665
செடியமண்	632
செடியார்	355
செதுவாய்	126
செந்தளிர்	1424
செந்துவராடையினான்	1141
செப்பநெஞ்	294
செம்பைச்சேர்	1366
செம்பொனின்	1160
செம்பொன்செய்	69
செம்மென்	132
செய்தவத்	21
செய்பூங்	450
செய்யக லிங்	957
செய்யதண்	1235
செய்யமேனியீர்	994
செய்யமேனிவெ	16
செய்யருகே	45
செய்யர்செய்ய	296
செருக்குவாய்	1376
செருவடை	1322
செல்வநெடு	868
செல்வமல்கிய	1458
செல்வமல்கு	1071
செறியார்கழலுஞ்	377
செறியார்தரு	171
செறிமுளரித்	42

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
செற்றவர்	52
செற்றிட்டே	1364
சே	
சேயடைந்த	525
சேவுயருந்	1383
சேற்றெழுந்	650
சோ	
சோலைமிக்க	558
சோலையில்	1134
ஞா	
ஞாலத்துயர்	874
ஞாலத்தை	412
ஞாலமுண்ட	577
ஞாழல்	503
ஞாலம் ஏழு	1015
ஞானத்திரள்	745
த	
தகரமணி	952
தக்கனது	1407
தக்கன்பெரு	916
தக்கன்றன	90
தங்குமோ	624
தங்கையிட	880
தசமுகன்	1378
தடங்கொண்ட	339
தடநிலவிய	206
தடமலிபுக	1314
தடமலிபொ	1090
தடவரைய	1245
தடுக்காலுட	139

பாடல்	பாடல் எண்
தடுக்குஅமருஞ்	676
தடுக்குடைக்	74
தடுக்கையுடக்	183
தட்டிட்டே	1368
தட்டையிடு	752
தணிநீர்	682
தணியார்மதிசெஞ்	408
தணியார்மதியர	166
தண்டமர்	467
தண்ணம்பு	936
தண்ணறு	67
தண்ணார்	1091
தண்புனலும்	536
தமிழினீர்	794
தருக்கினவர	1192
தருக்கின்	1455
தருஞ்சரத	1388
தருவளர்	1094
தரைமுதலு	1331
தரையொடு	207
தலமல்கிய	162
தலைமதி	199
தலையவன்	1231
தலையின்	387
தழல்சேர்	125
தழுக்கொள்	242
தழைமயி	1240
தழையார்	120
தளருங்	942
தளையவிழ்	49
தறிபோலா	1247
தறியார்	358
தனமணி	1246
தா	
தாணுதல்	9
தாதலர்	1130

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
தாதார்கொன் (ஒத்தூர்)	586
தாதார்கொன் (கயிலை)	738
தாமரைமே	1171
தாயவனு	1219
தாயுநீயே	543
தாரார்கொன்	704
தாரிடுகொன்	429
தார்கொள்	791
தாவியவனு	672
தாழ்ந்தகுழல்	1242
தாறிடு	1100

தி

பாடல்	பாடல் எண்
திகழ்சிவ	227
திகைநான்	1292
திக்கிற்றே	1363
திங்கட்கே	1361
திங்களம்	66
திங்களுச்சி	531
திண்ணார்	700
திருநீலமலர்	1289
திருமலர்க்	821
திருமாலடிவீழத் (நாகை)	912
திருமாலடிவீழத் (வடுகூர்)	946
திருவார்சிலை	366
திருவிலிச்சில்	1457
திருவொளி	423
திரைகள்	46
திரைபொரு	1197
திரையார்புனலோ	895
திரையார்புனல்	361

தீ

பாடல்	பாடல் எண்
தீதிலாமலை	1234
தீயராய	550

து

பாடல்	பாடல் எண்
துஞ்சவரு	481
துஞ்சுநாள்	440
துஞ்சும்போ	541
துடிகளோடு	299
துணியாரு	941
துணிவளர்	470
துணிவுடை	1351
துணையல்	1115
துவராடை	391
துவரும்புரி	940
துவருறுவிரி	1313
துவர்சேர்	686
துளங்குஞ்	498
துளங்குந்	380
துளிவண்தேன்	876
துள்ளுமிரு	989
துறைபல	1275
துறைமல்	1061
துறையவன்	1232
துனியுறு	1273
துன்பந்	983
துன்னலினா	439
துன்னார்	1050

தூ

பாடல்	பாடல் எண்
தூசுபோர்த்து	599
தூர்த்தனைச்	1043
தூவணநீறு	1466

தெ

பாடல்	பாடல் எண்
தெங்குநீண்ட	514
தெரிந்திலங்கு	288
தென்றிலரக்	977
தென்னிலங்கை	19

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
தே	
தேக்குந்	344
தேங்கமழ்	849
தேடிக்காணார்	751
தேமருவார்	1465
தேமாங்கனி	98
தேயநின்றான்	1120
தேரரமணரும்	1012
தேரரமணரை	979
தேரரக்கன்	708
தேரார்தரு	181
தேவராயு	570
தேவாவரனே	1051
தேவியோர்கூறி	79
தேனகத்தார்	1114
தேனமர்தரு	1334
தேனயம்பாடு	1068
தேனார்மத	894
தேனினுமினி	832
தேனுமாயமுது	824
தேனைவென்ற	252
தேன்மலர்	1248
தொ	
தொங்கலு	659
தொடுத்தார்	739
தொடையார்	592
தொண்டர்	409
தொழிலான்	323
தொழுமனத்	980
தொழுவாரி	302
தோ	
தோடணிகு	847
தோடணிம்மலர்	1431
தோடுடையகா	527
தோடுடையசெவி	1
தோடுடையானொரு	1112
தோடுடையான்	663
தோடொர்காதினன்	1025
தோட்டீரே	583
தோலினாலு	617
தோலுடை	47
தோலுநூலு	1430
தோலுந்தம்	1451
தோலொடு	57
தோற்றவன்	1186
ந	
நகலார்	680
நகுவெண்	964
நகையார்	1410
நடைமரு	1304
நதியதன்	441
நம்பனை	677
நயர்காழி	414
நரையார்விடை	1443
நலங்கொள்கா	249
நலமலிஞான	1303
நலமலிதரு	212
நலமாகியஞான	370
நலமார்மறை	925
நலமிகுதிரு	231
நலனாயபலி	1287
நலிதருதரை	1332
நல்லகேள்வி	282
நல்லபுனற்	1142
நல்லம்மலர்	192
நல்லாரறஞ்	913
நல்லாரும்	602
நல்லார்தீமேவு	875
நளிர்காழி	381

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
நறவநிறை	798
நறவமார்	976
நறவார் புகலி	271
நறுநீருகுங்	1447
நறைகொண்ட	656
நறைமலி	220
நற்பதங்கண்	653
நனிவளர்	1191
நன்றாநான்	588
நன்றுடை	1058
நன்றுதீதென்	695
நன்றுநகு	669
நா	
நாகத்தணை	923
நாகபணந்	37
நாகமும்வான்	1165
நாகம்வைத்த	20
நாடவல்ல	291
நாணமுடை	675
நாணாதுடை	1067
நாணாரமணர்	785
நாவொடுகூடி	479
நாதனென்	971
நாமருகேள்	58
நாலுங்குலைக்	64
நாளாயபோ	667
நாறவிண்ட	275
நாற்றமலர்மிசை	1256
நாற்றமலர்மேல்	247
நாற்றமாமலரா	1456
நாற்றமிக்க	552
நானாவித	91
நி	
நித்திலன்	1347
நிலனொடு	451

பாடல்	பாடல் எண்
நிழலார்சோலை	245
நிழலார்வயல்	158
நிழலான்மலி	687
நிழலினார்	628
நிறையவன்	1190
நிறைவு	1040
நிறைவெண்கொ	867
நினைப்பெனு	1278
நினைவார் நினை	801
நின்றுணுஞ் சமணும்	413
நின்றுண்சமணர்	774
நின்றுண்சமண்	1034
நின்றுமலர்தூவி	1003
நின்றுமுது	1013
நின்றுலா	1400
நின்னடியே	561
நீ	
நீடலர்கொன்றையொடு (கொடிமாடச்)	1158
நீடலர்கொன்றையொடு (பாதாளீச்சரம்)	1164
நீடலர்சோதி	1080
நீடவல்லநிமிர்	308
நீடவல்லவார்	569
நீடிருஞ்சடை	836
நீடும்புனற்	353
நீண்டசடை	770
நீதிபேணு	1038
நீதியறியாதா	172
நீத்தநெறி	929
நீந்தலாகா	788
நீரகலந்தரு	461
நீரடைந்த	506
நீரார்முடி	769
நீரிடங்கொண்	1082
நீரின்மல்	15

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
நீரின்மிசை	1149
நீருளான்	826
நீரொடுங்கு	544
நீரோடு	1398
நீர்பரந்த	3
நீலநெய்த	1075
நீலமாமிடற்	1014
நீறடைந்த	516
நீறணிமேனியனாய்	1139
நீறணிமேனியனீ	1177
நீறாரகல	759
நீறார்திரு	354
நீறுசேர்வ	1448
நீறுடையார்	82
நீறுபூசினீர்	995
நீறுமெய்பூசி	475
நீறேறியதிரு	180
நு	
நுகரார	156
நுணங்குமறை	487
நுண்ணியான்	661
நூ	
நூலடைந்த	515
நெ	
நெடியர்சிறி	943
நெடியானான்	501
நெடியான்நீடா	806
நெடியான்பிரம	773
நெய்தலாம்பல்	278
நெய்தவழ்	56
நெய்யணிமூவி	1146
நெருப்புரு	1266

பாடல்	பாடல் எண்
நெறிநீர்மை	179
நெறியில்வரு	193
நே	
நேருமவர்க்	1463
நொ	
நொந்தசுடலை	758
நோ	
நோதல்செய்	1203
நோயும்பிணி	642
நோய்புல்கு	1272
நோற்றலா	839
ப	
பகடூர்பசி	643
பகலுமிரவும்	490
பககம்வாழை	1072
பங்கமேறு	712
பங்கயங்கண்	285
படரொளி	1349
படவரவே	1201
படிநோன்பவை	947
படைப்புந்நிலை	88
படையார்தரு	959
படையிலங்கு	24
படையுடைமழுவினன்	1187
பட்டைத்து	873
பணிந்தவ	1293
பணியுடை	73
பணிவாயு	452
பணைமுலையு	1188
பண்டாழ்	898
பண்டேழு	116
பண்ணிலாவு	14

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
பண்ணினார்மறை	627
பண்ணும்பத	111
பண்ணுறு	419
பண்பழனக்	647
பதைத்தெழு	1223
பத்தராயினீர்	1039
பத்தரேத்தும்	711
பத்தரோடு	23
பத்தர்கணம்	43
பத்தர்மன்	611
பத்திப்பேர்	1365
பத்துத்தலையோனைக்	1010
பந்தத்தால்	1359
பந்தமுடைய	800
பந்தவிடை	1029
பந்தார்விரலு	178
பயிலும்மறை	884
பரக்கினார்	620
பரக்குந்	1054
பரக்கும்பெருமை	761
பரிந்தவன்	1176
பருமாமதகரி	144
பலவிலமிடு	850
பலவும்பய	332
பல்லடைந்த	504
பல்லியல்	1093
பல்லிலோடு	551
பல்வீழ்ந்து	641
பவளவண்ணப்	287
பழகுந்தொண்டர்	1037
பழுதிலகட	219
பறப்பைப்	865
பறிகொடலை	1001
பறையின்	187
பறையுஞ்	486
பறையுநம்	626
பறையும்பழி	153
பற்றியொரு	191

பாடல்	பாடல் எண்
பற்றுமாகி	571
பனியார்	364
பன்மலர்வை	1173
பன்றிக்கோலம்	1367
பன்னீர்மை	639
பா	
பாகமுந்	70
பாங்கிலா	816
பாங்கினல்	563
பாங்குநல்ல	274
பாசமறுப்	986
பாடகமெல்	65
பாடலனான்	1133
பாடன்முழவும்	59
பாடுடைக்	818
பாடுவாருக்	573
பாதம்பல	499
பாந்தளார்	974
பாராரே	649
பாரார்விடை	403
பாரிதனை	1386
பாரும்விண்	289
பாரோர்தொழ	906
பார்த்தவன்	1220
பார்மலிந்	447
பாலமதி	484
பாலனநீ	1154
பாலனாம்	822
பாலினானறு	660
பாலுந்நறு	938
பாலுநெய்	295
பாலுந்துறு	163
பாறணி	1229
பானாறு	652

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
பி	
பிச்சக்குடை	935
பிச்சைக்கே	1360
பிடியதனுரு	1330
பிணிகொளா	297
பிணிகொள்	997
பிணிநீர	635
பிணிபடு	196
பிணியும்	951
பிண்டமறுப்பீர்	985
பிண்டியேன்று	763
பிரமபுரத்	1370
பிரமனுந்	1434
பிறந்தபிறவி	1258
பிறப்பாதி	1440
பிறவியறுப்	982
பிறைகொள்	765
பிறைபெற்ற	1285
பிறையணி	195
பிறையார்சடை	1031
பிறையுடை	51
பிறையுநெடு	944
பிறையும்புன	724
பிறையும்மரவும்முற	352
பிறையுமரவும்புன	298
பின்றாழ்சடை	768
பின்னியதாழ்	85
பின்னுசடை	803
பீ	
பீரடைந்த	521
பீலிம்மயில்	99
பு	
புகழ்மகடுணை	1341

பாடல்	பாடல் எண்
புடைபுல்கு	1277
புண்டரிகத்தவன்	1372
புண்ணியர்பூதி	76
புத்தருகர்	967
புத்தரொடமணர்	1357
புத்தரோடுசமணர்	513
புத்தரோடுபுன்	557
புத்தரோடுபொ	10
புத்தர்கடத்	1468
புந்தியர்	1358
புந்தியொன்றி	27
புயம்பல	860
புரமெரித்	508
புரிகொள்	734
புரிசடை	542
புலனைந்து	1394
புல்கவல்ல	529
புவம்வளி	217
புவிமுதலைம்	1389
புள்வாய்	459
புற்றில்வாழு	22
புனலிலங்	630
புனைதல்	372
புனையழலோ	60
புனையும்விரி	904
பூ	
பூசுரர்சேர்	1375
பூணற்பொறி	241
பூணெடு	428
பூண்டங்கு	61
பூண்டவ்வரை	188
பூதமும்பல்	417
பூதம்பாடப்	614
பூத்தேர்ந்தா	580
பூந்தராய்ப்	1046
பூமகடன்	1391

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்	பாடல்	பாடல் எண்
பூவார்குழ	345	பை	
பூவார்கொன்	250		
பூவார்பொய்	780	பைம்மாநா	448
பூவார்பொற்	1413	பையாரரவு	267
பூவார்மலர்	743	பையாரும்	593
பூவியல்புரி	1326	பையுடைய	1116
பூவினில்	68	பைவாயரவம்	696
பூவுந்திங்கள்	604	பொ	
பெ		பொங்கார்	766
		பொங்கிவரும்	78
பெண்தான்	240	பொங்கிள	476
பெண்டிர்	539	பொங்குநடை	1460
பெண்ணாணெ	905	பொடிகள்பூசித்	1070
பெண்ணார்	922	பொடிகொளு	733
பெண்ணினல்	1233	பொடிபுல்கு	1202
பெண்ணினைப்	810	பொடியார்	1288
பெண்ணோர்பாகமு	301	பொடியுடை	426
பெயலார்	679	பொதியிலா	546
பெரியமேரு	31	பொந்தின்னிடை	173
பெரியவன்சிறிய	1225	பொய்யாமொழி	728
பெரியவன்பெண்	1193	பொய்யாவேத	698
பெருகிய	205	பொரிபடு	1307
பெருகும்புன	102	பொருகடல்	1325
பெருக்கப்	259	பொருவாரெ	137
பெருக்கெண்	1098	பொருளார்	182
பெருந்தடங்	1384	பொழிலவன்	1189
பெருந்தண்சா	1078	பொழிலார்	177
பெருமைகட	851	பொறியரவ	1417
பெற்றமாசு	248	பொன்றிகழா	1156
		பொன்றிகழ்காவிரி	1206
		பொன்றிரண்	831
பே		பொன்னங்	455
		பொன்னடி	1377
பேயடைந்த	519	பொன்னார்	808
பேயாயின	154	பொன்னியல்கொன்றை	1084
பேய்பலவு	1167	பொன்னியல்சீ	1150
		பொன்னியறா	54

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்	பாடல்	பாடல் எண்
பொன்னியன்மா	1057	மதியொன்றிய	383
பொன்னெடு	1469	மத்தக்களிறா	150
		மத்தநன்	1159
போ		மத்தமதக்	1144
		மத்தம்மலி	161
போகமார்த்த	526	மத்தாவரை	119
போதார்	779	மந்தம்முழவம்	1060
போதியர்பிண்டிய	1161	மயங்குமா	576
போதியாரும்	720	மயறீர்மை	638
போதுபொன் திகழ்	606	மயிலார்சா	243
போதும்பொன்	1076	மயில்புல்கு	142
போரார்கட	742	மரவஞ்சிலை	101
போரார்மத	692	மரவத்தொடு	147
போர்மலி	463	மருதிடைநட	1312
போர்மிகு	655	மருந்தவன்	1185
போழம்பல	491	மருந்தனமுதன்	1438
		மருவலர்	209
ம		மருவார்குழ	261
		மருவார்மதில்	691
மகரத்தாடு	714	மருவியவல்	1279
மங்கைபங்	998	மருவியெங்	280
மங்கையங்கோர்	703	மருளுடை	1302
மங்கையோர்கூறு	1128	மருள்செய்	379
மசங்கற்சமண்	117	மலைபலவளர்	218
மஞ்சைப்போழ்	744	மலைபுரிந்த	562
மஞ்சோங்கு	729	மலைமகடனை	208
மடைச்சுர	852	மலைமகண்	1209
மடையில்	239	மலைமல்கு	1065
மணியார்திகழ்	919	மலையதனாரு	290
மணியார்முது	1007	மலையார்சார	1073
மண்டான்	719	மலையார்தரு	175
மண்டையிற்	1216	மலையான்மக	265
மண்ணார்முழ	644	மலையார்மாட	1110
மண்ணுதல்	1205	மலையார்மங்	778
மண்ணோர்	92	மலையான்மகளஞ்ச	93
மண்புனலன	1210	மலையான்மகள்கண	164
மண்பொடி	421	மலையினார்	820
மதியால்	888	மலையெடுத்த	511

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
மல்கிய	1170
மல்லன்மும்	618
மழுவாளேந்தி	264
மழைநுழை	1305
மழையார்சாரல்	1106
மறக்குமன	1254
மறந்தான்கரு	750
மறிதிரை	1316
மறுத்தவர்	1181
மறுமாணுரு	1095
மறைகலந்த	6
மறையவனுலகவன்மதி (திருவிடைமருதூர்)	1311
மறையவனுலகவன்மாய (திருக்கடைமுடி)	1200
மறையவன்மதி (சிவபுரம்)	1352
மரையானெடு	966
மறையின்னி	757
மறையுடையாய்	559
மறையுமோது	1453
மற்றிணை	1253
மனமார்தரு	174
மனமுலாமடி	825
மன்மதனெ	1346
மன்னானவ	168
மன்னிமாலொ	600
மன்னியவலி	1336
மன்னியூரி	1036
மா	
மாகந்தோய்	605
மாகரஞ்சேர்	717
மாசடைந்த	524
மாசாருடம்	270
மாசுமெய்யர்	535
மாசூர்வடி	902
மாசேறிய	95

பாடல்	பாடல் எண்
மாடமர்சன	1340
மாடமல்கு	293
மாடவீதிமன்	697
மாடவீதிவரு	1079
மாடார்மலர்க்	333
மாடேயோ	254
மாணாவென்றி	253
மாண்டார்	324
மாதர்மடப்பிடி	1459
மாதொருபா	1048
மாந்தர்தம்	474
மாலாயிரங்	887
மாலினுக்கு	443
மாலினோடு	512
மாலுமயனும்	84
மாலும்பிரம	879
மாவடைந்த	522
மாவினுரி	735
மாறிலவுணர்	1143
மாறிலாமணி	595
மாறிலாமல	621
மாறிலாமாதொ	1244
மாறெதிர்	1212
மானாரரவு	136
மானிடமார்	465
மி	
மிக்கார்	585
மிளிரும்மர	899
மிளிரும்மணி	143
மின்னியலு	1426
மின்னியல்செஞ்	1163
மீ	
மீத்திகழண்	1055

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
மு	
முகில்சேர்	129
முடிகையி	50
முடிகொள்	767
முடியார்தரு	169
முடியார்மன்	777
முட்டாமுது	148
முதிருறு	201
முதிர்சடை	1353
முத்தியர்	77
முந்திநின்ற	283
முந்தியிவ்வையம்	1088
மந்நீர்சூழ்	736
முருகுவிரி	950
முலைத்தட	1251
முலையாழ்கெழுவ	684
முழங்கொலி	1415
முளிவெள்	792
முள்ளின்மே	1282
முற்றலாமையிள	2
முற்றாததொர்	346
முற்றுஞ்சடை	948
முன்பனை	1298
முன்றில்	651
முன்னிற்ப	115
முன்னுயிர்த்	858
முன்னொருகா	1097
மூ	
மூத்துவராடை	468
மூப்பூர்	781
மூரல்வெண்	619
மூரன்முறு	190
மூவராய	284
மூவருமாகி	449
மூவாவண்	793

பாடல்	பாடல் எண்
மெ	
மெய்த்தன்னுறும்	167
மெய்த்துலாவு	315
மெய்த்தாறு	1405
மெய்யராகி	540
மெய்யின்மாசர்	314
மே	
மேகத்திடி	145
மேலதுநான்	478
மேலோடிவிசும்	1402
மேனியிற்	1414
மேனின்றிழி	892
மை	
மைசேர்	705
மைச்செறி	841
மைத்தகுமேனி	1087
மைந்தணி	1127
மைம்மரு	34
மைம்மலர்க்	834
மைம்மாநீல	1074
மையாடிய	152
மையாரொண்	866
மையார்நிற	334
மையினார்மலர்	662
மொ	
மொய்சேர்	1103
மொய்த்து	579
மொய்யார்	1008
மொய்வல்ல	715

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
மொழிசூழ்	907
வ	
வசையறுமலர்	238
வசையறுவலி	211
வசைவிற்கொ	135
வஞ்சமனத்	671
வடந்திகழ்	459
வடிகொள்வாவி	1111
வடிவுடைமலை	1354
வணங்கிம்	357
வண்டணைகொன்	812
வண்டரங்க	645
வண்டர்மும்	629
வண்டார்	87
வண்டுவைகு	33
வண்ணநன்	1182
வண்ணமல	934
வண்ணவெண்	1429
வந்தமணலா	670
வந்தித்திருக்கும்	749
வந்தியோடு	721
வம்பார்குன்	1069
வம்மினடி	110
வயமுண்டவ	94
வரந்திகழு	1428
வரந்தையான்	658
வரமுன்னி	401
வரமொன்றி	388
வரிந்தவெஞ்	1295
வரியாயமல	1290
வரியார்	762
வரியுறு	197
வரிவளரவி	842
வருநலம்	1308
வருமாந்	869

பாடல்	பாடல் எண்
வரைதிரிதர	1350
வரைபொருதி	200
வரையார்சங்	263
வரையார்திர	783
வரையொன்ற	389
வலங்கொள்	911
வலமார்படை	321
வலியின்மதி	318
வல்லிநுண்	815
வல்லியந்தோலு	1140
வழங்குதிங்கள்	574
வளமென	1310
வளம்பட்ட	138
வளர்பூங்	1083
வளைக்குமெயிற்றின்	1444
வற்றாநதி	1049
வன்புற்றிள	343
வன்றிறல்	1299
வன்னிகொன்றை	547
வா	
வாசங்கமழ்காழி	881
வாசங்கமழ்மாமலர்	342
வாசம்மலர்	920
வாசிதீர	992
வாடல்வெண்டலைசூடி	607
வாடாவிரி	330
வாணிலாச்	973
வாணிலாமதி	1433
வாதுசெய்	840
வாதைப்படு	883
வாய்ந்தவல்ல	1296
வாரார்கொங் (குடந்தை)	776
வாரார்கொங் (செம்பொன்)	262
வாரிமாகம்	572
வாருறுகொங்	1155
வாருறுமென்	1462
வாருறுவன	1174

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்
வாரேற்ற	657
வார்மலி	1467
வானமர்வீளர	466
வானத்துயர்	754
வானமர்மதிபுல்கு	1297
வானமர்மதியொடு	1180
வானார்திங்கள்	268
வானார்சோதி	787
வானிற்பொலி	141
வி	
விடங்கொணா	556
விடத்தார்	356
விடலேறு	1395
விடைசேர்	328
விடைத்தவல் (பாம்புரம்)	444
விடைத்தவல் (ஐயாறு)	1300
விடையமர்ந்து	549
விடையார்கொடியுடை	157
விடையான்	1009
விடையினர்	1318
விடையுமேறு	1454
விண்டமாம்	622
விண்டலர்பொழி	1371
விண்டலர்மத்த	1169
விண்டானதிர	805
விண்ணவருக்	1096
விண்ணவர்தம்	1301
விண்ணார்திங்கட் (கானூர்)	790
விண்ணார்திங்கள் (பாற்றுறை)	603
விண்ணியன்மா	425
விண்ணியல்வி	819
விண்ணிழி	44
விண்ணுலகாள்	1252
விண்ணுலாமதியஞ்	835
விண்ணுறு	1461
விண்ணோர்	961
விண்மகிழ்ந்	4
விதியாய்	316
வியரிலங்கு	8
விரவிநீறுமெய்	1452
விரிதருபுலி	1315
விரியார்	1028
விருதுபகரு	741
விருத்தனாகிப்	564
விரையாலு	1286
விலங்கலொன்று (சோபுரம்)	555
விலங்கலொன்றே (கழுமலம்)	861
வில்லியநுண்	1129
விழவாரொ	764
விழுநீர்	327
விழையாருள்	454
விளங்கும்பி	140
விளங்கொண்	1445
வீ	
வீறுநன்	1211
வெ	
வெங்கணானை	548
வெங்கள்விம்முவெறி	272
வெஞ்சுடராடு	472
வெஞ்சுடர்த்	532
வெஞ்சொற்ற	568
வெடிகொள்	244
வெண்கோவ	340
வெண்செநெல்	1281
வெண்டலைமா	83
வெண்ணிறத்த	277
வெந்தநீற்றி	610

Koviloor Digital Library

பாடல்	பாடல் எண்	பாடல்	பாடல் எண்
வெந்தலாய	707	வெற்றரையுழல்	1183
வெந்தவெண்ணீறணி	1152	**வே**	
வெந்தவெண்பொடி	1427	வேதத்தொலி	96
வெந்துவர்	1131	வேதமோதி	722
வெந்துறு	1136	வேதமோர்	1132
வெம்புந்திய	107	வேதர்வேத	1450
வெம்மைமிகு	1408	வேந்தாகி	1399
வெய்யதண்	1063	வேயுயர்	1064
வெய்யவினைதீ	987	வேய்முத்	732
வெரிநீர்கொ	903	வேரிமிகு	1406
வெவ்வமேனி	608	வேருலாம்	827
வெள்ளத்தா	631	வேர்வந்து	106
வெள்ளமது	1125	வேழவெண்	567
வெள்ளமார்ந்து	18	வேனல்விம்மு	273
வெள்ளமெல்	1117	**வை**	
வெறியார்மலர்த்	335	வையகநீர்	1056

●●●●●●●●●

திருமுறை கண்ட புராணம்

சேடர்மலி காழிநகர் வேந்தர் தாமுந்
தேவர்புகழ் திருத்தோணிச் சிவனார் பங்கிற்
பீடுடைய வுமைமுலைப்பா லருளா லுண்டு
பிஞ்ஞகனைச் சினவிடைமேற் பெருகக் கண்டு
தோடுடைய செவியன்முதற் கல்லூ ரென்னுந்
தொடைமுடிவாப் பரசமயத் தொகைகண் மாளப்
பாடினார் பதிகங்கள் பாவி லொன்றாம்
பதினாறா யிரமுளதாப் பகரு மன்றே.

- உமாபதி சிவசாரியார்

Koviloor Digital Library

முதல் திருமுறை

அருஞ்சொல்லகராதி

அ

அக்காலத்தில் புரக்கும் வேந்தன் 97-8
அக்குமாலை 73-10
அகநெறி 123-8
அகரமுதலான் 88-5
அகலம் - மார்பு 77-1
அகில் - மணப்பொருள் 78-8
அங்கங்கே 132-4
அங்கம் - உடல் 90-4
அங்கி 131-3
அங்கை 15-7
அசுரர் 20-1
அட்டம் 69-10
அடர்வு 125-8
அடல்அசுரர் 20-1
அடல்வந்தவான்வர் 129-8
அடி 13-8
அடிஞானம் 87-11
அடியார் அடியார் 35-4
அண்டத்தமரர் 71-9
அண்டர்கள் 53-4, 9
அண்டவாணர் 65-5
அணிமுடி 115-9
அணியன் 3-3
அணியார் விரல் 70-8
அத்தமண் 39-10
அத்தியகை 115-4
அந்தக்கரணம் 128
அந்தணன் 107-1, 40-6
அந்தரஞானம் 104-10
அம்புதம் - மேகம் 16-1
அமரர் 13-10
அயம் 89-6
அரக்கர் 129-8
அரக்கும் 65-8
அரங்கு - சபை 24-9
அரப்பள்ளியான் 98-9
அரவக்குழை 9-3
அரவஞ்சேர்சடை 133-9
அரிவை - பெண் 25-1
அருண்மாலைத்தமிழ் 3-11
அருள் 38-10
அருள்கள் 28-9
அரை 46-3
அல்குல் 111-6
அல்லவிடம் 24-7
அலங்கல் - மாலை 20-8
அவயவம் 22-2
அவலம் - துன்பம் 60-11
அவரவர் 126-4
அவிர்சடை 19-2, 52-4, 78-2
அவைஅவை 21-1
அழல்மேனி 29-3
அழலுருவன் 20-3
அழிபாடிலராய் 3
அளகைக்கிறை 131-8
அளை - புற்று 13-6
அறம், பொருள்,இன்பம்,

எண்களுள் முன்னது பதிகத்தையும், பின்னது பாடலையும் குறிக்கும்.

Koviloor Digital Library

வீடு 53-6

ஆ

ஆகம் 42-8
ஆகம்
(அகம்) - உள்ளம் 5-9
ஆச்சியப் பேய்கள் 119-10
ஆடகசாலை 12-7
ஆடகம் - பொன் 18-1
ஆடரவாட 77-6
ஆதர்கள் அருகர் 68-10
ஆதியான் 114-8
ஆந்தை விழி 44-5
ஆமாம்பிணை 10-2, 69-1
ஆய்த்து 129-8
ஆய்ந்தபாடல் 96-11
ஆயம் ஆதாயம் 114-5
ஆயோ 69-2
ஆரம்பர் 10-10
ஆரமுதம் அமரர்க்கருளி 39-8
ஆரா அருந்தமிழ் 89-11
ஆராதசொன்மாலைகள் 37-11
ஆரார் 84-3
ஆலி - ஆலங்கட்டி 27-3
ஆவண வீதி 7-7
ஆவா 32-8, 89-8
ஆறு 10-9
ஆனார் மீனாரும் 66-1

இ

இசங்கும் 11-10
இசை 125
இசைசெய்ததமிழ் 121
இசை இசை 126-11
இடியார் முழவு 74-9
இடும்பண் 17-1
இடுமணி எழில் 118-1
இடை 104-8
இடையிடை 8-5
இந்திரன் 11
இமையவர்கள் 7-11
இமையோர்கள் 2-2
இயங்குவோர் 53-8
இயல்இசைமலிதமிழ் 22
இரண்டினர் உருவம் 79-3
இரணியாக்கன் 21-7
இரவில் திரிவோர் 81-8
இருக்குமந்திரம் 62-3
இருத்லைப் போகம் 116-10
இருவளி ஒருங்கிய
வானோர் 128
இலைபுனைவேல் 44-2
இளமான் கையின்றி
இருந்தபிரான் 4-9
இறை 2-6
இறைபடாதமுலை 47-7
இன்சாயல்தெங்கு 130-8
இன்பம் இன்பமே 80-4

ஈ

ஈசன்கழல் சேர்பாடல் 70
ஈமவுனம் 4-7
ஈன்கள் 102-3

உ

உகிர் 9-8
உகிர் - நகம் 26-8
உச்சி 77-2
உடம்பு 100-3
உடல் 20-10
உடலம் 39-6
உண்பு - புசிப்பு 112-4
உந்தி 7-5
உம்ம 54-1

Koviloor Digital Library

உமையவள்மேவிய உரு 123-1
உயர் பொருளாய் 13-5
உரம் - மார்பு 13-8
உரவம் - வன்மை 77-4
உருவார் செஞ்சொல் மாலை 72
உரை 47
உலங்கொள் வினை 23-11
உலம் - மலை 54-11
உள்ளத்தெளிவு 73-6

ஊ

ஊரிடுபிச்சை 40-3
ஊர்தி 85-2
ஊரா ஊரா 126-2
ஊரூர் 37-11
ஊரைய மிடுபலி உண்ணி 40-9
ஊழி 2-8
ஊற்றம் 51-5
ஊறல் வாழ்க்கை 26-4
ஊறி - கடல் 123-1
ஊனிகள் 131-10

எ

எச்சன் 131-3
எண்டோள் 72-1
எண்ணிற்சிறந்த இமையோர் 74-7
எல்லி - இரவு 17-8
எவ்வம் - துன்பம் 126-8
எழில் மலரோன் சிரம் 4-2
எழிலார் புரிபுன்சடை 25-2
என் உள்ளம் கவர் கள்வன் 1-1
என்றென்று 8-1

ஏ

ஏ - அம்பு 32-6
ஏகவடம் 44-7
ஏசல் 92-1
ஏதம் - குற்றம் 26-11
ஏமமனம் 86-8
ஏவலம் 42-6, 44-8
ஏழை - பெண் 99-6
ஏறார்கொடி 70-6

ஐ

ஐந்தலை நாகரையான் 63-10
ஐம்புலன் 128
ஐயம் - உண்டி 40-3,7

ஒ

ஒசித்த 52-9
ஒசித்தல் 118-6
ஒண்சொலின் 118
ஒண்பொருள் 121-7
ஒண்மாலை 30
ஒப்பர் ஒப்பர் 28-1
ஒலிசலசல 22-1
ஒளிமழுவாள் 54-1
ஒன்னார் - பகைவர் 122-8

ஓ

ஓரகிலார் 105-10
ஓருருவாயினை 128
ஓவுளார் 61-6

க

கட்டுரை 127-12
கடைகடை 122-4
கண் (ஞானக்கண்) 18-7
கண்டங்கள் 8-11
கண்டம்கறுத்து 71-5
கண்டல் நீர்முள்ளி 8-11

Koviloor Digital Library

கண்டுகண்டே 50-3
கண்ணாடி உழுந்துருளும் அளவை 132-3
கண்ணார் நீறு 119-3
கண்ணிறைந்த விழி 3-7
கண்மேற்கண் 69-2
கணகண 21-7
கணையல் 103-4
கதம் 50-7
கதலிக்கனி 9-5
கது (வெடிப்பு) 32-8
கந்துகம் - பந்து 9-3
கபாலம் ஏந்துங்கை 71-1
கமலமாமதி 77-10
கயம் - நீர்நிலை 26-9
கயன் 36-9
கரம் எட்டுடையான் 3-2
கரவில் தடக்கையர் 81-8
கரியின உரிபோர்த்து 3-6
கரிவளர் தருகழல் 78-1
கருக்கம் - இருள் 60-8, 26-8
கருமால் கடல் 84-3
கருவார் இடும்பை 72-11
கலகல 5-5
கலவம் - மயில்தோகை 69-6
கலவைக்கஞ்சி 67-10
கலைகள் 85
கலைத்துறைதாமே போல்வார்மொழி கலைமலிதமிழிவை 120
கவலை பிணி இல்லார் 87-1
கவுணியர்குலபதி 112
கழை - மூங்கில் 27-3
கள்வர் வெள்ளர்போல் 73-10
கள்ளம் - கபடம் 113-1
களகம் 102-3
களம் - கழுத்து 21-9
கற்றகேள்வி ஞான மானகாரணம் 51-7
கறைமிடற்றான் 40-1
கனகி 22-4
கனல் தரு தூமதிகண்ணி 44-4

கா

காது 30-5
காமனை விடுவித்தான் 108-9
காவு - வஞ்சனை 83-1
காரார் காரார் 126-2
கானகத்தான் 103-3
கானல் 2-7

கி

கிடங்கு - அகழி 131-1
கிரந்தை 61-3
கிளைகிளைக்கும் 52-1, 62-1
கிறி - பொய் 25-2

கு

குட்டாச்சுனை 14-8
குடிமைத்தொழில் 2-5
குண்டாக்கர் 114-10
குயிலார்சோலை 5
குரவம் - குராமலர் 13-1
குரைகழல் 103-6
குலக்கொழுந்து 50-4
குழல் 115-6
குற்றமில் செந்தமிழ் 113
குற்றுடுக்கை 130-10
குறள் 2-6, 19-4, 103-2
குன்றாத்தமிழ் 18
குனித்தல் - விளைத்தல் 5-6

கூ

கூகை (கோட்டான்) 36-5

Koviloor Digital Library

கூத்தாடும் குணம் உடையான் 132-7
கூத்துகந்த பேர் 187-7
கூதல்மாரி 99-8
கூழையங்கோதை 136-6
கூற்றுதைத்தகால் 76-3
கூறன் 55-5

கெ

கெண்டல் - கிளர்த்தல் 30-3
கெழுவுதல்-பொருந்துதல் 33-3

கே

கேட்பு 59-6
கேடில் கழல் 83-7
கேடிலாப் பொன்னடி 52-9
கேணவல்லான் 103-2
கேழல் - பன்றி 103-11

கை

கைதவம் 5-10
கை - தோணிபுரத்தவன் 127-5
கைம்மாவேழம் 99-6
கையதுபேரி 117-3

கொ

கொக்கின் இறகு 36-3
கொங்கை 46-2
கொந்து - பூங்கொத்து 102-3
கொள்வீர் அல்குலோர் கோவணம் 54-3

கோ

கோகிலம் 101-2
கோது - குற்றம் 64-10
கோலமிக்க மாலை 511

ச

சங்களவியகையன் 112-9
சங்கொலி 7-9
சடைதன்மேல் 35-2
சண்பைக்கோன் சமைத்தமொழிகள் 126
சதிர்வு - அழகு, பெருமை 2-7
சந்தம் இவை 88
சந்தம் மலிபாடல் 16
சந்து 78-8
சம்பிரசம் 102-6
சமிதை 132-9
சமைவு 132-9
சயசய 20-9
சயத்துதிகள் 40-8
சரக்கு 79-9
சலசல 5-5
சழித்தல் - சப்பளித்தல் 120-9

சா

சாடுதல் - கொல்லுதல் 89-1
சாத்திரத்தார் 118-10
சாதிகீத வர்த்தமானர் 66-10
சாந்தம் -கலவை 118-7
சாய்தல் - கடத்தல் 110-11
சாவம் 42-2

சி

சிட்டம் வன்மை 112-8
சிட்டு 63-11
சித்தர் 66-10, 7-4
சித்தன் 29-11
சிரத்தை 61-3
சிரம் 13-8
சிலம்பன் 63-7

Koviloor Digital Library

சிவனடிபரவிய பிணைமொழி 19
சிறுத்தொண்டன் 61-10
சிறுமிமார்கள் 131-7
சிறுமையண் 121-3

சு

சுடலையினாடுவர் 78-6
சுதை - சுண்ணாம்பு 19-2
சுரர் - தேவர் 12-4
சுருதி - வேதம் 26-8
சுலவல் - சுற்றுதல் 22-1

சூ

சூடகம் - கைவளை 18-1

செ

செங்குன்றூர் 107
செதுமதி 21-10
செந்தமிழ் 41
செந்தமிழோர் 6-9
செம்மாந்து 42-1
செம்மாப்பு 94-1
செம்மான் 87-10
செம்மை 5-4
செயிலார் பொய்கை 71-11
செருந்தி - மரம் 56-6
செவி 1-1
செற்றமில் சீரானை 88-1
சென்றடையாததிரு 98-1
சென்னி 23-2

சே

சேடர் - பெரியோர் 60-11
சேணார் 80-9
சேணின்றவர் 84-5
சேர்வார் நீள்கயிலை 126-1
சேரேசேரே 126-3
சேவுயரும் திண்கொடி 129-1

சை

சைவவேடம் 53-6
சொற்பத்து 73

ஞா

ஞானமிக்க தண்டமிழ் 51
ஞாலமுண்ட மால் 53
ஞானசம்பந்தன் சமைத்த பாடல் 131
ஞானத்தமிழ் 117-12

த

தக்கைகொள் பொக்கணம் 75-5
தகரம் 66-3, 88-5
தகைமலிதண்டமிழ் 44
தடங்கொள்மார்பு 136-2
தடுக்கு - பாய் 34-10
தண்ணியான் வெய்யான் 61-6
தம்மடிகள் 44-2
தமிழ் 10
தர்க்க சாத்திரத்தவர் 62-10
தருப்பம் 132-8
தருமன் 63-4
தலை 9-8
தவமல்கு தமிழ் 112
தழைத்த சடை 69-4

தா

தாரகை - விண்மீன் 96-3
தாள் 40-3
தானவர் 7-4

Koviloor Digital Library

தி

திக்கின் இசைதேவர் 34-3
திகழ்சடை 100-2
திகழ்தரு மார்பு 120-5
திமில் - வேங்கைமரம் 72-7
திருந்தடி 116-6
திருந்தார்புரம் 121-8
திருமுடி 177-6
திருவார் செல்வம் 72-11
திவிதலம் 22-1, 20-2, 51-1

தீ

தீத்திரளாகிய கள்ளம் 58-9
தீயமனத்தார்கள் 86-8
தீர்த்தன் 96-8

து

துடி - உடுக்கை 63-6
துத்தி - படப்பொறி 116-10
துலையெடுத்த சொல் 47-8
துற்றல் - நெருங்குதல் 8-1
துற்றும் போது 50-5
துன்னம் - தைத்தல் 92-3
தூது 60-5, 60-6. 60-7

தெ

தெள்ள 58-9
தெற்றி 65-8
தென்னர் சேரர் 64-1

தே

தேரர் 17-10
தேவர்கள் 7-4
தேறல் - கள்தேன் 95-3

தொ

தொங்கல் - மாலை 115-1
தொடை - மாலை 121-9
தொடைமலி பாடல் 100
தொண்டர் 99-4. 105-3
130-10, 131-10
தொண்டை 125-10
தொத்து - கொத்து 22-2
தொல்விரல் 43-8

தோ

தோடுடைய செவி 1-1
தோலுடையாக 78-6
தோலொடுநூல்துதை 120-1
தோழம் 74-7
தோள் 45-9

ந

நகை - பல் 132-3
நச்சம் 43-2
நசை 4-1
நட்டப்பெருமான் 80-10
நடம்பயில் நம்பன் 104-6
நடலை - துன்பம் 38-5
நடையார் பனுவல் 63-11
நந்தன் 63-12
நமரங்காள் 99, 13-4
நயனம் 106-2
நல்லஒண் சொலின்மாலை 118
நல்லாரும் அவர் தீயர் 56-2
நலங்கொள்தமிழ் 14-11
நலத்தான் நாடவல்ல
பனுவல்மாலை 52
நறையூரில் சித்தன் 29-5

Koviloor Digital Library

நா

நா 50-1
நாத்தநெறி 86-4
நாலாம் 128
நாவணப்பாட்டு 7-6
நாள் நாள் 126-1
நாள் நாளும் 56-3
நாளிகேரம் 65-5
நானாவிதம் 9-5, 89-6

நி

நிகரிலி 124
நிகரொப்பு 66-3
நிசிசரன் 52-8
நிலையவன் 125-6
நிலைமணிசுரர் 27-2
நின்தன்மையைப் பரவாதார் இல்லை 55-6
நின்று நின்று 118-8

நீ

நீருறு செஞ்சடை 109-1
நீறார் அகலம் 70-6

நு

நுண்ணறிவார் வழிபாடு 5-4
நுணங்குதல் 84-7
நூறுதல் - அழித்தல் 28-9

நை

நைதல் 114-4

ப

பச்சம் 18-2, 77-8
பச்சம் - அன்பு 43-2
பசுபாச வேதனை 12-3
பஞ்சவர் 62-5
பட்டமார்ந்த சென்னி 149-8
படப்பை - கொல்லை 32-9
படிபடுகோலத்தான் 105-1
படிமம் 118-5
படிறு - பொய் 7-2
படுகடல் 18-4
படுகல்லறை 68-4
படுதம் 46-3
பணிவளர் கொள்கையர் 44-1
பயங்கல் 50-2
பயப்பு 71-10
பரங்குன்று 100
பரிபவம் 136-4
பருபதம் 118
பலபல 5-5
பலிகொண்டுணும் கள்வன் 3-2
பவளவண்ணர் 73-8
பளிங்கு 78-8
பற்றுமாகி வானுளார்க்கு 53-2
பற்றுதல் 5-5

பா

பாடகம் 18-1
பாடலோடாடல் 43-2
பாணி - கை 96-2
பாரிடம் - பூதம் 5-6
பால்தருமேனியர் 44-6

பி

பிடக்கு பிடகம் 34-10
பிணை 102-4
பித்தர்போலும் 1-10
பியல் - தோள் 89-6
பில்கு 95-3
பிறப்பில்பெருமான் 80-2

Koviloor Digital Library

பீ

பீர் - முலைப்பால் 109-7
பீழ்த்தல் - பேர்த்தல் 114-8

பு

புரிநூல் திகழ்மார்பு 68-1
புருவம் 47-1
புவம் -மேலுலகம் 49-1
புறங்காட்டில்ஆடும் 134-5
புறந்தாள் 67-2

பூ

பூதத்தர் 44-6
பூகம் - கமுகு 6-4
பூசுரர் 21-11
பூணெடு மார்பர் 44-10
பூமான் - இறைவன் 27-2

பெ

பெற்றம் - இடபம் 2-2
பெற்று 5-9

பே

பேழ்தல் - பிளத்தல் 20-6

பொ

பொக்கணம் 75-5
பொங்கயம் 65-3
பொழில்மிடையும் நின்றியூர் 18-6
பொறி - திருமகள் 4-1
பொன் 14-4

ம

மங்கை 9
மங்கையங்கோர் 65-3
மசங்கள் 11-10
மஞ்சன் 38-4
மஞ்ஞை 12-4
மண்டை 83
மண்டையர் 99-10
மண்ணுதல் 111-10
மணி 10-1
மணியொலி 7-9
மத்தம் 9-1
மதமத்தம் 121-9
மதிநனைபொறிஅரவம் 123-4
மதிலணி சிவபுரம் 112-3
மதிலளகைக்கு இறை 131-8
மயங்கும் மாயம் வல்லார் 53-8
மயில் 19-7
மரவம் 10-5
மருந்தன் 134-2
மரவம் - கோங்கு 36-7
மலர் 99-8
மலர்ச்சேவடி 27-4
மலரடிவிரல் 124-8
மலைமகள் 122-7
மழுவேந்தி 1-6
மறுக்கு 106-8
மனம் 122-1
மனைகள் தோறும் 59, 1, 98-9
மனையிற்பலிகள்வன் 3-2

மா

மாசு - அழுக்கு 58-7
மாசுணம் 81-2, 53-5, 120-5
மாணாநோய் 80-9
மாதி சித்தர் 66-10
மார்பு 44-2
மால்விடை 73-3
மாவரி 101-5

Koviloor Digital Library

மி

மிடறு - கழுத்து 19-8
மிண்டர் - வலியர் 96-10

மு

முகம் 41-7
முசிவு - இளைப்பு 51-3
முடியுடைஅமரர் 41-9
முடிசேர்தென்னர் சேரர் சோழர் 64-1
முந்தியா 8-2
முத்து 10-5
முந்நீர் 7-6
முரசொலி 7-9
முரவம் 10-5
முழுநஞ்சு 66-4
முழை - குகை 51-3
முற்றலாமை 1-2
முறி - ஆடை 21-4
முறைமுறை 22-5

மூ

மூதூார் மூதூரா 126-4
மூவர் 42-2

மே

மேதி - எருமை 37-31
மேன் மேல் 4-6

மை

மையார் நிறமேனி 31-8

மௌ

மௌவல் - முல்லை 36-7

வ

வங்கம் - மரக்கலம் 41-1
வடவியவீ 12-2
வயம் (வையம்) 26-9
வயல் சூழ்ந்த நல்லம் 85-4
வரும் இடபக்கொடி 12-10
வல்லசுரர் 22-1
வலிசேர்கயிலை 79-1
வளி - காற்று 49-1

வா

வாசி, ஏற்றத்தாழ்வு 92-1
வாசிகை - மாலை 19-5
வாடை - வாசனை 4-3
வாழ்த்து 18-10
வான் ஆள்வர் 126-4
வானக மிறந்து 77-2
வானோர் 8-3

வி

விகிர்தன் 28-8, 98-2
விக்கம் 126-7
விச்சாதரர் 7-4
விடம்வெளி நிகர் களம் 123-3
விடமணி மிடறினர் 78-4
விடல் ஏறுபட நாகம் 130-5
விண்ணவர் 39-5
வித்தகர் 39-10, 42-6, 65-1
வித்தகர் - அறிஞர் 87-10
விதாதா - பிரமன் 131-3
வியர் - வியர்வை 1-3
விரையாரும் 105-9
விழவொலிமலிகழுமலம் 19-3

வீ

வீ - பறவை 10-7
வீந்தார் - இறந்தவர் 38-6

Koviloor Digital Library

வெ

வெடிகொள்காடு 136-4
வெண்டலை 8-8
வெந்தல் 65-7
வெவ்வம் - வெப்பம் 126-8
வெள்ளமோர் வார்சடை 105-3
வெள்ளர் 73-10

வே

வேறுவேறு 79-8

● ● ● ● ● ● ● ● ● ● ● ●

ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக் கோவை

பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனும் தோல்தோணி கண்டீர் - நிறை உலகில்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ்.

– நம்பியாண்டார் நம்பிகள்.

Koviloor Digital Library

உ

தருமை ஆதீனம் இயற்றிவரும் பணிகள்

1. தேவாரப் பாடசாலை நிறுவித் தெய்வத் தமிழ் வளர்ப்பது.

2. வேத சிவாகம பாடசாலை வைத்துத் திருக்கோயில் பூசை முறைகளைப் பயிற்றுவிப்பது.

3. திருமுறைகள், சித்தாந்த சாத்திரங்கள், சைவ சமய நூல்கள் பலவற்றைத் தெளிவுற அச்சிட்டு வழங்குவது.

4. தேவாரத் தலங்கள் தோறும் வழிபாடுகள் நிகழ்த்தி அவ்வத்தலத் தேவாரத்தைப் புராண வரலாறுகளுடன் அச்சிட்டு வழங்குவது.

5. ஆலயங்கள் பலவற்றிலும் நிகழும் பெருவிழாக்களில் சமய விரிவுரைகள், மாநாடுகள் நிகழ்த்திச் சமய தத்துவங்களை மக்கட்கு உணர்த்துவது.

6. தொடக்கப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி, கலைக்கல்லூரி அமைத்து மாணவர்களுக்குக் கல்வி நலம் தருவது.

7. அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி மையம் நிறுவி அதன் வாயிலாகக் கடல் கடந்த நர்டுகளிலும் நம் நாட்டிலும் வாழும் சமயம் சார்ந்த மக்கட்குச் சைவசமயப் பெருமைகளை அறிவுறுத்துவதோடு சென்னை, திருச்சி, நெல்லை ஆகிய இடங்களில் மாலை நேரக் கல்லூரி நடத்தி வருவது.

8. உயர்நிலைப் பள்ளிகள் கலைக்கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் தமிழ் மொழியை ஊக்கத்தோடு பயிலப் பரிசுகள் வழங்குவது.

9. ஞானசம்பந்தம் என்னும் மாத இதழ் நடத்தி அதன் வாயிலாக மக்கட்குச் சமய உண்மைகளை உணர்த்தி வருவது.

10. ஆதீனத்தின் அருளாட்சியிலுள்ள 27 திருக்கோயில்களையும் தூய்மையாகப் பரிபாலித்து நாள்வழிபாடு சிறப்புவழிபாடுகள் நிகழ்த்திவருவது.

Koviloor Digital Library

11. ஆதீனக் கோயில்கள் பலவற்றில் நூலகங்கள் அமைத்தும் மாலைநேரத்தில் ஓதுவாமூர்த்திகளைக் கொண்டு குழந்தைகட்குத் திருமுறை வகுப்புக்கள் நடத்தியும் உதவுவது.

12. சமய நூல்களை ஆய்வு நோக்கோடு எழுதி வெளியிட முன்வருவோர்க்கு உதவுவது.

13. ஆதீனத்திருக்கோயில்களில் பழுதடைந்த கட்டிடப் பகுதிகளை இடித்துப் புதுப்பித்தும் 12 ஆண்டுகட்கு ஒருமுறை மூர்த்திகட்கு அஷ்டபந்தனம் சாத்தியும் திருக்குட நீராட்டு விழா நடத்துவது.

14. ஆதீனத் திருமடத்தில் பெரியதொரு நூலகம் அமைத்துப் பழைமையான ஓலைச்சுவடிகளையும் நூல்களையும் பேணி வருவது.

15. கல்வி பயிலும் ஏழை மாணவர்கட்குக் கல்விக் கட்டணம் புத்தகங்கள் வழங்கி உதவுவது.

16. மயிலாடுதுறையில் மகப்பேறு மருத்துவ நிலையம் அமைத்து நகராட்சிக்கு உதவியதுபோலச் சிங்கிப்பட்டி காசநோய் மருத்துவ மனை சென்னை அடையாறு கான்சர் இன்ஸ்டியூட் போன்ற பொது நிறுவனங்களுக்கும் பெருந்தொகை உதவி வருவது.

17. ஆதீனக் குரு முதல்வர் குரு பூசைவிழாவில் சமய வகுப்புக்கள் கருத்தரங்குகள் திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு முதலியன நடத்திவருவது.

18. அவ்வப்போது மக்கட்கு எல்லாச் சமய தத்துவங்களையும் மாநாடுகள் மூலம் உணர்த்திப் பொதுவாக அனைத்துச் சமய தத்துவங்களையும் மக்கள் அறியும்படிச் செய்வது.

19. தமிழ்நாட்டின் தலைநகராகிய சென்னையில் சமயப் பிரசார நிலையம் அமைத்துச் சமய வகுப்புக்கள் நடத்தியும், ஆதீனத்திருக் கோயில்களில் நிகழும் சிறப்பு விழாக்களின் பிரசாதங்களை அங்குள்ள மக்கட்கு வழங்கியும் வருவது.

20. திங்கள் தோறும் முதல் ஞாயிற்றுக் கிழமைகளில் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் பொதுமக்கட்கு அருளாசி வழங்குவது.

21. திருவாமூரில் அப்பருக்குத் திருக்கோயில் எடுப்பித்துத்

Koviloor Digital Library

திங்கள்தோறும் திருமுறைமுற்றோதல், விரிவுரை நிகழ்த்தியும் ஆண்டு தோறும் குருபூசையைச் சிறப்புற நடத்தியும் வருவது.

22. பெண்ணாகடத்தில் மெய்கண்டாருக்குக் கோயில் எடுத்து ஆண்டுதோறும் குருபூசையைச் சிறப்புற நடத்துவது.

23. சித்தர் காட்டில் ஸ்ரீ சிற்றம்பல நாடிகள் கோயில் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் நிகழ்த்தி, சமயச்சொற்பொழிவு, ஆண்டு தோறும் குருபூஜை நடத்தி வருவது.

24. சீகாழியில் திருமுலைப்பால் விழாவிலும், திருவாமூரில் சதய விழாவிலும் திருமுறை இசைவாணர்கட்குத் திருமுறைக் கலாநிதி பட்டம் பொறித்த பொற்பதக்கமும் ஆயிரம் ரூபாய் பணமுடிப்பும் வழங்கிவருவது.

25. ஆதீனச் சிறப்பு விழாவாகிய ஆவணி மூல நாளில் பழுத்த தமிழ்ப்புலமை பாலித்த தமிழறிஞர்க்குச் சிறப்புப் பட்டம் வழங்கி வருவது.

26. சிதம்பரம் திருக்கோயிலில் சமயாசாரியர்களோடு சந்தானா சாரியரைப் பிரதிட்டை செய்வித்து அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் நிகழ்த்தியதுடன் ஆண்டுதோறும் குருபூசை விழாக்களைக் கொண் டாடி வருவது.

27. இல்லங்கள் தோறும் திருமுறை முற்றோதல் செய்விப்பது.

28. சிவராத்திரி கார்த்திகைச் சோமவாரம் போன்ற நாள்களில் அன்பர்கட்குச் சமய விசேடதீட்சைகள் அளிப்பது.

29. மதுரையில் உள்ள ஸ்ரீலஸ்ரீ குருஞான சம்பந்தர் திருமடத்தில் அவ்வப்போது சமயச் சொற்பொழிவுகள் நடத்தி வருவது.

30. ஆதீன ஆலயங்களுக்கு மட்டும் அன்றிப் பிற ஆலயங் களுக்கும் திருப்பணி நிதி உதவி அளித்தல் - யாகசாலைச் செலவை ஏற்று நடத்துதல் முதலியன செய்து வருவது.

31. திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையார் கோயில் நம்பி ஆண்டார் நம்பிகள் குருபூஜை விழாவை நடத்துவது.

Koviloor Digital Library

32. ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணி மன்றம் நிறுவி அதன் வாயிலாக மயிலாடுதுறையில் மழலையர்பள்ளி, செகண்டரிப் பள்ளி ஆகியன நடத்துவதோடு பிற ஊர்களிலும் இம்மன்றச் சார்பில் பள்ளிகள் மருத்துவ நிலையங்கள் அமைத்துச் சமூகத் தொண்டுகள் முதலியன செய்து வருவது.

வாழ்த்து

வையம் நீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே. *- பெரிய புராணம்.*

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம். *- கந்தபுராணம்.*

மல்குக வேத வேள்வி வழங்குக சுரந்து வானம்
பல்குக வளங்கள் எங்கும் பரவுக அறங்கள் இன்பம்
நல்குக உயிர்கட் கெல்லாம் நான்மறைச் சைவம் ஓங்கிப்
புல்குக உயிர்கட் கெல்லாம் புரவலன் செங்கோல் வாழ்க.
- திருவிளையாடற் புராணம்.

திருவார் கமலைப் பதிவாழ்க அப்பதி
சேரும்நின்றன்
மருவார் மரபும் திருநீறும் கண்டியும்
வாழ்கஅருட்
குருவாகும் நின்றன் திருக்கூட்டம் வாழ்கநற்
கோநிரைகள்
தெருவாழ் தருமைத் திருஞான சம்பந்த
தேசிகனே. *-ஆதீன அருள் நூல்.*

Koviloor Digital Library



Koviloor Digital Library